# ஜனாபிமானி.

## THE PEOPLE'S FRIEND.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்
காக உழைத்துவரும் ஒரு உயர்ந்த மாஸாந்தரப் பத்திரிகை.


EDITOR

**G. A. VaidyaRaman, B. A.**

பத்ராதிபர்

**ஜி. எ. வைத்யராமன், பி. எ.**



Volume 9.] 1917. [9-ஆம் புஸ்தகம்.

உள்நாட்டுக்கு சந்தா ரூபா 4-0-0 வெளிநாட்டுக்கு சந்தா ரூபா 6-0-0

G. A. VAIDYARAMAN & Co.,
Publishers,
**MADRAS.**

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
**மதராஸ்.**

'ஜனாபிமானி' ப்ரசுரங்கள்.

ரூ.அ.ப.

1. காதல் வெற்றி ... 0 4 0

ஹாஸ்ய ரஸம் பொருந்திய நாவல்.

2. அன்புக்கும் அழிவோ ... 0 4 0

சோக ரஸம் நிரம்பிய நாவல்.

3. பெற்ற மனம் பித்து ... 0 2 0

க்ராம வாழ்க்கையின் இயல்பை விளக்கிக் காட்டும் சிறுகதை.

4. ஹாஸ்ய மஞ்சரி ... 0 6 0

வேடிக்கைக் கதைகளும் குறிப்புகளும் அடங்கியது.

5. ஸஸேமிரா ... 0 2 0

ஒரு நீதிக்கதை.

6. தாதாபாய் நௌரோஜியின் ஜீவ்ய சரித்ரம் ... 0 3 0

விசேஷ ப்ரசுரம்.

ஐரோப்பிய யுத்தம் ... 1 8 0

யுத்தத்தைப்பற்றிய ஸகல விவரங்களும் அடங்கியது.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,

ஜார்ஜ்டவுன், மதராஸ்.

162029
600 008

## விசேஷ வ்யாஸங்கள்.

விசேஷ வ்யாஸங்கள்.—


| | பக்கம். |
|---|---|
| கைத்தொழி லபிவ்ருத்திக்கு அவச்யமாய் வேண்டியவைகள் | 2 |
| ட்யூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகமும் ஜனஸமூக சீர்திருத்தமும் | 7 |
| ஜோஸிகாராவின் சரித்ரம்—டி. எஸ். ஸீதாபதி | 9 |
| களர் நிலங்களில் பயிராகக்கூடிய மரங்கள் —ஒய். எஸ். வெங்கட்டரமணய்யர், பி. எ., பி. எல். | 16 |
| ஹிந்து அரசர்கள் காலத்தில் ஸ்தல ஸ்வய ஆட்சியும் வரி விதித்தலும் | 18 |
| ருமேனியாவில் விவாகங்கள் | 20 |
| மிஸ்டர் டேவிட் லாய்ட் ஜார்ஜ் | 24 |
| பழமரங்களில் கிளை முதலியவைகளை நறுக்கி விடுதல் | 26 |
| ராஜாங்க விஷயமாய் இந்தியாவுக்கு வேண்டியிருப்பவைகள் | 28 |
| ஸ்லேட்களும் நோட் புஸ்தகங்களும் —கே. டி. ஸௌந்தரராஜாச்சாரியார், பி. எ., எல். டி. | 30 |
| போர்க்களத்தில் சுரங்கம் தோண்டுதல் | 42 |
| கைத்தொழிலபிவ்ருத்திக்கு அவச்யமாய் வேண்டியவைகள் | 43 |
| ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டின் ஸன்மார்க்கக் கேடு. | 45 |
| பெண் கல்வி —டி. என். க்ருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல். டி. | 49 |
| நமது பொருளாதார நிலைமை | 51 |
| இந்திய ராஜாங்க அமைப்பில் சீர்திருத்தம் | 52 |
| கெடுவான் கேடு நினைப்பான் —கே. கோவிந்த ராவ். | 58 |
| முகம்பார்க்கும் கண்ணாடி செய்தல் | 60 |
| களர் நிலங்களில் பயிராகக்கூடிய மரங்கள் —ஒய். எஸ். வெங்கட்டரமணய்யர், பி. எ., பி. எல். | 63 |
| அடைப்பான் | 66 |
| மாணவர்களின் உல்லாச ஸஞ்சாரத்தைப்பற்றிய சில குறிப்புகள் | 67 |
| தேன் எறும்புகள் | 70 |
| மணத்தக்காளி —பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர். | 72 |
| ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிய கமிஷன் | 82 |
| கைத்தொழிலுக்கு ராஜாங்க உதவி | 88 |
| ஜயா—டி. எஸ். ஸீதாபதி | 90 |
| செடிகளுக்கு ரணவைத்யம் செய்தல் | 96 |
| லாட்டரி ஏற்பாடுள்ள கடன்கள் | 97 |
| இந்தியாவிலுள்ள ரெயில்வேக்களைப்பற்றிய சில விஷயங்கள் | 99 |
| ஐயர்லண்டில் பொலிகாளைகளை அதிகப்படுத்த ஏற்பாடு | 102 |
| காடுகளும் காட்டு மரங்களும் —எஸ். ஆர். ஆத்மநாதய்யர். | 104 |
| இந்தியா கவர்ன்மெண்டின் வரவு செலவு மதிப்பு | 107 |
| ஆகாரத்தில் தாதுப்பொருள்கள் | 110 |
| நீலி வ்யாபாரம் | 112 |
| ருஷ்யாவில் ராஜாங்கப் புரட்சி | 122 |
| ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிய கமிஷன் | 125 |
| இந்தியாவில் மல்யுத்தம் | 133 |
| சப்பை நோய் | 135 |
| கௌர் ராணியின் சாபம் | 136 |
| இளம்பிள்ளை வாதம் | 140 |
| காட்டுமரங்கள்—எஸ். ஆர். ஆத்மநாதய்யர் | 142 |
| எனக்குக் கல்யாணமாகுமா ? | 145 |
| சென்னையில் நீலி வ்யாபாரம் | 147 |
| சென்னை கவர்ன்மெண்டின் வரவு செலவு திட்டம் | 149 |
| அமெரிக்காவும் யுத்தமும் | 162 |
| ஊர் தோறும் போய் வைத்யம் செய்யும் ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள் | 165 |
| செடிகளின் வளரும் சக்தி | 167 |
| இந்தியத் தாய்மார்களும் குழந்தைகளும் | 169 |
| விதையைத் தெரிந்து எடுத்தல் | 170 |
| மூட பக்தி அல்லது விபரீத ஆசாரம் | 171 |
| உலோகங்கள்—எஸ். ஜி. ஸுப்ரமண்யம், எம். ஏ | 175 |
| ப்ராணிகளின் தற்காப்பு ஸாதனங்கள் | 179 |
| சர்மம்—டி. எஸ். ராஜகோபாலன், பீ. ஏ. | 180 |
| பண்டரீபுரம்—கே. கோவிந்தராவ் | 183 |
| கார்க் | 185 |
| வேலி—பி. வி. ராஜகோபாலாச்சாரி | 188 |
| காயங்கள் ஆறும் விதம் | 189 |
| பண்டைக்காலத்து ஹிந்து அரசர்களும் நீதி பரிபாலனமும் | 191 |
| மத்யதர வகுப்பார்களின் பொருளாதாரநிலைமை | 202 |
| கோமாரி | 206 |
| மெஸபொடேமியாவிலுள்ள ஒரு விநோத ஜாதியார் | 208 |
| நெட்டி | 211 |
| உலோகங்கள் —எஸ். ஜி. ஸுப்ரமண்யம், எம்.ஏ., எல்.டி. | 212 |
| சீமை அத்தி | 215 |
| குழந்தைகளை வளர்த்தல் | 219 |
| கம்பர்—ஒ. ஸம்பத் | 221 |

பக்கம்.

பெற்ற மனம் பித்து ... 223
சென்னையில் கோவாபரேஷன் ... 242
உலோகக் காகிதங்களுள்ள புஸ்தகங்கள் ... 245
சவுக்குப்பயிர் மாட்டுத் தீவனமானது ... 246
—பண்டித ஸுப்ரமண்ய ஐயர்.
சென்னை ராஜதானியின் கடல் வ்யாபாரம் ... 248
மோதிரங்கள் ... 250
ராத்ரிப் பாடசாலைகள் ... 252
ரோஜா பயிர் செய்தல் ... 254
பூர்வீக இந்தியாவில் அரசாட்சி முறை ... 257
மீன் எண்ணெய் ஸோப் ... 260
மைஸூர் தேச சரித்ரம் ... 262
—வி. ஸ்வாமிநாத சர்மா.
காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜி ... 266
பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ... 282
ஜப்பானில் கடிகாரம் செய்யும் தொழில் ... 285
இடி இடிக்கும் காலத்தில் பத்ரமான இடங்கள். 288
ப்ரஜா லக்ஷணமும், ஜனஸமூக வாழ்க்கையும்... 291
பூத உபாஸகர்கள் ... 294
தாதாபாய் நௌரோஜியின் ஸ்வ சரித்ரம் ... 297
மைஸூரின் சரித்ரம்—வி. ஸ்வாமிநாத சர்மா. 301
ஸலைமிரா ... 304
—கே. டி. ஸுந்தரராஜாச்சாரியார், பி. ஏ., எல். டி.
ரெயில் கற்ருழை .. 312
—எம். பி. அரபு முகம்மது அப்துல் காதர்.
வ்யவஸாய அபிவ்ருத்திக்கு இடையூறுகள் ... 322
ம்ருகங்கள் தங்களை சுத்தம் செய்துகொள்ளும் விதம் ... 325
அமெரிக்காவில் பால ஸம்ரக்ஷணம் ... 326
குடுப்மினுர் கோபுரம் ... 330
சாயம், எண்ணெய், நார் முதலியவற்றிற்கு உபயோகமாகும் மரங்கள் ... 331
—ஒய். எஸ். வெங்கட்டரமணய்யர், பி. ஏ., பி. எல்.
கதை சொல்லுதல் ... 333
—கே. டி. ஸுந்தரராஜாச்சாரியார், பி.ஏ., எல்.டி.
இந்தியாவின் ஜனன மரணக் கணக்கு ... 337
ஆடு மாடுகளுக்கு வரும் அம்மை ... 339
எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி ... 342
கம்பரும் குலோத்துங்க சோழனும் ... 345
—ஓ. ஸம்பத் ஐயங்கார்.
தாதாபாய் நௌரோஜியின் குணாதிசயங்கள் ... 350
பாதுஷாவின் மணமகள் ... 351
1916-17-ம் வர்ஷத்தில் இந்திய வ்யாபாரத்தின் போக்கு ... 362
மாணிக்கவாசக ஸ்வாமிகள் ... 365
வெங்காய சாகுபடி ... 369
கோடைகாலத்தில் உறங்கும் ப்ராணிகள் ... 371
—பண்டித வி. ஸுப்ரமண்ய ஐயர்.
ஹரித்வாரம் ... 374
மடிவீக்கம் ... 376
பட்டு நூல்காரர்களின் கோவாபரேடிவ் ஸங்கம் 379

பக்கம்.

சாயம், எண்ணெய், நார் முதலியவற்றிற்காகும் மரங்கள் ... 381
—ஒய். எஸ். வெங்கட்டரமணய்யர்.
அசுத்தமான ஆகாயமும் அதன் கெடுதிகளும்... 384
—ஆர். எஸ். மணியம், பி. ஏ., எல். டி.
இந்தியர்கள் அயல்நாடுகளுக்குக் குடியேறிப் போவதைப்பற்றிய கான்பரென்ஸ் ... 387
பாதுஷாவின் மணமகள் ... 390
முதல் முதலான வ்யவஸாய ஆராய்ச்சிப்பண்ணை 402
படிப்பு கற்பிப்பதில் ஸினெமடொக்ராபின் உபயோகம் ... 404
திருவள்ளுவர் ... 407
—பண்டித பி. கே. ஸ்ரீனிவாஸாச்சாரியார்.
பொதுஜன ஸௌக்யத்தைப் பற்றிய புதுக் கொள்கை ... 410
வீட்டுக் கைத்தொழில்கள் ... 414
இந்தியர்கள் அயல்நாடுகளுக்குக் குடியேறிப் போவதைப்பற்றிய கான்பரென்ஸ் ... 416
மாடுகளுக்கு வரும் க்ஷயம் ... 419
ந்யூஸீலண்டில் ஜீவராசிகள் போய்ச்சேர்ந்தவிதம். 421
—பண்டித வி. ஸுப்ரமண்ய ஐயர்.
வளையல் உடன்பாடு ... 426
பரோடாவில் நிலங்கள் சிறு துண்டுகளாக இருப்பது ... 442
பொய் சொல்லாத ஒரு ஜாதியார் ... 444
கம்பெனியார் காலத்து தபால் ஏற்பாடு ... 447
மாதிரிக் கைத்தொழில் சாலைகள் ... 452
பள்ளிக்கூடமில்லாத நேரத்தில் குழந்தைகளை பராமரித்தல் ... 454
கால்நடைகளுக்கு வரும் இருமல் ... 456
கடன் படல்—சேஷன். ... 458
பாலும் பாற்சாலையும் ... 460
—எஸ். ஆர். ஆத்மநாதய்யர்.
மஞ்சள் ... 466
குழந்தைகளுக்கு ஸுகாதாரவிதிப்படி உணவு கொடுத்தல் ... 468
வேர்க்கடலை உணவுப்பொருளாவது ... 470
பத்ரிகை ஆராய்ச்சி—33, 73, 113, 153, 193, 233, 273, 313, 353, 393, 433, 473,
வர்த்தமானக் குறிப்புகள்—37, 77, 117, 157, 197, 237, 277, 317, 357, 397, 437, 477,
இந்தியாவில் வ்யாபார ஊக்கம்—38, 77, 117, 158, 199, 279, 318, 399, 479,
ஐரோப்பிய யுத்தம்—38, 79, 119, 159, 200, 240, 280, 320, 359, 400, 439, 480,
நாநாஸங்கதி—40, 80, 120, 160, 240, 320, 360, 440,
புஸ்தக விமர்சனம்—316, 360,


படங்கள்.


அம்பிகா சரணமஜூம்தார், ஆனரபில் மிஸ்டர், 1
தாதாபாய் நௌரோஜி, மிஸ்டர், 241
ஜார்ஜ், ரைட் ஆனரபில், 1


# அட்டவணை.


பக்கம்.

## அ

அசுத்தமான ஆகாயமும் அதன் கெடுதிகளும்—R. S. மணியம் ... 384
அக்ஷச்சட்டம் ... 119
அடுப்புக்கறி பற்களை சுத்தம் செய்யும் ... 400
அடைப்பானின் குறிகள் ... 66
„ னுக்கு சிகித்ஸை ... 67
அடைப்பான் ... 66
„ வ்யாதி வராமல் தடுத்தல் ... 67
அத்திக்கு எருவைத்தல் .. 216
„ கபாத்து செய்தல் ... 217
„ சீதோஷ்ண ஸ்திதி ... 215
„ தண்ணீர் பாய்சசுதல் ... 217
„ வ்யாதிகளும் சத்ருக்களும் ... 217
அத்தி, சீமை ... 215
„ நடும் விதம் ... 216
„ பயிருடுவதற்கு ஏற்ற நிலம் ... 215
„ மரம் ... 64
„ மாஸூல் ... 218
„ யின் பூர்வீக சரித்ரம் ... 215
„ யைப் பரவச் செய்தல் ... 216
அமெரிக்காவில் பால ஸம்ரக்ஷணம் ... 326
அமெரிக்காவின் கப்பல்ப்படை ... 164
„ ப்ரஸிடெண்ட் ... 163
„ மிலீஷ்யா ... 164
„ ஸைன்யபலம் ... 164
அமெரிக்காவும் யுத்தமும் ... 162
அமெரிக்காவோடு வ்யாபாரம் 1916-17-ல் ... 365
அம்பிகாசரண முஜூம்தாரின் காங்க்ரெஸ் ப்ரஸங்கம், பாபு .. 118
அம்மை, ஆடுமாடுகளுக்கு வரும் ... 339
அரபு முகம்மது அப்துல்காதர் —ரெயில் கற்ருழை ... 312
அருணகிரிநாதரின் கவிச்சிறப்பு ... 113
அவிபக்த குடும்பமும் பராதீனம் செய்வதும் ... 6
அவுரி சாகுபடி, இந்தியாவில் ... 106
அன்பானந்தன் ... 239
அன்பு பாராட்டுதல் (உபாத்யாயர்) ... 195
அன்னிபெஸண்ட் ... 359
„ அம்மையார் சரித்ரச்சுருக்கம் ... 38

## ஆ

ஆகாரத்தில் தாதுப்பொருள்கள் ... 110
ஆடுமாடுகளுக்கு வரும் அம்மை ... 339
ஆத்மநாத அய்யர் எஸ். ஆர். —காடுகளும் காட்டுமரங்களும் 104, 106

பக்கம்.

ஆத்மநாத அய்யர் எஸ். ஆர். —பாலும் பாற்சாலையும் ... 460
ஆந்த்ரா லைப்ரரி கான்பரென்ஸ் ... 198
ஆமணக்கு வித்து ... 344
ஆயில் என்ஜின்கள் ... 438
ஆயுர்வேத ஸம்மேளனம், எல்லா இந்திய ... 117
ஆராய்ச்சி, பத்ரிகை, 33, 73, 113, 153, 193, 233, 273, 313, 353, 393, 433, 473.
ஆலங்குடி ஸ்தலபுராணம் ... 439
ஆவாரைச் செடி ... 384
ஆள்கள் சேர்க்கும் ஏஜெண்டுகள் ... 417
ஆக்ஷேபணைகள், ஸினெமடொக்ராப்பை உபயோகிக்க சில ... 406

## இ

இங்க்லண்டுக்குப் போவது, ஒன்றரை நாளில்.. 78
இஞ்சி ... 156
இடி இடிக்கும் காலத்தில் பத்ரமான இடங்கள் ... 288
இந்திய கிறிஸ்தவ கான்பரென்ஸ் ... 37
„ கூலியாட்கள் அயல் நாட்டுக்குப் போவது ... 158
„ கூலியாட்படை, ஐரோப்பாவுக்கு ... 95
„ கைத்தொழில் கான்பரென்ஸ் ... 38
„ தாய்மார்களும் குழந்தைகளும் ... 169
„ பாதுகாப்பு சேனை 118,239
„ „ „ மசோதா ... 50
„ ப்ரதிநிதிகள் ... 239
„ மதுவிலக்கு கான்பரென்ஸ், எல்லா ... 37
„ முஸ்லீம் லீக், எல்லா ... 38
„ ராஜாங்க சீர்திருத்தம் 52,319
இந்தியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் சம்பளம் ... 129
இந்தியர்களை உயர்ந்த உத்யோகங்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய விகிதம ... 85
இந்தியர்கள் அயல்நாட்டுக்குப்போவதைப் பற்றிய கான்பரென்ஸ் 387,416
இந்திய வ்யாபாரத்தின் போக்கு, 1916-17-ம் வர்ஷத்தில் ... 362
இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ், முப்பதாவது ... 37
இந்திய ஜனசாரசீர்திருத்த கான்பரென்ஸ் ... 38
இந்தியா கவர்ன்மெண்டின் வரவு செலவு மதிப்பு ... 107
„ கவர்ன்மெண்ட் ... 56

பக்கம்.

இந்தியா மந்திரிஸபை ... 279
இந்தியாவிலுள்ள ரயில்வேக்களைப்பற்றிய சில விஷயங்கள் ... 99
இந்தியாவில் அரசாட்சி முறை, பூர்வீக, ... 257
,, கால் நடைகளின் ஸங்க்யை ... 437
,, கோவாபரேஷனின் அபிவ்ருத்தி. 477
,, மல்யுத்தம் ... 133
,, வ்யாஜ்யங்கள் ... 359
,, வ்யாபார ஊக்கம் 38,77,117, 158,199,279,318,399,479
இந்தியாவின் நிலைமை இம்பீரியல் கான்பரென்ஸில், ... 158
,, வறுமை ... 269
,, ஜனன மரணக்கணக்கு ... 337
இந்தியாவுக்கு ஒரு ஏரோப்ளேன் ... 159
,, வேண்டியிருப்பவைகள், ராஜாங்க விஷயமாய் .. 28
இந்தியாவும் ப்ரிட்டிஷ் ராஜ்யமும் ... 57
இந்தியா ஸெக்ரெடரி ... 57
இந்து புண்யகதைகள் ... 198
இம்பீரியல் கான்பரென்ஸில் இந்தியாவின் நிலைமை ... 158
,, லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் ... 54
இயற்கைபொருள் ஸாதனங்கள் ... 3
இருமலில் உஷ்ணஜலத்தின் உபயோகம் ... 278
இருமலின் குறிகள் ... 456
இருமலுக்கு சிகித்ஸை ... 456
இருமலை தடுத்தல் ... 458
இருமல், கால்நடைகளுக்கு வரும், ... 456
இரும்பு, கலப்பில்லாத ... 27
,, கம்பிவேலி ... 188
இலவமரத்திலிருந்து வரும்படி ... 115
இலவமரம் ... 114
,, ஸாகுபடிச்செலவு விபரம் ... 115
,, பயிர் செய்யும் விதம் ... 114
இலுப்பைமரம் ... 381
இளம்பிள்ளை வாதம் ... 140
இறக்குமதி வ்யாபாரம் 1916-17-ல் ... 364
இன்ஷுரன்ஸின் நன்மைகள் ... 205
இன்ஷியூரன்ஸ் 204,438
இஹபரஸாதகம் ... 480

ஈ

ஈக்களும் நீலநிறக் கண்ணாடிகளும் .. 27
ஈட்டிமரம் ... 17
ஈரமாயிருப்பதை அறியும் உபாயம், ஓர் அறை, ... 278

உ

உத்தம ஸ்த்ரீயின் லக்ஷணங்கள் ... 593
உபாத்யாயரின் லக்ஷணங்கள் 194,353
உபாஸகர்கள், பூத, ... 294
உயர்ந்த ஸர்க்கார் உத்யோகங்களில் இந்தியர்களின் தொகை ... 82

பக்கம்.

உயர்ந்த ஸர்க்கார் உத்யோகஸ்தரின் நியமனம். 86
உயிர் வேலிகள் ... 88
உலோகக் காகிதங்களுள்ள புஸ்தகங்கள் ... 245
உலோகங்களின் காந்தி ... 175
,, வர்ணங்கள் ... 176
,, எடை வித்யாஸம் ... 214
உலோகங்கள் எடுக்கும் விதம் ... 176
,, எஸ். ஜி. ஸுப்ரமண்யம் 175,212
உலோகங்களில் எவற்றை கம்பியாயிழுக்கலாம். 214
,, எவை தகடாகும் ... 214
உள்தோல் ... 181
உஷ்ண ஜலத்தின் உபயோகம், இருமலில் ... 278
உஸ்மானியா யுனிவர்ஸிட்டி ... 239

ஊ

ஊசல் மரம் ... 16
ஊர்தோறும்போய் வைத்யம் செய்யும் ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள் ... 165
ஊழியம் ஜனஸமுதாய, ... 360

எ

எண்ணெய், கார், சாயம், முதலியவைகளுக்கு உபயோகமான மரங்கள் 331,381
,, மரங்கள் ... 381
,, வித்துக்களின் ஏற்றுமதி ... 342
எமிக்ரேஷன் இன்ஸ்பெக்டர்கள் ... 417
,, உத்யோகஸ்தர்களும் ஸிப்பந்திகளும். 416
,, கமிஷனர் ... 417
எருக்கள் எவ்வளவு காலம் உபயோகப்படும் ... 477
,, விடுதல், ரோஜாச் செடிக்கு ... 255
எலுமிச்சம் பழம் ... 397
எழுதப்படிக்கத் தெரியாமை ... 322
எள் ... 344
எறும்புகள், தேன் ... 70
,, வராதிருக்க ... 439

ஏ

ஏரோப்ளேன், இந்தியாவுக்கு ஒரு ... 159
ஏழைகளுக்கான கோவாபரேடிவ்ஸங்கங்கள்... 238
ஏறிப்படரும் செடிகள் ... 168
ஏற்றுமதி 1916-17-ல் ... 364
,, எண்ணெய் வித்துக்களின் ... 342

ஐ

ஐயர்லண்டில் பொலிகாளைகளை அதிகப்படுத்த ஏற்பாடு ... 102
ஐரோப்பாவுக்கு இந்திய கூலியாட் படை ... 95
ஐரோப்பிய தேசங்களில் பாடசாலைகள் ... 461
,, யுத்தம் 38,79,119,159,200,240, 280,320,359,400,439,480.
ஐரோப்பியர்கள் ஏன் உயர்ந்த உத்யோகங்களில் அதிகமாயிருக்கவேண்டும் ... 83

ஒ

ஒப்பந்தக்கூலி ஏற்பாடு ... 279
,, ,, ஸ்த்ரீகளும் ... 117





பக்கம்.

ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டின் ஸன்மார்க்கக்கேடு. 5
,, நின்றுபோகவேண்டும் ... 418

க

கடல் வ்யாபாரம், சென்னை ராஜதானியின், ... 248
கடவுளுடைய நாமங்களை மனிதர்களுக்கு இடுதல் ... 435
கடன்படல் (சேஷன்) ... 458
கடிகாரம்செய்யும் தொழில், ஜப்பானில் ... 285
கடுக்காய்மரம் ... 332
கட்டாயப்படிப்பு, பஞ்சாபில் ... 159
கணபதி ஸுப்ரமண்யம், எஸ்.ஜி. உலோகங்கள் 212
கண்டென்ஸ்டு பால் ... 464
கண்ணாடி இலைமரம் ... 65
,, செய்தல், முகம்பார்க்கும் ... 60
,, தொழில் ... 278
கண்நோய்களுக்கு சிகித்ஸை ... 437
கதைசொல்லுதல், கே. டி. ஸுந்தரராஜாச்சாரியார் ... 333
கத்தரிக்கு எருப்போடல் ... 314
,, செடி ... 313
,, க்கு நிலம் ... 313
,, நாற்றுப்பிடுங்கி நடுதல் ... 314
,, நிலம் கொத்தல் ... 314
,, விதையும் நாற்றும் ... 313
கப உபத்ரவங்களுக்கு சிகித்ஸை ... 398
கபாத்து செய்தல், ரோஜாச்செடிக்கு ... 256
கபிலி மரம் ... 332
கமலபவன அற்புதம் ... 159
கம்பரின் கல்வித்திறம் ... 221
,, கவிதா ஸாமர்த்யம் ... 224
கம்பருடைய பெயர் ... 221
கம்பரும் அவர் காலத்துப்புலவரும் ... 221
,, குலோத்துங்க சோழனும்.—ஒ. ஸம்பத் அய்யங்கார் ... 345
,, வால்மீகியும் ... 474
கம்பர்—ஒ. ஸம்பத்து அய்யங்கார் ... 221
,, இளமையும் கல்விப் பயிற்சியும் ... 221
,, குலம் ... 221
,, பாடிய வேறுநூல்கள் ... 223
,, ராமாயணம் பாடிய வரலாறு ... 222
கம்பெனிகளில் உத்யோகம் ... 203
கம்பெனியார் காலத்து தபால் ஏற்பாடு ... 447
கருவாகை மரம் ... 16
கருவேலன் 16, 33,384
கர்காடக யோகினிக்கதை ... 316
கர்ப்பமாயிருந்தது, பத்துவர்ஷம் ... 319
கர்ப்ப ஸ்ரீகள் ... 389
கலப்பு உலோகங்கள் ... 177
கல்கத்தாவில் பத்ரிகைகள் ... 319
கல்யாணமாகுமா, எனக்கு ... 145
,, விஷயம் (ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில்,). 419
கல்விக்காக க்ராண்ட ... 398

பக்கம்.

கவர்ன்மெண்ட் உதவி, ஹாஸ்டல்களுக்கான ... 438
களர் நிலங்களில் பயிராகக் கூடிய மரங்கள் —ஒய். எஸ். வெங்கட்டரமண அய்யர் 16,63
களி தருஞ்சி மரம் ... 16
களிம்பு ... 176
கள்ள ஜாதியார்களுக்குள் கோவாபரேஷன்... 197
கள்ளி, சப்பாத்தி ... 356
கற்றாழை, நாரெடுக்கும் முறை ... 312
,, நாரெடுத்தல் ... 312
,, உபயோகம் ... 312
,, ஸ்வபாவம் ... 312
,, ரெயில்,—அரபுமுகம்மது அப்துல் காதர் ... 312
,, விளையக்கூடியபூமி ... 312
,, வேலியைப் பக்வப்படுத்தல் ... 312

கா

காங்க்ரெஸ், முப்பதாவது இந்தியன் நாஷனல். 37
காஞ்சி வால மரம் ... 383
காடுகளும். காட்டுமரங்களும்—ஆத்மநாத அய்யர், எஸ். ஆர். 104,142
காட்டிலைமரம் ... 382
காட்டுமரங்களும், காடுகளும் 104,142
காயங்கள் ஆறும் விதம் ... 189
காய் கறிப்பயிர்களுக்கு ஜலம் பாய்ச்சுதல் ... 358
காரைக்காலம்மை சரிதை ... 316
கார்க் ... 185
,, எங்கே உற்பத்தியாகிறது ... 185
,, எடுக்கும் விதம் ... 186
,, எப்படிப் பயிராகிறது ... 185
கார்க்கின் உபயோகங்கள் ... 187
,, குணங்கள் ... 186
கார்க்குக்கு எந்தமரங்கள் ச்லாக்யம் ... 186
,, பதஞ்செய்யும் விதம் ... 186
,, மரங்களின் வளர்ச்சி ... 186
,, வெட்டும் காலமுறை ... 186
கால அட்டவணை ... 473
,, உபயோகம் ... 473
,, ஏற்படுத்தும்போது கவனிக்கவேண்டிய முக்யகுறிப்புகள் ... 473
கால்நடைகளின் ஸங்க்யை, இந்தியாவில் ... 437
கால்நடைகளுக்குவரும் இருமல் ... 456
கால்நடைகளை ஊர் மந்தையுடன் மேய விடுவதன் கெடுதிகள் ... 395
,, மரணம் ... 479
,, வைத்யம் ... 279
கால்நடையாய் லோகஸஞ்சாரம் ... 317
கானான் ... 167

கி

கிருஷ்ணஸ்வாமி அய்யர், டி. என். —பெண்கல்வி ... 49

நாகரீக வழக்கங்களாலும், அறியாமையாலும், ஸுகாதாரக் குறைவாலும் அநேகர் தங்களுடைய தேக வீர்யத்தைக் குறைத்துக்கொள்ளுகிறார்கள். இப்படி தேகங் கெட்டுப்போன ஜனங்களுக்குத்தான் க்ஷயரோகம் அதிகமாக உண்டாகிறது. இந்தக் காரணங்களில் பல ஜனஸமூக ஸம்பந்த கெட்ட ஆசாரங்களாயிருப்பதால், ஜனாசார சீர்திருத்தக் காரர்கள் இவைகளை கவனிக்கவேண்டியது அவச்யமாகிறது. அவைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

## வீடுகளின் நிலைமை.

வீடுகள் ஸுகாதாரக்குறைவாயிருப்பது க்ஷயவ்யாதிக்கும், தேகபலக் குறைவுக்கும் காரணமாகிறது. பட்டணங்களில் உள்ள வீட்டுக்காரர்கள் வாடகை அதிகமாகக் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், காற்றோட்டமில்லாதபடி வீடுகளில் அறைகளை அதிகமாகவும் நெருக்கமாகவும் கட்டிவிடுகிறார்கள். இதனால் ஏழையான ஜனங்கள் நெருக்கமும் ஸுகாதாரக்குறைவுமுள்ள இடங்களில் தங்கவேண்டியிருக்கிறது. சில ஊர்களில் குடும்பங்கள் பாகமாவதில் குடும்பத்தவர்கள் வீடுகளை பாகம் செய்து ரொம்ப குறுகலாகவும் காற்றோட்ட மில்லாதபடியும் அறைகளை அமைத்துக்கொள்ளுகிறார்கள். இப்படி நெருக்கமான இடங்களில் ஏழை ஜனங்கள் வஸிக்க நேரிடுவதால், அவர்களுடைய தேக ஸௌக்யம் குறைந்துபோய் க்ஷயரோகம் முதலிய வ்யாதிகள் உண்டாக இடமேற்படுகிறது. இந்த வ்யாதியைப் பரவாமல் செய்ய ஏழை ஜனங்களுக்கு ஸுகாதாரமான வீடுகள் கட்டிக்கொடுக்க முயற்சி செய்வது அவச்யமாகும்.

## பாலும் நெய்யும்.

பாலும் நெய்யும் தற்காலம் ரொம்பவும் விலை ஏறிவிற்கின்றன. ஏழை ஜனங்களுக்கு இவைகள் சுத்தமாய்க் கிடைப்பதே கிடையாது. இதனால் ஏழைக்குடும்பத்துக் குழந்தைகளுக்கு சரீர போஷணை குறைந்துபோய், க்ஷயரோகம் ஸுலபமாய் பற்றும்படி அவர்களுடைய தேகம் மெலிந்துபோகிறது. எந்தப் பள்ளிக்கூடத்திலாவது சிறுவர்களில் பெரும்பாலார் க்ஷயரோகிகளாகவோ, அல்லது க்ஷயரோகம் எளிதில் உண்டாகும்படி தேகம் மெலிந்தோ இருந்தால், பால், தயிர், நெய், சர்க்கரை முதலிய முக்ய ஆகாரப் பொருள்கள் அவர்களுக்குப் போதுமான அளவு கிடைக்கவில்லையென்று அறிந்துகொள்ளலாம். இந்தியாவின் நிலைமையை சீர்திருத்த ஆவல்கொள்ளும் தேச ஸேவகர்கள் இந்தக் குறைகளை நிவர்த்திக்க தேசத்தில் பலவிடங்களில் பால் தயிர்ச் சாலைகள் ஏற்படுத்த முயலுவது சிறந்த தர்மங்களில் ஒன்றாகும்.

## கோஷா ஏற்பாடு.

ஸ்த்ரீகளின் தேக பலத்தைக் குறைக்கக் கூடிய கெட்ட ஆசாரங்களில் ஒன்று கோஷா ஏற்பாடாகும். இந்த ஏற்பாடு உள்ள ஜாதிகளில் ஸ்த்ரீகளுக்கு நல்ல காற்றும், தேகப் பயிற்சியும் கிடைப்பது அரிது. இவை யில்லாமல் போனால் தேகமானது வ்யாதியைத் தடுக்கும் சக்தியை யிழந்துவிடும். கோஷா ஏற்பாடுள்ள ஜாதிகளில் ஆண்களுக்குள் க்ஷயரோகத்தால் எத்தனை மரணங்கள் ஏற்படுகின்றனவோ, அதைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு மரணங்கள் அந்த ஜாதி ஸ்த்ரீகளுள் ஏற்படுகின்றன. மற்ற ஜாதிகளில் இரு பாலாருக்குள்ளும் க்ஷயரோக மரணவிகிதம் ஸமமாயிருக்கிறது. ஸ்திரீகள் வெளியில் போகக்கூடாதென்ற கட்டுப்பாடுகள் ஒன்றுமில்லாத பர்மாவில் ஸ்த்ரீகளைவிட ஆண்களே க்ஷயரோகத்தால் அதிகம் இறக்கிறார்கள். கோஷா வழக்கம் அனுஸரிக்கும் ஜாதியார் திடீரென்று அவ்வழக்கத்தை விட்டு விடுவார்களென்று எதிர் பார்க்க முடியாது. பலர் அவ்வழக்கம் அவச்யமிருக்க வேண்டுமென்று வாதிப்பார்கள். ஆனால் ஒரு

சீர்திருத்தம் செய்தல் ஸாத்யமாயிருக்கலாம். அதாவது கோஷா வழக்கமுள்ள ஜனங்கள் நல்ல காற்றோட்டமும், திறந்த வெளியும், ஸுகாதாரமும் உள்ள வீடுகளில் குடியிருக்கும்படி அவர்களைத் தூண்டலாம்.

### பால்ய விவாகம்.

பால்ய விவாகம் பலவிதங்களில் கெடுதலாக இருக்கிறதென்று ஆசாரசீர்திருத்தக்காரர்கள் அநேக வர்ஷங்களாக வற்புறுத்தி வருகிறார்கள். ஹிந்துப் பெண்களுக்கு சிறுவயஸில், அதாவது அவர்களுடைய தேகம் பூராவளர்ச்சியடையுமுன், கல்யாணமாகி விடுகிறது. இதனாலும், அவர்களுக்கு சீக்ரம்குழந்தைகள் பிறப்பதாலும், அவர்களுடைய தேகம் பலமிழந்து விடுகிறது. இந்தக் காரணங்களாலேயே யன்றி, அறியாமையாலேற்பட்ட சில வழக்கங்களாலும் அவர்களுடைய தேகம் சீர்கேடடைகிறது. உதாரணமாக ப்ரஸவகாலத்தில் தாய்மார்கள் அறையில் கொஞ்சங்கூடக் காற்றுப் புகாதபடி செய்வது அநேக இடங்களில் வழக்கமாக இருந்து வருகிறது. இவ்வறைகளில் கெட்ட வ்யாதி க்ருமிகள் ஏராளமாயிருக்கக்கூடும். அக்காலத்தில் ஸ்த்ரீகள் வெகுவாய் தேகபலம் குறைந்திருப்பார்களாதலால், இவ்வழக்கம் ரொம்ப கெடுதலென்பது வ்யக்தமாக ஏற்படும். ஸமீபத்தில் ஒரு பட்டணத்தில் 64 ஸ்த்ரீகள் க்ஷயரோகத்தாலிறந்து போனார்கள். இவர்களுள் 20 பேர்களுக்கு ப்ரஸவமான சிலகாலத்துக்கெல்லாம் க்ஷயரோகம் உண்டாயிற்றாம்.

### கெட்ட வழக்கங்கள்.

மதுபானம், புகையிலை உபயோகித்தல், அபின் கஞ்சா முதலிய மருந்துப் பொருள் உபயோகித்தல், ஆகிய இவைகளால் தேகம் சீர்கேடடைந்து, காலக்ரமத்தில் க்ஷயரோகம் உண்டாகிறது. அநேக வாலிபர்களுக்குத் தேகம் கெட்டுப்போயிருப்பதற்குக் காரணம், அவர்கள் சிறுவயதில் கெட்டவழக்கங்களுக் கிறையானதே.

---

## JOCHINARA.

BY T. S. SEETHAPATHY.

## ஜோகிநாராவின் சரித்ரம்.

ஸுமார் 250-வர்ஷங்களுக்குமுன் ஸிவாஜி தக்ஷிணத்தில் தனது வீரத் தன்மைகளையும் ஜனங்களைப் பரிபாலித்து அரசாளக்கூடிய ஒரு ஸாமர்த்யத்தையும் உலகம் ப்ரமிக்கத்தக்கதாய் காட்டி வருங்காலத்தில், ஒரு ஸமயம் அவனது பலத்தையும் நாளுக்குநாள் அதிகரித்துவரும் அதிகாரத்தையும் கேள்வியுற்று, தனக்கும் தன் ராஜ்யத்திற்குமே பெருங் கேடு விளையுமென்று பயந்து பிஞ்சிலேயே ஸிவாஜியை யடக்கக் கருதினவனாய், டில்லி பாதுஷா அவுரங்கஸிப் தானே நேரில் தக்ஷிணத்தில் வெகுதூரம் வந்து இருந்துகொண்டு, அநேகம் தடவை பெரும் படைகளுடன் தனது ஸேனாதிபதிகளை ஸிவாஜிக்கு விரோதமாக அனுப்பினான். ஆனால் ஸிவாஜியின் கோட்டைகள் விசேஷமாக மலைகளின்பேரிலேயே இருந்தபடியாலும், அவற்றிற்குச் செல்லும் வழி அவனுக்கும் அவனாட்களுக்கும் மாத்ரமே தெரிந்திருந்தபடியினாலும், அவுரங்கஸீப் சீக்ரத்தில ஜயம்பெறுவது முடியாது என்று கண்டு, தலைநகரத்தை விட்டுப் புறப்பட்டு வெகு நாட்களானபடியால், திரும்பவும் ஊர்போக எண்ணியிருந்தான்.

அவ்வாறிருக்கும் ஸமயத்தில், வெகுநாட்களாகியும் பிதா திரும்பிவராத காரணத்தினால்

கவலைகொண்டு மறுபடியும் அவனைக்காண ஆசைகொண்டவளாய், அவுரங்கஸீபின் குமாரி ஜோகினோரா என்பவள் ஒரு சிறு துருப்பைத் துணையாக அழைத்துக்கொண்டு, டில்லி நகரம்விட்டுப் புறப்பட்டு, பிதா இருக்குமிடம் சேர, அங்கங்கே வழியைக் கேட்டுக்கொண்டு வருங்காலத்தில், ஒருநாள் இரவு எட்டுமணிக்கு தக்ஷிண தேசத்தில் ஒரு சிறு கணவாயின் வாயிலில் தன்னாட்களுடன் பல்லக்கில் வந்து சேர்ந்தாள். அக்கணவாய் செல்லச்செல்ல ரொம்பவும் குறுகலாயிருந்தது. ஓரிடத்தில் இரண்டேபேர்தான் நேராகப் போகக்கூடியதாயிருந்தது. எதிர் பக்கத்தில் ஸிவாஜி தன்னாட்களுடன் இவள் வரவை முன்னாலேயே யறிந்துகொண்டு, வழி மறித்தான். ஜோகினோராவின் ஆட்கள் பயந்து முதுகுகாட்டி ஓட ஆரம்பித்தார்கள். ஜோகினோராவின் பல்லக்கு நெருங்கி வரவும், அந்த மஹாராஷ்ட்ரர்கள் கைப்பற்றித் தூக்கிச் சென்றுவிட்டார்கள். அப்போது ஜோகினோராவின் படைத்தலைவன் ஸிவாஜியிடம் வந்து "பல்லக்கை எங்கே தூக்கிச் செல்லுகிறீர்கள். ஏன் வழிமறிக்கிறீர்கள். நீ யார்?" என்று இம்மாதிரியான கேள்விகளை கோபத்துடன் கேட்டான். அதற்கு ஸிவாஜி "நான்தான் ஸிவாஜிஎன்று சொல்லப்பட்டவன். பல்லக்கும் அதனுள்ளிருப்பவளும் எந்த விடத்தில் எம்மாதிரியாக யிருக்கவேண்டுமோ, அதில் யாதொரு குறைவும் இராது. எங்கள் கையில் சிக்கியிருக்கும் பொருளின் மதிப்பு எங்களுக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால், அவள் வெகு தூரத்திலிருந்து இரவென்பதும் பகலென்பதுங்கூட கவனிக்காமல் ரொம்பவும் ச்ரமப்பட்டு வந்திருக்கிறாளானதால், அவளுக்குத்தக்க ஆகாரமும், இருப்பிடமும், மரியாதையும்கொடுத்து கவனித்து வருவோம். அவளைக்குறித்து இனி தர்க்கம் செய்யும் பக்ஷத்தில்,உன்னையும் உன்சிறுபடையையும் ஒரு நொடிப்பொழுதில் யமனுலகமனுப்பி விடுவேனென்றாலும், உனக்கும் உன்னாட்களுக்கும் ப்ராணதானம் செய்கிறேன். நீங்கள் செய்யவேண்டியதென்னவெனில், சீக்ரம் உங்கள் பாதுஷா அவுரங்கஸீபிடம்சென்று, எவனொருவனை மலையெலி பென்றும், மலைக்கொள்ளைக்காரனென்றும் ஏளனமாக அவன் அழைக்கிறானோ அவன் வசம் தன்னுடைய குமாரி தற்காலம் ஸௌக்யமாயிருக்கிறாளென்றும், ஸிம்ஹாஸனத்தைக் குறித்து அவன் உயிருள்ளளவும் வாதிக்காமல் போகானென்றும், ஆகையால் அவ்வளவுசிறந்த வீரபராக்ரமமுள்ள ஸிவாஜியுடன் ஸம்பந்தம் உண்டாக்கிக்கொள்வதினால் கௌரவக்குறைவு ஒன்றுமில்லையென்றும் நான் சொன்னதாகத் தெரிவிக்கவேண்டும். ஓடிப்போ" என்றுரைத்துவிட்டு தன்னாட்களுடன் மலையினுள் சென்றுவிட்டான். முகலாய தளகர்த்தனும் அவனுடைய சிறுபடையும் இச்செய்தியையும், தாங்கள் புத்திகூர்மையில்லாமல் ராஜகுமாரியைப் பறிகொடுத்ததையும் அவுரங்கஸீபினிடம் சென்று தெரிவித்தால், அவன் அடங்காச்சினங்கொண்டு தங்களை கடுமையாய் தண்டிப்பானென்று பயந்து வெவ்வேறு இடம் சென்றுவிட்டார்கள். அவுரங்கஸீப் தன்குமாரி டில்லியைவிட்டுப்புறப்பட்ட செய்தியை முன்னாலறிந்து அவள்வரவை ஒவ்வொரு தினமும் எதிர்பார்த்தவண்ணமாயிருந்தான். கடைசியில் தனது குமாரி ஸிவாஜியினிடம் இருப்பது தெரியவரவும், ரொம்பவும் கோபமடைந்து, ஸிவாஜியைப் பிடித்துவர ஸேனாதிபதிகளை நியமித்துவிட்டு, தனது தலைநகராகிய டில்லிவந்து சேர்ந்தான்.

ராஜ கன்னிகையான ஜோகினோராவைச் சுமந்து சென்றவர்கள் சிறிதுதூரம் மலைப்பாதைகளின் வழியாய்சென்று, கடைசியாக ஒரு சிறு கோட்டையினுள்புகுந்து கொஞ்சம் இருட்டான ஓர் அறையில் அவளையிருக்கச் செய்தார்கள். அவளை ஒருவரும் எவ்விதத்திலும் ஹிம்ஸிக்காமலிருந்தாலும், அவளைச்சுற்றி நிர்தாக்ஷிண்யமான காவலொன்றும் ஏற்படுத்தாமலிருக்

தானும், அந்தந்த வேளைகளில் மாத்ரம் தவறாமல் திவ்ய லக்ஷணமுள்ள ஒரு ஸ்திரீ அவளுக்கு வேண்டிய உணவுகளைக்கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றபடியாலும், ஜோகினாரா, தன்னைச் சிறைசெய்தவர்கள் சீக்ரத்தில் விடுதலையும் செய்வார்கள் என்று நம்பிக்கொண்டிருந்தாள். நான்காம்நாள் காலையில் ஸிவாஜி ராஜகன்னிகையின் முன்பு வந்துநின்றான். அவனுடைய ஸௌந்தர்யத்தையும், கம்பீரமான பார்வையையும், ராஜநடையையும் கண்டு ஜோகினாரா உள்ளத்தில் மோகங்கொண்டு, அவனைப்பார்த்து "என்னைச் சிறைபிடித்து இக்கோட்டையினுள் இவ்விதம் கவனித்து வரும் புருஷன் யார்?" என்றாள். ஸிவாஜி, "மஹாராஷ்ட்ரர் தலைவனான ஸிவாஜி" யென்று பதில் சொன்னான். ஜோகினாரா மறுபடியும், "அப்படியென்றால் அவுரங்கஸீப் சக்ரவர்த்தியின் குமாரியான என்னை எதற்காக மார்க்கத்தில் வழிமறித்து இக்கோட்டையினுள்ளிருக்கச் செய்யவேண்டும்?" என்று கேட்டாள். அதற்கு ஸிவாஜி," ஸ்த்ரீயே, முகலாய சக்ரவர்த்தியான உன் தகப்பனும் நானும் ஒருவித ஸ்நேகப் பான்மையிலிருந்துகொள்ளும் பொருட்டு, பெண்ணைக் கொடுத்து ஸம்பந்தம் ஏற்பட்டால், அவ்வாறு ஆகுமென்று எண்ணியே தான், உன்னைச்சிறைகொண்டேன்" என்றான். பின்னும் ஜோர்கினாரா, "ஆனால் டைமர் வம்சத்தில் அவுரங்கஸீபுக்குக் குமாரியாக ஜனித்த நான், கேவலம் மலைகளிலும் பாதைகளிலும் வழிமறித்துக் கொள்ளையடிக்கும் ஒருவனுக்கு பத்னியாக ஸம்மதியேனே" எனவும், ஸிவாஜி "அப்படியல்ல, ராஜ கன்னிகையே, உலகத்தில், அரசர் எல்லாரும் ஸமமே. அதிலும் ஒரு ராஜ்யத்தையே புதிதாக உண்டாக்கப்பட்டவன் இன்னும் க்யாதி யுள்ளவன். நானும் இம் மலைநாடுகளில் வஸிக்கும் ஜனங்களுக்கு ராஜனாகவே இருந்துகொண்டு ந்யாயம் செலுத்திவருவதினால், உன் தகப்பனைக் காட்டினும் நான் எவ்விதத்திலும் தாழ்ந்தவனல்ல. நல்லது, நீ என்னிடம் அகப்பட்டுக்கொண்டதினாலேயே உன்னை ஹிம்ஸிக்க வேண்டுமென்கிற எண்ணம் எனக்கு கொஞ்சமும் கிடையாது. உனக்கு என்னிடம் நல்ல எண்ணம் உண்டாகும்வரையில் நீ எதைக்குறித்தும் நினைத்து பயப்படவேண்டாம். ஆனபடியால் உனக்கு எது வேண்டுமென்றாலும் தெரிவித்தால், செய்ய ஸித்தமாயிருக்கிறேன். நல்லது, தற்காலம் போய்வருகிறேன்." என்று புன்னகைகொண்டு வெளியில்சென்றான். ஜோகினாரா அவன் மொழிந்த சொற்களையும், அவனது அழகையும் நினைத்து யோசித்தாள். ஸிவாஜியை மணம்புரிவதில் கௌரவக்குறைவில்லை யென்று நிச்சயங்கொண்டாள். ஸிவாஜி தினந்தோறும் ஜோகினாராவின் அறைக்கு வந்துபோய்க்கொண்டிருந்தான். இருவருக்கும் நேசம் முதிர்ந்தது.

இப்படியாக இருவரும் காலங்கழித்து வருகையில், ஒரு நாள் ஜோகினாராவின் அழகைக் கேள்வியுற்று மோகங்கொண்ட ஸிவாஜியின் படைத் தலைவனொருவன் அவளிடம் வந்து துராக்ருதமாய் வாதுசெய்த ஸமாசாரம் ஸிவாஜிக்குத் தெரியவரவும், உடனே அவனைச் சண்டைக்கு அழைத்து ஒருநொடிப்பொழுதில் அவனைக் காயப்படுத்தி கோட்டைக்கு வெளியே தள்ளிவிட்டான். அதன் காரணமாக அவன் ஸிவாஜியிடம் த்வேஷங்கொண்டு எவ்விதத்திலாவது தன் க்ஷாத்ரத்தைத் தீர்த்துக்கொள்ள எண்ணி, அருகாமையில் எதிரியின் படை இருப்பதைத் தெரிந்துகொண்டு, அப்படையின் தலைவனிடம் மெதுவாகச்சென்று, தனக்கும் ஸிவாஜிக்குமுள்ள விரோதத்தை தெரியப்படுத்தி, அவனுக்கு (எதிரிக்கு) மலைக்கோட்டைக்குச் செல்லும் வழியைக் காண்பிப்பதாக ஒப்புக்கொண்டான். இவ்விதம் ஸமயம் வாய்க்கவும் உடனே அவர்கள் (எதிரிகள்) இத்த்ரோஹியின் ஒத்தாசையி

பக்கம்.

பெற்றமனம் பித்து ... 223, 360
பெற்றோரும் பிள்ளையும் ... 33

பே

பேனாக்கள், ஸ்வதேசி ... 480

பை

பையன்கள் பள்ளிக்கூடத்தில் பெண்கள் வாசித்தல் ... 76

பொ

பொது எதிரிக்காக சண்டையை நிறுத்தினது. ... 62
„ ஜன சௌக்யத்தைப்பற்றிய புதுக்கொள்கை 410
„ „ ஸமூக நடவடிக்கை ... 195
„ „ ஸுகாதாரம் ... 411
பொய்சொல்லாத ஒரு ஜாதியார் ... 444
பொய்யைச்சொல்லி பொருளையீட்டினான் ... 168
பொருளாதார நிலைமை, நமது ... 51
„ „ மத்யதரவகுப்பார்களின் ... 202
„ „ யும், மறுவெட்டில்மெண்டும் ... 318
பொருள்காட்சிசாலை, பள்ளிக்கூட ... 233
„ சென்னையில் ... 317
பொலிகாளைகளை அதிகப்படுத்த ஏற்பாடு, ஐயர்லண்டில் ... 102

போ

போரிக் லோஷன் ... 341
போர்க்களத்தில் சுரங்கம் தோண்டுதல் ... 42
போஸ்டாபீஸ் ரொக்க ஸெர்ட்டிபிகேட்டுகளுக்கு பற்பல காலங்களில் கிடைக்கும் தொகை ... 109

ப்

ப்ரஜாலக்ஷணம் ... 291
„ லக்ஷணமும் ஜனஸமூகமும் ... 291
ப்ராணிகளின் தற்காப்பு ஸாதனங்கள் ... 179
ப்ராமணருக்கு ஒரு செட்டிப்பெண் மனைவியானது ... 318
ப்ரிட்டிஷ் ராஜ்யமும், இந்தியாவும் ... 57
ப்ரொடக்டர் அப் எமிக்ரண்ட்ஸ் 41, 417

ம

மஞ்சள் ... 466
மஞ்சித் ... 333
மடிவீக்கத்தின் அடையாளங்கள் ... 377
மடிவீக்கத்துக்கு சிகித்ஸை ... 377
மடிவீக்கத்தைத் தடுத்தல் ... 378
மடிவீக்கம் ... 376
மணத்தக்காளி ... 72

பக்கம்.

—பண்டித. வி. ஸுப்ரமண்ய அய்யர் ...
மணியம், கே. எஸ்.
—அசுத்தமான ஆகாயமும் அதன் கெடுதிகளும் ... 384
மண்ணெண்ணெய் ... 73
மதுபானத்தைக் குறைத்தல் ... 479
மதுபானம், சென்னையில் ... 277
மதுவிலக்கு கான்பரென்ஸ், எல்லா இந்திய ... 37
மத்யதர வகுப்பார்களின் பொருளாதார நிலைமை ... 202
„ „ வரும்படி ... 202
மந்தமான குழந்தைகளை பயிற்சி செய்தல் ... 274
மரங்கள், களர்நிலங்களில் பயிராகக்கூடிய, ... 16,63
„ சாயம், எண்ணெய், நார் முதலியவைகளுக்கு உபயோகமாகும் 331,381
மரணபயம் வேண்டாம் ... 316
மரண விசித்ரம் ... 337
மரவுரி மரம் ... 383
மலேரியா ... 412
மலைப்பனைமரம் ... 383
மலையாளம் ஜில்லா கான்பரென்ஸ் ... 159
மல்யுத்தம், இந்தியாவில் ... 133
மறு வெட்டில்மெண்டும் ஜனங்களின் பொருளாதார நிலைமையும் ... 318
மனத்திற் குறுத்தும் மதிவிளக்கம் ... 159
மனிதர்களுக்கு கடவுளுடைய நாமங்களை இடுதல் ... 435

மா

மாகாண கவர்ன்மெண்டுகள் ... 54
„ ராஜீய கான்பரென்ஸ் ... 197
„ லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்கள் ... 52
„ வித்யா கான்பரென்ஸ் ... 198
மாடுகளுக்கு வரும்கஷ்டம் ... 419
„ வைத்யம் ... 340
மாட்டுத்தீவனமாவது, சவுக்குப்பயிர் ... 246
மாணவர்களின் உல்லாஸ ஸஞ்சாரத்தைப் பற்றிய சில குறிப்புகள் ... 67
மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் ... 84
மாணவர்களும் புகைச்சுருட்டுக் குடித்தலும் ... 278
„ ராஜீய விஷயங்களும் ... 190
மாணிக்கவாசக ஸ்வாமிகள் ... 365
மாதிரிக் கைத்தொழில் சாலைகள் ... 452
மாதுளை ... 332





பக்கம்.

மாமரம் பயிரிடுதல் ... 36
மாயூரஸ்தல மான்மியம் ... 360

மி

மிளகாய் சாகுபடி 35,476

மீ

மீன் எண்ணெய் ஸோப் 260

மு

முகம்பார்க்கும் கண்ணாடி செய்தல் ... 60
முதல் முதலான வ்யவஸாய ஆராய்ச்சிப் பண்ணை ... 402
முந்திரிக்கொட்டை ... 273
„ எண்ணெய் ... 273
„ பருப்பு ... 274
„ பழம் ... 273
„ பிசின் ... 274
முயலுக மேன் மேல் ... 396
முரளீதரன் ... 479
முருங்கை மரம் ... 382
முறுக்கன் மரம் ... 63
முஸ்லீம் லீக், எல்லா இந்திய ... 38

மூ

மூக்கில் முள்வேலி ... 188
மூடபக்தி அல்லது விபரீத ஆசாரம் ... 171
மூட்டுப்பூச்சிகளை ஒட்ட ... 439
மூத்தோர் சொல்லுக்குக் கீழ்ப்படிதல் ... 153
மூலதன மின்மை ... 323
மூலதனம் ... 5

மெ

மெழுகுவர்த்தி ... 320
மெஸபொடேமியாவிலுள்ள ஒரு விநோத ஜாதியார் ... 203

மே

மேல்த்தோல் ... 181

மை

மைஸூர் தேச சரித்ரம்
—வி. ஸ்வாமிநாத சர்மா 262,301
„ யுனிவர்ஸிடி ... 319
„ ஸிவிக், ஸோஷல் கான்பரென்ஸ் ... 239

மோ

மோதிரங்கள் ... 250
மோர் ... 465

பக்கம்.

ம்

ம்ருகங்கள் தங்களை சுத்தம் செய்து கொள்ளும் விதம் ... 325
ம்ருக வைத்ய சாலைகள் ... 480

ய

யந்த்ரங்கள், கைத்தொழிலபிவ்ருத்திக்கு ... 43

யு

யுத்தக்கடன் ... 108
„ செலவு 280,397
யுத்தத்துக்கு லாயக்கில்லாத இந்திய வீரர்களுக்கான தொழில் பாடசாலை ... 487
யுத்தமும், அமெரிக்காவும் ... 162
„ திருக்குறளும் ... 196
„ கிஜாரும் ... 317
யுத்தம், ஐரோப்பிய, 38,79,119,159,200, 240,280,320,359,400,439,480
யுனிவர்ஸிட்டி, உஸ்மானியா ... 239
„ திருவான்கூருக்கு ஒரு ... 480
„ மைஸூர் ... 319
„ ஹிந்து ஸ்த்ரீகள் ... 158

ர

ரக்தபேதிக்கு சிகித்ஸை ... 157
ரங்கமாலி ... 331
ரத்தினப் பிரகாசம் ... 238
ரயில்வேக்களைப்பற்றிய சில விஷயங்கள், இந்தியாவிலுள்ள ... 99
ரஷ்யாவில் ராஜாங்கப் புரட்சி ... 122
ரஸாயன மருந்துகள், பூச்சிகளை யழிக்க மீன் எண்ணெய் ஸோப் ... 260
ரஸூல், காலஞ்சென்ற ஏ. ... 319

ரா

ராணுவம் முதலிய இதர விஷயங்கள் ... 57
ராத்திரிப்பாடசாலைகள் ... 252
ராஜகோபாலாச்சாரி பி. வி.—வேலி ... 188
ராஜகோபாலன் டி. எஸ்.—சர்மம் ... 180
ராஜாங்க உதவி, கைத்தொழிலுக்கு ... 88
„ சீர்திருத்தம், இந்திய, ... 319
„ புரட்சி, ரஷ்யாவில், ... 122
„ விஷயமாய் இந்தியாவுக்கு வேண்டியிருப்பவைகள் ... 28
ராஜீய கான்பரென்ஸ், மாகாண ... 197

ரு

ருமேனியாவில் விவாகங்கள் ... 20

பக்கம்.

ரெ

ரெங்காசாரியார், ப்ரொபஸர் எம். ... 57
ரெயில் கற்றுழை ... 312
" மாறுதல் ... 78
ரெயில்வே தொழில் பண்டக சாலை ... 318
ரெஜிஸ்ட்ரார்கள், கௌரவ அஸிஸ்டெண்ட் .. 399

ரோ

ரோஜா பயிர் செய்தல் ... 254

ல

லவங்கப்பட்டை மரம் ... 381

லா

லாட்டரி ஏற்பாடுள்ள கடன்கள் ... 97
லாப நஷ்டக்கணக்கும், வருமான வரியும் ... 239
லாய்ட் ஜார்ஜ், மிஸ்டர் டேவிட், ... 24

லெ

லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில்; இம்பீரியல் ... 54
" " மாகாண ... 52

லே

லேவாதேவி, சந்த்ரகுப்தன் காலத்தில் ... 34

வ

வஞ்சிமரம் ... 382
வட்டியில்லாத ரொக்கச் சீட்டுகள் ... 199
வரிகள், புது ... 107
" விதித்தலும், ஹிந்துஅரசர்கள் காலத்தில் ஸ்தலஸ்வய ஆட்சியும் ... 18
வருமானவரியும் லாபநஷ்டக் கணக்கும் ... 239
வர்த்தக யுக்தி ... 62
வர்த்தமானக் குறிப்புகள் 37,77,117,157, 197,237,277,317,357,397,437,477
வலம்புரிமரம் ... 383
வழக்கங்கள், கெட்ட ... 9
வளையல் உடன்பாடு ... 426
வஸ்து சித்ர லேகனம் ... 77

வா

வாட்டர் ஹயவிந்த் ... 357
வாதுமை ... 357
வால்மீகியும் கம்பனும் ... 474
வாழைமரம் ... 382

வி

விதைநெல் தெரிந்தெடுத்தல் ... 238
விதையைத் தெரிந்தெடுத்தல் ... 170
வித்யாகான்பரென்ஸ், மாகாண, ... 198
விபரீத ஆசாரம், அல்லது மூடபக்தி ... 171
விலக்கவேண்டியவை ... 357
விவஸாய இலாகாவின் விதைநெல் ... 118
" நூல், நூதன ... 65
" பண்ணைகளும் ஜில்லா உத்யோகஸ்தர்களும் ... 318
" பள்ளிக்கூடம், புதுக்கோட்டையில் ஒரு 289
விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் ... 243
விவாகங்கள், ருமேனியாவில். ... 20
விவாகம், பால்ய, ... 9
விளாமரம் ... 68
விஷய ஞானம் (உபாத்யாயர்களுக்கு) ... 195

வீ

வீடுகளின் நிலைமை ... 8
வீடுகள் ... 383
வீட்டில் செடிகள் வளர்ப்பது ... 234
வீட்டுக் கைத்தொழில்கள் 205, 415

வெ

வெங்கட்டரமண அய்யர், ஒய். எஸ்.
—களர் நிலங்களில் பயிராகக்கூடிய மரங்கள் 16,63
" சாயம், எண்ணெய், நார் முதலியவைகளுக்கு உபயோகமாகும் மரங்கள் 331, 381
வெங்காய அறுவடை ... 370
" பத்ரப்படுத்தி வைத்தல் ... 371
" நாற்றுகளை நடுதல் ... 369
" மாஸூல் ... 371
" பயிராகும் காலம் ... 369
" விதைகள் ... 371
" விதையும் விதைத்தலும் ... 369
" ஸாகுபடி ... 369
" " நிலம் ... 369
" " நிலத்தை பண்படுத்தல் ... 369
வெண்ணெயில் சூதுகள் ... 465
வெண்ணெய் ... 465
வெந்நீரின் உபயோகம் ... 478
வெந்நீர் குடித்தல் ... 319
வெப்பாலை ... 333
வெள்வேலன் 16, 333, 384

வே

வேதாந்த பாடசாலை, பம்பாயில் ஒரு ... 199
வேப்பமரம் ... 382
வேம்பாடம்பட்டை ... 332
வேம்புமரம் ... 63





பக்கம்.

வேர்களின் சக்தி ... 168
வேர்க்கடலை ... 343
" உணவுப்பொருளாவது ... 470
" பருப்பு .... 470
வேர்க்குருவுக்கு ஓர் மருந்து ... 57
வேர்வை ... 182
" கோளங்கள் ... 181
வேலி—பீ. வீ. ராஜகோபாலாச்சாரி ... 188
" கவனிக்கவேண்டியவைகள் ... 188
" உபயோகங்கள் ... 188
" வகைகள் (மூன்று) ... 188
வேலை செய்வதைப்பற்றிய நியந்தனைகள் ... 388
வேலையில் கவனம் (உபாத்யாயர்) ... 195

வை

வைத்ய உதவி ... 889
" சாலைகள், ம்ருக, ... 480
" பாடசாலை, ஸ்த்ரீகளுக்கு, ... 199
வைத்யம் ... 203
" செய்தல், குழந்தைகளுக்கு, ... 193
" செய்யும் ஸப்அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள், ஊர்தோறும் போய் ... 165

வ்

வ்யவஸாய அபிவ்ருத்திக்கு இடையூறுகள் ... 322
" ஆராய்ச்சிப்பண்ணை, முதல் முதலான, 402
வ்யாதிக் குறிகள், மாடுகளின் அம்மை ... 339
வ்யாபாரக் கமிஷனர் நியமனம் ... 239
" க்ஷேமம், இந்தியாவில் 38,77,117,158, 199,279,318,399,479
வ்யாபாரத்தின் போக்கு, 1916—17-ல் ... 362
வ்யாஜ்யங்கள், இந்தியாவில் ... 359

ஜ

ஜப்பானில் கடிகாரம் செய்யும் தொழில் ... 285
ஜப்பானோடு வ்யாபாரம் 1916-17-ல் ... 364
ஜயா—டி. எஸ். வீதாபதி ... 90
ஜலம் பாய்ச்சுதல், ரோஜாச் செடிக்கு ... 256
ஜனனமரணக்கணக்கு, இந்தியாவின் ... 337
" விகிதம் ... 337
ஜனஸமுதாய ஊழியம் ... 360
ஜனஸமூக ஆசார விஷயங்கள் ... 292
" ஏற்பாடும், ஸொத்தைப் பற்றிய சட்டமும் ... 323
" சீர்திருத்தமும் க்ஷயரோகமும் ... 7
" வாழ்க்கையும், ப்ரஜாலக்ஷணமும் ... 291
ஜனாசார சீர்திருத்த கான்பரென்ஸ், இந்திய ... 38
ஜன்னல் கண்ணாடிகளை சுத்தம் செய்ய ... 65

ஜா

ஜாகீர் ஏற்பாடு, பஞ்சாபில் ... 158
ஜாதி வழக்கங்கள் ... 157

ஜி

ஜில்லா உத்யோகஸ்தர்களும் விவஸாயப் பண்ணைகளும் ... 318
" போர்டுகளுக்கு உத்யோகஸ்தரல்லாத ப்ரெஸிடெண்டுகள் ... 359

ஜோ

ஜோகி நாராவின் சரித்ரம்—டி. எஸ். வீதாபதி 9

ஷ

ஷண்முக ஸுந்தரம் ... 159
ஷராப்கான் ... 79

க்ஷ

க்ஷயரோகத்திற்கு சிகித்ஸை ... 420
க்ஷயரோகத்தின் அறிகுறிகள் ... 419
க்ஷயரோகமும் ஜனஸமூக சீர்திருத்தமும் ... 7
க்ஷயரோகம் ... 118
" வராமல் தடுத்தல் ... 420

ஸ

ஸங்கதி, நாநா 40,80 120,160,240,320, 360,440.
ஸத்ய ஹரிச்சந்திரன் ... 238
ஸம்பத் அய்யங்கார்.—கம்பரும் குலோத்துங்க சோழனும் ... 345
" " —கம்பர் ... 221
ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிய கமிஷன்...82,125
" " உத்யோகங்கள் ... 202
ஸலேமிரா—கே. டி. ஸுந்தரராஜாச்சாரியார். 304

ஸா

ஸாவித்ரி ... 280

ஸி

ஸினெமடொக்ராப்பின் உபயோகம், படிப்பு கற்பிப்பதில் ... 404

ஸீ

ஸீதாபதி, டி. எஸ்.
—ஜயா ... 90
—ஜோகி நாராவின் சரித்ரம் ... 9

ஸு

ஸுகாதாரக் குறிப்புகள் ... 275
" ப்ரஸங்கங்கள் ... 399

பக்கம்.

ஸுகாதாரம், பொதுஜன ... 411
ஸுந்தரராஜாச்சாரியார், கே. டி.—கதை
 சொல்லுதல் ... 333
 „ —உலேமிரா ... 304
 „ ஸ்லேட்களும் நோட்புஸ்தகங்களும் ... 30
ஸுப்ரமண்ய அய்யர், வி.—கோடைகாலத்
 தில் உறங்கும் ப்ராணிகள் ... 371
 „ சவுக்குப்பயிர் மாட்டுத் தீவனமாவது ... 246
 „ ந்யூஸீலண்டில் ஜீவராசிகள் போய்ச்
 சேர்ந்த விதம் ... 421
 „ —மணத்தக்காளி ... 72
ஸுப்ரமண்யம் எஸ். ஜி.—உலோகங்கள் ... 175

ஸெ

ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை ... 475
ஸெண்ட்ரல் பாங்கிகள் ... 243

ஸே

ஸேவிங்ஸ்பாங்க் ஏற்பாடு, கோவாபரேடிவ்
 ஸங்கங்களில் ... 307

ஸோ

ஸோடா உப்பும் ஸில்வாதமும் ... 359
ஸோப், மீன் எண்ணெய் ... 260

ஸ்

ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட பால் ... 464
ஸ்ட்ரெய்ட் ஸெட்டில் மெண்டுக்குப்போகும்
 இந்தியர்கள் ... 199
ஸ்தல ஸ்வய ஆட்சியும் வரிவிதித்தலும்,
 ஹிந்து அரசர்கள் காலத்தில் ... 18
ஸ்த்ரீகளுக்கு வைத்ய பாடசாலை ... 199
ஸ்த்ரீகளும் ஒப்பந்தக்கூலி ஏற்பாடும் ... 117
ஸ்த்ரீ தர்மம் ... 430
ஸ்லேட்களும் நோட்புஸ்தகங்களும்
 —கே. டி. ஸுந்தரராஜாச்சாரியார் ... 30
ஸ்வதேச பாஷையில் பெண்கல்வி ... 49
ஸ்வதேசி பேனாக்கள் ... 480
ஸ்வர்ணகாந்தி அல்லது இருமனிவிகள் ... 119
ஸ்வாமினாத சர்மா, வி.—மைஸூர் தேச
 சரித்ரம் ... 262,301

ஹ

ஹட்விக், வாட்டர் ... 8
ஹரித்வாரத்தில் தர்மசாலைகள் ... 374
 „ பாடசாலைகள் ... 375
ஹரித்வாரத்தைப்பற்றிய பொதுக்குறிப்புகள்... 376
ஹரித்வாரம் ... 374
ஹரித்வார் க்ஷேத்ர விசேஷங்கள் ... 374
ஹரீதகீ வடகம் ... 237

ஹா

ஹாஸ்ய மஞ்சரி ... 360

ஹி

ஹிந்து அரசர்களும் நீதிபரிபாலனமும்,
 பண்டைக்காலத்து ... 191
 „ அரசர்கள் காலத்தில் ஸ்தல ஸ்வய
 ஆட்சியும் வரிவிதித்தலும் ... 18
ஹிந்து ஸ்த்ரீகள் யூனிவர்ஸிட்டி ... 158

ஹோ

ஹோஸ்டல்களுக்கான கவர்ன்மெண்ட்
 உதவி ... 438

ஸ்ரீ

ஸ்ரீனிவாஸாச்சாரியார் கே. பி.—திருவள்ளுவர். 407

THOMPSON AND CO., PRINTERS, MADRAS.



The Rt. Hon. LLOYD GEORGE,
The British Premier.
ரைட் ஆனரபில் லாயிட் ஜார்ஜ்,
பிரிட்டிஷ் பிரதம மந்திரி.



Hon. Mr. AMBICA CHARAN MAZUMDAR,
President, Indian National Congress, 1916.
ஆனரபில் மிஸ்டர் அம்பிகா சரணமஜூம்தார்,
பிரெஸிடெண்ட், இந்தியன் நாஷனல் காங்கிரஸ்.

# ஜனோபிமானி.

(முன்பு ‘ பிழைக்கும் வழி ’ யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE ‘ PRACTICAL LIFE.’

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. — நளவருஷ தைமீ JAN —FEB. 1917. — ஸஞ்சிகை 1. No. 1.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The ‘ Peoples' Friend ’ is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* | | | | *Foreign.* | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | P. | | Rs. | A. | P. |
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| ⅛ do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of reputed manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George town, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் ‘ஜனோபிமானி’யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| ⅛ ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# REQUISITES FOR INDUSTRIAL DEVELOPMENT.

## கைத்தொழி லபிவ்ருத்திக்கு அவச்யமாய் வேண்டியவைகள்.

பன்னிரண்டாவது இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ் சென்ற டிஸம்பர்மாஸம் 30-தேதியன்று லக்னௌவில் நடைபெற்றபோது, அதற்கு ப்ரெஸிடெண்டாக இருந்த ஆனரபிள் ராய் ஸீதாநாத் ராய் பகதூர் தமது ப்ரஸங்கத்தில் கைத்தொழில் அபிவ்ருத்தியடையவேண்டுமானால் இன்னின்ன அம்சங்களில் சீர்திருத்தங்கள் அவச்யமாய் செய்யவேண்டியிருக்குமென்பதை விவரமாய் எடுத்துச்சொன்னார். அவர் சொல்லிய விஷயங்களை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

இந்தியா ஒழிந்த மற்ற தேசங்களெல்லாம் கைத்தொழிலில் ரொம்பவும் அபிவ்ருத்தி அடைந்துவர, இந்தியாமாத்ரம், கைத்தொழில் விஷயங்களில் வெகுவாய் முன்னேற்றமடையாமல் முன்னிருந்தபடியே இருந்துவருகிறது. ஜனத்தொகையோ நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. அதிகமான ஜனங்கள் ஜீவனத்துக்காக விவஸாயத்தைக் கைக்கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள். 1891-ம் வர்ஷத்தில் மொத்தம் ஜனத்தொகையில் 100-க்கு 62-பேர்கள் ஜீவனத்துக்கு விவஸாயத்தை எதிர்பார்த்தவர்களாயிருந்தார்களென்று தெரிகிறது. 1901-ம் வர்ஷத்தில் 100-க்கு 68-பேர்கள் விவஸாயிகளாகவும் அவர்களை யண்டியிருப்பவர்களாகவும் இருந்தார்கள். 1911-ம் வர்ஷத்திலோ 100-க்கு 71-பேர்கள் ஜீவனத்துக்கு விவஸாயத்தையே எதிர்பார்த்திருந்தார்கள். இதனால் சென்ற சில காலமாக அதிகமான ஜனங்கள் விவஸாயத்தில் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. இங்கிலண்டின் நிலைமையோ வேறு. அங்கே தொழில் செய்து ஜீவிப்பவர்களில் 100-க்கு 58-பேர்கள் கைத்தொழில்களில் வேலைசெய்து ஜீவிக்கிறார்கள். 100-க்கு 8-பேர்கள்தான் விவஸாயத்தில் பாடுபடுபவர்கள். இந்தியாவில் மொத்தம் ஜனத்தொகையில் நூற்றுக்கு 12-பேர்கள்தான் கைத்தொழிலில் அமர்ந்திருக்கிறார்கள். இந்தியாவில் ஜனங்களின் நிலைமை இப்படியிருப்பது இயற்கைக்கு மாறுபாடாகும். விவஸாயத்தில் லாபம் கிடைப்பதென்பது ஒரு நிச்சயமல்ல. மேலும் லாபம் வரக்கூடிய தொழில் என்றாலும், கைத்தொழில்களில் கிடைப்பதுபோல அதில் அதிகலாபம் கிடைக்காது. இது யாவருமறிந்தவிஷயம். இப்படிப்பட்ட நிலைமையால் உண்டாயிருக்கும் பலன் என்னவென்றால், மற்ற தேசங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது தேசம் ரொம்ப ஏழ்மையான தேசமாக இருக்கிறதென்பதே. முன்பு ஒருகாலத்தில் நமது தேசம் ரொம்ப பணக்காரதேசமாக இருந்தது. நமது தேசத்திலிருந்து பணம் அபகரித்துப்போக பல அன்யதேசத்து அரசர்கள் படையெடுத்து வந்தார்கள்.

பொதுவாய் ஐரோப்பியர்களெல்லாரும் இந்தியாவானது எப்போதும் ஒரு விவஸாய நாடாகவே இருந்துவந்ததென்று அபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு தவறான அபிப்ராயமாகும். தேச சரித்ரங்களை கவனித்துப்பார்த்தால், முற்காலத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சரக்குகள் உபயோகத்துக்கேற்றபடி தயார்செய்யப்பட்ட கைத்தொழில் பொருள்களென்றும், தொழில்களுக்கு உதவும் மூலப்பொருள்களே பெரும்பான்மையாய் இந்தியாவுக்கு இறக்குமதியாயினவென்றும் தெரியவரும்.

18-ம் நூற்றாண்டுவரையில் இந்தியாவானது தொழிலில் ரொம்ப அபிவ்ருத்தியடைந்த தேசமாயிருந்தது. அந்த நூற்றாண்டின் கடைசி பாகத்திலிருந்துதான் இந்தியாவின் தொழில் அபிவ்ருத்தி குறையலாயிற்று. அக்காலத்தில் ஐரோப்பாவில் கைத்தொழில் ரொம்பவும் மாறுபாடடைந்தது. ஆட்களை வைத்து வேலைசெய்வதற்கு பதிலாக யந்த்ரங்களை உபயோகிக்கலானார்கள். சிறுதொழில் சாலைகளில் பண்டங்கள் உற்பத்தி செய்வதைவிட்டு, பெரிய தொழில் சாலைகள் ஸ்தாபித்தார்கள். தொழில்சாலைகளை முன்னைவிட அதிக திறமையாயும், ஒழுங்காயும் நடத்த ஆரம்பித்தார்கள். இப்படி மாறுதல்கள் ஏற்பட்டதால், அதிகமாகலாமான்கள் செய்வது ஸாத்யமாயிற்று இந்தியாவிலோ தொழிலாளிகள் பழையமுறைகளையே அனுஸரித்து வந்தார்கள். தற்கால முறைப்படி தொழில்களை சீர்திருத்தி தொழில்சாலைகளின் திறமையை அதிகப்படுத்த யாதொரு முயற்சியும் செய்யப்படவில்லை. இதோடு ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் நமது தேசத்தின் கைத்தொழில்களை நாசம் செய்ய விசேஷ முயற்சிகள் செய்துவந்தார்கள். இவைகளோடு வேறு காரணங்களும் இந்தியாவின் முக்ய தொழிலாகிய நெசவுத் தொழில் க்ஷீணிப்பதற்கு அனுஸரணையாயிருந்தன. இந்தியாவிலிருந்து இங்கிலண்டுக்குள் துணிகள் இறக்குமதியாகக் கூடாதென்று இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் தடுத்துவிட்டார்கள். மேற்கு இந்திய தீவுகளில் அடிமைத்தனம் நீங்கிப்போனதன்பேரில், அடிமைகளாயிருந்த ஜனங்களுக்குள் நடையுடைபாவனைகள் மாறுதலடையவே, அந்த ஜனங்கள் அதுவரையில் இந்தியத்துணிகளை உபயோகித்து வந்தது நின்றுபோய் விட்டது. இங்கிலண்டிலுள்ள லங்காஷையரில் நெசவுத் தொழிலுக்கு யந்த்ரங்கள் உபயோகிக்க ஆரம்பிக்கவே, துணிகள் மலிந்து விற்கலாயின. சிலகாலத்துக்குப் பிறகு அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் நடந்தது. அதனால் பருத்தியின்விலை அதிகமாகவே, இந்தியாவின் நெசவுத் தொழிலுக்கு ரொம்ப கஷ்டம் உண்டாகி அது க்ஷீணிக்கலாயிற்று.

இத்யாதிகாரணங்களால் க்ஷீணித்துப்போன தொழில்களை அபிவ்ருத்தி செய்யவேண்டுமானால், பின்வரும் 10-விஷயங்களை அவச்யம் கவனித்து தொழில்களில் தக்கபடி சீர்திருத்தங்கள் செய்யவேண்டும். அவையாவன: (1) இயற்கை பொருள் ஸாதனங்கள். (2) பலதிறப்பட்ட வேலையாட்கள். (3) தொழில் விஷயங்களில் அனுபவ அறிவுள்ளவர்கள். (4) மூலதனம். (5) யந்த்ரஸாதனங்கள் (6) தொழிலில் ஏற்பாடு. (7) செய்யப்பட்ட வ்யாபாரப் பொருள்களை வாங்க ஜனங்கள். (8) பொருள்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோக போக்குவரவு வஸதிகள். (9) ஸர்க்கார் உதவி. (10) தொழிலில் ஊக்கம். இவைகளில் ஒவ்வொன்றையும் சுருக்கமாய் விவரிக்கிறோம்.

### இயற்கைப் பொருள் ஸாதனங்கள்.

பொதுவாய்ச் சொல்லுமிடத்து இந்தியாவில் தொழில் முயற்சிக்கு வேண்டிய இயற்கை ஸாதனங்கள் ஏராளமாயிருக்கின்றனவென்னலாம். அப்படியிருந்தும் இந்தப் பொருள்களை இங்கேயே தொழில்களுக்கு உபயோகிக்காமல் அநேகமாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அன்ய தேசங்களுக்கு அனுப்பி வ்யாபாரப் பண்டங்களாகச்செய்து, மறுபடி இந்தியாவுக்குக் கொண்டுவந்து விற்கிறார்கள். இந்தியாவில் நிலமானது ரொம்ப செழுமையானது. இதில் பலவகைப்பட்ட பயிர்கள் விளையக்கூடும். தாதுப்பொருள்களும் நமது தேசத்தில் ஏராளமாயிருக்கின்றன. ஆனால் நிலத்தின் தன்மையானது மாகாணத்துக்கு மாகாணம் வித்யாஸமாயிருக்கிறது. தாதுப் பொருள்களும் எல்லா மாகாணங்களிலும் ஸமமான அளவில் கிடைக்கக் கூடியதாயில்லை. இப்படிப்பட்ட நிலைமையை அறியாமல் போவதால் பலர் தக்க வஸதியில்லாத இடங்களில் கைத்தொழில் ஸ்தாபிக்க முயன்று நஷ்டமடைந்து விட்டார்கள். அந்தந்த இயற்கைப் பொருள் வஸதியுள்ள இடங்களில்தான் அந்

தந்த பொருள்கள் ஸம்பந்தமான தொழில்கள் நன்றாய் நடந்துவருகின்றன. இதற்கு உதாரணமாக பம்பாய் ராஜதானியில் பருத்தி நெசவுத்தொழில் நன்றாய் நடந்து வருவதையும், வங்காளத்தில் ஜூட்சணல் நார்த்தொழில்களும், சோட்டா நாக்பூரில் இரும்புத்தொழிலும் நன்றாய் நடந்துவருவதையும் சொல்லலாம். நிலக்கரி மலிவாய்க் கிடைக்கும் இடங்களில் கைத்தொழில்கள் ஸ்தாபிப்பது எப்போதும் லாபகரமானது. ஆனால் தொழில் ஸ்தாபிக்கப்படுமிடம் மூலப்பொருள் கிடைக்கு மிடங்களுக்கு ஸமீபமா யிருக்கிறதா என்பதொன்றைமாத்ரம் கவனித்தால் போதாது. தொழில்சாலைகளில் செய்யப்பட்ட பொருள்களை விலைப்போகும் இடங்களுக்கு கொண்டுபோக போக்குவரவு வஸதிகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். சில ஸமயங்களில் தூரமான இடங்களிலிருந்து மூலப்பொருள்களைக் கொண்டுவந்தாலும் அல்லது அன்யதேசங்களி லிருந்து இறக்குமதிசெய்தாலுங்கூட, பொருள்களை விற்பனை செய்வதற்கு வஸதியான இடத்தில் தொழில்களை ஸ்தாபித்தால் லாபம் கிடைக்கக்கூடும்.

## கூலியாட்கள்.

இந்தியாவில் சில பாகங்களில் வேலையாட்கள் ஏராளமாய்க் கிடைக்கிறார்கள், சில பாகங்களில் மிகவும் ஸ்வல்பமாகவே இருக்கிறார்கள். நமது தேசத்தில் கைத்தொழில் அபிவ்ருத்தி யடைய வேண்டுமென்றால், வேலையாட்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு வேலை நிமித்தம் போகும்படி செய்ய வேண்டும். இதற்கு வேலைசெய்து ஜீவிக்கும் வகுப்பாருடைய ஜனஸமூக ஸம்பந்தான தப்பெண்ணங்களை நீக்க முயற்சி செய்யவேண்டும். ரெயில்வே சார்ஜுகளைக் குறைக்கவேண்டும். தொழில் சாலைகளுக்கு வேலையாட்கள் வரும்படி துணை வேலை செய்வது ஸம்பந்தமான நிபந்தனைகளை தக்கபடி மாற்றவேண்டும்.

வேலைத் திறமையை உத்தேசித்து வேலையாட்களை வேலையில் தேர்ந்த தொழிலாளிகளென்றும், தேர்ச்சி யடையாத தொழிலாளிகளென்றும் இருவகையாய்ப் பிரிக்கலாம். இந்தியாவில் உள்ள தொழிலாளிகளில் பெரும்பாலார் பயிற்சி யடையாத வேலையாட்களே.

பொதுவாய்ச் சொல்லுமிடத்து தேர்ச்சி பெறாத இந்திய வேலையாள்கள் தொழிலறிவு இல்லாதவர்களாயும், மெதுவாய் வேலை செய்பவர்களாயும் இருக்கிறார்கள். வேலையை நல்ல முறையில் செய்ய அவர்களுக்குத் தெரியாது. இதனால் பண்டங்களையும் ஆயுதங்களையும் கெடுத்து விடுகிறார்கள். ஆகவே இப்போது அவச்யம் கவனிக்கவேண்டிய விஷயம் வேலையாட்களை வேலையில் பழக்குவதே. இதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் தக்க ஊர்களில் மூலாதாரத் தொழில் படிப்பைக் கற்றுக்கொடுக்க தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவேண்டும். நன்றாயும் அதிகமாயும் வேலை செய்து அதிக கூலி அடையும்படி வேலையாட்களின் திறமையை உயர்த்துவதே இந்தப் பள்ளிக்கூடங்களின் முக்ய நோக்கமாயிருக்கவேண்டும். ஆனால் இப்படித் தொழில் பள்ளிக்கூடங்களில் தொழில் கல்வி கற்பிப்பதற்குமுன் வேலையாட்களுக்கு ஸாதாரண எலிமெண்டரிக் கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும். இந்த எலிமெண்டரிப் படிப்பால் வேலையாட்களுடைய இயற்கை அறிவு கூர்மையடைந்து தொழில் விஷயங்களை சீக்ரம் கற்க அவர்களுக்குத் திறமை உண்டாவதோடு, பிறர் உதவி யில்லாமல் தங்கள் வேலைகளைச் செய்ய அவர்களுக்கு தைர்யமும் ஏற்படும்.

## தொழில் விஷயங்களில் தேர்ந்த அனுப அறிவு.

தொழில் நிபுணர்கள் இந்தியாவில் வெகுவாய் இல்லையென்றே சொல்லலாம். இந்தக் குறையை சரிப்படுத்தும் வரையில் இந்தியாவில் கைத்தொழிலில் ரொம்ப முன்னேற்றமேற்படுமென்பது முடியாத காரியம். ஆகை



யால் ஒவ்வொரு மாகாணங்களிலும், தொழிலாளிகளை கைத்தொழில் நிபுணர்களாகவும், ஸூபர்வைஸர்களாகவும் போர்மன்களாகவும் பயிற்சிசெய்விக்க ஒரு தொழில் சாஸ்த்ர கலாசாலை ஏற்படுத்தவேண்டியது அவச்யம். இதில் அந்தந்த மாகாணத்துக் கேற்ற கைத்தொழில் விஷயங்களும், விவஸாயம், மின்ஸார இஞ்ஜினியரிங், மெகானிகல் இஞ்ஜினியரிங், சுரங்கவேலை ஆகிய இந்த விஷயங்களையும் கற்றுக்கொடுக்க வேண்டும். கைத்தொழில் ஸம்பந்தமான சாஸ்த்ரங்களில் உயர்ந்த பாகங்களைக் கற்றுக்கொடுக்க இந்த தேசத்தில் குறைந்தது ஒரு உயர்தர தொழில் சாஸ்த்ர ஆராய்ச்சி சாலையாவது ஸ்தாபிக்கவேண்டும். இதையும் தொழில் கலாசாலைகளையும் யூனிவர்ஸிடிகளோடு சேர்த்துக்கொள்ளலாம். தொழில் கலாசாலைகளில் பயிற்சியடைந்த மாணவர்களுக்கு அனுபவ அறிவு ஏற்படுவதற்காக, அவர்கள் மில்லுகளிலும் தொழில் சாலைகளிலும் போய் தொழில் கற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யவேண்டும். கலாசாலைகளில் தேர்ச்சியடைந்து வெளியேறின மாணவர்களில் ரொம்ப ஸாமர்த்யமுள்ளவர்களை கைத்தொழிலில் ரொம்ப தேர்ச்சியடைந்த அன்ய தேசங்களுக்கு அனுப்பி, அவர்களுடைய கைத்தொழிலறிவைப் பூர்த்தி செய்துகொள்ளச் செய்ய வேண்டும்.

இந்தியாவில் பல கைத்தொழில்களுக்கும் வேண்டிய கைத்தொழில் நிபுணர்கள் போதுமான பேர்கள் தயாராவதற்கு அதிககாலம் பிடிக்குமாகையால், அதுவரையில் அன்யதேசங்களிலிருந்து கைத்தொழில் நிபுணர்களை வரவழைத்து தொழில்சாலைகளில் உபயோகிக்க வேண்டும்.

## மூலதனம்.

மூலதனம் எவ்வளவு உபயோகிக்கிறோமோ அதற்கு தகுந்தபடி தான் தொழிலும் வ்ருத்தி யடையும். இந்தியாவில் தொழில் துறைகளுக்குப் போட அகப்படக்கூடிய மூலதனம் ரொம்ப கொஞ்சந்தான். சிலரிடம் கொஞ்சம் பணம் ஒன்றுக்கும் உதவாமல் தூங்கிக்கொண்டிருக்கிறதென்பது வாஸ்தவந்தான். ஆனால் இந்தியாவில் ஏராளமான பணம் ஒன்றுக்கும் உதவாமல் வட்டி நஷ்டமாய்த் தூங்கிக்கொண் டிருக்கிறதென்று சிலர் சொல்லுவது உண்மையல்ல. நமது தேசத்து ஜனங்களிடம் உள்ள ஸ்வல்ப பணம் தொழில் துறைகளுக்கு உபயோகப்படாமல் தூங்குவதற்குக் காரணங்கள் இரண்டுண்டு. (1) தொழில்துறைகள் லாபந் தரக்கூடியவை என்ற நிச்சயமில்லாமையும் தொழில் நடத்துகிறவர்களுக்கு தொழில் திறமை இல்லையென்று ஜனங்கள் எண்ணியிருத்தலுமே. நிச்சயமாய் லாபந் தருமென்று சொல்லமுடியாத தொழில் துறைகளில் ஏழை ஜனங்கள் தங்களுடைய ஸ்வல்ப தனத்தை எப்படிப் போட முன்வருவார்கள்? (2) இரண்டாவது காரண மென்னவென்றால், தேசத்தில் கிடைக்கக்கூடிய மூலதனத்தில் பெரும்பாகம் ஏற்கனவே விவஸாயத்திலும் வ்யாபாரத்திலும் போடப்பட்டிருக்கிறது. இவைகளில் அந்தப்பணத்துக்குத் தக்கவட்டி கிடைத்து வருகிறது.

இந்தப்பணங்களைத் தொழில் துறைகளில் போடும்படி ஜனங்களைத் தூண்டவேண்டுமானால், கவர்ன்மெண்டார் கைத்தொழில் கம்பெனிகளுக்கு உதவிசெய்ய வேண்டும். இதனால் பணமுள்ளவர்களுக்கு தொழில் கம்பெனிகளில் நம்பிக்கை ஏற்பட்டு அவர்கள் பணம்போட முன்வருவார்கள்.

போதுமான மூலதன மில்லாமையே நமது கைத்தொழில் முன்னேற்றத்துக்குப் பெருந் தடையாக இருந்து வருகிறது. சில ஸமயங்களில் தொழிலேற்படுத்த முயலுபவர்கள் பங்கு மூல்தனம் பூராவையும் சேசரிக்காமலே தொழில் ஆரம்பிக்கிறார்கள். இதனால் வஸூலான பங்கு மூலதனத்தில் பெரும்பாகம் கட்டி

டத்துக்கும், யந்த்ரங்களுக்கும் செலவழிந்து போய், தொழிலை நடத்த போதுமான நடைமுதல் பணம் இல்லாமல் போகிறது. இதனால் அவர்கள் உயர்ந்த வட்டியில் அதிகமாய்க் கடன் வாங்க நேரிடுகிறது. அதிக வட்டி கொடுக்க நேரிடுவதால், லாபம் கிடைக்காமல் போவதோடு, சில ஸமயம் நஷ்டமும் ஏற்படுகிறது. ஆகவே, தொழில ஏற்படுத்த விரும்புகிறவர்கள், வேலை ஆரம்பிக்கு முன், போதுமான வளவு நடைமுதல் பணம் இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

கைத்தொழில் முயற்சிகளில் பற்பல செலவு அம்சங்கள் ஏற்படுமாதலால், அவைகளுக்கெல்லாம் செலவுசெய்ய ஸொந்த மூலதனம் மாத்ரம் போதாமலிருக்கும். இதற்கு கடன்வாங்கவேண்டியது அவச்யமாகும். இந்தியாவில் பாங்கிகளை அதிகரிக்கச்செய்து, ஜனங்களிடம் பாங்கியில் பணம்போடும் வாடிக்கையை உண்டுபண்ணினால் தான் நமது தேசம் முன்னேற்றமடையக்கூடும். தற்காலம் இந்தியபாங்கிகளின் தொகை ரொம்ப குறைவாயிருக்கிறது. அவைகள் செய்யும் வ்யாபாரமும் ரொம்ப குறைவே. நமது தேசத்தில் அன்யர்கள் நடத்திவரும் பாங்கிகளோ இந்தியத் தொழிலாளிகள் தக்க ஜாமீன்காட்டினாலுங்கூட அவர்களுக்குப் பணங்கொடுக்க இஷ்டப்படுகிறதில்லை. ஆகையால் கவர்ன்மெண்டார் தேசத்தில் பாங்கி ஏற்பாட்டை வ்ருத்திசெய்யவும், கைத்தொழில்கள் வ்ருத்தியடைவதற்காக அவைகளுக்குபாங்கிகளிடமிருந்து பணம் கடன்கிடைக்கும்படி செய்யவும் உதவிசெய்யவேண்டும். இதற்கு கவர்ன்மெண்டார் இந்தியா முழுவதுக்குமாக ஒரு ஸர்க்கார் பாங்கி ஸ்தாபித்து தேசத்தின் பல முக்யமான இடங்களில் அதற்குக் கிளைகள் ஏற்படுத்தவேண்டும். அல்லது ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு ஸர்க்கார் பாங்கி ஏற்படுத்தவேண்டும். இந்த பாங்கியால் இந்திய ஜாய்ண்ட் ஸ்டாக் பாங்கிகள் வ்ருத்தியடைவதோடு, கோவாபரேடிவ் ஸ்ணயஸங்கங்களுக்கும் பணம் கடன் கிடைக்கும். ஸர்க்கார் பாங்கியால் கைத்தொழில் முயற்சிகளுக்கும் பணக்கஷ்டம் குறையக்கூடும். இருந்தாலும் தொழில் முயற்சிகளுக்கு இன்னும் பணம் கடனாகவேண்டியிருக்கும். அப்படிப் பணம்வேண்டியிருந்தால், அன்ய நாடுகளிலிருந்து பணம் கடன் வாங்கலாம். ஸாதாரணமாய் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு இந்தியாவிலும், இதர தேசங்களிலும் ரொம்ப குறைவான வட்டியில் வேண்டிய கடன் கிடைக்கக்கூடும். சிலர் நமதுதொழில்துறைகளில் அன்யர்களுடைய பணத்தை உபயோகிப்பது கூடாதென்கிறார்கள். நமது தேசத்தில் தொழிலபிவ்ருத்திக்குக் கிடைக்கக்கூடிய பணம் ரொம்ப ஸ்வல்பமேயாதலால், அன்யதேசங்களிலிருந்து பணம் கடன்வாங்கி தொழிலபிவ்ருத்திக்கு உபயோகிப்பது ரொம்ப நல்லது. ஆனால் அப்படி அன்யர்களிடமிருந்து கடன்வாங்கின பணத்துக்கு வட்டிமாத்ரம் கொடுக்கவேண்டுமே யொழிய, அந்தப்பணத்தால் ஏற்பட்ட தொழில்களின் லாபம் அன்யர்களுக்குப் போகும்படி விடக்கூடாது.

ப்ரெஸிடெண்ட் மற்ற அம்சங்களைப்பற்றிப் பேசியவைகளை அடுத்த மாஸம் எழுதுவோம்.

---

அவிபக்த குடும்பமும் பராதீனம் செய்வதும்.—பெரியவர்களும் மைனர்களும் அடங்கிய ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தின் தலைவர், குடும்பத்துக்கு ஸொந்தமான ஸொத்தை விற்பதாக ஒருவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆனால் அவ்விதம் விற்கவில்லை. அதன்மேல் வாங்க ஒப்புக்கொண்டவர் ஒப்பந்தப்படி நடக்கவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். விற்பனைக்கான ஒப்பந்தம் மைனர் பாகஸ்தர்களுடைய நன்மையை உத்தேசித்துச் செய்யப்படவில்லை ஆகவே ஒப்பந்தப்படி ஸொத்துக்களை விற்கும்படி குடும்பத்தலைவனை கட்டாயப்படுத்த வதற்கில்லை. ஆனால் ஒப்பந்தப்படி நடக்காததால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு குடும்பத்தலைவர் ஈடுசெய்யவேண்டும்.



# TUBERCULOSIS AND SOCIAL REFORM.

## ட்யூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகமும் ஜனஸமூக சீர்திருத்தமும்

ட்யூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகமானது மனிதர்களுக்கு நேரும் கொடிய வ்யாதிகளில் ஒன்று. உலகத்தில் இறக்கும் வ்யாதிஸ்தர்களில் ஏழில் ஒரு பாகத்தார் க்ஷயரோகத்தால் இறந்துபோவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த வ்யாதிக்குக் காரணம் ட்யூபர்கில் பாஸில்லி என்னும் ஒருவகை நுண்ணிய க்ருமியே. இது தேகத்தில் சேர்ந்து வ்ருத்தியாவதால் தான் க்ஷயரோகம் உண்டாகிறது. இது காற்றில் தூசியோடு தூசியாகப் பறந்து பலவிடங்களில் பரவக்கூடும். அல்லது இந்த க்ருமியுள்ள வஸ்துக்களில் ஈக்கள் உட்காரும்போது ஈக்களின் கால்களில் இந்த க்ருமிகள் ஒட்டிக்கொண்டு, ஈக்கள் ஆகாராதிகளின்மேல் உட்காருகையில், க்ருமிகள் ஆகாராதிகளில் கலந்துகொண்டு வ்யாதியைப் பரவச் செய்யக்கூடும். இந்த க்ருமியானது தேகத்தின் பல பாகங்களில் போய்ச்சேர்ந்து பலவித வ்யாதிகளை உண்டுபண்ணக் கூடுமென்றாலும், இதனால் வெகுவாய் க்ஷயரோகமே அதிகமாக உண்டாகிறது. இந்த வ்யாதியில் மனிதனுடைய நுரையீரல் கெடுதலடைகிறது. அங்கே சேர்ந்த வ்யாதி க்ருமியானது பல மடங்கு அதிகமாக வ்ருத்தியாகி, க்ஷயரோகி இருமும்போது துப்பும் கோழையுடன் கலந்து வெளிவருகிறது. வ்யாதிஸ்தர் வீட்டின் சுவர்கள், தரை இவைகளில் துப்பினால், கோழையானது சீக்ரம் உலர்ந்து போகிறது. அதிலுள்ள வ்யாதி க்ருமிகள் வெளிப்பட்டு தூசியுடன் கலந்து அறைமுழுவதும் ஸஞ்சரித்து இருட்டான மூலைகளில் போய்த் தங்கியிருக்கும். இப்படி இருட்டில் தங்கியிருக்கும்போது இந்த வ்யாதி க்ருமிகள் சில நாட்கள் அல்லது வாரம் வரையில் சாகாமலும், வீர்யம் குறையாமலும் இருக்கும். ஆனால் வீட்டை பெருக்கி சுத்தம் செய்யும்போதும், நல்லகாற்று வீசும்போதும் க்ருமிகள் அறையை விட்டு வெளியில் காற்றில் பறந்து ஸூர்ய வெளிச்சத்துக்கு வந்தால், உடனே அவைகள் வீர்யமிழந்து விடுகின்றன. பிறகு அவைகளால் நமக்கு யாதொரு கெடுதலும் ஏற்படுவதற்கில்லை.

இதனால் வீட்டுக்குள்ளும், பொது ஜனங்கள் ஏறிப்போகும் வண்டிகளிலும் துப்புதல் கெட்ட வழக்கமென்று ஏற்படுகிறது. க்ஷயரோகிகள் வீட்டுக்குள்ளிருக்கும்போது இரும நேர்ந்தால் கோழையைத் துப்ப ஏதாவது ஒரு பாத்ரம் வைத்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும். இந்தப் பாத்ரத்தில் பாதியளவுக்கு கார்பாலிக் ஆஸிட் கலந்த ஜலம் ஊற்றியிருக்கவேண்டும். இந்த பாத்ரத்தை அடிக்கடி க்ரமமாக வெந்நீரால் சுத்தம் செய்யவேண்டும். க்ஷயரோகிகள் உபயோகித்த ஆகாரபாத்ரங்களை வெந்நீர் போட்டு சுத்தம் செய்யாமல் பிறர் உபயோகிப்பது நல்லதல்ல.

எவரும் தமது வாழ்நாளில் சில க்ஷயரோகிகளுடனாவது சிலகாலம் சேர்ந்திருக்க நேரிடலாம். ஆனால் க்ஷயரோகிகளோடு பழகும் எல்லாருக்குமே இந்த வ்யாதி உண்டாவதில்லை. திட சரீரிகளை இந்த வ்யாதி க்ருமிகள் ஒன்றும் செய்யமுடியாது. அவர்களுக்கு இந்த வ்யாதியைத் தடுக்கும் சக்தி இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. வ்யாதி க்ருமி தேகத்தில் புகுந்ததும், ரத்தத்திலுள்ள 'வொய்ட் கார்ப்பஸில்' என்னும் ஜீவாணுக்கள் வ்யாதி க்ருமிகளைக்கொன்று அப்புறப்படுத்திவிடுகின்றன. தேகமானது இதர காரணங்களால் பலமிழந்து வ்யாதியைத் தடுக்கும் சக்தி குறைந்திருந்தால்தான், வ்யாதி க்ருமி ஸுலபமாய் தேகத்தில் வ்ருத்தியாகக் கூடும். தற்கால

நாகரீக வழக்கங்களாலும், அறியாமையாலும், ஸுகாதாரக் குறைவாலும் அநேகர் தங்களுடைய தேக வீர்யத்தைக் குறைத்துக்கொள்ளுகிறார்கள். இப்படி தேகங் கெட்டுப்போன ஜனங்களுக்குத்தான் க்ஷயரோகம் அதிகமாக உண்டாகிறது. இந்தக் காரணங்களில் பல ஜனஸமூக ஸம்பந்த கெட்ட ஆசாரங்களாயிருப்பதால், ஜனாசார சீர்திருத்தக் காரர்கள் இவைகளை கவனிக்கவேண்டியது அவச்யமாகிறது. அவைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

## வீடுகளின் நிலைமை.

வீடுகள் ஸுகாதாரக்குறைவாயிருப்பது க்ஷய வ்யாதிக்கும், தேகபலக் குறைவுக்கும் காரணமாகிறது. பட்டணங்களில் உள்ள வீட்டுக்காரர்கள் வாடகை அதிகமாகக் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், காற்றோட்டமில்லாதபடி வீடுகளில் அறைகளை அதிகமாகவும் நெருக்கமாகவும் கட்டிவிடுகிறார்கள். இதனால் ஏழையான ஜனங்கள் நெருக்கமும் ஸுகாதாரக்குறைவுமுள்ள இடங்களில் தங்கவேண்டிருக்கிறது. சில ஊர்களில் குடும்பங்கள் பாகமாவதில் குடும்பத்தவர்கள் வீடுகளைபாகம் செய்து ரொம்ப குருகலாகவும் காற்றோட்ட மில்லாதபடியும் அறைகளை அமைத்துக்கொள்ளுகிறார்கள். இப்படி நெருக்கமான இடங்களில் ஏழை ஜனங்கள் வஸிக்க நேரிடுவதால், அவர்களுடைய தேக ஸௌக்யம் குறைந்துபோய் க்ஷயரோகம் முதலிய வ்யாதிகள் உண்டாக இடமேற்படுகிறது. இந்த வ்யாதியைப் பரவாமல் செய்ய ஏழை ஜனங்களுக்கு ஸுகாதாரமான வீடுகள் கட்டிக்கொடுக்க முயற்சி செய்வது அவச்யமாகும்.

## பாலும் நெய்யும்.

பாலும் நெய்யும் தற்காலம் ரொம்பவும் விலை ஏறிவிற்கின்றன. ஏழை ஜனங்களுக்கு இவைகள் சுத்தமாய்க் கிடைப்பதே கிடையாது. இதனால் ஏழைக்குடும்பத்துக் குழந்தைகளுக்கு சரீர போஷணை குறைந்துபோய், க்ஷயரோகம் ஸுலபமாய் பற்றும்படி அவர்களுடைய தேகம் மெலிந்துபோகிறது. எந்தப் பள்ளிக்கூடத்திலாவது சிறுவர்களில் பெரும்பாலார் க்ஷயரோகிகளாகவோ, அல்லது க்ஷயரோகம் எளிதில் உண்டாகும்படி தேகம் மெலிந்தோ இருந்தால், பால், தயிர், நெய், சர்க்கரை முதலிய முக்ய ஆகாரப் பொருள்கள் அவர்களுக்குப் போதுமான அளவு கிடைக்கவில்லையென்று அறிந்துகொள்ளலாம். இந்தியாவின் நிலைமையை சீர்திருத்த ஆவல்கொள்ளும் தேச ஸேவகர்கள் இந்தக் குறைகளை நிவர்த்திக்க தேசத்தில் பலவிடங்களில் பால் தயிர்ச் சாலைகள் ஏற்படுத்த முயலுவது சிறந்த தர்மங்களில் ஒன்றாகும்.

## கோஷா ஏற்பாடு.

ஸ்த்ரீகளின் தேக பலத்தைக் குறைக்கக் கூடிய கெட்ட ஆசாரங்களில் ஒன்று கோஷா ஏற்பாடாகும். இந்த ஏற்பாடு உள்ள ஜாதிகளில் ஸ்த்ரீகளுக்கு நல்ல காற்றும், தேகப் பயிற்சியும் கிடைப்பது அரிது. இவையில்லாமல் போனால் தேகமானது வ்யாதியைத் தடுக்கும் சக்தியை யிழந்துவிடும். கோஷா ஏற்பாடுள்ள ஜாதிகளில் ஆண்களுக்குள் க்ஷயரோகத்தால் எத்தனை மரணங்கள் ஏற்படுகின்றனவோ, அதைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு மரணங்கள் அந்த ஜாதி ஸ்த்ரீகளுள் ஏற்படுகின்றன. மற்ற ஜாதிகளில் இரு பாலாருக்குள்ளும் க்ஷயரோக மரணவிகிதம் ஸமமாயிருக்கிறது. ஸ்திரீகள் வெளியில் போகக்கூடாதென்ற கட்டுப்பாடுகள் ஒன்றுமில்லாத பர்மாவில் ஸ்த்ரீகளைவிட ஆண்களே க்ஷயரோகத்தால் அதிகம் இறக்கிறார்கள். கோஷா வழக்கம் அனுஸரிக்கும் ஜாதியார் திடீரென்று அவ்வழக்கத்தை விட்டு விடுவார்களென்று எதிர் பார்க்க முடியாது. பலர் அவ்வழக்கம் அவச்யமிருக்க வேண்டுமென்று வாதிப்பார்கள். ஆனால் ஒரு



சீர்திருத்தம் செய்தல் ஸாத்யமாயிருக்கலாம். அதாவது கோஷா வழக்கமுள்ள ஜனங்கள் நல்ல காற்றோட்டமும், திறந்த வெளியும், ஸுகாதாரமும் உள்ள வீடுகளில் குடியிருக்கும்படி அவர்களைத் தூண்டலாம்.

## பால்ய விவாகம்.

பால்ய விவாகம் பலவிதங்களில் கெடுதலாக இருக்கிறதென்று ஆசாரசீர்திருத்தக் காரர்கள் அநேக வர்ஷங்களாக வற்புறுத்தி வருகிறார்கள். ஹிந்துப் பெண்களுக்கு சிறு வயஸில், அதாவது அவர்களுடைய தேகம் பூராவளர்ச்சியடையுமுன், கல்யாணமாகி விடுகிறது. இதனாலும், அவர்களுக்கு சீக்ரம்குழந்தைகள் பிறப்பதாலும், அவர்களுடைய தேகம் பலமிழந்து விடுகிறது. இந்தக் காரணங்களாலேயேயன்றி, அறியாமையாலேற்பட்ட சில வழக்கங்களாலும் அவர்களுடைய தேகம் சீர்கேடடைகிறது. உதாரணமாக ப்ரஸவகாலத்தில் தாய்மார்கள் அறையில் கொஞ்சங்கூடக் காற்றுப் புகாதபடி செய்வது அநேக இடங்களில் வழக்கமாக இருந்து வருகிறது. இவ்வறைகளில் கெட்ட வ்யாதி க்ருமிகள் ஏராளமாயிருக்கக்கூடும். அக்காலத்தில் ஸ்த்ரீகள் வெகுவாய் தேகபலம் குறைந்திருப்பார்களாதலால், இவ்வழக்கம் ரொம்ப கெடுதலென்பது வ்யக்தமாக ஏற்படும். ஸமீபத்தில் ஒரு பட்டணத்தில் 64 ஸ்த்ரீகள் க்ஷயரோகத்தாலிறந்து போனார்கள். இவர்களுள் 20 பேர்களுக்கு ப்ரஸவமான சிலகாலத்துக்கெல்லாம் க்ஷயரோகம் உண்டாயிற்றாம்.

## கெட்ட வழக்கங்கள்.

மதுபானம், புகையிலை உபயோகித்தல், அபின் கஞ்சா முதலிய மருந்துப் பொருள் உபயோகித்தல், ஆகிய இவைகளால் தேகம் சீர்கேடடைந்து, காலக்ரமத்தில் க்ஷயரோகம் உண்டாகிறது. அநேக வாலிபர்களுக்குத் தேகம் கெட்டுப்போயிருப்பதற்குக் காரணம், அவர்கள் சிறுவயதில் கெட்டவழக்கங்களுக் கிறையானதே.

---

# JOCHINARA.

BY T. S. SEETHAPATHY.

# ஜோகிநாராவின் சரித்ரம்.

ஸுமார் 250-வர்ஷங்களுக்குமுன் ஸிவாஜி தக்ஷிணத்தில் தனது வீரத் தன்மைகளையும் ஜனங்களைப் பரிபாலித்து அரசாளக்கூடிய ஒரு ஸாமர்த்யத்தையும் உலகம் ப்ரமிக்கத்தக்கதாய் காட்டி வருங்காலத்தில், ஒரு ஸமயம் அவனது பலத்தையும் நாளுக்குநாள் அதிகரித்துவரும் அதிகாரத்தையும் கேள்வியுற்ற, தனக்கும் தன் ராஜ்யத்திற்குமே பெருங் கேடு விளையுமென்று பயந்து நெஞ்சிலேயே ஸிவாஜியை யடக்கக் கருதினவனாய், டில்லி பாதுஷா அவுரங்கஸீப் தானே நேரில் தக்ஷிணத்தில் வெகுதூரம் வந்து இருந்துகொண்டு, அநேகம் தடவை பெரும் படைகளுடன் தனது ஸேனாதிபதிகளை ஸிவாஜிக்கு விரோதமாக அனுப்பினான். ஆனால் ஸிவாஜியின் கோட்டைகள் விசேஷமாக மலைகளின்பேரிலேயே இருந்தபடியாலும், அவற்றிற்குச் செல்லும் வழி அவனுக்கும் அவனாட்களுக்கும் மாத்ரமே தெரிந்திருந்தபடியினாலும், அவுரங்கஸீப் சீக்ரத்தில் ஜயம்பெறுவது முடியாது என்று கண்டு, தலைநகரத்தை விட்டுப் புறப்பட்டு வெகுநாட்களானபடியால், திரும்பவும் ஊர்போக எண்ணியிருந்தான்.

அவ்வாறிருக்கும் ஸமயத்தில், வெகுநாட்களாகியும் பிதா திரும்பிவாராத காரணத்தினால்

கவலைகொண்டு மறுபடியும் அவனைக்காண ஆசைகொண்டவளாய், அவுரங்கஜீபின் குமாரி ஜோகினுரா என்பவள் ஒரு சிறு கூட்டத்தைத் துணையாக அழைத்துக்கொண்டு, டில்லி நகரம்விட்டுப் புறப்பட்டு, பிதா இருக்குமிடம் சேர, அங்கங்கே வழியைக் கேட்டுக்கொண்டு வருங்காலத்தில், ஒருநாள் இரவு எட்டுமணிக்கு தக்ஷிண தேசத்தில் ஒரு சிறு கணவாயின் வாயிலில் தன்னாட்களுடன் பல்லக்கில் வந்து சேர்ந்தாள். அக்கணவாய் செல்லச்செல்ல ரொம்பவும் குறுகலாயிருந்தது. ஓரிடத்தில் இரண்டேபேர்தான் நேராகப் போகக்கூடியதாயிருந்தது. எதிர் பக்கத்தில் ஸிவாஜி தன்னாட்களுடன் இவள் வரவை முன்னாலேயே அறிந்துகொண்டு, வழி மறித்தான். ஜோகினுராவின் ஆட்கள் பயந்து முதுகுகாட்டி ஓட ஆரம்பித்தார்கள். ஜோகினுராவின் பல்லக்கு நெருங்கி வரவும், அந்த மஹாராஷ்ட்ரர்கள் கைப்பற்றித் தூக்கிச் சென்றுவிட்டார்கள். அப்போது ஜோகினுராவின் படைத்தலைவன் ஸிவாஜியிடம் வந்து "பல்லக்கை எங்கே தூக்கிச் செல்லுகிறீர்கள். ஏன் வழிமறிக்கிறீர்கள். நீ யார்?" என்று இம்மாதிரியான கேள்விகளை கோபத்துடன் கேட்டான். அதற்கு ஸிவாஜி "நான்தான் ஸிவாஜிஎன்று சொல்லப்பட்டவன். பல்லக்கும் அதனுள்ளிருப்பவளும் எந்த விடத்தில் எம்மாதிரியாகயிருக்கவேண்டுமோ, அதில் யாதொரு குறைவும் இராது. எங்கள் கையில் சிக்கியிருக்கும் பொருளின் மதிப்பு எங்களுக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால், அவள் வெகு தூரத்திலிருந்து இரவென்பதும் பகலென்பதுங்கூட கவனிக்காமல் ரொம்பவும் ச்ரமப்பட்டு வந்திருக்கிறாளானதால், அவளுக்குத்தக்க ஆகாரமும், இருப்பிடமும், மரியாதையும்கொடுத்து கவனித்து வருவோம். அவளைக்குறித்து இனி தர்க்கம் செய்யும் பக்ஷத்தில், உன்னையும் உன்சிறு படையையும் ஒரு நொடிப்பொழுதில் யமனுலகமனுப்பி விடுவேனென்றாலும், உனக்கும் உன்னாட்களுக்கும் ப்ராணதானம் செய்கிறேன். நீங்கள் செய்யவேண்டியதென்னவெனில், சீக்ரம் உங்கள் பாதுஷா அவுரங்கஜீபிடம்சென்று, என்னொருவனை மலையெலி யென்றும், மலைக்கொள்ளைக்காரனென்றும் ஏளனமாக அவன் அழைக்கிறானே அவன் வசம் தன்னுடைய குமாரி தற்காலம் ஸௌக்யமாயிருக்கிறாளென்றும், ஸிம்மாஸனத்தைக் குறித்து அவன் உயிருள்ளளவும் வாதிக்காமல் போகானென்றும், ஆகையால் அவ்வளவுசிறந்த வீரபராக்ரமமுள்ள ஸிவாஜியுடன் ஸம்பந்தம் உண்டாக்கிக்கொள்வதினால் கௌரவக்குறைவு ஒன்றுமில்லையென்றும் நான் சொன்னதாகத் தெரிவிக்கவேண்டும். ஓடிப்போ" என்றுரைத்துவிட்டு தன்னாட்களுடன் மலையினுள் சென்றுவிட்டான். முகலாய தளகர்த்தனும் அவனுடைய சிறுபடையும் இச்செய்தியையும், தாங்கள் புத்திகூர்மையில்லாமல் ராஜகுமாரியைப் பறிகொடுத்ததையும் அவுரங்கஜீபினிடம் சென்று தெரிவித்தால், அவன் அடங்காச் சினங்கொண்டு தங்களை கடுமையாய் தண்டிப்பானென்று பயந்து வெவ்வேறு இடம் சென்றுவிட்டார்கள். அவுரங்கஜீப் தன்குமாரி டில்லியை விட்டுப்புறப்பட்ட செய்தியை முன்னாலறிந்து அவள்வரவை ஒவ்வொரு தினமும் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தான். கடைசியில் தனது குமாரி ஸிவாஜியினிடம் இருப்பது தெரியவரவும், ரொம்பவும் கோபமடைந்து, ஸிவாஜியைப் பிடித்துவர ஸேனாதிபதிகளை நியமித்துவிட்டு, தனது தலைநகராகிய டில்லிவந்து சேர்ந்தான்.

ராஜ கன்னிகையான ஜோகினுராவைச் சுமந்து சென்றவர்கள் சிறிதுதூரம் மலைப்பாதைகளின் வழியாய்சென்று, கடைசியாக ஒரு சிறு கோட்டையினுள்புகுந்து கொஞ்சம் இருட்டான ஓர் அறையில் அவளை இருக்கச் செய்தார்கள். அவளை ஒருவரும் எவ்விதத்திலும் ஹிம்ஸிக்காமலிருந்தாலும், அவளைச்சுற்றி நிர்தாக்ஷிண்யமான காவலொன்றும் ஏற்படுத்தாமலிருந்தாலும், அந்தந்த வேளைகளில் மாத்ரம் தவறாமல் திவ்ய லக்ஷணமுள்ள ஒரு ஸ்திரீ அவளுக்கு வேண்டிய உணவுகளைக்கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றபடியாலும், ஜோகினுரா, தன்னைச் சிறைசெய்தவர்கள் சீக்ரத்தில் விடுதலையும் செய்வார்கள் என்று நம்பிக்கொண்டிருந்தாள். நான்காம்நாள் காலையில் ஸிவாஜி ராஜகன்னிகையின் முன்பு வந்துநின்றான். அவனுடைய ஸௌந்தர்யத்தையும், கம்பீரமான பார்வையையும், ராஜநடையையும் கண்டு ஜோகினுரா உள்ளத்தில் மோகங்கொண்டு, அவனைப்பார்த்து "என்னைச் சிறைபிடித்து இக்கோட்டையினுள் இவ்விதம் கவனித்து வரும் புருஷன் யார்?" என்றாள். ஸிவாஜி, "மஹாராஷ்ட்ரர் தலைவனான ஸிவாஜி" யென்று பதில் சொன்னான். ஜோகினுரா மறுபடியும், "அப்படியென்றால் அவுரங்கஜீப் சக்ரவர்த்தியின் குமாரியான என்னை எதற்காக மார்க்கத்தில் வழிமறித்து இக்கோட்டையினுள்ளிருக்கச் செய்யவேண்டும்?" என்று கேட்டாள். அதற்கு ஸிவாஜி," ஸுந்தரிமய, முகலாய சக்ரவர்த்தியான உன் தகப்பனும் நானும் ஒருவித ஸ்நேகப் பான்மையிலிருந்துகொள்ளும் பொருட்டு, பெண்ணைக் கொடுத்து ஸம்பந்தம் ஏற்பட்டால், அவ்வாறு ஆகும் என்று எண்ணியே தான், உன்னைச்சிறைகொண்டேன்" என்றான். பின்னும் ஜோகினுரா, "ஆனால் தைமர் வம்சத்தில் அவுரங்கஜீபுக்குக் குமாரியாக ஜனித்த நான், கேவலம் மலைகளிலும் பாதைகளிலும் வழிமறித்துக் கொள்ளையடிக்கும் ஒருவனுக்கு பத்னியாக ஸம்மதியேனே" எனவும், ஸிவாஜி "அப்படியல்ல, ராஜ கன்னிகையே, உலகத்தில், அரசர் எல்லாரும் ஸமமே. அதிலும் ஒரு ராஜ்யத்தையே புதிதாக உண்டாக்கப் பட்டவன் இன்னும் க்யாதி யுள்ளவன். நானும் இம் மலைநாடுகளில் வஸிக்கும் ஜனங்களுக்கு ராஜனாகவே இருந்துகொண்டு ந்யாயம் செலுத்திவருவதினால், உன்தகப்பனைக் காட்டிலும் நான் எவ்விதத்திலும் தாழ்ந்தவனல்ல. நல்லது, நீ என்னிடம் அகப்பட்டுக்கொண்டதினாலேயே உன்னை ஹிம்ஸிக்க வேண்டுமென்கிற எண்ணம் எனக்கு கொஞ்சமும் கிடையாது. உனக்கு என்னிடம் நல்ல எண்ணம் உண்டாகும்வரையில் நீ எதைக்குறித்தும் நினைத்து பயப்படவேண்டாம். ஆனபடியால் உனக்கு எது வேண்டுமென்றாலும் தெரிவித்தால், செய்ய ஸித்தமாயிருக்கிறேன். நல்லது, தற்காலம் போய்வருகிறேன்." என்று புன்னகைகொண்டு வெளியில்சென்றான். ஜோகினுரா அவன் மொழிந்த சொற்களையும், அவனது அழகையும் நினைத்து யோசித்தாள். ஸிவாஜியை மணம்புரிவதில் கௌரவக்குறைவில்லை யென்று நிச்சயங்கொண்டாள். ஸிவாஜி தினந்தோறும் ஜோகினுராவின் அறைக்கு வந்துபோய்க்கொண்டிருந்தான். இருவருக்கும் நேசம் முதிர்ந்தது.

இப்படியாக இருவரும் காலங்கழித்து வருகையில், ஒரு நாள் ஜோகினுராவின் அழகைக் கேள்வியுற்று மோகங்கொண்ட ஸிவாஜியின் படைத் தலைவனொருவன் அவளிடம் வந்து துராக்ருதமாய் வாதுசெய்த ஸமாசாரம் ஸிவாஜிக்குத் தெரியவரவும், உடனே அவனைச் சண்டைக்கு அழைத்து ஒருநொடிப் பொழுதில் அவனைக் காயப்படுத்தி கோட்டைக்கு வெளியே தள்ளிவிட்டான். அதன் காரணமாக அவன் ஸிவாஜியிடம் த்வேஷங்கொண்டு எவ்விதத்திலாவது தன் க்ஷாத்ரத்தைத் தீர்த்துக்கொள்ள எண்ணி, அருகாமையில் எதிரியின் படை இருப்பதைத் தெரிந்துகொண்டு, அப்படையின் தலைவனிடம் மெதுவாகச்சென்று, தனக்கும் ஸிவாஜிக்குமுள்ள விரோதத்தை தெரியப்படுத்தி, அவனுக்கு (எதிரிக்கு) மலைக்கோட்டைக்குச் செல்லும் வழியைக் காண்பிப்பதாக ஒப்புக்கொண்டான். இவ்விதம் ஸமயம் வாய்க்கவும் உடனே அவர்கள் (எதிரிகள்) இராத்ரியின் ஒத்தாசையி

னால் மலைமேலிருந்த கோட்டையை அடைந்து அர்த்தராத்திரியில் பலமாக முற்றுகை போடவும், நன்றாய் தூங்கிக்கொண்டிருந்த ஸிவாஜியும் அவன் ஆட்களும் வெளியில் பீரங்கிகளின் சப்தம் கேட்டதையறிந்து திடுக்கிட்டு யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டார்கள். என்றாலும், யுத்தத்திற்கு தயாராய் வந்திருந்தவர்களுடன் சண்டைசெய்து வெற்றி பெறுவது அஸாத்யமாகத் தோன்றினதால், ஸிவாஜி வேகமாய் ஜோகிணாவிடம் வந்து, "ஜோகிணா, உன்னைவிட்டுப் பிரியுங்காலம் வந்திருக்கிறது. ஒரு இனத்ரோகியின் உதவியினால் எதிரிகள் என்கோட்டையைப் பிடித்துவிட்டார்கள். நான் அவர்கள் கையில் சிக்கினால் கட்டாயம் மரணமேதான் எனக்கு ஸம்பவிக்கும். ஆகையினால் இன்னும் சில நிமிஷங்களுக்குள் அவர்கள் கையிலகப்படாமல் என் சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். உனக்கோவெனில் பயப்படவேண்டியது யாதொன்றுமில்லை. ஸௌக்யமாய் உன் பிதாவிடம் சென்று அன்பும் ஆதரவும் அடையப்போகிறாய்" என்று பரபரப்புடன் தெரிவித்தான். ஜோகிணா தன் காதலனைப்பிரிய நேர்ந்ததைக்குறித்து ஒருபக்கம் துக்கமிருந்தாலும், அவனுடைய சரீரத்திற்கு யாதொரு தீங்கும் வாராமலிருக்கும்படியாக பகவானை வேண்டினவளாய் "நாதா, என்னைக்குறித்து சிந்திக்கவேண்டாம். இப்பொழுது பேசுவதற்கும் அவகாசமில்லை. ஆகையால் ஒருநிமிஷமிருக்குமென்றாலும் அதற்குள் எப்படியாவது உயிர் தப்பித்துக் கொள்ளும்" என்று பதில் சொன்னாள். உடனே ஸிவாஜி வேகமாய் வெளியே வந்து தன்னைச் சேர்ந்தவர்கள் சிலர் மாத்ரம் உயிரோடிருப்பதைப் பார்த்து அவர்களை யழைத்துக் கொண்டு, ஒரு நொடிப்பொழுதில் கோட்டையைவிட்டு வெளியே வந்து கல்லிலும், முள்ளிலும் நடந்து, ஓடைகளையும், குன்றுகளையும் கடந்து எதிரி கையில் அகப்படாமல் தப்பிவிட்டான். எதிரிகள் கோட்டையைப்பிடித்துக்கொண்டார்கள். ஜோகிணா மறுபடியும் மார்க்கத்தில் விபரீதமொன்றுமில்லாமல் டில்லி நகரம் வந்து பிதாவைக் கண்டாள். சில மாதங்களுக்கெல்லாம் அவள் கர்ப்பவதியாயிருப்பதையறியவும், அவுரங்கஸீப் தன்னுடைய குமாரியிடம் கடுங்கோபங்கொண்டு அவளைப் பார்க்கவுங்கூட மனமில்லாதிருந்தான். இந்தக் காரணத்தினால் அவனுக்கு ஸிவாஜியிடம் த்வேஷம் அதிகரித்தது. ஜோகிணாவின் நிலைமை ரொம்பவும் பரிதபிக்கத்தக்கதாயிருந்தது. சிறையிலிருந்தாலும் ஸிவாஜியுடனிருந்ததேமேலாகத்தோன்றிற்று. ஆனாலும் என்னசெய்வது! மாதமானதும் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. யாரிடத்திலும் இரக்கமில்லாத அவுரங்கஸீப் தாயாரிடமிருந்து பிள்ளையை அகற்றி வேறோரிடத்தில் வளரச் செய்தான். ஸிவாஜிக்குப் பிறந்த அக்குழந்தையானது வயதுவந்த பிறகு தன் தகப்பனை இன்னாரென்று அறிந்துகொள்ளாமலிருக்கும்பொருட்டு அப்படிச் செய்தான். ஜோகிணாவின் துக்கத்திற்கு எல்லையில்லை.

ஸிவாஜி ஜோகிணாவை விட்டுப்பிரிந்த சில காலத்துக்கெல்லாம் மறுபடியும் தன்னாட்களைச் சேர்த்துக்கொண்டு இழந்த கோட்டையைப் பிடித்து, முன்னிலும் அதிகமாக தன் ராஜ்யத்தின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தினான். அதுமுதற் கொண்டுதான் அவன் ஏராளமான பணத்தையும் நிலையான ஸைன்யத்தையும் சேர்க்க ஆரம்பித்தான். ஸிவாஜியின் பலம் முன்னிலும் அதிகமானதைப்பற்றி அவுரங்கஸீப் கேள்விப்பட்டதும், அவன் ஸிவாஜியை எவ்விதத்திலும் சிறைகொள்ளக்கருதி பெரும் படைகளையனுப்பினான். ஒவ்வொரு தடவையும் ஸிவாஜியே ஜயமடைந்துவந்தான். அவுரங்கஸீபுக்கு ஸிவாஜியை யடக்குவது ரொம்பவுங்கஷ்டமாயிற்று. ஆகவே தன் ஸேனாதிபதிகளில அதிவீரபராக்கிரமுள்ள ஷேய்ஸ்டாகான் என்பவனை ஒரு பெரும் படையுடன் அனுப்பினான். அவன் வெகு ஸாமர்த்யமாய் ஸிவாஜியின் தலைநகரமாகிய பூனாவைக் கைப்பற்றிக் கொண்டான். ஆகிலும், ஸிவாஜிக்கு மலையில் தான் பலமதிகம், நாடுகளில் பலக்குறைவு என்று மதித்தவனாய், பூனாவைச் சுற்றிலும் சரியான பந்தோபஸ்து செய்யாமலிருந்தான். இச்செய்தி ஸிவாஜிக்குத் தெரியவரவும், ஒருநாள் இரவு தன்னுடைய ஆட்களுடன் நகருள் புகுந்து, ஷேய்ஸ்டாகானுடைய அரண்மனையை பலமாக முற்றுகை போடவும் நன்றாய் தூங்கிக்கொண்டிருந்த மஹம்மதியன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு தன் ஆட்களைச் சேர்க்க முடியாமல் போய், தான்மாத்ரம் தப்பி ஓடிவிட்டான். மறுபடியும் பூனா ஸிவாஜி வசமாயிற்று. இந்தச் செய்தியை அவுரங்கஸீப் கேட்டதும் அவன் அடங்காத கோபமும் கவலையுங் கொண்டான். கடைசியாக மஹாராஷ்ட்ரதேசம் முழுமையும் நன்றாயறிந்திருந்த மிர்ஸாராஜா என்னும் ஒரு ஸேனாதிபதியை ஒரு பெரிய தருப்புடன் ஸிவாஜியைப் பிடித்துவரும்படி அனுப்பினான். அவன் தன்னுடைய ஸாமர்த்யத்தினால் ஸிவாஜியின் கோட்டைகள் ஒவ்வொன்றையும் கைப்பற்றிக்கொண்டான். கடைசியாக ஸிவாஜியின் ஏராளமான பணமும் ஆயுதங்களும்வைக்கப்பட்டிருந்தகோட்டையையும் பலமாக முற்றுகை போட்டான். இந்தசமயம் ஸிவாஜி எதிரி கையினின்றும் தப்புவது அஸாத்யமாயிற்று. ஆகையினால், தன்னை எதிரிவசம் ஒப்புக்கொள்வதாகவும், அவன் தன்னை டில்லிகொண்டுபோய் சேர்த்து, அவ்விடம் யாதொரு விதமான கௌரவக்குறைவும் தனக்கு உண்டாகாமலிருக்க தான் ஜாமீனாகயிருப்பதாக மிர்ஸாராஜா வாக்குக் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லி, அவ்விதம் ஒப்பந்தம் செய்துகொண்டு டில்லிநகரம் வந்து சேர்ந்தான். அவுரங்கஸீபினுடைய தர்பாருக்கு அவனைக் கொண்டுவந்து நிறுத்தினதும், பாதுஷாவுக்கு நமஸ்காரம்பண்ணி மரியாதை செய்யும்படியாக ஸிவாஜியை ஆக்ஞாபிக்கவும், ஸிவாஜி கடுஞ் சினங்கொண்டு அவுரங்கஸீப் இருக்குமிடத்தை நோக்கி அலக்ஷ்யமாயும் வெறுப்புடனும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஸபையோரை நோக்கி பின் வருமாறு கம்பீரமான குரலில் தெரிவித்தான். "நான் தற்காலம் உன் கைவசம் இருக்கிறேன் என்பது வாஸ்தவந்தான். ஆனாலும் நீ என்னை ஜயித்துவிட்டதாக உள்ளம் பூரிக்கவேண்டாம். அப்படியே ஜயித்ததாகக் காணப்பட்டாலும், நீ ஜயித்தது உனக்கே இழிவைத் தரக்கூடியதாயிருக்கிறது. தற்காலம் கேவலம் படையின் ஒரு 5 பங்கு அதிகமான எண்ணிக்கையின் பலத்தைக்கொண்டே என்னைப் பிடித்திருக்கிறாய். நானோவெனில் கணக்கில்லாததடவைகளில் என்னுடைய சிறு படையின் ஒத்தாசையைக்கொண்டு உன் ஸேனாதிபதிகளையும் அவர்கள் படைகளையும் பறக்கடித்திருக்கிறேன். கடைசியாக உன் ஜன்மப்பகைவனை நான் ஸ்வதாவாகவே உன் ஸேனாதிபதியிடம் என்னை ஒப்புக்கொடுத்தேன். அக்காலத்தில் ராஜவம்சத்தில் உதித்த மிர்ஸாராஜா எனக்குக் கொடுத்தவாக்கு என்னவெனில், டில்லிநகரம் சேர்ந்த பிறகு உன் முன்னால் யாதொரு விதமான அவமானமும் நேரிடாமல்தான் பார்த்துக்கொள்வதென்பதே. அப்படியிருக்க, ராஜநீதிக்கும் உலக வழக்கத்திற்குமே விரோதமாக நான் இங்குவந்து சேர்ந்தபிறகு என்னை அவமானப்படுத்துகிறாய். பலத்திலும், கௌரவத்திலும் ஸாமர்த்யத்திலும் அதிகாரத்திலும் உனக்கு ஸமானமாயிருக்கப்பட்ட ஒரு சக்ரவர்த்தியான நானோ உனக்கு நமஸ்காரம் செய்வது! டில்லி பாதுஷாவானாலும் சரியே, அவுரங்கஸீபானாலும் சரியே, சக்ரவர்த்திகளுன் இம்மாதிரியாக வார்த்தையை நிறைவேற்றத் தவறுவது கொஞ்சமும் மெச்சத்தக்கதல்ல," என்று உரக்க ராஜநீதியை யெடுத்துச் சொன்னான். அவுரங்கஸீப் ஒன்றும் பதில்சொல்லா

மலும் தன் ஜன்மப்பகைவனை நிமிர்ந்துகூடப் பார்க்காமலுமிருந்தான். இவை யெல்லாவற்றையும் அந்தப்புரத்து ஸ்திரீகளில் சிலர் திரை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜோகிஞராவும் அங்கே இருந்தாள். தன்னுடைய பழைய காதலனை மறுபடியும் காணநேர்ந்ததைக்குறித்து அடங்காதமகிழ்ச்சியடைந்தாளென்றாலும், தன்னுடைய தகப்பன் அவனிடம் கொஞ்சமும் தாக்ஷண்யமில்லாம லிருப்பதைக் கண்டுபயந்து தன்பிதாவின் கால்களில் விழுந்து ஸிவாஜியைக்குறித்து ரொம்ப மன்றாடினாள். எவ்வளவு மன்றாடியும் பயனில்லாமல் போயிற்று. அவுரங்கஸீபுக்கு ஸிவாஜி தன் குமாரியைக் கெடுத்துவிட்ட ஸமாசாரம் ஞாபகத்திற்கு வரவும், முன்னிலும் அதிகமாக கண்களில் நெருப்புப்பொறிபறக்க அடங்காக் கோபங்கொண்டு உடனே ஸிவாஜியை சிறைச்சாலைக்குள் வைக்கும்படி ஆக்ஞாபித்தான். ஜோகிஞரா தன் காதலனுக்கு நேர்ந்த ஸங்கடத்தைக் கண்டு மிக்க விஸனமடைந்து, எவ்விதத்திலும் அவனைச் சிறைச்சாலையி னின்றும் தப்புவிக்க நிச்சயித்தவளாய், புஷ்பம் கொண்டுசெல்லும் ஒரு கூடைக்காரனை தன்வச மாக்கிக்கொண்டு, அவனுக்கு ஏராளமான த்ரவ்யம் லஞ்சமாகக் கொடுத்து அவனைச் சிறைச்சாலைக்குள் தினம் போய்வரும்படியான பழக்கத்தை உண்டாக்கி வைத்தாள். ஒருநாள் ஸிவாஜி பூக்கூடைக்காரனுடைய உடுப்புகளைத் தானணிந்துகொண்டு அந்த வேஷத்தில் யாருங் கண்டுகொள்ளாமல் படிக்கு சிறைச்சாலையினின்றும் வெளியே தப்பினவனாய், வேகமாய் ஜோகிஞரா இருக்குமிடம் வந்து, அவளிடம் ஸமாசாரத்தை தெரியப்படுத்தவும், அவளும் ஸிவாஜியுடன் கூடவே ஓடிப்போவதாக ஸம்மதிக்க, ஊருக்கு வெளியே ஓரிடத்தில் இருவரும் ஸந்தித்துக்கொள்வதென்று நிச்சயித்துக்கொண்டார்கள். அவ்விதமே இருவரும் குறிப்பிட்ட இடத்தில் வந்துசேர்ந்த பிறகு பாதுஷாவைச் சேர்ந்தவர்கள் பின்தொடர்ந்தால் கஷ்டம் விளையுமென்று அறிந்து, வேகமாய் நாடுகளையும், மலைகளையும், காடுகளையுங் கடந்து ஸௌக்யமாய் மஹாராஷ்ட்ரதேசம் வந்து சேர்ந்துவிட்டார்கள். ஸிவாஜி தான் இழந்த கோட்டைகளெல்லாவற்றையும் மறுபடியும் தன்னாட்களுடைய உதவியைக் கொண்டு பிடித்துக்கொண்டான்.

ஸிவாஜி சிறைச்சாலையி னின்றும் தப்பி ஓடிப்போய்விட்டதை அவுரங்கஸீப் அறியவும், அவனுக்குண்டான கோபத்திற்கும் மனக்குழப்பத்திற்கும் எல்லையில்லை. ஸிவாஜியுடன்கூட தன்னுடைய குமாரி ஜோகிஞராவும் ஓடிப்போய்விட்ட ஸமாசாரம் தெரியவரவும் மிகுந்த துக்கத்தை யடைந்தான். இதன் காரணமாக அவனுக்கு ஒரு கடுஞ்சுரங்கண்டு பிழைப்பதுகூட கஷ்டம்போலாயிற்று. ராஜ்ய மெங்கும் சக்ரவர்த்தியின் சரீர ஸ்திதியைக்குறித்து கவலையாயிருந்தார்கள். ஏனெனில் அவுரங்கஸீப் எவ்வளவுதான் கொடுங்கோல் மன்னனாயிருந்தபோதிலும், அவனுடைய போதுநடத்தையும் ந்யாய பரிபாலனமும் மாசில்லாதிருந்தபடியால் ஜனங்களுக்கு அவன் தெய்வமாகவே தோன்றினான். ஆகவே இந்த ஸந்தர்ப்பத்தில் ஸிவாஜியின் பின் தொடர்ந்துசென்று மறுபடியும் அவனைப் பிடித்துவர சரியான படைகளை யனுப்பமுடியாமல் போயிற்று. ஈசனனுக்ரஹத்தால் அவுரங்கஸீப் ஜ்வரத்தினின்றும் சொஸ்தமடைந்தான். ராஜ்யமெங்கும் களிப்படைந்தது. இக்காலத்தில் பாதுஷாவின் தர்பாரில் ஒருசிறுவன் தன்னுடைய புஜ பராக்ரமத்தினாலும், ரூபஸௌந்தர்யத்தினாலும் பாதுஷாவின் மனதை ஸந்தோஷப்படுத்திவந்தான். அவன் இன்னானென்று யாருக்கும் தெரியாமலே யிருந்தது. பாதுஷாவுக்கு நாளுக்குநாள் அவனிடம் ப்ரியமும் கௌரவமும் அதிகமாயிற்று. அவுரங்கஸீப் அவனை ஒரு பெரும்படைக்கு தலைவனாக்கினான். இவ்வாறிருக்கும் ஸமயத்தில் ஸிவாஜி 50,000 காலாட்படைகளையும், லக்ஷம் குதிரை வீரர்களையும் சேர்த்துக்கொண்டு தக்ஷிண தேசத்தில் பாதுஷாவைச்சேர்ந்த அனேகம் இடங்களைக் கைப்பற்றிக்கொண்டான். இச்செய்தி அவுரங்கஸீபுக்கு எட்டவும், ஒரு பெரும்படையை மறுபடியும் ஸிவாஜியை ஜயித்து வரும்படியாக அனுப்பினான். தர்பாரில் சிறுவனும், ஆனால் பராக்ரமத்தில் யாரும் மெச்சத்தகுந்தவனாய் விளங்கிக்கொண்டிருந்த மேற்சொன்ன வாலிபப் படைத்தலைவனை அப்படையுடன்கூட இரண்டாவது ஸேனாதிபதியாகயிருந்துகொண்டு ஸிவாஜியை எவ்விதத்திலும் பிடித்துவரும்படியனுப்பினான். அப்படை தக்ஷிணத்தில் ஸிவாஜியிருக்குமிடம் வந்து அவனுடன் போர்புரிந்தது. ஆனால் தோல்வியே யடைந்துவந்தது. இவ்விதமாக அவுரங்கஸீபின் ஸைன்யம் அநேகம் தடவைகளில் ஸிவாஜியுடன் போர்புரிந்து மலைகளையும் காட்டுப்பாதைகளையுங் கடந்து வெகு ச்ரமமடைந்ததால் கலகம் செய்யும்போலாயிற்று. அந்த ஸமயத்தில் நமது சிறுவன், தானே படைத்தலைவனாக யிருந்துகொண்டு 20,000 பேருடைய உதவியினால் ஸிவாஜியைப் பிடித்துவருவதாக ஒப்புக்கொண்டான். அவனும் மலைகளையும் நாடுகளையும் கடந்து ஸிவாஜியுடன் பலதடவைகள் போர்புரிந்தான். ஒரு ஸமயம் யுத்த அரங்கத்தில் ரொம்பவும் முன்னால் தன் குதிரையைச் செலுத்தி தன் ஸைன்யத்தை விட்டுப் பிரிந்து வெகுதூரம் சென்ற பிறகு தன் பின்னால் தன் ஸைன்யம் வாராததைக் கண்டு ப்ரமித்து நிற்கும் தருவாயில், இவனுடைய முதுகில் ஒரு அம்பு தைத்தது. அம்பு எங்கிருந்து வந்ததென்று அங்கு மிங்கு பார்க்குமுன், ஒரு புதரிலிருந்து ஸிவாஜி எதிரில் வந்து நின்றான். உடனே அவனை யின்னானென்று அறியவும் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டையிட ஆரம்பித்தார்கள். வெகுநாட்களாய் பழக்கமும் ஸாமர்த்யமும் பலமுமுள்ள ஸிவாஜி சீக்ரத்தில் தன் எதிரியின் தலையில் ஓங்கி ஓர் அடி அடிக்கவும் சிறுவன் கீழே விழுந்தான். உடனே ஸிவாஜி சீட்டியடித்தான். அதற்கு பதிலுரைத்தாற்போல அவனுடைய ஆட்கள் சிலர் வந்து சிறுவனைத் தூக்கிச் சென்றார்கள். சிறுவனுக்கு ப்ரக்ஞை வரவும், எதிரில் ஸிவாஜியும் ஜோகிஞராவுமிருப்பதைப் பார்த்தான். உடனே ஜோகிஞரா சிறுவனை இறுகத் தழுவிக்கொண்டு முத்தங்கொடுத்து கண்களில் நீர் ததும்ப, "மைந்தனே, இன்னும் உன்னை அந்தகாரத்தில் வைத்திருக்கலாகாது. ஆகையால் தெரிவிக்கிறேன், கேள். உன் எதிரிலிருக்கும் அவுரங்கஸீபின் ஜன்மப்பகைவனான ஸிவாஜிதான் உன் தகப்பன். இப்பொழுது உன்னுடன் பேசும் நான் உன் தாயாகவேண்டும். குழந்தாய், பகவானே உன்னை என்னிடம் மறுபடியும் கொண்டுவந்து சேர்த்தார். எப்படியெனில் நீ பிறக்குங்காலத்திலேயே யிருந்த ஒரு பெரிய மச்சமானது உன் கையில் இன்னுமிருக்கிறது. அதன் மூலமாய் உன்னைக் கண்டுகொண்டேன்" என்று ஆச்சர்யமும் ஆனந்தமும் பொங்கும் இவ்வசனங்களைக் கூறினாள். சிறுவன் எல்லாரிலும் மகிழ்ச்சியையடைந்தான். ஏனெனில் அவன் அவுரங்கஸீபினிடம் இருக்குங்காலத்தில் எவ்வளவுதான் மேன்மையான பதவியிலிருந்திருந்த போதிலும், வெகுநாளாய் தன்னுடைய பூர்வ சரித்ரத்தை தெரிந்து கொள்ளாமலே யிருந்தானாகையால் சில ஸமயங்களில் அதை நினைத்து வருத்தப்பட்டிருந்தான். இப்பொழுது தெய்வ ஸங்கல்பத்தால் தன் பெற்றோரை யடையவும் அடங்காத ஆனந்தங்கொண்டான். இனிமேல் அவுரங்கஸீபினிடம் போவதில்லை யென்று நிச்சயித்தது மல்லாமல், தன்னிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த 20,000பேர்களடங்கிய படையையும் ஸிவாஜியின் பக்கம் சேரும்படியாகச் செய்தான். இவையெல்லாம் அவுரங்கஸீபுக்கு எட்டிற்று. ஆனாலும் என்னசெய்வது. தானொன்று நினைக்க தெய்வமொன்று எண்ணிற்று. இச்சிறுவனேதான் ஸிவாஜிக்குப் பின் ஸாம்பாஜி என்ற பேருடன் ராஜ்ய பரிபாலனம் செய்தான்.

ஸீதாபதி.

# TREES FOR CULTIVATING IN USUR AND WASTE LANDS.

BY Y. S. VENKATARAMANA AIYAR, B. A, B. L.,

## களர் நிலங்களில் பயிராகக்கூடிய மரங்கள்

நமது தேசத்தில் அநேக இடங்களில் சாகுபடி யில்லாமல் நிலம் காலியாய் இருப்பதைக் காணலாம். இவற்றில் பெரும்பான்மை களர், உவஷரம், அல்லது கல்லாங்தரையாய் இருக்கும். நமது விவஸாயிகள் ஷை நிலங்களில் விறகு, தழை, மாட்டு தீவனம் முதலியவற்றிற்கு உபயோகமாகி, போட்டமுதலுக்கு ஏராளமான லாபத்தை கொடுக்கும்படியான அநேக மரங்களை உற்பத்திசெய்து, நிரந்தரமான வரும்படியை அடையலாம். இதற்கு அதிக செலவும் ச்ரமமும இல்லை. அப்படிப்பட்ட மரங்களில் சிலவற்றின் தன்மைகளையும் அவற்றை உற்பத்திசெய்யும் முறைகளையும் இங்கே குறிப்பிடுகிறோம்.

(1) கருவேலன் (Babul, Acacia Arabica) இது நீர்வளம் நிலவளம் இல்லாத இடங்களிலும், வேறே செடிகள் உற்பத்தியாகாத இடங்களிலும் வளரும். விதையின்தோல் கடினமானதால் குப்பை நீரில் ஊறவைத்தாவது, மணலுடன் கலந்து கொஞ்சம்தோல் உரிய குத்தியாவது நட்டால் சீக்ரம் முளைக்கும். விறகுக்கு அதிகமாய் உபயோகப்படும். வண்டியின் சக்ரத்திற்கும், ஆரக்காலுக்கும், மைக்கட்டைக்கும், அரிசிகுத்தும் உலக்கைக்கும், ஸாதாரணமாய் விவஸாய கருவிகளுக்கும் மரம் உபயோகமாகும். பெரியமரமாக கிடைத்தால் வீட்டுஸாமன்களுக்கும் உபயோகிக்கலாம். பட்டையை வெட்டிவிட கோந்து ஏராளமாய் கிடைக்கும். தவிர பட்டை தோல் பதனிடுதலிலும், சாயமிறக்குதலிலும் மருந்தாகவும் உபயோகப்படும். இளங்கொழுந்தையும் காயையும் ஆடுமாடுகள் தின்னும். பட்டையை உலர்த்தி இடித்து பல்பொடி செய்வதுண்டு. சிறுகுச்சிகள் பல்துலக்க உதவும்.

(2) வெள்வேலன், சாராயவேலன் (Acacia Leucophloea): இது கருவேலனைவிட சீக்ரத்தில் வளரும், வெட்டவெட்ட துளிர்க்கும், ஆகையால் விறகுக்காக உற்பத்திசெய்தால் அதிக லாபமுண்டு. பட்டைசாராயமிறக்குவதில் அதிகமாய் உபயோகப்படும். ஆடுகள் இதன் இளங்காய்களை தின்பதால் அவற்றின் மாம்ஸம் குணப்படுமென்று பலர் அபிப்ராயபடுகிறார்கள். இதிலிருந்து சாயமும் நாரும் எடுப்பதுண்டு. மரம் இழைப்பதினால் நல்ல மெருகு பிடிக்கும்.

(3) களிதுருஞ்சி, கருவாகை (The Raiyat's tree, Albizzia Odoratissima). விதைகள் மரத்தினின்றும் விழும்பொழுது கீழ்நிலத்தைஉழுது வைத்திருந்தால் நாற்றுகள் கிளம்பும். விதைகளை பூச்சிகள் சீக்ரத்தில் நாசஞ்செய்வதால், சாம்பல், சுண்ணாம்புடன் கலந்து பத்ரப்படுத்தி வைத்தல் நலம். நல்ல விதையாயிருந்தால் சீக்ரத்தில் முளைக்கும். இலைகளை ஆடுமாடுகள் தின்னும். நேராய் வளரக்கூடிய உயரமான மரங்களில் இது ஒன்று. நல்ல இடங்களில் அடிமரம் கிளைகளில்லாமல் 30, 40-அடி உயரம் வளரும். மரம் வேலைகளுக்கு உபயோகமாகும்படி பதமாகிறது. நல்ல இழைப்பு பிடிக்கும். வீட்டுவேலை எல்லாவற்றிற்கும், வண்டிச் சக்ரத்துக்கும், விவஸாய கருவிகளுக்கும் அதிகமாய்உபயோகப்படுகிறது. வெட்ட வெட்ட மறுபடியும் துளிர்க்கும். ஆகையால் விறகுக்கு இந்தமரம்நல்லது. மிகவும் உபயோகமுள்ள இந்த மரத்தை ஒவ்வொரு க்ராமத்திலும் உற்பத்தியாக்கவேண்டும்.

(4) ஊசல், துறிஞ்சி (Albizzia. Amara.) இது நடுத்தரமான மரம். மண்பொலபொலப்பாயிருந்தால் சீக்ரம் வளருகிறது. விதையிலிருந்து ஸுலபமாய் உண்டாக்கலாம். இலைகளை உலர்த்தி பொடிசெய்து சீயக்காய்க்கு பதிலாக உபயோகிப்பதுண்டு. மரம் உறுதியானது நெடுநாள் தாங்கக்கூடியது. விறகுக்காக விசேஷமாய் வெட்டப்படும். விவஸாயக்கருவிகளுக்கும் உபயோகப்படும்.

(5) கோணைப் புளியங்காய்; கோறுக்காய்ப்புளி- (The Manilla Tamarind tree, Pithecolobium Dulce.) அடியில் ஜலம் தங்கக்கூடியதும் அதிக உறுதியானதுமான தரை உதவாது. விதையிலிருந்து சீக்ரம் முளைக்கும். ஆணிவேர் நீளமுள்ளதாகையால், நாற்றுகளை பிடுங்கி நடவேண்டியிருந்தால், சிறு நாற்றுகளாயிருக்கும்பொழுதே எடுத்தல் நலம். இதை வேலியாக பயிரிடலாம். விறகுக்காக பயிரிடும் பொழுது 6-அடிக்கு ஒரு நாற்று நட்டு சிறிதுகாலம் கழித்து நடுவிலிருக்கும் செடிகளை வெட்டிவிட்டால், 12-அடிக்கு ஒரு மரமாக நன்றாய் வளரும். வெட்டவெட்ட துளிர்ப்பதால் விறகுக்கு ச்லாக்யமானது. விறகும் நன்றாய் எரியும். பெரிய மரமாக வளரும். விறகுக்காக வெட்டும்பொழுது வேர்கெடாமல் அடிமரத்தை வெட்டவேண்டியது. மறுபடியும் துளிர்த்து மரமாகும். ஒரு தரம் உற்பத்தியாக்கிவிட்டால் பிறகு விறகு வெட்டிக்கொண்டு வரவேண்டியதுதான். வைரம் ஏறினமரம் வேலைகளுக்கும் உபயோகப்படும். விறகுக்காக உற்பத்தியாக்கினால் இந்த மரம் ரொம்ப லாபத்தை கொடுக்கும்.

(6) சீமைவாகை, தூங்குமூஞ்சி (The Rain tree, Pithecolobium Saman.) சீக்ரம் வளரக்கூடிய பெரிய மரங்களில் இது ஒன்று. ஏழு அல்லது எட்டு வருஷங்களில் இது அதிசயிக்கும்படியான வளர்ச்சியை அடைகிறது. கொஞ்சம் இடத்தில் மண்ணை பண்படுத்தி விதையை நட்டால் நாற்றுகள் சீக்ரம் கிளம்பும். ஒரு முழம் குழி எடுத்து வேறே மண்போட்டு 30 அடிக்கு ஒன்றுநடலாம். பூமியின் மேற்புறத்தில் நீண்ட வேர்கள் உயரமாகக்கிளம்பி அத்துடன் மண்ணையும் கிளப்புவதால், ஜலம் தங்கும் பள்ளமான பாகங்களில் இதை நட்டால் நிலத்தையும் சீர்திருத்தலாம். மரம் அதிக நிழலைக்கொடுக்கும். இந்த மரத்தின் ச்லாக்யமான குணம் அடியில் வருமாறு:—இதன் இலைகளும் நீண்ட முற்றினகாய் அல்லது பழமும் ஆடுமாடு குதிரை முதலிய ஜந்துகளுக்கு புஷ்டியை தரக்கூடிய உணவாகும். இவற்றை அந்த மிருகங்கள் ஆவலுடன் தின்னும். இதன் இலைகள் ஸாயந்ரத்தில் மூடிக்கொண்டு காலையில் திறப்பதால் தூங்குமூஞ்சி மரமென்றும், காலையில் இலைகள் திறக்கும்பொழுது அவற்றின் மீதிருக்கும் பனித்துளிகள் மழை பெய்வதுபோல் உதிர்வதால் மழை மரமென்றும் பெயர்வந்தது போலும்.

(7) ஈட்டிமரம் (Dabbergia Sissoo).—நிலவளம் அதிகமில்லாத கல்லாங்தரைகளில் இந்த மரம் நன்றாய் உற்பத்தியாகும். விதைகளிலிருந்து ஸுலபமாய் நாற்றுகள் கிடைக்கும். மரத்தை சுற்றிலும் வேர்களிலிருந்தும் நாற்றுகள் கிடைக்கும். வளர்ந்த மரம் உறுதியும் சேர்த்தியுமுள்ளது. நாற்காலி, மேஜை, கட்டில் முதலிய ஸாமான்கள் செய்வதற்கும், வண்டிகள், படகுகள் செய்வதற்கும் உபயோகப்படும். வட இந்தியாவில் இம்மரம் பலவேலைகளுக்கு உபயோகப்படுகிறது. தென்பாகங்களில் அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை. கல்லாங்தரையும் மணல் தரையும இதன் வளர்ச்சிக்கு ச்லாக்யமானவை. மரம் வெட்ட வெட்ட துளிர்க்கும். மேற்குறித்த நல்ல வேலைகளுக்கு உபயோகப்படுவதால் விறகுக்காக வெட்டப்படுவதில்லை. இல்லாவிட்டால் விறகுக்காக காலி இடங்களில் உற்பத்தி செய்யலாம்.

ஒய். எஸ். வெங்கட்டரமணய்யர், பி. எ.

# LOCAL SELF-GOVERNMENT AND TAXATION UNDER HINDU RULE.

## ஹிந்து அரசர்கள் காலத்தில் ஸ்தல ஸ்வய ஆட்சியும் வரி விதித்தலும்.

முற்காலத்தில் நமது தேசத்திலிருந்த அரசர்களுடைய ஆட்சியைப்பற்றி விவரமானவும் பூர்த்தியானவுமான சரித்ரங்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதால், அவர்கள் தேசத்தை எவ்விதம் ஆண்டுவந்தார்களென்பதும், ஜனங்கள் எவ்விதம் வாழ்ந்துவந்தார்களென்பதும், அரசர்களுக்கும் ஜனங்களுக்குமுள்ள ஸம்பந்தம் எப்படியிருந்ததென்பதும் தெளிவாய்த் தெரியவில்லை. இதுவரையில் எழுதப்பட்டுள்ள தேச சரித்ரங்கள் பலவற்றில், அரசர்களுள் பெரும்பாலார் கொடுங்கோல் மன்னர்களாக விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தயை என்பதும் காருண்ய மென்பதும் சிறிதுமில்லாமல் ஜனங்களிடம் பலவகைப்பட்ட வரிகளை அதிகமாக வஸூலித்து வந்ததாக வாசித்திருக்கிறோம். இதனால் ஜனங்கள் அரசாட்சி முறையில் யாதொரு ஸம்பந்தமுமின்றி, கேட்ட வரிகளைக் கொடுத்துவிட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்திருக்கவேண்டுமென் றேற்படுகிறது. இந்த நிலைமை உண்மையாகவே கொடுங்கோல் செலுத்திவந்த அரசர்கள் காலத்தி லிருந்துவந்திருக்குமென்று சொல்லலாம். ஆனால் சென்ற சில காலமாக வெளிக்கு வந்திருக்கும் சிலாசாஸனம், தாம்ரசாஸனம் முதலிய உண்மையான சரித்ர ஆதாரங்களைப் பார்த்தால் அநேக ஹிந்து அரசர்கள் காலத்தில் செங்கோலே ஓங்கி யிருந்ததென்று தெரிகிறது. அது மட்டுமல்ல, ஸமீபத்தில் வெளிக்குவந்த ஒரு சாஸனத்தால் ஒரு காலத்தில் ஜனங்கள் வரி விதிப்பதாகிய பெரிய ராஜாங்கக் கார்யத்தில் கலந்துகொண்டு, தங்கள் அபிப்ராயப்படியே தங்களுக்கு வரி விதித்துக் கொண்டார்களென்று தெரிய வருகிறது. அந்த சாஸனம் 1429-30-ம் வர்ஷத்தியதாகும். அது கும்பகோணம் தாலுகாவிலுள்ள திருவையாறூரில் கிடைத்தது. அது விஜயநகரத்தில் இரண்டாவது தேவராய அரசர் ஆண்டகாலத்தில் எழுதப்பட்டதாகும். அதில் அந்த ராஜ்யத்தின் ஒரு மாகாணத்தில் பராந்தக நாட்டு ஜனங்கள் ஒன்றுகூடி ஸர்க்காருக்கு இன்ன நில வரிகள் கொடுக்கவேண்டும், வேறு வரிகள் இன்னின்ன கொடுக்கவேண்டும், வரிவிகித மெவ்வளவு இருக்கவேண்டு மென்பதைப்பற்றித் தீர்மானித்த விஷயம் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாகாணத்திலிருந்த வேறு நாட்டாரும் ஒன்றுகூடி வரி செலுத்தும் விஷயமாய்த் தீர்மானம் செய்ததாகவும், அவர்களைப் பின்பற்றியே பராந்தக நாட்டாரும் ஒன்றுகூடித் தீர்மானித்ததாகவும் ஷை சாஸனத்திலிருந்து தெரியவருகிறது. இப்படிச் செய்யக்காரணமென்னவென்றால், விஜயநகர ஆட்சிக்கு முன் கன்னடிய அரசர்கள் ஆண்டுவந்தபோது, அந்த நாட்டின் வரும்படியை அவ்வரசர்கள் கோவில்களின் ஸிப்பந்திகள் தங்களுடைய நிர்வாகத்துக்காக எடுத்துக் கொள்ளும்படி விட்டிருந்தார்கள். கோவில் ஸிப்பந்திகள் அந்த நாட்டிலுள்ள நிலங்களைக் குத்தகைக்கு விடுவதிலும், வரி வஸூல் செய்வதிலும் முறை தவறி நடந்தார்கள். இப்படிப்பட்ட நிலைமையை சீர்திருத்துவதற்காகவே தான் மேற்சொன்னபடி பராந்தக நாட்டார் ஒன்றுகூடி வரி விஷயமாய்த் தீர்மானம் செய்யலானார்கள்.

இங்கு கவனிக்கவேண்டிய விஷய மென்னவென்றால், இன்னின்னவைகளுக்கு வரி போடலாம், இன்னின்ன விகிதப்படி வரி செலுத்தவேண்டு மென்பவைகளை ராஜாங்கத்தார் ஏற்படுத்தாமல், ஜனங்களே ஏற்படுத்திக்கொண்டார்களென்பதே. இந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு முன்னால் ஜனங்கள் ராஜாங்கத்தாருடன் கலந்து ஆலோசனை செய்தார்களா, இல்லையா என்பது ஷை சாஸனத்திலிருந்து வ்யக்தமாகத் தெரியவில்லை. அப்படியே ஜனங்களும் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களும் ஒன்றுகூடி ஆலோசனை செய்தே வரி ஏற்பாடு செய்துகொண்டார்களென்று வைத்துக்கொண்டபோதிலும், ராஜாங்கத்தார் ஜனங்களுடைய விருப்பத்தைக்கேட்டே வரி விதித்தார்களென்று சொல்வதற்கு இந்த சாஸனம் தக்க ஆதாரமாகிறது.

அந்த சாஸனத்திலிருந்து அக் காலத்திய ஜனங்களின் பொருளாதார நிலைமையும் ஜனஸமூக நிலைமையும் எப்படியிருந்தனவென்பது நன்கு விளங்குகிறது.

சாஸனத்தில் குறிக்கப்பட்டுள்ள முக்யமான வரி விஷயங்களை இங்கு சுருக்கி எழுதுகிறோம். பயிர்கள் நஞ்செய், தோட்டப்பயிர், பாசனமுள்ள புன்செய்ப்பயிர், மானாவாரிப் புன்செய்ப் பயிர் என நால்வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நன்செய் நிலங்களிலிருந்து தான்யமாக வரி வஸூலித்ததோடு, தர்ம கார்யங்களுக்கும் கோவில்களுக்கும் ஏற்படும் செலவுக்காக பண வரியும் விதிக்கப்பட்டிருந்தது. நன்செய் நிலங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வரி வேலி ஒன்றுக்கு 50-கலம் நெல்லாகும். ஒரு தஞ்சாவூர் கலம் 24 பட்டணம் படி யாகும். ஒரு வேலியென்பது கிட்டத்தட்ட 6-ஏக்கராகும். ஆகவே ஒரு ஏக்கருக்கு 200 பட்டணம்படி நெல் வீதம் வரி கொடுப்பதாக ஷை நாட்டார் கூடிய ஸபையில் தீர்மானிக்கப்பட்டது. இது தற்காலத்திய உயர்ந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் மொத்த மாஸூலில் ஆறில் ஒருபாகமாகும். ஆகவே இந்த வரி விகிதமானது மனு முதலிய ஸ்ம்ருதி கர்த்தாக்கள் வற்புறுத்தும் ஆறிலொரு கடமைக்கு ஒத்ததாகவே யிருக்கிறது. காடு வெட்டித் திருத்திய நிலங்களுக்கும், இறைப்பு நிலங்களுக்கும் வேலிக்கு 20-கலம் வீதம் வரி போடப்பட்டது. தோட்ட நிலங்களுக்கும், புன்செய் நிலங்களுக்கும் தான்ய வரி போடாமல், ரொக்கமாகவே வரி விதிக்கப்பட்டது. நன்செய் நிலங்களுக்கு தான்ய வரியோடு தர்ம கார்யங்களுக்காக அதிகப்படி பண வரி போட்டது போல, இவைகளுக்கு அதிகப்படி வரி ஒன்றும் கிடையாது. இந்த புன்செய் தோட்டத்துப் பயிர்களுக்கு வரி விதிக்கையில் செய்நேர்த்திச் செலவை மாத்ரம் கவனிக்காமல், அவைகளிலிருந்து கிடைக்கும் லாபத்தையும் கவனித்துக்கொண்டு வரி ஏற்படுத்தினார்கள். உதாரணமாக மஞ்சள், இஞ்சி, வெங்காயம், பூண்டு இவைகள் பயிரிடப்பட்ட நிலங்களுக்கு வேலிக்கு 25 'பணம்' வீதம் வரி போடப்பட்டது. செந்தாமரை விளையும் சதுப்பு நிலங்களுக்கு வேலிக்கு 100 பணம்; படுகை நிலங்களுக்கு 50-பணம்; வாழை, கரும்பு இவை விளையும் நிலங்களுக்கு 60 பணம்; வாஸனைப்புல், தேகத்தை அழகுபடுத்த உபயோகமாகும் வாஸனைச் செடிகள் ஆகிய இவைகள் பயிரிட்டுள்ள நிலங்களுக்கு வேலிக்கு 100-முதல் 200-பணம் வரையில் வரி விதிக்கப்பட்டது. புஷ்பங்கள், வாஸனைப் பூண்டுகள் முதலியவைகள் ஜனங்களுக்கு ரொம்பவும் வேண்டியிருந்ததால், அவைகளைப் பயிரிட்ட விவஸாயிகளுக்கு அதிக லாபம் கிடைத்து வந்ததுபோலும். அதனால் தான் அவைகளுக்கு அதிக வரி போடப்பட்டதென்று தோன்றுகிறது.

புன்செய் நெல், ஆமணக்கு, பருத்தி, வரகு, கடுகு, துவரை, கோதுமை முதலிய புன்செய்ப் பயிர்களுக்கு வேலிக்கு 20-பணம் வரியாகும். மரங்களில் தென்னை, பாக்கு ஆகிய இவைகளுக்கு வரி ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றும் 1500-பாக்குக் கொடுக்கக்கூடிய 5 கமுகு மரங்களுக்கு ஒரு பணம் வரி செலுத்தவேண்டும். தென்னையில் 40-காய்களுக்குக் குறையாத காய்ப்புள்ள மரம் ஒவ்வொன்றுக்கும் அரைப் பணம்வீதம் வரி செலுத்தவேண்டும்.

பருவகாலம் சரியாயிராமல் பயிர் சேதமடைந்தால் வரி தள்ளிக்கொடுக்க ஷை ஜன ஸபையார் நிபந்தனைகள் ஏற்படுத்திருந்தார்கள். நன்செய்ப் பயிரில் கார், பிசானம் ஆகிய இவைகளும், புன்செய்ப் பயிர்களும் நட்டபிறகு பாழாகப் போனாலும், சாவியானாலும், வேறு விதத்தில் கெடுதலடைந்து மாஸூல் இல்லாமல் போனாலும், அந்த நிலங்களுக்கு வரி வஸூலிக்கக்கூடாதென்று ஏற்படுத்தியிருந்தார்கள். ஆனால் வரி வஸூலிக்கப்படாதென்ற எந்த நிலத்திலாவது ஸாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய மாஸூலில் கால்பாகம் கிடைத்திருந்தால், கிடைத்த மாஸூலில் மூன்றில் ஒரு பாகத்தை ஸர்க்காருக்கு வாரமாகக் கொடுக்கவேண்டும்.

ஷை சாஸனத்தில் பராந்தகசோட்டார் ஏற்படுத்திக்கொண்ட வீட்டுவரி, தொழில்வரி, ஜாதிவரி ஆகிய இவைகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவீட்டுக்கும் வீட்டில் குடியிருப்பவருடைய ஜாதி அல்லது தொழிலுக்குத் தகுந்தபடி 3-பணம்முதல் முக்கால் பணம் வரையில் வரி செலுத்தவேண்டும். குடியில்லாத வீட்டுக்கு வரி கிடையாது.

வ்யாபாரிகள், கடை வைத்திருப்பவர்கள், சங்கம் வஸூலிப்பவர்கள், சேணியர்கள், நீதிபதிகள், வக்கீல்கள், தட்டான், கொல்லன், கன்னான், குயவன், அம்பட்டன், வண்ணான், வாணியன் ஆகிய இவர்களுக்குத் தொழில்வரி உண்டு. ஒவ்வொரு தறிக்கும், அதில் வேலைநடந்தாலுஞ்சரி, நடக்காவிட்டாலுஞ்சரி, வரி உண்டு. மற்ற தொழிலாளிகளைவிட வாணியர்களுக்குத்தான் அதிக வரி போடப்பட்டிருந்தது. அவர்களுக்கு மாத்ரம் 20 பணம். மற்ற தொழிலாளிகளுக்கெல்லாம் ½-பணம் முதல் 5-பணம்வரையில் வரி விதிக்கப்பட்டது. மற்றவர்களைவிட வக்கீலுக்குத்தான் ஸ்வல்பவரி. அவர்கள் ½-பணம் வரிசெலுத்த வேண்டும். பறையர்களுக்கு கால் பணம்வீதம் ஆள்வரி போடப்பட்டிருந்தது.

---

## MARRIAGES IN ROUMANIA.

## ருமேனியாவில் விவாகங்கள்.

ருமேனியாவில் க்ராமாந்தரங்களில் விவாக காலங்களில் அநுஷ்டிக்கப்படும் வழக்கங்கள் மிகவும் விநோதமாயிருக்கும். அவ்வழக்கங்கள் வெகுகாலமாக அநுஸரிக்கப்பட்டு வருகின்றன.

கல்யாணதினத்தன்று கல்யாணப் பெண் கோவிலுக்குப் போகும்போது உயர்ந்த தங்க வேலைப்பாடுள்ள ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டிருப்பாள். அவளைச் சுற்றி அநேகதோழிமார்கள் போவார்கள். ஒவ்வொரு தோழி கையிலும் ஒரு வெண்மையான கூடையிருக்கும். அதில் தங்க ஸரிகையால் செய்யப்பட்ட புஷ்பச்செண்டுகள் நிறையவிருக்கும். தோழிமார்கள் கோவிலுக்கு வந்திருக்கும் கல்யாணமாகாத பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் அந்தச் செண்டுகளைக் கொடுப்பார்கள். இப்படிச் செய்வதின் தாத்பர்யமென்னவென்றால், அந்தச் செண்டுகளைப் பெற்ற கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகள் சீக்ரம் கல்யாணமாகவேண்டுமென்று வாழ்த்துவதாகும். கல்யாணம் நடக்கும்போது கோவிலுக்கு வந்திருப்பவர்கள்மேல் புஷ்பங்களை வர்ஷிப்பார்கள். கல்யாணம் நடக்கும் காலத்தில் மாத்ரம் வதூவரர்கள் இருவரும் தங்கள் தலையில் தங்கத்தால் செய்த வட்டமான ஒரு கிரீடத்தைத் தரித்துக்கொள்வார்கள். அந்த ஸமயம் மணமகன் ஒரு அரசனென்றும், மணமகள் ஒரு ராணியென்றும் காட்டுவதற்காக இவ்விதம் தலையில் மேற்சொன்ன தங்கக்கிரீடத்தை அணிந்துகொள்ளுகிறார்கள்.



ருமேனியாவில் ஒரு பெண் தனக்கேற்ற புருஷனை வரித்தபின் அதை அவள் தனக்கு ப்ரியமான தோழிகளிடம் தெரிவிக்கப் போவதுண்டு. அப்போது அவள் வாத்ய ஸஹிதமாய்ப் போய் தன் தோழியைக் காண்பாள். ஆனால் அவ்விஷயத்தை தானே சொல்லுவதில்லை. ஒரு பண்டைக்கால வழக்கப்படி, அப்போது அவள் தனக்குக் கல்யாணமாகப்போகிற விஷயத்தைக் குறித்து சிந்தித்ததால் மனம் குழம்பியிருப்பதாகவும், அதனால் அவள் பேச முடியாமலிருப்பதாகவும் காட்டிக்கொள்ளுவாள். அதன்மேல் அவளுடன் வந்த வாத்யக்காரர்களுள் ஒருவன் அவ்விஷயத்தை தோழிக்குத் தெரிவிப்பான். அதோடு அந்தத் தோழியை கல்யாணத்துக்கு வரும்படி அழைப்பான்.

ருமேனியர்கள் ரோம் பட்டணத்தில் ஆட்சி புரிந்து பெரிய ரோமன் ராஜ்யம் ஸ்தாபித்த ரோமன்ஸ் என்னும் ஜாதியாரின் ஸந்ததியாவார்கள். இதனால் அவர்கள் ரோமன்ஸ் ஜனங்கள் அநுஸரித்து வந்த வழக்கங்களை ஒன்றும் விடாமல் இக்காலத்திலும் அநுஷ்டித்து வருகிறார்கள். நாகரிகம் முதிர்ந்து பழைய வழக்கங்களை விட்டுவிட்ட பட்டண வாஸத்து ஜனங்கள் மாத்ரம் விவாகங்களை தற்கால முறைப்படி நடத்துகிறார்கள்.

முற்காலத்தில் ரோம தேசத்து யுத்தவீரர்கள் அன்யஜாதிகளில் தாங்கள் விரும்பிய பெண்களை பலர் அறிய பலாத்காரமாகப் பிடித்துத் தூக்கிக் குதிரைகளின் மேலேற்றிக்கொண்டு போய் கல்யாணம் செய்துகொள்வது வழக்கம். இந்த வழக்கத்தை ருமேனியர்கள் வாஸ்தவமானால் எப்படி நடக்குமோ அவ்விதமே கல்யாணத்தில் நடித்துக் காட்டுகிறார்கள்.

கல்யாணத்துக்கு முதல்நாள் இரவில் க்ராமத்தில் ஒரு பெரிய நர்த்தனம் நடக்கும். அதற்கு ஆண் பெண் அடங்கலும் போவார்கள். அன்றையதினம் மணமகள் ஸாதாரண நித்யப்படி உடைதரித்து வீட்டில் அடுப்பங்கரையண்டை உட்கார்ந்திருப்பாள். வீட்டிலுள்ள மற்றோரும் கூடியிருந்து ஸாதாரணநாளில் பேசுவதுபோலப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

வெளியில் தெருவில் நர்த்தனம் நடக்கும் இடத்தில் நர்த்தனத்துக்குப் பலர் வந்திருப்பார்கள். இன்னும் வராதவர்களை அழைக்க ஒரு வாத்யக்காரன் ஒரு வீணையை வாசிக்க, வந்தவர்கள் பின்வரும் தாத்பர்ய மடங்கிய பாட்டொன்றைப் பாடுவார்கள்.

"வாருங்கள் பெண்களே, கோடையிரவு உங்கள் உதடுபோல் ம்ருதுவாயிருக்கிறது. சந்த்ரன் புறப்படுகிறான். வாருங்கள்! வந்து ஆடுங்கள்!!"

இந்தப்பாட்டைக்கேட்டதும் ஏதோ கெடுதல் வரப்போகிறதென்று நினைப்பட்டவள்போல் நடித்துக்கொண்டிருக்கும்மணமகள் திடீரென்று பயமடைந்ததுபோல் கையைத் தூக்குவாள். பக்கத்திலிருக்கும் கிழவிகளும் மற்றவர்களும் அவளை ஆட்டத்துக்குப் போகத் தூண்டுவார்கள், "பெண்ணே நீ நடனஞ்செய்யப்போ. போகாவிட்டால் சந்த்ரன் உன்மேல் கோபங்கொள்வான்" என்பார்கள். அதற்கு மணமகள் ஏதோ கெடுதல் ஏற்படுமென்று தோன்றுகிறதென்றும், ஆகையால் வீட்டைவிட்டு வெளியில் போக இஷ்டமில்லையென்றும், சொல்லுவாள். அதன்பிறகு அவளுடைய தோழிமார்கள் அவளை நடனத்துக்கு வரும்படி கேட்பார்கள். அப்போது ஆட்டத்துக்கு வந்திருக்கும் வாத்யக்காரர்கள் அந்த தேசத்துக்கு உரித்தான தேசிய பாட்டொன்றை ரஸமாய்ப் பாடுவார்கள். தோழிமார்கள் நிலவு நன்றாயிருக்கிறதென்றும், ஆகையால் வீட்டுக்குள் அடைந்திருக்கத் தங்களுக்கு இஷ்டமில்லையென்றும், (மணமகள் பேரைச் சொல்லி) அவள் வராவிட்டால் தாங்கள் மாத்ரம் தனியாகப் போய் விளையாட இஷ்டமில்லையென்றும் சொல்லி அவளை வரும்படி கட்டாயப் படுத்துவார்கள். ரொம்ப கட்டா

பப்பித்தினதன்மேல் மணமகள் ஸம்மதப்பட்டு தோழிமார்களுடன் நடனத்துக்குப் போவாள். கிழவிகளும் தோழிமார்களும் மணமகளை நடனத்துக்குக் கூப்பிடுவதும், மணமகள் வரமறுப்பதும் ரொம்ப வாஸ்தவமாயிருக்கும். ஆனால் இந்தப் பழையகால நடவடிக்கைகளை நடித்துக் காட்ட கல்யாணத்தில் ஸம்பந்தப்பட்ட பலரும் பலநாள் ச்ரமப்பட்டு, எப்படி எப்படி நடக்கவேண்டுமென்று கற்றுக் கொண்டிருப்பார்கள். பெண்கள் விளையாடு மிடத்துக்குப்போய் விளையாடிக் கொண்டிருக்கும்போது, மணமகனும் வேறுசில வாலிபர்களும் குதிரைமே லேறிக்கொண்டு அவ்விடம்வந்து கீழே இறங்கி, மணமகளைப் பிடிக்கப் போவார்கள். அப்போது பெண்களெல்லாம் வாஸ்தவத்தில் துஷ்டர்கள் தங்களைப் பிடித்துப்போக வந்ததாக நடித்து பயந்து கூக்குரலிட்டு புஷ்பச் செண்டுகளால் அவர்களை படித்துத் துரத்த முயலுவார்கள். இந்தக் கலவரத்தில் மணமகன் மணப்பெண்ணைத் தூக்கிக் குதிரைமே லேற்றிக்கொண்டு மற்றவாலிபர்கள் தொடர்ந்துவர ஓடிவிடுவான். கல்யாணப்பெண் தன்னை மணக்கப் போகும் வாலிபனே தன்னை தூக்கிக்கொண்டுபோனாலும், பழையகாலைய வழக்கப்படி, ஒரு துஷ்டன் தன்னைத் தூக்கிப்போவதாக பாவனைகாட்டி கூக்குரலிட்டு அழுது அவன் கையிலிருந்து தப்பித்துவர முயலுவாள். பெண்களின் கூக்குரலைக் கேட்டு, மணமகளின் தகப்பனும் தாயாரும் மற்றப் பெண்களும் கிழவிகளும் விளையாட்டு நடந்தவிடம்வந்து கூக்குரலிடுவார்கள். மணமகள் இவர்களைப் பார்த்து பரிதாபமான குரலுடன், "ஓ, என் அருமையான பெற்றோர்களே பந்துக்களே, என்வீட்டிலிருந்து என்னைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போகவிடாதேயுங்கள். நான் என் வீட்டிலேயே இருக்க ப்ரியப்படுகிறேன். என் தாயாரையும், எனது ராட்டினத்தையும் விட்டுப் பிரியமனம் வரவில்லை. என்னைக் காப்பாற்றுங்கள். நான் என்ன ஸ்வப்னம் காண்கிறேனோ? நான் உயிருடனிருக்கிறேனோ?" என்று கதறுவாள்.

அவளுடைய பெற்றோர்களும் அங்கேகூடிய பெண்களும், "ஏ, துஷ்டா, திருடா, இந்த வீட்டுக்கு ஒரு அணிகலனுயிருக்கும் அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டுபோகாதே; அவள் உதிக்கும் ஸூர்யனைப்போல் அழகு வாய்ந்தவள். ம்ருதுவான தேகமுடையவள். பெண்ணே, நில், எங்களிடமே தங்கியிரு. உனக்கு தேனும், மாவும், பழங்களும் தருகிறோம்" என்று கூவுவார்கள். இவ்விதம் சிலநேரம் பேச்சுகள் நடக்கும். பெண்ணைத் தூக்கிக்கொண்டுபோகவந்த வாலிபர்கள் இவர்கள் பேசுவதைக் கேட்கமுடியாதபடிசெய்ய பலமாய் சிரித்துக்கொண்டிருப்பார்கள். அதன்மேல் வாலியர்களைப் பிடிக்க சிலர் புறப்பட்டு, பொய்க்காக துப்பாக்கிகளை சுடவே, வாலிபர்கள் துரிதமாக ஓடிவிடுவார்கள். இதன்மேல் மணமகளைச் சேர்ந்தவர்கள் இனிமேல் என்ன செய்வ தென்பதைப்பற்றிக்கூடி ஆலோசிப்பார்கள். எல்லாரும் பெருந்துக்கத்தில் ஆழ்ந்துவிட்டதாக பாவித்து கையைப் பிசைவார்கள். இதுபார்க்க வாஸ்தவமான துக்கஸமயம்போல இருக்கும். ஒரு கிழவி தான் இதுபோல அநேக ஆபத்துகளை (அதாவது கல்யாணங்களைப்) பார்த்திருப்பதாகச் சொல்லி ஒவ்வொன்றையும் விவரிப்பாள். பிறகு பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனவன் இன்னானென்றும், அவன் தாயார் தனக்கு ரொம்ப தெரியுமென்றும், அவர்கள் ரொம்ப நல்லவர்களென்றும், அதோடு அவன் வசிக்குமிடம் எங்கே இருக்கிறதென்பது தனக்குத் தெரியுமென்றும் சொல்லுவாள். மேலும் பெண்ணை அவன் அடைவது நிச்சயமாகையால், அவள் தன் புருஷன் வீட்டுக்குள் கல்யாணமாகாமல் புகுவது சரியல்லவென்றும், வாலிபன் அவளைத் தூக்கிக்கொண்டு தன்வீட்டுக்குப் போவதற்குள்



ஒரு குறுக்கு வழியாகப்போய் வாலிபன் வீடு சேர்ந்து, பெண் கல்யாணமாகாமல் புக்ககம் புகுவதைத் தடைசெய்யவேண்டுமென்றும் சொல்லுவாள். இதன்மேல் எல்லாரும் அப்போதே புறப்பட்டு வாலிபன் இருக்குமிடத்துக்குப் போவார்கள். போகும்போது "ஜகதீசா, பரதேவதே, நாங்கள் முன்னாடியே போய்ச் சேருவோமோ என்னவோ தெரியவில்லையே, ஈச்வரீ, நீதான் காப்பாற்றவேண்டு"மென்று சொல்லிக்கொண்டு போவார்கள். இதற்குள் மணமகனும் அவனுடைய தோழர்களும் சிறிதுதூரம் சென்றதும் வேண்டுமென்றே குதிரையை மெதுவாக நடத்திச் செல்வார்கள். மணமகள் துக்கம் மேலிட்டவள்போல் அழுதுகொண்டு தனது முகத்தைக் கைக்குட்டையால் மூடிக்கொள்ளுவாள். மணமகன் அவளுடைய தலைமயிரை குதிரையின் பிடரி மயிரோடு கட்டியிருப்பான். இதன் தாத்பர்யமென்னவென்றால், புருஷன் போனவிடமெல்லாம் பெண் கூடப்போகக் "கட்டுப்பட்டிருக்கிறாள்" என்பதே. மற்ற வாலிபர்கள் மணமகனைப் பலவிதங்களில் ச்ருங்காரமாகக் கேலிசெய்வார்கள். மணமகன் தன் வீட்டண்டைவந்ததும் குதிரையை நிறுத்துவான். இதற்குள் பெண்வீட்டார் அங்குவந்திருப்பார்கள். அவர்கள் மணமகனை, பெண்ணைக்கல்யாணமாகாமல் வீட்டுக்குள் அழைத்துப்போகவேண்டாமென்று கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுவார்கள். அப்போது மணமகனின் பெற்றோர்கள் தங்கள்வீட்டு ஜன்னலைத் திறந்து பார்த்து ஒன்றும் தெரியாதவர்கள் போல என்ன விசேஷமென்று கேட்பார்கள். மணமகன் கீழே இறங்கி தனது மாமியாரிடம் விஷயமனைத்தையும் சொல்லுவான். இதன் பிறகு பெண்ணைப் பெற்றோரும் பிள்ளையைப் பெற்றோரும் இனிநடக்க வேண்டியதைப்பற்றிப் பேசுவதுபோல் சிறிதுநேரம் நடிப்பார்கள். பிள்ளையின் தகப்பனார், கல்யாணமானபின் பெண் புக்ககத்திற்கு வரலாமென்றும், மறுநாள் கோவிலில் கல்யாணம் நடக்கட்டுமென்றும், அதுவரையில் பெண் தன் பெற்றோர் வீட்டிலிருக்கலாமென்றும் சொல்லுவார். அதன்மேல் மணமகனும் மணமகளும் ஒருவரையொருவர் முத்தமிட்டுப் பிரிவார்கள். மறுநாள் இருவருக்கும் கோவிலில் முறைப்படி கல்யாணம் நடக்கும். அதன்பிறகு பெண் புக்ககம் போவாள்.

கோவிலில் கல்யாணம் நடக்கும்போது கல்யாணப் பெண்ணும் மாப்பிள்ளையும் காலில் ஜோடு முதலியவை ஒன்றும் போட்டுக்கொள்வதில்லை. தம்பதிகளில் யாராவது இறந்துபோய் மற்றவர் உயிருடன் இருக்க நேரிட்டால், அந்த மற்றவர் இஷ்டப்பட்டால் கல்யாணம் செய்து கொள்ளலா மென்பதைக் காட்ட இவ்விதம் வெறுங்காலோடு கல்யாணம் செய்துகொள்ளுகிறார்களாம்.

கல்யாணம் நடக்கும்போது கல்யாணப்பெண் போட்டுக்கொள்ளும் மோதிரம் கீழே விழக்கூடாதாம். விழுந்தால் கல்யாணமான ஒரு வர்ஷத்துக்குள்ளாக அவளிறந்து போவாளாம்.

கல்யாணமான பிறகு பெண்ணானவள் தனது தலையை ஒரு முகமூடியால் மறைத்துக்கொள்ளுவாள். அதன் பிறகு அவள் புருஷனைத் தவிர வேறெந்த ஸ்த்ரீயாகட்டும், புருஷனாகட்டும் அவள் தலையையும், தலை மயிரையும் பார்ப்பதற்கில்லை. கல்யாணம் நடக்கும்போது அவள் தலைமயிரை அலங்காரமாய் வைத்திருக்க உபயோகித்த கொண்டை ஊசிகளை அவள் தன்னுடன் வந்த கன்னிகைத் தோழிகளுக்குக்கொடுப்பாள். அதைத் தரித்துக்கொண்டால் தங்களுக்கும் சீக்ரம் விவாகமாகு மென்ற நம்பிக்கையுடன் அந்தப் பெண்கள் கோவிலிலேயே அந்தக் கொண்டையூசிகளை தங்கள் தலைமயிரில் சொருகிக்கொள்வதுண்டு.

# MR. DAVID LLOYD GEORGE.

## மிஸ்டர் டேவிட் லாய்ட் ஜார்ஜ்.

இந்த யுத்தத்தில் இங்கலண்டுக்கும் நேசஅரசுகளுக்கும் சீக்ரம் ஜயமேற்படுவதற்காக ரொம்பவும் பலமாக ப்ரயத்தனங்கள் செய்துவரும் மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் சென்றமாஸம் முதல் இங்கலண்டின் ப்ரதமமந்த்ரியாயிருக்கிறாரென்று சென்ற மாஸத்து 'ஜனாபிமானி'யில் தெரிவித்தோம். மிஸ்டர் லாய்ட் ஜார்ஜுக்கு இப்போது 53-வயஸாகிறது. அவர் ஸாதாரண குலத்தில் உதித்த வேல்ஸ் தேசத்தவர். அவர் பிறந்த சில காலத்துக்கெல்லாம் அவருடைய தந்தை இறந்துபோனார். அவர் தாயாரே அவருடைய கல்வி, வளர்ப்பு முதலியவைகளைப் பற்றிக் கவனிக்கவேண்டியிருந்தது. பால்யத்தில் அவர் ரொம்ப துஷ்ட குணமுள்ளவராகவும், ஆனால் தன் வயஸுக்கு மேற்பட்ட புத்தியுள்ளவராகவும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவருக்குப் பிடிவாதகுணம் அதிகமாம். இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறோம். அவருக்கு வைதீக விஷயங்களில் பற்றுக் கிடையாது. அவர் தமது க்ராமப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, அங்கே சில மத விஷயங்களை வினாவிடை ரூபமாகப் பையன்களுக்குக் கற்றுக்கொடுத்து மனப்பாடம் செய்யச் சொல்லி வந்தார்கள். அந்த ஊரிலுள்ள ஒரு பெரிய கனவான் அந்தப் பள்ளிக்கூடத்தை அடிக்கடி பார்வையிட வருவதுண்டு. லாய்ட் ஜார்ஜுக்கு இந்த வினாவிடைகளை மனப்பாடம் செய்வதும், அவைகளை கனவானிடம் ஒப்புவிப்பதும் பிடிக்கவில்லை. அதோடு உபாத்யாயர் க்ராம மதாதிகாரியாயுமிருந்தார். ஆகவே உபாத்யாயரிடமும் கனவானிடமும் அவருக்கு ஒருவித வெறுப்பு உண்டாயிற்று. இந்த வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கவே, லாய்ட் ஜார்ஜ் பள்ளிக்கூடத்திலிருந்த பிள்ளைகளெல்லாரையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு, மதவிஷயமான வினாவிடைகளை ஒப்புவிக்கச் சொன்னால், பதிலே பேசாமல் இருக்கும்படி தனது ஸகபாடிகளுக்கு கற்பித்து விட்டார். அடுத்த தடவை கனவான்வந்தபோது எல்லாப் பையன்களும் கேட்ட கேள்விகளுக்கு ஒருபதிலும் சொல்லாமல் இருந்தார்கள். எவ்வளவு பயமுறுத்தியும் பையன்களெல்லாரும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாமல் சிலகாலம் இருக்கவே, உபாத்யாயரும் கனவானும் பையன்களைக் கண்டிப்பதில் பயனில்லையென்றுகண்டு, வினாவிடைப்பாடம் கற்றுக்கொடுப்பதை விட்டு விட்டார்கள். கனவான்மேல் கொண்ட வெறுப்பை வெகுகாலமாகியும் லாய்ட் ஜார்ஜ் மறக்கவில்லை. பெரியவரான பிறகுகூட அவர் ராஜாங்க விவஹாரங்களில் கனவானுக்கு எதிர்க்கக்ஷியிலேயே இருந்து வந்தார்.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் க்ராமப் பள்ளிக்கூடத்திலிருக்கும்போதே வக்கீல் வேலைக்குப் போகத் தீர்மானம் செய்துகொண்டு, அதற்காக ப்ரெஞ்ச் பாஷையையும், லட்டீன் பாஷையையும் கற்றுக்கொண்டார். அவர் ரொம்ப ஏழையாயிருந்ததால் வக்கீல்பரீக்ஷைக்குப் படிக்க ரொம்ப ச்ரமப்பட்டார். பிறகு பரீக்ஷையானதும், ஸொலிஸிடர் என்னும் வக்கீல் வேலை பார்த்து வந்தார். சிலகாலம்வரையில் அவருடைய பெயர் வெளிக்கு வரவில்லை. அவரிருந்த இடத்துக்குப் பக்கத்திலுள்ள ஒருக்ராமத்தில் கோவிலதிகாரி, ஒரு க்ராமவாஸியினுடைய ப்ரேதத்தை அந்தக் கோவிலைச்சேர்ந்த ப்ரேதங்கள் புதைக்குமிடத்தில் அந்த க்ராமவாஸி வீட்டாருக்குள்ள பாகத்தில் புதைக்கக்கூடாதென்று சொல்லிவிட்டார். இதற்குக் காரணம் இறந்தவர் மதவிஷயங்களில் அந்தக் கோவில் ஜநங்களினின்றும் வேறுபட்டதே. இறந்தவரைச் சேர்ந்தவர்கள் மிஸ்டர்லாய்ட் ஜார்ஜினிடம்போய் ப்ரேதத்தை கோயிலைச் சேர்ந்த மயான தோட்டத்தில் புதைக்க என்ன செய்வதென்று ஆலோசனை கேட்டார்கள். மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் பால்யத்தின் சேஷ்டா குணம் போகாமல், தோட்டத்தின் கதவை உடைத்து உள்ளேபோய் ப்ரேதத்தைப் புதைக்கலாமென்று யோசனை சொன்னார். இதன்படியே இறந்தவரின் சுற்றத்தார்களும் செய்தார்கள். பிறகு கோவிலதிகாரிகள் சுற்றத்தார்கள் அநீதமாக தோட்டத்தில் ப்ரவேசித்ததற்காக, அவர்களின்மேல் வழக்குத் தொடர்ந்து, அவர்களுக்கு அபராதங்களும் போடுவித்தார்கள். அதற்குமேல் அப்பீல் வ்யவஹாரங்களும் நடந்தன. இவைகளால் மிஸ்டர் லாய்ட் ஜார்ஜுக்கு ப்ரக்யாதி ஏற்படலாயிற்று. தன் பெயர் பலவிடங்களில் பரவவே, மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் பார்லிமெண்டுக்குப் போக எண்ணங்கொண்டு, முன்சொன்ன தமது க்ராமத்து கனவானுக்குப் போட்டியாக பார்லிமெண்ட் அபேக்ஷகராக இருந்து, ஜனங்களை தமது பக்கத்தில் சேர்த்துக்கொண்டார். ஜனங்கள் அவரை 1889-ம் வர்ஷத்தில் பார்லிமெண்ட் மெம்பராகத் தெரிந்தெடுத்தார்கள்.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் நன்றாய் வாதம் செய்யக்கூடியவர். சாதுர்யமாயும் ஸமயாஸமயங்களில் வேடிக்கையாயும் பேசுபவர். வார்த்தைக்குத் தயங்கமாட்டார். ரொம்ப தைர்யசாலி. எதிராளி ஏதாவது சொல்லித் தம்மை அடக்கப்பார்த்தால், சிறிதும் பின் வாங்குபவரல்ல. தமது கக்ஷி ந்யாயமென்று தோன்றினால், தம்மால் கூடியமட்டும் வாதம்செய்து ஜயிக்க முயலுவார். அவர் எப்போதும் சுறுசுறுப்புள்ளவர். அவர் ஜனங்களிடத்தில் ரொம்ப அபிமானமுள்ளவர். மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் 1890-ம் வர்ஷமுதல் பார்லிமெண்டில் மெம்பராக இருந்துவருகிறார். 1905-ம் வர்ஷத்தில் அவருக்கு ப்ரிவி கௌன்ஸிலர் பதவி கிடைத்தது. அதேவர்ஷத்தில் போர்ட் அப் ட்ரேட் என்னும் கவர்ன்மெண்ட் வ்யபார இலாகாவின் ப்ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டார். 1908-ம் வர்ஷத்தில் அவர் வரவு செலவு மந்த்ரியானார். இந்த இரண்டு பதவியிலும் அவருடைய ச்லாக்யமான குணங்களும், அதிகாரத் திறமையும் நன்கு வெளியாயின. 1915-ம் வர்ஷத்தில் அவர் யுத்தத்துக்கு வேண்டிய தளவாடங்களை சுறுசுறுப்புடன் தயாரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டி புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட யுத்தக்கருவிகள் மந்த்ரி வேலைக்கு நியமிக்கப்பட்டார். சென்றவர்ஷம் லார்ட் கிச்சனர் இறந்துபோன பிறகு யுத்த மந்த்ரியானார்.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜுக்கு ஏழை ஜனங்களிடம் ரொம்ப அபிமானம் உண்டு. அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக இன்ஷுரன்ஸ் ஆக்ட், கிழவர்களின் பென்ஷன் ஆக்ட் முதலிய சட்டங்களை ஏற்படுத்தினார்.

---

**பரோடாவில் கோவாபரேஷன்.**— பரோடாவில் சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் 307 கோவாபரேடிவ் ஸங்கங்கள் இருந்தன. இவைகளிலிருந்த மெம்பர்களின் தொகை 9267. அதற்கு முந்தின வர்ஷம் 7749-மெம்பர்கள் இருந்தார்கள். நடைமுதல் பணம் 1914-15-ம் வர்ஷத்தில் 8,00,280-ரூபாயாகும். ரிஸர்வ் பண்ட் 69,585,-ரூபாய். அந்த வர்ஷம் ஸங்கங்களுக்குக் கிடைத்த லாபம் 35221 ரூ. ஸங்கங்களில் போடப்பட்டிருந்த டெபாஸிட்டுகள் அந்த வர்ஷத்தில் ரொம்ப அதிகமாயின. வர்ஷ ஆரம்பத்தில் டெபாஸிட் தொகை 1,48,169 ரூபாயாகும். வர்ஷக் கடைசியில் 237827 ரூபாய். அந்த ஸமஸ்தானத்தில் 2 ஸெண்ட்ரல் பாங்கிகளும், 2 பாங்கிங் யூனியன்களும், 286 விவஸாயிகளுக்கான ஸங்கங்களும், 18 மற்ற ஸங்கங்களும் இருந்தன.

# THE RATIONALE OF PRUNING.

## பழமரங்களில் கிளை முதலியவைகளை நறுக்கிவிடுதல்.

பழமரங்களும், பழச் செடிகளும் வைத்துப் பயிரிடுவோர், அந்த மரங்களும் செடிகளும் நன்றாய் வளர்ந்து அதிக பலன் கொடுக்கும்படி செய்ய, அவைகளிலுள்ள அதிகப்படியான கிளைகளையும் வேர்களையும் தக்கபடி நறுக்கிவிடவேண்டியது அவச்யமாகும். இப்படி நறுக்குவதற்கு கபாத்துசெய்வது என்று பெயர்.

மனிதர்களுக்கு ஏதாவது ஒரு இந்த்ரியம் குறைவாயிருந்தால் மற்ற இந்த்ரியங்களில் ஒன்றோ பலவோ ரொம்ப தீக்ஷண்யமாயிருப்பதுண்டு. அதுபோலவே மரங்களிலும், ஏதாவது ஒரு கிளையை நறுக்கிவிட்டால், அதுவரையில் அது அடைந்துவந்த உணவானது மற்ற கிளைகளுக்குப் போய் அவைகளைச் செழித்து வளரச் செய்யும். முக்யமாய் செடியுணவானது வெட்டப்பட்ட கிளைக்குப் பக்கத்திலுள்ள கிளைகளுக்குத்தான் அதிகமாய்ப் போகும். மேலும் மரங்களில் உள்ள காய்ந்த கிளைகளையும், உபயோகமற்ற கிளைகளையும் வெட்டிவிடுவதால், கிளைகளின் அடர்த்தி குறைந்து போகிறது. இதனால் கிளைகளுக்குள் அதிக காற்றோட்டமும் வெளிச்சமும் உண்டாகின்றன. கிளைகளிலுள்ள தழைகள் ஆகாயத்திலிருந்து அதிகமாக கரியமிலவாயுவாகிய உணவை க்ரகிக்கின்றன.

ஒரு செடியிலிருந்து அதன் கிளைகளையோ, புஷ்பங்களையோ, காய்களையோ, இலைகளையோ, ஏதோ ஒரு பாகத்தை நறுக்கி எடுத்துவிட்டால் கூடிய சீக்ரத்திலோ, சற்று காலங்கழித்தோ செடியில் விசேஷ வளர்ச்சி ஏற்படும். ஒரு இச்சிலிமரத்தில் காய்த்த காய்களையெல்லாம், அவைகள் சிறியனவாயிருக்கும்போதே பறித்துவிட்டால், கொஞ்சகாலங் கழித்து அந்த மரம் மறுபடியும் புஷ்பித்துக் காய்க்குமாம். ஸாதாரணமாய் எல்லா மரங்களிலும் பழங்கள் கிடைப்பதற்குக் கொஞ்சகாலத்துக்கு பிறகு இந்த மரத்தில் பழங்கள் கிடைக்கும். பிஞ்சுகள் பறிக்கப்பட்ட மரத்தில் பழங்கள் கிடைக்கும்போது, கடைகளில் பழங்கள் அபூர்வமாயிருக்குமாதலால், இந்த மரத்தில் கிடைத்தபழங்களை அதிக விலைக்கு விற்று அதிகலாபம் அடையலாம். இவ்விதம் செய்வது ஸாத்யமென்று இதுவிஷயமாய் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளால் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. பழமரங்களிலிருந்து சிறுகாய்களையெல்லாவற்றையும் பறித்துவிடுவதனாலும், காய்கள் உள்ள கிளைகளை வெட்டிவிடுவதாலும், அந்தமரங்கள் பலன்கொடுக்கும் காலத்தை நமதிஷ்டம்போல் மாற்றிவிடலாம்.

கிளைகளை வெட்டிவிடுவதில் சில விஷயங்களை கவனிக்கவேண்டிய தவச்யம். சரியான வளர்ச்சியில்லாதனவும், இளம்பட்டையில்லாத அல்லது குறைவாக உள்ளவுமான கிளைகளை நறுக்கிவிடவேண்டும். சிறு கிளைகளை வெட்டும்போது நுனியில் வெட்டுவதால் தழையும் கிளையும் அதிகமாக வளருமாதலால், கிளைகளை நுனியோரமாக வெட்டாமல் சற்று அடியில் தள்ளி வெட்டிவிடவேண்டும். இதனால் புஷ்பங்கள் அதிகமாக உண்டாகக்கூடும். மரங்கள் பரந்து வளருவதற்கு அவச்யமாயிராத சிறு கிளைகளை வெட்டிவிடவேண்டும். இன்னும் பெருங் கிளைகளின் நுனியில்தான் அதிக வளர்ச்சி ஏற்படவேண்டுமாதலால் பெருங் கிளைகளின் அடிப்பாகத்தில் வளரும் சிறு கிளைகளை வெட்டிவிடவேண்டும். பெருங்கிளைகளின் அடியில் உண்டாகும் சிறு கிளைகள் சோற்றுக்குக் கேடாய் வளர்ந்து, யாதொரு பயனும் தரமாட்டா. இவைகள் புஷ்பங்களும் காய்களும் வளருவதற்கு வேண்டிய உணவை அபகரித்துக்கொள்ளுகின்றன.



பெருங் கிளைகளின் நுனியில் வளர்ச்சி அதிகமானால் புஷ்பங்கள் அதிகமாக விடும்.

கிளையை நறுக்கும்போது அதில் உள்ள பட்டை கிழிந்துபோகாதபடி சரியாய் வெட்டி, வெட்டின பாகத்தின் மேல் தாராவது பசுஞ்சாணத்தையும் களிமண்ணையும் கலந்து அதையாவது பூசவேண்டும்.

மரங்கள் சில மாலங்கள் சுறுசுறுப்பாய் பூமியிலிருந்து உணவைக் க்ரகித்து நன்றாய் வளரும். சில மாலங்களில் வளராமல் இருக்கும். வளர்ச்சி குறைவானகாலத்தில் தான் கிளை முதலியவைகளை நறுக்கிவிடவேண்டும். வளர்ச்சி பதிகமான காலங்களில் கிளைகளை நறுக்கினால், பால் ரூபமாய் மரத்தின் அங்கங்கள் முழுவதும் வ்யாபித்து ஓடும் செடியுணவானது வெட்டினபாகத்தில் ஏராளமாக வெளிவரும். இது மரத்துக்குக் கெடுதலாகும். மரங்களின் உள்பாகத்தில் செடி உணவு ஓடிக்கொண்டிருக்கும் காலமானது மரத்துக்கு மரம் வித்யாஸப்படும். மரத்தில் ஒரு சிறிய வெட்டு வெட்டிப்பார்த்தால், உணவு ஸாரம் அதிகமாகக் கசியுமா, கசியாதா என்பதை அறிந்துகொள்ளலாம். அதிகமாகப் பால்வடியாத காலங்களில் கிளை முதலியவைகளை நறுக்கிவிடுவது நல்லது.

நமது ராஜதானியில் அநேக தோட்டக்காரர்களுக்கு கபாத்து செய்வதின் தத்வம் சரியாய்த் தெரியாது. சிலர் காய்ந்தகிளைகளைக்கூட வெட்டக்கூடாதென்று அபிப்ராயங்கொண்டிருக்கிறார்கள்.

சில மரங்களுக்கு வேர்களை வெட்டிவிடுவது அவச்யமாகும். வேர்களை வெட்டும்போது, அடிமரத்துக்கு இரண்டொரு அடி தூரத்தில் உள்ள வேர்களில் சல்லிவேர்களாயுள்ளவற்றை மாத்ரம் வெட்டிவிடவேண்டும். பெரிய கெட்டி வேர்களை வெட்டிவிடக்கூடாது. சில மரங்களுக்கு வேர்கள் கிளைகள் ஆகிய இரண்டையும் வெட்டிவிடவேண்டியது அவச்யமாயிருக்கும்.

மரங்களை ஏராளமாய்க் காய்க்கவிட்டால், அவைகளின் வீர்யம் குறைந்து, அவைகள் சீக்ரம் பட்டுப்போகின்றன. அல்லது சிலகாலத்துக்குப் பிறகு சரியாய்க் காய்க்காமல் போகின்றன. அவைகள் க்ரமமாய் வெகுகாலம் காய்த்துவரவேண்டுமானால், க்ரமமாய் கிளைகளை வெட்டிவிடவேண்டியது அவச்யமாகும். இதனால் அவைகளின் வீர்யம் ரொம்ப குறைந்துபோகாமல் வெகுகாலம் பலன்கொடுத்துவரும். சில மரங்கள் அதிக பலன்கொடுத்தபோதிலும், பழங்கள் அல்லது காய்கள் ரொம்ப சிறியவையாய் போகின்றன. சிறிய பழங்களுக்கு அதிக விலை கிடைப்பது அரிது. சிறியபழங்கள் அதிகமாய் காய்க்கும் மரங்களில் புஷ்பங்களில் பெரும்பாகத்தை கிள்ளி யெறிந்துவிட்டால், பாக்கிப் புஷ்பங்களில் பெரிய காய்களும் பழங்களும் உண்டாகி உயர்ந்த விலைக்கு விற்கும்.

---

**கலப்பில்லாத இரும்பு.**—வேறு ஒரு மூலப்பொருள்களுடனும் கலவாமல் சுத்தமாயிருக்கும் இரும்பு இதுவரையில் எங்கும் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட சுத்தமாயிருக்கும் இரும்பு ஸ்வல்ப அளவில் க்ரீன்லண்டில் கிடைத்துவருகிறது. ரஸாயன சாஸ்த்ரிகள் தங்களுடைய ஆராய்ச்சி சாலைகளில் சுத்தமான இரும்பு தயாரிக்க முயன்றும் அப்படிப்பட்ட இரும்பு கிடைப்பது அரிதாயிருக்கிறதாம். பதினாயிரத்தில் 9997 பங்கு சுத்தமான இரும்பு ஸமீபத்தில் ஒரு ரஸாயன சாஸ்த்ரியால் தயார்செய்யப்பட்டதாம். அதில் ப்ராணவாயு கலந்திருக்கிறதென்று அவர் தெரிவித்திருக்கிறார். முற்றிலும் ஸ்வயமான இரும்பு அகப்படாததால், அதன் வாஸ்தவமான லக்ஷணம் இன்னதென்று அறிவது முடியாத கார்யமாயிருக்கிறது.

**ஈக்களும் நீலநிறக் கண்ணாடிகளும்.**—ஈக்கள் பச்சை, மஞ்சள், ஆரஞ்ச் ஆகிய இந்த வர்ணமுள்ள பொருள்களின் மேல்தான் உட்காரும். மற்ற வர்ணங்களண்டை, முக்யமாய் நீலநிறத்தண்டை, போவதில்லையாம். ஆஸ்பத்ரிகளில் உபயோகிக்கும் கண்ணாடிகள் நீலநிறமுள்ளனவாக இருந்தால் ஈக்களின்தொந்தரவு இருக்காது. ஹோட்டல்களிலும், கடைகளிலும் தின்பண்டங்களை நீலநிறக் கண்ணாடிகளுள்ள பெட்டியில் வைப்பது நல்லது.

## POLITICAL NEEDS OF INDIA.

## ராஜாங்க விஷயமாய் இந்தியாவுக்கு வேண்டி யிருப்பவைகள்.

சென்ற மாஸம் 26-ந்தேதி யன்று 31-வது இந்தியன் நாஷனல் காங்கரெஸ் லக்னௌவில் கூடியபோது, பாபு அம்பிகா சரண மஜூம்தார் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டு இந்தியாவுக்கு ஸ்வய ஆட்சி கிடைப்பது விஷயமாக பெரிய ப்ரஸங்கம் செய்தார். அதில் அவர் இந்தியாவின் ஆட்சி முறையில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி, அக்குறைகளை நிவர்த்திக்க ஸ்வய ஆட்சி ஏற்படுத்துவதே தக்க பரிகாரமென்றும், இந்தியர்கள் ஸ்வய ஆட்சிக்கு லாயக்கில்லையென்று சிலர் வாதிப்பது இன்னின்ன காரணங்களால் சரியல்ல வென்றும் எடுத்துச் சொல்லி விட்டு, ராஜாங்க அமைப்பில் இன்னின்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்தார். அந்தச் சீர்திருத்தங்களாவன:—

(1) இந்தியாவானது இனிமேல் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் ஒரு சார்புநாடாக இருக்கக்கூடாது. ஒரு ஸ்வய ஆட்சியுள்ள நாடாக அதன் அந்தஸ்தை உயர்த்தவேண்டும். ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் உள்ள மற்ற ஸ்வயேச்சையான பிரிவுகளுக்கு என்னென்ன பாத்யதைகளும் பொறுப்புகளும் உண்டோ, அவைகள் எல்லாம் இந்தியாவுக்கும் இருக்கவேண்டும். இந்தியாவானது ஏகாதிபத்யத்தில மற்ற பாகங்களைப்போல் சரிஸமத்வமான உரிமைகளுள்ள பாகஸ்தரைப் போலிருக்கவேண்டும்.

(2) தற்போது நடக்கும் யுத்தத்துக்குப் பிறகு ஏகாதிபத்ய ஸம்பந்தங்களில் என்ன மாறுபாடுகள் செய்வதா யிருந்தாலும், அதைப் பற்றி கவனிக்கும் ஸபையில் இந்தியாவின் பாத்யதைகளை வற்புறுத்த போதுமான அளவு ப்ரதிநிதிகள் இருக்கவேண்டும்.

(3) இந்தியாவினுடைய ஆட்சியானது இந்தியா கவர்ன்மெண்டால் நடத்தப்பட வேண்டுமேயொழிய, இந்தியா மந்த்ரியால் நடத்தப்படக்கூடாது. இந்தியா மந்த்ரி ஸபையை ஒழித்துவிடவேண்டும். இல்லாவிட்டால், அந்த ஸபையில் அதிகமாக இந்தியர்கள் மெம்பர்களாக இருக்கும்படி அதன் அமைப்பை மாற்றவேண்டும். இந்தியா மந்த்ரியின் கீழுள்ள இரண்டு உதவி ஸெக்ரெடரிகளுள் ஒருவர் இந்தியராக இருக்கவேண்டும். இந்தியா மந்த்ரியின் சம்பளத்தை ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரே கொடுத்து வரவேண்டும். குடியேற்ற நாடுகளினுடைய கவர்ன்மெண்டுகளின்மேல் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்த்ரிக்கு எவ்வளவு அதிகாரமுண்டோ, அதைவிட அதிகமான அதிகாரம் இந்தியாமந்த்ரிக்கு இந்தியாவின் ஆட்சியின்மேல் இருக்கக்கூடாது. வரவு, செலவு, சட்டநிரூபணம், நிர்வாகம் ஆகிய இவ்விஷயங்களில் இந்தியாவுக்குப் பூரா ஸ்வய ஆட்சி யிருக்கவேண்டும்.

(4) எவ்வித சீர்திருத்தமும் நன்றாய் நிறைவேற வேண்டுமானால் அதற்கு இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பை சரியானபடி சீர்திருத்தி அமைக்கவேண்டியது அவச்யமாகும். இது விஷயமாய் செய்யவேண்டியவைகளாவன. பற்பல இலாகாக்களில் வேலை பார்க்கும் உத்யோகஸ்தர்கள் கவர்ன்மெண்ட் நிர்வாக ஸபைகளில் மெம்பர்களாக இருக்கக்கூடாது. எந்த இலாகா உத்யோகஸ்தராவது ரொம்ப அறிவாளியாகவும் அனுபோகசாலியாகவும் இருந்தால், அவரை அந்தந்த இலாகாவில் செய்யவேண்டிய வேலைகளுக்கு யோசனை கேட்கலாமேயொழிய, அவரை மாகாண கவர்ன்மெண்டுகளின் நிர்வாக ஸபையிலாவது, இந்தியா கவர்ன்மெண்டின் மந்த்ரி ஸபையிலாவது மெம்பராகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.



(5) இந்தியாவின் அரசாட்சி நிர்வாகமானது ஒரு கவர்னர் ஜெனரல், சில மந்த்ரிகள் ஆகிய இவர்கள் வசமிருக்கவேண்டும். இந்த மந்த்ரிகளில் குறைந்தது பாதிப்பேர்களாவது ஸுப்ரீம் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட உத்யோகஸ்தர்களல்லாத இந்திய மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்கவேண்டும். இவர்கள் 5-வர்ஷம் மந்த்ரி வேலை பார்க்கவேண்டும்.

(6) வைஸ்ராயின் சட்டஸபையில் குறைந்தது 150-மெம்பர்கள் இருக்கவேண்டும். இவர்கள் எல்லாரும் தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகளாக இருக்கவேண்டும். ஆனால் ஸ்வயஆட்சி நிலைவரமாய் ஏற்படும்வரையில் மொத்தத்தில் ஐந்தில் ஒருபாகம் மெம்பர்களை மந்த்ராலோசனை ஸபையார் நியமனம் செய்யலாம். ஆனால் நியமனம் செய்யப்பட்டவர்களில் கால்வாசிக்கு மேல் உத்யோகஸ்தர்கள் இருக்கக்கூடாது.

(7) வரவு செலவு திட்டத்தில் ராணுவச் செலவு திட்டத்தைத்தவிர மற்றவைகளை யெல்லாம் சட்டஸபையார் அங்கீகரித்தால்தான் கவர்ன்மெண்டார் திட்டப்படிச் செலவுசெய்யலாம்.

(8) மாகாண கவர்ன்மெண்டுகள் அந்தந்த மாகாணங்கள் ஸம்பந்தப்பட்ட விஷயங்களில் முற்றிலும் ஸ்வயஆட்சிஉள்ளவைகளாக இருக்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாகத்துக்காக ஒரு குறிப்பிட்ட தொகை அவைகள் கொடுத்துவரவேண்டும். மற்றபடி அவைகள் தங்கள் வரும்படியைத்தாங்களே அனுபவித்து, அபிவ்ருத்தியடையலாம்.

(9) மாகாணங்களின் ஆட்சியானது மந்த்ராலோசனை ஸபையுள்ள ஒரு கவர்னர் வசமிருக்கவேண்டும், அந்த ஸபையில் குறைந்தது பாதிப்பேர்கள் இந்தியர்களாக இருக்கவேண்டும். அவர்கள் மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலுள்ள உத்யோகஸ்தர்களல்லாத தெரிந்தெடுக்கப்பட்ட இந்திய மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும்.

(10) பெரிய மாகாணங்களிலுள்ள லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் 100-மெம்பர்கள் இருக்கவேண்டும். சிறிய மாகாணங்களில் 75-மெம்பர்கள் இருக்கவேண்டும். இந்த மெம்பர்களெல்லாம் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் குறைந்தது ஒரு ப்ரதிநிதியாவது இருக்கவேண்டும். ஸ்வய ஆட்சி நிலைபெறும் சிலகாலம்வரையில் இம்பிரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களுக்குச் சொன்னது போலவே, மாகாணகௌன்ஸில்களிலும் நிபந்தனைகள் ஏற்படுத்தலாம்.

(11) நீதிநிர்வாக அதிகாரங்களை முற்றிலும் பிரித்துவிடவேண்டும். ஸிவிலாகட்டும், க்ரிமினலாகட்டும், எல்லா நீதி வியவஹாரங்களையும் ஹைகோர்ட்டுகள் வசமொப்புவிக்கவேண்டும். இந்த இலாகாவிலுள்ளவர்களை மேற்பார்வைசெய்வது, அவர்களுக்கு சம்பளம், சம்பள உயர்வு முதலியவைகள் ஏற்படுத்துவது முதலிய விஷயங்களை ஹைகோர்ட்டாரே கவனித்துவரவேண்டும். ஹைகோர்ட்டுகள் ஸுப்ரீம் கவர்ன்மெண்டுக்கு மாத்ரந்தான் கீழ்ப்பட்டிருக்கவேண்டும்.

(12) ஆயுதச்சட்டத்தை ரத்துசெய்துவிடவேண்டும். இல்லாவிட்டால், ஐரோப்பியர்கள், யூரேஷ்யர்கள் ஆகிய இவர்களுக்கு என்ன ஸௌகர்யங்கள் கொடுக்கப்படுகின்றனவோ, அவைகளெல்லாம் இந்தியர்களுக்கும் கிடைக்கும்படி அச்சட்டத்தை மாற்றவேண்டும். அச்சுச்சட்டத்தையும், இன்னும்உள்ள ஜனங்களுக்கு ஹிம்ஸை செய்யக்கூடிய சட்டங்களையும் ரத்துசெய்துவிடவேண்டும்.

(13) இந்தியாவுக்கு ஒருதேசிய வாலண்டியர் படை இருக்கவேண்டும். இதில் எல்லாவருப்பினரும் சேர்ந்துகொள்ளலாமென்று ஏற்படுத்த

வேண்டும். இதற்கு ஏதாவது ந்யாயமான நிபந்தனைகள் ஏற்படுத்திக்கொள்ளலாம். ராணுவத்தில் கமிஷன்ட் உத்யோகமென்னும் உயர்ந்த உத்யோகப்பதவிகளை இந்தியர்களுக்கும் கொடுக்கவேண்டும்.

(14) தேசமெங்கும் பூரா ஸ்தலஸ்வய ஆட்சி கொடுக்கவேண்டும். ராஜதானி நகரங்களின் முனிஸிபல் கார்ப்பரேஷன், ஜில்லாபோர்டுகள், தாலூகாபோர்டுகள், முனிஸிபாலிடிகள், ஆகிய இவைகளை ஸ்வய ஆட்சியுள்ளவைகளாக ஏற்படுத்தவேண்டும். அவைகளுக்கு தெரிந்தெடுக்கப்பட்ட சேர்மன்கள் இருக்கும்படிக்கும், அவைகளில் உள்ளமெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கும்படிக்கும் செய்யவேண்டும். அவைகளை உத்யோகஸ்தர்கள் மேற்பார்வை செய்யக்கூடாது.

(15) ஜனங்களுக்கு இலவசமாகவும் கட்டாயப்படுத்தியும் கல்விகற்பிக்கவேண்டும். தேசத்துக் கைத்தொழில்களை அபிவ்ருத்திசெய்து ஆதரிக்க தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

---

## SLATES VERSUS NOTE BOOKS.

BY K. T. SUNDARARAJA ACHARIAR, B.A., L.T.

## ஸ்லேட்களும் நோட் புஸ்தகங்களும்.

ஸுமார் பத்து வருஷங்களுக்குமுன் பள்ளிக்கூடத்திற்கு போகும் பிள்ளைகள் புஸ்தகங்களையும், ஸ்லேட்களையும் எடுத்துக்கொண்டு போவார்கள். ஒருபையன்கூட பள்ளிக்கூடத்திற்கு ஸ்லேட் இல்லாமல் போகமாட்டான். இப்பொழுது ஸ்லேட் என்கிற வஸ்துவே இருக்கிறதோ, இல்லையோ என்று சொல்லும்படியாய் ஆகிவிட்டது. பள்ளிக்கூடத்திற்கு போகும் பிள்ளைகள் ஒருவரும் அநேகமாய் ஸ்லேட் கொண்டுபோவதே கிடையாது. ஸ்லேட்களுக்கு பதில் ஸுமார் ஏழு அல்லது எட்டு பைண்ட் நோட் புஸ்தகங்களை கொண்டுபோகிறார்கள். இப்படி ஸ்லேட்டுக்கு பதில் நோட் புஸ்தகங்கள் வைத்திருப்பது நல்லது என்று சொல்லுபவர்களும் அநேகம்பேர் உண்டு; அப்படியில்லாமல் ஸ்லேட் உபயோகிப்பதே ரொம்பவும் நல்லது, அவைகளுக்கு பதில் நோட் புஸ்தகங்களை உபயோகிப்பது முற்றிலும் பிசகு என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். இந்த இரண்டு விதத்தில் ஒன்றிலும் சேராமல், கொஞ்சகாலம் வரையில் ஸ்லேட்களை உபயோகிக்கலாமென்றும், பிற்பாடு நோட்புஸ்தகங்களை உபயோகிக்கலாமென்றும், இப்படி செய்வதே பிள்ளைகளுடைய அபிவ்ருத்திக்கு ஏற்றது என்றும் சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். இப்பொழுது எது படிப்பிற்கு மிகவும் ஸாதகமானது என்பதைக் குறித்து விசாரிப்போம்.

பிள்ளைகள் இளமைப் பர்வத்தில் படிக்கும் காலத்தில் ஸ்லேட்களை உபயோகித்தால், எழுத்துகளை தகுந்தபடி பெரியதாயும், சரியான வடிவத்துடன் கூடினதாயும், எழுதமுடியாது. அப்படி எழுத முடியாததினால் பிள்ளைகளுக்கு எழுத்துக்களில் சரியான வடிவம் தெரியாமல் போகிறதென்றும், கீழ் வகுப்புகளில் ஸ்லேட்களை உபயோகிக்கக் கூடாதென்றும் சொல்லுகிறார்கள். இந்தக் காரணத்தைப்பற்றியே சிறு பையன்களுக்கு எழுத்துக் கற்பிப்பதற்கு தகுந்த எழுத்துக்களுடன் கூடின படங்களை (Alphabet charts) உபயோகிக்கிறார்கள். அவர்கள் கையில் புஸ்தகங்களையே கொடுக்கக் கூடாது. அவர்கள் முதல் முதலில் படிக்கும் புஸ்தகங்களும் தகுந்தபடி பருமனான அக்ஷரங்களுடன் கூடினதாயும் இருக்கவேண்டும். பல பள்ளிக்கூடங்களில் பையன்களுக்கு



எழுதக் கற்றுக்கொடுக்க வகுப்புகளில் அரையில் சுவர்களிலேயே வர்ணம் பூசி கருப்புப் பலகைகளாக (Black Board) செய்து அவைகளில் சாக் கட்டிகளைக்கொண்டு, பிள்ளைகளை எழுதச்சொல்லுகிறார்கள். அவர்களுக்கு அப்படி எழுத்துக்களை நன்றாய் எழுதத்தெரிந்த பிற்பாடு, பெரிய கடிதங்களில் சாக்கு (Chalk Piece) கட்டிகளைக்கொண்டு முன்னிலும் சிறியதான அக்ஷரங்களை எழுதும்படி செய்கிறார்கள். பள்ளிக்கூடத்திலுண்டான ஸௌகர்யங்கள் வீடுகளில் கிடையாவாதலால், வீட்டுவேலைகளை (Home work) கீழ்வகுப்புப் பிள்ளைகளைக்கொண்டு ஸ்லேட்களிலாவது நோட் புஸ்தகங்களிலாவது செய்துகொண்டுவரும்படி சொல்வது முற்றிலும்பிசகு. முன்சொன்ன காரணங்களைக்கொண்டு இரண்டாவது வகுப்பு முடிய ஸ்லேட்டுகளும் கூடாது; நோட்டுபுஸ்தகங்களும் கூடாது என்று ஏற்படுகிறது. இந்த வகுப்புமுடிய பாடங்களை வாய்ப்பாடமாகவும், பார்த்துபார்த்து அறியும்படியாயும் உபாத்யாயர்கள் கற்பிப்பதே நலம்.

சிலவருஷங்களுக்கு முன் படிப்புச் சொல்லிக்கொடுத்த முறைக்கும் தற்காலம் படிப்புக் கற்றுக்கொடுக்கும் முறைக்கும் ரொம்பவும் வித்யாஸமுண்டு என்பது எல்லாருக்கும் நன்றாய் தெரியும். முன்காலத்தில் உபாத்யாயர்கள் அவர்களால் ஆனமட்டிலும் ச்ரமப்பட்டு பாடப்புஸ்தகங்களிலிருந்து (Text-Books) கொஞ்சங்கூட விலகாமல் அவைகளிலிருப்பதை அப்படியே சொல்லிக்கொடுப்பதுவழக்கம். பையன்கள் உபாத்யாயர்களிடம் ஒருவிதமான கேள்வியும் கேட்கமாட்டார்கள். சொல்லிக்கொடுத்ததை மனப்பாடம் பண்ணிவந்தார்கள். மேலும் ஒவ்வொரு புஸ்தகத்திற்கும் அர்த்த புஸ்தகங்களையும் (Annotations) விஷயங்களை சுருக்கமாய்ப்போட்ட புஸ்தகங்களையும் (Compendiums-Made easies) பையன்கள் வாங்கி வாசிப்பது வழக்கம். இப்படி வாசிப்பது முற்றிலும் பிசகு என்பது தற்காலத்திய அபிப்ராயம். தற்காலம் ரொம்பவும் குற்றங்களுடன்கூடின பழயகாலமுமல்ல மிகவும் நல்லமுறைகளுடன் கூடின காலமுமல்ல. மத்யகாலம். பழைய முறைகளின் கெடுதல்கள் முழுமையும் போய்விடவுமில்லை, புதிய முறையின் நல்ல குணங்கள் அவ்வளவும் அங்கீகரிக்கப்படவுமில்லை. வகுப்புகளுக்கு எல்லாவிஷயங்களிலும் பூர்த்தியான பாடப் புஸ்தகங்கள் தற்காலத்தில் கிடையா. அநேக புஸ்தகங்களிருப்பதினால் ஒவ்வொன்றில் ஒவ்வொருவிஷயம் நல்லதாயிருக்கிறது. எல்லாம் சேர்ந்த புஸ்தகங்கள் கிடையா. ஆகையினால் கீழ்வகுப்பு முதல் பாடங்களுக்கு நோட்ஸுகள் (Notes) அதாவது குறிப்புகள் கொடுக்கவேண்டியது அவச்யமாய் ஏற்படுகிறது. கிடைக்கக்கூடிய புஸ்தகங்களில் மிகவும் நல்ல புஸ்தகங்களை பாடப்புஸ்தகங்(Texts)களாக வைத்து அதைச் சரியானபடி நடத்தவேண்டியது. ரொம்பவும் அவச்யமாயிருந்தாலொழிய அதைவிட்டு விலகக்கூடாது. அதைச் சரியானபடி படித்து அறிவதற்கு எவ்வளவு குறிப்புகள் எழுதிக்கொள்ளக் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு மட்டிலும்தான் கொடுக்கவேண்டும். அப்படி அவச்யமாய் கொடுக்கவேண்டிய விஷயங்களை நோட்டுபுஸ்தகங்களில் எழுதிவைத்துக்கொண்டால்தான் பிற்பாடு வாசிப்பதற்கு ஸௌகர்யமாயிருக்கும். ஸ்லேட்களில் எழுதினால், உடனே அழிக்க வேண்டியிருக்கும். பிற்பாடு பார்த்துப்படிப்பதற்கு முடியாது. ஆனதினால் ஸ்லேட்களை உபயோகிப்பதைக்காட்டிலும் நோட்புஸ்தகங்களை உபயோகிப்பதே முற்றிலும் நல்ல ஏற்பாடாகத் தோன்றுகிறது. ஆனால் சில உபாத்யாயர்கள், புஸ்தகங்கள் ஒருபக்கம் இருக்க, அவைகளை சற்றேனும் கவனியாமல், புஸ்தகங்களில் இருக்கும் லைன்களைக்கூடச்சேர்த்து குறிப்புகள் கொடுப்பது வழக்கம். இப்படி செய்வது மிகவும்பிசகு.

இப்படிச் செய்வதினால் பிள்ளைகள் குறிப்புகளை வாசிப்பார்களே யொழிய பாடப்புஸ்தகங்களை வாசிக்கவேமாட்டார்கள். சரியானபடி வார்த்தைகளை எழுத்துக்கூட்டத் (Spelling) தெரியாமல், பரீக்ஷைக்கு எழுதும் ஸமயத்தில் அநேக பிழைகளுடன் எழுதுவார்கள். புஸ்தகத்தைப் படிப்பதற்காக, அதிலுள்ள விஷயத்தை குறிப்புகளாக எழுதிக்கொள்ளக் கொடுக்கக்கூடாது. குறிப்புகள் புஸ்தகத்திற்கு அநுகுணமேதவிர, புஸ்தகத்திற்கு பதில் ஆகமாட்டா என்பதையும், மிகவும்பிசகு இருந்தாலொழிய புஸ்தகங்களையே அநுஸரித்து கற்பிக்க வேண்டுமென்பதையும் உபாத்யாயர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் இப்பொழுது வழங்கிவரும் போதனா முறைகளில் பள்ளிக்கூடத்து தலைமை உபாத்யாயர்களுக்கு அதிகமான அதிகாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வகுப்புகளில் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டிய வேலைகள் அநேகமாய்க் கிடையா. அவர்கள் பள்ளிக்கூடத்தின் நன்மையும், பிள்ளைகளின் முன்னேற்றத்தையும் கருதி ஒவ்வொரு வகுப்புகளிலும் புகுந்து உபாத்யாயர்கள் எவ்வளவு மட்டிலும் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்க்கிறார்கள். அப்பொழுது பையன்களின் நோட் புஸ்தகங்களை வாங்கிப் பார்க்கிறார்கள். உபாத்யாயர்கள் சிலவிஷயங்களை கற்பிக்க விட்டுப்போயிருந்தால், அவைகளை பிள்ளைகளுக்கு கற்பிக்கும்படிக்கு சொல்லுவதற்கு நோட் புஸ்தகங்களே அநுகுணமா யிருக்கின்றன. இதே காரணத்தைக் குறித்து பையன்களுடைய தாய் தந்தைமார்களும் தங்கள் பையன்களுடைய அபிவ்ருத்தி எப்படியிருக்கிறதென்று தெரிந்துகொள்வதற்கும், எத்தனை கணக்கு சரியாய் செய்தார்கள் என்று அறியவும் காரணமா யிருக்கிறபடியால், நோட்புஸ்தகங்களே, ஸ்லேட்களைவிட மேலானவை என்று தோன்றுகிறது.

ஸ்லேட்களில் ஏதாவது எழுதினால், அடுத்த பாடம் எழுதமுடியாது. பரீக்ஷாகாலங்களில் எழுதினதை திரும்பவும் பார்க்க முடியாது. ஒருதடவை எழுதின ஸமாசாரம் அப்பொழுதே போய்விடும். இந்தக் குறைகளெல்லாமில்லாமலிருப்பது நோட் புஸ்தகங்களே.

மேலும் முன்காலத்து படிப்புமாதிரி இல்லாமல் கணக்கு முதலிய பாடங்களில் க்ராப்பும் (Graph), தேசசரித்ரம் முதலிய பாடங்களில் படம் வரையத்தகுந்த பக்கங்களும் ஸயன்ஸ் (Science) முதலிய பாடங்களில் ஒருபக்கம் படம்வரையவும் மற்றொரு பக்கத்தில் அதற்கு நேராக அதை இன்னதென்று விளக்கி எழுத கோடுபோட்ட பக்கங்களுமாய் நோட்டுப்புஸ்தகங்கள் வேண்டி யிருப்பதனால், ஸ்லேட்களை முற்றிலும் நிறுத்தி நோட் புஸ்தகங்களையே உபயோகிப்பது பையன்களின் நன்மைக்கு காரணமாகும். மேலும் பையன்கள் பாடங்களைப் படித்ததின் பிறகு, உலக வாழ்க்கையில் கடிதங்களையே உபயோகிக்க வேண்டியிருப்பதினால், பென்ஸில்களைக்கூட நிறுத்தி பேனாக்களை கீழ் வகுப்புகளிலிருந்தே உபயோகிப்பதுகூட நல்லதென்றும் தோன்றுகிறது.

இப்படி நோட் புஸ்தகங்களை உபயோகிப்பதற்கு தடையாயிருப்பது பணச்செலவு ஒன்றே. ஸுமார் நான்கு அணா கொடுத்து ஒரு ஸ்லேட் வாங்கினால் வெகுநாள் வரையில் அது அப்படியேயிருக்கும். ஆனால் நோட் புஸ்தகங்கள் உபயோகிப்பதானால், ஒவ்வொரு வகுப்பிலும் ஸுமார் இரண்டு ரூபாய் முதல் ஒரு வராகன்வரை செலவு செய்யவேண்டியதாய் ஏற்படுகிறது. ஆனால் முன்மாதிரி அர்த்தபுஸ்தகங்கள் வாங்கவேண்டியது கிடையாது. செலவு காரணத்தைக் கவனியாமல் பையன்களின் முன்னேற்றத்தைக் கருதவேண்டியதுதான் மிகவும் நல்லது என்பதை பெற்றோர்கள் நன்றாய் அறிந்து இப்படிக்கு ஏற்பட்ட செலவை செய்ய பின்வாங்கக்கூடாது.

கே. டி. ஸுந்தர ராஜாச்சாரியார்.



## REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### PARENTS AND THE CHILD.

### பெற்றோரும் பிள்ளையும்.

சிறுவர்களிடம் அன்பு முதலிய ஸத்குணங்கள் இயற்கையிலேயே அமைந்திருக்கின்றன. அவைகளைத் தக்க விதத்தில் ஓங்கி வளரும்படி செய்யவேண்டியது பெற்றோர்களுடைய கடமைகளாகும். அநேக பெற்றோர்களுக்கு பிள்ளைகளை சரிவர கவனித்து நல்லவழியில் நடத்தத் தெரியாமையால், சிறுவர்கள் பால்யத்திலேயே கெட்டகுணங்களை அடைந்து, பிற்காலத்தில் வாழ்க்கையில் கெட்டுப்போய்விடுகிறார்கள். ஸமீபத்தில் வெளிவந்த "நிகழ்கால சத்திய"மென்னும் பத்ரிகையில் சிறுவர்களின் குணங்களை யனுஸரித்து அவர்களை எவ்விதம் நல்வழியில் நடத்துவது என்பதைப் பற்றியும், அவர்களை எப்படி பெற்றோரிடம் அன்புள்ளவர்களா யிருக்கும்படி செய்வதென்பதைப்பற்றியும் ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

சிறுபிள்ளைகளுக்குத் தனித்திருப்பதில் ஸந்தோஷமே இராது. அவர்களுக்குக் கூட்டுறவு அதிக ப்ரியம். தங்கள் சுபாசுபங்களில் தங்கள் கூட்டாளிகளும் பங்கு பெறவேண்டுமென்பது அவர்கள் வாஞ்சை. அவர்களுக்கு ஒரு கார்யம் ஸந்தோஷத்தைக் கொடுக்கிறதானால், அது தங்கள் தாயாருக்கும் ஸந்தோஷமாயிருக்குமென்று நினைப்பார்கள். ஆகையால் எந்த ஸந்தோஷம் வந்தாலும், விஸனம் வந்தாலும், தாயாரிடம் சொல்ல ஓடுவது அவர்களது இயல்பு. அவ்விஷயங்கள் தாயாருக்கு மிக அற்பமானவைகளா யிருந்தாலும், பிள்ளைகளுக்கு அவை மகா விசேஷமானவையாகத் தோன்றும். ஆகையால் பிள்ளைகள் தங்களண்டை ஓடிவந்து சொல்லும் விஷயங்களைப்பற்றித் தாய்மார் அலக்ஷியமா யிருக்கக்கூடாது. அப்படிச்செய்வது பிள்ளைகளை விஸனப்படுத்தும். தாயார் பிள்ளைகளின் விஷயத்தில் அநுதாபப்படுவது பிள்ளைகளுக்கு ரொம்ப மதிப்பா யிருக்கும். அவர்களைத் தைரியப்படுத்தும் ஒருவார்த்தை சொன்னால், [illegible] ஏற்ற ஸமயத்தில் அவர்களைச் சற்[illegible]ல், அவர்களுக்கு வெகு உத்ஸாக[illegible]ாகும். [illegible]று முழுவதுங்கூட அவர்கள் அதனால் ஸந்தோ[illegible]யிருப்பார்கள்.

பிள்ளைகள் கூச்சல்போடுவதனால் அல்லது தங்களை அலட்டுவதினால் தாய்மார்கள் தொந்தரவு பொறுக்கக் கூடாமல் பிள்ளைகளைத் தாத்தியடிப்பது வழக்கம். அப்படிச் செய்யாமல், பிள்ளைகளின் சுறுசுறுப்பான கைகளும் மனமும் வேலைசெய்து கொண்டிருக்கும்படி அவர்களுக்கு ஒரு லேசான வேலையை அல்லது விளையாட்டைத் திட்டஞ்செய்யவேண்டும்.

பிள்ளைகளின் விஷயங்களில் நெருங்கியிருந்து அவர்களுடைய வேலைகளிலும் விளையாட்டுகளிலும் கூட இருந்து அவர்களை நடத்தினால், பிள்ளைகளுக்குத்தாயின் பேரில் அதிகப்பற்றுதலும் நம்பிக்கையுமுண்டாகும். தாயும் பிள்ளைகளின் துர்ப்பழக்கங்களைத் திருத்தி, அவர்களிடத்தில் ஸ்வயநயம் அல்லது கோபம் காணப்பட்டால் அதைத்தடுக்கலாம். தகுந்த ஸமயத்தில் தாயார் ஒரு எச்சரிப்பு வார்த்தை சொல்லுவது அல்லது கடிந்துகொள்ளுவதானது மகா ப்ரயோஜனமுள்ளதாயிருக்கும். தாய் தன் பொறுமையினாலும், பிள்ளைகளின் நடக்கையை அன்போடு கவனிப்பதனாலும், பிள்ளைகளின் மனதை சரியான பாதையில் நடத்தி அவர்களில் நற்குணங்களை அபிவ்ருத்தி செய்யலாம்.

எல்லாம் தங்கள் இஷ்டப்படி நடக்கவேண்டுமென்று பிள்ளைகள் விரும்புவார்கள். பெற்றோர் இதற்கு இடங்கொடாதபடி அவர்களை நடத்தவேண்டும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உத்ஸாகப்படுத்தவும் ஸந்தோஷப்படுத்தவும் அதிகமான நேரத்தையும் கவனத்தையும் செலவிடுகிறார்கள். பிள்ளைகள் தங்களையே ஸந்தோஷப்படுத்திக்கொள்வதற்கும் தங்கள் சொந்த விவேகத்தையும் ஸாமர்த்யத்தையும் அப்யாஸிப்பதற்கும் பழக்கவேண்டும். இப்படிச் செய்தால் இவர்கள் தங்கள் ஸ்வல்ப ஸந்தோஷங்களில் மனரம்யமாயிருக்கக் கற்றுக்கொள்வார்கள். அவர்கள் தங்களுக்குண்டாகும் சிறு சோதனைகளையும் கஷ்ட நஷ்டங்களையும் தைர்யத்தோடு ஸகிக்க போதிக்கப்படவேண்டும். அல்பஸ்வல்ப நோய்களையும் துன்பங்களையும் அதிகமாய் கவனிக்காதபடி அதிலிருந்து அவர்கள் மனதைத் திருப்பி அப்படிப்பட்டவைகளைப் பெரிது பண்ணாதபடி யிருக்கப் பழக்கவேண்டும். மற்றவர்களுக்கு ப்ரயோஜனமா யிருக்கும்படியான வழிவகைகளைத் தாய்மார் மூத்த

கற்றுக்கொண்டு, அவற்றைத் தங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளை அசட்டைசெய்யக்கூடாது. தாய்மார்களுக்கு அநேகவேலைகளும் கவலைகளும் இருப்பதனால், தங்கள் சிறுவர்களைப் படிப்பிக்கவும், அவர்களைப் பக்ஷமாய் நடத்தி அவர்களுக்கு அநுதாபம் காட்டவும், தங்களுக்கு நேரமில்லை யென்று நினைக்கிறார்கள். பிள்ளைகள் தங்கள் ஸந்தோஷத்தையும், தோழமையையும், அநுதாபத்தையும் தங்கள் சொந்த வீட்டிலும், தங்கள் பெற்றோரிடத்திலும் அடையக்கூடாவிட்டால், அவர்கள் வெளியிலே மற்றவர்களிடத்திலே அதைத் தேடுவார்கள். அதனால் அநேகமாய் அவர்கள் மனதும் நடத்தையும் கெட்டுப்போகக்கூடும்.

அநேகம் தாய்மார்கள் யோசனைக் குறைவினாலும், தங்களுக்கு நேரம் இல்லாமையினாலும், தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டிய சில குற்றமில்லாத ஸந்தோஷ கார்யங்களைக் கொடாதிருக்கிறார்கள். ஆனால் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் வீணாய் அலங்கரிப்பதில் கவனமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீண் அலங்கரிப்புகள் செய்து பிள்ளைகளை வளர்ப்பது மாயையையும் ஊதாரித்தனத்தையும் அதிகரிக்கச் செய்கிறதாயிருக்கிறது. பிள்ளைகள் வளர்ந்து 'ஸ்த்ரீ புருஷர்களாகும் காலத்தில், அவர்கள் வீண்டம்பமும் துர்நடத்தையமுள்ளவர்களாகிறார்கள்.

## தகப்பனுடைய கடமைகள்.

பிள்ளைகள் செய்யும் துஷ்டச் செய்கைகளைத் தடுப்பதில் தகப்பன் ஒருபோதும் அசதியாயிருக்கக்கூடாது. சிலர் பக்ஷத்தினால் பிள்ளைகளுக்கு அதிக இளக்காரம் கொடுத்து, அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யும்படிப் பார்ப்பதில் கண்டிப்பா யிருக்கிறதில்லை, இது உண்மையான அன்பு அல்ல.

தகப்பன் தன் வீட்டில் சுறுசுறுப்பு, நேர்மை, பொறுமை, தைர்யம், உண்மை, பரோபகாரம்முதலிய நல்லொழுக்கங்களை பலப்படுத்தவேண்டும். பிள்ளைகளிடத்தில் என்னென்ன நற்குணங்களையும், நன்னடக்கைகளையும் காணவிரும்புகிறோமோ, அவற்றை யெல்லாம் நாமே அப்யாஸிப்பதனால் நம்மிடத்திலிருந்து அவைகள் வெளிப்படவேண்டும்.

"தகப்பன்மாரே, உங்கள் பிள்ளைகளை அதைர்யப் படுத்தாதேயுங்கள். உங்கள் அதிகாரம் பக்ஷத்தோடும், உங்கள் பக்ஷம் திடமன்தோடும் சேர்ந்திருக்கக்கடவது. உங்களுக்கு ஒழிந்த நேரங்களில் ஒருபாகத்தை உங்கள் பிள்ளைகளுக் கென்று செலவிடுங்கள், அவர்களோடு பழகுங்கள்; அவர்கள் வேலையிலும் விளையாட்டிலும் ஸம்பந்தப்பட்டு நெருங்கியிருங்கள், அவர்களுடைய அன்பை வ்ருத்திசெய்யுங்கள். இவ்விதமாய்ச்செய்தால் உங்களால் வீட்டில் அதிக நன்மையுண்டாகும்."

தன் வீட்டை ஸந்தோஷமும் பாக்யமுமுள்ளதாக்குகிறதற்குத் தகப்பன் என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்யவேண்டும். தனக்கு எவ்வளவு கவலைகளும், வேலைத் தொந்தரவுகளும், இருந்தாலும், அவைகளை யெல்லாம் வீட்டில் காண்பித்துக் கொள்ளாமல், முகமலர்ச்சியோடும், அன்பான வார்த்தையோடும் விட்டில் நுழையவேண்டும்.

## LOANS IN CHANDRAGUPTA'S TIME.

### சந்த்ரகுப்தன்காலத்திய லேவாதேவி.

ஸுமார் 2200 வர்ஷங்களுக்குமுன் வடக்கேபாட்னாவில் அரசாட்சிபுரிந்துவந்த சந்த்ரகுப்தன் காலத்தில், பணம் கொடுக்கல் வாங்கல் விஷயமாய் ராஜாங்கத்தார் என்ன சட்டங்கள் ஏற்படுத்தி யிருந்தார்களென்பதைப் பற்றி ஒரு நிருபர் 'வைசியமித்திரனில்' ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அவர் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் கௌடில்லியர் என்று மறு பெயர் கொண்ட சாணக்யர் எழுதியிருக்கும் அர்த்த சாஸ்த்ரத்திலிருந்து எடுக்கப்பட்டவைகளாகும்.

முற்காலத்தில் கடன் கொடுப்பவர்களின் அக்ரமங்களை அடக்குவதற்காக வரையறையான வட்டிவிகிதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்த வட்டி விகிதம் ஜனங்களின் நன்மைக்கு விரோதமில்லாமல் கவர்ன்மெண்டாரால் குறிக்கப்பட்டிருந்தது. பணம் கொடுப்பவர் மாதம் 1-க்கு 100-க்கு $1\frac{1}{4}$ வீதம், அதாவது வருஷத்திற்கு நூற்றுக்கு 15 வீதம் வட்டி வாங்கவேண்டியதென்று அர்த்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பணம் வாங்குவோரின் செலவின் நிலைமையை உத்தேசித்தும் கடன் பணம் உபயோகப்படும் வழிகளை உத்தேசித்தும் வட்டி விகிதமானது கூட்டியும் குறைத்தும்ஏற்படுத்தப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. காட்டில் சென்று மரம் முதலான வ்யாபாரம் செய்பவர்கள் மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு 10 விகிதம் வட்டி செலுத்தவேண்டுமென்றும், ஸமுத்ர வ்யாபாரம் செய்பவர்கள் மாதம் 1-க்கு நூற்றுக்கு 20 விகிதம் வட்டி செலுத்தவேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது.



ஆனால் இந்த நிபந்தனைகளுக்கு அதிகமாகவட்டிக்குக் கடன் கொடுப்போரும், வாங்குவோரும், ஸாக்ஷிக்காரரும்,மத்யஸ்தரும் தண்டிக்கப்படுவார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வ்யாபாரக்கூட்டத்தாருக்கு வ்யாபாரத்தில் கிடைக்கும் லாபத்தில் பாதிக்கு மேற்படாமல் ஒரு வருஷத் தவணைக்கு கடன் கொடுக்கலாம். ஒரு வ்யாபாரத்துக்கு ஒருவன் கூட்டாளியாயிருந்து வெகு காலம் அவன் வ்யாபாரம் செய்வதற்கு உதவியாயில்லாமலோ அல்லது பைத்யம் முதலான ரோகங்களால் பீடிக்கப்பட்டோ இருப்பானாகில், அவனைக் கூட்டாளியின் நிலைமையிலிருந்து விடுதலை செய்வதோடு, அவனுக்கு அவன்போட்ட முதலுக்கு இரண்டுபங்கு கூட சேர்த்துக்கொடுக்கவேண்டுமாம். ஒருவனால் பொய்யாகத்தொகை வரவேண்டுமென்று வ்யாஜ்யம் செய்யப்படும் விஷயத்தில், அவனுக்கு அவன் வ்யாஜ்யமிட்டிருக்கும் தொகைக்கு 4-பங்கு கூடச்சேர்த்து அபராதமிடப்படும். கடன் கொடுத்தவனும் வாங்கினவனும் இரண்டுபேரும் பொய்சொல்லும் விஷயத்தில் தண்டனையானது 1-க்கு 3-என்று பிரித்துத் தண்டிக்கப்படும். சிலருக்கு மாத்ரம் வட்டி விகிதத்தில் ஒருவிதமான உதவி செய்யப்பட்டிருந்தது. 1. யாகம் முதலியவற்றிற்காகக் கடன்வாங்கியிருந்தாலும், 2. இறந்துபோனவன் விஷயத்திலும், 3. குருகுலவாஸம் செய்யும் வித்யார்த்திகள் விஷயத்திலும், 4. மைனர் விஷயத்திலும், 5. தரித்ரர்கள் விஷயத்திலும் வட்டிதள்ளி கொடுக்கப்படும். கடன்கொடுத்தவன் தவணையில்கொண்டு வரும் தொகைகளை வாங்காமல் காரணமின்றிக் காலதாமதப்படுத்தும் விஷயத்தில் 12-பணம் அபராதமிடப்படும். அப்படி ஒருவேளை அவன் வாங்கமாட்டேனென்றால், கடன்வாங்கினவன் மூன்றும் மனிதரிடத்தில் பணத்தை மத்யஸ்தம் கட்டிவிட்டால், அந்தத் தேதிமுதல் கடன் கொடுத்தவனுக்கு வட்டி கிடைக்கமாட்டாது. தவிரகடன் கொடுத்தவன் கடன் கொடுத்து 10-வருஷத்திற்குள்ளாகப் பணத்தை வாங்கிக்கொள்ளவேண்டும். தவறினால் லிமிடேஷன் தோஷத்திற்கு உள்ளாகிப் பணம் பெற்றுக்கொள்ள இடமில்லாமல் போய்விடும்." ஆனால் சிலருக்கு மாத்ரம் லிமிடேஷன் தோஷம் பாதிக்கமாட்டாது. அதாவது, 1. வ்ருத்தர்கள், 2. இறந்தவர்கள், 3. மைனர்கள், 4. கஷ்டகஷ்டப்பட்டவர்கள், 5. அயல் தேசத்தில் இருக்கப்பட்டவர்கள், 6. தேசத்தை முற்றிலும் இழந்தவர்கள், 7. ராஜீய ஸம்பந்தமாயும் மற்ற விஷயமாயும் தங்களுக்கு வரவேண்டிய தொகைகளை வஸூலிக்கக் கூடாமல் கவர்ன்மெண்டினால் தடுக்கப்பட்டவர்கள்—இவர்களை இந்த தோஷம் பாதிக்கமாட்டாது. கடன்வாங்கி இறந்துபோனவனின் குமாரன் அஸல்வட்டி உள்படப் பணத்தைச் செலுத்தவேண்டும். இறந்தவனுக்கு வார்ஸு இல்லாமல்போனால் அவன்சொத்தை அடைகிறவர்கள் அவன்பட்ட கடனைக் கொடுக்கவேண்டும். கூட்டுச்சேர்ந்து கடன்வாங்கியிருந்தால் இறந்தவன்போக இருக்கிறவன், கூட்டாளிகடனைச் செலுத்தவேண்டும். கடனுக்கு பந்தகமிருக்குமானால் அதன்மீது கடன்கொடுத்தவர் தொடரலாம். மைனரினால் கொடுக்கப்படும் ஜாமீன் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. ஜாமீன் தஸ்தாவேஜியில் காலமாவது இடமாவது குறிப்பிடாத விஷயத்தில் இறந்தவனால் கொடுக்கப்பட்ட ஜாமீனுக்கு அவன் சொத்தை அடையும் புத்ரன், பௌத்ரன் இவர்கள் அல்லதுவேறு பந்துக்களாயிருந்தாலும் சரி அவர்கள் உத்திரவாதியாவார்கள். இன்னும் இறந்தவனால் செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு உத்திரவாதத்திற்கும் அதாவது, 1. அவன் செய்யக் கடமைப்பட்ட வேலைகள்; 2. கல்யாணத்திற்காக கொடுத்த ஸ்ரீதனம்; 3. ஸ்தாவர சொத்தைப்பற்றிய பற்று வரவுகள் விஷயமாயும் உத்திரவாதியாவார்கள். ஒருவன் அநேகரிடம் கடன்வாங்கி யிருந்தால் ஒவ்வொருவராய் அவன்பேரில் வியாஜ்யமிடவேண்டியதே தவிர, பலர் சேர்ந்து பணம்வரவேண்டுமென்று வ்யாஜ்யம் செய்யக்கூடாது. தகப்பனுக்கும் பிள்ளைக்கும் ஏற்படும் கடனைப்பற்றியும், புருஷன் பெண்சாதிக்குள் ஏற்படும் கடனைப்பற்றியும், அவிபக்த குடும்ப ஸஹோதரர்களுக்குள் ஏற்படும் கடனைப்பற்றியும் வ்யாஜ்யம் கொண்டுவரக்கூடாது. விவஸாயிகளையும், ஸர்க்கார் வேலைக்காரர்களையும் கடனுக்காக அவர்கள் வேலைசெய்யும் நேரத்தில் பிடிக்கக்கூடாது.

## CULTIVATION OF THE MANGO.

### மா மரம் பயிரிடுதல்.

மாமரம் வைத்து பயிர் செய்வதைப்பற்றி 'கமத்தொழில் விளக்கம்' சில குறிப்புகள் எழுதியிருக்கிறது. இது பயிரிடுவதற்கேற்ற நிலம் காலை வெயில் நன்றாய்ப் படக்கூடியதாயிருக்கவேண்டும். கன்று நடுவதற்குமுன் அதைக் கொத்திவிட்டு, அதிலுள்ள களைகளையெல்லாம் எடுத்தெறியவேண்டும்.

கன்றுகளை ஒன்றுக்கொன்று எத்திசையிலும் 35-அல்லது 40-அடி தூரமிருக்கும்படி நடவேண்டும். இவ்வளவு இடைவெளியிருந்தால்தான், மரங்களுக்கு காற்றோட்டமும் ஸூர்ய வெளிச்சமும் போதுமான அளவு கிடைக்கும். கன்றுகளை நெருக்கமாய் நட்டால், அவை அதிகமாகக் கிளைகள் விடாமல், நெடுகவளரும். மழை காலத்தில் நிலம் ரொம்ப ஈரமாகவும், நிழல் உள்ளதாகவும் போய் மரத்தைக் கெடுக்கும் விஷப்பூச்சிகள் வளருவதற்கேற்ற இடமாகும்.

கன்றுகளுக்கு ஒழுங்காய் நீர்பாய்ச்சுதல் அவச்யம். ஆறு, குளம் முதலிய வஸதிகளில்லாவிட்டால், தோட்டத்திலாவது, அல்லது ஸமீபத்திலாவது கிணறுகள் வெட்டிக்கொள்ளவேண்டும்.

கன்றுகளை நட 3-அடி நீளம், 3-அடி அகலமுள்ள குழிகள் தோண்டி மண்ணை வெளியில் எடுத்துப் போட்டு, குழியிலும் மண்ணிலும் உள்ள புற்பூண்டுகளை அப்புறப்படுத்தவேண்டும். குழிவெட்டி மூன்று மாஸத்துக்குப்பின் மழைகாலத்தில் கன்றுகளை நடலாம். மழையில்லாவிட்டால், நிலம் குடிக்கத்தக்க அளவு ஜலம் பாய்ச்சவேண்டும். குழியிலிருந்து எடுத்துப்போட்ட மண்ணுடன் மட்கிய எருவையும் எலும்புத் தூளையும் கலந்து, அதைக் குழியில்போட்டு கன்றை நடவேண்டியிருக்குமளவு இடம் மாத்ரம் குழியாக விடவேண்டும். மாங்கன்று வைத்திருக்கும் சட்டி முதலியவைகளின் அடியை ஜாக்ரதையாய் உடைத்து, அவைகளைக் குழிக்குள் வைத்து மண்ணைத் தள்ளிவிடவேண்டும். கன்று ஒரு பக்கமாகச் சாய்ந்திராமல் நேராய் இருக்கவேண்டும். அதற்குவிடும் ஜலம் ஓடிப்போகாமலிருப்பதற்காக கன்றைச் சுற்றிலும் வரப்பு கட்டவேண்டும். காற்றினால் கன்று ஆடிவிழாமலிருப்பதற்காக அதற்குப் பக்கத்தில் ஓர் தடியை ஊன்றி கன்றை அதனுடன் கட்டிவிடுவது நல்லது. கன்று பெரியதாக ஆனபின் ஜலம் தங்குவதற்காகக் கட்டிய வரப்பைப் பெரியதாக்கி அதிக ஜலம் தங்கும்படி செய்யவேண்டும். கன்றை அதிக ஆழத்தில் நடக்கூடாது.

கன்றை நட்டு 5-வர்ஷமாவதற்குள் அதைக் காய்க்க விடக்கூடாது. காய்ப்பதற்குமுன் கன்று நன்றாய் உரத்துப் பெருத்திருக்கிறதோ என்று பார்க்கவேண்டும். ஒவ்வொரு வர்ஷமும் கன்றைச்சுற்றிலும் கொத்திவிட்டு மட்கிய எருவிடவேண்டும். 5-வர்ஷமான பிறகு பின்வரும் முறைப்படி வேர் களைதல்வேண்டும்.

மத்யானத்தில் மரத்தின் நிழல் எவ்வளவு விசாலத்துக்கு விழுகிறதோ அவ்வளவு விசாலத்துக்கு நிலத்தை வெட்டி மண்ணையள்ளியெடுத்து பிறகு மெல்லிய வேர்களையெல்லாம் நறுக்கிவிடவேண்டும். மூலவேரையும் பக்கத்துக்கோடும் பெரும் வேர்களையும் ஒன்றும் செய்யக்கூடாது. இப்படிச் செய்தபின் இரண்டு மூன்று தினங்களுக்கு வேர்கள் காயும்படி விடவேண்டும். அதன்பின் முன் வெட்டியெடுத்த மண்ணுடன் மட்கிய எருவைக் கலந்து நன்றாய்ச் சேர்த்தபின் மரத்தைச் சுற்றி கொட்டி நிறவிவிடவேண்டும். கோழிமலம், மனிதமலம், எலும்பு உரம் ஆகிய இவைகளைக் கலத்தல் மிகவும் நல்லது. மட்கின எரு போதிய அளவாய் மண்ணுடன் கலக்கப்படவேண்டும். வேரைக் கத்தரித்து இவ்வாறு எருவிட்டபின் தினம் ஒருமுறை நீர்ப்பாய்ச்சுதலவச்யம். மழைபெய்தால் நீர்ப்பாய்ச்சவேண்டியதில்லை.

மரங்களுக்கு நீர் பாய்ச்சாமலும் எருவிட்டுப் பண்படுத்தாமலும் இருந்தால், அவை ஒழுங்காய் பலன் கொடுக்கமாட்டா. பொதுவாய் மரங்கள் காயில்லாதிருக்கும் காலமாகிய புரட்டாசி முதல் மார்கழி முடிய நீர் பாய்ச்சுவது அவச்யமல்ல. இக்காலத்தில் நீர்பாய்ச்சினால் மரம் அதிகமாய் இலைவிடுமேயொழிய, அதிகமாய்ப் பூத்துக் காய்க்கமாட்டா. மரங்கள் பூத்துக் காய்க்கும் காலங்களில் வாரமொருமுறை நீர் பாய்ச்சவேண்டும். காய்கள் பழுக்கத் தொடங்கும்போது ஜலம் பாய்ச்சுவதை நிறுத்திவிடவேண்டும். இளங்கன்றுகளுக்கு கோடைகாலத்தில் வாரத்துக்குக் குறைந்தது இரண்டுதட்வை நீர்பாய்ச்சவேண்டும். ௦



# News and Notes.

# வர்த்தமானக் குறிப்புகள்.

**முப்பதாவது இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ்.**

இது டிஸம்பர்மீ 26-ந்தேதியன்று லக்னௌவில் கூடிற்று. ஆனரபிள் பண்டித ஜகத் நாராயணன் வரவேற்புக்கமிட்டியின் சேர்மனாக இருந்து யுத்தம், ஸ்வய ஆட்சி முதலியவைகளைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார். மிஸ்டர் அம்பிகா சரண மஜும்தார் ப்ரெஸிடெண்டாக இருந்து ஸ்வய ஆட்சியைப்பற்றி ஒரு பெரிய ப்ரஸங்கம் செய்தார். அதில் அவர், இப்போது நாம் உட்பட்டிருக்கும் கவர்ன்மெண்டின் குற்றங்குறைகளையும், அச்சுச்சட்டம், ஆயுதச்சட்டம், தேச பாதுகாப்புச்சட்டம், அதிகாரிகள் வர்ணவித்யாஸம் காட்டுதல், குடியேற்றம் இவைகளால் ஏற்படும் அஸௌகர்யங்களையும், கைத்தொழி லபிவ்ருத்தி, தேசிய ராணுவப்படை இவைகள் விஷயத்தில் கவர்ன்மெண்டார் ஊக்கமெடுத்துக் கொள்ளவேண்டியதின் அவச்யத்தையுமெடுத்துக்கூறி, எல்லாவிதக் குறைகளும் நீங்க ஸ்வயஆட்சி ஏற்படவேண்டு மென்றும் சொல்லி, ஸ்வயஆட்சி கொடுப்பது கூடாதென்பதற்குச் சிலர் சொல்லும் ஆக்ஷேபங்களுக்குத்தக்க ஸமாதானங்களை விவரித்துவிட்டு, ஸ்வய ஆட்சிபெறுவதற்கு ராஜாங்க அமைப்பில் இன்னின்ன மாறுபாடுகள் செய்யவேண்டுமென்பதை விவரித்தார். அவைகளை இந்த ஸஞ்சிகையில் வேறு பக்கங்களில் காணலாம். பின்வரும் விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அச்சுச்சட்டம், ஆயுதச்சட்டம் இவைகளை ரத்துசெய்யவேண்டும். இந்தியர்கள் ராணுவத்தில் வாலண்டியர்களாகச் சேர்ந்துகொள்ள அனுமதி கொடுக்கவேண்டும். அவர்களுக்கு ராணுவத்தில் உயர்ந்த பதவி கொடுக்கவேண்டும். கூடியசீக்ரத்தில் இந்தியாவுக்கு ஸ்வய ஆட்சி கொடுக்கவேண்டும். இன்னும், இந்தியர்கள் அயல்நாடுகளுக்கு குடியேறிப் போவது, இந்திய பாதுகாபபுச்சட்டம், கல்வி, பாட்னா யூனிவர்ஸிட்டி மசோதா முதலிய விஷயங்களைபபற்றியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**எல்லா இந்திய மதுவிலக்குக் கான்பரென்ஸ்.**

இது டிஸம்பர் மாஸம் 28-ந்தேதி லக்னௌவில் கூடிற்று. சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஆனரபிள் மிஸ்டர் பி. என். சர்மா ப்ரெஸிடெண்டாக இருந்து, ரஷ்யா, ப்ரான்ஸ் முதலிய மேல்நாடுகளின் கவர்ன்மெண்டுகள் மதுபானத்தைத் தடுக்க ஏற்பாடுகள் செய்திருப்பதுபோல், இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியாவில் குடியைக்குறைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், மதுபானவிஷயமாய் கவர்ன்மெண்டார் மேற்கொண்டிருக்கும் கொள்கை சரியல்லவென்றும் சொல்லி, மதுபானத்தைக் குறைக்கும் விஷயமாய் கவர்ன்மெண்டார் சிலசீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார். அவைகளில் சிலவருமாறு. பெரிய பட்டணங்களில் மதுபானக் கடைகளுக்கு லைஸென்ஸ் கொடுக்க போர்டுகள் ஸ்தாபித்தல்; கடைகளின் தொகையைக் குறைத்தல்; கடைகளை முனிஸிபல் எல்லைக்கு வெளியில்வைக்கச்செய்தல்; பெரியபட்டணங்களில் கடைகளை ஏலத்துக்கு விடாமல் ஸ்திரமான தொகைக்கு விடுதல்; குடிக்கும் ஜாதிகளுக்கு குடியின் கெடுதிகளைப்பற்றி தேசபாஷையில் ப்ரஸங்கிக்க, ப்ரஸங்கிகளை நியமித்தல்; கடைகளை காலையில் நேரங்கழித்து திறக்கும்படிசெய்தல்; இந்தியஸ்த்ரீகளுக்கும் மைனர்களுக்கும்மதுபானம்விற்பதைத்தடுத்தல். இந்தக் கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டின்யோசனைகளுக்கு அனுஸரணையாகப் பலதீர்மானங்கள் செய்யப்பட்டன.

**இந்திய கிறிஸ்தவ கான்பரென்ஸ்.**

இது டிஸம்பர் மாஸம் 27-ந்தேதி சென்னையில் கூடிற்று. ஒரிஸ்ஸா மாகாணத்தைச் சேர்ந்த ஆனரபிள் மிஸ்டர் எம். எஸ். தாஸ் ப்ரெஸிடெண்டாக இருந்து, இந்திய கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லாத மற்ற இந்தியர்களோடு சேர்ந்து தேச அபிவ்ருத்திக்காக ஒத்து உழைக்கவேண்டு மென்றும், தாழ்ந்த ஜாதிகளை தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டு, தங்களுடையதொகையை அதிகரிக்கசெய்யவேண்டுமென்றும், ஸ்த்ரீகளின் நிலைமையை உயர்த்தவேண்டுமென்றும் சொன்னார். இந்தக் கான்பரென்ஸுக்கு காத்தொலிக் கிறிஸ்தவர்களும், ப்ராட்டெஸ்டண்ட் கிறிஸ்தவர்களும் வந்திருந்தார்கள். திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக் கண்ணுப்பிள்ளை இந்திய கிறிஸ்தவர்களுக்குள் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், சென்னைக்குக் குறைந்தது 5000-ஸங்கங்களாவது இருக்கவேண்டுமென்றும் சொன்னார். பல வ்யாஸங்கள் இந்தக் கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டன.

**இந்திய ஜனசார சீர்திருத்த கான்பரென்ஸ்.**

இதுசென்ற டிஸம்பர் மாஸம் 27-ந்தேதியன்று லக்னௌவில் கூடிற்று. டோராபோஜிசேர்ந்த பண்டித ஜோதிஸ்வரூப் என்பவர் ப்ரெஸிடெண்டாக இருந்து ஜன ஸமூகத்தில் உள்ள பற்பல ஆசாரக்குறைகளை எடுத்துச்சொல்லி, ஆசார சீர்திருத்தவிஷயமாய் ஒரு ஸெண்ட்ரல் கமிட்டி ஏற்படுத்தி அதன்மூலமாய் இன்னும் ஊக்கத்துடன் உழைக்கவேண்டுமென்றும், அந்தக் கமிட்டியார் செய்யும் வேலைகளை வெளியிட ஒருபத்ரிகை ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னார். ஜாதி ஏற்பாட்டை ஒழிக்கவேண்டுமென்றும் ஹிந்துக்களுக்குள் ஒரு ஜாதியார் இன்னொரு ஜாதியில் கல்யாணம் செய்வதை சட்டப்படி சரியென்று ஏற்படுத்த கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்யவேண்டுமென்றும், மற்ற மதஸ்தர்களை ஹிந்துமதத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், இன்னும் பல விஷயங்களைப்பற்றியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**சென்னை கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.**

இது சென்னையில் ஆனரபிள் மிஸ்டர் கில்மனின் அக்ராஸனத்தின்கீழ் கூடிற்று. மிஸ்டர் கே. பி. ராமநாதய்யர் வரவேற்பு கமிட்டியின் சேர்மனாகஇருந்து டெலிகேட்டுகளை வரவேற்று ப்ரஸங்கம் செய்தார். ஆனரபிள் மிஸ்டர் கில்மன் தமது ப்ரஸங்கத்தில் சென்னை மாகாணத்தில் கோவாபரேஷனுடைய நிலைமையைப் பற்றியும், ஸூபர்விஷன், ஆடிட் செய்தல், விவசாய ஸங்கங்களொழிந்த மற்ற வகை ஸங்கங்கள் ஸ்தாபித்தல் முதலியவைகளைப்பற்றியும் பேசினார்.

மாகாண பாங்கியொன்று ஸ்தாபிக்கவேண்டுமென்றும், ஸெண்ட்ரல்பாங்கிகளும் யூனியன்களும் விதை ஸ்டோர்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும், முனிஸிபாலிடிகளில் கோவாபரேடிவ் பால்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், காணயஸங்கங்க ளல்லாதவேறு வகைஸங்கங்கள் ஏற்படுத்த கவர்ன்மெண்டார் விசேஷ முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. வேறுபல முக்ய தீர்மானங்களும் செய்யப்பட்டன.

**எல்லா இந்திய முஸ்லிம் லீக்.**

இந்த லீக்கின் கான்பரென்ஸ் டிஸம்பர் மாஸம் 30-ந் தேதியன்று லக்னௌவில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் ஜின்னு ப்ரெஸிடெண்டாக இருந்து இந்தியாவுக்கு ஸ்வயஆட்சி கிடைக்க வேண்டியதின் அவச்யத்தைப் பற்றியும், அதை அடைய எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளைப்பற்றியும் பேசினார். ஸ்வயஆட்சி, ஆயுதச் சட்டத்தை ரத்துசெய்தல், அச்சுச்சட்டத்தை ரத்து செய்தல் முதலிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ்.**

இது சென்ற டிஸம்பர்மாஸம் 30-ந் தேதியன்று லக்னௌவில் கூடிற்று. கனம் ராய் ஸீதாநாத்ராய் பகதூர் ப்ரெஸிடெண்டாகஇருந்து கைத்தொழிலை அபிவ்ருத்திசெய்ய முயலுவதில் கவனிக்கவேண்டிய அம்சங்களைப்பற்றிப் பேசினார். அவர் கூறிய விஷயங்களில் ஒருபாகத்தை இந்த ஸஞ்சிகையின் வேறுபக்கங்களில் காணலாம். கைத்தொழிலபிவ்ருத்திக் கேற்ற பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**

இந்தியாவில் சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 14 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | ரூபா. |
|---|---|
| 3-பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 1,50,000 |
| 4-வ்யாபாரக் கம்பெனிகள் | 3,60,000 |
| 3-பருத்திமில் கம்பெனிகள் | 68,00,000 |
| 1-கிலக்ட்ரிக் சரக்குக்கம்பெனி | 8,00,000 |
| 1-சரக்குக் கம்பெனி (மேலே சொன்னது தவிர) | 22,000 |
| 2-தேயிலைத் தோட்டக் கம்பெனிகள் | 6,50,000 |
| 14 மொத்தம் | 87,82,000 |

**மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையார் சரித்ரச் சுருக்கம்:**

இது காலஞ்சென்ற மதுரை வக்கீல் ப. நாராயணய்யர் இயற்றியது. இதில் மிஸஸ் பெஸண்டின் ஜீவிய சரித்ரம் சுருக்கமாகக்கூறப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 1. வேண்டுவோர் மதுரை 'பூர்ணசந்திரோதயம்' மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஐரோப்பிய யுத்தம்.**

டிஸம்பர்மீ 28உ

எதிரிகள் ருமேனியாவில் ரிம்னிக்கு ஸாரட் என்னும் இடத்தை பிடித்திருக்கிறார்கள்,

30-தேதி.

எதிரிகள் ருமேனியாவில் ப்ரெய்லாவுக்கு 15-மைல் கிழக்கேயுள்ள பாச்சல் என்னும் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.



31-தேதி.

'ஸவாய்' என்னும் பெரிஞ்சு யுத்தக் கப்பல் மத்யதரைக் கடலில் ஒரு எதிரி ஸப்மரினால் மூழ்கடிக்கப்பட்டது.

ஸர்வேயுக்கு 1916ஆண்டில் ஜெர்மன் ஸப்மரீன்களால் 272 கப்பல்கள் சேதமாம்.

ஜனவரிமீ 1உ

எதிரிகள் ரொமேனியாவில் முன் சென்று வருகிறார்கள். அவர்கள் ஓரம்னியா லாரட்டி லிருந்து வடக்கே போய் பாலண்டி என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

3-தேதி.

ரஷ்ய—ருமேனிய துருப்புகள் போலிரனிலை வேகமே பின்வாங்கிக் கொண்டிருக்கின்றன.

4-தேதி.

ஜெர்மானியர்கள் போஷானிக்கு வடமேற்கேயுள்ள பார்ஸஸ்டி, டோபெஸ்டி என்னும் ஊர்களையும், டோப்ருஜா ப்ரதேசத்திலுள்ள மாசின், ஜிஜிலா என்னும் ஊர்களையும் பிடித்திருக்கிறார்கள்.

5-தேதி.

'எவரின்' என்னும் ப்ரிடிஷாருக்கு ஸொந்தமான ராணுவ போக்குவரத்துக் கப்பல் மத்யதரைக் கடலில் ஒரு எதிரி ஸப்மரினால் மூழ்கடிக்கப்பட்டது.

6-தேதி

எதிரிகள் ரொமேனியாவிலுள்ள ப்ரெயிலா என்னும் பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

10-தேதி

ரஷ்யர்களும் ருமேனியர்களும் போஷானியிலிருந்து பின்வாங்கி ஸிரித் நதி யோரமாயும் பூஜாநதி யோரமாயும் உள்ள இடங்களுக்குப் போனார்கள்.

11-தேதி.

ஒரு இட்டாலியப் போர்க்கப்பல் சண்டையில்பட்டு மூழ்கிப்போயிற்று.

12-தேதி.

ரிகாவுக்கு மேற்கில் சண்டை நடக்கிறது.

எதிரிகள் மால்டேவியாவில் ஒய்டஸ் நதிக்கு மேற்கில் 2-குன்றுகளைப் பிடித்தார்கள்.

டிஸம்பர் முடிய ஜெர்மானியர்களுக்குள் சேர்ந்த ஜனச்சேதம், காயம்பட்டவர்கள் முதலியவர்கள் உள்பட, 40,10,160 ஆகும்.

15-தேதி.

எதிரிகள் மால்டேவியாவில் பின்தள்ளப்பட்டார்கள். ருமேனியர்கள் ஸிரித்நதிக் கரையிலுள்ள கோடஸ் என்னும் ஊரைக் காலிசெய்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் ஸிரித்நதிக்கு 3½-தெற்கிலுள்ள வாடனி என்னும் க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யர்களும் ருமேனியர்களும் ஸிரித்நதியின் தென்கரையில் உள்ள கோடல்மிஹாலியா என்னும் ஊரைக் காலிசெய்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் இதையும் வாடனி யென்னும் ஊரையும் பிடித்திருக்கிறார்கள்.

ரிகாவுக்கு மேற்கில் பலமான சண்டை நடக்கிறது.

17-தேதி.

மால்டேவியாவில் கோஸின் நதிப்ரதேசத்தில் யுத்தம் நடந்துவருகிறது.

19-தேதி.

ஸ்விட்ஸர் லண்டுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்கள் ஸைன்யங்களைக் கொண்டுபோய்ச் சேர்த்திருப்பதாக பலமான வதந்திகள் உலவிவருகின்றன. ஜெர்மானியர்கள் ஸ்விட்ஸர்லண்டின் வழியாகப்போய் ப்ரான்ஸை எதிர்க்கக்கூடுமென்று ஊகிக்கப்படுகிறது. ஸ்விட்ஸர்லண்ட் கவர்ன்மெண்டாரும் ஸைன்யங்களின் ஒரு பாகத்தை சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று லண்டனின் கிழக்கு பாகத்தில் யுத்த தளவாடங்கள் தயார்செய்யும் தொழில்சாலையொன்றில் தீப்பிடித்து அது நாசமாகிவிட்டது. அதற்குப் பக்கத்திலிருந்த பல கட்டிடங்களும் தொழில்சாலைகளும் நாசமடைந்தன. 69-பேர்கள் இறந்துபோனார்கள். 72-பேர்களுக்கு பலமான காயங்களும் 328-பேர்களுக்கு ஸ்வல்ப காயங்களும் ஏற்பட்டன.

22-தேதி.

இங்லண்டில் 18-வயஸுள்ள வாலிபர்களை ராணுவத்துக்கு எடுத்துப் பழக்கி 19-வயஸாகிறவரையில் தேச பாதுகாப்புக்கு உபயோகிக்க வேண்டுமென்று இங்கிலண்டின் யுத்த ஸபையார் தீர்மானித்திருக்கிறார்கள்.

23-தேதி.

வடகடலில் ப்ரிட்டிஷ் கப்பல்படையின் ஒருபாகத்துக்கும் எதிரி டிஸ்ட்ராயர் படையின் ஒருபாகத்துக்கும் சண்டை நடந்தது. இருகக்ஷியிலும் ஒரு டிஸ்ட்ராயர்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

26-தேதி.
ரீகாவுக்கு மேற்கில் யுத்தம் கடுமையாய் நடந்து வருகிறது. ஆ ஜர்க்ருக்கிழக்கில் ரஷ்யர்கள் அரை மைல் பின் தள்ளப்பட்டார்கள்.
ருமேனியாவில் ரொம்பப் பனியாயிருப்பதால், இரு கக்ஷியாரும் ஒன்றும் செய்யாமலிக்கவேண்டி யிருக்கிறது.

ஹாரா லங்கதீ.

ப்ரிட்டிஷ் யுத்த மந்த்ராலோசனை ஸபையார் அடுத்த மாஸம் ஒரு விசேஷ மீட்டிங்கூடி யுத்த விஷயங்களைப்பற்றி ஆலோசிப்பார்கள். அதற்கு இந்தியா மந்த்ரியும், குடியேற்ற நாட்டுமந்த்ரிகளும் மெம்பர்களாகப் போவார்கள்.

இந்த மீட்டிங்கில் இந்தியா மந்த்ரிக்கு ஆலோசனை சொல்லி உதவுவதற்காக, இந்தியாவிலிருந்து அடியில்கண்ட மூன்றுபேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.—ஐக்யமாகாண லெப்டினண்ட் கவர்னராகிய ஸர் ஜேம்ஸ் மெஸ்டன்; கல்கத்தாவாஸியும் முன்பு வைஸ்ராய் நிர்வாகஸபையில் மெம்பராயிருந்தவருமாகிய ஸர் எஸ். பி. ஸின்ஹா; பிகானீர் மஹாராஜா.

• • •

கல்வி ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக மாகாண வித்யா இலாகாத்தலைவர்கள் இந்தமாஸம் 22-ந் தேதியன்று டில்லியில் ஒரு கான்பரென்ஸ் கூடினார்கள். வைஸ்ராய் கான்பரென்ஸைத் திறந்துவைத்து உபாத்யாயர்கள் சம்பளம், தொழில் சாஸ்த்ரப்பயிர்ச்சி, பெண்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிப்பேசினார். கான்பரென்ஸில் வித்யாஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி விவாதங்கள் நடந்தன.

• • •

இந்த மகாயுத்தத்தை ஆரம்பித்துவிட்டவன் ஸராஜீவோ பட்டணத்தில் காலஞ்சென்ற ஆஸ்ட்ரிய இளவரசரைக் கொலைசெய்தவனுவன். அவன் அக்கொலைக்காக விசாரிக்கப்பட்டு ஆயுள்பர்யந்தம் சிறைவாஸம் அடைந்தான். அவன் சென்ற அக்டோபர்மாஸம் 16-ந் தேதியன்று ஜெயிலிலேயே இறந்துபோனான்.

• • •

வருகிற பிப்ரவரி மாஸம் 24-ந்தேதி யன்று ஆனரபிள் ஸர். பி. என். சென்ஷாமி அய்யர் நிர்வாகஸபை மெம்பர் வேலையிலிருந்து விலகுவார். அவருக்கு பதிலாக திவான்பகதூர் பி. ராஜகோபாலாசார்யார் நிர்வாகஸபை மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

• • •

ராவ்ஸாஹிப் வி. கன்னன் செட்டியார் அடுத்த மாஸம் சென்னை மைலாப்பூரில் ஒரு புதிய ஸம்ஸ்க்ருத காலேஜ் ஸ்தாபிக்கப்போகிறார் அங்கு மாணவர்களுக்குச் சம்பளம் கிடையாது அவர்களுக்கு சாப்பாடு இலவசமாகப் போடப்படும்.

• • •

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள திருப்பூரை முனிஸிபாலிட்டியாக்கவேண்டு மென்று அந்த ஜில்லா கலெக்டர் செய்த ப்ரோரணையை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

• • •

வங்காள கவர்னர் லார்ட் கார்மைகேல் வருகிற மார்ச்சு மாஸம் தமது வேலையிலிருந்து விலகுகிறார் அவருக்கு பதிலாக லார்ட் ரோனல்ட்ஷே என்பவர் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

• • •

ஸேலம் 'த்ராவிடாபிமானி' பத்ரிகையின் அதிபர் மிஸ்டர் ஜான் நாடார் சென்ற டிஸம்பர்மாஸம் 24-ந் தேதி இறந்ததைக் கேட்டு விஸனிக்கிறோம்.

• • •

சென்னையிலிருந்து பம்பாய்க்கு வாரந்தோறும் அன்யதேச தபால்களைக் கொண்டுபோகும் போஸ்டல் ஸ்பெஷல் வண்டி நிறுத்தப்பட்டிருக்கிறது.

• • •

தென்னார்காடு ஜில்லா கலெக்டர் கான்பகதூர் மகமது அஸிஸுதீன்ஸாஹேபுக்கு ஸி. ஐ. இ. பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

• • •

மிஸ்டர். கேசவப்பிள்ளைக்கும் சிங்கம்பட்டி ஜமீன்தாருக்கும் திவான்பகதூர் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

• • •

சென்னை வக்கீலாகிய மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யங்கார் சென்னை அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

• • •

இந்திய கைத்தொழில் கமிஷன் இந்த மாஸம் 22-ந் தேதியன்று சென்னையில் கூடிற்று.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. — நள௵ மாசிமீ, FEB—MAR, 1917. — ஸஞ்சிகை 2. No. 2.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'Peoples' Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

**RATES OF SUBSCRIPTION POST FREE.**

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

**RATES OF ADVERTISEMENT.**

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| ⅛ do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

**தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அன்ய நாடு |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 4 0 |
| ⅛ ,, | ,, | ,, | 1 0 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மத்ராஸ்

## LAND MINING.

## போர்க்களத்தில் சுரங்கம் தோண்டுதல்.

தற்போதைய யுத்தத்தில் இரு கக்ஷியாரும் கிடங்குகள் தோண்டி அவைகளில் இருந்துகொண்டு யுத்தம் செய்து வருகிறார்கள். அவைகளிலிருந்து எப்படி யுத்தம் செய்கிறார்களென்பதைப்பற்றி சென்ற 1915-ம் வர்ஷம் ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் விரிவாய் எழுதியிருக்கிறோம்.

போர்வீரர்கள் பீரங்கிப்படையின் உதவியைக்கொண்டு எதிரியின் கிடங்குகளைப் பிடிக்க முயலுவதோடு, கொஞ்சங் கொஞ்சமாய் எதிரியிருக்கும் இடம் நோக்கி முன்செல்ல முயலுவார்கள். இதற்காக அவர்கள் ராத்ரிக்காலங்களில் எதிரிக்குத் தெரியாமல் தங்களுடைய கிடங்குகளிலிருந்து எதிரிப் பக்கமாய் கிடங்குகளும், குகைகளும் தோண்டிக்கொண்டு போவார்கள். இவைகள் ஒன்றோடொன்று ஸம்பந்தப்பட்டிருக்கும். இவைகள் நேராக இருந்தால் எதிரிகள் ஒரு ஸமயம் இவைகளைக் கண்டுபிடித்து இவைகளிலுள்ளவர்களை ஸுலபமாக பீரங்கியினால் தாக்கி நாசமாக்கக் கூடுமாதலால், இந்தக் கிடங்குகளும் குகைகளும் வளைந்து வளைந்திருக்கும். இப்படி வெகுதூரம் முன்சென்று எதிரிக் கிடங்குகளுக்கு ரொம்ப ஸமீபம் வந்துவிட்டால் அதற்குப்பிறகு முன்செல்ல முடியாது. ஏனென்றால், எதிரிகள் ப்ரகாசமான கைவிளக்குகளைக்கொண்டு அவர்களைக் கண்டுபிடித்து, பீரங்கிகளாலும் துப்பாக்கிகளாலும் தாக்கி அவர்களை முன்செல்லாதபடி தடுத்துவிடக்கூடும். இதற்காக முன்செல்ல விரும்பும் ஸைன்யத்தார் எதிரிக் கிடங்குகளின் ஸமீபம் வந்தபிறகு பூமியின் கீழ் சுரங்கம் வெட்டிக்கொண்டு போவார்கள். இந்த சுரங்கங்கள் சாய்வாக பூமிக்குள் தோண்டப்படும். இவைகளை எதிரிக் கிடங்குகளுக்குக் கீழ்வரும் வரையில் தோண்டிக்கொண்டு போவார்கள். எதிரிக் கிடங்குகளுக்கு அடியில் வந்துவிட்டதாகத் தோன்றினதும், அங்கே வெடிமருந்து வைக்க ஒரு சிறு அறை தோண்டி அதில் வெடிமருந்தை வைத்து வெடிக்கச்செய்து எதிரிக் கிடங்குகளை நாசம் செய்வார்கள்.

சுரங்கம் தோண்டும் இடத்தில் மண் மிருதுவாயிருந்தால் வேகமாய் தோண்டிக்கொண்டு போகலாம். ஸாதாரணமாக ம்ருதுவான மண்ணில் 24-மணி நேரத்தில் 15 முதல் 20 அடி தூரம் வரையில் சுரங்கம் வெட்டக்கூடும். மண் ரொம்ப கெட்டியாயிருந்தால் ஸ்வல்பதூரந்தான் வெட்ட முடியும். சில ஸமயங்களில் கெட்டியான மண்ணில் ஒரு நாளில் 3-அடி தூரம் வெட்டுவதே ச்ரமமாயிருக்கும்.

சுரங்கம் வெட்டுவது ச்ரமமான வேலையாகையால், அதை ரொம்ப அகலமும் உயரமுமாகத் தோண்டுவது கிடையாது. உள்ளிருந்து மண்ணையும் கல்லையும் ஸௌகர்யமாக அப்புறப்படுத்த எவ்வளவு அகலமும் உயரமும் வேண்டுமோ அவ்வளவு விசாலமாகத் தான் தோண்டுவது வழக்கம். ஸாதாரணமாக சுரங்கங்கள் 3 அடி அகலமும் 4½ அடி உயரமும் இருக்கும். சில ஸமயங்களில் 100-அடி நீளத்துக்குக் குறைவாக சுரங்கங்கள் வெட்டவேண்டியிருந்தால் இன்னும் குறுகலாகவும் தாழ்வாகவும் சுரங்கம் வெட்டுவதுண்டு. இப்படி குறுகியிருப்பதால் இவைகளில் வேலை செய்பவர்கள் குனிந்துகொண்டு தான் வேலை செய்யவேண்டியிருக்கும். மண் ரொம்ப புலபுலப்பாயிருந்து சுரங்கங்களில் எங்கேயாவது பக்கவாட்டிலும் மேல் பக்கத்திலும் மண் சரிந்து விழப்போலிருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் பக்கவாட்டில் பலகைகளை நிறுத்தியும் மேல் பக்கத்தில் பலகையால் கூரைபோட்டும் மண் விழாதபடி பார்த்துக் கொள்ளுவார்கள். சுரங்கத்திலிருந்து மண்ணை எடுத்து அப்புறப்படுத்த சிறிய கை வண்டிகள் உபயோகிப்பார்கள். அப்படி வெளியில் கொண்டுவந்த மண்ணை சுரங்க வாயிலண்டையும் அதற்குப் பக்கத்தில் கிடங்குகளிலும் கொட்டுவார்கள்.



எதிரிக் கிடங்குகளுக்கு நேர் கீழே குழி தோண்டிவைத்த வெடி மருந்தை மின்ஸாரக் கம்பிகளின் உதவியால் வெடிக்கச் செய்வார்கள். மருந்தை வெடி தீர்ப்பதற்குமுன் மருந்திருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் சுரங்க வழியை மண்ணால் அடைத்து விடுவார்கள். இதனால் மருந்து வெடித்ததும் அதற்கு மேலேயுள்ள எதிரிகளின் கிடங்குகள் நாசமாகிவிடும். அவைகளில் எதிரிகள் தங்கியிருக்க முடியாமல் ஓடிவிடுவார்கள். அந்த இடமெல்லாம் குழியாகிவிடும். உடனே சுரங்கமிட்ட வீரர்கள் அவ்விடத்தைப் போய்ப் பிடித்துக்கொண்டு, அங்கிருந்து மறுபடியும் சுரங்கம் தோண்டி எதிரிக் கிடங்குகளின் பின் வரிசைகளையும் பிடிக்க முயலுவார்கள்.

இவ்விதம் சுரங்கம் தோண்டிப்போய் எதிரிக் கிடங்குகளண்டை வந்து வேலை செய்யும்போது, வேலை செய்யும் சத்தம் எதிரிகளுக்குக் கேட்பதுண்டு. அப்போது எதிரிகள் தங்களுடைய கிடங்குகளிலிருந்து சத்தம் வரும் திசைநோக்கி சுரங்கம் தோண்டிப்போய், தங்களை நாசம் செய்வதற்காக ஏற்கனவே தோண்டப்பட்டுவரும் எதிரிச் சுரங்கத்தண்டை வந்ததும் வெடிமருந்து வைத்து அதை நாசம் செய்துவிடுவதுண்டு.

---

## REQUISITES FOR INDUSTRIAL DEVELOPMENT.

## கைத்தொழிலபிவ்ருத்திக்கு அவச்யமாய் வேண்டியவைகள்.

சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் ஆனரபிள் ராய் ஸீதாநாத் ராய் பகதூர், கைத்தொழிலபிவ்ருத்தியில் கவனிக்கவேண்டிய அம்சங்களைப் பற்றிச் சொல்லியவைகளில் இயற்கைப்பொருள் ஸாதனங்கள், வேலையாட்கள், தொழிலறிவு, மூலதனம் ஆகிய இவைகளைப்பற்றித் தெரிவித்தோம். இப்போது மற்ற அம்சங்களைப் பற்றி எழுதுகிறோம்.

### யந்த்ரங்கள்.

யந்த்ரங்களும் ஒரு வகையில் மூலதனத்தைச் சேர்ந்தனவென்றே சொல்லலாம். கைத்தொழில் நடத்துகிறவர்கள் இவைகள் விஷயத்தில் ரொம்ப கவனம் செலுத்தவேண்டியது அவச்யமாகும். அநேக தொழில்சாலைக்காரர்கள், மூலதனம் போதாதனாலும், யந்த்ரம் மலிவாயிருக்கிறதென்ற எண்ணத்தாலும், அறியாமையாலும், தங்கள் சாலைகளுக்கு மட்டமான யந்த்ரங்களை வாங்கி உபயோகிக்கிறார்கள். இப்படிச் செய்வது பெரும்பிழையாகும். மட்டமான யந்த்ரங்களை வாங்கி உபயோகிப்பதால், எப்போதும் கஷ்டமே ஏற்படும். அவைகளால் அதிகமாய்ப் பண்டங்கள் செய்வது ஸாத்யமில்லை. மட்டமான யந்த்ரங்களுள்ள தொழில்சாலைகள் உயர்ந்த யந்த்ரங்கள் உள்ள தொழில்சாலைகளுடன் போட்டிபோட்டு வேலை செய்யமுடியாது. எவ்வளவுக்கெவ்வளவு யந்த்ரங்கள் உயர்ந்தனவாயிருக்கின்றனவோ, அவ்வளவுக்கு பண்டங்களைச் செய்வதற்கான செலவு குறையும். இதனால் தொழில்சாலை ரொம்ப லாபகரமாக நடந்துவரக்கூடும். தற்காலம் தொழில்சாலைகளில் யந்த்ரங்களை ஓட்ட நீராவிசக்திதான் உபயோகப்பட்டு வருகிறது. மின்ஸாரசக்தி உபயோகிக்கக் கூடுமானால் தொழில் சாலையின் செலவு இன்னும் குறையக்கூடும்.

### தொழில் நடத்துவதில் திறமை.

எந்தத் தொழிலும் கடைத்தேற வேண்டுமானால் அதை நடத்துகிறவர்கள் வேலையை ஒழுங்குபடுத்தித் திறமையாய் நடத்தவேண்டியது அவச்யமாகும். நாளது வரையில் நமது தேசத்தில் பெரும்பான்மையான தொழில்சாலைகள் ஏற்படாததற்குக் காரணம் தொழில் கம்பெனிகள் ஸ்தாபிக்கிறவர்களுக்கு தொழிலில் திறமையுண்டென்ற ஜனங்கள் நம்பாததே. சில இடங்களில் தொழில்களை நிர்வகித்து நடத்துகிறவர்கள் யோக்யதைக் குறைவாக நடந்துவந்ததாலும் தொழில் கம்பெனிகள் ஏற்படுவது தடைப்பட்டு விட்டது. தொழில்சாலைகளை நிர்வகித்து நடத்துகிறவர்கள் நல்ல நடத்தை யுடையவர்களாயும், தொழிலில் திறமையுள்ளவர்களாயுமிருந்தால்தான் தொழில்சாலை நன்றாய் நடந்துவரக்கூடும். ஆனால் நமது தேசத்துத் தொழில் சாலைகளின் நிர்வாக போர்டில் உள்ளவர்களில் பெரும்பாலாருக்கு தொழில் விஷயங்களில் திறமை போதாமலிருக்கிறது. தொழில் விஷயங்களில் பூரா தேர்ச்சியுடையவர்கள் தொழில்களை நிர்வகிக்கவேண்டுமே யொழிய, அவ்விஷயங்களில் ஸ்வல்பபரிச்சயமுள்ளவர்கள் தொழில்களை நடத்துவது சரியல்ல. ஏனென்றால், தற்காலத்துத் தொழில்களில் நிர்வாகிகளுக்கு பலவகைப்பட்ட வேலைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுக் கெல்லாம் விசேஷ அனுபவ அறிவுவேண்டி யிருக்கிறது.

கைத்தொழில் ஸ்தாபிப்பவர்களை தொழில்களில் பழக்க அவர்களுக்கு வ்யாபாரக் கல்வி கற்பிக்கவேண்டியது அவச்யமாகும். அவர்கள் பொருளாதார சாஸ்த்ரத்தின் பொது விஷயங்களை அறிந்திருப்பதோடு, இந்த தேசத்தில் பண்டங்களின் உற்பத்தி, அவைகளை விற்பனை செய்தல் முதலிய விஷயங்களை செவ்வையாய்க் கற்றிருக்கவேண்டும். அவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாடங்களாவன :—வ்யாபாரச் சட்டம், வ்யாபார சரித்ரம், லேவாதேவி முறைகள், ஏற்றுமதி இறக்குமதி விஷயங்கள், பண்டங்களை ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்துக்குக்கொண்டுபோக உள்ள போக்கு வரவு வசதிகள், இன்ஷூரன்ஸ், கம்பெனி நிர்வாகம், மார்க்கட்டுகளின் நிலைமை ஆகிய இவைகளாகும். தொழில் துறைகளில் ஸூபரிண்டெண்டண்டுகளாகவும், கணக்கர்களாகவும், கணக்குகளைத் தணிக்கை செய்பவர்களாகவும் இருப்பவர்களுக்கும் இன்னுமுள்ள தாழ்ந்த உத்யோகஸ்தர்களுக்கும் வ்யாபாரப் படிப்பு வேண்டியது அவச்யமாகும்.

### தொழில் பண்டங்களை வாங்க ஜனங்கள்.

கைத்தொழிலபிவ்ருத்திக்கு ஒரு முக்ய ஸாதனமென்னவென்றால், செய்த சரக்குகளை ஜனங்கள் நிச்சயமாயும் ஒரே சீராயும் வாங்குவார்களென்ற உறுதியே. இது விஷயத்தில் நாம் அத்ருஷ்டசாலிகளே. பலவகைப்பட்ட கைத்தொழில் சரகுகளுக்கு நமது தேசத்தில் ரொம்ப க்ராக்கி உண்டு. தற்போது நமது தேசத்தில் அன்யதேசத்துச் சரக்குகள் ஏராளமாய் வந்து விலையாகின்றன. இவைகளை நீக்கிவிட்டு நமது தேசத்து சரக்கு வ்யாபாரத்தை நிலைநிறுத்துவது கஷ்டமல்ல. வெகுகாலம் வரையில் நாம் நமது தேசத்தாருக்கு வேண்டிய சரக்குகளைச் செய்து வந்தால், அதுவே நமக்குப் போதுமான அளவு வேலையாகும். நமது கைத்தொழில்கள் ரொம்பப் பெரியவைகளாகி ஸ்திரப்பட்டுவிட்டால், பிறகு அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காக சரக்குகள் செய்ய ஆரம்பிக்கலாம். இப்போதுங்கூட சில இந்திய கைத்தொழில் சரக்குகளுக்கு அன்ய நாடுகளில் க்ராக்கி யுண்டு. இந்த க்ராக்கியை விடாமல் பார்த்துக்கொள்வதோடு, இந்த சரக்குகளில் வ்யாபாரம் அதிகமாகும்படி செய்வது முக்யமாகும்.

### போக்கு வரவு வசதிகள்.

செய்த ஸாமான்களை விற்பனையாகு மிடங்களுக்கு வ்யாபகரமாய்க் கொண்டுபோய் விற்கவேண்டுமானால் அதற்கு போக்கு வரவு வசதிகள் ஸௌகர்யமாக விருக்கவேண்டியது அவச்யமாகும். ரெயில்வண்டிச் சார்ஜுகளும் கப்பல் சார்ஜுகளும் குறைவா யிருக்கவேண்டும். சரக்குகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு சீக்ரம் கொண்டுபோக ஸௌகர்ய மிருக்கவேண்டும். ரெயில்வே கம்பெனியாரும் மற்ற போக்குவரத்து ஸ்தாபனங்களும் பண்டங்களை ஜாக்ரதையாய் ஏற்றி யிறக்கவேண்டும். இந்த மூன்று ஸௌகர்யங்களும் இருந்தால்தான் கைத்தொழில்கள் வ்ருத்தியடையக்கூடும். இந்தியாவிலுள்ள ரெயில்வேக்கள் இவைகள் விஷயமாக ஸாதகங்கள் செய்து கொடுக்கவேண்டியது அவச்யமாகும். தற்கால இந்திய ரெயில்வேக்களில் ஸாமான்களுக்கு ஏற்படுத்தி யிருக்கும் சார்ஜுகள் ரொம்ப அதிகமாயிருக்கின்றன. அதோடு அந்த சார்ஜுவிகிதங்கள் அன்ய தேசச் சரக்குகளுக்கு ஸாதகமாயும் இந்தியச் சரக்குகளுக்கு பாதகமாயும் இருக்கின்றன. இந்தக் குறைகளை நிவர்த்திசெய்ய பலர் ரெயில்வேக்களின் நிர்வாகத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதற்கு இன்னொரு வழி யென்னவென்றால், ரெயில்வேகமிஷன் ஒன்று ஸ்திரமாக ஏற்படுத்தி ரெயில்வே சார்ஜுகள் அநீதமாக இருந்தால் அவைகளை மாற்ற அந்தக் கமிஷனுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். இவைகளோடு தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் யந்த்ரங்கள் ஆகிய இவைகளுக்கு குறைந்த சார்ஜுகள் ஏற்படுத்தினால் தேசத்தில் பொருளாதார அபிவ்ருத்தி ஏற்படக்கூடும்.

நமது தேசத்தில் சில இடங்களில் ரெயில்வேக்கள் மூலமாக ஸாமான்கள் கொண்டுபோவதை விட கால்வாய்கள் மூலமாகக் கொண்டுபோவது செலவு குறைவாக இருக்கிறது. கவர்ன்மெண்டார் போக்கு வரவுக்கான கால்வாய்களை சீர்திருத்தி தேவையான இடங்களில் அவைகளை வெட்டிவைப்பது அவச்யமாகும்.

ஆனரபிள் ராய் ஸீதாநாத் ராய் பகதூர் ராஜாங்க உதவியைப்பற்றிச் சொன்ன விஷயங்களை பின்னால் எழுதுவோம்.



## THE MORAL EVIL OF INDENTURED LABOUR.

## ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டின் ஸன்மார்க்கக்கேடு.

ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டின்பேரில் நமது நாட்டுக் கூலியாட்கள் அயல் நாடுகளுக்குப் போய் வேலை செய்வதால் நமது தேசத்துக்குப் பல விதங்களில் கெடுதிகள் ஏற்படுகின்றன வென்பது பலரும் அறிந்த விஷயம். கூலியாட்கள் வெகுவாய் அறியாமையால் கங்காணிகளுடைய ஆசைவார்த்தைகளில் மயங்கி அந்த நாடுகளுக்குப் போகிறார்களென்ற சொல்லலாம். ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் போவதால் ஏற்படும் பலாபலன்களை கூலியாட்கள் உள்ளது உள்ளபடி அறிந்தால், அவர்களில் பெரும்பாலர் அயல் நாடுகளுக்குப்போக ஸம்மதிப்பது ஸந்தேகம்.

ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டால் கூலியாட்களின் ஸன்மார்க்கத்துக்கும், அவர்களுடைய பொது அபிவ்ருத்திக்கும் கெடுதலா யிருப்பதாலும், அவர்கள் வெளிநாடுகளில் வேலை செய்யும் காலத்தில் பற்பல விதங்களில் துன்பத்துக்காளாவதாலும், அந்த ஒப்பந்த ஏற்பாட்டை ஒழித்துவிடவேண்டுமென்று இந்திய ஜனத்தலைவர்களில் பலர் சிலகாலமாக பாடுபட்டுவருகிறார்கள். தென்னாப்ரிக்காவில் நமது தேசவாஸிகள் வெகுகாலமாக பலவிதங்களில் கஷ்டப்பட்டுவருவது யாவருக்கும் தெரியும். காலஞ்சென்ற மிஸ்டர் கோபாலக்ருஷ்ண கோகலேயின் முயற்சியாலும், மிஸ்டர் காந்தியின் முயற்சியாலும், தென்னாப்ரிக்கா இந்தியர்களுடைய குறைகளில்

பல நீங்கிவிட்டன. ஆனால் பிஜி, ட்ரினிடாட் ஜமெய்க்கா முதலிய தீவுகளில் ஒப்பந்த ஏற்பாடு இன்னும் அமுலிலிருந்து வருகிறது. அங்கே இந்தியர்களின் நிலைமை இன்னும் தாழ்ந்ததாகவே இருந்துவருகிறது. முக்யமாய் அவர்களுடைய ஸன்மார்க்க நிலைமை ரொம்பவும் குறைந்துபோயிருக்கிறது. அவர்களுடைய நிலைமையைப்பற்றி நேரில் அறிந்துவர சிலகாலத்துக்கு முன்னால் ரெவரண்ட் ஆண்ட்ரூஸ் என்பவரும், மிஸ்டர் பியர்ஸன் என்பவரும் பிஜித் தீவுக்குப்போய் அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து ஒரு ரிபோர்ட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அங்கே உள்ள இந்தியர்கள் ஸன்மார்க்கத்தில் ரொம்பவும் தாழ்வடைந்ததற்குக் காரணம் ஒப்பந்தக்கூலி ஏற்பாடேயாகும். இதை ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி அந்த ஏற்பாட்டை ஒழித்துவிட ரெவரண்ட் ஆண்ட்ரூஸ் பலவிடங்களுக்குப் போய் ப்ரஸங்கம் செய்து வருகிறார். அவர் தெரிவித்துள்ள விஷயங்களில் சிலவற்றை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டின்படி இந்தியாவிலிருந்து இந்தியக் கூலியாட்களை அந்த நாடுகளுக்குக் கூட்டிக்கொண்டு போகும்போது, கவர்ன்மெண்டார் 850-ஆண்களுக்கு 300-ஸ்த்ரீகள் விதம் கூலியாள்களின் தொகையிருக்க வேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதோடு கூலியாள்கள் எல்லாரும் 20-வயதுக்கு மேற்பட்டவர்களாயும் 30-வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாயுமிருக்கவேண்டுமென்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஸ்த்ரீபுருஷர்களுள் சில பேர்கள்தான் கல்யாணமான தம்பதிகளாயிருக்கக்கூடும். ஸ்த்ரீகளில் அநேகரும் ஆண்களில் பெரும்பாலாரும் கல்யாணமாகாதவர்களாக இருப்பது ஸகஜம். இவர்கள் பிஜி முதலிய தீவுகளுக்குப்போனதும், அவர்களை வேலைக்கு எடுத்துக்கொண்ட தோட்டக்காரர்கள் மேற்சொன்ன விகிதப்படி அதாவது 17-ஆண்களுக்கு 6-ஸ்த்ரீகள் விதம் தோட்டங்களில் கூலியாட்களுக்கென்று கட்டியுள்ள விடுதிகளில் இருக்கச் செய்கிறார்கள். அவர்கள் இருக்கும் விடுதிகளோ ரொம்ப கேவலமானதாக இருக்கும். அவைகள் வெகுவாய் ஜனப்புழக்கமில்லாத தூரமான தோட்டங்களிலும் தனிமையான தீவுகளிலும் கட்டப்பட்டிருக்கும். அவர்கள் ஒப்பந்தத்தின் பேரில் அங்கு போயிருப்பதால், யஜமானர்கள் நல்லவர்களாக இருந்தாலும் சரி, கெட்டவர்களாயிருந்தாலுஞ்சரி, 5-வர்ஷம் அங்கே உழைத்தாகவேண்டும். வேலைசெய்ய மறுத்தால் தண்டனை தானுண்டு. பகலில் வேலை முடிந்தபிறகு அவர்களுக்கு வேறு வேலை கிடையாது. நல்ல மார்க்கத்தில் பொழுதுபோக்க அவர்களுக்கு ஸாதனங்கள் கிடையா. கூலியாட்களில் பெரும்பாலார் கல்யாணமாகாதவர்கள். அங்கு வந்துள்ள ஸ்த்ரீகளில் அநேகரும் கல்யாணமாகாமலிருப்பார்களாகையால், அந்த வாலிபர்கள் அந்த ஸ்த்ரீகளை யடைய முயலுவது இயல்பே. ஸ்த்ரீகளின் தொகை குறைவாயிருப்பதால், இது விஷயமாக ஆண்களுக்குள் சண்டை சச்சரவும், குத்துக்கொலையும் ஏற்படுகின்றன. தமதெண்ணம் நிறைவேறாத சிலர் தற்கொலை செய்துகொள்வதுமுண்டு. அங்குள்ள ஸ்த்ரீ கூலியாட்கள், பணத்துக்காசைப்பட்டு தங்கள் மானத்தைப் போக்கிக்கொள்ளுகிறார்கள். ஒரு ஸ்த்ரீ ஒரு புருஷனிடம் நேசம் பாராட்டி, பின்பு எக்காரணத்தாலோ வேறு புருஷனிடம் நேசம் பாராட்டினால், அவள் முதல் கணவனுடைய கோபத்துக்காளாகவேண்டும். இதனால் அநேக ஸ்த்ரீகள் குத்துங் கொலைக்கும் ஆளாகிறார்கள. இது மட்டுமல்ல. ஸ்த்ரீ கூலியாட்கள் வேலையாட்களை மேற்பார்வை செய்யும் ஸிப்பந்திகளுக்கும் கீழ்ப்பட்டு நடந்து அவர்களுக்கும் தங்கள்மானத்தை விற்று வருகிறார்கள். மானமாயிருக்க முயலுகிறவர்களுக்கோ, பலவிதத்தில் கஷ்டங்கள் உண்டாகும்.



இங்கு சில உதாரணங்கள் கொடுக்கிறோம்.

ஒரு தோட்டத்தில் யஜமானர் ரொம்ப நல்ல குணமுள்ளவனாக இருந்தார். அவர் கூலியாட்களுக்கு யாதொரு கெடுதியும் ஏற்படக்கூடாதென்று எண்ணியிருந்தவராம்: சிலகாலம்வரையில் தமது தோட்டத்திலுள்ள கூலியாட்கள் தங்களிஷ்டப்போல் இருக்கட்டுமென்று விட்டுவிட்டார். எங்கேபோனாலும் ஆண்களின் தொகையதிகமாகவும் ஸ்த்ரீகளின் தொகை குறைவாகவும் இருக்கிறது. ஆண் பெண் ஆகிய எல்லோரும் வயதுவந்தவர்கள். இதனால் அந்தத் தோட்டத்தில் ஆண்களெல்லாரும் உள்ள ஸ்வல்ப ஸ்த்ரீகளை யடைய முயன்று சண்டை சச்சரவு செய்ய ஆரம்பித்தார்கள். ஒருவர்க்கொருவர் மனஸ்தாபங்கள் ஏற்படலாயின. அடிதடியும் குத்துச்சண்டையும் காயங்களும் அதிகமாயின. ஒரு பெண் நாய்க்காகப் பல ஆண் நாய்கள் ஒன்றோடொன்று சண்டையிடுவதுபோல இவர்கள் நடந்துகொண்டார்கள். இந்திய கூலியாட்கள் இந்தத் தோட்டத்தில் மாத்ரமல்ல, எல்லாத் தோட்டங்களிலும் இவ்விதமே கெட்டுப்போயிருக்கிறார்கள். தோட்டக்காரர் என்ன செய்வார். அவர் நல்லவர்தான் ஆனால் என்ன செய்கிறது. ஸ்த்ரீகளின் தொகையோ குறைவு. ஆண்களுக்குள் மனஸ்தாபமும் சண்டையும் ஏற்படாமலிருப்ப தெப்படி. இந்தியர்களெப்படியாயினும் போகட்டும். தோட்டத்துக்குள் சண்டை சச்சரவு இல்லாமலிருக்க வேண்டுமென்று எண்ணி, ஒவ்வொரு ஸ்த்ரீக்கும் இத்தனை ஆண்கள் என்றும். இன்னின்னார் புருஷர்களாக இருக்கலாமென்றும் வரையறை ஏற்படுத்திவிட்டார். கூலியாட்கள் குடியிருக்கும் வீடுகள் ஒரு ஒழுங்குடன் நடந்துவரும் வேசி வீடுகளாயின. இதற்கெல்லாம் காரணமென்ன? ஒப்பந்தக்கூலி ஏற்பாடும் இத்தனை ஆண்களுக்கு இத்தனை பெண்கள் இருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் வெகுகாலத்துக்குமுன் ஏற்படுத்தின நிபந்தனை இன்னும் அனுஷ்டானத்திலிருப்பதுமே.

ஒரு தோட்டத்தில் ஒரு மேற்பார்வை ஸிப்பந்தி, பணங்கொடுத்தும், கட்டாயப்படுத்தியும் ஸ்த்ரீகளைக் கெடுத்துவந்தான். இவ்விதம் துஷ்க்ருத்யம் செய்துவந்ததை கூலியாட்கள் ஆக்ஷேபித்தும், அந்த ஸிப்பந்தி கேட்காததாலும், அவனை தண்டிக்க ஒருவருமில்லாமையாலும், கூலியாட்களெல்லாம் ஒன்றுசேர்ந்து, கரும்பு வெட்டும் கத்திகளால் அவனை துண்டந் துண்டமாய் வெட்டிப்போட்டுவிட்டு, அதிகாரிகளிடத்தில் போய், விஷயமனைத்தையும் சொல்லிவிட்டார்கள். விசாரணை நடந்தபோது, கூலியாட்களெல்லாம் நான்தான் கொன்றேன், நான்தான் கொன்றேன், என்று சொல்லி, கொலை செய்ததைப் பெருமையாகக் கொண்டாடினார்களாம்.

ரஜபுதனத்தில் ரஜபுத்ர ஜாதியைச்சேர்ந்த ஒருவன் சிலகாலம் ராணுவத்தில் சேர்ந்திருந்தான்; பிறகு தனது ஸகோதரனுக்கு உதவியாக விவஸாயத்தை கவனித்துவந்தான். ஒருநாள் ஆள் சேர்க்கும் ஒருவன் அவனிடம்வந்து பிஜி தீவில் ஒரு ரெஜிமெண்ட் இருப்பதாகவும், அதில் சேர்ந்தால் தக்கசம்பளம் கிடைக்குமென்றும் சொன்னான். போர்விருப்பமுள்ள அந்த ரஜபுத்ரவீரன் அவன் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு, பிஜித்தீவுக்குப்போக, அங்கே கூலியாட்களோடு சேர்ந்து உழைக்கச் சொன்னார்கள். அவ்வேலை வேண்டாமென்று மறுத்து ஆக்ஷேபித்தான். ஒன்றும் பயன்படவில்லை. ஒப்பந்தக் கூலி ஏற்பாட்டின்படி 5-வர்ஷம் உழைக்கவேண்டியதாயிற்று. அவனை ஸிப்பந்திகள் பலவிதங்களில் ஹிம்ஸை செய்துவந்தார்கள். என்னதான் ச்லாக்யமான குணங்களுடன் அவன் முன்பு இருந்தானென்றாலும், 5-வர்ஷகாலம் நாகரீகமற்றவர்களாய் நடந்து வருபவர்களோடு கலந்து வந்ததால் அவனும் அவர்களுள் ஒருவனாகி, அவர்களைப்போலவே பெண்ணுக்காசைப்

பட்டு, தீயவழியில் நடக்கலானான். அவன் விரும்பியபெண் அவனைக் கைவிட்டதுமன்றி, அவளும், அந்த ஸ்த்ரீயின் புதிய நேசனும் கைகலந்து சண்டைசெய்தபோது, குறுக்கிட்டு, ரஜபுத்ரனைக் கன்னத்தில் அறைந்தாள். ரஜபுத்ரனுக்கு இதைவிட அவமானமென்ன இருக்கிறது. மனங்கொதித்து ஆத்ரம் அதிகமாகவே, கரும்பு வெட்டும் கத்தியால், தன்னை அவமதித்த ஸ்த்ரீயின் உடலை தலைவேறு முண்டம் வேறென வெட்டிவிட்டான். அவனை நீதி அதிகாரிகள் கொலைக் குற்றத்துக்காக விசாரித்து தூக்கிலிடும்படி உத்தரவிட்டுவிட்டார்கள்.

இதற்கெல்லாம் காரணமென்ன. ஒப்பந்தக் கூலி ஏற்பாட்டின் கொடுமையே. ரெவரண்ட் ஆண்ட்ரூஸ் பிஜித்தீவுக்குப் போயிருந்தபோது அவனைக்கண்டு, அவனுடைய வ்ருத்தாந்தங்களை ஆதியோடந்தமாய் விசாரித்து, அவன்மேல் அனுதாபங்கொண்டு, பிஜித்தீவின் கவர்னரையும், நீதிபதியையும் கண்டு அவனுக்காகப்பரிந்து பேசி அவனை விடுதலைசெய்து உயிர்ப்பிச்சை வாங்கிக்கொடுத்தார். இதுபோல அநேக குற்றங்கள் பிஜித்தீவில் நடந்துவருகின்றன.

ஆண்களும் ஸ்த்ரீகளும் மனித வ்யவஸ்தையில்லாமல் ம்ருகங்கள்போல் நடந்துவரும் அந்த விடத்தில் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் செவ்வையாய் வளர்க்கப்பட்டு வருகிறார்களென்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை: அவர்களில் அநேகருக்கு தகப்பன் பெயர் தெரியாது. கல்யாணமென்பதும், பொறுப்பான குடித்தனமென்பதும் இருந்தாலல்லவா, ஸ்த்ரீகள் தங்கள் பிள்ளைகளை கவனிக்கப்போகிறார்கள். பிள்ளைகள் ஒருபக்கம், தாய்மார்கள் ஒருபக்கந்தான். அதிலும் அநேகந் தாய்மார்கள் புருஷர்களுடைய மாத்ஸல்யத்துக்கு இலக்காகி மாண்டு போவதுமுண்டு. அப்போது குழந்தைகள், அநாதைகளாகி விடுகிறார்கள். சில இடங்களில் இப்படிப்பட்ட குழந்தைகளை எடுத்து வளர்க்க கிறிஸ்தவ அநாதையாச்ரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஆச்ரமங்களுக்குப் போகாமல் தோட்டங்களிலேயே இருந்துவரும் சிறுவர்கள் கெட்ட ஸகவாஸத்திலேயே கலந்திருந்து, கெட்டவார்த்தைகளையும், கெட்ட நடவடிக்கைகளையும் கேட்டும் பார்த்தும் வருவதால், அவர்களுடைய மனஸில் ஸன்மார்க்கமென்பதே படாமல் தீயகுணங்களே நிறைந்துவிடுகின்றன.

இவ்விதம் பிஜித்தீவிலும் ஒப்பந்த ஏற்பாடுள்ள இதர தீவுகளிலும் இந்தியர்கள் தாழ்ந்த நிலைமையை அடைந்திருப்பதால், இவைகளுக்கெல்லாம் ஆதிகாரணமாயிருக்கும் ஒப்பந்தக் கூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிட வேண்டியது அவச்யமாகும். இந்த ஏற்பாடு கெட்டதென்றும் அதை ஒழித்துவிடவேண்டியதென்றும் இந்தியர்களும் கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எப்போது ஒழிப்படுமென்பதுதான் கேள்வி. இன்னும் 5-வர்ஷகாலம் இந்த ஏற்பாடு அமுலிலிருக்குமென்று தெரியவருவதாக ரெவரண்ட் ஆண்ட்ரூஸ் தெரிவித்திருக்கிறார். அப்படியானால், இன்னும் 5-வர்ஷகாலம் வரையில், புதிதாகப் பல இந்திய ஸ்த்ரீகள் தங்கள் மானத்தை இழக்க அந்தத் தீவுக்குப் போவார்களல்லவா. இன்னும் பல இந்தியர்கள் கங்காணிகளால் ஏமாற்றப்பட்டு, அங்கே போய் தீயவழியில் நடக்கநேரிடும். இன்னும் பல சண்டைசச்சரவுகளும், குத்தும் கொலையும் தற்கொலையும் ஏற்படக் காரணமாகும். மற்றெல்லாவிதத் தாழ்வுகளைவிட இந்திய ஸ்திரீகளுக்கு ஏற்படக்கூடிய மானக்கேடு ரொம்ப விஸனகரமாக இருப்பதால், இதை உத்தேசித்தாவது இந்த ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை உடனே நிறுத்திவிடவேண்டுமென்று இந்தியர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். திடீரென்று இந்த ஏற்பாட்டை நிறுத்திவிட்டால் பிஜித்தீவில் உள்ள தோட்டக்காரர்களுக்கு வேலையாட்கள் அகப்படாமல் திண்டாட்டமாகிவிடுமென்று அவர்களுக்கு



சிலர் சொல்லுகிறார்கள் என்று தெரிகிறது. 20, 30 வர்ஷகாலமாக இந்தியக் கூலியாட்களின் நிலைமையை உயர்த்தாமல், அவர்களைப்பலவிதத்தில் ஹிம்ஸித்து வந்த தோட்டக்காரர்கள் விஷயத்தில் அனுதாபங்காட்ட என்ன ந்யாயமிருக்கிறது. குடியேற்ற நாட்டு அதிகாரிகள், தோட்டக்காரர்கள் முதலியவர்களுடைய அசௌகர்யங்களை கவனிக்காமல் ஒப்பந்த ஏற்பாட்டை உடனே ஒழித்துவிட வேண்டுமென்பதே எல்லாருடைய விருப்பமுமாகும்.

---

## FEMALE EDUCATION.

BY. T. N. KRISHNASWAMI AIYER, M. A., L. T.,

### பெண் கல்வி.

நமது நாட்டு ஜனங்களின் ஆசார நடவடிக்கைகளில் சீர்திருத்தம் ஏற்படுகிற வரையில், பெண்கள் பள்ளிக்கூடம் போகிறகாலம் 12, 13-வயஸுக்குள்ளாகவே இருக்கும். ஆகையால் அந்த ஸ்வல்ப காலத்தில் அவர்களுக்கு, பிற்காலத்தில் வாழ்க்கையில் உபயோகமாகும் பாடங்களையே விசேஷமாகக் கற்பிக்கவேண்டும். பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கக்கூடிய பாடங்களின் விவரம் வருமாறு.

(1) ஸ்வதேச பாஷையில்.—ஸாதாரணமாய் எழுதவும், படிக்கவும். இக்காலத்து படிப்பினால் ஸ்வதேச பாஷைகளே க்ஷீண திசைக்கு வரும் போலிருக்கிறது. இங்கிலீஷ்படித்த புத்திமான்கள் தங்கள் தாயாரிடத்திலும் மனைவியிடத்திலும் இங்கிலீஷிலேயாவது அது கலந்தாவது பேசாமலிருக்க முடிகிறதில்லை. இதுபோதாமல், பெண்களும் சிறுவயது முதல் கொண்டே ஆங்கிலேய பாஷையில் பாடங்கள் கற்றுக்கொண்டால், ஸ்வதேசபாஷைகள் சீக்ரத்தில் நாசத்தை அடைந்துவிடும். இந்த விஷயத்தில் நம்தேசத்து மகா கவியாகிய ரபீந்த்ரநாத் டாகூர் (Rabindra Nath Tagore) என்னும் வங்காள கனவானிடத்திலிருந்து கற்றுகொள்ள வேண்டிய ஸமாசாரம் ஒன்றிருக்கிறது: அவருக்கு இங்க்லீஷில் விசேஷப்பயிற்சி உண்டென்றாலும் அவர் ஸ்நேகிதர்களோடு பேசுவது ஸ்வதேசபாஷையில்தான். முன்னால் பெங்காளி பாஷையில் கவனங்கள் எழுதிக்கொண்டுதான், பின்பு ஆங்கிலத்தில் மாற்றுவதாக நமக்கு தெரியவருகிறது.

(2) கணிதம்.—ஸாதாரணமாய் கூட்டல் கழித்தல் முதலியவும் இந்தியநாணய கடைக் கணக்குகளும்.

(3) ஸுகாதார விளக்கம்.—இதின் தத்வங்கள் ஒவ்வொரு பெண்ணுக்கும் தெரிந்திருக்கவேண்டியது. தங்கள் வீடுகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளுதல்; ஊரில் காலரா, ப்ளேக் முதலிய கொள்ளைநோய்கள் வரும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள்; இன்னும் தேகஸுகத்தைப் பற்றி அநேக ஸமாசாரங்கள்.

(4) தேகலக்ஷண சாஸ்த்ரம்.—மானிட தேக சாஸ்த்ரத்தின் முக்ய விஷயங்களும், குழந்தைகளை வளர்த்துப் பாதுகாக்கும் முறைகளும்.

(5) குடித்தனமுறை.—சமையல் வேலையும் ஸாதாரண தையல்வேலைகளும், துணிமணிகள் நன்றாய் வெளுக்கிறவிதமும் ஒவ்வொரு பள்ளிகூடத்தில் சொல்லித்தர ஏற்பாடு இருக்க வேண்டியது. ஐரோப்பிய தேசத்து பெண்களுக்கு மேல் சொன்ன ஒவ்வொரு ஸமாசாரங்களிலும் தேர்ச்சியடைய ஏற்பாடுகளுண்டு, அவைகளை தெரிந்துகொள்வதினால் நம்தேசத்தில் மத்ய ஸ்திதியிலிருக்கும் ஜனங்களுக்கு (Middle class families) ரொம்ப பயன் உண்டாகும்.

(6) ஸங்கீதம்.—இந்தக் காலத்தில் ஆங்கிலேய துரைசானிகள் ஸங்கீதம் என்கிற வ்யாஜத்தில் தங்களுக்கு தெரிந்த ஆபாஸமான பாட்டுகளையும் கோட்டுகளையும் ரம்பம்போட்டு அறுப்பது போல் ஹார்மோனியத்தை வைத்துகொண்டு கற்றுக்கொடுக்கிறார்கள். இது எல்லாவற்றிலும் துக்கிக்கவேண்டிய விஷயம். நமது பெண்களுக்கு கர்னாடக ஸங்கீதத்தில் ஸாதாரண தேர்ச்சி உண்டாவதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் ஏற்பாடிருக்கவேண்டும்.

(7) தேகப்பயிற்சி.—இந்தியர்களாகிய நாம் பலஹீனர்கள்என்றுபெயர் வாங்கியிருக்கிறோம். அதிலும் இந்திய ஸ்த்ரிகள் ரொம்ப கேவலம். சராசரி உயரம் 4½-அடிக்கு மேல் காண்பது அரிது. ஒருமாது இரண்டு பிள்ளை பெற்றுவிட்டால் பலமெல்லாம் ஒடுங்கிப்போகிறது. சிறு வயதில் பள்ளிக்கூடங்களில் தகுந்த ச்ரத்தையோடு தேகப்பயிற்சி செய்துவந்தால் பெரியவர்களாகும்போது அவர்கள் வீட்டுக் காரியங்களை பரிசாரகன் ஒத்தாசையில்லாமல் சுறுசுறுப்பாய் செய்வார்கள். தேகத்தில் தகுந்த ரத்த ஓட்டமும் பலமுமிருக்கும்.

(8) சாஸ்த்ரங்கள்.—பக்ஷி ம்ருகவர்க்கங்களை பற்றியும், செடி கொடி மரங்களைப்பற்றியும் இயற்கையில் காணப்படும் அநேக விஷயங்களைப் பற்றியும் நாம் வஸிக்கும் பூமி, சந்த்ரன், ஸூர்யன், க்ரஹணம், வால்நக்ஷத்ரம் போன்ற முக்கிய ஸமாசாரங்களைபற்றியும்.

(9) சித்ரம் வரைதல்—சித்ரவேலை செய்யவும், பார்த்து ஆனந்திக்கவும்.

(10) பொது அறிவு.—ராஜாங்க ஸமாசாரங்களும், உலகத்தின் தினஸரி நடவடிக்கைகளும், கோர்ட்டு தபாலாபீஸ் முதலியவைகளைப் பற்றியும், பூகோளசாஸ்த்ரமும்.

(11) மதபோதனை.—அநேக பள்ளிக்கூடங்களில் நமது மதத்தின் விஷயங்களைப்பற்றிக் கற்பிப்பதேயில்லை. இதுவுமல்லாமல் மிஷன் பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவ ஸுவிசேஷங்களும் பாட்டுகளும் சொல்லித் தருகிறார்கள். நம்முடைய மதம் ஸ்வதேச பாஷைகள்போல் நாசம் அடைகிறது. படித்தவர்கள் நாஸ்திகர்களாகவும் அநுசரம் படித்தவர்களாகவும் திரும்புகிறார்கள். ஆகையால் ஸநாதன தர்மத்தைப்பற்றி பாடங்கள் கட்டாயம் சொல்லித்தர ஏற்பாடு இருக்கவேண்டியது.

மேல்கண்ட முக்யமான விஷயங்களில் ஒவ்வொன்றிலும் கொஞ்சம் எல்லா பெண்களுக்கும் தெரிந்திருக்கவேண்டியது அத்யாவச்யமென்று தோன்றுகிறது. இதை யநுஸரித்து பாடசாலைகளில் தக்க சீர்திருத்தமுண்டானால்தான் நம் தேசத்துக்கு க்ஷேமம் விளையும்.

டி. என். க்ருஷ்ணசாமி அய்யர், எம்.ஏ., எல்.டி.

---

**நகர டப்பியின் விலையில் ஏற்றம்.**

தற்போது இங்லண்டிலிருந்து நகரத் தகடுகள் வரவழைப்பது ச்ரமமாயிருப்பதால், இந்தியாவிலுள்ள கிரஸின் எண்ணெய்க் கம்பெனிகள் எண்ணெயை டப்பாக்களில் போட்டு, டப்பாக்களாக விற்காமல், எண்ணெயை அளந்து விற்க தீர்மானித்திருக்கிறார்கள். இதற்காக அவர்கள் நகர டப்பாவின் விலையை 5-அணு வீதம் உயர்த்தியிருக்கிறார்கள். முன்பு இரண்டு டப்பாவும், அவை நிறைய எண்ணெயும் ரூ. 3-8-0 ஆக இருந்தது. இப்போது 4-2-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. டப்பா இல்லாமல் வாங்குவதானால் இரண்டு டப்பா எண்ணெய் முன்போலவே ரூ. 2-14-0 வுக்கு விற்கப்படும்.

**இந்திய பாதுகாப்புச்சேனை மசோதா.**

இந்த மாஸம் 21-ந்தேதியன்று இம்பீரியல் சட்டஸபையில் இந்திய ஸேனாதிபதியானவர் இந்திய பாதுகாப்புச்சேனை மசோதா ஒன்று கொண்டுவந்தார். அதில் முக்ய அம்சங்கள் என்னவென்றால், இந்தியாவில் 16-வயது முதல் 50-வரையிலுள்ள ஐரோப்பிய ப்ரிட்டிஷ் ப்ரஜைகளையெல்லாம் கட்டாயப்படுத்தி ராணுவத்தில் சேர்த்துக்கொள்வார்கள். இந்தியர்கள் ஸ்வதாவாக ராணுவத்தில் சேர்ந்துகொள்ளலாம். இந்தியர்கள் 18-வயதுக்குமேற்பட்டவர்களாயும் 41-வயதுக்குக் குறைந்தவர்களாயு மிருக்கவேண்டும்.



## OUR ECONOMIC POSITION.

## நமது பொருளாதார நிலைமை.

ஸமீபத்தில் நடந்த மைஸூர் ஜனப்ரதிநிதி ஸபையில் மைஸூர் திவான் ஸர் எம். விச்வேச்வர்யா மைஸூரிலுள்ள ஜனங்களின் கல்வி நிலைமையைப்பற்றியும் பொருளாதார நிலைமையைப்பற்றியும் கணக்குகளை எடுத்துச்சொல்லி, அந்த நாட்டுவாஸிகள் முன்னேற்றமடைவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், ஒவ்வொரு விஷயத்திலும் குறைந்தபக்ஷம் இவ்வளவு அபிவ்ருத்தி ஏற்படவேண்டு மென்றும் வற்புறுத்திச் சொன்னார். அவர் சொன்ன விஷயங்கள் நமது ராஜதானிக்கும் பொருத்தமாகையால் அவைகளை இங்கு எழுதுகிறோம்.

நாகரிகமும் முன்னேற்றமும் அடைந்துள்ள தேசங்களின் ஜனங்களையும் மைஸூர் ஜனங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மைஸூர் வாஸிகள் கல்வி விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் ரொம்பவும் கீழ்ப்பட்டிருக்கிறார்களென்று தெரிகிறது. முன்னேற்றமடைந்த தேசங்களில் மொத்தம் ஜனத்தொகையில் 100-க்கு 80 பேர்களுக்கு மேல் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். மைஸூரிலோ நூற்றுக்கு 8 பேர்களுக்குத்தான் எழுதப்படிக்கத் தெரியும். குறைந்தது நூற்றுக்கு 60 பேர்களுக்காவது எழுதப்படிக்கத்தெரியும்படி அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும்.

இங்லண்ட், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட், வேல்ஸ் இந்த நான்கு தேசங்களும் சேர்ந்த யுனைடட்கிங்டத்தில் மொத்தம் ஜனத்தொகையில் நூற்றுக்கு 20 பேர்கள் பள்ளிக்கூடத்தில் வாஸிக்கிறார்கள். கனடாவில் நூற்றுக்கு 20-பேர்கள் வாஸிக்கிறார்கள். ஆஸ்ட்ரேலியாவில் நூற்றுக்கு 14·7-பேர்கள் வாஸிக்கிறார்கள். ஜப்பானில் நூற்றுக்கு 14·8-பேர்கள் வாஸிக்கிறார்கள். ஆனால் மைஸூரிலோ நூற்றுக்கு 8-பேர்கள்தான் பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்கள். குறைந்தது நூற்றுக்கு 10-பேர்களாவது பள்ளிக்கூடத்தில் வாஸிக்கும்படி செய்யவேண்டும்.

இனி ஒவ்வொருவருடைய விவஸாய வரும்படி எவ்வளவென்பதைப் பார்ப்போம். கனடாவில் மொத்தம் ஜனத்தொகையில் சராசரியில் ஒவ்வொருவருக்கும் விவஸாயத்திலிருந்து 342 ரூபாய் வருமானம் கிடைத்துவருகிறது. ஆஸ்ட்ரேலியாவில் ஒவ்வொருவருக்கும் சராசரியில் ரூ 372 கிடைத்து வருகிறது. மைஸூரிலோ ஒவ்வொருவருக்கும் சராசரியில் கிடைக்கும் விவஸாய வருமானம் ரூ 24 ஆகும். ஒவ்வொருவருக்கும் குறைந்தது 45 ரூபாயாவது கிடைக்கும்படி விவஸாயத்தை சீர்திருத்தவேண்டும்.

ஜனங்களுக்கு எல்லா வகைகளிலும் கிடைக்கும் வருமானம் தலைக்கு இவ்வளவாகிறதென்பது அடியில் குறிக்கப்பட்டிருக்கிறது.

| | ரூ. |
|---|---|
| யுனைடட் கிங்டம் | 170 |
| கனடா | 555 |
| ஆஸ்ட்ரேலியா | 495 |
| மைஸூர் | 31 |

மைஸூரில் ஒவ்வொருவருக்கும் எல்லா வகையாலும் சராசரியில் 80 ரூபாயாவது கிடைக்கும்படி செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

சில முக்யமான தேசங்களில் சராசரியில் ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள ஆஸ்தி மதிப்பு விவரம் வருமாறு.

| | ரூ. |
|---|---|
| யுனைடட் கிங்டம் | 6000 |
| ப்ரான்ஸ் | 4875 |
| இட்லி | 1986 |
| கனடா | 4440 |
| ஆஸ்ட்ரேலியா | 3960 |

| | |
|---|---|
| ஜப்பான் | 1087 |
| மைஸூர் | 264 |

மைஸூர் ஜனங்களுக்கு சராசரியில் 500 ரூபாய் ஆஸ்தியிருக்கும்படி அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்த வேண்டும்.

கனடாவில் ஜனங்கள் சராசரியில் தலைக்கு 40ரூபாய்வீதம் ஸேவிங்க்ஸ் பாங்கிகளில் போடுகிறார்கள். ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஜனங்கள் சராசரியில் தலைக்கு 252 ரூபாய் வீதம் போடுகிறார்கள். அமெரிக்க ஐக்ய நாடுகளில் ஒவ்வொருவரும் 1,317ரூபாய் போடுகிறார்கள். மைஸூரிலோ சராசரியில் 1-ரூபாய் வீதம் ஸேவிங்க்ஸ் பாங்கியில் போடுகிறார்கள். மைஸூர் வாஸிகளுக்கு சராசரியில் குறைந்தது 10 ரூபாயாவது ஸேவிங்க்ஸ் பாங்கியில் இருக்கவேண்டும்.

அடியில் வரும் அட்டவணையில் சில குறிப்பிட்ட தேசங்களின் வ்யாபார மதிப்புத் தொகையானது சராசரியில் ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு விதமாகிறதென்பது குறிக்கப்பட்டிருக்கிறது.

| | ரூ. |
|---|---|
| யுனைடட் கிங்டம் | 386 |
| ப்ரான்ஸ் | 232 |
| இட்டலி | 106 |
| கனடா | 480 |
| ஆஸ்ட்ரேலியா | 495 |
| ஜப்பான் | 40 |
| மைஸூர் | 26 |

ஆகவே மைஸூரின் வ்யாபாரத்தை வ்ருத்தி செய்யவேண்டுமென் றேற்படுகிறது. குறைந்தது தலைக்கு 50 ரூபாயாகும்படி வ்யாபாரத்தை வ்ருத்தி செய்யவேண்டும்.

மேலே காட்டியபடி பொருளாதார ஸம்பந்தமாக மைஸூர் ஜனங்கள் ரொம்ப தாழ்வாயிருப்பதால், அவர்களுடைய நிலைமையை அபிவ்ருத்தி செய்ய தக்கமுயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மிஸ்டர் விச்வேச்வரய்யா சொன்னார்.

---

## REFORM OF THE INDIAN CONSTITUTION.

## இந்திய ராஜாங்க அமைப்பில் சீர்திருத்தம்.

சென்ற டிஸம்பர் மாஸம் லக்னௌவில் நடந்த காங்க்ரெஸில் ஸ்வயஆட்சி வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்தபோது இந்திய ராஜாங்க அமைப்பில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவைகளைக் கீழே விவரிக்கிறோம். அவைகள், எல்லா இந்திய காங்க்ரெஸ் கமிட்டியாரும் எல்லா இந்திய முஸ்லீம் லீக்கின் சீர்திருத்தக் கமிட்டியாரும் அங்கீகரித்தவைகளாகும்.

I. மாகாண லேஜிஸ்லேடிவ் கௌன்ஸில்கள்.

(1) மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் உள்ள மெம்பர்களில் 5-ல் 4-பாகத்தார் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாக இருக்கவேண்டும். பாக்கி5-ல் 1-பாகம் பேர்களை கவர்ன்மெண்டார் நியமனம் செய்யவேண்டும்.

2. பெரிய மாகாணங்களினின் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் 125 - மெம்பர்கள் இருக்கவேண்டும். சிறிய மாகாணங்களில் 50-முதல் 75-மெம்பர்கள் வரையில் இருக்கவேண்டும்.

3. கௌன்ஸில் மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்கான வோட்டர்களின் தொகையை அதிகமாக்கவேண்டும்.

4. ஜனஸங்க்யையில் குறைவாயுள்ள முக்யமான வகுப்பார்களுக்கு கௌன்ஸில்களில் போதுமான அளவு தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகள் இருக்கவேண்டும். மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் மகம்மதியர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகள் எத்தனை இருக்கவேண்டுமென்பது கீழே வருமாறு.



| | தெரிந்தெடுக்கப்பட்ட இந்திய ப்ரதிநிதிகளில் |
|---|---|
| பஞ்சாப் | 100-க்கு 50 |
| ஐக்யமாகாணங்கள் | 100-க்கு 30 |
| வங்காளம் | 100-க்கு 40 |
| பேஹார் | 100-க்கு 25 |
| மத்ய மாகாணங்கள் | 100-க்கு 15 |
| சென்னை | 100-க்கு 15 |
| பம்பாய் | மூன்றில் ஒன்று |

மகம்மதியர்கள் மகம்மதியர்களுக்கென்று ஏற்பட்ட ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களாக இருக்கலாமே யொழிய மற்ற ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களாக இருக்கக்கூடாது. ஆனால் ப்ரத்யேகமான உரிமைகளுக்காக ஏற்பட்ட ஸ்தானங்களுக்கு அவர்கள் அபேக்ஷகர்களாக இருக்கலாம்.

சட்ட ஸபையில் உத்யோகஸ்தரல்லாத ஒரு மெம்பர் ஏதாவது ஒரு வகுப்பை பாதிக்கக்கூடிய ஒரு மசோதாவோ, தீர்மானமோ கொண்டு வந்தாலுஞ் சரி அல்லது கொண்டுவந்த மசோதாவில் ஏதாவது ஒரு வகுப்பை பாதிக்கக்கூடிய பிரிவு இருந்தாலுஞ்சரி, அப்படி பாதிக்கக்கூடிய விஷயத்தைப்பற்றி பாதிக்கப்படும் வகுப்பைச் சேர்ந்த ப்ரதிநிதிகள் நிர்த்தாரணம் செய்வதாயிருந்து, அந்த வகுப்பு ப்ரதிநிதிகளில் முக்கால் வாசிப்பேர்கள் அந்த மசோதாவையோ, மசோதாவின் பிரிவையோ, தீர்மானத்தையோ ஆக்ஷேபித்தால் அதை (அதாவது மசோதா, மசோதாவின் பிரிவு, அல்லது தீர்மானத்தை)ப்பற்றி விவாதம் செய்யாமல் அதை நிறுத்திவிடவேண்டும். இந்த நிபந்தனை மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களுக்கேயன்றி இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களுக்கும் ஏற்கும்.

5. மாகாண கவர்ன்மெண்டின் தலைவர் (அதாவது கவர்னர், லெப்டினண்ட் கவர்னர் முதலியவர்கள்) லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் ப்ரெஸிடெண்டாக இருக்கக்கூடாது. கௌன்ஸிலுக்கு தனியாக ப்ரெஸிடெண்டைத் தெரிந்தெடுக்க அதிகாரம் கொடுக்கவேண்டும்.

6. கவர்ன்மெண்டார் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, கேள்விகள் கேட்ட மெம்பர்களேயன்றி மற்ற மெம்பர்களுக்கும் அதிகப்படியாகக் கேள்விகள்கேட்க அதிகாரம் கொடுக்கவேண்டும்.

7. (a) ஏற்றுமதி இறக்குமதி வரிகள், போஸ்டாபீஸ், தந்தி, சுரங்கம் இவைகளிலிருந்து கிடைக்கும் ரெவின்யூ, உப்புவரி, அபின் வருமானம், ரெயில்வே, தரைப்படை, கப்பல்படை இவைகளால் கிடைக்கும் வருமானம், ஸ்வதேச ஸமஸ்தானங்கள் செலுத்தும் கப்பம் ஆகிய இவைகள் எல்லாம் இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்தவையா யிருக்கவேண்டும். மற்றவருமான இனங்களெல்லாம் அந்தந்த மாகாணங்களைச் சேரவேண்டும்.

(b) எந்த வருமான இனத்தையும் மாகாண கவர்ன்மெண்டுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் பங்குபோடக்கூடாது. மாகாண கவர்ன்மெண்டுகள் ஒரு குறிப்பிட்ட தொகையை இந்தியா கவர்ன்மெண்டுக்கு செலுத்திவரவேண்டும். ஏதாவது எதிர்பாராத ஸம்பவங்கள் ஏற்பட்டு அதிகதொகை செலுத்தவேண்டுமென்றால், அப்போது செலுத்தவேண்டிய தொகையைக் கூட்டியும் குறைத்துங் கொள்ளலாம்.

(c) கடன் வாங்குவது, வரிபோடுவது, வரியை மாற்றுவது, வரவு செலவு மதிப்புதிட்டத்துக்கு அநுமதி கொடுப்பது முதலிய மாகாணத்தைச் சேர்ந்த உள்நாட்டு வியவஹாரங்களைத் தீர்மானிக்க மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கு பூரா அதிகாரமிருக்கவேண்டும். கவர்ன்மெண்டார் எல்லா செலவு இனங்களையும், அவைகளுக்குவேண்டிய பணத்துக்கு தீர்வை வஸூலிப்பதற்கான வழிகளையும் கண்டு ஒரு மசோதா தயாரித்து அதை சட்ட ஸபையில் கொண்டுவரவேண்டும்.

(d) மாகாண கவர்ன்மெண்டுக்குள்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும் சட்ட ஸபையில் மெம்பர்கள் தீர்மானம் கொண்டுவரலாம். தீர்மானங்களை சட்ட ஸபைக்குக் கொண்டுவந்து விவாதம் செய்வதைப்பற்றி சட்ட ஸபையாரே ரூல்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

(e) மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் செய்யப்பட்ட தீர்மானங்களை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னர் ஆக்ஷேபனை செய்தாலொழிய அவைகள் கவர்ன்மெண்டைக் கட்டுப்படுத்தும். எந்தத் தீர்மானமாவது கவர்னரால் ஆக்ஷேபிக்கப்பட்டுப்போய், பிறகு ஒரு வர்ஷம் கழித்து மறுபடியும் கௌன்ஸிலில் ஒப்புக்கொள்ளப் பட்டால், அந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஏற்று அதன்படி நடக்கவேண்டும்.

(f) சட்டஸபையில் எந்த விஷயத்தைப்பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தாலும் ஸபைக்கு வந்திருக்கும் மெம்பர்களில் 8-ல் ஒருபாகத்துக்குக் குறையாதபேர்கள் ஸம்மதப்பட்டால், அவஸரமும் முக்யமுமான வேறு குறிப்பிட்ட பொது விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பதற்காக, விவாதத்திலிருக்கும் விஷயத்தைப்பற்றிப் பின்னால் கவனிக்கலாமென்று மெம்பர்கள் தீர்மானங் கொண்டு வரலாம்.

(g) லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலுள்ள மெம்பர்களில் 8-ல் ஒருபாகத்துக்குக் குறையாதபேர்கள், கௌன்ஸில் மீட்டிங் ப்ரத்யேகமாகக்கூட வேண்டுமென்றால், ஷை கௌன்ஸில் கூட்டப்பட வேண்டும்.

(9) வரவு செலவு மசோதாவைத் தவிர இதர மசோதாக்களை கௌன்ஸில் மெம்பர்கள், கவர்ன்மெண்டின் அனுமதி பெறாமலே கௌன்ஸிலில் கொண்டு வரலாம். இப்படி மசோதாக்கள் கொண்டுவருவதை ஒழுங்குபடுத்த கௌன்ஸிலாரே ரூல்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(10) மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களால் தீர்மானிக்கப்பட்ட மசோதாக்கள், சட்டங்களாவதற்கு முன்னால், அவைகளுக்கு கவர்னர் அனுமதி கொடுக்கவேண்டும். ஆனால் அந்த மசோதாக்களை கவர்னர் ஜெனரல் இஷ்டப்பட்டால் ரத்து செய்துவிடலாம்.

(11) சட்டஸபை மெம்பர்களுடைய உத்யோககாலம் 5-வர்ஷமாக இருக்கவேண்டும்.

## II. மாகாண கவர்ன்மெண்டுகள்.

(1) ஒவ்வொரு மாகாணத்து கவர்ன்மெண்டுக்கும் கவர்னர் தலைவராக இருக்கவேண்டும். அவர் ஸாதாரணமாய் இந்திய ஸிவில் ஸர்விஸை யாவது, சாச்வதமான வேறு உத்யோகங்களை யாவது சேர்ந்தவரா யிருக்கக்கூடாது.

(2) ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு நிர்வாக கௌன்ஸில் இருக்கவேண்டும். கௌன்ஸிலும் கவர்னரும் சேர்ந்து மாகாணத்தின் நிர்வாக கவர்ன்மெண்டாக இருக்கவேண்டும்.

(3) ஸாதாரணமாக இந்திய ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்த உத்யோகஸ்தர்களை நிர்வாகக் கௌன்ஸிலில் மெம்பர்களாக நியமிக்கக்கூடாது.

(4) நிர்வாகக் கௌன்ஸில்களில் பாதிக்குக் குறையாமல் இந்தியர்கள் மெம்பர்களாக இருக்க வேண்டும். அந்த இந்தியர்களும் மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

(5) நிர்வாகஸபை மெம்பர்களின் உத்யோககாலம் 5-வர்ஷமாக இருக்கவேண்டும்.

## III. இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்.

1. இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் 150 மெம்பர்கள் இருக்கவேண்டும்.

2. அந்தக் கௌன்ஸிலில் 5-ல் 4-பாகம் பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாக இருக்கவேண்டும்.

3. மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் மகம்மதிய மெம்பர்களைத் தெரிந்தெடுக்க மகம்மதிய வோட்டர்கள் ஏற்படுத்தியிருக்கும் முறைக்குக் கூடியமட்டும் ஒத்ததாக இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பர்களைத் தெரிந்தெடுக்க வோட்டர்களை அதிகமாக ஏற்படுத்தவேண்டும்.

மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கு சில மெம்பர்கள் தெரிந்தெடுக்கவேண்டும்.

4. இந்திய மெம்பர்களில் மூன்றிலொருபாகம் பேர்கள் மகம்மதியர்களாக இருக்கவேண்டும். இவர்கள் பற்பல மாகாணங்களில் உள்ள ப்ரத்யேகமான மகம்மதிய வோட்டர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண ஸபையில் ப்ரத்யேகமான மகம்மதிய வோட்டர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மகம்மதிய மெம்பர்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்களோ அந்த அளவுக்குக் கூடியமட்டும் ஒத்ததாக அந்தந்த மாகாணங்களிலிருந்து மகம்மதியர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

1-வது ஸெக்ஷன் 4-வது பிரிவில் கண்ட நிபந்தனைகள் இங்கேயும் ஏற்கும்.

5. கௌன்ஸிலுக்கு ப்ரெஸிடெண்டை அந்தக் கௌன்ஸிலே தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

6. கவர்ன்மெண்டார் கேள்விகளுக்கு பதில் சொல்லும்போது, கேள்விகேட்ட மெம்பர்களே யன்றி மற்றவர்களும் அனுபந்தக் கேள்விகள் கேட்கலாம்.

7. மெம்பர்களில் அரைக்கால் வாசிக் குறையாதபேர்கள் கேட்டுக்கொண்டால், தனிக்கௌன்ஸில் மீட்டிங் ஒன்று கூட்டலாம்.

8. கௌன்ஸில் மெம்பர்கள் வரவு செலவு மசோதாவைத் தவிர மற்ற விஷயங்களைப்பற்றிய மசோதாக்களை கௌன்ஸிலுக்குக் கொண்டு வரலாம். இதற்கு நிர்வாக கவர்ன்மெண்டின் அனுமதி பெறவேண்டிய அவச்யமிருக்கக் கூடாது. இப்படி மசோதாக்கள் கொண்டுவருவதை ஒழுங்குபடுத்த கௌன்ஸிலே ரூல்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

9. கௌன்ஸிலில் பாஸ் செய்யப்பட்ட எல்லா மசோதாக்களும் சட்டமாவதற்கு கவர்னர் ஜெனராலுடைய அனுமதியைப் பெறவேண்டும்.

10. வரவு செலவு ஸம்பந்தமான எல்லா ப்ரேரணைகளையும் கவர்ன்மெண்டார் ஒரு மசோதாவாகத் தயாரித்து, அதையும் வரவு செலவு திட்டத்தையும் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் கொண்டுவந்து கௌன்ஸிலார் தீர்மானிக்கவிட வேண்டும்.

11. சட்ட ஸபை மெம்பர்களின் உத்யோககாலம் 5-வர்ஷமாக இருக்கவேண்டும்.

12. கீழ்க்கண்ட விஷயங்கள் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் அதிகாரத்துக்குள் பட்டிருக்கவேண்டும்.

(a) இந்தியா முழுவதுக்கும் ஒரேமாதிரி சட்டம் செய்யவேண்டியிருக்கும் விஷயங்கள்.

(b) ஒரு மாகாணத்துக்கும் இன்னொரு மாகாணத்துக்கும் உள்ள ரெவின்யூ ஸம்பந்தத்தை பாதிக்கக்கூடிய மாகாண வ்யவஹாரங்களைப் பற்றிய சட்டங்கள்.

(c) இந்திய ஸமஸ்தானங்கள் செலுத்தும் கப்பங்களைத் தவிர மற்ற இம்பீரியல் ரெவின்யூ ஸம்பந்தமான விஷயங்கள்.

(d) இம்பீரியல் கவர்ன்மெண்டின் செலவைப் பற்றிய விஷயங்கள். தேச பாதுகாப்புக்காக வேண்டிய ராணுவச் செலவுகள் ஸம்பந்தமாக கௌன்ஸிலில் செய்யப்படும் தீர்மானங்கள் மாத்ரம் கவர்னர் ஜெனரலைக் கட்டுப்படுத்தமாட்டா.

(e) இந்திய ஏற்றுமதி இறக்குமதி வரிகள் ஏற்படுத்துவது, எந்த வரியையும் போடுவது, மாற்றுவது, ரத்து செய்வது, நாணய ஏற்பாடு,

பாங்கி ஏற்பாடு இவைகளை மாற்றுவது, கைத்தொழில்களுக்குப் பண உதவி செய்வது.

(f) தேச முழுவதுக்குமான அரசாட்சி நிர்வகத்தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் பற்றிய தீர்மானங்களை கவனித்தல்.

13. இம்பீரியல் சட்ட சபையில் செய்யப்பட்ட தீர்மானங்களை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னர் ஜெனரல் ஆக்ஷேபித்தாலொழிய, அந்தத் தீர்மானங்கள் கவர்ன்மெண்டைக் கட்டுப்படுத்தும். ஆனால் ஒரு வர்ஷத்துக்குப் பிறகு அப்படி ஆக்ஷேபிக்கப்பட்ட அந்த தீர்மானங்கள் மறுபடியும் சட்ட சபையில் தீர்மானிக்கப்பட்டால், அவைகளின்படி கவர்ன்மெண்டார் நடக்கக் கடமைப்பட்டிருக்கவேண்டும்.

14. சட்ட ஸபையில் எந்த விஷயத்தைப் பற்றி விவாதம் நடந்துகொண்டிருந்தாலும், ஸபைக்கு வந்திருக்கும் மெம்பர்களில் 8-ல் ஒரு பாகத்துக்குக் குறையாதபேர்கள் ஸம்மதப்பட்டால், அவஸரமும் முக்யமுமான வேறு குறிப்பிட்ட பொது விஷயத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காக, விவாதத்திலிருக்கும் விஷயத்தைப் பற்றிப் பின்னால் கவனிக்கலாமென்று தீர்மானம் கொண்டுவரலாம்.

15 மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலோ, இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலோ செய்யப்பட்ட ஒரு மசோதாவை அரசர் அங்கீகரிக்க மறுப்பதாயிருந்தால், அவர் அது சட்ட ஸபையில் தீர்மானிக்கப்பட்ட காலம் முதல் 12 மாஸத்துக்குள் அதை அங்கீகரிக்க மறுக்கலாம். அப்படி மறுத்த விஷயம் சட்ட ஸபைக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து அந்த மசோதா ரத்தாகிவிடும்.

16. இந்தியா கவர்ன்மெண்டார் ராணுவ விஷயமாயும், இந்தியாவின் அன்யதேச வ்யவஹார விஷயமாயும், யுத்தம் தொடங்குதல், ஸமாதானம் செய்தல், உடன்படிக்கை செய்தல் ஆகிய இவைகள் விஷயமாயும் செய்யும் நடவடிக்கைகளில் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்குத் தலையிட அதிகாரம் இருக்கக் கூடாது.

## IV. இந்தியா கவர்ன்மெண்ட்

1. இந்திய கவர்னர் ஜெனரல் இந்தியா கவர்ன்மெண்டின் தலைவராக இருக்கவேண்டும்.

2. அவருக்கு ஒரு நிர்வாக ஸபை இருக்கவேண்டும். அதில் பாதிப்பேர்கள் இந்தியர்களாக இருக்கவேண்டும்.

3. அந்த இந்தியர்கள் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

4. இந்திய ஸிவில் ஸர்விஸிலுள்ள உத்யோகஸ்தர்களை கவர்னர் ஜெனரலுடைய நிர்வாக ஸபையில் மெம்பர்களாக நியமிக்கக் கூடாது.

5. இம்பீரியல் ஸிவில் ஸர்விஸுக்கு உத்யோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்ததாயிருக்க வேண்டும். இப்படி நியமிப்பதில் பற்பல வகுப்பார்களின் உரிமைகளையும், இது விஷயமாய் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் செய்யப்படும் சட்டங்களையும் அனுஸரிக்க வேண்டியது.

6. ஸாதாரணமாக இந்தியா கவர்ன்மெண்டார் மாகாணங்களின் உள்நாட்டு வ்யவஹாரங்களில் தலையிடக்கூடாது. மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அவைகளுக்காக வென்று கொடுக்கப்படாத அதிகாரங்களெல்லாம் இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்தனவாக இருக்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளின் நடவடிக்கைகளை பொதுவாய் மேற்பார்வை செய்து வரலாம்.

7. சட்டம் செய்தல், தேசத்தை நிர்வாகம் செய்தல் ஆகிய இந்த விஷயங்களில் இந்தியா கவர்ன்மெண்டார் கூடியமட்டும் இந்தியா மந்திரிக்குக் கீழ்ப்பட்டிராமல் ஸ்வயேச்சையாயிருக்க வேண்டும்.

8. இந்தியா கவர்ன்மெண்டின் கணக்குகளைத்



தணிக்கை செய்வதற்கு கவர்ன்மெண்டின் அதிகாரத்துக்கு உட்பட்டிராதபடி ஆடிடர்களை நியமிக்கவேண்டும்.

## V. இந்தியா ஸெக்ரேடரி.

1. இந்தியா ஸெக்ரெடரியின் ஆலோசனை ஸபையை எடுத்துவிடவேண்டும்.

2. இந்தியா ஸெக்ரெடரிக்கு தற்போது இந்தியா வரும்படியிலிருந்து சம்பளம் கொடுத்து வருவதுபோலில்லாமல் ப்ரிட்டிஷ்ராஜாங்கத்திலிருந்து சம்பளம் கொடுக்கவேண்டும்.

3. ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளை கவனிக்கும் மந்திரிக்கும் ஸ்வயஆட்சியுள்ள குடியேற்ற நாடுகளுக்கும் என்ன அதிகார ஸம்பந்தம் இருக்கிறதோ அதே ஸம்பந்தந்தான் இந்தியா ஸெக்ரெடரிக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இருக்கவேண்டும்.

4. இந்தியா ஸெக்ரெடரிக்கு உதவியாக இரண்டு சாச்வதமான உதவி ஸெக்ரெடரிகள் இருக்கவேண்டும். அவர்களில் ஒருவர் எப்போதும் இந்தியராக இருக்கவேண்டும்.

## VI. இந்தியாவும் ப்ரிட்டிஷ் ராஜ்யமும்.

1. ப்ரிட்டிஷ் ஏகாதிபத்ய வ்யவஹாரங்களை ஒழுங்கு படுத்தவோ, அவை விஷயமாய் ஏதாவது ஏற்பாடுகள் செய்யவோ ஏதாவது ஸபை ஏற்படுத்தப்பட்டாலுஞ்சரி கூட்டப்பட்டாலுஞ்சரி, அந்த ஸபையில் இந்தியாவின் உரிமைகளை எடுத்துக்காட்ட, ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளைப் போலவே, அவைகளுக்கு ஸமமான பாத்யதைகளுடன் போதுமான அளவு ப்ரதிநிதிகள் இருக்கவேண்டும்.

2. ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யமெங்கும் ப்ரிட்டிஷ் அரசரின் மற்ற ப்ரஜைகளுக்கு என்னென்ன அந்தஸ்தும், பாத்யதைகளும் உண்டோ அதே அந்தஸ்தும் பாத்யதைகளும் இந்தியர்களுக்கு இருக்கவேண்டும்.

## VII. ராணுவம் முதலிய இதர விஷயங்கள்.

1. ராணுவம், கப்பல் படை ஆகிய இவைகளில் உள்ள கமிஷன்ட் என்னும் உயர்ந்த உத்யோகங்களிலும், நான்—கமிஷன்ட் என்னும் தாழ்ந்த உத்யோகங்களிலும் இந்தியர்களை நியமிக்கவேண்டும். அந்த வேலைகளுக்கு இந்தியர்களைத் தெரிந்தெடுக்கவும், அவர்களுக்கு ராணுவ விஷயங்களைக் கற்றுக் கொடுக்கவும், பயற்சி செய்விக்கவும்வேண்டிய ஏற்பாடுகள்செய்யவேண்டும்.

2. இந்தியர்கள் வாலண்டியர்களாகச் சேருவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

3. இந்தியாவிலுள்ள நிர்வாக உத்யோகஸ்தர்களுக்கு நீதி அதிகாரங்கள் இருக்கக்கூடாது. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள நீதி இலாகா உத்யோகஸ்தர்கள் அந்தந்த மாகாணத்திலுள்ள உயர்ந்த கோர்ட்டுகளுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

---

**ப்ரொப்ஸர் எம். ரெங்காசாரியார்.**

சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜில் ஸம்ஸ்க்ருதம், பல பாஷா லக்ஷண சாஸ்த்ரம் இவைகளுக்கு போதகாரிருந்தவரும், புஸ்தகங்களின் ரெஜிஸ்ட்ராயிருந்தவருமான ப்ரொபஸர் எம். ரங்காசாரியார் சென்ற டிஸம்பர் மாஸம் காலகதியடைந்தார். அவர் 1861-ம் வர்ஷம் ஜனனமானார். சிலகாலம் கும்பகோணம், ராஜமஹேந்த்ரவரம், சென்னை இவைகளிலுள்ள கவர்ன்மெண்ட்காலேஜுகளில் பல பாடங்களுக்குப் போதகராயிருந்து, பிறகு சென்னை கையெழுத்து ப்ரதிகள் புஸ்தகசாலைக்குத் தலைவராகவும், புஸ்தகங்களின் ரெஜிஸ்ட்ராராகவும் இருந்தார். இவருக்கு ஸம்ஸ்க்ருதத்தில் விசேஷ ஞானமுண்டு.

**வேர்க்குருவுக்கு ஓர் மருந்து.**

ஓர் ஆழாக்குக் குளிர்ந்த ஜலத்தில் கொஞ்சம் உப்பைப்போட்டுக் கலக்கி வேர்க்குருவுள்ள பாகங்களில் தேய்த்துவர உடனே வேர்க்குருவினாலுண்டாகும் அரிப்பு, சொறிவு முதலிய ஸங்கடங்கள் நீங்கி ஸுகமுண்டாகுமென்றும், இவ்விதமே பலநாள் செய்துவந்தால் மேற்படி உபத்ரவம் முற்றுமே தொலைந்துபோகுமென்றும் சொல்லப்படுகிறது.

# EVIL TO HIM WHO EVIL THINKS.

BY. K. GOVINDA ROW.

## கேடுவோன் கேடுநினைப்பான்.

ஓர் அரசனிடத்தில் ஓவியனொருவனும் (சித்திர வேலைக்காரன்) தச்சனொருவனும் இருந்தார்கள். இவர்களுக்குள் பரஸ்பரம் பகையுண்டு. ஓவியன் தன் விரோதியாகிய தச்சனை எவ்விதத்திலாயினும் கொன்றுவிடக்கருதி, ஓர் ஸமயம், அரசன் ஸபையில் தனியே இருக்கையில், ஓர் கடிதத்தை கையில் வைத்துக்கொண்டு மிகவும் வணக்கத்துடன் தெரிவித்ததாவது:—மகாப்ரபுவே! நான் சில தினங்களுக்கு முன் தங்கள்பிதாவாகிய பெரிய மகாராஜா வஸிக்கும் ஸ்வர்க்கலோகம் போயிருந்தேன். அவ்விடத்தில் அவர் ஸௌக்யமாயும், ஸந்தோஷகரமாயு மிருக்கிறார். அன்புமிகுந்த தமது ஆசீர்வாதத்தை தங்களுக்கு சொல்லச் சொன்னார். அவ்விடத்தில் தான் வஸிக்க சிறந்த மாளிகையொன்று கட்டுவித்திருக்கிறார். என்னை சிலகாலம் அவ்விடம் வைத்துக்கொண்டு எனக்கு வேண்டிய அளவு வெகுமதிகொடுத்து ஊருக்கு திரும்பிப்போக உத்தரவு அளிக்கையில், இந்தக்கடிதத்தை தங்களிடம் கொடுக்கச்சொன்னாரென்று, அந்தக் கடிதத்தை அரசனிடம் கொடுத்தான். அந்த மூடசிகாமணியாகிய வேந்தனும், இவையெல்லாம் உண்மையென்று நினைத்து அக்கடிதத்தை வாசிக்க அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

என் அருமை புதல்வனுக்கு மேன்மேலும் அஷ்ட ஐச்வரியமும், தேகவலிவும், தீர்க்காயுளும் பெருகட்டும். நான் இவ்விடத்தில் யாதொரு குறைவுமின்றி ஸௌக்யமாகஇருக்கிறேன். நான் வஸிக்க ஓர் சிறந்தமாளிகை கட்டியிருக்கிறேன். ஆனால் நம் அரண்மனை தச்சனைக்கொண்டு சில வேலைகள் ஆகவேண்டி யிருப்பதால், இந்தக் கடிதம் கண்டவுடன் தாமஸிக்காமல் நம்தச்சனை இவ்விடம் அனுப்பவேண்டியது. இப்படிக்கு,

"உன் அன்புள்ள பிதா."

இந்தக்கடிதத்தை வாசித்து முடித்ததும் அரசன் தன்தச்சனை வரவழைத்து கடிதத்தின் கருத்தை அவனிடம்சொல்லி, தன்பிதாவிருக்கும் ஸ்வர்க்கலோகம்போய், அங்கு அவரால் சொல்லப்படும் வேலைகளை முடித்துவிட்டுவர உத்திரவுகொடுக்கவே, தச்சனும் ஒன்றும் தெரியாதவனாய், இவையெல்லாம் ஓவியனின் சூது தானென்று எண்ணி, அரசன் உத்தரவை மறுக்க முடியாதவனாய் "மகாராஜாவே! தங்கள் கட்டளையின்படி நான் பெரியராஜா வஸிக்கும் ஸ்வர்க்கலோகம் போய் வரத்தடையில்லை. ஆனால், அவ்விடம் போக எனக்கு வழிதெரியாது. அவ்வழியைக்காட்டினால் போகத்தயாராயிருக்கிறேன்." என்று சொல்லவே, அரசன் சித்ர வேலைக்காரனை கூப்பிட்டு அவ்விடம் போக வழிகாட்டச் சொல்ல அவனும் குறித்த ஒரு இடத்தில் நாலாப்பக்கங்களிலும் காஷ்டங்களை அடுக்கி அதன்மத்தியில் தச்சனை உட்காரவைத்து தீமூட்டிவிட்டால், அதனால் எழும்பும் புகையில் ஸ்வர்க்கலோகம் போக வழிகாணப்படும் என்று சொல்ல, தச்சனும் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி, அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு மிகவும் துக்கத்துடன் ஓவியன் செய்த சூதைநினைத்துக்கொண்டு தன்வீடு போய்ச்சேர்ந்தான். சித்ரவேலைக்காரனோ இன்றுடன் தன்விரோதி ஒழிந்தானென்று மனக்களிப்புடன் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

தச்சன் மனைவி அன்று தன் கணவன் மிகவும் துக்கத்துடனிருக்கிற காரணத்தை தனக்கு தெரிவிக்கவேணுமென்று வற்புறுத்திக் கேட்க, அவன் அரசன் ஸபையில் நடந்த வ்ருத்தாந்தங்களைச் சொல்லவே, மகா புத்திசாலியான அவன் மனைவி தன் கணவனை துக்கப்படாமலிருக்கும்



படிக்கும் அந்த இடத்தை தனக்கு காண்பித்தால் அவ்வாபத்தினின்றும் மீட்டுவைப்பதாயும் சொன்னாள். அவன் அரசனால் தான் ஸ்வர்க்கம் செல்ல ஏற்படுத்தியிருக்கும் இடத்தை தன் மனைவிக்கு காண்பிக்கவே, அவளும் அதைப் பார்த்து, "கணவ! நீர் எதற்கும் பயப்படவேண்டியதில்லை. நமது வீட்டிலிருந்து இந்த இடம் வரைக்கும் சுரங்கம் ஒன்று ஏற்படுத்தி அந்த த்வாரத்தை ஒருவரும் அறிந்துக்கொள்ளாதபடி ஒரு பலகையால் மறைத்துவைத்துவிட்டு குறித்த தினத்தில் அங்கு சென்று அப்பலகையின்மீது உட்கார்ந்துகொள்ளும். பிறகு தீமூட்டி பெரும்புகை கிளம்பியபின் ஒருவருமறியாதபடி அப்பலகையை யெடுத்தெறிந்துவிட்டு சுரங்கத்தின் வழியாய் வீடுவந்துசேரு" மென்று சொல்லக்கேட்ட தச்சனும், மனைவியின் புத்திசாதுர்யத்தை மெச்சி அவ்விதமே தன் வீட்டிலிருந்து அந்த இடம் வரைக்கும் சுரங்கம் வெட்டிப் பிறகு, அரசனிடம்போய் தான் ஸ்வர்க்கலோகம் போகத் தயாராக இருப்பதாய்த் தெரிவித்தான். உடனே அரசனும் ஒருதினம் திட்டம் செய்து ஓவியன் சொன்னபடி நாலாப்பக்கங்களிலும் காஷ்டங்களை அடுக்குவித்து மங்களவாத்யங்கள் முழங்க தச்சனை 'நீ ஸந்தோஷமாய் போய்வருவாயாக' வென்று சொல்லவே, அவனும் அரசன் உத்தரவின்படி விறகின் நடுவில் போய் உட்காரவே தீ மூட்டப்பட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் பெரும்புகை கிளம்பவே ஓவியன் அரசனைப்பார்த்து "மகாராஜாவே, அதோ தச்சன் ஸ்வர்க்கலோகம் போகிறான் பாருங்கள்" என்று காட்ட, அரசனும் அது உண்மைதானென்று எண்ணிக்கொண்டு தன் அரண்மனைபோய்ச் சேர்ந்தான்.

புகை கிளம்பிய சில நிமிஷங்களுக்கெல்லாம் தச்சனும் தன் பத்னி சொல்லியவண்ணம் அந்த சுரங்கத்தின் வழியாக ஸுகமாய் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

இது நடந்த ஒருமாஸம் வரைக்கும் தச்சன் தன் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பவேயில்லை. ஓவியனும் தன் பகையாளி மாண்டுபோய்விட்டானென்று மனங்களித்திருந்தான்.

பிறகு ஒருநாள் தச்சன் உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்து கையில் ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு ராஜஸபைக்கு வந்து, அரசனை நமஸ்கரித்து "இந்தக் கடிதம் தங்கள் பிதா தங்களிடம் கொடுக்கச்சொன்னார்" என்று கொடுத்தான். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது.

"என் அருமைக்குழந்தாய்! என் விருப்பத்தின்படி நீ தச்சனை இங்கு அனுப்பிவைத்தாய். அவனும் வெகு திறமையாய் நான் சொல்லிய வேலைகளை முடித்து என் மனோரதத்தைப் பூர்த்தி செய்தான். மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். இந்தக் கடிதம் பார்த்ததும் தவக்கமன்னியில் நம் அரண்மனை சித்ரவேலைக்காரனை இங்கு அனுப்புவாயாக. அவனைக்கொண்டு சில சித்ரங்கள் என் மாளிகையில் எழுதிவைக்க வேண்டும்.

இப்படிக்கு,

"உன் அன்புள்ள பிதா."

இவை யாவும் நிஜந்தான் என்று ப்ரமைகொண்ட அந்த மூடராஜன் ஓவியனை உடனே வரவழைத்து தந் தந்தையின் உத்தரவை அவனிடம் சொல்லி ஸ்வர்க்கலோகம் போகக் கட்டளையிட்டான். ஓவியனும் அங்கே சாகாமல் நின்றுகொண்டிருந்த தன் பகையாளி தச்சனைக் கண்டதும், இவையெல்லாம் தான் செய்த யோசனைக்கு ப்ரதியோசனை யென்று எண்ணி இனி போகமாட்டேன் என்று அரசனிடம் மறுதளிக்க தனக்கு முடியாதது கண்டு அப்படியே போய்வருவதாக ஒப்புக்கொண்டான். முன்மாதிரியே அதே இடத்தில் காஷ்டங்கள் அடுக்கப்பட்டு ஓவியனை அதன் மத்தியில் உட்

காரவைத்து தீ மூட்டினார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் சித்ரவேலைக்காரன் அக்னிக்கு இரையாகிவிட்டான். தச்சனும் தன் வீடுபோய்ச் சேர்ந்து தன் பத்னியின் புத்திக்கு மெச்சி ஸந்தோஷமாக காலம் கழித்துவந்தான்.

இதனால் நாம் பிறருக்கு கேடு நினைத்தோமானால் நமக்கே அந்தக் கேடு ஸம்பவிக்குமென்பதை இச்சிறு கதையினால் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் நாம் பிறருக்கு உபகாரம் செய்ய முடியாவிட்டாலும், நம்முடைய விரோதிகளாயிருந்தாலும் கேடு விளைவிக்கக்கூடாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதல்லவா?

கே. கோவிந்த ராவ்.

---

## THE MANUFACTURE OF LOOKING GLASSES.

## முகம்பார்க்கும் கண்ணாடி செய்தல்.

ஸாதாரண கண்ணாடியை முகம் பார்க்கும் கண்ணாடியாகச் செய்வதற்கு, கண்ணாடியின் ஒரு பக்கத்தில் பாதரஸம் தடவுகிறார்கள், ஆனால் ரஸத்தை வேறொன்றுடன் கலக்காமல் கண்ணாடியில் தடவினால் அது ஒட்டிக்கொள்ளாது. ரஸத்தைக் கண்ணாடியில் ஒட்டவைப்பதற்கு வெள்ளீயத் தகட்டை உபயோகிக்கிறார்கள். இந்தத் தகடு கடுதாசிபோல் ரொம்ப மெல்லியதாக இருக்கும்.

ரஸம் பூசவேண்டிய கண்ணாடியின் இரண்டு பக்கங்களையும் நன்றாய் சுத்தம் செய்யவேண்டும். முக்யமாய் ரஸம் பூசவேண்டிய பாகத்தைத்தான் ரொம்பவும் துடைத்து சுத்தம் செய்ய வேண்டும். கண்ணாடியில் ஸ்வல்ப அழுக்கு இருந்தாலும் ரஸம்பூசின பிறகு அது ரொம்ப எடுத்துக்காட்டும். ரஸம் பூசுவதற்கு உதவும் வெள்ளீயத் தகடு ஆறடி நீளமும், 10 அங்குலம் முதல் 44 அங்குலம்வரை அகலமுமுள்ளதாக இருக்கும். ரஸம் பூசுகிறவன் கண்ணாடியின் அளவுக்குத் தகுந்தபடி வெள்ளீயத் தகடுகளிலிருந்து துண்டுகள் நறுக்கி எடுத்துக்கொள்வான். ரஸம் பூசவேண்டிய கண்ணாடிகள் ரொம்ப பெரிய நிலைக் கண்ணாடிகளாயிருந்தால், அதற்காக கொஞ்சம் கெட்டியான வெள்ளீயத் தகடு செய்யச்சொல்லி, அதை உபயோகிப்பார்கள். ஈயத் தகடுகள் சுருள் சுருளாக விற்கப்படும். அதை விரித்து ரஸம் பூசவேண்டிய கண்ணாடியின் அகல நீளத்துக்கு ஒரு அங்குலம் அதிகமாக நறுக்கி எடுத்துக்கொள்வார்கள். ரஸம் பூசுவதற்காக ஒரு கல் உண்டு. அது ஸ்லேட் பலகையாலாவது, ஸலவைக் கல்லிலாவது செய்யப்பட்டிருக்கும். அது கொஞ்சங்கூட மேடு பள்ளமில்லாமல் ஸமனாயும் வழவழப்பாயுமிருக்கும். இந்தக் கல்லின்மேல் ஈயத் தகட்டை சுருங்கல் இல்லாதபடி வைத்து, வழவழப்பான ஒரு மர உருளையை அதன்மேல் நாலாபக்கங்களிலும் உருட்டி தகட்டை ஸமனாகவும் வழவழப்பாகவும் இருக்கும்படி செய்யவேண்டும். பிறகு ரஸத்தை ஒரு மரக் கிண்ணத்தில் ஊற்றிக்கொண்டு ஒருஇரும்பு அகப்பையால் எடுத்து தகடு முழுவதும் பரவும்படி அதன்மேல் ஊற்ற வேண்டும். ஊற்றினதும் கண்ணாடியை ரஸத்தின்மேல் வைக்கவேண்டும். ஆனால் அதை மேலிருந்து வைக்காமல், கண்ணாடியின் ஒரு ஓரத்தை முதலில் ரஸத்தில் வைத்து, மெதுவாகத் தள்ளிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் கண்ணாடியின் ஓரமானது வெள்ளீயத் தகட்டின்மேல் உராய்ந்துகொண்டு போவதால் தகட்டின்மேல் உள்ள ரஸத்தின் பெரும்பாகத்தை வழித்துக்கொண்டுபோகிறது. அதோடு ரஸத்திலுள்ள காற்றுக் கொப்புளங்களையும், அசுத்தங்களையும் வெளியே கொண்டுவந்து விடுகிறது. சுத்தமான ரஸம் ஒரு மெல்லிய படையாக கண்ணாடிக்கும் வெள்ளீயத் தகட்டுக்கும் நடுவில் தங்கியிருக்கும்.

கண்ணாடிகளுக்கு ரஸம் பூசுவதற்கு முன் அவைகளை எவ்வளவு நன்றாகத் துடைத்தாலும் அவைகளில் ஏதாவது மாசு மறு இல்லாமலிராது. ஆனால் அந்த மாசு மறுக்கள் ரஸம் பூசுவதற்கு முன் தெரியமாட்டா. ரஸம் பூசின பிறகு நன்றாய் எடுத்துக்காட்டும். ஆகையால் இப்படி அழுக்குகள் இருப்பதாக ரஸம் பூசின பிறகு தெரிந்தால், கண்ணாடியை வெள்ளீயத் தகட்டிலிருந்து எடுத்து அழுக்கைத் துடைக்க வேண்டியிருக்கும். சிலஸமயம் இரண்டு மூன்று தடவை எடுக்கவேண்டியிருப்பதுமுண்டு. விசேஷமாய் மழைக்காலங்களில் தான் இப்படி ஸங்கடங்கள் ஏற்படும்.

பெரிய கண்ணாடிகளை இரண்டொருதடவை தகட்டிலிருந்து எடுத்துவைக்க அதிக நேரம் பிடிக்குமாகையால், அதற்குள் வெள்ளீயமும் ரஸமும் ஒன்று சேர்ந்து கண்ணாடியில் ஒட்டிக்கொள்ளாமல் வீணாய்ப்போகும். ஆகையால் பெரிய கண்ணாடிகளுக்கு உபயோகிக்கும் வெள்ளீயத்தகடு கொஞ்சம் கெட்டியாக இருக்கவேண்டும். கெட்டியாயிருந்தால் ரஸம்முழுவதும் தகட்டோடு சேர்ந்துகொள்ளக் காலம் செல்லும். அதற்குள் கண்ணாடியை தகடுகளின்மேல் வைத்துவிடலாம்.

கண்ணாடியை சரியானபடி தகட்டின் மேல் வைத்து, காற்றாவது, அழுக்காவது கண்ணாடியிலில்லையென்று நிச்சயமாய்த் தெரிந்துகொண்ட பிறகு, கண்ணாடியின்மேல் எல்லாப் பக்கங்களிலும் இரும்புக் குண்டுகளையாவது ஈயக் குண்டுகளையாவது வைக்கவேண்டும். பெரிய கண்ணாடிகளாயிருந்தால் அநேக அந்தர் நிறையுள்ள குண்டுகள் வைக்கவேண்டியிருக்கும். இப்படி பாரம் வைப்பதால், வெள்ளீயத் தகட்டுக்கும் கண்ணாடிக்கும் இடையிலுள்ள அதிகப்படியான ரஸம் வெளியே வந்துவிடும். ரஸம் ஊற்றும் போது கல்லானது தரைக்கு ஸம மட்டமாக இருக்கும். பிறகு அதை வேண்டுமானால் சாய்வாக வைப்பதற்காக கல்லின் அடியில் வேண்டிய ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கும். கல்லின் நான்கு ஓரங்களிலும் நீண்ட வாய்க்கால் போன்ற பள்ளமிருக்கும். அதிகப்படியாக இருக்கும் கண்ணாடியில் பாரம் வைத்தபிறகு, கல்லை சற்று சாய்வாய் வைத்தால் கண்ணாடியில் உள்ள அதிகப்படியான ரஸமெல்லாம் வழிந்து வாய்க்கால் வழியாக ஓடி ஒரு மூலையில் விழ, அங்கிருந்து குழாய் வழியாக ஸீஸாவில் விழும்படி செய்து அதை சேகரித்துக்கொள்ளலாம்.

வெள்ளீயத் தகட்டில் ரொம்ப ரஸம் ஊற்ற வேண்டுமென்றாலும், கடைசியில் கண்ணாடியில் ஒட்டிக்கொள்ளும் ரஸம் ரொம்ப கொஞ்சந்தான். சற்று சாய்வாக் வைக்கப்பட்ட கல்லும் கண்ணாடியும் அதே நிலைமையில் அநேக மணிநேரம் இருக்கவேண்டும். கண்ணாடி ரொம்ப பெரியதானால் ஒருநாள் முழுவதும் அப்படியே இருக்க வேண்டும். பிறகு கண்ணாடியின் மேலுள்ள பாரங்களை எடுத்துவிட்டு, கண்ணாடியின் ஒரு பக்கத்தை சற்றுத்தூக்கி அந்த பக்கத்தில் கட்டைகளைக்கொடுத்து கட்டைகளின்மேல் வைக்க வேண்டும். மற்ற பக்கமானது கல்லின்மேல் இருக்கவேண்டும். இந்த இரண்டாவது பக்கத்தின் அடியில் கல்லில் ஒரு ஈயத்தகட்டை வைக்க வேண்டும். இப்படிக் கண்ணாடியை சாய்வாக வைப்பதால், கண்ணாடியின் அடிப்பாகத்திலுள்ள ரஸமெல்லாமொன்றுசேர்ந்து ஈயத்தகட்டால் இழுக்கப்பட்டு ஓரிடத்தில் சேர்ந்துகொள்ளும். கண்ணாடியை இவ்விதம் சாய்வான நிலைமையில் கண்ணாடியின் அளவுக்குத் தகுந்தபடி சிலமணி நேரம் முதல் மூன்று நான்கு நாள்வரையில் வைத்திருக்கவேண்டும். பிறகு எடுத்துப் பார்த்தால், ரஸமும் ஈயத்தகடும் ஒன்றுசேர்ந்து கண்

ணாடியில் நன்றாய் ஒட்டிக்கொண்டிருக்கும், அதிகப்படியான ரஸமொன்று மிருக்காது.

கல்லிலிருந்து கண்ணாடியை எடுக்க அதன் அளவுக்குத் தகுந்தபடி பலவழிகளிருக்கின்றன. ரஸம் பூசுகிறவனுக்கு இரண்டு கையாலும் பிடித்துத் தூக்கமுடியும்படி கண்ணாடி சிறியதாய் இருந்தால், அதை இரண்டு கையாலும் தூக்கி ஒரு சுவரோரமாய்வைத்து கண்ணாடியின் மேல்விளிம்பு சுவரில் சாய்ந்திருக்கும்படி வைக்கவேண்டும். அடிவிளிம்பிலும் ஒருமூலை உயர்வாயும் இன்னொன்று தாழ்வாயுமிருந்தால், கண்ணாடியிலுள்ள அதிகப்படியான ரஸம் தாழ்வான பக்கமாக வடியும். கண்ணாடி நீளமாயும் அகலம் குறைவாயுமிருந்தால், இரண்டுபேர்கள் சேர்ந்து பிடித்தெடுத்து முன்போல சுவரில் சாய்த்து வைக்கலாம். ரொம்ப பெரியதாக இருந்தால் வேறுவழிகள் அனுஷ்டிக்கப்படும். இப்படி சுவரில் சாய்த்து கண்ணாடியின் அளவுக்குத் தக்கபடி ஒருநாள்முதல் பலநாள்வரையில் வைத்திருந்தால் கண்ணாடியில் இருக்கக்கூடிய அதிகப்படியான ரஸம் முழுவதும் வடிந்துவிடும். பிறகு கண்ணாடியை எடுத்து சட்டம்போட்டு முகம் பார்க்கும் கண்ணாடி, நிலைக்கண்ணாடி முதலியவைகளாகச் செய்யலாம்.

இந்த முறைகள் ப்ளேட் க்ளாஸ் என்னும் உயர்ந்த கண்ணாடிக்கு ரஸம்பூச மாத்ரம் உபயோகப்படும். இவைகள் ரொம்பவிலை உயர்ந்தவை. மலிவான, முகப்பார்க்கும் கண்ணாடிகளுக்கு இந்தமுறைகள் பயன்படா. ஏனென்றால் மட்டமான கண்ணாடிகள் மெல்லியனவாகவும், மேடுபள்ளமுடையனவாகவும் இருக்கும். இவைகளின்மேல் பெரிய பாரத்தைவைத்தால், கண்ணாடிகள் உடைந்துபோகும். இவைகளை முன்சொன்ன ஸ்லேட் அல்லது ஸலவைக் கல்லில் வைத்து ரஸம் பூசுவதில்லை. ஒரு பெரிய அட்டை அல்லது ஸமமான பெட்டியின்மேல்வைத்து ரஸம் பூசுவார்கள். வேண்டிய அளவுக்கு வெள்ளீயத் தகட்டை நறுக்கி அட்டையின்மேல் வைத்து, அந்தத் தகட்டின்மேல் ரஸத்தை ஊற்றவேண்டும். முன்சொன்னபடி கண்ணாடியை ரஸத்தின் ஒரு ஓரத்தில்வைத்துத் தள்ளுவதில்லை. ரஸத்தின்மேல் சுத்தமான ஒரு கடுதாசியை வைத்து, அதன்மேல் கண்ணாடியை முழுவதும் படும்படி வைக்கவேண்டும். பிறகு கண்ணாடியை ஒருகையால் அழுத்திக்கொண்டு, இன்னொரு கையால் கடுதாசியைப்பிடித்து விரைவாக இழுத்தால் கடுதாசியும், அதன்கீழிருக்கும் ரஸத்தில் அதிகப்படியான பாகமும் காற்றுக்கொப்புளங்களும் வெளியில் வந்துவிடும். இந்தவேலை செய்வதற்கு ரொம்ப ஸாமர்த்யம் வேண்டும். இந்த வேலைகளுக்கு உபயோகப்படும் ஸாதாரண கண்ணாடி கொஞ்சம் வளைந்திருப்பதுண்டு. இந்தக் கண்ணாடிகளில் பள்ளமான பக்கத்தில்தான் ரஸம் பூசுவதுவழக்கம்.

---

"வர்த்தக யுக்தி."

மிஸ்டர் செல்லையப்ப முதலியார் எழுதியுள்ள இந்தப் புஸ்தகத்தில் வ்யாபாரம் செய்வது விஷயமாய் அறியவேண்டிய பல அரிய விஷயங்கள் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இதில் அவர் தொழில் ஆரம்பிக்கும் முன்னும், நடக்கும்போதும் கவனிக்கவேண்டிய பல விஷயங்களையும், கரார் விலை, விளம்பரம்செய்தல், கடன்வாங்கி வ்யாபாரம் செய்தல் முதலிய விஷயங்களைப்பற்றியும் தெளிவாக எழுதியுள்ளார். இதன் விலை அணு 4. வேண்டுவோர் சென்னை கலாரத்னாகரம் ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பொது எதிரிக்காக சண்டையை நிறுத்தினது.

போலண்டில் சண்டை நடக்குமிடங்களில் ஓநாயின் உபத்ரவம் அதிகமாயிருக்கிறதாக ஒரு பத்ரிகை நிருபர் தெரிவிக்கிறார். அவைகளைத் துரத்த மாக்ஸிம் பீரங்கிகளை உபயோகிக்கவேண்டி யிருக்கிறதாம். ஜெர்மன் போர்க்கள ஆராய்ச்சித் துருப்புகளும் ரஷ்யன் ஆராய்ச்சித் துருப்புகளும் ஸமீபத்தில் தமக்குள் சண்டையை நிறுத்திக்கொண்டு, இரு கக்ஷியாரும் ஒன்றுசேர்ந்துகொண்டு ஓநாய்களை வேட்டையாடி ஒழித்துவிட்டுப் பிறகு அவரவர்களுடைய இடங்களுக்கு வந்து மறுபடியும் சண்டைக்கு ஆரம்பித்தார்களாம்.



## TREES FOR CULTIVATING IN USAR AND WASTE LANDS.

BY Y. S. VENKATARAMANA AIYAR, B.A., B. L.

## களர் நிலங்களில் பயிராகக்கூடிய மரங்கள்.

(ஜனவரிமீ த்த ஸஞ்சிகையில் 17-ம் பக்கத் தொடர்ச்சி.)

(8) புளியமரம் (Tamarindus Indica).— பல இடங்களில் கொட்டைவிழுந்து மனித ஸகாயமில்லாமல்தானே உற்பத்தியாகிறது. பல இடங்களில் தோப்புகளைக் காணலாம். இதற்கு 'கொரம்பு' நிலம் ச்லாக்யமானது. இந்தமரம் சீக்ரமாகவளரக்கூடியதல்ல. ஆனால் நெடுநாள் பிழைத்திருக்கும். இம்மரத்தின் உபயோகங்கள் யாவரும் அறிந்தவையே. பழத்திற்காகவே இது உற்பத்தி செய்யப்படும். செக்கு, கடாமுளைகள் உலக்கைகள் முதலிய கெட்டி வேலைகளுக்கு மரம் உபயோகப்படும். கொட்டையிலிருந்து கஞ்சி செய்து கம்பளிக்குத் தடவுவார்கள். இப்பெரிய மரம் 80 அடி உயரம் வளரும். ஏழை ஜனங்கள் கொட்டையை வறுத்துத் தின்பதுண்டு. கொட்டையை வறுத்து இடித்து ஒரு ஜோடி மாட்டுக்கு தினம் 2 பட்டணம் படி தவிட்டுடன் கலந்து வைத்தால், அது மிகவும் புஷ்டியான உணவாகும். நிழலானது தேகஸௌக்யத்திற்கும் மற்ற மரங்களுக்கும் கெடுதியானது. ஒரு மரம் நாலைந்து ரூபாய் புளி கொடுக்கும். 1 கஜம் குழி எடுத்து அடியில் நாகதாளி போட்டு வேறு நல்ல மண்ணால் குழிகளை நிரப்பி நாற்றுகளை நட்டால் சீக்ரம் வளரும்.

(9) முறுக்கன், பலாசன், புரசன் (Butea Frondosa).—இது நடுத்தரமான மரம். விதைகள் சீக்ரம் முளைக்கும். களர் நிலங்களில் பெருவாரியாய் விதைத்துவிட்டால் மரங்கள் அநேகமாய் வளர்ந்து ஏராளமாக விறகு கிடைக்கும். தவிர, இதன் இலைகளை வட்டமாக தைத்து சாப்பிடுவதற்கு உபயோகிக்கலாம். ஹோமாதிகளில் சிறு கிளைகளும் துண்டுகளும் உபயோகப்படுத்தப்படும். மரத்தைகாயப்படுத்தினால்சிவந்த நிறமான கோந்து கிடைக்கும். புஷ்பத்தை படிக்காரத்துடன் சேர்த்து அரைக்க, சாயம் தடவ உதவும். விதையை அரைத்து சாப்பிட்டால் வயிற்றிலும் குடல்களிலுமுள்ள பூச்சிகள் சாகும். இது குதிரை வைத்யத்தில் அதிகமாய் உபயோகப்படும். இம்மரம் மாசி மாஸத்தில் புஷ்பிக்க ஆரம்பிக்கும். அப்பொழுது இதன் புஷ்பங்கள் செடியை மூடியிருப்பது பார்க்க அழகாக இருக்கும். இதன் இலைகளை உலர்த்தி கோட்டை கட்டி விற்பனை செய்வதுண்டு. காலி இடங்களில் உற்பத்தி செய்யக்கூடிய மரங்களில் இது சிறந்தது.

(10) விளா (The Wood Apple; Feronia Elephantum.) தனியாகவும் சர்க்கரை சேர்த்தும் தின்னக்கூடிய இதன் பழம் யாவரும் அறிந்தது. பித்தத்தைப் போக்கக்கூடியது. மரம் உறுதியுள்ளது. பட்டையை வெட்ட வெண்ணிறமுள்ள சுத்தமான கோந்து கிடைக்கும். ஸாதாரணமான பூமியில் விதையிலிருந்து உற்பத்தியாகும். நாற்றுகளை மழைக்காலத்தில் நட்டு விட்டால் வேறு உழைப்பில்லாமல் வளரும். ஒரு மரத்திலிருந்து நாலு ஐந்து ரூபாய் பழம்கிடைக்கும்.

(11) வேம்பு (The Neem or Margosa tree. Melia Azadirachta.). பாதை யோரங்களில் எப்பொழுதும் குளிர்ச்சி தரக் கூடிய இந்த மரத்தை அறியாதவர் இல்லை. க்ராமாந்தரங்களில் வேப்பந்தோப்புகளையும் காணலாம். மாரியம்மனுக்கு உரித்தான இம்மரம் ஹிந்துக்களால் பூஜிக்கப்படும். இதன் ஒவ்வொரு பாகத்திற்கும் மருந்து குணங்கள் உண்டு. கசப்பாயிருப்பதால் பூச்சிகள் மரத்தை பிடிப்ப

இல்லை. மரமானது உறுதியும் நெடுநாள் தாங்க கூடியதுமாதலால் பலவித தச்சுவேலைகளுக்கு உபயோகப்படும். கொட்டையினின்றும் எடுக்கப்படும் வேப்பெண்ணெய் மரத்தை நாசம்செய்யும் பூச்சிகளை கொல்லவும், விளக்கெரிக்கவும், மருந்து வகையிலும் உபயோகமாகும். அம்மையில் நோயாளியின் படுக்கைக்குப் பக்கத்தில் வேப்பிலை போடுவார்கள். த்ருஷ்டிகழிக்கவும் பேயோட்டவும் இலையைகையில்பிடித்துக்கொள்வார்கள். பட்டையை வெட்ட நோந்து கிடைக்கும். பட்டையை காயப்படுத்தினால் அதிலிருந்து பால்போன்ற நீர் பலநாள் வடிந்துகொண்டிருக்கும். வயிற்றுவலி நீங்கவும், உஷ்ணத்தை தணிக்கவும் ஷை பால் உபயோகமாகும். அநேக இடங்களில் அரச மரத்துடன் ஒட்டி வளர்ந்திருப்பதை காணலாம். இதன் பழத்தை காக்கை விருப்பத்துடன் தின்னும்.

(12) துலுக்கவேம்பு (Melia Dubia):—இது சீக்ரமாய் வளரக்கூடியது. இது பெரிய மரமாகும். இலை ஸாதாரண வேம்பின் இலையைவிட கருமையாகத்தோன்றும். மரம் லேசானது. சில இடங்களில் வீட்டுஸாமான்களுக்கு உபயோகிக்கிறார்கள். தேயிலை பெட்டிகளுக்கு ச்லாக்யமானது. இதன் உலர்ந்தபழம் வயிற்றுவலியைநீக்கும். கொட்டை சீக்ரம் முளைக்கும்.

(13) தேன்பச்சை (Guazuma tomentosa) (The Bastard cedar). அமெரிக்காவின் உஷ்ண ப்ரதேசங்களில் வளரும் இம்மரம் இப்பொழுது இந்தியாவில் அநேக இடங்களில் உற்பத்தியாகி வருகிறது. கொட்டையை உடைத்து அதிலுள்ள சிறு விதைகளை ஒரு சட்டியில் விதைத்தால் அவை சீக்ரத்தில் முளைக்கும். இதன் இலைகளையும் பழங்களையும் ஆடுமாடு குதிரைகள் மிகுந்த ஆவலுடன் தின்னும். இம்மரம் மேலேகுறித்த தூங்குமூஞ்சிமரம், அடியில் விவரிக்கப்படும் அத்திமரம், ஆக இந்தமூன்று மரங்களையும் வைத்து ஒவ்வொரு க்ராமத்திலும் ஒரு தோப்பாவது உற்பத்திசெய்வது மிகவும் ச்லாக்யமானகாரியம். மாட்டு தீவனத்திற்கு க்ஷாமமேற்படும் காலங்களில் இதன் நன்மை நன்றாய் விளங்கும். தேன்பச்சைப்பழம் பழுக்கும் பொழுது சிவப்பும் கறுப்பும் கலந்த நிறமாக மாறும். ஒரு செடியிலிருந்து ஏராளமான பழம் கிடைக்கும். கவலையின்றி மாட்டு தீவனமாக உபயோகிக்கலாம்.

(14) அத்தி (The Country fig; ficus glomerata). இதன் மரம் வீட்டுக்கதவுகளுக்குதான் உபயோகப்படும். சீக்ரத்தில் பிளப்பதில்லை. ஆகையால் கதவுகளுக்கு ச்லாக்யமானது. அத்திப்பாலை புண்களுக்கு தடவுவார்கள். ஏழைஜனங்கள் பழத்தை சிலகாலங்களில் சாப்பிட்டாலும், மனிதர்கள் ஸாதாரணமாய் இதை உபயோகிப்பதில்லை. காயைக் கறிசெய்து சாப்பிட்டால் பிடிப்பு, கீல்வாயு வ்யாதிகளுக்கு நல்லது. நன்றாய் பழுக்காத பழங்களைசேர்த்து வைத்தால் மாட்டுக்கு நல்ல உணவாகும். வட இந்தியாவில் ஷை பழங்களை உலர்த்தி குத்தி மாவுடன் கலந்து தட்டிவைத்து கொள்வார்கள். தன் வேர் ஊன்றும் இடங்களில் ஈரத்தை கொடுத்து தன்னிழலில் செடிகளை காப்பாற்றும் குணம் அத்திக்கு உண்டு. மரத்தில் பக்ஷிகளின் பொந்துகளில் நாற்றுகள் கிடைக்கும். கிளையைவெட்டி நட துளிர்த்துவரும்.

(15) சீரா ரப்பர் செடி (The Ceara Rubber tree; Manihot Gloziovii). தென்னமெரிக்காவிலிருந்துகொண்டு வரப்பட்ட இம்மரம் இப்பொழுது இந்தியாவில் எங்கும் ஸாதாரணமாய் வளருகிறது. ஒன்றிலிருந்து பலசெடிகள் கிளம்பும். கருவேலனைப்போல களர் நிலங்களிலும் கல்லாந்தரைகளிலும் நன்றாய் பரவுகிறது. வர்ஷந்தோறும் தரையில் தன் இலைகளை உதிர்த்து வளப்பமில்லாத நிலத்தையும் நல்ல நிலமாக்கும் குணமுள்ளது. இலைகள் சிறந்த எருவாகும். மரம் நன்றாய் எரியும். வளப்பமில்



லாத மணல்தரைபோன்ற நிலங்களில் 20-அடிக்கொன்றாக நட்டால் ஏராளமான சிறந்த விறகு கிடைக்கும். இவ்விடத்து மரங்களிலிருந்து ரப்பர்பால் விசேஷமாக உண்டாகவில்லை.

(16) சவுக்கு (Casuarina). விறகுக்காக இதை ஸமுத்ரக்கரை ஓரங்களிலும் உள்நாட்டில் பல இடங்களிலும் விசேஷமாய் பயிர் செய்திருப்பதை பார்க்கலாம். மணல்தரை, அல்லது மண் பொலபொலப்பாயுள்ள இடங்களில் நன்றாய் வளரும். அடிநிலத்தில் ஈரம் தாங்கக்கூடியதாயிருந்தால் ச்லாக்யம். மற்ற விறகுகளை காட்டிலும், ஒரு குறித்த நேரத்தில், சவுக்கு விறகால் உண்டாகும் சூடு அதிகம். தோப்பு உற்பத்திசெய்வதற்கு ச்லாக்யமான பூமி வேண்டியதில்லை. வெயில்காலத்தில் ஈரத்தை காப்பாற்றக்கூடிய நிலமாயிருந்தால்போதும். நாற்றுகள் ஸ்வல்ப விலைக்கு கிடைக்கும். 1000 நாற்றுகள் ரூ. 1—8—0 முதல் 3—0—0 வரை விலையாகும். 5-அடிக்கு ஒன்றாக நட்டு 4-வருஷமானதும் நடுவிலிருக்கும் மரங்களை வெட்டி 10-அடிக்கொன்றாக விட்டுவிட்டால், போட்டமுதலுக்கு அதிகமாக 4-வருஷத்தில் விறகு கிடைப்பதுடன், விடப்பட்ட மரங்கள் நல்ல லாபத்தை கொடுக்கும்.

(17) புன்கமரம். (The Indian Beech: Pongamia glabra).—மேல்பட்டையை எடுத்து விட்டால் கொட்டை சீக்ரத்தில் முளைக்கும். இது எப்பொழுதும் பசுமையாயிருக்கக்கூடிய மரம். தழை நல்ல எருவாகும். கொட்டை எண்ணெய் இறக்குவதற்காக விற்பனையாகும். தோல்பதனிடுவதில் புன்னெண்ணெய் விசேஷமாக உபயோகமாகும். இதன் பிண்ணாக்கு சிறந்த எருவாகும். ஸாதாரண நிலங்களிலும் புன்கமரம் வளரும். மரம் விறகாக உபயோகப்படும்.

(18) கண்ணாடி இலைமரம் (The Looking glass tree: Heritiera littoralis). இலைகளின் அடிப்பக்கம் பளபளப்பாயிருப்பதுடன் நிழல் ப்ரதிபிம்பம் காண்பதால் இதற்குகண்ணாடி இலை யென்றுபெயர் வைக்கப்பட்டது. கொட்டையின் மேல்பாகத்தை நறுக்கி நட்டுவிட்டால் சிலவாரங்களில் முளைத்துவிடும். மணல் ஸம்பந்தமான உவர்நிலம் ச்லாக்யமானது. 15-அல்லது 20-அடிக்கு ஒன்றுநடலாம். ஒருகன அடி மரம் 65-ராத்தல் நிறையுள்ளது. உறுதியாகவும் நெடுநாள் தாங்கக்கூடியதாயுமிருக்கிறது. மரம் ச்லாக்யமானதாக எண்ணப்பட்டு அதிகவிலையாக கல்கத்தாவில் விற்கிறது.

ஒய். எஸ். வெங்கட்டரமணய்யர், பி.ஏ., பி.எல்.

---

காலூகா போர்ட் ப்ரெஸிடெண்டுகள்.

சென்ற நவம்பர் மாஸம் நடந்த சட்ட ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் வ. ஸூர்யநாராயணராவ், உத்யோகஸ்தர்கள் ப்ரெஸிடெண்டாயுள்ள தாலூகா போர்டுகளுக்கு உத்யோகஸ்தர்களல்லாத ப்ரெஸிடெண்டுகள் நியமனம் செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார், அந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டார்கள். இப்போது அவர்கள் தக்க உத்யோகஸ்தர்களல்லாத கனவான்கள் அகப்பட்டால், அவர்களை தாலூகா போர்டுகளுக்கு ப்ரெஸிடெண்டாக நியமிப்பதைப்பற்றி ப்ரேரணைகள் செய்து அனுப்பும்படி கலெக்டர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

" நூதன விவஸாயநூல்."

இது வி. எஸ். ஆபரணம்பிள்ளை இயற்றியது. இதில் அவர் கண்டுபிடித்த ஒற்றை நாற்று நடும் முறை விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதோடு விவஸாய ஸம்பந்தமான ஜோதிஷ விஷயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 8. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜீ. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டிசெட்டித்தெரு, மதராஸ் என்றெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

ஜன்னல் கண்ணாடிகளை சுத்தம் செய்ய.

ஜன்னல் கண்ணாடிகளை சுத்தம்செய்ய ஜலத்தில் சிறிது நவச்சாரம் கலந்து கண்ணாடியை அலம்பி, அந்த ஜலத்தில் ஒரு ஷாமாய்த்தோலை நனைத்து நன்றாய்ப் பிழிந்து கண்ணாடியைத் தேய்த்து பளபளப்பாக்கலாம்.

## ANTHRAX.

### அடைப்பான்.

அடைப்பான் என்பது மனிதர்களையும் எல்லா ம்ருகங்களையும் தாக்கக்கூடிய ரக்த ஸம்பந்தமான ஒரு தொற்று வ்யாதியாகும். வீட்டு ம்ருகங்களில் இந்த வ்யாதியால் ரொம்பவும் பாதிக்கப்படக்கூடியவைகள் குதிரை, மாடு, ஆடு, யானை, ஒட்டகம் ஆகிய இவைகளாகும். நாய், பன்றி ஆகிய இவைகளுக்கு இந்த வ்யாதி உண்டாவது அபூர்வம். இந்தியாவிலுள்ள கால்நடைகளுக்கு இந்த வ்யாதி ரொம்ப அதிகமாக உண்டாகிறதென்று பலர் ஒருகாலத்தில் எண்ணி வந்தார்கள். ஆனால் இந்த வ்யாதியானது சில விஷயங்களில் தொண்டை யடைப்பானுக்கு ஒத்ததாக இருப்பதால், தொண்டையடைப்பானுள்ள மாடுகளையும் சேர்த்து, அடைப்பான் வ்யாதியால் அதிக மாடுகள் இறந்து போவதாக எண்ணி வந்தார்கள்.

இந்தியாவில் ஸமவெளிகளில் உள்ள கால்நடைகள் வெகுவாய் இந்த வ்யாதியால் தாக்கப்படுவதில்லை. மலை ப்ரதேசங்களில் ஆடுகளுக்குத்தான் இந்த வ்யாதி உக்ரமாய்ப் பரவுகிறது. அங்கே மாடுகளுக்கும் இந்த வ்யாதி அடிக்கடி உண்டாவதுண்டு. இந்த வ்யாதிக்காதாரமான விஷம் நிலத்துமண்ணில், வெகுவாய் சதுப்பான தாழ்ந்த நிலங்களின் மண்ணில் இருப்பது வழக்கம். அதோடு ஸம்பந்தப்பட்ட ஜலத்தின் மூலமாகவும், தீவனத்தின் மூலமாகவும் வயாதி பரவுகிறது. மாடுகளின்மேல் காயங்கள் இருந்தால், அதன் வழியாகவும் வ்யாதியின் விஷம் தேகத்திற்குள் புகுந்துவிடக்கூடும். ஈக்கள் மூலமாகவும் இந்த வ்யாதியின் விஷம் காயங்களில் சேரக்கூடும். ம்ருகங்களின் ச்வாஸத்தின் மூலமாக விஷம் தேகத்தில் சேருவது அபூர்வம்.

நமது தேசத்தில் சில ப்ரதேசங்கள் அடைப்பான் வ்யாதியுள்ள இடங்களாக இருக்கின்றன. அந்த இடங்களில் வர்ஷந்தோறும் க்ரமமாக இந்த வ்யாதி உண்டாகிறது. சிலவகை எருக்களாலும் இந்தவ்யாதி பரவுமென்று தெரிகிறது. இந்த வ்யாதிக்காதாரமான க்ருமி ரொம்ப வீர்யமுள்ளதாம். வெகுகாலம் வரையில் அதன் வேகம் குறைவதில்லையாம். அடைப்பான் வ்யாதியால் இறந்துபோன ம்ருகங்களின் பிணம், எலும்பு, தோல் ஆகிய இவைகளாலும் வ்யாதி பரவக்கூடும். ஆகையால் இவைகளின் தோல், எலும்பு முதலியவைகளைத் தக்கபடி தயார் செய்யாமல் உபயோகிப்பது சரியல்ல.

அடைப்பான் வ்யாதிகண்ட ம்ருகங்களில் நூற்றுக்கு 80 முதல் 100 வரையில் இறந்து போகின்றன. வ்யாதிக்ருமி தேகத்தில் சேர்ந்து, வ்யாதிக் குறிகள் வெளிப்படையாகத் தோன்ற இரண்டுமுதல் 3 நாள்கள் வரையில் செல்லும்.

#### வ்யாதியின் குறிகள்.

அநேக ஸமயங்களில் இந்த வ்யாதிகண்ட ம்ருகங்கள் வ்யாதிக்குறிகள் வெளிப்படையாகத் தெரியுமுன் திடீரென்று இறந்துவிடுவதுண்டு. வ்யாதி ரொம்ப வேகமாக ம்ருகங்களைக்கொன்றுவிடும். வ்யாதிகண்ட ம்ருகங்களுக்கு 106-டிக்ரி அல்லது 107-டிக்ரி காய்ச்சல் இருக்கும். வெளியில் தெரியும் ஜவ்வுகள் ரொம்ப வீங்கியிருக்கும். வயிற்றில் வலியுண்டாகும். மாடுபோடும் சாணி த்ரவரூபமாயிருப்பதோடு, ரத்தம் கலந்ததாயுமிருக்கும். மூத்ரத்திலும் ரத்தம் கலந்திருப்பதுண்டு. மாட்டின் தேகத்தில் பலவிடங்களில் வீக்கம் இருக்கும். சில ஸமயங்களில் மாடு ரொம்ப பரபரப்புடன் இருந்து பிறகு மயக்கமடைந்து விடுவதுண்டு. மாடு மூச்சுவிட ரொம்ப கஷ்டப்படும். கடைசியில் அது தள்ளாடிக் கொண்டு கீழே விழுந்து வலியால் காலையுதைத்துக்கொண்டு இறந்துபோகும்.



#### சிகித்ஸை.

வைத்ய சிகித்ஸை பெரும்பாலும் இந்த வ்யாதியில் பயன்படுவதில்லை. சில வைத்யர்கள் பினைல் மருந்தை உள்ளுக்குக் கொடுப்பது நல்லதென்றும், வேறுசிலர் கார்பாலிக் ஆஸிட், அயோடைன் முதலிய மருந்துகளை உபயோகிக்கலாமென்றும் சொல்லி வருகிறார்கள். இவைகள் வ்யாதியைக் குணப்படுத்துவது ஸந்தேகம். ஆண்டி ஆந்த்ராக்ஸ் ஸீரம் என்னும் மருந்தை, கிடைக்குமானால், அதிக அளவில் உபயோகித்துப் பார்ப்பது நல்லது.

#### வ்யாதி வராமல் தடுத்தல்.

எந்த விடத்திலாவது வ்யாதி உண்டானால், வ்யாதியுள்ள ம்ருகங்களைத் தனியான இடத்தில் கட்டிவைக்கவேண்டும். எப்போதும் கட்டுமிடத்தைக் காலி செய்துவிட வேண்டும். மாடுகளுக்கு புதிய தீவனம் போடுவதோடு, புது ஜலமும் கொடுக்கவேண்டும். வ்யாதிவராத ம்ருகங்களை புதிய மேய்ச்சல் தரைகளுக்கு ஓட்டிப்போவது அவசியம். வ்யாதியால் இறந்த மாடுகளின் சவத்தை அப்புறப்படுத்துவதில் ரொம்ப ஜாக்ரதையாக இருக்க வேண்டும். சவங்களை அறுத்துப் பரிசோதித்துப்பார்ப்பது உசிதமல்ல. அவைகளை நெருப்பிட்டு எரித்துவிடவேண்டும். இல்லது சுண்ணாம்புக்கல்போட்டு மூடிப்புதைத்துவிட வேண்டும். கூடியமட்டும் மாடுகள் இறந்த இடத்திலேயே இவைகளைச் செய்யவேண்டும். வேறிடங்களுக்கு சவங்களை எடுத்துக்கொண்டு போக வேண்டுமானால், மாட்டின் நவத்வாரங்களையும் நன்றாய் அடைத்து, சாணம் முதலியவை வெளியில் வந்து கீழே விழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். வ்யாதி இருக்கக்கூடுமென்று ஸந்தேகித்த ம்ருகங்களுக்கு இனகுலேஷன் செய்வது (அம்மை குத்துவது) நல்லது. சில தேசங்களில் இந்த வ்யாதிக்காக மாடுகளுக்கு அம்மைகுத்துவதுண்டு. இந்தியாவில் அந்த ஏற்பாடு ஸாதாரணமாய் ஏற்றதல்லவென்று சொல்லப்படுகிறது. அம்மை குத்தவேண்டுமானால் தக்க கால்நடை வைத்யர்களைக் கேட்டுக்கொண்டு செய்யலாம்.

---

## HINTS ON SCHOOL EXCURSION.

### மாணவர்களின் உல்லாஸ ஸஞ்சாரத்தைப்பற்றிய சில குறிப்புகள்.

தற்காலம் அநேக பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்கள் தாங்கள் கற்பிக்கும் பாடங்களில் உள்ள விஷயங்களை, நேரில் காட்டி கற்பிப்பதற்காக, அடிக்கடி மாணவர்களை, அவ்விஷயங்கள் ஸம்பந்தப்பட்டுள்ள இடங்களுக்குக் கூட்டிக்கொண்டுபோய் கற்பித்து வருகிறார்கள். உதாரணமாக, கூடுமானால் கடல்கரைக்குக் கூட்டிக்கொண்டுபோய்க் கடல் ஸம்பந்தமான விஷயங்களைக் கற்பிக்கிறார்கள். சிறு குன்றுகளுக்குக் கூட்டிக்கொண்டுபோய் மலைகளின் இயல்பைக் கற்பிக்கிறார்கள். தேசசரித்ர பாடம் கற்பிக்கும்போது, சரித்ரத்தில் வந்துள்ள முக்யமான இடங்களுக்குப் பையன்களைக் கூட்டிக்கொண்டுபோய் சரித்ரத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள், கோவில்கள், சிலாசாஸனங்கள், சண்டை நடந்த இடங்கள் முதலியவைகளைக் காட்டுகிறார்கள். தற்காலம் இவ்வழக்கம் அதிகமாகி வருவதால், உபாத்யாயர்கள் இதுவிஷயமாய் கவனிக்கவேண்டிய சில குறிப்புகளை இங்கு எழுதுகிறோம்.

பையன்களை வெளியில் கூட்டிக்கொண்டுபோகும்போது அவர்கள் பசியுடனிருக்கக்கூடாது. வயிறு நிறையச் சாப்பிட்டவுடனே கூட்டிக்கொண்டு போவதும் சரியல்ல. சாப்பிட்டு சற்று நேரமானபின் புறப்படவேண்டும். பையன்கள் திரும்பிவர ரொம்ப நேரமாகும்போலிருந்தால்,

அவர்களுக்கு வழியில் பசியெடுக்கு மாதலால், அவர்கள் ஸுலபமாய் எடுத்துக்கொண்டு போகக்கூடிய ஏதாவது ஸ்வல்ப ஆகாரம் கையில் கொண்டுவரச்சொல்லவேண்டும்.

பையன்களை வேறு ஊர்களுக்கு ரெயில் மூலமாய் அழைத்துப்போவதாயிருந்தால், முன்னாடியே ரெயில்வே அதிகாரிகளுக்குக் குறைந்த சார்ஜுகளுக்கு எழுதிக்கொள்ள வேண்டும். அதிகமான மாணவர்கள் போவதாயிருந்தால், ஸாதாரணமாய் வண்டியில் இடங்களை ரிஸர்வு செய்துகொள்ளுவது கூடும். கூடியமட்டும் இரவில் ப்ரயாணம்செய்வதை விலக்கிவிடவேண்டும்.

மாணவர்களை வெளியில் கூட்டிக்கொண்டு போகுமுன், அவர்கள் எதைப்பார்க்கப் போகிறார்களோ, அதைப்பற்றி அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். சரித்ர ஸம்பந்தமான ஸ்தலங்களைப் பார்ப்பதாயிருந்தால், அவர்களுக்கு அந்த ஸ்தலங்களினுடைய சரித்ரங்களைக் கற்பிக்கவேண்டும். தொழில் சாலையைப் பார்ப்பதானால் அவர்களுக்கு தொழில் முறையை மேலெழுந்தவாறு தெரிவிக்கவேண்டும். பெரியோர்களின் ஸமாதிகளைப் பார்ப்பதானால், அவர்களுடைய ஜீவ்ய சரித்ரத்தைக் கற்பிக்கவேண்டும். அவைகளைப் பார்க்கும்போது, உபாத்யாயர் அவைகளைப்பற்றி அதிகம் பேசுவது உசிதமல்ல. ரொம்ப நெருக்கமும் சத்தமும் உள்ள இடங்களில் இருக்கும்போது, உதாரணமாக யந்த்ரங்களில் வேலை நடந்துகொண்டிருக்கும்போது, உபாத்யாயர்கள் பையன்களுக்குக் கற்பிக்க முயலுவது நல்லதல்ல. எதைப்பற்றிப் பேசவேண்டுமானாலும் வெளியில் வந்தபிறகுதான் பேசவேண்டும்.

பையன்கள் வெளியில் போகையில், அவர்கள் ஒழுங்காய் நடக்கும்படி பயிற்சி செய்யவேண்டும். ஒரு கட்டிடத்தில் ஏதாவது ஒரு அறையைப் பார்க்கவேண்டியிருந்தால், ஒவ்வொருவராய் வரிசையாக உள்ளே நுழையச் செய்யவேண்டும். கூட்டமாய் நுழையவிடக்கூடாது. முதலில் நுழைந்த பையன் அறையின் கோடிக்குப்போக அவன்பின் மற்றவர்களும் வரிசையாகப் போகவேண்டும். பிறகு பையன்கள் உபாத்யாயரைச்சுற்றி வட்டமாக நிற்கவேண்டும். யாதொரு ஒழுங்குமின்றி கும்பலாய் உபாத்யாயரைச் சுற்றிக் கூடியிருக்கக்கூடாது. உபாத்யாயர் எந்த விஷயத்தைப் பற்றியாவது பேசினால் பையன்களெல்லாரையும் பார்த்துப் பேசவேண்டுமே யொழிய தமக்குப் பக்கத்திலிருக்கும் பையன்களை மாத்ரம் பார்த்து பேசக்கூடாது. யந்த்ரங்கள், விநோதப் பொருள்கள் முதலியவைகள் இருக்கும் அறைகளில் பையன்கள் கண்டபடி அலையாமல் வரிசையாகப் போகவேண்டும்.

ஒரே தடவையில் பல விஷயங்களைப் பார்க்க முயலுவதுகூடாது. ஆனால் நாட்டுப் புறத்திலுள்ள பையன்கள் பட்டணங்களுக்குப் போகும்போது மாத்ரம், அவர்கள் ஒரே ஸந்தர்ப்பத்தில் பல விடங்களையும் பார்த்து வருவதுதான் நல்லது. அப்படிப் பார்ப்பதில், ஒரு பட்டணத்தில் ஒரே விஷயமாய்ப் பல விடங்களிருந்தால் அவைகளுள் ஏதாவது ஒன்றைப் போய்ப் பார்வையிட்டால் போதும். உதாரணமாக பற்பல கைத்தொழில் கம்பெனிகள் இருந்தால் ஏதாவது ஒன்றைப் பார்த்தால் போதும்; பெரிய பட்டணங்களுக்குப்போனால், பட்டண முழுமையும் பொதுவாய் எப்படிக் காணப்படுகிறதென்பதைக் காட்டப் பையன்களை பட்டணத்தின் முக்யமான ரஸ்தாக்களில் நடத்தியழைத்துக் கொண்டு போகவேண்டும்.

பையன்களைக் கடல்கரைக்குக் கூட்டிக்கொண்டுபோனால் கடல் நீரின் வற்றுப் பெருக்கைக் காட்ட, ஜலம் மட்டம் உயர்ந்திருக்கும்போதும் ஜலம் மட்டம் தாழ்ந்திருக்கும்போதும் பையன்களைக் கொண்டுவந்து காட்டவேண்டும்.

உல்லாஸ ஸஞ்சாரத்துக்குப் போகும் மாணவர்கள் கூடியமட்டும் ஒரேவிதமான புத்தி அபிவ்ருத்தி யுடையவர்களா யிருப்பதுதான் சிறந்தது. அவர்கள் ஒரேவயதுடையவர்களா யிருக்கவேண்டு மென்பதில்லை. ஆனால் அப்படி ஒரேவிதமான அறிவு நிலைமையுள்ள மாணவர்களைத் தெரிந்தெடுப்பது கஷ்டமாகையால், ஒரே வகுப்பிலிருப்பவர்களை ஒரு கூட்டமாகக் கூட்டிக் கொண்டு போகவேண்டும்.



உல்லாஸ ஸஞ்சாரத்திற்கு எத்தனை மாணவர்களை அழைத்துப் போகலாமென்பது போகுமிடத்தின் தன்மையைப் பொருத்தது. கைத்தொழில் சாலைகளையும், பாடசாலைகளையும் பார்க்கப் போகும்போது அதிகமாக மாணவர்களை அழைத்துப்போவது உசிதமல்ல. அப்படிப்பட்ட இடங்களுக்கு 20-பேர்களுக்கு மேல் கூட்டிக்கொண்டு போகக்கூடாது. அதிகமான மாணவர்களை பெரிய பட்டணங்களைக் காட்ட அழைத்துக்கொண்டுபோனால், அந்தப் பட்டணங்களுக்குப் போனதும், மாணவர்களை சிறு தொகுதிகளாகப் பிரித்து, பட்டணங்களைச் சுற்றிப் பார்க்கச் செய்யவேண்டும்.

ஆபீஸுகளையும் ப்ரைவேட் கம்பெனிகளையும் போய்ப் பார்ப்பதாயிருந்தால், முன்னாடியே ஆபீஸ் அல்லது கம்பெனிகளின் யஜமானர்களுக்கு கடிதமெழுதி அநுமதிபெற்றுக்கொள்ள வேண்டும். கடிதமெழுதும்போது, இத்தனை பையன்களைக் கூட்டிக்கொண்டு போக உத்தேசமென்பதைத் தெரிவிக்கவேண்டும். கடிதத்தில் தெரிவித்த எண்ணுக்கு மேற்பட்டுப் பையன்களைக் கூட்டிக்கொண்டு போகக்கூடாது. பையன்களை அடிக்கடி ஒரே ஆபீஸுக்குக் கூட்டிக்கொண்டுபோவது ஆபீஸ் அதிகாரிகளுக்கு அருவெருப்பை யுண்டாக்கும். ஆகையால் ஒரு தடவை ஒரு பட்டணத்திலுள்ள ஆபீஸுக்கும், இன்னொருதடவை இன்னொரு பட்டணத்து ஆபீஸுக்குமாக அடிக்கடி மாற்றிப் போகவேண்டும்.

பையன்களுக்கு வழியில் தேக அஸௌக்யம் அல்லது வேறு ஏதாவது காயம் முதலிய உபத்ரவங்கள் ஏற்பட்டால் வைத்யம் செய்ய உபாத்யாயருக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

இந்த உல்லாஸ ஸஞ்சாரங்களின் நோக்கம் மாணவர்களுடைய கல்வி அபிவ்ருத்தியாகையால், அதற்கேற்ப நடப்பது அவச்யமாகும். உல்லாஸ ஸஞ்சாரம் வெட்டிக்கு அலைந்ததாக இருக்கக்கூடாது. மாணவர்கள் ஏதாவது கல்வி ஸம்பந்தமான விஷயத்தைக் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். இதற்காக முன்னாடியே இன்ன இடத்துக்குப் போவதால் இன்ன வித்யாபலன் ஏற்படும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டு, அதற்குத் தகுந்தபடி மாணாக்கர்களை உல்லாஸ ஸஞ்சாரத்தில் நடத்தவேண்டும். உல்லாஸ ஸஞ்சாரம் போய்வந்த பிறகு தாங்கள் பார்த்தவைகளைப்பற்றி ஸங்க்ரஹமான வ்யாஸ மெழுதும்படி மாணவர்களுக்குச் சொல்லவேண்டும். பாழாய்ப்போன கோயில் முதலிய கட்டிடங்களைப் பார்க்கப் போகும்போது, பையன்களைக் கொண்டு, அக்கட்டிடங்களின் அகல நீள விஸ்தீரணங்களை யளக்கச் சொல்லலாம். அவைகளுக்கு ப்ளான்களும் தயாரிக்கச் சொல்லலாம்.

முதல் முதல் ஏதாவது ஒரு இடத்துக்குப் போனால் அந்த விடத்தைப்பற்றிய விவரங்கள் எங்கு கிடைக்கும், அவ்விடத்துக்குப் போக என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும்; அதற்காகும் செலவு, அங்குள்ள விசேஷங்கள் ஆகிய இவைகளைப்பற்றி ஒரு ரிகார்டு எழுதிவைத்துக் கொள்ளவேண்டும். இது இருப்பது பின்னால் அவ்விடங்களுக்குப் போகிறவர்களுக்கு ஸாதகமாகும். இந்த ரிகார்டுகளை பள்ளிக்கூடங்களின் அதிகாரிகள் பரஸ்பரம்கொடுத்து உதவுவது நல்லது.

பையன்களை வெளியில் கூட்டிக்கொண்டு போகையில் இரண்டு விஷயங்களை முக்யமாக

கவனிக்கவேண்டும். பையன்கள் எந்தப்பொருளை அல்லது கட்டிடத்தைப் பார்ப்பதானாலும் அதற்கு வேண்டியமட்டும் ஸாவகாசம் கொடுக்க வேண்டும். பார்த்தது போதுமென்று அவஸரமாய்ப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வந்துவிடக் கூடாது.

பையன்கள் எந்த இடத்திலும் நடந்துபோகும்போது அவர்கள் தாராளமாய்ப் பேசிக்கொண்டுபோக இடங்கொடுக்கவேண்டும். உபாத்யாயர் பிள்ளைகளிடம் பேசும்போது மாத்ரம் அவர்கள் பேசுவதை நிறுத்திவிடவேண்டும். உபாத்யாயர் கையில் ஒரு ஊதுகுழல் வைத்திருப்பது நல்லது. இதனால் பையன்கள் பேசுவதை வேண்டும்போது நிறுத்துவதும், உபாத்யாயர் பேசுவதை கவனிக்கும்படி செய்வதும் ஸுலபமாகும்,

## HONEY ANTS.

## தேன் எறும்புகள்.

அமெரிக்கா ஐக்யநாடுகளின் தென்மேற்கு ப்ரதேசங்களிலும் மெக்ஸிகோவிலும் தேன் எறும்புகள் என்று ஒருவகை எறும்புகள் இருக்கின்றன. தேனை ஆகாரமாகக் கொள்வதால் இவைகளுக்கு தேன் எறும்புகள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மற்ற எறும்புவகைகளைப்போலவே இவைகளும் கூட்டங்கூட்டமாக குடும்ப வாழ்க்கையை அனுஸரித்துக்கொண்டு பூமிக்குள் புற்றுகள் கட்டி வஸிக்கின்றன. ஒவ்வொரு புற்றிலும் நான்குவித ஜாதிகள் இருக்கும். (1) வேலை செய்யும் தேன் எறும்புகள். இவைகளின் தொகைதான் ரொம்ப அதிகமாயிருக்கும். இவைகளெல்லாம் பூர்ண வளர்ச்சியடையாத பெண் எறும்புகளாகும். இவைகள் உருவத்தில் பெரியவை, நடுத்தரமானவை, ரொம்ப சிறியவையென மூன்று வகைப்படும். (2) ராணிகள்; இவைகள்தான் முட்டையிட்டு வம்சத்தை வ்ருத்தி செய்பவையாகும். கூட்டிலுள்ள எறும்பு ஸமூகத்துக்கு இவைகள் தாய்மார்களாகும். இவைகளுக்கு சிறகுகள்கிடையா. இவைகள்புற்றில் ரொம்பஇருட்டான பாகங்களில் தங்கியிருக்கும். (3) சரியான வளர்ச்சியுள்ள பெண் எறும்புகள். இவற்றிற்கு அழகான சிறகுகளுண்டு. (4) ஆண் எறும்புகள். இவைகளுக்கும் சிறகுகள் உண்டு.

வஸந்தகாலத்தில் வேலைசெய்யும் வகுப்பு எறும்புகள் செடிகளிலுள்ள புஷ்பங்களிலிருந்து தேன் சேகரித்துக்கொண்டு வருவது வழக்கம். செடிகளில் உள்ள இளசானபாகங்களில் ஒருவித அஸர்கள் (அசுகு) தங்கிக்கொண்டு, செடியிலிருந்து தித்திப்பான ரஸத்தை க்ரஹித்துக்குடிக்கின்றன. அஸர்களின் தேகவளர்ச்சிக்கு எவ்வளவு வேண்டுமோ அதுபோக மீதியான பாகம் தேகத்திலிருந்து கசிந்து வெளிவந்து இலைகளில் விழுந்துவிடும். அல்லது தேகத்தின் வெளிப்புறத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும். வேலை செய்யும் எறும்புகள் இந்தத்தேனையும் சேகரித்துக்கொண்டு புற்றுக்குத் திரும்பும். வேலைசெய்யும் எறும்புகள் புற்றுக்குப்போனதும், அங்குள்ள மற்ற எறும்புகளில் பசியாயிருப்பவைகளுக்குத் தேனைக்கொடுத்துதவும். புஷ்பங்கள் வஸந்த காலத்தில் தானதிகம். மற்றகாலங்களில் குறைந்திருக்கலாம். அல்லது தேன்கொடுக்கும் புஷ்பங்கள் பூக்காமலிருக்கலாம். மற்ற காலங்களில் ஆஹாரத்துக்குத் திண்டாடாமலிருப்பதற்காக இந்த எறும்புகள் தேனை சேகரித்து வைத்துக்கொள்ளுகின்றன. இதற்கு அவைகள் செய்வதென்னவென்றால், வேலை செய்யும் எறும்புகளுள் பெரியவையாயிருப்பவைகளில் சில மற்ற வேலையாட்கள் கொண்டுவரும் தேனை



வாயில் வாங்கிக்கொண்டு, அவைகளினுடைய இரைப்பையின் ஒரு பாகத்தில் சேர்த்துவைக்கின்றன. தங்களுடைய பசியைத் தீர்த்துக்கொள்ள எவ்வளவு வேண்டுமோ அவ்வளவை மாத்ரம் இரைப்பையின் வேறு பாகத்தில் சேர்த்து ஜீர்ணம் செய்கின்றன. தேனில் மற்ற பாகம் எவ்விதத்திலும் மாறுபடாமல் பின்னால் வேண்டும்போது உபயோகப்படக்கூடியதாயிருக்கிறது. இந்த எறும்புகள் அறைகளின் கூரைகளில் ஒட்டித் தொங்கிக்கொண்டிருக்கும். ஏதாவது ஒரு வேலையாள் வெளியிலிருந்து திரும்பி வந்து அது கொண்டுவந்த தேனை பத்ரப்படுத்தி வைக்கவேண்டுமானால், தொங்கிக்கொண்டிருக்கும் இந்த எறும்புகள் தங்கள் வாயைத்திறந்து கொண்டுவந்த தேனை உட்கொள்ளும். பசியாயிருக்கும் எறும்புகள் தேன்வேண்டுமென்று கேட்டாலும், தேனைக்கொடுத்து உதவும். இந்தஎறும்புகள் வேறு ஒருவேலையும் செய்வதில்லை. தேனை வாங்கி வைத்துக்கொண்டு கேட்டவைகளுக்குக் கொடுப்பதுதான் இவைகளுடைய வேலையாகும்.

தேன் எறும்புகள் பகல் வேளைகளில் வெளியில் வருவதில்லை. இரவில் அதாவது ஸூர்யாஸ்தமனமாகி அரைமணிக்குப் பிறகுதான் வெளியில் வரும். இதனால் அவைகள் பறவைகள், பல்லிகள் முதலியவைகளினிடம் அகப்படாமல் தப்பித்துக்கொள்ளுகின்றன. இரவில் ஸஞ்சரிக்கும் சில தேரைகளும் ஆன்ட் லையன் என்னும் ஜந்துவுந்தான் அவைகளைத் தாக்கக்கூடிய விரோதிகளாகும்.

எறும்புகள் தாங்களிடும் முட்டைகளைக் காப்பாற்றுவதில் ரொம்ப கவனம் எடுத்துக்கொள்ளுகின்றன. ஆகையால் குஞ்சு பொரிக்காமல் வீணாகப்போகும் முட்டைகளின் தொகை ரொம்ப ஸ்வல்பமாகும். எல்லா முட்டைகளும் குஞ்சு பொரித்து எறும்புகளாகி, அவைகளில் எல்லா பெண் எறும்புகளும் மறுபடியும் முட்டையிடுவதென்றிருந்தால், வம்சம் ரொம்பப் பெரியதாகி, ஜீவனத்துக்குத் திண்டாடவேண்டியிருக்கும். இந்தத் தொந்தரவு ஏற்படாதபடி எறும்புகள் தங்களுடைய வம்ச வ்ருத்தியை ஒழுங்குபடுத்திக்கொள்கின்றன என்று சொல்லப்படுகிறது. எல்லா எறும்புப் புழுக்களுக்கும் தகுந்த அளவு ஆகாரம் கொடுக்காமல், வம்ச வ்ருத்திக்குவேண்டிய தொகை பெண் எறும்புப் புழுக்களுக்கு மாத்ரம் பூரா உணவு கொடுத்து, அவைகளை சரியாய் வளர்க்கின்றனவாம். மற்ற புழுக்களுக்கு ஸ்வல்ப உணவே கொடுப்பதால் அவைகளுடைய ஜனனேந்த்ரியங்கள் சரியாய் வளராமல் வம்சவ்ருத்திக்கு லாயக்கில்லாமல் போய் வேலை செய்யும் ஜாதிகளாக ஆகிவிடுகின்றன. இந்தப் பெண் எறும்புகளுக்கு பெண்களுக்கு இயல்பாயுள்ளதான சிசுக்களைப் பராமரிக்கும் குணம் மாத்ரம் போகாமலிருக்கும். அதனால் இவைகள் எறும்புப் புழுக்களை ஸர்வ ஜாக்ரதையுடன் பராமரித்துவருகின்றன.

வேலை செய்யும் எறும்புகளில் எல்லாமே தேன் சேர்த்து வைத்துக்கொள்ள லாயக்காயிருப்பதில்லையாம். எறும்புப் புழுக்களிலிருந்து எறும்புகள் வெளிப்பட்டவுடன் அவைகளினுடைய தேகத்திலுள்ள உறுப்புகள் பலமடைய ஆரம்பிக்கின்றன. ரொம்ப உறுதியாக ஆகிவிட்டால், அவைகள் தேன் சேர்த்து வைத்துக்கொள்ள முடியாமல் போகும். ஏனென்றால், அவைகளின் வயிற்றிலுள்ள இரைப்பையானது தேன் அதிகமாக வந்து சேரச்சேர உப்பிப் பெருக முடியாமல்போய்விடும். இதற்காக புதிதாய் புழுவிலிருந்து வெளிவந்த எறும்புகளின் தேகம் ரொம்ப கடினமாகப் போகுமுன் அவைகளைத் தேன் சேகரித்து வைத்துக்கொள்ள நியமித்துவிடுவது வழக்கமாம். அவைகள் ஆயுள் முழுவதும் ஜெயிலிலடைத்ததுபோலிருப்பதில்லை. வயிற்றிலுள்ள தேன் தீர்ந்தவுடன் அவைகள் மற்ற எறும்புகளைப்போல் வேலை செய்ய ஆரம்பிக்கும்.

## MANATHAKKALI.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

## மணத்தக்காளி.

இச் செடியின் இலை முதற்கொண்டு எல்லா பாகமும் சாப்பாட்டுக்கு உபயோகமானவை. இதன் இலை குண்டு ப்ரமாணமாய் கொத்துக் கொத்தாய்க் காய்க்கும். செழிப்புள்ள நிலங்களில் அங்கு மிங்குமாய் இச்செடிகள் காட்டுத்தனமாய் வளர்ந்து பலன் தரும், இந்தியாவில் முக்யமாய்த் தென்னிந்தியாவில் க்ராமாந்திரங்களில் இச் செடிகளை வைத்து வளர்ப்பதை ஸ்திரீகள் தொழிலாக வைத்துக் கொண்டு பாடுபடுகிறார்கள். இச் செடிகளுக்காக இவர்கள் வெகு ப்ரயாசைப் படுவதில்லை. ஆடி மாஸத்தில் ஒரு மழை பெய்ததும், காற்றினாலும், வேறு வகைகளினாலும் வீட்டின் புறக்கடைக் குப்பை மேடுகளிலும் பிற விடங்களிலும் போய்த் தங்கியிருக்கும் இச்செடியின் விதைகள் கும்பல் கும்பலாகவும் தனியாகவும் முளைத்திருக்கும். இந்தச் செடிகளைக் கொண்டு வந்து தோட்டத்தின் ஒருபுறத்தில் விசாலமாய் நடுவார்கள். இரண்டொருதடவை ஜலம் விடுவதற்குள் மழையும் ஒத்துக்கொள்ள தண்ணீர் விடும் ச்ரமத்தையும் அவர்கள் அதிகம் வகிப்பதில்லை. இச்செடிகள் இரண்டொரு மாஸத்திற்கெல்லாம் நன்றாய்ப்படர்ந்து கப்புங் கிளையுமாகி பூத்துக்காய்த்துப் பழுத்துவிடுகின்றன. குழந்தைகள் முதற்கொண்டு விளையாட்டாகச் செடிகளில் காய்களைப்பறித்துச் சேர்ப்பார்கள். இவைகளைப் பச்சையாக வெயிலில் உலர்த்தி எடுத்துச் சரக்காகச் சேர்த்துவைப்பதுண்டு. சில வேளைகளில் வீட்டின் ஸொந்த உபயோகத்தின் பொருட்டு உப்புப்போட்டும் உபயோகித்துக்கொள்வார்கள். பச்சையாகப்பறித்து உப்பும் புளித்த மோரும் சேர்த்து ஊறுகாய்ப்போட்டு இம்மணத்தக்காளிக்காயை ஹிந்துக்கள் உபயோகிக்கிறார்கள். பச்சை மணத்தக்காளிக்காயை நெய்யிலோ எண்ணெயிலோ முதலில் வதக்கி எடுத்துக்கொண்டு சிறிதுபுளியும் மிளகாய்ப்பொடியும் சேர்த்துக் குழம்பிட்டுச் சாப்பிட மிகுந்த ருசியுள்ளதாயிருக்கும். மணத்தக்காளி இலையை வேகவைத்து பச்சைப்பயிறு அல்லது துவரம் பருப்பு சேர்த்து கூட்டாகவும் கறியாகவும் செய்து உட்கொள்ள தேகத்திலுள்ள அதி உஷ்ணத்தையும் சீக்ரத்தில் நீக்கி தேஹாரோக்யத்தைக் கொடுக்குமென்பதில் ஐயமில்லை. புளித்த மோருடன் கலந்து உப்புப்போட்டு ஊறவைத்து ஊறினபின் காயவைத்து எடுத்து வைத்த மணத்தக்காளிவற்றல் பத்தியச் சாப்பாடு சாப்பிடுபவர்களுக்கு மிகவும் நல்லது. இந்த வற்றலை நெய்யில் பொரித்தெடுத்து வைத்துக்கொண்டு சாதத்துடன் வ்யஞ்சனமாக உபயோகிப்பார்கள். இவ்வற்றலையிட்டும் வற்றல் குழம்பு செய்வதுண்டு. இப்பொருளை ஹிந்துக்கள் வருஷாந்தரப் பண்டமாக வருஷவாரியில் சேகரித்துவைத்துக்கொள்வார்கள். மணத்தக்காளிச் செடிகள் தென்னிந்தியாவில் ஏழை ஹிந்து ப்ராமணர் வீடுகளிலும், பணக்கார ஹிந்து ப்ராமணர் வீடுகளிலும் கொல்லைப்புறத்தில் ஸுலபமாய்ப் பயிரிடப்படக்காணலாம். பயிரிடும் குடிகளும் அப்பாகங்களில் தம் காய்கறித் தோட்டங்களில் இதைச் சேகரித்துப் பயிரிட்டு லாபமடைவதுண்டு. சிதம்பரம் முதலிய பக்கங்களில் உப்புப்போடாத வற்றல் பட்டணம் படி 1-க்கு 0—6—0 முதல் 7-அணா வரையில் விற்பனையாகிறது. உப்புப்போட்ட வற்றல் படி 8-அணாவுக்குக் குறைவில்லாமல் கொடுத்துத்தான் பெறவேண்டும்.

மணத்தக்காளிக்காயை உணவுடன் சேர்த்து வருவதனால் நாள்பட்ட வ்யாதி எதுவும் வேரற்றுப்போகிறது. பாரிசவாயுமுதல் எக்கொடுமையான வ்யாதியும் இம்மணத்தக்காளியை உபயோகிப்பவரிடம் அணுகுவதில்லை.

பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர்.



## REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### PETROLEUM.

### மண்ணெண்ணெய்.

ஸமீபத்தில் வெளிவந்த ‘ஸ்வதேசமித்திரன்’ வருஷாந்திர அநுபந்தத்தில் மிஸ்டர் பி. எம். ராமசர்மா பர்மாவில் மண்ணெண்ணெய் எடுக்கும் தொழிலைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதி யிருக்கிறார்.

இந்தியாவிலே வீடுகளில் விளக்கெரிக்க உபயோகிக்கப்படும் மண்ணெண்ணெய், மோட்டார்களுக்கு உபயோகிக்கப்படும் பெட்ரோல் எண்ணெய், யந்த்ரங்களில் வழவழப்பு உண்டுபண்ணுவதற்காக உபயோகிக்கப்படும் மெழுகெண்ணெய் ஆகிய எண்ணெய்களின் மொத்த அளவில் முக்கால் பாகம் இந்திய ராஜ்யத்திலேயே ஒரு மாகாணத்தில் உற்பத்தி யாகின்றதென்பதையும், பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் இவ்வெண்ணெய் உற்பத்தித் தொழிலில் வேலை செய்கிறார்களென்பதையும் கேட்கச் சிலர் வியப்புறுவார்கள். 1915-ம் வருஷத்திலே இந்தியாவிலே சற்றேறக்குறைய 80-கோடி காலன் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மண்ணெண்ணெய் அதிகமாய்க் கிடைக்கும் இடம் பர்மா. ஸமீபகாலத்தில், கீழ் வங்காளத்திலே சிட்டகாங் என்ற இடத்தற்கருகில் சில இடங்களிலும், பஞ்சாப் மாகாணத்தில் இரண்டொரு இடங்களிலும் மண்ணெண்ணெய் உற்பத்தி செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேல் பர்மாவிலே “ஏனுஞ்சௌங்” என்ற இடத்தில் இருக்கும் எண்ணெய்க் களத்தைபோல விஸ்தீரணமான களம் கீழ் நாடுகளில் வேறெங்குமே கிடையாது. ஏனுஞ்சௌங் என்னுமிடம் மேல் பர்மாவின் தலை நகராகிய மாந்தலேய்க்குத் தென் மேற்கே ஸுமார் 100-மைல் தூரத்தில், ஐராவதி நதியின் கரையிலிருக்கிறது. ரங்கூனிலிருந்து ஸுமார் 400-மைலுக்கு வடக்கே யுள்ளது. ஐராவதி ஆற்றின் முகத்துவாரத்திலிருக்கும் பஸ்ஸீன் என்ற நகரத்திலிருந்து ஐராவதி நதியை மேல்நோக்கி கப்பலில் யாத்ரை செய்தால், இரண்டு தினங்களில் ஏனுஞ்சௌங் போய்ச் சேரலாம்.

ஏனுஞ்சௌங்கில் மண்ணெண்ணெய் இருக்கிறதென்பதை முதன் முதல் கண்டு பிடித்தவர்கள் ஐரோப்பியர்களல்ல. ஐரோப்பியர்கள் அக் காட்டில் காலடி வைப்பதற்கு முன்னிருந்தே பர்மியர்கள் அவ்வெண்ணெயைக் கண்டுபிடித்து பற்பல வழிகளில் உபயோகித்து வந்தார்கள். பர்மிய பாஷையில் மண்ணெண்ணெய்க்கு “ஏனுஹ்ன்வி” என்று பெயர். ஏனுஹ்ன்வி என்ற பதம் தண்ணீரிலிருந்து எடுக்கப்படும் நாற்ற எண்ணெய் எனப் பொருள்படும். ஏ—தண்ணீர்; நாஹ்—நாற்றம்; வி—எண்ணெய்; ஏனுஹ்ன்வி என்ற சொல்லிலிருந்தே ஊர் என்பதைக் குறிப்பிடும் சௌங் என்ற பர்மியச்சொல் சேர்க்கப்பட்டு, மண்ணெண்ணெய் எடுக்கப்படும் அந்த ஸ்தலத்திற்கு ஏனுஞ்சௌங் என்ற பெயர் பர்மியர்களால் கொடுக்கப்பட்டது. மண்ணெண்ணெய் முதன் முதல் கண்டுபிடிக்கப்பட்ட விதத்தைப்பற்றி வழங்கிவரும் பரம்பரையான கதை பின்வருமாறு:—மேல் பர்மாவை ஸமீபகாலம் வரையில் அரசாண்ட தீபா அரசனின் முன்னோர்களில் ஒருவர் மாந்தலேயிலிருந்து ஐராவதி நதி நெடுக, கப்பல் யாத்ரை செய்துகொண்டு போனாராம். ஏனுஞ்சௌங் என்று தற்போது அழைக்கப்படும் இடத்திற் கருகாமையில் கப்பல் சென்றுகொண்டிருக்கையில், ஆற்றின் கரையோரமாக ஜலத்தின்மீது எண்ணெய் மிதந்துகொண்டிருக்கவும், அதிலிருந்து மண்ணெண்ணெய்க்கு ஸ்வபாவமாயுள்ள நாற்றம் வீசிக்கொண்டிருக்கவும்கண்டு, அவ்வெண்ணெய் எங்கிருந்து ஆற்றில்வந்து விழுகிறதென்று ஆராய்ச்சி செய்யும்போது, ஸமீபத்திலுள்ள குன்றுகளுக் கிடையேயுள்ள பள்ளத்தாக்கிலிருந்து ஊற்றெடுத்தோடும் கால்வாய் வழியே தண்ணீரும் எண்ணெயும் கலந்த நீரோட்டம் ஒன்று ஆற்றில்வந்து விழக் காணப்பட்டது. அரசன் அந்த நீரோட்டத்தை ஏதோ நாற்றத் தண்ணீர் அருவி. “ஏனாஹ்ன்” என்று கூறிவிட்டுக் கவனியாமல் போய்விட்டாராம். அவருடன் சென்ற மந்த்ரிகளில் ஒருவர் எண்ணெய்க்குள்ள குணங்களை யெல்லாம் உடைய வஸ்து அத்தண்ணீரில் இருந்து கால்வாயாகப் பெருகி ஓடுவதைப் பார்த்து வியப்புற்று, நுட்பமாய் பரிசீலனை செய்தார். அந்தக் கால்வாயிலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்து, தெளியவைத்துப் பார்க்கவே, கீழே தண்ணீரும் மேலே எண்ணெயுமாகப் பிரிந்து நிற்கக் காணப்பட்டது. தீயை வைத்துப் பார்த்ததும் குபீரென்று தீப்பற்றி யெரியவும் கண்டார். உடனே

அவர் "ஏகாஹ்னவி" அதாவது எண்ணெயுள்ள நாற்றத் தண்ணீர் என்று பெயரிட்டு கால்வாயின் தலைப்புக்குச் சென்று பூமியைத் தோண்டிப் பார்த்தார். சுத்தமான தண்ணீருக்குப் பதிலாய் நாற்றமுள்ள எண்ணெய் ஊறி வரக்கண்டார். விஷயத்தை அரசனுக்கு அறிவிக்க; அரசன் அந்த ப்ராந்தியத்திலுள்ள விஸ்தீரணமான நிலத்தை மந்த்ரிக்கே மான்யமாகக்கொடுத்து விட்டார்.

புராதனகாலத்தில் தோண்டப்பட்ட எண்ணெய்க் கிணறுகள் பல இன்னமும் இருந்து வருகின்றன. சில வற்றிப்போய்விட்டன. சிலவற்றில் இன்னும் எண்ணெய் ஊறிக்கொண்டிருக்கிறது. இவைகள் 300-அடி வரையில் ஆழமுள்ளன. இவைகள் பார்வைக்கு நம் நாட்டு சதா கிணறுகளைப்போல இருக்கும். ஆனால் அவற்றின் சுவர்கள் மரப்பலகைகளால் கட்டப்பட்டிருக்கும். இவைகளிலிருந்து எண்ணெய் அதிகம் ஊறுவதில்லையாகையால், எண்ணெய் இறைக்க யந்த்ரங்களை உபயோகிப்பதில்லை. நாம் ஜலமிறைக்க உபயோகிக்கும் சகடைகளே உபயோகப்படுகின்றன.

நூதன முறைப்படி எண்ணெய் எடுப்பவர்கள் குழாய்க் கிணறுகள் தோண்டுகிறார்கள். இவைகளில் ரொம்ப ஆழமுள்ளவை 3000-அடியிருக்கின்றன. கிணறு தோண்ட உபயோகிக்கப்படும் குழாய்கள் 6-முதல் 10-அங்குலம் சுற்றளவுள்ளவை. கிணறுகளில் கிடைக்கும் எண்ணெயை பம்புகள் மூலமாக இறைத்து ஒவ்வொரு கிணற்றுக்கும் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள பெரிய இரும்புத் தொட்டிகளில் நிரப்புகிறார்கள். எல்லாக் கிணறுகளும் இரவும் பகலும் இடைவிடாது இறைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தொட்டியிலும் சேரும் எண்ணெய் குழாய்களின் மூலமாக பெரிய தொட்டிகளுக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கிருந்து கப்பல்களின் மூலமாகவும், குழாய்களின் மூலமாகவும், ரங்கூனில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுத்தி செய்யும் தொழில் சாலைகளுக்குக் கொண்டுபோகப்படுகிறது. அங்கே சுத்திசெய்யப்பட்டு சுத்தமான எண்ணெயாக வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. இதிலிருந்து, பெட்ரோல், வாஸலின் முதலிய பொருள்களும் கிடைக்கின்றன.

ஏனங் சௌங்கில் மாத்ரம் 4000-த்துக் கதிகம் கிணறுகளிருக்கின்றன. ஒவ்வொன்றிலிருந்தும் நாளொன்றுக்கு 50-முதல் 500-காலன்கள் வரையில் எண்ணெய் கிடைக்கும். இப்படிப்பட்ட கிணறு ஒன்று ஏற்படுத்த 5000 ரூ. முதல் 20,000 ரூபாய் வரையில் பிடிக்கும். அங்கே இந்தியர், பர்மியர், சீனர் ஆகிய இவர்களுக்கு அநேக கிணறுகள் ஸொந்தமாக இருக்கின்றன. தென்னிந்தியா வாஸிகளில் சிலருக்கும் அங்கே ஸொந்தக் கிணறுகளிருக்கின்றன.

கிணற்றிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயில், கிணற்றின் இயற்கையமைப்புக்குத் தகுந்தவாறு மிகக்குறைவாகவோ, ஜாஸ்தியாகவோ ஜலமும் கலந்திருப்பது இயற்கை. எண்ணெய் ஜலத்தில் மிதக்கக்கூடிய வஸ்துவாகையால், அதைப்பிரிப்பது கஷ்டமல்ல. கிணற்றிலிருந்து இறைத்து தொட்டியில் நிரப்பியதும், அடியில் தங்கும் தண்ணீர் வடிவதற்காக ஏற்பட்டுள்ள த்வாரங்களின் வழியாய் வெளியில் ஓடிவிடும். எண்ணெய் மாத்ரம் தொட்டியில் தங்கிவிடும். வெளியில் ஓடும் ஜலத்திலும் கொஞ்சம் எண்ணெய் கலந்திருக்குமாகையால், அந்த எண்ணெயையும் பிரித்தெடுப்பதுண்டு.

பச்சை எண்ணெய் நிறத்தில் பச்சையாயும் குழம்பாயும் குளிர்ச்சியில் உறைந்துவிடக்கூடியதாயுமிருக்கும். பர்மாவில் பர்மியர்கள் மரவீடுகளுக்கு இந்தப் பச்சை எண்ணெயையே, நாம் வார்னிஷ், நீல் முதலியவை பூசுவதுபோல, பூசி வருகிறார்கள். இந்த எண்ணெய், வீடுகளின் பலகைக் கூரைகளையும், பலகைச் சுவர்களையும், மரத்தூண்களையும் கெடாமல் காப்பதோடு, மரத்திற்கு இயற்கையான நிறத்தையும் உண்டுபண்ணுகிறது. கரையான் முதலியன, பச்சை எண்ணெய் பூசப்பெற்ற மரங்களை நாடுவதில்லை. தண்ணீரிலேயே கிடந்துவரும் சுதேச மரக்கலங்களுக்குக்கூட, இந்த பச்சை எண்ணெயையே பர்மியர்கள் பூசுகிறார்கள். விளக்கெறிப்பதற்கு, பச்சை எண்ணெயையே ஒரு காலத்தில் பர்மியர்கள் உபயோகித்து வந்தார்களென்றாலும், தற்போது இதை அவ்வளவாய் உபயோகிப்பாரில்லை. தனவந்தர் வீடுகளிலும் தனிக்ராமங்களிலும், இரவில் பந்தோபஸ்துக்காக, வெளிச்ச முண்டுபண்ணி வைக்க நீண்ட இரும்புக் குழாயிலோ அல்லது வாய் குறுகலான சட்டியிலோ பச்சை எண்ணெயை விட்டு பெரிய விளக்குகள் அமைத்து வைப்பதுண்டு.

பர்மாவில் ஏனங்சௌங் என்னும் இடத்தைத்தவிர மக்வே, மீன்ஞான், பக்கோகு, லிங்கு ஆகிய இடங்களிலும் மண்ணெண்ணெய் கிடைத்து வருகிறது. லிங்குவிலிங்கில் எண்ணெய் தானே நிலமட்டத்துக்குமேல் வழிந்துகொண்டிருக்கும் குழாய்க் கிணறுகள் உண்டு.



## TOOTH STICK.

### பற்குச்சி.

நாகரீக முதிர்ச்சியால் நம்மில் பலர் உயர்ந்த பல்பொடிகளை டூத்ப்ரஷ் என்னும் கருவியுடன் பல் துலக்க உபயோகித்து வருகிறார்களென்றாலும், க்ராமவாஸிகளில் அநேகர் ஆலும் வேலும் பல்லுக்குறுதியென்பனபோன்ற நீதிமொழிகளைக் கைக்கொண்டு, ஆல், வேல், வேம்பு முதலிய மரங்களின் குச்சிகளை பல்துலக்க உபயோகித்து வருகிறார்கள். பல் துலக்க உதவும் ப்ரஷ் பலநாள் உபயோகப்படுவதால், அதில் அசுத்தங்கள் அதிகம் ஏறிக்கொண்டு, பல்லாயிரக்கணக்கான பாக்டீரியா என்னும் நுண்ணிய ஜீவராசிகள் தங்கிப் பரவ இடமாகிறதென்றும் அந்த ப்ரஷை முற்றிலும் சுத்தமாய் வைத்திருக்க முடியாதென்றும் சில மேல்நாட்டு வைத்யர்கள் கூறுகிறார்கள். ஆகவே கெடுதலுக்கேதுவான ப்ரஷை உபயோகியாமல், பல்பொடியாகவும் ப்ரஷாகவும் உபயோகப்படக்கூடிய பற்குச்சிகளை உபயோகிப்பது நல்லது. ப்ராம்மணாதி நான்கு வர்ணத்தாரும் விடியற்காலை முதல் இரவில் படுத்துறங்கும் வரையில் இன்னவிதம் நடக்கவேண்டுமென்பதைப் பற்றி ஸாங்கோபாங்கமாய் விதிகள் ஏற்படுத்தியிருக்கும் நமது ஸ்ம்ருதி கர்த்தாக்கள் பல் துலக்குவதற்கு உபயோகிக்கவேண்டிய குச்சிகளைப்பற்றியும், துலக்கும் விதத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப்பற்றிய ஸங்க்ரஹமான குறிப்புகளை 'ஆர்யதர்மத்'திலிருந்து எடுத்து எழுதுகிறோம்.

முள்ளுள்ள மரங்களின் குச்சிகளும் பாலுள்ள மரங்களின் குச்சிகளும் சிறந்தவைகள். 8-அங்குல நீளமுள்ளதாவது 12-அங்குல நீளமுள்ளதாவது நல்லது. கருங்காலி, அடம்பு, புங்கை, விளா, மூங்கில், பெருங்காயமரம், நாகமரம், வேம்பு, நாயுருவி, பில்வம், எருக்கு, அத்தி, மாமரம், புன்னை, வாகை, பிச்சிச்செடி, ஆரளி, ஆல், வேங்கை, இலந்தை, மருதை, வேலி, வேலஞ்செடி அல்லது கருமை, ஞாழல், குங்கிலிய மரம், மாதுளை, இந்த மரங்களின் குச்சிகளை நன்றாய் பரிசோதித்து நுனியை நசுக்கி துர்க்கந்தமற்றதும் ஒழுங்காயுள்ளதும் மேல்பாகத்தில் தோலுள்ளதுமாக எடுத்து நன்றாய்க் கழுவி, கசப்பு, துவர்ப்பு, உரப்பு, ரஸமுள்ளதான குச்சியால் பற்களை தேய்க்கவேண்டும். பற்றுலக்கும்பொழுது பேசக்கூடாது. சிறிதானபற்களுள்ளவனுக்கு மெலிந்ததும், கடுத்தரமான பற்களுள்ளவனுக்கு கடுத்தரமானதும், பெருத்த பற்களுள்ளவனுக்கு பெருத்ததுமாகப் பற்குச்சி மூன்றுவிதமாகும்.

இந்தக் குச்சிகளை உபயோகிப்பதால் விசேஷமான நன்மைகள் உண்டாகுமாம். குங்கிலியக் குச்சியால் தைர்யமும், ஆலங்குச்சியால் காந்தியும், புங்கையால் போர்க்களத்தில் ஜயமும், இரளி குச்சியால் பொருளேற்றமும், இலந்தையால் இனிமையான குரலும், கருங்காலியால் நல்ல மணமும், வில்வத்தால் தனத்தின் விரிவும், அத்தியால் நல்வாக்யமும், இலுப்பையால் உறுதியான அறிவும், கடம்பால் யசஸ்ஸும், நல்ல பாக்யமும், புரசால் உத்தமமான வித்தியும், அடம்பால் லக்ஷ்மீ விலாஸமும், மாங்குச்சியால் ஆரோக்யமும், நாயுருவியால் தைர்யமும், புதிது புதிதாக தோற்றமும், க்ரந்தங்களை தரிக்கும்படியான யுத்தி சக்தியும், சரீர புஷ்டியும், நல்லறிவும், ஆயுஸ்ஸும், நல்ல சீலமும், யசஸ்ஸும், லக்ஷ்மியும், நல்ல பாக்யமும், எருக்கால் ரோக நாசமும், கொம்மட்டி மாதுளையால் கஷ்ட நிவர்த்தியும், மருதால் நரைதிரையற்ற தீர்க்காயுஸ்ஸும், மாதுளை, கொச்சில், சேமந்தி, மருது, பிச்சி, பெருங்களா, இவைகளால் துஸ்வப்பன நாசமும் பயனாக ஏற்படும். பல்துலக்கும்பொழுது பற்களுக்கருகிலுள்ள மாம்ஸங்களுக்கு பீடையுண்டாகாமலும், ரத்தம் வராமலும், மெதுவாய் பல்லிடுக்கிலுள்ளதையும் நாக்கிலுள்ளதையும் குச்சியால் தேய்க்க வேண்டும்.

## CULTIVATION OF CHILLIES.

### மிளகாய் சாகுபடி.

ஸமீபத்தில் வெளிவந்த 'ஜனோபகாரி'யில் ஒரு நிருபர் மிளகாய் சாகுபடியைப்பற்றி சில குறிப்புகள் எழுதியிருக்கிறார்.

மிளகாய்ச் செடி நாற்றுவிடப்பட்டு, பிறகு நடப்படுகிறது. நாற்று விடுவதற்கு ஏற்றநிலம் மேட்டு பூமியாக இருக்கவேண்டும். நிலத்தை நன்றாய்க் கொத்தி ஸமப்படுத்தி பாத்திகளாகப் பிரிக்கவேண்டும். ஸாதாரணமாகப் பாத்திகள் 6-அடி நீளமும் 3-அடி அகலமுமிருக்கவேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் ஒரு கூடை குப்பை யெருவும் ஒருகூடை சாம்பலும் ஒன்றாய்ச் சேர்த்துப்போடவேண்டும்.

1-அல்லது $1\frac{1}{2}$-ராத்தல் விதைகளை நாற்றுவிட்டால் ஒரு ஏக்கருக்கு நடப்போதுமானதாக விருக்கும். விதையைப் பாத்திமுழுவதும் பரவலாக விதைத்து

புழுதியில் அவைகளை மறையும்படி செய்யவேண்டும். பிறகு ஜலம்விடவேண்டும். பாத்தி காயாம லிருப்பதற்காகவும், வெயிலில் முளைகள் கெட்டுப்போகாமலிருக்கவும் வேண்டி பாத்திகளை வைக்கோல் கூளத்தால் மூடவேண்டும்.

நாற்றுகள் நடவேண்டிய நிலத்தை ஆழமாகவும், கட்டி உருண்டை இல்லாமல் நன்றாய் புழுதிகிளம்பும்படியும் அநேக சால்கள் உழவேண்டும். புன்செய் நிலத்தில் மிளகாய் நாற்றை நடும்போது நடும் குழியில் ஒரு கை நன்றாய் மட்கின எருவை அடியில் போட்டு நாற்றை நடவேண்டும். நன்செய் நிலத்தில் எருவை புழுதியுடன் கலந்துவிடவேண்டும். நன்செய் நிலத்தை உழுவதற்கு முன் எருவிட்டு உழுதுவிடுவது நல்லது. ஒரு ஏக்கருக்கு 20 வண்டி குப்பை எருவாவது, 20-வண்டி நகர் எருவாவது கொட்டலாம். நாற்றுகளை மப்பு மந்தாரமான நாளிலாவது, குளிர்ந்தநேரமான ஸாயங்காலமாவது நடவேண்டும். கன்றுகளுக்கிடையில் 1-முதல் 3-அடி தூரம் இடைவெளியிருக்கவேண்டும். நன்செய் நிலத்தில் நீண்ட கால்வாய்கள்தோண்டி கால்வாயின் வரப்பில் நாற்றுகளைநடலாம். வாரத்துக்கு ஒருமுறையாவது 10-நாளுக்கு ஒருமுறையாவது நீர் பாய்ச்சவேண்டும். மிளகாய்ப்பயிருக்கு ஒரு வ்யாதி வருவதுண்டு. அந்த வ்யாதிகண்ட செடிகளின் இலைகள் சுருண்டுவிடும். இதற்குப் பரிகாரம் என்னவென்றால், நீர் பாய்ச்சாமலிருப்பதுடன், நன்றாகக்காயவிட்டு விடுதலேயாம். பிறகு நீர் பாய்ச்சினால், நன்றாகத் தழைக்கும்.

பம்பாய் விவஸாய டிபார்ட்மெண்டார் மிளகாய் பயிரிடுவதற்கு புன்செய் நிலத்திற்கு 40-ரூபாய் செல்லுமென்றும், நன்செய் நிலத்திற்கு 75-ரூபாய் முதல் 175-ரூபாய்வரையில் செல்லுமென்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த மதிப்பு நமது ஜில்லாக்களுக்கு அதிகம் தான். இந்த மதிப்பில 100-க்கு 30-வீதம் குறைத்துப் பார்ப்பதுதான் சரி. நன்செய் நிலத்தில் ஒரு ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 ராத்தல் வரை மிளகாய் எடுக்கலாம். ஆனால், புன்செய்நிலத்தில் இதில் பாதிதான் கிடைக்கும். பட்டணம் படியில் மிளகாயை அளந்து பார்த்தால், ஸாதாரணமாய் ஒரு படி மிளகாய் 7-பலம் மிளகாய்க்குச் சமானமென அறியலாம்.

## GIRLS IN BOYS' SCHOOLS

### பையன்கள் பள்ளிக்கூடத்தில் பெண்கள் வாசித்தல்.

ஸமீபத்தில் வெளிவந்த 'சற்குரு'வில் ஒரு நிருபர் பையன்களுக்கான பள்ளிக்கூடங்களில் பெண்கள் சேர்ந்து வாசிப்பது கூடாதென்பதற்கு சிலகாரணங்கள் தெரிவிக்கிறார்.

1 ஆண் பிள்ளைகள் பாடசாலைகளில் அவர்களுக்குரிய பாடக்ரமத்துக்கும் பெண் பாலார்க்குரிய பாடக்ரமத்துக்கும் பேதம் உண்டு.

2. இவர்கள் 6-7 வயதுக்குமேல் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கற்க ஆரம்பிப்பதாலும் 3-4 வருஷங்கள் தான் படிக்கலாமாகையாலும், அவர்களுக்கு வேண்டிய விஷயங்களை ஆண் பிள்ளைகள் பாடசாலையில் சொல்லிக்கொடுப்பதில்லை.

3. இவர்களுக்கு முக்யமாய்க் கற்புநிலைமையைக் காத்துக்கொள்வதற்கு வேண்டிய புத்தகங்களாகிய நளாயினி, ஸாவித்ரீ முதலான ஸ்த்ரீகளின் சரித்ரங்களையும், தையல், பாட்டு, முதலிய பாடங்களையும், குடும்பத்துக்கு வேண்டிய பாகசாஸ்த்ரம், நற்குணம், பொறுமை, சிக்கெனச் செலவு செய்தல், பச்சாத்தாபம், முதலான விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளும்படியான சரித்ரங்களையும் பையன்கள் பாடசாலைகளில் கற்பிப்பதில்லை.

4. ஆண் பிள்ளைகளோடு சேர்ந்து படிக்கிறதினால் சிலஸமயங்களில் "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழிக்கிணங்க ஆண் பிள்ளைகளின் ஸஹவாஸ தோஷத்தினால் கொச்சையான துர்ப்பாஷைகளைத் தெரிந்துகொள்வார்கள். இதனால் பிற்காலத்தில் இவர்களின் கற்புக்கீனம் நேரிடலாம்.

ஆகவே இந்நான்கு விஷயங்களால் பெண்குழந்தைகள் ஆண்பிள்ளைகளுடன் சேர்ந்து படித்தல் தகாது. இவர்கள் பெண் பாடசாலையிலேயே படிக்கவேண்டும். அங்கு நன்றாய்ப் போதனாமுறையில் கற்றுத் தேர்ந்த உபாத்யாயினிகளை ஏற்படுத்தி பெண்களுக்கு வேண்டிய முற்சொன்ன பிரத்யேகப் பாடங்களை கற்பிப்பதுதான் நன்மை பயக்குமே யொழிய ஆண்பிள்ளைகளுடன் சேர்ந்து படிப்பது கொஞ்சமேனும் தகாது.



# News and Notes.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்**

இந்தியாவில் சென்ற அக்டோபர் நவம்பர், மாஸங்களில் அடியில்கண்ட விவரப்படி ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| அக்டோபர்மீ | ரூ. |
|---|---|
| 3 பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள் | 12,30,000 |
| 1 ரெயில்வே கம்பெனி | 24,00,000 |
| 5 வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 13,40,000 |
| 1 ஜூட் (சணல்) மில் கம்பெனி | 30,00,000 |
| 1 மில் கம்பெனி (மேலே சொன்னது தவிர) | 20,00,000 |
| 11 | 99 70,000 |

| நவம்பர்மீ | ரூ |
|---|---|
| 1 பாங்கி லேவாதேவிக் கம்பெனி | 23,00,000 |
| 9 வ்யாபாரக் கம்பெனிகள் | 8,35,000 |
| 1 பருத்தி மில் கம்பெனி | 6,25,000 |
| 1 ஜூட்மில் கம்பெனி | 15,00,000 |
| 2 தேயிலைத் தோட்டக் கம்பெனிகள் | 6,00,000 |
| 3 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 5,90,000 |
| 17 | 64,50,000 |

**சுழி சுத்தம்.**

மாடு வாங்குபவர் பார்க்கும் சுழிகளில் முக்யமானவை மூன்று.

இவை கண்களுக்கு மேலுள்ள நெற்றிச் சுழியும், முதுகிலே உள்ளது முதுகுச்சுழியும், கொம்பு மத்திக் கருப்பின் பின்னே பொடச்சுழியுமாம்.

பின்னும், முன்னங்காலுக்குப் பக்கத்தில் தாப்பணிச் சுழியென்றும், நெற்றியில் இரண்டு சுழி ஒரேபக்கமாய் கண்ணின் கோட்டோடு இருக்க விழுதிச் சுழியென்றும், முசப்புக்குக் கீழ் முதுகின்மேலிருக்கும் சுழி பட்டிச் சுழியென்றும் நல்ல சுழிகளுண்டு. பட்டிச்சுழி மந்தையை வ்ருத்தியாக்குமாம்.

பின் வருவன கெட்ட சுழிகளாக மதிக்கப்படுகின்றன.

நெற்றியில் ஒன்றின்மேல் ஒன்று சுழியாயிருக்க கொடைமேல் கொடை இடிமேல் இடி என்று கஷ்டம் ஸம்பவிக்குமாம். நெற்றிச் சுழி கண்களுக்கு நேராக இருக்க முக்கண்சுழி யென்றும், முதுகில் இரண்டு சுழிகள் முன்னும் பின்னுமிருக்கப் பின்பாடை முன்பாடை யென்றும், உதட்டில் சுழியிருந்தால் ஒழுகட்டு பாடைகட்டு என்றும் சொல்வதுண்டு.

சுழிகள் பார்ப்பது அங்கங்கே வேறுபட்டிருக்கும். இவற்றுடன் மாட்டின்கால் குளம்பு முதலியன சுத்தமாயிருப்பது மிக அவச்யம். ஸவாரிமாடுகள் மான்போல் மெலிந்தும், சேர்ந்த குளம்பும், 'சிறலை முகமும்' பொறிக்கண்களும், அழகிய கொம்புகளும், மெல்லிய காதுகளும், உருண்ட தேகமும், நாகப்பாம்பைப்போல் நீண்ட வாலும், ம்ருதுவான மயிரும் இருந்தால் விலை அதிகம். உழவு மாடுகளுக்கு அழகிய கொம்பு அவச்யமில்லை. கோணல்கொம்பு மாடுகள் நன்றாய் உழைக்குமென்றும், கறுப்புமாடு மகா கபடம் என்றும் சொல்லப்படுகின்றன. அகன்ற மார்பு, விரிந்த பக்க எலும்பு, சாந்தம், நிதானம் முதலியவற்றைக் கவனிக்கவேண்டியது மிக அவச்யம். 'க்ருஷிக'னில் எல். எ. ஸுப்ரமணிய முதலியார்.

**தோட்டப்பயிர்களுக்குப் பிண்ணாக்கு எரு.**

தோட்டப் பயிர்களுக்குப் பிண்ணாக்கு எருப்போடுவதில் அதை பின்வருமாறு தயார்செய்து உபயோகித்தால், எரு சீக்ரம் பயிர்களுக்கு உதவும்.

பிண்ணாக்கின் நிறை 100-பாகமானால் நிலத்து மண் 25-பாகம்; ஸூபர் பாஸ்பேட் அல்லது எலும்புத்தூள் 2-முதல் 5-பாகம். இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து சாணி கரைத்த ஜலம் ஊற்றிக் கலந்து, குவியலாய்ப் போட்டு, அதன்மேல் ஜலம் தெளித்து, மேலே மண்ணைப் படையாகப் பூசிக் குவியலை மூடிவிடவேண்டும். இப்படி 2-அல்லது மூன்று வாரம் விட்டுவைக்கவேண்டும். மண் காய்ந்து போகாதபடி அடிக்கடி ஜலம் தெளித்து வரவேண்டும். பிறகு அதை எடுத்தால், பிண்ணாக்கு மட்கியிருக்கும். பிறகு குறைந்தது ஒரு வாரம் காற்றாட விட்டிருந்து நிலத்தில் எருவாக உபயோகிக்கலாம்.

**"வஸ்து சித்ர லேகனம்"**

இது ஸைதாப்பேட்டை கவர்ன்மெண்ட் [illegible]

எலிமெண்டரிட் ரெய்னிங் ஸ்கூல் சித்ர உபாத்யாயர் மிஸ்டர் எ. ஸுப்ரமண்ய அய்யர் இயற்றியது. இதில் பொதுவாய் பொருள்களைப் பார்த்து சித்ரம் எழுதுவதில் கவனிக்கவேண்டிய ப்ரமாணங்களையும், பற்பல உருவங்கள் கொண்ட பொருள்களை எழுதுவதில் கவனிக்க வேண்டியவைகளையும் பற்றி விரிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. இதோடு, காகிதத்தாலும், காகித அட்டையாலும், சித்ரம் எழுதுவதற்கு வேண்டிய மாதிரிப் பொருள்களைச் செய்யும் முறையும் விவரிக்கப் பட்டிருக்கிறது. இதில் விஷயங்களை விளக்க ஸுமார் 160 படங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகம் பாடசாலை உபாத்யாயர்களுக்கும், பொதுவாய் சித்ரம் வரையப் பழகுகிறவர்களுக்கும் மிகவும் ப்ரயோஜனமானது. இதன் விலை அணு 12.

**" நீர்நிலைகண்டுபிடிக்கும் சாஸ்த்ரம் "**

இப்பெயர்கொண்ட ஒரு புஸ்தகம் ஆர்யகலா ஸதனமென்னும் ஸங்கத்தாரால் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது இது வராகமிஹிராசார்யாரால் செய்யப்பட்ட ப்ருஹத் ஸம்ஹிதையில் பூமிக்குள் உள்ள நீரோட்டத்தைக் கண்டுபிடிப்பதைப்பற்றிக்கூறும் தகார்க்களம் என்னும் அத்யாயத்தின் மொழிபெயர்ப்பாகும். இதை மொழிபெயர்த்தவர் வாகூர் ஸுந்தரேச்வர ச்ரௌதிகளாவர். ப்ரஸித்திபெற்ற வராஹமிஹிரர் செய்த க்ரந்தத்தைப் பற்றி நாம் புகழ்ந்துபேசுவது மிகையே. மொழிபெயர்ப்பு ஸுலபமாயும் தெளிவாயு மிருக்கிறதென்றும், இந்நூல் விவஸாயிகளுக்கு கிணறுவெட்டுவதற்கு மிகவும் பயன்படக்கூடியதென்றும் மாத்ரம் சொல்லுவோம். இதன் விலை அணு 4. வேண்டுவோர் சென்னை பார்க் டவுன் கெங்குராமன் தெரு 7-ம் நம்பர் வீட்டிலிருக்கும் வாகூர் ஸுந்தரேச்வர ச்ரௌதிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**ஒன்றரை நாளில் இங்க்லண்டுக்குப் போவது.**

கர்னல் லார்ட் மாண்டேகு என்னும் இங்க்லீஷ்காரர் ஸமீபத்தில் டெல்லியில் ஆகாயத்தில் பறப்பதைப்பற்றி ப்ரஸங்கம் செய்தபோது, இன்னும் 10 வர்ஷகாலத்துக்குள் இந்தியாவிலிருந்து இங்க்லண்டுக்கு ஆகாய விமானங்கள் மூலமாக தபால்கள் கொண்டு போகலாமென்றும், ப்ரயாணிகளையும் ஆகாய விமானங்களில் ஏற்றிப் போகக்கூடுமென்றும் சொன்னார். ஆகாய விமானத்தில் போவதில் இந்தியாவின் வடமேற்கில் உள்ள பெஷாவருக்கும் லண்டனுக்கும் உள்ள தூரம் 3600 மைலாகும். இந்த தூரத்தைத் தற்காலத்திய ஏரோப்ளேன்கள், இடையில் ஸௌகர்யமான இடங்களில் தங்குவதாயிருந்தாலுங்கூட, 36 மணி நேரத்தில் கடந்துவிடலாமாம். ப்ரயாணிகள் இரவில் ப்ரயாணம் செய்யாமல் பகல் நேரத்தில் மாத்ரம் ப்ரயாணம் செய்வதாயிருந்தால் 3-நாளில் லண்டன் போய்ச் சேரலாமாம்.

**ரெயில் மாறுதல்**

தென்னிந்தியா ரயில்வேயில் பின் வரும் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

வண்டிகள் சென்னையிலிருந்து புறப்படும் ஸமயம்.

| | | |
|---|---|---|
| ப்ரயாணி வண்டி | காலை | 11-35. |
| நெ. 1-போட்மெயில் | இரவு | 7-15. |
| ,, 5-மதுரை எக்ஸ்பிரஸ் | ,, | 8-15. |
| ,, 3-ராமேச்வரம் எக்ஸ்பிரஸ் | ,, | 11-30. |

வண்டிகள் சென்னைக்கு வரும் ஸமயம்.

| | | |
|---|---|---|
| நெ. 2-போர்ட்மெயில் | காலை | 7-40. |
| ,, 6-எக்ஸ்பிரஸ் | ,, | 10-50. |
| ,, 4-ராமேச்வரம் | இரவு | 11-15. |

சென்னையிலிருந்து கல்கத்தா மெயில் மாலை 5-மணிக்கும், பம்பாய் மெயில் 6-15-மணிக்கும், பெங்களூர் மெயில் 6-30-மணிக்கும் புறப்படும்.

**பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.**

உயர்தர இந்திய கவர்ன்மெண்ட் உத்யோகங்களைப் பற்றிப் பரிசீலனை செய்த கமிட்டியாரின் ரிபோர்ட்டு இந்த மாஸம் கவர்ன்மெண்டால் வெளியிடப்பட்டது. பற்பல கவர்ன்மெண்ட் உத்யோகங்களுக்கு உத்யோகஸ்தர்களை நியமித்தல், அவர்களுடைய சம்பளம், சம்பள உயர்வு முதலிய விஷயங்களைப்பற்றி ஷை கமிட்டியார் பல ப்ரேரணைகள் செய்திருக்கிறார்கள். இந்த ரிபோர்ட்டின்படி செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றிய ப்ரேரணைகளை சீக்ரம் ஆலோசித்துத் தெரிவிக்கும்படி இந்தியா மந்த்ரி இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

**ஓர் அதிசயப் பிறவி.**

ராமநாதபுரம் ஜில்லா சிவகங்கைத் தாலூகாவில் ராஜகம்பீரன் க்ராமத்தில் ஒரு கோழி முட்டையிலிருந்து ஒரு அதிசயமான கோழிக்குஞ்சு வெளிப்பட்டதாக அவ்வூர் உபாத்யாயர் எம். பி. அபுமுகம்மது அப்துல் காதர் என்பவர் நமக்குத் தெரிவிக்கிறார். அந்தக் குஞ்சுக்கு நாற்கால் ப்ராணிகளுக்கிருப்பதுபோல் முன்னிரண்டு காலும் பின்னிரண்டு காலுமாக நான்கு காலும், சிறகு முளைக்குமிடத்தில் மேலும் கீழும் பக்கத்துக்கு



இரண்டு சிறகுகளாக நான்கு சிறகுகளும் இருந்தனவாம். குஞ்சு முட்டையிலிருந்து வெளிவந்ததும் இறந்துவிட்டதாம். அதைப் பக்வப்படுத்தித் தமது பள்ளிக்கூடத்து ம்யூஸியத்தில் வைத்திருப்பதாக ஷை திருபர் தெரிவிக்கிறார்.

**பர்மா அரசர் இறந்துபோனார்.**

ரத்னகிரியில் ராஜாங்கக் கைதியாகவிருந்த பர்மா தேசத்து திபா அரசர் சிலகாலம் வ்யாதியாகவிருந்து சென்ற டிஸம்பர் மாதம் 16-ந்தேதி ராவு இறந்துபோனார். இவர் 1878-வது வர்ஷம் அக்டோபர் மாதம் 8-ந் தேதி பர்மாதேசத்திற் கரசாகி, 1885-வது வர்ஷம் நவம்பர் மாதத்தில் தமது ராஜ்யத்தை யிழந்தார்.

**தமிழ் இலக்கிய அகராதி.**

கோயம்புத்தூரிலுள்ள மிஸ்டர் வி. எஸ். க்ருஷ்ணய்யர், எம். எ., மிஸ்டர் எம். வி. ஈச்வர அய்யர் ஆகிய இருவரும், ஸைக்ளோபீடியா அப் தமிழ்லிட்டரேச்சர் என்னும் பெயர்கொண்ட தமிழ் இலக்கிய அகராதி ஒன்று தயார்செய்து வருவதாகத் தெரிகிறது. இதில் ஆதிகாலம் முதல் தற்காலம் வரையில் வெளியான நூல்களின் விவரமும் மதிப்புரையும், ஆதிகாலம் முதல் தற்காலம்வரையில் உள்ள தமிழ் ஆசிரியர்களின் ஜீவிய சரித்ரமும் வெளியாகும்.

**" சித்திரப் பாடம் "**

இது திருச்சினாப்பள்ளியிலுள்ள ஆர். வி. போர்டிங் அண்ட் ட்ரெய்னிங் பாடசாலையாரால் வெளியிடப்பெற்றது. இதில் சித்ரம் எழுதுவதின் நோக்கம், அதன் பயன், சித்ரம் எழுதுவதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள், பொருள் சித்ரம் வரைதலில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் முதலிய பல விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. இது பாடசாலை உபாத்யாயர்களுக்கு பெரிதும் பயன்படக்கூடியது. வேண்டுவோர் ஷை பாடசாலை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**சென்னைக்கு ஒரு வ்யாபாரக்காலேஜு.**

வ்யாபாரக் கணக்குவைத்தல், கணக்குகளைத் தணிக்கைசெய்தல் ஆகிய விஷயங்களைக் கற்பிக்க சென்னையில் ஒரு உயர்தரக் கலாசாலை ஸ்தாபிப்பது விஷயமாய் ஆலோசித்து ஒரு ஸ்கீம் தயார்செய்ய சென்னை கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள்.

**தூக்கமின்மைச் சிகித்ஸை.**

பாலில் ரொட்டியை ஊறவைத்து சிறிது உப்பைப் போட்டு படுத்துக்கொள்ளுமுன் உட்கொண்டால் ஊன்பட்ட தூக்கமின்மையும் நிவ்ருத்தியாகு மென்று ஒரு ப்ரஸித்திபெற்ற மேல்நாட்டு வைத்யர் தெரிவிக்கிறார்.

**" ஷாரப்கான் "**

இது சிறுவர்களுக்கான புஸ்தகங்களை எழுதிவரும் மிஸ்டர் எஸ். யக்ஞஸ்வாமி எழுதியது. இதில் குடியினால் வரும் கேடு கதைரூபமாக ரஸமாயும் தெளிவாயும் விளக்கப்பட்டிருக்கிறது. இது சிறுவர்சிறுமியர்களுக்கு ஏற்ற புஸ்தகமாகும்.

**ஐரோப்பிய யுத்தம்**

ஜனவரீ 29-தேதி.

'வாரண்டிக்' என்னும் ப்ரிட்டிஷ் உதவி க்ரூஸர் கப்பல் ஐரிஷ் கரையோரமாக மூழ்கடிக்கப்பட்டது.

பிப்ரவரீ 1உ

ஜெர்மன் கவர்ன்மெண்டார் நடுநிலைமைத் தேசங்களுக்கு அனுப்பியிருக்கும் ஒரு கடிதத்தில் பிப்ரவரி மாஸம் 1-ந் தேதி முதல் க்ரேட்ப்ரிட்டன், ப்ரான்ஸ், இட்லி ஆகிய இவைகளைச் சுற்றியுமுள்ள கடல்களிலும், மத்ய தரைக்கடலில் சில பாகங்களிலும் போகும் எந்தக் கப்பல்களையும் நாசம்செய்துவிடப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

2-தேதி.

ரிகாவுக்கு மேற்கில் ரஷ்யர்கள் பின்தள்ளப்பட்டார்கள்.

5-தேதி.

ஜெர்மனியானது நடுநிலைமைத் தேசங்களின் கப்பல்களையும் தாக்குவதாகத் தெரிவித்ததை அமெரிக்கா ஒப்புக்கொள்ளாமையாலும், ஜெர்மனி தனது தீர்மானத்தை மாற்றாததாலும், ஜெர்மனிக்கும் அமெரிக்காவும் பேச்சுவார்த்தைகள் நின்றுபோய்விட்டன.

9-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ரொம்ப பலமாகத் தாக்கினதால், ஜெர்மானியர்கள் க்ராண்ட் கோர்ட் என்னும் ஊரையும் அதைச்சேர்ந்த பாதுகாப்பு வேலைகளையும் காலி செய்துவிட்டார்கள்.

10-தேதி.

ஒரு ப்ரிட்டிஷ் டிஸ்ட்ராயர் கப்பல் சானல் கடலில் சாங்கத்தில் பட்டு மூழ்கிப்போயிற்று.

15-தேதி.

ஜெர்மானியர்கள் புகோவினாவில் ஜாகோபினி என்னுமிடத்துக்கு கிழக்கில் சில குன்றுகளைப் பிடித்திருக்கி

ஞர்கள். எதிரிகள் மோனுஸ்டருக்குக் கிழக்கில் பாரவோவா என்னும் ஊரைத்தாக்கி அதில் உள்ள சில கிடங்குகளைப் பிடித்தார்கள்.

17-தேதி.

ஜெர்மானியர்கள் சாம்பேன் ப்ரதேசத்தில் சற்று முன் சென்றிருக்கிறார்கள்.

20-தேதி.

மேற்குப் போர்முகத்தில் நேசத்துருப்புகள் பிராமெளண்ட் என்னும் க்ராமத்தை நோக்கி முன் சென்றன.

நானு லங்கதி.

பம்பாய் பட்டணத்தின் வடபாகத்தில் கூலிவேலை செய்துவரும் வகுப்பு ஜனங்கள் தங்கள்வகுப்பில் 6 வயது முதல் 10 வயதுக்குட்பட்ட சிறுவர் களுக்கு எலிமெண்டரி கல்வி கற்றுக்கொடுக்க வஸதிகள் ஏற்படுத்தவேண்டுமென்றும், காலடைவில் கட்டாயபபடுத்தி கல்வி கற்பிக்க வேண்டுமென்றும் பம்பாய் முனிஸிபாலிட்டியாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

• • •

பம்பாயிலுள்ள கோகலே ஞாபகார்த்த சின்னத்திக்குப் பணம் போட்டவர்கள் ஸமீபத்தில் ஒன்றுகூடி 20,000 ரூபாய் செலவில் கோகலேக்கு உருவச்சிலை செய்துவைக்கவேண்டுமென்றும், ஷை நிதியில் பாக்கியுள்ள தொகையாகிய 99,735 ரூபாயை இந்திய ஊழிய ஸங்கத்துக்குக் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

• • •

ஸிலோன் கவர்ன்மெண்டார் 2 ரூபாயும் 1 ரூபாயும் மதிப்புள்ள காகித நோட்டுகள் வெளியிடுவதற்கு சட்டம் செய்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் 2 ரூபாய் நோட்டுகள் வெளியிடுவார்கள். இவைகள் ஜனங்களிடம் தாராளமாய் செலாவணியானால் 1 ரூபாய் நோட்டுகளும் வெளியிடப்படுமாம்.

• • •

திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக்குறிச்சியிலிருக்கும் ஸம்ஸ்கிருத பாடசாலையைக் காலேஜாக்கவேண்டுமென்று சேரன்மாதேவி தாலூகா போர்டார் செய்த ப்ரேரணையை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள்.

கவர்ன்மெண்ட் 4-வது ஸெக்ரெடரியாக இருக்கும் ஆனரபிள் மிஸ்டர் பி. ராஜகோபாலாசாரியாருக்குப் பதிலாக திவான் பகதூர் ஆர். ராமச்சந்திரராவ் ஸெக்ரடரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

• • •

மிஸ்டர் பாலகங்காதர திலகரும், மிஸ்டர் விபின் சந்த்ரபாலும் பஞ்சாபுக்குள் வரக்கூடாதென்று பஞ்சாப் கவர்ன்மெண்டாரும் டில்லிக்குள் வரக்கூடாதென்று டில்லியின் சீப் கமிஷனரும் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

• • •

வங்காளத்தில் வீட்டுக் கைத்தொழில் ஸங்கமென்று ஒரு ஸங்கம் பிப்ரவரிமாஸம் 1-ந் தேதியன்று ஸ்தாபிக்கப்பட்டது. அந்த மாகாணத்து வீட்டுக் கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்வதே அந்த ஸங்கத்தின் நோக்கமாகும்.

• • •

ஸமீபத்தில் அடித்த புயல்காற்றில் தென்னாற்காடு ஜில்லாவில் பல ஏரிகள் சேதமடைந்து போயின. அவைகளைப் பழுதுபார்க்க $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் பிடிக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

• • •

ஆஸ்ட்ரேலியா, ந்யூஜிலண்ட், மொரிஷஸ் ஆகிய இவைகளுக்குப்போக விரும்பும் இந்தியர்கள் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு போனால்தான் அந்த தீவுகளுக்குள் விடப்படுவார்கள்.

• • •

காலஞ்சென்ற ராவ்பகதூர் எம். ரங்காச்சார்யாருக்கு பதிலாக ராவ்பகதூர் எ. வி. ரமணாசார்த்தி ஷராய்யர் புஸ்தகப்பதிவு ரெஜிஸ்ட்ராராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

• • •

1915-ம் வர்ஷத்தில் சென்னை ராஜதானியிலிருந்து 782-வயதுவந்த ஆண்களும் 254-ஸ்த்ரீகளும் பிஜித்தீவுக்கு கூலியாட்களாகப் போனார்கள்

• • •

பங்களூரில் தொற்று வ்யாதிக் கேஸ்களை கவனிப்பதற்காக 75,000 ரூ. செலவில் ஒரு ஆஸ்பத்ரி கட்டப்போகிறார்கள்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } நளஹு பங்குனிமீ. MAR.—APRIL 1917. { ஸஞ்சிகை 3. No. 3.


## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| ⅛ do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | அயல்நாடு |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ | ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ | ,, | ,, | ,, | 1 4 0 |
| ⅛ | ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## PUBLIC SERVICES COMMISSION.

### ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிய கமிஷன்.

தற்காலம் உயர்ந்த ஸர்க்கார் உத்யோகங்களில் இருக்கும் இந்தியர்களின் தொகை ரொம்பக் குறைவாயிருக்கிறது. இந்தியர்கள் இப்போதுள்ள நிலைமையில் அதிகமாக உயர்ந்த ஸர்க்கார் உத்யோகங்களுக்குப் போக முடியாது. சில வர்ஷங்களாக இந்திய ஜனத் தலைவர்கள் இந்தியர்களுக்கு அதிகமான உயர்ந்த உத்யோகங்கள் கொடுக்கவேண்டுமென்றும், அவர்கள் அந்த உத்யோகங்களை யடைவதற்கு அதிக ஸாதகங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும், ஸர்க்கார் உத்யோகங்களில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் சம்பளம், அந்தஸ்து, ரஜா, பென்ஷன் முதலிய பலவகைகளில் யாதொரு அநீதமான வித்யாஸமும் காட்டக்கூடாதென்றும் கேட்டுவருகிறார்கள். 1911-ம் வர்ஷத்தில் இவ்விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஒருகமிஷன் நியமிக்கும்படி மிஸ்டர் என். ஸுப்பராவ் வைஸ்ராய் சட்ட ஸபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதன்மேல் 1912-ம் வர்ஷத்தில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவில் ஸர்க்கார் உத்யோக ஸம்பந்தமாகப் பின்வரும் விஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிஷன் நியமித்தார்கள்.

அவ்விஷயங்களாவன :—(1) உத்யோகங்களுக்குத் தகுந்தவர்களை ஆராய்ந்தெடுத்து நியமிப்பது; அவர்களைவேலைக்குப்பழக்குவது. (2) உத்யோகஸ்தர்களின் வேலை முறைமை, சம்பளம், ரஜா, பென்ஷன். (3) ஐரோப்பியர்களல்லாத அதாவது இந்தியர்கள், பர்மியர்கள் ஆகிய இவர்களை ஸர்க்கார் உத்யோகங்களில் நியமிப்பதில் இன்னும் இருந்துவரும் தடைகள்; ஸர்க்கார் டிபார்ட்மெண்டுகளில் உத்யோகங்களை இம்பீரியல் (அதாவது உயர்ந்தது), ப்ரொவின்ஷ்யல் (அதாவது தாழ்ந்தது) என்று இரண்டாகப் பிரித்திருப்பதில் ஏற்பட்டிருக்கும் ஸாதக பாதகங்கள். இவைகள் விஷயமாய் என்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் ஆகிய இவைகளே. இந்தக் கமிட்டியார் இந்தியாவிலும் இங்கலண்டிலும் பற்பல விடங்களில் கூடி அநேகம் பேர்களை ஸாக்ஷியாக விசாரித்தார்கள். இந்தக் கமிஷனுல் 24 டிபார்ட்மெண்டுகள் பரிசீலனை செய்யப்பட்டன. இந்தக் கமிட்டியார் சென்ற 1915-ம் வர்ஷத்தில் தங்கள் ஆராய்ச்சிகளைப்பற்றி ஒரு ரிபோர்ட் எழுதினார்கள். அது ஸமீபத்தில் இந்தியாவில் வெளியிடப்பட்டது. அதில் செய்யப்பட்டிருக்கும் ப்ரேரணைகள் கொஞ்சங்கூட த்ருப்திகரமாயில்லையென்று இந்திய ஜனத்தலைவர்களும் பத்ரிகைகளும் குறைகூறுகின்றன. இந்த ரிபோர்ட்டில் செய்யப்பட்டிருக்கும் ப்ரேரணைகளை இங்கு சுருக்கமாய்த் தெரிவிக்கிறோம்.

#### உயர்ந்த ஸர்க்கார் உத்யோகங்களில் இந்தியர்களின் தொகை.

மாஸம் 200 ரூபாயும் அதற்குமேலும் சம்பளம் உள்ள உத்யோகங்களைமட்டும் கவனித்தால், இந்தக் கமிட்டியார் பரிசீலனை செய்த 24 இலாகாக்களில் 11,064 உத்யோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இவர்களுள் 4,573 பேர்கள் தான் இந்தியர்களாவர் (பர்மியர்களும் இந்தியர்களென்ற பதத்தில் அடங்கும்.) மற்றவர்கள் ஐரோப்பியர்களும் யூரேஷ்யர்களுமாகும். ஆகவே 200-ம் அதற்கு மேற்பட்டும் சம்பளமுள்ள உத்யோகங்களில் 100-க்கு 42 பேர்கள் தான் இந்தியர்கள் என்று ஏற்படுகிறது. ஆனால் சம்பளம் உயர உயர இந்தியர்கள் அதிகமாயில்லையென்று கணக்குகளால் தெரியவருகிறது. மாஸம் 500 ரூபாயும் அதற்குமேலும் சம்பளமாக உள்ள உத்யோகங்கள் 4,984-ஆகும். இதில் 942 உத்யோகங்களே இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றவைகளில் ஐரோப்பியர்களும் யூரேஷ்யர்களும் இருந்து வருகிறார்கள். ஆகவே 500 ரூபாயும் அதற்குமேலும் சம்பளமாக உள்ள உத்யோகஸ்தர்களில் நூற்றுக்கு 19 பேர்கள்தான் இந்தியர்களாயிருக்கிறார்கள். 800 ரூபாயும் அதற்குமேலும் மாஸச் சம்பளமாயுள்ள உத்யோகங்களைப் பார்த்தால் அப்படிப்பட்ட உத்யோகங்கள் மொத்தம் 2,501-ல் 242 தான் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. இது 100-க்கு ஸுமார் 10 விதமாகும்.

இந்தக் கணக்குகள் 1913-ம் வர்ஷத்தியவை. அதற்கு ஸுமார் 25 வர்ஷங்களுக்கு முன் அதாவது 1887-ம் வர்ஷத்தில் மேற்குறித்த ஒவ்வொரு வகையிலும் இந்தியர்கள் அடைந்திருந்த உத்யோகங்கள் எத்தனையென்பதும், 1913-ம் வர்ஷத்தில் இந்தியர்கள் அடைந்த உத்யோகங்கள் எத்தனையென்பதும் அடியில்கண்ட அட்டவணையால் நன்கு விளங்கும்.

| — | ஐரோப்பியர்களும் ஆங்க்லோ இந்தியர்களும் | | | இந்தியர்களும் பர்மியர்களும் | மொத்தம் உத்யோகஸ்தர்கள். | இந்திய-பர்மியர்களின்தொகை நூற்றுக்கு இவ்வளவென்பது. |
|---|---|---|---|---|---|---|
| | ஐரோப்பியர்கள் | ஆங்க்லோஇந்தியர்கள் | மொத்தம். | | | |
| 200 ரூபாயும் அதற்கு மேலும் மாஸவரும்படியுள்ளவர்கள். | | | | | | |
| 1887 ... ... | 4836 | 1001 | 5837 | 3003 | 8840 | 34 |
| 1913 ... ... | 4898 | 1593 | 6491 | 4573 | 11064 | 42 |
| மாஸம் ரூ. 500-ம் அதற்குமேலும் வரும்படியுள்ளவர்கள். | | | | | | |
| 1887 ... ... | 3163 | 83 | 3246 | 427 | 3673 | 12 |
| 1913 ... ... | 3691 | 351 | 4042 | 942 | 4984 | 19 |
| மாஸம் ரூ. 800-ம் அதற்குமேலும் வரும்படியுள்ளவர்கள். | | | | | | |
| 1887 ... ... | 1637 | 7 | 1644 | 77 | 1721 | 4 |
| 1913 ... ... | 2153 | 106 | 2259 | 242 | 2501 | 10 |

மேலே காட்டிய அட்டவணையால் ஸர்க்கார் உத்யோகங்களிலுள்ள இந்தியர்களின் தொகை சென்ற 25 வர்ஷகாலத்தில் மூன்று வகை உத்யோகங்களிலும் முறையே நூற்றுக்கு 8-விதமும், 7 விதமும், 6 விதமும் அதிகரித்திருக்கிறதென்று தெரியவரும். இருந்தாலும் சென்ற 25-வர்ஷகாலத்தில் ஜனங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் அபிவ்ருத்தியை கவனிக்கும்போது, இந்தியர்களின் தொகை போதுமான அளவு அதிகரிக்கவில்லையென்றும், இன்னும் இந்தியர்களை அதிகமாக உத்யோகங்களுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லலாம். ஷை கமிட்டியாரும் இவ்விதமே அபிப்ராயப்படுகிறார்கள்.

இவ்விதம் சொல்லிய கமிட்டியார் இந்தியர்களை அதிகமாய் நியமிக்க என்ன ப்ரேரணைகள் செய்திருக்கிறார்களென்று பார்ப்போம்.

#### ஐரோப்பியர்கள் ஏன் அதிகமாயிருக்கவேண்டும்?

ஸாதாரணமாய் எந்த தேசத்திலும் கவர்ன்மெண்டுக்கு வேண்டிய உத்யோகஸ்தர்களை அந்த தேசத்து ஜனங்களிலிருந்தே தெரிந்தெடுத்துக்கொள்வது கூடும். ஆனால் இந்தி

பாவில் மாத்ரம் அவ்வழக்கம் எல்லா இலாக்களிலும் ஏற்காதென்று கமிட்டியார் அபிப்ராயப்படுகிறார்கள். ஏனென்றால் இந்தியாவானது ப்ரிட்டிஷாருக்குக் கீழ்ப்பட்டிருப்பதால் இந்தியாவை சரியாய் ஆட்சி செய்துவர முக்யமான இலாகாக்களில் ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தர்கள் ரொம்ப அதிகமாயிருக்க வேண்டுமாம். இந்த இலாகாக்களாவன, ஸிவில் ஸெர்விஸும் (அதாவது கலெக்டர்கள், மாஜிஸ்ட்ரேட்டுகளும், ஜட்ஜுகளும்,) போலீஸ் ஸெர்விஸும். ராஜாங்க ஸம்பந்தமான ரகஸ்ய காரணங்களையும் திறமையையும் உத்தேசிக்கையில் சில இலாகாக்களில் ஐரோப்பியர்களும் இந்தியர்களும் கலந்திருக்கலாமென்று கமிட்டியார் சொல்லுகிறார்கள். அவையாவன, கல்வி, ராணுவ வரவு செலவு, வைத்யம், தந்தியிலாகாவில் இஞ்ஜினியரிங் பிரிவு, மராமத்திலாகா, ரெயில்வே, இந்தியா ஸர்வே ஆகிய இவைகளாகும். மற்ற இலாகாக்களுக்கு இந்தியாவிலிருந்தே உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கலாமென்றும், அவைகளுக்கு வேண்டிய உத்யோகஸ்தர்களை இங்கிலண்டிலிருந்து தருவிக்கவேண்டியதில்லை யென்றும் கமிட்டியார் அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் இந்தியாவில் ஐரோப்பியர்கள் அதிகமாக வ்யாபாரம் செய்துவருவதால், கஸ்டம்ஸ் அதாவது ஏற்றுமதி இறக்குமதி தீர்வையிலாகாவில் மாத்ரம் ஐரோப்பியர்களை ஒரு குறிப்பிட்ட அளவு நியமிக்கவேண்டியது அவச்யமாம். இவை கமிட்டியில் பெரும்பாலருடைய கொள்கைகளாகும்.

மேற்சொன்ன கொள்கைகளை கமிட்டி மெம்பர்களுள் ஒருவராகிய மிஸ்டர் அப்தர் ரஹீம் ஆக்ஷேபிக்கிறார். இந்தியாவை சரியாய் ஆட்சி செய்ய ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தர்கள் அதிகமாய் இருக்கவேண்டுமென்று சொல்லுவது, ஜனங்களுக்கு இயற்கையாயுள்ளனவும், ராஜாங்கத்தால் கொடுக்கப்பட்டனவுமான பாத்யதைகளுக்கு நேர் விரோதமாயிருக்கிறதென்றும், இங்கிலீஷ்காரர்களுக்கு ஸிவில் ஸெர்விஸ், போலீஸ் இலாகாக்களில் உத்யோகங்களையடைய வஸதிகளிருப்பதுபோலவே, தக்க தேர்ச்சியுள்ள இந்தியர்களுக்கும் ஸமமான வஸதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்றும், மற்ற இலாகாக்களுக்கு இந்தியாவிலிருந்தே உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், இந்தியாவில் தக்க மனிதர்கள் கிடைக்காவிட்டால்தான் இங்கிலண்டிலிருந்து உத்யோகஸ்தர்களைத் தருவிக்கவேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார்.

இந்தக்கமிட்டியார் மேற்சொன்னபடி சில முக்யமான இலாகாக்களில் ஐரோப்பியர்கள் அதிகமாயிருக்கவேண்டுமென்று தீர்மானித்துவிட்டு, அந்த இலாகாக்களிலும் இதர இலாகாக்களிலும் இந்தியர்களை எடுத்துக்கொள்ள இன்னின்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதைத் தெரிவித்திருக்கிறார்கள்.

### மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள்.

இதுவரையில் கவர்ன்மெண்டார் வர்ஷந்தோறும் 2-இந்தியமாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள்கொடுத்து ஐரோப்பாவில் படித்துவரச் செய்தார்கள். இப்படிப் போனவர்களில் பலர் ஸர்க்கார் உத்யோகங்களை படைந்திருக்கிறார்கள். இந்தியர்கள் ஸர்க்கார் உத்யோகங்களை படையச்செய்ய இது ஒருவழியாக இருந்தும், கமிட்டியார் இந்த வஸதியை அதிகப்படுத்தக் கூடாதென்கிறார்கள். ஏனென்றால், பொதுஸர்க்கார் பணங்களை சில குறிப்பிட்ட பேர்களுக்குமாத்ரம் கொடுத்துதவவது கூடாதாம். அதோடு பண உதவிபெற்றுப் படிக்கப்போகும் இந்தியர்கள் தங்களுக்கு உயர்ந்த ஸர்க்கார் உத்யோகம் கிடைக்கப் போகிறதென்ற நிச்சயங்கொண்டு விடுகிறார்களாம். அவர்கள் தங்கள்படிப்பில் தேர்ச்சியடையாவிட்டால் பின்னும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறதாம். இது கமிட்டி மெம்பர்களின் பெரும்பாலருடைய அபிப்ராயமாகும்.

மிஸ்டர் அப்தர் ரஹீம் இந்தக் கொள்கை சரியல்லவென்கிறார். ஏனென்றால், மாணவர்களுக்கு உபகாரச்சம்பளங்கொடுப்பது பொதுவாய் ஜனஸமூகத்துக்கே நன்மை யுண்டாக்குமென்றும், இந்த ஏற்பாடு சரியானதென்று நாகரீகம்வாய்ந்த தேசங்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதென்றும், சில மாணவர்கள் படிப்பில் அபிவ்ருத்தி படையமாட்டார்களென்றதனாலேயே இதைத் தள்ளிவிடுதல் சரியல்லவென்றும் மிஸ்டர் அப்தர் ரஹீம் சொல்லுகிறார்.

### இந்தியர்களை எடுத்துக்கொள்ளவேண்டிய விகிதம்.

ஸர்க்கார் உத்யோகங்களில் இந்தியர்களின் தொகையை அதிகரிக்க கமிட்டியார் சொல்லும் ஒருவழி என்னவென்றால், இந்தியர்கள் ரொம்ப குறைவாயுள்ள சில இலாகாக்களில் ஒரு குறிப்பிட்ட அளவு உத்யோகங்களை இந்தியர்களுக்குக் கொடுப்பதே. ஆனால் எல்லா இலாகாக்களிலும் குறைந்தது இத்தனைபேர்கள் இருக்கவேண்டுமென்று ஒருவரை யேற்படுத்தவில்லை. ஏனென்றால், இந்தியர்களை தாராளமாய் உத்யோகங்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமாதலால், குறைந்தவனவென்று ஒருவரையறை யேற்படுத்திவிட்டால், அதற்குமேல் இந்தியர்களை நியமிக்கக்கூடாதென்று ஏற்பட்டு விடுமென்கிறார்கள். ஆகையால் தக்க இந்தியர்கள் அகப்படும்போதெல்லாம் அவர்களை உத்யோகங்களுக்கு நியமிக்கவேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். இதுவும் கமிட்டியில் பெரும்பாலருடைய கொள்கை. கமிட்டியில் ஒரு மெம்பராகிய மிஸ்டர் செனபால் இதை ஆக்ஷேபிக்கிறார். அவர் சொல்லுவதென்னவென்றால், அனுஷ்டானத்தில் இந்தியர்கள் உத்யோகங்களுக்கு வருவதைத் தடுக்கக்கூடியவர்கள் இந்தியாவில் அதிகமாயும் செல்வாக்குள்ளவர்களாயுமிருப்பதால், இன்னின்ன இலாகாக்களில் இந்தியர்களின் தொகை இவ்வளவிருக்க வேண்டுமென்று ஏற்படுத்தாவிட்டால், இந்தியர்கள் ரொம்ப குறைவாகவே எடுத்துக்கொள்ளப் படுவார்களென்கிறார்.

கமிட்டியார் ஸிவில் ஸர்விஸில் உயர்ந்த உத்யோகங்களில் 4 - ல் ஒரு பாகத்துக்கும், போலீஸ் ஸெர்விஸில் 10-ல் 1-பாகத்துக்கும் வேண்டிய உத்யோகஸ்தர்களை இந்தியாவிலிருந்தே தெரிந்தெடுக்க வேண்டுமென்கிறார்கள்.

போலீஸில் மாத்ரம் காலஞ்செல்லச்செல்ல இந்தியர்களின் தொகையை அதிகரிக்கவேண்டுமாம். இதைத் தவிர இந்தியர்கள் இங்லண்டில்போய் பரீக்ஷை கொடுத்து தேறி இந்தியன் ஸிவில் ஸெர்விஸுக்கும் போலீஸ் ஸெர்விஸுக்கும் வரக்கூடுமென்றும், ஆனால் பரீக்ஷைக்குப் போகிறவர்களின் வயஸைக் குறைத்துவிட்டதால், லண்டனில் பரீக்ஷை கொடுத்து வரக்கூடிய இந்தியர்களின்தொகை ரொம்ப ஸ்வல்பமாயிருக்கு மென்றும் அவர்கள் சொல்லுகிறார். மராமத்திலாகாவிலும், ரெயில்வே இஞ்ஜினியரிங் இலாகாவிலும் வேண்டியிருக்கும் உத்யோகஸ்தர்களில் பாதி இந்தியாவிலும், பாதி இங்லண்டிலிருந்தும் எடுத்துக்கொள்ள வேண்டுமாம்.

கல்வியிலாகாவில் இந்தியன் எடுகேஷனல் ஸெர்விஸ் என்றும், ப்ரொவின்ஷியல் எடுகேஷன் ஸெர்விஸென்றும் தற்போது இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. பொதுவாய் ப்ரொவின்ஷியல் ஸெர்விஸானது தாழ்ந்ததென்று கருதப்பட்டுவருகிறது. உண்மையில் உயர்ந்தவேலைகள் உள்ள உத்யோகங்கள் பல ப்ரொவின்ஷ்

யல் ஸெர்விஸில் சேர்ந்திருக்கின்றன. இவைகளை இம்பீரியல் ஸெர்விஸில்சேர்த்து மொத்தம் உயர்ந்த உத்யோகங்களையெல்லாம் முதல் வகுப்பென்றும், ப்ரொவின்ஷல் ஸெர்விஸிலுள்ள பாக்கி உத்யோகங்களை இரண்டாவது வகுப்பென்றும் பிரித்துவிட வேண்டுமென்றும், இப்படி ப்ரொவின்ஷல் உத்யோகங்களிலிருந்து இம்பீரியல் ஸெர்விஸுக்கு மாற்றப்பட்ட உத்யோகங்களின் தொகை மொத்தம் உத்யோகங்களின் தொகைக்கு எவ்வளவு விகிதமாகிறதோ அதை இந்தியர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும்; இந்தக் கல்வி இலாகா அபிவ்ருத்தியடைந்து நூதனமாக உத்யோகங்கள் ஏற்படுத்தப்பட்டால் அவைகளுக்கு வேண்டியிருக்கும் உத்யோகஸ்தர்களில் பாதிப்பேர்களை இந்தியாவிலிருந்து தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள். மற்ற இலாகாக்களில் பலவற்றில் ஏற்கனவே சொன்னபடி இந்தியர்களை அதிகமாய் நியமிக்கவேண்டுமென்றும், தக்க படிப்புள்ள இந்தியர்கள் கிடைப்பதற்காக சாஸ்த்ர, தொழில் கல்விச் சாலைகளை சீக்ரம் ஏற்படுத்த வேண்டுமென்றும் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

### உத்யோகஸ்தர்களின் நியமனம்.

பற்பல இலாகாக்களில் உயர்ந்த உத்யோகங்களுக்குவேண்டிய பேர்களில் ஒருபாகத்துக்கு அந்தந்த இலாகாக்களில் உள்ள தாழ்ந்த உத்யோகஸ்தர்களில் திறமையும் அநுபோகமும் உள்ளவர்களை உயர்த்துவது வழக்கம். இந்த ஏற்பாடு அப்படியே இருக்கட்டுமென்று கமிட்டியார் தெரிவிக்கிறார்கள். பாக்கி உயர்ந்த உத்யோகங்களுக்கு, உத்யோகஸ்தர்கள் தேட இரண்டுவழிகள் இருக்கின்றன. முதலாவது இங்கிலண்டில் பரீக்ஷைகள்வைத்து அவைகளில் தேறுகிறவர்களை உத்யோகங்களுக்கு நியமிப்பது. ஆனால் இந்தப் பரீக்ஷைகளில் தேறுகிறவர்கள் அநேகமாய் ஐரோப்பியர்களே. ஸ்வல்ப இந்தியர்களே அந்தப் பரீக்ஷைகளில் தேறக்கூடும். மேலே சொன்னபடி இந்தியர்களை அதிகமாக நியமிக்க, இந்தியாவில் தகுந்த இந்தியர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். தக்க இந்தியர்களைத் தெரிந்தெடுக்க பரீக்ஷைகள்வைத்து அதில் தேறுகிறார்களா என்று பார்ப்பது பொதுவாய்ச் சொல்லுமிடத்து ப்ரயோஜனமில்லையென்று கமிட்டியார் அபிப்ராயப்படுகிறார்கள். ஏனென்றால், நமது தேசத்தில் கல்வியபிவ்ருத்தியானது சில மாகாணங்களில் அதிகமாயும் சில மாகாணங்களில் குறைவாயுமிருப்பதோடு, சில ஜாதி அல்லது வகுப்பு ஜனங்கள் கல்வியில் மேம்பட்டிருக்க சில பிரிவார் கல்வியில் தாழ்ந்திருக்கிறார்கள். போட்டிப் பரீக்ஷைகள் வைத்தால் கல்வி அபிவ்ருத்தியில் தாழ்ந்துள்ள மாகாணங்களிலுள்ளவர்களும், குறைந்த கல்வியுள்ள வகுப்பைச் சேர்ந்தவர்களும் அதிகமாக உயர்ந்த ஸர்க்கார் உத்யோகங்களை அடையமுடியாதாம். மேலும் இந்தியப் பள்ளிக்கூடங்களிலும் காலேஜுகளிலும் கற்றுக்கொடுக்கப்படும் கல்வியால் மாணவர்களுடைய நடத்தை சரிவர அடைந்து வ்ருத்தியடைவதற்கில்லையாம். ஆனால் ஏற்கனவே பரீக்ஷை செய்து உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கும் வழக்கமுள்ள இலாகாக்களில் அவ்வழக்கம் அப்படியே இருக்கலாமென்றும், மற்ற இலாகாக்களில் இந்திய உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கப் பரீக்ஷை கூடாதென்றும், சில தக்க கனவான்கள் சேர்ந்த கமிட்டியைக் கொண்டு தகுந்தபேர்களை உத்யோகங்களுக்கு நேரில் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம்செய்வதில் கமிட்டியில் உள்ள கனவான்கள் பக்ஷபாதமில்லாதவர்களாயிருக்கவேண்டுமாம். வேலைகளில் காலி யேற்பட்டவுடன் அவைகளை



விளம்பரம்செய்து பலருக்கும் தெரியப்படுத்தவேண்டுமாம்; உத்யோகத்தை அபேக்ஷிப்பவர்களுக்கு பரிந்து ஒருவரும் கமிட்டி மெம்பர்களிடம் சிபார்சு செய்யாதபடி பார்த்துக்கொள்ளவேண்டுமாம். தெரிந்தெடுக்கப்படும் உத்யோகஸ்தர்களுக்கு குறைந்தவளவு இவ்வளவு கல்வியறிவு இருக்கவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமாம்; இந்த நியமனக்கமிட்டியில் உத்யோகஸ்தர்களேயன்றி உத்யோகஸ்தர்களல்லாத இந்தியர்களும் பிறரும் இருக்கவேண்டுமாம். அவர்களில் சிலர் வித்யா ஸ்தாபனங்களில் ஸம்பந்தமுள்ளவர்களாயிருக்கவேண்டுமாம். இவ்விதம் கமிட்டியில் பெரும்பாலார் ப்ரேரித்திருக்கிறார்கள். கமிட்டியால் மூன்று மெம்பர்கள் இதை ஆக்ஷேபிக்கிறார்கள். மிஸ்டர் சௌபால் சொல்லுவதென்னவென்றால் :—இந்தியாவில் பரீக்ஷை வைத்துத்தான் உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். உத்யோகத்துக்கு வேண்டியவர்களை பரீக்ஷை செய்யாமல் நேரில் பார்த்துத் தெரிந்தெடுப்பதில், அவர்கள் செல்வாக்குள்ளவர்களைக் கொண்டு சிபார்சு செய்யச்சொல்லியும் வேறுவழிகளிலும் உத்யோகம் பெறுவார்களென்று இந்தியர்கள் யாவரும் எண்ணிவருகிறார்கள். ஆகையால் பரீக்ஷைகளில் தேறியவர்களையே நியமிக்கவேண்டும். போட்டிப் பரீக்ஷைகள் வைத்தால், பல தலைமுறைகளாக கல்வியில் தேர்ச்சிபெற்றிருக்கும் ப்ராமணர்கள் போன்ற வகுப்பார்கள் அதிகமாக உத்யோகங்களில் சேர்ந்துவிடுவார்களென்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். ஆனால் யூனிவர்ஸிட்டி பரீக்ஷைகளில் தேறியவர்களின் ஜாப்தாவைப் பார்த்தால், ப்ராம்மணரல்லாத மாணவர்களில் பலர் இப்போது ப்ராம்மணர்களைவிட அதிக பத்திசாலியாயிருக்கிறார்களென்று தெரியவரும். ஆகையால் இந்தியர்கள் அடைவதற்கென்று விடப்பட்டுள்ள உத்யோகங்களில் 5-ல் 4-பாகம் அல்லது ஆறில் 5 பாகத்துக்கு வேண்டியவர்களை போட்டிப் பரீக்ஷைவைத்துத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். பரீக்ஷையில் எந்த வகுப்பார் குறைவாய்ப் போயிருக்கிறார்களென்பதைப் பார்த்துக்கொண்டு அந்தவகுப்பிலிருந்து தக்கவர்களை நேரில் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும். இவ்விதம் மிஸ்டர் சௌபால் சொல்லியிருக்கிறார்.

கமிஷன்மெம்பர்களுள் ஒருவராகிய மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்ட் என்பவரும் உத்யோகஸ்தர்களை நேரில் பார்த்துத் தெரிந்தெடுக்கும் வழியைக் கண்டிக்கிறார். இந்த ஏற்பாட்டில் செல்வாக்குள்ளவர்களைக் கொண்டு சிபார்சு செய்யச் சொல்லும் வழக்கம் ஏற்படுமென்றும், நியமனக் கமிட்டிகளும் பாரபக்ஷ நிந்தனைக்குள்ளாகுமென்றும், ஆனால் பரீக்ஷை முறையில் கல்வியபிவ்ருத்தியில் தாழ்வான சில ஜாதி ஜனங்கள் உத்யோகங்களையடைய முடியாமல் போய்விடுவார்களாகையால், நேரில் நியமனம் செய்யும் வழியை தற்காலம் அநுஸரிக்கலாமென்றும், தேசத்தில் பற்பல வகுப்பார்களுக்குள் கல்வியபிவ்ருத்தி சரிவர ஏற்பட்டவுடன் பரீக்ஷைவழியை அநுஸரிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்.

மிஸ்டர் அப்தர் ரஹீம் உயர்ந்த உத்யோகங்களில் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலுஞ்சரி, திறமையானவர்களையே நியமிக்கவேண்டுமென்றும், திறமையைக்கண்டு பிடிக்க பரீக்ஷை நடத்துவதே சரியென்றும், அதிக தேர்ச்சி வேண்டியிராத இலாகாக்களில், அதாவது ப்ரொவின்ஷ்யல் ஸிவில் ஸெர்விஸ் ப்ரொவின்ஷ்யல் போலீஸ், போஸ்டாபீஸ், உப்பிலாகா, அப்காரி இலாகா முதலியவைகளில் மாத்ரம், பற்பல வகுப்பார்களுக்கும் உத்யோகங்கள் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும் அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார்.

# STATE AID TO INDUSTRIES.

## கைத்தொழிலுக்கு ராஜாங்க உதவி.

சென்ற மாஸத்திய 'ஜனோபகாரி'யில், ஆனரபிள் ராய் ஸீதாநாத் ராய் பகதூர் கைத்தொழிலபிவிருத்திக்கு வேண்டியிருப்பவைகளில் யந்த்ரங்கள், தொழில் திறமை, போக்குவரவு வஸதிகள் ஆகிய இவைகளைப்பற்றிசொன்னவற்றை எழுதினோம். அவர் கைத்தொழிலுக்கு அரசாட்சியார் செய்யவேண்டிய உதவியைப் பற்றிப் பேசியதை இங்கு எழுதுகிறோம். சில காலத்துக்குமுன்னால் வரையில் பலர், ராஜாங்கங்கள் தேசத்தின் பொருளாதார அபிவிருத்தி விஷயமாய் எதுவும் உதவி செய்யவேண்டியதில்லையென்று எண்ணிவந்தார்கள். அந்த எண்ணம் வரவரக் குறைந்துகொண்டுவருகிறது. தற்காலம் நாகரிகம் வாய்ந்த தேசங்கள் பலவற்றில் ராஜாங்கத்தார் தேசக் கைத்தொழில்களை அபிவிருத்திசெய்ய என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்துவருகிறார்கள். ஜப்பான் பொருளாதார விஷயங்களில் ரொம்ப அபிவிருத்தி யடைந்திருப்பதற்குக்காரணம், அதன் கவர்ன்மெண்டார் அது விஷயமாய் ஒழுங்குடன் உதவிகள் செய்து வந்ததே. அங்கே கவர்ன்மெண்டார் நல்ல ஸ்திதியில்லாத கைத்தொழில்களுக்கு பண உதவிசெய்து வந்ததோடு, கைத்தொழில்சாலைகளை எப்படி நடத்தவேண்டுமென்பதைக் காட்ட மாதிரித் தொழில்சாலைகளை ஸ்தாபித்து நடத்தினார்கள். புதிய கைத்தொழில்களை ஸ்தாபித்து நடத்தி ஜனங்களுக்கு வழிகாட்டினார்கள். இந்தக் கைத்தொழில்களால் அந்த தேசத்துக்கு ஏராளமான வருமானம் கிடைத்துவருகிறது.

ஆஸ்ட்ரியாவின் ஒரு பாகமாகிய ஹங்கேரியிலும் கவர்ன்மெண்டார் கைத்தொழில்களுக்கு ஏராளமாய் உதவிசெய்து வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் கப்புவரிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கவர்ன்மெண்டு ஆபீஸுகளுக்குவேண்டிய ஸகல ஸாமான்களையும் அந்த தேசத்திலுள்ள கைத்தொழில்சாலைகளிலிருந்து வாங்கவேண்டுமென்று சட்டமேற்படுத்தி, அதன் மூலமாக கைத் தொழில்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் செய்திருக்கும் உதவி என்னவென்றால், கைத் தொழில் கம்பெனிகளின் ஸாமான்களுக்கு ரெயில்வே சார்ஜுகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்றுமதி இறக்குமதி வரிகளில் ஸகாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கைத்தொழில்களுக்கு வேண்டிய உப்பை கவர்ன்மெண்டார் மற்றவர்களுக்கு விற்கும் விலையைவிடக் குறைத்து விற்கிறார்கள். தொழில்சாலை வேலையாட்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதை கவர்ன்மெண்டார் ஆதரித்து வருகிறார்கள். இவைகளைத் தவிர கவர்ன்மெண்டார் நேரிடையாகப் பணம் கொடுத்தும் உதவி வருகிறார்கள். இந்தக் காரணங்களால் ஹங்கேரியில் கைத்தொழிலும் வ்யாபாரமும் ரொம்பவும் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. வெகு காலம் வரையில் இந்தியாவில் கவர்ன்மெண்டார் கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களைப் ப்ரசுரித்து, சில ஸமயங்களில் கைத்தொழில் ஸம்பந்தமாக ஆராய்ச்சிகள்செய்ய ஏற்பாடுகள் செய்வதைத் தவிர வேறு எந்த விதத்திலும் கைத்தொழிலபிவிருத்திக்கு ஸாதகமாய் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் சில காலமாக கவர்ன்மெண்டார் இது விஷயமாய் அதிக ஊக்கம் காட்டிவந்திருக்கிறார்கள். சென்னையில் கவர்ன்மெண்டார் அலுமினியம் தொழில், க்ரோம் முறையில் தோல் பதனிடுதல் ஆகிய இந்தத் தொழில்களில் ஆராய்ச்சிகள் செய்து அந்தத் தொழில்களை விருத்திசெய்



தார்கள். ஐக்யமாகாண கவர்ன்மெண்டார் சர்க்கரைத்தொழிலை விருத்திசெய்ய ஏற்பாடுசெய்தார்கள். இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் கைத்தொழிலை இன்னும் விருத்தி செய்யவேண்டி அது விஷயமாய் ஆராய்ச்சி செய்ய இந்திய கைத்தொழில் கமிஷன் ஒன்று நியமித்திருக்கிறார்கள்.

கவர்ன்மெண்டார் இந்த தேசத்தின் கைத்தொழில்களுக்கு பலவிதங்களில் உதவி செய்யலாம். ஸர்க்கார் பாங்கிகள், தக்க ஜாமீன் காட்டினால், கைத்தொழில் நடத்துகிறவர்களுக்கு ஸ்வல்ப வட்டியில ஸுலபமான நிபந்தனைகளின்பேரில் பணம் கடன்கொடுத்து உதவவேண்டும். போக்குவரவு வஸதிகள் விஷயத்திலும் கவர்ன்மெண்டார் ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கவேண்டும். இவைகளைத் தவிர கவர்ன்மெண்டார் நேரிடையாகவும் உதவிசெய்யவேண்டும். கைத்தொழில் சரியாய் நடக்குமென்று தெரிந்தால், ஒரு குறிப்பிட்ட டிவிடண்டுவரையில் ஏற்படும் பணக் குறைவைக் கொடுத்து உதவுவதாக வாக்குக் கொடுக்கவேண்டும். இதனால் கைத்தொழிலில் பணம்போட விரும்புகிறவர்கள் போட்ட பணத்துக்குத்தக்க வட்டி கிடைக்குமென்ற நிச்சயத்தால் தாராளமாய்ப் பணம்போட முன்வருவார்கள். புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொழில்களுக்கும், லாபம்வராமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் கைத்தொழில்களுக்கும், முக்யமாய், பண உதவிபெற்ற அன்யதேசக் கைத்தொழில்களோடு போட்டிபோட வேண்டியிருக்கும் கைத்தொழில்களுக்கும் இனமாகப்பணம் உதவிசெய்வது நல்லது. இவைகளைத்தவிர கைத்தொழில்களை எப்படி நடத்துவதென்பதைக்காட்ட நிருபணத் தொழில்சாலைகளை நடத்திவரலாம். இதனாலும் புதிய தொழில்களை நடத்திக்காட்டுவதாலும் பணமுள்ளவர்கள் இந்தத் தொழில்களில் பணம் போட்டு நடத்த முன்வருவார்கள். கவர்ன்மெண்டார் நடத்திவரும் தொழில்சாலைகள் லாபகரமாக நடந்துவந்தால் அவைகளை ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளிடம் விட்டுவிடவேண்டும். ஆனால் இந்தக் கைத்தொழில்களில் ஏதாவது கவர்ன்மெண்டுக்குத் தேவையாயிருந்தாலும், பொதுஜனங்களின் ஸௌகர்யத்துக் கேற்றதாயிருந்தாலும், அந்தத் தொழிலை கவர்ன்மெண்டார் விட்டுவிடாமல் தாங்களே நடத்திவரவேண்டும். கவர்ன்மெண்டார் தங்களுக்குவேண்டிய ஸாமான்களை அவைகள் அதிக விலையில்லாமல் ஸுமாராய் நேர்த்தியாயிருந்தால், நாட்டுத் தொழில்சாலைகளிலிருந்து வாங்கி அந்தக் கைத்தொழில்களை ஆதரிக்கவேண்டும்.

கவர்ன்மெண்டார் இந்த வேலைகளையெல்லாம் செய்வதென்றிருந்தால், அதற்குவேண்டிய டிபார்ட்மெண்டுகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு கைத்தொழில் டிபார்ட்மெண்ட் இருக்கவேண்டும். இந்த டிபார்ட்மெண்டுக்குத் தலைவராக ஒரு டிரெக்டரை நியமிக்கவேண்டும். இந்த டிரெக்டருக்கு உதவியாக ஒரு கைத்தொழில் போர்ட் (ஸபை) நியமிக்கவேண்டும். இந்த போர்டில் உத்யோகஸ்தர்களும் உத்யோகஸ்தர்களல்லாதவர்களும் மெம்பர்களாக இருக்கவேண்டும். மேற்சொன்ன உதவிகள் ச்லாக்யமானவை என்றாலும், ரொம்ப ச்லாக்யமான உதவி என்னவென்றால், காப்பு வரிகள்போட்டுக் கைத்தொழில்களை ஆதரிப்பதே. ஒரு தேசத்துக்கு காப்புவரி இருப்பது நல்லதா அல்லது காப்புவரிபோடாமலிருப்பது நல்லதா என்பது அந்தந்த தேசத்தின் நிலைமையைப் பொறுத்தது. தற்காலம் நாகரிகம் அடைந்த எல்லா தேசங்களிலும் இறக்குமதிகளுக்கு வரிபோட்டு நாட்டுக் கைத்தொழில்களை ஆதரித்து வருகிறார்கள். ஆனால்

இங்க்லண்டில் மாத்ரம் அவ்விதம் வரிபோடுவதில்லை. ஏனென்றால் இங்க்லண்டின் இப்போதைய நிலைமையில் வரிபோடுவது சரியல்ல. அது தன் கைத்தொழில்களுக்குவேண்டிய மூலப்பொருள்களை அன்ய நாடுகளிலிருந்தே தருவித்துக்கொள்ள வேண்டியிருப்பதால், அப்படி வெளிநாடுகளிலிருந்துவரும் சரக்குகளுக்கு வரிபோடாமலிருப்பதே கைத்தொழிலபிவ்ருத்திக்கு ஸாதகமானது. ஆனால் இங்க்லண்டானது எப்போதுமே காப்புவரியில்லாமலிருக்கவில்லை. அங்கே கைத்தொழில்கள் ஆரம்பமான காலத்தில் காப்புவரிகள் போட்டு வந்தார்கள். இந்தியாவிலிருந்து வரும் கைத்தொழில் சரக்குகளால், இங்க்லண்டின் கைத்தொழில்கள் க்ஷீணிக்குமென்று ஆதிகாலத்தில் காப்பு வரிகள்போட்டு இந்தியாவின் சரக்குகள் இங்க்லண்டில் வாராதபடி செய்துவிட்டார்கள்.

இந்தியாவின் தற்போதைய நிலைமையில் இறக்குமதிகளுக்குக் காப்புவரிகள் போட்டால்தான் இந்த தேசத்தார் ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்க ஐக்யநாடுகள் ஆகிய இவைகளுடன் வ்யாபாரத்தில் போட்டிபோடமுடியும். ஆனால் எல்லாக் கைத்தொழில்களுக்கும் எப்போதும் காப்பு ஏற்படும்படி இறக்குமதிகளுக்குக் காப்புவரி போடவேண்டியதில்லை. எந்தக் கைத்தொழில்கள் தேசத்தின் பொருளாதார அபிவ்ருத்திக்கு முக்யமானவையாயும், நன்றாய் வ்ருத்தியாகக் கூடியனவாயுமிருக்கின்றனவோ அவைகளுக்கு, அவைகளின் ஆரம்பகாலத்தில் போட்டியில்லாமலிருப்பதற்காக, காப்புவரிகள்போட்டு உதவி செய்ய வேண்டும். கைத்தொழில்கள் ஸ்திரப்பட்டுவிட்டால் பிறகு காப்புவரிகளை எடுத்துவிட வேண்டும்.

---

## JAYA.

By T. S. SEETHAPATHY.

### ஜயா.

1303-ம் வருஷம் டில்லியில் செங்கோல் செலுத்திவந்த அலாவுடீன் பாதுஷா ராஜபுதனத்திலுள்ள சித்தூரின்மேல் படையெடுத்துச்சென்று, ஆறுமாதம் முற்றுகைபோட்டு, அவ்வூரைக் கைப்பற்றினதுமல்லாமல், அவ்வூருக்கு ராஜனான ருட்டேன்ஸேனனையும் சிறைபாக்கி, டில்லிக்குப்போய் அங்கே சிறையில் வைத்தான். ருட்டேன்ஸேனனுக்கு ஜயா என்ற திவ்ய ரூபலாவண்யம் அமைந்துள்ள ஒரு புதல்வியிருந்தாள். பிதாவை டில்லிபாதுஷா பிடித்துச்சென்றபோது இம்மங்கைக்கு வயது 15. இவளை மூல்டான் ராஜகுமாரனான ஜயபாலனுக்கு விவாகம்செய்து கொடுப்பதாகத் தீர்மானித்திருந்தது. ஜயபாலன் அழகிலும், சௌர்யத்திலும், பராக்ரமத்திலும் அக்காலத்தில் சிறந்து கொண்டாடப்பட்டானானதினால், ஜயாவும் அவனையே தான் கல்யாணம் செய்துகொள்வதாகத் தீர்மானித்து, விவாஹம் நிறைவேற பகவானை ஸதா ஆராதித்துக்கொண்டிருந்தாள். தன் பிதா ராஜ்யத்தையிழந்து சத்ருவின்வசம் கைதியாகப்போகவும், அவள் ஒரு சிறு துருப்பைத் துணையாகக்கொண்டு சில தாதிமார்களுடன் தன்பந்துக்கள் இருப்பிடம் போய்ச்சேர எண்ணங்கொண்டவளாய் சித்தூரைவிட்டுப் புறப்பட்டுப்போனாள். ஓரிடத்தில் அஸ்தமிக்கும் ஸமயம் இடியும் மின்னலும் பயங்கரமாகத்தோன்றி காற்றும் மழையும் அகோரமாயடிக்க, தங்குவதற்கு மறைவிடம்



ஏதுவும் இல்லாதிருந்தபடியால் மனங்கலங்கினாள். அப்பொழுது தன்னாட்களிலொருவன் ஸமீபத்தில் மலையடிவாரத்தில் ஏதோ ஒரு குகையிருப்பதாகத் தெரிவிக்கவும், ஜயா தன்னாட்களுடன் குகைக்குச்சென்றாள். குகை பின்வாசல் அகலமாயிருந்தபடியால் தானிருந்த வண்டியுடனேயே குகைக்குள் இருந்தாள். மழையும் காற்றும் ஓயாமல் அடித்தபடியால், இரவை அங்கேயேதானே கழித்துவிட்டு, விடிந்ததும் அதைவிட்டுச் செல்லலாமென்றிருந்தாள். அரைமணி நேரத்துக்கெல்லாம் ஒரு மஹம்மதியன் குகையினுள்வந்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுச் சென்றான். உடனே ஜயா ஸந்தேகங்கொண்டு தன்னாட்களிலொருவனை வேவு பார்த்துவர அனுப்பினாள். சென்றவன் அரைநாழிகைக்கெல்லாம் வேகமாய்த் திரும்பிவந்து, அரை பர்லாங்கு தூரத்தில் ஒரு மஹம்மதியபட்டாளம் கூடாரமடித்திருப்பதாய் அறிவித்தான். ராஜகுமாரி சற்றுநேரம் யோசித்துவிட்டு, பிறகு தன் துருப்புத்தலைவனையழைத்து கொஞ்சமும் காலதாமதமில்லாமல் எல்லாரும் பிரயாணப்பட வேண்டுமென்று உத்திரவிட்டாள். அவன் அக்காலத்து மஹம்மதியருடைய நடவடிக்கைகளை நன்று தெரிந்திருந்தானானபடியால், "ராஜகுமாரி, கூடாரமடித்திருப்பவர்கள் நமக்குச் சத்ருவான அலாவுடீனுடைய ஆட்களானபடியால், தங்களுடன்கூட இங்கேயே ராத்தங்கும்படியாக நம்மைக்கட்டாயப் படுத்துவார்களென்று பயப்படுகிறேன்" என்றான். அதற்கு ஜயா, "ஆனாலும், சத்ருவானாலும், மஹம்மதியனானாலும், அவர்களும் மனிதர்கள்தானானபடியால், கேவலம் ஒரு ஸ்த்ரீயை அலட்டமாட்டார்கள் என்று நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் ஈசன் ஒருவனுண்டு. அவன்பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு, நாம் நமது வழிச்செல்லலாம்" என்றிடங்கொண்டு, தானும் தன்னாட்களும் குகையைவிட்டுப் புறப்பட்டுக்கொண்டிருக்கும் தருவாயில், வாசலில் மஹம்மதியர்வந்து சூழ்ந்துகொண்டார்கள். இனி என்ன செய்வது! எதிரியின் தலைவன் குகையினுள்நுழைந்து, வண்டியினுள்ளிருப்பவர் யாரென்று அதட்டிக்கேட்டான். யாரும் மறுஉத்தரம் கொடாதிருக்கவும், பெருந்தன்மை என்பது இன்னதென்றறிந்திராத அவன் வண்டியண்டை வேகமாய்ப் போய், மறைவு கட்டியிருந்த படுதாக்களைக் கிழித்தெறிய யத்தனிக்கும் ஸமயத்தில், ஒரு ராஜபுத்ரவீரன் அவனை மறிக்கவும், மஹம்மதியன் அவனைத் தன் உடைவாளினால் இரண்டுதுண்டாக வெட்டினான். அவன் கதறிக்கொண்டு கீழேவிழவும், இவையெல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த ஜயா ஸஹிக்கமாட்டாமல் வெளியேகுதித்து மஹாகோபத்துடன், "யாதொரு சித்தூர்ராஜனைக் கைதியாக உன் அரசன்கொண்டு சென்றானோ, அந்த சித்தூர்ராஜன் ருட்டேன் ஸேனனுடைய புதல்வியாகும் நான். என்பெயர் ஜயா, அப்புறம் என்ன?" என்றாள். பார்த்தான் மஹம்மதியன். ப்ரமித்தான். சந்த்ர பிம்பத்தையொத்துள்ள முகவடிவோடுகூடின ஜயாவினது அழகின் ஜோதியைக்காணவும் அவன் கண்கள் கூசின. பூலோகத்தில் மனிதச்ருஷ்டியில் இவ்வளவு அழகுள்ள ஒருவனிதையுமுண்டோ என்று ஆச்சர்யப்பட்டான். தன் பாக்யமே பாக்யமென்று அகமகிழ்ந்தான். தன் அரசன் இக் கன்னிகையைப் பற்றிவர எத்தனையோ தூதர்களை யனுப்பியிருந்தும், யார் கையிலும் அகப்படாமல், பாக்யவசத்தால் தன்கையில் சிக்கிக்கொள்ளவும், இந்த ரத்னத்தை டில்லியில் தன் யஜமானிடம் கொண்டுபோய்ச் சேர்த்தால், அரசன் அடங்காத ஆனந்தமடைந்து தன்னிடம் வெகு மரியாதை காட்டி, உன்ன ஸ்திதியிலிருத்துவான் என்று

தான் இனிமேல் அனுபவிக்கப்போகும் ஸௌக்யங்களையெல்லாம் நினைத்து மனக்கோட்டை கட்டினான். பிறகு அவன், "ஏ, ஸ்த்ரீ ரத்னமே, ரொம்பவும் ஸந்தோஷம். உன்னை என் யஜமானிடம் கொண்டுபோய் சேர்த்ததும், அவன் அத்யானந்தத்தை யடைவான். உன்பிதாவும் சிறைச்சாலையினின்றும் விடுதலையாக்கப்படுவான்" என்றான். ஜயா இச்சொற்களைக் கேட்டதும் திடுக்கிட்டாள். "ஓஹோ, உனக்குத் தெரியாதா. சொல்லுகிறேன் கேள். நான் என் இனத்தாருள் ஒரு புருஷனை வரித்திருக்கிறேன். அப்படியிருக்க, மத ஸம்ப்ரதாயத்திலும், ஆசாரங்களிலும் எங்களுக்கு நேர்விரோதமாயும், எங்கள் குடும்பத்திற்கே பெருந்தீங்கையும் விளைவித்திருக்கும் எங்கள் ஜன்மசத்துருவான உன் அரசன் அலாவுடீனுக்கு நான் மனைவியாவது முடியாத காரியமாயிற்றே. மேலும், தன்னிடம் எள்ளத்தனையும் அன்பில்லாமல், வெறுப்பையே யுடைய ஒரு ஸ்த்ரீயை உன் அரசன்தான் இச்சிக்கலாமா? இது நடக்காத காரியம். ஆனபடியால் தயைசெய்து நான் என் வழியே செல்ல இடங்கொடுப்பாயாக" என்றாள். மஹம்மதியன் கொஞ்சமும் கேளாமல், "அப்படியல்ல, நான் என் அரசனுக்குச் செய்ய வேண்டிய கடமையைச்செய்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு த்ரோகியாவேன். ஆனபடியால் டில்லிக்குக்கொண்டுபோய்சேர்க்கப்படும்வரையில் நீ என்னிடம் கைதியாகவேயிருக்கவேண்டும்" என்று ஒரே முடிவாகச் சொல்லித் தீர்த்துவிட்டான். ஜயா பின்னும் எவ்வளவோ தர்மத்தையும் நீதியையும் எடுத்துரைத்தும், ஒன்றும் அவன் சிரஸுக்கேறவில்லை. என்னசெய்வது; ஜயா அன்றிரவு முழுமையும் கண்மூடாமலே கழித்தாள். தன் நிலைமையை நினைத்து மனம் நொந்தாள். எல்லாம்வல்ல இறைவன் எப்படியாவது துஷ்டனிடமிருந்து தன்னைத் தப்புவிப்பான் என்று ஒருவிதமாக மனதை தைர்யப்படுத்திக்கொண்டாள். பொழுதுவிடிந்ததும் எல்லோரும் குகையைவிட்டுப் புறப்பட்டார்கள். ஜயா இருந்தவண்டியை ஓட்ட தன்னாட்களிலொருவனை மஹம்மதியன் நியமிக்கவும், அவன்மாடுகளை இரக்கமில்லாமல் விடாது அடிக்க மாடுகள் படுத்தன. மேலும்மேலும் அடித்தான். மாடுகள்வெருண்டு, வண்டியைக் குடைசாய்த்தன. ஜயா உடனே வெளியே துள்ளிக்குதித்தாள். கடுஞ்சினங்கொண்டு மஹம்மதியனை நோக்கி "துஷ்டா, நான் இதுவரையில் உன் அக்ரமங்களையெல்லாம் ஸஹித்திருந்தேன். மரியாதையாக என்னாட்களில் ஒருவனையே வண்டி ஓட்டச்செய். இல்லாவிடில், இதைவிட்டு ஒரு அடியுங்கூட எடுத்துவைக்கமாட்டேன்" என்றாள். மஹம்மதியன், "முடியாது. இனி நீ நடந்துதான் வரவேண்டும். மாடுகள் நடவா" எனவும், ராஜகுமாரி கண்களில் நெருப்புப் பொறிபறக்க, "அப்படியா, நான் நடந்தாவரவேணும். ராஜபுத்ரர்களுடைய தைர்யவிசேஷம் உனக்குத் தெரியாதுபோலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே விஷமடங்கியிருந்த கைவிரல் மோதிரத்தை வாயண்டை கொண்டுபோகவும், மஹம்மதியன் பயந்து, ராஜபுத்ர ஸ்திரீகள் தங்கள் கௌரவத்திற்கு அழிவு உண்டாகும்போலிருக்குங்காலத்தில் உயிரை மாய்த்துக்கொள்ள இம்மாதிரியாக விரல்மோதிரங்களில் விஷத்தையடக்கி வைத்திருப்பதுண்டு என்பதாகக் கேள்விப்பட்டிருந்தானாதால், வேகமாய் ஜயாவினது இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "ஆஹா! மோசம்போகவிருந்தேனே. நல்லது, இனி உன்னை பந்தோபஸ்தாய்தான் கொண்டுபோய் சேர்க்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே வனிதையின் கைகளை இறுக்கிக் கட்டிவிட்டான்.



அந்தோ, அக்காலத்தில் ஜயாவின் நிலைமை நம்மால் எழுத்தில் எழுதவும் ஸாத்யமோ! தவித்தாள். அலறினாள், சபித்தாள், பகவானைக் கூப்பிட்டாள். மனத்திடங்கொண்டாள். மறுபடியும் "நல்லது செல்லலாம்" என்றாள். மறுபடியும் புறப்பட்டார்கள். ஜயாவைச்சுற்றி பந்தோபஸ்துகடுமையாயிருந்தது. சற்றுதூரம் போனதும், ஒரு குதிரைப்படை தென்பட்டது. நெருங்கிவரவும், அது ஒரு ரஜபுத்ரப் படையாகயிருந்தது. மஹம்மதியருக்கும் ரஜபுத்ரர்களுக்கும் சண்டை நடந்தது. மஹம்மதியத்தலைவன் வெட்டுண்டு கீழேவிழுந்தான். அவன் மனக்கோட்டையும் இடிந்துவிழுந்தது. ரஜபுத்ரர்கள் வெற்றியடைந்தார்கள். அவர்கள் தலைவன் ஜயாவண்டை வந்தான். ஒருவரையொருவர் பார்த்தார்கள். தலைவன் ஜயாவை இறுகத் தழுவிக்கொண்டான். கட்டுகளையெல்லாம் அறுத்தெறிந்தான். காதலி காதலனால் காப்பாற்றப்பட்டாள். பகவான் துணைபுரிந்தார். ஜயபாலனுக்கும் ஜயாவுக்கும் அப்பொழுதிருந்த ஆனந்தத்தை மனதினாலும் பாவிக்கமுடியுமோ. ஜயபாலன் ஜயாவை ஜயஸல்மீரத்தில் அவள் பந்துக்களிடம் கொண்டுவந்துசேர்த்தான். இரண்டொரு நாட்களுக்கெல்லாம் அவள்பிதா ருட்டேன்ஸேனனை சிறைச்சாலையினின்றும் மீட்டு வருவதாகப் புறப்பட்டு டில்லி நகரம்வந்து ஒரு யூதவேஷம் தரித்துக்கொண்டு சிறைச்சாலைக் காப்போனிடம்வந்து, தான் ஒருநகை வ்யாபாரியென்றும், ருட்டேன்ஸேனனிடம் சில பழைய நகைகளை விலைக்கு வாங்க வந்திருப்பதாயும், லாபத்தில் பத்திலொருபங்கு கொடுப்பதாயும் வாக்களிக்க, உள்ளே விடப்பெற்றான். ருட்டேன்ஸேனன் ஸமீபம்வந்து தன்னை இன்னானென்று அறிவித்துக்கொண்டான். சில நாட்களுக்கு முன்னால் அலாவுடீன் ருட்டேன்ஸேனனைத் தன் முன்னால் வரவழைத்து ஜயாவைத் தன்வசம் ஒப்புவித்தால், பந்தோகாளுவைவிட்டு விடுதலை செய்வதாயும், உன்னதஸ்திதியில் வைப்பதாயும் அறிவித்தான். ருட்டேன்ஸேனன் இதைக் கேட்டதும் சினந்து மறுத்தான். ஆகவே, காவலும் ஆகார நிபந்தனைகளும் அதிகமாயின. என்னசெய்வான். இச்செய்தியை ஜயபாலன் கேட்கவும் தீராத பகைகொண்டான். எவ்விதத்திலாவது அலாவுடீனைக் கொலைசெய்தாலொழிய ருட்டேன்ஸேனன் விடுதலை பெறமுடியாது என்று தீர்மானித்துக்கொண்டான். இதற்குள்ளாக காவலாளி ஏதோ ஸந்தேகம் கொண்டான். அதை ஜயபாலன் கவனித்ததும், அவனை ஒரேதள்ளாகக் கீழே தள்ளிவிட்டு, அவன் எழுந்திருக்குமுன் தப்பித்துக்கொண்டு வெளியேவந்து தன் தீர்மானத்தை நிறைவேற்ற ஸமயம் பார்த்துக்கொண்டேயிருந்தான். ஒருநாள் அலாவுடீன் அருகாமையிலிருந்த ஒரு காட்டிற்கு வேட்டைக்குச் சென்றான். ஒரு சிறுத்தையைத் துரத்திக்கொண்டே வெகுதூரம் தன் பரிவாரத்தைவிட்டு நீங்கிப்போய்விட்டான். ஓரிடத்தில் ரொம்பவும் களைப்படைந்து ஓர் மரத்தில் சாய்ந்திருக்கும் ஸமயத்தில், எங்கிருந்தோ வந்து இரண்டு அம்புகள் இவனது உடலில் தைத்தன. உடனே மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான். அம்பு எய்தவன் ஜயபாலன். சத்துரு மடிந்தானென நம்பினவனாய் அவன் ஸந்தோஷத்துடன் ஜெயஸல்மீரம் வந்துவிட்டான். அலாவுடீனோ வெனில் மூர்ச்சை தெளியவும், தனக்கு சில பறையர் சிசுரூஷை செய்வதைக் கண்டு தன்னை இன்னானென்று அறிவித்துக்கொள்ளாமலே, மெதுவாக நடந்து பக்கத்து க்ராமத்துக்குச்சென்று ஒரு குதிரையை இரவல் வாங்கிக்கொண்டு சில நாட்களுக்குள் ஒருசிறு படையைச்சேர்த்துக்கொண்டு டில்லி நகரம் வந்துசேர்ந்தான். இதற்குள்ளாக அலாவுடீன் வேட்டையில் மாண்டுவிட்டான் என்ற

நகரில் வதந்தி பரவவே, அவனுடைய மருமகன் ருக்கூன்கான் ஸிம்மாஸன மேறிவிட்டான். இறந்துபோனதாகக் கொள்ளப்பட்ட அலாவுடீன் உயிருடன் மறுபடியும்வரவும், ப்ரஜைகள் ஆர்வாரித்தார்கள். அல்லாவுடீன் மறுபடியும் ஸிம்மாஸனம் ஏறினான். ருக்கூன்கானுடைய உள்கையினால்தான் காட்டில் தனக்கு விபத்து நேர்ந்ததென்று நினைத்து அவனைத் தூக்குப்போட்டான். சிலநாள்கள் கழிந்தன. மறுபடியும் ஐயாவினது உருவம் அவன்மனதில் தோன்றிற்று. ருட்டேன்ஸேனனை மறுபடியும் வரவழைத்து முன்போலவே தெரிவித்தான். சித்தூர்ராஜன் முன்போலவே மறுத்தான். வந்துவிட்டது அடங்காதகோபம் மஹம்மதிய சக்கிரவர்த்திக்கு. இன்னும் 60 நாட்களுக்குள்ளாக ஐயா தன்னிடம் வந்துசேராத பக்ஷத்தில், "ருட்டேன்ஸேனன் தூக்குப் போடப்படுவான், உஷார்" என்று ஆக்ஞாபித்துவிட்டான். பார்த்தான் ரஜபுத்ர அரசன். தான் காராக்ருஹத்தில் படுங்கஷ்டங்களை நினைத்து ஆலோசித்தான். கஷ்டங்கள் ஸஹிக்கமாட்டாதவையாகவே புலப்பட்டன. என்னவிருந்தால் என்ன. மனிதனுக்கு ஸ்வயேச்சையாயிருப்பதல்லவோ எல்லாவற்றிலும் சிறந்தது. ஒரு பிதாவுக்கு தன்புத்ரி சில த்யாகங்கள் செய்யவேண்டியதுதான் கடமையென்று அபிப்ராயங்கொண்டு ஐயாவை நாற்பது நாட்களுக்குள்ளாக வரவழைத்து பாதுஷாவிடம் சேர்த்து வைப்பதாக ஒப்புக்கொண்டான். சில நாட்களுக்கெல்லாம் அலாவுடீன்பிழைத்து மறுபடியும் ஸிம்மாஸனத்தேறி விட்டானென ஜயபாலன் கேள்விப்படவும், தான் அவஸரப்பட்டு ஊர்வந்து சேர்ந்ததை நினைத்து மனம் நொந்தான். இப்படியிருக்க, ஒருநாள் அலாவுடீனிடமிருந்து சில மஹம்மதியர்கள் ஐயாவுக்கு ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். பிரித்துப் படித்தாள். பிதா எழுதியிருந்தார். பிதாவினது க்ஷேமத்தை உத்தேசித்து ஐயா சீக்ரத்தில் டில்லி நகரம்வந்து அலாவுடீனுக்கு உடன்படாத பக்ஷத்தில், தன்னை மறுபடியும் உயிருடன் காணமுடியாது என்று வரைந்திருந்தது ஜயபாலனிடம் கடிதத்தைக் கொடுத்தாள். ஜயபாலனுக்கு உயிருள்ளவரையிலும், ஐயாவுக்கு உயிருள்ளவரையிலும் மஹம்மதியன் கையில், சிக்குவதில்லையென்று ஸத்யம் செய்துகொண்டார்கள். எல்லாவற்றிற்கும் இருவரும் விவாஹத்தை நிறைவேற்றிக்கொள்வது முக்யம் என்று தீர்மானித்து, பந்துக்கள் வீட்டிலேயே கலியாணத்தை முடித்துக்கொண்டார்கள். ஐயாவின் மாமன் ஒருக்கால் எதிர்பாராத காரணங்களினால், ஐயா கற்பையிழக்கும்படி நேர்ந்தால், தன் குடும்பத்திற்கே அழியாத அபகீர்த்தி வருமென பயந்து, அப்படி அவமானத்தை அடைவதைக் காட்டிலும் தம்பதி இருவரையும விஷங்கொடுத்துக் கொன்றுவிடுவது நலமென்று தன் மனைவியினிடம் ரகஸ்யமாய் பேசிக்கொண்டிருக்கும் ஸமயம் தெய்வச்செயலாக அச்சொற்கள் அவள் காதில் விழுந்தன. "ஆஹா, இதொரு புதிதான ஆபத்து இருக்கிறதே" என்று ஸமாசாரத்தை தன் நாயகனிடம் அறிவிக்கவும், இவ்வளவு கேவலமானதும், துணிவுகரமானதுமான கார்யத்தைச் செய்ய எண்ணின த்ரோகிகளை, தன் வினை தன்னைச்சுடும், என்பதற்கிணங்க, யாதொரு தந்த்ரத்தினால் இவர்களைக்கொல்ல எண்ணியிருந்தார்களோ, அந்த தந்த்ரத்தினாலேயே, விஷங்கலந்துவைத்திருந்த ஆகாரத்தை ஜயபாலன் ஐயாவின் மாமன் முன்னால் யாரும் கவனியாத ஸமயம் மாற்றிவைத்துவிட்டான். மாமன் அதைத் தின்றதும் இறந்தான். அவனுடன் அவன் மனைவியும் உடன்கட்டையேறினாள். இனிச் செய்யவேண்டியதென்ன. தகப்பனை சிறையினின்றும் மீட்பது. பிதா



வினிடமிருந்து மற்றொரு கடிதம் வந்தது. தான் ரொம்பவும் காயலாவாக இருப்பதாகவும், ஒருவாரத்திற்குள் ஐயா வந்து சேராவிட்டால் தான் உயிரிழப்பது நிச்சயமென்றும் கண்டிருந்தது. ஓஹோ, காரியம் மீறிவிட்டது. இனித் தாமஸிக்கலாகாது என்று எண்ணி, தான் 10 நாட்களுக்குள்ளாக டில்லி வந்து சேர்ந்து பாதுஷாவுக்கு உடன்படுவதாயும், ஆனால் தான் வருவது ரகஸ்யமாயிருக்கவேண்டுமாதலால், வழியில் காவலாளர் பந்தோபஸ்து முதலியவைகளினால் தொந்தரவு ஏதொன்றும் இருக்கக்கூடாதென்றும் அறிவித்திருந்தாள். புறப்பட்டாள் மாது சிரோன்மணி. அவளுடன்கூட நூறு மூடுபல்லக்குகளும் புறப்பட்டன. ஒவ்வொரு பல்லக்கையும் நான்குபேர் தூக்கிச் சென்றார்கள். இது தவிர 100 காலாட்படையும் புறப்பட்டன. வந்து சேர்ந்தாள் டில்லிநகரம். அலாவுடீன் பாதுஷாவெளிவாசல்களிலெல்லாம் காவலரை நீக்கிவிட்டான். சிறைச்சாலையிலும் காவலரைக் குறைத்திருந்தான். முன்னாலேயே கேட்டுக்கொண்டிருந்த ப்ரகாரம் ஐயா தன் பரிவாரத்துடன் பிதாவைக்காண சிறைச்சாலையினுள் நுழைந்தாள். பல்லக்குகள் கீழே வைக்கப்பட்டன. உடனே ஒவ்வொரு பல்லக்கிலிருந்தும் இரண்டு வீரர்கள் உருவின கத்தியுடன் வெளியில் குதித்தார்கள். சுமந்தவர்களிடமும் ஆயுதங்களைக் கொடுத்தார்கள். சிறைச்சாலையிலிருந்த சில காவலாளிகளை யமபுரமனுப்பினான் ஜயபாலன். சீக்ரமாக ருட்டேன்ஸேனனிருக்குமிடம் வந்து, கதவைத் திறந்து அவனை விடுதலைசெய்து, எல்லாரும் ஒரு க்ஷணப்பொழுதில் சிறைச்சாலையை விட்டு நீங்கி, நகரத்திற்கு வெளியே தப்பி ஓடிப்போய்விட்டார்கள். அருகாமையில் ஒரு தோப்பில் குதிரைகள் தயாராயிருந்தன. அவைகளில் ஏறிக்கொண்டு நகர எல்லையைக் கடந்துவிட்டார்கள். ராஜ்யத்தினுடைய எல்லையையும் தாண்டினார்கள். ஐயாவினது கற்பும் சௌர்யமும் நிலைநிறுத்தப்பட்டன. ருட்டேன்ஸேனன் விடுதலைபெற்றான். ஜயபாலன் அடங்காத மகிழ்ச்சியடைந்தான். இச்செய்தி முழுமையும் அலாவுடீனுக்கு எட்டவும், பைத்யக்காரன் மாதிரியாகக் கத்தினான். உடைகளைக் கிழித்துக்கொண்டான். அக்ரமமாக சிலரை, ருட்டேன்ஸேனன் தப்பிப்போவதற்கு உடந்தையாக இருந்ததாக ஸந்தேகங்கொண்டு தூக்குப்போட்டான். அதேகாரணமாக மனோவ்யாதியில் விழுந்தான். சில வருஷங்களுக்கெல்லாம் இறந்தான். அதுவரையில் காடுகளில் மறைந்திருந்த ருட்டேன்ஸேனன் இச்செய்தியறியவும், தன் புதல்வியையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு சித்தூர் வந்து மறுபடியும் ராஜ்யத்தை தன் கைவசமாக்கிக்கொண்டு வெகுகாலம், தன் புத்ரி குழந்தைகளுடன் மஹிழ்ந்திருந்துவிட்டு தன்முன்னோர்சேர்ந்த இடம் தானும் சேர்ந்தான். ஐயா தன் கணவனுடன்கூடி புத்ரபாக்யம் பெற்று வெகுகாலம் இல்லறவாழ்க்கையில் ஸுஹித்திருந்தாள்.

டி. எஸ். ஸீதாபதி.

---

கூலியாட்கள் அயல்நாடுகளுக்குப் போகக்கூடாது.

இந்தியா ஒழிந்த வேறுநாடுகளில் கூலிவேலை செய்து பிழைக்கும் எண்ணத்துடன் ஒரு இந்தியனும் இந்தியாவைவிட்டுப் போகக்கூடாதென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் கவர்ன்மெண்ட் அதிகாரிகளிடமிருந்து லைஸென்ஸ் பெற்றால் அவ்விதம் கூலியாட்கள் அயல் நாடுகளுக்குப் போகலாமாம்.

ஐரோப்பாவுக்கு இந்திய கூலியாட்படை.

இங்க்லீஷ் கவர்ன்மெண்டின் வேண்டுகோளின் மேல், இந்தியா கவர்ன்மெண்டார், ஐரோப்பாவில் வேலை செய்வதற்காக இந்தியாவின் பற்பல மாகாணங்களிலிருந்து வேலையாள் படைகள் சேர்க்கப்போகிறார்கள். இந்தப்படைகள் கப்பல்கட்டு மிடங்களிலும் ரோடு போடுவதற்கும் வேண்டியிருக்கும்.

## PLANT SURGERY.

### செடிகளுக்கு ரணவைத்யம் செய்தல்.

மரத்தின் ஏதாவது ஒருபாகம் அழுகிப்போபோ அல்லது வேறுவிதத்தில் கெட்டுப்போயோ இருந்து அதனால் மரம்முழுவதும் கெட்டுப் போகுமென்று தோன்றினால், மேல் நாடுகளில் சிலர், மரத்தில் அழுகிப்போன பாகங்களை குடைந்தெடுத்து எறிந்துவிட்டு அவ்விடத்தில் ஸிமெண்ட் போட்டு அடைத்து வந்தார்கள். இப்போது அவ்விடங்களில் மரங்களுக்கும் செடிகளுக்கும் பல நூதனமான ரணவைத்ய சிகித்ஸைகள் நடந்துவருகின்றன. காயங்கள், செடிகளின் பாகங்கள் ஒடிந்துபோவது, செடிகள் சரியாய் உணவை க்ரஹிக்காமல் மெலிந்து காணப்படுவது, சரியான உருவத்துடன் வளராமைமுதலிய பல கோளாறுகளுக்கும் தற்போது சிகித்ஸைகள் செய்து வருகிறார்கள். இவைகளுக்கு சில உதாரணங்கள் கொடுக்கிறோம்.

அதிக பழங்கள் அல்லது காய்கள் காய்த்துள்ள ஒருமரத்தில் அல்லது செடியில் கிளைகள், காய்கள் அல்லது பழங்களின் பாரம் தாங்காமல் பாதி ஒடிந்து தொங்குவதுண்டு. இதை சரிப்படுத்தாவிட்டால் பொருள் நஷ்டம் அதிகமேற்படும். இதற்கு விவஸாயிகள் செய்வதென்னவென்றால், கிளையில் ஒடிந்த பாகத்தில் இருபுறத்திலும் இரண்டு மரச்சிம்புகளை வைத்து, மெதுவாக கிளையை நேரான நிலைமைக்கு உயர்த்தி மரச்சிம்புகளைச் சேர்த்து நன்றாய்க் கட்டிவிடுவார்கள். சிறிது காலத்துக்கெல்லாம் ஒடிந்த பாகங்கள் ஒன்று சேர்ந்துகொள்ளுகின்றன. சேர்ந்த பாகம் முன்னைவிட அதிக உறுதியுள்ளதாகிறது.

சில செடிகளை கபாத்து செய்யும்போது, செடிகளின் சாறு அதிகமான அளவில் வெளிவந்து அதனால் செடிகள்பட்டுப் போய்விடக்கூடும். முக்யமாய் த்ராக்ஷைக் கொடிகளில் செடியின் உள்பாகங்களில் செடியுணவு ஸாரம் ரொம்ப அதிகமாயிருக்கும்போது, அதற்கு கபாத்து செய்தால், செடியுணவானது சாறுரூபமாக அதிகமாக வடிந்துவிடும். அதை அப்படியே விட்டுவிட்டால், செடிக்குக் கெடுதலாகமுடியும். இப்படிப்பட்ட ஸமயங்களில் விவஸாயிகள் செய்யவேண்டியதென்னவென்றால் பழுக்கக் காய்ச்சின இரும்பை சாறு வடியும் வாயில் வைத்துச் சுடுவதே. இதனால் சாறுவடிவது நின்றுவிடும்.

செடிகளின் கிளைகள் கோணலாயிருந்தால் அவைகளை சரிப்படுத்த அவைகளை அடிக்கடி மெதுவாக சரியான பக்கம் நோக்கித் தள்ளிவிடவேண்டும். இப்படிச் செய்வதால் கோணலாயிருந்த கிளைகள் சீக்ரம் நேராய்விடும்.

தற்காலம் செடிகளுக்கு மருந்துகள் கொடுப்பதும் வழக்கத்திலிருக்கிறது. சில ஸமயங்களில் செடிகள் ஒருவகையாய் வெளுத்துக் காணப்படுவதுண்டு. அவைகள் நன்றாய் வளராமலிருப்பதோடு, புஷ்பங்களும் இலைகளும் நிறங்கெட்டிருப்பதுண்டு. இப்படிப்பட்ட நிலைமைக்கு சிகித்ஸையென்னவென்றால், இரும்பை மருந்து ரூபமாகச் செடிக்குக் கொடுப்பதே. இதனால் இலைகள் ரொம்ப பசுமையாகவும் புஷ்பங்கள் நல்ல வர்ணமுள்ளனவாயுமாகும். சில ஸமயங்களில் இரும்பை மண்ணில் எருவாக இடுவதும் செடிகளுக்கு ரொம்ப நன்மைதரும்.

செடிகளுக்கு அல்கஹால் சாராயத்தை மருந்தாக உபயோகிப்பதும் சில ஸமயங்களில் நன்மைதரும். வெண்மை நிறமான புஷ்பங்கள் உள்ள பல செடிகளில் வேறு நிறமுள்ள புஷ்பங்கள் வளருவதற்குவேண்டிய நிற அம்சங்களும் இருக்கின்றன. இந்த நிறப்பொருள்கள் ஒன்றோடொன்று சேராததால் தான் பல



வகை நிறமுள்ள புஷ்பங்கள் பூப்பதில்லை. அந்தச் செடிகளுக்குக் கொஞ்சம் அல்கஹால் சாராயத்தை ஸ்வல்ப அளவில் மருந்தாகக் கொடுத்தால், நிறம் உண்டு பண்ணும் பொருள்கள் ஒன்றோடொன்று சேர்ந்து வர்ணமுள்ள புஷ்பங்கள் உண்டாகக்கூடும்.

மனிதர்களைப் போலவே செடிகளும் இடம்விட்டு இடம் மாறுவதால் நன்மையடைகின்றன. இதற்கு உதாரணமாக உருளைக்கிழங்கைச் சொல்லலாம். வர்ஷந்தோறும் ஒரே வகையை ஒரே இடத்தில் பயிரிடுவது நல்லதல்ல. ஒவ்வொரு பருவமும் தூரமான இடங்களிலிருந்து வந்த கிழங்குகளைப் பயிரிடுவது நல்லது.

அதிக நாகரிகத்தால் தற்காலம் அநேக செடிகொடிகள் செயற்கை உதவியில்லாமல் வளரமுடியாமல் இருக்கின்றன. செடிகொடிகள் வளர்ப்பவர்களில் நிபுணர்கள் அஸாதாரணமானவும் இயற்கைக்கு மாறானவுமான பழங்களையும் காய்களையும் உண்டு பண்ணுவதற்காக, செடிகொடிகளை இயற்கையான நிலைமையில் வளரவிடாமல் அவர்களுக்கிஷ்டமானபடி வளரவிடுகிறார்கள். இதனால் செடிகள் அவைகளுடைய ஸாதாரண வேலைகளைச் செய்ய சக்தியற்றுப் போகின்றன. உதாரணமாக கொம்மட்டிச் செடியைச் சொல்லலாம். அதை தற்காலத்துத் தோட்டக்காரர்கள் பயிரிடும் முறையால் அதில் மிகப்பெரிய பழங்கள் உண்டாகின்றன. இந்தப் பழங்களைக் கீழேவிழாமல் தாங்கக்கூடிய சக்தி தற்காலத்து கொம்மட்டிக் கொடிகளுக்குக் கிடையாது. பழங்கள் கீழேவிழுந்துவிடாதபடி அவைகளை வலையில்விட்டு, வலைகளை உறுதியாய்க் கட்டிவைக்கிறார்கள். இதேமாதிரி அநேக செடிகள் அவைகளினிடம் உண்டாகும் பெரிய காய்களைத் தாங்கமுடியாமல் இருக்கின்றன. இவைகளுக்கு செயற்கை உதவி வேண்டியிருக்கிறது.

## PREMIUM BONDS.

### லாட்டரி ஏற்பாடுள்ள கடன்கள்.

ஸாதாரணமாய் ஜனங்களுக்கு லாட்டரிச் சீட்டின்மேல் ப்ரியம் உண்டு. இரண்டொரு ரூபாய் செலவழித்து இரண்டொரு லாட்டரிச் சீட்டுகள் வாங்கிவைத்திருந்தால், அத்ருஷ்டமிருந்தால் லாட்டரி தங்களுக்குக் கிடைக்கட்டுமென்று அநேகர் எண்ணி அவ்விதம் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். இந்த மனித ஸ்வபாவத்தை அனுஸரித்து ஐரோப்பாவில் சிலதேசங்களில் கவர்ன்மெண்டுகளே ஒருவகை லாட்டரி நடத்திவருகின்றன. அதாவது அவைகளுக்கு வேண்டியிருக்கும் கடன்களை க்ரமமான வட்டிக்கு வாங்காமல் குறைந்த வட்டிக்கு வாங்கிக்கொண்டு, க்ரமமான வட்டிக்கும் குறைந்த வட்டிக்குமுள்ள வித்யாஸப் பணத்தில் ஒருபாகத்தை சிறு சிறு தொகைகளாகப் பிரித்து, கடன் கொடுத்தவர்களின் பெயர்களை சீட்டுகளில் எழுதி குலுக்கிப்போட்டு, சீட்டுகளிலிருந்து சிலவற்றைப் பொறுக்கியெடுத்து, அவைகளில் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு, பணத்தை வெகுமதியாகக் கொடுத்து வருகிறார்கள். இப்படி வாங்கப்படும் கடன்களுக்கு ப்ரீமியம் பாண்டுகள் என்று பெயர். இப்படிப்பட்ட பாண்டுகளை இந்தியாவில் அன்யதேச வ்யாபாரிகள் விசேஷமாக விற்றுவருகிறார்கள். தற்போது கவர்ன்மெண்டார் யுத்தத்துக்கு பணம் கடன் வாங்கத் தீர்மானித்திருப்பதை உத்தேசித்து சில நாள்களுக்கு முன்னால் கராச்சியிலுள்ள

யுத்த லீக் கமிட்டியார், கடன் வாங்கும் தொகையில் ஒருபாகத்துக்கு க்ரமமானவட்டி கொடுக்க வேண்டுமென்றும் இன்னொரு பாகத்துக்கு ப்ரீமியம் பாண்டுகளைப்போல் குறைந்த வட்டிகொடுத்து வந்து, க்ரமமான வட்டிக்கும் குறைந்த வட்டிக்கும் உள்ளவித்யாஸத் தொகையை ஆறு மாஸத்துக்கொரு தடவை சீட்டுக்குலுக்கி ப்ரைஸாக கடன் கொடுத்தவர்களுக்கு வெகுமதி கொடுக்க உபயோகிக்க வேண்டுமென்றும் ப்ரேரணை செய்தார்கள்.

இப்படிப்பட்ட ப்ரேரணை ஒன்று சென்ற வர்ஷம் பார்லிமெண்டிலும் கொண்டுவரப்பட்டது. இந்த ஏற்பாடு சூதாட்டமாகுமென்று சிலர் வாதித்தார்கள். சிலர் ஜெயிப்பது தோற்பது என்ற இரண்டே முடிவுள்ள வ்யவஹாரத்தில்தான் சூது உண்டென்றும், இங்கு அஸலுக்கு மோசமில்லையாகையாலும், குறைந்த வட்டியென்பதைத் தவிர வட்டிக்கும் மோசமில்லையாகையாலும், இது சூதாகாதென்றும் வாதித்தார்கள். ஒரு மெம்பர், இந்த ஏற்பாட்டில் கவர்ன்மெண்டுக்கு நஷ்டமேற்படாதென்று சொல்லி, அதை எப்படி நடத்துகிறதென்பதை விவரித்தார்.

கவர்ன்மெண்டுக்கு கோடிபவுன் வேண்டியிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு பவுனுக்கும் 1-கடன் பத்ரம்விதம் ஏற்படுத்திக் கொள்வார்கள். ஆகவே கோடி கடன் பத்ரங்களாகும். தற்காலம் கவர்ன்மெண்டார் நூற்றுக்கு 5-விதம் வட்டி கொடுத்துக் கடன் வாங்குகிறார்கள். இந்த ப்ரீமியம் பாண்ட் ஏற்பாட்டில் கடன் தொகைக்கு நூற்றுக்கு 2½ விதம்வட்டி கொடுக்கவேண்டும். வட்டிக்கு வருமானவரி இருக்கக்கூடாது. ஸாதாரணமாய்க் கொடுக்கப்படும் வட்டிக்கும் இதற்கும் நூற்றுக்கு 2½ விதம் வித்யாஸம் ஏற்படுகிறது. கவர்ன்மெண்டார் இந்த 2½யில் 1½ விதம் எடுத்து கடன் கொடுத்தவர்களுக்கு சீட்டுக்குலுக்கி வெகுமதி கொடுக்கலாம். நூற்றுக்கு 1½ விதம் கோடி பவுனுக்கு ½ வர்ஷத்துக்கு 75,000 பவுனாயிற்று. இந்தத் தொகையை 5000 பவுன் முதல் 5 பவுன் வரை மதிப்புள்ள 11,310 வெகுமதிகளாகப் பிரித்து, கடன்பத்ரங்களைக் குலுக்கிப்போட்டு 11,310 பத்ரங்களை எடுத்து, அவைகளுக்கு வெகுமதிகளைக்கொடுக்கலாம். வெகுமதித் தொகையில் கடன். அஸலும் அடங்குவதால், அந்தக் கடன்களை திருப்பிக் கொடுத்ததாக பாவித்து பத்ரத்தை ரத்துசெய்து விடலாம். இவ்விதம் 10-வர்ஷம் செய்தால் 2, 27,600 பத்ரங்களின் கடன்களைத் திருப்பிவிடலாம். இவ்விதம் கவர்ன்மெண்டுக்கு செலவில்லாமல் 10-வர்ஷத்துக்குள் இத்தனை பத்ரங்கள் தீர்ந்துவிடுவது ஸாதகமாகும். பாக்கிக்கடன் பத்ரங்களுக்குத்தான் கவர்ன்மெண்டார் பணம் கொடுக்க வேண்டியிருக்கும். இந்த ஏற்பாட்டில் கொடுக்கும் லாட்டரி வெகுமதிகள் ரொம்ப உயர்ந்த தொகைகளாக இருக்க வேண்டியதில்லை. 500 பவுன் முதல் 5 பவுன் வரையில் இருந்தால் 'போதும்; 500 பவுனைக் கொண்டு ஏழை ஜனங்கள் ஒருவீடு வாங்குவதோ கடை வைப்பதோ ஸுலபமாகும்.

ஆறு மாஸத்துக்கொரு தடவை சீட்டுக்குலுக்கிப் போடும்போது கடன் கொடுத்தவர்களுக்கு நூற்றுக்கு 2½ விதம் வட்டியைப் பிதேயல்லாமல், அரை வர்ஷத்துக்கு வெகுமதி கொடுப்பதற்காக எடுத்து வைத்த 75,000 பவுனில் ஏதாவது ஒருதொகை வெகுமதியாகக் கிடைக்கலாமென்ற நம்பிக்கை ஒவ்வொருவருக்குமுண்டு. ஒவ்வொருதடவையும் சிலருக்கு வெகுமதி கொடுத்து கடன் பத்ரத்தை ரத்துசெய்வதால், கடன் பத்ரங்களின் தொகை வரவரக் குறைந்துபோய், ரத்தாக்கப்பட்ட பத்ரங்களுக்கு வட்டிகொடுக்கவேண்டிய



அவசியமும் ஏற்படுவதில்லை. கொடுக்கவேண்டிய வட்டித்தொகையும் வரவரக்குறைகிறது. வட்டித்தொகை வித்யாஸத்தில் நூற்றுக்கு 1½-பாகத்தை வெகுமதிகொடுக்க செலவழித்துவிட்டால், பாக்கி நூற்றுக்கு 1-பாகம் மிச்சம் ஏற்படும். இதை கவர்ன்மெண்டார் இஷ்டம்போல் செலவழித்துக்கொள்ளலாம். பார்லிமெண்டில் இந்த ப்ரேரணையை ஆதரித்துப்பேசின இன்னொருமெம்பர், இந்த ஏற்பாடு நூதனமல்லவென்றும், லண்டனில் உள்ள ப்ரிட்டிஷ் ம்யூஸியம் என்னும் பொருள் காட்சிசாலை லாட்டரி ஏற்பாட்டின்பேரில் தான் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் சொன்னார். 1753-ம் வர்ஷத்தில் கவர்ன்மெண்டார் ஒவ்வொன்றும் 3 பவுன் மதிப்புள்ள 1-லக்ஷம் பங்கு பத்ரங்களை விற்றார்கள். இதனால் 3 லக்ஷம் பவுன் வஸூலாயிற்று. இதில் 1-லக்ஷம் பவுனை லாட்டரியாகப் போட்டார்கள். முதல் சீட்டுக்கு 10,000 பவுனும் மற்ற சீட்டுகளுக்கு குறைவான தொகையும் கொடுக்கப்பட்டன. பாக்கித் தொகையாகிய 2-லக்ஷம் பவுனைக்கொண்டு ப்ரிட்டிஷ் ம்யூஸியத்தை ஸ்தாபித்தார்கள்.

இந்த ப்ரேரணையை அப்போதிருந்த இங்கிலண்டின் வரவுசெலவு மந்த்ரி ஏற்றுக்கொள்ளவில்லை. கடன் அஸல் விஷயத்தில் யாதொரு சூதுமில்லையென்றாலும், வட்டியைக் குறைத்துவிட்டு, குறைக்கப்பட்ட வட்டியில் ஒருபாகத்தை லாட்டரி போடுவதால் அது சூதாகுமென்றும், ஸ்வல்ப பணமுள்ளவர்கள் இது வரையில் ஏராளமான தொகைகள் கவர்ன்மெண்டுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்களென்றும், ப்ரீமியம் பாண்ட் ஏற்பாட்டால் அதிகபணம் கடனாகக் கிடைக்குமென்று தோன்றவில்லையென்றும் சொல்லி ப்ரேரணையை அங்கீகரிக்க மறுத்துவிட்டார்.

ஆனால் இதைப்பற்றி மறுபடியும் பார்லிமெண்டில் விவாதம் நடந்தபோது இப்போது பொக்கிஷ மந்த்ரியாகிய மிஸ்டர் போனர்லா என்பவர், இந்த விஷயத்தைப்பற்றி வேண்டியபோது யோசிப்பதாகச் சொல்லியிருக்கிறார். இந்தியாவிலும், வரவுசெலவு மெம்பராகிய ஸர் வில்லியம் மேயரும், கடனுக்கு ஸாதாரண வட்டிகொடுத்து விடுவதாயிருந்தால் ப்ரீமியம் பாண்ட் ஏற்பாட்டைப்பற்றி யோசிப்பதாய்ச் சொல்லியிருக்கிறார்.

## SOME FACTS ABOUT RAILWAYS IN INDIA.

## இந்தியாவிலுள்ள ரெயில்வேக்களைப்பற்றிய சில விஷயங்கள்.

இந்தியாவில் முன்பு கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் டல்ஹௌஸி காலத்தில்தான் முதல் முதலில் ரெயில்வே போடப்பட்டது. லார்ட் டல்ஹௌஸி 1848-ம் வர்ஷம் முதல் 1856-ம் வர்ஷம் வரையில் கவர்னர் ஜெனரலாக இருந்தார். இந்தியாவில் முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ரெயில்வே பம்பாயிலிருந்து அதற்கு வடக்கில் 21 மைல் தூரத்திலுள்ள தானா வரையில் ஓடிற்று. 1853-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸம் 18-ந் தேதியன்று அந்தரெயில்வேயில் வண்டிகள் முதல்முதல் ஓடத்தொடங்கின. இதற்குப் பிறகு இந்தியாவில் பல பாகங்களில் ரெயில்வேக்கள் கொஞ்சம் கொஞ்சமாய் போடப்பட்டன.

1871-ம் வர்ஷத்தில் பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கும், சென்னைக்கும் நேராக ரெயில் வண்டிகள் போக ஆரம்பித்தன.

இந்தியாவிலுள்ள ரெயில்வேக்களில் ரெயில் பாதைகளின் அகலம் நான்குவிதமாயிருக்கின்றன. 5½ அடி அகலமுள்ளதற்கு ப்ராட் கேஜ்

(அகலப்பாதை) என்று பெயர். 3 அடி $3\frac{3}{8}$ அங்குலமுள்ளதற்கு மீட்டர் கேஜ் என்று பெயர். அதாவது மீட்டர் அகலமுள்ளபாதை; மீட்டர் 3 அடி $3\frac{3}{8}$ அங்குலம். $2\frac{1}{2}$ அடியும் 2 அடியும் அகலமுள்ளவற்றிற்கு நாரோகேஜ் (குறுகியபாதை) என்று பெயர்.

1871-ம் வர்ஷத்தில் போக்கு வரவுக்கு ஏற்பட்டிருந்த ரெயில்வேக்களின் நீளம் 5,074-மைல். இதில் 5055 மைல் ப்ராட் கேஜ் ஆகும். 19 மைல் மீட்டர் கேஜ் ஆகும். 1915-ம் வர்ஷம் மார்ச்சு மாஸம் 31-ந் தேதி யன்று 35,285 மைல்களுக்கு ரெயில்வேக்கள் ஓடிக்கொண்டிருந்தன.

ரெயில்வேக்கள் போடுவதற்காக, ஆரம்பம் முதல் 1914-15-ம் வர்ஷம் வரையில் செலவழிக்கப்பட்ட மூலதனம் 576 கோடி ரூபாயாகும். 1900-ம் வர்ஷம் முதல் 1915-ம் வர்ஷம் மார்ச்சுமாஸம் முடிய ரெயில்வேக்களுக்காகச் செலவழிக்கப்பட்ட மூலதனம் $106\frac{1}{2}$ கோடி ரூபாயாகும்.

இந்தியாவிலுள்ள எல்லா ரெயில்வே கம்பெனிகளினுடைய மொத்த வரும்படி 1914-15-ம் வர்ஷத்தில் 60 கோடியே 42 லக்ஷம் ரூபாயாகும்.- (அதற்கு முந்தின வர்ஷமாகிய 1913-14-ம் வர்ஷத்தில் 63,58,56,000 ரூபாயாகும்.) இந்தத் தொகையானது 1900-ம் வர்ஷத்திய வரும்படிக்கு இரண்டு மடங்காகும்.

1914-15-ம் வர்ஷத்தில் கிடைத்த வரும்படியில் 100-க்கு 35 பாகம் ப்ரயாணிகளிடமிருந்து கிடைத்தது.

ஸுமார் 35 வர்ஷங்களுக்குமுன் ரெயில்வேக்களில் போட்டிருக்கும் மூலதனத்துக்கு நூற்றுக்கு வர்ஷத்துக்கு 4·31 வீதம் லாபம் கிடைத்துவந்தது. சென்ற நாலைந்து வர்ஷங்களாக நூற்றுக்கு 6·01 வீதம் லாபம் கிடைத்துவந்தது.

சராசரியில் ஒருமைல் தூரத்துக்கு ரெயில்வே போடுவதற்கு ஸகல உபகரணங்களுமுள்பட ப்ராட் கேஜுக்கு அதாவது அகலப் பாதைக்கு 1,86,000 ரூபாயாகிறது. மீட்டர் கேஜ் பாதைக்கு 90,000 ரூபாயாகிறது. $2\frac{1}{2}$ அடி அகலப்பாதைக்கு 56,000 ரூபாயாகிறது. 2 அடிப் பாதைக்கு 37,000 ரூபாயாகிறது.

சென்ற 1900-ம் வர்ஷத்தில் மொத்தத்தில் 17,60,00,000 ப்ரயாணிகள் ரெயில்வேக்களில் ப்ரயாணம் செய்தார்கள். 1910-ம் வர்ஷத்தில் 37·1 கோடி பேர்கள் ப்ரயாணம் செய்தார்கள். 1913-14-ம் வர்ஷத்தில் 45·77 கோடி பேர்கள் ப்ரயாணம் செய்தார்கள். 1914-15-ம் வர்ஷத்தில் 45·1 கோடிப் பேர்கள் ப்ரயாணம் செய்தார்கள். இந்தக் கணக்குகளால் சென்ற 15-வர்ஷகாலமாக ஒவ்வொரு வர்ஷமும் கிட்டத்தட்ட 20 லக்ஷம் பேர்கள் அதிகமாக ப்ரயாணம் செய்துவருகிறார்களென்று ஏற்படுகிறது. இவ்விதம் ப்ரயாணிகளின் தொகை இதேவிகிதப்படி இன்னும் 10 வர்ஷம் அதிகரித்து வருமானால் 1925-26-ம் வர்ஷத்தில் 70 கோடி ப்ரயாணிகள் ரெயில்வேக்களை உபயோகிப்பார்களென்னலாம்.

(குறிப்பு:—ஒரேமனிதர் ஒரு வர்ஷத்தில் எத்தனை தடவை ப்ரயாணம் செய்கிறாரோ, அத்தனை தடவைக்கு அத்தனை ப்ரயாணிகளென்று கணக்கிடப்படுகிறது. மொத்தம் எத்தனை டிக்கட்டுகள் விற்கப்படுகிறதென்பதைக்கொண்டு ப்ரயாணிகள் அல்லது சரியாய் சொல்லவேண்டுமானால் ப்ரயாணங்களின் கணக்கு எடுக்கப்படுகிறது.)

இப்போது நமது தேசத்தில் ஜனங்கள் செய்யும் ரெயில் ப்ரயாணங்களின் தொகையானது மொத்த ஜனத்தொகையில் தலைக்கு வர்ஷத்து 1·41 வீதமாகும். ரஷ்யாவில் தலைக்கு 1·24 வீதமாகிறது. அந்த தேசத்தின் ஜனத்தொகை 17·3 கோடியாகும். க்ரேட் ப்ரிட்டனின் ஜனத்தொகை 4·5 கோடியாகும். இந்த தேசத்தில் ரயில் ப்ரயாணம் தலைக்கு 27·14 வீதமாகிறது.



1914-15-ம் வர்ஷத்தில் ரெயில்வேக்களில் ஏற்றிக்கொண்டு போகப்பட்ட மொத்த ஸாமான்களின் நிறை 8·1 கோடி டன் ஆகும். இது 35 வர்ஷத்திற்குமுன் ஒருவர்ஷத்தில் கொண்டுபோகப்பட்ட ஸாமான்களின் நிறைக்கு 5 மடங்காகும். இதில் 1·85 கோடி டன் நிலக்கரியின் நிறையாகும்.

வண்டித்தொடர்களின் நிறை உத்தமபக்ஷம் எவ்வளவு டன் என்பது அடியில் காட்டப்பட்டிருக்கிறது.

| | ப்ராட் கேஜ் | மீட்டர் கேஜ் | $2\frac{1}{2}$ அடி கேஜ் |
|---|---|---|---|
| மெய்ன்லைன்களில் ப்ரயாணிகள் வண்டி ... | 400 | 300 | 260 |
| ஸாமான்கள் கொண்டு போகும் வண்டி ... | 1600 | 1000 | 300 |

இந்தியாவிலுள்ள ரெயில்வேக்களில் ஒரு ப்ரயாணியை ஒருமைல் தூரம் ஏற்றிக்கொண்டு போவதற்கு குறைந்தபக்ஷம் ஏற்படும் செலவு ப்ராட் கேஜ், மீட்டர் கேஜ் வண்டிகளில் $\frac{3}{4}$ பை ஆகிறது. நாரோ கேஜ் வண்டிகளில் 1·2 பை ஆகிறது.

ஒரு மைல்தூரம் ஒரு டன் ஸாமானைக் கொண்டுபோக குறைந்தபக்ஷம் ஏற்படும் செலவு ப்ராட் கேஜில் 1·2 பை ஆகிறது; மீட்டர் கேஜில் 2-பை ஆகிறது. நாரோகேஜில் 3 பைக்கு சற்று மேலாகிறது.

சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் மொத்தம் ப்ரயாணிகளில் 100-க்கு 90 பாகம் மூன்றுவது வகுப்பில் ப்ரயாணம் செய்தார்கள். அந்த வர்ஷம் மூன்றுவது வகுப்பு ப்ரயாணிகளிடமிருந்து கிடைத்த வரும்படி 17·63 கோடி ரூபாயாகும். எல்லாவகுப்பு ப்ரயாணிகளிடமிருந்தும் கிடைத்த வரும்படி 20·35 கோடி ரூபாயாகும்.

இந்தியாவில் ப்ராட்கேஜ் பாதைகளில் தூரவண்டிகள் அதாவது நடுவில் மாறாமல் தூரமான இடங்களுக்குப்போகும் வண்டிகள் ரொம்ப வேகமாய்ப் போகின்றன. அவைகள் செல்லும் தூரமும் ரொம்ப அதிகமாகும். அதன் விவரம் வருமாறு.

| இன்னவிடத்திலிருந்து இன்னவிடத்துக்கென்பது | மைல்கள் | ப்ரயாணத்துக்காகும் மொத்த நேரம் | ஒருமணிக்கு வேகம் |
|---|---|---|---|
| | | மணி | மைல் |
| கல்கத்தாவிலிருந்து பெஷாவருக்கு | 1,491 | 47·00 | 31·72 |
| கல்கத்தா—பம்பாய் | 1,349 | 35·25 | 38·27 |
| கல்கத்தா—மதராஸ் | 1·083 | 34·50 | 30·60 |
| கல்கத்தா—[illegible] | 1,065 | 31·66 | 33·64 |
| பம்பாய்—மதராஸ் | 804 | 28·00 | 28·71 |

ஸ்ரீவிவேகானந்த ஸ்வாமிகளின் கடிதங்கள் ... 0 4 0
நக்ஷத்யசனம் 3-வது, 4-வது பாகங்கள் ஒவ்வொன்றும் ... 0 12 0
இவைகளில் 24 த்யாகராஜ கீர்த்தனங்கள் ஸ்வரம், தாளம், தாத்பர்யம், குறிப்புகள் முதலியவைகளுடன் அடங்கியிருக்கின்றன.
ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு, மதறாஸ்.

16202ୡ
M211.N09T8
N09.9

# PREMIUM BULLS IN IRELAND.

## ஐயர்லண்டில் பொலிகாளைகளை அதிகப்படுத்த ஏற்பாடு.

ஐயர்லண்டில் விவஸாய டிபார்ட்மெண்டார் மாடுகளை வ்ருத்திசெய்ய பொலிகாளை வைத்திருப்பவர்களுக்குப் பண உதவிசெய்து வருகிறார்கள். இந்த ஏற்பாட்டை அநுஸரித்து நமது மாகாண கவர்ன்மெண்டாரும் பொலிகாளை வைத்திருப்பவர்களுக்குப் பண உதவி செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். ஐயர்லண்டில் அநுஸரிக்கப்படும் ஏற்பாடு வருமாறு.

அந்ததேசத்தில் விவஸாய விஷயங்களைப் பற்றி கவனிக்க ஒருவிவஸாய இலாகா இருக்கிறது. இந்த இலாகாவுக்கு இம்பீரியல் கவர்ன்மெண்டார் விவஸாய வேலைக்காக க்ராண்ட் (பண உதவி) கொடுக்கிறார்கள். அங்குள்ள ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும உள்ள கௌண்டி கௌன்ஸிலார் விவஸாய விஷயங்களை கவனிக்க ஒரு விவஸாய கமிட்டி நியமிக்கிறார்கள். இந்தக் கௌன்ஸிலார் விவஸாயவேலைகளை நடத்த ஜில்லாவில் ஒருவரி விதித்துக்கொள்ளுகிறார்கள். விவஸாய டிபார்ட்மெண்டார் தங்களுக்குக் கிடைத்த க்ராண்டிலிருந்து இந்தக் கௌன்ஸில்களுக்குப் பண உதவி செய்கிறார்கள்.

ஒவ்வொரு வர்ஷமும் ஜனவரிமாஸம் முதலில் ஜில்லா கமிட்டியார், பொலிகாளை வைத்திருப்பவர்களுக்கு பண உதவி செய்வதாகவும், அவ்விதம் 20 பேர்களுக்கு பணம் கொடுக்கப்படுமென்றும், பண உதவிபெற்றுப் பொலிகாளை வைத்திருக்க இஷ்டப்படுகிறவர்கள் மநுப்போடலாமென்றும், பத்ரிகைகளிலும், நோட்டீஸுகள் மூலமாயும் விளம்பரம் செய்கிறார்கள். பொலிகாளை வைத்திருக்க விருப்பமுள்ளவர்கள் அடுத்தமாஸம் முதல் தேதிக்குள் தங்கள் மநுக்களை கமிட்டியின் ஆபீஸுக்கு அநுப்பிவிடவேண்டும்.

வந்த மநுக்களை கமிட்டியார் பார்வையிட்டு, எந்த விவஸாயிகள் நல்ல காளைமாடுகளை விலைக்கு வாங்கி அவைகளை சரியாக ஸம்ரக்ஷிப்பார்கள் என்று தோன்றுகிறதோ அவர்களுடைய மநுக்களை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இன்னும் பொலிகாளை வைத்திருக்க விரும்புகிறவர், ஏற்கனவே பொலிகாளையுள்ள இடத்துக்கு ஸமீபத்தில் தமதுகாளையைவைத்திருக்கக்கூடாது.

இது ஆனபிறகு, விவஸாய டிபார்ட்மெண்டின் இன்ஸ்பெக்டர்கள், கால்நடைக் காட்சி நடக்குமிடத்துக்குப்போய் பொலிகாளைகள் தெரிந்தெடுப்பார்களென்று ஷை டிபார்ட்மெண்டார் விளம்பரம் செய்கிறார்கள். கால்நடைக்காட்சிகள் நடைபெறும்போது விவஸாய இன்ஸ்பெக்டர்கள் அக்காட்சிகளுக்கு வந்திருக்கும் காளைமாடுகளில் தக்கவைகளை பொலிகாளைகளாகத் தெரிந்தெடுப்பார். இவைகள் அங்கேயே ஏலம் போடப்படும். ஸர்க்கார் பண உதவியின்பேரில் பொலிகாளை வைத்திருக்கத் தெரிந்தெடுக்கப்பட்ட விவஸாயிகள் தங்களுக்குப் பிடித்தமான காளைகளை ஏலத்தில் வாங்குவார்கள்.

அப்படி வாங்குகிறவர் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்படவேண்டும்.

(1) அவர் இருக்கும் ஊரிலும் ஊருக்குப் பக்கத்திலும ஒரு பசுவுக்கு முக்கால் ரூபாய் வீதம கூலி வாங்கிக்கொண்டு தமது காளையை 40 பசுக்களுடன் பொலியவிடவேண்டும். இவைகளுள 30 பசுக்கள் சிறு விவஸாயிகளையும், நடுத்தர விவஸாயிகளையும் சேர்ந்தவைகளாக இருக்கவேண்டும.

(2) இவைகளுக்கு ஜாபிதா எழுதி வைத்திருக்கவேண்டும்.

(3) ஏலத்தில் வாங்கின காளையைத் தவிர வேறு பொலிகாளை வைத்திருக்கக்கூடாது.



(4) காளையை நன்றாய்ப் பராமரித்து வரவேண்டும்.

(5) அவரிருக்கும் ப்ரதேசத்தில் நடக்கும் கால்நடைக் காட்சிகளுக்கு தமது பொலிகாளையைக் கொண்டுவந்து காட்டவேண்டும்.

டிபார்ட்மெண்டின் ஆதரவில் பொலிகாளை வைத்திருக்கும் ஒவ்வொரு விவஸாயிக்கும் டிபார்ட்மெண்டார் 225 ரூபாய் க்ராண்ட் கொடுக்கிறார்கள். மேலே 40 பசுமாடுகளுக்கு வாங்கின கூலியையும் விவஸாயி எடுத்துக் கொள்ளலாம். அதோடு, 40-க்குமேல் எத்தனை பசுக்களோடு பொலியவிட்டாலும் அதற்கு அவர் தமதிஷ்டப்படி ஒவ்வொரு தடவைக்கும் 4 ரூபாய் முதல் 15 ரூபாய்வரையில் கூலி வாங்கிக்கொள்ளலாம். ஸாதாரணமாய் டிபார்ட்மெண்டார் கொடுக்கும்பணம் ஒருவர்ஷத்துக்கு மாட்டுக்கு ஏற்படும் செலவுக்கு சரிக்கட்டிப்போகும்.

விவஸாயி காளையை நன்றாய்ப் பராமரித்து வந்திருந்தால், அடுத்தவர்ஷமும், சில ஸமயம் மூன்றாவதுவர்ஷமும் அவருக்கு டிபார்ட்மெண்டார் பண உதவி செய்வதுண்டு. அந்ததேசத்தில் ஒரு பொலிகாளை ஸாதாரணமாய் 500 ரூபாய் முதல் 1,500 ரூபாய்வரையில் விற்கும்.

ஐயர்லண்டில் ஏழை விவஸாயிகளே அதிகமாகையால், பண உதவிபெற்று பொலிகாளை வைத்திருக்க மநுப்போடுகிறவர்களில் சிலருக்கு மாடுவாங்கப் போதுமான பணமிருப்பதில்லை. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் விவஸாய டிபார்ட்மெண்டார் பின்வரும் நிபந்தனைகளின்மேல் விவஸாயிக்குக் கடன் கொடுக்கிறார்கள்.

(1) விவஸாயி முதல் வர்ஷத்தில் மாட்டின் விலையில் மூன்றில் ஒருபாகத்தைச் செலுத்திவிடவேண்டும். (2) இரண்டு மூன்று வர்ஷத்துக்கு மாட்டின் பூராவிலைக்கு அதை இன்ஷூர் செய்யவேண்டும். (3) பாக்கிப் பணத்தை விவஸாயி 2-வது மூன்றாவது வர்ஷத்தில் வர்ஷத்துக்கு மொத்த விலைப்பணத்தில் மூன்றிலொருபாகமாக டிபார்ட்மெண்டுக்குச் செலுத்திவிடவேண்டும். இதற்கு வர்ஷத்துக்கு 100-க்கு 3-வீதம் வட்டி செலுத்தவேண்டும்.

பூராப் பணம் செலுத்திவாகிறவரையில்மாடு டிபார்ட்மெண்டுக்கு ஸொந்தமாக இருக்கும்.

பொலிகாளைகளை விவஸாய டிபார்ட்மெண்டின் உத்யோகஸ்தர்கள் வர்ஷத்திற்கு ஸுமார் இரண்டு தடவைபோய்ப் பார்வையிட்டு, விவஸாயிகளுக்கு மாடுகளை ஸம்ரக்ஷிப்பது விஷயமாய் வேண்டிய யோசனைகள்சொல்லி, மாடுகளின் நிலைமையைபற்றி ரிபோர்ட் செய்வார்கள்.

இந்த ஐயர்லண்டின் ஏற்பாட்டை நமது நாட்டு நிலைமைக்கு ஏற்ப அநுஸரித்து மாகாண கவர்ன்மெண்டார் பொலிகாளைக்கு க்ராண்ட் கொடுக்கப் பின்வருமாறு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பண உதவிபெற்று பொலிகாளை வைத்திருக்க விரும்புகிறவர் அல்லது விரும்பும் ஸங்கத்தார் முதலில் தமது ஸொந்தச்செலவில் டிபார்ட்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொலிகாளையை வாங்கி நிர்வகித்து வரவேண்டும். மாட்டை வைத்திருப்பவர் அதை சரியாகப் பாதுகாத்து வருவதாகத் தெரிந்தால் வர்ஷக் கடைசியில் ரூ. 100 க்ராண்ட் கொடுக்கப்படும். சரியாக ஸம்ரக்ஷித்துவரும் பக்ஷத்தில் இரண்டாவது மூன்றாவது வர்ஷங்களிலும் க்ராண்ட் கொடுக்கப்படும்.

காளையை சரியானகொட்டிலில் கட்டிவைத்திருப்பதோடு, அதன் தேகஸௌக்யம் கெடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். காளையைப் பொலிய விட்டதைப்பற்றிய தகவல்களை ஒரு ரெஜிஸ்டரில் எழுதிவைத்துக் கொள்ளவேண்டும். அதில் பொலியவிட்டதில் பசுக்கள் சினையாயினவாவென்பதையும் குறிப்பிடவேண்டும்.

ஸாதாரணமாய் ஒரு காளைமாட்டை 40 முதல் 50 தடவைவரையில் பொலியவிடவேண்டும். காளைமாடு பொலியவிட்ட பசுக்களை க்ராமத்திலுள்ள மற்ற மாடுகளுடன் சேர்க்காமல் தனியாகக் கட்டி வைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் க்ராமத்திலுள்ள எல்லாக் காளைமாடுகளையும் விதை படித்துவிடவேண்டும். பொலி காளை ஒருவிவஸாய ஸங்கத்தார் வசமிருந்தால், பொலிவதற்குக்கூலி விகிதத்தை அவர்கள் தங்கள் இஷ்டப்படி ஏற்படுத்திக்கொள்ளலாம். ஸங்கத்தைச்சேராத விவஸாயி வைத்திருந்தால் ஒவ்வொரு தடவைக்கும் 4 அணாவீதம் கூலிபெறலாம்.

# FOREST TREES.

BY S. R. ATMANATHA AIYAR.

## காடுகளும் காட்டு மரங்களும்.

எந்த ப்ரதேசத்தில் மரங்கள் அடர்ந்து வளர்ந்து ஏறக்குறைய மேலே ஒரு பந்தல் போட்டது போலிருக்குமோ அதற்கு காடு என்று பெயர். பூமியின் அநேக பாகங்களில் காடுகள் விஸ்தாரமான ப்ரதேசங்களை ஆக்ரமித்திருக்கின்றன. அவைகள் அதிக உஷ்ணம், அதிக குளிர் இவைகளை ஒருவாறு தணிக்கின்றன. மனிதனுக்கும் ம்ருகத்திற்கும் நிழலைத்தந்து அநேகவிதத்தில் உதவுகின்றன. மேலும் அவைகள் எந்த பூமியில் வளருகின்றனவோ அதற்கு செழுமையை ஊட்டுகின்றன. கோடைகாலம் நீண்டும் உஷ்ணமாகவும் இல்லாவிட்டால் மரங்கள் வளரமாட்டா. அவைகளுக்கு மழையும் முக்யமாக தேவையானது. ஆகையால் மிகக்குளிர்ச்சியான அல்லது மிக வரட்சியான பூமியில் காடுகள் இரா.

உலகத்திலுள்ள காடுகளை டெம்பரேட் என்றும் ட்ராபிகல் என்றும், அதாவது ஸமசீதோஷ்ண மண்டலத்தை யடுத்தது, உஷ்ண மண்டலத்தை யடுத்தது என்று இரண்டு பெரிய இனங்களாக வகுக்கலாம்.

ஸமசீதோஷ்ண மண்டலத்தையடுத்த காடுகள்:—இவைகள் விசேஷமாக ஸைபேரியாவிலும் கானடாவிலும் வடஐரோப்பாவில் சில பாகங்களிலும் இருக்கின்றன. இங்கிருக்கும் வ்ருக்ஷங்கள் இருவகைப்படும். ஒரு வகை கோனிபெரஸ் (Coniferous) என்றும், மற்றோர்வகை டெஸிடுவஸ் (Deciduous) என்றும் பெயருள்ளன. முதல்வகுப்பைச் சேர்ந்த மரங்கள் நீண்டு உயரமாயிருக்கும். பைன், பர், லார்ச்சு, ஸ்ப்ரூஸ் ஆகிய இம்மரங்கள் இந்த ஜாதியைச் சேர்ந்தவைகள். இவைகள் ஸ்காண்டிநேவியன்மலைச் சார்புகளிலும், ருஷ்யா தேசத்தின் வடபாகத்திலுமுண்டு. ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, ஸ்விட்ஸர்லண்டு, அமெரிக்கா ஆகிய இத்தேசங்களின் மலைச்சார்புகளில் பைன் மரங்கள் விஸ்தாரமாய் வளருகின்றன. இவைகளின் நீண்ட நேரான அடிமரங்கள் கப்பல்களுக்கு பாய் மரங்களாகவும் தந்தி ஸ்தம்பங்களாகவும் உபயோகப்படுகின்றன. கிளைகளையும் கொம்புகளையும் விறகாக உபயோகிக்கிறார்கள். சற்று ம்ருதுவான மரங்கள் யந்திரங்களால் மாவாக பொடி பண்ணப்பட்டு காகிதம் செய்ய உதவுகின்றன. மரங்களில் ஆங்காங்கு ஆழமான துளைகள் செய்து அதிலிருந்து ஒழுகும் ஸத்திலிருந்து குங்கிலியம் எடுக்கப்படுகிறது. டர்பெண்டைன் என்கிற மர எண்ணெயும் இந்த மரத்தினின்றும் கிடைக்கிறது.



ஸ்ப்ருஸ் மரத்தின் மேல்பட்டை தோல் பதனிடுவதில் உதவுகிறது.

இரண்டாவது ஜாதி 'டெஸிடுவஸ்' மரங்கள். இலையுதிர் காலத்தில் இலைகளை உதிர்த்துவிட்டு பிறகு துளிர்விடும் ஸ்வபாவம் உள்ளவைகள். ஓக், எல்ம், பிர்சு, பீச், செஸ்னட், மேபின் முதலிய மரங்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவைகள். இம்மரங்கள் நீண்டு நேராக இரா. இவைகள் முறுக்குள்ளனவாயும் கரடுமுரடாயுமிருக்கும். இவற்றின் கிளைகள் அநேகமாய் அடிவானத்துக்கு நேராகவிருக்கும். இவைகள் மிக அழுத்தமும் பலமும் பொருந்தினவைகள். ஐரோப்பாவிலிருக்கும் காட்டு மரங்கள் தீக்குச்சி, கதவு, ஜன்னல், சட்டம் முதலியவை செய்வதற்கு உபயோகமாகின்றன. கானடா தேசத்தில் வளருகிற மேபின் என்ற மரத்தின் ஸத்திலிருந்து ஒருவித சர்க்கரை செய்கிறார்கள். ஆஸ்ட்ரேலியா கண்டத்தில் ந்யூ ஸௌத்வேல்ஸ் என்றதேசத்தில் யூகாலிப்டஸ் மரங்கள் விசேஷமாயிருக்கின்றன. இவைகளின் இலைகளிலிருந்து இறக்கப்படுகிற ஒரு எண்ணெய் சளி, இருமல், தொண்டைக்கட்டு, ஜ்வரம் ஆகிய இந்நோய்களுக்கு சிறந்த ஔஷதமாகிறது.

கோனிபெரஸ் காட்டில் ஒரு மரத்திற்கும் மற்றோர் மரத்திற்கும் இடையில் பூமியின் மேல் புல் பூண்டிராது. மரங்களும் ஓங்கி நேராகவளருவதால் மழைக்கும் வெயிலுக்கும் ஆதரவு ஆகமாட்டா. இலையுதிர் மரங்கள் அடர்ந்த காட்டில் மரங்களின் இடையிடையே அழகிய மலைப்பூண்டுகளும் செடிகளும் நிரம்பியிருக்கும். சுற்றிலும் பரந்த கிளைகளாலும் இலைகளாலும் அண்டினவர்களுக்கு நிழலைத் தரும்.

உஷ்ண மண்டலத்தையடுத்த காடுகள்.—இவைகள் பூமத்யரேகை எந்த தேசங்களின் வழியே செல்லுகிறதோ அதற்கு இருபக்கங்களிலும ஸுமார் 10 டிகிரிவரையில் வியாபித்திருக்கும். இக்காடுகளில் மரங்கள் அடர்ந்து நெருங்கியிருக்குமாகையால் ஜனங்கள் உள்ளே செல்லுவதற்குக்கூட அதிக ப்ரயாஸையாயிருக்கும், மரத்தின் இலைகள் ஸூர்ய கிரணங்களையேனும் வெளிச்சத்தையேனும் உட்செல்லவிடாதபடி மறைக்கும். பூமியின் எல்லாபாகங்களையும்விட இங்கேதான் மரங்கள் மிகச்செழிப்பு வாய்ந்து ஓங்கிவளரும். இப்பாகத்து மரங்கள் இவ்வளவு செழிப்பாயிருக்கக் காரணம் யாதெனில், பூ மத்யரேகையை யடுத்த ப்ரதேசங்களில்தான் சராசரி சீதோஷ்ண ஸ்திதியும் மழையும் அதிகமாயுண்டு. இப்படி அதிக சூடும் அதிக ஈரமும் வாய்ந்திருப்பது மரங்களின் வளர்ச்சிக்கு மிக அனுகூலமாகிறது. உஷ்ணமும் ஈரமும் பூமத்யரேகையை யடுத்த காடுகளை எப்படி போஷிக்கிறதோ, அதற்கு ப்ரதியாக அக்காடுகளும் சுற்றிலுமிருக்கும் தேசத்தில் காற்று ஈரம் வாய்ந்ததாயும் சீதோஷ்ணநிலைமை ஒரே ரீதியாயுமிருக்கும்படி செய்கின்றன.

இக்காடுகள் தென்னமெரிக்கா கண்டத்தில் அமேஜான் நதி, ஆப்ரிக்காக் கண்டத்தில் காங்கோ நதி இவைகள் பாயும் தேசத்திலும் கினீதேசம், போர்னியோ தீவு, மலே தீபகற்பம் இவைகளிலும் விசேஷம். இங்கே கருங்காலி, ரோஜாமரம், செம்மரம், தேக்கு, விங்கோனு, ரப்பர், தென்னை, பனை, ஈந்து இம்மரங்கள் வளர்கின்றன. முதல் மூன்று மரங்களும் மிகநேர்த்தியான மரஸாமான்கள் செய்ய உதவும். செம்மரம் மிக அழுத்தமான வ்ருக்ஷம். இது ப்ரேஜில், ப்ரிட்டிஷ் ஹாண்டூராஸ் இத்தேசங்களில் ஏராளமாய் கிடைக்கிறது. இந்தியாவில் மேற்குமலைத்தொடரிலும் பர்மாதேசத்திலும் தேக்கு மரக்காடுகள் விஸ்தாரமாயுள்ளன. இம்மரம் மிக உறுதியுள்ளதாயும் ஒருவித எண்ணெய்

பொருந்தியுமிருக்கும். இதை தேய்த்து விட்டால் பளபளவென்று மின்னிக்கொண்டு அழகாயிருக்கும். இது ஈரத்தால் மக்காததும் அழுகாததும் கரையான் முதலிய பூச்சிகள் அரித்து பாழாக்க முடியாததுமான மரம். இந்த மரத்திலிருக்கும் எண்ணெய் அதனுடன் ஸம்பந்தப்பட்ட இரும்பில் துருவேற வொட்டாமல் தடுக்கிறது. இதர மரங்களை நாசஞ் செய்யும் ஜல ஜந்துக்களால் தேக்கு மரத்திற்கு யாதொரு கெடுதியுமுண்டாவதில்லை. இன்னும் இம்மரம் சீராய் மாதிரி பெயர்ந்துபோவதில்லை. இக்காரணங்களால் சண்டைக்கப்பல், முதலியவைகளிற்கூட, மரம் உபயோகிக்கவேண்டிய இடங்களிலெல்லாம் தேக்கு மரத்தையே உபயோகிக்கிறார்கள். ஆண்டீஸ் மலைச்சாரியில் பெரு என்கிற தேசத்திலும் ஈக்வெடார் தேசத்திலும் ஸிங்கோனாமரங்கள் யதேச்சையா யுண்டாகின்றன. இம்மரங்களின் பட்டையிலிருந்துதான் மலேரியா முதலிய கொடிய விஷஜ்வரங்களுக்கு க்வினைன் அல்லது கொய்னா எடுக்கிறார்கள். சென்னை ராஜதானியில் நீலகிரிமலையில் ஸர்க்காராலும் அநேக கம்பெனியார்களாலும் இந்த மரங்கள் வைத்து பெரிய தோட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ரப்பர் மரம் ப்ரெஜீல், மத்ய ஆப்ரிக்கா, போர்னியோ தீவு இவைகளில் விசேஷம். இம்மரத்திலிருந்து பாலை இறக்கி அதனுடன் கந்தகம் சேர்த்து பக்வம்செய்து விட்டால் அது கெட்டியாய் ஸைகில், மோடார் கார் இவைகளின் சக்கரங்களுக்கு பின் கட்டுக்கு ஆதாரமாகிறது. இந்த ரப்பர்மரமும் நம்முடைய ராஜதானியில் தற்காலத்தில் திருவாங்கூர், கொச்சி, மலையாளம், நீலகிரி முதலிய இடங்களில் வைத்து பயிரிடப்படுகிறது. தென்னை மரத்தின் ஒவ்வொரு பாகமும் நமக்கு அநேக விதத்தில் உபயோகப்படுகிறது. தேங்காயெண்ணெய் ஸோப் செய்வதற்கு அநுகூலமாகிறது. கொட்டங்கச்சியில் செதுக்கி வெகு விசித்ரமான வேலைகளும் செய்கிறார்கள். ஆப்ரிக்காவின் மேற்குக் கரையோரத்திலுள்ள பனைமரங்களினின்றும் ஒருவித எண்ணெய் இறக்கி அதையும் ஸோப் செய்ய உபயோகிக்கிறார்கள். ஈந்து அரேபியா, ஆப்ரிக்கா இத்தேசங்களில் அநேகருக்கு உணவாகிறது. இன்னும் இக்காடுகளிலிருந்து சுமக்கு கன்னரி, ஆமணக்கு, கோகோ, வேம்பு முதலிய பல மருந்து ஸாமான்களும் கிடைக்கின்றன.

உஷ்ணமண்டலத்தையடுத்த காடுகளில் மற்றோர் வகையுண்டு. இது மத்ய தரைக்கடல் ப்ரதேசம், கலிபோர்னியா ஆகிய இந்த நாடுகளில் உள்ளது. இங்கே எப்போதும் பச்சையாயுள்ள மிர்டில், ஆலிவ், ஆரன்ஜ் இத்தகைய மரங்கள் விசேஷம். (இன்னும் வரும்.)

எஸ். ஆர். வைத்யநாதய்யர்.

### இந்தியாவில் அவுரி சாகுபடி.

1916-17-ம் வர்ஷத்தில் இந்தியாவில் 7,56,400 எக்கர் நிலங்களில் அவுரி சாகுபடி செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது அதற்கு முந்தின வர்ஷமாகிய 1915-16-ம் வர்ஷத்திய நிலவிஸ்தீரணத்தைவிட இரண்டு மடங்குக்குமேல் அதிகமாகும். அவுரி சாகுபடி செய்யப்படும் எல்லா மாகாணங்களிலும் இது அதிகமாக சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சென்றவர்ஷம் 55,100 அந்தர் நீலச்சாயம் கிடைத்திருக்குமென்று மதிப்பிட்டிருந்தார்கள். 1916-17-ம் வர்ஷத்தில் 95,500 அந்தர் சாயம் கிடைத்திருக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இது முந்திய வர்ஷத்தியதைவிட நூற்றுக்கு 73 பாகம் அதிகமாகும்.

சென்னை ராஜதானியில் 1915-16-ம் வர்ஷத்தில் 2,22,000 எக்கர் நிலத்தில் அவுரி சாகுபடி செய்யப்பட்டது. 1916-17-ம் வர்ஷத்தில் 4,49,900 எக்கர் நிலத்தில் அவுரி சாகுபடி செய்யப்பட்டது. இந்த வர்ஷம் இந்த ராஜதானியில் 59,100 அந்தர் அவுரிச்சாயம் கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு முந்தின வர்ஷம் 40,500 அந்தர் கிடைத்திருக்கலாமாம்.



## BUDGET ESTIMATE OF THE GOVERNMENT OF INDIA.
## இந்தியா கவர்ன்மெண்டின் வரவு செலவு மதிப்பு.

இந்தியா கவர்ன்மெண்டார் யுத்தச் செலவுக்காக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு 150 கோடி ரூபாய் இனாமாகக் கொடுத்து உதவப் போகிறார்கள். இந்த 150 கோடி ரூபாயில் எவ்வளவுதொகை இந்தியாவில் கிடைக்குமோ அதைக் கடனாகவாங்கிக் கொடுத்துவிட்டு, பாக்கித்தொகைக்கு, இங்லண்டுக்கு வட்டி கொடுத்து வருவார்கள். இப்படிக்கடன் வாங்கின தொகைக்கு வட்டி செலுத்தவும், காலக்ரமத்தில் முதலைத் திருப்பிக்கொடுக்கவும் வர்ஷந்தோறும் 9 கோடி ரூபாய் வேண்டியிருக்குமென்று சொல்லப்படுகிறது. 1916-17-ம் வர்ஷத்தின் ஆரம்பத்தில் அந்த வர்ஷத்துக்கு வரவு செலவு மதிப்புப் போட்டபோது வர்ஷக் கடைசியில் 1,23,85,500 ரூபாய் மிச்சமிருக்குமென்று எண்ணியிருந்தார்கள். ஆனால் அந்த வர்ஷம் ரெயில்வேயிலிருந்து 6 கோடி ரூபாய் அதிகமாக வரும்படி கிடைத்தது. வேறு இனங்களிலிருந்தும் அதிக வரும்படி கிடைத்தது. மொத்தத்தில் அந்த வர்ஷத்தில் 8 கோடியே 72 லக்ஷத்து சொச்சம் ரூபாய் அதிகமாய்க் கிடைத்தது. 1916-17-ம் வர்ஷத்திய வரிவிகிதப்படி கணக்குப்போட்டால் 1917-18-ம் வர்ஷத்தில் கிடைக்கும் வருமானத்தில் செலவுபோக $4\frac{1}{8}$ கோடி ரூபாய் மிச்சமாகுமாம். ஏற்கனவே சொன்னபடி கடனுக்கு வட்டி முதலியவை கொடுப்பதற்காக 9 கோடி ரூபாய் வேண்டியிருக்குமாகையால், பாக்கி 5 கோடி ரூபாய் அதிகம் வேண்டியிருக்கிறது. இதற்காக கவர்ன்மெண்டார் பின்வருமாறு புது வரிகள் போட்டிருக்கிறார்கள்.

### புது வரிகள்.

(1) 50,000 ரூபாயும் அதற்கு அதிகமாயும் வரும்படியுள்ளவர்கள் ஏற்கனவே செலுத்தி வரும் வருமான வரியோடு பின்வரும் விகிதப்படி அதிக வரி செலுத்தவேண்டும்.

| | | |
|---|---|---|
| ½ லக்ஷம் முதல் 1 லக்ஷம் வரையில் | ரூபாய்க்கு | 1 அணா |
| 1 லக்ஷம் முதல் 1½ லக்ஷம் ,, | ,, | 1½ அணா |
| 1½ லக்ஷம் முதல் 2 லக்ஷம் ,, | ,, | 2 அணா |
| 2 லக்ஷம் முதல் 2½ லக்ஷம் ,, | ,, | 2½ அணா |
| 2½ லக்ஷத்துக்கு மேற்பட்டால் | ,, | 3 அணா |

இந்த அதிக வரியால் 2 கோடியே 2½ லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

(2) ஜூட் ஸாமான்களின்பேரில் போடப்பட்டிருக்கும் வரியை இரண்டு மடங்காக்கியிருக்கிறார்கள். இதுவரையில் 400 ராத்தல் கொண்ட ஒரு பேல் ஜூட் நாருக்கு 2½ ரூபாயும், துண்டுச் சணல்களுக்கு ஒரு பேலுக்கு 10 அணாவும், கோணிப் பைகளுக்கு ஒரு டன்னுக்கு 10 ரூபாயும், ஹெஸ்ஸியன் என்று சொல்லப்படும் சணல் துணிகளுக்கு டன்னுக்கு 16 ரூபாயும் போடப்பட்டிருந்தன. இப்போது அவைகளை இரண்டு மடங்காக்கினதால் 75 லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

(3) வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் பருத்தித் துணிகளுக்கு முன்பு அவைகளின் மதிப்பின்பேரில் 100-க்கு 3½ விதம் வரி போடப்பட்டிருந்தது. இப்போது 100-க்கு 7½ விதம் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். நாட்டுப் பருத்தித்தொழிலுக்கு 100-க்கு 3½ விதம் போடப்பட்டிருக்கும் வரி அப்படியே இருக்கும். இந்தபருத்தி இறக்குமதி வரியால் வர்ஷத்துக்கு 1½ கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும்.

(4) ரெயில்வேக்களில் கொண்டுபோகப்படும் ஸாமான்களில் நிலக்கரி, விறகு ஆகிய இவைகளுக்கு மணங்குக்கு 1 பை விதமும், மற்ற ஸாமான்களுக்கு மணங்குக்கு 2 பை

விதமும் அதிகமாக சார்ஜு வஸூலிக்கப்படும். இந்த அதிக சார்ஜால் வர்ஷந்தோறும் 75 லக்ஷம் ரூபாய் வரும்படி கிடைக்கும். ஆக நான்கு இனங்களாலும் கிடைக்கும் அதிக வருமானம் 5 கோடியே 2½ லக்ஷம் ரூபாயாகும்.

யுத்தக் கடன்.

இந்தியா கவர்ன்மெண்டார் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்போகும் பணத்துக்காக பின்வருமாறு ஜனங்களிடம் கடன் வாங்கப் போகிறார்கள்.

(1) *நீண்டகாலத் தவணையுள்ள கடன்.* இதில் 100 ரூபாய் கடன் பத்ரத்துக்கு 95 ரூபாய் கொடுத்தால் போதும். அப்படிக் கொடுக்கப்படும் தொகைக்கு பத்ரத்தில் கண்ட தொகையின்மேல் நூற்றுக்கு 5 வீதம் வட்டி கொடுக்கப்படும். அதாவது 1000 ரூபாய் கவர்ன்மெண்டுக்குக் கடன்கொடுப்பதாயிருந்தால், 950 ரூபாய் ரொக்கம் செலுத்தினால் போதும். ஆனால் பத்ரத்தில் 1000 ரூபாய் என்று கண்டிருக்கும். பத்ரத்தில் கண்ட 1000-க்கு நூற்றுக்கு 5 வீதம் வட்டி கொடுக்கப்படும். இதனால் உண்மையானவட்டி விகிதம் ஸுமார் 5¼ ஆகிறது. இந்தக் கடனை கவர்ன்மெண்டார் 1929-ம் வர்ஷம் முதல் 1947-ம் வர்ஷம் வரையில் எப்போது இஷ்டப்பட்டாலும் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். இந்தக் கடன்களுக்குக் கொடுக்கப்படும் வட்டித்தொகைக்கு ஸாதாரண வருமான வரி உண்டு. இது அடிக்கடி பணம்வேண்டாமல் நெடுநாளைக்கு பணத்தை வட்டிக்குவிட ஸௌகர்யமுள்ளவர்களுக்கு ஏற்ற ஏற்பாடு.

(2) 3-அல்லது 5 வர்ஷத்தில் திருப்பிக்கொடுக்கப்படும் கடன்கள். மேலேசொன்ன நெடுநாளைக்கான ஏற்பாடு அடிக்கடி பணமுடையுள்ள வ்யாபாரிகளுக்கும் பாங்கிக்காரர்களுக்கும் ஸௌகர்யப்படாததலால், 3-அல்லது 5-வர்ஷத்தில் திருப்பிக்கொடுக்கும் கடன்களும் கவர்ன்மெண்டார் வாங்குகிறார்கள். இதற்கு பத்ரத்தில் கண்ட முழுத்தொகையும் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கவேண்டும். நூற்றுக்கு 5½ வீதம் வட்டி கொடுக்கப்படும். கடன் கொடுத்தவர் பெறும் வட்டிக்கு வருமான வரி கிடையாது.

ஆனால் வட்டி வருமானம் ½ லக்ஷம் ரூபாய்க்குமேற்பட்டால் ஸாதாரண வருமானவரியில்லாமல்போனாலும் ஸூபர் டாக்ஸ் அதாவது அதிகப்படி வருமானவரி செலுத்தவேண்டும்.

(3) தபாலாபீஸ் 5-வர்ஷ ரொக்க ஸெர்டிபிகேட்டுகள். மேலேசொன்ன ஏற்பாடுகளெல்லாம் கையில் முதலுள்ளவர்களுக்கே யானதால், அப்படி முதலில்லாமல் ரொம்ப உபயத்தொகையுள்ளவர்கள் அதை சேர்த்துவைக்கும் பொருட்டு இந்தக்கடன் சீட்டுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த ஸெர்ட்டிபிகேட்டுகள் நான்கு வகைப்படும்.

(1) 10 ரூபாய் மதிப்புள்ளது. இதை ரூ. 7-12-0 செலுத்திப் பெறலாம்.

(2) 20 ரூபாய் மதிப்புள்ளது. இதை ரூ. 15-8-0 செலுத்திப் பெறலாம்.

(3) 50 ரூபாய் மதிப்புள்ளது. இதை ரூ. 38-12-0 செலுத்திப் பெறலாம்.

(4) 100 ரூபாய் மதிப்புள்ளது. இதை ரூ. 77-8-0 செலுத்திப் பெறலாம்.

இந்த நான்கு வகை ஸெர்ட்டிபிகேட்டுகளும் 1917-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸம் 1-ந் தேதி முதல் எப்போதும், ஸேவிங்க்ஸ் பாங்கி ஏற்பாடுள்ள எல்லா போஸ்டாபீஸுகளிலும் விலைக்குக் கிடைக்கும். இப்படி வாங்கின ஸெர்ட்டிபிகேட்டுகளுக்கு கவர்ன்மெண்டார் 5 வர்ஷம் ஆனபிறகு ஸெர்ட்டிபிகேட்டில் கண்ட தொகையைக் கொடுப்பார்கள். இந்தத் தொகையானது ஸெர்ட்டிபிகேட்டு விற்கப்பட்ட போஸ்டாபீஸால் பட்வாடா செய்யப்படும்,



அதாவது உதாரணமாக ரூ. 7-12-0 கொடுத்தால் 10 ரூபாய் மதிப்புள்ள ஒரு ஸெர்ட்டிபிகேட்டு கிடைக்கும். 5-வர்ஷத்துக்குப் பிறகு அந்த ஸெர்ட்டிபிகேட்டை போஸ்டாபீஸாரிடம் கொடுத்தால், 10 ரூபாய் கொடுப்பார்கள். ஆகவே 7¾ ரூபாய்க்கு 2¼ ரூபாய்கிடைக்கும். இது ஸெர்ட்டிபிகேட் வாங்கப்போட்ட தொகையாகிய 7¾ ரூபாய்க்கு சராசரியில் 100-க்கு வர்ஷத்துக்கு 5¼ வீதம் தொடர்வட்டியாகும்.

5-வர்ஷத்துக்குள்ளாகப் பணம் வேண்டுமென்றால் அடியில்கண்ட அட்டவணையில் குறித்துள்ளபடி வட்டியுடனே வட்டியில்லாமலோ பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

எவருக்கும் 7,500 ரூபாய்க்குமேல் ஸெர்ட்டிபிகேட்டுகள் விற்கப்படமாட்டா. இந்த ஸெர்ட்டிபிகேட்டுகளை வாங்கினவர் ஸாதாரணமாய் அவைகளைப் பிறருக்கு விற்கமுடியாது. ஆனால் ஸெர்ட்டிபிகேட்டுகள் விற்கப்பட்ட போஸ்டாபீஸ் எந்த ஸர்க்கிலைச் சேர்ந்ததோ அந்த ஸர்க்கிளின் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலின் அனுமதி பெற்றால் அந்த ஸெர்ட்டிபிகேட்டுகளைப் பராதீனம் செய்யலாம்.

இந்த ஸெர்ட்டிபிகேட்டுகளால் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு வருமானவரி கொடுக்கவேண்டியதில்லை.

போஸ்ட்டாபீஸ் ரொக்க ஸெர்ட்டிபிகேட்டுகளுக்கு பற்பல காலங்களில் கிடைக்கும் தொகை.

| பணம் கேட்கும் காலம் ஸெர்ட்டிபிகேட் வாங்கின தேதியிலிருந்து | கிடைக்கும் தொகை. | | | |
|---|---|---|---|---|
| | 10 ரூ. ஸர்ட்டிபிகேட்டுக்கு | 20 ரூ. ஸர்ட்டிபிகேட்டுக்கு | 50 ரூ. ஸர்ட்டிபிகேட்டுக்கு | 100 ரூ. ஸர்ட்டிபிகேட்டுக்கு |
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| ஒரு வர்ஷத்துக்குள்ளானால் அஸல் தொகை அதாவது ... | 7-12-0 | 15-8-0 | 88-12-0 | 77-8-0 |
| பூரா ஒரு வர்ஷமானபின் ... | 8-1-0 | 16-2-0 | 40-5-0 | 80-10-0 |
| „ 15 மாஸமானபின் ... | 8-2-6 | 16-5-0 | 40-12-6 | 81-9-0 |
| „ 18 „ „ ... | 8-4-0 | 16-8-0 | 41-4-0 | 82-8-0 |
| „ 21 „ „ ... | 8-5-6 | 16-11-0 | 41-11-6 | 83-7-0 |
| „ 2 வர்ஷமானபின் ... | 8-7-0 | 16:14-0 | 42-3-0 | 84-6-0 |
| „ 27 மாஸமானபின் ... | 8-8-9 | 17-1-6 | 46-11-9 | 85-7-6 |
| „ 30 „ „ ... | 8-10-6 | 17-5-0 | 43-4-6 | 86-9-0 |
| „ 33 „ „ ... | 8-12-3 | 17-8-6 | 43-13-3 | 87-10-6 |
| „ 3 வர்ஷமானபின் ... | 8-14-0 | 17-12-0 | 44-6-0 | 88-12-0 |
| „ 39 மாஸமானபின் ... | 9-0-0 | 18-0-0 | 45-0-0 | 90-0-0 |
| „ 42 „ „ ... | 9-2-0 | 18-4-0 | 45-10-0 | 91-4-0 |
| „ 45 „ „ ... | 9-4-0 | 18-8-0 | 46-4-0 | 92-8-0 |
| „ 4 வர்ஷமானபின் ... | 9-6-0 | 18-12-0 | 46-14-0 | 93-12-0 |
| „ 51 மாஸமானபின் ... | 9-8-6 | 19-1-0 | 47-10-6 | 95-5-0 |
| „ 54 „ „ ... | 9-11-0 | 19-6-0 | 48-7-0 | 96-14-0 |
| „ 57 „ „ ... | 9-13-6 | 19-11-0 | 49-3-6 | 98-7-0 |
| „ 5 வர்ஷமானபின் ... | 10-0-0 | 20-0-0 | 50-0-0 | 100-0-0 |

## MINERALS IN FOOD.
### ஆகாரத்தில் தாதுப்பொருள்கள்.

ம்ருகங்களும் மனிதர்களும் உட்கொள்ளும் ஆகாரங்கள் விசேஷமாய் இந்த்ரிய வஸ்துக்களே. அவைகளாவன தான்யங்கள், பழங்கள், காய்கள், கீரைவகைகள், மாம்ஸம் முதலியவைகளாகும். மனிதர்களும் ம்ருகங்களும் தாதுப்பொருள்களை அந்த நிலைமையில் உட்கொள்வதில்லை. ஆனால் தாதுப்பொருள்கள் ஆகாரப்பொருள்களில் வேண்டியவளவு கலந்திருக்க வேண்டியது அவச்யமாகும். தேகத்தில் தாதுப்பொருள்கள் சேருவதால் இரண்டு கார்யங்கள் ஸாதகமாகின்றன. முதலாவது அவைகள் தேகத்தின் பற்பல பாகங்களோடு சேர்ந்து தேகவளர்ச்சியை வ்ருத்தி செய்கின்றன. இவைகளுள் முக்யமானவை பாஸ்பரஸ் என்னும் தாதுப்பொருளும் சுண்ணாம்புமாகும். இவைகள் தேகத்திலுள்ள எல்லா உறுப்புகளிலும் வ்யாபித்திருந்தாலும், முக்யமாய் எலும்புகளின் வளர்ச்சிக்குத்தான் அதிகமாய் வேண்டியிருக்கின்றன. இரும்பும் தேகத்துக்கு வேண்டிய ஒரு முக்யமான தாதுப்பொருளாகும். இது ரக்தத்தில் விசேஷமாய்க் கலந்துள்ளது. இவைகளைத் தவிர வேறு தாதுப்பொருள்களும் தேகத்தின் பற்பல உறுப்புகளின் வளர்ச்சிக்கு வேண்டியிருக்கின்றன.

தாதுப்பொருள்களின் இரண்டாவது உபயோகமென்னவென்றால், அவைகள் தேகத்திலிருப்பதால் தேகத்திலுள்ள த்ரவபதார்த்தங்கள், உதாரணமாக ரக்தம் சரீரமெங்கும் சுற்றியோடுவது ஸுலபமாகிறது. ரக்தத்தை தேகமெங்கும் சுற்றச்செய்வது ஹ்ருதயமென்றாலும், ரக்தத்தில் இருக்கவேண்டியவளவு தாதுப்பொருள் இல்லாமல் போனால், ஹ்ருதயமானது ரததோட்டத்தை சரிவர நடத்தாதென்று சொல்லப்படுகிறது. ரக்தத்தில் இருக்கவேண்டிய தாதுப்பொருள்கள் வேண்டிய அளவு இல்லாமல் போய் அதனால் ஹ்ருதயம் பல ஹீனமடைந்த வ்யாதிஸ்தர்களுக்கு சில உப்புத்ரவங்களை அவர்களுடைய தேகத்தில் செலுத்தினால், ஹ்ருதயம் பலமடைந்து வ்யாதியின் கடுமை குறைவதோடு, ஜீவனுக்குக்கேடு வராமலுமிருக்குமாம்.

ஆகவே தாதுப்பொருள்கள் தேகத்துக்கு அவச்யமென்றேற்படுகிறது. இதை அறியாத சிலர் அவைகளை உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டியது அனாவச்யமென்கிறார்கள். உதாரணமாக உப்பை உபயோகிக்கக்கூடாதென்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ தாதுவர்க்கங்களை மிதமிஞ்சி உபயோகிக்கிறார்கள். சிலருக்குக் கரியுப்பு அதிகம் வேண்டியிருக்கிறது. சில ஸமயங்களில் ஆகாரத்தை சரியாய் பக்வம் செய்யத் தெரியாததால் தாதுப்பொருள்கள் அதிகமாக ஆகாரங்களில் சேருவதுண்டு. உதாரணமாக ரொட்டி சுடுவதில் பேகிங் பௌடர் என்னும் பொடியை அதிகமாய் உபயோகிப்பதையும், அப்பளம் செய்வதில் அப்பளாக்காரத்தை அதிகமாய் உபயோகிப்பதையும் சொல்லலாம்.

உப்பைத்தவிர மற்றெல்லா தாதுப்பொருள்களும் ஆகாரப்பொருள்களில் வேண்டிய அளவு கலந்திருக்கின்றன. ஆனால் தற்காலம் நாகரிகம் முதிர்ந்து போயிருப்பதில், ஆகாரங்களை சரியாய் பக்வம் செய்யாமல் ஆகாரப்பொருள்களிலுள்ள தாதுப்பொருள்களில் பெரும்பாகத்தை நாம் இழந்துவிடுகிறோம். ஆகாரப்பொருள்களிலுள்ள தாதுப்பொருள்களில் பெரும்பான்மையான பாகம், அந்தந்தப் பொருள்களின் மேல்மூடியில் அமைந்திருக்கிறது. கிழங்கு வகைகள், ஆப்பிள், மா முதலிய பழங்கள் ஆகிய இவைகளின் தோலில் தான் தாதுப்பொருள்கள் அதிகமாயிருக்கின்றன. தான்யங்களில் மற்ற பாகங்களைவிட தவிட்டில் தான் அதிக தாதுப்பொருள்கள் இருக்கின்றன. தவிடு, தோல் முதலியவைகளை முழுவதும் எடுத்தெறிந்துவிட்டு, மற்ற பாகங்களையே சமையல் செய்வதால் ஆகாரம் சரியாயிருப்பதில்லை. பெரியவர்களுக்கு எப்படியானாலும், வளரும் குழந்தைகளுக்கு, போதுமான அளவு தாதுப்பொருள்கள் ஆகாரத்தில் சேரும்படி ஆகாரப்பொருள்களை பக்வம் செய்து தரவேண்டும். ரொம்ப தீட்டின அரிசியை சமைக்க உபயோகிப்பது பற்பல வ்யாதிகள் உண்டாகக்காரணமாகிறது.

இனி சில முக்யமான தாதுப்பொருள்கள் எவ்விதம் தேகத்துக்கு உதவுகின்றனவென்பதை விவரிப்போம்.

முதலாவது பாஸ்பரஸை கவனிப்போம். பாஸ்பரஸானது முட்டையின் மஞ்சள் கருவிலும், தான்யங்களின் மூக்கிலும் முனை அதிகமாக இருக்கிறது. இந்த பாஸ்பரஸானது ஸுலபமாய்த்தேகத்தில் கலந்துகொள்ளக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதைத் தவிர பாஸ்பரஸ் ஸம்பந்தப்பட்ட சில உப்புவகைகளும் உணவுக்கேற்ற விதமாயிருக்கின்றன. ஆனால் இந்த உப்பு வகைகளைவிட இயற்கையிலேயே கிடைக்கும் பாஸ்பரஸ் ஸம்பந்தப்பட்ட உணவே ச்லாக்யமானது.

ஆகாரத்துடன் தேகத்துள்போகும் பாஸ்பரஸ் இரண்டுவிதமாக தேகத்தைவிட்டுப் போகிறது. தேகத்தில்சேர்ந்த பாஸ்பரஸில், தேகவளர்ச்சிக்குவேண்டிய பாகம் மாத்ரம் ரத்தத்தில் கலந்து கொள்ளுகிறது. அதிகப்படியான பாஸ்பரஸ் மலத்தோடு வெளியில் போய் விடுகிறது. ரத்தத்தில் கலந்த பாஸ்பரஸ் தேகத்தின் எந்த பாகத்தில் பாஸ்பரஸ் குறைவு ஏற்பட்டதோ அங்கே போய்ச் சேருகிறது. அப்படிச் சேர்ந்த பாஸ்பரஸ் அது செய்யவேண்டிய வேலையைச்செய்து முடித்ததும், மறுபடியும் ரத்தத்துக்கு வந்து, அதிலிருந்துபிரிந்து மூத்ரத்தோடு கலந்து வெளியில் வந்துவிடுகிறது.

ஸாதாரணமாய் ஒரு மனிதனுக்கு ஒரு தோலாவில் 6-ல் ஒருபங்கு பாஸ்பரஸ் தினம் வேண்டியிருக்கிறது. இது ஸாதாரணமாய் சமைக்கப்பட்ட உணவுகளில் இருக்கக்கூடும். ஆனால் அரிசியையும் வேறு தான்யங்களையும் இரட்டைத்தீட்டல் தீட்டினாலும், காய்கறிகளின் தோல்களை அனாவச்யமாய் எடுத்தெறிந்துவிட்டாலும் இந்த அளவு குறைந்துபோகக்கூடும்.

இன்னொருமுக்யமான தாதுப்பொருள் சுண்ணாம்பு. இது எல்லாதாவர உணவுகளிலும் இருப்பதோடு, மழைஜலம், ஆவிஜலம், நீங்கலான மற்றெல்லா ஜலங்களிலும் உண்டு. பாலிலும் சுண்ணாம்பு உண்டு. சுண்ணாம்பின் முக்ய உபயோகம் பற்களும் எலும்புகளும் வளரும்படி செய்வதே.

கந்தகமும் தேகத்துக்குவேண்டிய ஒரு முக்யமான பொருளாகும். ப்ரோடீன் என்று சொல்லப்படும் தசைவளர்க்கும் ஆகாரஸத்தில் (அதாவது பருப்புவகை முதலியவைகளில்) இது 100-க்கு 1-பாகம் விதம் கலந்திருக்கிறது.

கரியுப்பு முதலிய உப்புவகைகள் தேகவளர்ச்சிக்கு ப்ரயோஜனப்படுவதில்லை. ஆனால் அவைகள் ரத்தத்தில் கலந்து தேகத்தை ஸௌக்யமான நிலைமையில் வைக்கின்றன. ரத்தத்தில் இவைகள் குறைந்துவிட்டால் தேகஸுகத்துக்கு கெடுதலேற்படும்.

இரும்பு ஸம்பந்தமுள்ள பொருள்கள் தேகத்தில் சேருவதால், தேகத்தின் உறுப்புகள் தத்தம் வேலையை சரிவரச் செய்யும்.

மேற்சொன்ன தாதுப்பொருள்களைத் தவிர மாக்னீஷ்யா என்னும்பொருளும், ஐயோடைனும், வேறுசில தாதுப் பொருள்களும் தேகத்தில் சேர்ந்து உதவுகின்றன.

## THE INDIGO TRADE.

### நீலி வ்யாபாரம்.

நீலியானது சாயங்களுக்கு அரசன் என்று பொதுவாய் வழங்குகிறது. இந்தியர்கள் வெகு காலமாய் இந்தச் சாயத்தை உபயோகித்து வந்திருக்கிறார்கள். நீலச்சாயம் தயார் செய்ய முற்காலத்தில் பலவகைச் செடிகள் உபயோகப்பட்டுவந்தன. என்றாலும் 1298-ம் வர்ஷம் முதல் இந்தச் சாயம் தயார் செய்ய அவுரிவர்க்கமே விசேஷமாக உபயோகப்பட்டுவந்ததென்று தெரிகிறது. முற்காலத்தில் இந்தியாவில் கொல்லத்திலும் வேறு சில மேற்கு ப்ரதேசங்களிலும் இந்தச் சாயம் தயார் செய்யும் தொழில் நடந்து வந்ததாகத் தெரிகிறது. ஐரோப்பிய வர்த்தகர்கள் இந்தச் சாயத்தை இந்தியாவிலிருந்து விலைக்குவாங்கி இங்கலண்டுக்குக் கொண்டுபோய் விற்றுவந்தார்கள். போர்த்துகேசிய வ்யாபாரிகள் இதை வாங்கி லிஸ்பனுக்குக் கொண்டுபோய் ஹாலண்டிலுள்ள சாயம் போடுகிறவர்களுக்கு விற்றுவந்தார்கள். ஹாலண்டிலுள்ள வ்யாபாரிகள் சாயம் க்ரமமாக கிடைத்து வரவேண்டியதை உத்தேசித்து, இந்தியாவிலிருந்து நேராக சாயம் தருவிக்க எண்ணி, இந்தியாவோடு நேராக வ்யாபாரம் செய்ய டச்சு கிழக்கு இந்தியா கம்பெனியென்று ஒரு கம்பெனியை 1631-ம் வர்ஷத்தில் ஸ்தாபித்தார்கள். இந்தியா முதலிய கீழ்நாடுகளில் போர்த்துகேசியர்களுடைய செல்வாக்குக் குறைந்து போய் டச்சுக்காரர்களுக்கு வ்யாபாரம் வலுத்து லாபம் கிடைத்துவரவே, ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசத்தார்கள் டச்சுக்காரர்கள்மேல் பொறாமை கொள்ளலானார்கள். ஏனென்றால் அக்காலத்தில் ப்ரான்ஸ், ஜெர்மனி, இங்கலண்ட் ஆகிய இந்த தேசங்களில் வோட் என்னும் ஒருவகைச் செடியிலிருந்து நீலச்சாயம் தயார்செய்து உபயோகித்து வந்தார்கள். அவுரி நீலச்சாயம் ஐரோப்பாவில் பரவவே, வோட் செடி பயிரிடுவது குறைந்துபோய், அதில் வ்யாபாரம் செய்துவந்தவ்யாபாரிகளுக்கு ரொம்ப நஷ்ட மேற்படலாயிற்று. இதை உத்தேசித்து எல்லா தேசங்களிலும், அவுரிச் சாயம் இறக்குமதி செய்யக் கூடாதென்றும், அதைச் சாயம் போட உபயோகிப்பவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமென்றும் ராஜாங்கத்தார் உத்தரவு போட்டார்கள். சில இடங்களில் அவுரிச் சாயம் விஷ ஸம்பந்தமானதென்று சொல்லி அதை உபயோகிக்காதபடி தடுத்துவிட்டார்கள். அப்படியிருந்தும் இந்தியாவிலிருந்து அவுரிச்சாயம் இடைவிடாமல் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டுதானிருந்தது. அதன்மேல் ஸ்பெய்ன், போர்த்துகல், ப்ரான்ஸ், இங்கலண்டு ஆகிய இந்த தேசங்களைச்சேர்ந்த விவஸாயிகள் அமெரிக்காவுக்குக் குடியேறிப்போய் அங்கே அவுரி பயிரிட்டு சாயம் தயார் செய்யலானார்கள். ஆனால் சில காலத்துக்குப் பிறகு அமெரிக்காவிலுள்ளவர்கள் கரும்பு முதலியவைகள் பயிரிட்டால் அதிக லாபம் கிடைக்கிறதென்று கண்டு இதைக் கைவிடவே, இந்தியாவின் நீலி வ்யாபாரம் ஸ்திரப்பட்டுவிட்டது. ஆனால் முன்புபோல் இந்தியாவின் மேற்குபாகத்தில் அவுரி அதிகமாய் ஸாகுபடி செய்யப்படவில்லை. வங்காளத்தில்தான் அதிகமாக பயிரிடலானார்கள். அதற்குப் பிறகு 1870-ம் வர்ஷத்தில் வடக்கே டிர்ஹட்டிலும் ஐக்யமாகாணங்களிலும் அதிகமாக பயிரிடப்பட்டு வந்தது. அதுமுதல் 1895—96-ம் வர்ஷம்வரையில் இந்தியா அவுரி ஏராளமாய் பயிரிடும் தேசங்களில் ஒன்றாக இருந்துவந்தது.

1895-96-ம் வர்ஷத்தில்தான் மற்ற வர்ஷங்களைவிட அவுரி அதிகமாய்ப் பயிரிடப்பட்டது. சென்னை ராஜதானியிலிருந்து மாத்ரம் 62,425 அந்தர் அவுரிச்சாயம் பிற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதுவரையில் உன்னத நிலைமையடைந்து வந்த இந்த தொழிலானது அதுமுதல் க்ஷணிக்கலாயிற்று. இதற்குக் காரணம் ஜெர்மனியில் செயற்கை நீலச்சாயம் கண்டுபிடிக்கப்பட்டதே.



## REVIEW OF THE PRESS.

### பத்ரிகை ஆராய்ச்சி.

### BEAUTY OF ARUNAGIRI'S POEMS.

### அருணகிரிநாதரின் கவிச் சிறப்பு.

ஞானியும் பக்தரும் வரகவியுமாகிய அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருடைய கவிச்சிறப்பைப்பற்றி ஒரு விருபர் 'ஸ்வதேசமித்திர'னில் ஒரு வ்யாஸம் எழுதியுள்ளார்.

இவருடைய "திருப்புகழ்" என்ற நூல் சந்தக் கணக்குக்குப் புகழ்பெற்றது. வடமொழிச் சொற்களை மிகுதியாக உடையது. மண், பெண், பொன் என்ற உலக இன்பங்களைப் பழிப்பதில் ஒய்வில்லாதது. இது பெரிய திருப்புகழ். பஞ்சரத்நத் திருப்புகழ் என்ற ஐந்து பாட்டுக்களும் தனியாக எழுதப்பட்டன. இவரைப்பற்றிய பல கதைகளில் என்னென்ன பகுதி உண்மையென்பதை விசாரித்து விச்சயிக்க இது ஸந்தர்ப்பமில்லை. "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல், ஆரும் துறத்தல் அரிது" என்று தாயுமானவரால் வணங்கப்பட்ட மஹானாகிய பட்டினத்துப் பிள்ளைக்கு ஒரு தாஸி வயிற்றில் இவர் பிறந்தவரென்ற விநோதமான கதையொன்று தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது.

இவருடைய கவிதையின் கனிவைப் பார்க்க வேண்டுமானால் "பஞ்சரத்நத் திருப்புகழ்" "கந்தரலங்காரம்" "வேல் வகுப்பு" ஆகிய இவை மூன்றையும் படித்தால் போதும். சந்தக் கணக்கை வைத்துக் கொண்டு தெளிவாகவும் இயற்கையாகவும், சொல்லுதல் மிகவும் அருமை. காலிலும் கையிலும் தளைகளைப் பூட்டிக்கொண்டு கூத்தாட முடியாதென்று பழமொழி சொல்லுவார்கள். இந்த மஹானுடைய கவிதையோ வென்றால், மிகவும் கடினமான தளைகளைப் பூட்டிக்கொண்டு தெய்வீகக் கூத்தாடுகிறது. பஞ்சரத்நத் திருப்புகழின் முதற்பாட்டில் இவர் தமக்கு அதிசயமான தமிழ் பாடுந்திறமை வேண்டுமென்று முருகனிடம் கேட்கிறபொழுதே தெய்வ அருள்தோன்றி இவருடைய கவிதை அதிசயமாய் விடுகிறது :

மலடி வயிற்றிலே குழந்தை பிறந்தால் அவளுக்கு எப்படி ஆச்சரியமும் மகிழ்ச்சியு முண்டாகுமோ, அவ்விதமான மனக்கிளர்ச்சி தமது பாட்டைப் படிக்கும் போது தோன்றவேண்டு மென்கிறார்.

" மலடி வயிற்று மகன்போலே—ஒரு
புதைய லெடுத்த தனம்போலே—ஒளிர்
வயிர மடித்த களம்போலே—இள முலைமானார்,

வலிய அணைத்த சுகம்போலே—கதி
ரொளிவிடு ரத்ந வடம்போலே—பரி
மளமிகு புஷ்ப வனம்போலே—சுர நதிபோலே"

கவிதை !

கங்காநதி வானத்திலிருந்து பொழிவதுபோலே, தமது கவிதையும் ஞானலோகத்திலிருந்து நாவின் வழியே பொழியவேண்டுமென்று கேட்கிறார். புதையலெடுத்த செல்வத்தைக் கண்டு ஏழை மகிழ்ச்சி யடைவதுபோலே, தனது கவிதை படிக்கும்போது மகிழ்ச்சியுண்டாக வேண்டுகிறார். வயிரக் களம்போலே கவிதை முழுதும் ஒளிவீசவேண்டுமாம். இளம்பெண் வலியத் தழுவினாற்போன்ற இன்பம் தனது சொற்களிலே தோன்றவேண்டுமாம். புஷ்ப வனம்போலே கவிதையாம் !

மேலும், தேவர்கள் திருப்பாற்கடலை அமுதத்தின் பொருட்டாகக் கடைந்தார்கள். அப்போது எதிர்பார்க்காமல், லக்ஷ்மிதேவி தோன்றினாள். அப்போது அவர்கள் எப்படி வியப்படைந் திருப்பார்களோ அப்படிப்பட்ட வியப்புத் தம்முடைய பாட்டிலே பிறக்க வேண்டுமென்று கேட்கிறார். தமது பாட்டில் பொருள் தெளிந்து மேலாகத் தெரிய வேண்டுமாம் ! படிப்போர் சிரமப்பட்டு மூச்சு முட்டிப்பொருள் கண்டு பிடித்து அந்தப் பொருள் அதி ஸாமான்யமாய் வியப்பின்றி யிருக்கும் கவிதையைச் சிலர் கவிதையென்று மதிக்கிறார்கள். அது தமக்கு வேண்டியதில்லையென்றும், கரையருகில் எடுத்த நீர்போலே எளிதில்மொண்டுசெல்லத் தக்கதாகத் தமது பாட்டில் பொருள் ததும்பித் தெளிந்து கிடக்கவேண்டுமென்றும் இவர் விரும்புகிறார்.

" அலைகடல் பெற்றிடு பெண்பேரலே—வரு
புலவர் தமக்கிரு கண்போலே—கரை
யருகிலடுத்த ஜலம்போலவே—வின
தழகாமோர்

அமுது புசித்த ரஸம்போலே—திரை
கடல் மடை விட்ட ஜலம்போலே—தினம்
அதிசய முத்தமிழ் அன்பால் ஓதவின்
அருள் தாராய் !"

பின்வரும் பாட்டைப் பாருங்கள் !

" கலியை யலைத்துத் தொலைத்து விட்டொரு
பிணியை யடித்துத் துரத்தி விட்டெழு
கவலை நெருப்பைத் தணித்து விட்டற
நெறியாலே

கடின கசப்புக் கினிப்பு விட்டென
துயிரில் அழுக்கைத் துடைத்து விட்டொரு
கருணை மழைக்குட் குளிக்க விட்டினி
யலையாதே

அலையு மனத்தைப் பிடித்து வைத்ததில்
உறையும் இருட்டுக் கருக்கலுக்கு நின்
அழகு விளக்கைப் பதித்து வைத்தஃ
தவியாதே.

அறிவை யுருட்டித் திரட்டி வைத்துநின்
அமுத குணத்தைத் துதிக்க வைத்தெனை
அடிமை படைக்கக் கருத்து முற்றிலும்
நினையாயோ ?"

கலியுகத்தை ஒழித்து, நோயைத் துரத்தி, கவலைத் தீயைத் தணித்துக் கசப்பை இனிப்பாக்கி, உயிரை அழுக்கறுத்து கருணை மழையிலே குளிக்கவிட்டு, அலைகின்ற மனதை நிறுத்தி, அதிலுள்ள இருட்டைத் தொலைக்கும் பொருட்டு முருகனுடைய அழகாகிய விளக்கை அதில் நாட்டி, அந்த விளக்கு நீடித் தெரியும்படி அறிவைத் திரட்டி, முருகனுடைய அமிர்த குணங்களைப் புகழும்படி தம்மை வரகவியாக்கச் சொல்லுகிறார். அந்த நிலைமையை இவர் பெற்று விட்டனரென்று அந்தப் பாட்டிலேயே தெரிகிறது. அதை ஸங்கீதம் சேர்த்துப் பாடிப்பாருங்கள்.

## THE SILK COTTON TREE.

## இலவமரம்.

இலவமரம் ஸாதாரணமாய் எங்குமுள்ளதாயும், வெகுவாய்ப் பயிர்செய்யக்கூடிய வாதாமரத்தைக் காட்டிலும் இன்னும் அதிக உயரமாயும் நல்ல வரும்படி தரக்கூடியதுமான ஒருவகை மரம்.

பயிர்செய்யும் விதம் :—ஆடிமாதத்தில் ஒரு குழி நிலத்தை நன்றாய்க் கொத்தி ஒரு அடி ஆழம் உதிரிமண் பாங்காய் அதாவது கால்வரிசை மணற்கலந்ததாயாவது அல்லது இயற்கையாயில்லாத பட்சத்தில் கலந்தாவது புழுதியாக்கிக்கொண்டு ஒருமணங்கு சாம்பல் எருவைக் கலந்து அதில் ஒருவீசை இலவ விதையை விதைக்கவேண்டும். விதைத்த மூன்றாம் நாள் முதல் 7-நாளைக்குள் எல்லாம் முளைத்துவிடும். இக்கன்றுகள் மாதம் ஒரு அடிவீதம் வளரும். செழிப்பற்றதும் நெருக்கமுமான கன்றுகளை வளர்ச்சிக்கு இடையூறின்றிப் பிடுங்கி எறிந்து விடவேண்டும். இரண்டு மாதங்கழித்து 20-குழி நிலத்தை மேற்கண்டபடி பண்படுத்தி அதில் 10-கன்றுகளுக்கு மேற்படாமல் சேர்த்து 2-அடி விட்டு கொத்துக் கொத்தாக நட்டுத் தண்ணீர்வார்த்து வரவேண்டும். 4-வது மாதத்தில் மறுபடியும் 5-ஆகச் சேர்த்து 6-அடிக்கு ஒரு கொத்தாகப் பதியம் போட்டுத் தண்ணீர் வார்த்து வந்து, 6-வது மாதத்தில் மரங்கள் வைப்பதற்கு 2-அடிச்சதுரம் அதாவது ஒரு குழிக்கு இரண்டுகன்றுகள் வீதம் ஒன்றாய்ச் சேர்த்து 2-அடிச் சதுரம் குழியை 2-அடி ஆழம் வெட்டி மணலைக் கொட்டி ஒன்றரை அடி மணலையும் கலந்துகொட்டி குழியை நிரப்பி அதில் ஜாதிக்கன்றுகளாக நட்டுத் தண்ணீர்வார்த்து வரவேண்டும். மூன்று வருஷத்தில் 12-அடி உயரத்துக்குமேல் வளர்ந்து காய்க்க ஆரம்பிக்கும். அப்போது ஒருஅடிச் சுற்றுக்குக் குறையாமல் 2-அடிச் சுற்றுவரையில் நிலத்தின் வளத்துக்கு தகுந்தபடி பருக்கும்.

மற்றொரு விதமாகவும் பயிர் செய்யலாம். அதாவது ஒரு அடி உயரமுள்ள தொட்டிகளிலாவது 2-அடி உயரம் 2-அடி சுற்றுள்ள மூங்கில் முதலியவற்றால் செய்த நீளமான கூடையிலாவது மண்ணையும் எருவையுங் கலந்துகொட்டி நிழலுள்ள மரங்களைச் சுற்றிலும் வைத்து அவைகளில் 10-விதைகளை மத்தியில் குழிதோண்டி 2-அங்குல ஆழத்தில் புதைத்து தண்ணீர்வார்த்து வரவேண்டும். கன்று வளர வளர எல்லாக்கன்றுகளையுஞ் சேர்த்து மெல்லிய சணல் கயிற்றால் 3-அல்லது 4-அங்குலத்துக்கு ஒருகட்டு கட்டிக்கொண்டே போகவேண்டும். அப்படிச் செய்வதால் எல்லா கன்றுகளும் ஒன்றாய்ச்சேர்ந்து ஒரே



கன்றாகிப் பருத்துவளரும். இதை 4-வது மாதத்தில் மேற்சொல்லியபடி 12-அடிக்கொரு கன்றாகக் கூடையோடு ஒரு கஜகனம் குழிவெட்டி அதில் அடியில் ஒரு அடி மணலும் இரண்டடி மண்ணும் எருவும் கலந்து குழியில் கூடையோடு அப்படியே கன்றை இறக்கிவிடவேண்டும். இம்மாதிரி பயிர்செய்தால் 3-வருஷத்தில் 4-அடி சுற்றளவிருக்கும். இதிற் சொல்லிய இரண்டு வகைகளுக்கும் விதைத்த நாள் முதல் ஒரு மாதம் வரையில் தினம் காலையில் தண்ணீர் இறங்காமல் தெளிக்கவேண்டும். பிறகு 6-மாதம் வரையில் 2-நாளைக் கொருதரமும், அதற்குப் பிறகு பூமியில் நட்டவுடன் 3-நாளைக் கொருதரமும் தவறாமல் தண்ணீர்விட்டு வரவேண்டும்.

### செலவு விபரம்.

| | | | |
|---|---|---|---|
| நாற்றுப்பாவி கன்றுகள் வளர்ந்து பதியம் போடும் வரையில் அதாவது 6-மாதத்துக்கு ஆள் ஒன்றுக்கு மாதம் ரூ. 5 வீதம் ... ... | 30 | 0 | 0 |
| பூமியை முதலிலும், மறுபடி 2-வது தடவை பதியம் போடும்போதும் பண்படுத்த ... ... | 5 | 0 | 0 |
| எருக்ரயம் எல்லாவற்றிற்கும் ... | 25 | 0 | 0 |
| மணல் பரப்பவும் சேகரிக்கவும் ... | 5 | 0 | 0 |
| ஒரு ஏக்கர் நிலத்தில் வெட்ட, 600 கனகஜ குழிக்கு ... ... | 50 | 0 | 0 |
| 600 கூடைகளின் க்ரயம் ... | 21 | 0 | 0 |
| ஒரு ஏக்கர் நிலத்தைச் சுற்றிலும் மூங்கிற்படல் வேலிகட்ட, முள்க்ரயமுள்பட கூலி ... ... | 10 | 0 | 0 |
| 6-மாதத்துக்குமேல் 2½ வருஷம் வரையில் ஆட்கள் 4-க்கு ரூ. 5 வீதம் சம்பளம் ... ... | 600 | 0 | 0 |
| பெரிய கிணறுண்டாக்கவும் கட்டவும்... | 100 | 0 | 0 |
| சில்லரைச் செலவு ... ... | 54 | 0 | 0 |
| ஆக ரூ. | 900 | 0 | 0 |

### வரும்படி.

| | | | |
|---|---|---|---|
| மரம் ஒன்றுக்கு 500 காய்க்குக் குறையாமல் காய்க்கும், மொத்தம் காய்களின் க்ரயம் ... ... | 600 | 0 | 0 |
| 2-வது வகையாய்ப் பயிர்செய்தால் மரமொன்றுக்கு 1,000 காய்க்குக் குறையாமல் காய்க்கும், க்ரயம் ... | 1,200 | 0 | 0 |

இவைகள் நாளேற நாளேற அதிகமாய்க் காய்க்கும். முந்திய விதமாய் ஒரு ஏக்கர் பயிர்செய்வதற்கு ரூ. 700-ம், 2 வது விதமாய்ப் பயிர்செய்வதற்கு ரூ. 900-மும் செலவாகும். இதற்கு 5-வது வருஷத்திலேயே ரூ. 1,200-ம், பின்பு வருஷா வருஷம் வருஷத்திற்கு ரூ. 200-மாவது கூடுதலாகக் கிடைக்குமே தவிறக் குறையாது. மரமாகிவிட்டால் இதற்குக் காவல் வேண்டியதில்லை. இந்த மரம் 60-அடி உயரம் வரையில் வளரும். தஞ்சாவூர் ஜில்லாவில் இதைப்பயிர் செய்த சிலர் நல்ல லாபத்தை யடைகிறார்கள். ஆனாலவர்கள் தோப்பாக வைத்துப் பயிர் செய்யவில்லை. வேலிகளிலும் குளத்துக்கரைகளிலும் கோவிலுக்கெதிரிலும் வைத்துப் பயிர்செய்து வந்திருக்கிறார்கள். விஸ்தாரமான இடங்களில் இதைப் பயிர் செய்தல் நன்மை பயப்பதாகும்.—விவஸாய தீபிகையில். சி. மா. நாராயணசாமி செட்டி.

## LOSS OF APPETITE.

## பசியின்மை.

இதைப்பற்றி ஒரு வ்யாஸம் 'வைத்திய கலாநிதி'யில் வெளியாகியிருக்கிறது.

பசியின்மையென்னும் அக்னிமாந்த்யம் அநேகம் வ்யாதிகளுக்கு ஆதாரமாயிருப்பதாக ஆயுர்வேதம் கூறும். அதோடு இது தேக நிலைமையில் மாறுபாடு உண்டாயிருப்பதை அறிவித்து, இனிமேல் ஆகாரம் உட்கொள்ளுவது கெடுதலையுண்டாக்குமென்று தெரிவிக்கும் ஓர் அறிகுறியாக இருக்கிறது. இந்த எச்சரிக்கையை மனிதர்கள்தவிர மற்ற ஜீவராசிகளெல்லாம் காதுகொடுத்துக் கேட்டு நடக்கின்றன. குதிரைக்கு வ்யாதி ஏதேனும் உண்டானால் அது உடனே தீனியெடுப்பதை ஒழித்துவிடுகிறது ; ஒரு நாயாவது பூனையாவது நோய்கொண்டால், வ்யாதி நீங்கி மீண்டும் ஆரோக்ய நிலைமையைப் பெறுமளவும் ஒன்றையும் தின்பதுமில்லை, பெரும்பாலும் தண்ணீரையும் குடிப்பதில்லை. ஆனால் மனிதனுக்கு வ்யாதி உண்டானால், அவனுக்கு பசியில்லாமலிருந்தாலும், அவனது பந்துக்கள் அவனை நிர்ப்பந்தப்படுத்தி ஏதாவது ஆகாரம் உட்கொள்ளச் செய்கிறார்கள்.

அவ்விதம் அளிக்கப்படும் உணவானது நோயாளிக்கு உண்மையில் தீமையுண்டு பண்ணுகிறதேயன்றி அதனால் எவ்வித நன்மையும் கிடையாது. எப்பொழுது பசியில்லையோ உமிழ்நீராவது, ஆமாசயத்ரவமாவது (Gastric juice) அப்பொழுது வேண்டியவளவு ஊறிப் பொசிவதில்லை ; பித்தநீரும் மற்றும் ஜீர்ணத்திற்கு அவசியமாகவேண்டிய த்ரவங்களும் நன்றாக்

கசிவதில்லை. ஆஹாரம் முற்றிலும் ஜீர்ணமாவதற்கு முடியாது. அப்பொழுது உட்கொள்ளப்பட்ட உணவானது மேலே குடலுக்குள் செல்வதற்கு முன்பு, ஸாதாரணமாய் அநேகம் நாழிகைகள் வரையிலும் இரைப்பையிலேயே தங்கியிருக்க நேரிடுகிறது. அப்படித் தங்குவதால் அதிலிருந்து ஸூக்ஷ்மான விஷப் பொருள்கள் உற்பத்தியாகி, குடலிலுள்ள மெல்லிய ஜவ்வுகளால் உறிஞ்சப்பட்டு, இரத்தத்துடன் சேர்ந்து, சிரோவேதனையையும் அஜீர்ணத்துடன்கூடிய வேறு விதமான தூர்க்குணங்களையும் உண்டுபண்ணுகின்றன.

பசியில்லையென்று சொல்லும் பிணியாளிக்கு அவனது கல்லீரல் நன்கு வேலைசெய்யாமல் ஒருவேளை மந்தமாயிருக்கலாம். சில வேளை, கல்லீரலானது தகுந்தவளவு பித்தநீரைக் கசியச் செய்வதில்லை. போதுமான உத்தீபநமின்மையே இத்திமிர்ப்புக்குக் காரணமாகலாம். இத்தகைய நிலைமையில் இக்கருவிக்கு அதிக வேலைகளைக் கொடுப்பது, அதாவது அமிதமான உணவுகளைத் திணிப்பது கூடாது. கல்லீரலிலிருந்து பித்தநீரைப் பிறப்பிக்கும் அதன் சவ்வறைகள் யாவும் அவற்றிற்கு வேண்டிய வஸ்துக்களால் முற்றிலும் நிரம்பியிருக்கையில், அவை மதப்படைந்து மயக்கங்கொண்டவைபோல் இருக்குமாகையால், பித்தநீர் உண்டாவதற்கு வேண்டிய ரஸாயனச் செயல்கள் வழக்கம்போல் சுறுசுறுப்பாக நடைபெறுவதில்லை. அப்பொழுது கல்லீரல் அபேக்ஷிப்பது என்னவென்றால், அதிக தீக்ஷ்ணமில்லாத உத்தீபண வஸ்துவேயாம். இதற்கு "பாஸ்கரலவண சூர்ணமும்," "அகஸ்திய ஹரீதகி லேஹ்யமும்" அனுபவத்தில் வந்த சிறந்த ஔஷதங்களாகும். (சாரங்க்தர ஸம்ஹிதையென்னும் வைத்ய நூலில் இந்த ஔஷதங்கள் செய்யும் முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.) இவ்வௌஷதங்கள் கல்லீரலை மிதமிஞ்சித் தூண்டி பேதியை யுண்டுபண்ணாமல், அதற்கேற்பட்டுள்ள திமிர்ப்பைப்போக்கி, அதன்இயல்புக்கு மிஞ்சாதபடி வேலை செய்யத் தூண்டும் மிதமான தீக்ஷ்ணத்தன்மையுடையவைகளா யிருக்கின்றன. கல்லீரலில் ஜவ்வறைகள் மிதமிஞ்சி நிண்டிக்கப்படுவது நீங்கி, பித்தநீர் தாராளமாக உற்பத்தியாய் வெளியிற் கசியத்தொடங்கவே, அப்பால் அவச்யமான உணவையும் அக்கருவி அபேக்ஷிக்க ஆரம்பிக்கிறது; பழையமாதிரி பசியும் தோன்றிவிடுகிறது.

அக்னிமாந்தியத்திற்கு பலபந்தமும் மற்றொரு ஸாதாரண காரணமாகும். மலம் திரளாகக் குடலில் மலாசயத்தில் சேரச் சேர, அதிலுள்ள மலினமான ஈரப்பசையும் மற்றும் கரையக்கூடிய மலத்திலுள்ள உப்புவகைகளும் க்ரமமாக ஊறி இரத்தத்தில் கலந்துவிடுகின்றன. இதனால் தலைவலியும், திமிரும், மனதுக்கு அமைதியின்மையும் ஸம்பவிப்பதோடு, முக்யமாய் அக்னிமாந்த்யமும் உண்டாகின்றது. இத்தருணத்தில், அம்மனிதனுக்கு உணவை பலவந்தமாகக் கொடுத்தால், மலாசயத்தில் மலின பதார்த்தங்கள் மேன்மேலும் திணிக்கப்பட்டு இன்னும் தீமையே வ்ருத்தியாகும் என்பது வெளிப்படையான விஷயமல்லவா? இந்த நிலைமையை நிவ்ருத்தி செய்வதற்குப் பித்தநீர் தடையில்லாமலும் ஒரே சீராகவும் கசிந்து வரவேண்டியது அவசியமாகும். பித்த நீரானது அடிக்குடல்களின் உட்புறச் சுவர்களின் சர்மங்களைத் தூண்டி, மலத்தை இளக்கி வெளிப்படுத்தவும், மலங்கள் குடலுக்குள் தீங்கு விளைவிக்காதபடி அப்பாகங்களைச் சுத்தம் செய்யவும் ஏற்ற வஸ்துவாயிருக்கிறது. கல்லீரலைத் தூண்டுவதற்கு ஔஷதம் மட்டும் போதுமானதல்ல; தகுந்தவாறு வியாயாமம் என்னும் பயிற்சியும் செய்யவேண்டும். மிதமாகவே எப்பொழுதும் உணவுகளை யெடுத்துக் கொண்டுவந்தால் இத்தீமை நேரிடமாட்டாது. சாகவகைகளும், நன்றாகக் கனிந்த பழவகைகளும் கல்லீரலின் வேலையைப் பெரும்பாலும் மந்தப்படுத்துபவையல்ல. மலபந்தமுள்ளவர் நிர்மலமான குளிர்ந்த ஜலத்தை தாராளமாய்ப் பருகுவது நலம். பனிக்கட்டியின் ஜலத்தை இதற்காக உட்கொள்ளக்கூடாது. உணவுண்ணும்போது இடையில் ஜலபானம் செய்வது பிசகு என்று சொல்லும் விஷயம் இக்காலத்திய சாஸ்த்ர நிபுணராலும் அங்கீகரிக்கப்படவில்லை. பித்த நீரையும், மற்றும் ஜீர்ண வேலைக்கு அவச்யமான த்ரவங்களையும் கசியச்செய்ய ஜலம் தாராளமாய் உடலுக்குத் தேவையென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

---


சார்ங்கதர ஸம்ஹிதை.

ஒரு உயர்ந்த வைத்தியநூல். யாவருக்கும் உபயோகமானது. விலை ரூபா 8 0 0

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.




# News and Notes.
## வர்த்தமானக் குறிப்புகள்.

### இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற டிஸம்பர், ஜனவரி மாஸங்களில் அடியில்கண்ட விவரப்படி ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| டிஸம்பர்மீ | ரூ. |
|---|---|
| 3 பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 2,70,000 |
| 2 இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் | 1,20,000 |
| 1 கப்பல் கம்பெனி | 3,00,000 |
| 1 அச்சடித்து ப்ரசுரம் செய்யும் கம்பெனி | 1,00,000 |
| 5 வ்யாபாரக் கம்பெனிகள் | 56,50,000 |
| 1 எண்ணெய் மில் கம்பெனி | 7,50,000 |
| 4 தேயிலைத்தோட்டக் கம்பெனிகள் | 9,10,000 |
| 3 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனிகள் | 11,50,000 |
| 1 தங்கச் சுரங்கக் கம்பெனி | 3,50,000 |
| 1 சுரங்கக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 1,00,000 |
| 1 நிலம் கட்டிடக் கம்பெனி | 5,00,000 |
| 23 மொத்தம் | 1,02,00,000 |

| ஜனவரிமீ | ரூ. |
|---|---|
| 3 பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள் | 1,60,000 |
| 1 அச்சடித்து ப்ரசுரம்செய்யும் கம்பெனி | 50,000 |
| 4 வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 4,72,000 |
| 2 பருத்திமில் கம்பெனிகள் | 18,00,000 |
| 2 ஜூட்மில் கம்பெனி | 1,40,00,000 |
| 1 பருத்தி, ஜூட்ப்ரெஸ் கம்பெனி | 20,000 |
| 1 மாவுமில் கம்பெனி | 1,00,000 |
| 1 மரமறுக்கும் மில் கம்பெனி | 12,00,000 |
| 8 தேயிலைத்தோட்டக் கம்பெனிகள் | 40,10,000 |
| 5 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனிகள் | 25,00,000 |
| 1 நிலங்கட்டிடக் கம்பெனி | 4,00,000 |
| 1 கம்பெனி (மேலே சொன்னவைதவிர) | 1,00,000 |
| 30 | 2,48,12,000 |

### எல்லா இந்திய ஆயுர்வேத ஸம்மேளனம்.

இந்தக் கான்பரென்ஸ் பூனாவில் மார்ச்சுமாஸம் 25-ந் தேதிமுதல் 27-ந்தேதிவரை நடைபெற்றது. கொச்சி மஹாராஜா ஸ்ரீராமவர்மா ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் தேசபாஷைகளிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் உள்ள வைத்ய புஸ்தகங்களை ஒரிடத்தில் சேகரித்து வைக்கவேண்டுமென்றும், வைத்ய புஸ்தகங்களில் ஒன்றில் சொன்னதுபோல் ஒன்றிலிராத விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டுமென்றும், ஒரு மத்ய ஸ்தானத்தில் ஆயுர்வேதம் கற்பிக்க ஒரு கலாசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

ஆயுர்வேதத்தை பரவச்செய்து அபிவ்ருத்தி செய்வது ஸம்பந்தமான பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. கான்பரென்ஸின் அபிப்ராயங்களை வைஸ்ராய்க்குத் தெரிவிக்க ஒரு டெபுடேஷன் அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஒரு ஆயுர்வேத மஹாவித்யாலயம் ஸ்தாபிக்க பணம்சேர்க்கவும் ரூல்கள் ஏற்படுத்தவும் ஒருகமிட்டி நியமிக்கப்பட்டது. கொச்சி, பரோடா, ரீவா, ஆல்வார், தொங்கர்ப்பூர் ஆகிய இந்த ஸமஸ்தானத்து மஹாராஜாக்களும் சென்னை ஸர் ஸுப்ரமண்ய அய்யரும் வேறு சிலரும் இந்தக்கமிட்டியில் மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### ஸ்த்ரீகளும் ஒப்பந்தக்கூலி ஏற்பாடும்.

இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சில இந்திய ஸ்த்ரீகள் மார்ச்சுமாஸம் 24-ந்தேதி வைஸ்ராயை பேட்டிகண்டு, ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை ஒழித்துவிடவேண்டுமென்று ஒரு அட்ரெஸ் வாசித்துக்கொடுத்தார்கள். அந்த அட்ரெஸூக்கு வைஸ்ராய் லார்ட் செம்ஸ்பொர்ட், யுத்தம் காரணமாக இப்போது ஒப்பந்தக்கூலி நிறுத்தப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியுமென்றும், யுத்தத்துக்குப் பிறகு இந்த ஏற்பாடு மறுபடியும் அனுஷ்டானத்து வருவது தூர்லபமென்றும், பிற்காலத்தில் இந்தியர்கள் ஜீவனார்த்தமாக அயல்நாடுகளுக்குப்போக ப்ரியப்பட்டால், அப்போது வேறுவிதமான ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும், எப்படியும் இந்திய ஸ்த்ரீகளுடைய

கௌரவத்துக்குக் கேடுவராதபடி வேண்டிய ஜாக்ரதைகள் எடுத்துக்கொள்ளப்படுமென்றும் சொன்னார். வைஸ்ராயைக் கண்டுகொண்ட ஸ்த்ரீகளில் சென்னை ராஜதானியைச் சேர்ந்தவர்கள் இரண்டுபேர்கள். அவர்கள் ஆனரபிள் மிஸ்டர் ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரியாரினுடைய மனைவி லக்ஷ்மி அம்மாளும், ஆனரபிள் கே. வி. ரங்கஸாமி அய்யங்காருடைய மனைவி சூடாமணி அம்மாளுமாவர்.

**இந்திய பாதுகாப்பு சேனை.**

இந்த சேனையில் இந்தியர்கள் சேருவதற்கான விதிகள் இப்போது ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது இந்தியாவில் ஆறு முக்யமான இடங்களில் இந்தியன் டெரிட்டோரியில் யூனிட் என்ற படைகள் சேர்ப்பார்கள். அந்த இடங்களாவன: பெங்கால், பேஹார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம்மாகாணங்களிலிருந்து வருபவர்களுக்கு கல்கத்தா; சென்னை ராஜதானிக்கு சென்னை; பம்பாய் ராஜதானிக்கு பூனா; ஐக்யமாகாணங்களுக்கு அல்லஹாபாத்; பஞ்சாப், வடமேற்கெல்லை மாகாணங்களுக்கு லாஹூர்; பர்மாவுக்கு ரங்கூன் ஆகிய ஆறு இடங்களாகும். ஒவ்வொரு ஸ்தலத்திலும் 1,000 பேர்கள் சேனையில் சேருவதாக மனுப்போட்டவுடன் அவர்களை டாக்டர்களைக்கொண்டு பரீக்ஷைசெய்து ஒருபடையாகச் சேர்த்து, அதை 4-பாகமாகப்பிரித்து, ஒருதடவைக்கு 250 பேர்களுக்கு வீதம் ராணுவப்பயிற்சி கொடுப்பார்கள். ஒவ்வொருவரும் 90 நாள் தொடர்ச்சியாக ராணுவப்பயிற்சி பெற வேண்டும். பயிற்சி பெறும்போது ஒவ்வொருவருக்கும் 11 ரூ. சம்பளமும், சாப்பாடும் துணியும் கொடுக்கப்படும். ஸாதாரண இந்திய ஸைன்யத்துக்கேற்பட்ட சட்டங்களும் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் ரூல்களும் இந்த டெரிட்டோரியல் ஸைன்யத்து வீரர்களுக்கும் ஏற்கும். வீரர்கள் திறமைசாலிகளாக இருந்தால் அவர்களுக்கு ப்ரொமோஷனும்கிடைக்கும்.

**விவஸாய இலாகாவின் விதை நெல்.**

மங்கலூர் விவஸாயப்பண்ணையில், வர்ஷா வர்ஷம் விதை பொறுக்குவதால் ஒரேமாதிரியாயும் கலப்படமில்லாமலும் இருக்கும் உயர்ந்த சிறுமணி விதை இப்போது விவஸாய டிபார்ட்மெண்டாரால் விவஸாயிகளுக்கு விலைக்குக் கொடுக்கப்பட்டுவருகிறது. இதைப்பற்றிய விளம்பரமொன்றை இந்த பத்ரிகையின் வேறு பக்கங்களில் காணலாம். இந்த விதையால் அதிக லாபம் கிடைக்கிறதென்று கண்ட சிலர் தமது நிலங்களுக்கு இவ்விதைகளையே அதிகமாய் உபயோகித்து வருகிறார்களாம். இந்த விதைகளை யாவரும் உபயோகித்துப் பார்ப்பார்கள் என்று எண்ணுகிறோம்.

**ட்யூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகம்.**

ட்யூபர் குலாஸஸ் என்னும் க்ஷயரோகம் வ்ருத்தியாவதற்கு தரித்ரமே முக்ய காரணமாகும். அமெரிக்காவிலுள்ள வின்னிபெக்கிலுள்ள ஒரு பட்டணத்தில், ஒரு வீட்டில் பலகுடும்பங்கள் வீதம் வஸிக்கும் ஜனநெருக்கமான பாகங்களில், இந்த வ்யாதியால் ஏற்படும் மரண விகிதமானது, மற்ற ஸுகாதாரமுள்ள பாகங்களில் ஏற்படும் க்ஷயரோக மரண விகிதத்தைவிட மூன்று பங்கு அதிகமாயிருக்கிறதாம். ரொம்ப வருமபடிக் குறைவான குடும்பங்களில் க்ஷயரோக மரணம் அதிகமாயிருக்கிறதாம். மதுபானத்தாலும் இந்த ரோகம் வ்ருத்தியாவதாகத் தெரிகிறது.

**சென்னை லோகல் அண்ட் முனிஸிபல் கான்பரென்ஸ்.**

ஸ்தல ஸ்வய ஆட்சி ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்ட இந்தக் கான்பரென்ஸ் மார்ச்சுமாஸம் 17-ந்தேதியன்று சென்னையில்கூடி மறுநாளும் நடைபெற்றது. ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள், முனிஸிபாலிடிகள் ஆகிய இவைகளில் மெம்பர்களாகவும் வேறு பதவியுடையவர்களாகவும் உள்ள பலர் அதற்கு வந்திருந்தார்கள். அநேகம்பேர்கள் ஸ்தல ஸ்வய ஆட்சி ஸம்பந்தமான பல வகைப்பட்ட விஷயங்களைப் பற்றி அநேக வ்யாஸங்கள் வாசித்தார்கள். அவைகளைப்பற்றி வாதங்களும் நடந்தன. ஸ்தலஸ்வய ஆட்சி ஸம்பந்தமாகப் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**"பாபு அம்பிகா சரண மஜூம்தாரின் காங்க்ரெஸ் ப்ரஸங்கம்."**

சென்றவர்ஷம் லக்னௌவில் நடந்த இந்தியன் நாஷனல் காங்க்ரெஸில், அதன் ப்ரெஸிடெண்டாகிய பாபு அம்பிகா சரண மஜூம்தார் தமது ப்ரஸங்கத்தில் இந்தியாவின் ஆட்சிமுறையில் உள்ள குறைபாடுகளையும் வேறு குறைகளையும் எடுத்துக்கூறி இவைகளுக்குப் பரிகாரம் ப்ரிட்டிஷ் ஆட்சிக்குள்பட்ட ஸ்வய ஆட்சியென்றும், இந்தியர்கள் ஸ்வய ஆட்சிக்கு லாயக் இல்லையென்று சிலர் சொல்லுவது சரியல்லவென்றும் சொல்லி, இந்திய ராஜாங்க அமைப்பில் சில முக்யமான சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டுமென்று விவரித்துச் சொன்னார். தற்போது இங்கிலீஷ் தெரியாதவர்களும் ராஜாங்க விஷயங்களில் ஊக்கங்காட்டி வருவதை உத்தேசித்து அந்த ப்ரஸங்கம் யாவருக்கும் தெரியும்படி, மதுரை-ராமநாதபுரம் ஜில்லாகாங்க்ரெஸ் கமிட்டியார் அதை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இது ஸுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ராஜாங்க விஷயங்களில் ஊக்கம் காட்டிவரும் யாவருக்கும் இது உபயோகப்படும். இதன் விலை அணா 2. வேண்டுவோர் ஸெக்ரெடரி, டிஸ்ட்ரிக்ட் காங்ரெஸ் கமிட்டி, மதுரை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



**அச்சுச்சட்டம்.**

இந்தியப் பத்ராதிபர்களில் சிலர் மார்ச்சு மாஸம் 5-ந் தேதியன்று வைஸ்ராயை பேட்டிகண்டு அச்சுச்சட்டத்தை ரத்து செய்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு வைஸ்ராய், அச்சுச்சட்டம் இன்னும் அமுலிலிருக்கவேண்டியது அவச்யமென்றும், பல பத்ரிகைகள் இன்னும் ராஜத்ரோகமாயெழுதிவருகின்றனவென்றும், பத்ரிகைகள் சீர்திருந்தினால் அச்சுச்சட்டத்தை ப்ரயோகிக்கவேண்டிய அவச்யமே யிராதென்றும் சொன்னார்.

**"ஸ்வர்ணகாந்தி அல்லது இருமனைவிகள்."**

இது எஸ். வி. நடராஜனால் எழுதப்பட்ட ஒரு நாடகமாகும். இதில் நட்பின் பெருமையும், பால்ய விவாகத்தின் தீங்குகளும், இரண்டு மனைவியுடையோர் அடையும் இன்பதுன்பங்களும் கூறப்பட்டிருக்கின்றன. பெரியோர், சிறியவர், எல்லாரும், படிக்கக்கூடியது. இதன் விலை ரூ. 1-0-0. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 1, கொண்டிசெட்டித் தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**ஐரோப்பிய யுத்தம்.**

*பிப்ரவரிமீ 27-தேதி.*

மெஸபோடேமியாவிலுள்ள ப்ரிட்டிஷ் படைகள் துருக்கிய ஸைன்யங்களைத் தோற்கடித்து குட் என்னும் ஊரைத் திரும்பப்பிடித்தன.

ஜெர்மானியர்கள் ஆன்கர் நதியோரமாய்ப் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். ப்ரிட்டிஷார் 11 மைல் நீளமுள்ள போர்முகத்தில் 2 மைல் தூரம் முன்சென்று ஸிரிமிரா மெனெண்ட், வார்லன் கோர்ட், என்னும் க்ராமங்களைக் கைப்பற்றினார்கள்.

'லாகோனியா' என்னும் ப்ரயாணிக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

*மார்ச்சுமீ 2-தேதி.*

ஜெர்மானியர் ஆன்கர் நதிப்ரதேசத்தில் இன்னும் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

"லாகோனியா" கப்பலில் மூன்று அமெரிக்கர்கள் இறந்துபோனதை யுத்தேசித்து அமெரிக்கர்கள் ஜெர்மனியின்மேல் ஆத்ரங்கொண்டிருக்கிறார்கள்.

6-தேதி.

ஜெர்மானியர்கள் வெர்டூனில் மறுபடியும் பலமாகச் சண்டைசெய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

11-தேதி.

மெஸபொடோமியாவிலுள்ள ப்ரிட்டிஷ் துருப்புகள் பாக்டாடைப் பிடித்திருக்கின்றன.

13-தேதி.

மேற்குப் போர்முகத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகள் இர்லிஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன. ரஷ்யர்கள் மேற்கு ப்ரஷ்யாவில் துருக்கியர்களைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் கவர்ன்மெண்டார், வ்யாபாரக் கப்பல்கள் தற்காப்புக்காக பீரங்கி யேற்றிக்கொண்டு போகலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

15 தேதி.

ரஷ்ய சக்ரவர்த்தியாகிய ஸார் நிக்கலாஸ் ராஜ்ய பாரத்திலிருந்து விலகிக்கொண்டிருக்கிறார். அவரது ஸஹோதரராகிய க்ராண்ட் ட்யூக் மிக்கேல் அலெக்ஸாண்ட்ராவிட்ச் என்பவர் ரீஜெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

டூமா என்னும் பார்லிமெண்ட் ஸபையின் நிர்வாகக் கமிட்டியார் ராஜாங்கத்தை நடத்தி வருகிறார்கள்.

ரஷ்ய ஸேனாதிபத்யம் க்ராண்ட் ட்யூக் நிக்கலாஸுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

16-தேதி.

ஜெர்மானியர்கள் மேற்குப் போர்முகத்தில் இன்னும் கிழக்கில் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் துருப்புகள் பாப்பாம் என்னுமிடத்தண்டை வந்திருக்கின்றன. அவைகள் க்ரெவிலியர் என்னும் இடத்தைப் பிடித்திருக்கின்றன.

ரஷ்யர்கள் மேற்கு பெர்ஷியாவில் கெர்மான்ஷாவைப் பிடித்திருக்கிறார்கள்.

**20-தேதி.**

ஜெர்மானியர்கள் மேற்குப் போர்முகத்தில் இன்னும் பின்வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ப்ரிட்டிஷாரும் ப்ரெஞ்சுக்காரர்களும் இதுவரையில் 200 க்ராமங்களையும் பட்டணங்களையும் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் பெரோன் பட்டணத்தையும் ஹாம் பட்டணத்தையும் பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் ஆசியா துருக்கியில் வான்பட்டணத்தையும் கெர்மான்ஷாவுக்கு மேற்கில் ஹாருனுபாத் பட்டணத்தையும் பிடித்திருக்கிறார்கள்.

**22-தேதி.**

க்ராண்ட் ட்யூக் நிக்கலாஸ் ரஷ்ய ஸேனாதிபத்யத்திலிருந்து விலகிக்கொண்டுவிட்டார். தற்கால ஏற்பாடாக ஜெனரல் அலெக்ஷியப் முக்ய ஸேனாதிபதியாக இருந்துவருகிறார்.

**23-தேதி.**

ஜெர்மானியர்கள் இன்னும் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ப்ரிட்டிஷார் இன்னும் 40 க்ராமங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

**27-தேதி.**

ப்ரிட்டிஷாரும் ப்ரெஞ்சுக்காரர்களும் மேற்குப் போர்முகத்தில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள். பெர்ஷியாவின் தென்மேற்கில் ரஷ்யர்கள் காரிண்ட் என்னுமிடத்தைப் பிடித்து முன் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

**30-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகளும் ப்ரிட்டிஷ் துருப்புகளும் இன்னும் முன்சென்று பல க்ராமங்களைப் பிடித்தன.

பாலஸ்டைனில் காஸோ என்னுமிடத்துக்கு ஸமீபத்தில் ப்ரிட்டிஷார் துருக்கியர்களைத் தோற்கடித்தார்கள்.

**ஏப்ரல்௴ 6-தேதி.**

அமெரிக்கா ஜெர்மனியோடு யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ப்ரிட்டிஷ் துருப்புகளும் ப்ரெஞ்ச் துருப்புகளும் இன்னும் முன்சென்று கொண்டிருக்கின்றன.

பாக்தாதுக்கு வடகிழக்கில் ரஷ்ய துருப்புகளும் ப்ரிட்டிஷ் துருப்புகளும் ஸந்தித்திருக்கின்றன.

**நாடுஸங்கதி.**

சென்னை ராஜதானியில் காடுகளை நிர்வாகம் செய்ய 147 காட்டு நிர்வாகப் பஞ்சாயத்துகள் இருந்தன. இவைகள் 210 சதுரமைல் விஸ்தீரணமுள்ள காடுகளை நிர்வாகம் செய்துவந்தன. மொத்தம் பஞ்சாயத்துகளில் 71 பஞ்சாயத்துகள் சரியாக நடந்து வரவில்லையென்று தெரிகிறது. கடப்பை, சித்தூர், வடஆர்க்காடு ஆகிய இவைகளில் தான் பஞ்சாயத்துகளில் பெரும்பான்மை சரியாய் நடந்துவரவில்லை.

* * *

முதலாவது புதுக்கோட்டை கோவாபரெடிவ் கான்பரென்ஸ் மார்ச்சுமாஸம் 24-ந் தேதியன்று ஆலங்குடியில் கூடிற்று. அதில் 18 தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஒரு தீர்மானத்தில், கோவாபரெடிவ் ஸங்கங்களுக்கு ஏரி ரிபேர் முதலிய வேலைகளைச் செய்ய அனுமதி கொடுக்கவேண்டுமென்று தர்பாரைக் கேட்டுக்கொண்டார்கள்.

* * *

இம்பீரியல் யுத்த கான்பரென்ஸ் மார்ச்சுமாஸம் 21-ந் தேதியன்று லண்டனில் கூடிற்று. இதில் இந்திய மெம்பர்களுக்கு மற்றவர்களைப்போலவே பேசுவதற்கும் வோட் கொடுப்பதற்கும் பாத்யதைகள் கொடுக்கப்பட்டன.

* * *

டெல்லியில் உள்ள லேடி ஹார்டிஞ்ஜ் வைத்ய காலேஜை யொட்டிக் கட்டப்படும் ஸ்த்ரீ ஆஸ்பத்திரியின் ஒருபாகம் 17-ந்தேதியன்று லேடி செம்ஸ்பொர்டால் திறந்துவைக்கப்பட்டது.

* * *

வருகிற மேமாஸம் 9, 10, 11-ந் தேதிகளில் கடலூரில் நடக்கப்போகிற சென்னை மாகாண கான்பரென்ஸுக்கு மிஸ்டர் வி. பி. மாதராவ் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

* * *

திவான்பகதூர் ராமச்சந்த்ரராவ் அவர்கள் கவர்ன்மெண்ட் ஹோம் டிபார்ட்மெண்டில் ஸெக்ரெடரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *

மைஸூர் கவர்ன்மெண்டார் கோலாரில் ஆடு வளர்க்கும் பண்ணையொன்று ஸ்தாபிக்கப்போகிறார்கள்.


# ஜனுபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்கள௵ சித்திரை௴. APRIL—MAY 1917. { ஸஞ்சிகை 4. No. 4.


## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... 2 | 8 | 0 | do |
| ¼ do | ... 1 | 4 | 0 | do |
| ⅛ do | ... 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனுபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனுபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | | | அந்யநாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ | ,, ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ | ,, ,, ,, | 1 | 4 | 0 |
| ⅛ | ,, ,, ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# THE RUSSIAN REVOLUTION.
## ரஷ்யாவில் ராஜாங்கப்புரட்சி.

சென்ற மாஸத்து 'ஜனாபிமானியில்' ரஷ்ய சக்ரவர்த்தி ராஜ்யபாரத்திலிருந்து விலகிக் கொண்டார் என்றும், அரசாட்சியானது டூமா என்னும் ஜன ப்ரதிநிதி ஸபையின் நிர்வாகக் கமிட்டியால் நிர்வகிக்கப்பட்டு வருகிறதென்றும் சொன்னோம். அந்த தேசத்தில் ராஜாங்கம் மாறினதற்குக் காரணமென்னவென்பதை விவரிக்கிறோம்.

ரஷ்யாவானது ஐரோப்பாவின் கிழக்கிலுள்ள ஒரு பெரிய தேசம். இது கொஞ்சங்குறைய 20 லக்ஷம் சதுர மைல் உள்ளது. இதற்குக்கீழ்ப்பட்டனவாய் ஆசியாவில் அநேக தேசங்கள் இருக்கின்றன.

ரஷ்ய ராஜ்யத்தின் மொத்த விஸ்தீரணம் ஸுமார் 86½ லக்ஷம் சதுர மைலாகும். இவ்வளவு பெரிய ராஜ்யத்தை ரஷ்ய சக்ரவர்த்தியானவர் ஏகாதிபதியாய், அவரிட்டதே சட்டமென ஆண்டுவந்தார். வெகுகாலம் வரையில் ரஷ்ய ப்ரஜைகளுக்கு அரசாட்சியில் யாதொரு ஸம்பந்தமும் இல்லாமலிருந்தது. ஜனத்தலைவர்கள் மற்ற மேல்நாடுகளைப்போல் பார்லிமெண்ட் வேண்டுமென்று வற்புறுத்திவந்தார்கள். சென்ற மாஸத்தில் ராஜ்யபாரத்திலிருந்து விலகிக்கொண்ட மாஜி சக்ரவர்த்தி நிகலஸ் 1905-ம் வர்ஷத்தில் டூமா என்று ஒரு ப்ரதிநிதிஸபையை ஏற்படுத்தினர். இதில் பற்பல மாகாணங்களிலிருந்தும் பட்டணங்களிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட 442 பேர்கள் மெம்பர்களாயிருந்தார்கள்.

இந்த ஸபையைத் தவிர, இங்க்லண்டில் லார்ட்ஸ் ஸபையைப்போன்றதான கௌன்ஸில் அப் தி எம்பையர் என்னும் ஒரு ஸபையும் உண்டு.

இந்த இரண்டு ஸபைகளைத்தவிர, ரஷ்ய ராஜாங்கத்தில் மந்த்ராலோசனை ஸபையும், ஹோலி ஸெனேட் என்று ஒரு நீதி ஸபையும், ஹோலிஸைனட் என்ற மதஸபையொன்றும் உண்டு.

ரஷ்யாவில் முக்யமாய் இரண்டு கக்ஷிகள் உண்டு. ஜனங்களுக்கு பற்பல ஸ்வதந்தரங்கள் கொடுக்கவேண்டுமென்றும், ஜனங்களுக்குள் அபிவ்ருத்தி ஏற்படவேண்டுமென்றும், மற்ற மேல்நாடுகளைப்போல் ராஜாங்கம் ஜனத்தலைவர்களுடைய அபிப்ராயங்களை அனுஸரித்து நடக்கவேண்டுமென்றும் அபிப்ராயங்கொண்டவர்கள் ஒரு கக்ஷியார். இவர்களை ஜனக்கக்ஷியார் என்று சொல்வோம். இன்னொரு கக்ஷியார் ஜனங்களுக்கு ராஜ்ய வ்யவஹாரங்களில் அதிகாரம் கொடுப்பதை வெறுப்பவர்கள். அப்படிக் கொடுப்பதால் அரசருடைய பலம் குறையுமென்று எண்ணுபவர்கள். அவர்களில் அநேகர் ஜெர்மனியின்மேல் அபிமானங்கொண்டவர்கள். அவர்களுக்கு அரண்மனையில் அதிக செல்வாக்குண்டு. இவர்களை அரண்மனைக் கக்ஷியார் என்று சொல்லலாம். இந்த யுத்தம் ஆரம்பமாகிய எழெட்டு மாஸங்களுக்கெல்லாம் ரஷ்யாவானது ஜெர்மனியால் துரத்தியடிக்கப்பட்டுப் பின்வாங்க நேர்ந்ததென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். மந்த்ரிகளில் சிலர் வேண்டுமென்றே யுத்தத்தை சரிவர நடத்தாமலிருந்ததோடு, சீக்ரம் ஜெர்மனியோடு தனியாக ஸமாதானம் செய்துகொள்ள விரும்பியிருந்தார்களாம்.

ஜனங்களுக்கும் ஸைந்யங்களுக்கும் ஜெர்மனியின்மேல் வெறுப்பு அதிகமாயிருந்தது. எப்படியாவது யுத்தத்தில் ரஷ்யாவுக்கு ஜயமேற்படவேண்டுமென்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஜெர்மனியின்மேல் பற்றுள்ள சில மந்த்ரிகளும், சக்ரவர்த்திக்கு ப்ரியமான வேறு சிலர்களும் அகால ஸமாதானம் செய்ய



முயற்சிசெய்து வருவதையறிந்து அவர்கள் ஆத்ரங்கொண்டார்கள். இந்த ஸமயத்தில் டூமா ஸபைகூடியபோது, டூமாவிலுள்ள ஜனாபிமானக் கட்சியார் மந்த்ரிகள் செய்துவந்த அக்ரமங்களைப்பற்றி விஸ்தரித்துக்கூறி அவர்களின்மேல் குற்றஞ் சாட்டினார்கள்.

சக்ரவர்த்திக்கு இவ்விஷயங்கள் தெரியவந்ததும் அவர் இரண்டு மூன்று மந்த்ரிகளை வேலையிலிருந்து நீக்கி யுத்த மந்த்ரியை ஜெயிலில் அடைத்துவிட்டார். யுத்தத்தை மந்த்ரிகள் சரிவர நடத்தவில்லையென்று அவருக்கு நன்றாய்த் தெரியவந்ததும், தாமே ஸேனாதிபத்யத்தை நிர்வகிக்கலானார். இதன்மேல் யுத்த வேலைகள் சுறுசுறுப்பாய் நடக்கலாயின. யுத்த நிலைமை ரஷ்யாவுக்கு ஸாதகமாகச் சற்று மாறிற்று.

சிலகாலம் வரையில் பேசாமலிருந்த அரண்மனைக் கக்ஷியார் யுத்தத்தின் போக்கைத்தடுக்க மறுபடியும் முயற்சி செய்யலானார்கள். இவர்களுள் ராஸ்புடின் என்னும் ஸந்யாஸி பெயர்பெற்றவர். அவருக்கு ரஷ்யசக்ரவர்த்தினியினிடம் அதிக செல்வாக்குண்டு. இந்தக் கக்ஷியார் ராஸ்புடினைக்கொண்டு, அரசரின் மனதை மாற்றி, ஜனங்களுக்கு ஹிதஞ்செய்யக்கூடியவர்களாயிருந்த மந்த்ரிகளை வேலையிலிருந்து நீக்கி, தங்கள் கக்ஷியைச் சேர்ந்த சிலரை மந்த்ரிகளாக நியமிக்க ஏற்பாடு செய்தார்கள். இதனால் மா. ஸ்டர்மர் என்பவர் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப்பட்டார். அவர் ஜெர்மனிக்குச் சார்பாயிருப்பவர். அது வரையில் அந்யதேச வ்யவஹார மந்த்ரியாயிருந்தவரும், நேச அரசுகளுக்கு சார்பாயிருந்தவருமான மா. ஸாஸனாப் என்பவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அந்த அந்யதேச வ்யவஹாரமந்த்ரி வேலையை மா. ஸ்டர்மரே நிர்வஹித்து வரலானார். இப்படி மந்த்ரிகளில் மாறுதல்களை ஏற்படுத்தினதோடு, அரண்மனைக் கக்ஷியார் ஜெர்மனியோடு ரஹஸ்யமாய் ஸமாதானம் செய்ய முயற்சி செய்துவந்தார்களாம். மேலும் உள்நாட்டில் கலகம் உண்டாக்கவும் முயற்சிசெய்து வந்தார்களாம். ஏனென்றால், கலகம் ஏற்பட்டால், அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஜெர்மனியோடு ஸமாதானம் செய்வது ஸாத்யமாகுமென்று அவர்கள் எண்ணினார்கள். இதனால் ஜனங்கள் மறுபடியும் ஆத்ரங்கொண்டார்கள். சென்ற நவம்பர்மாஸம் டூமா ஸபைகூடிய போது ஸபையிலுள்ளவர்கள் மந்த்ரிகளின் மேல் மறுபடியும் குறைகூறினார்கள். இதன் பலனாக மா. ஸ்டர்மர் மந்த்ரி வேலையிலிருந்து நீக்கப்பட்டார். ஜனக்கட்சி வலுப்பதைக் கண்ட அரண்மனைக் கட்சியார் ஜனக்கட்சி வலுக்காமலிருக்கவும், யுத்தம் சரிவர நடக்காமலுமிருக்கவும்வேண்டி ராணுவ உத்யோகஸ்தர்களின் தலைவராயிருந்த ஜெனரல் அலெக்ஸியப்பை அவ்வேலையிலிருந்து நீக்கும்படிக்கும், மா. ஸ்டர்மருக்கு அரண்மனையில் உயர்ந்த உத்தியோகங் கொடுக்கும்படிக்கும் சக்ரவர்த்திக்குப் போதனைசெய்தார்கள், சக்ரவர்த்தியும் அப்படியே செய்தார்.

உள்நாட்டில் கலகம் ஏற்படவேண்டுமென்றும், அதை வ்யாஜமாக வைத்துக்கொண்டு, ஜெர்மனியோடு ஸமாதானம் செய்துவிடவேண்டுமென்றும் எண்ணங்கொண்டு அதற்காக முயற்சிசெய்துவந்த உள்நாட்டு மந்த்ரியாகிய மா. ப்ரொடொபாபாவ் என்பவரை அவ்வேலையிலேயே இருக்கும்படி உத்தரவிட்டார்.

ஜனக்கட்சியார் தங்களுடைய முயற்சியெல்லாம் வீணானதைக் கண்டு, அரண்மனைக் கட்சியில் முதன்மையாயிருக்கும் ராஸ்புடின் ஸந்யாஸியை ஒழித்தாலொழிய ஜனங்களுக்கு நன்மை ஏற்படாதென்றும், அவரை அப்படியே விட்டுவிட்டால், அவர் மூலமாக அரண்மனைக் கட்சியார் தேசத்துக்கு த்ரோகமாக நடந்து, ரஷ்யாவுக்கு யுத்தத்தில் தோல்வி ஏற்

படும்படி செய்வதோடு, கௌரவக் குறைவு ஏற்படும் விதமாய் ஜெர்மனியோடு ஸமாதானம் செய்ய முயற்சிப்பார்களென்றும் எண்ணி அரண்மனைக் கட்சிக்கு தலைவராயிருக்கும் ராஸ்புடினை ஒழிக்க முயற்சிசெய்தார்கள். சென்ற டிஸம்பர் மாஸத்தில் ஜனக்கட்சியைச் சேர்ந்த சில ப்ரமுகர்கள் ராஸ்புடினைக் கொலைசெய்து விட்டார்கள். இனிமேல் ஜனங்களுக்குக்ஷேமம் உண்டாகுமென்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் அரண்மனைக் கட்சியார் ஜனக்கட்சியின் துணிகரமான செய்கையைக் கண்டு பயந்து, அவர்களை யடக்கவிரும்பி, ஸாருக்கு துர்ப்போதனைசெய்ய ஆரம்பித்தார்கள். “இன்று ராஸ்புடினைக் கொலை செய்தார்கள். நாளைக்கு சக்ரவர்த்தியையும் ஒரு கை பார்ப்பார்கள். ஆகையால் தக்க விதத்தில் அவர்களை அடக்க வேண்டு”மென்று வற்புறுத்தினார்கள். சக்ரவர்த்தி ஸ்திரபுத்தியில்லாதவராதலாலும், பிறர் பேச்சை எளிதில் நம்புகிறவராதலாலும், அவர்களுடைய போதனைக்கு இணங்கி, மந்த்ராலோசனை ஸபையில் ஜனங்களுக்கு சார்பாயிருந்த மந்த்ரிகளை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, கௌன்ஸில் அப் தி எம்பையர் என்னும்ஸபையின் அமைப்பை ஜனங்களின் விருப்பத்துக்கு ப்ரதிகூலமாய் மாற்றிவிட்டார். அதோடு நில்லாமல் டூமா ஸபையின் விடுமுறை காலத்தை ஒருமாஸம் அதிகப்படுத்தினார், இந்த ஸம்பவங்கள் சென்ற ஜனவரி மாஸம் நடைபெற்றன.

உள்நாட்டு மந்த்ரிசெய்த ஏற்பாட்டால் ஜனங்கள் சோற்றுக்கில்லாமல் தவிக்கலானார்கள். தேசத்தில் தான்யங்களும் மற்ற ஆகார வஸதிகளும் ஏராளமாயிருந்தன. ஜனங்களுக்குள் கலகம் ஏற்படவேண்டுமென்று எண்ணியிருந்த மந்த்ரி, போக்குவரவுக்குரிய ஸாதனங்களைத் தடைசெய்து பிட்ரோக்ராடுக்கும் வேறு பட்டணங்களுக்கும் ஆகாரப் பொருள்கள் சரியாய் வாராதபடி செய்துவிட்டார். இதனால் ஜனங்கள் ரொம்பவும் கஷ்டப்படலானார்கள்.

டூமாவிலுள்ள ஜனத்தலைவர்களும், ராணுவத்தலைவர்களும் எப்படியாவது ரஷ்ய யுத்தத்தில் ஜயிக்கவேண்டுமென்று எண்ணியிருந்தார்கள். அதற்குப் பிரதியாக அரண்மனைக் கட்சியார் செய்யும் முயற்சிகளை யறிந்து, இந்த நிலைமையை மாற்ற ராஜாங்கத்தையே மாற்ற வேண்டியது அவச்யமென்று தீர்மானித்தார்கள். அதன்படியே டூமா ஸபையார், சக்ரவர்த்தி அந்த ஸபையை மூடியிருந்தும், தைர்யமாய்க்கூடி, ராஜ்யபாரத்தைத் தாங்களே வகிப்பதாய்த் தீர்மானித்து விட்டார்கள். ராணுவத் தலைவர்களும் இதற்கு ஸம்மதித்தார்கள். சில ஸேனாதிபதிகள் சக்ரவர்த்தியைக்கண்டு, ராஜ்யபாரத்திலிருந்து விலகிக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள். சக்ரவர்த்தி முதலில் சரியான பதில் சொல்லாவிட்டாலும், கடைசியில் அதற்கு ஸம்மதித்து, அரசாட்சியை தமது ஸஹோதரரிடம் விட்டுவிட்டார்.

சக்ரவர்த்தி ராஜ்யபாரத்திலிருந்து விலகுவதற்கு முன்னால், அவரைச் சேர்ந்த போலீஸாரும் வேறு சிலரும் புது அரசாட்சியை ஆக்ஷேபித்து சண்டை செய்யலானார்கள். இந்த சண்டைகள் பிட்ரோக்ராட் பட்டணத்தின் தெருக்களில்தான் விசேஷமாய் நடந்தன. ஆனால் ஸைந்யங்கள் ஜனங்களோடு சேர்ந்துகொண்டதால் போலீஸின் சூழ்ச்சிகள் ஒன்றும் பலிதமாகவில்லை.

இந்த ராஜாங்கப்புரட்சியில் அதிக ஜனங்கள் மடியவில்லையென்றும் சொல்லப்படுகிறது. இறந்தவர்கள், காயம்பட்டவர்களின் தொகை நூற்றுக்கணக்குக்கு மேல் போகாதாம்.

டூமா ஸபையார் சக்ரவர்த்தியைத் தள்ளினதோடு நிற்காமல், ஜனங்களுக்கு ப்ரதிகூலம்



செய்துவந்த அரண்மனைக் கட்சியைச் சேர்ந்த பழைய மந்த்ரிகளைக் கைதுசெய்திருக்கிறார்கள். அதோடு, ஜனங்களுக்கு ஹிதம் செய்ய முயற்சிசெய்து அதனால் முன்பு காராக்ரஹவாஸம் செய்துவந்த அநேக தேசாபிமானிகளை விடுதலை செய்திருக்கிறார்கள். மாஜி சக்ரவர்த்தியின் ஸஹோதரராகிய க்ராண்ட் ட்யூக் மிக்கேல், ஜனப்ரதிநிதிகள் எல்லாரும் தம்மை அரசராயிருக்க விரும்பினாலொழிய தாம் அரசராக இருப்பதற்கில்லையென்று தெரிவித்துவிட்டார்.

நேச அரசுகள் ரஷ்யாவின் புது கவர்ன்மெண்டை அங்கீகரித்திருக்கின்றன. இந்தப் புது கவர்ன்மெண்ட் தற்கால ஏற்பாடாக அமைக்கப்பட்டிருக்கிறது. கடைசியில் ரஷ்யா குடியரசாகுமா அல்லது இங்க்லண்ட் போன்றதாய் ஜனங்களுக்கு ராஜ்யகார்யங்களில் அதிகாரமுள்ளதும் அரசருள்ளதுமான ராஜ்யமாகுமா என்பது பின்னால் போகப் போகத் தெரியவரும்.

தற்போது அரசாட்சியை நிர்வாகம் செய்துவரும் கவர்ன்மெண்டின் அமைப்பு பின்வருமாறு.

ப்ரதமந்த்ரியும் உள்நாட்டு மந்த்ரியும், ப்ரின்ஸ் லிவாப்; அன்யதேச வ்யவஹார மந்த்ரி மில்யூகாப்; நீதிமந்த்ரி கிரன்ஸ்கி; போக்குவரவுக்கான மந்த்ரி நெக்ரொஷாப்; யுத்தமந்த்ரி மான்யூலாப். இவர்களைத் தவிர கல்வி விவஸாயம் முதலிய விஷயங்களை கவனிக்க வேறு சில மந்த்ரிகளும் இருக்கிறார்கள்.

## PUBLIC SERVICES COMMISSION.

### ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிய கமிஷன்.

சென்ற மாஸத்திய ஜனாபிமானியில் ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிப் பரிசீலனை செய்த கமிட்டியார் இந்தியர்களை அதிகமாக ஸர்க்கார் உத்யோகங்களுக்கு எடுத்துக்கொள்வதற்காக செய்திருக்கிற ப்ரேரணைகளைப்பற்றி எழுதினோம். சுருக்கமாய் அவைகள் பின்வருமாறு:—போலீஸ், ஸிவில் ஸெர்விஸ் இந்த இலாகாக்களில் ஐரோப்பியர்கள் அதிகமாயிருக்கவேண்டும். ஸிவில் ஸெர்விஸில் இந்தியர்களின் தொகை நூற்றுக்கு 25-ம், போலீஸில் 100-க்கு 10-மாக இருக்கவேண்டும். மராமத்திலாகா, ரெயில்வே இஞ்ஜினியரிங் இலாகா ஆகிய இவைகளில் வேண்டியிருக்கும் உத்யோகஸ்தர்களில் பாதி இந்தியாவிலிருந்தும் பாதி இங்க்லண்டிலிருந்தும் எடுத்துக்கொள்ளவேண்டும். கல்வி இலாகாவில் புது உத்யோகங்களில் பாதிக்கு இந்தியாவிலும் பாதிக்கு இங்க்லண்டிலும் தெரிந்தெடுக்க வேண்டும். அதில் ப்ரொவின்ஷியல் பிரிவிலுள்ள உயர்ந்த உத்யோகங்களை இம்பீரியல் பிரிவுக்கு மாற்றவேண்டும். வைத்யம், தந்தியிலாகா, இந்தியா ஸர்வே ஆகிய இவைகளில் இந்தியர்களை அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஏற்கனவே இந்தியாவிலிருந்து உத்யோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கும் இலாகாக்களில் அவ்வழக்கத்தை விடக்கூடாது. மற்ற இலாக்காக்களில் உத்யோகங்களுக்கு இனிமேல் இந்தியாவிலிருந்து அதிகமாக உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். இதற்காக தேசத்தில் கைத்தொழில் சாஸ்த்ர கலாசாலைகளை சீக்ரம் ஏற்படுத்தவேண்டும். பூராவும் இந்தியர்கள் கிடைக்கும்வரையில் இங்க்லண்டிலிருந்து உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

இந்தியாவிலிருந்து உத்யோகஸ்தர்களைத்

தெரிந்தெடுப்பதில் போட்டிப்பரீக்ஷைகூடாது. நியமனக்கமிட்டிகள் ஏற்படுத்தி அவைகளைக் கொண்டு உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதே. இப்போது அந்தக் கமிட்டியார் செய்துள்ள வேறு ப்ரேரணைகளைப் பற்றி எழுதுகிறோம்.

### பற்பல ஜாதியார்களுக்கும் உத்யோகங்கள் கொடுத்தல்.

சென்ற மாஸத்து 'ஜனோபிமானி'யில் நாம் குறிப்பிட்டபடி 200 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் மாஸச்சம்பளமுள்ள ஸர்க்கார் உத்யோகங்கள் 11,064-ஆகும். இவற்றில் 4,898 ஐரோப்பியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாக்கியாகிய 6166 உத்யோகங்கள் சட்டப்படி இந்தியர்கள் என்று கருதப்படுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சட்டப்படி இந்தியர்கள் என்றால், இந்தியாவில் தற்காலத்துக்கென்று தங்கியிராமல் வழக்கமாய் இந்தியாவிலேயே வஸித்துவரும் பெற்றோர்களுக்குப் பிறந்து வளர்ந்தவர்கள் என்று அர்த்தம். இந்த தாத்பர்யத்தின்படி யூரேஷ்யர்களும் ஆங்க்லோ இந்தியர்களும் இந்தியர்களாவார்கள். மேற்சொன்ன 6,166 உத்யோகங்களில் எத்தனை உத்யோகங்கள் இந்தியாவிலுள்ள பற்பல வகுப்பார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்பது அடியில்வரும் அட்டவணையால் நன்குவிளங்கும்.

| வகுப்பின் பெயர். | உத்யோகங்களின் தொகை. | மொத்தம் உத்யோகங்களில் வகுப்பார் அடைந்துள்ள உத்யோகங்கள் 100-க்கு இவ்வளவு. |
|---|---|---|
| ப்ராம்மணர்கள் | 1,455 | 24 |
| க்ஷத்ரியர்கள் | 220 | 3 |
| காயஸ்தர்கள் | 725 | 12 |
| பனியர்கள், வைச்யர்கள் | 218 | 3 |
| சூத்ரர்கள் | 154 | 2 |
| இதர ஹிந்துக்கள் | 427 | 7 |
| மொத்தம் ஹிந்துக்கள் | 3,199 | 51 |
| ஸிக்கியர்கள் | 67 | 1 |
| பார்ஸிகள் | 159 | 3 |
| மகம்மதியர்கள் | 771 | 13 |
| இந்திய கிறிஸ்தவர்கள் | 179 | 3 |
| பௌத்தர்கள் | 198 | 3 |
| ஆங்க்லோ இந்தியர்கள் (யூரேஷ்யர்கள்) | 1,593 | 26 |
| | 6,166 | 100 |

இந்தக் கணக்கின்படி இந்தியாவிலுள்ள பற்பல வகுப்பார்கள் அடைந்திருக்கும் உத்யோகங்கள் ஏற்றத்தாழ்வாயிருக்கின்றன. ஆனால் அந்த வகுப்பார்களின் ஸங்க்யையும் ஏற்றத் தாழ்வாயிருப்பதால், அவைகளையும் கவனித்துப் பார்த்தால்தான், ஒவ்வொரு வகுப்பாரினுடைய ஸங்க்யைக்குத் தகுந்தபடி அவ்வகுப்பாருக்கு உத்யோகங்கள் கிடைத்திருக்கின்றனவா என்பது நன்கு தெரியவரும். அடியில்வரும் அட்டவணையில் விவரமான ஜன ஸங்க்யைகளைக் காட்டியிருக்கிறோம்.

| வகுப்புகள். | ஜனத்தொகை. மொத்தம். | ஜனத்தொகை. எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். | ஜனத்தொகை. இங்க்லீஷ் தெரிந்தவர்கள். | மொத்தம் இந்தியாவின் ஜனத்தொகையில் ஒவ்வொரு வகுப்பு ஜனத்தொகை நூற்றுக்கு இவ்வளவு என்பது. மொத்தம். | … எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். | … இங்க்லீஷ் தெரிந்தவர்கள். | மொத்தம் உத்யோகங்களில் நூற்றுக்கு இவ்வளவு. |
|---|---|---|---|---|---|---|---|
| ஹிந்துக்கள் ... | 21,88,35,074 | 1,23,80,649 | 10,50,494 | 72 | 68 | 72 | 51 |
| ஸிக்கியர்கள் ... | 30,14,466 | 2,01,443 | 11,728 | 1 | 1 | 1 | 1 |
| பார்ஸிகள் ... | 1,00,096 | 71,213 | 33,681 | — | — | 2 | 3 |
| மகமதியர்கள் | 6,66,47,299 | 25,27,573 | 1,79,991 | 22 | 14 | 12 | 13 |
| இந்திய கிறிஸ்தவர்கள் | 35,71,770 | *5,39,432 | *63,8[illegible]1 | 1 | 3 | 4 | 3 |
| பௌத்தர்கள் | 1,07,21,453 | 24,51,719 | 23,150 | 4 | 13 | 2 | 3 |
| ஆங்க்லோஇந்தியர் | 1,01,657 | *1,01,657 | *1,01,657 | — | 1 | 7 | 26 |
| மொத்தம்... | 30,29,94,815 | 1,82,73,686 | 14,64,502 | 1,002 | 100 | 100 | 100 |

* இக்குறிப்பிடப்பட்ட எண்கள் உத்தேசமான மதிப்புகள்.



மேலேகாட்டிய அட்டவணைகளின்படி ஆங்க்லோ-இந்தியரின் ஜனத்தொகையை உத்தேசிக்கும்போது அவ்வகுப்பாருக்குக் கிடைத்திருக்கும் உத்யோகங்கள் ரொம்ப அதிகமாயிருக்கின்றனவென்று தெரியவரும். இதோடு அஸல் ஐரோப்பியர்கள் வகித்துவரும் உத்யோகங்களையும் சேர்த்துப்பார்த்தால், இரண்டு வகுப்பாரும் அடைந்துள்ள உயர்ந்த உத்யோகங்களைவிட இந்தியர்கள் அடைந்துள்ள உத்யோகங்கள் ரொம்ப குறைவென்று ஏற்படும். இதைப்பற்றி சென்ற மாஸத்து ஜனோபிமானியில் 82,83-ம் பக்கங்களில் விரிவாய் எழுதியிருக்கிறோம்.

இந்தியர்களை அதிகமாக உபயோகிக்க வேண்டியதின் அவச்யத்தை ஒப்புக்கொண்ட கமிட்டியார் அதற்குச் செய்துள்ள ப்ரேரணைகளையும் விவரித்தோம். ஆங்க்லோ இந்தியர்கள் போக, பாக்கி இந்தியர்களில் எந்த வகுப்பார்களுக்கு ரொம்ப குறைவாய் உத்யோகங்கள் கிடைத்திருக்கின்றனவோ, அவ்வகுப்பார்களுக்கு குறைவை சரிப்படுத்த அதிக உத்யோகங்களுள் கொடுக்கவேண்டுமென்றும், இன்ன வகுப்பார்களுக்கு இத்தனை உத்யோகங்கள் கொடுக்கவேண்டுமென்று விகித மேற்படுத்துவது உசிதமில்லையென்றும், உத்யோகங்களுக்கு வேண்டியவர்களை நேரில் தெரிந்தெடுக்கும் ஏற்பாட்டை ப்ரேரித்திருப்பதால் அந்த ஏற்பாட்டின்படி கவர்ன்மெண்டார் பற்பல வகுப்பார்களுடைய குறைகளை பூர்த்திசெய்வது ஸாத்யமாகுமென்றும் கமிட்டியார் சொல்லுகிறார்கள்.

இது விஷயமாய் மிஸ்டர் சௌபால் சொல்லுவது என்னவென்றால், தற்காலம் உத்யோகங்களுக்கு மனிதர்களைத் தெரிந்தெடுப்பதில் ஸாமர்த்யம், கல்வி முதலியவைகளை அதிகம் கவனியாமல், எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதைமாத்ரம் கவனித்து, அதன்படி கவர்ன்மெண்டுகள் நியமனம் செய்துவருகின்றன. சில வகுப்பிலிருந்து அதிகம் பேர்கள் உத்யோகங்களையடைந்துவிடுவதாக எண்ணி அவ்வகுப்பார்களை கவர்ன்மெண்டார்கள் புறக்கணித்து வருகிறார்கள். கவர்ன்மெண்டுகள் செய்யவேண்டியது என்னவென்றால், ஒரு வகுப்பாரும் ரொம்ப அதிகமாய் உத்யோகங்களையடையாமல் மாத்ரம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் ரொம்ப உயர்ந்த உத்யோகங்கள் விஷயத்தில் யாராயிருந்தாலுஞ் சரி திறமையுள்ளவர்களாவென்று பார்த்து நியமனம் செய்யவேண்டுமேயொழிய, பற்பல வகுப்பாருக்கும் தகுந்த அளவு உத்யோகங்கள் கிடைக்கவேண்டுமென்று பார்க்கக் கூடாது.

இன்னும், இந்தியாவிலுள்ள ஆங்க்லோ இந்தியர்களின் தொகை 1-லக்ஷந்தானென்றாலும், அவர்கள் அடைந்துள்ள உத்யோகங்கள் மொத்தம் இந்தியர்கள் அடைந்துள்ள உயர்ந்த உத்யோகங்களில் 100-க்கு 26-வீதமாகிறதென்றும், இது ரொம்ப அதிகமென்றும் மிஸ்டர் சௌபால் சொல்லுகிறார். இந்தியாவிலேயே உத்யோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்படும உத்யோகங்களில் ஸ்வயமான இந்தியர்கள் அதிகமாக இருக்கிறார்களென்று சொல்லுவதற்கில்லை. போஸ்டாபீஸ், தந்தியிலாகா, பர்மா லாண்ட் ரிகார்ட்ஸ், ரெயில்வே, ரெஜிஸ்ட்ரேஷன், வட இந்தியா உப்பு இலாகா, உப்பு, அப்காரி இலாகா, சென்னை ஸர்வே ஆகிய இந்த இலாகாக்களுக்குவேண்டிய உத்யோகஸ்தர்கள் இந்தியாவிலேயே பெரும்பாலும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதனால் இந்த 8-இலாகாக்களிலும் ஸ்வயமான இந்தியர்கள் அதிகமாக இருப்பார்கள் என்று எண்ண இடமேற்படுகிறது. ஆனால் அடியில்காட்டியுள்ள விவரத்தால் அவ்வெண்ணம் தவறென விளங்கும்.

| இலாகாக்கள். | 200 ரூபாயும் அதற்கு மேலும் சம்பளமுள்ள உத்யோகங்கள். | ஐரோப்பியர்கள். | ஆங்கிலோ இந்தியர்கள். | ஸ்வயமான இந்தியர்கள். |
|---|---|---|---|---|
| 1. போஸ்ட் ஆபீஸ் ... | 277 | 106 | 39 | 132 |
| 2. டெலிக்ராப் ... | 664 | 162 | 441 | 61 |
| 3. பர்மா லாண்ட் ரிகார்ட்ஸ் ... | 45 | 1 | 38 | 6 |
| 4. ரெயில்வே ... | 447 | 330 | 72 | 45 |
| 5. ரெஜிஸ்ட்ரேஷன் ... | 64 | — | 1 | 63 |
| 6. வட இந்தியா உப்பு இலாகா ... | 36 | 16 | 15 | 5 |
| 7. உப்பு, அப்காரி இலாகா ... | 338 | 110 | 98 | 130 |
| 8. சென்னை ஸர்வே ... | 16 | 9 | 1 | 6 |
| மொத்தம்... | 1887 | 734 | 705 | 408 |

ஆகவே மொத்தம் உத்யோகங்களில் நூற்றுக்கு 23 பாகந்தான் ஸ்வயம் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த இலாகாக்களில் 500 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் சம்பளமுள்ள உத்யோகங்களைக் கவனித்தால் 100-க்கு 8·2 பாகந்தான் ஸ்வயம் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கிறது. 800 ரூபாயும் அதற்கு மேற்பட்டுமுள்ள உத்யோகங்களில் 100-க்கு 6·4-பாகந்தான் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே இந்தியர்களின் தொகையை அதிகரிக்கவேண்டியது ரொம்ப அவச்யமாகிறது.

சில குறிப்பிட்ட இலாகாக்களுக்கு வேண்டிய உத்யோகஸ்தர்களில் பாதி இந்தியாவிலிருந்தும், பாதி இங்கிலண்டிலிருந்தும் தருவிக்கவேண்டுமென்று கமிட்டியாரில் பெரும்பாலார் ப்ரேரித்திருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து தெரிந்தெடுப்பதில் சில காரணங்களால் ஆங்க்லோ இந்தியர்கள் அதிகமாக உத்யோகங்களை அடைந்துவிடுவார்கள். ஆகையால் ஆங்க்லோ இந்தியர்களை ஐரோப்பியர்களோடு சேர்த்து இருவகுப்பாருக்கும் உத்யோகங்களில் பாதியென்றும் மற்ற பாதியை ஸ்வயம் இந்தியர்களுக்கென்றும் ஏற்படுத்தவேண்டும். அவ்விதம் ஆங்க்லோ இந்தியர்களை ஐரோப்பியர்களாகக் கருத சட்டத்தை மாற்றுவது கஷ்டமாயிருந்தால், இந்தியராயிருந்தாலுஞ் சரி, ஆங்க்லோ இந்தியராயிருந்தாலுஞ்சரி, இரு வகுப்பாரும் ஒரே மாதிரியான பரீக்ஷை தேறியவர்களாயிருக்க வேண்டுமென்று ஏற்படுத்த வேண்டும். இந்தியர்களுக்கு ஒருவித பரீக்ஷையும், ஆங்க்லோ இந்தியர்களுக்கு வேறு பரீக்ஷையும் இருக்கக்கூடாது. உத்யோகங்களுக்குவரும் இந்தியர்கள் பி. ஏ. தேறியவர்களாயிருக்க வேண்டுமென்றால், ஆங்க்லோ-இந்தியரும் பி. ஏ. பரீக்ஷை தேறியவராயிருக்க வேண்டுமென்று ஏற்படுத்த வேண்டும் என்று மிஸ்டர் சௌபால் சொல்லுகிறார்.

மிஸ்டர் அப்தர்ரஹீம் ஆங்க்லோ இந்தியர்களுடைய ஜனத்தொகையை உத்தேசிக்கையில், அவர்களுக்கு ரொம்ப அதிகமாக உத்யோகங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறைகூறுகிறார். இந்த வித்யாஸத்தை சரிப்படுத்த வேண்டுமென்றும், சில இலாகாக்களில் ஆங்க்லோ - இந்தியர்கள், இந்தியர்கள் தேறிய பரீக்ஷைகளைவிடக் குறைவான பரீக்ஷை தேறியிருந்தால் போதுமென்று ஏற்பட்டிருப்பது சரியல்லவென்றும், இதை மாற்றிவிட்டு அவர்களும் மற்றவர்களைப் போலவே ஒரே விதப் பரீக்ஷை தேறியிருந்தால் தான் அவர்களை உத்யோகங்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும்; அவர் சொல்லுகிறார்.

ஆங்க்லோ இந்திய வகுப்பைச் சேர்ந்தவரும், கமிட்டி மெம்பர்களுள் ஒருவருமாகிய மிஸ்டர் மாட்ஜ் என்பவரோ, முன்பு ஆங்க்லோ இந்தியர்கள் அதிகமாக ஸர்க்கார் உத்யோகங்களுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டார்களென்றும், தற்போது ரொம்பவும் குறைவாக எடுத்துக்கொள்ளப் படுகிறார்களென்றும், முன்போலவே அதிகமாக உத்யோகங்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் சொல்லுகிறார்.

## சம்பளம்.

தற்போது சில இலாகாக்களில் இந்தியர்களும் ஐரோப்பியர்களும் ஒரே வகை வேலையைச் செய்து வந்தாலும், ஐரோப்பியர்களுக்கு அதிகமாகவும் இந்தியர்களுக்குக் குறைவாகவும் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். இந்தியாவிலிருந்தே உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கும்படியான போஸ்டாபீஸ், பர்மா லாண்ட் ரிகார்ட்ஸ், டெலிக்ராப், ரெயில்வே ஸ்டோர்ஸ், ரெஜிஸ்ட்ரேஷன், வட இந்தியா உப்புத்தீர்வை இலாகா, உப்பு, எக்ஸைஸ், சென்னை ஸர்வே ஆகிய இந்த இலாகாக்களிலும், விவஸாயம், ம்ருகவைத்யம், காட்டிலாகா, வைத்யம், போலீஸ் இந்தியா ஸர்வே ஆகிய இந்த இலாகாக்களின் ப்ரொவின்ஷியல் பிரிவுகளிலும் எல்லா உத்யோகஸ்தர்களுக்கும் ஒரே சம்பளம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் இவைகளுக்கு தக்க இந்தியர்களை வரும்படி தூண்ட எவ்வளவு





சம்பளம் கொடுக்கவேண்டுமோ அவ்வளவுதான் கொடுக்கிறார்கள். இம்பீரியல் (அதாவது உயர்ந்த) விவஸாய இலாகா, இம்பீரியல் ம்ருகவைத்ய இலாகா, கஸ்டம்ஸ், தொழில் சாலை சோதனை இலாகா, இந்திய வரவு செலவு இலாகா, ராணுவ வரவு செலவு இலாகா, இந்திய ஜியாலாஜிகல் ஸர்வே, சுரங்கம், நாணயச்சாலை, ரெயில்வே ஆகிய இந்த இலாகாக்களிலும் எல்லா உத்யோகஸ்தர்களுக்கும் ஒரே சம்பளந்தான் கொடுத்து வருகிறார்கள். ஆனால் இவைகளுக்கு இங்கிலண்டிலிருந்து உத்யோகஸ்தர்களை வரும்படி தூண்ட என்ன கொடுக்கவேண்டுமோ அதை யனுஸரித்து சம்பளம் அதிகமாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் இந்தியன் ஸிவில் ஸெர்விஸ், இந்தியன் மெடிகல் ஸெர்விஸ் இந்தியன் எடுகேஷனல் (கல்வி) ஸெர்விஸ், இம்பீரியல் பாரஸ்ட் (காடு) ஸெர்விஸ் ஆகிய இவைகளிலும், போலீஸ் இலாகாவில் இம்பீரியல் (அதாவது உயர்ந்த) பிரிவிலும் இந்தியர்களுக்கு ஐரோப்பியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. இந்தியர்கள் கீழ் உத்யோகங்களிலிருந்து உயர்த்தப்படாமல், நேராக இந்த உத்யோகங்களுக்கு வந்தால் அதாவது இங்கிலண்டில் ஐ. ஸி. எஸ். பரீக்ஷை தேறி உத்யோகம் அடைவது போல் உத்யோகங்களை அடைந்தால் அப்போது மாத்ரம், ஒரே சம்பளம் கொடுக்கிறார்கள். மராமத்திலாகாவிலும், ரெயில்வே, தந்தி இலாகாக்களில் இஞ்ஜினியரிங் பிரிவுகளிலும் சேரும் இந்தியர்கள் இங்கிலண்டில் வாஸித்து அங்கே நியமனம் பெற்றால் அவர்களுக்கு இங்க்லீஷ்காரர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் உண்டு. இந்தியாவில் நியமனம் பெற்றால் குறைந்த சம்பளமே கிடைக்கும்.

ஆனால் கணக்குகளைப்பார்த்தால் இங்க்லீஷ்காரர்களுக்குக் கிடைத்துவரும் சம்பள விகிதத்

தின்படி சம்பளம் பெறும் இந்தியர்களின் தொகை ரொம்ப குறைவே. இரண்டொரு இலாகாக்களில் தான் அதிகமான இந்தியர்கள் ஐரோப்பிய விகிதப்படி சம்பளம் பெற்றுவருகிறார்கள். இப்படி இந்தியர்களுக்கு ஒருவிதமாகவும் ஐரோப்பியர்களுக்கு ஒருவிதமாகவும் சம்பளம் கொடுப்பதால் கவர்ன்மெண்டார் தங்களைக் குறைவாய் நினைப்பதாக இந்தியர்கள் எண்ணிவருகிறார்கள். எல்லாருக்கும் ஒரே சம்பளம் கொடுத்தால் இந்தக் குறை நீங்கிவிடும். ஆனால் ஐரோப்பியர்களுக்கான விகிதப்படி இந்தியர்களுக்கும் சம்பளம் கொடுப்பதென்றால் பணச்செலவு ரொம்ப அதிகமாகுமென்றும், காலக்ரமத்தில் இந்தியாவிலிருந்தே உத்யோகஸ்தர்கள் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கும் இலாகாக்களில் அதாவது விவஸாயம், ம்ருகவைத்யம், காட்டிலாகா முதலிய இலாகாக்களில் உத்யோகஸ்தர்களுக்கு இந்திய விகிதப்படி அதாவது தக்க இந்தியர்களையடைய என்ன சம்பளம் கொடுக்க வேண்டியிருக்குமோ அந்த சம்பள விகிதம் ஏற்படுத்தி, அந்த விகிதப்படி இந்தியர்களுக்கு சம்பளம் கொடுத்து, ஐரோப்பியர்கள் ஷை இலாகாக்களில் வேண்டியிருக்கும் காலம் வரையில் அவர்களுக்கு சற்று அதிக சம்பளம் கொடுத்து வரவேண்டுமென்றும் கமிட்டியார் தெரிவித்திருக்கிறார்கள்.

மற்ற இலாகாக்களுள் எவற்றில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் ஒரே சம்பளம் கொடுப்பது வழக்கத்திலிருந்து வருகிறதோ அவைகளில் அவ்வழக்கத்தை விடக்கூடாதாம். மற்ற இலாகாக்களில் நிர்வாக வேலைகள் உள்ள உயர்ந்த உத்யோகங்களுக்கு ஒரே சம்பளம் கொடுக்கவேண்டும். ப்ரொவின்ஷியல் ஸிவில் ஸெர்விஸிலிருந்து உயர்த்தப்பட்ட ஜில்லா ஜட்ஜுகள், கலெக்டர்கள், ஸிவில் ஸெர்விஸில் இந்த உத்யோகங்களுக்கு ஸமதையான வேறு உத்யோகங்களை வகிப்பவர்கள், மராத்திலாகாவிலும் ரெயில்வேயிலும் எக்ஸிக்யூடிவ் எஞ்ஜினியர்கள், இந்தியா ஸர்வே டிபார்ட்மெண்டில் இந்தியாவிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அஸிஸ்டெண்டுகளிலிருந்து ப்ரொமோஷன் செய்யப்பட்ட டெபுடி ஸூபரிண்டெண்டுகள் ஆகிய இவர்கள் இந்தியர்களானால் குறைவான சம்பளம் கொடுக்கப்படவேண்டும். ஐரோப்பியர்களானால் உயர்ந்த சம்பளம் கொடுக்கப்படவேண்டும். ஆனால் இதே உத்யோகங்களுக்குவரும் இந்தியர்கள் இங்க்லண்டில் படித்துத் தேறி உத்யோகம் பெற்றால் ஐரோப்பியர்களுக்கான சம்பளமே இவர்களுக்கும் கொடுக்கப்படும். இது கமிட்டியாருக்கு விருப்பமில்லையாயினும், இந்தியர்களுடைய அபிப்ராயம் பலமாக இதன் பக்ஷமாயிருப்பதால், இவ்விதம் ப்ரேரித்திருக்கிறார்கள். இவ்விதம் கமிட்டியில் பெரும்பாலார் ப்ரேரித்திருக்கிறார்கள்.

லார்ட் ரோனால்ட்ஷே, ஸர் மர்ரே ஹாமிக், ஸர் வாலண்டைன் சிரோல், மிஸ்டர் எப். ஜி. ஸ்லை ஆகிய நால்வரும், இங்க்லண்டில் படித்துத் தேறி உத்யோகம் பெறும் இந்தியர்களுக்கு ஐரோப்பியர் பெறும் சம்பளம் கொடுப்பது தவறு என்கிறார்கள்.

ஐரோப்பியர்கள் தங்கள் ஜன்ம தேசத்தை விட்டு வேறு இடத்தில் வேலை செய்வதால் அதனால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய அஸௌகர்யங்களுக்கு ஈடுசெய்வதற்காக அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்தியர்கள், ஜன்ம தேசத்திலேயே வேலை செய்வதால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை. மேலும் ப்ரிட்டிஷ் கலாசாலைகளில் வாசித்துத் தேறிய இந்தியர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து, இந்திய கலாசாலைகளில் வாசித்துத் தேறியவர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுப்பதால், இந்திய கலாசாலைகள் பயனில்லை,



அன்கள் ஐரோப்பிய கலாசாலைகளுக்குப் போகவேண்டுமென்று இந்தியர்களிடம் சொல்லுவது போலாகிறது. ஆகையால் இந்தியர்கள் எங்கே படித்து உத்யோகம் பெற்றாலும் ஐரோப்பியர்களைவிடக் குறைந்த சம்பளமே பெறவேண்டுமென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஸர் தியோடோர் மாரிஸன் சொல்லுவதென்னவென்றால், சம்பள விஷயத்தில் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் வித்யாஸம் காட்டக்கூடாது. ஸொந்த தேசத்தில் வேலை பார்ப்பவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை விட அன்யதேசத்தில் போய் வேலை செய்பவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டுமென்று பலர் சொல்லுகிறார்கள். இந்த வாதம் சரியானதல்ல. ராஜாங்கத்தார் எவ்விடத்தில் குறைந்த சம்பளத்துக்கு உத்யோகஸ்தர்கள் கிடைப்பார்களென்று பார்த்து ஒவ்வொருவரையும் தெரிந்தெடுத்து நியமிப்பதில்லை. ஸாதாரணமாய் ஒரு குறிப்பிட்ட வகை உத்யோகத்துக்கு சராசரி இன்ன சம்பளம் ஏற்படுத்தினால் தக்க மனிதர்கள் வேலை பார்க்க வருவார்களென்று நிர்ணயித்துக்கொள்வதுதான் வழக்கம். அப்படியல்லாமல் ஒவ்வொரு உத்யோகஸ்தருடைய நிலைமையை கவனித்து அவருக்கு என்ன சம்பளம் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயிப்பது ஒருதவறான கொள்கையாகும். ப்ரம்மசாரியாயிருப்பவருக்குக் குறைந்த சம்பளமும், கல்யாணமாகி குடும்பியாயிருப்பவருக்கு அதிக சம்பளமும், கொடுப்பதும், வேறு ஸொத்துக்களும், வரும்படிகளும் உள்ளவருடைய சம்பளத்தைக் குறைப்பதும் ஸர்க்காருக்குச் செலவைக் குறைக்குமென்றாலும், அவை சரியல்லவென்று யாவரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் சிலர் இதற்கு ஒரு ஆக்ஷேபணை சொல்லக்கூடும். இந்த வாதத்தில் குறிப்பிட்டிருப்பது தனித்தனி நபர்களென்றும் அவர்களுடைய ஸொந்த நிலைமைகளைப் பரிசீலனை செய்வது கூடாதென்றாலும், இந்தியர்களும் இங்க்லீஷ்காரர்களும் ப்ரத்யேகமான வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருப்பதாலும், அவர்களுக்குள்ள வித்யாஸங்களை எளிதில் அறியக்கூடுமாதலாலும், இருவகுப்பாருடைய நிலைமையை கவனிக்கலாமென்றும் சொல்லக்கூடும். ஆனால் தனி நபர்கள், நபர்களின் தொகுதி, சிறு வகுப்புகள், பெரிய வகுப்புகள் என்ற [illegible] பிரிவுகளுக்குள் ஒன்றுக்கொன்று உண்மையான வித்யாஸம் கிடையாது. கவர்ன்மெண்டார் ஒருதடவை தங்களுடைய ஆபீஸர்களுடைய ஸொந்த நிலைமைகளை ஆராய்ந்து அவைகளுக்கு அனுஸரணையாக நடக்கிறதென்று ஏற்பட்டால், எல்லா வகுப்பாருடைய நிலைமையையும் கவனிக்க வேண்டியதுதான். அப்போது இந்தியர், ஐரோப்பியர் என்ற பிரிவு மாத்ரம் போதாது. உத்யோகஸ்தர்களை வேறு வகைகளாகவும் பிரித்து ஒவ்வொருவகையின் நிலைமையையும் அனுஸரித்து அதன்படி நடக்கவேண்டியிருக்கும். உதாரணமாக ஒரு சென்னைவாஸி பஞ்சாபில் போய் வேலை செய்தால் அவருக்கு அன்யநாட்டில் வேலை செய்வதற்காக அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று ஏற்படும். அதே மாகாணத்தில் வேலை செய்யும் ஒரு இங்க்லீஷ்காரருடைய பெற்றோர்கள் இமயமலைச் சாரலில் ஸ்திரமாய் குடியேறிவிட்டால், அவருக்கு மேற்சொன்ன அலவன்ஸ் எதற்கு? இப்படி ஒவ்வொரு உத்யோகஸ்தருடைய நிலைமையையும் ஆராய்ந்து பார்த்து சம்பளம் ஏற்படுத்துவது முடியாத கார்யமாகையால் கவர்ன்மெண்டார் அவ்விதம் ஒன்றும் செய்வதில்லை. ஆகையால் இந்தியருக்கும் இங்க்லீஷ்காரருக்கும் ஒரே சம்பளந்தான் கொடுக்கவேண்டும்.

சிலர் இப்படிச்செய்தால் அதிக பணச் செலவு நேரிடுமென்று வாதிக்கலாம். ஆனால் வித்யாஸங் காட்டுவதால் தேசத்தில் ராஜாங்கத்தின்மேல் ஜனங்களுக்கு எவ்வளவு அத்ருப்தி ஏற்படுகிறதென்பதை கவனிக்க வேண்டும். இந்தியர்கள், தங்களுக்கு எப்போதும் குறைந்த சம்பளங் கொடுக்கப்படுவதாகக் குறை கூறுகிறார்கள். இந்தியாவில் ஜனங்கள் மற்றெல்லாவற்றையும்விட சம்பளத்தைத் தான் அதிகமாகக் கவனிக்கிறார்கள். கவர்ன்மெண்டார் இங்க்லீஷ் காரர்களாக இருப்பதால், இங்க்லீஷ் காரர்களுடைய ஸௌகர்யத்தை மாத்ரம் கவனித்துக் கொள்ளுகிறார்களேயொழிய இந்தியர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பதில்லையென்று சில இந்தியர்கள் குறை கூறுகிறார்கள். இவ்விதம் குறையேற்படும்படி விடுவது சரியல்ல. ஆனால் பணச்செலவை உத்தேசித்து பின்வருமாறு செய்வது நல்லது. எந்த இலாகாக்களுக்கு இந்தியாவிலிருந்தே உத்யோகஸ்தர்களை எடுத்துக் கொள்ளக் கூடுமோ அவைகளுக்கு இந்திய விகிதப்படி சம்பளம் ஏற்படுத்த வேண்டும். எந்த இலாகாக்களுக்கு இங்க்லண்டிலிருந்து அதிகமாக உத்யோகஸ்தர்களைத் தருவிக்க வேண்டியிருக்குமோ (உதாரணமாக ஸிவில் ஸெர்விஸைச் சொல்லலாம்) அந்த இலாகாக்களில் இங்க்லீஷ் விகிதப்படி இந்தியர்களுக்கும் இங்க்லீஷ் காரர்களுக்கும் ஒரே சம்பளம் கொடுக்கவேண்டும். எந்த இலாகாக்களில் ஸ்வல்பமாவது இங்க்லீஷ்காரர்கள் இருக்கவேண்டியது அவச்யமோ அவைகளில், உதாரணமாக கல்வி, மராமத்திலாகா முதலியவைகளில், உயர்ந்த உத்யோகங்களை, செய்யவேண்டிய வேலையின் இயல்பை அனுஸரித்து, முதல் வகுப்பென்றும் இரண்டாவது வகுப்பென்றும் பிரித்து, முதல் வகுப்பின் ஸங்க்யைக் குறைவாக வைத்துக்கொண்டு, முதல் வகுப்புக்கு அதிக சம்பளம் ஏற்படுத்தவேண்டும். ஆனால் இந்தியர்களையும் இங்க்லீஷ் காரர்களையும் இரண்டு வகுப்புக்கும் எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த வகுப்பில் சேர்ந்தாலும் இந்தியர்களுக்கு அந்த வகுப்பிலுள்ள ஐரோப்பியர்களுக்குக் கொடுக்கும் சம்பளமே கொடுக்கவேண்டும். இவ்விதம் மிஸ்டர் தியோடோர் மாரிஸன் சொல்லுகிறார்.

மிஸ்டர் அப்துர் ரஹீம் ப்ரொவின்ஷ்யல் ஸிவில் ஸெர்விஸிலிருந்து கலெக்டர், ஜில்லா ஜட்ஜ் முதலிய உயர்ந்த உத்யோகங்களுக்கு உயர்த்தப் படுகிறவர்களுக்கு ஐரோப்பியர்களைப்போலவே சம்பளங் கொடுக்கவேண்டுமென்றும், மராமத்திலாகா, போலீஸ், இந்தியா ஸர்வே முதலிய இலாகாக்களில் தாழ்ந்த பிரிவுகளிலிருந்து உயர்ந்த உத்யோகங்களுக்கு இந்தியர்களை நியமித்தால், அந்த உயர்ந்த உத்யோகங்களுக்கு ஐரோப்பியர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுமோ அதே சம்பளந்தான் இந்தியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

720. போஜ சரித்ரம் ... 2 8 0
வக்கீல் டி. எஸ். நாராயண சாஸ்த்ரியார் இயற்றிய நாடகம். 21-போட்டோ படங்கள் கொண்டது.
260. ராஜாமணி ... 0 8 0
ஹாஸ்யரஸமும் சோகரஸமும் உள்ள ஒரு நாவல். எ. ஹரிஹரய்யர் எழுதியது.
36, தலையணை மந்திரோபதேசம் ... 0 8 0
பண்டித நடேச சாஸ்த்ரிகள் இயற்றியது.
எல்லாள் அல்லது நல்ல மனைவியே நல்லபொருள் ... 1 4 0
வி. டி. மகாதேவன் இயற்றியது.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.



# WRESTLING IN INDIA.

## இந்தியாவில் மல்யுத்தம்.

ஆயுதங்கள் ஒன்றும் இல்லாமல் யுத்தம் செய்வதற்கு மல்யுத்தமென்று பெயர். ஆதிகாலந்தொட்டு மல்யுத்தம் நமது நாட்டில் இருந்து வந்ததென்று புராண இதிஹாஸங்களால் தெரியவருகிறது. வேதங்களிலும் மார்க்கண்டேய புராணத்திலும் மல்யுத்தத்தைப்பற்றி ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஆதிகாலத்தில் விஷ்ணுவானவர் மது, கைடபர் என்ற இரண்டு அஸுரர்களையும் கொன்றபோது மல்யுத்தம் செய்தே அவர்களை நாசம் செய்தார். அக்காலத்தில் ஆயுதங்கள் ஏற்படவில்லை. பூமியும் ச்ருஷ்டிக்கப்படவில்லை. ஜலம் ஆகாசம் முதலியவைகள்தானிருந்தன. மது, கைடபர்கள் மஹாவிஷ்ணுவின் காதிலிருந்து ஜனித்தவர்கள். அவர்கள் பிறந்தவுடன், விஷ்ணு அவர்களுக்குவேண்டும் வரத்தைக் கொடுப்பதாகச் சொன்னார். அதற்கு அந்த அஸுரர்கள் ஆகாசத்திலாவது, ஜலத்திலாவது தங்களுக்குச்சாவு ஏற்படக்கூடாதென்று வரங்கேட்டார்கள். விஷ்ணு அந்த வரத்தைக் கொடுத்தருளினார். சிலகாலத்துக்கெல்லாம் அந்த அஸுரர்கள் ப்ருஹ்மாவின்மேல் போருக்கெழுந்து அவரைத் தாக்கப்போனார்கள். ப்ருஹ்மா அவர்களைக்கண்டு நடுங்கி மஹாவிஷ்ணுவை சரணமடைந்து தம்மைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டார். மஹாவிஷ்ணு உடனே அஸுரர்களை மற்போருக்கழைத்து, ஆகாசத்திலிருந்துகொண்டே யுத்தம் செய்து, கடைசியில் அவர்களை தமது இடுப்பில்வைத்துக் கொன்றுவிட்டார். பிறகு இறந்துபோன அவர்களுடைய மேதஸ்விலிருந்து அதாவது மாம்ஸத்திலிருந்து பூமியை ச்ருஷ்டித்தார். இதனால்தான் பூமிக்கு மேதினி அதாவது மாம்ஸத்திலிருந்து உண்டானது என்று பெயர் வந்தது. இவைகள் க்ருத யுகத்தின் முன்பாகத்தில் நடந்தவையாகும். அந்த யுகத்தின் பின்பாகத்திலும் மல்யுத்தம் விசேஷமாக நடந்து வந்ததாகத் தெரிகிறது. தேவி புராணத்தின்படி, சிவனுடைய மனைவியாகிய துர்க்காதேவி மஹிஷாஸுரனோடு மல்யுத்தம்செய்து அவனைக் கொன்றாள். அதுமுதல் அந்தக் காலங்களில் மல்யுத்தம்யுத்த முறைகளில் ஒன்றாக இருந்து வந்தது. ராமாயணம் நடந்ததாகச் சொல்லப்படும் த்ரேதாயுகத்தில் க்ஷத்ரியர்களுக்கு மற்ற போர்ப் பயிற்சிகளோடு மல்யுத்தமும் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் க்ஷத்ரியர்கள் யுத்தம் செய்யும்போது தர்மத்தை ரொம்பவும் அனுஸரித்து வந்தார்கள். அவர்கள் ஆயுதமில்லாத எதிரியை ஆயுதங்களால் தாக்குவது கிடையாது. எதிராளி ஆயுதமில்லாமலிருந்தால் அவனை மல்யுத்தத்துக்கு அழைப்பது வழக்கம்.

பாரதயுத்தம் நடந்த த்வாபர யுகத்திலும் மல்யுத்தம் வழக்கத்திலிருந்து வந்தது. அர்ஜுனன் பாசுபதாஸ்த்ரம் அடையுமுன் சிவனுடன் சண்டை போட்டபோது மல்யுத்தமே செய்தான். ஆனால் அர்ஜுனனைவிட அவனது தமையனாகிய பீமனுக்குத்தான் மல்யுத்தத்தில் விசேஷத்தேர்ச்சியும் கீர்த்தியும் உண்டு. ஜராஸந்தனையும் கீசகனையும், விராடநகரம் வந்திருந்த மல்லர்களையும் வேறு சிலரையும் அவன் மற்போரில்தான் கொன்றான். அக்காலத்தில் சில ஜனங்கள் மல்யுத்தம் செய்து காட்டுவதையே தொழிலாகக்கொண்டு, பற்பல அரசர்கள் முன்னிலையில் தங்கள் தொழில் திறமையைக்காட்டிப் பரிசுபெற்று வந்தார்கள். அரசர்களும் தங்கள் அரண்மனைகளில் மல்லர்

களை நிரந்தரமாய் வைத்துக்கொண்டு அவர்களை ஆதரித்து வந்தார்கள். இந்த வழக்கம் தற்போது நடந்துவரும் கலியுகத்தின் ஆரம்பத்திலும் வெகுகாலம் இருந்து வந்தது. எல்லா ஹிந்து அரசர்களுக்கும் மல்யுத்தத்தில் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு ராஜஸபையிலும் மல்லர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

மகம்மதியர்கள் இந்தியாவுக்கு வந்தபிறகு, அவர்களும் மல்யுத்தத்தில் விசேஷ ப்ரியம் காட்டிவந்தார்கள். அவர்கள் காலத்தில்தான் மல்யுத்தத்துக்கு குஸ்தியென்று பெயர் வழங்கலாயிற்று. மல்லர்களுக்கு பயில்வான்கள் என்ற பெயரும் கொடுக்கப்பட்டது. தற்காலம் இந்த மகம்மதியப் பெயர்கள்தான் விசேஷமாய் வழங்கிவருகின்றன.

சாஸ்த்ர அறிவு அபிவ்ருத்தியாகி காலக்ரமத்தில் யுத்தத்தில பலவகைப்பட்ட ஆயுதங்கள் அதிகமாக உபயோகப்பட்டவே, யுத்தத்தில் மல்லர்களின் உபயோகம் குறையலாயிற்று. கடைசியில் மல்யுத்தம் ஒரு விளையாட்டாகப் போய், தறகாலமும் அப்படியே இருந்து வருகிறது.

தற்காலம் நாகரிக முதிர்ச்சியால் பலர் குஸ்தியை ஆதரிக்காமல் செலவு அதிகமான அந்யதேச விளையாட்டுகளை தேகப்பயிற்சியை உத்தேசித்து விளையாடி வருகிறார்கள். இதனால் பயில்வான்களுக்கு ஆதரிப்பு வரவரக் குறைந்துவருகிறது. தேசமன்னர்களில் சிலரும், சில ஜமீனதார்களுந்தான அவர்களை தற்போது ஆதரித்துவருகிறார்கள். உதாரணமாக க்வாலியர்ஸமஸ்தானத்து ஸிந்தியா மஹாராஜா, உதயபுரத்துராணா, கபூர்த்தாலா மஹாராஜா ஆகிய இவர்கள் ஏராளமான மல்லர்களை சம்பளங்கொடுத்து தங்கள் அரண்மனையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். முற்காலத்தில் மூர்ஷிடாபாத்தில் ஆண்டுவந்த நவாப்புகள் மல்லர்களை மிகவும் ஆதரித்து வந்தார்களாம். அவர்களுள் நவாப் அலிவர்டிகானும், அவரது பேரனாகிய நவாப்ஸிராஜடவுலாவும் மல்யுத்தங்களில் விசேஷ ஊக்கங்காட்டி வந்தார்களாம். அந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களாகிய தற்போதைய மூர்ஷிடாபாத் நவாபும் மல்போரில் விசேஷ ஊக்கம் காட்டிவருகிறார்கள். வங்காளத்தில் பர்த்வான், மைமன்ஸிங் முதலிய சில ஜமீன்தார்களும் மல்லர்களை ஆதரித்து வருகிறார்கள்.

மைமன்ஸிங்கின் ஜமீன்தாராகிய ராஜா ஜகத்கிஷோர் என்பவர்க்கு மல்யுத்தத்தில் விசேஷ தேர்ச்சியுண்டாம்.

மற்ற மாகாணங்களைவிட பஞ்சாபில்தான் மல்யுத்தம் முன்பு விசேஷமாகப் பரவியிருந்தது. வயது வந்த எவனுக்கும் மல்பயிற்சியிராமலிராது. இப்போதும் பேர்பெற்ற மல்லர்கள் அந்த மாகாணத்தில்தான் அதிகம். இவர்களில் இரண்டொருவர் ஐரோப்பிய தேசங்களுக்குப்போய் அங்கே தங்கள் திறமைகளைக் காட்டி வந்திருக்கிறார்கள். வங்காளத்தில் உள்ள பயில்வான்களில் ச்யாமகாந்த பானர்ஜி என்பவர் ஒரு ஸர்க்கஸ் நடத்திவந்ததோடு, ஒரு வங்காளப்புலியோடு போர்புரிந்து அதைத் தோற்கடித்து க்யாதிபெற்றார். கோபர் குஹா என்பவர் இங்க்லண்டுக்குப்போய் ஒரு ப்ரஸித்திபெற்ற ஸ்காட்லண்ட் தேசத்து மல்லரைத் தோற்கடித்தார். ஸுபோதபோஸ் என்பவர் கல்கத்தாவுக்கு வந்திருந்த ஒரு ப்ரஸித்திபெற்ற டச்சுக்கார மல்லரைத் தோற்கடித்து க்யாதிபெற்றார்.

---


சாகுந்தலா ... 1 8 0
ஒரு இனிய நாடகம்.
கமலாக்ஷி ... 1 8 0
உயர்ந்த தமிழ் நாவல்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.




# BLACK QUARTER.
## சப்பை நோய்.

சப்பை நோயானது விசேஷமாய் மாடு, செம்மறியாடு ஆகிய இவைகளையும், சிறிதளவு வெள்ளாடு, ஒட்டகம் ஆகிய இவைகளையும் தாக்கும் ஒரு தொற்றுநோய். இது விசேஷமாய் மூன்றுமாஸம் முதல் 4 வர்ஷம் வரை வயதுள்ள குட்டிகளையே அதிகமாக பாதிக்கிறது. இது இந்தியாவில் சில இடங்களில் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் இருக்கிறது. சில இடங்களில் வர்ஷந்தோறும் இது ஒரு குறிப்பிட்ட பருவத்தில் தவறாமல் தோன்றுவதுண்டு.

இந்த வ்யாதி விசேஷமாய் தாழ்ந்த சதுப்பு நிலங்களில்தான் அதிகமாக உண்டாகிறது. இந்த வ்யாதிக்காதாரமான க்ருமி மண்ணில் இருக்கிறதென்றும், மாடு முதலிய ம்ருகங்களின் பாதம், கால், வாய் ஆகிய இவைகளில் சிறு காயங்கள் இருந்தால் அவைகள் மூலமாக வ்யாதி க்ருமிகள் ம்ருகங்களின் தேகத்தில் சேருகின்றனவென்றும் சொல்லப்படுகிறது. வ்யாதி க்ருமி இந்த வழியாலேயேயன்றி ஆஹாரத்தின் மூலமாக தேகத்தில் சேருகின்றவென்றும், ம்ருகத்தின் பலம் குறைந்தவுடன் வ்யாதி க்ருமி தேகத்தில் வ்ருத்தியாகித் தொந்தரவு செய்ய ஆரம்பிக்கிறதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இந்த வ்யாதிகண்ட ம்ருகம் ஒரு தடவை பிழைத்துக்கொண்டால் மறுபடியும் இந்த வ்யாதியால் பீடிக்கப்படுவதில்லையாம். வ்யாதிக்ருமி தேஹத்தில் சேர்ந்து, வ்யாதி வெளிப்படையாகத் தோற்றுவதற்கு ஸாதாரணமாக இரண்டு நாள்கள் பிடிக்கும்.

### வ்யாதியின் அறிகுறிகள்.

வ்யாதி தேகத்தில் தோன்றியதும் வெகு சீக்ரம் வ்ருத்தியடைந்து ம்ருகத்தைக் கொன்றுவிடுகிறது. இந்த வ்யாதி தோன்றிய மாடுகளில் ரொம்ப ஸ்வல்பந்தான் பிழைத்துக்கொள்ளும். வ்யாதிகண்ட ம்ருகம் சுறுசுறுப்பாயிராமல் மந்தமாக இருக்கும். அது மற்ற ம்ருகங்களோடு சேராமல் தனித்து நிற்கும். சோர்ந்துபோய்க் காணப்படும். சில ஸமயங்களில் மாடு நொண்டியாகி விடுவதுண்டு. ம்ருகத்தின் தேகத்தை நன்றாய்ப் பரிசோதித்துப் பார்த்தால், சில இடங்களில் வீக்கம் காணப்படும். ஸாதாரணமாக தொடையின் மேல் பாகங்களிலும், கழுத்து, தோள், ஆகிய இவைகளிலும், சில ஸமயங்களில் முதுகு, மார்பு, இடுப்பு ஆகிய இவைகளிலும் வீக்கங்கள் இருப்பதுண்டு. சில ஸமயங்களில் வாயிலும் தொண்டையிலும் வீக்கங்கள் உண்டாகக் கூடும். வீக்கமானது முதலில் உஷ்ணமாகவும் வலியுள்ளதாகவும் இருக்கும். வரவர அது பருத்துப் பெரியதாகி உஷ்ணமும் வலியும் குறைந்து போய்விடுகின்றன. வீக்கத்தை அறுத்துவிட்டால் உள்ளிருந்து கெட்ட வாயுவும் நுரைபோன்ற த்ரவமும் வெளிவரும். இந்த த்ரவம் ஒருவகைப் புளிப்பு வாஸனையுடையது. வீக்கம் பெரியதாகி, வ்யாதி முற்றினால், ம்ருகமானது ரொம்ப கஷ்டப்படும். மூச்சுவிடமுடியாமல் தவிக்கும். பலம் ரொம்ப குறைந்துபோகும். பிறகு ம்ருகமானது ப்ரக்ஞைபற்றுப்போய் இறந்துவிடும்.

### சிகித்ஸையும் தடுத்தலும்.

இதுவரையில் இந்த வ்யாதிக்கு உள்ளுக்குக் கொடுத்த ஒருமருந்தும் ப்ரயோஜனப்படவில்லை. சிலர் வீக்கங்களை கத்தியால் நறுக்கி எடுத்துவிட்டு, டர்ப்பண்டைனையோ வேறு காரமான க்ருமி ஹர மருந்தையோ பூசிவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

இந்த வ்யாதி வராமல் தடுக்க சென்ற வருஷத்து ஆடிமாஸத்து "ஜனோபகாரி"யில் 318-320-ம் பக்கங்களில் சொல்லியிருக்கும், தொற்றுவ்யாதி பரவாமல் தடுப்பதற்கான முறைகளை அனுஸரிக்கவேண்டும். இறந்த மாடுகளை தக்கபடி எரித்தோ, புதைத்தோ விடவேண்டும். எந்த மேய்ச்சல் தரையிலாவது இந்த வ்யாதி உண்டாகிறதென்று தெரிந்தால், அதில் மாடுகளை, முக்யமாய் வ்யாதி உண்டாகக்கூடிய காலங்களில் விடக்கூடாது.

வ்யாதி உண்டாகக்கூடுமென்று தோன்றும் ம்ருகங்களுக்கு அம்மைகுத்துவது நல்லதென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் தக்க கால்நடை வைத்யர் ஸம்மதித்தால்தான் அம்மை குத்தலாம். அதுவும் அவரைக்கொண்டுதான் அம்மை குத்தவேண்டும். அம்மை பலித்தால் 12 மாஸகாலம் இந்த வ்யாதிக்கு பயப்படவேண்டியதில்லை. இந்த வ்யாதியில்லா ப்ரதேசங்களிலும், வ்யாதி எப்பவோ ஒரு ஸமயம் உண்டாகும் இடங்களிலும் அம்மை குத்துவது சரியல்ல.

## THE CURSE OF THE KAUR RANI.

### கௌர் ராணியின் சாபம்.

வட இந்தியாவிலுள்ள பஞ்சாப் என்னும் ப்ரதேசத்தில் ஸிக் என்னும் ஒருவகை ஜாதியார் உண்டு. அவர்களுடைய ராஜாவாகிய ரஞ்ஜிட்ஸிங்க் ஸிக் ஜாதியாரின் பல வகுப்பினரையும் ஒன்று சேர்த்து ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்து அதை ஆண்டு வந்தார். அவருடைய ராஜ்யத்துக்கு கால்ஸா ராஜ்யம் என்று பெயர்.

ரஞ்ஜித் ஸிங்கின் காலத்திற்குப் பிறகு கால்ஸா ராஜ்யம் நிலைகுலைந்து போய்விட்டதென்பது யாவரும் அறிந்த விஷயம். அதற்குக் காரணம் ராஜ்யத்தில் ஒற்றுமை யற்றுப்போய் கட்சிகளும் சண்டைகளும் அதிகரித்திருந்ததும், ப்ரிடிஷ் ராஜாங்கத்தார் அதை ஜயித்துவிட்டதும் ஆகுமென்று பலர் எண்ணியிருக்கிறார்கள். ஆனால் ரஞ்ஜித்ஸிங்கின் காலத்தில் அவருடைய தர்பாரில் உத்யோகம் பெற்றிருந்தவர்களில் சிலர் ராஜ்யம் அழிவுற்றதற்கு ரஞ்ஜிட்ஸிங்கின் மருமகளாகிய கௌர் ராணி இட்ட சாபமே காரணமென்று சொல்லுகிறார்கள். அதன் வரலாறு அடியில்வரும் கதையால் நன்கு விளங்கும்.

ரஞ்ஜிட் ஸிங்குக்கு கௌர் ஷேர்ஸிங்க் என்னும் ஒரு அருமையான புத்ரனிருந்தான். அவன் பீமஸேனனைப்போல் பலமுள்ளவனாகவும் மன்மதனைப்போல் அழகுள்ளவனாகவும் இருந்தான். அவன் தைர்யத்திலும் பராக்ரமத்திலும் தன் பிதாவைப்போலிருந்தாலும் ராஜதந்த்ரத்தில் வேறுவிதமாக இருந்தான். அவனுக்குச் செய்யுளிலும் ஸங்கீதத்திலும் அதிக ப்ரியம். பாடகர்களும் நாட்யப்பெண்களும் பற்பல இடங்களிலிருந்து வந்து அவனிடங் கூடுவார்கள்.

ஸரஸ வாழ்க்கையை ஒழித்து ராஜ்ய பரிபாலனம் பண்ணும் முறையைத் தன் புத்ரன் அறிந்துகொள்ள வேண்டுமென்று கருதி ரஞ்ஜிட்ஸிங்க் அவனை படாலா என்னும் மாகாணத்திற்கு ராஜப்ரதிநிதியாக்கினார். ப்ரதிநிதி உத்யோகம் பெற்றதும் இளவரசன் படாலாவை ஆட்சி செய்யும்படி வேறொருவனை ஏற்படுத்திவிட்டுத் தன் நேசர்களோடு கூடிக்கொண்டு இமயமலைச் சாரலில் வேட்டையாடிக்கொண்டும் இங்குமங்கும் திரிந்துகொண்டும் உல்லாஸமாய்க் காலங்கழித்து வந்தான். அவன்



மழை காலத்தில் படாலாவில் தங்கியிருப்பான். அங்கே அவன் இருக்கும் வரையிலும் ஒவ்வொரு இரவும் நாட்டியக் கச்சேரி நடக்கும். கோடைகாலத்தில் அவன் படாலாவுக்கு 20 மைல் வடக்கிலுள்ள தீனநகரில் தங்கியிருப்பான். அங்கே அவன் வாஸம் பண்ணுவதற்காக ஒரு நந்தவனத்தில் அலங்காரமான மாளிகையொன்று அமைத்துக்கொண்டான்.

இளவரசன் வனங்களிலும் புல்வெளிகளிலும் ஸதா திரிந்துகொண்டிருப்பான். அவன் சில ஸமயங்களில் தன்னோடு வரும் பரிவாரங்களை விட்டு நீங்கிக் குதிரை ஸவாரி செய்வதுண்டு. இம்மாதிரி தனியாக அலைந்து திரிவது அவனுக்கு அளவில்லாத ஆனந்தத்தை உண்டுபண்ணும். ஒவ்வொரு ஸமயத்தில் அவன் ஏதாவதொரு க்ராமத்தில் சில தினங்கள் தங்கியிருப்பான். அவன் எங்கே போனானென்பதை அறியாத அவனுடைய பரிவார ஜனங்கள் கலங்கித் தவிப்பார்கள். இம்மாதிரி அவன் அநேகமுறை தங்கி வந்தபடியால் அவர்கள் கவலைப்படுவதை ஒழித்தார்கள்.

ஒரு ஸமயம் இளவரசன் இம்மாதிரி திரிந்துகொண்டிருந்தபொழுது வரோவல் என்னும் க்ராமத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் ஊருக்கு ஸமீபம் வந்தபொழுது சில பெண்கள் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு அவ்வழியே சென்றார்கள். அவர்களில் ஒரு பெண் அதி ரூபலாவண்யத்தோடு இருந்தபடியால் இளவரசன் அவளைக் கண்டவுன் காதலித்துவிட்டான்.

காதற் பித்து தலைக்கேறிய ராஜகுமாரன் ஒருவரும் அறியாதபடி அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்துசென்றான். அவள் ஒரு செல்வமுள்ள வ்யவஸாயியின் புத்ரியென்றும், அந்த வ்யவஸாயி க்ராமத் தலைவர்களில் ஒருவனென்றும், அவன் தன்னைப்போலவே ஜாட் என்னும் ஜாதியைச்சேர்ந்தவனென்றும் ராஜகுமாரன் அறிந்துகொண்டான். அரசிளங்குமரன் தான் இன்னானென்று தெரிவித்துக் கொள்ளாமலே தான் காதலித்துள்ள பெண்ணின் பிதாவை இரண்டு நாள் பார்த்து அவனுடைய விச்வாஸத்தை ஸம்பாதித்துக் கொண்டான். தான் தீனநகரத்திலுள்ள ஒரு ஸர்தாரின் குமாரனென்று ராஜகுமாரன் சொல்லவும் அந்த க்ராமத்தார் அனைவரும் அவனுக்கு மர்யாதை செய்து அவனை விருந்துக்கு அழைத்து உபசாரம் பண்ணினார்கள். ஒரு மாஸத்திற்குள் தன் காதலியின் குடும்பத்தாரோடு நன்றாய்ப் பழகிவிட்டபடியால் அவன் சில ஸமயங்களில் அவளை நேரிற்கண்டு பேசித் தன் காதலை வெளியிட்டான்.

அந்தப் பெண் அரசிளங்குமரனை விவாஹம் செய்துகொள்ள ஸம்மதித்து விட்டபடியால் சீக்ரத்திலேயே விவாஹம் நடந்தேறியது. ராஜகுமாரன் தன் மனைவிக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்களைக் கொடுத்து அவளுடைய பந்துக்களுக்கு வேண்டிய வெகுமதிகளைக் கொடுத்தான். அவன் இம்மாதிரி நடந்துகொள்ளவே பந்து மித்ரர்கள் இல்லாமல் விவாஹம் செய்துகொள்பவன் எப்படிப்பட்டவனாயிருப்பானோ என்ற ஸந்தேஹமும் பறந்தோடிவிட்டது.

விவாஹமானவுடன் ராஜகுமாரன் மதுபானம் முதலிய துர்வழக்கங்களை விட்டொழித்தான். அவன் எல்லாரோடும் மர்யாதையாகவும் சாந்தமாகவும் பேச ஆரம்பித்தான்; தன்னெதிரில் யாரும் முரட்டுத்தனமாகவாவது பரிஹாஸமாகவாவது பேசக்கூடாதென்று கண்டித்துவந்தான். இளவரசன் எப்படி இம்மாதிரி மாறிவிட்டான் என்பது அவனோடு இருந்தவர்களுக்குத் தெரியவில்லை.

ஒன்றரை வர்ஷகாலம் இளவரசனும் அவன் மனைவியும் ஸ்வர்க்கலோக வாஸிகளைப்போல் இன்பமாய்க் காலங்கழித்து வந்தார்கள். அப்

படி இருக்கையில் அவர்களுடைய ஸந்தோஷ வாழ்வுக்கு ஓர் இடையூறு நேரிட்டது. ஒரு நாட்காலையில் ராஜகுமாரன் தன் இருப்பிடத்திலிருந்து மாமனார் வீட்டுக்குப் போகத் தயாராயிருந்தபொழுது லாஹூரிலிருந்து வந்த ஸேவகனொருவன் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அரசர் தன் குமாரனை உடனே புறப்பட்டு வரும்படி அதில் எழுதியிருந்தார்.

ராஜகுமாரன் மிகவும் மனவருத்தமடைந்து தன் மனைவியிடம் விடைபெற்று வருமாறு அவளிடம் சென்றான். அவன் தகப்பனாருடைய கட்டளையை அவளுக்குத் தெரிவித்துத் தான் வெகுகாலம் அவளை விட்டுப் பிரிந்திருக்கமாட்டானென்று சொல்லி அவளைத் தேற்றினான். அவளிடம் விடைபெற்றுக் கொண்டான்.

அவன் ராஜகுமாரனென்பது அவனுடைய மனைவிக்கு மாத்ரந் தெரியும். அவ்வூரிலுள்ளவர்களெல்லாம் அவனை ஒரு ஸர்தாரென்று எண்ணியிருந்தபடியால் அவன் திடீரென்று லாஹூருக்கு ப்ரயாணமானது அவர்களுக்கு ஆச்சர்யத்தை உண்டுபண்ணவில்லை. ராஜகுமாரன் அவ்விடம் விட்டுப் போனபொழுது அங்குள்ளவர்களுக்கெல்லாம் விலையுயர்ந்த பொருள்களை வெகுமதிகளாக அளித்துச் சென்றான்.

மறுநாட்காலையில் ராஜகுமாரன் படாலாவைவிட்டு லாஹூருக்கு ப்ரயாணமானான். குமாரனுடைய வரவை எதிர்பார்த்திருந்த ரஞ்ஜிட்ஸிங்க் அம்ருத்ஸார் என்னுமிடத்தில் வந்து தங்கியிருந்தார். அங்கே மந்த்ரிகளும் சிற்றரசர்களும் ராஜாங்க உத்தியோகஸ்தர்களும் அவனைச் சூழ்ந்திருந்தார்கள். இந்தியாவின் ராஜ ப்ரதிநிதியை ஸந்திப்பதற்காகவே ரஞ்ஜிட்ஸிங்க் ரோபார் என்னுமிடத்திற்கு அப்பொழுது ப்ரயாணப்பட்டிருந்தான்.

தன் குமாரனுடைய குணங்களும் நடவடிக்கையும் முற்றும் மாறியிருந்ததைப்பற்றி அரசன் ஆச்சர்யமடைந்தான். ராஜகுமாரன் தன் பழைய ஸ்நேஹர்களை வெறுத்து அறிவிலும் ஸாமர்த்யத்திலும் கீர்த்தியிலுஞ் சிறந்த வித்வான்களோடு பழகலானான்.

தன் குமாரன் நல்லவழியில் நடப்பதைப் பார்த்த அரசர் அவனை அதிகமாக நேசிக்கத் தொடங்கினார். ராஜா தம் புத்ரனை ராஜாங்க கார்யமாக ஒருமுறை காபூலுக்கும் இன்னொரு முறை ஹஸாராஜாட், மூல்டான் என்னும் மாகாணங்களுக்கும் அனுப்பினார். இரண்டு வர்ஷங்களானபிறகு தான், ராஜகுமாரன் படாலாவுக்குத் திரும்பிவர முடிந்தது. அவன் வந்தபொழுது அரசனும் அரண்மனையிலுள்ள மற்றெல்லோரும் அங்கு வந்து தங்கினார்கள். கொஞ்சகாலமானதும் அரசன் முதலிய யாவரும் கோடைகாலத்தை ஸௌக்யமாகக் கழிப்பதற்காக தீனநகர்க்குப் போகவேண்டுமென்று எண்ணினார்கள்.

தன் மனைவியை ரஹஸ்யமாய்க் கண்டுபேச எப்பொழுது ஸமயம் வாய்க்குமென்று எதிர்பார்த்திருந்த ராஜகுமாரன் தீனநகர்க்குப் போகும் செய்தியைக்கேட்டு ஸந்தோஷமடைந்தான். ஆனால் இரவிலாவது பகலிலாவது அவன் எங்கும் போகாதபடி அரசன் அவனைத் தன்னிடமே வைத்துக்கொண்டிருந்தார். ராஜாவின் மெய்காப்பாளர்களுக்கு ராஜகுமாரனே தலைவனாக நியமிக்கப்பட்டான்.

படாலாவிலிருந்து தீனநகர்க்குச் செல்லும் போது உண்டான கலவரத்தில்கூட ராஜகுமாரனுக்குத் தன் மனைவியைப்போய்ப்பார்க்க ஸந்தர்ப்பம் ஏற்படவில்லை. அவன் இரவும் பகலும் தன் தகப்பனாரைவிட்டுப் பிரியாமல் இருக்கவேண்டியிருந்தது. அவன் தன் மனதிற்கினிய மனைவிக்குத் தாழ்வு செய்யக்கூடாதென்று எண்ணியிருந்தானென்றாலும் தன் விவாஹத்தை வெளிப்படுத்த பயந்திருந்தான்.



ராஜகுமாரனுக்கு பால்ய பர்வத்திலேயே இரண்டு விவாஹங்கள் நடந்திருந்தன. அவனுக்கு இன்னொரு விவாஹமும் செய்யவேண்டுமென்று ராஜா ஆலோசித்துக் கொண்டிருந்தார். தன் மனைவியை இம்மாதிரி நிலைமையில் வைத்திருக்க வேண்டியிருக்கிறதே என்று ராஜகுமாரன் அல்லும் பகலும் வருத்தமடைந்து வந்தான்.

ரஞ்ஜித் ஸிங்கின் பல மனைவிகளுள் ஜிண்டான் என்னும் மஹாராணி அதிக செல்வாக்குள்ளவளாயிருந்தாள். அவள் கௌர்-ஷேர் ஸிங்குக்கு மாற்றாந்தாயாகவேண்டும். அவள் அரண்மனையில் தான் வளர்த்துவந்த பெண் ஒருத்தியைராஜகுமாரனுக்கு மணஞ்செய்விக்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தான். அந்தப் பெண் ஜிண்டானுக்கு பாத்யமுள்ளவள். ராஜகுமாரன் எப்பொழுதாவது தன்னிடம் வரும்பொழுது, அவள் தன் வசத்திலிருக்கும் பெண்ணை ஆடையாபரணாதிகளால் அலங்கரித்து அவன் முன்னே வரச்செய்து, ஷேர் ஸிங்கின் மனத்தைக் கவரும்படி செய்வாள். ஆனால் அரசிளங்குமரன் அவளை லக்ஷ்யஞ் செய்வதே கிடையாது. அவளைக் கண்டவுடன் அவன் தலைகுனிந்திருப்பான். இரண்டொரு தடவைகளில் அவனுக்குத் தன் மனதிற்கேற்ற பெண்ணை விவாகஞ்செய்விக்க வேண்டுமென்று ராணி சொல்லியும் அவன் மறுத்துவிட்டான்.

ராணி வேவுகாரர்கள் மூலமாய் ராஜகுமாரனுடைய ரஹஸ்யத்தை அறிந்துகொண்டாள். ஆனால் அவனுடைய மனைவிக்குக் கெடுதி செய்ய அவள் துணியவில்லை. ராஜா தன் வசப்பட்டிருந்தபடியால் ராஜகுமாரனுக்கு ஒழிவு ஏற்படும் ஸமயங்களிலெல்லலாம் அவனுக்கு ஏதாவது வேலைவைக்கும்படி அரசனிடந் தெரிவித்தாள். அரசகுமாரனும் அவன் காதலியும் ஸந்திக்காதபடி செய்துவந்தாள். இம்மாதிரி ஒரு வர்ஷ காலஞ் சென்றது.

ராஜகுமாரனுடைய மனைவி கணவனைக் காணாமல் கண்ணீர்விட்டுக் கலங்கித் துரும்பு போல் இளைத்துப்போனாள். கடைசியாக எப்படியாவது தன் புருஷனைப் பார்க்கவேண்டுமென்னும் அவா அவளுடைய மனத்தில் ஜனித்துவிட்டது. அவள் தன் பிதாவை நமஸ்கரித்துத் தன் கணவன் இன்னானென்பதைத் தெரிவித்துத் தான் அவரைப் பார்க்கப்போகவேண்டுமென்று சொன்னாள். எவ்வளவு தடுத்துச் சொல்லியும் அவள் கேளாமையால், தகப்பனும் மகளும் கூலிக்காரர்களைப்போல வேஷந்தரித்துக்கொண்டு தீனநகர்க்கு வந்து சேர்ந்தார்கள்.

ராஜகுமாரனின் மனைவி அரண்மனையில் வேலைசெய்யச் செல்பவள்போல் உள்ளே சென்றாள். அவளுடைய தகப்பன் அவளுக்காக வெளியில் காத்துக்கொண்டிருந்தான். அவன் கூலிவேலையை எதிர்பார்ப்பவன்போல நடித்து அங்கிருந்த சிப்பாய்களோடு கூடியிருந்தான். உள்ளே சென்றவள் ராஜகுமாரன் நந்தவனத்திலிருக்கிறானென்பதை விசாரித்தறிந்துகொண்டு அவனிடம் விரைந்துபோய் அவன் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தாள். பிரிந்திருந்த புருஷனும் பெண்ஜாதியும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு வார்த்தையற்றிருந்தார்கள்.

தான் மௌட்டீகமாகவும் துணிவாகவும் நடந்துகொண்டதற்காகத் தன்னை மன்னிக்கும்படி அவள் தன் கணவனை வேண்டிக்கொண்டாள். ராஜகுமாரன் தன் மனைவியை எழுப்பி யாதும் பேசாமல் அவளைத் தன் தகப்பனார் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான். அரசனையும் அரசியையுங் கண்டவுடன் ராஜகுமாரனும் அவன் மனைவியும் அவர்களடிபணிந்து நமஸ்கரித்தார்கள். உடனே ராஜகுமாரன் தன் தகப்பனாரிடம் உண்மையை வெளியிட்டான். ராஜா மிகவும் ஸந்தோஷமடைந்து கிழிந்த ஆடையை உடுத்திக்கொண்டு கூலிக்

காரிபோலிருந்த தன் மருமகனை எடுத்து மடிமேல் வைத்துக்கொண்டார். ராஜா தன் மருமகளுக்குத் தனியான விடுதி கொடுக்கும்படி கட்டளையிட்டுவிட்டு வெளியிலிருந்த அவள் தகப்பனை அழைப்பித்து அவனுக்கு மர்யாதை செய்து பெரிய உத்யோகமுங் கொடுத்தார். ராஜகுமாரனுடைய மனைவியின் புத்தியையும் அழகையுங் கண்ட அந்தப்புரத்திலுள்ளோர் யாவரும் அவளை நேசித்துவந்தார்கள். ஜின்டான் மஹாராணிமாத்ரம் அவளைவெறுத்தாள். அவள் தன் மருமகளைப் பலவிதங்களிலும் ஹிம்ஸித்து வந்தாள்.

மழைகாலம் நெருங்கியதும் ராஜாவின் தர்ப்பார் லாஹூருக்கு வந்துவிட்டது. ராணியிடம் இளவரசி படும் துன்பமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. தனக்குப் பேரன் பிறக்கவேண்டுமென்ற ஆசையுடன் அரசன் வேண்டிய தானதர்மங்கள் செய்துவந்தார். இளவரசி அதன்பிறகு கர்ப்பவதியானாள்.

வஸந்த உத்ஸவத்தன்று காலையில் இளவரசி ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள். அதைக் கேள்வியுற்ற அரசனது ஆனந்தத்திற்கு அளவே கிடையாது. அப்பொழுது அவன் அநேகருக்கு பல வெகுமதிகளைக்கொடுத்தான்.

ப்ரஸவித்தானவுடன் இளவரசி குழந்தையை எடுத்துக்கொண்டு ராணியிடஞ் சென்று அவளிருந்த இடத்தில் விரித்திருந்த ரத்நக்கம்பளத்தின்மேல் அதை விட்டுவிட்டுத் தன் மாமியாரைப் பார்த்து "அம்மா, நான் என்ன குற்றம் செய்திருந்தபோதிலும் உங்கள் பேரன் நிமித்தமாக என்னை மன்னிக்கவேண்டும். இதை உங்கள் வசத்தில் ஒப்புவிக்கிறேன்" என்றாள். ராணி மிகவுங் கோபங்கொண்டு குழந்தையின் காலைப்பிடித்துத் தூக்கி அதை பக்கத்திலிருந்த அகழியில் எறிந்துவிட்டாள். இளவரசி பித்தம்பிடித்தவள்போல் தலைவிரிகோலமாய் அரசன் முன்னிலையில்வந்து "தந்தையே, என் குழந்தை எங்கே? அவர்கள் கொன்றுவிட்டார்கள். இந்த ராஜ்யம் அழிய வேண்டுமென்று கடவுள் சபிக்குமாறு அவர்கள் இந்தமாதிரி செய்து விட்டார்கள்" என்று சொல்லிவிட்டுக் கீழே விழுந்து இறந்தாள். ரஞ்ஜிட் ஸிங்கின் ராஜ்யம் பிற்பாடு அழிந்து போனதற்கு இந்த சாபமே காரணமாகும்.

## INFANTILE PARALYSIS.

## இளம்பிள்ளை வாதம்.

இந்த வ்யாதி தொற்றுவ்யாதி. ஸுலபமாய் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் பரவக்கூடியது. அதிநுட்பமானதும் வெகுசக்தியுள்ள பூதக்கண்ணாடியால் மாத்ரம் பார்க்கக்கூடியதுமான சில க்ருமிகள் மனுஷதேகத்தில் நரம்புக்கு மூலஸ்தானங்களான மூளை, முதுகு, எலும்பு இவைகளைத்தாக்குவதால் இந்தவ்யாதி உண்டாகிறது.

இந்த வ்யாதிக்ரஸ்தர்களின் குடல்களிலும், மூக்கு, தொண்டை இவைகளின் உள் தோலிலும், நரம்பு மூலஸ்தானங்களிலும், இந்த க்ருமிகள் ஸதா இருக்கின்றன. மற்ற உள் அவயவங்களில் அவ்வளவாக காணப்படவில்லை. ரத்தோட்டங்களில் காணப்படவில்லை. பூதக்கண்ணாடியாலல்லது இந்த க்ருமிகளிருப்பதைக் கண்டுபிடிப்பது அஸாத்யம். மனுஷர்களுக்குண்டாகும் பக்ஷவாதம் போன்ற ஒரு வ்யாதியினால் பிடிக்கப்படக்கூடிய குரங்குகளின்மேல் செய்யக்கூடிய இனகுலேஷன் பரீட்சைகளால், க்ருமிகளைக் காணலாம். கடும்பக்ஷவாதத்தினால் லவஸ்தைப் படுகிறவர்களோடு சேர்ந்திருக்கும் தேக ஆரோக்யமுள்ளவர்களின் மூக்கு தொண்டை இவைகளின் உள் தோலானது க்ருமி ஸம்பந்தத்தினால் பிடிக்கப்பட்டு, அவர்கள் தாங்கள் பக்ஷவாதத்துக் குட்படாமல்போனாலும், அன்யர்களுக்கு, முக்யமாய் குழந்தைகளுக்கு, ஷை வ்யாதி ஸம்பந்தத்தை உண்டாக்கக் கூடும்.

வ்யாதியைப் பரவச்செய்கிற க்ருமிகள் வேறு தேகங்களில் புகுந்து வ்ருத்தியடைந்து பல வ்யாதிகளை உண்டாக்கும்படியான விதமாய் வ்யாதிக்ரஸ்தர் தேகங்களிலிருந்து வெளியே வருகின்றன. அவைகள் மூக்குச்சளி, உமிழ்நீர், மலம் இவைகளின் வழியாக வெளி வருகின்றன.

புது தேகங்களுக்குள் புகும்பொழுதும் மூக்கு, தொண்டை இவைகளின் உள்தோல் வழியாய்ச் செல்லுகின்றன. அப்படிச்சென்று வ்ருத்தியடைந்து, மேல் மூக்கு உள்தோலையும் மண்டையின் உட்புறத்தையும் சேர்க்கின்ற "லிம்பாடிக்" என்னும் குழாய்களின் வழியாய் நரம்புஸ்தானங்களுக்குள் செல்லுகின்றன.

மற்றப்ராணிகளைவிட மனுஷர்கள் மூலமாய் இந்த வ்யாதி ஜாஸ்தியாய்ப் பரவுகிறது.

எவ்விதமான இளம்பிள்ளை வாதத்திலும் நரம்பு ஸ்தானங்களிலும் மூக்குத் தொண்டை இவைகளின் உள் தோலிலும க்ருமிகள் இருக்கின்றன. இருமல், தும்மல், முத்தமிடுதல் இவைகளினால் க்ருமிகள் வெளிவந்து பரவுகின்றன. த்ரவ ஸம்பந்தத்தினால் சீக்ரம காயாமல் தூசிகளோடுசேர்ந்து நெடுக வ்யாபித்து தொற்று வ்யாதி உண்டாக்குகிறது. ரத்தத்தை குடிக்கும் மூட்டைப்பூச்சி, ஈ, கொசு முதலிய பூச்சிகள், கோழி, பன்றி, நாய், பூனை முதலிய ப்ராணிகள் ஆகிய இவைகள் இந்த வ்யாதியை க்ரஹித்து பரவச் செய்கிறதாக சிலர் ஸந்தேகிக்கிறார்கள்.

இளம்பிள்ளை வாதக்ருமிகள் தரைவழியாயும் ஜலம் வழியாயும் ப்ரயாணஞ் செய்யும் மனுஷர்கள் மூலமாக இடம்விட்டு இடஞ் சென்று வ்யாதியைப் பரவச்செய்கின்றன.

இளம்பிள்ளை வாதத்தில் அனேக தினுஸுகளுண்டு. எல்லாம் ஒரே மாதிரி கடுமையானவையல்ல. வ்யாதியால் பீடிக்கப்படுகிறவர்கள், இறப்பவர்கள் இவர்களின் ஸங்க்யைகளிலும் வித்யாஸமுண்டு.

இதில் முக்யமாய் கவனிக்கவேண்டியது க்ருமிகளின் வீர்யம். ஏற்கனவே சொல்லியபடி இந்த க்ருமிகளுக்கு மனுஷ தேகங்களிலிருந்து குரங்குகளில் பரவுகிற சக்தி அதிகமாயில்லை. ஆனால் ஒரு குரங்கிலிருந்து மற்றொரு குரங்குக்குச் செல்வதினால் அதிக வீரியத்தை க்ருமிகள் அடைகின்றன.

எல்லாக்குழந்தைகளுக்கும் வயது வந்த ஆண் பிள்ளைகளுக்கும் இந்த வ்யாதி வருவதில்லை. பெரிய குழந்தைகளைவிட சின்ன குழந்தைகளுக்கு பொதுவாய் வருகிறது. ஆனால் எந்த வயதிலும் இந்த வ்யாதி வருகிறதில்லையென்று சொல்லமுடியாது. மற்ற தொற்று வ்யாதிகளைப்போல இளம்பிள்ளைவாதமும் வ்யாதிக்குக் காரணமான க்ருமிகள் தேகத்தில் புகுந்த உடனேயே வெளிப்படையாக உண்டாகிறதல்ல. வ்யாதி க்ருமி தேகத்தில்பற்றி, வ்ருத்தியடைந்தபிறகுதான் வெளிப்படுகிறது. இந்த காலமானது இரண்டு தினம் முதல் இரண்டுவாரம்வரையில் இருக்கக்கூடும். ஆனால் ஸாதாரணமாய் எட்டு நாளுக்குமேவிராது. தீர்க்கரோக கேஸ்களில்லாமல் மற்ற ஸாதாரண கேஸ்களில் க்ருமிகள் நாலு ஐந்து வாரங்களுக்கு மேல்பட்டு சரீரத்தில் தங்குகிறதில்லை.

மற்ற தொற்றுவ்யாதிகளைப்போல் இளம்பிள்ளை வாதமும ஒரு தடவைக்குமேல் ஒரு சரீரத்தைத் தாக்குவதில்லை.

ஸாதாரணமான மனுஷ தேகங்களிலும் குரங்குசரீரங்களிலுமுள்ள ரத்தமானது இளம்பிள்ளை வாத க்ருமியின் சக்தியைக் குறைக்க வலிமையற்றிருக்கிறது. ஆனால் ஒருதரம் வ்யாதி வந்து ஸ்வஸ்தமடைந்த மனுஷ்ய, குரங்கு தேகங்களிலோ க்ருமிகளின் வலிமையைக் குறைக்கும்படியான மாற்றுப்பதார்த்தங்கள் (immunity bodies) உண்டாகி ரத்தத்தோடு கலந்திருப்பதால் அவைகள் மறுபடியும் அந்த வ்யாதியினால் பீடிக்கப்படுகிறதில்லை.

வ்யாதியாலடிப்பட்டு மீண்ட குரங்குகளின் தேகத்திலிருந்து ரத்தத்தையெடுத்து இதர தேகங்களில் ஸம்பந்தப்படுத்தினால் அவைகளுக்கு இந்த வ்யாதி கொஞ்சகாலம் வரையில் வருகிறதில்லை.

இனாகுலேட்செய்யப்பட்ட அல்லது வ்யாதியிலிருந்த பிழைத்த குரங்கு அல்லது மனுஷ தேகங்களிலிருந்து ரத்த ஊன் தண்ணீர் (blood serum) எடுத்து மற்ற தேகங்களின் முதுகெலும்பு, மூளை இவைகளுக்குள் அனேகந்தடவை செலுத்தினால் அந்த தேகங்களில் இந்த வ்யாதி பரவுகிறதில்லை.

முக்யமாய் வ்யாதிக்ரஸ்தர்களையும் அவர்களோடு, கலக்குகிறவர்களையும் தனிப்படுத்தி வைப்பதினாலும், அவர்கள் வ்யாதி பரவாமலிருக்கும்படியான ஸுகாதார விதிகளை அனுஷ்டிப்பதாலும் வ்யாதியை பரவாமலிருக்கும்படி செய்யலாம். அனேகமாய் பிழைக்கிற கேஸ்கள் ஜாஸ்தி-ஸ்வல்ப கேஸ்கள் தான் அதாவது 100-க்கு 10 அபாயமாய் முடியலாம். மதியினால் விதியையும் விலக்கலாம் என்ற பழமொழிபோல் புத்திசாலித்தனமாய் வீடுகளையும், வீட்டைச்சுற்றியுள்ள தோட்டங்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதாலும், சுத்தத் தண்ணீர், காற்று, ஆகாரம் இவைகளை உட்கொள்வதாலும், இந்த வ்யாதியின் ப்ரவர்த்தியை நிவ்ருத்தி செய்யலாம்.

# FOREST TREES.

BY. S. R. ATMANADHA AIYAR.

## காட்டு மரங்கள்.

(சென்ற மாஸத்து 'ஜனாபிமானி'யில் 106-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தியாவின் வடமேற்கு பாகம், கங்காநதியை யொட்டின பள்ளத்தாக்கு இவைகள் தவிர மற்ற ப்ரதேசங்களில் மரங்கள் விசேஷமாய் வளர்கின்றன. இமயமலையின் அடிவாரத்திலும், ஸுந்தரவனங்கள் என்று பெயருள்ள கங்காநதியின் முகத்வாரத்திலும் காடுகள் உண்டு. அப்பர் பர்மாவில் (Upper Burma) ஏறக்குறைய கால்பாகமும், மத்ய மாகாணங்களும் சென்னை ராஜதானியில் ஸுமார் ஆறிலொருபாகமும் காடடர்ந்த பூமி. இந்தியாவின் கிழக்குக்கரை, மேற்குக்கரை இந்த ப்ரதேசங்களும், பர்மாதேசத்தில் கடற்கரையையடுத்த பாகமும் உஷ்ணமும் மழையுமுள்ள தாழ்ந்த பூமிகள். ஆகவே இங்கே மூங்கில், மா, பனை, தென்னை, பாக்கு, சந்தனம் முதலிய மரங்களுண்டாகின்றன. முக்யமான தேக்குமரத்தைக் குறித்து இதுவரையிலேயே விவரித்திருக்கிறோம். ஹிமாலய பர்வதத்தில் தேவதாரு, விடார் முதலிய மரங்கள் உண்டு. இவைகளன்றி நம்முடைய தேசத்தில், மா, புளி, ஆல், அரசு, கருவை, வேம்பு, கருங்காலி, ரோஜாமரம், கருப்புமரம் இவைபோன்ற பலவித மரங்களுண்டாகின்றன.

மரங்கள் நமக்குமுன்னே கூறியமாதிரி பலவித வேலைகளுக்கும், அநேக தட்டுமுட்டு ஸாமான்களுக்கும் உபயோகமாகிறதும் தவிர



அடுப்புக்கு விறகாகவும் உதவுகிறது. தற்காலத்தில் பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்டு அடுப்புகளுக்கும் ரெயில் என்ஜின்களுக்கும் ஸ்டீமர்களுக்கும் உபயோகமாகிற நிலக்கரி பூர்வகாலத்தில் பூமியின்கீழே ஆழத்தில் மறைந்துபோன காட்டுமரங்கள் என்று நமக்குத் தெரியுமல்லவா? மரங்கள் நமக்கு பலவிதமான பழவர்க்கங்களையும் காய்களையும் சர்க்கரையையும் கொடுக்கின்றன. காகிதம் செய்வதற்கும் பதனிடுவதற்கும் வேண்டிய பல சாமான்கள், மர எண்ணெய், கீல், ரப்பர், பட்டை, பிசின், வாஸனை ஸாமான், நார் இவற்றையும் நமக்கு மரங்கள் அபரிமிதமாயளிக்கின்றன. அவைகள் நாம் மூச்சுவிடும் கெட்ட காற்றை நீக்கி ப்ராணவாயுவை வெளியிடுகின்றன. பெருங்காற்று சுழல்காற்று இவைகளின் வேகத்தைத் தடுத்து அவைகளால் நேரிடும் நாசத்தைச் சற்று குறைக்கவும் மரங்கள் உபயோகமாகின்றன. மரங்களின் நிழல் காற்றின் உஷ்ணத்தைச் சற்று நிவர்த்தி செய்வதாலும், காட்டுபூமியின் ஈரம் மெதுவாக உலர்ந்துகொண்டே வருவதாலும் சுற்றிலுமுள்ள தேசத்தை அவை குளிரச்செய்கின்றன. மரங்களிலிருந்து உதிரும் இலைகள் மண்ணுடன் கலந்து மட்கிப்போவதால் காடுகள் உள்ள நிலம் மிகச் செழிப்புவாய்ந்ததாகிறது. மேலும் பூமி நெடுக இலைகளால் மூடப்படுவதால் அந்த பாகத்தின் ஈரம் சீக்ரத்தில் உலர்ந்துபோகாமலிருக்கும். இன்னும் இலைகளும், மண்ணும் மழையைத் தாங்கி தரித்துக்கொள்ளுவதால் அது வெள்ளமாக மாறி வேகமாயோடி ஸமுத்ரத்தில் விழுந்து பாழாவதையும் காடுகள் தடுக்கின்றன. பிறகு கோடைகாலத்தில் வனங்களிலிருந்து தண்ணீரானது கொஞ்சம் கொஞ்சமாக நதிகளின் வழியே வெளிவந்து நன்மையைத் தருகிறது. மழையை உண்டுபண்ணும் விஷயத்திலுங்கூட காடுகள் ஸகாயமாகின்றன.

இவ்வாறு பலவிதங்களில் நமக்கு உதவுகின்ற காடுகள் அழிந்துபோகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அவச்யமல்லவா? காடுகள் அழிந்துபோனால் வெள்ளப்பெருக்காலும் காற்றாலும் மழையாலும் தேசத்திற்கும் பொருள்களுக்கும் நஷ்டமுண்டாவதுந் தவிர ப்ராணிகளுக்கு எவ்வளவோ சேதமுண்டாகிறது. ஸமீபத்தில் ப்ரவாகத்தாலும் காற்றாலும் தென்னாற்காடு, கர்நூல், குண்டூர் முதலிய ஜில்லாக்களில் ஆடு மாடு முதலிய கால்நடைகளும் ஆயிரத்துக்கதிகமான ஜனங்களும் சேதமானதாகத் தெரியவருகிறது: ஆகவே நமக்கு பலவிதங்களில் உபகாரம் செய்கிறகாடுகளை நாம் அசட்டை செய்யலாகாது. இவைகளையெல்லாம் உத்தேசித்தே நம்முடைய துரைத்தனத்தார் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் - (காடுகளை பரிபாலிக்கும் இலாகா)-என்று ஒரு இலாகா ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இலாகாவால் நம்முடைய தேசத்துக்காடுகள் மூன்று வகைகளாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன :—

முதலாவது ரிஸர்வெட் காடுகள்; என்றால் இந்த ப்ரதேசங்கள் மரம் விறகு மற்றுமுள்ள மகஸூல் இவைகளுக்காகவும் அல்லது தண்ணீர் பாய்ச்சல் முதலிய முக்யகாரணங்களைக் கருதியும் ஸ்திரமாக ப்ரயோஜனமாகக் கூடியவை என்று ஒதுக்கி வைத்தவைகள். இரண்டாவது பாதுகாக்கப் பட்டுவரும் காடுகள். இவைகளுக்குள் சில காடுகள் முதல் வகுப்பில் சேர்ந்த ரிஸர்வெட் காடுகளுடன் பிந்தி சேர்ப்பதற்கென்று உத்தேசித்தவைகளாகும். ஆனதுபற்றி இத்தகைய காடுகளின் எல்லைக்குள் மாங்களுக்குக் கெடுதியான சில காரியங்கள் செய்யலாகாதென்று கவர்ன்மெண்டார் சட்டதிட்டம் செய்திருக்கிறார்கள். சிலகாலஞ் சென்றபிறகு முதல் வகுப்புக் காடுகளுடன் சேர்ப்பதற்கு தகுதி

யல்லவென்று தெரிந்தால் அக்காடுகளை சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஜனங்களின் உபயோகத்துக்காகவும் பொது நன்மைக்காகவும் விட்டுவிடுகிறார்கள். மூன்றாவது வகைக்காடுகள் அதிக நிபந்தனைகளில்லாமலே பொது நலத்தைக் கருதி ஏற்பட்டவைகளாகும்.

முன்காலத்தில் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டியவளவு காடுகளிலிருந்து மரம், விறகு முதலியவைகளை மேற்பார்வையில்லாமலும் அவைகளுக்கு க்ரயம்கூடச் செலுத்தாமலும் எடுத்துச்சென்று கொண்டிருந்தார்கள். ஜனத்தொகையின் வ்ருத்தியாலும், ஏற்கனவே நாம் சொன்னபடி வெள்ளப் பாழுண்டாவதாலும், காடுகள் சீக்ரமே யழிந்துபோவதாலும், காடுகளின் பரிபாலனத்திற்காக ஸர்க்காரில் சில சட்டங்கள் செய்திருக்கிறார்கள். இந்த உத்தேசங்களை நன்கறியாத சிலருக்கு பூர்வத்தில் தங்களுக்கிருந்த ஸௌகர்யங்கள்போய் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் சிறிது கஷ்டமாயிருக்கக்கூடும். முதலாவது ஆடுமாடுகளை மேய்ப்பதற்குப்போதுமான புல்தரையில்லாமல் ஸர்க்கார் காடுகளில் ஹத்து மீறி தெரிந்தோ தெரியாமலோ ப்ரவேசித்து மேய்ப்பதனால் தண்டனைக்குட்படுவது; இரண்டாவது வயல்களுக்கு எருவித்தம் தழை முதலியன கொண்டுபோக முடியாதிருத்தல், ஆகிய இவ்விரண்டுவித கஷ்டங்களையும் தற்காலத்தில் துரைத்தனத்தார் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நீக்கியிருக்கிறார்கள். வெள்ளத்தாலும் திடீரென்று தீ முதலியவைகளாலும் வீடு வாசல்களையிழந்த ஜனங்களுக்கு ஸர்க்காரில் காடுகளிலிருந்து மரம் மூங்கில் இவைகளைக் கொடுத்துதவுகிறார்கள்.

காடுகளைப் பரிபாலிக்கும் இலாகாவின் முக்ய உத்தேசங்களாவன. (1) காட்டுத்தீ பரவாமல் தடுத்தல். காட்டில் மரங்கள் ஒன்றின்மேலொன்று உறைவதாலும், கோடைகாலத்தில் உண்டாகும் மின்னல்களாலும் எளிதில் நெருப்புப் பற்றக்கூடிய சிலமரங்கள் தீமூண்டு வெகுதூரம் பரவி மரங்களை நாசஞ்செய்வதுண்டு. சில வேளைகளில் ஜனங்கள் காட்டிற்குச் சமீபமுள்ள நிலங்களை உழுது பயிரிடவேண்டி புல்தரைக்கு நெருப்புவைத்தால் அது காற்றடித்து காட்டிற்குப்பரவி நாசம் விளைவிக்கும். இவைகளை நிவர்த்திசெய்தல். (2) மரங்களுக்கு சத்ருவான பூச்சி புழு முதலியவற்றை நாசஞ்செய்தல். சில செடிகொடி புல் பூண்டு இவைகளால் வ்ருக்ஷங்களுக்கு உண்டாகும் நாசத்தையறிந்து அவைகளை விலக்குதல். (3) குடிகளுடைய ஆடுமாடுகளை குறிப்பிட்ட சில காலத்திற்குள் காட்டில் மேயவிடுதல். நிலங்களுக்கு எருவித்தம் வேண்டியதழைகளை சில நிபந்தனைகளுக்குட்பட்டு வ்யவஸாயிகளை எடுத்துக்கொண்டு போகவிடுவது. (4) வெட்டின மரங்களுக்கு பதிலாக அதேவகைச் செடிகளையாவது வேறு செடிகளையாவது வைத்துவளர்த்தல் (5) காட்டிலுண்டாகும் மாஸூலை விற்று விலையாக்குவது. இம்மாதிரி விற்பனைசெய்வதால் இந்தியா துரைத்தனத்தாருக்கு வருஷம் ஒன்றுக்கு சுமார் மூன்றுகோடி ரூபாய் வரும்படி வருகிறதாம்.

இந்த இலாகாவில் உத்யோகத்திலிருப்பவர்களுக்கும் உத்யோகஞ்செய்ய விரும்புகிறவர்களுக்கும் வேலை செம்மையாய்க் கற்பிப்பதன் பொருட்டு வடக்கே டேராடுன் என்னும் பட்டணத்திலும், நமது ராஜதானியில் கோயம்புத்தூரிலும் துரைத்தனத்தார் காலேஜுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கோயம்புத்தூர் காலேஜில் தற்காலத்தில் ஸுமார் அறுபது மாணவர்கள் படிக்கிறார்கள். ஏறக்குறைய 170 ஏகரா விஸ்தீர்ணமுள்ள விசாலமான பூமி இந்தக் கலாசாலையின் உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கிறது. இதில் புஸ்தகசாலை, பொருட்காட்சிசாலை, விதம்விதமான செடிகளைவைத்து வளர்த்தல் இவைகளுக்கெல்லாம் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

எஸ். ஆர். ஆத்மநாதய்யர்.



## SHALL I BE MARRIED?

## எனக்குக் கல்யாணமாகுமா?

ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களில் ஜனங்கள் மூடநம்பிக்கை கொண்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கல்யாணங்கள் விஷயமாய்க் குறி கேட்பது விசித்ரமாயிருக்கும். அவைகளுள் சிலவற்றை விவரிக்கிறோம்.

ஐரோப்பாவில் ரூமேனியா என்று ஒரு தேசம் இருக்கிறது. அந்த தேசத்தில் வஸிப்பவர்களெல்லாம் கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது குருமார்களில் ஒருவராகிய 'ஆண்டிரூ' அவர்களது வருஷாந்தக் கொண்டாட்டமும், 'கிருஸ்ட்மஸ்' என்கிற பண்டிகையும், புதுவருஷப்பிறப்புக் கொண்டாட்டமும், எபிபானி என்னும் திருநாளும் ஒவ்வொரு வருஷமும் அங்குள்ள ஜனங்கள் வெகு உல்லாஸமாய்க் கொண்டாடுவது உண்டு.

அப்படிப்பட்ட விசேஷ தினங்களுக்கு முந்தினநாள் ஏறக்குறைய எல்லோரும் தங்களுடைய வருங்கால நிலைமையைப்பற்றி அறிய முயலுவதுண்டு. தனக்குக் கலியாணம் ஆகுமா ஆகாதா என்று தெரிந்துகொள்வதற்கு ஒரு ப்ருமசாரியானவன் பின்வருமாறு செய்வான். ஒரு புரோகிதனிடமிருந்து திருநீற்றுப் பச்சைச் செடியின் கிளை ஒன்றை திருடிக் கொண்டுபோய் ஒரு வீட்டுக்கூரையின்மேல் ராத்ரிமுழுவதும் வைத்திருப்பான். அந்தக் கிளையைச்சுற்றி பனி அடர்த்தியாய் மூடியிருந்தால் அவனுக்குக் கலியாணம் ஆகுமென்று அர்த்தமாம். காதல்கொண்டுள்ள சிறுமிகள் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைப்பானோ, கிடைக்கமாட்டானோ என்று அறிந்துகொள்ள பின்வருமாறு செய்வார்கள். திருநீற்றுப் பச்சைக்கிளை ஒன்றை எடுத்து, தங்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள ஒரு கல்லின் ஸமீபத்தில் வைப்பார்கள். கல்யாணம் ஆகுமென்பது நிச்சயமாக இருக்கும்பக்ஷத்தில் அந்தக் கிளையைச் சுற்றி அடுத்த நாள் காலைக்குள் நன்றாய் மூடி பனி மூடியிருக்கும். அப்படிப் பனி அடர்த்தியாய் மூடியிருப்பதைப் பார்த்துவிட்டு, தங்களுக்கு கல்யாணம் ஆகுமென்ற தைர்யத்துடன் கல்யாணத்திற்குவேண்டிய ஆடை ஆபரணங்களைத் தயார்செய்ய கடைக்காரனுக்கு உத்தரவு கொடுத்து விடுவார்கள். தனது நாயகனோ காதலனோ தன்னிடத்தில் உண்மையான அன்பு வைத்திருக்கிறானோ இல்லையா என்று பார்ப்பதற்கு இப்பண்டிகை ஸமயங்களில் மனைவிமார்களும், கன்னிகைகளும் ஒரு யுக்தி செய்வது உண்டு. பன்றி வாலிலுள்ள இரண்டு மயிர்களை எடுத்து ஒரு அடுப்பின்மேல் ஒன்றாய்ச்சேர்த்து வைப்பார்கள். தங்களது நாயகர் அல்லது காதலர் தங்களிடத்தில் உண்மையான அன்பு வைத்திருந்தால் அம்மயிர்கள் ஒன்றோடொன்றாய்ச்சேர்ந்து சுருட்டிக்கொள்ளுமாம். அன்பு இல்லாமலிருந்தால் அந்த மயிர்கள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து தனித்தனியே சுருட்டிக்கொள்ளுமாம்.

வீட்டிலுள்ள கல்யாணமாகாத பெண்கள் தங்களுள் யாருக்கு முதலில் கல்யாணமாகுமென்பதை யறியப் பின்வருமாறு செய்வார்கள். ஒரு வெங்காயத்தை எடுத்து அதில் ஒரு பள்ளம் செய்து அதில் உப்பை நிரப்பி அதை ஜன்னலில் ராத்ரி முழுவதும் வைத்திருப்பார்கள். மறுநாள் காலையில் எந்த வெங்காயத்தில் ஜலம் அதிகம் சேர்ந்திருக்கிறதோ அந்த வெங்காயம் வைத்தவளுக்கு எல்லாரையும்விட அதிசீக்ரமாக கல்யாணம் ஆகுமாம்.

பெண்களும் வாலிபர்களும் தங்கள் மனதுக்கிசைந்தவர்களை தங்கள்மேல் காதல் கொள்ளச் செய்ய ஒரு நூதனமாதிரியில் பயிர் செய்யப்பட்ட திருநீற்றுப் பச்சைச் செடியின் கிளையை உபயோகிப்பதுண்டு. அந்தச் செடியிலிருந்து

ஒரு கிளையை எடுத்து, தாம் நேசிக்கும் பெண் அல்லது வாலிபனுடைய உடையில் வைத்துவிட்டால், சில நாழிகைக்கெல்லாம் உடைக்குடையவர் வைத்தவர்மேல் காதல் கொள்ளுவார்களாம்.

முதலில், கிறிஸ்தவர்களது குல குருக்களில் ஒருவராகிய ‘ஜார்ஜ்’ என்பவர் ஜன்மதினத்தன்று காலையில், அந்த செடியின் விதையை வாயினால் தோட்டத்திற்கு எடுத்துப் போய் பூமியில் உதட்டினால் பள்ளஞ்செய்து, அதில் போட்டு உதட்டினாலேயே மூடிவிட வேண்டும். பிறகு தினந்தோறும் காலையில் ஸூர்யன் உதயமாகும் ஸமயத்தில் வாயினால் தண்ணீர் எடுத்துப்போய் அச்செடிக்கு ஊற்ற வேண்டும். சரியான காலத்தில் தண்ணீர் வார்க்காமல் சில நிமிஷங்கள் நேரங்கழித்து வார்த்தால் அந்தச்செடி உபயோகப்படாது. மறுவர்ஷம் முன்மாதிரி மறுபடியும் செடியுண்டாக்க வேண்டுமாம்.

ஐரோப்பாவில் வேறு சிலர் கல்யாண விஷயமாய் வருங்கால நிலையை யறிவதற்கு கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலமே ஏற்றதென்று எண்ணியிருக்கிறார்கள். ஜெர்மனியின் தென்மேற்கில் ஸ்வேபியா என்னும் மாகாணத்திலுள்ள கன்னிகைகள் ஒரு சுமை விறகிலிருந்து ஒரு விறகைப் பிடுங்கி, அது இருக்கும் மாதிரியைப் பார்த்து அவர்கள் புருஷர்களின் தொழில் இன்னதென்று அறிந்துகொள்வார்கள். விறகானது மட்டப்பலகை, கத்தரிக்கோல், சக்கிலியர் வைத்திருக்கும் கால்போன்ற உருவம் ஆகிய இவைகளுள் ஒன்றைப்போலிருந்தால், கணவனும், முறையே தச்சன், அம்பட்டன், சக்கிலியன் ஆகிய இவர்களுள் ஒருவனாக இருப்பான் என்று அர்த்தமாம்.

ஐரோப்பாவிலுள்ள ரஷ்யாவில் ‘போலண்டு’ என்ற ஒரு தேசம் இருக்கிறது. அந்த ராஜ்யத்திலுள்ள சில ஜில்லாக்களில் பின்வரும் வழக்கம் நடந்து வருகிறது. தாங்கள் கல்யாணம் செய்துகொள்ளப்போகும் புருஷர்களது நடையுடை பாவனைகளையும், பழக்க, வழக்க, ஒழுக்கங்களையும், குணாதிசயங்களையும் தெரிந்துகொள்ள இஷ்டமுடைய சில கன்னிகைகள் கிருஸ்ட்மஸ் பண்டிகை ஸமயத்தில் மூன்று கோப்பைகள் எடுத்துக்கொண்டு, ஒரு கோப்பையில் த்ராட்சப்பழ சாராயமும், மற்றொரு கோப்பையில் ‘பீர்’ என்ற சாராயமும், மூன்றாவது கோப்பையில் தண்ணீரும் நிரப்பி மேஜையில் வைத்து நடுராத்ரி வரையில் தூங்காமல் காத்திருப்பார்கள். நல்ல நடுராத்திரியில் எவனாவது ஒருவன் அம்மாதர்கள் இருக்குமிடத்தை யணுகி, திராட்சபழ சாராயத்தைக் குடித்தால் நல்லகொழுத்த பணக்காரப் புருஷன் கிடைப்பானாம். ‘பீர்’ எனும் சாராயத்தை அவன் குடித்தால் அவர்களுக்கு ஸாதாரண ஸொத்துள்ள புருஷன் கிடைப்பான். ஆனால் அதிக செலவாளியாயிராமல் அதிக சிக்கனமாயிருப்பானாம்; அவன் தண்ணீரைக் குடித்தால் புருஷன் மிகவும் பரம ஏழையாயும் தரித்ரவானாயு மிருப்பானாம்.

இந்த தேசத்தில் இன்னொரு வழக்கமுமுண்டு. வைக்கோலினால் செய்த ஒரு பெட்டியில் ரொட்டித் துண்டுகளையும் சில காசுகளையும்போட்டு நன்றாகக் குலுக்கி அப்பெட்டியை மேஜையின்மேலுள்ள துணியின்கீழ் மறைத்து வைப்பார்கள். தனது நாயகனது நிலைமையைத் தெரிந்துகொள்ள ஆசையுடைய கன்னிகைப் பெண் ஒருத்தி அந்தப் பெட்டி வைத்திருக்கும் இடத்திற்கு ராத்திரியில் போய், விளக்கையெல்லாம் அணைத்துவிட்டு அந்தப் பெட்டியில் தன் கையைப்போட்டு ஏதாவது ஒரு துண்டை எடுப்பாள். தான் எடுப்பது ரொட்டித் துண்டாயிருந்தால், தனக்குவரும் புருஷன் மிகவும் தரித்ரமுள்ளவனாயிருப்பானாம்; தான் எடுப்பது பணமாயிருந்தால்



தனது புருஷன் அதிக பணக்காரனாயிருப்பானாம்.

இட்டலியிலுள்ள ‘பொலோனா’ என்கிற பட்டணத்தில், வர்ஷப்பிறப்பு உத்ஸவம் கொண்டாடுகிற ஸமயத்தில் வருங்கால நிலைமையை அறிய பின்வரும் வழக்கம் நடந்து வருகிறது. வீட்டிலுள்ள ஒரு அறையின் நான்கு மூலைகளிலும் நான்கு மண் வட்டில்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு பாத்ரத்தில் நிறைய சாம்பலும், மற்றொரு பாத்ரத்தில் ஒரு சாவியும், மூன்றாவது பாத்ரத்தில் நிறைய ஜலமும், நான்காவது பாத்ரத்தில் ஒரு மோதிரமும் வைக்கப்பட்டிருக்கும். கல்யாணம் ஆகாத சிறுவர் சிறுமிகளது கண்களை நன்றாகக் கட்டிவிட்டு, அவர்களைத் தங்களைத் தாங்களே மூன்றுதரம் சுற்றச்செய்து அந்த மண் பாத்ரங்கள் இருக்கும் மூலைகள் பக்கமாகப் போகும்படி அவர்களை விட்டுவிடுவார்கள். அவர்கள் இங்குமங்கும் அலைந்துவிட்டு கடைசியாக அந்த பாத்ரங்களை தொடப்போவார்கள். யார்போய் சாம்பல் உள்ள பாத்ரத்தைதொடுகிறார்களோ, அவர்கள் சீக்ரம்செத்துப்போவார்களென்று அர்த்தமாம்; யார் சாவியுள்ள பாத்ரத்தைத் தொடுகிறார்களோ, அவர்களுக்கு கல்யாணம் ஆகாமல் அந்த வருஷம் முழுவதும் அவர்கள் வீட்டிலேயே தங்கவேண்டியிருக்குமாம்; யார் ஜலம் உள்ள பாத்ரத்தை தொடுகிறார்களோ, அவர்கள் ஸதா அழுத கண்ணீரும் சிந்தின மூக்குமாயிருப்பார்களாம். யார் மோதிரமுள்ள வட்டிலை எடுக்கிறார்களோ அவர்களுக்கு அடுத்த வருஷத்தில் கட்டாயம் கல்பாணம் ஆகுமென்று அர்த்தமாம்.

ஜெர்மனி தேசத்திலுள்ள ‘ஸாக்ஸனி’ என்ற நாட்டில் ‘வாய்ட்லண்ட்’ என்ற ஒரு ஜில்லா இருக்கிறது. அந்த ஜில்லாவில் உள்ள கல்யாணமாகாத பெண்கள் புதுவருஷ தினத்துக்கு முதல் நாள் இரவு வெளியில் உலாவப் போய், தாங்கள் காணும் மரங்களைப் பிடித்து அசைப்பார்கள். அப்போது நாய் குலைக்கும் சப்தம் அல்லது இதர சப்தம் கேட்டால், எந்தப் பக்கத்திலிருந்து சத்தம் வந்ததோ அந்தப் பக்கத்திலிருந்து தங்களுக்குக் கணவன் கிடைப்பார்கள் என்று எண்ணுவது வழக்கம்.

## INDIGO TRADE OF MADRAS.

### சென்னையில் நீலி வ்யாபாரம்.

சென்ற மாஸத்து ‘ஜனோபிமானி’யில் அவுரி வ்யாபாரத்தைப்பற்றி எழுதியபோது 1896-ம் வர்ஷம் முதல் அவுரி வ்யாபாரம் குறைந்து போயிற்றென்று எழுதினோம். அந்த வர்ஷம் முதல் 1914-ம் வர்ஷம்வரையில் இந்தியாவிலிருந்து அவுரிச் சாய ஏற்றுமதி குறைந்துகொண்டே வந்தது. 1914-ம் வர்ஷத்தில் சென்னையில் 3,334 அந்தர் அவுரிச் சாயந்தான் உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கடுத்த வர்ஷம் அதாவது 1915-ம் வர்ஷத்தில் 16,790 அந்தர் உற்பத்தி செய்யப்பட்டது. 1916-ம் வர்ஷத்திலோ அவுரிச்சாயம் ஏராளமாய் தயார் செய்யப்பட்டது. அந்த வர்ஷம் ஜனவரிமாஸம் முதல் ஏப்ரல் மாஸம் முடிய நான்குமாஸங்களில் மாத்ரம் 15,375 அந்தர் அவுரிச்சாயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆகவே இந்த நான்கு மாஸங்களிலும் ஏற்றுமதியானது 1915-ம் வர்ஷம் முழுவதிலும் ஏற்றுமதியான அவுரிச்சாயத்துக்கு கிட்டத்தட்ட சரியாயிருக்கிறது. ஆகவே 1915-ம் வர்ஷம் முதல் இந்த அவுரிச்சாய வ்யாபாரமானது ரொம்ப வ்ருத்தியாகிக்

கொண்டு வருகிறது. இதற்கு முக்ய காரணம் ஜெர்மனியிலிருந்து செயற்கைச் சாயம் வருவது நின்றுபோனதேயாகும்.

அவுரிச்சாயத்தின் விலையானது 1894-95-ம் வர்ஷத்திலும் 1895-96-ம் வர்ஷத்திலும் மணங்கு ஒன்றுக்கு 63-ரூபாயாக இருந்தது. 1896-ம் வர்ஷத்தில் செயற்கை நீலம் தயார் செய்யப்பட்டு விற்பனைக்குவரவே, அவுரி நீலத்துக்கு க்ராக்கி குறைந்துபோய், அதன்விலையும் காலக்ரமத்தில் குறைந்து 1906-07-ம் வர்ஷத்தில் மணங்கு ஒன்று 44 ரூபாயாகவிற்றது. இந்த வர்ஷத்துக்கு அப்புறங்கூட விலை குறையலாயிற்று. இதன்மேல் விவஸாயிகள் அவுரி பயிரிடுவதில் லாபம் அதிகமில்லையென்று கண்டு குறைவாகப் பயிரிடலானார்கள்.

யுத்தத்தில் ஜெர்மன் செயற்கைச் சாயம் நின்றுபோகவே அவுரிச்சாயத்துக்கு க்ராக்கி ஏற்பட்டு அதன்விலை ரொம்ப ஏறியிருக்கிறது. சென்ற வர்ஷம் ஏப்ரல் மாஸத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட 1190 அந்தர் நீலிக்கு 6,29,411 ரூபாய் மதிப்புப் போட்டிருந்தார்கள். அதாவது ஒரு அந்தரின்விலை 123 ரூபாயாகும். இது 1906-07-ம் வர்ஷத்திய விலையைவிட மூன்று மடங்காகும். 1895-96-ம் வர்ஷத்திய விலையைவிட இரண்டுமடங்கு அதிகமாகும். இந்த உயர்ந்த விலை யுத்தம்முடிந்து செயற்கைச்சாயம் வரும் வரையில் இருந்துகொண்டு தானிருக்கும்.

இப்படி நீலி விலை அதிகமாக விற்பதால் அவுரி பயிரிடுபவர்களுக்கு அதிக லாபம் கிடைக்குமென்று பலர் எண்ணக்கூடும். ஆனால் அது வாஸ்தவமல்ல. விலை ஏறியிற்றும் அவுரி ஸாகுபடி செய்கிறவர்கள் ஸ்வல்ப லாபமே அடைகிறார்கள். அவுரிச்சாயத்துக்கு விலை ஏறியிருப்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தும், சாயம் செய்துவிற்க அவர்கள் எண்ணுவதில்லை. அவுரிசசாயம் தயார்செய்வது ரஸவாத வித்தையைப்போல் கடினமான வேலையென்பது அவர்களுடைய எண்ணம். மேலும் சாயம் செய்வதில் அவுரித்தழையை தொட்டிகளில் ஊறப்போடவேண்டும். அப்போது செடிகளில் இருக்கக்கூடிய புழுப் பூச்சிகள் இறந்துபோகின்றனவாதலால் அவைகளைச் சாகடிப்பது பாவமென்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். இந்த இரண்டு காரணங்களால்தான் விவஸாயிகள் சாயம் தயார்செய்ய பின்வாங்குகிறார்கள்.

இதனால் விவஸாயிகள் லாபம் தரக்கூடிய துறைகளில் உழைக்கப் பின்வாங்குகிறார்களென்று எண்ணக்கூடாது. விவஸாயிகள் லாபந்தரக்கூடிய மஞ்சள், புகையிலை, கரும்பு ஆகிய இவைகளை பயிரிட்டு, வ்யாபாரத்துக்கேற்றவிதமாக சர்க்கரை, வெல்லம், புகையிலை, மஞ்சள் முதலியவைகளைத் தயார்செய்து வருவதைப்பார்த்தால், உண்மையில் நமது நாட்டு விவஸாயிகள் பாவத்துக்கஞ்சியும், தொழில் கடினமாயிருப்பதை உத்தேசித்துமே சாயம் செய்யப் பின் வாங்குகிறார்களென்பது விளங்கும்.

அவுரிச்சாய விலையேற்றத்தால் விவஸாயிக்குத்தான் லாபம் கிடைக்கவில்லையென்றால், சாயம் தயார் செய்பவர்களுக்கும் அதிகலாபம் கிடைக்கவில்லையென்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு மணங்குக்கு 50 ரூபாய்க்குமேல் கிடைப்பதில்லையாம். அயல் நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் மொத்த வ்யாபாரிகள் இவர்களுக்கு சரியான விலை கொடுப்பதில்லையென்று சாயம் தயார் செய்பவர்கள் குறை கூறுகிறார்கள். வ்யாபாரிகளோ சாயம் நன்றாயில்லையென்றும், கலப்படம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் ஆகையால் அதிகவிலை கொடுப்பதற்கில்லையென்றும் குறை கூறுகிறார்கள். ஆனால் எல்லாவற்றையும் ஆலோசித்துப் பார்த்தால் வ்யாபாரிகளின்பேரில் தான் குறைசொல்லவேண்டியிருக்கிறது. ஏனென்றால், இன்னமாதிரியிருந்தால் சாயம் நேர்த்தியானது, இன்னமாதிரியிருந்தால் சாயம் கலப்படம் செய்யப்பட்டிருக்கிறதென்று ஒருவரையும் ஏற்படுத்திக்கொள்ளாமல், கண் மூடித்தனமாய் விலை ஏற்படுத்துகிறார்களென்று சொல்லப்படுகிறது.



## THE BUDGET OF THE GOVERNMENT OF MADRAS.

### சென்னை கவர்ன்மெண்டின் வரவு செலவு திட்டம்.

சென்ற மார்ச்சுமாஸம் 13-ந்தேதியன்று சென்னை சட்டஸபை கூடியபோது, ஆனரபிள் ஸர் எ. கார்ட்யூ 1917-18-ம் வர்ஷத்துக்கு சென்னை கவர்ன்மெண்டின் வரவு செலவு திட்டத்தை வாசித்தார்.

அடியில் வரும் அட்டவணையில் சென்ற வர்ஷத்தில் 1916-17-ம் வர்ஷத்துக்குப் போட்டமுதல் திட்டத்தையும், 1916-17-ம் வர்ஷத்தின் மறுதிட்டத்தையும் 1917-18-ம் வர்ஷத்திய வரவு செலவு மதிப்புத்திட்டத்தையும் காட்டியிருக்கிறோம்.

| | 1916-17 முதல்திட்டம் | 1916-17 மறுதிட்டம் | 1917-18 மதிப்பு திட்டம் |
|---|---|---|---|
| | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. |
| வர்ஷாரம்பத்தில் கையிருப்பு ... | 102·20 | 110·02 | 140·85 |
| வரவு ... | 770·15 | 790·32 | 807·59 |
| செலவு ... | 773·14 | 759·49 | 794·61 |
| மிச்சம் அல்லது வரவுக்குமேல் செலவு ... | —2·99 | + 30·83 | + 12·98 |
| வர்ஷக் கடைசியில் கையிருப்பு... | 99·21 | 140·85 | 153·83 |

(குறிப்பு :—1916-17-ம் வர்ஷமாவது 1916ஹு ஏப்ரல் மாஸம் 1-ந்தேதிமுதல் 1917-ம்வர்ஷம் மார்சசு மாஸம் 31-ந்தேதி முடியவாகும். அதேபோல் 1917-18-என்பது 1917-ம்ஹு ஏப்ரல் மாஸம் 1-ந்தேதிமுதல் 1918-ம்ஹு மார்ச்சுமாஸம் 31-ந் தேதிமுடிய வாகும்.)

1916-ம் வர்ஷம் மார்ச்சு மாஸத்தில் 1916-17-ம் வர்ஷத்துக்கு வரவு செலவு மதிப்பு திட்டம் போட்டபோது, வரவு 770·15 லக்ஷம் ரூபாயென்றும், செலவு 773·14 லக்ஷம் ரூபாயாகுமென்றும், ஆகவே 2·99 லக்ஷம் ரூபாய் வரவுக்குமேல் செலவாகுமென்றும் மதிப்புப்போட்டார்கள். ஆனால் 1916-17-ம் வர்ஷத்தில் வரவு இனங்களில் சிலவற்றில் அதிகவரும்படி கிடைத்திருக்குமென்று தெரிகிறதால் மொத்தம் வரவு 790·32 லக்ஷம் ரூபாயாகுமாம். செலவு இனங்களிலும் குறைவாகச் செலவு செய்திருப்பதால் 759·49 லக்ஷம் ரூபாய்தான் செலவாகுமென்று தெரிகிறது. ஆகவே செலவு போகமிச்சம் 30·83 லக்ஷம் ரூபாயாகும். இதைத்தவிர 1916-17-ம் வர்ஷ ஆரம்பத்தில் கையிருப்பாயிருக்கக்கூடிய தொகை 102·20 லக்ஷம் ரூபாயென்று மதிப்பிட்டிருந்ததற்கு பதிலாக 110·02 லக்ஷம் ரூபாய் கையிருப்பாக இருந்தது. ஆகவே இந்தக் கையிருப்புத் தொகையோடு மிச்சப்பணத்தையும் சேர்த்தால் 1916-17-ம் வர்ஷக் கடைசியில் அதாவது 1917-18-ம் வர்ஷ ஆரம்பத்தில் 140·85 லக்ஷம் ரூ. மிச்சமிருக்கும்.

வருகிற 1917-18-ம் வர்ஷத்தில் வரவு செலவு இவ்வளவாகு மென்பது பின்வருமாறு மதிப்பிடப் பட்டிருக்கிறது.

| | | லக்ஷம் ரூ. |
|---|---|---|
| வர்ஷ ஆரம்பத்தில் கையிருப்பு | ... | 140·85 |
| வரவு ... | ... | 807·59 |
| செலவு ... | ... | 794·61 |

| | | |
|---|---|---|
| வரவில் செலவுபோக மிச்சம் | ... | 12·98 |
| வர்ஷக் கடைசியில் கையிருப்பு. | ... | 153·83 |

வரவு இனங்கள் ஒவ்வொன்றிலும் இன்ன தொகைகிடைக்குமென்பது கீழ்வரும் அட்டவணையால் நன்கு தெரியும்.

| | 1916-17 மறுதிட்டம். | 1917-18 மதிப்பு. | வித்யாஸம். |
|---|---|---|---|
| நிலத்தீர்வை, தண்ணீர்த் தீர்வை ... | 347·69 | 354·95 | + 7·26 |
| ஸ்டாம்ப் ... | 78·00 | 80·25 | + 2·25 |
| அப்காரி ... | 184·50 | 189·00 | + 4·50 |
| வருமானவரி ... | 28·95 | 30·00 | + 1·05 |
| காட்டிலாகா ... | 45·00 | 42·00 | — 3·00 |
| ரெஜிஸ்ட்ரேஷன் ... | 25·00 | 26·00 | + 1·00 |
| சாஸ்த்ர இலாகாக்கள், இதர இலாகாக்களால் வரும்படி | 15·89 | 17·61 | + 1·72 |
| இதர இனங்கள் ... | 49·17 | 48·55 | — ·62 |
| மொத்தம் | 774·20 | 788·36 | + 14·16 |
| இம்பீரியல் கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுக்குக் கொடுத்தது ... | 16·12 | 19·63 | + 3·11 |
| மொத்தம் வரவு ... | 790·32 | 807·59 | + 17·27 |

மேலே காட்டிய அட்டவணையில் ஒவ்வொரு இனத்திலும் 1916-17-ம் வர்ஷத்து வரும்படியைவிட 1917-18-ம் வர்ஷத்தில் அதிகமாகவோ குறைவாகவோ வரும்படி கிடைக்குமென்று காட்டப்பட்டிருக்கிறது. இப்படி வித்யாஸமேற்படுவதற்குக் காரணங்கள் வருமாறு:—

சென்ற வர்ஷம் புயல்காற்றாலும் வெள்ளத்தாலும் சில ஜில்லாக்களில் சேதம் ஏற்பட்டதால், அவைகளுள் சில இடங்களில் வரிவஸூல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அந்த வரியை இந்த வர்ஷம் சேர்த்து வஸூலிப்பார்கள். இதனாலும், ஸாதாரணமாய் நிலத்தீர்வை வரும்படி அதிகரிப்பதாலும், இந்த இனத்தில் 7·26 லக்ஷம் ரூபாய் அதிகம் கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

ஸ்டாம்ப் இனத்தில் யுத்தத்துக்கு முன்னால் வர்ஷந்தோறும் 6·69 லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைத்துவந்தது. இது யுத்த ஸமயமாகையால் வருகிற வர்ஷத்தில் 4·50 லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இதில் சென்னை கவர்ன்மெண்டுக்குக் கிடைக்கும் பாகம் 2·25 லக்ஷம் ரூபாயாகும். கள், சாராய வரும்படியானது சென்ற சில வர்ஷங்களாக அதிகரித்துக் கொண்டுவருகிறது. 1914-15-ம் வர்ஷத்தில் மாத்ரம் யுத்தத்தின் காரணமாக வரும்படி சற்றுக்குறைந்து போய்விட்டது. அதற்குப் பிறகு வரும்படி அதிகரித்துக் கொண்டேவருகிறது. இந்த வர்ஷத்தில் மொத்தம் கள் சாராயவரும்படியில் 4½ லக்ஷம் ரூபாய் அதிகம் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

காட்டிலாகா வரும்படியில் 3 லக்ஷம் ரூபாய் குறையுமென்றதற்குக் காரணமென்னவென்றால், சென்ற வர்ஷம் (1916-17) புயல் காற்றால் அநேக சந்தனமரங்கள் விழுந்து விட்டன. சந்தனக் கட்டைக்கு விலை யதிகமாயிருப்பதாலும், மரங்கள் அதிகமாய் விழுந்து விட்டதனாலும் சென்றவர்ஷம் இந்த வகையில் அதிக வரும்படிகிடைத்தது. அதோடு, விறகுக்கு விலையேறியிருப்பதாலும் மூங்கில் முதலியவைகளை ஜனங்கள் அதிகம் வெட்டிக் கொண்டுபோனதாலும் வேறு காரணங்களாலும் அதிக வரும்படி கிடைத்துவந்தது. ஆனால் இந்த வர்ஷம் மேற்சொன்ன விசேஷ காரணங்களிருக்க மாட்டாவாதலால், இதன் வரும்படியை 3 லக்ஷம் ரூபாய் குறைத்துப் போட்டிருக்கிறது.



ரெஜிஸ்ட்ரேஷன், வருமானவரி ஆகிய இந்த வரும்படிகள் ஸாதாரணமாய் வர்ஷந்தோறும் அதிகரித்து வருகின்றனவென்பதை உத்தேசித்து வருகிறவர்ஷம் அதிகமாகப் போடப்பட்டிருக்கின்றன.

இந்த வர்ஷத்தில் கவர்ன்மெண்டார் எந்தெந்த வகைக்கு எவ்வளவு தொகை செலவழிப்பார்களென்பதும், 1916-17-ம் வர்ஷத்தில் அந்தந்த வகையில் செலவு எவ்வளவு ஆகியிருக்குமென்பதும் அடியில் காட்டப்பட்டிருக்கின்றன.

| | 1916-17 மறுதிட்டம். | 1917-18 மதிப்பு | வித்யாஸம். |
|---|---|---|---|
| நிலவரி வஸூல் ... | 123·49 | 125·50 | + 2·01 |
| காட்டிலாகா ... | 27·70 | 29·63 | „ 1·93 |
| ரெஜிஸ்ட்ரேஷன்... | 13·16 | 13·39 | „ ·23 |
| பொது நிர்வாகம் ... | 15·49 | 15·96 | „ ·47 |
| கோர்ட்டுகள் ... | 85·65 | 86·15 | „ ·50 |
| ஜெயில்கள் ... | 15·98 | 15·48 | — ·50 |
| போலீஸ் ... | 114·69 | 117·47 | + 2·78 |
| கல்வி ... | 83·45 | 94·79 | „ 11·34 |
| வைத்யம் ... | 18·56 | 22·89 | „ 11·34 |
| ஸுகாதாரம் ... | 18·69 | 13·76 | — 4·93 |
| விவஸாயம் ... | 12·29 | 14·50 | + 2·21 |
| சாஸ்த்ர டிபார்ட்மெண்டுகளும் இதர டிபார்ட்மெண்டுகளும் ... | 13·50 | 15·55 | „ 2·05 |
| பென்ஷன்களும் அல்லவென்ஸுகளும் ... | 33·41 | 34·65 | „ 1·24 |
| அச்சடித்தலும், காகிதம் முதலிய எழுது கருவிகளும் ... | 14·60 | 15·75 | „ 1·15 |
| கடன் திருப்பிக்கொடுக்கும் வகையில். | 2·50 | —— | — 2·50 |
| பாசனவேலைகள் ... | 10·00 | 11·25 | + 1·25 |
| சிறுபாசன வேலைகளும் கப்பல் போக்குவரத்து வேலைகளும் - ஸிவில் டிபார்ட்மெண்டுகளிலும் உள்ளவை. | 6·25 | 8·00 | „ 1·75 |
| ஷை - மராமத்திலாகா வசம் உள்ளவைகளுக்காக ... | 29·00 | 38·00 | „ 4·00 |
| மராமத்து வேலைகள்- ஸிவில் இலாகா வசம் உள்ளவை... | 20·04 | 20·87 | „ ·88 |
| ஷை மராமத்திலாகா வசம் உள்ளவை... | 59·50 | 63·15 | „ 3·65 |
| மற்றவைகளில் செலவு. | 41·54 | 42·87 | „ 1·33 |
| மொத்தம் ... | 759·49 | 794·61 | „ 35·12 |

இந்த அட்டவணையில் வருகிற 1917-18-ம் வர்ஷத்துக்கு நிலத்தீர்வை பாபத்தில் 2·01 லக்ஷம் ரூபாய் அதிகமாக செலவு போடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் 1916-17-ம் வர்ஷத்தில் ஜமீன் நிலங்களை ஸர்வே செய்ய இரண்டு ஸர்வே பார்ட்டிகளை வேலைக்கு விட்டிருந்தார்கள். இந்த இரண்டு ஸர்வே பார்ட்டிகளினுடைய செலவுகளை ஜமீன்கள் பொறுத்துக்கொண்டன. இந்த வர்ஷத்தில் ஒரு ஸர்வே பார்ட்டியை மாத்ரம் ஜமீன்களுக்கு விடுவதாக உத்தேசித்திருப்பதால், பாக்கி ஒரு ஸர்வே பார்ட்டியின் நிர்வாகச் செலவு கவர்ன்மெண்டைச் சேருகிறது. இதோடு இந்த வர்ஷம் க்ராம விப்பந்திகள் விஷயமாக அதிகப்பணம் செலவழிக்கப் போகிறார்கள்.

காடுகளில் ரோடுகள் போடவும் தீப்பிடிக்காமல் பந்தோபஸ்து செய்யவும், காட்டிலாகாவால் வ்யாபார விஷயமாய் என்னென்ன முயற்சிகள் செய்யக்கூடுமென்பதை யறிய ஒரு தனி உத்யோகஸ்தர் நியமிக்கவும் வேறு சில காரணங்களுக்குமாக காட்டிலாகாச் செலவில் 1·93 லக்ஷம் ரூபாய் அதிகம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தவர்ஷம் கல்விக்காக 11·34 லக்ஷம் ரூபாய் அதிகம் செலவழிக்கப் போகிறார்கள். 4 லக்ஷம் ரூபாய் இந்தியா கவர்ன்மெண்டார் உபாத்யாயர்களுடைய சம்பளத்தை உயர்த்தவும் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் வேண்டிக் கொடுத்த க்ராண்டாகும். பாக்கித் தொகையாகிய 7·34 லக்ஷம் ரூபாய்ப் பின்வருமாறு செலவழிக்கப்படும்.

(1) ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களின் தொகையை அதிகரிப்பதற்காக 75,000 ரூபாய் செலவழிக்கப்படும்.

(2) ராஜமஹேந்த்ரவரத்தில் வருகிற ஜுலை மாஸம் 1-ந் தேதிமுதல் ஒரு ட்ரெய்னிங் காலேஜ் ஸ்தாபிக்கப்படும். அதற்கு இந்த வர்ஷம் ஏற்படும் செலவுக்காக 34,000 ரூ. எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

(3) புதிதாக எலிமெண்டரி ஸ்கூல்கள் ஸ்தாபிக்கவும் ஏற்கனவேயுள்ள எலிமெண்டரி ஸ்கூல்களை பலப்படுத்தவும் 1·21 லக்ஷம் ரூ. எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடங்களுக்கு 1 லக்ஷம் ரூபாய். ஸெகண்டரி ஸ்கூல் கட்டிடங்களுக்கு $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய்.

(4) போதனா முறைப்பாட சாலைகளில் மாணவர்களுக்கு ஸ்டைபண்டு கொடுக்கவும், அந்தப் பாடசாலைகளில் இதர செலவுகளுக்கும், விசாகப்பட்டணம் ஜில்லாவில் ஏஜென்ஸி பாகங்களில் மலை ப்ரதேசங்களில் 4 ட்ரெய்னிங் ஸ்கூல் ஏற்படுத்தவும், ஸ்த்ரீ உபாத்யாயர்களைப் பயிற்சி செய்விக்க போதனா முறைப் பாடசாலைகள் ஏற்படுத்தவும் 60,000 ரூபாய்.

(5) எலிமெண்டரி ஸ்கூல்களில் உபாத்யாயர்களுக்கு டீச்சிங் க்ராண்ட் கொடுக்க 39,000 ரூபாய்.

(6) முக்யமான பாஷைகள் பேசப்படும் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு ஸெகண்டரி ஸ்கூல் வீதம் சென்னை ராஜதானி முழுவதுக்கும் 4 ஸெகண்டரி ஸ்கூல்களை மாதிரிக்காக நடத்திக்காட்ட 4 ப்ரைவேட் ஸெகண்டரி ஸ்கூல்களின் நிர்வாகத்தை மேற்கொள்ளச் செலவு 1·11 லக்ஷம் ரூபாய்.

வைத்ய ஸம்பந்தமாக இந்த வர்ஷம் 4·33 லக்ஷம் ரூபாய் அதிகம் செலவழிக்கப்படும். சென்னையிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்காக 1 லக்ஷம் ரூபாயும் வெளியூர்களிலுள்ள ஆஸ்பத்ரிகளுக்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்படும் க்ராண்டில் 2·12 லக்ஷம் ரூபாய் அதிகமாகவும் கொடுக்கப்படும். இதைத்தவிர, கள்ளிக்கோட்டையில் புதிதாக ஏற்படுத்தியிருக்கும் வைத்ய ஸ்கூலுக்காகவும், பொதுவாக வைத்யஸ்கூல்களில் வித்யா உபகரணங்களை அதிகப்படுத்தவும் அதிகச்செலவு ஏற்படும்.

ஸுகாதார விஷயமாய் 4·93 லக்ஷம் ரூபாய் குறைவாகச் செலவு ஏற்படக் காரணமென்னவென்றால், தற்போது யுத்தத்தால், குழாய்களும் வேறு ஸாமான்களும் இங்கிலண்டில் ரொம்ப விலையேறிவிட்டன. மேலும் அங்கிருந்து அவைகள் வருவதும் ரொம்ப கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஸுகாதாரக்ராண்டுகள் குறைவாகவே இந்த வர்ஷம் கொடுக்கப்படும்.

---


| | | | | |
|---|---|---|---|---|
| 652. அகமே புறம் ... ஜேம்ஸ் ஆலன் என்னும் இங்க்லீஷ் ஆசிரியர் இங்க்லீஷில் எழுதிய ஒரு நூலின் மொழிபெயர்ப்பு. வ. உ. சிதம்பரம் பிள்ளை இயற்றியது. | | 0 | 8 | 0 |
| 653. மனம்போல வாழ்வு ... ஜேம்ஸ் ஆலன் என்பவர் இங்க்லீஷில் இயற்றிய ஒரு நூலின் மொழிபெயர்ப்பு. வ. உ. சிதம்பரம் பிள்ளை இயற்றியது. | | 0 | 8 | 0 |
| 710. வலிமைக்கு மார்க்கம் ... வ. உ. சிதம்பரம் பிள்ளை இயற்றிய அறிவு புகட்டும் நூல். | | 0 | 8 | 0 |
| 650. பாடல் திரட்டு ... வ. உ. சிதம்பரம்பிள்ளை அவ்வப்போது பாடிய பாடல்களின் திரட்டு. | | 0 | 8 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.




# REVIEW OF THE PRESS.
## பத்ரிகை ஆராய்ச்சி.

### HABITS TO BE CULTIVATED IN CHILDREN.
### பிள்ளைகளிடம் ஏற்படவேண்டிய பழக்க வழக்கங்கள்.

சிறுபிள்ளைகளை நல்லவழியில் கொண்டுவரவேண்டுமென்றால், அவர்களுடைய சரீரம், மனம், நடத்தை ஆகிய இம்மூன்றையும் சீர்திருத்தவேண்டியது அவச்யமாகும். இவற்றுள் நடத்தையைச் சீர்திருத்துவதில் கவனிக்கவேண்டியவைகளைப்பற்றி ஸமீபத்தில் வெளிவந்த 'விவேகசிந்தாமணி'யில் ஒரு வ்யாஸம் காணப்படுகிறது.

தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளை கூர்மையான புத்தியுள்ளவர்களாய் செய்வதோடு மாத்ரம் உபாத்யாயருடைய வேலை முடிந்துவிடாது. பிள்ளைகளுடைய குணத்தையும் அவர் சரிப்படுத்த வேண்டும். உபாத்யாயருடையவோ அல்லது பெற்றோர்களுடையவோ அஜாக்ரதையினால் கெட்ட வாடிக்கைகள் பிள்ளைகளிடத்தில் ஏற்பட்டுவிட்டால் அவற்றை மாற்றுவது கஷ்டம்.

பிள்ளைகளிடம் கெட்ட குணங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதோடு, நல்ல குணங்கள் படியும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அவைகளில் சில வருமாறு:-

1. **சுறுசுறுப்புந்தனம்.**—ஒருவனிடத்தில் என்ன புத்தி கூர்மையிருந்தாலும் சுறுசுறுப்புத்தனமில்லாவிட்டால் கார்யங்கள் ஒன்றும் கைகூடாது. புத்தி கூர்மை ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டிருத்தல் நல்ல அத்ருஷ்டம். நாம் என்ன ப்ரயத்தனப்பட்டாலும் அது கிடைத்தலரிது. சுறுசுறுப்புத்தனமோ அப்படியல்ல. ச்ரமப்பட்டால் இந்த குணத்தை ஸம்பாதித்துக்கொள்ளலாம். இந்த குணம் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்தவேண்டியதற்காக உபாத்யாயர் பிள்ளைகளிடத்தில் கண்டிதமாய் வேலை வாங்கவேண்டியது. ஒவ்வொரு நாளிலும் எவ்வளவு படித்து அறிந்துகொள்வது ஸாத்யப்படுமோ அவ்வளவும் குறிப்பிட்டுக்கொடுத்து காலம் கொஞ்சமேனும் வீண்போகாத மாதிரி பிள்ளைகளை பாடத்தில் கவனம் வைக்கச் செய்யவேண்டியது. சில பிள்ளைகள் பரீக்ஷைக்கு கொஞ்சநாளைக்கு முன்பாகமட்டும் ச்ரமப்பட ஆரம்பித்தால் போதாதா என்ற எண்ணங்கொண்டவர்களாய் அநேக நாள் சோம்பேறிகளாய் காலம் கழிப்பார்கள். அப்படிக்கு இருக்கவொட்டாமல் ஒரே சீராய் அன்றைக்கிட்ட வேலையை யன்றைக்கே செய்துமுடிப்பது தான் தங்களுடைய கடமையென்பதை பிள்ளைகளுக்கு தெளிவாக்கவேண்டும். இந்த நற்குணமிப்பொழுதே ஏற்பட்டால்தான் பிள்ளைகள் பெரியவர்களாய் ப்ரபஞ்சத்தில் வ்யவகாரங்கள் செய்யும்பொழுது கீர்த்தியும் பெயருமுண்டாக விடமுண்டு.

2. **முந்தோர் சொல்லுக்குக் கீழ்ப்படிதல்.**-பிள்ளைகளுக்கு தீர்க்காலோசனை சக்தி இராதாகையால் தாங்கள் ப்ரவிர்த்திக்கும் விஷயங்களில் தங்களுக்கு நேரிடக்கூடிய லாப நஷ்டங்களை ஊகித்துத் தெரிந்துகொள்ள முடியாது. அநுபவத்தில் அநேக விஷயங்களின் ரீதியை அறிந்து இது பிள்ளைகளுக்கு லாபகரம், இது அவர்களுக்கு நஷ்டத்தை விளைவிக்கும் என்று முன்யோசனையுடன் சொல்லக்கூடிய பெரியோர்கள் அதாவது பெற்றோர்கள் உபாத்யாயர்கள் முதலியவர்களின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தவேண்டியது. நாமிட்ட கட்டளைப்படி பிள்ளைகள் கீழ்ப்படிந்து நடக்கும்பொழுது நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டுண்டு. கட்டளையிட்டதும் உடனே யதின்படி செய்கிறார்களா வென்பதும், வெறுப்பில்லாமல் ஸந்தோஷத்துடனும் இஷ்டப்பட்டும் நடந்துகொள்ளுகிறார்களா வென்பதும். கட்டளையிட்டதும் கொஞ்ச நேரமேனும் தாமதியாமல் உடனே கீழ்ப்படியும் வழக்கம் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்தும் பொருட்டேதான் பள்ளிக்கூடங்களில் 'ட்ரில்' சொல்லிக்கொடுக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. 'ட்ரில்' பழகுவதினால் அவயவங்கள் திடப்படுவதுமன்றி சொன்னபடி செய்யும் வழக்கம் பிள்ளைகளிடத்தில் உண்டாகிறது. சொற்படி நடத்தலுக்குப் பழக்கம்தான் முக்யகாரணம். அந்தப் பழக்கத்தை 'ட்ரில்' உண்டாக்கும்.

இட்ட கட்டளைப்படி உடனே நடப்பது தவிர ஸந்தோஷத்துடன் நடந்துகொள்ளும்படிக்கும் செய்யவேண்டும். உபாத்யாயர் தன் வேலையை ச்ரத்தையுடனும் உத்ஸாஹத்துடனும் செய்கிறவராயிருந்தால் பிள்ளைகளுக்கு அவரிடத்தில் மர்யாதையும் அன்பும்

பக்தியும் உண்டாகும். அவர் சொல்வது தங்களுடைய நன்மைக்கே யென்று நினைத்து அவர் சொல்படி பிள்ளைகள் நடப்பார்கள். எந்த விதிகள் முக்யமானவையோ அவற்றை யொரு நோட்டீஸ்-போல எழுதி எல்லாப் பிள்ளைகளும் காணக்கூடிய விடத்தில் மாட்டி வைக்கவேண்டியது. இன்ன விதிகளுக்குட்பட்டு தாங்கள் நடந்துகொள்ளவேண்டுமென்பது நிச்சயமாய் பிள்ளைகளுக்குத் தெரியுமாகையால் அந்தப்படி நடந்து கொள்ள முயலுவார்கள்.

3. நாள் தப்பாமலும் காலம் தப்பாமலும் பள்ளிக்கூடத்துக்கு வருதல்.—தினம் தப்பாமல் வந்தால் தான் பாடங்கள் க்ரமமாய்த் தெரியவரும் சிலநாள் வராமலிருந்து மறுபடி வந்தால் ஏற்கனவே போதிக்கப்பட்ட பழைய விஷயங்கள் தெரியாவாகையால் அவைகளை யொட்டிச் சொல்லப்படும் புது விஷயங்களும் அவர்களுக்கு மனதில் பதிவது கஷ்டம். ஆகையால் அவர்கள் அபிவ்ருத்திக்கு பங்கம் வரும்.

உத்தரவில்லாமல் பள்ளிக்கூடத்துக்கு சில பிள்ளைகள் வராமலிருந்தால், உபாத்யாயர்கள் உடனே அதை தகப்பன்மார்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். சில் பிள்ளைகள் வீட்டில் சரியான வேளைக்கு சாப்பிட்டு விட்டு, பள்ளிக்கூடம் போவதுபோல நடித்து எங்கேயாவது போய்த்திரிந்து விளையாடி, திரும்பவும் மற்ற பிள்ளைகளைப்போலவே சரியான நேரத்திற்கு வீடு வந்து விடுவதுண்டு. உபாத்யாயர் பையன் வீட்டிலிருந்துவிட்டானென்று நினைப்பார். தகப்பனார் பையன் பள்ளிக்கூடம் போனானென்று நினைப்பார். அவனோ இருவரையும் ஏமாற்றிவிடுகிறான். மேலே சொன்னமாதிரி பையன் பள்ளிக்கூடம் வராதபோது, உபாத்யாயர் அவ்விஷயத்தை தகப்பன்மாருக்குத் தெரிவித்தால், பையனுடைய ஆட்டம் பலிக்க இடமில்லை. நாள் தப்பாமல் வருவதோடு வேளை தப்பாமலும் வரும்படிப் பையன்களைப் பழக்கவேண்டும். இதற்கு ஒவ்வொரு நாளும் முதல் முதல் நடத்தும் பாடம் முக்யமான பாடமாயிருக்கவேண்டும். இதனால் பிள்ளைகள், அந்தப்பாடத்தை இழக்க மனமில்லாமல் பள்ளிக்கூடம் துவங்கும்போது நேரம் தப்பாமல் வந்து சேருவார்கள்.

## COW'S MILK FOR THE BABY.

### குழந்தைக்குப் பசும்பால் தோடுத்தல்.

தாய்க்கு பால் வற்றியோ குறைந்தோ போய் குழந்தைக்குப் பசும்பால் கொடுக்க நேர்ந்தால், அப்போது இன்னின்ன விஷயங்களை கவனிக்கவேண்டு மென்பதைப்பற்றி மார்ச்சுமாஸத்திய 'விவேகபோதினி'யில் ஒரு வ்யாஸம் வெளியாகியிருக்கிறது.

குழந்தைக்குக் கொடுக்கப்படும் பால், சுத்தமானதாயும், ஆரோக்யமுள்ள பசுவினிடமிருந்து கறக்கப்பட்டதாயுமிருக்கவேண்டும். கறக்கு முன்னால், பசுவின் முலைக்காம்புகளை நன்றாய்ச் சுழுவித் துடைக்க வேண்டும். கறக்கிறவனுடைய கைகள் சுத்தமாகவும், பால் பாத்ரங்கள் வெந்நீரில் போட்டு எடுக்கப்பட்டனவாயுமிருக்கவேண்டும். பாலை ஊற்றி வைக்கும் பாத்ரங்களுக்கு, தூசிவிழாதபடி, மூடிகள் இருக்கவேண்டும். எப்போதும், புதிதான பாலையே குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். கறந்தபின் 12-மணி நேரம் வைக்கப்பட்டிருக்கும் பாலை, ஒருபோதும் குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது. கொடுக்கு முன்னால், பாலைச் சுடவைத்துக் கொடுப்பது நல்லது.

ஸாதாரணமாக, பசுவின் பால் குழந்தைக்குச் சற்று தகாததாகவிருக்குமாதலால், அதை வேண்டியவளவு கொதிக்கும் ஜலம்விட்டு, விளாவிக் கொடுக்கவேண்டும். பிறந்த பின் ஆறு வாரம் வரையில் 4-பங்கு ஜலத்துடன் ஒரு பங்கு பால் கலந்து கொடுக்கலாம். ஏழாவது வாரம் முதல் 12-ம் வாரம் வரையில் 3-பங்கு ஜலமும் ஒரு பங்கு பாலும் கலக்கவேண்டும். 13-ம் வாரமுதல் 18-ம் வாரம் வரையில், இரண்டு பங்கு ஜலமும் ஒரு பங்கு பாலும் கொடுக்கவேண்டும். அப்பால் ஒன்பது மாதம் வரை, பாலும் ஜலமும் ஸமமாகவிருக்கலாம். ஒன்பது மாதங்களுக்குமேல், ஜலக் கலப்பில்லாத பால் குழந்தைக்கு ஒத்துக்கொள்ளும்.

ஆகாரம் கலப்பதில் கீழே விவரித்திருக்கும் கலப்புப்பொருள்கள் பொருத்தமானவையாகவிருக்கும்:—

பிறந்த முதல் மாதத்தில்

| | முதல் வாரம் | இரண்டாம் வாரம் | மூன்றாம் வாரம் | நான்காம் வாரம் |
|---|---|---|---|---|
| கொதிக்கும் பால் | 2 | 3 | 4 | 5 |
| கொதிக்கும் ஜலம் | 5 | 6 | 7 | 8 |
| ஏடு | 1 | 1 | 1 | 1 |
| சுண்ணாம்பு ஜலம் | 1 | 1 | 1 | 1 |
| சர்க்கரை | ½ | ½ | ½ | ½ |

மேலேகாட்டிய அளவு (Tea spoon) தேக்கரண்டியின் அளவாகும். மொத்த அளவு ஒருவேளை ஆகார அளவாகும். பகலில் இரண்டு மணிக்கொருதரமும், இரவில் இரண்டு தரமும் குழந்தைக்கு ஆகாரம் கொடுபட வேண்டும்.



முதல் மாதத்துக்கு அப்பால் ஆகாரம்

| | இரண்டாம் மாதம் | 3-ம் மாதம் முதல் 6-ம் மாதம் வரையில் | 6-ம் மாதம் முதல் 9-ம் மாதம் வரையில் |
|---|---|---|---|
| கொதிக்கும் பால் ... | 1 அவுன்ஸ் | 1½ முதல் 2 | 2½ முதல் 3 |
| கொதிக்கும் ஜலம் ... | 1 ,, | 1½ முதல் 2 | 2½ முதல் 3 |
| ஏடு ... | 1 தேக்கரண்டி | 2 முதல் 4 | 2 முதல் 4 |
| சுண்ணாம்பு ஜலம் ... | 3 ,, | 4 | 4 |
| சர்க்கரை ... | 1 ,, | 1 முதல் 2 | 2 |
| பகலில் எவ்வளவு தரம் ... | 2½ மணிக்கொரு தரமாக 8 தரம் | 3 மணிக்கொரு தரமாக 7 தரம் | 3 அல்லது 4 மணிக்கொரு தரமாக:—6-7 தரம் |
| இரவில் ... | 1 ,, | 1 ,, | 2 ,, |

முதலிலிருந்தே ஏடு கொடுக்கக்கூடாது. ஜலம் கலந்தபால் சரியாக ஜீரணமானால், கொஞ்சம் கொஞ்சமாக ஏடு சேர்க்கலாம. இப்படி, ஜலம் கலந்த பசுவின் பாலை, குழந்தைகளுக்குக் கொடுப்பதில் கீழே விவரிக்கிற விஷயங்களைக் கவனிக்கவேண்டியது அவசியம்:—

1. மலத்தில் தயிர் தெரியுமானால், பச்சைப்பால், அதிகமென்பது வெளியாகும். ஆதலால், இதைக் குறைத்துக் காலக்ரமத்தில் அதிகமாக்கவேண்டும்.

2. புளிப்பு நாற்றமுள்ள மலம், அதிகமான சர்க்கரையும் கொழுப்பும் இருப்பதைக் காட்டும். ஆதலால் சர்க்கரையைக் குறைக்கவோ நிறுத்தவோ வேண்டும்.

3. வெளுப்பாயும் கெட்ட நாற்றமுமாயுமுள்ள மலம் அதிகக் கொழுப்பையும் ஏட்டையும் தெரிவிக்கும். ஆதலால், இவைகளை 3, 4 நாள்களுக்கு நிறுத்தி வைத்துப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்க வேண்டும்.

4. ஆகாரம் உட்கொண்ட உடனே குழந்தை வாந்தி பண்ணுமானால், அது மிதமிஞ்சிய ஆகாரத்தையோ, இறுகிய துணியையோ, குழந்தையை அதிகமாகத் தூக்கிக்கொண்டு போவதையோ காட்டும்.

5. சாப்பிட்டபின் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில், புளித்துப்போய்க் கட்டி தட்டிய பாலோ, ஜலமோ, வாந்தியாகுமானால், அது பாலில் அதிகமான கொழுப்பு இருப்பதைக் காட்டும்.

6. கொடுக்கும் ஆகாரத்தைக் கொண்டு, குழந்தை த்ருப்தியடையாவிட்டால், முதலில் அவ்வாகாரத்தை அதிகமாக்கி, அப்பால் அதன் ஸத்தை ஜாஸ்திப்படுத்த வேண்டும்.

7. அடிக்கடி ஆகாரத்தை மாற்றுவது குழந்தைக்குத் தீங்கை யுண்டுபண்ணும்.

8. குழந்தைக்கு வயிற்றுவலி யுண்டாகக்கூடியது ஸகஜம். அஜீர்ணத்தாலோ, பாலில் அதிகமான தயிர் அல்லது ஸத்து இருப்பதினாலோ, தாயாருடைய தேகச்ரமம், மனத்துயரம், சீரல்லாத ஆகாரம் இவைகளினாலோ வயிற்றுவலி யுண்டாகலாம். அது உண்டானால், குழந்தையின் தலையைத் தூக்கி வைத்துக் கொண்டு, வெந்நீரை, ஒரு கரண்டியைக்கொண்டோ, பாட்டிலிலிருந்தோ கொடுப்பதனால் நிற்கும். உஷ்ணமான ப்ளானல் துணியை வயிற்றின்மேல் போடலாம். மலப்ரவர்த்தியாகும்படியும் செய்யலாம். அப்போது குழந்தைக்கு வாற்கொதுமைக்கஞ்சிமட்டுந் தான் ஆகாரமாகக் கொடுக்கவேண்டும்.

ஆகாரம் கொடுக்கும் விஷயத்தில் அதிக ஜாக்கிரதை வேண்டியது அவச்யம்; க்ரமமும், அளவும் தவறக்கூடாது. பால் சர்க்கரை முதலிய பொருள்களைக் கையினால் தொடக்கூடாது. அவைகளின்மீது தூசி விழாமலும், ஈ முதலியன உட்காராமலும் மூடி வைக்கவேண்டும். பொதுவாகக் குழந்தைக்குப் பொறுக்கக்கூடிய சூட்டுடனேயே ஆகாரத்தைக் கொடுக்கலாம். ஆறிப்போன ஆகாரத்தைக் கொடாமலிருப்

பது உத்தமம். ஆகாரம் கொடுப்பதற்கு, "அல்லன்பரி" (Allenbury) பாட்டிலை உபயோகிக்கலாம்; அல்லது கிண்ணத்தையும் கரண்டியையும் உபயோகிக்கலாம். பாட்டிலை உபயோகிப்பதினால், மிதமிஞ்சிய ஆகாரம் உட்செல்வதற்கு மார்க்கமில்லை. ஆகாரம் கொடுத்தவுடன், எல்லாப் பாத்ரங்களையும் நன்றாய்க் கழுவி வைக்கவேண்டும். குழந்தையின் படுக்கையும் துணிகளும் வெகு சுத்தமாக இருக்க வேண்டும். தாய்மாரும், தாதிமாரும் அவ்விதமே சுத்தமாக இருக்க வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

## GINGER.

## இஞ்சி.

செழுமையான புது நிலங்களில் தான் இஞ்சி நன்றாய் விளையுமென்று சிலர் எண்ணிவருகிறார்கள். இது தவறென்றும் நன்றாய்ப் பண்படுத்தி எருவிடப்பட்ட எந்த நிலத்திலும் அதைப் பயிரிடலாமென்றும் "கமத்தொழில் விளக்கம்" எழுதுகிறது. செழுமையான நிலங்களில் எருவிடவேண்டிய அவசியமில்லை. இல்லாவிட்டால் பசுந்தாள் எருவாவது, மட்கிய குப்பை எருவாவது போடவேண்டும். மட்காத புது எருவைப் போடுவது நல்லதல்ல. இஞ்சி நடுவதற்கு பண்படுத்தின நிலத்தை 12-அடி நீளமும் 6-அடி அகலமும் $1\frac{1}{2}$-அல்லது 2-அடி உயரமுமான பாத்திகளாகப் பிரிக்கவேண்டும். இந்தப் பாத்திகளில் 2-அல்லது 3-முளைகளுள்ள விதைக் கிழங்குத் துண்டுகளை 10-அல்லது 12-அங்குல தூரத்துக்கு ஒன்றாக தரை மட்டத்துக்கு 3-அங்குலத்துக்குக் கீழே நடவேண்டும். பாத்தியில் ஈரமிருக்கும்படி அதை தழையாலாவது வைக்கோலாலாவது மூடவேண்டும். ஆமணக்கம் பிண்ணாக்கையாவது அல்லது அதைப்போன்ற எருவையாவது ஏக்கருக்கு ஒரு டன் வீதம் மாதத்துக்கு இரண்டு மூன்று முறை பாத்திகளின்மேல் தூவிவிடவேண்டும். இப்படிச் செய்வதால் இஞ்சி பெரியதாய் வளர்ந்து முற்றுவதற்கு ஹேதுவாகும்.

பொதுவாய்ச் சொல்லுமிடத்து நட்ட 10-மாஸத்துக்குப்பிறகு இஞ்சியை வெட்டி எடுக்கலாம். இலைகள் காய்ந்து போவது இஞ்சி வெட்டுவதற்கு ஏற்ற நிலைமையிலுள்ள தென்பதைக் காட்டும். மழை மப்புக் காலமாயிருந்து, இஞ்சிக் கிழங்கை உலர்த்தி எடுப்பதற்கு அஸௌகர்யமாயிருந்தால் சில வாரங்கள் பொறுத்துக் கிழங்கு வெட்டலாம். அல்லது மறு பருவம் வரைக்கும் வெட்டாமலும் விடலாம். இரண்டாம் வர்ஷம் வரையில் நிலத்துக்குள்ளேயே விட்டிருந்த இஞ்சி நன்றாக முற்றி மா அதிகமுள்ளதாயிருக்கும்.

சராசரி ஒரு ஏக்கருக்கு 10,000-ராத்தல் இஞ்சி கிடைக்கும். அதை உலர்த்தினால் 2,500 ராத்தல் சுக்கு கிடைக்கும்.

இஞ்சியைக் காயவைத்து சுக்காக்காமல், பச்சையாகவே விற்பதாயிருந்தால், அதைப் பத்ரப்படுத்தி வைக்க பின்வரும் விஷயங்களை கவனிக்கவேண்டும். அதை ஓர் இருண்ட குளிர்ச்சியான அறையில் காலேந்தடி உயரத்துக்குக் குவியலாக்கி வைப்பது வழக்கம். உஷ்ண காலத்தில் குவியலின் நடுப்பாகம் சூடாயிராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்காகக் குவியல்களை அடிக்கடி பரவலாய்ப் போட்டு, சூடு தணிந்ததும் மறுபடி குவியலாக்கவேண்டும். அழுகிப்போகும் இஞ்சிக் கிழங்குகளை அப்போதப்போது எடுத்தெறிந்துவிடவேண்டும். இஞ்சிக் குவியலின்மேல் காய்ந்த இலை போட்டு மூடி அடிக்கடி அவற்றின்மேல் தண்ணீர் தெளித்துவரவேண்டும்.

### சுக்கு.

சுக்கு செய்வதற்கு முதலில் இஞ்சியை வெயிலில் காயவைத்துப் பிறகு மேல் தோலை மெதுவாக்குவதற்காக தண்ணீரில் நனைக்கவேண்டும். பிறகு இஞ்சியின் சதைப்பாகம் கெடாதபடி தோலைச் சுரண்டி எடுத்துவிடவேண்டும். தோலெடுத்த இஞ்சியை நல்ல ஜலத்தில் கழுவி மூன்று நான்கு நாட்கள் வெயிலில் பரவலாய்ப் போட்டு நன்றாய்க் காயவிடவேண்டும். ஒருமுறை காயவைத்த இஞ்சியில் மறுபடி ஈரம் படலாகாது. மழை அல்லது ஈரம் பட்டால் இஞ்சி பூசணம் பிடித்துக் கறுத்துக் கெட்டுப்போகும். காயும்போது அடிக்கடி கிழங்குகளைப் புரட்டிக்கொடுக்கவேண்டும். இப்படிச் செய்வதால் இஞ்சியில் எல்லாப் பக்கமும் ஒரேவிதமாய்க் காயும்.

---


| | | | | |
|---|---|---|---|---|
| 305. | விவஸாய விளக்கம் ... விவஸாய இன்ஸ்பெக்டர் வி. ராஜகோபால் எழுதியது. மூன்றாம் பதிப்பு படங்கள் உள்ளது. | 1 | 4 | 0 |
| 315. | விவஸாய போதினி கெட்டி அட்டை ... நீடாமங்கலம் - அ. சேதுராமய்யரால் இயற்றப்பட்டது. படங்களுள்ளது. | 1 | 4 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.




# News and Notes.

# வர்த்தமானக் குறிப்புகள்.

### ஜாதி வழக்கங்கள்.

ஜாதிக் கட்டுப்பாடுகள் சில இடங்களில் ரொம்ப கடுமையாயிருக்கின்றன. ஒரு ஜாதியைச்சேர்ந்தவர் அந்த ஜாதிக்கு ஏற்பட்ட வழக்கங்களை அனுஸரிக்கத்தவறிவிட்டால் அந்த ஜாதியார் அவருக்கு அபராதம் போடுவதோடு, சில ஸமயங்களில் பஹிஷ்காரம் செய்வதுமுண்டு. இந்தக் கட்டுப்பாடுகள் வட இந்தியாவில் அதிகமென்று தோன்றுகிறது. பரோடாவில் ஜாதி வழக்கங்களில் ஏதாவது பொது ஸன்மார்க்கத்துக்கு விரோதமாகவோ, அதிகச்செலவுள்ளதாகவோ அல்லது ஜனங்களின் நன்மைக்கு பாதகமாகவோ அல்லது ஜனங்களில் அதிகமானபேர்களுக்கு ஸம்மதமில்லாமலோ இருந்தால், அந்த வழக்கங்களை அனுஷ்டிக்கும்படி அந்தந்த ஜாதித்தலைவர்கள் கட்டுப்படுத்தக்கூடாதென்று கோர்ட்டுகள் தீர்மானிக்கலாமென பரோடா கவர்ன்மெண்டார் ஒரு மசோதாகொண்டு வந்திருக்கிறார்கள். இவைகளுக்கு சில உதாரணங்கள் சொல்லுகிறோம். சில ஜாதிகளில் ஒரு குடும்பத்தில் யாராவது இறந்துபோனால் ஸ்த்ரீகள் தெருவில் மாரடித்துக்கொண்டுபோவது வழக்கம். இதை அனுஷ்டிக்காவிட்டால் ஜாதித்தலைவர் அபராதம் போடுவதுண்டு. சில ஜாதிகளில் அபரகர்மங்கள் முடிந்தபிறகு தலைக்ஷவரம் செய்துகொள்வதும், மீசையையும் தாடியையும் எடுத்துவிடுவதும் உண்டு. இதைச் செய்யாதவர்களை ஜாதியார் சுபாசுபங்களில் சாப்பாட்டுக்கு அழைப்பதில்லை. ஒரு ஜாதியின் ஒரு உள்பிரிவைச் சேர்ந்தவர் வேறு உள்பிரிவில் கல்யாணம் செய்துகொண்டால் ஜாதியிலிருந்து விலக்கிவிடுவார்கள். சில ஜாதிகளில் கடல் யாத்ரைசெய்தால் அபராதமும், அபராதம் செலுத்தத்தவறினால் ஜாதிப்ரஷ்டமும் ஏற்படும். ஒரு குறிப்பிட்ட வயஸுக்குள் பெண்களைக் கல்யாணம் செய்துகொடுக்காவிட்டால் பெண்ணைச் சேர்ந்தோர் ஜாதியிலிருந்து விலக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட வழக்கங்கள் அநீதமானதென்று யாராவது வ்யாஜ்யம் போட்டு, கோர்ட்டாரும் அவ்விதமே தீர்மானித்தால், அவ்வழக்கங்களை அனுஸரிப்பதும், அனுஸரிக்காதவர்களை ஜாதித்தலைவர் தண்டிப்பதும் கூடாது. கோர்ட்டாரின் தீர்மானத்துக்கு விரோதமாய் நடப்பவர்களுக்கு ஜெயில் வாஸமும் அபராதமும் கிடைக்கும்.

### ஒரு பஞ்சம ஸன்யாஸி.

ஸுமார் 27-வயஸுள்ள ஒரு பஞ்சம ஸன்யாஸி தமது இனத்தாரை முன்னுக்குக்கொண்டுவர ரொம்பவும் முயற்சிசெய்துவருகிறாரென்று கேட்டு ஸந்தோஷிக்கிறோம். இவர் பெயர் ஸ்வாமி ஸஹஜானந்தர். இவருடைய பெற்றோர்கள் இன்னும் ஜீவித்திருக்கிறார்கள். இவர் வடஆற்காடு ஜில்லா, ஆற்காடு தாலூகா புதுப்பாக்கத்தில் ஜனனமானார். பால்யத்தில் அமெரிக்கன் ஆற்காட் மிஷன் பாடசாலையில் கல்வி பயின்றார். நீலமேகஸ்வாமி என்னும் வேளாளரிடம் வேதாந்தம் கற்றுக்கொண்டார். பிறகு சூளை கரபாத்ர சிவப்ரகாசஸ்வாமியிடம் கல்விபயின்று ஸன்யாஸாச்ரமம் பூண்டார். பிறகு சின்னப்ப நாயகரிடம் புராணமும், முருகேச முதலியாரிடம் தர்க்க சாஸ்த்ரமும், வ. உ. சிதம்பரம்பிள்ளையினிடம் திருக்குறளும் பாடங்கேட்டார். மைலாப்பூர் டாக்டர் எம். வி. நஞ்சுண்டராவின் சிபார்சின்மேல் இரண்டு ப்ராமணர்கள் அவருக்கு ஸம்ஸ்க்ருதம் கற்றுக்கொடுத்தார்கள். அவருக்கு வேதாந்த விஷயங்களில் அதிக தேர்ச்சியுண்டு. அவர் ப்ரஸங்கங்கள் ரொம்ப நேர்த்தியாயிருக்கின்றனவாம். அவர் தாம் சென்ற இடங்களில் ப்ரஸங்கங்கள் செய்வதோடு அவ்விடங்களிலுள்ள பஞ்சமர்களின் நிலைமையை உயர்த்திவருகிறார். அவருடைய தூண்டுகோலால் அநேக ஊர்களில் பஞ்சமர்களெல்லாம் குடி முதலிய துர்வாடிக்கைகளை கட்டோடு ஒழித்திருக்கிறார்களாம். அவர்களுக்கு ஆத்ம ஞானத்தைப்பற்றியும் அவர் கற்பித்து வருகிறாராம்.

### ரத்தபேதிக்கு சிகித்ஸை.

குடலுக்குள் அழற்சி அதிகரித்தோ, சீதம் மிகுதியாகச் சேர்ந்தோ, குடலில் ரணம்போன்ற உணர்ச்சியேற்பட்டு ரத்தம் தனியாக வாவது, சீதங்கலந்தாவது வெளிவருமானால், அப்பொழுது அடியில் வரும் ஔஷதத்தை உபயோகிப்பதால் சிறிதேனும் நன்மையுண்டாவது நிச்சயம். சிலருக்கு மிகவும் தீவ்ரமான நிலைமையிலிருந்த வ்யாதியைத் தீர்க்கவும் இவ்வௌஷதமுறை உபயோகமாயிருந்ததுண்டு.

முதிர்ந்த தேங்காயை துருவிப் பிழிந்து வடிகட்டிய பால்போன்ற த்ரவத்தை தினத்திற்கு மூன்று வேளை வீதம் உட்கொண்டு வரவேண்டும். வேளைக்கு ஒரு அவுன்ஸுக்குக் குறையாமல் தேங்காய்ப்பாலை உட்கொள்ளலாம். ரத்தக் கழிச்சல் அதிகமாயிருந்தால் அதற்கு இதை உபயோகிக்கும் முறையாவது:—

| | |
|---|---|
| தேங்காய்ப்பால் | 3-அவுன்ஸ் |
| ஆமணக்கெண்ணெய் | 1 ,, |
| பனங்கற்கண்டு | 2-தோலா |

இவற்றை நன்ருகக் குழப்பிப் பாயஸம்போல் வருகையில் உட்கொள்ளச் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால் நன்ருக இரண்டு மூன்று முறை விரேசநம் ஆகிவிடும்; அப்பொழுது குடலிற் சேர்ந்துள்ள சீத-ரத்தங்கள் கழுவப்பட்டதுபோல வெளியாய்விட, வயிற்றுக்கடுப்பும் அடுத்தாற்போல நிவ்ருத்தியாகும்.—வைத்திய கலாநிதி.

ஹிந்து ஸ்த்ரீகள் யூனிவர்ஸிட்டி.

ப்ரொபஸர் கார்வேயின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஹிந்து யூனிவர்ஸிட்டியில் தற்போது ஒரு ஸ்த்ரீகள் காலேஜ் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதில் சென்றவர்ஷம் 5 மாணவர்கள் சேர்ந்து வாசித்தார்கள். இந்த வர்ஷம் புதிதாக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள ஒரு மெட்ரிகுலேஷன் பரீக்ஷை நடத்தப்படும் என்று தெரிகிறது. இதில் தேறிக் காலேஜில் சேர்ந்து வாசிக்கும் திறமையுள்ள ஸ்த்ரீ மாணவர்கள் 4-பேர்களுக்கு மாஸம் 10 ரூபாய் வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிருர்கள். இதுவரையில் இந்த யூனிவர்ஸிட்டிக்கு மொத்தம் 50,000 ரூபாய் வரையில் நன்கொடை வாக்களிக்கப்பட்டிருக்கிறது. சிலர் வர்ஷந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுப்பதாய் வாக்களித்திருக்கிருர்கள். இப்படி வாக்களிக்கப்பட்டிருக்கும் தொகை 10,000 ரூபாயாகும்.

பஞ்சாபில் ஜாகீர் ஏற்பாடு.

பஞ்சாப் கவர்ன்மெண்டார் அந்த மாகாணத்தில் கவர்ன்மெண்டுக்கு ரொம்ப உதவியாய் உழைத்து வந்தவர்களில் சிலருக்கு ஜாகீர்கள் கொடுக்கத்தீர்மானித்திருந்ததை இந்தியா மந்த்ரி அங்கீகரித்திருக்கிருர். வர்ஷம் 1,000 ரூபாய்க்கு மேற்படாத வரும்படியுள்ள ஜாகீர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். ஜாகீர்தாரும் அவருடைய ஸந்ததியாரும் அரசருக்கு விச்வாஸம் பாராட்டி வருவதோடு, கவர்ன்மெண்டுக்கும் பொதுஜன நன்மைக்கும் தங்களாலியன்றமட்டும் உழைத்துவரவேண்டும். இந்த வர்ஷத்தில் மொத்தம் 10,000 ரூபாய் மதிப்புள்ள ஜாகீர்கள் கொடுக்கப்படும். பிறகு வர்ஷந்தோறும் 5,000 ரூபாய் மதிப்புள்ள ஜாகீர்கள் கொடுக்கப்படும்.

இம்பீரியல் கான்பரென்ஸில் இந்தியாவின் நிலைமை.

ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் பற்பல நாடுகளின் ப்ரதிநிதிகள் ஒன்றுகூடி இம்பீரியல் கான்பரென்ஸ் என்று ஒரு ஸபை நடத்திவருகிருர்கள். இதில் இதுவரையில் இந்தியா சேர்க்கப்படவில்லை. தற்போது இந்தியாவையும் அந்தக் கான்பரென்ஸில் சேர்த்துக் கொள்வதற்காக, ஷை கான்பரென்ஸின் அமைப்பை மாற்றவேண்டியது அவச்யமென்றும், அவ்விதம் மாற்றுவதற்காக, பற்பல ஸ்வய ஆட்சி நாடுகளின் ஸம்மதத்தை வாங்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், அடுத்த "இம்பீரியல் கான்பரென்ஸில் இந்த சீர்திருத்தத்தைச்செய்யவேண்டுமென்றும் இம்பீரியல் யுத்தகௌன்ஸிலார் ஒரு தீர்மானம் செய்திருக்கிருர்கள்.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற ஜனவரிமாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 20 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| 1 பாங்கி லேவாதேவி கம்பெனி | 2,00,00000 |
| 1 ரெயில்வே, ட்ராம்வே கம்பெனி | 22,00,000 |
| 1 அச்சடித்து ப்ரசுரம் செய்யுங்கம்பெனி | 25,000 |
| 9 வ்யாபாரக்கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 82,31,000 |
| 3 தேயிலைத்தோட்டக் கம்பெனிகள் | 11,50,000 |
| 1 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 1,00,000 |
| 1 சுரங்கக்கம்பெனி (மேலே சொன்னது தவிர) | 2,00,000 |
| 3 கம்பெனிகள் (மேலே சொன்னவைதவிர) | 2,20,000 |
| 20 | 3,21,26,000 |

இந்திய கூலியாட்கள் அன்ய நாடுகளுக்குப் போவது.

இந்தியர்கள் அன்யநாடுகளுக்குக் குடியேறிப்போவது விஷயமாக லண்டனில் ஒரு கான்பரென்ஸ் வருகிற மேமாஸம் நடக்கப்போகிறது. அதில் இந்தியாவுக்காக ஆறு பிரதிநிதிகள் இருப்பார்களாம். அவர்களாவன: இந்தியா மந்த்ரியின் பார்லிமெண்டரி உதவி ஸெக்ரெடரி, ஒரு இந்தியா ஆபீஸ் உத்யோகஸ்தர், ஸர் ஜேம்ஸ் மெஸ்டன், ஸர் எஸ். பி. ஸின்ஹா, மிஸ்டர் மேஜரிபாங்க்ஸ், லெப்டினண்ட் கர்னல் கென்னடி.—கடைசி இருவர்களும் கூலியாள் சேர்த்து அனுப்பும் விஷயங்களில் நிபுணர்களாம்.



இந்தியாவுக்கு ஒரு ஏரோப்ளேன்.

இங்க்லண்டிலுள்ள லீட்ஸில் சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபார ஸபையார் இந்தியாவுக்கு ஒரு ஏரோப்ளேன் வெகுமதியாகக்கொடுத்திருக்கிருர்கள். யுத்தம் முடியுமட்டும் இந்த ஏரோப்ளேன் யுத்த ஆபீஸுக்கு கொடுத்துவைக்கப்படும். யுத்தம் முடிந்ததும் இந்த ஏரோப்ளேனை இந்தியாவுக்கு அனுப்பிவிடுவார்கள். யுத்தத்தில் இந்த ஏரோப்ளேன் நாசமாகிவிட்டால், யுத்த ஆபீஸார் புதிதாய் ஒன்று செய்து இந்தியாவுக்கு அனுப்புவார்கள்.

"ஷண்முக ஸுந்தரம்."

ஷண்முகஸுந்தரம் அல்லது பெருமையின் சிறுமையென்னும் இந்த நாவலை எழுதியவர் மிஸ்டர் பி. எஸ். ஸுப்ரமண்ய ஐயர். இதன் கதைப்போக்கு மனத்தைக் கவரும் விதமாய் அமைந்திருப்பதுடன் தமிழ்நடை இனிமையாயும் தெளிவாயும் இருக்கிறது. இதன்விலை ரூ. 1. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3 4, கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்றெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

பஞ்சாபில் கட்டாயப்படிப்பு.

பஞ்சாப் மாகாணத்தில் இதுவரையில் ப்ரைமெரிக் கல்வியானது அநேகமாய் இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்பட்டுவருகிறது. இப்பொது சில தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரதேசங்களில் மாணவர்களுக்குக் கட்டாயப்படுத்திக் கல்வி கற்றுக்கொடுப்பதாக பஞ்சாப் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிருர்கள்.

பெல்ஜியத்தின் அரசர்.

பெல்ஜியத்தின் அரசராகிய அல்பர்ட், ஜலத்தைத் தவிர வேறெந்த பானத்தையும் அருந்துவதில்லையாம். அவர் அதிக பலசாலியாம். ஒரு அங்குலம் அகலமுள்ள ஒரு இரும்புக்கழியை இரண்டுகையாலும் பிடித்து வளைக்கக்கூடுமாம். அவர் 14 வயதுள்ள தமது புத்ரனை ஒரு கையிலும், 10 வயதுள்ள தமது புத்ரியை ஒருகையிலும் தூக்கிக்கொண்டு, இரண்டு கைகளையும் நேராக நீட்டிப் பிடித்துக்கொண்டிருக்கக் கூடுமாம்.

"மனத்திற்குறுத்தும் மதிவிளக்கம்."

இது நீதிகளைப்புகட்டும் ஒரு உபயோகமுள்ள சிறு புஸ்தகம். இதில் பற்பல அரிய நீதிவிஷயங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. வித்யாவதானம் பி. பொன்னுவேற்பிள்ளை எழுதியது. இதன் விலை அணு 4. வேண்டுவோர் சென்னை லோகோபகாரி ஆபீஸுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

மலையாளம் ஜில்லா கான்பரென்ஸ்.

இது இந்தமாஸம் 23-ந்-தேதியன்று கள்ளிக்கோட்டையில் கூடிற்று. மிஸ்டர் வி. பி. ராமஸ்வாமி ஐயர் ப்ரெஸிடெண்டாக இருந்து ஹோம் ரூல் (ஸ்வய ஆட்சி), தேச பாதுகாப்புச்சேனை, யுத்தக்கடன் முதலியவைகளைப்பற்றிப் பேசினர். ஸ்வய ஆட்சி, ஒப்பந்தக்கூலி ஏற்பாடு, யுத்தக்கடன் முதலியவைகளைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

"கமலபவன அற்புதம்."

இது மிஸ்டர் ஒ. ஸம்பத் எழுதிய ஒரு நாவலாகும். இதன் கதைப்போக்கு நேர்த்தியாயிருக்கிறது. நடை தெளிவாயும் நன்ருயும் இருக்கிறது. இதன்விலை அணு 10. வேண்டுவோர் சென்னை, பார்க்டவுன், மிஸ்டர் ஆர். உலகநாதனுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

ஐரோப்பிய யுத்தம்.

எப்ரல்மீ 10-தேதி.

ஆராஸுக்கு வடக்கே விமிரிட்ஜ் என்னும் குன்றை ப்ரிட்டிஷார் பிடித்திருக்கிருர்கள். ஜெர்மானியர்கள் ரீம்ஸைத் தாக்கிக்கொண்டிருக்கிருர்கள்.

13-தேதி.

ப்ரிட்டிஷார் மாஞ்சிலெப்ரிக்ஸ் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிருர். ரஷ்யர்கள் பாக்தாதுக்கு 70 மைல் வடகிழக்கிலுள்ள கிஸில் ரோபாத் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிருர்கள்.

16-தேதி.

ஜெனரல் அலெக்ஸியப் ரஷ்ய ஸேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

17-தேதி.

ப்ரெஞ்சுக்காரரும் ப்ரிட்டிஷாரும் ரொம்ப ஊக்கத்துடன் மேற்குப் போர்முகத்தில் எதிர்த்து முன் சென்றுகொண்டிருக்கிருர்கள். ப்ரிட்டிஷார் விமி

குன்றிலிருந்து முன் சென்று விஸீ ஸிவென்ஸி என்னும் இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். அதோடு, வென்ஸின் சுற்றுப்புறங்களையும், க்ரிகோர்ட், பாயட் என்னும் இடங்களையும் பிடித்திருக்கிறார்கள். சென்ற 8-நாட்களில் ஜெர்மானியர்களுக்கு இறந்தவர்கள், காயம் பட்டவர்கள் கைதியானவர்கள் ஆகிய இவர்கள் உள்பட ஒரு லக்ஷம்பேர்கள் சேதமாம்.

20-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் உக்ரமாய் சண்டைசெய்து முன்சென்று கொண்டிருக்கின்றன.

ஜெர்மானியர்கள் 12 புது டிவிஷன்களைக்கொண்டு வந்து எதிர்த்தும் ஓரிடத்திலாவது முன் செல்லவில்லை. ப்ரிட்டிஷார் இதுவரையில் 228 பீரங்கிகளைப் பிடித்திருக்கிறார்கள்.

21-தேதி.

துருக்கியானது அமெரிக்க ஐக்ய மாகாணங்களோடு தூதுப் பேச்சுகளை நிறுத்திவிட்டது.

25-தேதி.

ருமேனியாவில் அரசரே ஸேனாதிபதியாயிருக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக ஷெர்பாட்செப் என்னும் ருஷ்ய தளகர்த்தர் இரண்டாவது ஸேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாநா ஸங்கதி.

நாட்டுக் கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்யும் நோக்கத்துடன், மைஸூர் கவர்ன்மெண்டார், பங்களூரில் தொழில்களுக்கு உதவும் மூலப்பொருள்களை விற்க டெபோ ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். கைத்தொழில் நடத்துகிறவர்களுக்கு மூலப்பொருள்களைக் கொடுத்து உதவி, ஸாமான்கள் செய்துவிற்கும்போது மூலப்பொருள்களின் விலையை வாங்கிக்கொள்வார்கள்.

* * *

இந்தியாவுக்கு ஸ்வய ஆட்சி கிடைப்பது விஷயமாய் முயற்சிசெய்ய இந்தியாவிலிருந்து காங்க்ரெஸைச் சேர்ந்த 10 பேர்கள் வருகிற மே மாஸக்கடைசியில் இங்க்லண்டுக்குப் போகப்போகிறார்கள் அவர்களுள் மிஸ்டர் ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியும் மிஸ்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயரும் சென்னையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குப் பிறகு முஸ்லிம்லீகைச்சேர்ந்த 10 பேர்கள் இதேவிஷயமாய் இங்க்லண்டுக்குப் போவார்களாம்.

ஸ்ரீரங்கத்தில் அரிசி வ்யாபாரியாகிய மிஸ்டர் எம். முத்துவெங்கட நாராயண செட்டியார் 7,000 ரூபாய் செலவழித்து ஒரு க்ருஷ்ண படம் தயாரித்திருக்கிறார். படம் எழுதிய சித்ரக்காரரின் பெயர் குபேந்த்ர ராஜாவாம். படத்தில் உள்ள பற்பல ஆபரணங்கள் வாஸ்தவமான ரத்னங்களால் இழைக்கப்பட்டனவாம். இது மிஸ்டர் செட்டியாரின் ஸொந்த உபயோகத்துக்காக எழுதப்பட்டது.

* * *

கொச்சி ஸம்ஸ்தானத்தில் பற்பல க்ராமங்களில் ஏற்பட்டிருக்கும் க்ராமப் பஞ்சாயத்துகள் இதுவரையில் க்ராமஸுகாதாரம், விவஸாய விஷயங்கள், ரஸ்தா நிர்வாகம் ஆகிய இவைகளை கவனித்து வந்தன. இப்போது அவைகள் சிறுவிவில் வ்யாஜ்யங்களையும் விசாரிக்கலாமென்று கொச்சி கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * *

மைஸூர் ராஜ்யத்தில் சந்தைகள் உத்ஸவங்கள் முதலியவைகள் நடக்கும் ஸ்தலங்களில் மதுபானம் விற்பனைத்தடுக்க ஏற்பாடு செய்வதாக மைஸூர் திவான் மிஸ்டர் விச்வேச்வரய்யா ஸமீபத்தில் நடந்த மைஸூர் ஜனப்ரதிநிதி ஸபையில் தெரிவித்தார்.

* * *

இங்க்லண்டில் கேம்ப்ரிட்ஜ் யூனிவர்ஸிட்டியில் கணித ஆராய்ச்சி செய்துவரும் மிஸ்டர் எஸ். ராமானுஜம் ஐயங்காருக்கு பி. ஏ. டிக்ரிபட்டம் கிடைத்திருக்கிறது.

* * *

இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு ரூபாய் மதிப்புள்ள கரன்ஸிநோட்டுகள் வெளியிடப்போகிறார்களென்று 'பயோனீர்' பத்ரிகையின் வ்டாபாரநிருபர் சொல்லுகிறார்.

* * *

ஷிமோகாவில் கரிசெய்வதற்கும், இரும்பு தயார் செய்வதற்கும் வேண்டி மைஸூர் கவர்ன்மெண்டார் 20 லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

* * *

பர்மாவிலுள்ள எந்தத்துறைமுகத்திலிருந்தும் கல்கத்தாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது.


# ஜனாபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்ற வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜீ. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்கள௵ வைகாசிமீ. MAY—JUNE 1917. { ஸஞ்சிகை 5. No. 5.


THE REGISTRAR OF ... REGISTERED 30 AUG 1917 ... MADRAS.

## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| ⅛ do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | அயல்நாடு |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறு மாஸத்துக்கு... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | | | 5 0 0 |
| ½ | ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ | ,, | ,, | ,, | 1 4 0 |
| ⅛ | ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜீ. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# AMERICA AND THE WAR.
## அமெரிக்காவும் யுத்தமும்.

சென்ற மாஸத்து 'ஜனாபிமானி'யில் அமெரிக்கா ஐக்ய நாடுகள் ஜெர்மனியின்மேல் யுத்தம் தொடங்கியிருப்பதாகத் தெரிவித்தோம். அதற்கு முன்னால் பிப்ரவரி மாஸம் 3-ந்தேதியன்றே இரண்டு தேசங்களுக்கும் பேச்சு வார்த்தைகள் அற்றுப்போயின. இதற்குக் காரணம் ஜெர்மனியானது கடல்களில் சில குறிப்பிட்ட இடங்களில் வரும் எந்தக் கப்பலையும் ஸப்மரீன்களைக்கொண்டு மூழ்கடித்துவிடப் போவதாகத் தெரிவித்ததே.

சென்ற வர்ஷம் மே மாஸத்தில் ஜெர்மன் கவர்ன்மெண்டார், வ்யாபாரக் கப்பல்களை, முன் எச்சரிக்கை செய்து, கப்பலில் உள்ளவர்கள் தப்புவதற்கு உதவிபுரிந்த பிறகே மூழ்கடிப்பதாக ஒப்புக்கொண்டார்கள். ஆனால் எந்தக் கப்பலாவது நிற்கச்சொன்னவுடன் நிற்காமல், ஓடிப்போகவோ, அல்லது ஸப்மரீனை எதிர்க்கவோ முயன்றால், ஸப்மரீனானது எச்சரிக்கை செய்யாமலே அதைத் தாக்கிவிடுமென்று நிபந்தனை ஏற்படுத்திக்கொண்டார்கள். வெகுகாலம் வரையில் மேற்குப் போர்முகத்தில் ஒரு கக்ஷியாரும் முன் செல்லாமலிருந்ததாலும், யுத்தம் வெகு காலம் இழுத்துக்கொண்டிருக்கும் போலிருந்ததாலும், வேறு சில போர்முகங்களில் ஜெர்மானியர்கள் ஒருவாறு முன் சென்று ஜயம் பெற்றதாலும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எண்ணி, ஜெர்மன் கவர்ன்மெண்டார் தாங்கள் ஜயித்தவர்களாக பாவித்துப் பேசி, எதிரி கவர்ன்மெண்டுகளை ஸமாதானத்துக்கு வரும்படி கேட்டார்கள். ஆனால் ஜெர்மன் கவர்ன்மெண்டார் தாங்கள் அதற்கு முன் செய்த அக்ரமங்களை ஒப்புக்கொள்ளாததாலும், அவர்கள் பிடித்துக்கொண்டிருந்த ராஜ்யங்களை விட்டுவிடுவதாகத் தெரிவிக்காததாலும், நேச அரசுகள் ஸமாதானத்தை விரும்பாமல் ஜெர்மனியைத் தோற்கடித்து நீதியை உலகில் நாட்டுவதே சரியெனத் தீர்மானித்தன. அமெரிக்கா ஐக்ய நாடுகளின் ப்ரெஸிடெண்டும் ஸமாதானம் ஏற்படும் விஷயமாய் முயன்றும் நேச அரசுகள் அதற்கு இடங்கொடுக்கவில்லை. ஜெர்மனியின் ராணுவச் செருக்கு அடங்கும் வரையில் ஸமாதானம் செய்வதில்லையென்று அவைகள் தீர்மானம் செய்துகொண்டன.

ஸமாதான முயற்சிகள் பயன்படாமல்போகவே, ஜெர்மனியானது எப்படியாவது யுத்தத்தில் ஜயிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு, அதற்கேற்ற வழி ஸப்மரீன்களைக் கொண்டு யுத்தம் செய்வதே யென்று தீர்மானித்துவிட்டது. வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்து வந்தால், இங்க்லண்டுக்கு சோற்றுக் கஷ்டமுண்டாகி அது ஸமாதானத்துக்கு வரும்; அது வழிக்கு வந்தால் இதர தேசங்களும் ஸமாதானத்துக்கு வருமென்று ஜெர்மனி எண்ணிற்று. இதற்காக ப்ரிட்டிஷ் ஐல்ஸ் என்னும் இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், அயர்லண்ட் ஆகிய இந்த தேசங்களைச் சுற்றிலுமுள்ள கடல்களிலும், ப்ரான்ஸ், இட்டலி ஆகிய இந்த தேசங்களின் ஓரமாயுள்ள கடல்களிலும் எந்தக் கப்பல் வந்தாலும், அது எந்த தேசத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும், அதை மூழ்கடித்துவிடத் தீர்மானித்தது. இப்படித் தீர்மானித்தது யுத்தத்தில் சேராத தேசங்களின் உரிமைகளுக்கு விரோதமானது. இதனால் அமெரிக்காவின் கடல் வ்யாபாரத்துக்கும் ஜனங்களுக்கும் நஷ்டம் ஏற்படும். மேலும் வ்யாபாரக் கப்பல்களை எச்சரிக்கை செய்யாமல் மூழ்க்கடிப்பதில்லை யென்று முன் சொன்ன



வார்த்தைக்கு விரோதமானது. ஆகவே அமெரிக்காவின் கவர்ன்மெண்டார் ஜெர்மனியோடு தூதுப்பேச்சு வார்த்தைகளை விட்டுவிட்டார்கள். அதோடு, அமெரிக்காவின் வ்யாபாரக் கப்பல்களுக்கு ஸப்மரீன்களால் கெடுதலேற்படாதபடி செய்ய அவைகளில் பீரங்கிகள் ஏற்றிக்கொண்டு போகலாமென்று உத்தரவிட்டார்கள்.

ஜெர்மனியானது தனது தீர்மானத்தின்படியே அது குறிப்பிட்ட கடல்ப்ரதேசத்தில் வந்த கப்பல்களில் மூழ்கடிக்கக்கூடியவைகளை எல்லாம் மூழ்கடித்தது. அநேக அமெரிக்கக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதோடு, பல அமெரிக்க ப்ரஜைகளும் அதனால் உயிர் துறந்தார்கள். இதோடு நில்லாமல் ஜெர்மன் கவர்ன்மெண்டார் வேறுவழிகளிலும் அமெரிக்காவுக்கு விரோதமாக நடந்துகொண்டார்கள். மெக்ஸிகோவை அமெரிக்க ஐக்யநாடுகளுக்கு விரோதமாக சண்டை செய்யும்படி தூண்டவேண்டுமென்று ஜெர்மனியின் அந்ய தேச வ்யவஹார மந்த்ரியானவர் மெக்ஸிகோவிலுள்ள ஜெர்மன் தூதருக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினார். இந்தக் கடிதம் அமெரிக்க ஐக்ய நாடுகளின் கவர்ன்மெண்டார் வசம் அகப்பட்டது. இந்தக் கடிதத்தில் இன்னும் என்ன கண்டிருந்ததென்றால், மெக்ஸிகோவானது அமெரிக்க ஐக்யநாடுகளின்மேல் யுத்தம் செய்து, அதற்கு (மெக்ஸிகோவுக்கு), முன்பு ஸொந்தமாயிருந்த சில மாகாணங்களைக் கைப்பற்றவேண்டும். அது (மெக்ஸிகோ) ஜப்பானோடு உடன்படிக்கை செய்துகொண்டு, ஜப்பானையும் அமெரிக்காவுக்கு விரோதமாய் சண்டை செய்யத் தூண்டவேண்டும். இப்படிச் செய்தால் ஜெர்மனியானது, மெக்ஸிகோவுக்குப் பண உதவி செய்யும்.

இந்தக் கடிதம் வெளிக்கு வரவே அமெரிக்கர்களுக்கு ஜெர்மனியின்மேல் ஆத்ரம் அதிகமாயிற்று.

இதோடு அமெரிக்காவிலுள்ள ஜெர்மனியின் தூதரும், அவருடைய உத்யோகஸ்தர்களும், அவர்கள் உத்தரவுப்படி நடந்து வந்த வேறு பலரும், அமெரிக்கா தேசத்தில் கலகங்களும், வேறு கெடுதல்களும் ஏற்படும்படி செய்ய, பலவிதத்திலும் முயன்று வந்தார்கள்.

இவைகளையெல்லாம் அறிந்த அமெரிக்க ஐக்யநாடுகளின் கவர்ன்மெண்டார் சென்ற ஏப்ரல் மாஸம் 6-ந்தேதியன்று ஜெர்மனியின் மேல் யுத்தம் தொடங்கினார்கள்.

### அமெரிக்காவின் ப்ரஸிடெண்ட்.

அமெரிக்க ஐக்ய நாடுகள் என்பது வட அமெரிக்காவின் மத்ய பாகத்திலுள்ள ஒரு பெரிய குடியரசு தேசம். இதில் 48-தனி நாடுகளும் 2-மாகாணங்களும் அடங்கியிருக்கின்றன. இந்த குடியரசுக்குத் தலைவராயிருப்பவர் அதாவது ப்ரெஸிடெண்டாயிருப்பவர் மிஸ்டர் வுட்ரோ வில்ஸன் என்பவர். இவர் 1856-ம் வர்ஷம் ஜனனமானார். இவர் கல்வியில் தேறிய பிறகு அமெரிக்காவிலுள்ள ஒரு ஸர்வ கலாசாலையில் 20-வர்ஷ காலம் சட்டம் (நிர்மாணம்), ராஜாங்க சாஸ்த்ரம் ஆகிய இவைகளுக்கு ப்ரொபஸராக இருந்தார். 1902-ம் வர்ஷம் முதல் 1910-ம் வர்ஷம் வரையில் அதே யூனிவர்ஸிட்டியின் தலைவராக இருந்தார். 1911-ம் வர்ஷம் முதல் 1912-ம் வர்ஷம் வரையில் அமெரிக்கா நாடுகளில் ஒன்றாகிய ந்யூ ஜெர்ஸி நாட்டின் கவர்னராக இருந்தார். 1912-ம் வர்ஷத்தில் அமெரிக்காவின் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1913-ம் வர்ஷம் மார்ச்சு மாஸம் 4-ந் தேதி ப்ரெஸிடெண்ட் உத்யோகத்தை வகிக்கத் தொடங்கினார். அமெரிக்காவில் ப்ரெஸிடெண்டின் உத்யோக காலம் 4-வர்ஷமாகும். ஆனால் மிஸ்டர் வில்ஸன் மறுபடியும் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

### ஸைந்ய பலம்.

குடியரசின் ப்ரெஸிடெண்டே ஸைந்யத்துக்கும் கப்பல் படைக்கும் ஸேனாதிபதியாவர். அவருக்குக் கீழ்பட்டு, கப்பல்படைக்கு ஒரு ஸெக்ரடரியும், தரைப்படைக்கு ஒரு ஸெக்ரெடரியும் உண்டு. அமெரிக்காவில் கட்டாய ராணுவ ஸேவகம் கிடையாது. அங்குள்ள ஸைந்யம் க்ரமமான ஸைந்யமென்றும், மிலிஷ்யா என்றும் இருவகைப்படும். க்ரமமான ஸைந்யத்தில் 4,847 உத்யோகஸ்தர்களும் 1,11,305 வீரர்களும் உண்டு. இவர்களுள் 68,000 பேர்கள்தான் அந்த தேசத்திலிருக்கிறார்கள். பாக்கிப் பேர்கள் அமெரிக்க ஐக்ய நாடுகளுக்கு ஸொந்தமான பிலிப்பைன் தீவுகள், ஹாவெய், பனமா கால்வாய் ப்ரதேசம் முதலிய இடங்களில் இருக்கிறார்கள்.

ஐக்ய நாடுகளிலிருப்பவர்களிலும் 20000 பேர்கள் கடற்கரையில் உள்ள பீரங்கி ஸ்தலங்களில் வேலை பார்க்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 19,000 பேர்கள் ராணுவ டிபார்ட்மெண்டின் பற்பல பிரிவுகளில் அமர்ந்திருக்கிறார்கள். பாக்கி 29,000 பேர்கள்தான் சண்டைக்குக் கிடைக்கக்கூடிய ஸைந்யமாகும். க்ரமமான ஸைந்யங்களை ஐரோப்பிய நாடுகளைப் போல் டிவிஷன்களாகப் பிரித்து வைப்பதில்லை. யுத்தம் நேரும்போது டிவிஷன்களாக அமைத்துக் கொள்ளுவார்கள். ஒரு டிவிஷனில் 12,150 காலாள் படையிருக்கும். டிவிஷனுக்கு வேண்டியிருக்கும் பீரங்கிப் படை, இஞ்ஜினியர் படை முதலியவைகளைச் சேர்த்தால் மொத்தம் வீரர்கள் 20,000 ஆகும். இப்படிப்பட்ட டிவிஷன்கள் 3 கொண்டது ஒரு பீல்ட் ஆர்மியாகும். இந்த தேசத்தில் உள்ள மொத்தம் க்ரமமான ஸைந்யங்களின் தொகை 31 ரெஜிமெண்டுகளாகும். ஒவ்வொரு ரெஜிமெண்டிலும் 3 பட்டாளங்கள் உண்டு. ஒவ்வொரு பட்டாளத்திலும் யுத்த காலங்களில் 1320 பேர்கள் உண்டு. ஸமாதான காலங்களில் ஒரு பட்டாளத்துக்கு 350 பேர்கள்தான் உண்டு. குதிரைப்படையில் 15 ரெஜிமெண்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு ரெஜிமெண்டிலும் உத்யோகஸ்தர்கள் உள்பட சராசரி 980 பேர்கள் உண்டு. இதைத் தவிர ஒவ்வொன்றிலும் 640 பேர்கள் உள்ள 3 இஞ்ஜினியர் பட்டாளங்களும், 80 பீரங்கி பேட்டரிகளும் உண்டு. இந்த பீரங்கி பட்டாளங்களைத் தவிர கடற்கரையைக் காக்க 170 பீரங்கிப் படைக் கம்பெனிகள் உண்டு. இந்த கடற்கரைப் படைகள் உபயோகிக்கும் பீரங்கிகள் 3 அங்குலம் முதல் 16 அங்குலம் வரை குறுக்களவுள்ளன.

### மிலிஷ்யா.

மிலிஷ்யா படையின் ஸங்க்யை பேருக்கு மாத்ரம் 1,50,000 பேர்களாகும். உண்மையில் படையின் ஸங்க்யை குறைவாகும். இந்தப் படையில் சேர்ந்திருப்பவர்களை 12 டிவிஷன்களாக வகுத்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு டிவிஷனிலும் 8000 பேர்கள் உண்டு.

மேலே சொன்னபடி அமெரிக்காவின் ஸைந்யங்கள் ஸ்வல்பந்தானென்றாலும், யுத்த காலங்களில அதிக ஸைந்யங்கள் வேண்டியிருந்தால், அதற்காகக் கவர்ன்மெண்டார் 18 வயது முதல் 45-வயது வரையிலுள்ள எல்லா ஆண்களையும் ராணுவத்தில் மிலிஷ்யா படையில் சேரும்படி கட்டாயப்படுத்த சட்டம் இருக்கிறது. ஆனால் ஸமாதான காலங்களில் இப்படி ஒருவரையும் கட்டாயப்படுத்துவதில்லை.

### கப்பல் படை.

வெகுகாலம் வரையில் அமெரிக்காவின் கப்பல் படைதான், ப்ரிட்டிஷ் கப்பல் படைக்கு அடுத்தபடி உலகத்திலுள்ள பெரிய கப்பல் படையாக இருந்தது. ஜெர்மனி சில வருஷங்களுக்கு முன் தனது கப்பல் படையைப் பெரியதாக்கவே ஜெர்மன் கப்பல் படை இரண்டாவதாகப் போய், அமெரிக்காவின் கப்பல் படை மூன்றாவதாகிவிட்டது. அமெரிக்காவின் கப்பல்படையை முன் ஸ்திதிக்குக் கொண்டு வந்து, அதனால் தேசத்தின் தற்காப்புப் பலத்தை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்று பலர் முயன்று வந்ததன் பயனாக, அந்த தேசத்தில் சிலகாலமாக கப்பல் படையைப் பெரிதாக்க ஏற்பாடு நடந்துவருகிறது. வருகிற ஜூலை மாஸம் முதல் புதுக் கப்பல்கட்டும் வேலை ஆரம்பமாகலாம்.

1913-ம் வர்ஷம் வெளியான கணக்குகளின்படி அமெரிக்காவுக்கிருந்த கப்பல்படையின் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| யுத்தக் கப்பல்கள் | ... | 33 |
| (இன்னும் 4 யுத்தக் கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன) | | |
| கடற்கரைப் பாதுகாப்புக் கப்பல்கள் | ... | 9 |
| கவசம் போட்ட க்ரூஸர்கள் | ... | 14 |
| இதர க்ரூஸர்கள் | ... | 21 |
| வேவுகாரக் கப்பல்கள் | ... | 8 |
| டிஸ்ட்ராயர் கப்பல்கள் | ... | 52 |
| (இன்னும் 6 கப்பல் கட்டப்பட்டு வந்தன) | | |
| டார்ப்பிடோக் கப்பல்கள் முதல்தரமானவை | ... | 19 |
| பீரங்கிப் படகுகள் | ... | 29 |
| ஸப்மரீன்கள் | ... | 75 |

இவைகளைத் தவிர கப்பல் படைக்கு ஸொந்தமான வேறு சில்லரைக் கப்பல்கள் பல இருந்தன. இந்தக் கணக்குகள் வெளியான பிறகு, 6 ட்ரெட்னாட் யுத்தக் கப்பல்கள் கட்டினார்கள். இவைகளில் 14 அங்குல பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர 5 யுத்தக் கப்பல்கள் புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவைகளுள் மூன்று பாதி கட்டியாகிவிட்டது.

---



## PERIPATETIC SUB-ASSISTANT SURGEONS.

## ஊர்தோறும் போய் வைத்யம் செய்யும் ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள்.

இந்த ராஜதானியில் ஜனங்களுக்கு வைத்ய உதவி செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் வஸதிகள் ரொம்ப குறைவாயிருக்கின்றன. இந்த ராஜதானியில் உள்ள ஹாஸ்பிடல்கள், மருந்துச்சாலைகள் ஆகிய இவைகளின் மொத்தத் தொகை 697 ஆகும். இது மொத்தம் ஜனத்தொகையில் 60,000-க்கு 1 வைத்யசாலை வீதமாகிறது. ராஜதானியின் விஸ்தீரணத்தை கவனிக்கும்போது 600 சதுர மைலுக்கு 1-வைத்யசாலை வீதமாகிறது. நாட்டுப்புறங்களில் அநேக க்ராமங்களுக்கு வைத்யசாலைகள் ரொம்ப தூரமாயிருக்கின்றன. லோகத்தில் வைத்யத்தொழிலை வைத்துக்கொண்டிருப்பவர்களின் ஸங்க்யை ரொம்ப குறைவாயிருக்கிறது. க்ராமாந்தரங்களிலோ மேல்நாட்டு முறைப்படி வைத்யம் செய்பவர்கள் இல்லையென்றே சொல்லலாம். ஆகவே ஆஸ்பத்ரிகள், மருந்துச்சாலைகள் இவைகளின் தொகையை அதிகரிக்கச் செய்வது அவச்யமானது. ஆனால் வைத்யசாலை ஏற்படுத்துவதற்கு அதிக பணச் செலவு ஏற்படுவதோடு, அதை வைத்து நடத்த கட்டிடங்கள் கட்டவாவது வேண்டும்; அல்லது வாடகைக்கு அமர்த்திக்கொள்ளவாவது வேண்டும். தக்க இடங்களில் இந்தக் கட்டிடங்களைத் தெரிந்தெடுக்கவும், முதலில் கவனிக்கவேண்டிய வேறு விஷயங்களைக் கவனிக்கவும் ரொம்ப கால தாமஸ் மேற்படுகிறது.

1915-ம் வர்ஷத்தோடு முடிகிற 5-வர்ஷத்தில் வைத்யசாலைகளின் தொகை வர்ஷத்

துக்கு 7-விதம் அதிகரித்திருக்கிறது. ஸாதாரணமாய் வர்ஷந்தோறும் ஜனத்தொகை அதிகமாவதற்குத் தகுந்தபடிகூட வைத்யசாலைகளின் தொகை அதிகரிக்கவில்லை. ஜில்லா போர்டுகள் புது வைத்யசாலைகளை ஸ்தாபிப்பதற்கு ஏற்படும் செலவில் பாதித் தொகையை கவர்ன்மெண்டார் கொடுத்து உதவுவதாக வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் புதிதாய் வைத்யசாலை ஏற்படுத்துவதற்கும், அதற்கு ஏற்படும் ஆயுதங்கள், இதர ஸாதனங்கள் ஆகிய இவைகளை வாங்கி வைப்பதற்கும் ரொம்ப அதிகமாக செலவு ஏற்படுவதால், ஜில்லா போர்டுகள் புது வைத்யசாலைகள் ஸ்தாபிக்க ஸம்மதப்படுவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் வைத்ய உதவியை ஜனங்களுக்கு அதிகமாகக் கிடைக்கும்படி செய்ய வேறு தீவிரமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகிறது. இதை உத்தேசித்து சென்னை கவர்ன்மெண்டார் சென்ற நவம்பர் மாஸத்தில் நமது ராஜதானியில் மூன்று தெரிந்தெடுக்கப்பட்ட ஜில்லாக்களில் சுற்றித் திரியும் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த ஏற்பாடு பரீக்ஷார்த்தமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இது எப்படி நடக்கிறதென்பதைப் பார்த்து அது த்ருப்திகரமாய் நடந்தால் அதை சாச்வதமாகச் செய்யலாம். காலக்ரமத்தில்தான் வேறு ஜில்லாக்களில் சுற்றித்திரியும் ஆஸ்பத்திரிகள் ஸ்தாபிக்கமுடியும். இவைகளுக்குக் காலம் பிடிக்குமாகையால், நாட்டுப்புறங்களில் ஜனங்களுக்கு சீக்ரம் வைத்ய உதவிக்கான ஸாதனங்கள் ஏற்படுத்திக் கொடுக்கக் கவர்ன்மெண்டார் வேறு ஒரு ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். அந்த ஏற்பாடு என்னவென்றால், ஏற்கனவேயுள்ள ஆஸ்பத்திரிகள், வைத்யசாலைகள் இவைகளில் சிலவற்றிலுள்ள வைத்ய உத்யோகஸ்தர்களின் தொகையை அதிகமாக்கி அவர்களில் ஒவ்வொருவரையும், ஆஸ்பத்திரியைச் சுற்றிலுமுள்ள சில குறிப்பிட்ட க்ராமங்களில் மாஸத்துக்கு 15 நாள் விதம் சுற்றிப் பார்த்து வரும்படி செய்வதே. ஒவ்வொரு ஆஸ்பத்ரி அல்லது மருந்துச் சாலையிலிருந்து போய், பார்வையிட வேண்டிய க்ராமங்களின் தொகை அதிகமாயிருக்கக்கூடாது. அதோடு அவைகள் ரொம்ப தூரமாயுமிருக்கக்கூடாது. வைத்ய அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை ஸௌகர்யமாய்ப் போய்ப் பார்வையிட்டு வரும்படி ஸமீபமாயிருக்க வேண்டும். வெளியூர்களில் ப்ரயாணம் செய்யும் ஸப் அஸிஸ்டண்ட் ஸர்ஜன்கள் மருந்துகளடங்கிய பெட்டிகள் கொண்டு போகவேண்டும். அவர்கள் க்ராமங்களுக்குப் போய் அங்கேயே வைத்யம் செய்யக்கூடிய ஸாமான்ய கேஸுகளையும், அவஸரமான கேஸுகளையும் கவனிக்கவேண்டும். ஆபரேஷன் செய்ய வேண்டியிருக்கும் கேஸ்களையும், கடினமான வ்யாதிக் கேஸுகளையும், ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள் தாங்கள் இருக்கும் ஆஸ்பத்ரிகளுக்கு அனுப்பவேண்டும். அவர்கள் க்ராமங்களிலுள்ள ஸுகாதாரக்குறைகளைக் கண்டுபிடித்து, அவைகளை நீக்கும்படி க்ராம வாஸிகளுக்குச் சொல்லலாம். மேலும் அவர்கள் க்ராம வாஸிகளுக்கு பொதுஜன ஸுகாதாரத்தைப் பற்றியும், சிசு மரணத்தைத் தடுப்பதைப் பற்றியும், ப்ரஸவ காலத்தில் கவனிக்கவேண்டிய வைத்ய ஸுகாதார விதிகளைப்பற்றியும் ப்ரஸங்கங்கள் செய்து ஜனங்களை நல்வழிக்குக் கொண்டுவர முயற்சி செய்யலாம்.

இந்த ஏற்பாடு ஸரிவர நடக்கவேண்டுமென்றால், ஜில்லா மெடிகல் ஆபீஸர் இதைத் தக்கபடி மேற்பார்வை செய்யவேண்டியிருக்குமாகையால், அவர்கள் இது விஷயமாக அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள். அதோடு, இவ்வேலைக்கு அனுப்பப்படும் ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள் வேலையில் திறமையுள்ளவர்களாயிருப்பதோடு, அந்தந்த ஜில்லாவின் தேச பாஷை தெரிந்தவர்களாயுமிருக்க வேண்டும்.

இந்த ஏற்பாட்டின்படி வைத்ய ஸ்தாபனங்களில் சிப்பந்திகளை அதிகப்படுத்த என்ன செலவாகுமென்று விவரமான கணக்குகள் தயாரிக்கும்படி கவர்ன்மெண்டார் ஸர்ஜன் ஜெனரலுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டில் ஆகும் செலவில் பாதியை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளுவதாகவும், பாக்கிச் செலவை ஜில்லா போர்டுகள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்குமென்றும், இந்த ஏற்பாட்டை அனுஷ்டிக்க ஸம்மதமா என்பதை ஜில்லா போர்டுகள் தெரிவிக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் ஜில்லா போர்டுகளைக் கேட்டுவிட்டிருக்கிறார்கள்.



---

## POWER OF GROWTH IN PLANTS.

### செடிகளின் வளரும் சக்தி.

செடி நன்றாய் வளர்ந்துகொண்டு வரும் பர்வத்தில், வளர்ச்சியுள்ள மெல்லிய இழைகள் (tissues) அதிக பலமுள்ளவைகளாக இருக்கின்றன. அவைகள் செய்யக்கூடிய அற்புதமான கார்யங்களை வாஸ்தவமாகத் தெரிந்துகொள்ளும் வரையில் நமக்கு அவைகள் விசித்ரமானவைகளாகவும் நம்பத் தகாதவைகளாகவுமே தோன்றும்.

காளான்.

வளர்ந்துவரும் காளான் பலமுள்ள வஸ்துக்களைத் தூக்கிவிடும் என்றால் அநேகர் நம்ப மாட்டார்கள். ஆனால் ஒருவன் அவைகள் செய்யும் வேலையை கவனித்துவந்தால், அவ்வகைகளைப்பற்றி வழங்கும் கதைகளெல்லாம் உண்மையே என்று தெரிந்துகொள்வான். த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்ட கீழ்வரும் ஸங்கதி அடிக்கடி நேரிட்டிருக்கிறது. சில வர்ஷங்களுக்குமுன் இங்கிலண்டின் தென்பாகத்திலுள்ள பட்டணமொன்றில் தெருக்களின் நடை பாதைகளில் கனத்த கற்களைப் பதித்து சுண்ணாம்பு போட்டிருந்தார்கள். பதித்த கொஞ்ச காலத்திற்குப் பிறகு, சில கற்கள் ஏறத் தாழ இருந்தன. இன்னும் கொஞ்ச நாள்களுக்குள் அநேக கற்கள் தங்கள் இடம் விட்டுப் பெயர்ந்திருந்தன. சோதித்துப் பார்த்ததில், இவைகளெல்லாம் காளான்களின் வேலையென்று தெரியவந்தது. அம்மாதிரி பெயர்ந்து கிடந்த கற்களெல்லாவற்றிலும் பெரியதாக இருந்த கல்லைச் சோதித்துப் பார்த்ததில், அது ஏறக்குறைய இரண்டடி சதுரமும் 83 ராத்தல் எடையும் இருந்தது. அந்தக் கல் அசையவொட்டாமற்படி பூசியிருந்த சுண்ணாம்பின் வலுவையும் யோசித்துப் பார்க்கும்பொழுது காளான்கள் எவ்வளவு அற்புதமான வேலை செய்திருக்கின்றனவென்று நன்றாக ஏற்படும். காளான்களைப்பற்றிய இன்னொரு த்ருஷ்டாந்தமும் கவனிக்கத்தக்கது. குல்லாவைப்போலுள்ள காளான்கள் ஒரே கொத்தாக ஒரு வேலியின் கீழ்ப்புறத்தில் ஒரே ராத்ரியில் உண்டாகி வேலியிலிருந்த இரண்டு பலகைகளை, உயரத் தூக்கித் தள்ளிவிட்டன. வேலியிலிருந்த பலகைகளில் அதிக வலுவாக ஆணி அடித்திராவிட்டாலும், அவைகளில் துருப்பிடித்த ஆணிகள் அறையப்பட்

இருக்றன. அந்த ஆணிகள் பலகைகள் நகரா படி தடுக்க, போதுமானவைகளாக இருக்கன. தவிர, பலகைகள் அதிக கனமுள்ள வைகளாக இருந்தபடியால் அவைகளை அப்பால் தள்ளுவதற்கு விசேஷ பலம் வேண்டியிருக்கும். காளான்கள் அவ்வளவு பலமுள்ளவைகளாயிருந்தபடியால் அவைகளைத் தூக்கிவிட்டன.

### ஏறிப் படரும் செடிகள்.

மரங்களின்மேல் ஏறிப்படரும் கொடிகள் மரங்களை கெட்டியாகப் பிடித்துக்கொள்வதைப் பார்த்தால், செடி கொடிகளின் வளரும் சக்தி நன்றாகத் தெரிகிறது. உட்பைன் (Wood bine) என்னும் ஒருவகைக்கொடி மரங்களில் உறுதியாகச் சுற்றிக்கொள்வதனால் அவைகளின் பிடியைத் தாங்கமாட்டாமல் மரங்கள் பட்டுப்போகின்றன. ஐவி என்று சொல்லப்படும் படர்கொடியும் மரங்களில் இந்தமாதிரி சுற்றிக்கொண்டு அவைகளுக்குக் கேடு விளைவிக்கின்றன. மேற்சொல்லிய கொடிகள் மரங்களில் வேரூன்றி அதனால் கெடுதி உண்டாக்குவதில்லை; அவைகள் மரங்களின் மேல்பக்கத்தில் இருந்துகொண்டே தங்கள் பலத்தால் அவைகளை அழித்துவிடுகின்றன.

### வேர்களின் சக்தி.

வளரும்போது வேர்களுக்குள்ள சக்தியும் அதிகமானது. பாறைகளின்மேல் வளரும் லார்ச் என்னும் ஒரு மரத்தின் வேர்களுள் மிகவும் பலமானது இரண்டு பெரிய பாறைக் கட்டிகளுக்கு இடையிலுள்ள பிளவில் வளர்ந்திருந்தது. கொஞ்ச நாளைக்கெல்லாம் எல்லாவற்றிலும் உயரமாக இருந்த கல் சற்றேறக்குறைய 10 அங்குல உயரம் தூக்கப்பட்டிருந்தது. அந்த மாதிரி தூக்கப்பட்ட பாறை குறைந்தது 3000 பவுண்ட் கனமிருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஓக் மரங்களும் இந்தமாதிரி வளரும் சக்தியுடையவை. ஒரு பாறையின் உச்சியில் படிந்திருந்த மண்ணில் ஒரு விதை விழுந்து முளைத்தது. மரம் வளர வளர வேர் கீழ்நோக்கிச் சென்று பூமியை எட்டுவது அவசியமாயிற்று. பாறையிலுள்ள வெடிப்புகளின் வழியாகவும் புரைசல்களின் வழியாகவும் வேர்கள் கீழ்ப்புறம் சென்று பாறையை, பல இடங்களில் பிளந்து, துண்டு துண்டாக்கிவிட்டன. நம்முடைய வீடுகளில் ஆல், அரசு ஆகிய மரங்களின் விதைகள் சுவர்களில் விழுந்து, கன்றுகள் முளைத்து, சுவரை நாளடைவில் பிளந்துவிடுவதை ப்ரதிதினமும் பார்க்கிறோம்.

---

### பொய்யைச்சொல்லி பொருளை யிழந்தான்.

எட்டுப்பேர் உட்காரவேண்டிய ஒரு ரெயில்வண்டி கம்பார்ட்மெண்டில் ஏழுபேர் உட்கார்ந்திருந்தார்கள். காலியாகவிருந்தவிடத்தில் அவர்களில் ஒருவன் தன் மூட்டையை வைத்துக்கொண்டிருந்தான். அடுத்த ஸ்டேஷனில் ரெயில்வண்டி வந்துநிற்கவே, அந்த கம்பார்ட்மெண்டுக்குள் இன்னொரு ப்ரயாணிவந்து ஏறி மூட்டை வைத்திருந்த இடத்தைத் தனக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். மூட்டைக்கு ஸொந்தக்காரன் மூட்டையை அப்புறப்படுத்தி அவனுக்கு இடங்கொடுக்க இஷ்டப்படாமல், "மூட்டையின் ஸ்வதந்தரவாளி வண்டியைவிட்டு வெளியே போயிருக்கிறான். அவன் வந்தவுடன் அவனுக்கு இவ்விடம் வேண்டியது" என்றான். அப்போது ப்ரயாணி அவன் சொன்னது உண்மைதானென்றெண்ணி தனக்கு இடமில்லாததின் நிமித்தம் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். சற்றுப் பொறுத்து வண்டி புறப்பட்டது. அப்போது நின்றுகொண்டிருந்த ப்ரயாணி "ஐயோ பாவம்! இறங்கினவன் இன்னும் வந்து ஏறவில்லையே, வண்டியும் புறப்பட்டுவிட்டதே. அவனுடைய மூட்டை இங்கு ஏன் இருக்கவேண்டும். வெளியே போட்டுவிட்டாலும் எடுத்துக்கொள்ளுவான்" என்று சொல்லி, உடனே மூட்டையை எடுத்து வெளியே ப்ளாட்பாரத்தில் எறிந்துவிட்டான். அப்போது மூட்டைக்கு ஸொந்தக்காரன் பேச வாயெழாமல் வெட்கங்கொண்டு தனக்குள் "ஐயோ மூட்டையை இழந்தேனே" யென்று சொல்லிக்கொண்டு மௌனம் ஸாதித்தானாம்.



## INDIAN MOTHERS AND CHILDREN.

## இந்தியத் தாய்மார்களும் குழந்தைகளும்.

குழந்தைகள் ஸம்பந்தப்பட்ட மட்டில் பொதுவாய் ஸ்த்ரீகளை நான்குவிதமாகப் பிரிக்கலாம். சிலர் ஒன்றுமே தெரியாதவர்களாயும், சிலர் அதிக முன்யோசனை யில்லாதவர்களாயும், சிலர் உபேட்சையுள்ளவர்களாயுமிருக்கிறார்கள். சிறுபான்மையோர் மட்டும் குழந்தைகள் விஷயத்தில் தங்களால் கூடியமட்டும் ச்ரமப்படுகிறவர்களாயிருக்கிறார்கள். பெரும்பான்மையான ஸ்த்ரீகளுக்கு குழந்தைகள் விஷயமாய் ஒன்றும் தெரியாது. அவர்களுக்கு தங்கள் குழந்தைகளிடத்து அதிக வாஞ்சையும் அன்புமிருந்தாலும், அவைகளை எப்படி ரக்ஷிக்கவேண்டுமென்ற அறிவு இல்லவேயில்லை. ஒரு குடும்பத்திலுள்ள பல ஸ்திரீகள் ஒருவழிப்படுகிறதில்லை. நாட்டு மருத்துவச்சிகள் ப்ரஸவகாலங்களில் செய்கிற காரியங்களை கண்ணால் பார்க்கவொண்ணாது.

தேஹ ஸௌக்யமுள்ள ஒரு தாய் முக்யமாய் அறியவேண்டியது யாதெனில், ப்ரஸவித்தான ஒன்பதுமாதம் வரையில் தன் பால் தன் குழந்தையினுடையதென்பதும், பிறகு அது ஸத்திலும் அளவிலும் குறைந்துவிடுகிறதென்பதுமே. தேஹத்தில் ரத்தமும் பலமுமில்லாத ஒரு நோயாளித்தாய் தன் குழந்தையைத் தானே எடுத்துவிடக்கூடாது. அந்தக் குழந்தைக்கு தானே ஸ்தன்யபானம் பண்ணிவைப்பதால், தன் வ்யாதியையும் இன்னும் அனேக வ்யாதிகளையும் அதற்கு ஊட்டிவைக்கிறாளே ஒழிய அதன் தேஹத்தை வளர்க்கும்படியாக பாலூட்டவில்லை. இந்திய மாதர்களுக்குக் குழந்தைகளை வளர்க்கும்படியான புத்தியும் வஸதியுமில்லாததால், பிறந்த குழந்தைகளில் 100-க்கு 33, முதல் வர்ஷத்திலேயே மடிந்துபோகின்றன. இதற்கென்னமென்ன காரணமென்றால், ஸத்தில்லாத தாய்ப்பாலை குழந்தைக்குக் கொடுப்பதும், எளிதில் ஜீர்ணமாகாதவும் அசுத்தமானவுமான உணவுகளைக் கொடுப்பதுமே. இந்தியாவில் பசும்பாலில் ஸத்து அதிகமாயில்லை. ஆதலால், குழந்தைகளுக்குப் பசும்பால் கொடுப்பதாயிருந்தால், கொஞ்சம் ஆடையும் (cream) சர்க்கரையும் அல்லது சில துளி காட்லிவர் ஆயிலும் (Codliver oil) சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

### சிசு மரணம்.

இந்தியாவில் சிசுமரணம் ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறது. சென்னப்பட்டணத்தில் மட்டும் 100-க்கு 45 குழந்தைகள் பிறந்த வர்ஷத்துக்குள்ளிறந்து போகின்றன. அவைகளில் பெரும்பான்மை பிறந்த ஒரு வாரத்துக்குள்ளேயே இறந்துபோகின்றன. வெளியூர்களில் அவ்வளவில்லாமல்போனாலும், 100-க்கு 25-க்குக் குறைவில்லை. ஆனால் இங்கிலாந்திலே சிசுமரணம் 100-க்கு 15-க்கு மேலில்லை. ஜனம் நெருங்கின நகரங்களில் மட்டும் 100-க்கு 30 வரையிலாகிறது. சீமையில் குழந்தைகளுக்கு ஆஹாரம் தயார் பண்ணிக்கொடுக்கிற விதத்தைப்பற்றியும், குழந்தைகளை வளர்க்கவேண்டிய விதத்தைப்பற்றியும் பாடசாலைகள் ஏற்படுத்தி தாய்மார்களுக்கு போதித்து வருகிறார்கள். வ்யாதியுள்ள குழந்தைகளை கவனித்து ஸ்வஸ்தம் பண்ணி வருகிறார்கள் இக்காரணங்களால் அவ்விடத்தில் குழந்தை மரணம் அவ்வளவு ஜாஸ்தியில்லை.

இந்தியர்கள் ஒரு பெரிய ஸமூகமாகவேண்டுமானால், குழந்தைகள் வளர்ப்பதைப்பற்றி மிகவும் கவனிக்கவேண்டியது அவச்யம். குழந்தைமரணம் ஜாஸ்தியாய் நேரிடுவது தாயின் ஸ்திதியையாவது குழந்தையின் ஸ்திதியையாவது பொறுத்திருக்கவில்லை. பொதுவாக

இந்தியர்களின் பழக்க வழக்கங்களை அனுஸரித்திருக்கிறது. இந்துக்களுக்கு அதிக அந்தஸ்தும் பணமுமிருந்தும் அவர்கள் நடை உடை பாவனைகளை வ்ருத்தி செய்யவில்லை. அவர்கள் நகைகளில் ஏராளமான பணத்தைச் செலவழிக்கிறார்களேயொழிய, தகுந்தவாடகை கொடுத்து பட்டணத்தின் ஸௌக்யமான விடத்தில் குடியிருக்க எண்ணுவதில்லை. ஸ்த்ரீகளுடைய நிலைமையை உயர்த்தவேண்டும். எல்லா ஜனங்களுக்கும் ஸுகாதாரத்தின் முக்யமான விதிகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். சீதோஷ்ணபேதங்களுக்கும் அந்தந்த சரீரங்களுக்கும் அனுகுணமான ஆஹாரங்களைக் கொடுக்கவேண்டும்.

### நிவர்த்தி மார்க்கங்கள்.

குழந்தைகளுக்கு நல்ல பால் ஸப்ளை கிடைக்கச் செய்வதற்காக பால் தயிர்ச்சாலைகள் ஏற்படுத்தவேண்டும். மாடுகள் மேய புல் ஸ்தலங்கள் ஏற்படுத்தவேண்டும். தேகஸௌக்யத்தைப்பற்றி ஜனங்களுக்கு அடிக்கடி உபந்யாஸங்கள் செய்யவேண்டும். சுத்த ஜலாதாரங்கள் உண்டாக்கவேண்டும். பரிசுத்தத்தை வரவர வ்ருத்தி செய்யவேண்டும். ஸ்த்ரீகளுடைய படிப்பை முக்யமாய் கவனித்து வ்ருத்திசெய்வதோடு அவர்களுக்கு அதிக கௌரவத்தையும் கொடுக்கவேண்டும். மருத்துவச்சிகளை செம்மையாய் அவர்கள் வேலையில் பழக்குவதற்காக வித்யாசாலைகள் ஏற்படுத்தவேண்டும். ப்ரஸவ ஆஸ்பத்திரிகளில் (Maternity hospitals) ப்ரஸவத்துக்கு முந்தி முக்யமாய் கவனிக்கவேண்டிய விஷயங்களை கவனிப்பதற்கு ஒரு தனி டிபார்ட்டுமெண்டிருக்க வேண்டும். நோயுள்ளவர்களை வீட்டில் நன்றாய் கவனித்து ஆஹாரம், மருந்து முதலியவைகளை காலாகாலத்தில் கொடுத்து அவர்களுக்கு அத்யாவச்யமான கார்யங்களைப் பார்த்துவருவதற்குப் போதுமான நர்ஸுகளைப் பயிற்றவேண்டும். கீழ்வகுப்பு ஜாதியார்களுக்கு கல்வியையும் அறிவையும் அபிவ்ருத்தி செய்யவேண்டும். இப்படிச் செய்தால்தான் இப்போதிருக்கிற நிலைமை உயரக்கூடும்.

## SEED SELECTION.

### விதையைத் தெரிந்து எடுத்தல்.

நல்ல விதைகளைத் தேர்ந்து எடுக்கும் முறையை அனுஸரித்து வந்தால் இந்த தேசத்தின் ப்ரதான விளைபொருள்கள் மிகவும் நன்றாக விளையும். அந்த முறையை வியவஸாய இலாகாதாரும் இன்னும் அநேகரும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வது போல் அநேக வர்ஷங்கள் செய்துவர வேண்டும்.

அந்த முறையை அனுஸரித்துப் பயிர் செய்தால் மாஸூல் முன்பு விளைந்ததைக் காட்டிலும் 100-க்கு 20 முதல் 50 வரையில் அதிகமாக விளையும். நல்ல வளர்ச்சியுள்ள ஒவ்வொரு பயிரிலும் இருக்கிற மேலான விதைகளை ஆய்ந்து எடுக்கவேண்டும். நெல் அல்லது கோதுமை விளைச்சலில் உள்ள பயிர்கள் மூன்று தினுஸாக இருக்கும். மேலான முதல்தர தான்யங்கள் சில பயிர்களில் இருக்கும்; ஸாதாரணமான தான்யங்கள் சிலவற்றில் இருக்கும்; உபயோகமில்லாத கழிவடை தான்யங்கள் இன்னும் சில பயிர்களில் இருக்கும். நாம் இந்த மூன்று தினுஸுப் பயிர்களையும் ஒன்றாக அறுத்து மாஸூலை எடுத்துக்கொண்டால் அதிலிருந்து விதைப்பதற்காக எடுக்கும் விதை ஸாதாரணமானதாகத் தான் இருக்கும். அப்படிப்பட்ட விதைக்கு அதிகமாக விளையும் சக்தி இராது.

நல்ல தான்ய மணிகளையுடைய பயிர்களை தனியாகப் பயிர்செய்து அவைகளின் மாஸூலிலிருந்து விதை எடுத்து விதைத்தால், அதனால் உண்டாகும் விளைச்சலும் மாஸூலும் வெகு திடமாக இருக்கும்.

அந்த மாதிரி விதையைத் தேர்ந்து எடுப்பதற்காக முதலில் விளைச்சலில் நல்ல பயிர்களைக் கண்டு பிடிக்கவேண்டும். திடமான தான்ய மணிகளையுடைய கதிர்களைப் பார்த்து அவைகளை மாத்ரம் எடுத்து வரவேண்டும். அந்தக் கதிர்களை அடித்து தான்யங்களை விதைக்க வைத்துக்கொள்ள வேண்டும். இப்படி 1917-ம் வர்ஷக் கடைசியில் செய்வதாக வைத்துக்கொள்வோம். 1918-ல் இப்படி வைத்துள்ள விதைகளை முதலில் 20 ஸெண்ட் நிலத்தில் விதைக்கவேண்டும். அந்த நிலத்தில் 20 அல்லது 30 ராத்தல் விதையை விதைக்க வேண்டியிருக்கும். தான்யங்களை நன்றாகத் தூற்றி சல்லடையால் சலித்து உபயோகமில்லாதவைகளை எடுத்துவிட வேண்டும்.

இது அறுவடைக்குத் தயாரானவுடன், இதிலிருந்து 25-முதல் 30 ராத்தல் வரை நல்ல மணிகளாக விதை தெரிந்தெடுத்து, அதை 1919-ம் வர்ஷத்தில் தனியான 20 ஸெண்ட் நிலத்திலும், பாக்கியுள்ள நல்ல விதைகளை $2\frac{1}{2}$ முதல் 4 ஏகரா நிலத்திலும் விதைக்கவேண்டும்.

ஆகவே 1919-ம் வர்ஷத்தில் இரண்டு வயல்கள் இருக்கும். இந்த இரண்டு வயல்களில் மாஸூல் தயாராகும்போது 20 ஸெண்ட் நிலத்திலிருந்து 25-ராத்தல் நல்ல மணியாய் விதை பொறுக்கி எடுத்து மறு வர்ஷத்தில் அதாவது 1920-ம் வர்ஷத்தில் 20 ஸெண்ட் நிலத்தில் விதைக்கவேண்டும். பொறுக்கியெடுத்தது போக பாக்கியுள்ள நல்ல விதையை $2\frac{1}{2}$ முதல் 4 ஏகர் வரையில் விதைக்கலாம்.

1919-ம் வர்ஷத்து இரண்டாவது $2\frac{1}{2}$-முதல் $4\frac{1}{2}$-வரையில் விஸ்தீரணமுள்ளவயலின் மாஸூலில் நல்ல விதையை எடுத்தால் 1920-ம் வர்ஷத்தில் ஸுமார் 25-முதல் 40 ஏக்கர் வரை விதைக்கலாம்.

இவ்விதம் வர்ஷந்தோறும் விதையைப்பொறுக்கி எடுத்து விதைத்துக்கொண்டே போனால், ஒவ்வொரு வர்ஷத்து மாஸூலும் திடமாயிருக்கும்.



## SUPERSTITIONS.

### மூட பக்தி அல்லது விபரீத ஆசாரம்.

ஒரு கார்யத்தைச் செய்ய உத்தேசித்திருப்பவர்கள் உலகத்தில் ஸாதாரணமாக நடக்கும் செய்கைகளை கவனித்து அவைகளை, தங்கள் கார்யம் முடியும், முடியாது, அல்லது தடைப்படும் என்பதற்கு அறிகுறிகளாக எண்ணி கார்யத்தைச் செய்வதும் செய்யாமலிருப்பதும் மூடபக்தி என்னப்படும். சகுனம் பார்ப்பதும், கனவுகளை நம்புவதும், தற்செயலாய்ச் சிலர் சொல்லிக்கொண்டிருக்கும் வார்த்தைகள் நாம் நினைத்திருக்கும் எண்ணத்திற்கு ஏதேனும் பொருத்த முடையவைகளாக இருந்தால் அவைகளை அசரீரி வாக்கென்று எண்ணுவதும் நாம் அனுபவத்தில் அறிந்த ஸம்பவங்களே. இவையெல்லாம் மூடபக்தியாகும். இவ்வுலகத்திலுள்ள எல்லா தேசத்தாரும் பெரும்பாலும் மூடபக்தியில் நம்பிக்கை யுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

கீழ்வரும் மூடபக்தி ஸம்பந்தமான விஷயங்கள் ப்ரான்ஸிலுள்ள யுத்தகளத்திலிருக்கும் போர்வீரர்களிடம் காணக்கூடியவை. அந்த

யுத்த களத்தில் வைத்திருக்கும் காப்பி ஹோட்டல்களில் காப்பியும் சாராயமும் இன்னும் அநேக விதமான விநோதப் பொருள்களும் விற்கப்படும். அங்கே ரக்ஷா பந்தனங்களும் விற்கப்படுகின்றன. அவைகளைத் தரித்துக் கொள்பவர்களுக்கு நல்ல அதிர்ஷ்டம் உண்டாகுமென்று அங்குள்ளோர் நம்புகிறார்கள். அநேகமாய் காயம்பட்டு ஊர்போய்ச் சேர்ந்த ஒவ்வொரு ப்ரிட்டிஷ் வீரனும் கையில் ஒரு கங்கணம் கட்டிக்கொண்டிருப்பானும். அப்படிப்பட்ட கங்கணங்களை வலதுகையில் கட்டிக்கொள்பவர்களுக்கு எப்பொழுதும் அதிர்ஷ்டமுண்டாகுமாம்.

அநேகமாய்ப்ரான்ஸிலுள்ள ஒவ்வொரு ப்ரிட்டிஷ் வீரன் கையிலும் இம்மாதிரியான ரக்ஷா பந்தனம் கட்டியிருக்கும். அந்த ரக்ஷா பந்தனம் வெளுப்பான உலோகத்தால் சங்கிலியாகச் செய்யப்பட்டு, நடுவில் நீண்ட வட்டவடிவமுள்ள அலுமினியத்தகடொன்று கோக்கப்பட்டிருக்கும். அலுமினியத் தகட்டில் ஒவ்வொரு சிப்பாயும் தன்பெயர், நம்பர், தன்பட்டாளத்தின் பெயர் முதலியவைகளைப் பேனாக்கத்தியினாலாவது, கூர்மையான வேறு ஆயுதத்தினாலாவது செதுக்கிக் கொள்வான். இம்மாதிரி ரக்ஷா பந்தனத்தைக் கையில் அணிந்துகொள்ளும் சிப்பாய்கள் அடையாளத்திற்காக ராணுவத்தார் கொடுக்கும் வட்டமான அட்டைத்துண்டுகளை நாடாவிலாவது நூலிலாவது கோத்துக் கழுத்தில் கட்டிக்கொள்ள வேண்டுமென்னும் ராணுவ விதியை அனுஸரிப்பதில்லையாம்.

யுத்தகளத்தில் காயமடைந்து ஸௌக்யமாய் ஊர் போய்ச் சேர்ந்து ஸ்வஸ்தமடைந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு சிப்பாயும் தான் உயிர்தப்புவதற்கு, தான் அணிந்திருந்த ரக்ஷா பந்தனமே அனுகூலமாயிருந்து உதவிபுரிந்ததென்று நினைத்துக்கொள்வான.

மேற்சொல்லிய ரக்ஷா பந்தனங்கள் மிகவும் நயமாக விற்கப்படுகின்றனவாம். மூன்று அணா கொடுத்தால் ஒன்று கிடைக்குமாம். இவைகளைத் தவிர வேறுவிதமான ரக்ஷாபந்தனங்களும் அந்தக் கடைகளில் விற்கப்படுவதுண்டு. வர்ணமணிகள் கோத்துள்ள ஸரங்கள் சில காலத்திற்குமுன் அதிகமாக விலைப்போயின. ஆனால் அவைகளுக்கு இப்பொழுது மதிப்பு குறைந்துவிட்டதாம். இவைகளைத் தவிர பல விதமான மோதிரங்களையும் விநோதப்பொருள்களையும் ஸோல்ஜர்கள் வாங்கி ரக்ஷா பந்தனமாக அணிந்துகொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்ட ரக்ஷாபந்தனங்கள் அணிந்துகொள்வது நம்மவர்களுள்ளும் ஸர்வ ஸாதாரணமானதே. குழந்தைகளின் இடுப்பில் புங்கங்காய், நரிப்பல் முதலியவைகளைக் கோத்துக் கட்டுவதையும், தோல்வார்களையும் பட்டுக்கயிறுகளையும் மந்திரித்துக் கழுத்தில் கட்டுவதையும், குளிசங்கள் கட்டுவதையும், செம்பு நாணயத்தில் நாயின் உருவத்தைச் செதுக்கி அரைஞாணில் கட்டுவதையும் நாம் ஸதாபார்த்துக்கொண்டிருக்கிறோம். காசியிலுள்ள ஒரு ஔஷத சாலையார் எல்லா வ்யாதிகளையும் விலக்கி ரக்ஷிக்கும் ரக்ஷா பந்தனங்களைத் தாங்கள் லக்ஷக் கணக்காகச் செய்திருப்பதாகவும், அவைகளை அதிகமாக வாங்குபவர்களுக்கு இனாம் கொடுப்பதாகவும் விளம்பரஞ் செய்திருந்தது யாவரும் அறிந்த விஷயமே. நமக்கு அவ்வித விஷயங்களில் நம்பிக்கை இராவிட்டால் அவர்கள் ஏன் அவ்வளவு ச்ரமம் எடுத்துக்கொள்ளவேண்டும்? அதோடு விடாமல் அவர்கள் தங்கள் ரக்ஷா பந்தனத்தைப்பற்றியுள்ள நற்சாக்ஷிப் பத்ரங்களையும் தங்களுக்கு ஆதாரமாக ப்ரஸுரஞ் செய்திருக்கிறார்கள்.

இன்னும் இங்கிலீஷ் ஸோல்ஜர்கள எப்பொழுதும் உப்பைக் கீழே சிந்தமாட்டார்களாம். ஒரு சிப்பாய் தவறிச் சிந்திவிட்டானு



லும் அதனால் உண்டாகும் கெடுதல்களை நீக்க அவன் ஒரு சிட்டிகை உப்பை எடுத்துத் தன் இடது தோளின்மேல் போட்டுக்கொள்வான். எந்த சிப்பாயும் ஏணியின்கீழே நுழைந்து வரமாட்டான், கூடுமானால் அதைச் சுற்றிக்கொண்டேவருவான். வெள்ளிக்கிழமையில் நகத்தைக் கத்தரிக்கமாட்டான். அம்மாதிரி செய்பவனை அந்த வாரம் முழுதும் ஒருபேய் பிடித்துக்கொண்டிருக்கு மென்று நம்புவதால் யாரும் அப்படிச் செய்வது கிடையாது.

இதேமாதிரி, படுத்திருக்கும் ஒருவர் காலைத் தாண்டிப்போகக்கூடாதென்பதும், சோற்றைச் சிந்தக்கூடாதென்று கருதுவதும், செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் விளக்குவைக்கும் ஸமயத்திலாவது அதன்பிறகாவது யாருக்கும் பணம், பண்டம் முதலியவைகள் கொடுக்கக்கூடாதென்பதும், இரவில் ஊசியென்று சொல்லக்கூடாதென்று தைப்பான் என்று அதை மறைத்துச் சொல்லுவதும், விளக்கின் நிழலில் உட்காரக்கூடாதென்பதும், விளக்கை வாயினால் ஊதக்கூடாதென்பதும், அறுத்த நகங்களை வீட்டில் எறிந்தால் தரித்ரம் உண்டாகும் என்று நினைப்பதும் நம்முடைய தேசத்தில் ஸாதாரணமாயிருக்கின்றன.

இங்கிலண்டில் 13-என்னும் எண்ணை நிர்ப்பாக்யமான எண்ணாக மதிக்கிறார்கள். ஆனால் ப்ரான்ஸில் அப்படி நினைப்பதில்லை; சேனையிலுள்ள பட்டாளத்தின் 13-வது வகுப்பு மிகவும் அதிர்ஷ்டமுள்ளதென்று அவர்கள் நினைக்கிறார்கள். அனுபவத்தில் அது உண்மையாயிருப்பதாகத் தெரிகிறது. நம்மவர்கள் 8-என்னும் எண்ணை அதிர்ஷ்டஹீனமுள்ளதாக நினைக்கிறார்கள். 8-ந்தேதியன்று பத்திரம் எழுதவேண்டியிருந்தால் அந்தத்தேதிபோட்டு எழுதாமல் 7-அல்லது 9-ம் தேதியென்று எழுதிக்கொள்ளுகிறார்கள். மூன்று ப்ராம்மணர்கள் ஒரு கார்யத்தை உத்தேசித்துப் போனால் அந்தக் கார்யம் நிறைவேறாதென்று சொல்வதும், நமது தேசத்தின் வழக்கமாகும்.

ப்ரான்ஸில் மிக்க ப்ரபலமாய் வழங்கி வரும் மூடபக்திகளுள் ஒன்று ஒரே தீக்குச்சியால் மூன்று ஸிகரெட்டுகளைப் பற்றவைக்கக்கூடாதென்பதாகும். சேனையில் தீப்பெட்டிகள் அபூர்வமாயிருந்தாலும், மூன்று ஸிகரெட்டுகளை ஒரு தீக்குச்சியால் பற்றவைப்பதென்னும் அதிர்ஷ்டஹீனமான கார்யத்தைச் செய்ய எவனும் உடன்படான். இந்த மூடபக்தி எப்படி உண்டாயிற்றென்று தெரியவில்லை. மீறி நடப்பவர்களுக்கு என்ன தீங்கு ஸம்பவிக்கு மென்பதும் ஏற்படவில்லை. ஆனால் எல்லோரும் அதை நம்புகிறார்கள். ஸாதாரண சிப்பாய்கள் மாத்ரமல்ல, பெரிய ராணுவ உத்யோகஸ்தர்களும் அதை மீறி நடக்க அஞ்சுகிறார்கள். ஓர் ராத்ரி யுத்தகளத்தில் மூன்று உத்யோகஸ்தர்கள் ஸிகரெட்டுகளை வாயில் வைத்துக்கொண்டு அவைகளைப் பற்றவைக்க ஸித்தமாயிருந்தார்கள். அவர்களில் ஒருவன் ஒரு தீக்குச்சியைக் கிழித்து மற்ற இருவருடைய ஸிகரெட்டுகளையும் பற்ற வைத்துவிட்டு அந்தக் குச்சியினாலேயே தன்னுடையதையும் பற்றவைக்க இருந்தான். அதைக் கண்டவுடனே அவர்களிலொருவன் குதித்தோடி வந்து “இந்த மாதிரி செய்யாதே. ஒரு ராத்ரியெல்லாம் நாம் துரதிர்ஷ்டமுள்ளவர்களாக இருக்கவேண்டும். இதிலிருந்து பற்றவை” என்று சிரித்துக்கொண்டே சொல்லி நெருப்பை ஊதிவிட்டு நெருப்புள்ள தன் ஸிகரெட்டை அவனிடங் கொடுத்தான்.

யுத்தகளத்திலுள்ள சிப்பாய்களில் அநேகர் அரைக்கச்சையிலாவது உள் ஜேபியிலாவது ஏதாவது ஒரு விதமான ரக்ஷா பந்தனத்தை பத்ரமாய் மறைத்து வைத்துக் கொண்டிருப்

பார்கள். சிலர் அதிர்ஷ்டமுள்ளதாகக் கருதப்படும் நாணயத்தையும், இன்னுஞ் சிலர் வீட்டிலிருந்து ஞாபகார்த்தமாய்க் கொண்டுவந்த வஸ்துவையும், பின்னுஞ் சிலர் அற்புதமான ஸம்பவத்தை நினைப்பூட்டும் வாடிய மலரையும் வைத்துக்கொண்டிருப்பார்கள்.

லண்டன் பட்டணத்தில் வழங்கிவரும் மூடபக்திகளை விளக்க அத்தாட்சியாக உள்ள பல பொருள்களையும் ஸௌத்வார்க் ஸெண்ட்ரல் லைப்ரரி என்னுமிடத்தில் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அவை லண்டனின் கீழ்ப்புறத்திலும் தென்புறத்திலும் ஜனங்கள் எவ்வளவு மூடபக்தியுள்ளவர்களாயிருக்கிறார்களென்று நிரூபித்துக் காட்டுகின்றன.

அவைகளில் காதல் ஸம்பந்தமான வச்யப்பொருள்கள் மிகவும் முக்யமானவை. சிவப்பு நிறமுள்ளஒருவகைப் பிசினை வெள்ளிக்கிழமை இரவில் எரித்தால் கோரிய காதலர்கள் நிச்சயமாய்க் கிடைப்பார்களாம். இந்த விநோத வழக்கம் இப்பொழுதும் லண்டனில் இருந்து வருகிறது. லண்டனிலுள்ள அநேக பெண்கள் அதை விருதமாகக் கொண்டாடி வருகிறார்கள். அதேமாதிரி இன்னொரு வழக்கமும் இருந்து வருகிறது. மஞ்சள் நிறமாகப் புஷ்பிக்கும் ஒரு காட்டுச் செடியின் வேரைக் கொளுத்தினால் ப்ரியம் மாறிப்போன காதலர்களின் மனஸைத் திருப்பமுடியுமாம்.

நம்முடைய தேசத்திலும் இப்படிப்பட்ட விஷயங்களில் அநேகர் நம்புகிறார்கள். வச்ய மூலிகைகளும் அஞ்சனங்களும் தகடுகளும் நாம் அறியாதவைகளல்ல. பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் விருதமிருந்தால் நல்ல கணவர்களை அடைவார்களென்றும் ஐச்வர்யமுள்ளவர்களாயிருப்பார்களென்றும் அநேகர் நம்புகிறார்கள்.

லண்டனில் சேகரித்துவைத்திருக்கும் வஸ்துக்களுள் ஔஷதங்களுக்கு பதிலாக உபயோகிக்கப்படும் ரக்ஷாபந்தனங்களும் அநேகமிருக்கின்றன. நைட் ஷேட் என்று சொல்லப்படும் ஒருவகைச் செடியின் கட்டையினால் செய்யப்பட்ட மாலையைக் குழந்தையின் கழுத்தில் போட்டால் பல் முளைக்கும்போது கஷ்டமேற்படாதாம். ஓக் மரங்களின் விதைகளினால் செய்யப்பட்ட மாலைகள் மற்ற குழந்தை வ்யாதிகளை நிவர்த்திக்கக் கூடுமென்று நம்புகிறார்கள். கைக்கணு எலும்பைச் சட்டைப் பையில் வைத்திருந்தால் வாத ரோகம் நீங்கி விடுமென்று கருதுகிறார்கள். உயிரற்ற எலும்பில் வ்யாதி இராதாகையால் தேகத்திலுள்ள வ்யாதி அதில் சேர்ந்து விடுமென்பது ஜனங்களின் கொள்கை. பாதரஸத்தை ஒரு லீலாவில் ஊற்றி மூடி பத்ரப்படுத்தித் தோலில் மூடி வைத்துக்கொண்டாலும் வாதரோகங்கள் நிவாரணமாகிவிடுமென்று நினைக்கிறார்கள். அம்மாதிரி பத்ரப்படுத்தியுள்ள பாதரஸம் லண்டனிலுள்ள ஒரு பெரிய ஷாப்பில் விற்கப்படுகிறதாம்.

இரவில் நித்ரை செய்யும்போது அமுக்கன் என்னும் ஒருவகைப் பேய் நம்மை ஹிம்ஸிப்பதாக இந்தத் தேசத்திலும் இங்கிலண்டிலும் அநேகர் எண்ணுகிறார்கள். இங்கிலண்டில் ஒரு ஜதை குதிரை லாடத்தை நீலத் துணியிலும் சிவப்புத் துணியிலும் வைத்துக் கட்டித் தலைப்பக்கத்தில் தொங்கவிட்டிருந்தால் அமுக்கன் அவ்விடத்திற்கு வராதென்று நினைக்கிறார்கள். த்வாரஞ் செய்துள்ள கற்களைக் கட்டி வைத்தாலும் ஒரு பரிஹாரமாம். நீலமணிகள் கோத்துள்ள ஸரங்களையும் சிவப்பு மணி ஸரங்களையும் பவழமாலையையும் குழந்தையின் கழுத்தில் போட்டுவைத்தால் அநேக விதமான வ்யாதிகள் நிவாரணமாகி விடுமென்று அவ்வாறு செய்து வருகிறார்கள். குழந்தைகளுக்குப் பல்வலி உண்டாகாமலிருக்கும் பொருட்டு ஒரு பல்லைப் பையில் போட்டுக்



கட்டி அதைக் கழுத்தில் சுற்றி வைப்பார்கள். பெல்ஜியத்திலிருந்து இங்கிலண்டுக்கு வந்திருப்பவர்கள் வாத ரோகங்களை நிவர்த்திக்கும் பொருட்டு பூனைத் தோலை அணிந்துகொண்டிருக்கிறார்களாம்.

இங்கிலண்டில் காட்டேரி போன்ற பிசாசொன்று மந்த்ர பலத்தால் ஆடுகளுக்கும் பசுக்களுக்கும் நோவுண்டாக்கி அவைகளைக் கொன்று விடுகிறதென்று அந்தத் தேசத்தார் நம்புகிறார்கள். அதை நீக்குவதற்காக மந்த்ரத்தில் தேர்ச்சியுள்ள ஒரு கிழவி ஒருபரிஹாரத்தைக் கண்டுபிடித்திருக்கிறாள். அதாவது அவ்விதம் இறந்த ஒரு ஆட்டின் நரலைக் குண்டூசிகளினாலும் ஆணிகளினாலும் கீறி வீட்டுக்கூரைக்குமேல் கட்டிவிடவேண்டுமாம், அவ்விதம் செய்திருந்தால் அந்தப் பேய் ஒன்றுஞ் செய்யாதாம்.

---

# METALS

BY S. G. SUBRAMANYAM, M. A., L. T.

## உலோகங்கள்.

[*All rights reserved.*]

ஸாதாரணமாய் வீடுகளில் வழங்கிவரும் பாத்ரவகைகளை கவனிப்போமானால் அவைகளில் பெரும்பான்மை உலோகங்களால் செய்தவையாகும். தவிர, மண், கல், கண்ணாடி, மரம், பீங்கான் ஆகிய இவைகளாலானவைகளும் உண்டு.

எந்த உலோகங்கள் உபயோகப்பட்டு வருகின்றனவென்று பார்ப்போம். இரும்பு, செம்பு, ஈயம், அலூமினியம், தகரம், துத்தநாகம், வெள்ளி ஆகிய சுத்த உலோகங்களும், பித்தளை, வெண்கலம் முதலிய கலப்பு உலோகங்களும் உபயோகப்படுகின்றன.

### உலோகங்களின் காந்தி.

இரும்பு, பித்தளை, செம்பு ஆகிய இவைகளால்செய்த ஸாமான்களை, நன்றாய்த்தேய்த்து ஒரு காய்ந்த துணியால் துடைத்துப் பார்த்தால், அவைகளெல்லாம் பளபளவென்று ப்ரகாசிக்கும். கொஞ்ச நாள் கழிந்ததும் பார்த்தால் அவைகளின் காந்தி மங்கியிருக்கும். ஒரு தங்க நாணயத்தையோ அல்லது வெள்ளி நாணயத்தையோ எத்தனை நாள் வைத்திருந்தாலும் அது காந்தியில் குன்றுவதில்லை. ஆகையால் சில உலோகங்களின் பளபளப்பு எக்காலும் குன்றுவதில்லை. சிலவற்றில் நாளுக்குநாள் ஒளி மழுங்குகிறது. ஆகவே உலோகங்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். மேன்மையான உலோகமென்றும், தாழ்வான உலோகமென்றும் பிரிக்கலாம். தங்கம், வெள்ளி, ப்ளாடினம் ஆகிய இந்த மூன்றும் மேன்மையான உலோகங்கள்; மற்றவைகள் ஸாதாரண உலோகங்களென்றும் தாழ்ந்த உலோகங்களென்றும் சொல்லப்படுகின்றன.

ஆகவே, எல்லா உலோகங்களுக்கும் இயற்கையாக அவையவைகளுக்கு என்று ஏற்பட்ட பளபளப்பு உண்டென்று ஏற்படுகிறது. நன்றாய் ப்ரகாசிக்கிற செம்பு, எஃகு முதலியவைகளால் செய்த ஸாமான்களின் காந்தி மாத்ரம் குறைவானேன்? வெள்ளி தங்க ஸமான்களின் ஒளி குறையாதிருப்பானேன். ஆகாயத்திலுள்ள சில வாயுக்கள், நீராவி, ஆகிய இவைகளின் ஸம்பந்தத்தால் உலோகத்தினால் செய்த பல ஸாமான்களின் ப்ரகாசம் குறைகிறது. இப்படிக் குறைவதைத்தான் நாம் துருப்பிடிப்பது என்றும், களிம்பேறுவது என்றும் பலவாறாகச் சொல்லுகிறோம். தங்கம், வெள்ளி, ப்ளாடினம் இந்த மூன்று உலோகங்களில் துரு

அல்லது களிம்பு ஏறுவதில்லை; ஏனென்றால் ஆகாயத்திலுள்ள வாயுக்கள் அவைகளோடு சேர்ந்து ஒன்றும் செய்யமுடிகிறதில்லை.

### துரு, களிம்பு என்பவை என்ன?

ஒரு இரும்புத் துண்டை எடுத்து கொஞ்சம் ஜலத்தில் போட்டு, சிலநாள் கழித்துப் பார்த்தால், அது நன்றாய்த் துருப்பிடித்திருப்பதைப் பார்க்கலாம். மேலும் பழைய வீடுகளிலுள்ள இரும்பு ஸாமான்களை கவனித்தால், ஸாமான்கள் அநேக இடங்களில் தின்னப்பட்டிருப்பதை பார்க்கலாம். அதேமாதிரி பித்தளை ஸாமான்களை கவனித்தால் அவைகள் மேற்புறம் மாத்ரம் களிம்பு ஏறியிருக்கும். செம்பு, ஈயம், துத்தநாகம் இவைகளும் பித்தளை மாதிரியே. இரும்பைத் தவிர பாக்கி ஸாதாரண உலோகங்களின் மேல்பாகங்களில் களிம்பு ஏறினதும், களிம்பானது உள்ளிருக்கும் உலோகத்திற்கு ஒரு கவசம் போட்டாற்போல் ஆகிவிடுகிறது. இந்தக் கவசமானது உள்ளிருப்பதை வெளியில் ஆகாயத்திலுள்ள ஈரக் காற்றோடு சேரவிடுகிறதில்லை.

இரும்பு ஸாமான்கள் ஆகாயத்திலுள்ள பிராணவாயுவோடும் ஈரக்காற்றோடும் ஸம்பந்தப்படும்போது துருப்பிடிக்கின்றன. வீடுகளில் இரும்புச் சட்டி, கரண்டி முதலிய சமையல் பாத்ரங்களை விளக்கி வைத்திருந்தாலும், சில ஸமயங்களில் அவைகளில் செம்மண்பூசினாற்போல் ஒன்று படர்ந்திருக்கும். அதைத்தான் நாம் துரு என்கிறோம். மேலும் அதை நாம் லகுவில் துடைத்துவிடலாம். வீடுகளில் பழைய ஆணிகளைக் கையால் எடுத்தால், துரு கையில் ஒட்டிக்கொள்ளும். கீழே போட்டாலும் பாதி துரு கீழே விழுந்துவிடும். அதேமாதிரி களிம்பு அல்லது துரு ஏறின பித்தளை ஆணி ஒன்றை கீழே போட்டால், களிம்பு நீங்குவதில்லை. இரும்பின் துருவிற்கு துருவாகாத பாகத்தோடு சேர்க்கை ஸம்பந்தம் குறைவானது. ஆகவே எந்தெந்த இடங்களில் துருப்பிடித்து துரு உதிர்ந்து விடுகிறதோ அந்தந்த இடங்களில் பழையபடியும் துருப்பிடித்துவிடுகிறது. இதனாலேதான் துருப்பிடித்த பழைய இரும்பு ஸாமான்கள் எல்லாப் பக்கத்திலும் ஒரே மாதிரி தேய்கிறதில்லை. வீட்டுக் கதவுகள், ஜன்னல்கள் முதலியவைகளிலுள்ள இரும்பு ஸாமான்களுக்குப் பலவித வர்ணங்கள் கலந்த வார்னிஷ் கொடுக்கிறார்கள். வார்னிஷானது அவைகளை அழகுபடுத்துவதற்கல்ல. அவைகள் துருப்பிடித்து மெலிந்து போகாமலிருப்பதற்குத்தான்.

### உலோகங்களின் வர்ணங்கள்.

தங்கம் நல்ல மஞ்சள் நிறமுள்ளது, செம்பு மந்தமான சிவப்பு நிறம். வெள்ளியும் தகரமும் வெளுப்புநிறம். வெள்ளியின் நிறத்தைக் கொஞ்சம் நீல நிறம் கலந்த வெள்ளை என்றும், தகரத்தைத் துளி மஞ்சள் நிறம் கலந்த வெள்ளை என்றும் சொல்லலாம். இரும்பு, ஈயம், துத்தநாகம் இவைகள் நரைத்த மயிர் நிறமானவை.

### உலோகங்கள் எடுக்கும் விதம்.

இந்த உலோகங்களெல்லாம் எங்கேயிருந்து எப்படி வந்தன என்று தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யமல்லவா? பூமியிலிருந்து எவ்வளவோ ஸாமான்கள் வெட்டி யெடுக்கப்பட்டு அப்படியே உபயோகத்திற்கு வருகின்றன. உதாரணமாக, மண், பாறைக்கல், களிமண், ஸ்லேட், சாக்கட்டி இவைகளைச் சொல்லலாம். சில ஸாமான்களை வேறு விதமாய்த் தயார் செய்து உபயோகிக்கிறார்கள். உலோகங்களும் பூமியிலிருந்தே வெட்டி யெடுக்கப்படுகின்றன. ஆனால் இவைகள் பூமியில் மண்ணோடும் இன்னும் பல வஸ்துக்களோடும் கலந்து இருக்கும். அந்த ஸ்திதியில் அவைகள் ப்ரயோஜனப்படா.



நீர்க. அடுப்பில் ஒரு ஈயத்துண்டைப் போட்டால் அது உருகி விடுகிறதல்லவா? அடுப்பு உருகுகிறதோ? இல்லை. தங்கத்தைத் தட்டான் 'புடம்' போட்டு உருக்குவதைப் பார்த்திருக்கலாமே. தங்கம் மாத்ரம் உருகுகிறதேயொழிய, வேறே ஒன்றும் உருகுகிறதில்லை. இப்போது ஈயத்துடன், மண்ணோ கல்லோ அல்லது இரும்போ கலந்திருந்தால், ஈயத்தை மாத்ரம் அவைகளினின்று பிரித்துவிடலாமல்லவா? மேலும் உருகின ஈயத்தின் மேல் கொஞ்சம் மண்ணையோ, அல்லது ஒரு கல்லையோ போட்டால் அது மேலே மிதக்கும். யதார்த்தத்தில் உலோகங்கள் எல்லாம் கல், மண் இவைகளைக் காட்டிலும் பளுவானவையே. மேலே மிதக்கும் வஸ்துக்களை ஒரு அகப்பையாலோ அல்லது குச்சியாலோ தள்ளிவிடலாமல்லவா?

மேலே சொன்ன விதியை பனுஸரித்துத்தான் உலோகத்தொழில்சாலைகளில், பூமியிலுள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட உலோக ஸத்துக்களை அதாவது தாதுப் பொருள்களைப் பெரிய உலைக்களங்களில் இடுவார்கள். சில பொருள்கள் சீக்ரம் த்ரவமாகிவிடும்; அவைகளோடு ஸம்பந்தப்பட்டவைகள் மேலே மிதக்கும். தகுந்த ஏற்பாட்டினால் கீழே உருகியிருக்கும் உலோகங்களை வெளியிலெடுப்பார்கள். சில பொருள்களோ அநேக வித ஸாமான்களோடு கலந்திருப்பதோடு லகுவில் த்ரவமாகா. அப்பேர்ப்பட்டவைகளுக்கு வேறு உபாயம் செய்வதுமுண்டு. அது எப்படி என்று அறிவதற்கு இந்த உதாரணத்தை கவனியுங்கள். பருப்பு வீடுகளில் வேகாமற்போனால் கொஞ்சம் சோடா உப்புப் போடுவதைச் சிலர் கவனித்திருக்கலாம். தட்டார்கள் வெள்ளியை உருக்குவதற்காக 'வெண் காரத்தை' உபயோகப்படுத்துவதையும் பார்த்திருக்கலாம். சர்க்கரைப்பாகு வைக்கும்போது அதைப் பாத்ரத்தில் வைத்து அடுப்பிலிட்டு உருகச் செய்து கொஞ்சம் பால் வார்ப்பதுண்டு. இந்த உபாயத்தில் சர்க்கரையிலுள்ள மஷ்டு பாலோடு சேர்ந்து மேலே மிதந்து விடுகிறது. பிற்பாடு அதை அகப்பையால் எடுத்துவிடலாம். அதுபோல லகுவில் த்ரவமாகாத உலோக ஸத்துக்களை உலைக்களத்திலிட்டதும், இரண்டொரு தாதுப்பொருள்களைச் சேர்க்கிறார்கள். இவைகளினுதவியால் உலோகத்திலுள்ள மஷ்டுக்களெல்லாம் கலந்த தாதுப் பொருளோடு சேர்ந்து விடுகின்றன. உலோகம் மாத்ரம் உருகிக் கீழே தங்குகிறது. மற்றவையெல்லாம் மேலே மிதக்கின்றன.

ஆகவே உலோகங்களையெல்லாம் உருக்கிவிடலாம். சில உலோகங்கள் உருகுவதற்கு உஷ்ணம் குறைவாயிருந்தால் போதும். இன்னும் சிலவற்றிற்கு ஜாஸ்தி உஷ்ணம் வேண்டும். வேறு சிலவற்றிற்கோ ரொம்ப அதிகமாக உஷ்ணம் வேண்டியிருக்கிறது.

### கலப்பு உலோகங்கள்.

பாலில் ஜலத்தைச் சேர்த்தால் இரண்டும் ஒன்று சேர்ந்துவிடுகின்றன. நல்லெண்ணெயில் கடலெண்ணெயைச் சேர்க்கிறார்கள். உருகின நெய்யில் வேறு சில தாழ்ந்த த்ரவப்பொருள்களைச் சேர்க்கிறார்கள். மேலும் நாம் சாப்பிடும் அநேக உணவுப்பொருள்களாகிய குழம்பு, ரஸம், பாயஸம், தோசை முதலியவைகளை கவனித்தால், ஒவ்வொன்றிலும் எவ்வளவோ பதார்த்தங்கள் சேருகின்றன. அவைகள் சேருவதற்காக அவைகளை த்ரவ ரூபமாக்கியோ அல்லது அவைகளை ஜலத்தில் கரைத்தோ தயார் செய்யவேண்டியிருக்கிறது. தவிரவும் சிலவற்றைக் கொஞ்ச உஷ்ணப்படுத்தவும், வேறு சிலவற்றை ஜாஸ்தி உஷ்ணப்படுத்தவும் வேண்டியிருக்கிறது. ஆகையால் த்ரவப்பொருள்கள் ஒன்றோடொன்று லகுவாய்க் கலந்து

சொல்லக்கூடியனவென்றும், கெட்டிப் பொருள்களோ இப்படி ஒன்றோடொன்று சேருவதில்லையென்றும் தெளிவாகிறதல்லவா ?

இன்னுமொரு உதாரணம் கவனியுங்கள். சர்க்கரையைப் பாகு காய்ச்சி அதில் பால்வார்த்து இன்னும் சில வாஸனைத்ரவியங்களைச் சேர்த்து, நன்றாய்க்காய்ச்சி ஆறவைத்தால் ஒரு கெட்டியான தின்பண்டமாகிறது. அந்தத் தின்பண்டத்தின் உருவமும் குணமும், அதன் சேர்க்கைப் பொருளின் உருவத்தினின்றும் குணத்தினின்றும் மாறுதலடைந்திருக்கிறதல்லவா? அதே மாதிரி உலோகங்களை உருக்கி த்ரவமாக்கினால், பாலும் ஜலமும் சேர்வது போல் ஒன்றோடொன்று கலந்துவிட முடிகிறது. கலந்த பொருள் ஆறினதும் கெட்டியாய் விடுகிறது. மேலும் அதனுடைய குணமும் மாறிவிடுகிறது. உதாரணமாகப் பித்தளை, வெண்கலம் முதலியவைகளைச் சொல்லலாம். பித்தளை என்பது செம்பும் துத்தநாகமும் கலந்த உலோகமாகும். பித்தளையின் வர்ணம் செம்பு, துத்தநாகம் ஆகிய இரண்டினுடைய வர்ணத்தை ஒத்திருக்கிறதோ? இல்லை. மேலும் ஒரு செப்புச் செம்பை கீழே போட்டால் எவ்வளவு நசுங்கி விடும். பித்தளைப் பாத்ரமோ அவ்வளவு நசுங்காது. செம்பும், துத்தநாகமும் மென்மையான உலோகங்கள். பித்தளையோ உறுதியாயிருக்கிறது. ஒரு செப்புத் தகட்டை நம்மிஷ்டப்படி கையால் வளைக்கலாம்; பித்தளைத்தகட்டை அப்படிச் செய்வது எவ்வளவு ப்ரயாஸையாயிருக்கும் ?

வெண்கலம் என்பது செம்பும் தகரமும் சேர்ந்தது. வெண்கலப் பாத்ரங்களில், மதுரை வெண்கலம், திருநெல்வேலி வெண்கலம், பாலக்காட்டு வெண்கலமென்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இவைகள் ஒன்றுக்கொன்று வித்யாஸப்படுவதற்குக் காரணம் செம்பும் தகரமும் வெவ்வேறு விகிதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதே. பாலக்காடு வெண்கலம் எவ்வளவு பேர் போனது. அதில் ஸுமார் பத்துத் தாமிரத்துக்கு மூன்றுவரையில் தகரம் சேர்க்கிறார்கள். மற்றவைகளிலெல்லாம் தகரம் குறைவே. நல்ல வெண்கலம் தவறிக் கீழேவிழுந்தால் உடைந்துபோகும்.

இப்போது ஜர்மன் ஸில்வர் என்று சொல்லப்படுவது ஜர்மனியிலிருந்து எடுக்கப்படும் வெள்ளியல்ல. அதை யொருவாறு போலி வெள்ளி என்று சொல்லலாம். அதில் மூன்று, நான்கு உலோகங்கள் சேர்ந்திருக்கின்றன. செம்பு, நிக்கல், துத்தநாகம், ஈயம் இவை நான்கும் சேர்க்கப்படும்.

நாணயங்கள்.

வெள்ளித்தகடு, வெள்ளிக் கம்பிகள், தங்கத்தகடு, தங்கக் கம்பிகள் ஆகிய இவைகளைப் பார்த்திருக்கிறோம். தகடுகளையும் கம்பிகளையும் நாம் லகுவில் வளைத்து விடலாம். குழந்தைகளுக்குக் காலில் வெள்ளி கெட்டிக்காப்பும், கையில் தங்கக்கெட்டிக்காப்பும்போடும்போது அவைகளின் வாயை நீக்கி கைகளிலும் கால்களிலும் போட்டு பிற்பாடு கைகளாலேயே இறுக்கிவிட முடிகிறது. ஏனென்றால், பொன்னும் வெள்ளியும் மிகவும் நயப்புள்ள உலோகங்களாகும். நயத்தில் செம்பைப் பொன்னுக்கும் வெள்ளிக்கும் பிற்பட்டது என்று சொல்லலாம். தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள் இவைகளை நாம் கையால் வளைக்க முடிகிறதோ ? இல்லை. நாணயங்களின் உருவம் மாறிக்கொண்டேயிருந்தால், அவைகளை ஜனங்கள் எவ்விதம் வழங்கிக்கொண்டு வர முடியும்? அவைகளின் உருவம் மாறாமல் இருக்கவேண்டுமானால் அவைகள் உறுதியாயிருக்கவேண்டுமல்லவா? அதற்காகத்தான் கொஞ்சம் செம்பையும் கலக்கிறார்கள். தங்க நாணயங்களில் பத்துப்பாகம் தங்கத்திற்கு ஒரு பாகம் செம்பு



சேர்க்கப்படுகிறது. முழுரூபாய், அரைரூபாய், கால் ரூபாய், அரைக்கால் ரூபாய் ஆகிய இவைகள் வெள்ளியும் செம்பும் கலந்த கலப்பு உலோகத்தினால் ஆனவை. இப்போது சில வருஷங்களாக வழங்கிவரும் ஒரு அணா நாணயத்தில் மூன்று பங்கு செம்புக்கு ஒருபங்கு நிக்கல் சேர்க்கப்பட்டிருக்கிறது.

எஸ். ஜி. ஸுப்ரமண்யம்.

---

## MEANS OF DEFENCE IN ANIMALS.

### ப்ராணிகளின் தற்காப்பு ஸாதனங்கள்.

மனிதன் தன்னை மழையினின்று காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு எப்போதும் நீர் ஒழுகாத சட்டை போட்டுக்கொள்ளலாம்; அல்லது மழை வரும்போது குடை பிடித்துக் கொள்ளலாம். ஒருவன் தன்னை எதிரி குத்தாதபடி கவசம் பூணலாம், அல்லது ஓடிவிடலாம். இப்படி தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளுகிற சக்தி மனுஷனுக்கிருப்பதுபோல் அல்ப ப்ராணிகளுக்கும் ஸ்வபாவமாயுண்டு.

தன்னுடைய அமரிக்கைக்கு ஏதாவது இடைஞ்சலுண்டானால் அமீபா என்ற நீர் ப்ராணி தன் தேஹத்தை உடனே சுருக்கிக்கொள்ளுகிறது. அப்படிச் சுருக்கிக்கொள்ளுவதால் அபாயத்துக்குள்ளாகக்கூடிய பாகம் குறைகிறது. தேகம் உறுதிப்படுகிறது. அபாயத்தினின்றும் அது ஒதுங்குகிறது. குளங்களில் தண்ணீர் வற்றுகிற காலத்திலும் பனிக்கட்டியாய் உறைகிற காலத்திலும் தனக்குள் ஒரு நீர்ப்பையை உண்டாக்கிக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறது.

வேறு ஏதாவது ப்ராணிகள் தங்களைத் தொட்டால் ப்ராணிகள் தேஹத்தைச் சுருக்கிக் கொள்ளுவது ஸஹஜம். சிப்பிகள், நத்தைகள், ஆமைகள் தங்கள் தேஹத்தை மேலோட்டுக்குள்ளிழுத்துக்கொண்டு அபாயத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுகின்றன.

தன்னுடைய சத்ருவின் பார்வையிலிருந்து மறையவேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு ப்ராணிக்குமுண்டு. இந்தக் காரணத்தைக் கொண்டே பச்சோந்தி தன்னிறத்தை அடிக்கடி மாற்றிக் கொள்ளுகிறது. பக்கத்திலுள்ள செடி இலை முதலியவற்றின் நிறத்தை அது கொள்வதால் சத்ருக்கள் அதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. இப்படியே அமெரிக்காவிலுள்ள ஒரு பச்சைப் பல்லி அநேக விதமான நிறமாக மாறுகிறதாம். இவ்விதமாக வெகு ப்ராணிகள் தங்களுடைய நிறத்தை மாற்றிக்கொள்ளுகின்றன.

கட்டில்பிஷ் என்ற மீன் தன்னை ஏதாவது தொடர்ந்தால் ஒருவிதமான கறுப்பு நீரைக் கக்குகிறது. அதனால் ஜலம் கறுத்து விடுகிறது. எதிரிக்கு அதைப் பார்க்க முடியாமல் போகிறது. அதற்குள் அந்த மீன் ஓடி மறைகிறது.

இவைகளால் ஈச்வரன் ஜகத் ச்ருஷ்டியில் எளியாரை வலியார் தொந்திரவு பண்ணுமிருக்கும்படி எளியாருக்குத் தகுந்த உபாயங்களைத் தேடியே வைத்திருக்கிறாரென தெளிவாய்த் தெரிகிறது.

அநேகமாய் எல்லாவித ப்ராணிகளுக்கும் தங்கியிருக்க இடம் தேடுகிற ஸ்வபாவம் இயற்கையாயுண்டு. அநேக புழுக்கள் இடுக்குகளைத் தேடி அவைகளுக்குள் நுழைவதைப் பார்த்திருக்கிறோம். நண்டு நத்தைகள் வளைகளில் வஸிப்பது ஸ்வபாவம். சில பெரிய ப்ராணிகள் குகையிலும் த்வாரங்களிலும்

வஸிப்பதைக் காணலாம். இதைவிட ஒருபடி உயர்ந்தது இருப்பிடம் கட்டுவது. மண் பூச்சி மண்ணுக்குள் குடைந்து நுழைவதால் பட்சிகள் முதலிய எதிரிகளிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறது. அப்படிக் குடையும்போது மண்ணையே ஆஹாரமாயும் உட்கொள்ளுகிறது. அதேமாதிரி அனேக பூச்சிகளும் வண்டுகளும் மரங்களைக் குடைந்து உட்புகுந்து சத்ருக்களுக்குத் தெரியாமலிருக்கின்றன.

பிட்டாக் (Piddock) என்ற ஒரு கடல் ப்ராணி கடலோரமாயுள்ள கல்பாறையைத் தொளைத்து அதில் தனக்கு ஓரிருப்பிடம் செய்துகொண்டு ஸ்வஸ்தமாய் உள்ளேயே தங்கிக்கொண்டு தானாய் உள்ளே ஓடிவரும் ஸமுத்ரத்தின் நீரிலுள்ள ஆஹாரத்தை உட்கொண்டு வஸிக்கிறது. குளவி, தேனீ, எறும்பு இவைகள் மெழுகினாலும் மண்ணினாலும் கடிதத்தினாலும் வீடு கட்டுவதைத் தினந்தோறும் பார்க்கிறோம். பட்சிகள் வெகு நேர்த்தியாய்க் கூடுகள் கட்டுகின்றன. முக்யமாய் இக்கூடுகள் குஞ்சுகளுக்காகவே ஏற்படுகின்றன.

தன்னைச் சுருக்கிக்கொள்ளுகிற அமீபா என்ற ப்ராணியிலாரம்பித்து மனுஷன் வரையிலுள்ள எல்லா ஜந்துக்களுக்கும் எவ்விதமாயாவது தம்மைக் காப்பாற்றிக்கொள்ளுகின்ற ஸ்வபாவமுண்டென்பது ஏற்படுகிறது.

மற்ற ப்ராணிகளுடன் ஒத்துப்பார்க்கும் பக்ஷத்தில் மனுஷன் பலஹீனனாகவும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளச் சக்தியற்றவனாயுமிருக்கிறான். எப்படியெனில், அவன் தோல் வெகு ம்ருது. கால ஸ்வபாவத்துக்குத் தகுந்த போர்வையுமல்ல. சத்ருக்களின் நகங்களுக்கும் பற்களுக்கும் தகுந்த பந்தோபஸ்தானதுமல்ல. அவன் தேஹத்தின்மேல் மயிர் மிகவும் கொஞ்சம். சண்டைபோடும்படி நேரிட்டால் அவன் நகங்கள் கெட்டியானவையல்ல. மற்ற ப்ராணிகளின் நகங்களைவிட ம்ருதுவும் பலஹீனமானவைகள். அவன் அவயவங்களாகிய கையும் காலும் பலமுள்ளவையல்ல. ஓட்டத்திலோ அவன் மெது. ஆனால் புத்தியினால் மனுஷன் மற்ற ப்ராணிகளைவிட வலியன். இதனால்தான் நம்முடைய முன்னோர்கள் எல்லா ஆபத்துக்களுக்கும் தப்பித்துக்கொண்டு வந்தார்கள்.

## THE SKIN

### சர்மம்.

By T. S. RAJAGOPALAN, B. A.

நாம் எங்கேயாகிலும் சருக்கி விழுந்துவிட்டால் நம் மேல்தோல் வழுவுண்டு அடியில் வெளுப்பாய் மற்றொரு தோலிருப்பதையும், ஊன் தண்ணீர் கசிந்து வருவதையும் காணலாம். இதிலிருந்து நம்முடைய தோல் இரண்டு புரைகளையுடையது; ஒன்று மேல்தோல், மற்றொன்று கீழ்த் தோல் என்று புலப்படுகிறதல்லவா? உள்ளங்கால், உள்ளங்கை, முதுகு இவ்விடங்களில் தோல் கனமாயிருப்பதையும் நாம் காணலாம்.

சர்மமானது உணர்ச்சிக் கருவியாயிருப்பதோடு, தசை நார், நரம்பு, எலும்பு இவைகளில் அழுக்குப்படியாமல் காக்கவும், தேஹத்திலிருந்து சில ப்ரயோஜனமற்ற பதார்த்தங்களைத் தள்ளவும், அதன் சீதோஷ்ண நிலையை



சீர்படுத்தி வைக்கவும் உபயோகமாக இருக்கிறது.




தோலின் அமைப்பு.

1. மேல் தோலின் மேல்பாகம். 2. கீழ்பாகம். 8. கீழ்த்தோல். (4) நரம்பு. 5. வேர்வைக்கோளங்கள். (6) அவற்றிலிருந்து தோன்றும் குழாய். 7. கொழுப்பு. 8. ரத்தக் குழாய்கள்.

### மேல்தோல்.

மேல்தோலின் கீழ்ப்பாகம் ம்ருதுவாயும், ஒளிபாயக் கூடாததாயும் இருக்கும். மேல்பாகம் செதில்கள்போல், தட்டையாயும், தொட்டால் கைக்கு கீழ்பாகத்தைவிட கெட்டியாயுமிருக்கும். காலக்ரமத்தில் மேலிருக்கும் செதில்கள் தேய்ந்து உதிர்ந்துவிடும். அப்பொழுது கீழிருக்கும் செதில்கள் மேலே வந்து கெட்டியாகிவிடும். பாம்பு, காப்பு முதலிய ப்ராணிகள் 'தோல் உரிப்பதில்', செதில்கள் உடனுக்குடன் உதிர்ந்துவிடாமல், சேர்ந்து சட்டைபோல் கூடாக வந்துவிடுகிறது. மேல்பாகத்துக்கும் கீழ்ப்பாகத்துக்குமிடையில் வர்ண அணுக்கள் (colouring pigment) கொண்ட ஒரு படை உண்டு. இது நீக்ரோ முதலிய ஜாதியர்களுக்குக் கறுத்தும், குளிர் தேசங்களிலிருப்பவர்களுக்கு வெளுத்தும் இருக்கும். நமது நகம், மயிர், ஆடுமாடுகளின் கொம்பு, குளம்பு, மீன் முதலிய ஜந்துக்களின் செதில்கள், இவையெல்லாம் மேல் தோலின் மாறுபாடுகளே!

### உள் தோல்.

இது ஸன்னமாயும் அழுத்தமாயும் இருக்கும். நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுள்ளது. இதில் மஞ்சள் நரம்புகளும், வெள்ளை நரம்புகளும் ஒன்றுக்கொன்று பின்னிக்கொண்டு கிடக்கின்றன. உள்தோலின் மேல்பாகம் ஸமமாயிராமல் மேடு பள்ளமாயிருக்கும். (Papillae) உள்தோலின் அடிபாகம் தோலுக்குக் கீழிருக்கும் தசைநார் எலும்பு இவைகளோடு தசைக்கூட்டங்களால் (Connective Tissue) இறுகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதில் கொழுப்பு இருந்துகொண்டு மேடுபள்ளங்களை நிரவி அவயவங்களுக்கு வழவழப்பைத் தருகிறது. உள்தோலில் அநேக ரக்தக்குழாய்கள் உண்டு. மேல் தோலுக்கு ஒரு ரக்தக் குழாயும் போவதில்லை. அநேக ஸ்பர்ச நரம்புகளும் உள்தோலில் பிரிந்து செல்லுகின்றன. இவற்றில் சில மேல்தோலின் கீழ்பாகத்தில் பரவி, தோலுக்கு ஏதாகிலும் வலி அல்லது கெடுதல் ஏற்பட்டால் அதை மூளைக்குத் தெரிவிக்கின்றன.

### வேர்வைக் கோளங்கள்.

உள்ளங்கைத் தோலை பூதக் கண்ணாடியை வைத்துப் பார்த்தால் வரப்புகளில் ஒரு வரிசையாய்க் குழிகள் காணப்படும். இவை வேர்

வைக்கோளங்களின் முகங்கள் அல்லது கண்கள். ஒவ்வொரு கண்ணிலிருந்து ஒரு குழாய் மேல்தோல் வழியாய் உள்தோலுக்குள் செல்லுகிறது. உள்தோலின் நடுவே இது பல சுற்றுகளாய்ச் சுற்றிக்கொண்டு ஒரு முடிச்சாய்க் கிடக்கும். இந்த முடிச்சுத்தான் வேர்வைக் கோளமென்பது. இந்தச் சுற்றுகளில் அநேக ரக்தக்குழாய்கள் புகுந்து புறப்படுகின்றன. ரக்தத்திலிருந்து, தேஹத்திற்கு உபயோகமற்றதாயிருக்கிற கரி, ஜலம், உப்பு, ஒருவகைப் புளிப்பு ஆகிய இவற்றைக் கோளங்கள் க்ரஹித்து மேற்கூறிய வேர்வைக் குழாய்களால் வெளியே கொண்டுபோய்த் தள்ளி விடுகின்றன. கையில் குழிகளிருக்கிற இடங்களில சின்னஞ் சிறுவேர்வைத் துளிகள் இருப்பதைப் பூதக் கண்ணாடியின் உதவியால் நன்றாய்ப் பார்க்கலாம்.

இதர கோளங்கள்.

வேர்வைக் கோளங்களைத் தவிர்த்து மற்றும் ஒரு வகைக் கோளங்கள் உள்தோலில் உண்டு. அவை நுட்பமான பைகளாய், மயிர் உற்பத்தியாகுமிடங்களில் கிடக்கின்றன. இவை கொழுப்புப் போன்ற ஒருவித எண்ணெய் வஸ்துவை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு பையிலிருந்தும் வெகு ஸன்னமான குழாய்கள் கிளம்பி மயிர்க்காலுக்குப்போய்ச் சேருகிறது. தோலின்மேல், எண்ணெய்ப் பசையிருப்பதற்கு இதுதான் காரணம். இக்கோளங்கள் உள்ளங்கால் உள்ளங்கைகளில் இரா.

வேர்வை.

இது தேஹத்திலிருந்து கழியும் த்ரவ பதார்த்தம். விஷத்தன்மையுள்ளது. இதில் ஸாதாரண உப்பும், த்ராவகப் புளிப்பும் (Acid) கரியமிலவாயுவும் கலந்திருக்கும். ஸாதாரண உடம்பில் இது கொஞ்சம் கொஞ்சமாய் வெளிவந்து ஆவியாக மாறுகிறது. இப்படிப் போவது நமக்குத் தெரியாது. வெயில காலங்களிலோ, அல்லது தேஹாப்யாஸம் செய்வதனாலோ வேர்வை ஜாஸ்தி உண்டாகி, ஆவியாகப் போனது போக பாக்கியிருப்பது துளிகளாய்ச் சேருகிறது. இதை நாம் உணர்கிறோம். வேர்வை ஜலம் ஆவியாக மாற உடம்பிலிருக்கும் உஷ்ணத்தை எடுத்துக்கொள்ளுகிறது. அதனால் தேஹம் குளிர்ச்சியடைய ஆரம்பிக்கிறது. இவ்வித ஏற்பாட்டினால் தேஹத்தினின்று ஏராளமான உஷ்ணம் வெளிப்படுகிறது. தோலின் உபயோகம் முக்யமாய், விஷத்தன்மையான நீர், உஷ்ணம், சிறிது கரியமிலவாயு இவை கழிவதற்கு வழியாயிருப்பதே. இந்த விஷநீர்க்கழிவின் அளவு பல தேகங்களில் பல ஸமயங்களில் பல மாதிரியாகவிருக்கும். ஸாதாரண சரீரத்தில் 24-மணி நேரத்தில் ஸுமார் 2 ராத்தலுக்கு மேல் நீர்கழிவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. வேர்வை உண்டாவது பல விஷயங்களைப் பொறுத்திருக்கும். (மற்றக் கோளங்களிலுள்ளதுபோல்)வேர்வைக் கோளங்களில் ஸ்பர்ச நரம்பின் அதிகாரம் உண்டு. இந்த நரம்பின் ஒரு உத்தரவால் கோளங்கள் வெகுவாய் வேர்வையைச் சேர்த்து வெளியில் கொட்டுகின்றன. சில ஸமயங்களில் அதிகமான ரக்தம் ரக்தக் குழாய்களில் வந்தால் அதிகமான வேர்வையும் உண்டாகும். வெயில்காலங்களில் ரக்தக்குழாய்கள் பெருக்க, அவற்றில் ஜாஸ்தி ரக்தம ஓடுகிறது. அப்பொழுது ஜாஸ்தி வேர்வையும் உண்டாகிறது. குளிர்காலத்தில் குழாய்கள் சுருங்கியிருக்குமாதலால், அதிக வேர்வை உண்டாவதில்லை. ஆகையால் உஷ்ணம் வெளிச்செல்வதும் குறைந்துவிடுகிறது. துளிகளாய்ச் சேர்ந்திருக்கும் வேர்வையை ஒரு உலர்ந்த துணியால் துடைக்கவேண்டும். வேறு உடையும் தரிக்கவேண்டும். தங்கவிட்டால், பெரும்பாகம உதிரும் செதில்களோடும், வெளித்தூசிகளோடும் கலந்து உடம்பிலும் உடைகளிலும் ஒட்டிக்



கொண்டு நாற்றத்தையும் வ்யாதிகளையும் விளைவிக்கும். தவிர, வேர்வைக் குழாய்களின் கண்கள் அடைபட்டுவிடும்; ரக்தமும் கெட்டுப்போய்விடும். ஸ்நானம் செய்வதாயிருந்தால் வேர்வை அடங்கின பிறகே செய்யவேண்டும். வேர்வை ஆவியாக மாறும்போது உடம்பிலுள்ள உஷ்ணம் குறைந்து தேஹம் சீதளமடைகிறது என்று சொன்னோம். அதில் ஸ்நானம் செய்தால் சளி பிடிப்பதோடு, ரக்தக் குழாய்கள் சுருங்கிவிடுவதால் கழியவேண்டிய விஷநீர் முழுவதும் கழிகிறதில்லை. உஷ்ண ஜலமாயிருந்தால் ஸ்நானம் செய்தபிறகும் வேர்வை அடங்குகிறதில்லை.

டி. எஸ். ராஜகோபாலன்.

## PANDHARPUR

By K. GOVINDA RAO.

### பண்டரீபுரம்.

இது பம்பாய் ராஜதானியில் பீமா நதிக் கரையிலிருக்கிறது. இதில் பெரும்பாலும் மஹாராஷ்ட்ரர்களே குடியேறி யிருக்கிறார்கள். இது மிகவும் புராண ப்ரஸித்தமான யாத்ரை ஸ்தலங்களில் ஒன்று. ப்ரதி வர்ஷமும் ஆடி மாஸத்திலும், கார்த்திகை மாஸத்திலும் இங்கே பெரிய உத்ஸவம் நடைபெறுகிறது. பல இடங்களிலிருந்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் இந்த உத்ஸவத்துக்குப் போகிறார்கள். இவ்விடத்தில் பகவான் "ஸ்ரீ பாண்டுரங்க விட்டல்" என்ற பெயரால் புண்டரீகன் என்ற ஓர் பக்தனுக்காக ஸான்னித்யமானேனென்று ப்ரஸித்தப்படுத்தி அந்த க்ஷேத்ரத்திற்குப் பண்டரீபுரம் என்று பெயரிட்டு விளங்குகிறார். இதை பூவைகுண்டமென்று சொல்வதுண்டு. ஹரிகதா காலக்ஷேபங்களில் பாகவதர்கள் இடையிடையே, "புண்டரீக வரதா ஹரிவிட்டல்" என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அந்தப் புண்டரீகன் சரித்ரத்தை கீழே வரைவோம்.

இந்தப் பண்டரீபுரத்தில் ஜத்துவாவென்று ஒரு அந்தணர் இருந்தார். இவர் மனைவியின் பெயர் ஸாத்வகி, பொறுமையும், சாந்தகுணமுமுடையவள். தன் கணவன் மனது கோணாமல் நடந்து அவனே தெய்வம் என்று கருதி நடக்கிறவள். பதிவ்ரதை என்று சொல்வது இவளுக்கே தகும். இவள் அழகைப்பற்றி வர்ணிக்க நம்மால் முடியாது. மொத்தத்தில் கணவனுக்கேற்ற பத்நி இவள் தானென்றும், இவளுக்கேற்ற கணவன் இவன்தானென்றும் அந்த ஊரில் எல்லாராலும் புகழப்பட்டு வந்தார்கள். இவர்களுக்கு ஸகல ஐசுவர்யங்களிருந்தும் புத்ரபாக்யம் ஒன்று மாத்ரம் இல்லை. பிறகு பகவத் அநுக்ரகத்தால் ஒரு புத்ரன் பிறந்தான். அவனுக்கு புண்டரீகனென்று நாமகரணஞ் செய்து அவனை மிகவும் அன்பாய் வளர்த்து ஸகல கலைகளையும் பயில்வித்து, எட்டாவது வயஸில் உபநயனமும், பதினோராவது வயதில் விவாகமு முடித்தார்கள். கொஞ்ச காலத்திற்குள் புண்டரீகன் தன் மனைவியின் வாக்யமே வேத வாக்யமாகக்கொண்டு தன் பெற்றோர்களை எப்பொழுதும் தூஷித்து அவர்களை பலவிதமாக தொந்தரவுசெய்து வந்தான். அவர்களும் இவன் உபத்ரவம் பொறுக்க முடியாமல் தேசாந்த்ரம் சென்றார்கள். பிறகு புண்டரீகன் கைப்பொருள் எல்லாவற்றையும் செலவழித்து ஜீவனத்திற்கு யாதொரு மார்க்கமுமில்லாமல் "ஐயோ! என் மனைவியின் மாயவலைக்குள் சிக்கி அவள் சொற்படி நடந்து, என் பெற்றோர்களையும் வெறுத்[illegible]

...ல்லவா இவ்வித ஸ்திதி எனக்கு வந்தது? என் மாதா பிதா எங்குசென்று விட்டார்களோ? அவர்கள் போகும்பொழுது என் உபத்ரவம், ஸஹிக்கமுடியாமல் என்னை சபித்து விட்டுப் போனார்களோ" என்று மிகவும் மன வருத்தத்துடன் தன் பார்யையைப் பார்த்து, "நான் உன் வார்த்தைகளைக்கேட்டுக் கெட்டேன். என் பெற்றோர்களை இழந்தேன். இனி அவர்களை எங்கு தேடுவேன்? எங்கு காண்பேன்? அவர்களைப்போல் ஸத்சீலர்களுண்டா! அவர்கள் மஹா ஸாதுக்களாயிற்றே. அவர்களுக்குப்பணிவிடை செய்வதல்லவா என் தர்மம். நான் மஹாபாவி. அவர்களைத் தேடி அழைத்துவந்து அவர்கள் ஆசீர்வாதம் பெறும்படியான பாக்யமடைவேனோ' என்று சொல்லிக்கொண்டு தன் பெற்றோர்களைத்தேடப்புறப்பட்டுக் காசி நகரையடைந்து, அங்கு அவர்களைக் காணாது முன் செல்லுகையில், வழியில் குக்குட முனிவர் ஆச்ரம மடைந்தான். அங்கே அர்த்த ராத்ரி வேளையில் மூன்று ஸ்த்ரீகள் குடத்தில் ஜலம் எடுத்துக்கொண்டு முனிவர் ஆச்ரமத்துக்குப் போவதைப் பார்த்து, இவர்கள் என்ன தெய்வ ரம்பைகளோ அல்லது அப்ஸரஸ்த்ரீகளோ, யாரோ தெரியவில்லையே, இம்முனிவருக்கு சுச்ரூஷை செய்யக் காரணமென்னவென்று யோசித்து தன் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அவர்கள் ஸமீபம் போய் "அம்மணி! நீங்கள் யார்! இங்கு வந்து இவருக்கு பணிவிடை செய்யக் காரணமென்ன"வென்று கேட்க, அவர்களும் இவனைப் பார்த்து, "அப்பா! நாங்கள் மூவரும், யமுனை, ஸரஸ்வதி, பாகீரதி என்று தெரிந்துகொள். நாங்கள் பூர்வ ஜன்மத்தில் செய்த பாவத்தைப் போக்கிக் கொள்ள இம்முனிவருக்கு சுச்ரூஷை செய்து வருகிறோமென்று சொல்லி ஆச்ரமம் நோக்கிச் செல்லுகையில், புண்டரீகன் அவர்களை நோக்கி, "அம்மா! ஏழையாகிய என் கதி என்ன? இம்ஸாரமென்கிற கும்பியில் அவஸ்தைப்படுகிற நான் நற்கதியடைய மார்க்கம் சொல்லக்கூடாதா"வென்று கேட்க, அவர்களும், "நீ பக்தியோடு உன் மாதாபிதாவின் சுச்ரூஷை நடத்தி வந்தால் இகபரமிரண்டிலும் உத்தம பதவி படைவாய். அவர்களைத் தவிர வேறு தெய்வமில்லை" என்று சொல்லி ஆச்ரமம் சென்றார்கள். இதற்காகத்தானே "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று சொல்லியிருக்கிறாள் ஔவைக் கிழவியும். வேதமும், "மாத்ரு தேவோபவ, பித்ரு தேவோபவ" என்று முறையிடுகின்றது. பிறகு புண்டரீகன் அவர்கள் சொல்லியவண்ணமே வெகு ப்ரயாஸைப்பட்டு தன் பெற்றோர்களைக் கண்டு அவர்களை ஆலிங்கனம் செய்து திவ்ய தேசங்கள் தோறும் யாத்ரை செய்வித்து அவர்களுடன் பண்டரீபுரம் சேர்ந்தான். ஒரு நாள் புண்டரீகன் தன் மாதா பிதாவுக்கு சுச்ரூஷை செய்துகொண்டிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் ருக்மணி ஸமேதராய் அவன் முன்வந்து நிற்க, அவன் பகவானுக்கு ஓர் செங்கல் கொடுத்து "ஹே நாதா! தீனபந்து! இந்த செங்கல்மேல் எழுந்தருளும். சுச்ரூஷை செய்து வருகிறேன். என்று சொல்லி அவர்களுக்குச் செய்யவேண்டியவைகளை செய்து முடித்து பக்கத்தில் நின்ற பகவானை ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்து நிற்க, பகவான் அவனை ஆசீர்வதித்து, "மாதா பிதாவுக்கு சுச்ரூஷை செய்வதில் உன்னைப் போலொருவருமில்லை. உன் பக்தியை மெச்சினேன். ஆநந்தமடைந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" எனப், புண்டரீகன் ஆநந்தக் கண்ணீர் பெருக தேஹம் பூரித்து "ஹே பக்தவத்ஸலா! தீனபந்து! தேவரீர் இவ்விடத்திலேயே எழுந்தருளி எனக்கு ஸதா தர்சனம் கொடுக்கவேண்டுமென்று கேட்பதைவிட நான் வேறு வரம் என்ன கேட்கப்



போகிறேன். எனக்கு வேறு ஒன்றும் வேண்டா"மென்று சொல்ல, பகவான் மந்தஹாஸத்துடன் "அப்பா! உன் இஷ்டப்படி நான் இவ்விடத்திலேயே இருக்கிறே"னென்று சொல்லி புண்டரீகன் கொடுத்த செங்கல்லின்மேல் நின்றுவிட்டார். அது முதல் அநேக பக்தர்கள் அவ்விடம் வந்து பகவானை தர்சிக்க ஆரம்பித்தார்கள். பகவானின் இந்த நின்ற கோலத்தை அவ்விடத்தில் இன்றைக்கும் காணலாம்.

மாதாபிதாவுக்கு சுச்ரூஷை செய்ததினால் இவனுக்கு எவர்களுக்கும் கிடைப்பதற்கரிய பகவத் ஸாந்நித்யம் கிடைத்தது. ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் பெற்றோர்களை தெய்வமாகக் கருதி நடந்தால் எவ்வளவு ஸௌக்யம் உண்டென்பதை இச்சிறு கதையினால் தெரிந்துகொள்ளலாம்.

கே. கோவிந்த ராவ்.

## CORK.
## கார்க்.

ஸாதாரணமாய் கடைகளிலிருந்து புட்டிகளில் அடங்கிய த்ரவ பதார்த்தங்களை வாங்கினால், புட்டிகளின் வாய்கள் ஒருவித கெட்டி போன்ற வஸ்துவினால் மூடப்பட்டிருப்பதை பார்க்கிறோம். அவ்வஸ்துவை மருந்து ஷாப்புகளில் மருந்தை புட்டிகளில் ஊற்றி கெட்டியாய் மூடுவதற்காகவும் உபயோகிக்கிறார்கள். அதற்கு கார்க் என்று பெயர். வீடுகளில் விளக்கெண்ணெய் புட்டியோ, அல்லது ஓம த்ராவகப் புட்டியோ வாங்கிவந்தால், அவைகளிலுள்ள கார்க்கை பின்னமாய்ப் போகாமல் எடுப்பதற்கு, ஒருவித 'கார்க்ஸ்க்ரூ' என்னும் திருகாணியை உபயோகப்படுத்துவது எல்லாருக்கும் தெரியும். கத்தியாலாவது, ஊசியாலாவது எடுத்தால், அதை முழுசாய் எடுப்பது அஸாத்யமாகும்.

### எங்கே உற்பத்தியாகிறது.

ஐரோப்பாவின் தென்பாகங்களிலும், ஆப்ரிக்காவின் வடபாகங்களிலும் 'கார்க் ஓக்' என்னும் வ்ருக்ஷம் ஏராளமாய்ப் பயிராகிறது. அந்த மரங்களின் மேல்பாகங்களில்தான் கார்க் உண்டாகிறது.

### எப்படிப் பயிராகிறது.

ஒரு செடியைக் குறுக்கே கத்தியால் வெட்டி லென்ஸ் என்னும் ஒரு ஸூக்ஷ்ம தர்சனியால் பார்த்தால் வெட்டுமுகத்தில் மூன்று ப்ரத்யேகமான பாகங்கள் புலப்படும். வெளிப்பக்கத்தில் இருப்பது பட்டையாகும். நடு மையத்தில் இருப்பது சடைபோலிருக்கும் சோற்றி என்னும் பெயருடைய பாகமாகும். இந்த இரண்டிற்கும் இடையிலுள்ள பாகத்திற்கு 'காம்பியம் அதாவது மரக்குழாய் கூட்டக்கம்பிகள்' என்று பெயர். இந்த பாகத்தில்தான் மரம் செடிகொடிகளுக்கு வேண்டிய முக்யமான செடியுணவு ரஸம் அல்லது சாறு என்பது காணப்படுகிறது. இந்த பாகத்திலிருந்து மேலே சொன்ன ஓக் மரங்களில் நார்போன்ற அடுக்குகள் பட்டையின்கீழ் உற்பத்தியாகின்றன. இவைகளிலிருந்து கார்க் என்னும் பொருள் உண்டாகிறது. இது வளரவளர மரத்தின் பட்டைகளைப் பிளந்துகொண்டு வெளியில் வந்து, பிற்பாடு மரங்களுக்கு ஒரு கவசம் போட்டாற்போல் அவைகளைச் சுற்றிக் கொண்டுவிடுகிறது.

எடுக்கும் விதம்.

மரங்களின் மேலுள்ள கார்க் பட்டையை குறுக்கேயும் நெடுக்கேயும் நல்ல கத்திகளால் கீறி, அவைகளைப் பாளம்பாளமாக வெட்டி பெயர்ப்பார்கள். சில ஸமயங்களில் வெட்டி பெயர்க்கப்பட்ட பாளமானது ஸுமார் 50 ராத்தல் நிறையிருக்கும்.

எந்த மரங்கள் ச்லாக்யம்.

கார்க் மரங்கள் பயிர்செய்து ஸுமார் 15 வர்ஷம் வரையில் அவைகளை ஒன்றும் செய்வதில்லையாம். பிற்பாடு அவைகளிலிருந்து கார்க் எடுக்க ஆரம்பிப்பார்களாம். இளமரங்களிலிருந்து எடுத்தவைகளைக் காட்டிலும், முதிர்ந்த மரங்களிலிருந்து எடுத்தவைகள் மேலாக இருக்கின்றன.

வெட்டும் காலமுறை.

மேலே சொன்னமுறையின்படி மரங்களிலிருந்து வர்ஷாவர்ஷம் கார்க் வெட்டுவதில்லை. ஸுமார் 10 வர்ஷங்களுக்கு ஒருமுறை வெட்டுவது வழக்கம்.

மரங்களின் வளர்ச்சி.

இப்படிப் பலதடவை அவைகளைக் கழிப்பதனால் மரங்களுக்கு ஏதேனும் கேடு உண்டோ என்று யோசிக்கக்கூடும். கழித்த மரங்களின் வளர்ச்சி கழிக்கப்படாதவைகளின் செழுமையைக் காட்டிலும் நன்றாயிருக்கிறதாம். பாம்பு சட்டையை உரிக்கிறது போலவே இதையும் சொல்லலாம். நல்ல மரங்கள் ஸுமார் 120 முதல் 150 வருஷங்கள் வரையில் உயிரோடிருக்குமாம்.

பதஞ்செய்யும் விதம்.

மரத்தின்மேலிருந்து பாளம் பாளமாய் வெட்டி யெடுக்கப்பட்ட துண்டுகளை கொதிக்கிற ஜலத்தில் கொஞ்சநேரம் ஊறப் போடுவார்கள். இப்படி செய்வதால் அவைகளிலுள்ள இரண்டொரு புளிப்பு த்ராவகங்கள் ஜலத்தில் கரைந்துவிடுகின்றன. பிற்பாடு கைகளினாலோ அல்லது யந்த்ரங்களின் ஸஹாயத்தினாலோ அவைகளை நன்றாய்க் கசக்கி 'ஆக்ஸாலிக் ஆஸிட்' என்னும் த்ராவகத்தில் அவைகளைப்போட்டு நன்றாய் அலம்புகிறார்கள். இப்படி செய்வதினால் கார்க்குக்கு நெகிழ்ந்து வளைந்து கொடுக்கும் சக்தி ஜாஸ்தியாகிறது. பிற்பாடு வேண்டிய அளவுக்குத் தக்கபடி அவைகளைத் துண்டு செய்வார்கள். மேலேசொன்ன மாதிரியில்லாமல் வேறு வழியிலும் பாடஞ்செய்கிறார்கள். இது எதற்காகவென்றால், சூடுள்ள வஸ்துக்களை இவைகளால் சுற்றிவைத்தால் சூடு லகுவில் தணிகிறதில்லை. பனிக்கட்டிபோன்ற குளிர்ந்த பதார்த்தங்களைச் சுற்றி வைத்தால், வெளியிலிருக்கும் சூடு இவைகளைத் தாக்குவதில்லை.

கார்க்கைத் தூளாக்கி வேண்டிய அளவான இரும்பு அச்சுக்களில் போட்டு யந்த்ரங்களினால் அமுக்குகிறார்கள். பிறகு ஸுமார் 500 பாரன்ஹீட் டிகிரி சூடுள்ள பாத்ரத்தில் போட்டு சுடுகிறார்கள். இப்படிச் செய்வதால் கார்க்கின் இடைவெளிகளிலுள்ள ஜலம் ஆவியாய்விடுகிறது. மேலும் ஸ்வபாவத்திலேயே அவைகளுக்குள் உள்ள பசைப் பதார்த்தம் உருகி இடுக்குகளிலெல்லாம் பரவுகிறது. சூடு தணிந்ததும் அவைகளை அடைத்துவிடுகிறது. இப்படி பாடஞ்செய்யப்பட்ட கார்க்கானது ரப்பர் கைக்கு எவ்வளவு ம்ருதுவாயிருக்குமோ அவ்வளவு ம்ருதுவாக இருக்கிறது.

கார்க்கின் குணங்கள்.

இது ஜலத்தைவிட லேசானது. கெட்டியைப்போல ஜலத்தில்போட்டால் நீரை உட்கொள்ளாது. அதற்கு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுண்டு. அதாவது அமுக்கினால் அமுங்கி, பிற்பாடு முன்னிருந்த ஸ்திதியையடைவதற்கு முயலும் சக்தியுண்டு. இதனாலேதான் புட்டிகளைக் கார்க்கால் மூடுகிறார்கள். மரக்கட்டைகளால் மூடினால் அவைகள் அமுக்கா வாகையால் கண்ணாடி உடைந்துபோய்விடும்.



கார்க்கின் உபயோகங்கள்.

மேலே சொன்னவைகளைத்தவிர வேறு வேலைக்கும் கார்க் உதவுகிறது. வீணாய்ப் போன கார்க்கு தூளிலிருந்து 'ஸ்பானிஷ் ப்ளாக்' என்று ஒருவிதமான கறுப்பு வர்ணப் பொடி செய்கிறார்கள்.

இப்போது ப்ரான்ஸ் தேசத்தில் சில வர்ஷங்களாக கார்க்கிலிருந்து வஸ்த்ர வகைகள் செய்வதாகத் தெரிகிறது. இந்த வஸ்த்ர வகைகளை விசேஷமாய் மழை காலங்களில், ஜனங்கள் வெளியே போகும்போது மேலே போட்டுக்கொண்டு போகிறார்களாம். இவைகளின்மேல் ஜலம் பட்டால் உள்ளே செல்லுகிறதில்லை. ஏனென்றால் கார்க்குக்கு ஜலத்தை உள்ளே இழுத்துக்கொள்ளும் சக்தி இல்லை என்று சொல்லியிருக்கிறோம். இந்த ஊர்களில் மழைகாலங்களில் முழங்கால் வரையில் படும்படியான நீண்ட பெரிய சட்டைகளை சில ஜனங்கள் போட்டுக்கொண்டு வெளியே போவதை நாம் பார்க்கலாம். இவைகளுக்கு 'ஓவர்கோட்ஸ்' என்று பெயர். போலீஸ் சேவகர்கள் மழைகாலங்களில் ஒருவித மஞ்சள் வர்ணமுள்ள பெரிய சட்டைகளை மேலே போட்டுக்கொண்டு மூலைக்கு மூலை நிற்பதைப் பார்க்கலாம். இவைகளும் மழைச் சட்டைகள்தான். ஆனால் இவைகள் மெழுகு சீலைகளால் ஆனவை. தவிர, ரப்பரினாலும், உயர்ந்த கம்பளியாலும் இவைகள் செய்யப்படுவது உண்டு. இப்போது கார்க் துணியோடு நாலு திணுஸுகள் ஆகும்.

கார்க் வஸ்த்ரங்கள் செய்யும் விதத்தை கவனிப்போம். மரத்திலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட கார்க் கட்டையிலிருந்து ஒரே கனமாய் மெல்லியதாகவுள்ள துண்டுகளை ஒரு யந்த்ரத்தின் உதவியால் எடுக்கிறார்கள். பிறகு இவைகளை, சில ரஸாயனப் பொருள்கள் கலந்த ஜலத்தில் ஊறப்போடுகிறார்கள். இதனால் அவைகளிலுள்ள பசை ஸத்துக்கள் நீங்குகின்றன. வெளியிலெடுத்த பிற்பாடு அவைகளை மெல்லிய பதனிட்ட தோல்போல லகுவில் வளைத்து விடக்கூடுமாம். ஒரு மெல்லிய வஸ்த்ரத்தை எடுத்துப் பரப்பி, அதன் மேல் இந்த கார்க் தகடுகளை ஒட்டிவிடுகிறார்களாம். இதற்கு உபயோகிக்கப்பட்ட பசை புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இதைத்தவிர கொஞ்சம் உரப்பான துணி வேண்டுமானால், ஸாதாரண துணியில் இரண்டு பக்கங்களிலும் இந்த துண்டுகளைச் சேர்த்துவிடுகிறார்களாம். இப்படி தயார் செய்த துணிகளிலிருந்து சட்டைகள் செய்யப்படுகின்றன. கார்க் மிகவும் லேசான பொருளாதலால், அதனால் செய்யப்பட்ட மழைச் சட்டைகள் பாக்கி மழைச்சட்டைகளைவிட லேசாயிருக்கின்றனவாம்.


ஜன நிர்மாணம்.

மிஸ்ஸஸ் அனிபெஸண்ட் செய்த ப்ரஸங்கங்களின் மொழி பெயர்ப்பு. இதில் தேசமுற்போக்குக்கு அவஸ்யமான பலவிஷயங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பொருளடக்கம் :—முகவுரை - ஜன நிர்மாணம். பொதுப்பான்மை.—எவ்வித கல்விப்பயிற்சியானது தேசப்பொது வளர்ச்சிக்கு அடிப்படையாகும் - மத ஸம்பந்தமான கல்வியின் ஆவஸியகம் - யுகதர்மம் - ஸர்வ மத ஸகோதரத்வம் - கிழக்கும் மேற்கும் - மாவ ரக்ஷகர். இதில் உள்ள முகவுரையானது சுதேசமித்திரன் பத்ரிகையின் அதிபராயிருந்த காலஞ்சென்ற மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர் எழுதியது. புஸ்தகம் 250-பக்கங்கள்கொண்டது.

விலை. அணா 12.

ஜி. எ. வைத்தியராமன் அண்ட் கம்பெனி,

3, 4, கொண்டிசெட்டித் தெரு,

மதராஸ்.

# FENCE

By P. V. RAJAGOPALA ACHARI.

## வேலி.

தம்மினம் தம்மைக்காக்கும், வேலி பயிரைக் காக்குமென்று நம்முன்னோர்கள் சொன்னது யாவருக்கும் தெரிந்திருக்க, நம் நிலத்தைச் சுற்றி அநேகர் வேலி அடைக்காதிருப்பதை என்னென்று சொல்வது? தென்னிந்தியாவைத் தவிர்த்து மற்றெல்லா தேசங்களிலும் வேலியில்லாமல் வேளாண்மை நடப்பது துர்லபம். மலையாளம், தென்கன்னடம் ஜில்லாக்களிலும், சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களிலும் நிலத்தைச்சுற்றி ஏதாவது ஒருவிதமான வேலியிருப்பதைக் காணலாம்.

### வேலியின் உபயோகங்கள்.

வேலிகள், கால்மாடுகள் உள்ளே நுழைந்து பயிரை மேய்ந்து அழித்துவிடாமல் காக்கும். கரும்புப் பயிரைப்போன்ற செடிகளை நரி முதலியவைகள் வந்து கடித்து நாசஞ் செய்யாமல் காக்கவேண்டியதும் வேலிகளைக் கொண்டே. கடுங்காற்றின் கொடூரத்தைச் சற்று மட்டுப்படுத்துவதும் வேலிகளினாலேயே, கால்நடைகளுக்கு கொள்ளைநோய் முதலிய ஒட்டு வ்யாதிகள் வராமல் தடுக்க வேலியே முக்ய ஹேதுவாயிருக்கிறது. இதைப் பற்றியே பெரியோரும் "வெள்ளைக்கு வேலி மறைப்பு" என்று கூறியிருக்கிறார்கள். சிங்காரத்தோட்டத்தில் அழகான வேலிகளே பார்வைக்கு ரமணீகரத்தைக் கொடுக்கின்றன. சப்பாத்தி போன்ற பலமான முள்வேலி போட்டால் மாடு மனிதர்கள்கூட நுழைய இடம் கொடுக்காது. வேலிகளும் சில பயிர்களுக்கு நிழலைத்தந்து ரக்ஷிக்கின்றன. இப்படியிருப்பதால் வேலி வ்யவஸாயத்திற்கு இன்றியமையாதவைகளிலொன்றாகிறது.

### மூன்று வகைகள்.

வேலிகளில் இரண்டுவகைகள் உண்டு:—(1) உயிருடனிருப்பது (2) காய்ந்த முள்ளினாலும் செடியினாலும் தயாரிப்பது. இவைகளைத் தவிர தற்போது இரும்புக் கம்பிகளினாலும் வேலிகளடைப்பது ஸுலபம்.

### உயிர் வேலிகள்.

இவைகளில் உயிருடன் இருக்கும் வேலிகளே மிகவும் ச்லாக்யமானவை. இவைகள் நிழலைக் கொடுத்து, காற்றையும் சாந்தி செய்வதோடு, விறகு முதலானவகைகளுக்கும் உபயோகமாகின்றன. இத்தகைய வேலிகளுக்கென்று உற்பத்தியாக்கப்படும் மரஞ் செடிகள் பல உள.

இவைகளில் முக்யமானவை கொறுக்காய்ப் புளி, சப்பாத்தி, முள்ளுக்கிளுவை, திருகுக் கள்ளி, கற்றாழை, சதுரக்கள்ளி, கருவேலன். இவைகளைப்பற்றிய விஷயங்கள் சென்ற ஆவனி மாதத்து 'ஜனோபிமானி' யில் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

### மூங்கில் முள்வேலி.

மூங்கில் முட்களைக்கொண்டு நல்ல படல்களாகச் செய்து அவைகளைக் கொண்டும் நல்லவேலி போடலாம். ஆனால் முள்வேலிகள் சீக்கிரத்தில் க்ஷீணித்துவிடும்.

### இரும்புக் கம்பி வேலி.

இரும்புக் கம்பிகளினால் வேலிகள் செய்து சில கம்பெனியார் விற்கிறார்கள். இப்படிப் பட்ட வேலிபோட 1 கஜத்திற்கு 7 முதல் 11 அணா வரையில் பிடிக்கும். இன்னும் வலைகளைப் போலுள்ள இருப்புக் கம்பி வேலிகளையும் கரும்புக்கொல்லைகளில் போடுவது லாபகரமாகும். இவை நரியின் உபத்ரவத்தை நன்றாய்த் தடுக்கின்றன.

### கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

தற்காலத்தில் நிலத்தைச்சுற்றி வேலிபோடும் வழக்கம் தென்னிந்தியாவில் வெகுவாய் கையாடப்பட்டு வாராதது வ்யஸனிக்கத்தக்கது. வேலி அடைப்பதில் முக்யமாய் மூன்று விஷயங்களைக் கவனிக்கவேண்டும். முதலாவது வேலிபோடுவதின் நோக்கம் எதற்கென்று தெரியவேண்டும். மாடு கன்றுகள் புகவொட்டாமல் தடுப்பதற்காகவாயிருந்தால் வேலிகள் ஸுலபமாய்ப்போட்டுவிடலாம். மனிதன் நுழையாத வேலி அவச்யமாயிருந்தால் அதிகக் கஷ்டப்பட்டு வேலிகளைத்தெரிந்தெடுக்க வேண்டியதவச்யம். பிற்பாடு வேலிகளினால் உண்டாகும் லாபத்தையும் கவனிப்பது நல்லது. வெவ்வேறு வேலி போடுவதினால் உண்டாகும் செலவுகளையும் கவனித்து எது ஸுலபமாய் முடியுமோ அவ்வித வேலிபோட எத்தனித்தல் நன்று.



# THE WAY WOUNDS HEAL.

## காயங்கள் ஆறும் விதம்.

ஒருவன் அதிகமாகக் காயமடைந்திருக்கும் போது டாக்டர் மாம்ஸத்திலோ எலும்பிலோ உண்டாகிய அந்தக் காயத்திற்கு ஏதோ வைத்யம் செய்கிறார். ஆனால் அவர் காயத்தைத் தாமே ஆற்ற ப்ரயத்னப்படுவதில்லை. எந்த நிலைமையில் வைத்திருந்தால் காயம் தானாக ஆறிவிடுமோ அந்த நிலைமையில் காயத்தை வைத்திருப்பதுதான் டாக்டர்கள் செய்யும் வேலையாகும்.

டாக்டர் A. C. கய்ல்லாம் என்பவர் யுத்தகளத்தில் உண்டாகும் முக்யமான காயங்களைப் பற்றியும் அவைகள் ஆறும் விதத்தைப் பற்றியும் விவரித்து எழுதியிருக்கிறார். அவர் எழுதியிருக்கும் விவரணம் சில அம்சங்கள் நீங்கலாக எல்லாக் காயங்களுக்கும் பொருந்தமுடையதாக இருக்கிறது.

குண்டு பாய்வதனால் உண்டாகும் காயங்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன: (1) நேராகவும் வேகமாகவும் வந்து பாய்கிற குண்டுகளினால் உண்டாகும் காயங்கள். (2) ஷ்ராப்னெல் என்பதைப் போலுள்ள வேகக் குறைவான குண்டுகளினால் உண்டாகும் காயங்கள். (3) வெடித்தகுண்டுகளின் சிறு துண்டுகளால் உண்டாகும் காயங்கள். முதல் வகுப்பில் சேர்ந்த காயங்கள் சுத்தமாகவும் பழுதில்லாமலும் இருக்கும். இவைகளில் ஸாதாரணமாய் வ்யாதி க்ருமிகள் சேருவதில்லை. தேகத்திலுள்ள ஆழ்ந்த உறுப்பிலாவது எலும்பிலாவது அடிபடாமல் இருந்தால் மேற்சொல்லிய காயங்கள் சீக்ரமே ஆறிவிடும். இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த காயங்கள் முதல் வகுப்புக் காயங்களைப் போலவாவது மூன்றும் வகுப்பு காயங்களைப் போலவாவது காயங்களின் தன்மைக் கேற்ப இருக்கும். மூன்றும் வகுப்பைச் சேர்ந்த காயங்கள் ஸர்வ ஸாதாரணமாகவும் மிகவும் முக்யமானவைகளாகவும் இருக்கின்றன. இவைகள் ஆறுவதற்கு ஸாதாரணமாய்க் காலம்பிடிக்கும்.

மூன்றுவது வகுப்புக் காயத்தில் குண்டுகளின் துண்டுகள் தோலின்வழியாகச் சிறிய த்வாரம் செய்துகொண்டுபோகும். தோலும் அதன் கீழுள்ள ம்ருதுவான போர்வையும் தசைகளை மூடியிருக்கும் மெல்லிய போர்வையும் மிகவும் நெகிழ்ச்சி உள்ளவைகளாக இருப்பதனால், குண்டு உள்ளேபாய்ந்தவுடனேமூடிக் கொள்ளும். குண்டு தசை நரம்புகளில் பாய்ந்தால் அது அவைகளைக் கிழித்து அவைகளுக்குள் ஒரு குழிசெய்து விடுகிறது; அது எலும்

பண்டைபோனதும் எலும்பை நொறுக்கி விட்டு அதோடு நின்றுவிடுகிறது.

ரத்தமும் அழுக்கும் தோலுக்குள் இருக்கும் தண்ணிய அறைகளில் தங்குகின்றன. தசைநார்களில் உண்டாகிய குழியில் தசையின் நொறுங்கிய துண்டுகளும், உறைந்துபோன ரக்தக்கட்டிகளும், ஊனீரும், குண்டோடு காயத்தில் சேர்ந்துள்ள அந்ய வஸ்துக்களும் ஒடிந்துபோன எலும்புத் துண்டுகளும் இருக்கும்.

காயம்பட்ட ஐந்து மணிநேரம் வரைக்கும் காயத்தில் யாதொரு மாறுபாடும் நேரிடுவதில்லை. அப்பொழுது பூதக்கண்ணாடியால் பார்த்தாலும் ஒன்றும் தெரியாது. வெளியிலிருந்து வந்து சேர்ந்த வஸ்துக்களோடு உள்ளே சென்ற சிறிய விஷ க்ருமிகள் தங்களுக்கு அனுகுணமாக இருக்கும் வெப்பமான இடத்திலிருந்து வேலைசெய்யத் தயாராகின்றன. தேகத்திலுள்ள ரக்த அறைகளும் க்ருமிகளைத் தடுத்து எதிர்க்க ஸித்தமாய்க்கொண்டிருக்கின்றன.

எட்டுமணி நேரத்திற்கெல்லாம் விஷக்ருமிகள் வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன. ரக்தத்திலுள்ள ஒய்ட் கார்ப்பஸில் என்னும் வெள்ளை ஜீவாணுக்களும் க்ருமிகளை எதிர்ப்பதற்காக ஒன்று சேருகின்றன. பதினைந்து மணி ஸாவகாசத்தில் க்ருமிகள் காயம் முழுவதிலும் பரவிவிடுகின்றன. தசைநார்களிலுள்ள ஜீவ அறைகள் சீக்ரமே பழுதுபட்டுப் போகின்றன. வெள்ளை அணுக்கள் க்ருமிகளை விழுங்கி வருவதால், அவைகளும்பழுதுபட்டுப்போகின்றன. இந்த மாதிரி சிரழிந்து போகும் வெள்ளை அணுக்கள் சீயாகமாறி காயத்திலிருந்து வடிய ஆரம்பிக்கிறது.

பிறகு நேரிடுவதெல்லாம் க்ருமிகளின் உக்ரத்தையும் வெள்ளை அணுக்கள் அவைகளை எதிர்க்கும் சக்தியையும் பொறுத்ததாக இருக்கிறது. க்ருமிகளில் அநேக வகைகள் இருக்கின்றன. அவைகளுள் சில மற்றவைகளைக் காட்டிலும் அதிக அபாயம் உண்டாக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. பாஸில்லஸ் ஹிஸ்டாலிடிகஸ் என்னும் இனத்தைச் சேர்ந்த க்ருமிகள் மிகவும் பயப்படத்தக்கவை. அவை அதிக விஷமுள்ளவை. அவைகளால் காயம் புரையோடி ரத்தம் கெட்டுவிடுகிறது. இன்னொரு இனத்தைச்சேர்ந்த க்ருமிகள் சீயை உண்டுபண்ணும். அவை மிகவும் சிறியவை. ரக்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் அவைகளை விழுங்கும் வரையில் க்ருமிகள் பரபரப்புடன் பரவிவிடுகின்றன.

ரண வைத்யர் செய்வது என்னவென்றால் வெளியிலிருந்து வந்து காயத்தில் அடைந்துள்ள வஸ்துக்களைக் கூடிய சீக்ரத்தில் கழுவி எடுத்து காயத்திலுள்ள குழியில் விஷக்ருமிகள் தங்கவொட்டாமல் செய்வதே. அவர் காயத்தைச் சுத்தப்படுத்தி இம்மாதிரி செய்யக் கூடுமானால், அங்குள்ள ஜீவ அணுக்கள் பழுதானவைகளையெல்லாம் சரிப்படுத்த ஆரம்பிக்கின்றன. தேகத்திலுள்ள ரக்த அறைகளுக்கு பின்னம் நேரிடாமற்படி க்ருமிகளைக்கொன்று அவைகளைக் கழுவித் தள்ளுவதற்காகவே ஆண்டி ஸெப்டிக் என்னும் மாம்ஸம் அழுகாதபடி தடுக்கும் மருந்துகளை உபயோகிக்கிறார்கள்.

காயம் ஆறும்போது பின்னப்பட்ட ரக்த அறைகள் அழிந்துபோகின்றன. அவைகளுக்கும் பாழ்படாத அறைகளுக்கும் மத்தியிலுள்ள வெள்ளை அணுக்கள் அவைகளைச் சேதித்து காயத்திலிருந்து வெளியே தள்ளிவிடுகின்றன. வெள்ளை அணுக்கள் க்ருமிகள் அதிகமாகச் சேரவொட்டாதபடி முன்னேநின்று அவைகளைத் தடுக்கின்றன. அவைகள் ரக்தம் விஷமுள்ளதாக மாறிவிடாதபடி திசுகளிடத்திலிருக்கும் வேக்காடுள்ள வஸ்து



ஒன்றை எதிர்த்து விஷ வஸ்துக்களைக் கரைத்துவிடுகின்றன.

சவ்போலிருக்கும் வெள்ளை அணுக்களின் பின்பக்கத்தில் புதிய ரக்த அறைகள் அடுக்காக உண்டாகின்றன. இந்த அறைகள் பாழ்பட்டதையெல்லாம் ஸரிப்படுத்தி காயத்தின் த்வாரத்தையும் தூர்த்துவிடும்.

பாழ்பட்டஅறைகள் வெளியில் வந்து விழும்வரையில் தோல் மூடிக்கொள்ளாதபடி காயம் திறந்து வைக்கப்படுகிறது. ஸர் ஆம்ரோத் ரைட் என்பவர் மாம்ஸத்தை அழுகவொட்டாமல் காக்கும் மருந்துகளை உபயோகியாமலே உப்புக் கரைய விட்டுள்ள நீரை காயத்தில் ஊற விட்டுக் கொண்டிருந்தால் காயம் ஸுலபமாக ஆறிவிடுமென்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார். அல்ப காயங்களுக்கு அயொடின் என்பதைத் தவிரவேறொரு பரிகாரமும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அயொடின் விஷக்ருமிகளைக் கொன்றும் அவைகளை வரவொட்டாமல் தடுத்தும் காயத்தை ஆறச் செய்கிறது.

---

## ANCIENT HINDU KINGS AND ADMINISTRATION OF JUSTICE.

## பண்டைக்காலத்து ஹிந்து அரசர்களும் நீதிபரிபாலனமும்.

பூர்வ காலத்தில் இருந்த ந்யாய ஸ்தலங்களின் ஏற்பாட்டை நாம் கவனித்துப் பார்த்தால் நம்முடையமுன்னோர்கள் எப்படிப்பட்ட ஸ்வாதந்த்ர்யம் உடையவர்களாக இருந்தார்களென்று தெரிந்துகொள்ளலாம். வ்யவஹார விஷயங்களில் ராஜாமாத்ரம் ந்யாயாதிபதியாயிருந்து வ்யாஜ்யங்களைத் தீர்ப்புச் செய்வதில்லை. அவர் எவ்விதம் நீதிபரிபாலனம் செய்யவேண்டுமென்பதைப்பற்றிப் பல ஸ்ம்ருதி கர்த்தர்கள் எழுதியிருக்கிறார்கள். அரசர்கள் ஸ்ம்ருதிகளை அனுஸரித்து நடந்துவந்தார்கள்.

அரசர் ப்ராம்மணர்களோடும் நீதிபரிபாலன மந்த்ரிகளோடும் ந்யாயஸ்தலத்திற்கு போகவேண்டும். ந்யாயஸ்தலத்தில் ராஜாவோடுகூட இருந்து வ்யவஹாரங்களைவிசாரணை செய்வதற்காக மூன்று ப்ராம்மணர்களை நியமிக்கவேண்டும், ராஜா கல்வி கேள்விகளில் தேர்ச்சி அடைந்திருக்கும் சிலரை மத்யஸ்தர்களாக ஏற்படுத்தவேண்டும். அவர்கள் சட்டத்தை நன்றாக அறிந்தவர்களாகவும் பக்ஷபாதமில்லாமல் தீர்ப்புச் செய்பவர்களாகவும் இருக்கவேண்டும். மத்யஸ்தர்கள் ப்ராம்மணர்களாகவேதான் இருந்திருக்க வேண்டுமென்று நினைக்க இடமில்லை. ஏனென்றால் அந்தக் காலத்தில் மற்ற ஜாதியாரும் அதிகமாகப் படித்துவந்தார்கள். ஆகையால் முதல் மூன்று வர்ணத்தாராகிய ப்ரம்ம க்ஷத்ரிய வைச்யர்களுக்குள் நல்ல வித்பத்தி உள்ளவர்களாகவும், யோக்யதை உள்ளவர்களாகவும் இருந்தவர்கள் வித்யாஸமில்லாமல் மத்யஸ்தர்களாக நியமிக்கப் பட்டிருந்தார்களென்று சொல்லலாம்.

மத்யஸ்தர்கள் இத்தனை பேர்தான் இருக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை கிடையாது. அவர்களுடைய ஸங்க்யை வ்யாஜ்யங்களின் ஸந்தர்ப்பங்களை அனுஸரித்தே ஏற்படுத்தப்படும். மத்யஸ்தர்கள் எந்த ஸமயத்திலும் மூன்று பேருக்குக் குறையாமலிருந்தார்களென்று தெரிகிறது.

ராஜா வழக்குகளை விசாரிக்கும்போது ப்ரதான ந்யாயாதிபதியும் ப்ராம்மணர்களும் புரோஹிதரும் மத்யஸ்தர்களும் அவரோடு

ந்யாயஸ்தலத்தில் வீற்றிருப்பார்கள். அங்கே இருப்பவர்களில் ப்ராம்மணர்கள் மாத்ரம் ராஜாவால் உத்யோகஸ்தர்களாக நியமிக்கப்படுவதில்லை. அவர்கள் நியமிக்கப்படாமலே வ்யவஹார விஷயங்களில் ராஜாவுக்கு ஆலோசனை சொல்ல வருபவர்கள்.

நியமனம் பெற்ற மத்யஸ்தர்கள் வ்யாஜ்யத்தின் அம்சங்களையெல்லாம் செம்மையாய் ஆராய்ந்து உண்மையை அறிந்து தீர்ப்புச் சொல்வார்கள். அவர்கள் தங்கள் தீர்ப்புக்கு மாறுபாடாக ராஜா தீர்ப்புச் செய்யாதபடி அவனைத் தடுப்பார்கள். ஆகையால் அவர்கள் ந்யாய விசாரணை ஸபையின் ஒரு முக்ய அம்சமாக இருந்தார்கள். தங்கள் அபிப்ராயத்தை நிராஹரித்து யாரும் நடவாதபடி பார்த்துக்கொள்ள அவர்கள் அதிகாரம் பெற்றிருந்தார்கள்.

ப்ராம்மண மத்யஸ்தர்களுக்கு அவ்வளவு அதிகாரமில்லை. அவர்கள் ராஜ்யத்திலுள்ள ஜனங்களின் ப்ரதிநிதிகளாக ந்யாயஸ்தலத்திற்குப் போய் வ்யாஜ்ய விசாரணைகளைக் கவனித்து வருவார்கள். எப்போதாவது ஸந்தேஹம் நேரிடும்போது ந்யாயஸ்தலத்தார் அவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்பார்கள். அவர்கள் தங்களுக்குத் தோன்றும் வாஸ்தவமான எண்ணத்தைத் தெரிவிப்பார்கள்.

மத்யஸ்த ஸபைக்கு வைச்யர்களும் வந்து வ்யவஹாரங்களைக் கவனித்து வந்தார்கள். நல்ல வம்சத்தில் பிறந்தவர்களாகவும், தனிகர்களாகவும், யோக்யதை உள்ளவர்களாகவும், வயோதிகர்களாகவும், தர்மகார்யங்கள் செய்பவர்களாகவும் உள்ளவர்களையே அரசர்கள் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும்.

வர்த்தகர்களுக்குள்ளும், தொழிலாளிகளுக்குள்ளும், வ்யவஸாயிகளுக்குள்ளும் விவாதமுண்டானால் அந்த விவாதங்களை அந்தந்த வகுப்பினருள் தேர்ந்து எடுக்கப்பட்ட மத்யஸ்தர்களே விசாரித்துத் தீர்ப்பு செய்யவேண்டுமென்று ஒரு ஸ்ம்ருதி கர்த்தா எழுதியிருக்கிறார். காடுகளில் வஸிப்பவர்களுக்குள் உண்டாகும் விவாதங்களை அந்த வகுப்பினருக்குள் ஏற்படுத்தப்படும் மத்யஸ்தர்களும், ஸேனாவீரர்களுக்குள் உண்டாகும் விவாதங்களை ஸேனையிலிருந்து தேர்ந்து எடுக்கப்படும் மத்யஸ்தர்களும், வர்த்தகக் கூட்டத்தாருக்குள் உண்டாகும் விவாதங்களை வர்த்தக ஸங்கத்தாரும் விசாரித்துத் தீர்ப்புசெய்யவேண்டும்.

ராஜா நேரில் வ்யாஜ்யங்களை விசாரிக்காத ஸமயங்களில், அவர் பலவிதங்களிலும் தேர்ச்சியடைந்த ப்ராம்மணர் ஒருவரைத் தமக்குப் பதிலாக நியமிக்கவேண்டும். அப்படி நியமிக்கப்படும் ப்ராம்மணர் ந்யாயஸபையில் உள்ளவர்களோடுகூடி வ்யாஜ்ய விசாரணை செய்யவேண்டும்.

ப்ரதான ந்யாயாதிபதி ந்யாய ஸபையின் தலைவராகஇருப்பர். அவர் வாதி ப்ரதிவாதிகளை விசாரித்து வ்யவஹார விஷயங்களைத் தன்னோடு இருக்கும் ந்யாய ஸபையாரோடு ஆராய்வர். இந்தக் காலத்திலுள்ள ஸெஷன்ஸ் ஜட்ஜும் ஜூரர்களும் அதேமாதிரி செய்துவருகிறார்கள். ராஜா ப்ரதான ந்யாயாதிபதியின் ஆலோசனையின்படியே வ்யவஹார விஷயங்களில் நடப்பதுவழக்கம்.


தமிழ் நாவல்கள்.

ரூ. அ. ப.

ஆனந்தவல்லி. 0–6–0

ப்ரும்மஸ்ரீ ராஜாசாஸ்த்திரியார் இயற்றியது.

மங்களாம்பாள். 0–8–0

பால ஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள் இயற்றியது மூன்றாவது பதிப்பு.

ஜி. எ. வைத்தியராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டிசெட்டித் தெரு,
மதராஸ்.




## REVIEW OF THE PRESS.
## பத்ரிகை ஆராய்ச்சி.

### TREATING SICK CHILDREN.
### குழந்தைகளுக்கு வைத்யம் செய்தல்.

மற்றெல்லா வைத்யத்தையும் விட குழந்தை வைத்யம் கடினமானதென்று பல வைத்யர்கள் குழந்தைகளுக்கு வைத்யம் செய்ய முன்வருவதில்லை. குழந்தைகளுக்குப் பேச முடியாததாலும், சற்றுப் பேசத் தெரிந்தாலும் பயத்தாலோ, அல்லது வைத்யர்களுடைய கேள்வியை சரியாய் க்ரஹிக்க முடியாததாலோ, அல்லது வைத்யர்களின் கேள்விகளுக்கு சரியாய் பதில் சொல்ல முடியாததாலும், முகக்குறி, நாடி முதலியவைகளைக் கொண்டு குழந்தைகளின் நிலைமையை அறிவது பெரும்பாலும் முடியாததாலும் அநேக வைத்யர்கள் இவ்விதம் நினைக்கிறார்கள். ஸமீபத்தில் வெளி வந்த இந்துநேசனில் ஒரு வைத்யர் பாலவைத்யத்தில் கவனிக்க வேண்டிய விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவையாவன :—

வைத்யர்கள் குழந்தைகள் பயப்படும்படி நடந்துகொள்ளக்கூடாது. இப்படி பயப்படாமலிருக்கும்படி நடந்துகொண்டால்தான் வைத்யர்களிடத்தில்குழந்தைகளுக்கு நம்பிக்கையுண்டாகும். குழந்தையைப் பார்க்க அதன்அறையில் செல்லும்போது, திடீரென்று அதன் பக்கத்தில் போகக்கூடாது. அதன் பக்கம் மெதுவாய் சென்று, கொஞ்சம் எட்டியே உட்கார்ந்துகொண்டு, அதைப் பார்க்காததுபோல் தாயையோ அல்லது தாதியையோ சில கேள்விகள் கேட்கவேண்டும். அப்போது குழந்தையை ஜாடையாக கவனிக்கவேண்டும். அதாவது, அதின் முகக்குறி, மூச்சுவிடுதல் (மெதுவாகவா அல்லது வேகமாகவா, சரியாகவா அல்லது விட்டுவிட்டா) முக்குதல், முனகுதல், அழுதல் இவைகளை கவனிக்கவேண்டும். இவைகளையெல்லாம் குழந்தைக்குத் தெரியாமல் ஜாடையாக கவனிக்கவேண்டும். ஏனென்றால், வைத்யன் பார்ப்பதை குழந்தைகள் கண்டு கொண்டால், கட்டாயம் ரோதனம் செய்யும். வைத்யன் பார்க்கும்போது குழந்தை தூக்கத்திலிருந்தால் அதை நன்றாய் கவனிக்க முடியும். அது அமைதியாய் தூங்குகிறதா, அல்லது புரண்டுகொண்டு நித்ரை செய்கிறதா, கண்ணிமைகள் நன்றாய் மூடியிருக்கின்றனவா, அல்லது அரைக் கண் திறந்திருக்கிறதா, என்றும் கவனிக்கவேண்டும். அரைக் கண் திறந்திருந்தால் மூளையைப் பற்றின அல்லது நரம்பைப்பற்றின வ்யாதியினால் அவஸ்தைபடுகிறதென்றறியலாம். தூங்கும்போது அதை எழுப்பாமலே நாடியையும், ச்வாஸம் விடுவதையும் கவனிக்கவேண்டும். தாயையோ அல்லது தாதியையோ கொண்டு எழுப்பவேண்டுமே தவிர, வைத்யன் ஒருக்காலும் தானாகவே எழுப்பக்கூடாது. அது விழித்துக் கொண்டேயிருந்தால் கொஞ்சநேரத்தில் தானே வைத்யனை த்தெரிந்துகொள்ளும். பயமும் நீங்கிவிடும். அப்போது அதின் கையைபிடித்து நாடியைப் பார்க்கலாம். குழந்தைகள் அழும்போது அல்லது பயப்பட்டிருக்கும்போது அதன் நாடியைப் பார்த்துத் தெரிந்துகொள்வது நம்பத்தக்கதல்ல. வைத்யன் ஸாமர்த்யவானானால் அவன் ஸுலபமாகத் தெரிந்துகொள்வான். திடீரென்று குழந்தையின் கையை நாடி பார்க்கப் பிடித்தால், அது கையைத் திமிறி யிழுத்துவிடும். ஆகையால், மெதுவாய் மேல் கையை தடவிக்கொடுப்பதுபோல் கொடுத்து, நாடி பார்க்குமிடம் கையைக் கொண்டுவரவேண்டும். அப்படியே ச்வாஸம் விடுவதையும் கவனிக்கவேண்டும். குழந்தையைப் பார்ப்பது, முதல் தடவையானால், அதை முரட்டுத்தனமாய் கைபிடித்துப் பார்க்கக்கூடாது. அப்படி ஒரு வேளை அதனுடன் மன்றாடி நாடியை பார்த்துவிட்டாலும், மறுநாளைக்கு அது வைத்யனிடத்தில் நம்பிக்கையற்று மறுபடியும் அது மருள ஆரம்பிக்கும். குழந்தைகள் தங்களிடத்தில் நம்பிக்கை வைக்கும்படி வைத்யர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

கொஞ்சம் ஸாமர்த்யமாகவும், ம்ருதுவாகவும் வைத்யன் நடந்துகொள்வதினாலேயே குழந்தைகளின் நம்பிக்கையை ஸம்பாதித்துக் கொள்ளலாம். நாடியைப் பார்க்கும் போதேயே, அல்லது வயிற்றைப் பார்க்கும் போதேயே, அதின் ச்வாஸம் விடுவதையும் தேஹ உஷ்ணத்தையும் கவனிக்கவேண்டும். இவைகளெல்லாம் தெரிந்துகொண்ட பிறகு அதனுடன் மெதுவாக பேச ஆரம்பிக்கவேண்டும். அதன் கையில் வைத்யன் தன் கை கடியாரத்தையோ அல்லது ஸ்டெதாஸ் கோப் என்னும் குழலையோ கொடுத்து அதைவேடிக்கை பார்க்

கும்படி செய்து, அதன் புத்தி கூர்மையையும் கவனிக்க வேண்டும். பிறகு, அதன் தலையைத் தொட்டு அவ்விடம் உஷ்ணத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும். விசேஷமாய் தர்மாமீடர் உதவியில்லாமலே அதின் தேகஉஷ்ணத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். அக்குளில்தான் தர்மாமீடர் வைத்துப் பார்க்கவேண்டும். குழந்தைகளின் வயிற்றைப் பரிசோதிப்பது முக்யமாகையால் ஜாக்ரதையாய்ப் பார்க்கவேண்டும். குழந்தையை தாய் மடியில் மல்லாக்க வைத்து, அதின் வயிற்றைப் பார்த்தால் அது பயந்து அழ ஆரம்பிக்கும். அப்போது அதின் வயிறு உப்பி பிகுவாகி அது அழுவதின் காரணம் வைத்யன் அமுக்குவதினாலா அல்லது வயிற்றில் வலியினாலா என்ற ஸந்தேஹமுண்டாகிவிடும். ஆகையால், மெதுவாய் அதின் சட்டைக்குள் கையைவிட்டு பரிசோதிக்கவேண்டும் அப்போது யாரையாவது விளையாட்டுக் காட்டும்படி செய்யவேண்டும் வயிற்றில் வலி இல்லாவிட்டால் குழந்தை ஒருக்காலும் அழாது. வயிற்றில் காற்றுக்கொண்டு உப்பியிருந்தால் மெதுவாக அமுக்கினது அதற்கு ஸுகமாகத் தோன்றும். குழந்தைகளின் காற்றாசயத்தை பரிசோதிக்கும்போது காதையே மார்பில் வைத்துப் பார்ப்பது நலம். ஸ்டெதாஸ் கோப்பை வைத்துப் பார்ப்பது அதற்கு உபத்ரமாகவே யிருக்கும். காற்றாசயத்தின் நிலைமையை யறிய முதுகு பக்கமே பார்க்கவேண்டும். தட்டிப்பார்ப்பது முன்புசெய்யக்கூடாது. மெதுவாகவே செய்யவேண்டும். பிறகு நாக்கைப் பரிசோதிக்கவேண்டும். அப்போது பல்லீறின் ஸ்திதியையும் பார்த்துக் கொள்ளவேண்டும். நாக்கைப் பரிசோதிப்பது மிகவும் கஷ்டமானதால், எப்போதாவது குழந்தை அழும்போது கவனிப்பது ஸுலபம். அப்படிச்செய்யாவிட்டால், மெதுவாக விளையாட்டாக உதட்டைத் தொட்டால் தானாகவே வாயைத் திறக்கும். அப்போது ஓர் விரலைவாய்க்குள்விட்டு தொண்டையின் ஸ்திதியையும் தெரிந்துகொள்ளலாம். குழந்தைகள் பலமான வ்யாதியால் தொந்தரவு படும்போது அவைகளை பரிசோதிப்பது ஸுலபம். அற்ப வ்யாதியால் கஷ்டப்படும் குழந்தைகளினிடத்தில்தான் சாந்தமும் ஸாமார்த்யமும் அவச்யம் வேண்டும். குழந்தைகள் ஏற்கனவே எந்த வ்யாதியினால் கஷ்டப்பட்டன என்பதையும் அறியவேண்டும். தற்கால முண்டான வ்யாதியின் காரணமும் தெரிந்துகொண்டால், வ்யாதி இன்னதென்பதை யறிந்து சிகித்ஸை செய்வது ஸுலபமாக விருக்கும். இவைகள் ஸாமார்த்தியமாகவே தெரிந்த கொள்ள வேண்டியவைகள். பிறகு, குழந்தையின் ஆஹாரம் இன்னதென்றும் (தாய்ப்பால் மட்டுமா, பசுவின்பாலா, ஹார்லிக்ஸ் முதலியவைகளா) தாய்ப்பால் விட்டுவிட்டால் அது எவ்வளவு காலமாயிற்று என்றும் அறிய வேண்டும். குழந்தைக்கு பல்முளைத்திருக்கிறதா, எவ்வளவு பல்உண்டு என்பவைகளையு மறிய வேண்டும்.

வ்யாதிக்கு மருந்து கொடுக்கும்போது மருந்தின் அளவு சரியாக இருக்கவேண்டும். அணுக்கூட அளவுக்கு ஜாஸ்தி, குறைவு கூடாது. குழந்தையின் வயதிற்கும், தேகநுட்பத்திற்கும் தகுந்தபடி மருந்தை அளவாகக்கொடுக்க வேண்டும். மருந்தின் தாராதரம் பார்த்து அளவு சரிபடுத்தவேண்டும். அபின், ரஸம், துத்தம் இவைகள் கொடுக்கும்போது ஜாக்ரதையாகவே பார்த்துக் கொடுக்கவேண்டும். மருந்து அனுவச்யமாக கசப்பாகவாவது, வாந்தி யுண்டுபண்ணும் படியாவது தயார்செய்யக்கூடாது. அப்படிக் கொடுத்தால், குழந்தைக்கும் அதன் பெற்றோர்களுக்கும் வைத்யனிடத்தில் மதிப்புக் குறைந்துவிடும். குழந்தைக்கு பத்யம்சொல்லும்போது பெற்றோர்களுக்கு ஆக்ஷேபணையுள்ளவைகளைச் சொல்லக்கூடாது. குழந்தைகள் மருந்தை ஸுலபமாய் உட்கொள்ளும்படி ருசியாயும் குறைந்த அளவுள்ளதாயும் தயார்செய்ய வேண்டும். அதை வற்புறுத்தி கஷ்டப்பட்டுப் புகட்டும்படி மருந்து தயார் செய்தால் மருந்தின் குணம் சரியாக உண்டாகாது.

## THE QUALIFICATIONS OF A SCHOOL-MASTER.

### உபாத்யாயரின் லக்ஷணங்கள்.

ஒருவர் நல்ல உபாத்யாயரா என்றால், அவர் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பின்பு, போதனை முறையில் பயின்று, ஸர்ட்டிபிகேட்டு பெற்றிருக்க வேண்டுமென்றும், ட்ரெயினிங் ஸ்கூல் ப்ரிலிமினரிப்பரீக்ஷையில் அதிக மார்க் வாங்கியிருக்க வேண்டுமென்றும், போதனைமுறை பாடசாலையை விட்டு வருங்காலத்தில் நல்ல நடத்தைக்கு ஸர்ட்டிபிகேட் பெற்றவரா யிருக்க வேண்டுமென்றும், ஸாதாரணமாய் எதிர் பார்க்கிறோம். அவற்றை கவனிக்க வேண்டியது மிகவும் அவச்யமாகவே இருக்கிறது. ஆனால், அவ்வித் விஷயங்களேயல்லாமல், சிற்சில நல்ல குணங்களும் அவரிடம் அமைந்திருக்கவேண்டும். அவைகளுள் சிலவற்றைப்பற்றி ஒரு அன்பர் நல்லாசிரியனில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அந்த குணங்களாவன.



**அன்பு பாராட்டுதல்:**—மாணவர்களிடம் அன்பு பாராட்டுதல். பிள்ளைகளைப் பெற்றுவளர்த்து சீராட்டிப் போற்றுதல் மாத்ரமே பெற்றோர்களில் பெரும்பாலருக்கு முடியுமே யொழிய, பிள்ளைகளுக்கு சரீர வளர்ச்சியிலும், கல்வியிலும் நன்னடக்கையிலும் அபிவ்ருத்தி ஏற்படும்படி செய்வது அவர்களுக்கு முடியாத கார்யமாகையால், இந்த மூன்று அம்சங்களிலும் பிள்ளைகளுக்கு அபிவ்ருத்தி ஏற்படும்படி செய்வது உபாத்யாயருடைய கடமையாகிறது. ஒரு தினத்தில் உண்பதும் இளைப்பாறுவதும் ஒழிந்த மற்ற நேரங்களில் பிள்ளை உபாத்யாயர்களுடைய பார்வையில் விடப்படுகிறார்கள். அக்காலங்களில் அவர்கள் மனஸுக்கு ஸந்துஷ்டியை உண்டாக்கி பெற்றோரையும் மற்றோரையும் விட்டுப்பிரிந்த வ்யஸனம் அவர்களுக்குத் தோன்றாதபடி விளையாட்டுக் காட்டி கல்வி கற்பிக்கவேண்டியது அவச்யமாகும். பிள்ளைகள் தவறி, தாமாகவோ, பிறர் தூண்டுதலினாலோ, விளையாட்டாக ஏதாவது பிழைகள் செய்து விட்டால், அவர்களுக்குக் குற்றங்களை எடுத்துக்காட்டி, பிழையை உணரும்படி செய்ய வேண்டும். இவ்விதம் செய்வதற்கு உபாத்யாயர்களுக்கு அதிக பொறுமைவேண்டும். அன்பு நிறைந்த பார்வையும் இனிய வார்த்தைகளுமே அவர்களுக்கு ஆயுதங்களாக இருக்கவேண்டும்.

**விஷய ஞானம்:**—உபாத்யாயர்களுக்கு இருக்க வேண்டிய இன்னொரு லக்ஷணம் விஷயஞானம். அது அதிகம் இல்லாதவர்கள் ஓர் பெரிய விஷயத்தைப்பற்றி, பிள்ளைகளுக்கு போதித்து வரும்போது, பிள்ளைகள் இடையில் கேள்வி கேட்டு விட்டால் பதில் சொல்லத் தெரியாமல் விழிக்க நேரிடும். அப்போது அவர்களுக்கு ரொம்பவும் மனவருத்தத்தை உண்டுபண்ணும். விஷய ஞான மில்லாத உபாத்யாயர்களுக்கு, பெரும்பாலும் மாணவர்களிடம் கோபம் வருவதுண்டு. பாடங்களைக் கற்றுக் கொடுக்கையில் அவைகளுக்கு ஸம்பந்தப்பட்ட வேறுவிஷயங்களைப்பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். உதாரணமாக, நியூபவுண்ட் லண்ட் நாயைப்பற்றிய கதைகளை போதிக்க, அந்த நாய் எந்த தேசத்ததென்றும், ந்யூபவுண்ட் லண்ட் எங்கு இருக்கிறதென்றும் அந்த நாய்க்கும் மற்ற நாய்களுக்கும் வித்யாஸ மின்னவென்றும், உபாத்யாயர் அறிந்திருக்க வேண்டும். ஆனால், எலிமெண்டரி பாடசாலை உபாத்யாயர்கள் பற்பல நூல்களைக் கற்க முயலுவது அவச்யமா என்று சிலர் கேட்கக்கூடும். இங்க்லீஷ் அறியாத உபாத்யாயர்கள் அநேக நூதன விஷயங்களை அறிய முடியாதுதான். ஆயினும், விஷயங்களை தாங்களாகவே கற்றறிய ப்ரயத்தனப் படுவதே மேலானது. ஆனால் ஒன்று, தெரியாத விஷயங்களைப்பற்றித் தெரிந்தது போல் பாவித்து, தப்பாகக் கற்றுக்கொடுப்பது மாத்ரம் ஒருநாளும் கூடாது.

**வேலையில்கவனம்:**—உபாத்யாயர்கள் சோம்பலாயிராமல் எப்போதும் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும். தமது வேலையில் எப்போதும் கவனமாயிருக்கவேண்டும்.

**பொதுஜன ஸமூக நடவடிக்கை:**—வக்கீல்களும், டாக்டர்களும், உபாத்திமார்களும் பொதுஜன ஸ்நேஹத்தை மிகவும் நாடியிருக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பொதுஜன நன்மை செய்வதில் ஊக்கங் காட்டுகிறார்களோ அதற் கேற்றவாறு உபாத்யாயரைப் பற்றி நல்ல அபிப்ராயம் ஏற்படும். அதிக பிள்ளைகளும் பள்ளிக்கூடத்தில் வந்துசேர இடமுண்டு. எல்லா விஷயங்களிலும் ஒதுங்கியிருத்தலாவது, பொது ஜன விரோதிகளிடம் ஸ்நேஹம் பாராட்டுதலாவது நல்லதல்ல. ஸரஸ்வதி பூஜை விநாயக சதுர்த்தி, சிவராத்ரி, ஸ்ரீஜயந்தி, வர்ஷப் பிறப்பு முதலிய விசேஷதினங்களில் பொதுஜன ஸகாயத்தால் பூஜை, பஜனை, பகவத் காலக்ஷேபம் முதலியவை நடத்துதலும், சக்ரவர்த்தி பிறந்த தினம், முடிசூட்டுக் கொண்டாட்ட தினம், பள்ளிக்கூடப் பரிசளிப்பு முதலியவை நடத்துதலும், பல ஜனங்கள் பள்ளிக்கூடத்திற்குவரவும், பிள்ளைகளின்தேர்ச்சியைக் கண்டு களிக்கவும் ஏற்றதாயிருக்கும். பெற்றோருக்கு எவ்வகையில் ப்ரியமோ அவ்வகையில் பிள்ளைகளைத் தயார் செய்யவேண்டும். சைவ ஸம்ப்ரதாயிகள் அதிகமுள்ள பாடசாலைகளில் தேவாரம், திருப்புகழ், சதகம் முதலிய நூல்களும், வைஷ்ணவர்கள் அதிகமாயுள்ள ஊர்களில் திருவாய்மொழி, ராமாயணம், பாரதம், முதலிய நூல்களும் கற்பித்து நல்லபெயரெடுக்கவேண்டும். அன்றியும், உபாத்யாயருடைய நடத்தை சற்று மாறுதலடைந்திருந்தாலும் பிள்ளைகளின் ஸங்க்யை குறைய ஏதுவாகும்.

## THE KURAL AND THE WAR.

### திருக்குறளும் யுத்தமும்.

"சுதேச மித்திரன்" பத்ரிகையில் ஒரு ஙிருபர் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறளில் கூறப்பட்டுள்ள யுத்த ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். திருக்குறள்போல யுத்தக் குறிப்புகள் அதிகமாக அடங்கிய நூல், நீதி நூல்களுள் வேறு ஒன்றுமில்லை. திருவள்ளுவர் அரசனுடைய இயல்பை இருபத்தைந்து அதிகாரங்களினாலே கூறத்தொடங்கி முதலில் இறைமாட்சி என்னும் அதிகாரத்திலே, சேனை, நாடு, பொருள், அமைச்சு, நட்பு, அரண் என்று சொல்லப்படுகிற ஆறு அங்கங்களும் உடையவன் மன்னருள்ளே ஆண் சிங்கம் போல்வானென்றும், இவை முழுதும் இருத்தலே அவனது வெற்றிக்குக் காரணமாகும் என்றும் கூறி, பின் வெவ்வேறு அதிகாரத்தால் ஒவ்வொன்றின் இயல்பையும் கூறுகிறார், அரசனுக்கு இன்றியமையாமல் வேண்டப்படும் செல்வங்களுளெல்லாம் முக்யமானது யானை, குதிரை. தேர், காலாளாகிய நாலுறுப்புகளாலும் ஙிறைந்து விளங்கும் சேனையேயாம் என்பது, படைமாட்சி என்னும் அதிகாரத்துள் கூறப்பட்டிருக்கிறது. இனி, நாட்டின்இயல்பைக் கூறத்தொடங்கிய ஆசிரியர், நாட்டின் காவலை வற்புறுத்தும் வண்ணம், அரண் என்ற அதிகாரத்தால் ஸாதாரண வழக்கில் கோட்டை என்று சொல்லப்படும் மதிலின் பெருமையையும் அதன் லக்ஷணத்தையும் கூறி மதிலும் அதனைக்காக்கும் வீரரும் அமையப்பெறாத நாடு நாடென்று அழைக்கப்படும் யோக்யதை உடையதல்ல என்று கூறுகிறார். திருக்குறளிலே சொல்லப்பட்டமதிலின் இலக்கணம் தற்கால யுத்த வித்பன்னர்களாலும் கொண்டாடப்படும்படி அவ்வளவு சிறப்புடையதா யிருக்கிறது. போர்த்தொழிலைக்கொண்ட அரசருக்கு, பகைவரது செருக்கை யொழிக்க வேண்டியிருக்கும் ஆயுதங்களிலெல்லாம், பொருள் முதன்மையானதென்றும், அதுபோலக் கூரிய ஆயுதம் வேறொன்றில்லை யென்றும், பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவையன்றி, வரும் ஸங்கதிகளை அறிந்துரைக்கும் மந்த்ரியும், நட்பினர் துணையும், போர் செய்யும் அரசருக்கு வேண்டிய ஸஹாயங்களாம்.

அறிவும், ஆண்மையும், பெருமையும், வினையும் ஆகிய நால்வகை வலியையுமுடையவனா யிருந்தாலும், அரசன் பகைத்தல் குணமுடையவனாயிருத்தல் கூடாதென்று இகல் பகைமாட்சி என்னும் அதிகாரத்துள் திருவள்ளுவர் கூறுவதால், அவர் ஸமாதான வாழ்க்கையை விரும்பும்இயல்புடையராய்க் காணப்படுகிறார். என்றாலும், தள்ள முடியாதவண்ணம் யுத்தம் நேரிட்டால், அந்த யுத்தத்தை சிறிதும்கலங்காது ஏற்று, ஊக்கத்துடன் அரசர் போர் முடிக்கக் கடவர் என்று அவர் வற்புறுத்துகிறார்.

இனி நாயனார்,போர் செய்யக்குறித்த அரசன் முதல் முதலில் செய்யவேண்டிய ஏற்பாடுகளை வலியறிதல், காலமறிதல், இடனறிதல் என்னும் அதிகாரங்களால் விவரித்துக் கூறுகிறார். அரசன் போர் தொடங்குவதற்குமுன்பு தன்வலிமையையும் எதிரியின் வலிமையையும் நன்கு அளந்து தெளிதல் வேண்டும். அவ்வாறு தெளிந்து போருக்குச் செல்லும் அரசருக்கு முடியாதது ஒன்றுமில்லை யென்றும், அவ்வாறு வலியறியாது போர்செய்யத் தொடங்கிய அரசர் சீக்ரத்தில் கெடுவரென்றும், காக்கையானது தன்னின் வலிதாகிய கோட்டானைப் பகற்பொழுதிலே வெல்லுவது போல, பகைவரை வெல்லக் கருதுகிற அரசர் வெப்பமும் குளிர்ச்சியும் ஸமமாய் நோய் செய்யாமல் நீரும் உணவும் கிடைத்தற்குரிய ஏற்ற காலத்தை யறிந்து போருக்குப் போகவேண்டும் என்றும், அவ்வாறு ஏற்ற காலம் வருமளவும் பகைமைதோன்றாது ஒடுங்கியிருந்து, காலம் வந்த விடத்து விரைந்து போரைச் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு வலியும் காலமும் அறிந்தாலும், பகைவர் மேல் செல்லும் அரசர், தாம் பகைவரை வளைத்துக் கொள்ளுதற்காகும் ஓரிடத்தை யறிந்து, அவ்விடத்து ஙின்று யுத்தம் செய்யவேண்டுமென்றும், அப்படி இடமறிந்து யுத்தம் செய்தால் வலிமையுள்ள அரசர்களையும் வென்று விடலாமென்றும், சொல்லுகிறார். வலிமை, காலம், இடம் ஆகிய இவைகளை அறிவதற்கு துணையாயிருப்பவர் ஒற்றரும் தூதருமாவார்.



# News and Notes.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**மாகாண ராஜீய கான்பரென்ஸ்.**

சென்னை மாகாண ராஜீய கான்பரென்ஸ் இந்த மாஸம் 9-ந்தேதியன்று கூடலூரில் கூடிற்று. கூடலூர் வக்கீல் மிஸ்டர் வி. ஸ்ரீநிவாஸாசாரியார் வரவேற்புக் கமிட்டியின் சேர்மனாக இருந்து, யுத்தத்துக்குப்பின் இந்தியாவின் ஙிலைமை, அச்சுச்சட்டம், சட்ட ஸபைகள், ஸ்தல ஸ்வய ஆட்சி முதலியவைகளைப் பற்றிப் பேசினார்.

கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாகிய மிஸ்டர் வி. பி. மாதவராவ் தமது ப்ரஸங்கத்தில் இந்தியாவின் ஆட்சி முறையை சீர்திருத்த வேண்டுமென்றும், இந்தியாவுக்கு ப்ரிட்டிஷ் ஆட்சிக்கு உள்பட்ட ஸ்வய ஆட்சி கொடுக்கவேண்டுமென்றும், ஙிலவரி ஏற்பாட்டை சீர்திருத்த வேண்டுமென்றும் வற்புறுத்திச் சொன்னார். இந்தக் கான்பரென்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்களில் சிலவருமாறு:—இந்திய பாதுகாப்பு ஸைன்யத்தை யுத்தத்துக்குப்பிறகும் இருக்கும்படி சாச்வதமாக்கவேண்டும். இதில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் யாதொரு வித்யாஸமும் காட்டக் கூடாது. ராணுவத்திலும் கப்பல் படையிலும் இந்தியர்களுக்கு சீக்ரம் உயர்ந்த பதவிகள் கொடுக்கவேண்டும்.

இந்தியாவுக்கு சீக்ரம் ஸ்வய ஆட்சி கொடுப்பதாக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தெரிவிக்கவேண்டும். லக்னௌ காங்க்ரெஸில் செய்யப்பட்ட ஸ்வய ஆட்சி தீர்மானத்தில் கண்ட சீர்திருத்தங்கள் இந்தியாவுக்குக் குறைந்த பக்ஷம் வேண்டியிருப்பவைகளாதலால், அந்த சீர்திருத்தங்களை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தியாவை சார்பு நாடென்னும் ஙிலைமையிலிருந்து ஏகாதிபத்யத்தில் ஸம பாத்யதையுள்ள நாடாக உயர்த்தவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டுக்கு அதனிஷ்டம்போல் வரி முதலியவைகள் விதிக்க பூரா அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிய கமிஷனின் ரிபோர்ட்டில் கண்டிருக்கும் ப்ரேரணைகள் த்ருப்திகரமாயில்லை யென்றும், இந்தியன் ஸிவில் ஸெர்விஸுக்கு வர்ஷந்தோறும் போட்டிப் பரீக்ஷையின்மேல் 7 பேர்கள் எடுத்துக்கொள்வது போதாதென்றும், அதிகமான பேர்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், மெடிகல், கல்வி யிலாகாக்களில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் அநீதமான வித்யாஸங்கள் காட்டுவது கூடாதென்றும், கமிஷனின் ரிபோர்ட்டின்படி கவர்ன்மெண்டார் திருத்தங்கள் செய்யக்கூடாதென்றும் கான்பரென்ஸ் அபிப்ராயப்படுகிறது.

இவைகளைத் தவிர இந்திய பாதுகாப்புச் சட்டம், அச்சுச்சட்டம், கைத்தொழிலபிவ்ருத்தி, யுத்தக் கடன், உயர்தரக்கல்வி, ப்ரைமரிக் கல்வி, ஸ்தல ஸ்வய ஆட்சி முதலியவைகளைப்பற்றியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**கள்ள ஜாதியர்களுக்குள் கோவாபரேஷன்.**

மதுரை ஜில்லாவில் கள்ளர் நாட்டின் மத்ய ஸ்தானமாகிய உசிலம்பட்டியில் இந்த மாஸம் 6-ந்தேதியன்று கள்ளர் வகுப்பு கோவாபரேடிவ் கான்பரென்ஸ் நடைபெற்றது. கள்ளர் நாட்டிலிருந்து ஸுமார் 300 ப்ரதிநிதிகள் கான்பரென்ஸுக்கு வந்திருந்தார்கள். ரெவின்யூ டிவிஷனல் ஆபிஸராகிய மிஸ்டர் வி. எஸ். அநந்தராமய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து கள்ளர் ஜாதிக்குள் கோவாபரேஷன் பரவியிருக்கும் ஸ்திதியைப்பற்றிப் பேசினார். கள்ளர் க்ராமங்களின் மொத்த ஸங்க்யை 88 ஆகும். ஆனால் கள்ளர்களுக்குள் 30 கோவாபரெடிவ் ஸங்கங்களே இருக்கின்றன. சென்ற வர்ஷம் இந்த ஸங்கங்களில் 1,868 பேர்கள் மெம்பர்களாக இருந்தார்கள். இவர்கள் சென்ற வர்ஷம் ஏராளமான தொகைகள் கடன் வாங்கினார்கள் என்று தெரிகிறது. கடன் தொகைகளில் பெரும்பாகம் ஸங்கத்து மானேஜிங் கமிட்டி மெம்பர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களுக்கும் கிடைத்ததாம். மற்ற மெம்பர்களுக்கு அதிகத் தொகை கடன் கிடைக்கவில்லையாம். பணம் அதிகமாகக் கடன் வாங்கினவர்களாகிய மானேஜிங் கமிட்டி மெம்பர்கள்தான் மற்றவர்களைக் காட்டிலும் தவணைப்படி கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கிறார்களாம். இதனால் ஸங்கங்களின் மானேஜிங் கமிட்டிகளுக்கு மெம்பர்கள் தெரிந்து ஙியமிப்பது த்ருப்திகரமாயில்லை யென்று தோன்றுகிறதென்று ப்ரெஸிடெண்ட் சொன்னார்.

மெம்பர்கள் ஏழுநூறு ரூபாய் வாங்கியிருக்கிறார்களே தவிர அதிகமான தொகை டெபாஸிட் செய்யவில்லை. சென்ற வர்ஷம் மெம்பர்கள் திருப்பிக் கொடுக்கவேண்டிய கடன் தொகையில் 100-க்கு 90 பாகம் கொடுபடவில்லையாம். கெடுவில் வசூலாகாமல் நிலுவையாயிருக்கும் மொத்ததொகை அஸல் 1,02,535 ரூபாயும் வட்டி 29,678 ரூபாயுமாகும்.—இவ்விதம் ப்ரஸிடெண்ட் சொன்னார். இந்தக் கான்பரென்ஸில் கள்ளர் நாட்டில் கோவாபரேஷனை சீர்திருத்துவது விஷயமாயும் வேறு விஷயங்களைப்பற்றியும் வ்யாஸங்கள் வாசிக்கப் பட்டன. கள்ளர் நாட்டிலுள்ள ஸங்கங்களை மேற்பார்வை செய்ய ஒரு யூனியன் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் ஒரு தீர்மானமும் வேறு சில தீர்மானங்களும் செய்யப்பட்டன.

**[illegible] வித்யா கான்பரென்ஸ்.**

இது இந்தமாஸம் 10-ந்தேதியன்று கடலூரில் கூடிற்று. ப்ரொபஸர் கே. பி. ராமநாதய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து, வித்யா இலாகாவிலுள்ள அநுபவசாலிகளான உத்யோகஸ்தர்கள் வித்யா கான்பரென்ஸில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், உபாத்யாயர்கள் ராஜீய விஷயங்களில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், பையன்கள் ராஜீய விஷயங்களில் ஊக்கத்துடன் கலந்து உழைக்காவிட்டாலும் ராஜீய விஷயங்களை கவனித்து வரவேண்டுமென்றும், ஸெகண்டரி ஸ்கூல்வரையில் தேசபாஷைகள் மூலமாகக் கல்வி கற்பித்து வரவேண்டுமென்றும் சொன்னார். இந்தக் கான்பரென்ஸில் உபாத்யாயர்களுக்கு ப்ராவிடண்ட் பண்ட் ஏற்படுத்த வேண்டுமென்றும், எலிமெண்டரி கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் கற்றுக்கொடுக்க கவர்ன்மெண்டார் ஒரு ஸ்கீம் தயார்செய்ய வேண்டுமென்றும், ஹைஸ்கூலில் பி. பிரிவுப்பாடங்களை தேசபாஷையில் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. வேறு சில விஷயங்களைப்பற்றியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**ஹிந்து புண்யகதைகள், 2-ம் பாகம்.**

சென்னை ஆர்க்யலாஜிகல் டிபார்ட்மெண்ட் மானேஜராயிருக்கும் மிஸ்டர் பி. வி. ஜகதீசய்யர் இயற்றிய இந்த புண்யகதைகளின் (இரண்டாம்பாகம்) ப்ரதியொன்று வரப்பெற்றோம். முதல்பாகத்தைப்போலவே இந்தப்புஸ்தகமும் ஹிந்துக்கள் எல்லோருக்கும் மிகவும் உபயோகமானது. இதில் ஸங்க்ராந்தி, தைப்பூசம், மாஸிமகம், கார்த்திகை, ஆருத்ராதர்சனம் முதலிய 15 வ்ரதங்கள், பண்டிகைகளைப்பற்றிய தெளிவான விவரங்கள் எழுதப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு ஹிந்துவும் அநுஷ்டிக்கவேண்டிய ஆசார ஒழுக்கங்களைப் பற்றியும், ஸ்நாநத்தைப்பற்றியும், பக்தியின் பெருமையைப்பற்றியும் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இந்த புஸ்தகம் முக்யமாய் சிறுவர் சிறுமிகளுக்கு உபயோகப்படக்கூடியதால், இதைப் பள்ளிக்கூடங்களில் உபயோகித்தல் விரும்பத்தக்கதாகும். இதில் பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா-8. வேண்டுவோர் சென்னை பி. ஆர். ராமய்யர் அண்ட் கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**ஆந்த்ரா லைப்ரரி கான்பரென்ஸ்.**

மேமாஸம் 6-ந்தேதியன்று ஆந்த்ரா புஸ்தகசாலைகள் (லைப்ரரி) கான்பரென்ஸ் நான்காவது தடவையாக கஞ்சம் ஜில்லாவைச்சேர்ந்த பருவா என்னும் ஊரில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் பி. வெங்கடபதி ராஜு ப்ரஸிடெண்டாக இருந்து, லைப்ரரிகள் ஏற்படுத்துவதைப்பற்றியும் கல்வி, பாஷைநடைகள், இவைகளைப்பற்றியும் ப்ரஸங்கம் செய்தார்.

இந்தக் கான்பரென்ஸை ஒட்டி ஒரு லைப்ரரி காட்சிசாலை நடத்தப்பட்டது. அதில் உலகத்திலுள்ள பல லைப்ரரிகளின் ப்ளான்களும், காட்சிகளும் வைக்கப்பட்டதோடு, லைப்ரரி நடத்தும் விஷயமாகப் பல பத்திரிகைகளும் புஸ்தகங்களும் வைக்கப்பட்டிருந்தன. அதில் பையன்கள் பிரிவு சேர்த்தியாயிருந்தது.

**மிஸ்டர் நாகமையா.**

திருவாங்கூர் ஸமஸ்தானத்துத் திவான் பேஷ்காராயிருந்த மிஸ்டர் நாகமைய்யா இம்மாதம் 8-ந்தேதியன்று காலகதியடைந்தார். இவர் 42-வருஷகாலம் திருவாங்கூர் கவர்ன்மெண்டில் வெகு திறமையாக வேலை செய்தவர்; இவர் ஐந்து முறை திருவாங்கூர் ஸமஸ்தானத்துத் திவானாக வேலைபார்த்து வந்தார். இவர் 1850-வது வருடத்தில் பிறந்தவர்; 1866-வது வருடத்தில் மெட்ரிகுலேஷன் பரீட்சையும், 1870-வது வருடத்தில் பீ-ஏப்-பரீட்சையும் செய்தார். இவர் கல்வி, ரிவின்யூ இலாக்காக்களில் மிகுதிறமையுடன் வேலை செய்து, கடைசியாகத் திவான் பேஷ்காராயிருந்து 1908-ம் வர்ஷம் வேலையிலிருந்து விலகிக்கொண்டார்.



**சாயக் கஷ்டம் நீங்கலாம்.**

ஜெர்மனியிலிருந்து செயற்கைச் சாயம்வருவது நின்றுபோனதால் ஏற்பட்ட சாயக்கஷ்டம் சீக்கிரம் குறையக்கூடுமென்று தெரிகிறது. இங்கிலண்டில் செயற்கைச்சாயம் அதிகமாகச் செய்யப்பட்டு வருகிறதென்று இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரியவந்திருக்கிறது. இந்தியாவில் எந்தச்சாயம் அதிகம் தேவையாயிருக்குமோ அந்த சாயங்களின் ஜாப்தா ஒன்று தயாரித்து இங்கிலண்டில் உள்ள கவர்ன்மெண்ட் வ்யாபார போர்டுக்கு அனுப்பி, அந்த போர்டாரைக்கொண்டு ப்ரிட்டிஷ் சாயத்தொழிற் சாலைக்காரர்களை ஒவ்வொரு வகைச் சாயத்திலும் எவ்வளவு அனுப்பக்கூடுமென்று கேட்டு அறிய இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

**ஸ்ட்ரெயிட் ஸெட்டில்மெண்டுக்குப் போகும் இந்தியர்கள்.**

கூலியாட்களைத்தவிர மற்ற இந்தியர்கள் ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில்மெண்ட் நாடுகளுக்கு அதாவது பினாங் சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குப் போவதாயிருந்தால் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு போகவேண்டும். பாஸ்போர்ட் இல்லாவிட்டால், உள்ளே விடப்படமாட்டார்கள். பாஸ்போட் இல்லாத ப்ரயாணிகளை ஏற்றிவந்த கப்பல் கம்பெனிகள் தங்கள் சொந்தச்செலவில் அந்த ப்ரயாணிகளை இந்தியாவுக்குத் திரும்பி ஏற்றிப் போகவேண்டியிருக்குமென்று அந்த நாட்டு கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**

இந்தியாவில் சென்ற மார்ச்சுமாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 10 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| 1 இன்ஷூரன்ஸ் கம்பெனி | 5,00,000 |
| 1 கப்பல் நடத்தும் கம்பெனி | 25,00,000 |
| 1 அச்சடித்து ப்ரசுரம் செய்யுங்கம்பெனி | 3,00,000 |
| 2 வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே, சொன்னவை தவிர) | 60,000 |
| 4 தேயிலைத்தோட்டக் கம்பெனிகள் | 15,00,000 |
| 1 சுரங்கக் கம்பெனி | 28,50,000 |
| 10 | 77,10,000 |

**வட்டியில்லாத ரொக்கச்சீட்டுகள்.**

மகம்மதியர்களும் வேறு சில இந்தியர்களும் மதஸம்பந்தமான காரணங்களை உத்தேசித்தும், வேறு காரணங்களை உத்தேசித்தும் இந்தியா கவர்ன்மெண்டுக்கு வட்டி வாங்கிக்கொண்டு பணம் கடன்கொடுக்க ஸம்மதமில்லாமலிருக்கிறார்கள். ஆனால் வட்டியில்லாமல் கடன்கொடுக்க இஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வட்டி வாங்கிக்கொள்ளாமல் கடன் கொடுப்பதற்காக வட்டியில்லாக்கடன் ரொக்கச் சீட்டுகளை விற்க இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவைகளை வாங்குபவர்கள் கடனைத்திரும்பப் பெறும்போது அஸல்தொகை மாத்திரம் அடைவார்கள்.

**திருவள்ளுவர்.**

சென்னையில் ஸமீபத்தில் நடந்த ஒரு மீட்டிங்கில் தமிழ் அபிமானிகளில் பலர், வர்ஷந்தோறும் மைலாப்பூரில் திருவள்ளுவர் உத்ஸவம் நடத்தவேண்டுமென்றும் திருவள்ளுவரின் ஞாபகார்த்தமாக பற்பல உரைகளடங்கியதாய் திருக்குறளைப்பதித்து வெளியிடவேண்டுமென்றும், கூடுமானால், ஆசிரியரின் பெயரை விளங்கச்செய்ய ஒரு ஞாபகச்சின்னமும், புஸ்தகசாலையும் ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

**ஸ்த்ரீகளுக்கு வைத்ய பாடசாலை.**

சென்னை கவர்ன்மெண்டார் சென்னையில் ஒரு ஸ்த்ரீ வைத்ய பள்ளிக்கூடம் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இது ஸ்தாபிக்கப்பட்டதும், ராயபுரம் வைத்யப் பள்ளிக்கூடத்திலும் மெடிகல் காலேஜ் அப்பாதகரி வகுப்பிலும் ஸ்த்ரீமாணவர்கள் சேர்த்துக்கொள்வதை நிறுத்திவிடுவார்கள். இனிமேல் சென்னையில் ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் வகுப்புக்குப் படிக்கும் ஸ்த்ரீ மாணவர்கள் புது ஸ்த்ரீ வைத்யஸ்கூலில் சேரவேண்டும்.

**பம்பாயில் ஒருவேதாந்த பாடசாலை.**

பம்பாயில் மார்வாடி வித்யாலயத்தில் ஒரு வேதாந்த பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் மாணவர்களுக்கு நவீனமுறையில் வேதமும் வேறு பாடங்களும் கற்பிப்பார்கள். இது பரீக்ஷார்த்தமாய் ஒருவர்ஷம் நடந்துவரும். நன்றாய் நடந்தால் பிறகும் நடத்தி வருவார்கள். வைதிக கர்மாக்களை நடத்திவைக்கத் தேர்ச்சி ஏற்படும்படி மாணவர்களைத் தயார்செய்வது இப்பாடசாலையின் ஒரு முக்ய நோக்கமாகும்.

**மாணவர்களும் ராஜீய விஷயங்களும்.**

காலேஜுகளில் பி. ஏ. வகுப்புக்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளில் வாசிக்கும் மாணவர்களும் ஸ்கூல்களிலுள்ள எல்லா வகுப்புமாணவர்களும், ராஜீய ஸங்

பந்தமான விவாதங்களில் கலந்து கொள்வதும், ராஜீய ஸம்பந்தமான மீட்டிங்குகளுக்குப் போவதும், அப்படிப்பட்ட ஸபைகளில் சேருவதும் கூடாதென்று சென்னை கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

ஐரோப்பிய யுத்தம்.

மேமீ 4-தேதி.

ப்ரிட்டிஷார் ப்ரெஸ்னாய் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

சென்ற ஏப்ரல் மாஸத்தில் 269 ஜெர்மன் ஏரோப்ளேன்கள் நாசமாயின. 148 ப்ரிட்டிஷ் ஏரோப்ளேன்கள் ஜெர்மானியர்களால் வீழ்த்தப்பட்டன

8-தேதி.

மேற்குப் போர்முகத்தில் யுத்தம் பலமாக நடந்து வருகிறது. ப்ரெஞ்ச் துருப்புகள் க்ரேயன் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் ரஷ்யாவோடு உக்ரமாய்சண்டை செய்வதற்காக வடக்குக் ரஷ்யப் போர்முகத்தில் ஸைன்யங்களை சேர்த்து வைத்திருப்பதாகவும், பனிக்கட்டிகள் போனதும் கப்பல்கள் மூலமாக ஸைன்யங்களைக் கொண்டுபோய் பிட்ரொக்ராடுக்குப் பக்கத்தில் இறக்கி யுத்தம் செய்ய எண்ணியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ரஷ்யர்கள் ஆசியா துருக்கியில் ஆக்னட், மூஷ் என்னுமிடங்களிலிருந்து பின்வாங்கி விட்டார்கள்.

11-தேதி.

ஜெர்மனியர்கள் ப்ரெஸ்னாய் என்னும் ஊரைத் திருப்பிப் பிடித்திருக்கிறார்கள். ஸலோனிக்கா போர்முகத்தில் யுத்தம் ஆரம்பமாகியிருக்கிறது.

15-தேதி.

ப்ரிட்டிஷார் ஆர்ராஸுக்குக் கிழக்கே ரௌக்ஸ் என்னும் ஊரையும் புல்லிகோர்ட் என்னும் ஊரின் பெரும்பாகத்தையும் பிடித்திருக்கிறார்கள். மெஸபொடேமியாவிலுள்ள ரஷ்ய துருப்புகள் டையலா நதியின் இடதுகரைக்குப் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள்.

18-தேதி.

அமெரிக்காவிலிருந்து முதல் முதலாக ஒருவைத்யப்படை ப்ரிட்டிஷ் துறைமுகமொன்றுக்கு வந்திருக்கிறது.

ஹாண்டுராஸ் என்னும் நாடு ஜெர்மனியோடு பேச்சு வார்த்தைகளை விட்டுவிட்டது.

19-தேதி.

இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் பலமாய் சண்டைசெய்து வருகிறார்கள். அவர்கள் ப்லவா என்னுமிடத்துக்கருகிலும் வேறு இடங்களிலும் நதியைக் கடந்துபோயிருக்கிறார்கள்.

அமெரிகா டிஸ்ட்ராயர் படையொன்று ப்ரிட்டிஷ் கப்பல்படைக்கு உதவியாக ஐரோப்பாவுக்கு வந்திருக்கிறது.

20 தேதி.

நிகாராகுவா என்னும் நாடு ஜெர்மனியோடு பேச்சு வார்த்தைகளை விட்டுவிட்டது.

அமெரிகா ஐக்யநாடுகளின் கவர்ன்மெண்டார் ப்ரான்ஸ் போர்முகத்துக்கு ஒரு டிவிஷன் ஸைன்யம் அனுப்பத் தீர்மானித்திருக்கிறார்கள்.

22-தேதி.

ப்ரிட்டிஷார் இதுவரையில் ஹிண்டர் பர்க் லைன் என்று சொல்லப்படும் போர்முகப்பிரிவில் 9½ தூரமுள்ள பாகத்தைப் பிடித்திருக்கிறார்கள். இட்டாலியர்கள் ஐஸான் ஸோபோர்முகத்தில் முன்சென்று வருகிறார்கள்.

அட்ரியாடிக் கடலில் ஆஸ்ட்ரியா லைட் க்ரூஸர்கள் ப்ரிட்டிஷுக்கு சொந்தமான் 14 மீன்பிடிக்கும் கப்பல்களை மூழ்கடித்தன. ப்ரிட்டிஷ் க்ரூஸர்களும் ப்ரான்ஸ், இட்டாலி இவைகளின் டிஸ்ட்ராயர்களும் ஆஸ்ட்ரிய படையைத் துரத்திவிட்டன. ஒரு ப்ரிட்டிஷ் க்ரூஸர் டார்பிடோவால் தாக்கப்பட்டது. ஆனால் அது மூழ்காமல் துறைமுகம்வந்து சேர்ந்தது. ஒரு ப்ரிட்டிஷ் ட்ரான்ஸ்போர்ட் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

25-தேதி.

இட்டாலியர்கள் இஸ்ான்ஸோ போர்முகத்தில் போஸ்கோமெலோ, லோகேட், ஜாமியனோ, பாகா முதலிய இடங்களைப் பிடித்தார்கள். ஜப்பானிய கப்பல் படைகள் இப்போது மத்யதரைக்கடல், இந்திய ஸமுத்ரம், பஸிபிக் சமுத்ரம் முதலிய கடல்களில் வந்து ப்ரிட்டிஷாருக்கு உதவிசெய்து கொண்டிருக்கின்றன.

28-தேதி.

இட்டாலியர்கள் இன்னும் முன்சென்று வருகிறார்கள். அவர்கள் ஸான்கியயோவானி என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

## THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்கள௵ ஆனிமீ. JUNE—JULY 1917. { ஸஞ்சிகை 6. No. 6.


## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| ⅛ do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | அந்யநாடு |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | | | 5 0 0 |
| ½ | ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ | ,, | ,, | ,, | 1 4 0 |
| ⅛ | ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒரு பாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவச்யம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# THE ECONOMIC CONDITION OF THE MIDDLE CLASS PEOPLE.

## மத்யதர வகுப்பார்களின் பொருளாதார நிலைமை.

எந்த தேசத்திலும் மத்யதர வகுப்பார்கள் தான் ரொம்ப முக்யஸ்தர்களாவார்கள். அவர்கள் ஸௌகர்யமாயிருந்தால்தான் பொதுவாய் தேசம் முழுவதும் க்ஷேமமடைந்து அபிவ்ருத்தியடையக்கூடும். ஆகவே, அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கிறதென்று கவனிக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்தியாவில் மத்யதர வகுப்பார்களுடைய பொருளாதார நிலைமையானது நல்ல ஸ்திதியிலில்லையென்று சொல்லலாம். அகவிலையானது நாளுக்குநாள் ஏறிவருகிறது. இதனால் அவர்களுடைய செலவானது அதிகரித்துக் கொண்டே வருகிறது. அவர்களுடைய வரும்படியோ ஒரே சீராக இருந்துவருகிறது. செலவு அதிகமாகி, வரும்படி ஒரே மாதிரியாகயிருந்தால், ஜீவனம் செய்வது கஷ்டமாகிறது. ஆகவே, ஒன்று செலவைக் குறைத்து செட்டாய்க் குடித்தனம் செய்யவேண்டும். இல்லாவிட்டால், வரும்படியை அதிகமாக்க ஏதாவது மார்க்கங்கள் தேடவேண்டும். இரண்டிலொன்று செய்யாவிட்டால் மத்யதர வகுப்பார்களுடையபாடு திண்டாட்டந்தான்.

வரும்படி.

இங்கு நாம் மத்யதர வகுப்பார்களில் படித்தவர்களைப்பற்றியே பேசுகிறோம். படித்தவர்களாகையால் அவர்கள் கூலியாட்களைப்போல கை வேலைசெய்து ஜீவிக்க உடன்படமாட்டார்களென்றும், புத்தியை உபயோகிக்கவேண்டியிருக்கும் தொழில்களிலும், உத்யோகங்களிலும், அமர்ந்து, பொருள்தேட முயலுவார்களென்றும், சொல்லலாம். இப்படிப்பட்டவர்கள் ஸம்பாதிக்கக்கூடிய மார்க்கங்களாவன :—

(1) ஸர்க்கார் உத்யோகம், உதாரணமாக ஸர்க்கார் ஆபீஸுகளில் ஒரு குமாஸ்தாவேலை.

(2) வ்யாபாரக் கம்பெனிகளில் வேலை.

(3) வக்கீல் உத்யோகம், வைத்ய உத்யோகம் முதலிய ஸ்வயேச்சையான உத்யோகங்கள்.

(4) ஸொந்தத்தில் தொழில் நடத்துதல் :

இவைகளில் ஒவ்வொன்றின் நிலைமையையும் கவனிப்போம்.

ஸர்க்கார் உத்யோகங்கள்.

படித்துத் தேறிய ஒவ்வொருவரும் ஸர்க்கார் உத்யோகத்தையே நாடுவதால் எல்லாருக்கும் வேலை கிடைப்பது கஷ்டமாகிவிடுகிறது. ஏனென்றால், உத்யோகங்களின் தொகை குறைவாயிருப்பதோடு வெகுவாய் அதிகரிப்பதில்லை வேலையை அபேக்ஷிப்பவர்களின் தொகையோ நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டுவருகிறது. காலஞ்செல்லச் செல்ல ஸர்க்கார் ஆபீஸ்களில் புது உத்யோகங்கள் ஏற்படுத்தப்படலாம்; என்றாலும் அவைகளின் தொகையானது உத்யோகங்களை அபேக்ஷித்து நிற்பவர்களின் தொகைக்கு உறைபோடக் காணாது. ஏனென்றால், வருஷந்தோறும் நூற்றுக் கணக்கான வாலிபர்கள் நமது காலேஜ்களிலிருந்து படித்து வெளியேறுகிறார்கள். மேலும், நமது நாட்டில் பற்பல வகுப்பார்களிருப்பதால், கவர்ன்மெண்டார் ஒவ்வொரு வகுப்பாருக்குக்கும் உத்யோகங்களை பிரவிக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால், ஒரு வகுப்பாருக்குக் கிடைக்கக் கூடிய உத்யோகங்கள் ஸ்வல்பமேயாகும். இன்னும், ஸர்க்கார் உத்யோகங்களில் அமர்ந்திருப்பவர்கள் வேறு தொழில் அல்லது வ்யாபாரம் செய்யக் கூடாதென்ற நிபந்தனையிருப்பதால், ஸர்க்கார் உத்யோகங்களில் அமருபவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தைக்



கொண்டு த்ருப்தியடைய வேண்டியதாயிருக்கிறது.

கம்பெனிகளில் உத்யோகம்.

ஸர்க்கார் உத்யோகங்கள் விஷயத்தில் சொன்னவைகளில் பெரும்பான்மையானவை கம்பெனி உத்யோகங்களுக்கும் பொருந்தும். முதலாவது, படித்தவர்கள் கம்பெனி உத்யோகங்களை நாடிப்போகும்படி நல்ல இந்தியக் கம்பெனிகள் நமது நாட்டில் அதிகம் கிடையா. பம்பாய்போன்ற நகரங்களில் பெரிய இந்தியக் கம்பெனிகள் பல இருந்தாலும், அவ்விடங்களிலும் அதிக சம்பளம் கிடைப்பது கஷ்டந்தான். ஏனென்றால், அவ்விடங்களுக்கு வேலைக்குப்போகிறவர்களின் தொகை அதிகமாயிருப்பதால், சம்பளம் அதிகமாகக்கிடைப்பதில்லை. மேலும், கம்பெனிகளில் வேலை பார்ப்பது ஸ்திரமானதல்ல. யஜமானனுக்கு ப்ரியமில்லாவிட்டால் வேலைக்காரர்களைப் போகச்சொல்லிவிடலாம். இப்படியிருப்பதால் பலர் ஸர்க்கார் உத்யோகமே மேலானதென்று எண்ணுகிறார்கள். வ்யாபாரக் கம்பெனிகளைப்போலவேதான் ரெயில்வேக் கம்பெனிகளிலும். அங்கே ஸௌகர்யங்களைவிட அஸௌகர்யங்கள்தான் அதிகமாயிருக்கின்றன.

வைத்யம், சட்டம்.

படித்த வாலிபர்களில் பலர் ஒருவர்கீழிருந்து வேலை செய்யாமல் ஸ்வயேச்சையாயிருக்கலாமென்று எண்ணி, வக்கீல் உத்யோகத்தையும், வைத்யத்தொழிலையும் நாடுகிறார்கள். இப்படி நாடியவர்களில் ரொம்பப்பேர்கள் அபிவ்ருத்தியடைவதில்லை. வாரிக்கட்டிவிடலாமென்று எண்ணி, இந்த உத்யோகங்களுக்குத் தயாராகிறவர்கள் ஒரு பட்டணத்தில் ஸ்திரமாகத் தங்கினவுடன் தாங்கள் கட்டின ஆகாசக் கோட்டையெல்லாம் பொய்யென்று அறிந்து கொள்ளுகிறார்கள். ஏற்கனவேயுள்ள வக்கீல்களையும் வைத்யர்களையுமே ஜனங்கள் வெகுவாய்த் தேடிப் போகிறார்கள். புதிதாய் ஆரம்பிப்பவர்களுக்கு பேரும் பொருளும் வருவதற்கு வெகு காலம் பிடிக்கிறது. அவ்வளவு காலம் பொறுமையுடன் காத்திருக்கவேண்டியிருக்கிறது. அப்படிக் காத்திருந்தும் எல்லாருக்குமே கீர்த்தியும் வரும்படியும் கிடைப்பதில்லை. பெரும்பாலாருக்குக் கிடைக்கும் வரும்படி செலவுக்குக்கூடப் போதும்போதாதென்றிருக்கிறது.

ஸொந்தத்தில் தொழில் நடத்தல்.

படித்த வாலிபன் மேற்சொன்ன உத்யோகங்களை விட்டுவிட்டு ஸொந்தத்தில் தொழில் நடத்தலாமென்றால், அதுவும் ச்ரமமாய்த்தானிருக்கிறது. அதற்கு மூலதனமும், தேர்ந்த வேலையாட்களும், தொழிலை ஆரம்பித்து நடத்தத் திறமையும், வேண்டும். இந்தியாவில் தொழில்களுக்கு மூலதனம் கிடைப்பது அரிது. தேர்ந்த வேலையாட்கள் கிடைப்பது இன்னும் அரிது. சிலருக்கு தொழில் நடத்தத் திறமையிருக்கலாம். மூலதனமும் தேர்ந்த வேலையாட்களும் இல்லாவிட்டால், தொழில் நடத்தும் திறமையால் ப்ரயோஜனம் அதிகமேற்படாது. ஏதோ ச்ரமப்பட்டுத் தொழில் ஏற்படுத்தினாலும், அன்ய வ்யாபாரிகளின் போட்டி பலமாயிருக்கிறது. அதனால் புதுத் தொழில்கள் வ்ருத்தியடைவது கஷ்டமாகிறது.

செலவு.

ஆகவே, நடுத்தர வகுப்பார்களில் படித்தவர்களுக்கு அதிக செல்வம் அடைவதற்கான மார்க்கங்கள் ஒன்றும் இல்லையென்று ஏற்படுகிறது. பொதுவாய்ச் சொல்லுமிடத்து, அவர்களுக்குக் கிடைக்கும் வரும்படி குறைவாயிருப்பதோடு, அதிகரிப்பதற்கு வழியில்லாமலிருக்கிறது. இப்படிச் சொன்னதால் மத்யதரவகுப்பார்களில் எவருமே பணக்காரராக இல்லையென்று சொல்ல வாயில்லை. சிலபேர்

கள் தனவந்தர்களாயிருக்கிறார்கள். ஆனால், பொதுவாய்ச்சொல்லுமிடத்து, அவர்களுடைய வருமான மார்க்கங்கள் ஸ்வல்பமென்றும், அவைகளும் சில ஸமயங்களில் குறைந்து போகக்கூடுமென்றும், சொல்லலாம்.

வரவு இப்படி இருக்க, செலவை கவனிப்போம். அகவிலை நாளுக்குநாள் ஏறிவருவதால் ஜீவனச் செலவு அதிகரித்துவருகிறது. எப்போது அகவிலை குறைந்து க்ரமமான நிலைமைக்கு வருமென்று ஒருவரும் சொல்வதற்கில்லை. இப்போது நடக்கும் யுத்தமானது அகவிலையை ரொம்பவும் உயர்த்திவிட்டது. யுத்தம் முடிந்து, பல வர்ஷங்கள் வரையிலுங்கூட அகவிலை ஏறுமென்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். இந்த யுத்தத்துக்குப்பிறகு வ்யாபார விஷயமாய் ஒவ்வொரு தேசத்தாரும் போட்டிபோடப் போகிறார்களென்று பலர் அபிப்ராயப்படுகிறார்கள். அதனால் ஸாமான்களின் விலை உயருமென்று சொல்லப்படுகிறது. ஆகவே மத்யதர வகுப்பார்கள் இன்னும் அதிகமாகக் கஷ்டத்துக்குள்ளாகலாம்.

அதோடு, மனிதர்களுக்கு வேண்டியிருக்கும் ஸாமான்களின் வகைகள் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றன. இன்றைக்கு கௌரவத்துக்காகவும், ஸுகத்துக்காகவும் வாங்கும் ஸாமான்கள் சிலகாலம் சென்றால் இன்றியமையாதவைகளாகிவிடுகின்றன. ஒவ்வொருவரும் தமது அந்தஸ்து உயரவேண்டுமென்று எண்ணுவது ஸஹஜம். கேவலம் பிச்சைக்காரர்களைப்போல் குடித்தனம் செய்யாமல், தாராளமாய்ச் செலவழித்து, கௌரவமாய் இருக்க வேண்டுமென்று பலர் எண்ணுகிறார்கள். இதற்கெல்லாம்பணம் அதிகமாகச்செலவழிக்க வேண்டியிருக்கும்.

இவைகளைத்தவிர, வீட்டுவாடகை நாளுக்கு நாள் உயர்ந்துவருகிறது. பிள்ளைகளின்படிப்புக்கு செலவு ஜாஸ்தியாகிக்கொண்டு வருகிறது. வேலைக்காரர்கள், பரிசாரகர்கள், இவர்களுடைய சம்பளத்துக்கும், பண்டிகை, உத்ஸவங்கள், கல்யாணம், வைத்யம், ஸர்ப்ரயாணம், தர்மம், ஆகிய இவைகளுக்கும், பணம் செலவழிக்கவேண்டியிருப்பதால், மத்யதரவகுப்பார் ரொம்ப ச்ரமப்படவேண்டியிருக்கிறது.

நகரங்களில் வஸித்துவரும் சில மத்யதர வகுப்புக்குடும்பங்களின் வரவு செலவு கணக்குகளை ஒப்பிட்டுப்பார்த்த ஒரு கனவான் சென்ற பத்து வர்ஷத்துக்குள் ஜீவனச்செலவு 100-க்கு 50 விதம் உயர்ந்திருக்கிறதாகவும், வரும்படி கிட்டத்தட்ட ஒரே ரீதியா யிருக்கிறதாகவும் சொல்லுகிறார். ஆகவே, மத்யதர வகுப்பார் தங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ள முயற்சிகள் எடுத்துக்கொள்ளாவிட்டால், பின்னால் ரொம்பவும் கஷ்டப்படவேண்டியிருக்கும். அவர்கள் இன்னின்ன வழிகளில் தங்களுக்குக் கஷ்டம் நேரிடாதபடி பார்த்துக்கொள்ளலாமென்பதைக் கீழே விவரிக்கிறோம்:—

## இன்ஷூரன்ஸ்.

ஒவ்வொருவரும் தங்கள் ஆயுளை இன்ஷூர் செய்யவேண்டியது அவச்யமாகும். மற்ற வகை இன்ஷூரன்ஸ்களைவிட எண்டௌமெண்ட் என்னும் இன்ஷூரன்ஸ்தான் நல்லது. இதன்படி வர்ஷந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்திவந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பிறகு ஒரு பெருந் தொகை கிடைக்கிறது. முக்யமாய் குடும்பத் தலைவருக்கு வயது சென்ற பிறகு குடும்பத்துக்கு பணக்கஷ்டம் ஏற்படாமலிருப்பதற்காக, இந்தவகை இன்ஷூரன்ஸ் எடுத்துக் கொள்வது வழக்கம். மற்ற வழிகளில் பணம் சேர்த்துவைப்பதைவிட இன்ஷூரன்ஸ் கம்பெனியில் ஒரு பாலிஸி பெடுத்துக்கொள்வதில் சில ஸௌகர்யங்கள் இருக்கின்றன.



## இன்ஷூரன்ஸின் நன்மைகள்.

(1) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை தவறாமல் சந்தா (ப்ரீமியம்) கொடுக்க வேண்டியிருப்பதால், இன்ஷூரன்ஸ் எடுத்துக்கொண்டவர் செட்டாய்ச் செலவழிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்.

(2) இன்ஷூரன்ஸ் ஏற்பாடானது கட்டாயப்படுத்தி மிச்சம் பிடிக்கச் செய்கிறது. அப்படி மிச்சம் பிடிக்கவேண்டிய தொகையும் அதிகமல்ல.

(3) குடும்பத்துக்கு ஸம்பாதித்துப் போடுகிறவர் இன்ஷூர் செய்திருந்தால், அவர் அகால மரண மடைந்தாலும் குடும்பத்துக்குப்பணம் கிடைக்கும்.

(4) இன்ஷூர் செய்தால், செய்தவருக்கு மனக்கவலை ஒழிந்துவிடும். பின்னால் பணமில்லாமல் திண்டாடவேண்டியிருக்குமென்று ஸதாவிசாரப் பட்டுக்கொண்டிருக்கவேண்டியதில்லை. கோபதாபமும் கவலையுமில்லாதிருத்தல் ஆயுளை வ்ருத்தி செய்யும்.

(5) ஒரு தடவை இன்ஷூரன்ஸ் கம்பெனிக்குச் செலுத்தின தொகையைத் திருப்பி வாங்கி, கண்டபடி செலவழிக்கமுடியாது.

(6) இப்படி எல்லாரும் செய்தால் தேசம் முழுவதுக்கும் மிச்சம் பிடிக்கும் சக்தி அதிகமாகிறது. அதனால் தேசம் முழுவதும் அதிக செல்வமுள்ளதாகிறது.

## வீட்டுக் கைத் தொழில்கள்.

மத்யதர வகுப்பார் தங்கள் வரும்படியை அதிகப்படுத்த இன்னொரு வழியாவது, வீட்டுக் கைத்தொழில்களை ஏற்படுத்திக்கொள்வதே. அவைகளை, சிறிய அளவில் நடத்திவந்தால், மாஸந்தோறும் ஒரு சிறு தொகை லாபமாகக் கிடைக்கும். தவிர அவைகளை ஸ்த்ரீகள் கவனித்துவரலாம். ஸ்டாக்கிங்ஸ், நெக்டைஸ் அதாவது கழுத்துப்பட்டைகள், முதலியவைகளைச் செய்துவிற்கலாம். இவைபோன்ற வேறு ஸாமான்களையும் செய்துவிற்று சொற்பமாய்ப் பணம் ஸம்பாதிக்கலாம்.

## பத்ரிகைகளுக்கு எழுதுவது.

ஆபீஸ்களில் அமர்ந்திருப்பவர்கள், ஆபீஸ்களின் சட்டதிட்டங்கள் இடங்கொடுத்தால், பத்ரிகைகளுக்கு வ்யாஸங்கள் எழுதியும் பணம் பெறலாம். தற்காலம் இந்தியாவில் சில பத்ரிகைகள்தான் வ்யாஸங்களுக்குப் பணம் கொடுக்கின்றன. இருந்தாலும், அநேகர் இந்தப்பத்ரிகைகளுக்கு ஒழிந்த நேரங்களில் வ்யாஸங்கள் எழுதி பணம் ஸம்பாதிக்க முயற்சி செய்யலாம். மேல்நாடுகளில் அநேகர் பத்ரிகைகளுக்கு எழுதி அதிகமாகப் பணம் பெறுகிறார்கள். இந்தியர்களில் பலர் மேல்நாட்டுப் பத்ரிகைகளுக்கு எழுதி, பணம் பெறுவதுண்டு.

## கோவாபரேஷன்.

நாலைந்து குடும்பத்தார் ஒன்று சேர்ந்து தங்களுக்கு வேண்டிய ஸாமான்களை மொத்தத்தில் தருவித்து, பாகித்துக் கொள்வதால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் செலவு குறையும். காற்றோட்டமில்லாதவும், ஸுகாதாரக்குறைவுள்ளவுமான தனிவீடுகளில் தனியாக குடியிருப்பதைவிட, இரண்டு மூன்று குடும்பங்கள் ஒன்று சேர்ந்து காற்றோட்டமுள்ள ஒருபெரிய வீட்டை வாடகைக்கு வாங்கி, அதில் சேர்ந்து வஸிப்பது எவ்வளவோ மேலானது. தக்க முன் ஜாக்ரதையும் ஏற்பாடும் செய்துகொண்டால், குடும்பங்களுக்குள் மனஸ்தாபம் ஒன்றும் நேரிடாது.

## சேட்டு.

ஒவ்வொருவரும் பின்னால் ஸுகமடைவதற்காக, தற்போதைய ஸௌக்யத்தைச் சிறிதளவு குறைத்தாவது, செலவை மட்டுப்படுத்த முயலவேண்டும். பெரும்போகத்துக்கும் கௌரவத்துக்குமான செலவுகளைக் குறைக்கவேண்டும். கெடுதலுண்டாக்கக்கூடிய ஆடம்பரங்களில்

...ரத்தவேண்டும். இன்னொருவர் அந்த மாதிரி செலவுசெய்கிறார், நாமும் அப்படி செலவு செய்யவேண்டுமென்று வீண்செலவு செய்வதை விட்டுவிடவேண்டும். பின்னால் கஷ்டப்படாமல் குடும்பம் முழுவதும் ஸந்தோஷமாயும் ஆரோக்யமாயும் இருக்கவேண்டுமானால், அனுவச்யமான செலவுகளை நிறுத்த வேண்டியது விவேகமாகும். மேலே குறித்த வைகளைத்தவிர, வேறு மார்க்கங்கள் ஏதாவது மத்யதரவகுப்பார்களின் நிலைமையை உயர்த்தக் கூடுமானால், அந்த மார்க்கங்களையும் அனுஸரித்துப் பார்க்கவேண்டும்.

---

## FOOT AND MOUTH DISEASE.

### கோமாரி.

கோமாரியானது ரொம்ப கடுமையான தொற்று வ்யாதிகளில் ஒன்று. இந்த வ்யாதியில், கால்நடைகளின் வாயிலும், காலிலும், மடியிலும் வெடிப்புகள் தோன்றுவதால், இந்த வ்யாதிக்கு, கால் நோய், வாய் நோய், என்றும் பெயருண்டு. இது விசேஷமாய் பசு, எருமை, ஆடு, பன்றி ஆகிய இவைகளுக்குத்தான் வருவது வழக்கம். சிறு பான்மை இதா விட்டு ம்ருகங்களுக்கும் மனிதர்களுக்கும் இந்த நோய் காணுவதுண்டு.

இந்த வ்யாதி இந்தியாவில் எங்கும் உண்டாகக்கூடியது. இந்த வ்யாதியால் பலமுள்ள ம்ருகங்கள் இறந்துபோவதில்லையென்றாலும், இந்த வ்யாதி தோன்றின ம்ருகங்கள் வேலைக்கு லாயக்கில்லாமல் போவதாலும், அவைகளின் பலம் குறைவதாலும், விசேஷ கெடுதி ஏற்படுகிறது. ஸமவெளிகளிலுள்ள ம்ருகங்களைவிட, மலை ப்ராந்த்யங்களிலுள்ள ம்ருகங்களுக்கு இந்த வ்யாதி அதிகமாய் உண்டாகிறது. சில ப்ரதேசங்களில் காட்டு மாடுகளுக்கு இந்த வ்யாதி விசேஷமாய் உண்டாவதில்லை, அவ்விடங்களுக்குப் புதிதாய், பிறவிடங்களிலிருந்து வரும் ம்ருகங்களுக்குத்தான் வ்யாதி உண்டாகிறதாம்.

### வ்யாதி பரவும் விதம்.

கோமாரியானது நோய்ப்பட்ட ம்ருகங்கள் மூலமாகவும், மனிதர்கள் மூலமாகவும், தீனி மூலமாகவும் பரவுகிறது. புல்தரை, குதிரை லாயம், மாட்டுக்கொட்டில், ம்ருகங்கள் ஏற்றியனுப்ப உதவும் ரெயில் வண்டிகள் முதலிய வைகளில் நோய்கண்ட ம்ருகங்கள் தங்கி இருந்தால், அந்த இடங்கள் மூலமாகவும், வ்யாதி பரவக்கூடும். வ்யாதிகண்ட ம்ருகங்கள் உபயோகித்த நீர்த்தொட்டிகளை க்ருமிஹர மருந்துபோட்டு சுத்தம் செய்யாவிட்டால், அந்தத் தொட்டிகள் வெகுகாலம் வரையில் வ்யாதி பரவுவதற்கு காரணமாகக்கூடும். சில கால்நடை வ்யாதிகளைப்போல், ஒரு தடவை கோமாரி வ்யாதிகண்ட ம்ருகம் பிழைத்துவிட்டால், எப்போதும் வ்யாதிவராமலிருக்கும் என்பதில்லை. சில காலம் வரையில்தான் வ்யாதிக்கு அகப்படாமல் தப்பலாம். பிற்பாடு, இந்த வ்யாதி அடிக்கடி நேரிடக்கூடும். இந்த வ்யாதியில் வ்யாதிக்கு ஆதாரமான க்ருமிகள் தேஹத்தில் சேர்ந்தபிறகு, வ்யாதி வெளிப்படையாகத் தெரிய 24-மணிநேரம் முதல் 7-நாள் வரையில் செல்லக்கூடும்.

### வ்யாதியின் அறிகுறிகள்.

இந்த வ்யாதி ஒரு ம்ருகத்தில் கண்டவுடன் தோன்றும் அறிகுறிகளாவன: நடுக்கம், மந்தமாயிருத்தல், தீனியில் விருப்பமில்லாமை ஆகிய இவைகளே. ம்ருகத்தின் பாதங்கள் ம்ருதுவாகிவிடும். அதனால் அதன் கால்கள் அடிக்கடி நடுங்கும். சில காலத்துக்குப் பிறகு



கால்கள் விறைத்துப்போய் நொண்டியாகிவிடும். ம்ருகமானது உதட்டை ஒருவாறு அடித்துக்கொண்டிருக்கும். வாயிலிருந்து உமிழ்நீர் ஒழுகி சொட்டிக்கொண்டிருக்கும். வாயைப் பரிசோதித்துப் பார்த்தால், உள்புறத்திலும், நாக்கிலும், பல்லிறுகளிலும் சிறு கொப்புளங்கள் இருப்பது தெரியவரும். அவை தினை பருமுதல் ஒரு பட்டாணி அளவு பெரியனவாயிருக்கும். வாயின் உள்புறம் சிவந்திருக்கும்.

காலஞ் செல்லச் செல்ல வாயிலுள்ள கொப்புளங்கள் பெரியனவாகி வெடித்துவிடும். பிறகு கொப்புளங்கள் இருந்தவிடம் புண்ணாகி, புண்கள் ஒன்றோடொன்று நெருங்கி பெரிய புண்ணாகிவிடும். வாயில் புண் அதிக கடுமையாயிருந்தால், வாயிலிருந்து ஸதா ஜலம் வடிந்துகொண்டேயிருக்கும். வ்யாதியானது வாயிலேயன்றி காலிலும் உண்டாகி, தொந்தரவு செய்வதுண்டு. சிற்சில ஸமயங்களில் வாயில் மாத்ரம் உண்டாகும். காலில் வ்யாதிவந்தால் குளம்புக்கு மேலும், குளம்புகளுக்கு இடையிலும் உஷ்ணமும் வலியும் உண்டாகும். அங்கே சிறு கொப்புளங்கள் உண்டாகி வெடித்துப் புண்ணாகும். புண்களில் அநேக ஸமயங்களில் புழுக்கள் இருப்பதுமுண்டு. பசுக்களில் இந்த வ்யாதி தோன்றினால், மடியிலும் முலைக் காம்பிலும் கொப்புளங்கள் உண்டாகி, பாலைக் குறைத்துவிடும். வ்யாதிகண்ட ம்ருகங்கள் வலியினாலும், தீனி தின்னாததனாலும் மெலிந்துபோகின்றன. சில ஸமயங்களில் ம்ருகங்களினுடைய கொம்புகளின் உள்புறம் கெடுதலடைந்து அதனால் கொம்புகள் விழுந்துவிடுவதுண்டு. கன்றுகளுக்கும் பலஹீனமான மாடுகளும் இந்த வ்யாதி கண்டால், அவை இறந்துபோகக்கூடுமென்றாலும், பெரிய மாடுகளுக்கு இது கண்டவுடன் தக்க சிகித்ஸைசெய்து பராமரித்து வந்தால், அவைகள் அநேகமாய் பிழைத்துவிடும்.

ஆடுகளுக்கு இந்த வ்யாதி கண்டால், முன் சொன்னவைபோன்ற வ்யாதிக்குறிகள் காணப்படும். ஆனால் இவைகளில் முக்யமாய் பாதத்தில்தான் புண் அதிகமாயிருக்கும். சில ஸமயங்களில் பாதத்தில் நோயுள்ள ஆடுகள் முழங்காலை மண்டிபோட்டு நடப்பதுண்டு.

### சிகித்ஸை.

வ்யாதிகண்ட மாடுகளுக்கு வேலையொன்றும் கொடுக்காமல் களைப்பாறவிடவேண்டும். அவைகளுக்கு தக்க சைத்யோபசாரம் செய்வதுடன், ஸுஹாதார விதிகளை நன்றாய் கவனிக்கவேண்டும். மாட்டுக் கொட்டில்களை நன்றாய் சுத்தப்படுத்தி, ஈரமில்லாமல் வைத்திருக்கவேண்டும். தீனி ம்ருதுவாயிருப்பதோடு ஸுலபமாய் ஜீர்ணமாகக் கூடியதாயுமிருக்க வேண்டும். புல்லும் தவிடும் கொடுக்கலாம். இளகலான அரிசிக் கஞ்சியுடன் கொஞ்சம் தேன்பாகு சேர்த்து அடிக்கடி குடிக்கக் கொடுக்கலாம். உப்பை அதிகமாக உபயோகப்படுத்தலாம்.

கால்படி ஜலத்தில் பொடிசெய்த வெங்காரத்தையாவது படிக்காரத்தையாவது ½-ஔன்ஸ் கரைத்து மாட்டின் வாயை அலம்பவேண்டும். மாட்டின் பாதத்தை அழுக்கு ஒன்றுமில்லாமல் நன்றாய்த் துடைத்து, க்ருமிஹரமான மருந்து போட்டு அலம்பவேண்டும். பின்வரும் இரண்டு மருந்துகளில் ஏதாவது ஒன்றை உபயோகிக்கலாம் :—

(1) 100-பங்கு ஜலத்தில் 1-பங்கு பினைல் மருந்து கலந்து உபயோகித்தல்.

(2) மயில்துத்தம் (பொடிசெய்தது) 1-ட்ராம்.
அன்னபேதி (பொடிசெய்தது) 1-ட்ராம்.
படிக்காரம் (பொடிசெய்தது) ½-ஔன்ஸ்.

பட்டணம் படியால் காலேயரைக்கால்படி வெந்நீரில் இந்த மூன்று சரக்குகளையும் போட்டுக்கரைத்து, குளிர்ந்த பிறகு உபயோகிக்கவும். கழுவின பிறகு கீல் எண்ணெயை காயத்...

களுக்கு மேல் பூசிவிடவும். இங்கு முக்யமாய்க் கவனிக்கவேண்டியதென்னவென்றால், காயங்களை, சுத்தமாயும் ஈரமில்லாமலும் வைத்திருப்பதோடு, ஈக்கள் மொய்க்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியதே. வ்யாதி ரொம்ப கடுமையாயும் சிக்கலாயுமுள்ள கேஸ்களில், அதாவது குளம்புகளில் புண் ரொம்ப ஆழம் தின்றிருந்து புழுக்கட்டியிருந்தால், அப்போது மாடுகளுக்கு ரண சிகித்சை செய்து, காயங்களின்மேல் கட்டுகள் கட்டவேண்டியிருக்கும். குளம்பில் கெட்டுப்போன பாகங்களை எடுத்தெறிந்து விடவேண்டும். இதற்கெல்லாம் தேர்ந்த கால்நடை வைத்யரைக் கொண்டே ரணவைத்யம் செய்யவேண்டும்.

### வ்யாதி வராமல் தடுப்பது.

இந்த வ்யாதிவராமல் தடுக்க, சென்றவர்ஷம் ஆடிமாஸத்து 'ஜனோபிமானி'யில் 318-320-ம் பக்கங்களில் சொல்லியிருக்கும், தொற்று வ்யாதி வராமல் தடுப்பதற்கான முறைகளை, கொஞ்சங் கூடப்பிசகாமல் அனுஸரிக்க வேண்டும். இந்த வ்யாதியானது ரொம்ப ஸுலபமாய் பரவக்கூடியதாகையால், வ்யாதி கண்ட மிருகங்களுக்கு சிகித்சைசெய்து, அவை ஸ்வஸ்தமானதாகத் தோன்றின பிறகு, அவைகளின் தேஹத்தை சோதித்து யாதொரு வ்யாதிக்குறியும் இல்லையென்று நிச்சயமாய்த் தெரிந்தபிறகே, அவைகளை மற்ற தேஹ ஸௌக்யமுள்ள மாடுகளுடன் விடவேண்டும். சில ஸமயங்களில் கால்களிலுள்ள காயங்கள் வெகுகாலம் வரையில் ஆறாமலிருக்கின்றன. இந்தக்காயங்களால் வ்யாதி பரவக்கூடும். வ்யாதி கண்டு பிழைத்த ஒரு மாஸமான பிறகுதான், மாட்டில் வ்யாதிக்காதாரமான க்ருமிகள் முதலியவை இல்லையென்று சொல்லலாம். அதுவரையில் அவைகளை ஸந்தேஹமுள்ளவைகளாக எண்ணி, தனியாகக் கட்டிவைத்திருக்கவேண்டும்.

## A CURIOUS RACE IN MESOPOTAMIA.

## மெஸபொடேமியாவிலுள்ள ஒரு விநோத ஜாதியார்.

சென்ற சில காலமாக ப்ரிட்டிஷ் துருப்புகள் ஆசியா துருக்கியைச்சேர்ந்த மெஸபொடேமியாவில் ஜயமடைந்து வருகிறார்களென்பது யாவருக்கும் தெரியும். மெஸபொடேமியாவென்பது, பாரஸீக வளைகுடாவுக்கு வடக்கே ஆசியா துருக்கியிலுள்ள டைக்ரிஸ், யூப்ரடீஸ் என்னும் நதிகளுக்கு இடையிலுள்ள ப்ரதேசமாகும். இந்த ப்ரதேசத்தில் ஸேபியர்கள் என்ற ஒரு விநோதமான ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் தங்களைச் சுற்றியிருக்கும் எல்லா ஜாதியார்களுடைய அனுஷ்டானங்களில் பலவற்றைக் கைக்கொண்டபோதிலும், குடும்ப நடவடிக்கைகளில் அவர்களெல்லாரையும் விட்டு வேறுபட்டு முற்றிலும் தனிமையாயிருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஸேபியன்ஸ் என்பது பொதுப் பெயராயிருந்தாலும், சிறுபான்மையோர்கள் அவர்களை ஸ்டார் வர்ஷிப்பர்ஸ் அதாவது, நக்ஷத்ர உபாஸகர்கள் என்று சொல்வதுண்டு. ஏனென்றால், அவர்கள் த்ருவ நக்ஷத்ரத்தை வணங்குகிறார்கள். அவர்களுடைய சரியான பெயர் மண்டியர்கள். அவர்களுடைய ஸ்வபாஷையில் மண்டியன் என்ற வார்த்தைக்கு சிஷ்யன் என்றர்த்தம். அவர்கள் தங்களை ஜான் என்னும் மஹானுடைய சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் பாஷைக்கு மண்டெய்டிக் என்று பெயர்.

அவர்களுக்குள் அச்சுப்புஸ்தகங்களே இல்லை. அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியும். அவர்களுடைய நூல்களில் சில கையெழுத்துப்



ப்ரதிகள் தற்போது சில மேல்நாட்டு வித்வான்களிடம் இருக்கின்றன. ஸேபியர்களுக்கு அரபி பாஷையும் தெரியும். ஆனால் அவர்கள் அரபிப் பள்ளிக்கூடங்களுக்குப் போவது கிடையாது.

பதினேழாவது நூற்றாண்டில் அவர்களுள் இருபதினாயிரம் குடும்பங்கள் இருந்தனவாம். ஆனால் தற்காலத்தில் அவர்களுடைய ஜன ஸங்க்யை மூவாயிரம் பெயர்களுக்கு மேலில்லை. அவர்கள் இப்போது மெஸபொடேமியாவில் தானிருக்கிறார்கள். ஸ்வல்ப ஜனங்கள் பாக்தாதிலிருக்கிறார்கள். பெரும்பான்மையோர் ஸூகேஷ்ஷியுக் என்னும் ஊரைச்சுற்றியுள்ள ப்ரதேசத்திலிருக்கிறார்கள் அவர்கள் மத விதிகளில் ஆஜ்ஞாபிக்கப்பட்டிருக்கிறபடி, அவர்கள் எப்போதும் ஓடுகிற ஜலத்துக்குப் பக்கத்திலேயே வஸித்து வருகிறார்கள். அந்த ஜாதியார் குறைந்துபோனதற்கு முக்ய காரணம் முதலில் மகம்மதியர்களுடைய உபத்ரவமும், பிறகு அவர்களுக்குள்ளேயே கலகமும் சண்டையுமே. தவிர, அவர்களுடைய ஸ்த்ரீகளில் அநேகர் சிலகாலமாக மகம்மதியர்களை மணம் புரிந்துவருவதால், அந்த ஜாதி வரவர மிகவும் குறைந்துகொண்டு வருகிறது. அவர்களுடைய முக்யமான வேலை, வெள்ளி வேலையும், மஷூப் என்று சொல்லப்படும் ஒருவகை படகு செய்வதும், இடையர்கள் தொழில், அதாவது மாடுகள் வளர்ப்பதும், பால், தயிர் மோர், வெண்ணெய், நெய் வ்யாபாரம் செய்வதுமே. அவர்கள் வெள்ளி வேலையில் மிகவும் பெயர்போனவர்கள்.

கொஞ்ச காலமாக அரேபியர்கள் அவர்களிடத்தில் முன்போல அவ்வளவு த்வேஷம் பாராட்டுகிறதில்லையாம். அதற்குக் காரணம் என்னவெனில், அவர்களுக்குத் தெரிந்த கைத்தொழில்களாகிய படகு கட்டுதல், வெள்ளி வேலை ஆகிய இவைகளில் அரேபியர்களுக்கு ஒன்றுமே தெரியாது.

அவர்களுடைய மதமானது, முன்பு பேபிலோன் பட்டணத்தில் வழங்கிவந்த விக்ரஹாராதனை மதம், கிறிஸ்தவமதம், மகம்மதியர் மதம், யூதமதம் ஆகிய இந்நான்கு மதங்களினுடைய ஒரு விசித்ரமான மிச்ரமாகும். யூத மதத்திலிருந்து அவர்கள் பலிகொடுத்தல், ப்ராயச்சித்தங்கள் செய்தல் ஆகிய இவைகளையும், கிறிஸ்தவ மதத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை வ்ருதம், ஞானஸ்நானம், முதலியவைகளையும், மகம்மதிய மதத்திலிருந்து பலதார விவாகத்தையும், எடுத்துக்கொண்டு அனுஷ்டிக்கிறார்கள். அவர்களுடைய பெரிய மத புஸ்தகத்துக்கு ஸிட்ரா ரபா என்று பெயர். அதில் அவர்களுடைய மத விஸ்தாரங்கள் அடங்கியிருக்கின்றன. அது அநேகம் பெயர்களால் எழுதப்பட்டதெனத் தெரிகிறது. அதனால் அதிலுள்ள கொள்கைகள் ஒன்றுக்கொன்று வித்யாஸமாயிருக்கின்றன. இதர தேசத்தார் அந்தப் புஸ்தகத்தைக் கண்ணால் பார்ப்பதுகூட கஷ்டமாம். அதை அவர்கள் பிறமதஸ்தரிடம் காட்ட ப்ரியப்படுவதில்லையாம். சில வர்ஷங்களுக்குமுன் சில ப்ரயாணிகள் அந்த புஸ்தகத்தின் ஒரு ப்ரதியை வெகு ச்ரமப்பட்டுத் திருடினார்கள். ஆனால் ஸேபியர்கள் அந்தத் திருட்டைக் கண்டுபிடித்து அங்குள்ள கான்ஸல் என்னும் அதிகாரிக்குத் தெரியப்படுத்தவே, புஸ்தகம் அவர்களிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது.

தற்போது ப்ரிட்டிஷ் ம்யூஸியத்தில் அந்தப் புஸ்தகத்தின் ப்ரதியொன்று இருப்பதாகத் தெரியவருகிறது. அதற்கு பூர்த்தியாயிராத ஒரு லத்தீன் மொழி பெயர்ப்பும் அதோடு இருக்கிறதாம்.

1904-ம் வர்ஷத்தில் ஒரு ஐரோப்பியர் அவர்களுடைய குருவின் ஸ்நேஹிதத்தைக் கொண்டு ஒரு புஸ்தகத்தை ஒருவருக்கும் விற்கிறதில்லையென்கிற நிபந்தனையின்மேல் 12-

திருப்பி பவுனுக்கு வாங்கினர். வாங்கின மறுநாள் ஸேபியர்கள் பலர் ஒன்றுகூடி அதைத் திரும்பி படைய வெகு ச்ரமப்பட்டார்கள். இப்போது அந்தப் புஸ்தகம் அமெரிக்காவில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

அவர்களுடைய இன்னொரு புஸ்தகம் ஜீவனைப்பற்றியது. அதின் மூன்றில் இரண்டு பாகம் உயிரோடிருப்பவர்களைப் பற்றியும், மற்றொருபாகம் இறந்தவர்களைப்பற்றியும், ப்ரார்த்தனைகளடங்கியது. கிறிஸ்தவ மதத்தின்படி முதல் மனிதனென்று சொல்லப்படும் ஆதம் என்பவர் இறந்த சரித்ரத்தைப் பற்றியும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதம் அவர்களுடைய பெரிய வித்தர்களில் ஒருவராவர். அவர்களுடைய மூன்றாவது புஸ்தகத்தில் வைதீகர்களுக்கு வேண்டிய பகவத் ஸ்தோத்ரங்கள், கல்யாணச் சடங்கு, ஜோதிஷ சாஸ்த்ரம், ஆசார ப்ரயோகங்கள் இவைகள் அடங்கியிருக்கின்றன.

உலகமானது ஒரு முட்டையிலிருந்து உண்டாயிற்றென்பது அவர்களுடைய கொள்கையாகும். கடவுள் இந்தப் பெரிய முட்டையிலிருந்து ஜீவனை உத்பத்தி செய்ததாகவும், அந்த ஜீவனிலிருந்து ஜீஸஸ் க்ரைஸ்ட் என்ற இன்னொரு ஜீவனுண்டானதாகவும், இந்த பிந்திய ஜீவனானது முந்திய ஜீவனுடைய அதிகாரத்தைக் கவர முயன்றதினால், அது நவக்ரஹங்களில் புதனாக ஏற்பட்டதாகவும் அவர்களுடைய ஸித்தாந்தம். ஆகாயமானது வைரத்துக்கும் அசையாத அவ்வளவு கெட்டியான மிகப் பரிசுத்த ஜல ஸ்வரூபமாயிருப்பதாகவும், அதில் நக்ஷத்ரங்களும், க்ரஹங்களும், பூமியும் ஓடுவதாகவும் அவர்கள் நம்புகிறார்கள். பூமியானது மூன்று பக்கங்களில் கடல்களால் சூழப்பட்டிருக்கிறதாகவும், ஆனால் நாலாவது பக்கத்தில் பச்சை நிறங்கலந்த நீல வர்ணமான ஒரு மலையிருக்கிறதாகவும், அதினுடைய ப்ரதி பிம்பத்தினால் ஆகாயத்துக்கு ஒரு நீலவர்ணம் ஏற்பட்டிருக்கிறதாகவும் அவர்கள் நம்புகிறார்கள். இருட்டுக்கு அரசி அக்னியைக் கல்யாணஞ் செய்துகொண்டு இருபத்துநான்கு பிள்ளைகளைப் பெற்றதாகவும், அவர்களில் 7 பேர்கள், ஸூர்யனுள்பட, ஏழு க்ரஹங்களென்றும், வேறு 12 பேர்கள் 12 ராசிகளென்றும், மற்ற ஐந்து பெயர்களும் யாவரென்று தெரியவில்லையென்றும், அவர்கள் நம்புகிறார்கள். இந்த க்ரஹங்கள் மனுஷர்களுடைய கஷ்டத்துக்காதாரபூதங்களாகும். த்ருவ நக்ஷத்ரம் ஆகாயத்துக்கு வெகு ஸமீபமாதலால், அவர்கள் அதைப் பார்த்துத் தொழுகிறார்கள். அந்த காரணத்தினால் அவர்களுக்கு நக்ஷத்ரங்களைத் தொழுகிறவர்களென்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

அவர்கள் தொழுவதற்கு கோவில்கள் கட்டியிருக்கிறார்கள். அவை இரண்டு அல்லது மூன்று பாதிரிகளிருக்கும்படியாய் அவ்வளவு சிறியனவாயிருக்கின்றன. அவைகளின் வழியாய் மிகச் சிறிய வாய்க்கால்கள் ஓடும்; அவைகளின் பேரிலிருந்துதான் அவர்கள் ஜபம் செய்கிறார்கள். புஸ்தகங்களும் மற்ற ஸாமான்களும் வைத்திருக்கிற ஒரு அலமாரியைத் தவிர, வேறு ஸாமான்கள் அவர்களுடைய கோவிலில்லை. அவர்களுள் ஸ்த்ரீகள், புருஷர்கள் யாரானாலும் பாதிரிகளாயிருக்கலாம்.

குருக்கள்மாரில் பல பிரிவுகளிருக்கின்றன: முதல் முதலில் கீழ்ப்படியிலிருப்பவர்கள் குருக்கள் தொழிலில் சேர்ந்து அதிக காலமாகாமல் அனுபவக் குறைவானவர்கள். இவர்களுக்குப் பிறகு குருக்கள். இவர்களுக்குப் பிறகு பிஷப்புகள். எல்லாருக்கும் மேற்பட்டவர் ச்ரேஷ்ட குரு. தற்போதுள்ள ச்ரேஷ்ட குருவின் பெயர் ஷெய்க் மாஹி. அவர் ஸூகேஷ் ஷியுக் என்னும் ஊரில் இருக்கிறார். இந்தப் பதவிக்கு வருபவர்களுக்கு அங்கத்தில் யாதொரு குற்றமும் இருக்கக்கூடாது. ஆதலால் முக்ய குருவானவர் அழகில் சிறந்தவராயிருப்பது வழக்கம். ஸ்த்ரீகளும் பாதிரிகளாகலாம். ஆனால் அவர்கள் பாதிரிகளையே கல்யாணஞ் செய்துகொள்ளவேண்டும். ஆண்கள் கறுப்பு வஸ்த்ரங்களைத் தரிப்பதும், ஸ்த்ரீகள் நீல வஸ்த்ரங்களை யுடுப்பதும் அவர்களுக்குள் ஆகாது.

ஸேபியர்கள் தங்கள் தலைமயிரை ஒருநாளும் கத்தரித்துக் கொள்ளுகிறதில்லை. அவர்களில் ஆண், பெண் இருபாலாரும் வெகு அழகாயிருப்பார்கள்; இதனால் யாரும் ஸேபியரை எளிதில் கண்டுபிடிக்கலாம்.

அவர்கள் முன்பு துருக்கியர்களால் சேனையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆனால் அவர்கள் மதாசாரப்படி அவர்களை எப்போதும் ஓடுகிற ஜலத்துக்கு ஸமீபத்திலிருக்கும்படி செய்வது அஸாத்யமாயிருந்ததால், அவர்கள் மறுபடியும் சேனையிலிருந்து மன்னிக்கப்பட்டு விலக்கப்பட்டார்கள்.



## SOLA PITH.

### நெட்டி.

நெட்டி என்பது ஒருவகைச்செடி. இது குளங்களிலும், குட்டைகளிலும் சடை சடையாய் மிதந்து கிடக்கும். சில ஸமயங்களில் நஞ்சை நிலங்களின் நீரோடைகளிலும் காணப்படுகிறது.

இது இந்தியா தேசத்தில்தான் காணப்படுகிறது. வங்காளம், பர்மா, அஸ்ஸாம், தென்னிந்தியா ஆகிய இவைகளில் மிகுதியாய் விளைகிறது. இதை ஓரிடத்திலும் ஒழுங்காய் சாகுபடி செய்கிறதாகத் தெரியவில்லை. நவம்பர், டிஸம்பர் மாஸங்களில் இவைகளின் கிளைகளைக் கழித்து நீரிலேயே எறிந்துவிடுவார்கள். இந்தத் தண்டுகளிலுள்ள வித்துக்கள்தான் பிந்திய காலங்களில் முளைத்து, கொடிகளாகின்றன.

பிப்ரவரி, மார்ச்சு மாஸங்களில் இந்த தண்டுகளெல்லாம் முதிர்ந்து விடுகின்றன. தண்டுகள் முதிர்ந்ததற்கு அடையாளமென்னவென்றால், அவைகளின் மேல்பக்கம் சுருங்கியும், நிறம் மாறியும் இருக்கும். மேலும் அவைகளின் நடுவில், மரங்களில் 'புரை' ஓடுகிறதுபோல், புரை ஓடியிருக்கும்.

பாடம் செய்யும் விதம்.

தண்டுகளைக் குளங்களிலிருந்து கொண்டு வந்ததும், நன்றாய் பருமனாயிருக்கிற பாகங்களை ஸுமார், 2, 3 அடி நீள அளவுக்கு நறுக்கி யெடுத்து அவைகளை பல, கட்டுகளாய்க் கட்டி உலர வைப்பார்கள். உலர்ந்ததும், மேல் தோலியை மெதுவாக செதுக்கி விடுவார்கள்.

தோப்பிகள் செய்யும் விதம்.

மாம்பழத்தோலை ஓரிடத்திலிருந்து சீவிக்கொண்டேபோனால் அது கடைசியில் ஒரு தட்டையான ஸரமாய்க் காணப்படும். ஒரு நெட்டித் துண்டையெடுத்து ஒரு மெல்லிய கூர்மையான கத்தியால் ஒரே கனவளவு வரும்படியாய் திருப்பித் திருப்பி செதுக்கிக்கொண்டேபோனால், ஒரு தட்டையான உருவத்தை யடையும். அதேமாதிரி, அந்த வேலையில் பழகினவர்கள், அவைகளிலிருந்து மிகவும் நுட்பமான கனமுடைய தட்டுகள்போல் ஆக்கமுடியும். பிற்பாடு, மரத்தினாலோ அல்லது மண்ணினாலோ செய்யப்பட்ட அச்சுகளின்மேல் நெட்டித் தாள்களை ஒன்றின்மேலொன்றாக ஒட்டிக்கொண்டேபோய் தொப்பி முதலிய வேலைகள் செய்வார்கள். அயோக்ய வேலைக்காரர்கள் நெட்டித்தாள்களுக்கு பதிலாக கடுதாசியை ஒட்டுவதுண்டு. அதனால் தொப்பி அதிக கனமுள்ளதாவதோடு, தலைமேல் போட்டுக்கொண்டால், ஸூர்ய உக்ரத்தை அவ்வளவாகத் தாங்கமுடிவதில்லை.

### உபயோகங்கள்.

தஞ்சாவூர், டாக்கா, மாண்டலே முதலிய ஊர்களில் கெட்டியைக்கொண்டு விதம்விதமான பூக்களும், வர்ணப்பூச் செடிகளும் செய்கிறார்கள்.

கெட்டி ஜலத்தில் மிதக்கும் சக்தியுள்ளதால், தெப்பங்களுக்கு உபயோகப்படுகிறது. கப்பல்களில் ஜனங்களுக்கு லைப்போட் என்னும் ‘பிழைப்புப் படகு’ செய்வதற்கும், நீந்தும்போது போட்டுக்கொள்ளக்கூடிய அங்கிகள் செய்வதற்கும் உபயோகமாகிறது. புட்டிகளை அடைப்பதற்கும் உதவும். பித்ஹாட், பித்டர்பன்களுக்கும், தலையில் அணிந்துகொள்ளும் தாண்டாக்களுக்கும், மாலைகளுக்கும், அநேகவித பொம்மைகளுக்கும் உதவும்.

மேலே சொன்னவைகளுக்கேயல்லாமல் வேறு விதங்களிலும் கெட்டி ப்ரயோஜனப்படும். பல்லக்குகளின் மேல்பக்கங்களுக்கு லைனிங்குக்காகவும், மீன் பிடிப்பதற்கு சிறு கூடைகள் செய்வதற்கும், தூண்டில்களின் நுனியில் கட்டுவதற்கும், தெப்பங்களுக்கும் உதவும். ஏராளமாய் கிடைக்குமிடத்தில் இதைக் குயவன் சூளைக்கு உபயோகப்படுத்தினால், சுட்ட பானைகள் நன்றாயிருக்கின்றனவாம். மேலும் அதைச் சுட்டுக் கரியாக்கின கரி ‘வெடி மருந்து’ செய்வதில் நல்ல ப்ரயோஜனமாகிறதாம். சில ஸமயங்களில் டாக்டர்கள் சிரங்குக்கட்டி ஆபரேஷன் செய்த பிறகு அறுத்தவாயில் ஒரு ம்ருதுவான கெட்டித் துண்டை வைத்து மேலே மருந்து வைத்துக் கட்டுவதுண்டாம். எதற்காகவென்றால், கெட்டி உள்ளிருக்கும் துர் நீரைக் குடித்து, பருத்து வாயைப் பெரிது செய்யுமாம். மேலும் ஸ்த்ரீகள் ஓலை, கமமல் முதலியன போட்டுக்கொள்ள, காதை வளர்ப்பதற்கு கெட்டியைப் போட்டுக்கொண்டு, அதில் ஜலத்தை விட்டு ஊறவைத்துக் கொள்வதுமுண்டு.

---

## METALS.

By S. G. SUBRAMANIAM M.A., L.T.,

## உலோகங்கள்.

(வைகாசி மாஸத்து ஸஞ்சிகையில் 179-ம் பக்கத்தொடர்ச்சி.)

### முலாம் பூசிய உலோகங்கள்.

மேலே கலப்பு உலோகங்களைப்பற்றிச் சொன்னோம். இன்னும், உலோகங்களை ஒன்றோடொன்று சேர வேறே ஒரு உபாயம் செய்வதுண்டு. ஈயம் பூசுகிறவன் பித்தளைப் பாத்ரங்களுக்கு ஈயம் பூசுவதை எல்லாரும் கவனித்திருக்கலாம். பாத்ரங்களை நன்றாய் சுத்தி செய்து, அவைகளை உலையிலிட்டு, கொஞ்சம் வெள்ளீயத் (தகரம்) தையும் நவச்சாரத்தையும் அதற்குள் போட்டு, அவை உருகினதும் கந்தல் துணியை ஒரு பந்துபோல் சுருட்டி, உருகின ஈயப் பாத்ரம் முழுவதும் பரவும்படியாய் தடவுகிறான். இது இருக்கட்டும். ஒரு சிறு பித்தளை முட்டையை எடுத்து நன்றாய் சுத்தஞ்செய்து, ஒரு இரும்புக் கரண்டியில் கொஞ்சம் வெள்ளீயத்தைப் போட்டு உருக வைத்து, அதற்குள் முட்டையை சிறிதுநேரம் இட்டு, பிற்பாடு வெளியே எடுத்துப் பார்த்தால் ஈயம் பூசினதுபோலவே இருக்கும். இந்த மாதிரி பாத்ரங்களுக்கு ஈயம் பூசுவதாயிருந்தால் ஈயம் ரொம்பவும் வேண்டியிருக்குமல்லவா? அதனால்தான் முன் சொன்ன மாதிரி செய்கிறான். இந்த முறையை அனுஸரித்தே அநேக பாத்ர வகைகள் மேல்



நாட்டில் செய்யப்பட்டு இங்கே கடைகளில் வந்து ஏராளமாய் நம்முடைய வீடுகளில் வழங்கிவருகின்றன. முதலாவது, மண் எண்ணெய் வைக்கும் டப்பியை நாம் தகர டப்பி என்று சொன்னாலும், வாஸ்தவத்தில் அது தகரத்தினால் மாத்ரம் ஆனதல்ல. இரும்புத் தகடுகளுக்கு தகரத்தினால் முலாம் பூசி, பிற்பாடு அந்தத் தகடுகளை நானாவித வேலைகளுக்கு உபயோகிக்கிறார்கள். தகரக்கடைகளில் பார்த்தால், பளபளப்பான பெரிய தகடுகளை பெரிய கத்திரிக்கோலால் நறுக்கி, விதம் விதமான ஸாமான்கள் செய்கிறார்கள். அந்தத் தகடுகளெல்லாம் வாஸ்தவத்தில் தகரத்தினால் முலாம் பூசப்பட்ட இரும்புத் தகடுகளேயாம். இவைகள் எப்படிச் செய்யப்படுகின்றனவென்று பார்ப்போம்.

தகரத்தகடுகள் முதல் முதலில் வேண்டிய கனமுள்ள இரும்புத் தகடுகளைக் கொண்டுவருகிறார்கள். அந்தத் தகடுகளில் கொஞ்சங்கூட துருவில்லாமல் நன்றாய் சுத்தம் செய்கிறார்கள். அப்போது அவைகள் மிகவும் பளபளப்பாயிருக்கும். பிற்பாடு ஒரு பெரிய மண் தொட்டியில் தகரத்தைப் போட்டு, தொட்டியை நன்றாய் சுடவைப்பார்கள். தகரம் உருகி நன்றாய்க் கொதிக்க ஆரம்பித்ததும், இரும்புத் தகடுகளை எடுத்து, அதற்குள் சிறிது நேரம் போட்டு, பிற்பாடு வெளியிலெடுத்து ஆறவைப்பார்கள். தகடுகள் எல்லா விடங்களிலும் சுத்தமாயிருந்தால், தகரம் ஸமனாய் மேலே படிந்திருக்கும்.

இதே மாதிரியாகவே துத்தநாகத்தகடுகள் செய்யப்படுகின்றன. அவைகளிலிருந்து வாளி, தொட்டி முதலிய ஜலம் வைத்துக் கொள்ளக்கூடிய ஸாமான்கள் செய்கிறார்கள். இந்தத் தகடுகளினால் செய்த பாத்ரங்களை அடுப்பின்மேல் ஒருபோதும் வைக்கக்கூடாது; வைத்தால் மேலே பூசப்பட்டிருக்கும் துத்தநாகம் எல்லாம் உருகிக்கரைந்து விடும். பின்பு உள்ளிருக்கும் இரும்பு வெளியில் தென்படும். ஆனால், தகரத்தினால் முலாம் பூசப்பட்ட தகடுகளாலான பாத்ரங்களை அடுப்பில் வைத்துக் காய்ச்சலாம். துத்தநாகத்தினால் முலாம் பூசப்பட்ட தகடு ‘கால்வனைஸ்டு அயர்ன்’ என்று சொல்லப்படுகிறது. அதற்கு அர்த்தம் என்னவென்றால், மின்ஸார ப்ரயோகத்தினால் முலாம் பூசப்பட்ட இரும்பு என்பது. ‘கல்வானி’ என்பவர் ப்ரகிருதி சாஸ்த்ரி. மின்ஸார சக்தியை முதல் முதலில் அறிந்தவர். அவருடைய முறையை அனுஸரித்து முலாம்பூசின இரும்புக்கு கால்வனைஸ்ட் அயர்ன் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. வீடுகளில் குழாய்கள் வழியாய் ஜலம் வருகிறது. குழாய்கள் மேலே பார்த்தால் சாம்பல் வர்ணமாயிருக்கிறதல்லவா? இவைகளெல்லாம் மின்ஸார ப்ரயோகத்தினால் மேலேயும் உள்ளேயும் துத்தநாக முலாம் பூசப்பட்ட இரும்புக் குழாய்களாம்.

வீட்டில் இறைமல் தட்டுகளும், கரண்டிகளும், பஞ்சபாத்ரங்களும் வழங்கிவருகின்றன. இவைகளும் முலாம் பூசப்பட்ட இரும்புப் பாத்திரங்களேயாம். இவைகளுக்கு பூசியது உலோக முலாம் அல்ல. வேறு இரண்டொரு தாதுப்பொருள்கள் சேர்த்து உருக்கி மண்ணோடு கலந்து பூசப்பட்டவைகளாகும். பிற்பாடு இவைகளைப்பற்றி விவரிப்போம்.

மேலே சொன்னமாதிரி இரும்பு ஸாமான்களுக்கு மாத்ரம் முலாம் பூசுவானேன்? முலாம் பூசுவதற்கு உபயோகிக்கும் உலோகங்களையே பாத்ரங்களாக செய்யக்கூடாதோ? இது சரியான கேள்விதான். முதலாவது, உலோகங்களுக்கெல்லாம் விலையில் மலிவானது இரும்பே. தகரமும் துத்தநாகமும் விலையுயர்ந்தவை. இரும்பு கெட்டியான உலோகம், ஆகையால் இரும்பு ஸாமான்களெல்லாம் உரப்

பாயிருக்கும். முழுத்தகரத்தினாலாவது துத்தநாகத்தினாலாவது செய்தவைகள் உரப்பாயிருக்கமாட்டா. இரும்பானது ஜலத்தோடும், ப்ராணவாயுவோடும் ஸம்பந்தப்படுகிறபோது துருப்பிடிக்கிறது. ஆகையால் இரும்புப் பாத்ரங்கள் வழங்குவதற்கு ப்ரயோஜனமாகா. இதற்காகத்தான் அவைகளின் மேல் முலாம் பூசி, பிற்பாடு உபயோகிக்கிறார்கள்.

உலோகங்களின் எடை வித்யாஸம்.

உலோகங்களெல்லாம் பளபளப்புள்ளனவென்றும், உருக்கக்கூடியவை என்றும் சொன்னோம். ஒவ்வொன்றும் உருகுவதற்கு வெவ்வேறு உஷ்ண நிலைமை வேண்டியிருக்கிறதென்றும் சொல்லியிருக்கிறோம். ஒரே பருமனுள்ள அநேகம் வகை உலோகத்துண்டுகளை நிறுத்துப் பார்த்தால், ஒன்றொன்றினுடைய கனமும் வெவ்வேறாகக் காணப்படும். மற்றெல்லாவற்றையும்விட ப்ளாடினந்தான் கனமுள்ள உலோகம். அதற்கப்புறம் முறையே, தங்கம், ஈயம், வெள்ளி, செம்பு, இரும்பு, தகரம், துத்தநாகம், அலுமினியம் இவைகளை வைக்கலாம். தங்கம் ஜலத்தைவிட பத்தொன்பது மடங்கு கனமுள்ளது. இரும்பு ஸுமார் ஏழு மடங்கு கனமுள்ளது.

எவை தகடாகும்?

தகடாயடிக்கக்கூடியவை எவை? ஈயச்செம்பு, லோட்டா முதலியவைகளை கடையில் செய்யும்போது பார்த்திருக்கலாம். ஒரு துண்டு ஈயத்தை சுத்தியால் அடிக்க அடிக்க அது நாலாபக்கமும் நீளும். செம்பு, வெள்ளி, தங்கம் இவைகளையும் தகடாக அடிக்கலாம். இரும்பை அப்படி அடிக்கமுடியாது. இரும்புத்துண்டைப்பழுக்கக்காய்ச்சி சம்மட்டியால் கொல்லன் தன் பட்டரையில் அடிப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் வெள்ளி, தங்கத்தைப்போல் அவ்வளவு மெல்லிய தகடாக அடிக்கமுடியாது. உலோகங்களிலெல்லாம் அடிக்க அடிக்க நாலாபக்கமும் நீளக்கூடியது தங்கமே; பதினாயிரத்தில் ஒரு பங்கு அங்குலம் கனமுள்ளதாக தங்கத் தகடு செய்யலாம். அதற்கு தங்கரேக்கு என்று பெயர். அலுமினியம் அதற்கு அடுத்தது. பிற்பாடு தகரம், செம்பு இவைகளைச் சொல்லலாம்.

எவற்றை கம்பியாயிழுக்கலாம்?

எவை கம்பியாயிழுக்கக் கூடியவை? நீங்கள் எல்லாரும் இரும்புக் கம்பி, செம்புக் கம்பி, வெள்ளிக் கம்பி, பொன்கம்பி முதலியவைகளை பார்த்திருக்கிறீர்கள். உலோகங்களை என்ன விதமாய்க் கம்பியாயிழுக்கிறார்கள் என்று கவனிப்போம். தட்டான் பொன் கம்பி, வெள்ளிக்கம்பி இழுக்கும்போது பார்த்ததில்லையா? தங்கத்தை முதல் முதலில் ஒரு சிறு ஸ்லேட் பென்ஸில்போல செய்கிறான். பிற்பாடு அநேக அளவு குறுக்களவு த்வாரங்களுள்ள ஒரு இரும்புச் சட்டத்தை எடுத்துக்கொள்ளுகிறான். தங்கக் குச்சியை எடுத்து அது எந்த த்வாரத்தில் தாராளமாய் செல்லுகிறதென்று பார்த்து, அதற்கு அடுத்தபடி குறுக்களவு குறைவாயுள்ள த்வாரத்தில் குச்சியின் ஒரு நுனியை தட்டிச் செலுத்துகிறான். இப்படிச் செலுத்தி இரும்புச் சட்டத்தை ஒரு இரும்பு இடுக்கியில் வைத்து கெட்டியாய் முடுக்கி செலுத்தப்பட்ட நுனியைப் பிடித்து ஒரு குறட்டால் இழுக்கிறான். அதனால் முன்னிருந்ததைக்காட்டிலும் நீளம் கொஞ்சம் ஜாஸ்தியாகிறது. நீளம் ஜாஸ்தியாகவே குறுக்களவு குறையுமல்லவா? பிற்பாடு இதற்கு அடுத்தபடி சிறியதான குறுக்களவுள்ள த்வாரத்தில் செலுத்தி இழுப்பான். இதே மாதிரி படிப்படியாய் செய்துகொண்டே போனால், பொன் கம்பியை எவ்வளவு நீளம் வேண்டுமானாலும் அவ்வளவு நீளம் இழுக்கலாம். இதே மாதிரிதான பாக்கி உலோகங்களின் கம்பிகளையும் உண்டாக்குகிறார்கள்.



உலோகங்களில் எல்லாவற்றிலும் 'கம்பித்வம்' ஜாஸ்தியாயுள்ளது தங்கமேயாம். ஒரு பவுன் தங்கத்தை அடித்துக் கம்பியாக நீட்டினால் ஸுமார் 360 மைல் தூரமுள்ள கம்பியாக்கலாம். இதற்கு அப்புறம் முறையே வெள்ளி, இரும்பு, செம்பு இவைகளைச் சொல்லலாம். தகரம், ஈயம், துத்தநாகம் இவைகளையும் கம்பியாக இழுக்கலாம். ஆனால் அவைகளை ஸன்னமாய் இழுக்கமுடியாது. மேலும் இவைகளின் கம்பிகள் சீக்ரத்தில் துண்டு துண்டாகிவிடும்.

எஸ். கணபதி ஸுப்ரமண்யம்.

## FIGS.

### சீமை அத்தி.

இதற்கு ஸம்ஸ்க்ருதத்தில் உஞ்ஜீரமென்றும், தெலுங்கிலும் கன்னடத்திலும் அஞ்ஜூர் என்றும், தமிழில் சீமை அத்தி என்றும் பெயர். நாட்டு அத்தியென்று ஒரு வகை அத்தி ஸாதாரணமாக இத்தேசத்தில் எங்கும் இருப்பதால், இந்த கினுஸு அத்திக்கு சீமை அத்தி யென்ற பெயர் வழங்குகிறது.

பூர்வீக சரித்ரம்.

இதை ஆப்கானிஸ்தானம் தேசத்தில் ஏராளமாகப் பயிராக்குகிறார்கள். பூர்வீக காந்தாரமாகிற காண்டஹார் என்னும் ப்ரதேசத்தில் இது தானாகவே வளருகிறது. பழைய ஸம்ஸ்க்ருத வைத்ய நூல்களில் இதற்கு ஸமதாது என்ற பெயர் வழங்கி இருந்தபடியால், இது தேஹத்தை அதிக உஷ்ணமில்லாமலும் அதிக சீதளமில்லாமலும் ஸமநிலைமையில் வைத்திருக்குமென்று ஏற்படுகிறது. இந்த மரத்தைப் பற்றியும் இதன் பழத்தைப் பற்றியும் கிறிஸ்தவ மத க்ரந்தமாகிய பைபிளின் சிலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதாமும் ஏவாளும் இந்த மரத்தின் இலைகளை அணிந்து கொண்டிருந்தார்களாம். ஆகவே இது பூர்வ காலம் முதல் இருந்திருக்கிறதென்று தெரிய வருகிறது.

பயிரிடுவதற்கேற்ற நிலம்.

அதிக செழிப்பில்லாமலும் அடியில் ஈரமில்லாமலும் இருக்கும் எந்த நிலத்திலும் அத்தி பயிராகும். பாறை அல்லது சுண்ணாம்புக்கல் உள்ள நிலங்களில் ரொம்ப செழுமையில்லாமல் ஸாமான்யமாக உள்ள வண்டல் பூமியிலும் செம்மண் பூமியிலும் அத்தி நன்றாய் வளரும். பூமி அதிக வளமுடையதாக இருந்தால், செடி அதிக உயரம் வளர்ந்து தழைத்து, கட்டை பாய்ந்துவிடுகிறதேயொழிய அதிக பலன் கொடுப்பதில்லை. அதற்கு க்ரமமாக நல்ல தண்ணீர்ப் பாய்ச்சல் வேண்டியிருந்தபோதிலும், அதன் அடியில் நீர் தங்காதபடி வடிகால் இருக்கவேண்டும்.

சீதோஷ்ண ஸ்திதி.

உஷ்ணமும் குளிர்ச்சியும் அதிகமாக இராமல் ஸமமாக உள்ள ஸ்மர்னா, பாக்தாத் முதலியவைபோன்ற இடங்களே அத்தி நன்றாக வளருவதற்கு ஏற்றவைகளாகும். மேலான பழங்கள் நமக்கு அவ்விடங்களிலிருந்துதான் கிடைக்கின்றன. நமது ராஜதானியில் ஸமுத்ர மட்டத்திற்குமேல் 1000 அடி முதல் 2000 அடி வரையிலுள்ள பங்களூர், க்ருஷ்ணகிரி, ஹோஸூர், கோயம்புத்தூர் முதலிய இடங்களில் அது நன்றாக வளரக்கூடும். ஆனால் சென்னையில் வேறு இடங்களிலும், அது பயிராக்கப்பட்டு நல்ல பலன் கொடுத்துவருகிறது. கர்நூல், பண்யம், ஸைதாப்பேட்டை முதலிய இடங்களிலும் அதை பயிர் செய்

கிறார்கள். ஆகையால் அதை வைம நிலங்களி லும் பயிராக்கலாமென்று ஏற்படுகிறது.

பரவச் செய்தல்.

விதை விதைத்தாவது, கிளையை வெட்டி வைத்தாவது, பதியம் போட்டாவது அத்திமரம் பயிர் செய்யலாம். கிளைகளை வெட்டி நடுவதே அதிக ஸுலபமானதாக இருக்கிறது. மரங்களில் காய் பழங்கள் இல்லாமலிருக்கும்போது, வைத்துப் பயிராக்க வேண்டிய கிளைகளைத் தெரிந்து வெட்டிவிட வேண்டும். நேராகவும் நெருக்கமான கணுக்களை உடையதாகவும் பருத்த அரும்பை யுடையதாகவுமுள்ள கிளைதான் பயிர் செய்ய ஏற்றது. வெட்டப்பட்ட ஒவ்வொரு துண்டும் 7 அல்லது 8 அங்குல நீளத்திற்கு அதிகப்படாமல் மூன்று கணுக்களை உடையதாக இருக்கவேண்டும். துண்டுகளை நாற்றங்காலிலாவது குழிகளிலாவது நடலாம்; முதலில் நாற்றங்காலில் நடுவதே நலம். நாற்றங்காலில் நடுவதற்கு பதிலாக துண்டுகளைப் பூந்தொட்டிகளிலும் நட்டு வைக்கலாம். தொட்டிகளில் உத்தமமான நொய் மணலை நிரப்பி, துண்டுகளை அவைகளில் சாய்ந்த வாட்டமாக ஒரு கணுவாவது உள்ளே புதைந்திருக்கும்படி நடவேண்டும். அப்படி நட்ட துண்டுகளுக்கு ப்ரதி தினமும் தண்ணீர் விடவேண்டும். தொட்டிகளை நிழலில் வைத்திருக்கவேண்டும். ஒரு மாதத்திற்குள் அந்த துண்டுகள் இலை விடும். ஆனால் 5 அல்லது 6 மாஸம் சென்றபிறகுதான் அவைகளைப் பிடுங்கி அப்பால் நடவேண்டும். துண்டுகளை வெட்டுவதற்கு பிப்ரவரி மாஸமும், செடிகளை ஸ்திரமாக நடுவதற்கு ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாஸங்களும் தகுந்த காலமாகும். நட்ட நாலைந்து மாஸங்களுக்கெல்லாம் பழம் கிடைக்கும்.

நடும் விதம்.

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக நடுகிறார்கள். சில இடங்களில் ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கும் மத்தியில் 9 அடி தூரம் விட்டும், இன்னுஞ் சில இடங்களில் 12 அடி தூரம் விட்டும் செடிகளை நடுகிறார்கள். 9 அல்லது 10 அடி தூரம் விட்டிருப்பதே போதுமானதென்று அனுபோகமுள்ள சிலர் சொல்லுகிறார்கள். இரண்டடி சதுரமும் இரண்டடி ஆழமும் உள்ள குழிகளை வெட்டி, செம்மண், மணல், நன்றாய் மட்கிய எரு முதலியவைகளைக் கலந்து அவைகளில் நிரப்பவேண்டும். எலும்பு எரு அகப்பட்டாலும் போடலாம். இவைகளை நிரப்பித் தண்ணீர் ஊற்றி குழியிலுள்ள எருக்கள் நன்றாய்ப் படிந்த பிறகு, செடியைக் குழியின் மத்தியில் நட்டு, அதற்கு க்ரமமாக தண்ணீர் ஊற்றிவரவேண்டும். நட்ட ஒருவாரம் வரையிலாவது செடிகளுக்கு நிழல் இருக்கவேண்டும். ஒரு ஏகரா நிலத்தில் 300 அல்லது 500 செடிகள் நடலாம்.

எரு வைத்தல்.

அத்தித் தோட்டம் வைத்த பிறகு மாஸத்திற்கு ஒரு முறையாவது செடிகளைச் சுற்றியுள்ள மண்ணைக் கிளறி விடவேண்டும். வர்ஷத்திற்கு இரண்டு முறை, அதாவது ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாஸங்களிலும், பிப்ரவரி மாஸத்திலும், நிலம் முழுவதையும் கொத்தி, களை பிடுங்கி, மரங்களுக்குப் பின்வருமாறு எருவிட வேண்டும். மரத்தைச் சுற்றி ஒன்று அல்லது இரண்டு அடி தூரம் வரையிலுள்ள மண்ணை ஒன்று அல்லது இரண்டு அடி ஆழம் தோண்டியெடுத்து, நார் போலிருக்கும் சிறு வேர்களை வெட்டி, ஒரு வாரத்திற்கு மேற்படாமல் மண்ணை வெயிலில் காயவைக்கவேண்டும். அதன் பிறகு மண்ணையும் எருவையும் கலந்து பள்ளத்தில் நிரப்பி தண்ணீர் பாய்ச்சவேண்டும். இம்மாதிரி செய்வதற்கு வேர் சுபாத்து செய்தல் என்று பெயர். இதை ஸாதாரணமாக எல்லோரும் செய்வது கிடையாது. இம்மாதிரி செய்வதால் பழங்கள் அதிகமாய் உண்டாகுமென்பது அநேகருக்குத் தெரியாது. அத்திக்கு உணவு அதிகம் வேண்டியிருப்பதால், எரு அதிகமாகப் போடவேண்டும். கலப்படமான எரு இட்டால் அது மிகவும் நன்றாக வளருகிறது. செம்மண்ணையும் எருவோடு கலக்கவேண்டும். மணல், செம்மண், தோல் பதனிடுமிடங்களிலிருந்து வரும் கழிவடை வஸ்துக்கள், நன்றாக மக்கிய மலம் முதலியவைகளின் கலப்பு நல்ல எருவாகும். மீன் எருவும் நல்ல எருவென்று சொல்லுகிறார்கள். செத்த ப்ராணிகளை மரத்தின் கீழே புதைத்துவிட்டால், அது மரத்தை நன்றாக வளரச்செய்து பழங்களை அதிகமாக்குகிறது.

தண்ணீர் பாய்ச்சுதல்.

நன்றாக வளர்ந்து பழங்கள் பக்வமாகப் பழுக்கும் வரையில் அத்தி மரங்களுக்கு வெகு ஜாக்ரதையுடன் தண்ணீர் பாய்ச்சவேண்டும். கால நிலைமைக்கும் மண்ணின் தன்மைக்கும் ஏற்றவாறு 3, 6, அல்லது 8 நாளைக்கு ஒரு முறை க்ரமமாக, தண்ணீர் பாய்ச்சவேண்டும். எரு வைத்தவுடன் மரத்திற்கு ஏராளமான தண்ணீர் பாய்ச்சவேண்டும். பழுக்கும் காலத்தில் அதற்குத் தண்ணீர் விசேஷமாக வேண்டியிருப்பதால், ஒரு முறை தண்ணீர் பாய்ச்சத் தவறினால்கூட பழங்களின் தொகை குறைந்து விடுவதோடு, அவை உருவத்தில் சிறுத்துப்போம். அப்படிப்பட்ட பழங்கள் கெட்டியாகவும் ஆகிவிடும். ஆகையால் அத்தியைப் பயிர் செய்பவர்கள் தண்ணீர் பாய்ச்சும் வஸதிகளை ஜாக்ரதையாகத் தேடவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு லாபம் கிடைக்காது.

சுபாத்து செய்தல்.

சிலர் கிளைகளை நறுக்கினால் மரத்தின் வளர்ச்சி கெட்டு அது பட்டுப்போமென்றும், இன்னுஞ் சிலர், வேர்களை நறுக்குதல் மாத்ரம் போதுமென்றும் சொல்லுகிறார்கள். மரம் நன்றாய் காய்க்கவேண்டுமானால், கிளைகளையும் வேர்களையும் சுபாத்து செய்தல் அவச்யமென்று அனுபோகமுள்ள ஒருவர் சொல்லுகிறார். அத்தி மரத்தின் வேர்கள் நல்ல வளர்ச்சியுள்ளவை. வேர்களை ஒன்றுஞ் செய்யாமல் வளரவிட்டால் மரம் நன்றாய்த் தழைத்துக் கட்டை பாய்ந்து விடுகிறது. வேர்களை நன்றாக நறுக்கி அவைகளை அதிக தூரம் போகாமல் கொஞ்ச தூரத்திற்குள்ளேயே வளரும் படி விட்டிருந்தால், புஷ்பங்களும் அரும்புகளும் செம்மையாக வளருகின்றன. அந்தந்த வர்ஷத்தில் விடும் கிளையில்தான் பழம் ஏராளமாக இருக்கும். பழைய கிளைகளில் பழமிருப்பது அபூர்வம். ஆகையால் பழைய கிளைகளை நறுக்கிவிட்டால், வெட்டுப்பட்ட பாகத்தின் கீழுள்ள கணுக்களிலிருந்து புதிய கிளைகள் உண்டாகும். இப்படிச் செய்வதினால் கிளைகள் புதர்போலாகி நல்ல பலன் கொடுக்கின்றன. கிளைகளை நறுக்குவதினால் மரங்களுக்குக் கொஞ்சங்கூட சேதமில்லை. நறுக்கிய கிளைகளைத் துண்டு போட்டு வேறு இடங்களில் நடலாம்.

வ்யாதிகளும் சத்ருக்களும்.

அத்திக்குத் தெலுங்கில் "பூடித ரோகம்" என்று சொல்லப்பட்ட ஒரு பூஞ்சண ஸம்பந்தமான வ்யாதி உண்டாகிறது. அதற்குச் சாம்பல் வ்யாதி என்று அர்த்தம். இந்த வ்யாதியால் பீடிக்கப்பட்ட பழங்கள் கடினமாகவும் சாம்பல் நிறமுள்ளவைகளாகவும் ஆகிவிடுகின்றன. இதற்கு யாதொரு பரிஹாரமும் கண்டு பிடிக்கப்படவில்லை. இதைத் தவிர ஒருவகைப் பூச்சி அடிமரத்தைத் தொளைத்துக்கொண்டே போகிறது. கெரோஸின் எண்ணெயை தொளைகளில் பீச்சினால் பூச்சி

செத்துப்போம். இன்னும், கம்பளிப்பூச்சியைப் போலுள்ள ஒரு புழு இலைகளைத் தின்று விடுவதுண்டு. கெட்டுப்போன இலைகளைப் பறித்துக் கொளுத்தி விடுவதே இதற்குப் பரிஹாரமாகும்.

பக்ஷிகள், அணில்பிள்ளைகள், எலிகள் முதலிய ஐந்துக்கள் பழங்களைத் தின்றுவிடுகின்றன. த்வாரஞ்செய்த தகர மூடிகளால் பழங்களை மூடிவைத்தால் அவைகள் பழங்களை அழிக்கமுடியாது. ஆனால் இம்மாதிரி செய்வதற்கு அதிகப் பணம் செலவாகும். பணச் செலவில்லாமல் செய்யக்கூடியது ஒன்றுண்டு. தாழை ஓலைகளை அடிமரத்திலும் கிளைகளிலும் சுற்றிக் கட்டிவைத்தால், அணில்பிள்ளைகள் மரங்களிலேறி பழத்தைத் தின்னுவதில்லை.

மாஸூல்.

அத்திமரத்தின் வயது 12 அல்லது 15 வர்ஷமென்று சொல்லுகிறார்கள். எரு முதலியவைகள் சரியாகப் போட்டால் அது உயிரோடிருக்கும் வரையிலும் காய்க்கும். வர்ஷத்திற்கு இரண்டு தடவை மாஸூல் கிடைக்கும். ஜூலை - ஸெப்டம்பர் மாஸங்களில் ஒரு முறையும், பிப்ரவரி-மே மாஸங்களில் இன்னொரு முறையும் கிடைக்கும். பழம் நன்றாய்ப் பழுக்க இரண்டு மாஸமாகிறது. நன்றாகப் பாதுகாக்கப்பட்ட ஒரு இளமரம் ஒரு வர்ஷத்தில் 500 பழங்கள் தரக்கூடுமென்று சொல்லுகிறார்கள். மூன்று வயஸு முதல் பத்து வயஸு வரையிலுள்ள மரங்கள்தான் நன்றாய்ப் பழுக்கின்றன. மரத்திற்கு வயஸு ஆக ஆக மாஸூல் குறைந்து விடுகிறது. ஆனால் சில மரங்கள் வயஸாய் விட்ட பிறகுகூட அதிகம் காய்க்கின்றன. நல்ல ஸ்திதியிலுள்ள இளமரங்கள் சில ஸமயங்களில் பழந்தராமல் இருந்துவிடுகின்றன. இதற்குத் தோட்டக்காரனுடைய துரதிர்ஷ்டமே காரணமென்று ஸாதாரணமாய்ச் சொல்லிக்கொண்டாலும், வாஸ்தவமான காரணம் வேறென்று தெரிகிறது. அத்திப் பிஞ்சுகளைப் பருக்கச் செய்யும் வண்டுகள் மரங்களில் இல்லாமையே அதற்குக் காரணமாகும்.

சிலர் 300 மரங்களையுடைய ஒரு ஏகரா அத்தித்தோட்டத்தில் 8 டன் பழங்கள் கிடைக்குமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் அநுபோகமுடைய ஒருவர் ஏகராவுக்கு 3 அல்லது 4 டன்னுக்குமேல் கிடைக்காதென்று சொல்லுகிறார்.

இந்த ராஜ்யத்தில் ஹோஸூர், க்ருஷ்ணகிரி, கோயம்பத்தூர் முதலிய குளிர்ச்சியான இடங்களில் தண்ணீர்பாய்ச்சும் வஸதிகளோடு, நல்ல செம்மண் பூமிகளும் இருக்கிறபடியால், நல்ல பலன் தரக்கூடிய அத்திமரங்களை விசேஷமாக வைத்துப் பயிராக்கலாம். செங்கற்பட்டு ஜில்லாவைப்போன்ற ஸமபூமிகளிலும் அத்தி நன்றாக வளருகிறபடியால் அங்கே அதை வைத்துப்பயிராக்குதல் மிகவும் ஸுலபமாகும். அத்திப் பழம் ஒரு உணவுப் பொருளாக இருக்கிறது. ஆகையால் அதைப் பயிர்செய்து வ்ருத்தி பண்ணினால், அது அநேகருக்கு ஆஹாரமாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 280. | வேதாந்த சாஸ்த்ர ரத்னாவலி ... | 1 | 0 | 0 |
| 183. | ஆர்யசரித்ரம் ... | 1 | 0 | 0 |
| 781. | ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமிகள் கடிதங்கள் ... | 0 | 4 | 0 |
| 598. | போன் பறவை வானவில்லும் புதையல் பணமும் ... | 0 | 1 | 3 |
| 599. | பேரும்புயல், ஸோனுபாய், மர்லினும் விவியனும் ... | 0 | 1 | 3 |
| 600. | நந்தனும் மோஹனங்கியும் ... | 0 | 1 | 3 |
| 805. | அசோகர் சரித்திரம் ... | 0 | 4 | 0 |
| 804. | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். | 0 | 6 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.



## THE REARING OF CHILDREN.

## குழந்தைகளை வளர்த்தல்.

"எத்தனையோ கோயில்களுக்குப்போய், எத்தனையோ குளங்களில் ஸ்நாநம் செய்ததின் பலனாக, மதுரை மீனாட்சி கடாட்சத்தினால், அத்திப்பூ பூத்தாற்போல நமக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தான். பிறந்தது முதற்கொண்டு ஸதா நோயும் கொடியுமாய் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறான். சுச்ரூஷையில் ஏதாவது குறைவுண்டோ? ஒன்றுமில்லையே. பக்கத்து வீட்டுப் பிள்ளையை அதன் தாயார், பாட்டிமார் நம்மைப்போல அவ்வளவு கவனிக்கிறதில்லை. அது எவ்வளவு ஸௌக்யமாயிருக்கிறது. நம் குழந்தை அவஸ்தைப்படுவது நாம் செய்த பாபத்தின் பலன் போலும்" என்று பல தாய்மார்கள் மூச்சுவிட்டு, முகம்வாடி, மிகவும் வருத்தப்படுகிறார்கள். அப்படி வருத்தப்படுவதற்குக் காரணம் அவர்களது குற்றமேயன்றி வேறல்ல. அந்தக் குற்றம் அவர்கள் தெரிந்து, வேண்டுமென்று செய்வதல்ல. குழந்தைகளிடத்தில் அவர்களுக்கு இருக்கும் வாஞ்சையினால் உண்டாகும் குற்றமேயன்றி வேறன்று. தாய்மார்களில் இரண்டு விதம் உண்டு. சில தாய்மார்கள் குழந்தைகளைவிட்டு ஒரு நிமிஷமும் பிரியாமல், ஸதா இரவும் பகலும் கவனித்த வண்ணமாகவே இருப்பார்கள். இப்படியிருப்பது குழந்தைகளுக்கு, பல ஸமயங்களில் அருவருப்பை உண்டாக்கினாலும் உண்டாக்கும். வேறு சில தாய்மார்கள், தங்களுக்கு குழந்தைகளிடத்தில் அதிக ஆசையிருந்தாலும், புத்திசாலித்தனமாய் குழந்தைகளை எந்தெந்த ஸமயத்தில் எப்படி கவனிக்கவேண்டுமோ அப்படி கவனித்து, அவைகளை நல்ல வழியிலும் ஸௌக்யமாயும் வளர்த்து வருகிறார்கள். அவர்கள் செய்யும் எந்தக் கார்யமும் குழந்தையின் தேஹஸௌக்யத்துக்கு அநுகுணமானதாகவேயிருக்கும். அநாவச்யமாய் குழந்தையை எடுத்து சீராட்டுவது கிடையாது.

ஸாதாரணமாக இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அடிக்கடி தேஹ அஸௌகர்யத்தினால் கஷ்டப்படுவதேன்? அதற்கு பின் வருபவைகளே முக்யமான காரணங்கள்.

(1) குழந்தைகளை தனியாயிருக்க விடாமல் ஸதா ஜனங்களோடு இருக்கும்படி விடுவது.

(2) குழந்தைகளை அடிக்கடி எடுப்பதும், கண்டபோதெல்லாம் அவைகளை சிரிக்கச் செய்வதற்காக "கிசு கிசு" செய்வதும்.

(3) அழும் பொழுதெல்லாம் குழந்தைகளுக்கு பால் முதலிய ஆஹாரம் கொடுத்தல்.

(4) ஜனக்கூட்டமுள்ள இடங்களுக்கு குழந்தைகளை எடுத்துப்போதல்.

(5) நல்ல சுத்தகாற்று இல்லாத அறையில் தாய்மார்கள் குழந்தைகளுடனாவது அல்லது குழந்தைகளுக்கு ரொம்ப ஸமீபத்திலாவது படுத்துத் தூங்குதல்.

(6) கண்டபோதெல்லாம் குழந்தைகள் வாயில் முத்தமிடுதல்.

இரண்டு வயது வரையில் குழந்தைகளை அதிக ஜாக்ரதையாய் கவனித்து வரவேண்டும். பெட்டைக்கோழி அடைகாப்பது போல ஸதா குழந்தைகளினிடத்திலேயே யிருந்து 'கண்ணே, துரையே' என்று சொல்லிய வண்ணமாயிருக்கப்படாது. இதனால் குழந்தைகளைக் கவனியாமல் இருக்கவேண்டுமென்பதல்ல. அநாவச்யமாய் குழந்தைகள் அழுதால், அதைக்கவனியாமலிருக்கவேண்டியது முக்யம். அப்படிக்கில்லாமல் "குழந்தை அழுகிறதே, அதை ஓய்ப்படுத்த வேண்டுமே" என்று சொல்லிக்கொண்டு, ஸதா குழந்

தையும் கையுமாயிருந்தால், குழந்தைக்கு பயங்காளித்தனம் அதிகமாய் உண்டாகி பின்னால் அவஸ்தைப்பட நேரிடும். குழந்தைகளைக் கண்டபடி "கிசு கிசு" செய்வதினால் உண்டாகும் தீங்கைத் தாய்மார்கள் கவனிப்பதில்லை. இதனால் குழந்தைகளின் நரம்புகள் கெட்டுப்போகின்றன. அநேக குழந்தைகள் மெலிந்து பலஹீனமாயிருப்பதற்கு அந்தமாதிரி அகாலங்களில் சிரிக்கச்செய்வது தான் காரணமாகும்.

"குழந்தை அழுகிறதே, பால் கொடுத்தால் அழுகை நின்று விடும்" என்று, அநேக தாய்மார்களும், பாட்டிமார்களும், குழந்தை அழும்போதெல்லாம் எதற்காக அழுகிறதென்று தெரிந்துகொள்ளாமல், பால் தருகிறார்கள். அந்த மாதிரி அழும்போதெல்லாம் பால் கொடுப்பது அதிக கெடுதி என்று எத்தனை தடவை சொன்னாலும் அவர்கள் கவனிக்கிறதில்லை.

ஸாதாரணமாக குழந்தைகள் தேகாப்யாஸம் எடுத்துக் கொள்வதற்காக அழும். அதிக தீனி தின்று வயிற்று வலி உண்டாவதாலும் சில குழந்தைகள் அழுவதுண்டு. இதை அறிந்துகொள்ளாமல் சில தாய்மார்கள், சற்று முன்பு தான் பாலூட்டியிருந்தும், மேலும் மேலும் பாலைக் கொடுப்பார்கள். இதனால் குழந்தைக்கு அஜீரணம் தட்டி, மாந்தம் முதலிய வ்யாதிகளால் அது அவஸ்தைப்பட நேரிடுகிறது.

இங்கிலண்டில் சிலபணக்காரத் தாய்மார்கள் தங்களது குழந்தைகளை 'தாதி' மார்களிடத்தில் ஒப்புவித்து வளர்க்கும்படி ஏற்பாடு செய்கிறார்கள். இதைச்சிலர் ஏளனம் செய்வதுண்டு. இந்தப் பணக்காரத் தாய்மார்களுக்கு தங்கள் குழந்தைகளிடத்தில் அதிக அன்பும் ஆசையும் இல்லாததினால்தான் இவர்களுடைய குழந்தைகளை தாதிமார் வளர்க்கிறார்கள் என்று சிலர் நிந்திப்பதுண்டு. அது தப்பபிப்ராயம். பணக்காரர்கள் தங்களது குழந்தைகளுக்குத் தாதிமாரை நியமிப்பதற்குக் காரணம் என்னவென்றால், தாதிமார்கள் குழந்தைகளைவளர்க்க வேண்டிய முறைகளை குழந்தைகளது தாய்மார்களைவிட நன்றாய்க் கற்றிருக்கிறார்கள் என்பதே. குழந்தைகளுக்கு ஆஹாரம் கொடுப்பதிலும், ஸ்நாநம் செய்விப்பதிலும், தூங்கச் செய்வதிலும் தாய்மார்கள் ஒரு குறித்தகாலத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இவர்களது மனம்போனபடியெல்லாம் செய்வதால் தான், குழந்தை நோயினால் அவஸ்தைப் படுகிறது.

குழந்தைகள் நோய் நொடியால் அவஸ்தைப் படாமல், ஸௌக்யமாய் இருக்கவேண்டுமென்றால் தாய்மார்கள் நோயற்றும், ஸந்தோஷமாயும், புத்திசாலித்தனமாயும இருக்க வேண்டியது அத்யாவச்யம்.

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 759. | தத்வ ஞானபோதினி என்னும் அத்வைத மஞ்சா | ... | 0 | 8 | 0 |
| 15௭. | பக்தியோகம் | ... | 0 | 8 | 0 |
| 567. | பிரசிநோத்திர ரத்தினமாலை | ... | 0 | 8 | 0 |
| 616. | ராஜயோகம் | ... | 1 | 0 | 0 |
| 157. | பெற்றோர் ஒழுக்கம் | ... | 1 | 0 | 0 |
| 40௯. | செல்வவிருத்தி விளக்கம் | ... | 1 | 0 | 0 |
| 537. | வானசாஸ்திரம் | ... | 1 | 0 | 0 |
| 655. | மெய்யறிவு | ... | 0 | 8 | 0 |
| 27 | இந்திய கைத்தொழில் முயற்சி | ... | 1 | 0 | 0 |
| 729. | ராஜம் அய்யர் சரிதை | ... | 0 | 8 | 0 |
| 721. | ஒட்டக்கூத்தர், இரட்டையர், படிக்காசுப்புலவர் இவர்கள் சரிதம | ... | 0 | 8 | 0 |
| 576. | பக்திவிளக்கம | ... | 0 | 10 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.



# KAMBAN.

BY. O. SAMPATH.

## கம்பர்.

### இவருடைய பெயர்.

கவி சக்ரவர்த்தி என்று எல்லாரும் கொண்டாடும் இந்தப் புலவரின் உண்மையான பெயர் இன்னதென்று சரியாகத் தெரியவில்லை. இவருக்குக் கம்பர் என்னும் பெயர் வழங்குவதற்கு அநேக காரணங்கள் சொல்லுகிறார்கள். இவரைக் கம்பர் என்றும், கம்பநாடர் என்றும், கம்பநாட்டாழ்வார் என்றும் வழங்கி வந்திருக்கிறார்கள். இவர் சிறு ப்ராயத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது கம்பம் போல் இருந்தமையால் இவருக்குக் கம்பர் என்று பெயர் வைத்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள். இன்னுஞ் சிலர், இவர் தம் உபாத்யாயருடைய கம்பங் கொல்லையைக் காத்து வந்தமையால், இப்பெயர் பெற்றார் என்று சொல்லுகிறார்கள். இவர் காளிங்கராயன் ஸமுகத்திற்கு, கம்பங் கொல்லையைக் காத்திருந்த கம்புடனே போனதைக்கண்டு, அவன் இவரை நோக்கி "இந்தக் கம்பனோ அது செய்தவன்" என்று, தன் குதிரை இறந்ததையும் பிழைத்ததையும்பற்றிக் கேட்க, அந்தப் பெயரையே எல்லாரும் வழங்கிவந்தார்கள் என்று வேறு சிலர் சொல்லுவார்கள். இவருடைய முன்னோர் கம்ப நாட்டில் இருந்தவர்களாகையால் இவருக்குக் கம்பநாடர் என்று பெயர் வழங்கி இருக்கலாம். இவர் விசேஷ ராமபக்தி உடையவராதலால் கம்பநாட்டாழ்வார் என்று பெயர் பெற்றிருக்கலாம்.

### இவர் குலம்.

இவர் க்ஷத்ரிய குலத்தில் பிறந்து ஓச்சன் வீட்டில் வளர்ந்தவர் என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றுஞ் சிலர் திருவழுந்தூரில் உள்ள பிடாரிகோயில் பூசை செய்யும் ஓச்சனுடைய பிள்ளையே இவர் என்று கருதுகிறார்கள். இவர் வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்றும் சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

### இளமையும் கல்விப்பயிற்சியும்.

கம்பர் ஒருவரகவி என்று அநேகர் எண்ணியிருக்கிறார்கள். அவர் காளிவரம் பெற்ற வரலாற்றை எல்லாரும் அறிவார்கள். அவர் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப முதலியாரின் ஆதரவின்கீழ் வளர்ந்து வந்தார். சடையப்ப முதலியாரின் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது, கம்பரும் அவர்களுடைய புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு அவர்களோடு போய் உபாத்யாயரிடம் படித்து வந்தார். ஒரு நாள் அவர் உபாத்யாயருடைய கம்பங் கொல்லையைக் காத்திருந்த ஸமயத்தில் வெயிலின் உக்ரத்தினால் அயர்ந்து நித்ரை போய்விட்டார். அப்பொழுது ஒரு குதிரை கம்பங்கொல்லையில் மேய்வதாகக் கனவுகண்டு, அவர் திடுக்கிட்டு விழித்துக்கொண்டார். அவ்வூரை ஆண்டுவந்த காளிங்க ராயனுடைய குதிரை அங்கே மேய்ந்துகொண்டிருந்தது. கம்பர் அதை எவ்வளவு அதட்டி ஓட்டியும், அது அப்பால் போகவில்லை. அவர் உபாத்யாயர் திட்டுவாரே என்று பயந்து, என்ன செய்வதென்று அறியாமல், அருகாமையிலிருந்த காளிகோயிலுக்குச் சென்று காளிதேவியின் ஸந்நிதானத்தில் புலம்பினார். காளிதேவி அவரிடம் கருணைபுரிந்து பீஜாக்ஷரத்தை அவர் நாக்கில் எழுதினாள். உடனே கம்பர் கம்பங் கொல்லைக்குப்போய் ஒரு பாடலைச் சொன்னார். காளிங்கராயனுடைய குதிரை கீழே விழுந்து இறந்துவிட்டது. உபாத்யாயர் வந்து பார்த்தபொழுது குதிரை இறந்திருந்ததைக் கண்டு காளிங்கராயன் என்ன செய்வானோ என்று பயந்தார். கம்பர்

முன்னைபாடிய பாடலைக் கொஞ்சம் மாற்றிப் பாடவும் குதிரை பிழைத்து எழுந்தது. இவைகளைக் கேள்வியுற்ற காளிங்கராயன் கம்பரை வரவழைத்து அவருடைய ஸாமர்த்யத்தைக்கண்டு ஆச்சர்யமடைந்தான். சோழ ராஜனுகிய குலோத்துங்கன் கம்பருடைய கவிதா ஸாமர்த்யத்தைக் கேள்வியுற்று அவரைத் தன் ஸபைக்கு வரவழைத்துக்கொண்டான்.

கம்பரும் அவர் காலத்துப் புலவரும்.

கம்பர் சோழராஜனுகிய குமாரகுலோத்துங்கன் காலத்தில் புகழ்பெற்றிருந்தார் என்று சிலாசாஸன ஆராய்ச்சி செய்தவர்கள் சொல்லுகிறார்கள். குமார குலோத்துங்கன் கி-பி 1132ஆு முதல் 1162ஆு வரையில் அரசாட்சி செய்தான். ஆகவே கம்பர் 12-ம் நூற்றுண்டில் இருந்தவர் என்று ஏற்படுகிறது. ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர், ஔவையார் ஆகிய மூவரும் கம்பர் காலத்தில் இருந்தவர்கள்.

கம்பரின் கல்வித் திறம்.

"கல்வியில் பெரியவன் கம்பன்" என்பது உலக ப்ரஸித்தம். அவர் காளிதேவியினிடம் வரம் பெற்ற வரலாறு ஒருபக்கம் இருக்க, அவருக்கு அவ்வளவு கல்வித்திறம் உண்டானதற்குத் தகுந்த பயிற்சி இருக்கவேண்டும் என்பது நன்ருக விளங்கும். அவர் 12-வது வயதுமுதல் சங்க நூல்களைச் செவ்வையாய் படித்துவந்தார். அவர் அநேக நூல்களைப்படித்திருந்தபடியால் அவைகளின் ஸாராம்சங்கள் ராமாயணத்தில் அங்கங்கே சிதறிக்கிடக்கின்றன. அவருடைய ராமாயணத்தை அரங்கேற்றிய ஸமயத்தில் அங்குள்ள வித்வான்கள் அவரை நோக்கி ராமாயணம் அவ்வளவு ரஸிப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது, கம்பர் "இதில் என்ன அதிசயம்? நான் அதில் ஒரு அகப்பை அள்ளிக்கொண்டுஇருக்கிறேன்" என்று பதில் சொன்னாராம்.

கம்பர் ராமாயணம் பாடிய வரலாறு.

கம்பரின் கல்வித்திறத்தைக்கண்டு வியந்த சடையப்ப முதலியார் அவரை ஏதாவது ஒரு ப்ரபந்தம் பாடச்செய்ய வேண்டுமென்று நிர்மானித்தார். தான் சொன்னால் கம்பர் காலதாமதம் செய்வார் என்று எண்ணி, அவர் அதைப்பற்றிச் சோழராஜனிடம் தெரிவித்தார். குமார குலோத்துங்கன் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் வரவழைத்து, இருவரும் ராமாயணம் பாடவேண்டும் என்று தெரிவித்தான். ஒட்டக்கூத்தர் உடனே ஆரம்பம் பண்ணி, யுத்தகாண்டம் வரையில் பாடி முடித்தார். அதுவரையில் கம்பர் ஒரு பாடலும் பாடவில்லை. ஆகவே அரசன் அவரை இன்னொரு முறை அழைப்பித்து ராமாயணம் எவ்வளவு பாடி ஆயிற்று என்று கேட்டான். கம்பர் ஏதோ ஒருபடலம் வரையில் பாடி ஆயிற்றென்று சொல்லிவிட்டு, அன்று முதல் நாள் ஒன்றுக்கு 700 பாடலாக 15 நாட்களில் ஆறு காண்டங்களையும் பாடி முடித்தார். கம்பர் ராமாயணம் பாடிய ஸங்கதியைத் தெரிந்துகொண்ட ஒட்டக்கூத்தர், அவர் ராமாயணத்திற்குத் தன்னுடையது ஈடாகாது என்று கருதி எழுதியதைக் கிழிக்க ஆரம்பித்தார். யுத்தகாண்டம் வரையில் கிழித்தாய்விட்டது. அப்பொழுது அவ்வழியே போன கம்பர் ஒட்டக்கூத்தரின் கையைப் பிடித்துக்கொண்டு, உத்தரகாண்டத்தைக் கிழிக்கவேண்டாம் என்று வேண்டிக்கொண்டார். கம்பர் உத்தரகாண்டத்தை தன் ராமாயணத்தில் சேர்த்துக் கொண்டார். அவருடைய ராமாயணம் ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. அரங்கேற்றுவதற்கு முன் ரங்கநாதர் அர்ச்சகர்மீது ஆவிர்ப்பவித்து சடகோபரைப் பற்றிப் பாடும்படி கம்பரிடம் தெரிவித்தருளினர். கம்பர் 'சடகோபரந்தாதி'யைப் பாடினர். பிறகு ராமாயணத்தை அரங்கேற்றினர்கள்.



இவர் பாடிய வேறு நூல்கள்.

ஏரெழுபது, சிலைஎழுபது, திருக்கை வழக்கம், ஸரஸ்வதியந்தாதி முதலியன இவர் பாடிய வேறு நூல்களாகும்.

கம்பரின் கவிதா ஸாமர்த்யம்.

இவர் ஸம்ஸ்க்ருத கவிகளுக்கும், ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய இங்க்லீஷ் கவிகளுக்கும் கொஞ்சமும் பின்வாங்கினவர் இல்லை. கவிபாடுவதில் இவருக்குள்ள ஸாமர்த்யம் ராமாயணத்தைப் படிப்பவர்களுக்கு நன்ருக விளங்கும். ஸமயத்திற்கு ஏற்றபடி பாடல்கள் மிடுக்காகவும் லகுவாகவும் இருக்கின்றன. இங்க்லீஷ் கவிகளும் ஸம்ஸ்க்ருத கவிகளும் உபயோகிப்பதுபோலவே, இருவரும் உத்ப்ரேக்ஷை முதலிய பல அணிகளையும் அங்கங்கே உபயோகித்திருக்கிறார். கம்பராமாயணம் தமிழர்களுக்கு ஒரு விலையற்ற பொக்கிஷம்போல் இருக்கிறபடியால், கம்பருடைய புகழ் இந்த உலகம் உள்ளளவும் நிலைத்திருக்கும் என்பதில் ஸந்தேகமில்லை.

ஒ. ஸம்பத்.

# A FATHER'S AFFECTION.

## பெற்ற மனம் பித்து.

1-ம் அதிகாரம்.

விஷ்ணுபுர மென்ற க்ராமத்தில் ஒரு வீட்டு வாசல் திண்ணையில் இரண்டு ப்ராமணர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அஸ்தமிக்க ஸுமார் இரண்டு - மூன்று நாழிகை இருக்கலாம். சால் போன்ற வயிற்றில் தொப்புளுக்குக் கீழே உடுத்திய வேஷ்டியுடன், கையில் ஒரு விசிறியைப் பிடித்துக் கொண்டு, பர பரவென்று ஒருவர் அவ்விடம் வந்தார். உடனே வந்தவரைப் பார்த்து,

"என்னடா ராமா! வயிறு கீழே விழுந்து விழும்படி விரைக்க விரைக்க ஓடிவருகிறாய்? ஆத்திலே ஏதாவது ஸமாசாரமுண்டோ?" என்றார் சுப்புக்குட்டி ஐயர்.

ராமையர்.—"அண்ணா! என்ன கஷ்டகாலம்! சேஷன் பிள்ளையைக் காணலை. பயல் எங்கேயோ ஓடிப்போயிடுத்தாம். சேஷன் உயிரை விட்டு விடுவேனென்கிறான். அடாடா! அவன் கண்ணெல்லாம் ரத்தப் படலமாய்ப் போச்சு. பார்க்க ஸகிக்கலை. நான் மறப்பயல் அணவீரனைப் பிடிச்சு பாப்பாஞ்சேரிக்கு அனுப்ப ஓடுகிறேன்", என்று சொல்லிமுடிவதற்குள் ராமையர் தலை மறைந்துவிட்டது.

உடனே சுப்புக்குட்டி ஐயர், "ஆ! ஆ!, என்னது!! என்னது!! சேஷன் பிள்ளையா!!! தடிபோல பதினெட்டு வயஸாச்சு. கழுதை போனபடி திரும்பிவரும். சேஷனுக்குப் புத்தியே யில்லை. ஆறு மாஸக் குழந்தை பறிகொடுத்தவன்போலே, ஏன் லபோ, லபோ என்று அடிச்சுக்குறான்!"

நாராயணையர்.—"அண்ணா! பெத்தமனம் பித்து. நீங்கள் என்னவோ சொல்லுகிறீர்கள். பிள்ளையிடத்திலே சேஷனுக்கு என்ன வாஞ்சை தெரியுமோ? உயிரைக்கூட பார்க்க மாட்டான் சேஷன். ஐயோ! அவன் தலையெழுத்து. மத்யானம் சாப்பிட்டது முதல் இந்தப் பயல் எங்கேயோ போய்விட்டானும். பாவம்! தோப்பனுக்கு பிள்ளையிடத்தில் ப்ரியமில்லாமலிருக்குமா?"

சுப்புக்குட்டி ஐயர்—"என்ன விலே நாணு! நீயும் சிறு பிள்ளைபோல் பேசறயே! வயஸா

பதினெட்டு ஆறு டில்லிக்குப் போய் வரு இந்தக் காலத்து கம்பிண்டாட்டிகள். இந்தப் பயல் கிட்டன் படிச்சவன். எங்கேயாவது ரயிலேறிக்கொண்டு போயிருப்பன். போன சுமத்துப் போலே திரும்பி வருவன். ஆனால் வீட்டை விட்டு வெளியில் போவதற்குத் தான் காரணமென்ன?"

நாராயணையர்.—"தகப்பனுேராடு ஏதோ வாக்கு வாதமாம்"

சுப்புக்குட்டி ஐயர்.—"பேஷ்! நன்றாயிருக்கு!! அதுவும் விசேஷந்தான். என்ன சண்டை?"

நாராயணையர்:—"ஒன்றுமில்லை. ஏதோ சாப்பிடறோது 'கிட்டா! நேரே சாப்பிடக் கூடத்தெரியலையே! கோழி பொறுக்கித் தின்னுவதுபோலே தின்கறயே! சாத்தே நேரே பிசிஞ்சு சாப்பிடேன்' இன்னுனும் சேஷன்.'

சு.—"அப்புறம்! பேஷாயிருக்கு! அப்புறம்!!"

நா.—அப்புறமென்ன! படிப்பிலேயும் மேதையில்லை. சாப்பாட்டிலேயும் பிள்ளை மணியாயிருக்கிறு னென்றுனும். பயல் கிட்டன் வயஸுவந்த வனில்லையா? ஆகையினாலே ஏதோ பட படத்து பேசினுனும். 'நாள் தவறாமல் சும்மா கழுவிக் கொண்டிருக்கிறீரே! உமக்கு இஷ்டமில்லையானால் நான் எங்கேயாவது போய்ட்ரே னென்றுனும்'."

சு.—"சரிதான்! சரிதான்! கிட்டனே சொல்லிவிட்டானு! சின்னப்பயல் பயங்காளியாயிருந்தானே! ஏதாவது கேட்டால்கூட பதில் சொல்லத் தெரியாதே! இந்தப் பயலை விரோதிச்சானே சேஷன். நான் என்னவோ சேஷன் கெட்டிக்காரன். குடித்தனம் சரியாய் நடந்து விடுமென்று எண்ணினேன். சரி, போகட்டும். அப்புறஞ் சொல்லு."

நா.—"சொல்லவாவது! போகவாவது! பயலைக் காணலை யென்று சாயங்காலம் தெரிந்தது. ஆனால் சேஷன் கோபத்திலே ஏதோ அந்தப் பயலை கப்பாலே தட்டினுனும்."

சு.—"பார்த்தாயா! எனக்குத் தெரியுமே! சேஷன் குறும்பு பண்ண ஆரம்பிச்சான். பயல் ஓட்டம் பிடிச்சான்."

நா.—"ஏது! அண்ணு! இப்படியெல்லாம் சொல்றேன். கிட்டனுக்கு உண்மையாகவே ஒருத்தரோடுகூட பேசத்தெரியாது. ரொம்ப ஸாது. யாரென்ன சொன்னுலும் பதில் சொல்லாமல் போய்விடுவன். மற்றப் பிள்ளைகளைப்போலே அடாபிடித்தன முண்டா? இந்தப் பயல் எங்கேயாவது போய் பயந்து கொள்ள மாட்டானு! வயது பதினெட்டானுலும் ரயிலேறத் தெரியாதே! அந்தப் பயலிட்டே துட்டுக்கூட இல்லையே! எங்கே கிடந்து திண்டாடறதோ! அதுதான் சேஷன் உருகுறுன். ஐயோ! கஷ்ட காலம்!"

சு.—"நாணு! எனக்குத்தெரியும் சேஷனைப் பத்தி. நீ எனக்குச் சொல்லவேண்டாம். ஊரெல்லாம் குண்டாமண்டி யெழுத்தி ஒருத்தருக்கொருத்தர் ஆகவொட்டாம லடித்து குட்டப் புழுதி யெழுத்தினுன். அவனுக்கு வேணும். தன் இளைய பிள்ளையைக்கூட மெள்ள இன்னொருத்தருக்கு தத்துக்குடுத்தானே! எல்லாம் ரூபாயின்னு போறும். சமத்தா கார்யம் செய்வன். மற்றவரை ஏமாத்துவதில் சேஷன் புலிதான். தானும் இப்போ பத்தயத்தில் அகப்பட்டுக் கொண்டான்."

நா.—"அண்ணு! உங்களுக்கு இது சரியில்லை. புண்பட்ட காயத்தை கோலால் கிண்டிப் பார்க்கிறீர்களே! எரிகிற நெருப்பில் எண்ணெய் விடலாமா? சேஷன் எப்படியானுலும், அவன் கஷ்டப்படுகிறவனல்லவா? மனஸு ஸமாதான அடையவேண்டுமானுல், ஏதாவது அவனை ஆறுதல் சொல்லவேண்டியது ஊருக்குப் பெரியவாளாயிருக்கும் நீங்கள்



செய்ய வேண்டியதல்லவா? சேஷனுத்துக்குப் போய் என்னவென்று பார்ப்போம். வாரும்" என்று சொல்லி சுப்புக்குட்டி கிழவரை மெள்ள எழுப்பி நாராயணையர் நடக்கலானுர்.

2 - ம் அதிகாரம்.

சேஷையரும் நாணுவையரும் அத்தான் அம்மான் சேய்கள். ஆகவே ஒருவருக்கொருவர் மிகவும் ப்ரியமாயிருப்பார்கள். சேஷன் குற்றங்களை அடிக்கடி நாணு எடுத்துக் காட்டுவானென்பது சுப்புக்குட்டி ஐயருக்குத் தெரியும். ஆனால் கஷ்டம் வந்த காலத்தில் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்கக் கூடாதென்று ப்ரியமாயிருப்பார்கள்.

நாணுவையரும் சுப்புக்குட்டி ஐயரும் சேஷையர் வீட்டிற்குள் வந்தார்கள். எங்கு பார்த்தாலும் ஏக தடபுடல்! உள்ளுத்திண்ணை முழுவதும் மறவர்களும் வெள்ளைபாட்களும் கூடிவிட்டார்கள். ரேழியெங்கும் ஊரிலிருக்கும் ப்ராமணர்கள் கூடிவிட்டார்கள். உள்ளே போய் அடுக்குளில்பார்த்தால் அவ்வூர் பெண்கள் பாவரும், நாணி, சேஷி, சிப்பி, முத்து, பாவு, அம்மாக்குட்டி முதலான திவ்ய நாமதாரிகளாய் சேஷ'னும் படைய'ாளைச் சுற்றி சமாசாரம் கேட்கிறார்கள். மற்றுஞ் சிலர் அங்குமிங்கும் பரபரப்பாய் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். சேஷையருக்கு வருத்தம் சகிக்க முடியவில்லை. கோவென்று கத்துகிறார்! அலறுகிறார்! அரற்றுகிறார்! 'அடே! சாமி! உன்னை இனிமே லெப்போடா காண்பேன்! நீ எங்கேயாவது ஓடி ஒளித்துக் கொண்டிருந்தால், ஓடிவந்து விடேன். என்னப்பனே! உன்னை யென்னடா சொன்னேன். ஊருக்கெல்லாம் சாதுவாயிருந்து எனக்குமட்டும் நீ இப்படி இருக்க வேணுமா? என்னய்யா! என் கண்மணி! நீ ஓடிவந்து விடமாட்டாயா? உன்னை எங்கெல்லாமோ தேட ஆள்விட்டேனே! ஒருவரும் 'கண்டேன்' என்று சொல்லவில்லையே! உனக்கு எவ்வளவோ நல்லது செய்யதற்காகவே வீடு தேடி வாசல் தேடி ஸம்பாதிக்கிறேனே! நீ உயிரோடு எங்கேயாவது இருந்தால் போதும், வேறொன்றும் எனக்குவேண்டாம். என்னப்பனே! என் ஸாமி! என் வயிறு எரிய கஷ்டப்படுத்தும்படியாகவா ஓடிவிட்டாய்! என்னுல் சகிக்க முடியவில்லையே! ராமா!" என்று சொல்லிக் கொண்டே மூர்ச்சைபோய் விட்டார். இதே ஸமயத்தில் பானை போன்ற வயிற்றை அங்குமிங்கும் அசைத்துக் கொண்டு விசிறியுங் கையுமாய் ராமையர் ஓடிவந்தார். வந்ததும் "அண்ணு? நாணு வீரனை பாப்பாஞ்சேரிக்கு அனுப்பியிருக்கிறேன். ஆதிமூலத்தை கோடநல்லூருக்கு அனுப்பினேன். கிழக்கே கள்ளிக்குடிக்கு பேச்சிமுத்துவை அனுப்பினேன். வடக்கே ரயில்வே ஸ்டேஷனுக்கு குற்றாலத்தேவன் போயிருக்கான். சடையப்பன், முனியன், பிச்சாண்டி எல்லாரும் இங்கே காத்துக்கொண்டிருக்காள். சீக்ரம் பதில் வந்துவிடும். பயப்படாதேயுங்கள், எல்லாம் சரியாகவே முடியும்" என்று சடசடவென்று மனப்பாடம் பண்ணினவர்போல் ஒப்பித்து விட்டார். சேஷையர் கொஞ்சம் கண்ணை விழித்தார்.

சற்று கேட்டதும் கௌரதுமாய் சேஷையர் "தாசரதே! தயாநிதே! மகா ப்ரபோ! ஜகதீசா! நீதான் ஏழையைக் காப்பாற்றவேணும்" என்று பெருமூச்சுவிட்டார்.

சேஷையருக்கு வயது ஸுமார் 45 இருக்கலாம். இவர்தான் இவ்வூருக்கு க்ராமமுனிஸீப். கூரிய மூக்கும், விசாலமான நெற்றியும், அழகிய முகமும், கம்பீரமான உருவமும், ரஞ்சிதமான வார்த்தையும் சேஷையரே இவ்வூரில் முக்யமானவரென்று தெரியப்படுத்தும். இவர் அங்கம் பத்தரைமாற்றுத்தங்கம்போல் பளபளவென்றிருக்கும். அகன்ற மார்பும், உருண்டையான தோள்களும், நீண்ட கைகளும், சிவந்த

கண்களும், சேஷையருக்கு ஒரு அழகாகவே தோன்றின. தவிர, சேஷையர் நினைத்தபடியே எதையும் ஸாதிக்கும் சக்தியுள்ளவர். ஊரில் ராமாயணம் வாசிக்கவேண்டுமென்றால் சேஷையரையே வாசிக்கச் சொல்லுவார்கள். மதுரமாய்ப் பாடுவார். யாரிடத்தும் அன்பாய்ப் பேசுவார். இவர் அன்பாய் பேசுகிறாரேயென்று, இவர் வலையில் யாராவது சிக்கிக்கொண்டால், அவன் கைமுதல் பறிபோய் விடுமென்பது தெரியாதவர் அவ்வூரிலில்லை. பேசிப்பேசிக் குடியைக்கெடுத்துவிடுவார். தாம் சொல்லுவதாவும் உண்மையென்றும், ந்யாயத்தைவிட்டு விலகவில்லையென்றும், யாவரிடத்தும் வாயடி அடித்து வாதஞ் செய்து, கடைசியில் வெற்றி பெற்றுவிடுவார். என்னே இவர் திறமை! இவர் கோபமாயும் கடுகடுப்பாயும் ஒருபோதும்பேசவேமாட்டார். யார் இவரைப் பார்த்தாலும் கம்பீரபுருஷனென்றே சொல்லுவார்கள். ஆனால் இவர் கம்பீரமெல்லாம் இவர் வீட்டுக் கைப்பெட்டியில் நாள் தவறாது பணம் சேர்க்கும் தன்மையதுதான். இவரைக் கண்டால் யாவரும் ஸ்நேஹம்போலிருப்பார்கள். இவர் தலை மறைந்ததும் "இவனைப்போல் கிராதகனுண்டா? இவனை விரோதித்தாலும் பிசகு" என்று சொல்லிக்கொள்வார்கள். இவரை முகத்துக்குமுன் வைதால்கூட, இவர் கோபியாதவர்போலவே இருந்து ஸமயம் பார்த்து படுகுழி வெட்டி தன்னெதிரியை உள்ளே தள்ளிவிடுவார். இப்படிச்செய்வதில் இவர் ஸாமர்த்யம் கைகண்டது. முதல்முதலில் யாராவது அவரைப் பார்த்துவிட்டால் 'அடடா! என்ன அன்பு! என்ன வாத்ஸல்யம்! என்ன ப்ரியம்! என்று சர்க்கரைப் பாகாய் இளகிவிடும்படி கைச்சியம் பண்ணிவிடுவார். தாய்ப் பொன்னிலும் மாப்பொன் எடுப்பது தட்டார் வழக்கமாம். தன் பந்துக்கள் வீட்டிலிருந்தும் பணம் பறிப்பது சேஷையர் வழக்கம். இவர் செட்டிக்காரத்தனமாய் பணம் பறிப்பதை ஒருவராலும் தடுக்கமுடியாது. இரண்டு பேர்களுக்குள் சண்டை மூட்டிவிட்டு இருவரிடத்திருந்தும் பணம் வாங்கிவிடுவார். இப்படி பணஞ்சேர்த்து ஸம்பாதித்த சொத்து முழுமையும் பயல் கிட்டுவுக்கு என்று வைத்திருந்தார். இன்னுமொருபிள்ளை இவருக்கிருந்தாலும், பணத்தாசையால் மற்றொரு வீட்டில் ஸ்வீகாரமாய் கொடுத்துவிடுவார். பயல் கிட்டுவைக்காணவில்லையென்றவுடன் இவர் மனவருத்தம் ஸகிக்கமுடியவில்லை.

சுப்புக்குட்டி ஐயரும் நாணுவையரும் வீட்டிற்குள் வந்ததும், அவ்விடமிருப்போர் வழியைவிட்டு விலகினார்கள். கூட்டத்தை விலக்கிக்கொண்டு சுப்புக்குட்டி அய்யர் "சேஷா! என்ன விசாரப்படுகிறாயே! போன பயல் ராத்ரி சாப்பிடவரமாட்டானா? இப்பொழுதுதானே அஸ்தமிச்சு நாலுநாழிகையாயிருக்கு" என்று சாந்தப்படுத்தினார்.

சேஷையருக்கு மனதில் பாராங்கல்லை தூக்கிக்கட்டுவதுபோலிருந்தது. "அண்ணா! இதுவரை அஸ்தமிச்சமுன்கூட வெளியில் போக பயப்படுவன். இன்னுமவன் ஆத்துக்கு வரலையே! எனக்கு ஏதோ பயமாய்த்தானிருக்கு. நான் தேடின இடங்களொன்றும் காணவில்லையே."

சுப்பு:—"சேஷா! ஒரு ஸமாசாரம். சாஸ்திரிகள் பிள்ளை மணியனைக் கேட்டயோ? இரண்டு பேரும் எத்தனையோ வருஷங்களாய், இஷ்டமாய் இருந்தார்களே!

சேஷையர்:—"ஆமாம்! யாரடா சடையாண்டி! ஓடிப்போய் கீழ்வீட்டு சின்னப்பனை கூட்டிக்கொண்டுவா" என்று ஆஜ்ஞாபித்தார்.

ஒருவனுக்கு இருவராய் மறவர்கள் ஓட்டம் பிடித்து கீழவீட்டிற்குச் சென்றார்கள். இதற்குள் தேடப்போன ஒருவன் மற்றொரு வேலையாளுடன் வந்தான். இந்தியாபுரத்து மறவன் வந்திருக்கிறானென்று சிலர் ரஹஸ்யம் பேசிக்கொண்டார்கள். அதற்குள் "சாமீ! அடியேன் சின்னச்சாமியை கையாண்டிக் குப்பன் பார்த்தானும். கூட்டியாந்தேன், கேளுங்கோ" என்றான்.

உடனே நாணுவையர் "குப்பா! சின்னப்பனை எங்குபார்த்தாய்? உன்னிடம் என்ன சொன்னார். சீக்ரஞ்சொல்லு" என்று பரபரப்பாய்க் கேட்டார். கைகூப்பின வண்ணமாய் குப்பன் பதில் சொல்ல ஆரம்பித்தான். "அடியேன் சாமி! கிழக்கு நீக்கி சாணாருகுண்டு இருக்கி-ல்-ல—"

நாராயணையர்:—"சரி, இருக்கு சீக்ரஞ் சொல்லு, சாணார்குண்டுக்கென்ன? அங்கே சின்னையனைப் பார்த்தாயா?"

குப்பன்:—"அங்ஙனே கிழவிட்டு அப்பன் காத்தகோது இருக்கில்ல."

நாராயணையா:—"இங்கே பென்ன கதை வளர்க்கவா வந்தாய்? யாரடா? ஆதிமூலம், இந்தப் பயலுக்குபுத்தியிருக்கா இன்னு கேளு."

கு:—"யெசமான் சமூகத்திலே அப்படி உத்தரவு கொடுக்காதெங்கோ. இன்னு சொல விடுதேன்."

நா:—"சொல்லேண்டா, சொல்றேன் சொல்றேன்னால் எத்தனை நாழியாய் காத்திருக்கிறது?

சு:—"நாணு! நீயும் என்ன பறக்கிறாய்? சொல்கிறவனைக்கூடச் சொல்லவிடடாயபோலிருக்கே. அவன் இஷ்டப்படியேதான் சொல்லட்டுமே."

நா:—"இல்லை அண்ணா, இந்தப் பயலைப் பார்த்தா போக்கிரிபோலே தோணறது."

சே:—"நாணு! அவன் ஏதோ சொல்லப் போகிறான் கேளு. கிட்டன் உயிரோடிருக்கானா? இல்லையா! என்றுமட்டும் சொன்னால் போதும" என்று வருத்தத்துடன் மௌனச் சொன்னார்.

கு:—"சின்னச்சாமியை அங்ஙனே எங்கண்ணாலே கண்டேன் சாமி—"

நா:—"எங்கேடா?"

கு:—"கேவிட்டய்யேன் காத்தங்காளிக்கில்லா—அதிங்கிட்டே முனியப்பன் இலவாணியன் கோடிக்காலு—"

நா:—"அடடா—டா எவ்வளவு நேரமடா சீக்ரஞ்சொல்லு."

கு:—"கொடிக்காலிக்குத் தெக்கே நீக்கி, கிணறு நீங்கள் பாததிருப்பீளே—"

நா:—"என்ன! என்ன!! கிணத்தின்பக்கத்திலா கமயனைக் கண்டாய்!"

சே:—"அடா பாபி! என் வயிற்றில் நெருப்பைக் கொட்ட வந்துவிட்டாயே! என்னப் பனே! தாசரதே! என் குடியைக்கெடுத்துவிட்டாயா."

கு:—"அடியேன் சாமி—"

சே:—"போரும், போரும். யாராவது போய் கிணற்றைப்பார்த்து,—ஐயோ! என்னால் சொல்லவும் முடியவில்லையே! நாதழுமபுகிறதே! ஆ!!"

நா:—"என்ன அம்மாஞ்சி, இந்தப் பயல் என்ன சொல்லிவிட்டான். கிணற்றின் பக்கத்தின வழியாய் இவன போயககொண்டிருக்கும்போது, செல்லத்தைப் பார்த்திருப்பன. (நாணுவையர் அத்தான் பிள்ளையைச் செல்லமென்றே கூப்பிடுவது வழக்கம்). இன்னும் கேட்பதற்கு முந்தி அவஸரப்படுகிறாயே." என்று சொலலிவிட்டு திடீரென்று குப்பனைப் பார்த்து "அடே குப்பா! சின்னையனை எங்கே பார்த்தாய்."

கு:—"கிணத்தைச் சுத்தி காரைக்கட்டி இருக்கிலலா, அந்தக் காரைக்கட்டியைப் பிடிச்சுக்கிட்டு இந்த அய்யன்—இருந்தாவ."

சே:—"ஆ! கஷ்டம ஐயோ!! நாணு! இன்னும கேடகவேணுமோ."

நா:—"சீக்ரஞ்சொல்லடா, தடியா, எத்தனை நாழிகை! மடையனைக்கட்டி மாரடிக்கவேண்டிருக்கு—ச்சை."

கு:—"என் பேரிலே, கோவிச்சிக்கிடுதீங்களே சாமி! நான வேணு போறேன சாமி."

நா:—"போக்கிரி! இவ்வளவுபோர் மத்தியிலிருந்து பிழைத்துப்போயுடுவையா? மரியாதையாய் பதில சொனனாலாச்சு. இல்லையோ புளியமிளார்தான்."

கு:—மிகவும் வருத்தத்துடன் தலைகுனிந்த வண்ணமாய "என்ன செய்யச்சொல்லறீங்க சாமி" என்று அழுதவண்ணமாய் சொன்னான்.

நா:—"சரி! அப்புறம் சின்னச்சாமியிடம் நீ பேசினாயா?"

கு:—"பேசிட்டிருந்தேன்—"

நா:—"என்ன பேசினாய்?"

கு:—"எம் சாமி! நினைத்தைக் நினைத்தைப் பாக்றீயளே, வூட்டுக்குப் போவலையா? இன்னேம்' இன்னுகேட்டேன்."

நா:—"சரி, அதற்கு அவர் என்ன சொன்னார்."

கு:—"ஒண்ணும்பேசலே, என்னை முழிச்சுப் பாத்தாரு."

நா:—"நீ அப்புறம் ஏதாவது பதில் சொன்னாயா?"

கு:—"க்ராமமுனிசிப்பு அய்யன் மவன்தாலானே. பொளுது போச்சே சாமி! சீக்கிரம் வூட்டுக்குப்போகை சமின்னேன்"

நா:—"அப்புறம்—"

கு:—"கிழக்கி நீக்கி அய்யன் பூட்டாரு"

நா:—"வேறேதாவது அவரைப்பற்றித் தெரியுமா?"

கு:—"தெரியாது."

நா:—"சரி நீ போகலாம்" என்று சொல்லிவிட்டு நாணுவையர் பெருமூச்சுவிட்டார்.

சேஷையருக்கு ஸப்தநாடியும் அயர்ந்துவிட்டது. நிச்சயமாய் பையனை இழந்தோமென்று எண்ணிவிட்டார்.

### 3-ம் அதிகாரம்.

சுப்புக்குட்டி ஐயருக்குக்கூட சேஷையரைப் பார்த்தவுடன் வருத்தம் வந்துவிட்டது. "சேஷா! உனக்கு இந்தப் பிள்ளை வேண்டாம். இவ்வளவு அசடு நான் பார்த்ததேயில்லை. போனமாஸங்கூட நம்பாத்து கிணத்தங்கரையிலே புஸ்தகத்தை வச்சுட்டு ஊரெல்லாம் தேடும்படி பண்ணின பிள்ளைதானே இது. ஆத்துக்குளிருந்துகொண்டே நம்மை யாவரையும் வெளியில் தேடும்படி பண்ணின பிள்ளைதானே இது. அதுக்குப் புத்தி அவ்வளவுதான். விடிஞ்சாத் தனியே ஆத்துக்கு வந்து சேரும். ஏன் வீணாய் விசாரப்படுகிறாய்? ஏதாவது சாப்பிடு போ" என்றார் சுப்புக்குட்டி ஐயர். உடனே நாணுவையர் "எல்லாத்துக்கும் சாஸ்த்ரிகள் பிள்ளை மணியனைக் கேட்டால தெரிஞ்சுபோம், அவனும் இவனும் ரொம்ப இஷ்டம். ஏதாவது அவனிடம் சொல்லிவிட்டுத்தான் போயிருப்பான்" என்றார்.

ராமையரும் அதுதான் சரியென்றார். சேஷையரும் நீண்ட பெருமூச்சுவிட்டார். மற்ற ப்ராமணர்கள் யாவரும் ஆவலுடன் மணியன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள்.

நம்நேயர்களுக்கு மணியனைப்பற்றிச் சற்று தெரிவிக்கவேண்டியது அவசியம். மணியனென்பவன் கிட்டனுடன் படிக்கும் வாலிபன். இவனுக்குவயது ஸுமார்பதினெட்டு இருக்கலாம். கிட்டன் கீழ் வகுப்பில் படிக்கும்பொழுதே மணியன் பெரிய வகுப்பில் படித்தானாம். எட்டாவதுவகுப்பு வந்தவுடன் இருவரும் ஒரே வகுப்பில் படித்தார்களாம். இரண்டு பேர்களும் அதுமுதல் இஷ்டமாயிருந்தார்களென்று ஊராருக்குத் தெரியும். மணியனுக்கு ஊர்ப்பிள்ளைகளெல்லாம் இஷ்டம். யாரைக்கண்டாலும் சேர்க்காளியாகக் கொள்வான். மணியன் வேலையைச் செய்வதற்கு வேலையாட்கள் ஊர்பிள்ளைகள். புதிதாய் பக்ஷணம் எந்த வீட்டிலாவது பண்ணினால் முதல் பூஜை மணியன் வயிற்றுக்குத்தான். முறுக்குப் பண்ண ஏதாவது ஒரு வீட்டில் ப்ரயத்தனம் பண்ணினால் அதற்கு முதல் நாளே மணியனுக்கு நோட்டீஸ் வந்துவிடும். ஆகவே, எண்ணெயில் பண்ணும் முறுக்கு வேகுவதற்குள், வேகாத முறுக்கென்ற பெயரோடு நாலைந்து மணியன் வயிற்றுக்குள் போய்விடும். இதற்குக் காரணம் அவ்வூர் சிறுவர்களே. மணியனுக்குமுறுக்குக்கொடாவிட்டால் அவன் விளையாடக் கூட்டிக்கொள்ளமாட்டான். ஸ்ரீ ஜயந்திக்கு எண்ணெயெடுக்கப்போகும்பொழுது மணியன் பின்னால் குறைந்தது நாற்பது பிள்ளைகள் போவார்கள். கண்விழிப்பதற்கென்று பிள்ளைகளெல்லாம் ஒரு வீட்டில் கூடுவார்கள். என்ன சிபார்சு பண்ணினாலும், பக்ஷணம் கொடாத பிள்ளைகளை மணியன் விளையாடச் சேர்த்துக் கொள்ளமாட்டான். ராஜா, மந்த்ரி, தலையாரி வேஷமெல்லாம் ஊர்பிள்ளைகளுக்குப் போட்டுவிடுவான். சப்பரங்கட்டி ஸ்வாமி எழுந்தருளப் பண்ணி, ஊர்ப்பிள்ளைகளை தாஸிவேஷம் போட்டு ஆடச்செய்வான். மணியன் ப்ரதாபம் இவ்வளவா? சொல்லச் சொல்லத் தொலையாது. குட்டையிலிருக்கும் பாம்புகளில் முக்கால் பங்கு மணியன கொன்ற பாம்புகளாயிருக்கும். தவளைகளையும் பாம்புகளையும் சேர்த்துக் கட்டி ஒன்றையொன்று கொல்லமுடியாமல் வேடிக்கை பார்ப்பான். கோலி ஆடுவதில் மணியன்



ராப்புலி. இவன் முட்டடித்தால் விழி பெயர்ந்துவிடும். ஆகவே, மணியனை யார் விரோதித்தார்களோ, அந்தப் பையன்களின் முழிகள் பெயர்ந்துவிழவேண்டியதுதான். மணியனைக் கண்டால் அவ்வூர் பெரியவர்களுக்கே பயம். கிட்டிப்புல் ஆடுவதில் மணியனுக்கு நிகர் ஒருவரும் இல்லை. மணியன் வயதுவந்த பிள்ளையாகையால், சிறுபிள்ளைகளுக்கு ராஜாபோல் தோன்றுவான். பிள்ளையார் பந்து அடித்தால் அடிபொறுக்கமாட்டாமல் சுருண்டு விழும் பிள்ளைகளுக்குக் கணக்கில்லை. இவ்வளவு கோரமாயிருந்தும் இவனைச்சுற்றியே பிள்ளைகள் போவார்கள். ஏனென்றால் மணியனிடத்தில் இஷ்டம் பிடித்துவிட்டால் வேறு யாரும் அந்தப் பையனைத் தொடமாட்டார்கள். உபாத்யாயருக்கும் மணியனுக்கும் எப்பொழுதும் சண்டைதான். மணியன் தடிப்பயலென்று உபாத்யாயர் அவனைச் சட்டாம்பிள்ளையாக்கிவிட்டார். அதுமுதல் மணியனைக் கண்டால் பிள்ளைகளுக்கு ஸிம்ம ஸ்வப்னந்தான். பாடம் படியாத பிள்ளைகளே கிடையாது. மணியனுக்குத் தன் பாடத்தின்மேல் கவனமில்லை. ஆனால் மற்றவர்கள் பாடம் ஒப்பியாவிட்டால் தகுந்த தண்டனை போட்டுவிடுவான். இவ்வளவு கீர்த்தி பெற்றவனாயிருந்தும், ஒருதடவையாவது அந்யாயச் சண்டைக்கு மணியன் போகமாட்டான். எப்பொழுதும் ந்யாயத்தையே செய்வான். தன்னை எதிர்த்தால் ந்யாயம் அந்யாயம் என்பதை மறந்து தண்டித்துவிடுவான். மற்றவர்கள் விஷயத்தில் ந்யாயத்தின்படியே தீர்ப்புச் செய்வான். ஆகையினால் தான் யாருக்கும் அவனிடத்தில் ப்ரியம்.

சிறு பிள்ளையாயிருக்கும்பொழுது முன் சொன்ன விமர்சைகளையுடைய மணியன் இப்பொழுது இங்லீஷ் பள்ளிக்கூடத்தில் சேர்ந்துவிட்டான். என்றாலும் முன்போலவே, அநேக வர்ஷங்கள் ஒரே வகுப்பில் படிக்கும்படியான பாத்யதையுடையவனாயிருந்தான். வாலிபப் பருவத்திலேயும், முன்போலவே இவனுக்கு அநேக ஸ்நேஹிதர்கள் உண்டு. இவர்களில் கிட்டனொருவன். ஆகவே மணியன் வரப்போகிறானென்றவுடன் யாவரும் ஆவலுடன் வாசலையே பார்த்திருந்தார்கள்.

மணியன் உள்ளே வந்ததும் எல்லாரும் அதிசயமான ஸமாசாரம் கேட்பவர்கள்போல் தயாராயிருந்தார்கள். ஒருவர் தம் பொடிடப்பியைத் தட்டி கையில் ஒரு சிட்டிகை யெடுத்து, ஒரு மூக்கில் மட்டும் உறிஞ்சி விட்டார். மற்றவர் தன மேலுத்தரியத்தை முழங்காலில் கட்டிவிட்டு, கையையும் அப்படியே சேர்த்துக் கட்டிவிட்டு மணியன் முகத்தை உற்று நோக்கினார். இன்னுமொருவர் ஆ வென்றவாயைப் பிளந்துகொண்டு கண்ணை இமை கொட்டாது மணியனையே பார்த்துக் கொண்டிருந்தார். மற்றொருவர் மணியன் பக்கத்தில் நகர்ந்து உட்கார்ந்தார். ஒரு மூலையில் தனியேயிருந்த செவிட்டுக் கிழவர்கூட கொட்டாவிவிட்டு, தம் விரலால் சுடக்குப் போட்டுக் கொண்டே, தன் முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தார். இப்படி ரேழியில யாவரும் ஆவலாயிருக்க, உள் திண்ணையில் மறவர்கள் ஒருவரையொருவர் நெருக்கிக்கொண்டு முகத்தை மட்டும் ரேழிக்குள் நீட்டினார்கள். யாராவது இந்த ஸமயத்தில் படம் பிடித்தால் ஸுமார் பதினைந்து முகங்களுக்குக் குறையாமல் மேலும்கீழுமாய் உள் திண்ணைக்கும் ரேழிக்கும் இடையிலுள்ள வாசலில் கூடியிருப்பதைப் பார்க்கலாம். மற்றொரு பக்கத்தில் சேஷியும் சிப்பியும, மற்றவர்களும் ஒருவரையொருவர் நெருக்கித் தள்ளுவது பார்க்கப் பார்க்க ஆநந்தமாயிருக்கும்.

தன்னைச் சுற்றி முற்றும் பார்த்தான் மணியன். இத்தனை பெயர்கள் எவ்விஷயத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்களென்று அறிந்தான். இவர்களை ஆறுதல் செய்ய வேண்டியது தனனுடைய கடமை யென்று அவனுக்கு தோன்றிற்று. ஆனால் அதற்காக பொய் சொல்லவும் அவனுக்கு ப்ரியமில்லை. தைர்யமாய் பதில் சொல்லத் தயாராயிருந்தான் வாலிபன்.

சுப்புக்குட்டி ஐயர்.—"மணியா! என்னப்பனே! இங்கேவா, இப்படியுட்காரு. கிட்டன் உங்கிட்டே ஏதாவது சொல்லிண்டு போனானோடா? சொல்லு"

மணியன்.—"பெரியப்பா! இரண்டு நாட்களுக்குமுன்பு கிட்டன் எங்காத்துக்கு வந்திருந்தான. அப்பொழுது தான நான் கேட்டேன். தன தகப்பனரிடம் ஏதோ தான் வருத்தப் படுவதாகச் சொன்னான்."

சு.—"சொன்னானே! பேஷ்!! அந்தப் பயல் இஷ்டனிடத்தில தானே சொல்லுவன். அப்புறம்—"

ம.—"இதற்காக வருத்தப்படாதே. இன்றைக்குக் குத்தஞ்சொன்னால், நாளைக்கு இஷ்டமாயிருப்பவரும் தகப்பனர் தானே என்று நான் சொன்னேன்."

சேஷையர்:—"என்னப்பனே, மணியா. நீ நல்ல பிள்ளை. நன்ருய்ச் சொன்னாய்! மணியா! கிட்டன் என்னடா பதில் சொன்னன்?"

ம.—"அடிக்கடி என்னையவர் 'பரிசிபெடுக்கிறர்.' ஒரு குற்றமு மில்லாதிருக்கும்போது கூட குற்றஞ் சொல்லுகிறர். நான் பரீக்ஷைக்குப் போகாதது என்பேரில் குற்றமாம். எப்படியாவது குற்றஞ் சொல்கிறர். புஸ்தகமெடுத்துப் படித்தால் 'புத்திகெட்ட பயலுக்குப்படிப்பென்ன! மேதையில்லை. வீட்டிறகுள் தான் படிப்பெல்லாம்' என்கிறர். படியாமலிருந்தால் 'புஸ்தகத்தைக் கையால் தொட்டால் படிப்பு வந்துவிடும், தொட்டுவிடாதே. தனக்காகப் புத்திவேண்டாமோ? இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு எவ்வளவு மேதை வேணும்! உனக்கு ஸம்ஸ்க்ருதத்திலாவது மேதையிருக்கலாமென்று நினைத்தேன். அதுவுமில்லை' என்கிறர். இபபடியெல்லாம் சொல்லிச் சொல்லிப் புண்படுத்துகிறர். நான் எங்கேயாவது ஓடி விடலாமா என்று யோஜிக்கிறேன். மணியா என்ன செய்கிறது? சொல்லு' என்று சொனனன்."

நாணுவையர்:—"பார்த்தீர்களா! நான் அப்பொழுதே சொன்னேனே. மணியனைக் கேட்டால் தெரியுமென்று சொல்ல வில்லையா? எல்லாம் ஸவிஸ்தாரமாய் சொல்லியிருக்கிறன் கிட்டன்."

ராமையர்.—"மணியா! இத்தனை நாளாய் இதையெல்லாம் சொல்லாமலிருக்கலாமா? இப்போ கிட்டனைக் காணலை யென்றல்லவோ உன்னைக் கூப்பிட்டோம். ஆனல் இப்போதாவது சொன்னயே நன்னச்சு, அப்புறம்."

சு.—"என்ன விலே நாணு, மணியன்தான் சொல்லி முடிக்கட்டுமே! ராமா! உனக்குத்தான் இன்ன ஸமயத்தில் இன்னது கேட்கணும் இன்னு தெரியாது. தடிபோலே வயஸாச்சே. சரி போகட்டும். மணியா! இன்னுமென்ன சொன்னன் கிட்டன்."

ம.—"வேறென்றும் சொல்லவில்லை."

சு.—"அடே ராமா! உன்பாடு உங்கண்ணு பாடு. எனக்கேன் வேணும். இதோபாரு. மணியன் சொல்லக்கூட மாட்டேனென்கிறன். இப்போ என்ன செய்வாய்?"

சேஷையர்.—"மணியா! என்னப்பனே! இப்படி வாடா. என் பக்கத்திலுட்காரு. என் ஐயா, இங்கே வா. எங்கிட்டேமட்டும் சொல்லு. அவனெங்கே போயிருப்பனென்று நினைக்கிறய்? மறுபடியும் பள்ளிக்கூடத்திற்கு போயிருப்பானு? யாராவது ஸ்நேஹிதர்கள் வீட்டுக்குப் போயிருப்பானு? என்னப்பனே! சக்கரைக்குட்டி யல்லவோ நீ. மணியன் கெட்டிக்காரன்" என்று தட்டிக் கொடுத்தார்.

உடனே மணியன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். "இந்தப் பாச்சா இங்கே பலிக்காதே! ஏது! தட்டிக் கொடுக்கிறர். சிறு பிள்ளைக்கு வாழைப் பழங்கொடுத்து ஏமாத்துகிறரோ! சரிதான். என்ன வானலும் இனிமேல் சொல்வதற்கு என்ன இருக்கு. 'இனிமேல் கட்டாயப்படுத்தினல் பொய்தான் சொல்லவேணும். வேறுதப்ப வழியில்லை' என்று ஆலோசிக்குமளவில், சுப்புக்குட்டி ஐயர், "ராமா! கிழக்கே போன மறவனுவது வந்தானு பாரு. சீக்ரம்போ" என்றர். ராமையரும் தன் தொப்பை வயிற்றைத் தூக்க மாட்டாமல் மெள்ள மெள்ள அலைந்துகொண்டு விசிறியைக் கையிலெடுத்துக் கொண்டு புறப்பட்டார். (கனத்த சரீரமாதலால் ராமையருக்கு அடிக்கடி வியர்க்குமாம். ஆகையால் விசிறியில்லாமல் புறப்படவே மாட்டார்).

ராமையா வெளியே போனதும் சுப்புக்குட்டி ஐயர், "மணியா! ராமன் போய் விட்டான். அவன் குறும்புக்காரன். ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பன். கிட்டன் ஓடிப்போவனென்று உனக்குத் திட்டமாய்த் தெரியுமா? தெரிஞ்சால் தானே நீ சொல்ல முடியும். சும்மா விளையாட்டுக்குக் கூட கிட்டன் சொன்னனோ என்று நீ நினைத்திருக்கலாம். சரி போகட்டும். கிட்டன் அப்புறம் என்னதான் சொன்னன்" என்றர்.

ம.—"பெரியப்பா! இதிலென்ன வஞ்சகமா? ராமண்ணு சொன்னதற்காக எனக்குக் கோபமேயில்லை. எனக்குத் தெரிஞ்சால் கட்டாயஞ் சொல்லியிருப்பேன்."

சேஷையர்.—"நீயாகவாவது யோஜனை பண்ணிச் சொல்லேன். அவன் எங்கேதான் போயிருப்பன்."

ம.—"சத்ரத்தில் பார்த்தீர்களோ?"



சே.—"பிச்சாண்டி போய் பார்த்தாச்சு. அங்கேயில்லை."

ம.—"ரயில்வே ஸ்டேஷனில் விசாரித்தீர்களோ?"

சே.—"ஸாயந்த்ர ரயிலில் இவனைப்போலே ஆளே இல்லையாம். நம்பூர் வண்டிக்காரன்கூட பார்க்கவில்லையாம்."

ம.—"கோவிலில் பார்த்தீர்களோ?"

சே.—"அங்கேயு மில்லை. முனியன் போனவன் திரும்பவந்து விட்டான்."

ம.—"சந்தை மடம் பார்த்தாச்சோ?"

சே.—"இந்த இருட்டில் திருடர்கள்கூட போகமாட்டார்களே. இருட்டில் சிறக்கக் கூட பயப்படும் கிட்டனு அங்கே போயிருக்கப் போறன்?

ம.—"அப்படிச் சொல்லப்படாது. எதற்கும் பார்த்துவிட்டு வருவது நல்லது."

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அணவீரன் ஓடி வந்து தொப்பென மறவர்கள் கூட்டத்திற்குள் விழுந்தான். இரவு 12-மணிக்கு அதாவது நள்ளிருளில், பேய் பிசாசுகள் வருவதுபோல், தலைவிரிகோலமாய் அணவீரன் வந்து விழுந்ததைப் பார்த்ததும் யாவருக்கும் பயம் பிடித்தது. அணவீரன் அவ்வூருக்குள் தைர்யசாலியான மறவன். இவன் இப்படி விழவே பக்கத்திலிருந்த மறவர்கள் அவனைத் தூக்கி நிறுத்தி "அணவீர! அண்ணே! என்னடா இது" என்று கூவினர்கள். அணவீரன் கண்ணை விழித்து "எசமான் காப்பாத்தணும். கள்ளப்பயல் கூட்டம் முப்பது, நாற்பது இருக்கும். தீவட்டிக் கொள்ளை போட்டு கினர் வைக்கப் படப்பெல்லாம் கொளுத்தி வீட்டிலே கொள்ளை போட்டிண்டு போறங்கோ. எங்கண்ணலே பாத்துக்கிட்டு ஓடியாந்தேன் சாமீ."

உடனே சேஷையர் "கொள்ளையுங் கூடவா. நன்ருயிருக்கு. விசேஷந்தான். எங்கே இவர்களைப் பார்த்தாய்?" என்றர்.

அணவீரன்:—"சந்தை மடத்தைச் சுத்திக் கிட்டிருக் காங்கோ. சின்னச்சாமியை அங்கனே காணகவேயில்லை சாமி. சாமி! நம்பூரிலேயும் வந்தாக்கி, எசமாங்க அல்லாரும் எங்கமறப் பிள்ளையளை அனுப்பிச் சுடுங்க. ஒருகை பார்த்துடரோம் சாமி. வெளியிலிருந்து பாத்தாக்கி அன்னு தெக்கி நீக்கித் தெரியுதே வெளிச்சம். இந்தப் பசங்கதான் சாமி."

சே.—"இன்றிரவில் தூக்கமேது! தீவட்டிக் கொள்ளையும் ஊரில் நடந்தால் விசேஷந்தான். அடே! அணவீரா! ஊரில்போய் எல்லாரையும் வீட்டிற்குள் பத்ரமாய்த் தூங்கச் சொல்லு. கொள்ளைக் கூட்டம் வந்திருக்கு. கதவைச் சாத்தி பூட்டி விட்டுப் படுக்கச் சொல்லு வீடுவீடாய் சொல்லி விட்டுவா" என்றர்.

விஷ்ணுபுரத்தின் பக்கத்தில் காடு ஒன்றுண்டு. இந்தக் காட்டில் எங்கு பார்த்தாலும் பனை மரங்கள் நிறைந்தும். பேய் பிசாசுகளுக்கு கல்யாணம் நடக்கும் ஸமயத்தில் புச்சைக் குடைகள் பிடித்திருப்பதுபோலும், கறுத்தக் கால்கள் நாட்டியிருப்பதுபோலும், இப்பனை மரங்கள் இருக்கும். இவைகளின் கூட்டத்திற்கு பெயர் 'பனங்குடல்' என்று சொல்வது வழக்கம். இப்பனங்குடல்களில் தான் பெரிய கள்ளக் கூட்டத்தார் தங்குவது வழக்கம். கொள்ளை யடித்த ஸொத்துக்களை பங்கு போடுவதுவழக்கம். நடு ராத்திரி கொலைகள் நடப்பதும் வழிப்பறி நடப்பதும் இங்கே தான். பணம் பறிப்பதும் இங்கேதான். சூதாடுவதும் இங்கேதான். கள் குடிப்பதும் இங்கேதான். மறவர்கள் கூத்தாடுவதும் இங்கேதான். இவ்விடத்தின் மத்தியில் சந்தை மடமென்று ஒன்று உண்டு. பனைமர மில்லாத இடங்களில் அகன்ற செம்மண் வெளிகள் உண்டு. இவைகளில் நரி ஊளையிடும். எப்பொழுதும் பயங்கரமாயிருக்கும். இக்காடுகளிலேயே மறவர்களும் களவர்களும் சண்டையிடுவார்கள்.

விஷ்ணுபுரத்தில் களவு நடப்பது அபூர்வம். ஏனெனில் க்ராம முன்ஸீப் எப்படியாவது திருட்டைக் கண்டுபிடித்து விடுவாரென்ற பயம் கள்வர்களுக்கு உண்டு. மேலும் அவ்வூர் மறவர்களும் கொள்ளை யடிப்பவர்கள். கொள்ளைக்குப் பதில் கொள்ளை அடிப்பவர்களைக் கண்டால் பயந்தானே? ஆகையால் பெரிய கொலைகளைத் தவிர, வேறு சிறு கொள்ளைகள் இவ்விடம் நடப்பதில்லை. மேலும் அயல் கொள்ளைக்காரர்கள் வந்தால், இவ்வூர் க்ராம முன்ஸீப்புக்கும் பிடி போட்டுவிட்டுப் போவது வழக்கம். அல்லது இவருக்கு ஏதாவது நன்மை செய்துவிட்டுப்போவது வழக்கம்.

இது நிற்க. சேஷையருக்கு பயமும் வருத்தமும் அதிகமாகிவிட்டது. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும், என்றபடி

கொள்ளைக்காரர்களும் தம்மையே காவேவார்களோ என்ற பயம் ஒரு பக்கம். பையனைக் காணவில்லையே என்ற வருத்தம் மற்றொரு பக்கம். இப்படி இரவு முழுவதையும் கழித்தார்.

மறுநாட்காலை இவருக்கு வருத்தம் அதிகரித்துவிட்டது. உடனே பத்துப் பதினைந்து பாதாளக் கரண்டிகள் ஸம்பாதித்து ஊரிலிருக்கும் கிணறுகளையெல்லாம் பரிசோதிக்கலானார்கள். அதிமூலமே கொடிக்கால் பக்கத்திலிருக்கும் கிணற்றுக்குள் விழுந்து முக்குளிபோட்டுப் பார்த்து ஒன்றும் அகப்படவில்லை. அழுகிப்போன வாழைதார்கள் மட்டும் அகப்பட்டன. இவைகள் கொடிக்காலிலிருந்து விழுந்தனவேயன்றி வேறொன்றுமில்லை. சலவைக்காரர்கள் அநேகர் மற்றுமுள்ள கிணறுகளில் இறங்கி, கிணறுகளெல்லாவற்றையும் சேறுக்கிவிட்டார்கள். குட்டைகள் குளங்களெல்லாம் ஒரே சேறாய்க் குழம்பிவிட்டன. ஆனால் கிட்டனை ஒன்றிலாவது காணவில்லை. பாக்கியிருந்த சில வீட்டுக் கிணறுகளும் மத்யானம் ஒரு மணிக்குள் பார்க்கப்பட்டன. என்ன செய்தும் பலனில்லை.

பாவம்! சேஷையர் முன்னிரவுகூட சாப்பிடவில்லை. அன்று காலையிலும் காபி சாப்பிடவில்லை. மத்யானம் சாப்பிட வேண்டாமென்று விட்டார். யாரென்ன சொல்லியும் பிள்ளையை இழந்துவிட்டதாகவே யெண்ணினார். இவர் ஏங்கியே உயிரை விடுவாரோவென்று அநேகர் பயந்தார்கள். சேஷையர் கீழே புரண்டதனால், அவர்மேலெல்லாம் புழுதியாய்விட்டது. அவர் கைகால்கள் மெலிந்துவிட்டன. முகம் வாடிப்போயிற்று. மேனியும் குன்றிற்று. மத்யானமும் கழிந்தது. இன்னும் சேஷையர் பல்தேய்க்கவில்லை. பாதாளக் கரண்டிகள் போட்டும் பலனில்லை. தன் பையன் தேஹத்தைக் கண்டாலொழிய சாப்பிடுவதில்லை யென்று தீர்மானித்துவிட்டார் சேஷையர்.

ஸுமார் மணி மூன்றாயிருக்கலாம். மேகங்கள் ஆகாயத்தை மறைத்துவிட்டன. மணி நாலுக்கு மேலாய்விட்டது, அஸ்தமிக்கப் போகிற தென்றெண்ணி, குடத்தை யெடுத்துக் கொண்டு வீட்டிற்குப் பின்புறத்திலிருக்கும் வாய்க்காலில் ஜலமெடுப்பதற்கென்று, ஒரு பெண், ஸுமார் பதினைன் ப்ராயத்தாள், புறப்பட்டாள். வாய்க்காலின் பக்கம் போய்ச் சுற்றிப்பார்த்தும் எவ்விடத்திலும் ஒரு பெண் பிள்ளையாவது காணப்படவில்லை. தனியாக ஜலமெடுக்கப் போகிறோமே என்ற எண்ணம் இப்பெண்ணுக் குண்டாயிற்று. என்னவானாலும் ஒரு குடம் ஜலமாவது கொண்டுபோவோமென்று வாய்க்காலுக்கு வந்தாள். இவ்விடத்தில் ஒருபடித்துறை உண்டு. இப்படித்துறையின்மேல் தலைவிரி கோலமாய் இரண்டு கைகளையும் கன்னத்தில் புதைத்துக் கொண்டு தன்பற்கள் வெளியில் தெரிய, தன் ஆடைகள் நழுவ, மேல் உத்தரீயம் சோர்ந்துவிழ, ஒருவாலிபன் உட்கார்ந்திருந்தான். இப்பெண்மணி இந்த ரூபத்தைக் கண்டதும் திடீரெனத் தன் குடத்தை நழுவவிட்டு கோவென்று கதறினாள். இவள் சத்தம் போடுவதைக் கேட்டு, பரபரப்புடன் எழுந்து, அவ்வாலிபன் வீட்டின் புறக்கடை வழியாய் ஓடினான். இவனை யாரென்று நினைக்கிறீர்கள். இவன்தான் நம் கதாநாயகன் கிட்டன். இவனுக்காகத்தான் இவ்வூரில் இவ்வளவு அலங்கோலம்.

வீட்டின் பின்புறத்தால் உள்ளே நுழைந்த பையன், 'பாவுளுக்குள்' ஒளிந்து கொண்டான், என்னே கோழைத்தன்மை! இப்பொழுது யார் அவனிடம் பேசினாலும் பதிலளியான். சிலர் அவன் சந்தைமடத்திலிருந்தானென்றும், சிலர் க்ராமமுனிஸிப்பு பிள்ளைக்குக் கள்ளர்கள் விருந்தளித்தார்களென்றும் சொல்லிக் கொள்கிறார்கள். கிட்டனோ பித்துப் பிடித்தவன் போல் எதற்கும் பதில் சொல்ல மாட்டேனென்கிறான். எது எப்படியானாலும் சேஷய்யருக்கு அன்றைக்கு நாலுகட்டு வெற்றிலை செலவழிந்தது ஊரடைக்கத் தாம்பூலம். பிள்ளை பிழைத்து வந்தானே அதே பெரிது. இப்பொழுது யார் மணியனை கவனிக்கிறார்கள்.


833. ப்ருதிவிராஜன் ... 1 0 0
வி. ஆர். நமச்சிவாயமுதலியார் இயற்றிய ஒருசரித்ரஸம்பந்தமான நாடகம்.

812. கீசகன் அல்லது பாயப்பதுங்கல். 0 12 0
த்ரௌபதியைத்துன்புறுத்தி அழிந்த கீசகனைப்பற்றிய நாடகம். கா. நமச்சிவாயமுதலியார் இயற்றியது.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.




# REVIEW OF THE PRESS.
# பத்ரிகை ஆராய்ச்சி.

## THE SCHOOL MUSEUM.
## பள்ளிக்கூடப் பொருள் காட்சி சாலை.

ஸமீபத்தில் வெளிவந்த 'நல்லாசிரிய'னில் ஒரு உபாத்யாயர் பாடசாலைகளில் ம்யூஸியம் அதாவது பொருள்காட்சி சாலை வைப்பதைப் பற்றி சில குறிப்புகள் எழுதியிருக்கிறார்.

ம்யூஸியத்தில் அதிக சேர்த்தியானவும், விலையுயர்ந்தவும், அரியவுமான பொருட்களைச் சேர்த்துவைக்க வேண்டும்; 'என்னிடம் ம்யூஸியத்தில் வைக்கத் தகுந்த ஸாமான் இல்லை; சேகரிக்கவும் முடியாது,' என்று அநேகர் எண்ணுவார்கள். இது தப்பபிப்ராயமேயொழிய வேறல்ல. ம்யூஸியத்தில் எந்த பொருள்களை எவ்விதம் சேர்க்கவேண்டும்? எவ்விதம் வைத்திருக்க வேண்டும்? அப்படிச் செய்வதாலுண்டாகும் பயன் என்ன? என்று ஆராய்வோம்.

பலவித கற்கள், மண்கள், வேர், அடிமரம், இலை, பூ, காய், தான்யங்கள், பறவைகளின் முட்டைகள், இறகுகள், கூடுகள். அலகுகள், கால் விரல்கள், எலும்புகள், கொம்புகள், குளம்புகள், சங்குகள், கிளிஞ்சல்கள், வண்டுகள், பூச்சிகள், புழுக்கள் முதலிய யாவற்றையும் ம்யூஸியத்தில் வைக்கலாம்.

கூடியவரை மாணவரைக் கொண்டும், உபாத்யாயர்களைக் கொண்டும், பாடங்களை விளக்கக்கூடிய பொருள்களை ஸம்பாதித்தல் நல்லது.

எல்லாப் பொருள்களையும் ஒன்று சேர்த்துப் பள்ளிக்கூடத்தின் ஒரு மூலையில் த்ருஷ்டி பரிஹாரம்போல் குவித்து வைக்காமல், தாதுப் பொருள்கள், ஜீவவர்க்கங்கள், தாவரங்கள், ஊர்வன முதலியவற்றையும், கணித ஸம்பந்தமானதும், பூகோள ஸம்பந்தமானதும், கிண்டர்கார்ட்டன் ஸம்பந்தமானதுமான வஸ்துக்களையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்வைக்கு அலங்காரமாயும், ஒழுங்காயும், சுத்தமாயும் வைக்க வேண்டும்.

இலைகள், பூக்கள் முதலானவைகளை மையொட்டுங் காகிதங்களின் இடையில் வரிசையாய் வைத்து, இரண்டொரு நாட்களுக்கொருமுறை எடுத்து மாற்றி வைத்தால், தக்கபடி காய்ந்துபோம். பிறகு அவற்றை தக்க வகைகளாகப் பிரித்து வெள்ளை அட்டைகளில் ஒட்டி வைக்கலாம்.

பிள்ளைகளாலும், உபாத்யாயர்களாலும் செய்த களிமண் வேலைகள், சித்ர வேலைகள், கிண்டர்கார்ட்டன் தொழில்கள், ஆகிய இவைகளையும் ஒழுங்காகவும், வரிசைக்ரமமாகவும் வைத்தல் மேலானது. கூடுமானால் களிமண் வேலைகளைச் சுட்டு தக்கபடி வர்ணங்கொடுத்து வைக்கலாம்.

இறந்துபோன நாய், பூனை, முயல், ஆடு, எலி, அணில் முதலியவற்றின் எலும்புக் கூடுகளை தக்க ஸமயங்களில் எடுத்து ம்யூஸியத்தில் வைக்கலாம்.

வண்டுகள், வண்ணாத்திப் பூச்சிகள் ஆகிய இவைகள் அழுகிப் போகக் கூடியவை யல்லவாகையால், அவற்றைக் குண்டூசிகளாற் குத்திவைத்து, அவையிருக்குமிடத்தில் நாப்தலின் என்னும் உருண்டைகளை வைக்கலாம். பூச்சிகள் கெட்டுப் போகாமலிருக்கும்.

மீன், தவளை, பல்லி, ஓணான் முதலியவற்றைச் சுத்த ஜலத்தோடு கலந்த 'பார்மலின்' என்னும் த்ராவகத்திலும், பாம்பு, தேள், பூரான் முதலானவைகளை 'அல்கஹால்' சாராயத்திலும் போட்டு வைக்கலாம்.

இவையன்றி, கணிதம், பூகோளம், ஆகிய இப்பாடங்களை கற்பிக்க அனுகூலமாயுள்ள உபகரணங்களையும் மற்றும் உபாத்யாயர் பிள்ளைகள் இவர்களின் ஸாமர்த்யத்துக்கேற்ற மற்ற வஸ்துக்களையும் ம்யூஸியத்தில் வைப்பது மெச்சத்தக்க கார்யமே.

இவற்றை ஒழுங்காய் சேகரித்து ம்யூஸியத்தில் வைப்பதோடு, செல்வ ப்ராணிகளையும் வைத்து வளர்ப்பது அதிக ச்லாக்யமானது. கிளி, மைனா முதலிய பற்பல பக்ஷிகள், நாய், பூனை, குரங்கு, முயல் முதலிய ம்ருகங்கள் முதலானவற்றை, ஆசிரியர்களும், பிள்ளைகளும் சேகரித்து, அவைகளுக்கேற்ற கூடுகளமைத்து, அக்கூடுகளில் அவற்றைவிட்டு வளர்ப்பதோடு, மாணவர்களே அந்தச் செல்வப்ராணிகளை போஷித்து வரும்படி செய்வது நல்லது.

இப்படி ம்யூஸியம் சேகரித்தல், பாடசாலைக்கு அலங்க்ருதமாயிருக்குமென்றல்ல; பின் எதற்கெனிலோ? உபாத்யாயர் போதிக்கும் விஷயங்கள் மாணாக்கரின் மனத்தில் ஆழமாய்ப் பதியவும், அவர்களுடைய 'உற்று நோக்கும் சக்தி' வ்ருத்தியடையவுந்தான்.

எப்படியென்றால், 'பக்ஷிகளின் அலகுகளும், கால் விரல்களும், அவற்றின் ஆஹாரத்துக்கும், பழக்கத்துக்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன' என்னும் பாடத்தை உபாத்யாயர் மாணவருக்குப் போதிக்கிறாரென்று வைத்துக்கொள்வோம்: இப்பாடத்துக்கு ம்யூஸியத்திலுள்ள 'பக்ஷிகளின் கால்விரல்களும், அலகுகளும்' எவ்வளவு அநுகூலப்படுமென யூகித்துக் கொள்ளலாம். இவை யில்லாவிட்டால், உபாத்யாயர் எவ்வளவு சாதுர்யமாகக் கற்பித்தாலும் அது உசிதமாகாது. ஏனெனில், இவ்வாறு கற்றுக்கொடுப்பதால் மாணக்கரின் 'உற்று நோக்கும் சக்தியும்,' 'ஆராய்ந்தறியும் சக்தியும்' வ்ருத்தியாக இடமில்லை.

'பொருள்களை நேரே வைத்து போதித்தல்' உத்தம மார்க்கமென்பது ப்ரத்யக்ஷம். இம் முறையை யநுஸரிக்க ஏற்படும் கல்வழிகளில் ம்யூஸியம் ஒன்று.

அன்றியும், செல்வ ப்ராணிகளை வளர்ப்பது பிள்ளைகளே யாகையால், அடிக்கடி பாலர்கள் இந்த ப்ராணிகளைப்பார்த்து, இவைகளுக்கு இரை கொடுத்து வருவதால், மாணக்கரின் 'உற்று நோக்கும் சக்தி' வ்ருத்தியாவதுடன், அந்தந்த ப்ராணிகளின் குணகுணங்களை, பழக்க வழக்கங்கள், ஆஹாரங்கள் ஆகிய இவற்றை நேரில் ஸுலபமாய்ப் பார்த்து அறிந்து கொள்வார்கள்.

செல்வ ப்ராணிகளிடம் பாலர் அடிக்கடி பழகுவதால் அவைகள் பயமில்லாமல் சிறுவரிடம் பழக இடமுண்டு. இப்படியிருத்தல் உபாத்யாயருக்கும் ஓர்வித நன்மையைப் பயக்கும்; அதென்னவென்றால்: முயலைப்பற்றி, இயற்கைப் பொருட்பாடம் உபாத்யாயர் கற்பிக்க ஆரம்பிக்கிறாரென வைத்துக்கொள்வோம். இந்த ஸந்தர்ப்பத்தில் பாலர்கள் முயலை நேரில் பார்த்தும், தொட்டும், ஆராய்ந்தறிய ஹேதுவாகிறது. இப்படிச் செய்வது எவ்வளவு உசிதமென்று சொல்லாமலே விளங்கும்; மேலும் மாணவரிடம் தயை, சாந்தம், பொறுமை, பரோபகாரம், ஜீவ ஜந்துக்களிடத்தில் இரக்கம், அநுதாபம் முதலிய நற்குணங்கள் நாளடைவில் தானாகவே உற்பத்தியாகிவிடும்.

ஆதலால், 'ம்யூஸியம் வைத்தல்,' 'செல்வ ப்ராணிகளை வளர்த்தல்' ஆகிய இவைகள் எவ்வளவு உபயோகமுள்ளவையென நன்குணர்ந்து இவற்றை எல்லா உபாத்யாயர்களும் அநுஸரித்தல் உத்தமமாகும்.

## CONVENTIONS OF SPEECH.

### பரிபாஷை.

பரிபாஷை என்றால் சிற்சில பொருள்களை அல்லது கார்யங்களை விளக்குவதற்காக வழங்கும் விசேஷச் சொல் அல்லது சொற்கள். இதைப்பற்றி 'சத்திய வேத பாதுகாவலன்' ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறது. பரிபாஷை என்பது ஒரு ஸம்ஸ்க்ருத வார்த்தை. தமிழில் இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்று சொல்லப்படுகிற பேச்சு விகற்பங்களையும் பரிபாஷையிலேயே உள்படுத்திச் சொல்லலாம். இடக்கரடக்கல் என்றால், ஸபையிலே சொல்லக்கூடாததை வேறுவிதமாய் மறைத்துச் சொல்லுவது. "கால் கழுவுகிறது" என்றால் காலைக் கழுவுகிறதல்ல; அதற்கு வேறு கருத்து. இது இடக்கரடக்கல். ஒரு கேடான அதாவது அமங்களமான கார்யத்தை நல்ல கார்யம் போல் சொல்லுவது மங்கலம். சாவோலையைத் "திருமுகம்" என்பது போல. இப்படியே நகப்பாம்பை நல்ல பாம்பென்கிறார்கள். குழூஉக்குறியென்பது ஒவ்வோர் கூட்டத்தார் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ளும் மறைபொருளான பேச்சு. கள் குடிப்பதை "வில்லுப் பூட்டுகிறது," "இடுகேற்றுகிறது" என்று சொல்லுவது குழூஉக்குறியாம். தேச வழக்கத்தினால் ஏற்பட்ட வேறுபொருள் குறிக்கும் பேச்சுகளையும் இவ்வகுப்பிலே அடக்கலாம்.

பரிபாஷையிலே பேசுவது பொய்யாகுமா? ஆகாது. சிலர் இதை சரியாயறியாமல் ஒன்று, பொய்யென்று நினைத்துக்கொண்டு பரிபாஷை பேசி பாவங்கட்டிக் கொள்ளுகிறார்கள். அல்லது சொல்லுவது இன்னதென்று தெரியாமல் வருத்தப்படுகிறார்கள்.

இப்படிப்பட்ட சில குழூஉக்குறிகளை எடுத்துக் காட்டுவோமானால் மேலே சொல்லியது நன்றாய் விளங்கும். ஐரோப்பியருக்குள்ளே இருக்கிற ஒரு பரிபாஷையின்படி, ஒருவர் வீட்டிலிருக்கும்போது, யாராவது தம்மைக் காணவந்து வெளியே நின்றுகொண்டு, இன்னார் வீட்டிலிருக்கிறாரோ என்று கேட்டனுப்பினால், வந்த ஆளை உபசரித்துக்காண தமக்கு விருப்பமில்லாவிட்டால், "வீட்டிலில்லை" என்று சொல்லியனுப்புவார். இது ஒரு குழூஉக்குறி. "வீட்டிலில்லை" என்பதற்குக் கருத்து "காண விருப்பமில்லை" என்றதுதான். அறியாதவர்கள் இதைப் பொய்யென்று நினைப்பார்கள். இது பொய்யல்ல. குன்றாதமெய். இப்படியே நம்முடைய தேசத்திலே நாம் யாரையாவது



அலுவலாய்க் காணப்போயிருக்கும்போது, போன வீட்டுக்காரர் நாம் போன அலுவலை நம்முடைய தேச முறைப்படி கேளாமற் கேட்பார்கள். நாம் அதற்கு "இல்லை, நான் சும்மா வந்தேன்" என்கிறோம். இதுவும் ஒரு குழூஉக்குறி. அப்படிப் பெரும் அலுவலல்ல, அதை மெல்லமெல்லச் சொல்லுவோம் என்றதுதான் இதின் கருத்து. நமக்குள்ளே எடுத்தாற்போல ஒரு அலுவலைச் சொல்லுவது மர்யாதைக்குறைவு என்ற எண்ணமிருக்கிறது. ஐரோப்பியருள்ளோ இதற்கு மாறாயிருக்கிறது. இதினாலேதான் 'சும்மா வந்தேன்' என்றதைச் சில ஐரோப்பியர்கள் சொல்லொடு பொருளாய் விளங்கிக்கொண்டு "சும்மா வந்தானாற் போய்விட்டு வா" என்று வெட்டெனப் பேசுவார்கள். இது பரிபாஷை யறியாத்தன்மை. இதனால் "சும்மா வந்தேன்" என்று சொல்லியபின் நாம் அலுவலை எடுத்துப் பேசும்போது நம்மைப் பொய்யரென்றும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். நம்முள் ஒருவர் வெகு நாளாய் தூரத்திலிருந்துவிட்டு, எவ்வளவு தெளிந்துபோய் வந்தாலும், வீட்டிலுள்ள பந்துக்கள், (விசேஷமாய் கிழவிகள்) வந்தவரைப்பார்த்து "என்ன ரொம்ப இளைத்துவிட்டாயே" என்பார்கள். இதுவும் ஒரு பரிபாஷை. ஐரோப்பியர் ரொம்ப இளைத்துப்போனவனையும் பார்த்து "நன்றாகத் தெளிந்திருக்கிறாய்" என்பார்கள். இரண்டும் உபசார வார்த்தைகள். வந்தவர்களை முகமன்பேசி உபசரிப்பது எல்லா ஜாதியாருள்ளுமிருக்கிற நல் வழக்கம். இந்த முகமன்பேச்சின் கருத்து "நாங்கள் உன்னுடைய ஸுகக்ஷேமத்தைப் பற்றி ரொம்ப அக்கரை எடுத்துக்கொள்ளுகிறோம்" என்பதொழிய, ஆளுடைய தெளிவு, மெலிவைப்பற்றி நிச்சயிப்பதல்ல.

நாம் சிறுவரோடு பேசும் வேறொருவகைப் பரிபாஷைப் பேச்சுமுண்டு. சிறு பிள்ளைகளைப் பயப்படுத்தும்படி "ஸுயாண்டி பிடிக்கும்!" "பூச்சாண்டி இதோ" என்கிறோம். பிள்ளைகள் கேட்டதைக் கொடாமல் கையைச் சுழற்றிக் "காகம் கொண்டுபோய்விட்டது உ உ. ஆ ஆ" என்கிறோம். பேசப்பழகின பிள்ளைகள் அடிக்கடி "அது என்ன, அது என்ன" என்று கேட்க நாம் மறுமொழி சொல்லி அலுத்துப்போய் "அது அன்னம்" என்கிறோம். "இதென்னத்துக்கு இதென்னத்துக்கு" என்ற கேள்வியைத் தட்டி விடும்படிக்கு "நாய் குலைத்தாற் குப்பையிலேபோட" என்கிறோம். இந்த மறுமொழியின் உட்கருத்தை பிள்ளைகள் தாங்களும் மெல்ல மெல்ல அறிந்துகொண்டு, பெரியவர்களைக்கூட "ஏய்ப்புக்காட்ட"த் தொடங்குகிறார்கள். இவைகளைப் பொய்யென்று நினைப்பதும் சொல்வதும் பரிபாஷையின் உட்பொருளை அறியாததன்மையேயாம்.

இனி, வ்யாபாரிகள் தாங்கள் பத்துப்பணமாய் விற்கப்போகிற ஒரு ஸாமானுக்குத் ஆரம்பத்திலே பதினைந்துபணம் என்று விலைசொல்லுவது பொய்யாகுமா? கிறாணக்கடை (கருர்கடை) அதாவது "ஒருவிலை" என்று ஏற்படுத்தி விற்கிற கடைக்காரர், விற்கிற விலையைவிட ஏற்றமாகச் சொல்லிவிற்றால் பொய் மாத்ரமல்ல, களவுமிருக்கும். ஆனால் விலை கூறி விற்கிறவர்கள் ஏற்றிச் சொல்லி இறக்கி விற்கிறதிலே ஒரு பொய்யுமில்லை. இதற்குந்யாயமென்னவென்றால், விற்கிறவன் ஏற்றிச் சொல்லுவான், நான் இறக்கிக் கேட்கவேண்டும் என்று வாங்குகிறவனுக்குத் தெரியும். விற்கிற விலையைச் சொன்னால், வில்லாத விலைகேட்பான் என்று விற்பவனுக்குத் தெரியும். ஆனபடியால் குருவிக்கெய்கிறவன் சற்றே எட்டி இலக்குவைத்து எய்கிறதுபோல், விலை சொல்லுகிறவனும் எட்டிச் சொல்லுகிறதிலே ஒரு குறையுமில்லை. "நான் பதினைந்து சொல்லுகிறேன் நீ கேட்கிறதைக்கேள். பிறகு இரண்டு விலைக்குமிடையில் தீர்த்துக்கொள்ளுவோம்" என்று சொல்லாமற் சொல்லிக் கொண்டே வ்யாபாரி பத்துப் பெறுவதற்குப் பதினைந்து சொல்லுவான். இதிலேபொய்யில்லை, ஆனால் இன்ன விலைக்குத்தான் வாங்கினேன் என்று இல்லாததைச் சொன்னால் பொய்யாகும். பெற்றதுக்குமேல் அதிக ஏற்றமாய் ஏமாற்றிவிற்றால் களவாகும்.

## GROWING PLANTS IN THE HOUSE.

### வீட்டில் செடிகள் வளர்ப்பது.

வீட்டு வாயில்களிலும், முற்றங்களிலும், படுக்கையறையின் பக்கங்களிலும, மற்றும் பொதுவாக வஸிக்குமிடங்களிலும் செடி கொடிகளை வைத்து வளர்ப்பது ஆரோக்யத்திற்குக் கெடுதி யுண்டுபண்ணக்கூடியதாகுமென்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். காரணம் என்னவென்று கேட்டால் மனதுக்கெட்டாத ஏதேதோ யுக்திகளை அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவ்விதம் ஒன்றும் ஸம்பவிப்பதில்லை யென்றும் உண்மையை ஆராய்ந்தோமானால், தீமைக்கு பதிலாக நன்மையே உண்டாகிறதென்றும் 'வைத்தியகலாநிதி'யில் ஒரு வைத்யர் எழுதுகிறார். பனையின் இனத்தைச் சேர்ந்த சிறிய செடிகளும், மலைகாட்டு ஓஷதிகளும், மற்றும் அவைபோன்ற பிணியற்ற கொடி முதலியவை

களும் தகுந்த முறைப்படி வைத்துப் பயிர் செய்யப்படுமானல், க்ருஹத்தில் வசிப்பவருக்கு அவை உண்மையில் நன்மை விளைவிக்கும். செடிகளின் இலைகள் ஆகாயத்திலுள்ள கரியமிலவாயுவை உறிஞ்சிவிடுவதால் நமக்கு மிகவும் நல்ல பயன் உண்டு. அதோடு அதற்குப் பதிலாக அவற்றிலிருந்து வெளியாகும் ப்ராண வாயுவால் நாம் போஷிக்கப் படுகிறோம்; ஆனல் ஒட்டுகள் இட்டுப் பயிராக்கி அதிக பரிமளம் வீசும் பூக்களை புஷ்பிக்கும் செடிகளைப் வைத்துப் பயிராக்கல் நல்லதல்ல. ஏனென்ருல் அவற்றின் அபரிமிதமான வாஸனையானது அநேகம் ஸமயங்களில் தலைவலியையும், மயக்கத்தையும் தரக்கூடியவையா யிருக்கின்றன. படுக்கை யறையில் அல்லது படுக்கையறைக்கு அருகில் இந்த வாஸனையடங்கிய வாயு வீசுவதால், அது அநேகம் பேருக்கு, அதிலும் வாதப்ரக்ருதியான பலஹீனர்களுக்கு மிகவும் கெடுதலை யுண்டுபண்ணக்கூடியது.

அதிக வாஸனையில்லாத புஷ்பங்களையுடைய செடிகளா யிருந்தபோதிலும், அவை மிகவும் அடர்த்தியாகப் புதர்களைப்போல் வளர்ந்தால் அதுவும் ஆகாது; அவற்றினல் ஈரமும் சதுப்பும் பூமியிலும் காற்றிலும் அதிகமாகப் பரவுகின்றன. அவற்றின் அடியில் பழைய ஜலமும் ஈரமும் நாளுக்குநாள் சேர்ந்து வரும். படுக்கையறைக்கு அருகில் தொட்டிகளில் செடிகளைவைத்துச் செழிப்பாக வளர்த்து, அவற்றிலிருந்துண்டாகும் புஷ்பங்களின் வாஸனையாலும், ஈரத்தினலும் தலைவலியும் மற்றும் வாதரோகங்களும் அநேகருக்கு உண்டாவதுண்டு. ஈரமும் ஒதமுமில்லாதவையும், மணமற்ற மலர்களையுடையவையுமான சிறிய செடிகளை அறைகளுக்கு ஸமீபத்தில் வைத்து வளர்ப்பதால் கெடுதியொன்றும் கிடையாது.

வீட்டில் செடி கொடிகளை வைத்து, அவற்றை நல்ல நிலைமையில் இருக்கும்படி பாதுகாப்பதற்குக் கொஞ்சம் ஊக்கமும் அவகாசமும் அவசியம் வேண்டும். அவற்றிற்கு வெளிச்சம் மிகவும் முக்யமாய் வேண்டும். அவற்றின் வளர்ச்சிக்கு வாயுவும் இன்றியமையாதது. மிகவும் அவச்யமான இவ்விரண்டையும் செடிகளுக்குப் போதுமான அளவு செய்யமுடியாத விடங்களில், வீட்டுக்குள் அவற்றை வைத்து வளர்க்காமலிருப்பதே மேல். இந்த ஸௌகர்யங்களிருப்பவர்கள் சிறந்த செடி கொடிகளை வீட்டுக்குள்வைத்து வளர்த்து, அவற்றின் வளர்ச்சியின் வகைகளையும், புஷ்பிப்பது முதலிய நிலைமைகளையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துவந்து, அப்போதைக்கப்போது அவற்றைக் கத்தரித்தும், பழைய மண்களையும் தொட்டிகளையும் மாற்றிப் புதியவைகளை வைத்தும் பாதுகாத்துவந்தால், அந்தச் செடிகள் அவர்களுக்கு நன்மையையும் உத்ஸாஹத்தையும் ஊட்டும். எல்லாத்தொட்டிகளிலிருந்தும் கசியும் நீர் ஒருமிக்க ஒரு வடிகாலில் சேர்ந்து வீட்டுக்கு வெளியில் போய்ச் சேர்ந்து விடும்படி ஏற்பாடு செய்வதுடன், தொட்டியில் செடிகளுக்கு அடியில் சில கறித்துண்டுகளையும், போட்டிருப்பது நலம். சிறிய பனை செடிகளுடையவும், அவற்றைப் போன்ற மற்றச் செடிகளுடையவும் இலைகளில் படிந்துள்ள அழுக்கு முதலானவைகளை அடிக்கடி கழுவி நிர்மலமாய் வைக்கவேண்டும். அழுக்குகள் சேர்ந்து விட்டால் இலைகளின் வளர்ச்சியும் அழகும் குறைந்து விடும். வீட்டின் உட்புறங்களில் வைத்து வளர்க்கப்படும் அழகிய செடிகளின் இலைகளைப் பஞ்சுகளாலும், சவர்க்காரம் கரைத்த நீராலும் அடிக்கடி சுத்தம்செய்வது ஐரோப்பிய வீடுகளில் வழக்கம். அழகிய மலைநாட்டுப் பூண்டுகளை வீட்டின் உட்புறங்களில் வளர்ப்பது ஆரோக்யத்திற்கு அநுகூலமானது. அப்பூண்டுகளை இளஞ் சூடான ஜலத்தினல் காலையில் நனைத்து வருவது நலம். நீராவி நிரம்பிய ஆகாயமானது இச்சிறிய செடிகளை நனைத்துக் கிளைக்கச் செய்யவல்லது. ஆனல் குளிர் முதலியவற்றைப் போக்குவதற்கு நெருப்பு மூட்டப்பட்டிருக்கும் அறைகளில் செடி கொடிகளை வைத்திருப்பது பிசகு. அவை வாடி வதங்கிக் கெட்டுப்போவதுடன் மனிதருக்கு அநுகூலமாகவும் இருக்கமாட்டா.

சிலர், செடி கொடிகளை வீட்டில் வளர்ப்பதால், வீட்டில் ஒதம் அதிகரிக்கும் என்று குறை கூறுவார்கள். வாஸ்தவமே; என்ருலும், செடிகளை வைப்பதற்குத் தகுந்த அளவுள்ளவையும் பக்கவாட்டில் ஒழுக்கு அல்லது கசிவு அற்றவையுமான கெட்டியாயுள்ள தொட்டிகளை உபயோகிப்பது மல்லாமல், அவற்றில் விளிம்புகளிலிருந்து வழியாதபடி தண்ணீரைக் குறைவாகவும் ஊற்றிவந்தால், பூமியில் ஒதமுண்டாக வழியில்லை. மேலும் அத்தொட்டிகளைப் பூமி மட்டத்திற்குமேல் சிறிது உயரமான பீடங்களின்மீது வைத்திருந்தால், பூமி சற்றும் ஈரமாவதற்குக் காரணமில்லை. ஆனல், வீட்டிற்குள் சிறிய செடிகளை மிதமாக வைத்து வளர்ப்பது உசிதமாகுமேயன்றி அபரிமிதமாக வைப்பது யுக்தமாகாது.



# News and Notes.

# வர்த்தமானக் குறிப்புகள்.

## புதிதாய் ஏற்படுத்தக்கூடிய கைத்தொழில்கள்.

வங்காளத்தைச்சேர்ந்த ஆனரபில் டாக்டர் நீல்ரதன் ஸர்க்கார் என்பவர் கைத்தொழில் கமிஷனில் ஸாக்ஷ்யம் சொன்னபோது, இன்ன கைத்தொழில்கள் இந்தியாவில் ஸ்தாபித்தால் அவைகள் கைகூடுமென்று சொன்னர். அவ்விபரவன.—

வீட்டுக்கைத்தொழில்களுள், ப்ரஷ்செய்தல்; சரிகைசெய்தல், பணப்பைகளும், கைப்பெட்டிகளும் செய்தல், ஸாக்ஸ்செய்தல்; மரம், மண் இவைகளால் பொம்மைசெய்தல்; காகித அட்டைகளால் பெட்டிகள் செய்தல்; சிப்பிப்பொத்தான் செய்தல்; கைத்தடி செய்தல்: குடை, கைத்தடி இவைகளுக்குப் பிடிசெய்தல்; பிரம்பு, மூங்கில்களால் மேஜை நாற்காலி முதலியவைகள் செய்தல்; தொப்பிகள், வாத்யக்கருவிகள் முதலியவைகள் செய்தல்.

தொழில் சாலையில் நடத்தக்கூடிய தொழில்களாவன: ஈச்சஞ் சர்க்கரை சுத்திசெய்தல்; கண்ணுடி; மரத்திலிருந்து கரியும் இதர உபபொருள்களும் செய்தல்; உருளைக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மொலாஸஸ் என்னும் தேன்பாகு இவைகளிலிருந்து அல்கஹால் சாராயம்; துத்தநாகம் பூசிய இரும்புத்தகடு; பித்தளைத்தகடு, தாம்ரத்தகடு, இரும்புக்குழாய்கள், இனமல் பாத்ரங்கள், நெருப்புக்குச்சி, முதலியவைகள் செய்தல்; வெண்காரம், படிக்காரம், போரிக் ஆஸிட், ப்ளீச்சிங்பௌடர் முதலிய ரஸாயனச் சரக்குகள் செய்தல் முதலியவை.

## புதினு.

புதினு அல்லது ஈ எச்சமிட்டாங்கிரை விதையிலிருந்தாவது பதியத்திலிருந்தாவது பயிர்செய்யப்படுகிறது. இதற்கு விதையும் உண்டு. இதை உண்டாக்க ஒரு நூதனமுறை யுண்டென்று சொல்லப்படுகிறது. அது பின்வருமாறு. ஒரு ஜதுரமுள்ள ஸ்தலத்தை நன்ருகக்கொத்தி புழுதியாக்கி, சுற்றி கரைகட்டி பாத்திக்குள் மடித்துப்போன வைக்கோலை இடைவிடாமல்போட்டு, அதன்பேரில் வெல்லத்தை ஜலத்தில் தேன்போல் கரைத்து வைக்கோலின்பேரில் ஈக்கள் வந்து மொய்க்கக்கூடிய பதத்துக்குத் தெளித்து வைத்திருந்தால், அதன்பேரில் தித்திப்பை அருந்துவதற்காக ஈக்கள் ஏராளமாய்வந்து மொய்த்து வெல்லப்பாகை அருந்தி அதில் எச்சமிட்டுப் போகும். மறுநாள் அவ்வெச்சத்தின்பேரில் மடித்த சாம்பல் எருவை பாத்தி முழுமையும் ½ அங்குலம் கனத்துக்குத் தூவி மறுநாள் அப்பாத்தியின் பேரில் தெளித்த எரு ஒதுங்காமல் நன்ருய் சுவறும்படி ஜலம் தெளிக்கவும். பிறகுதினம் ஒரு முறையாய் ஒரு வாரத்துக்குத் தெளிக்கவும்; பாத்தியில் மடித்த வைக்கோலை போடுவதைவிட மடித்த சணல் சாக்கைப் பாத்திகண்ட அகலத்துக்கு விரித்து அதன்பேரில் அந்த பாகை தெளிப்பது நிறம். கையினல் ஜலத்தைத் தெளிப்பதற்குப் பதிலாக பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும் வாளியால் ஜலம் கொஞ்சம் விழும்படி தண்ணீர் விடுவது நல்லது. மேற்கண்ட விதமாய்ச் செய்து பார்த்தால், புதினு பயிராகுமாம்.

## சக்ரவர்த்திப் பிறந்த தினப் பட்டங்கள்.

சக்ரவர்த்தி பிறந்த தினத்தில் சென்னையிலுள்ளவர்களுக்குக் கிடைத்த பெரிய கௌரவப்பட்டங்களின் விவரம் வருமாறு. சென்னை நிர்வாகஸபை மெம்பராகிய ஆனரபில் மிஸ்டர் கில்மனுக்கு ஸி. எஸ். ஐ. பட்டம்; ப்ரின்ஸ் அப் ஆர்காட்டுக்கு ஜி. ஸி ஐ. இ. பட்டம். கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக் கண்ணுப் பிள்ளைக்கு ஐ. எஸ். ஒ. பட்டம்; சென்னை பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதராகிய பண்டித லக்ஷ்மணஸூரிக்கு மஹா மஹோபாத்யாய பட்டம்; சென்னையில் ஸர் பட்டம் ஒருவருக்கும் கொடுபடவில்லை. வடக்கே பம்பாயில் மிஸ்டர் வாச்சாவுக்கும், வங்காளத்தில் கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜ் ஏ. சௌதரிக்கும் ஸர் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பப்ளிக்ஸர்விஸ் கமிஷன் மெம்பராயிருந்த, பம்பாயைச் சேர்ந்த மிஸ்டர் எம். பி. சௌபாலுக்கு கே. ஸி. ஐ. இ. பட்டம். மைஸூர் ஸமஸ்தானத்தைச்சேர்ந்த மிஸ்டர் கே. பி. பட்டண்ணசெட்டிக்கு ஸி. ஐ. இ. பட்டம்.

## "ஹரீதகீ வடகம்."

கடுக்காய் (கொட்டைநீக்கியது) 2-பங்கு, கோரைக்

மிளகு 1-பங்கு, சுக்கு 1-பங்கு, அதிமதுரம் ½-பங்கு, இவற்றைச் சூர்ணம் செய்து, வஸ்த்ர காளிதம்பண்ணிக் கொள்ளவும். சூர்ணம் ஒரு வீசையானால் 10-பலம் வெல்லமும், 5 அல்லது 6 பலம் தேனும் சேர்த்து, கல்லுரலில் நன்றாக இடித்து, பிறகு காசிதோலை ...டையுள்ள உருண்டைகளாக உருட்டி, குப்பியில் வைத்துக்கொள்ளவும்; இதை அதிமதுரம் சேர்க்காமலும் செய்வதுண்டு. இந்த லேகம் கபஹரமான குணத்திற் சிறந்தது. இருமல் அதிகமாகத் தொந்தரவு கொடுக்கும்போதெல்லாம் ஒவ்வொரு வடகத்தை வாயில் அடக்கிக்கொண்டு, ரஸத்தை விழுங்கிவரவேண்டும். இதை அடிக்கடி உபயோகித்துவந்தால் இருமலின் வேகமும், ச்வாஸகாசத்தில் உண்டாகும் மூச்சடைப்புபோன்ற உபத்ரவமும் தணிவடையும்., கக்கிருமலால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம்.—வைத்யகலாநிதி.

"ஸத்ய ஹரிச்சந்திரன்."

இது முடிகொண்டான் பண்டிதர் எம். எம். நாராயணஸாமி அய்யர் ஸம்ஸ்க்ருதத்திலிருந்து மொழிபெயர்த்த ஒருநாடகம். இதன் கதையமைப்பு வழக்கத்திலுள்ள ஹரிச்சந்த்ர நாடகக் கதை யமைப்புக்கு வித்யாஸமாயிருக்கிறது. ஹரிச்சந்த்ரனுடைய வாக்கு சுத்தத்தைப்பற்றி இந்த்ரன் புகழ்ந்து பேசினதைக் கேட்டு ஸஹியாத இரண்டு தேவர்கள், ஹரிச்சந்த்ரனை பொய் பேசும்படிசெய்யத் தீர்மானித்ததாக இந்த நாடகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஹரிச்சந்த்ரன் வேட்டையாடப் போயிருக்கையில் குலபதி என்னும் தபோதனருடைய புத்ரியின் பெண் மானை அம்பால் எய்துகொன்றதாகவும், அது கர்ப்பமாயிருந்ததாகவும், அதனால் குலபதி என்னும் முனிவர் அரிச்சந்த்ரன் மேல் கோபங்கொண்டு, மானைக்கொன்ற தோஷத்துக்காக தனது ராஜ்யத்தை விட்டுவிட வேண்டுமென்று சொல்ல, அரசனும் அப்படியே ராஜ்யத்தை குலபதிக்கு விட்டுவிட்டு, வருத்தங்கொண்டிருந்த ரிஷிபுத்ரியை ஸமாதானப் படுத்துவதற்காக பின்னும் ஸஹஸ்ரம்பொன் கொடுப்பதாக வாக்களிக்கிறான். ராஜ்யத்தை ரிஷிக்குக் கொடுத்தபின் வேறுயொத்து அவனுக்கு இல்லாததால், காசி நகரம் சென்று பொருள் தேடிக்கொடுப்பதாகச்சொல்லி அரசன் தன் மனைவி, பிள்ளையுடன் காசி நகரம் சென்று தன்னையும் தன் மனைவியும் விற்றுவிடுகிறான். பின்பு பலவகையான துன்பங்களுக்கு ஆளாகி ஸத்யத்தையும், தர்மத்தையும் கைவிடாமல் இருந்து பிறகு தன்னை ஆட்டிவைத்த தேவர்களாலேயே பூஜிக்கப்படுகிறான். இவைபோல வேறு சில மாறுபாடுகளும் இந்த நாடகத்தில் காணப்படுகின்றன. நாடகம்வாசிக்க ரஸமாயிருப்பதோடு, நடையும் சேர்த்தியாயிருக்கிறது. இதன்விலை அணா 6. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

ஏழைகளுக்கான கோவாபரேடிவ் ஸங்கங்கள்.

சென்னபட்டணத்தில் ஏழை வகுப்பார்களுக்கு ஸுமார் 16 கோவாபரேடிவ் ஸங்கங்கள் இருக்கின்றன. அந்த ஸங்கங்களின் ப்ரதிநிதிகள் சென்ற மார்ச்சுமாஸத்தில் கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில்கூடி தங்கள் ஸங்கங்களின் மேற்பார்வையை மதராஸ் ப்ரொவின்ஷல் கோவாபரேடிவ்யூனியனிடம் ஒப்புவிப்பதாக முடிவு செய்தார்கள். ஸூபர்விஷன் பண்டுக்காக ஒவ்வொரு ஸங்கமும் அது வாங்கும் கடன் தொகையில் 100-க்கு 8 அணா வீதம் பணம் கொடுத்துதவும். கடன்கொடுக்கும் ஸெண்ட்ரல் பாங்கியானது எறக்குறைய அவ்வளவு தொகை கொடுக்கும்.

"ரத்னப்பிரகாசம்."

இது தஞ்சாவூரில் ரத்ன வ்யாபாரியாகிய மிஸ்டர் டி. பி. ஜயசங்கர தவே இயற்றியது. இதில் ஒவ்வொரு ரத்னமும் கிடைக்கும் இடம், அதன் லக்ஷணம், கீரோட்டம், குணதோஷங்கள், அந்தந்த குணதோஷங்களுள்ள வைரமாதி ரத்னங்களை அணிவதால் ஏற்படும் ஸிபகஷ்டங்கள் ஆகிய இவைகள் விரிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. இது ரத்ன வ்யாபாரிகளுக்கும் நகைத் தரகர்களுக்குமேயன்றி ஸாமான்ய ஜனங்களுக்கும் உபயோகமுள்ளது. ஒவ்வொருவர் கையிலும் இது இருக்கவேண்டியது அவச்யம். இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்தியராமன் அண்ட் கம்பெனி 4 கொண்டி செட்டித்தெரு, சென்னை என்று எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

விதை நெல் தேர்ந்தெடுத்தல்.

பேஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களின் கவர்ன்மெண்டார் நல்லவிதை நெல் தெரிந்தெடுக்க இரண்டு முறைகளைப் பரீக்ஷைசெய்தார்கள். முதல் முறையென்னவென்றால், நெல்லை சல்லடையில்போட்டுச் சலித்து, சல்லடைக்கண்கள் வழியாகக் கீழே விழாத மணிகளை மாத்ரம் எடுத்து விதைப்பது. இன்னொரு முறை



யாவது, இனிமேல் அதிக உப்புக்கரையாதென்னும்படி அவ்வளவு உப்புக்கரைத்த ஜலத்தில் நெல்லைப் போட்டு, அதில் மூழ்கின நெல்லை மாத்ரம் எடுத்து விதைப்பது. இப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டுவகை விதைகளும் ஸாதாரண விதைகளைவிட அதிக மகசூல் கொடுத்தனவாம்.

உஸ்மானியா யூனிவர்ஸிட்டி.

ஹைதராபாத் ஸமஸ்தானத்தின் நிஜாம் அரசர் ஹைதராபாத் பட்டணத்தில் ஒரு யூனிவர்ஸிட்டி ஸ்தாபிக்க உத்தரவிட்டிருக்கிறார். இதில் மேல்நாட்டுக் கல்வியும் கீழ்தேசத்துக் கல்வியும் கற்றுக்கொடுக்கப்படும். இந்த ஸர்வகலாசாலையில் உயர்தரப்பாடங்கள் எல்லாம் உர்து பாஷை மூலமாகக் கற்றுக்கொடுக்கப்படும். இங்லீஷ் ஒருகட்டாய பாடமாகக் கற்றுக்கொடுக்கப்படும். இந்த யூனிவர்ஸிட்டியின் பெயர் உஸ்மானியா யூனிவர்ஸிட்டி என்பது.

வருமான வரியும் லாப நஷ்டக்கணக்கும்.

ஸமீபத்தில் நடந்த சென்னை சட்ட ஸபை மீட்டிங்கில் இதுவிஷயமாய் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அதாவது, வருமான வரி கொடுப்பவர்கள் சார்ட்டர்ட் அகௌண்டண்டுகளால் தயார் செய்யப்பட்ட லாப நஷ்ட விவரக் கணக்குகளை வருமானக் கணக்கோடு அனுப்பும்படி அனுமதி கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட கணக்கை அனுப்பியிருந்தால் வருமான வரி கொடுக்கவேண்டியவர்களுடைய கணக்குப் புஸ்தகங்களைப் பார்வையிடவேண்டியதில்லை. ஆனால் கலெக்டர்கள் அப்படி கணக்குகளைப் பார்வையிடவேண்டியது அவச்யமென்று எண்ணினால் அவைகளைப் பார்வையிடலாம் என்பதே. இந்தத்தீர்மானத்தை ப்ரேரித்த மிஸ்டர் கார்டன் ப்ரேஸர், இதனால் வ்யாபாரக் கம்பெனிகளுக்கு சரியான கணக்கு வைத்துக்கொள்ளத் தூண்டுதல் ஏற்படும் என்று தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் ஒரு விவஸாய பள்ளிக்கூடம்.

புதுக்கோட்டையில் வருகிற ஜூலை மாஸம் முதல் ஒரு விவஸாயப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்படுமென்று தெரிகிறது. தற்போது அந்தப் பள்ளிக்கூடத்தில் 12 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். ஒவ்வொருவருக்கும் மாஸம் 6 ரூபாய் வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

நெல் பயிரில் ஒரு புதிய பூச்சி.

ஒருவகை நூதனமான கம்பளிப்பூச்சி பாலக்காட்டில் தென்னரி, லப்பள்ளி அம்சங்களில் தோன்றி, நெல்பயிர்களை அழித்து வருகிறதாகத் தெரிகிறது. இந்தப் பூச்சிகள் மழை ஆரம்பித்தவுடன் காணப்பட்டனவாம். இவை காற்றுகளின் தண்டுகளைத்தின்று அழித்து வருகின்றனவாம். இதுவரையில் 200 ஏக்கர் நெல் வயல்கள் பாழாகிவிட்டனவாம்.

"அன்பானந்தன்."

இது வி. எம். ராஜூ செட்டியார் இயற்றிய ஒரு இனிய நாவலாகும். இதன் கதைப்போக்கு மனத்தைக் கவரும்விதம் அமைந்திருக்கிறது. இதன் விலை ரூ. 1-0-0. வேண்டுவோர் சென்னை ஸைடன்ஹாம் ரோடில் உள்ள அதன் ஆசிரியருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

இந்திய பாதுகாப்பு ஸைந்யம்.

ஜூன் மாஸம் 5-தேதி வெளியான கணக்கின்படி நமது ராஜதானியில் இந்தியபாதுகாப்பு ஸைந்யத்தில் சேர மனுப்போட்டவர்களின் தொகை 442. இவர்களில் 241 பேர்கள் ப்ராம்மணர்கள், 52 பேர்கள் நாயுடுகள். வெள்ளாளர்,முதலிமார், பிள்ளைகள் 56; நாயர்கள் 28; கிறிஸ்தவர்கள் 17; மகம்மதியர்கள் 6.

மைஸூர் ஸிவிக், ஸோஷல் கான்பரென்ஸ்.

மைஸூர் ப்ரஜாலக்ஷண ஜனசார கான்பரென்ஸ் முதல் தடவையாக ஜூன் மாஸம் 5-தேதி பெங்களூரில் கூடிற்று. திவான் ஸர் விச்வேச்வரய்யா ஜனங்கள் ஜனசார விஷயத்தில் இன்னின்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார். அனேக ஸ்த்ரீகள் இந்தக் கான்பரென்ஸுக்கு வந்திருந்தார்கள்.

இந்திய ப்ரதிநிதிகள்.

இம்பீரியல் யுத்த மந்த்ராலோசனை ஸபைக்கு இந்தியாவின் ப்ரதிநிதிகளாகப் போயிருந்த பிக்கானீர் மஹாராஜா, ஸர். எஸ். பி. ஸின்ஹா, ஸர். ஜேம்ஸ் மெஸ்டன் ஆகிய மூவரும் சென்ற மேமாஸம் 31-தேதியன்று இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார்கள்.

வ்யாபாரக் கமிஷனர் நியமனம்.

இந்தியாவுக்கும் ப்ரிட்டிஷ் நாடுகளுக்கும் நடந்துவரும் வ்யாபாரத்தை வ்ருத்திசெய்வது ஸம்பந்தமான விஷயங்களை கவனிக்க மிஸ்டர் சாட்விக் லண்டனில் வ்யாபாரக் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு உதவியாக ஒரு இந்தியரும் நியமிக்கப்படுவாராம்.

ஐரோப்பிய யுத்தம்.

ஜூன்மீ 1-தேதி.

கிழக்கு ஆப்ரிக்காவில் இதுவரை மழை பெய்துவந்ததால், சேசத்துருப்புகள் சும்மாயிருந்தன. இப்போது அவைகள் மறுபடியும் ஜெர்மானியர்களோடு சண்டைசெய்ய ஆரம்பித்திருக்கின்றன.

5-தேதி.

மேற்குப் போர் முகத்தில் மறுபடியும் சண்டை ஆரம்பமாகியிருக்கிறது. ரஷ்யர்கள் பாக்தாதுக்கு 240-மைல் வடகிழக்கில் லாகிஸ் ப்ரதேசத்திலுள்ள குன்றுகளைப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

ப்ரிட்டிஷார் யிப்ரஸுக்குப் பக்கத்தில் பலமாகச் சண்டைசெய்து, மெஸ்ஸின்ஸ் விட்ஷெட் குன்றையும், மெஸ்ஸின்ஸ், விட்ஷேட், ஊஸ்டாவெர்ன் முதலிய க்ராமங்களையும் பிடித்தார்கள்.

ஆஸ்ட்ரியர்கள், இட்டாலியர்கள் பிடித்துள்ள இடங்களில் சிலவற்றைத் திரும்பப் பிடித்திருக்கிறார்கள்.

12-தேதி.

ஜெர்மனிக்காக ஜெனரல் ஹிண்டன்பர்க்கும், ஆஸ்ட்ரியர்களும் கிழக்குப் போர்முகத்தில் சண்டையை நிறுத்திவைக்கும்படி ரஷ்யர்களைக்கேட்டதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

14-தேதி.

க்ரீஸின் அரசர் பட்டத்திலிருந்து விலகிக்கொண்டு தமது இரண்டாவது புத்ரரை அரசராக நியமித்திருக்கிறார்.

ப்ரிட்டிஷார் மெஸ்ஸின்ஸுக்குக் கிழக்கே முன்சென்று வருகிறார்கள்.

15-தேதி.

ஜெர்மன் ஏரோப்ளேன்கள் லண்டனின் கிழக்கு பாகத்தில் பறந்து வந்து வெடிகுண்டுகள் போட்டன. 104-பேர் இறந்துபோனார்கள். 423-பேர்களுக்குக் காயம்.

நானாசங்கதி.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்து ஸ்டேட் இஞ்ஜினியரின் புத்ரியாகிய மிஸ்ஸஸ் என். சிவகாமு என்பவள் பம்பாய் யூனிவர்ஸிட்டியின் எம். பி. பி. எஸ். என்னும் வைத்ய பரீக்ஷையின் ப்ரதம சாஸ்த்ரீய பரீக்ஷையில் தேறியிருக்கிறாளென்றும், மிஸ்ஸஸ் ஸத்யவதி லல்லுபாய் ஸமால்தாஸ் ஸ்காலர்ஷிப்பையடைந்திருக்கிறாளென்றும் 'ந்யூ இந்தியா' பத்ரிகை தெரிவிக்கிறது.

* * *

வடக்கே அலிகரில் மகமதியர்களுக்கு ஒரு காலேஜ் இருப்பது போதாமலிருப்பதால், வடக்கே டோராடூனில் இன்னொரு மகம்மதிய காலேஜ் ஸ்தாபிக்க சில மகம்மதிய ப்ரமுகர்கள் முயற்சிசெய்து வருகிறார்கள். இந்தக் காலேஜுக்கு ஸெண்டானிக் காலேஜ் என்ற பெயர் கொடுக்கப்படும்.

* * *

மிஸ்ஸஸ் பெஸண்ட், மிஸ்டர் வாடியா, மிஸ்டர் அருண்டேல் ஆகியமூவரையும் சென்னை கவர்ன்மெண்டார் பந்தோபஸ்தில் வைத்து சில குறிப்பிட்ட ஜில்லாக்களில் தான் வஸிக்கலாமென்றும், சென்னை நகருக்காவது, செங்கல்பட்டு ஜில்லாவுக்காவது வரக்கூடாதென்றும், எழுதுவது, ப்ரஸங்கம் செய்வது முதலியவை கூடாதென்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

முன்பு பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்த காசிநாத் த்ரியம்பக தெலாங் என்பவருடைய புத்ரரும் 'யங் இந்தியா' என்னும் பத்ரிகைக்கு அதிபருமான மிஸ்டர் பி. கே. டெலாங் 'ந்யூ இந்தியா' பத்ரிகையை வாங்கி நடத்திவருகிறார்.

* * *

ஜெர்மன் ஸப்மரீன் வ்யாபாரக் கப்பல்களாகிய 'டைப்சலாண்ட்,'' ''ப்ரமன்'' என்னும் கப்பல்களும், வேறு 120 ஜெர்மன் ஸப்மரீன்களும் ப்ரிட்டிஷாரால், பிடிக்கப்பட்டு ப்ரிட்டிஷ் துறைமுகங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்காவிலிருந்து ஸமாசாரம் எட்டுகிறது.

* * *

ராஜப்ரதிநிதி லார்ட் செம்ஸ்போர்டின் மூத்தகுமாரராகிய லெப்டினண்ட் ஆனரபிள் ஏ. தெஸிகர் என்பவர் மெஸபொடேமியாப் போர்முனையில் சண்டைசெய்து இறந்து போனதைக் கேட்டு விஸனிக்கிறோம்.

* * *

இந்தூர் ஸமஸ்தானத்து ஹோல்கார் மஹாராஜா தமது ஸமஸ்தானத்தில் இலவசமாயும் கட்டாயப் படித்தியும் ப்ரைமரிக் கல்வி கற்றுக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்.

* * *

இங்கலண்டில் ஸன்லைட் ஸோப் செய்யும் லீவர் ப்ரதர்ஸ் கம்பெனியார் மேற்குக் கரையில் ஒருஸோப்பு தொழிலை ஸ்தாபிக்கப்போகிறதாகத் தெரிகிறது.

* * *

காயம்பட்ட இந்திய வீரர்களுக்கு தொழில்கள் கற்பிப்பதற்காக பம்பாயில் ஒரு தொழில் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

* * *

டாக்காவின் நவாப் வங்காள ரெஜிமெண்டில் போர் வீரராகச் சேர்ந்திருக்கிறார்.



# ஜநாபிமானி

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்ற வழங்கியது.)

## THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. — பிங்கள௵ ஆடி௴. JULY—AUGUST 1917. — ஸஞ்சிகை 7. No. 7.


## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| ⅛ do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜநாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜநாபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | | | அயல்நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறு மாஸத்துக்கு... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப் பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | | | 5 | 0 | 0 |
| ½ | " | " | " | 2 | 8 | 0 |
| ¼ | " | " | " | 1 | 4 | 0 |
| ⅛ | " | " | " | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒரு பாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவச்யம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# CO-OPERATION IN MADRAS.
## சென்னையில் கோவாபரேஷன்.

சென்னை ராஜதானியில், சென்ற 1915-1916-ம் வர்ஷத்தில் கோவாபரேடிவ் ஸங்கங்களின் ஸங்க்யை 1600-லிருந்து 1800 ஆக உயர்ந்தது. அந்த வர்ஷம் 263 ஸங்கங்கள் புதிதாக ஏற்பட்டன. ஆனால் 63 ஸங்கங்கள் மூடப்பட்டுப் போயின. ஆகவே அந்த வர்ஷம் 200 ஸங்கங்கள்தான் அதிகம். மொத்தமிருந்த 1800 ஸங்கங்களின் விவரம் வருமாறு.

| | தொகை. | மெம்பர்கள். |
|---|---|---|
| ஸெண்ட்ரல் பாங்கிகள் ... | 11 | 960 நபர்கள் 608 ஸங்கங்கள். |
| மேற்பார்வை யூனியன்கள் ... | 31 | 604 ஸங்கங்கள். |
| விவஸாயிகளுக்கான நாணய ஸங்கங்கள் ... | 1,593 | 1,00,465 நபர்கள். |
| விவஸாயிகளுக்கான வாங்கி விற்கும் ஸங்கங்கள். ... | 8 | 296 ,, |
| மற்றவர்களுக்கான நாணய ஸங்கங்கள் ... | 134 | 28,771 ,, |
| உற்பத்தி ஸங்கங்கள் ... | 1 | 346 ,, |
| வாங்கி விற்கும் ஸங்கங்கள் ... | 13 | 4,911 ,, |
| மற்றவைகள் ... | 9 | 537 ,, |
| மொத்தம் ... | 1800 | 1,36,286 நபர்கள். 1,212 ஸங்கங்கள். |

சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் 3-மேற்பார்வை ஸங்கங்கள் நீங்கலான 1769 ஸங்கங்களில் 1,36,286 மெம்பர்கள் இருந்தார்கள். ஆக, சராசரியில் ஒரு ஸங்கத்துக்கு 77 மெம்பர்கள் விதமாகிறது. அதற்கு முந்திய வர்ஷத்தில் சராசரியில் ஒரு ஸங்கத்தில் 74 மெம்பர்களும், 1913-14-ம் வர்ஷத்தில் 75 மெம்பர்களும் இருந்தார்கள்.

ஸங்கங்களுடைய நடைமுதல் பணம் 1914-15-ம் வர்ஷத்தில் 140.89 லக்ஷம் ரூபாயாக இருந்தது. சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் 168.89 லக்ஷம் ரூபாயாக விருந்தது.

செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 13.69 லக்ஷம் ரூபாயிலிருந்து 16.12 லக்ஷம் ரூபாயாக உயர்ந்தது. ஸெண்ட்ரல் பாங்கிகளல்லாத இதர ஸங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருந்தும் இதர ஸங்கங்களிலிருந்தும் வாங்கின கடன் தொகை 1914-15-ம் வர்ஷத்தில் 51.76 லக்ஷம் ரூபாயாக இருந்ததிலிருந்து 1915-16-ம் வர்ஷத்தில் 59.47 லக்ஷம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது. ரிஸர்வ் பண்டும் 8.06 லக்ஷம் ரூபாயிலிருந்து 8.50 லக்ஷம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

### பற்பல ஜாதிகளும் கோவாபரேஷனும்.

பற்பல ஜாதிகளும் வகுப்பார்களும் எவ்வளவுதூரம் கோவாபரேஷனால் நன்மையடைந்து வருகிறார்களென்பது அடியில்வரும் அட்டவணையால் விளங்கும்.

| மொத்தம் மெம்பர்களில் | |
|---|---|
| ப்ராம்மணர்கள் ... | 24,465 |
| ப்ராம்மணர்களல்லாத ஹிந்துக்கள் ... | 87,231 |
| கிறிஸ்தவர்கள் ... | 9,116 |
| மகம்மதியர்கள் ... | 7,536 |
| பஞ்சமர்கள் ... | 6,483 |
| இதர வகுப்பார்கள் ... | 1,455 |
| மொத்தம்... | 1,36,286 |

ஸ்டோர்கள்போன்ற ஸாமான்கள் வாங்கி விற்கும் ஸங்கங்களில் ப்ராம்மணர்களின் தொகை 2,783. ப்ராம்மணரல்லாத ஹிந்துக்களின் தொகை 1,539, கிறிஸ்தவர்கள் 272, மகம்மதியர்கள் 316. இப்படி இந்த ஸங்கங்களில் ப்ராம்மணர்களே அதிகமா யிருப்பதால், படித்த வகுப்பார்களே இந்த விற்பனை ஸங்கங்களை ஆதரிக்கிறார்களென்று தெரியவருகிறதென, கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் தெரிவிக்கிறார்.



விவஸாயிகளல்லாதவர்கள் விவஸாயிகளுக்கான ஸங்கங்களை அதிகம் நாடுகிறார்களென்று தெரிகிறது. 1914-15-ம் வர்ஷத்தில் விவஸாயிகளுக்கான ஸங்கங்களில் 10 விவஸாயிகளுக்கு 1 இதரர் விதம் மெம்பர்களிருந்தார்கள். 1915-16-ம் வர்ஷத்திலோ 7 விவஸாயிகளுக்கு ஒரு இதரர் விதம் மெம்பர்களிருந்தார்கள்.

இதோடு பட்டணங்களிலுள்ள விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் இதரர்களுக்கான ஸங்கங்களாக மாற ஆரம்பித்திருக்கின்றன. விவஸாயிகளல்லாதவர்களுக்கான ஸங்கங்களில் மாத்ரம், ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் மெம்பர்களாகச் சேரலாமென்று கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருப்பதால், அவர்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்வதற்காக ஸங்கங்களின் தன்மையை இவ்விதம் மாற்றி வருகிறார்கள் என்று கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் சொல்லுகிறார்.

### ஸெண்ட்ரல் பாங்கிகள்.

1915-16-ம் வர்ஷத்தில் ஒரு ஸெண்ட்ரல் பாங்கி புதிதாக ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பெயர் கிறிஸ்டியன் ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி என்பது. கிறிஸ்தவர்களுக்கான கோவாபரேடிவ் ஸங்கங்களுக்குப் பணம் கடன் கொடுத்து உதவுவதே இந்த பாங்கியின் முக்ய நோக்கமாகும்.

இரண்டு ஜில்லா பாங்கிகளைத் தவிர, இதர பாங்கிகளிலெல்லாம் கோவாபரேடிவ் ஸங்கங்கள் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஸங்கங்களைச் சேர்த்துக்கொள்ளாத பாங்கிகள் ஸேலம் ஜில்லா பாங்கியும், திருச்சிறுப்பள்ளி ஜில்லா பாங்கியுமாகும். இவற்றுள் ஸேலம் பாங்கியார் ஸங்கங்களை மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளும்பொருட்டு பைலாக்களை மாற்றியிருக்கிறார்கள்.

### விவஸாயிகளுக்கான ஸங்கங்கள்.

சென்ற 1915-16-ம் வர்ஷக் கடைசியில் இருந்த விவஸாயிகளுக்கான நாணய ஸங்கங்களின் தொகை 1,593. விவஸாயிகளுக்கான இதர ஸங்கங்கள் 8. ஆக மொத்தம் 1601. இந்த ஸங்கங்களின் நடை முதல் பணம் அந்த வர்ஷத்தில் 74.95 லக்ஷம் ரூபாயாகும். அதற்கு முந்திய வர்ஷத்தில் 64.52 லக்ஷம் ரூபாயாகும். இவைகளின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 1914-15-ல் 4.07 லக்ஷம் ரூபாய். 1915-16-ம் வர்ஷத்தில் 4.53 லக்ஷம் ரூபாயாகும்.

விவஸாய ஸங்கங்களில் கடன் கொடுக்கும் விஷயத்தில் சில சீர்திருத்தங்கள் நடக்கவேண்டியிருக்கின்றனவென்று தெரிகிறது. பஞ்சாயத்தார் இனிமேல் தங்கள் இஷ்டம்போல் கடன் தொகைகளை விநியோகம் செய்யமுடியாது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் கடன் பத்ரத்தில் இன்னின்ன காலத்தில் தவணையாகக் கடனைச் செலுத்துகிறதென்பதைக் குறிப்பிட வேண்டும். முன்பு பஞ்சாயத்தார்கள் ஸங்கத்துக்கு வந்த கடன் தொகையில் பெரும்பாகத்தை தங்களுக்கும், தங்கள் பந்துக்கள், ஸ்நேஹிதர்களுக்கும் கொடுத்துவந்தார்கள். இதர மெம்பர்களுக்கு அதிக பணம் கிடைப்பதில்லை. இப்போது ஸங்கத்திலுள்ள மெம்பர்களில் பெரும்பான்மையோர் ஒப்புக்கொண்டால் தான் பஞ்சாயத்தார்கள் கடன் பெறலாமென்று பைலா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், ஒரு பஞ்சாயத்தார் தாம் கொடுக்கவேண்டிய கடனை கெடுவுக்குப் பிறகு 3-மாஸம் வரையில் கொடுக்காமலிருந்தால், அவர் பஞ்சாயத்து வேலையிலிருந்து நீங்கிவிட்டதாக எண்ணப்படும் என்றும் ஒரு பைலா ஏற்பட்டிருக்கிறது.

ஸங்கம் புதிதாகக் கடன் வாங்க ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு மனுப்போடும்போது, இன்னின்னருக்கு இன்ன காரியத்துக்காகக் கடன் வேண்டுமென்று ஒரு ஸ்டேட்மெண்ட் தயார் செய்து அனுப்பவேண்டும். அந்த மனுவோடு ஸங்கத்து மெம்பர்களின் ஸொத்து விவர ஸ்டேட்மெண்டும் அனுப்பவேண்டியது அவசியம். அதில் மெம்பர்களுக்கு உள்ளஸொத்து, கடன், ஆகிய இவைகள் கண்டிருப்பதோடு, ஒவ்வொரு மெம்பரும் தவணைக்கு இன்ன தொகை விதம் கடனைத் திருப்பிச் செலுத்துவதாகச் சொல்லுவதற்கு ஏற்ப அவருக்கு வரும்படி கிடைத்து வருகிறதா என்பதும் விவரமாய்க் கண்டிருக்கும்.

ஸ்வல்ப காலத் தவணைக் கடன்கள் விஷயத்தில் ஸங்கங்களுக்கு யாதொரு நிபந்தனையும் கிடையாது. உயர்ந்தது எவ்வளவு தொகை வாங்கலாமோ, அவ்வளவு தொகை வரையில் கடன் வாங்கலாம். ஆனால் நீண்ட காலத்தவணைக்கடன்களோ, கடனைத் திருப்பிக்கொடுப்பதில் கெடுத்தவறுதலை என்று பேரெடுத்த ஸங்கங்களுக்கு மாத்ரம் கொடுக்கப்படும். ஸெண்ட்ரல் பாங்கிகளுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்தாகிற வரையில், வஸூலான கடன் தொகையிலிருந்து மறுபடியும் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது. மெம்பர்களில் பெரும்பாலார் கடன் தொகைகளை சரியானகாலத்தில் திருப்பிக்கொடுக்காமலிருந்தால், வஸூலான தொகையிலிருந்து மறுபடியும் கடன்கொடுப்பதுகூடாது.

சென்ற வர்ஷம் வ்யவஸாயிகளுக்கான விற்பனை ஸங்கங்கள் 5 இருந்தன. இவைகள் மெம்பர்களுக்குவேண்டிய ஸாமான்களை வாங்கி விற்றன. இவைகளைத்தவிர இரண்டு தான்ய பாங்கிகளும் நடந்துவருகின்றன.

### யூனியன்கள்.

சென்ற வர்ஷத்தில் யூனியன்களின் தொகை 20-லிருந்து 31-ஆக உயர்ந்தது. அவைகளில் சேர்ந்துள்ள ஸங்கங்களின் தொகையும் 400-லிருந்து 604-க்கு உயர்ந்திருக்கிறது. இவற்றில் வட ஆற்காட்டில் 4-ம், தென்னாற்காட்டில் 5, செங்கல்பட்டில் 6-ம், கோயம்புத்தூர், திருச்சிறாப்பள்ளி ஆகிய இவைகள் ஒவ்வொன்றிலும் 4-ம், கோதாவரி, குண்டூர் இந்த ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் 2-ம், க்ருஷ்ணா, சென்னை, சேலம், விசாகப்பட்டணம் ஆகிய இவைகள் ஒவ்வொன்றிலும் 1-ம் இருக்கின்றன. இந்த யூனியன்களுக்குச் சென்ற வர்ஷத்தில் 7,086 ரூபாய் செலவழிந்தது. இந்த யூனியன்களின்கீழ் 27 ஸூபர்வைஸிங் ஸிப்பந்திகள் வேலைபார்த்து வருகிறார்கள்.

சென்னை ப்ரொவின்ஷியல் கோவாபரெடிவ் யூனியனிலும், தென்னாற்காடு ஜில்லா ஸூபர்வைஸிங் யூனியனிலும் ஸங்கங்களேயன்றி, இதர யூனியன்களும் மெம்பர்களாயிருக்கின்றன.

மேற்பார்வைக்கு வேண்டியிருக்கும் செலவுக்காக கோவாபரெடிவ் ஸங்கங்கள் தாங்கள் வாங்கும் கடன் தொகையின்மேல் 100-க்கு $\frac{1}{2}$ விதம் பணம் கொடுப்பதாக ஸம்மதித்திருக்கின்றன. ஸங்கங்களுக்குக் கடன் கொடுக்கும் பாங்கிகளில் பல நூற்றுக்கு $\frac{1}{4}$ விதம் கொடுக்க ஸம்மதித்திருக்கின்றன. ஆனால் பாங்கிகளும் 100-க்கு $\frac{1}{2}$ விதம் கொடுத்தால்தான் ஸூபர்விஷனுக்கு அதாவது மேற்பார்வைக்கு ஆகும் செலவுக்கு சரிக்கட்டுமென்றும் கோவாபரெடிவ் ரெஜிஸ்ட்ரார் அபிப்ராயப்படுகிறார்.

கதாசரித் ஸாகரம் ... 1 4 0
ராமாயணம் நடேச சாஸ்திரிகளால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்



## BOOKS MADE OF METAL PAPER.
## உலோகக் காகிதங்களுள்ள புஸ்தகங்கள்.

எழுதுவதற்கும் புஸ்தகங்கள் அச்சடிப்பதற்கும் வேண்டிய காகிதங்கள் விசேஷமாக கந்தைத்துணி, மரம், புல் முதலியவைகளிலிருந்து செய்யப்படுகின்றன. இவைகளில் மரம் அதிகமாய் உபயோகப்படுகிறது. தற்காலம் கல்வி அபிவ்ருத்தியால் புஸ்தகங்களும் பத்திரிகைகளும் அதிகமாக அச்சிடப்படுகின்றன. ஆகையால் உலகத்திலுள்ள காடுகள் சீக்ரம் அழிந்துபோகுமென்றும், சீக்ரத்தில் காகிதப் பஞ்சம் ஏற்படுமென்றும் சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். அப்படிக் காகிதத்தட்டு ஏற்படாமலிருக்க தாமஸ் அல்வா எடிஸன் என்னும் அமெரிக்க சாஸ்த்ர நிபுணர் உலோகங்களால் காகிதம் செய்து உபயோகிக்கலாமென்றும், அப்படிசெய்வது ஸாத்யமென்றும் தெரிவிக்கிறார். அவர் சொல்லுவதாவது.

ஒரு மின்ஸார ரஸாயனமுறையால் எஃகு, தாம்ரம், நிக்கல் ஆகிய மூன்று உலோகங்களிலிருந்து மெல்லிய கடுதாசிபோன்ற தகடுகள் செய்யலாம். இந்தத் தகடுகளில் அச்சுமையால் அச்சிடலாம். ஆனால் இந்த மூன்று உலோகங்களிலும் கடுதாசி செய்வதற்கு ரொம்ப ச்லாக்யமானது நிக்கல்தான். இந்த உலோகத்தால் ஒரு அங்குலத்தில் 20,000-ல் ஒரு பாகம் கனமுள்ள மெல்லிய தகடுகள் தயார் செய்யலாம். இந்தத் தகடுகள் ஸாதாரண கடுதாசியைவிட மலிவாயும், உறுதியாயும், நன்றாய் வளையக்கூடியனவாயும் இருக்கும். ஸாதாரணமாய் ஒரு அங்குலகனமுள்ள புஸ்தகத்தில், 350 பக்கங்கள் இருக்கும். ரொம்பவும் மெல்லியதான இந்தியா பேபர் என்னும் கடுதாசியை உபயோகித்தால், ஒரு அங்குலத்துக்கு 1,500 பக்கங்கள் இருக்கும். நிக்கல் கடுதாசி உபயோகித்தால் ஒரு அங்குலத்துக்கு 20,000 பக்கங்கள் இருக்கும்.

மிஸ்டர் எடிஸன் சில காலமாக நிக்கல் நூல்கள் செய்துவருகிறாராம். ஆனால் இவைகளை அச்சடிக்கவும் எழுதவும் உபயோகிக்கவில்லை. வேறு காரியங்களுக்கு உபயோகித்து வருகிறாராம்.

ஸாதாரணக் கடுதாசியில் மை பற்றுவது போலவே, நிக்கல் கடுதாசியிலும் மைபற்றும்படி செய்யலாம். ஆனால் இதற்கு வேண்டிய மையை விசேஷ சரக்குகள் சேர்த்துச் செய்ய வேண்டியிருக்கும். இப்போதுள்ள அச்சடிக்கும் மையும் நிக்கல் கடுதாசியில் ஸுமாராகப் பிடிக்கிறது. இந்த நிக்கல் கடுதாசியில் நல்ல ஹாப்டோன் படங்களும் அச்சடிக்கலாம். எந்த வர்ண மையாலும் அச்சடிக்கலாமாம். ஆகவே, பொதுவாய்ச் சொல்லுமிடத்து ஸாதாரணக் கடுதாசியில் என்னென்ன அச்சடிக்கலாமோ அதையெல்லாம் நிக்கல் கடுதாசியிலும் அச்சடிக்கலாம்.

மிஸ்டர் எடிஸனுடைய ஆராய்ச்சிசாலையில் உலோகக் கடுதாசி தயார் செய்திருக்கிறார்கள். ஐந்து சதுர அடி விஸ்தீரணமுள்ள கடுதாசி செய்ய $1\frac{1}{2}$ நிமிஷம் பிடிக்கிறதாம். இப்போது அந்த ஆராய்ச்சிசாலையில் தினந்தோறும் ஒரு டன் நிறையுள்ள கடுதாசி செய்ய முடியுமாம். லாபம் கிடைக்கவேண்டுமானால், இதற்கென்று பெரிய தொழில் சாலை ஏற்படுத்தி, அதில் பெரிய சுருளாகக் கடுதாசி செய்யவேண்டும்.

நிக்கல் கடுதாசியால் செய்த புஸ்தகங்களுக்கு அதே உலோகத்தாலாவது, எஃகினாலாவது அட்டைகள் செய்துபோடலாம். மேலும் அந்த அட்டைகளில் பல வர்ணங்களில் சித்ர வேலைப்பாடுகள் அமைத்து, துணிபோலவோ, தோல்போலவோ காணப்படும்படி செய்யலாம்.

ஸாதாரண கடுதாசிகளாலான புஸ்தகங்கள் 100 வர்ஷங்களுக்குமேல் உபயோகமற்றவை

பாகி விடுகின்றனவென்று லைப்ரரிக்காரர்கள் சொல்லுகிறார்கள். நிக்கல் புஸ்தகங்களுக்கு இந்தக்குறை கிடையாது. இவை ஜலத்தால் கெடுதியடைவதில்லை. ஜலம்பட்ட புஸ்தகங்களைத் துடைத்து எடுத்துக்கொள்ளலாம். கடுஞ்சூட்டில் புஸ்தகம் உருகிப்போகுமென்றாலும், ஸாதாரண சூட்டினால் அவை கெடுதலடையா. அவை நெருப்புப்பற்றி எரியமாட்டா.

உலோகப்புஸ்தகங்களில் இன்னொரு ஸௌகர்யமுண்டு. 40,000 பக்கங்கள்கொண்ட புஸ்தகம் ஒரு அங்குலம் கனந்தானிருக்கும். இதில் எவ்வளவு விஷயங்கள் அடங்குமோ அவ்வளவு விஷயங்களையும் அச்சிட ஸாதாரண கடுதாசியில் ஒவ்வொன்றும் 200 பக்கங்கள் கொண்ட 200 புஸ்தகங்கள் வேண்டியிருக்கும். 200 புஸ்தகங்களையும் அடுக்கிவைத்தால் 5 அடி 6 அங்குலம் உயரமிருக்கும். ஆகவே அநேக நூல்களை ஒரே ஒரு நிக்கல் புஸ்தகத்தில் அச்சிட்டு விடலாம்.

மேலும் நிக்கல் புஸ்தகங்கள் வந்துவிட்டால் லைப்ரரி கட்டிடங்கள் ஸ்தாபிப்பதற்கு ஏராளமாய்ப் பணம் செலவழிக்க வேண்டியதில்லை. நிக்கல் புஸ்தகங்கள் வைக்க அதிக இடம் வேண்டியிருக்காது.

தற்போது நிக்கல் கடுதாசிசெய்யும் முறையில் ஒருராத்தல் நிக்கல் கடுதாசிசெய்ய 3 ரூபாயாகும். யுத்தமில்லாத ஸாதாரண காலங்களில் ஸாதாரண கடுதாசி ராத்தல் ஒரு அணாமுதல் 3 அணாவரை விற்றுக்கொண்டிருந்தது. ஆனால் ஒரு ராத்தல் நிக்கல் கடுதாசியின் விஸ்தீரணம் ஒரு ராத்தல் ஸாதாரண கடுதாசியின் விஸ்தீரணத்தைவிட ரொம்ப அதிகமாயிருப்பதால், நிக்கல் கடுதாசியே மலிவாகும்.

## CASUARINA AS FODDER.

By PANDIT V. SUBRAMANIA AIYAR.

### சவுக்குப் பயிர் மாட்டுத் தீவனமாவது.

பஞ்சம் உண்டாகும்போது இந்தியாவின் சிலபாகங்களில் மாடுகளுக்கு சப்பாத்திக்கள்ளியை தீவனமாக உபயோகிப்பதுண்டு சப்பாத்திக் கள்ளியின் முள்ளை அதிலிருந்து நீக்கிவிட்டு, பிறகு துண்டுதுண்டாக நறுக்கி மாடுகளுக்கு அதைக்கொடுத்து வந்தார்கள். அதனால் மாடுகள் நல்ல புஷ்டியை அடைந்துவந்ததாகவும், நல்ல பால்கொடுத்து வந்ததாகவும் சொல்லப்பட்டது. இது பஞ்ச காலத்தில் மாடுகளைக் காப்பாற்ற ஏற்ற தீவனப்பொருள் என்று முதலில் பல்லாரியிலிருந்து காலஞ்சென்ற ஸபாபதி முதலியார் தெரிவித்திருந்தார். இன்னும் அநேக பாதிரிமார்களும் இதைப் பரிசோதித்துப் பார்த்து, இதேவிதமாக அபிப்ராயங்கொண்டிருந்தார்கள். அல்லாமல், ஆஸ்ட்ரேலியா, யுனைடட் ஸ்டேட்ஸின் மேற்பாகம் முதலியவிடங்களில் முள்ளே இல்லாமல் ஒரு சப்பாத்தி இருப்பதாகப் பின்னிட்டுத் தெரியவந்தது. அதில் முள்ளெடுக்கும் சிரமமே யில்லை. பஞ்ச காலங்களில் சில விவஸாயிகள் அப்பயிரை மாடுகளுக் கிட்டுவந்தார்கள். முள்ளோடுகூடிய சப்பாத்தியைவிட முள்ளில்லாத இந்த சப்பாத்தியை மாடுகள் அதிக ப்ரியத்தோடு தின்கின்றனவாம். சப்பாத்துக்கள்ளி பஞ்சகாலத்தில் மாடுகளுக்கு ரொம்ப உபயோகமாயிருந்தாலும், மற்ற காலத்தில் போட்ட இடத்தில் பிசாசுபோல் மண்டிப்போய் இதரப் பயிர்களுக்குத் தொந்திரவு கொடுத்துவருவதால், முள்ளுடையதானாலும் சரி முள்ளில்லாததானாலும் சரி, ஜனங்கள் அதை அதிகமாய்விரும்பி வளர்ப்பதில்லை. ஆகையால் ஜலத்தட்டுள்ள பஞ்ச காலத்தில் மாடுகளுக்கு உதவக்கூடிய பயிர்கள் வேறு உண்டா என்று பார்க்கவேண்டியது அவச்யமாகிறது. சென்னை "மெயில்" பத்ரிகைக்கு ஆஸ்ட்ரேலியாவைச் சேர்ந்த நியூ ஸௌத்வேல்ஸ் மாகாணத்திலிருந்து ஒரு நிருபர் சவுக்குமரத்தின் தழை பஞ்சகாலத்தில் மாடுகளுக்குத் தீவனமாக உபயோகப்படுகிறதென்று எழுதியிருக்கிறார். சவுக்குப்பயிர் முதல் முதலில் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து இந்தியாவுக்குக்கொண்டு வரப்பட்டுப் பயிர் செய்யப்பட்டது. இப்போது மணற்பாங்கான இடங்களிலும், காற்றோட்டமான கடற்கரை யோரங்களிலும் இப்பயிர் மண்டி சாகோப சாகைகளுடன் வானோங்கி வளம்பெற வளர்ந்திருப்பதைப் பார்க்கலாம். இது விறகுக்கும், இன்னும் வீடுகள் கட்டுவதற்கும் விசேஷமாக உபயோகப்படுகிறது. இவ்வுபயோகங்கள் நமது ஜனங்கள் எல்லாருமறிந்தவை. ஆனால் வெகு காலமாய் இந்நாட்டில் பயிராகிற சவுக்கு மாடுகளுக்குப் பஞ்சகாலத்தில் தீவனமாய் உபயோகப்படக்கூடியது என்னும் விஷயம் ஒருவரும் இதுவரையில் அறிந்ததில்லை. ஆகையால் அப்படிப்பட்ட ஸமாசாரம் முக்யமானது. நியூ ஸௌத் வேல்ஸில் முப்பத்தைந்து வர்ஷம் மாடுவளர்ப்பதில் அநுபோகம்பெற்ற ஒருவர் இந்த சவுக்குப்பயிரின் மாட்டுத்தீவன உபயோகத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.



"1915-ம் வர்ஷம் ஸெப்டம்பர் மாஸம் முதல் நவம்பர் மாஸம்வரையில் 160 மாடுகளை சவுக்குப்பயிர்த் தீவனம் கொடுத்து வளர்த்தேன். பஞ்சம் இன்னும் பலத்துப்போய் விட்டபடியால், கோல்பர்ன் என்னுமிடத்தில் நடந்த விற்பனையில் 100 மாடுகளை விற்றுப்போட்டேன். அப்புறம் அடுத்த 1916-ஆம் வர்ஷம் மே மாஸம் வரையில் பாக்கி 60 மாடுகளையும் சவுக்குப் பயிர் ஆஹாரம் போட்டு வளர்த்துவந்தேன். 1915-ஆம் வர்ஷம் கடைசிக்குள், 12 பசுக்கள் கன்றுபோட்டன. சவுக்குப் பயிரையே கன்றுகளுக்கும் ஆஹாரமாகப் போட்டு அவைகள் செத்துப் போகாமல் காப்பாற்றினேன். 1916-ஆம் வர்ஷம் மே மாஸம்வரையில் பஞ்சம்வெகு கடுமையாக இருந்தது. இதுவரையில் பார்த்த பஞ்சம் அதிலும் கொடியதாயிருந்ததில்லை. ஆனால் இப்பயிராஹாரம் கொடுத்து வளர்த்ததில், ஒருமாட்டையாவது நான் இழக்கவில்லை. மாடுகளையன்றி ஸுமார் 700 ஆடுகளையும் இந்தப் பஞ்சகாலத்தில் நான் இந்தப் பயிர்த்தீவனமே கொடுத்து வளர்த்தேன்."

ஆகவே, மேற்கூறிய நிருபர் சொல்லும் ப்ரகாரம், சவுக்குப் பயிர் மாடுகளுக்கு ஏற்ற தீவனமென்று தெரிகிறது. கல்விப் பயிற்சியிலும், ஆராய்ச்சியிலும் முன்னேறி நாகரிகமடைந்து கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் இப்பயிரின் உபயோகம் இன்னதென்று நியூஸௌத்வேல்ஸில் கண்டுபிடித்த மாதிரி இந்தியாவில் பரிசோதனைசெய்து பாராததே இதுவரையில் நமக்கு அதன்குணம் தெரியாமலிருந்ததற்குக் காரணமாகும். இருந்தாலும், இப்பயிர் செய்யுமிடங்களில் மாடுகள் புகாமலும், ஆடு கடிக்காமலும், இப்பயிர் வளர்ந்து ஆளாகிறவரையில்வேலிகட்டிக் காப்பது வழக்கமுண்டு. அப்படிச் செய்வதிலிருந்தே இப்பயிர் ஆடுமாடுகளால் விரும்பியுண்ணப்படும் ஆஹாரம் என்று ஊஹமாய் அறியலாம். இப்போது மேற்கூறிய நிருபர் உணர்ந்தசொல்லிய பின்னேயாவது இப்பயிரின் உபயோகத்தை அறிந்து இந்தியாவாஸிகள் இப்பயிரைப்போற்றிப் பாதுகாப்பதுடன், அது விஷயமாய் இன்னும் விசேஷச்ரத்தை வகிப்பாராக.

பண்டித ஸுப்ரமண்ய ஐயர்.

# SEA-BORNE TRADE OF THE MADRAS PRESIDENCY.

## சென்னை ராஜதானியின் கடல் வ்யாபாரம்.

சென்ற 1916-17-ம் வர்ஷத்தில் சென்னை ராஜதானியின் கடல் வ்யாபார நிலைமை எப்படியிருந்த தென்பது அடியில் வரும் அட்டவணையால் நன்கு விளங்கும்.

| — | 1915-16 | 1916-17 | 1916-17ல் அதிகம் அல்லது குறைவு. |
|---|---|---|---|
| வ்யாபாரிகளின் ஸொந்த வ்யாபாரம். | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. |
| 1. அன்ய வ்யாபாரம் :— | | | |
| இறக்குமதி. | 11,56·07 | 12,87.58 | 1,31·50 |
| ஏற்றுமதி. | 24,92·83 | 26,81·24 | 1,88·41 |
| மொத்தம் அன்ய வ்யாபாரம். ... ... ... | 36,48·90 | 39,68·83 | 3,19·92 |
| 2. உள்நாட்டுக் கடல்கரை வ்யாபாரம்:— | | | |
| இறக்குமதி. ... ... ... ... | 6, 63·39 | 6,18·20 | - 45·19 |
| ஏற்றுமதி. ... ... ... ... | 4,91·82 | 5,63·83 | 72·01 |
| மொத்தம் உள்நாட்டுக் கடல்கரை வ்யாபாரம். ... | 11,55·21 | 11,82·04 | 26.82 |
| மொத்தம் வ்யாபாரிகளுடைய ஸொந்த வ்யாபாரம். ... | 48,04·12 | 51,50·87 | 3,46·74 |
| கவர்ன்மெண்டாருக்காக நடந்த வ்யர்பாரம் ... | 81·65 | 3,04·09 | 2,22·43 |
| மொத்தம் வ்யாபாரம். ... | 48,85·78 | 54,54·96 | 5,69·18 |

மேலே காட்டிய அட்டவணையால் சென்ற 1916-17-ம் வர்ஷத்திய வ்யாபாரத்தின் மதிப்பானது அதற்குமுந்திய வர்ஷத்தின் மதிப்பை விட 5,69 லக்ஷம் ரூபாய் அதிகமாக இருக்கிறது. இது நூற்றுக்கு 12-வீதம் அதிகமாகும். யுத்தத்துக்கு முந்திய காலமாகிய 1913-14-ம் வர்ஷத்தோடு முடிகிற 5-வர்ஷத்தின் சராசரியைவிட நூற்றுக்கு 4-வீதம் அதிகமாயிருக்கிறது. யுத்தத்தினால் வ்யாபாரத்துக்கு அஸௌகர்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வ்யாபாரக் கப்பல்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. கப்பல்சார்ஜோ ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறது. ஏற்றுமதி விஷயமாய் பல நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் சென்ற வர்ஷத்திய வ்யாபாரத்தின்மதிப்பு மேற்சொன்னபடி 1913-14-ம் வர்ஷத்தோடு முடிகிற 5-வர்ஷத்தின் சராசரியைவிட 100-க்கு 4-பங்கு வீதம் உயர்ந்திருப்பது ஆச்சர்யமாகத் தோற்றலாம். ஆனால் உண்மை என்னவென்றால், அநேகமாய் எங்கும் எல்லா ஸாமான்களும் விலை ஏறி விற்றுவருகிறதால் இவ்வித வ்யாபாரத்தின் மதிப்பு அதிகமாகக் காட்டுகிறதேயொழிய, பார்க்கப்போனால், ஏற்றுமதியான சரக்குகளின் அளவு குறைவே.

சென்றவர்ஷத்தில் யுனைடட் கிங்டம், அமெரிக்க ஐக்ய நாடுகள், ஜப்பான் ஆகிய இந்த நாடுகள் சென்னையோடு செய்து வந்த வ்யாபாரம் அதிகரித்திருக்கிறது. கவர்ன்



மெண்ட் வ்யாபாரம் உள்பட அன்ய தேச வ்யாபாரமானது 37,14 லக்ஷம் ரூபாயிலிருந்து 42,45 லக்ஷம் ரூபாய்க்கு உயர்ந்தது. அதாவது நூற்றுக்கு 14-வீதம் அதிகம். இந்தியக் கரையோர வ்யாபாரமானது (1915-16-ல்) 11,72 லக்ஷம்ரூபாயிலிருந்து, 1916-17ம் வர்ஷத்தில் 12,10 லக்ஷம் ரூபாயாக உயர்ந்தது. அதாவது நூற்றுக்கு 3-வீதம் அதிகம். கவர்ன்மெண்ட் வ்யாபாரத்தைத் தள்ளிவிட்டு வ்யாபாரிகளின் ஸொந்த வ்யாபாரத்தை மட்டும் பார்த்தால், அன்யவ்யாபாரம் நூற்றுக்கு 9-வீதமாகவும், கரையோர வ்யாபாரம் நூற்றுக்கு 2-வீதமும் உயர்ந்தது.

அன்ய தேச வ்யாபாரத்தில் கவர்ன்மெண்டுக்கு வந்த ஸாமான்கள் தவிர மற்றவைகளின் இறக்குமதியானது 1915-16-ம் வர்ஷத்தில் 11,53·20 லக்ஷம் ரூபாயாகவிருந்ததிலிருந்து சென்ற வர்ஷம் 12,85.59 லக்ஷம் ரூபாயாக உயர்ந்தது. அதாவது நூற்றுக்கு 11 வீதம் அதிகம். இதற்குக் காரணம், பருத்தியால் செய்த சரக்குகள், கடுதாசி, கடுதாசி அட்டை, பருத்திநூல், மோட்டார்வண்டிகள், வாஸனை த்ரவ்யங்கள், உலோகங்கள், ரஸாயனப் பொருள்கள், சர்க்கரை, யந்த்ரங்கள், கம்பளி கெசவுகள் ஸோப் ஆகிய இவைகளின் விலை ரொம்ப அதிகமாயிருந்ததே. ரெயில்லே ஸாமான்கள், நெருப்புப்பெட்டி, ஸிமெண்ட் ஆகிய இவைகளின் இறக்குமதி குறைந்துபோய்விட்டது.

ஏற்றுமதியின் மதிப்பானது (1915-16-ம்) வர்ஷத்தில் 24,58·27 லக்ஷம் ரூபாயாக இருந்ததிலிருந்து 1916-17-ம் வர்ஷத்தில் 25,91·27 லக்ஷம் ரூபாயாக உயர்ந்துவிட்டது. அதாவது நூற்றுக்கு 5-வீதம் அதிகம். கவர்ன்மெண்ட் மேற்பார்வையில் ஏற்றுமதியான மாட்டுத்தோலின் மதிப்பையும் சேர்த்தால் ஏற்றுமதியானது சென்றவர்ஷம் நூற்றுக்கு 13-வீதம் அதிகமாயிற்றென்னலாம். முக்யமாய் தோல், பருத்தி, எண்ணெய், மருந்துச் சரக்குகள், பதனிடாத ஆட்டுத்தோல், ரப்பர், சர்க்கரை, மீன், உரங்கள், சணல்நார், உயிரோடிருக்கும் ம்ருகங்கள் ஆகிய இவைகளின் மதிப்புத்தான் அதிகமாயிற்று. தான்யங்கள், பருப்புகள், எண்ணெய் வித்துக்கள், நீலம், காப்பிக்கொட்டை, பருத்திநூல் ஆகிய இவை விலை குறைந்துவிட்டது.

உள்நாட்டுக் கரையோர வ்யாபாரத்தில் இறக்குமதியானது நூற்றுக்கு 7-வீதம் குறைந்தது. காரணம் தான்யங்களும் பருப்பு வகைகளும் குறைவாய் வந்ததே. ஆனால் ஏற்றுமதியோ நூற்றுக்கு 14-வீதம் அதிகரித்தது. காப்பிக்கொட்டை, தேங்காய், நிலக்கடலை எண்ணெய், உரங்கள், சர்க்கரை, எண்ணெய் வித்துக்கள் ஆகிய இவைகள் அதிகமாக ஏற்றுமதியானதே இதற்குக் காரணமாகும்.

### புதிதாய் வந்த புஸ்தகங்கள்.

தென் இந்தியா விவசாய நூல் ... 1 4 0
ஜி. காமாக்ஷிராவ் கிம்பல்கார் எழுதியது. விவஸாய ஸம்பந்தமான பல விஷயங்கள் அடங்கியது.

நோயற்ற வாழ்வே வாழ்வு ... 1 6 0
டி. எஸ். சால்வாடி அய்யர் இயற்றியது. சாஸ்த்ர விஷயங்கள், ஸ்வாகாதாரம், ப்ரஸவம், குழந்தை வளர்ப்பு, பிரதம சிகித்ஸை, தொற்று வ்யாதிகள் முதலியவைகளைப் பற்றி தெளிவான விவரங்கள் அடங்கியது.

ரத்ன ப்ரகாசம் ... 0 8 0
இதில் முத்து, பவளம், வைரம், புஷ்பராகம், கெம்பு, மாணிக்கம், நீலம், பச்சைக்கல் முதலிய பல ரத்னங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷிக்கும் முறைகள், அவைகளை அணிவதால் உண்டாகும் பலன்கள் முதலியவை விரிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. யாவருக்கும் உபயோகமான புஸ்தகம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

# RINGS.

## மோதிரங்கள்.

மோதிரம் போட்டுக்கொள்ளும் வழக்கமானது ஆதிகாலந்தொட்டு எல்லா தேசத்திலும் இருந்து வருகிறது. இவ்வழக்கம் எப்போது, எந்த தேசத்தில் முதல் முதலில் உண்டாயிற்றென்று ஒருவரும் சொல்வதற்கில்லை. மேல்நாடுகளைமட்டும் கவனிப்போமானால், பூர்வகாலத்தில் ப்ரபலமாயிருந்த ஈஜிப்ட் தேசத்தவர்களும், ஹீப்ரு ஜாதியாரும், பேபிலோன் தேசத்தைச் சேர்ந்தவர்களும் மோதிரங்களை உபயோகித்து வந்ததாகத் தெரிகிறது. மோதிரங்களைப் பற்றிய ப்ரஸ்தாபம் பைபிளின் முதல் பாகமாகிய ஜெனிஸிஸ் என்னும் புஸ்தகத்தில் காணப்படுகிறது. அதில் பாரோ என்பவர் தமது கையிலிருந்து தமது மோதிரத்தை எடுத்து ஜோஸப் என்பவர் கையில் போட்டதாகக் கண்டிருக்கிறது. அதே மோதிரமானது ஈஜிப்ட் தேசத்தில் உள்ள மெம்பிஸ் என்னுமிடத்துக்கு ஸமீபத்தில் ஸக்காரா என்னும் ஊரிலுள்ள ஸமாதி ப்ரதேசத்தில் ஒரு சவக்குழியில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் அகப்பட்ட மோதிரங்களில் இதுதான் ரொம்ப பூர்வீகமானது.

முற்காலத்தில் அவ்விடங்களில் மோதிரமானது பெரிய மனிதர்களால் அதிகாரம், பெருமை இவைகளுக்கு அறிகுறியாக உபயோகிக்கப்பட்டு வந்தது. காலக்ரமத்தில் ஜனங்களுக்குள் எழுதப் படிக்கத் தெரியவே, ஜனங்கள் தங்கள் மோதிரத்தில் சில குறிகள் அமைத்துக்கொண்டார்கள். இவைகளால் மோதிரங்கள் இன்னாருடையவை யென்று தெரிந்துகொள்வது ஸாத்யமாயிருந்தது.

சரித்ர ஆராய்ச்சிக்கு முற்பட்டகாலத்து மனிதர்களும் மோதிரங்கள் போட்டுக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. அவர்களிருந்த குகைகளில் எலும்பாலும் ஓடுகளாலும் செய்யப்பட்ட வளையங்கள் அல்லது மோதிரங்கள் அகப்பட்டிருக்கின்றன. இந்த வளையங்கள் தேஹத்தை அழகுபடுத்திக் கொள்வதற்காகவே உபயோகிக்கப்பட்டன.

மோதிரத்தை யார் முதலில் கண்டுபிடித்தார்களென்பது தெரியவில்லை. தற்செயலாய் ஒருவர் ஏதாவது ஒரு மெல்லிய கொடியைத் தமது கைவிரலில் சுற்றி அது அழகாயிருக்கக் கண்டு அதை உபயோகித்திருக்கலாம். அல்லது த்வாரமுள்ள ஏதாவது ஒரு ஓட்டுத் துண்டையோ எலும்புத்துண்டையோ கண்டு அதை விரலில் போட்டுப்பார்த்து அது மனதிற்கு அழகாய்த் தோன்ற, அதை உபயோகித்து வந்து, அதனால் அவ்வழக்கம் பரவியிருக்கலாம். காலக்ரமத்தில் மனிதர்களுக்கு உலோக வேலை தெரிய வரவும், அவர்கள் இரும்பு செம்பு இவைகளாலான மோதிரங்களை அணியலானார்கள். பின்னும் நாகரீகம் வளர்ச்சியடையவே தங்கத்தால் செய்யப்பட்ட மோதிரங்களும், ரத்னங்களிழைத்த மோதிரங்களும் உபயோகத்துக்கு வரலாயின.

முற்காலத்தில் ஜனங்கள் மோதிரம் போட்டுக்கொள்வதை ஒரு பெருமையாகக் கொண்டாடினார்கள். ரோம் தேசத்தில் முதலில் ஜனங்கள் கையின் ஒரு விரலில் ஒரு மோதிரம் போட்டு வந்தார்கள். அநேகர் இவ்விதம் செய்யவே, சில தனிகர்கள் கையின் ஐந்து விரலிலும் மோதிரம் போட்டுவந்தார்கள். பிறகு சிலர் விரல்களில் கணுக்கு ஒன்றாகப் பல மோதிரங்கள் போட்டார்கள். மற்றவர்களை விடப் படாடோபமாய் இருக்க விரும்பினவர்கள் கௌரவத்தைக் காட்டிக் கொள்வதற்காக, வாரத்திலுள்ள ஏழு நாளுக்கும், 7-வித மோதிரங்கள் செய்து ஒவ்வொரு நாளிலும் ஒருவகை மோதிரங்களை அணிந்து வந்தார்கள். ரோம தேசத்தைப் போலவே மற்ற மேல்நாடுகளிலும் மோதிரப் பைத்யம் அதிகமாயிருந்தது. ஸ்பார்டா தேசத்தில் இது அதிகமா யிருந்ததால், அந்த நாட்டு ராஜாங்கத்தார் இந்த வழக்கத்தைக்குறைக்க எண்ணி இரும்பு மோதிரத்தைத்தவிர வேறு மோதிரங்கள் போடக்கூடாதென்று சட்டம் செய்தார்கள்.

முற்காலத்தில் மோதிரங்கள் காதல் ஸம்பந்தமாகவும் உபயோகிக்கப்பட்டன. ரோம தேசத்தார்களுள் ஒருவர் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதாக வாக்களித்தால், அந்த வாக்கை நிறைவேற்றுவதற்கு அடையாளமாக ஒரு மோதிரத்தை பெண்ணுக்குக் கொடுப்பார். கல்யாண உடன்படிக்கையில் தம்பதிகள் கையெழுத்திடும்போது ஒரு விருந்து நடத்தப்படும். அப்போதும் புருஷன் பெண்ணுக்கு ஒரு மோதிரம் கொடுப்பான். அதை அவள் தனது இடதுகை பவித்ர விரலில் போட்டுக்கொள்வாள். முதலில் இந்த மோதிரங்கள் இரும்பினாலும் செம்பினாலும் செய்யப்பட்டன. அந்த மோதிரங்களில் இரண்டொரு இடங்களில் திறவுகோலைப் போல அமைக்கப்பட்டிருக்கும். புருஷனுடைய பெட்டிகளின் திறவுகோல்கள் பெண்சாதியின் வசமிருக்கின்றனவென்பதைக் காட்ட, இம்மாதிரி மோதிரத்தில் திறவுகோல்களின் அடையாளங்கள் அமைக்கப்பட்டனவாம். பிற்காலத்தில் நாகரிகம் முதிர்ச்சியடையவே விலையுயர்ந்தவும், அதிக வேலைப்பாடுள்ளனவையுமான மோதிரங்களைச் செய்து உபயோகித்துவந்தார்கள்.

அவர்கள் மோதிரங்களில் காதல் ஸம்பந்தமான வார்த்தைகளைச் செதுக்கிக் கொள்வதும் உண்டென்று தெரிகிறது. சில மோதிரங்களில் "என்னை நேசி", "உன்னை நேசிக்கிறேன்" "நல்வாழ்வு" என்பவை முதலான வாக்யங்கள் செதுக்கப்பட்டிருந்தன. பாம்பே நகரத்து பாழ்களில் அகப்பட்ட ஒரு மோதிரத்தில் ஒரு ஆணும் பெண்ணும் கை கோத்துக்கொண்டிருக்கிற மாதிரி ஒரு படம் செதுக்கப்பட்டிருக்கிறது.

நிச்சயதார்த்தத்துக்கு அறிகுறியாக மோதிரம் போடும் வழக்கம் மேல்நாடுகளில் ஸர்வஸாதாரணமானது. காப்ட்ஸ் என்னும் ஜாதியார் தங்கள் பெண்களை ஆறேழு வயஸிலேயே குறிப்பிட்டவர்களுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாகச் சொல்லி, அதற்கு அடையாளமாக பெண்களின் கையில் மோதிரம் போடுவதுண்டு. இப்படி மோதிரம் போட்டுக்கொண்டிருக்கும் பெண்ணைப் பிறர் கல்யாணத்துக்குக் கேட்கமாட்டார்கள். பாரஸீகத்தில் கல்யாண காலத்தில் மாப்பிள்ளையானவன் பெண்ணுக்கு மற்ற வெகுமதிகளுடன் மோதிரமும் கொடுப்பதுண்டு. ஸ்பெய்ன் தேசத்தில் ஒரு புருஷன் 12-வயஸுக்கு மேற்பட்ட ஒரு பெண்ணுக்கு ஒரு மோதிரம் கொடுத்தால், அது நிச்சயதார்த்தம் செய்ததாகும். அந்தப் புருஷன் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்யக் கடமைப்பட்டவனாகிறான். கிறிஸ்தவ மதத்தின் ஆரம்ப காலத்திலும் மோதிரங்கள் நிச்சயதார்த்தத்தின் அறிகுறியாக உபயோகிக்கப்பட்டன.

ஆதிகாலத்துக் கிறிஸ்தவர்கள் தங்களுடைய மோதிரங்களில் புறா, மீன், நங்கூரம், வீணை முதலியவைகளின் உருவங்களைச் செதுக்கி வைப்பது வழக்கமாயிருந்தது. கல்யாண காலங்களில் உபயோகப்படும் மோதிரங்களில் புறா, மீன் ஆகிய இவைகளின் உருவங்களும், இரண்டு கைகள் ஒன்றோடொன்று கோத்த மாதிரி உருவமும் செதுக்கப்படும்.

தற்காலத்தில் கல்யாணத்தில் உபயோகிக்கப்படும் மோதிரங்கள் அதிக வேலைப்பாடின்றி ஸாதாரணமா யிருக்கின்றன.

மோதிரங்கள் கல்யாணத்தின் அறிகுறியாகவேயன்றி ரக்ஷாபந்தனங்களாகவும் வச்யக் கருவிகளாகவும் உபயோகிக்கப்பட்டு வந்தன. மோதிரங்களில் சில குறிப்பிட்ட வார்த்தைகளை செதுக்கி அவைகளை உபயோகித்து வந்தால், துர்த்தேவதைகள் அணுகாவென்றும், நன்மையுண்டாகுமென்றும் பலர் நம்பிவந்தார்கள்.

மோதிரங்களில் வைரம் முதலிய கற்களைப் பதித்து உபயோகிப்பதால், சில குறிப்பிட்ட நன்மைகள் உண்டாகுமென்று முற்காலத்தியவர்கள் நம்பியிருந்தார்கள்.

வைரம் பதித்திருந்தால், மோதிரமணிந்தவனை எவரும் ஜயிப்பது அஸாத்யமாம். மாணிக்கம் புதைத்திருந்தால் கோபம் உண்டாகாதாம். மரகதமும் இந்த்ர நீலமும் மனிதர்களுக்கு சித்த சுத்தத்தை உண்டாக்குமாம். வேறு கற்களுக்கும் வெவ்வேறு பலன்கள் சொல்லப் பட்டிருக்கின்றன.

## NIGHT SCHOOLS.

## ராத்ரிப் பாடசாலைகள்.

'பரோபகாரார்த்தம் இதம் சரீரம் (பிறர்க்கு உதவிசெய்வதுதான் நமது சரீரவாழ்க்கையின் பயன்) என்பதையும், நம்மைப்போல் பிறரும் படித்தவர்களாயும், உலக விஷயங்களை அறிந்தவர்களாயும், ஸுகஜீவிகளாயும் இருக்கவேண்டியது என்கிற எண்ணத்தையுங் கொண்டு, அநேக படித்த சீமான்களும் சீமாட்டிகளும் பல ஜனோபகாரமான காரியங்களைச்செய்துவருகிறார்கள். அவ்வித ஜனோபகாரமான காரியங்களில், பகலில் பள்ளிக்கூடம் போய் படிக்க ஸௌகர்யப் படாதிருக்கும் ஏழைகளுக்காக முக்யமான இடங்களில் ராப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி நடத்திவருவது ஒன்றாகும். அந்தகாரமான இருளைப் போக்கி, பாமர ஜனங்களை நல்ல வழியில் சீர்திருத்திக் கொண்டு வருவதற்காக ராப்பள்ளிக்கூடங்களை நடத்துதல் அத்யாவச்யமென்று எல்லோரும் ஒருமனதுடன் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கீழே ராப்பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கான முறைகளை கூறுவோம்.

எந்த இடத்தில் பள்ளிக்கூடத்தை ஸ்தாபிக்கப் போகிறோமோ, அந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள இடங்களுக்குப் போய், அங்கிருக்கும் ஜனங்களை ஒருங்கு சேர்த்து, அவர்களது நிலைமையையும், கல்வியில்லாமையினால் உண்டாகும் தீமைகளையும், கல்வியினால் உண்டாகும் சிறப்பையும் கௌரவத்தையும், அவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும். கல்வியினால் உண்டாகும் பயன்களையும், கல்வி அத்யாவச்யம் என்பதையும் அவர்கள் மனதில் நன்றாய் பதியச்செய்ய, "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" "இளமையிற்கல்." "கற்றவனுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு," "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே," என்னும் நீதிகளையும், நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களில் கல்வியைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் அரியபெரிய செய்யுள்களையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். மேலும், எழுதப்படிக்கத் தெரியாததினால் தங்களுக்கு வரும் கடிதங்களை தாங்களே படிக்கமுடியாமல் பிறரைப் படிக்கச்சொல்வதினால் உண்டாகும் கெடுதிகளையும், தாங்கள் யாருக்காவது கடிதம் எழுதவேண்டுமானால், பிறரைத்தேடி அவர்களிடம் தங்களது ரஹஸ்யங்களையெல்லாம் வெளியிடுவதினால் உண்டாகும் தீமைகளையும், படிப்பு தெரியாததால் கடவுளைப் பற்றி அறிந்துகொள்ள தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய நூல்களைப் படிக்க முடியாமலிருப்பதையும், ஸமாசாரப் பத்திரிகைகள், விவஸாயம், கைத்தொழில் ஸம்பந்தமான புஸ்தகங்கள் முதலியவைகளை படிக்க முடியாமலிருப்பதையும் தெளிவாய் அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

கூடுமானால், பின்னால் ஒரு புஸ்தகசாலையும் பத்திரிகைகள் வாசிக்க ஒரு வாசகசாலையும் ஏற்படுத்திக் கொடுப்பதாக அவர்களுக்கு சொல்லவேண்டும். அதோடு ராத்ரிப் பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கப்படும் பாடங்கள் எவ்விதம் அவர்களுடைய வாழ்க்கையில் உபயோகமாகுமென்பதை எடுத்துச் சொல்லவேண்டும்.

பள்ளிக்கூடம் க்ரமமாக தினந்தோறும் நடந்துவரவேண்டும். விசேஷ பண்டிகை, உத்ஸவம் முதலிய தினங்களில் பள்ளிக்கூடம் மூடப்படவேண்டும். அன்பும் ஊக்கமுமுள்ள உபாத்யாயரை பாடம் கற்பிக்க நியமிக்கவேண்டும். புஸ்தகம் பலகை முதலியவைகளை மாணவர்களே வாங்கிக்கொண்டால், அவர்கள் ஊக்கத்துடன் படிப்பார்கள். அப்படி வாங்க முடியாமலிருந்தால், பள்ளிக்கூடம் ஏற்படுத்துகிறவரே சில பலகைகளையும், புஸ்தகங்களையும் வாங்கிக் கொடுக்கவேண்டும். மாணவர்களை அவர்களுடைய திறமைக்குத் தகுந்தபடி வகுப்பு வாரியாகப் பிரித்து பாடம் கற்பிக்கவேண்டும். பள்ளிக்கூடம் நடக்கும் நேரத்தில் பாதியில் தமிழும் கணிதமும் கற்பிக்கவேண்டும். மற்ற பாதியில் விசேஷபாடம் ஏதாவது கற்பிக்கவேண்டும். அங்கு வருபவர்களுக்கு உத்ஸாகத்தையும், மனக்கிளர்ச்சியையும் உண்டாக்கத் தக்க வழிகளைத் தேடவேண்டும். உபாத்யாயர் குறித்த காலந் தவறாமல் சரியான நேரத்தில் வர ப்ரயத்தனப்படவேண்டும்.

பள்ளிக்கூடத்தை ஹிந்துமதத்துக்கு ஏற்றபடி ஆரம்பிக்கவேண்டும். அவ்விதம் ஆரம்பிப்பதுதான் ஜனங்களுக்குப் பிடிக்கும். முதலில் பூஜை நடத்தி, சர்க்கரை, பழம், பக்ஷணம் முதலியவைகளை விநியோகஞ்செய்து பிறகு இந்திய முறைப்படி பாடங்கள் கற்பிக்கவேண்டும். புதுமாதிரியில் கற்பித்தால் வயதானவர்கள் வெறுப்படைவார்கள். முதலில் அவர்களுடைய ப்ரியத்தை அடைந்துவிட்டால், பிற்பாடு நூதனக் கல்விமுறைகளை அநுஸரிக்கலாம்.

பாடம் ஆரம்பித்தானதும், ஊரில் ப்ரபலமாயுள்ள ஒரு பெரியவரை ஒரு உபன்யாஸம் செய்யச் சொல்லவேண்டும். அதற்குப் பிறகு பாடசாலை ஸ்தாபிப்பவர் அநுபவத்துக்கொத்ததாய் ஒரு ப்ரஸங்கம் செய்யவேண்டும். இப்படியெல்லாம் செய்வதன் நோக்கம் என்னவென்றால், மாணவர்களுக்கு பாடசாலைக்குவர ப்ரியமுண்டாக்குவதே. தினம் 2-மணிநேரம் பள்ளிக்கூடம் நடக்கவேண்டும். கூடுமானால் 2½-மணிநேரம் நடத்தலாம். முதலில் நடக்கும் பாடம் முக்யமானதாயிருந்தால் மாணவர்கள் நேரம் தப்பாமல் வருவார்கள். பாடசாலை ஏற்படுத்துகிறவர் மாணவர்கள் வசிக்கும் தெருவிலாவது அதற்குப் பக்கத்திலாவது குடியிருப்பது நல்லது. அவர் தினந்தோறும் பள்ளிக்கூடம் ஆரம்பமாவதற்கு 20, 30 நிமிஷங்களுக்கு முன்னதாகவே வந்து, அங்கு வருபவர்களிடம் அவர்களது ஸம்பாத்யம் வரவு, செலவு இவைகளைக் குறித்தும், அவர்களது கஷ்ட நிஷ்டூரங்களைக் குறித்தும், உலகத்தில் நடக்கும் இதர விசேஷங்களைக் குறித்தும் ஸம்பாஷித்தல் வேண்டும். தற்போது நடக்கும் யுத்த ஸம்பந்தமாக அநேக விஷயங்களைப்பற்றிப் பேச இடமுண்டு.

தினந்தோறும் முதல் 15 நிமிஷத்தை ஸ்தோத்ரம் செய்வதெற்கென்று வைக்கவேண்டும். ஸ்தோத்ரத்தோடு மத விஷயமான உபன்யாஸமும் நடக்கவேண்டும். பிறகு முக்

கால் மணிநேரம் தமிழ் கற்பிக்கவும், இன்னொரு முக்கால்மணிநேரம் கணக்குக் கற்பிக்கவும் செலவழிக்கலாம். ஆக $1\frac{3}{4}$-மணி போக பாக்கியுள்ள நேரத்தில் வேறு முக்யமான விஷயங்களைப்பற்றிக் கற்பிக்கவேண்டும்.

கற்பிக்கப்படும் விஷயங்கள் மாணவர்களுக்கு உபயோகமுள்ளனவாக இருக்கவேண்டும். ஒருவாரம் அல்லது 2 வாரத்துக்கு ஒரு விஷயமாக ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் தினந்தோறும் கற்பித்து வரவேண்டும். அவர்களுக்குக் கற்பிக்கக்கூடிய விஷயங்களாவன:—

(1) தேஹதத்வ சாஸ்த்ரம்.

(2) வ்யாதி உண்டாவதற்குக் காரணங்கள். கெட்டஜலம் குடித்தல், மழை, காற்று, வெயில் இவைகளில் இருத்தல், ஈரம் முதலியவை.

(3) தொற்று வ்யாதிகள், அவைகள் பரவும் விதம், அவைகளைத் தடுத்தல், வ்யாதி நிவாரணம். இந்தப் பாடம் கற்பிக்கிறவர் ஜனங்களுக்குள் ஸர்வ ஸாதாரணமாக வழங்கிவரும் நம்பிக்கைகளைப்பற்றி தூஷித்துப் பேசக்கூடாது. காரணங்களை எடுத்துச்சொல்லி இன்னின்ன கொள்கைகள், அல்லது நம்பிக்கைகள் ஆதாரமற்றவையென்று சொல்லலாம். கண்மூடித்தனமாய் கண்டிப்பதும், கடோமான வார்த்தைகளை ப்ரயோகிப்பதும் ப்ரயோஜனப்படா.

(4) பொருளாதார நிலைமை. மாணவர்களின் நிலைமை, அவர்களை உயர்த்துவதற்கான வழிகள். விவஸாய சீர்திருத்தம், கோவாபரேஷன், வ்யாபாரத்தில் கலப்படம் செய்யாமை முதலியவை.

(5) பக்தர்களின் ஜீவ்ய சரித்ரங்கள். முக்யமாய் மாணவர்களுடைய ஜாதியைச்சேர்ந்தவர்கள். இவைகளைப்போலவே வேறு விஷயங்களைப்பற்றியும் கற்பிக்கலாம்.

முக்யமாய் கவனிக்கவேண்டிய விஷயமென்னவென்றால், மாணவர்களுக்குப் போதுமான அளவு கல்வி அபிவ்ருத்தி ஏற்படுகிறவரையில் தினந்தோறும் இடைவிடாமல் கற்பிக்கவேண்டுமென்பதே. இந்த விஷயங்களுக்கு பாடப் புஸ்தகங்கள் கிடைப்பது துர்லபம். ஆகையால் வாரத்துக்கு ஒருநாள் கற்பித்து மற்ற நாள்கள் சும்மாயிருப்பதில் ப்ரயோஜனமில்லை. தினந்தோறும் கற்பிக்கவேண்டும். தக்க உபாத்யாயர்கள் இருந்தால் இந்த விசேஷ பாடங்களைப்போல் உபயோகப்படக்கூடியது வேறொன்றும் இல்லை.

## CULTIVATION OF ROSES.

### ரோஜா பயிர்செய்தல்.

நிழலும் மரவேர்களின் உபத்ரவமும் இல்லாத வெயிலான இடங்களில் ரோஜா நன்றாய்ப் பயிராகும். ஸமவெளிகளில் பயிரிடவேண்டுமானால் உஷ்ணமான காற்று பயிர்மேல் வீசாத மறைவான ஒதுக்குப்புறங்களில் ரோஜாவை சாகுபடி செய்யவேண்டும். மலைப்ரதேசங்களிலானால் ரொம்ப குளிர்ந்த காற்று வீசாத ஒதுக்குப்புறங்களில் பயிரிடலாம்.

நிலம்.

நன்றாய் உழுது பண்படுத்தி வேண்டிய அளவு எருப்போட்ட எந்தவகை நிலத்திலும் ரோஜா நன்றாக வளரும். ஆனால் செழுமையான அடைமண்நிலம் மற்றவைகளைவிட ச்லாக்யமானது. அதில் கொஞ்சம் களிமண் இருந்தால் இன்னும் நல்லது. நிலம் மணல் பாங்காக இருந்தால், போதுமான அளவு களிமண் சேர்க்கவேண்டும். கோடைகாலத்தில் குளங்கள் வற்றியிருக்கும்போது, அவைகளின் அடியிலிருந்து சேற்றை எடுத்து மணல் நிலத்துக்குப்போடலாம்.



ரோஜா பயிரிடும் நிலத்துக்கு சுண்ணாம்பு போடுவது நல்லது. முக்யமாய் ஈரம் தங்கக்கூடிய நிலங்களுக்கு சுண்ணாம்பு இடுவது அவச்யமாகும். அதிகமாய் எருவிட்ட நிலங்களில் செடிக்குக் கெடுதலான த்ராவகங்கள் உண்டாகுமாதலால், சுண்ணாம்பை உபயோகித்தால், அது புளிப்பை மாற்றி கெடுதலைக் குறைத்துவிடும். மிதமிஞ்சி எருவிடுவது ரோஜாவின் வளர்ச்சிக்குக் கெடுதலாகும். ஒரே இடத்தில் வெகுகாலம் ரோஜாவையே பயிரிடுவதும் சரியல்ல. சில வர்ஷகளுக்கு ஒருதடவை இடம் மாற்றி ரோஜாவை சாகுபடி செய்யவேண்டும்.

சரளை நிலம் ரோஜாவுக்குக் கொஞ்சமும் ஏற்றதல்ல. ரோஜாவுக்கு வடிகால் இருக்க வேண்டியது அவச்யமாகும். ஆகையால் மழை ஜலம் தங்கக்கூடிய எந்த இடத்திலும் ரோஜாவை பயிர் செய்யக்கூடாது.

நிலத்தைப் பண்படுத்தல்.

ரோஜா நடவேண்டிய நிலத்தைப் பாத்திகளாகப் பிரித்து, $2\frac{1}{2}$ அடிமுதல் 3 அடி ஆழம் வரையில் கொத்தி மண்ணை வெளியில் எடுத்துப்போடவேண்டும். இப்படி இரண்டுமூன்று நாட்கள்வரையில் மண்ணைப் போட்டிருந்தால், வெயிலும் காற்றும் பட்டு மண் நல்ல நிலைமையை அடையும். பிறகு பாத்தியின் அடியில் ஆறு அங்குல கனத்துக்கு நன்றாய் மட்கின சாணி யெருவைப் போட்டு, அதன்மேல், வெளியில் எடுத்துப்போட்டிருக்கும் மண்ணைப் போட்டு நிரவிவிடவேண்டும். பிறகு மண்ணைக் காலால் மிதிக்கவேண்டும். அல்லது ஜலம் பாய்ச்சினால் மண்ணானது படிந்துவிடும். பின்னால் ரோஜா நட்டபிறகு மண் இருந்து போகாமலிருக்கவேண்டியது அவச்யமாதலால், முன்னாடியே மண்ணை மிதித்தோ ஜலம் பாய்ச்சியோ சரிப்படுத்தவேண்டும். ரோஜாவை நட்டவுடன் அதன்வேர்களில் எருபடுவது கூடாதாகையால், பாத்தியின் அடியில் எருப்போடலாமேயொழிய, மண்ணோடு எருவைக் கலப்பது கூடாது.

நடுதல்.

ரோஜா நடுவதற்கு அதிக மழையும் அதிக வெயிலுமில்லாத மாஸங்களே ஏற்றவை. நட்டவுடன் அதிக மழைபெய்தால் செடிகள் அழிந்துவிடும். ரொம்ப வெயிலடித்தால், ரொம்ப திடமான செடிகளைத் தவிர மற்றவைகள் பட்டுப்போகும்.

செடிகளை நடும்போது அவைகளுடைய வேர்களுக்குக் கெடுதி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏதாவது வேர் ஒடிந்தும் நசுங்கியும் போயிருந்தால், கத்தியால் நறுக்கி எறிந்துவிடவேண்டும். அதிக அடர்த்தியான செடிகளில் கிளைகளையும் தழையையும் நறுக்கி விடுவது நல்லது. செடிகளைப் பெயர்த்து நடும்போது வேர்கள் சுறுசுறுப்பாக வேலைசெய்ய முடியாமலிருப்பதாலும், செடிகளின் பலம் குறைந்து போயிருப்பதாலும், அந்த ஸமயத்தில் அதிக இலைகள் இருப்பது நல்லதல்ல.

செடியை ரொம்ப ஆழமாகவாவது ரொம்ப மேலாகவாவது நடாமல் நடுத்தர ஆழத்தில் நடவேண்டும். நட்டபிறகு, செடியைச் சுற்றிலும் மண்ணை மிதித்துவிடவேண்டும். நட்டவுடன் யதேஷ்டமாக ஜலம் பாய்ச்சவேண்டும்.

எருவிடுதல்.

மிதமிஞ்சி எருவிட்டால் ரோஜாச்செடி அழிந்துவிடும். அழுகிப்போன தொழுவத்தெரு வேருடன் படவே கூடாது. நன்றாய் மட்கின எருவையே உபயோகிக்கவேண்டும். சில ரோஜாக்கன்றுகளில் சல்லிவேர்கள் அதிகமாகிறவரையில், அதிக எருப்போடவேண்டிய அவச்யமில்லை. புலபுலப்பான நிலத்தில்

மாட்டெருவும், களிமண் பாங்கான நிலத்தில் குதிரை லாயத்து எருவும் ச்லாக்யமானவை. அதிகப் பொடியாயிராமல், பெருந்தூளாக இருக்கும் எலும்புப்பொடி ரோஜாவுக்கு ரொம்ப ச்லாக்யமானது. அது நிலத்திலிடப்பட்ட பிறகு வெகுகாலம் வரையில் பயிருக்கு உதவிவரும். ரோஜாச்செடி நிலத்தில் ஸ்திரமாக ஏற்பட்ட பிறகு செயற்கை எருக்களை உபயோகிப்பது நல்லது. இதனால் நல்ல புஷ்பங்கள் கிடைக்கும். அடியில்வரும் செயற்கை எரு ச்லாக்யமானது. ஸூபர் பாஸ்பேட் 12 பங்கு, நைட்ரேட் அப்ஸோடா 10 பங்கு, ஸல்பேட் அப் மாக்னீஷ்யா 2 பங்கு, அன்னபேதி 1 பங்கு, ஸல்பேட் அப் லைம் 8 பங்கு. இவைகளைக் கலந்து உபயோகிக்கவேண்டும். இதை உபயோகிக்கும் அளவு ஒரு சதுர கஜத்துக்கு ¼ ராத்தலாகும்.

பருவ நிலைமை உஷ்ணமாயிராமல் குளிர்ச்சியாயிருக்கும்போதுதான் ரோஜாவுக்கு எருவிடவேண்டும். உஷ்ணகாலத்திலும், மழைகாலத்திலும் ரோஜா நல்ல செழுமையாக வளரும்படி தூண்டக்கூடாது. இந்தக் காலங்களில் அது சுறுசுறுப்பாக வளருமானால், அது பலவீனமடைந்து சீக்ரம் பட்டுப்போகும்.

பெரிய புஷ்பங்கள் கிடைக்கவேண்டுமானால் வேர்களுக்கு த்ரவரூபமான எரு இடவேண்டும். த்ரவரூபமான சாணியெரு இதற்கு ச்லாக்யமானது. அதைப் பின்வருமாறு தயார் செய்யவேண்டும். புதிதான சாணியை ஒரு தொட்டியில் போட்டு ஜலம் விட்டுக் கரைத்து தினந்தோறும் கலக்கிவிட்டுக் கொண்டிருக்கவேண்டும். சாணி ஜலம் வைக்கோல் வர்ணமுள்ளதாக மாறினவுடன் அது உபயோகிக்கத்தகுந்த நிலைமையை அடைகிறது.

த்ரவ எருவை வெயில் கடுமையாயிருக்கும் மத்யான வேளையில் உபயோகிக்காமல், மந்தாரமாயிருக்கும் பிற்பகலிலாவது, ஸாயந்த்ரமாவது உபயோகிக்கவேண்டும்,

### கபாத்து செய்தல்.

ரோஜாச்செடியைத் தக்கபடி கபாத்து செய்துவந்தால், அதில் புதிதாய் தளிர்கள் உண்டாகி, பெரிய புஷ்பங்கள் உண்டாகும். செடியும் பார்வைக்கு லக்ஷணமுள்ளதாகும். ரொம்ப நாள்பட்டதும், புஷ்பங்கள் பூக்காததுமான கிளைகளை நறுக்கி எறிந்துவிடவேண்டும். நன்றாய் வளர்ச்சியடையாத ம்ருதுவான கிளைகளையும் அப்புறப்படுத்தவேண்டும். ரோஜா பயிர் செய்பவர்களில் அநேகர் கிளைகளை கபாத்து செய்தவுடன் ரோஜாச்செடியின் கீழ் உள்ள மண்ணைக் கொத்தி அப்புறப்படுத்தி, வேர்களைக் காற்றாட விடுவதுமுண்டு. பிறகு எருவிட்டு, மண்ணைத்தள்ளி மூடிவிடுவார்கள். களியான நிலங்களிலும், மழை ஜலம் அதிகமாக ஓடும் நிலங்களிலும் இந்தமுறை ச்லாக்யமானது. வடிகாலுள்ளதும் ஈரத்தாக்கா பிராததுமான தரைகளில் இவ்விதம் செய்யவேண்டியது அவச்யமல்ல. நிலத்தைக் கொத்திவிட்டு எருவிட்டால் போதும். ஈரத்தாக்காயிராததும் புலபுலப்பான மண்ணுள்ளதுமான நிலங்களில், செடியின் அடியிலுள்ள மண்ணை எடுத்துவிட்டால் நுட்பமான சிறுவேர்கள் ஸூர்ய உஷ்ணத்தால் கெடுதலடைந்து, செடியின் வீர்யத்தைக் குறைத்துவிடும்.

### ஜலம் பாய்ச்சுதல்.

வளரும் காலத்திலும் புஷ்பிக்கும் காலத்திலும் ரோஜாவுக்கு ஜலம் ஏராளமாக வேண்டியிருக்கும். வரட்சியான காலத்தில் நிலத்தின் தன்மைக்குத் தக்கபடி வாரத்துக்கு இரண்டு தடவையோ அதிகமாகவோ ஜலம் பாய்ச்சவேண்டும். குளிர்ச்சியான காலங்களில் வாரத்துக்கு ஒரு தடவை ஜலம் பாய்ச்சினால்போதும். ஜலம் விட்டு ஊறினவுடன் மேல் மண்ணைக் கிளறிவிடவேண்டும். இதனால் ஈரம் போகாமலிருக்கும். மண்ணில் காற்றோட்டம் ஏற்படும்.



### பூச்சிகள்.

ரோஜாவை பாதிக்கும் பூச்சிகள் இந்தியாவில் அதிகம் இல்லை. கறையான்களைப் போக்க பினைல் மருந்தை ஜலத்தில் ஸ்வல்பமாகக் கலந்து தெளிக்கவேண்டும். செடியில் கம்பளிப்பூச்சி முதலிய புழுக்கள் இருந்தால், கிரஸின் கலந்த ஜலத்தை செடியின்மேல் தெளிக்கவும். 2½-படி இளஞ்சூடான ஜலத்தில் 2-அவுன்ஸ் கிரஸின் எண்ணெயைக் கலந்து உபயோகிக்கவும். மப்பு மந்தாரமான காலங்களில் ரோஜாச்செடிகளில் பூஞ்சணம் உண்டாவதுண்டு. ரொம்ப நிழலான இடங்களிலுள்ள செடிகளில் இதர காலங்களிலும் பூஞ்சணம் உண்டாகும். இலை சுருண்டு போவதும், இலைமேல் வெண்மையான பொடி தூவினதுபோல் காணப்படுவதும் பூஞ்சணம் வந்ததற்கு அறிகுறிகளாகும்.

பூஞ்சணம் உண்டாகாமலிருக்க, செடியில் காற்று தாராளமாய் வீசும்படி செய்யவேண்டும். பூஞ்சணத்தைப் போக்கப் பின்வரும் மருந்தை உபயோகிக்கவும். 2 ராத்தல் மயில் துத்தத்தை 12 படி ஜலத்தில் கரைக்கவும். 1 ராத்தல் புதுச் சுண்ணாம்புக் கல்லைத் தாளித்துப் பொடியாக்கி, 12 படி ஜலத்தில் கரைத்து அந்த ஜலத்தை மயில்துத்த ஜலத்தில் கலக்கவும். இதைக் குழாயினால் செடிகளின்மேல் மழை பெய்வதுபோல வர்ஷிக்கவேண்டும். இந்த மருந்துக்கு போர்டோ மிக்சர் என்று பெயர். இதை உபயோகிக்கும்போது அடிக்கடி கலக்கி விடவேண்டும்.

## PUBLIC ADMINISTRATION IN ANCIENT INDIA.

## பூர்வீக இந்தியாவில் அரசாட்சி முறை.

நமது தாய் நாடாகிய இந்தியாவானது மத விஷயத்திலும் தத்வ சாஸ்த்ரத்திலும் பேர் போன நாடென்றும், அதற்கு ஸமமான நாடு வேறு எங்கும் இல்லையென்றும் உலகத்தார் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ராஜாங்க விஷயத்திலும், பொது நிர்வாக கார்யங்களிலும் இந்தியா முற்காலத்தில் மேன்மைபெற்றிருக்கவில்லையென்று அநேகர் குறை கூறு(கு)றை கூறுகிறார்கள். இம்மாதிரி குறை கூறுவது சுத்த பிசகு என்று தற்காலத்திய சரித்ர ஆராய்ச்சிகளால் தெரிய வருகிறது.

இந்தியாவில் முற்காலத்தில் பற்பல வகையான ராஜாங்க முறைகள் அநுஷ்டானத்தில் இருந்துவந்ததாகத் தெரிகிறது. சில இடங்களில் குடியரசும், சில இடங்களில் அரசர்களுடைய ஆட்சியும், வேறு சில இடங்களில் வேறு வகை ராஜாங்க முறைகளும் இருந்தன. சில இடங்களில் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, தமக்குள் ஒரு குடும்பத்தைத் தலைமை யாக்கிக்கொண்டு தங்கள் கார்யங்களை நிர்வகித்து வந்ததும் உண்டு. இந்த ஏற்பாடு மகா அலெக்ஸாந்தர் இந்தியாவுக்கு வந்த காலத்தில், அதாவது 22 நூற்றாண்டுகளுக்கு முன் இருந்ததாம்.

ஸ்வல்ப விஸ்தீரணமுள்ள நாடுகளில்தான் குடியரசு முதலிய அரசாட்சி முறைகள் இருந்தன. பெரிய நாடுகளை ராஜாக்கள் ஆண்டு வந்தார்கள். நாடுகள் பெரியவை யாகவே, குடியரசுகள் போய் ராஜாக்கள் ஏற்படலானார்கள். அக்காலத்தில் அரசர்கள் தங்கள் இஷ்டப்படி நடக்கவில்லையென்று தெரிகிறது. அவர்கள் ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடந்துவந்தார்கள். இதனால் அவர்களுடைய ராஜ்ய பரிபாலனம் கட்டுப்பாட்டுக்கு அடங்கிய முடியரசாகுமென்று சொல்லலாம்.

அக்காலத்தில் அரசர்கள் தர்ம சாஸ்த்ரங்

[illegible] கூறியுள்ள விதிகளின் ப்ரகாரம், தேச ஆசார, ஒழுக்க வழக்கங்களைக் கவனித்து ராஜ்யம் பரிபாலனஞ் செய்துவந்தார்கள். ராஜாங்க பெரிய நிர்வாக விஷயங்களில், அவர்கள் மந்திரிகளுடன் கலந்து ஆலோசனை செய்து அதன்படி நடந்துவந்தார்கள். மேலும், தர்ம சாஸ்த்ரங்களில் நிபுணர்களான ப்ராம்மணர்கள் சொல்லும் நீதிகளையும் ஆலோசனைகளையும் அரசர் கவனிப்பதுண்டு. அரசர் தெய்வத்திற்குப் பயந்தும், குடிகள் செய்யும் பாவம் தம்மைச் சேரும் என்கிற நீதியை மனஸில் வைத்தும், பக்ஷபாத மில்லாமலும், நீதி ஒழுக்கம்தவறாமலும் செங்கோல் செலுத்தி வந்ததாகத் தெரிகிறது. வேத காலத்திலும், பௌத்த மதக் காலத்திலும் அரசர்களை நியமிப்பதும் தள்ளிவிடுவதும் ஜனங்களது அதிகாரத்தில் இருந்தது. மூத்த குமாரன்தான் பட்டத்துக்கு வரவேண்டுமென்ற வழக்கம் பிற்காலத்தில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டாலும், பட்டத்துக்கு வாரிஸுதார் தகுதியற்றவனாயும், நோயாளியாயு மிருந்தால் அவனைத் தள்ளிவிட்டு, ராஜ குடும்பத்தில் அவனுக்கு நெருங்கின பந்துவாகிய ஸஹோதரன், சிற்றப்பன் முதலியவர்களில் எவன் ஸமர்த்தனோ, அவனை அரசனாகத் தெரிந்தெடுக்கும் வழக்கமு மிருந்துவந்ததென்று தெரிகிறது. அரசன் தெய்வாம்சம், அவரைத் தள்ளக்கூடாதென்பது பிற்காலத்தில் உண்டான கொள்கையென்று சொல்லப்படுகிறது. அரசர் ஜனங்களது தலைவரே யொழிய, அவர்களுடைய நிலத்திற்குச் சொந்தக்காரரல்ல. அவர் ஜனங்களிடமிருந்து நிலவரி, நீர்வரி முதலிய வரிகளை வஸூல் செய்துவந்தது, தான்செய்யும் வேலைக்காகவேயன்றி வேறொன்றிற்கு மல்ல. அரசர் ஜனங்களுடைய ஊழியன் என்கிற எண்ணம் பழைய காலத்தில் ப்ரபலமாயிருந்தது. போதாயனரும் ஜனங்களுடைய வரும்படியில் ஆறில் ஒரு பங்கை வாங்கிக்கொண்டு அரசர் ஜனங்களைக் காப்பாற்றி ஆதரிக்கவேண்டியது என்று சொல்லியிருக்கிறார்.

சாணக்யர் செய்துள்ள அர்த்த சாஸ்த்ரத்திலும், ஐத்ரேய ப்ராம்மணத்திலும், வேறு சில க்ரந்தங்களிலும் அரசருடைய கடமையைப்பற்றி பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அரசர் பட்டத்துக்கு வரும்போது செய்த ஸத்யங்களில் சில வருமாறு.—

'எனது ஜீவ்யகாலத்தில் என்ன நன்மை செய்திருந்தாலுங்கூட, நான் ஒரு தவறு செய்வேனானல், அதற்காக நான் ஸ்வர்க்கத்தையும், என் உயிரையும், என் ஸந்ததிகளையும் இழக்கக்கடவேன்' என்று அரசன் ஸத்யம் செய்ய வேண்டுமென்று ஐத்ரேய ப்ராம்மணம் கூறுகிறது.

'மனம், வாக்கு, காயம் இவை மூலமாக ஜனங்களது நன்மையையும், தேச க்ஷேமத்தையும் வ்ருத்திசெய்ய தக்க வழிகளை நான் தேடுவேன். சட்ட திட்டங்களையும், ராஜாங்க முறைகளையும் சரிவர அனுஸரித்து வருவேன். ஸ்வேச்சையாக ஒரு கார்யமும் நான் செய்யேன்' என்று அரசர் பட்டத்திற்கு வருமுன் மனப்பூர்த்தியாக ஸத்யம் செய்யவேண்டியது என்று மஹா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யுவராஜா தக்க வயஸடைந்தவுடன், அவருக்கு ராஜ்ய நிர்வாக விஷயங்களில் தக்க பயிற்சி கொடுத்துவந்தார்கள். அவர் கற்றறிந்த வித்வான்களிடம் பழகி, ராஜீய சாஸ்த்ரங்களை கற்றுக்கொள்வது வழக்கம். அவருக்கு ராஜ ஸபையில் ஒரு ஸ்தானம் கொடுத்தும், மாகாணங்களுக்கு அதிபதியாகவும் ஸேனாதிபதியாகவும் நியமித்தும், அவருக்கு ராஜாங்க விஷயங்களில் அநுபவ ஞானம் ஏற்படும்படி செய்வதுண்டு.

முக்யமான விஷயங்களைக் குறித்து அரசனுக்கு ஆலோசனை சொல்ல அநேக ஸபைகள் முற்காலத்தி லிருந்துவந்தன. தென்னிந்தியாவில் சேர நாட்டில் 5 ராஜாங்க ஸபைகள் இருந்தனவென்று 'மணிமேகலை' யென்னும் சங்கத்து நூலால் தெரியவருகிறது. அவை வருமாறு:—

(1) ஜனங்களது ப்ரதிநிதி ஸபை. இந்த ஸபையைச் சேர்ந்தவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களது கடமை ராஜாங்கத்தில் நடக்கும் அநீதிகளை எடுத்துக் காட்டி அவைகளைப் போக்க ஆலோசனை சொல்வது.

(2) மதாசார்யர்களின் ஸபை. இந்த ஸபையார் மத ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி அரசனுக்கு ஆலோசனை சொல்லவேண்டும்.

(3) வைத்ய பண்டிதர்களின் ஸபை. இந்த ஸபையார் ஜனங்களது ஸுகாதாரம் வ்ருத்தியாக தக்க ஏற்பாடுகள் செய்ய அரசனுக்கு ஆலோசனை சொல்லுவார்கள்.

(4) ஜ்யோதிஷ ஸபை. இந்த ஸபையார் இன்னின்ன நல்ல நாளில் பொதுக் காரியங்கள் செய்யவேண்டுமென்று அரசனுக்கு எடுத்துச் சொல்லி, நல்ல நாள் கணிக்கவேண்டியது.

(5) மந்த்ராலோசனை ஸபை. இவர்கள் வரி வஸூல் செய்து சரியாக வரவு செலவு கணக்கு எழுதி பக்ஷபாத மில்லாமல் ந்யாயத்தை நிலை நாட்டவேண்டியது.

மந்த்ரிமார்களில் ஒவ்வொருவரும் அரசருக்குத் தாம் செய்யும் வேலைக்கு உத்தரவாதியாயிருக்கவேண்டும்.

ஆதி காலத்தில் 'போலீஸ் இலாகா' எவ்வளவு நல்ல ஸ்திதியிலிருந்தது என்பதைப் அக்னி புராணத்திலுள்ள பின்வரும் விவரத்தால் தெரிந்துகொள்ளலாம்.

'ஒருவனுடைய ஸாமானைத் திருடன் திருடிக்கொண்டு போய்விட்டால், அந்த ஸாமானுடைய க்ரயத்தை அரசன் சொந்தக்காரனுக்கு கொடுத்து விடவேண்டும். போலீஸார் அந்த ஸாமான் திருடினவனை கண்டுபிடிக்கா விட்டால், அவர்களது சம்பளத்திலிருந்து அந்த ஸாமானின் க்ரயத்தை அரசன் எடுத்துக்கொள்ளவேண்டும்.'

ஆதி காலத்தில் ந்யாய நிர்வாகம் நல்ல நிலைமையிலிருந்தது. முக்யமான பட்டணங்களிலும் ஜில்லாக்களிலும் ந்யாயம் தீர்க்க 'கோர்ட்டுகள்' இருந்தன. இந்த கோர்ட்டிலுள்ள ந்யாயாதிபதிகள் (ஜட்ஜுகள்) ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்கள். 'ஸிவில்' கேஸுகளையும் கீழ்க்கோர்ட்டிலிருந்து வரும் 'அப்பீல் களை'யும் இவர்கள் விசாரிக்கவேண்டியது.

க்ராமாந்த்ரங்களில் க்ராம பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இருந்தன. க்ராமத் தலைவனும் வரிஉள்ள பெரிய மனிதர்களும் ந்யாயாதிபதிகளாய் இருப்பார்கள்.

இவைகளுக்கெல்லாம் மேலாக தற்கால 'ப்ரிவி கௌன்ஸில்' போல, அரசனது கோர்ட் ஒன்று இருந்தது. அதில் அரசர் சில ஸமயங்களில் ப்ரதம ந்யாயாதிபதியாக இருப்பார். அவர் இல்லாத ஸமயங்களில் ஸாதாரணமாக நன்றாகக் கல்வியில் தேர்ந்த ஒரு ப்ராம்மணர் ப்ரதம ந்யாயாதிபதியாகவும், இதர மூன்று நான்கு பேர்கள் அவருக்கு அடங்கினவராயுமிருந்து, 'ஒரிஜனல்' கேஸ்களையும், கீழ்கோர்ட்டு 'அப்பீல்களையும்' விசாரித்து தீர்ப்பது உண்டு.

ஆதி காலத்தில் 'வக்கீல்கள்' இருந்ததாகவும், அவர்கள் தாங்கள் வாதிக்கும் கேஸினது மதிப்பில் பதினறில் ஒரு பங்கு பீஸாக வாங்கி வந்ததாகவும் வங்காளிய சரித்ரப் புலவராகிய டாக்டர் பானர்ஜி என்பவர் சொல்லுகிறார்.

முற்காலத்தில் ஸைன்யச் செலவு அபரிமிதமாயிருந்தது.

குளம் குட்டைகளை 'ரிபேர்' செய்யவும், புதிய வாய்க்கால்கள் வெட்டவும் ஜனங்களு

க்கு ஸௌகர்யப்படும்படி, வரிகளை ராஜாங்கத்தார் குறைப்பதும், தள்ளுவதும் உண்டு. தற்கால ஆங்கிலேய அரசாட்சியி லிருப்பது போல, ஆதி காலத்தில், காட்டு இலாகா விவஸாய இலாகா, கணக்கு இலாகா, என்ற பல இலாகாக்கள் இருந்தன. ஒவ்வொரு இலாகாவினது வரவுசெலவு கணக்கையும் கணக்கு இலாகாவிற்கு அனுப்புவதுண்டு. அங்கே கணக்குப் பரிசோதகர்கள் அவைகளைப் பரிசோதித்துத் தணிக்கை செய்து, அந்தந்த இலாகாக் கணக்குகளை அந்தந்த இலாகா மந்த்ரிக்கு அனுப்புவார்கள். மந்த்ரிகள் ஒன்று சேர்ந்து ஸபைகூடி வரவு செலவு கணக்குகளை கவனிப்பார்கள்.

## FISH OIL SOAP.

### மீன் எண்ணெய் ஸோப்.

மீன் எண்ணெய் ஸோப்பானது பயிர்களை யழிக்கும் பூச்சிப் புழுக்களை நாசம்செய்ய ஏற்ற ஒரு ஸோப்பாகும். இது மற்ற வகை ஸாதனங்களைவிட உயர்ந்ததாகையால், இதை விவஸாயிகள் அதிகமாக உபயோகிக்கவேண்டியது அவச்யமாகும்.

#### நாட்டு முறைகள்.

பூச்சிப் புழுக்களை அழிக்க வெகுவாய் பழையநாட்டு முறைகளும் சிறுபான்மை மேல்நாட்டு முறைகளும் உபயோகப்பட்டு வருகின்றன. நாட்டு முறைகளில் சிலவற்றை இங்கு விவரிக்கிறோம்.

(1) பசுவின் மூத்ரத்தில் ஜலமும், மஞ்சள் பொடியும் கலந்து செடிகளின்மேல் தெளித்தால், எல்லா வகைப் பூச்சிகளும் நாசமாகி விடுமாம்.

(2) சில இடங்களில் காய்கறிப் பயிர்களில் உள்ள பூச்சிகளை நாசஞ்செய்ய சுண்ணாம்பு ஸ்வல்பமாய்க் கலந்துள்ள ஜலத்தைத் தெளிக்கிறார்கள்.

(3) கெட்ட பூச்சிகளை ஒழிக்க செடிகளின் மேல் மரச் சாம்பலைத் தூவுவதுண்டு.

(4) ஸ்மசானத்திலுள்ள சாம்பலை அதிகாலையில் ஒருவர் கண்ணிலும் படாமல் கொண்டு வந்து ஜனங்கள் படுக்கையைவிட்டு எழுந்திருக்குமுன்னால் பயிர்களின்மேல் தெளித்தால் எல்லா வகைப் பூச்சிப் புழுக்களும் ஓடிவிடுமென்று ஜனங்கள் நம்பிவருகிறார்கள்.

(5) நன்றாய் மட்கின புது மீனுடன் ஜலமும் கொஞ்சம் தாளித்த சுண்ணாம்பும் கலந்து கலக்கி, அந்த த்ரவத்தைத் தெளித்தால் பயிர்களிலுள்ள இலையைத் தின்னும் பூச்சிகள் ஒழிந்துவிடும்.

(6) ஸங்க்ராந்தி தினத்தில் வடித்தெடுத்த அரிசிக் கஞ்சியானது பொதுவாய் எல்லாப் பூச்சிகளையும் ஓட்டிவிடுமென்பது ஜனங்களுக்குள் வழங்கி வரும் ஸர்வ ஸாதாரணமான கொள்கையாகும்.

(7) கார்த்திகை மாஸத்து கார்த்திகை உத்ஸவத்தில் சொக்கப் பானை எரித்தபின் மிகுந்தும் பாதி வெந்த கழிகளை அவரைப் பந்தலுக்கு உபயோகித்தால், பூச்சிகள் பயிரை அழிக்க மாட்டா என்று எல்லாரும் நம்பி வருகிறார்கள். இவற்றைப்போல வேறு பல முறைகளும் நமது ராஜதானியில் வழக்கத்திலிருக்கின்றன.

#### ரஸாயன மருந்துகள்.

பூச்சிப் புழுக்களை அழிக்க ரஸாயன மருந்துகளை உபயோகிக்கும் வழக்கம் சில காலத்துக்கு முன்தான் ஆரம்பமாயிற்று. அந்த மருந்துகளில் சில விஷமுள்ளவைகளாதலால், அவைகளை உபயோகிப்பதில் ஜாக்ரதை வேண்டியிருக்கிறது. விசேஷ ஜாக்ரதை எடுத்துக்கொள்ளாவிட்டால், அவைகளால் ஜனங்களுக்கும் கால்நடைகளுக்கும் ஆபத்துக்கள் உண்டாகக்கூடும். தற்காலம் இந்தியாவிலுள்ள விவஸாயிகளில் பெரும்பாலாருக்குக் கல்வி பயிற்சியில்லாமையால், அதிக விஷமான பூச்சி மருந்துகள் அதிகமாய் உபயோகப்படுவதற்கில்லை. இந்திய விவஸாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய மருந்து மலிவாகவும், விஷமில்லாததாகவும், ஆனால் பூச்சிகளை அழிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மருந்துகளில் ஒன்று மேலே சொன்ன மீன் எண்ணெய் ஸோப்பாகும்.

மேல்நாடுகளிலிருந்து வரும் மருந்துகளில் சில ரொம்ப ச்லாக்யமாக இருந்தாலும், அவற்றின் விலை ரொம்ப அதிகமாயிருக்கிறது. சில மருந்துகள் மலிவாயிருக்கின்றன; ஆனால் உபயோகமற்றவை.

நமது ராஜதானியில் ஒவ்வொரு மிராசுதாரருக்கும் சராசரியில் ஸ்வல்ப நிலங்களே இருப்பதாலும், அநேக ஸந்தர்ப்பங்களில் அவைகள் பல இடங்களில் சிதறிக் கிடப்பதாலும், ரயத்துகள் ஏழையா யிருப்பதாலும், அவர்கள் தங்கள் வயல்களுக்கு பூச்சி மருந்துகளை உபயோகிப்பதற்கில்லை. மேலும் அவர்கள் பயிரிடும் பயிர்களின் தன்மையும், ஸாகுபடி முறையும் இம்மருந்துகளை உபயோகிப்பதற்கு அனுகூலமாக இல்லை. தேயிலை, காப்பி முதலிய தோட்டக்காரர்களும், பூச்சி மருந்துகளைப் பற்றி அறிந்துள்ள பணக்கார ஜமீன்தார்களுந்தான் இவைகளை உபயோகிக்கிறார்கள். ஆனால் மலிவாயும், பூச்சிகளை நிச்சயம் அழிக்கக்கூடியதாயும் உள்ள மருந்து கிடைத்தால், ஏழை விவஸாயிகள்கூட தங்கள் வீட்டுக் கொல்லையில் உள்ள பழ மரங்களுக்கும் காய்கறித் தோட்டத்துக்கும் வாங்கி உபயோகிப்பார்கள். ஸ்வல்ப விஸ்தீரணத்தில் மிளகாய், புகையிலை முதலிய பயிர்கள் ஸாகுபடி செய்யும் விவஸாயிகளும் அம்மருந்தை உபயோகிப்பார்கள். இதற்கு இரண்டொரு ரூபாய்வரை செலவானாலும், அதை ஒரு பொருட்டாய் அவர்கள் எண்ணமாட்டார்கள்.

#### பூச்சி மருந்துகளின் வகைகள்.

பொதுவாய்ச் சொல்லுமிடத்து இரண்டு வகையான பூச்சிகளிருக்கின்றன. அவையான:- கடிக்கும் பூச்சிகள்; உறிஞ்சும் பூச்சிகள். கடிக்கும் பூச்சிகள் இலைகளைக் கடித்துத்தின்று பயிரை அழிக்கின்றன. கம்பளிப்பூச்சி, தத்துக்கிளி முதலியவைகள் கடிக்கும் பூச்சிகளாகும். உறிஞ்சும் பூச்சிகள், இலை, குருத்து இவைகளிலிருந்து சாற்றை உறிஞ்சி, செடியை அழிக்கின்றன. கதிர்ப்பூச்சி முதலியவைகள் இந்த இனத்தைச் சேர்ந்தவை.

இந்த இரு வகைப் பூச்சிகளுக்கும் வெவ்வேறு வகை மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன. இலை முதலியவைகளைக் கடித்துத்தின்னும் பூச்சிகளை அழிக்க, வயிற்றில் போனால் கெடுதல் உண்டுபண்ணக்கூடிய விஷ மருந்துகளை செடிகளின்மேல் தெளிப்பார்கள். பூச்சிகள் இலைகளைத் தின்னும்போது, விஷத்தையும் உட்கொள்வதால், அவை இறந்துபோகின்றன. உறிஞ்சும் செடிகள் இலையைத் தின்பதில்லையாதலால், அவைகளுக்கு இந்த மருந்து உபயோகப்படாது. மேலே பட்டவுடன் கொல்லக்கூடிய மருந்தை உபயோகிக்கவேண்டும். முதலில் சொன்ன மருந்து இலையைத் தின்னும் பூச்சிகளை மாத்ரம் கொல்லும். இந்த இரண்டாவது மருந்து எல்லா வகைப் பூச்சிகளையும் கொல்லும். ஆனால் இலை தின்னும் கம்பளிப் பூச்சி போன்ற பெரிய பூச்சிகளைக்கொல்ல இதை உபயோகிப்பதாயிருந்தால், அதிகமான அளவில் உபயோகிக்க வேண்டியிருக்கும். அதைவிட இந்தப் பூச்சிகளுக்கு முதலில் சொன்ன மருந்தை உபயோகிப்பதே அதிக செலவில்லாதது.

உள்ளுக்குக் கொடுக்கும் விஷங்கள் இரண்டு வகைப்படும். ஒருவகை மருந்து பட்டிருக்கும் இலைகளைத் தின்னும் பூச்சிகள் உடனே இறந்துவிடும். இன்னொரு வகை மருந்துபட்ட இலைகள் பூச்சிகளுக்கு ருசியாயில்லாமல் அருவருப்பை உண்டாக்கி, அதனால் பூச்சிகளைத் துரத்திவிடும். முதல் வகை மருந்து மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் அபாயம் உண்டாக்கக் கூடியதான விஷத் தன்மை பொருந்தியது. ஆகையால் அதை விஷயந் தெரிந்தவர்களன்றி வேறு எவரும் உபயோகிப்பது சரியல்ல. இரண்டாவது வகை மருந்து ஜனங்களுக்கும் கால்நடைகளுக்கும் கெடுதி யுண்டாக்காதென்றாலும், முதல் வகை மருந்து போல் அவ்வளவு ச்லாக்யமானதல்ல. ஆகவே நமக்கு வேண்டிய தென்னவென்றால் மனிதர்களுக்கும் ம்ருகங்களுக்கும் கெடுதி யுண்டாக்காததும், ஆனால் பூச்சிகளை மாத்ரம் கொல்லக் கூடியதுமான ஒரு பூச்சி மருந்து. அதோடு அது ரொம்ப ஏழையான விவஸாயிகளும் வாங்கக்கூடியதாய் மலிவாயும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மருந்து மீன் எண்ணெய் ஸோப்பே இதற்கு, பூச்சிகளைக் கொல்லும் குண மிருப்பதோடு, மனிதர்களுக்கும் ம்ருகங்களுக்கும் கெடுதி உண்டாக்கும் தன்மை கிடையாதாம். மலிவாயும் இருக்கிறது.

இந்த ஸோப்பை கத்தரி, வெண்டை முதலிய செடிகளில், உபயோகித்ததில், பூச்சிகளில் பெரும்பான்மை இறந்துபோயினவாம். ஸோப்பை ஜலத்தில் கரைத்து ஸிரிஞ்சினால் பீச்ச வேண்டும். ரோஜாச் செடிக்கும் இதை உபயோகிக்கலாமாம். மாடுகளின்மேல் உள்ள உண்ணியைப் போக்கவும், தென்னையிலுள்ள வண்டுகளை அழிக்கவும் இது உபயோகமானது.

---

## HISTORY OF MYSORE.

By V. SWAMINATHA SARMA.

## மைஸூர் தேச சரித்ரம்.

மஹாராஜா ஸ்ரீ க்ருஷ்ண ராஜ உடையார் பஹதூர் அவர்களால் இப்பொழுது ஆளப்பட்டு வரும் மைஸூர் ராஜ்யமானது, முக்கோண வடிவமுள்ள தக்ஷிண இந்தியாவிற்கு ஒரு சிரோமணியாய் விளங்குகிறது. ஸமுத்ர மட்டத்தைவிட ஸுமார் 2000 அடி முதல் 3000 அடி வரையில் உயர்ந்திருப்பதால், இந்த தேசம் ஆரோக்யமான சீதோஷ்ணத்தை அடைந்திருக்கிறது. இது வடக்கு தெற்காக 230 மைலும், கிழக்கு மேற்காக 290 மைலும் உள்ளது. இதன் விஸ்தீரணம் 29,445 சதுர மைலாகும். இதில் 13 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பெங்களூர் மாத்ரம் ஆங்கிலேய அரசாட்சிக்கு உள்பட்டிருக்கிறது.

இப்பொழுதிருக்கிறபடி இந்த ராஜ்யம் கி. பி. 1800 வர்ஷம் முதற்கொண்டுதான் ஒரு ராஜனால் அந்ய தேசத்துச் சண்டை சச்சரவுகளில்லாமல் ஆளப்பட்டு வருகிறது என்று சொல்லலாம். இதற்குமுன் இந்த ஸமஸ்தானத்தைக் கவர பல பேர்கள் ப்ரயத்தனப்பட்டார்கள்.

ராமாயண மஹாபாரத கதைகளிலும் இந்த ராஜ்யம் ஸம்பந்தப்பட்டிருந்ததென சில விஷயங்களால் தெரியவருகிறது. ஜைன நூல்கள் சந்த்ரகுப்த மௌர்யன் என்ற அரசன் தன் வாழ்நாட்களின் கடைசி பாகத்தை இந்த மைஸூர் தேசத்திலேயே ச்ரவணபெல்கோலா என்ற இடத்தில் ஜைன சம்யப் பற்றுள்ளவர்களுடனிருந்து கழித்தானென்று கூறுகின்றன. இந்த விஷயத்தை மைஸூர் ஸம்ஸ்தான சிலா சாஸன பண்டிதராக இருந்த எம்.பி. ரைஸ் துரையவர்கள் உறுதிப்படுத்துகிறார். ஆனால் தற்கால சரித்ரக்காரர்கள் இதை நம்பவில்லை. பிறகு, சந்த்ரகுப்தனுடைய பேரனான அசோகன் பௌத்த மதத்தை உலகெங்கும் பரவச்செய்ய, அநேக மதாசார்யர்களை பல இடங்களிலும் அனுப்பினது போல், மஹிஷ மண்டலம் என்கிற இந்த மைஸூர் தேசத்திற்கும் அனுப்பினான் என்று இலங்கைத் தீவின் சரித்ரமாகிய மஹா வம்சத்தால் தெரிகிறது. ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி அசோகன், ஸமுத்ரகுப்தன் இவர்களுடைய சிலா சாஸனங்களில் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆயினும், அசோகனும், பிறகு சதவாஹனர்களும், கடைசியில் ஸமுத்ர குப்தனும் இந்த ராஜ்யத்தோடு ஸம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதற்கு யாதொரு ஸந்தேஹமுமில்லை.

மஹிஷ மண்டலம் என்னும் இந்த மைஸூரை எருமை நாடு என்பார் தமிழர். தமிழ்க் காவ்யங்களிலும் இந்த ராஜ்யத்தைப்பற்றி சிற்சில குறிப்புகள் காணப்படுகின்றன. பொதுவாக இந்த தேசத்தைப்பற்றிய சரித்ரம் இப்பொழுது தெரிந்திருக்கிறவரைக்கும் கி. பி. முதல் நூற்றாண்டு முதற்கொண்டுதான் ஆரம்பிக்கிறது.

முதல் நூற்றாண்டில் மைஸூரின் தக்ஷண பாகம் கங்கர்கள் என்ற ஒரு ஜாதியாரின் வசத்திலிருந்தது. அப்பொழுது அவர்களுக்கு கோலார் என்பது கொஞ்சகாலம் ராஜதானியாகவும், பிறகு தலக்காடு என்பது ராஜதானியாகவும் இருந்தது. சேரன் செங்குட்டுவன் என்னும் அரசன் வடதிசை நோக்கிப் படையெடுத்துச் செல்லும் வழியில், நீலகிரி மலையில் தங்கி யிருந்தபொழுது, இந்த கங்கர்கள் அவனை உபசரித்து வழியனுப்பினார்கள். அது முதற்கொண்டு இந்த மைஸூர் ராஜ்யம், கங்காவதி, நொளம்பாவதி, பாணவாஸி என மூன்று பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டன.

இந்த மூன்று பிரிவுகளும் இப்பொழுது ஆங்கிலேயரால் பகுக்கப்பட்டிருக்கும் அஷ்டக்ராமம், நந்திதுர்க்கம், நகர் என்ற மூன்று பிரிவுகளையும் ஏறக்குறைய ஒத்திருக்கும்.

இந்த மூன்று பிரிவுகளில் முதலாவதான கங்காவதி என்பது கி. பி. 1000-ம் வர்ஷம் வரைக்கும் கங்கர்கள் வசத்திலேயே இருந்தது. இரண்டாவதான நொளம்பாவதி என்பதை கொஞ்ச காலம் பாணர்கள் என்கிற மஹாவலிகளும், வைதும்பர்களும், சோழர்களும், பல்லவர்களும் பங்கிட்டுக்கொண்டிருந்தார்கள். கடைசியில் பல்லவர்கள் யாவரையும் ஜயித்து தம் தேசத்தோடு அதைச் சேர்த்துக்கொண்டார்கள். மூன்றாவதான பாணவாஸி என்பது சில காலம் சாளுக்யர்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது.

கி. பி. 600-ம் வர்ஷம் வரைக்கும் மேற்கூறிய மூன்று பிரிவுகளும் தனித்தனி ஸ்வயேச்சையாய் இருப்பதற்காக ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக்கொண் டிருந்தன. கடைசியில் பாணவாஸி என்னும் பிரிவு மாத்ரம் அத்ருஷ்ட வசத்தினால் முன்னுக்கு வந்தது. முதலிரண்டும் அடங்கிப்போய் விட்டன. அந்த பாணவாஸி என்பதின் சரித்ரத்தைக் கொண்டுதான் நாம் இப்பொழுது மைஸூரின் ஆதி சரித்ரத்தை பார்க்கவேண்டியிருக்கிறது. ஏறக்குறைய கி. பி. 6-ம் நூற்றாண்டில் க்ருஷ்ணா நதியின் வடக்கேயுள்ள சாளுக்யர்கள் தக்ஷிணத்தின் வட பாகம் முழுவதையும் அரசாண்டு கொண்டிருந்தார்கள். அதே ஸமயத்தில் பல்லவர்கள் தெற்குப் பாகம்முழுவதிற்கும் தலைவராய் விளங்கிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கொஞ்ச காலந்தான் பாணவாஸியா

னது ஸ்வயேச்சையாய்த் தன் இஷ்டப்படி ஆளும்படியான பாக்யத்தைப் பெற்றது.

கொஞ்ச காலம் பொறுத்து சாளுக்யர்களும் பல்லவர்களும் துங்கபத்ரா நதிக்கும் க்ருஷ்ணா நதிக்கும் இடையிலுள்ள ப்ரதேசத்தில் சண்டை போட ஆரம்பித்தார்கள். இந்தச் சண்டை காரணமாக, பர்ணவாஷி என்னும் தேசமானது அழியத் தலைப்பட்டது. சாளுக்ய ராஜ்யம் மேற்கே மைஸூர் ப்ரதேசத்திலும், கிழக்கே இப்பொழுது வட ஸர்க்கார் என்று கூறப்படும் கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, க்ருஷ்ணா முதலிய ஜில்லாக்களிலும் பரவ ஆரம்பித்தது. சாளுக்ய அரசன் தன் ஸஹோதரரில் ஒருவனை ராஜ ப்ரதிநிதியாயிருந்து வட ஸர்க்கார் என்னும் ப்ரதேசத்தை ஆண்டு வரும்படி அனுப்பினன். சில காலமானதும் இந்த ராஜப்ரதிநிதி கிழக்கு சாளுக்யர்கள் என்ற ஒரு புது வம்சாவளியை ஸ்தாபித்துவிட்டான். இந்தக் காரணங்கொண்டு மேற்கு சாளுக்யர்களும் கிழக்கு சாளுக்யர்களும் தங்களுடைய அழிவுக்குக் காரணமான சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு இடையில் ராஷ்ட்ரகூடர்கள் என்பவர்கள் வந்து, சாளுக்ய ராஜ்யத்தை தங்கள் வசமாக்கிக்கொண்டு, தெற்கே பல்லவ ராஜ்யத்தின்மீது படையெடுத்து, அப்பல்லவர்களையும் முறியடித்து, காஞ்சீபுரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். இதனால் பல்லவ ராஜ்யமும் சிதறப்பட்டுப்போயிற்று. இவைகளெல்லாம் ஏறக்குறைய கி. பி. 8-ம் நூற்றாண்டின் மத்தியில் நடந்திருக்கலாம்.

கி. பி. 9-ம் நூற்றாண்டில் மைஸூரின் தெற்கு பாகமாகிய கங்கவாடியிலுள்ள கங்கர்கள் பலப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த 9-ம் நூற்றாண்டின் கடைசியில்தான் கங்கர்கள் தெற்கு நோக்கிப் படையெடுத்து, வரகுண பாண்டியன் என்பவனுடன் கும்பகோணத்திற்கு ஸமீபமாயுள்ள திருப்புறம்பியம் என்னும் ஊரில் சண்டைசெய்துகொண்டிருந்தனர்.

இந்த ஸமயம் ராஷ்ட்ரகூடர்கள் தங்கள் ராஜதானியை மாற்றினார்கள். இதுவரைக்கும் அவர்களுக்கு ராஜதானியாயிருந்தது பாதாமி என்னும் பட்டணம். இந்தப் பட்டணத்தைத் தான் முன்னொரு தரம் பல்லவர்கள் அழித்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது மணியகேதம் என்னும் பட்டணத்தை ராஷ்ட்ரகூடர்கள் தங்கள் ராஜதானியாக்கிக் கொண்டார்கள். இந்தப் பட்டணம் இப்பொழுது எங்குள்ளது என்று தெரியவில்லை. நிஜாம் ராஜ்யத்திலுள்ள மால்கேட் என்னும் சிறிய பட்டணமாக இருக்குமோ என்று சரித்ரக்காரர்கள் ஊகிக்கிறார்கள். இவ்விதம் இவர்கள் தங்கள் தலைமைப்பட்டணத்தை பத்ரபடுத்திக்கொண்டு, தெற்கும் தென்கிழக்கும் நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்தார்கள். இவர்களைத் தடுக்கும்படியான தேசம் எதுவுமில்லாமற் போயிற்று. கங்கர்களும் இந்த ராஷ்ட்ரகூடர்களுக்கு அடங்கிப்போனார்கள். சோழ ராஜ்யமும் தன் உன்னத நிலைமையை அடையத் தடைப்பட்டது.

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ராஷ்ட்ரகூடர்களுக்கு அரசனை க்ருஷ்ணன் [இவனை மூன்றாவது க்ருஷ்ணன் என்பர்.] என்பவன் காஞ்சீபுரத்தைப் பிடித்துக்கொண்டு, பல்லவர்களுக்கு இருந்த ஸ்வல்ப ப்ரதேசங்களையும் பிடித்துக்கொண்டான். கங்கர்கள் இவனுடைய முன்னோராலேயே அடக்கப்பட்டுப் போயினர். ராஷ்ட்ரகூடர்களுக்குத் தப்பித்துக்கொண்டுபோன சில பல்லவர்கள் மைஸூரின் தெற்கு ப்ராந்தபத்தில்போய் தனியே ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டார்கள். இதைப்பற்றிப் பின்பு பேசுவோம். இந்த ஸமயம் தெற்கே சோழ ராஜ்யத்தரசன் பராந்தகன் என்பவன், கங்கர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், கேரளர்கள் முதலிய யாவரையும் தன் கீழடக்கிக்கொண்டு, பலசாலிகளான ராஷ்ட்ரகூடர்களையும் மைஸூரின் தென் பாகத்திலிருந்து துரத்திவிட்டான். பிறகு இந்த ராஷ்ட்ரகூடர்கள் சாளுக்யர்களால் கி. பி. 972-ம் வர்ஷம் நிர்மூலமாக்கப் பட்டார்கள். இந்த ராஷ்ட்ரகூடர்கள் அழிந்ததால் சோழர்களுக்கு இன்னும் அதிக தைர்யமுண்டாயிற்று. ஆனால் அவர்களுடைய இளவரசனான ராஜாதித்யன் என்பவன் தக்கோலம் என்னும் இடத்தில் வீழ்த்தப்பட்டதால், சோழர்களுடைய முன்னேற்றம் சற்றே தடைப்பட்டது. ஆனால் அவர்கள் சளைக்கவில்லை.

கி. பி. 972-ம் வர்ஷம் ராஷ்ட்ரகூடர்கள் அழிந்துபோனது பல பேருக்கு ஸௌகர்யமாயிருந்தது. இதுவரைக்கும் ராஷ்ட்ரகூடர்களின்கீழ் அடங்கியிருந்த கங்கர்கள் இப்பொழுது ஸ்வயேச்சையாய் இருக்க ஆரம்பித்துவிட்டார்கள். சாளுக்யர்கள் மைஸூரின் வடபாகத்தை கைப்பற்ற எண்ணங்கொண்டிருக்கும்போது, சோழர்கள் மைஸூரின் தென் பாகத்தின்மேல் படையெடுத்து, கங்கர்களை அடக்கி, தலக்காடு, கோலார் என்பவைகளையும் பிடித்துக்கொண்டார்கள். ஆகவே மைஸூரின் வடபாகத்தை ஆக்ரமித்துக்கொண்ட சாளுக்யர்களுக்கும் தென்பாகத்தைக் கைப்பற்றிக்கொண்ட சோழர்களுக்கும் பெருத்த சண்டை உண்டாயிற்று. பெதட்டூரிலிருந்து சிதல்துர்க்கம் வரையிலுள்ள ப்ரதேசத்தில் இவர்கள் நெடுநாள் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தச் சண்டையின் முடிவாக மைஸூர் ராஜ்யமானது ஒரு ஸ்வய அரசாட்சியுள்ள தேசமாய் ஏற்பட்டது. இந்த அரசாட்சியை முதன் முதலில் ஸ்தாபித்தவர்கள் ஹொய்சளர்கள் என்ற ஒரு வம்சத்தார். இவர்கள் ஹாஸன் என்ற ஒரு ஜில்லாவுக்கு அதிகாரிகளாயிருந்தவர்கள்.

இந்த வம்சாவளியின் முதலரசன், சோழர்களுக்கு விரோதமாய் சாளுக்யர்களின் பொருட்டு யுத்தம் செய்ததற்காக, க்ருஷ்ணா நதிவரையிலும் பரவியிருந்த மைஸூர் தேசத்தை சாளுக்யர்கள் அவனுக்கு இனமாய்க் கொடுத்தார்கள். அவனுடைய பின் ஸந்ததியார்களே ஹொய்சளர்களென்று கூறப்படுபவர். இந்த ஹொய்சள வம்சத்தின் நான்காவது அரசன் காலத்தில் சாளுக்ய ராஜ்யத்தை தேவகிரி யாதவர்களும், வாரங்கல் காகாத்தியர்களும் இந்த ஹொய்சளர்களும் பாகித்துக்கொண்டார்கள். இந்த ஸமயம் சோழ ராஜ்யம் சற்றே குன்றிப்போக நேரிட்டது. எப்படியெனில், வாரங்கல் காகாத்தியர்கள் சோழர்களின்மீது படையெடுத்துப் போய் காஞ்சீபுரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். தெற்கே பாண்டியர்கள் திருச்சிறாப்பள்ளிமீது படையெடுத்து வந்து ஸ்ரீரங்கத்தைப் பிடித்துக்கொண்டார்கள். ஆகவே, சோழர்கள் ஹொய்சளர்களுடைய உதவியைத் தேடினார்கள். அப்பொழுது ஹொய்சளர்களின் அரசனாயிருந்த நரஸிம்மனும், அவன் குமாரன் ஸோமேச்வரனும் சோழர்களுக்கு உதவியாய்ச் சென்று, பாண்டியர்களைத் திருச்சிறாப்பள்ளியினின்றும் துரத்தி, ஸ்ரீரங்கத்தைப் பிடித்துக்கொண்டார்கள். ஆனால் அதை சோழர்களிடம் விட்டுவிடவில்லை. அதுவரைக்கும் உள்ள ப்ரதேசங்களை தங்கள் தேசத்துடன் சேர்த்துக்கொண்டு தாங்களே அரசாட்சி புரிந்து வந்தார்கள். இதனால் அவர்கள் மிகவும் உயர்ந்த நிலைமையை அடைந்திருந்தார்கள்.

இந்த ஸமயத்தில் அலாவுதீன் கில்ஜியினால் அனுப்பப்பட்ட மாலிக் காபூர் என்பவன் தக்ஷிணத்தின்மேல் படையெடுத்துவந்தான். அவன் யாதவர்களையும், காகாத்தியர்களையும், ஹொய்சளர்களையும் முறியடித்து, தெற்கே மதுரைவரைக்கும் சென்று கப்பம் வஸூலித்துக்

கொண்டு திரும்பினான். அவன் சென்றதும் ஹிந்து ராஜ்யங்கள் கொஞ்சம் தலையெடுக்க ப்ரயத்தனப்பட்டன. ஆனால் மறுபடியும் மஹம்மது பின் டோக்ளக் என்பவன் படையெடுத்துவரவே யாவும் அமுங்கிப்போயின. கொஞ்சகாலம் பொறுத்து ஹிந்து ராஜ்யம் ஒன்று தக்ஷிணத்தில் தோன்றத் தலைப்பட்டது. அதுவே விஜயநகர ஸமஸ்தானம்.

ஹொய்சளர்கள், தங்களுடைய தலைமைப் பட்டணமாகிய ஹொய்ஸல் மாலிக்காபூரினால் கொளுத்தப்பட்ட பிறகு, தண்டனூருக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களும் அந்த விஜயநகர அரசாட்சிக்கு உள்பட வேண்டியதாயிற்று. மைஸூர் ராஜ்யமும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு ராஜப்ரதிநிதியின் அரசாட்சிக்கு உள்படுத்தி விஜயநகரத்தாரே ஆண்டுவந்தார்கள். சென்னப்பட்டண, ஸ்ரீரங்கப்பட்டணம், பெத்தூர் என்ற மூன்று பிரிவுகளடங்கிய அந்த மைஸூர் ராஜ்யத்தில், நாய்க்கர்கள் விஜயநகர ஸமஸ்தானத்தின் முக்ய அம்சமாயிருந்தார்கள். 1565-ம் வருஷத்தில் நடந்த தலைக்கோட்டை யுத்தம் முடிந்தபிறகு பெருக்கு மாத்ரம் விஜயநகர ஸமஸ்தானம் என வழங்கியதேயன்றி உண்மையில் அப்படியில்லை. மதுரை, ஸ்ரீரங்கப்பட்டணம், இந்த வழியிருக்கப்பட்ட ராஜப்ரதிநிதிகள் ஸ்வய அதிகாரிகளானார்கள்.

(இன்னும் வரும்)

வி. ஸ்வாமிநாத சர்மா.

## THE LATE DADHABAI NAOROJI.

## காலஞ் சென்ற தாதாபாய் நௌரோஜி.

சென்ற ஜூன் மாஸம் 30-ந்தேதியன்று மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி காலகதியடைந்தாரென்று கேட்டு விஸனமடைகிறோம். மிஸ்டர் நௌரோஜி ஸுமார் 60 வர்ஷங்களுக்கு மேல் இந்தியாவின் நன்மைக்காக உழைத்து வந்திருக்கிறார். அவர் இந்தியாவின் பெரிய தேசாபிமானிகளில் முதன்மையானவர். அவருடைய புகழ் தேசமெங்கும் பரவியிருக்கிறது. அவருடைய ஜன்ம தினமானது சென்ற சில வர்ஷங்களாக தேசமெங்கும் கொண்டாடப்பட்டு வருவதிலிருந்து, அவருடைய பெரும் புகழும் இத்தன்மையதென்று அறிந்துகொள்ளலாம். இவரை இந்தியர்களெல்லாரும் 'இந்தியாவின் பெருங் கிழவர்' என்று பொருள்பட இங்கிலீஷில் க்ராண்ட் ஓல்ட் மான் என்றும், இந்த இங்கிலீஷ் வார்த்தைகளின் முதல் எழுத்துகளை மாத்ரம் எடுத்துக்கொண்டு ஜி. ஓ. எம். என்றும் வழங்கி வருகிறார்கள்.

### பால்யப் பருவம்.

மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி 1825-ம் வர்ஷம் ஸெப்டம்பர் மாஸம் 4-ந்தேதி பம்பாயில் ஒரு பார்ஸி குருமார் வம்சத்தில் ஜனனமானார். அவருக்கு நான்கு வயஸாகும்போதே அவர் தந்தை இறந்து போனார். அவருடைய தாய்தான் அவரை பால்யத்தில் பராமரித்து வரும்படி நேரிட்டது. அவருடைய மாமன் அவருடைய படிப்புக்குப் பண உதவிசெய்து வந்தார். அவர் பம்பாயிலுள்ள எல்பின்ஸ்டன் வித்யா சாலையில் சேர்ந்து வாசித்தார். அவர் படிப்பில் ரொம்ப கெட்டிக்காரராயிருந்தால், அவருக்கு பல வெகுமதிகள் கிடைத்து வந்தன. 1845-ம் வர்ஷத்தில் அவருடைய படிப்பு முடிவடைந்தது.



அப்போது பம்பாயில் சீப் ஜட்ஜாகவும், போர்ட் அப் எடுகேஷன் என்னும் வித்யா ஸபைக்கு ப்ரெஸிடெண்டாகவும் இருந்த ஸர் எர்ஸ்கைன் பெர்ரி என்பவர் மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியின் அறிவு, திறமை, புத்தி கூர்மை இவைகளைக் கண்டு, அவர்மேல் அன்பு கொண்டு, அவரை பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்க இங்கிலண்டுக்கு அனுப்பலாமென்றும், அதற்கு ஆகும் செலவில் பாதித் தொகையை மிஸ்டர் நௌரோஜியின் ஸமூகத்தார் சேர்த்துக் கொடுத்தால் தாம் பாக்கிப் பாதித் தொகையைக் கொடுத்து உதவுவதாகவும் சொன்னார். ஆனால் அதற்கு சிறிதுகாலத்துக்குமுன் சில பார்ஸி வாலிபர்கள் இங்கிலண்டுக்குப் போய் அங்கே கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்டார்களாதலால், மிஸ்டர் நௌரோஜிக்கு உதவி செய்ய முன்வந்த சிலர், அவரும் கிறிஸ்தவராகி விடுவாரோ என்று பயந்து பின்னால் பண உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். இதனால் மிஸ்டர் நௌரோஜி இங்கிலண்டுக்குப் போவது சிலகாலம் தடைபட்டுப் போயிற்று.

### உத்யோகத்தில் அமர்ந்தது.

இங்கிலண்டுக்குப் போகும் எண்ணத்தை விட்டுவிடவே, மிஸ்டர் நௌரோஜி உத்யோகம் ஸம்பாதிக்க முயன்றார். சீக்ரத்தில் அவருக்கு எல்பின்ஸ்டன் வித்யா சாலையிலேயே ஹெட் அஸிஸ்டெண்ட் மாஸ்டர் அதாவது உதவி உபாத்யாயர் வேலைகிடைத்தது. அங்கே அவர் திறமையுடன் வேலை செய்து வந்ததால், அவருக்கு சீக்ரம் ப்ரொமோஷன் கிடைத்தது. 1854-ம் வர்ஷத்தில் அவர் எல்பின்ஸ்டன் காலேஜில் கணித சாஸ்த்ரம், ப்ரக்ருதி சாஸ்த்ரம் ஆகிய இவைகளுக்கு ப்ரொபஸராக நியமிக்கப்பட்டார். அவர்தான் அந்தப் பள்ளிக்கூடத்தில் முதல் முதல் ப்ரொபஸராக நியமிக்கப்பட்ட இந்தியராவார். அவர் வெகுகாலம் அந்த உத்யோகத்தில் இருக்கவில்லை. ப்ரொபஸராக நியமிக்கப்பட்ட இரண்டு வர்ஷத்துக்கெல்லாம் மிஸ்டர் நௌரோஜி வ்யாபார நிமித்தமாக இங்கிலண்டுக்குப் போக நேரிட்டது. காமா அண்ட் கம்பெனி யென்னும் பெரிய பார்ஸி கம்பெனியார் லண்டனில் ஒரு கிளை ஸ்தாபித்து, அந்தக் கிளைக்கு மிஸ்டர் நௌரோஜியை மானேஜராக நியமித்தார்கள்.

### தேச ஸேவகத்தின் ஆரம்பம்.

மிஸ்டர் நௌரோஜி உபாத்யாயராக இருந்தபோது, பாடஞ்சொல்லிக் கொடுக்கும் தொழிலை மாத்ரம் கவனித்து வரவில்லை. அவருக்கு தேச ஸேவகத்தில் பால்யம் முதல்கொண்டே அவா அதிகமிருந்துவந்தது. அவர் உபாத்யாயராக இருந்த எட்டு வர்ஷ காலத்தில், அவர் பற்பல ஸபைகளையும் வித்யா ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி, அவைகள் நன்றாய் நடந்து வரும்படி ஒழுங்குபடுத்தி வைத்தார். அவர் ஜன ஸமூகத்தின் இரண்டொரு அம்சங்களை மாத்ரம் உயர்த்தவில்லை. எல்லா பொதுக் கார்யங்களையும் கவனித்து வந்தார்.

அவர் தாமிருந்த பள்ளிக்கூடமாகிய எல்பின்ஸ்டன் காலேஜில் மாணவ இலக்கிய சாஸ்த்ரீய ஸங்கமொன்று ஸ்தாபித்தார். அது நாளது வரையில் நடந்து வருகிறது. அந்த ஸங்கத்தையொட்டி ஒரு இலக்கியப் பத்ரிகையையும் ஏற்படுத்தி, அதன் ஆரம்ப காலத்தில், அதற்குப் பல வ்யாஸங்கள் எழுதிவந்தார். அதோடு, அவர் அந்த ஸபையின் கிளைகளாக குஜராத்தி ஞான ப்ரசாரக மண்டலி யென்றும், மராத்தி ஞான ப்ரசாரக மண்டலி யென்றும் இரண்டு ஸபைகள் ஏற்படுத்தி, அவைகளில் முறையே, குஜராத்தி பாஷையிலும் மராத்தி பாஷையிலும் உபன்யாஸங்களும், விவாதங்களும் நடக்க ஏற்பாடு செய்தார்.

அவருடைய முயற்சியால்தான் பம்பாயில் முதல் முதல் பெண்கள் பாடசாலைகள் ஏற்

படுத்தப்பட்டன. ஒரு ஸமயம் மாணவர் ஸங்கத்தின் ஒரு மீட்டிங்கில், மிஸ்டர் பேராய்ஜீ காந்தி என்பவர் பெண் கல்வியினால் ஏற்படும் ஸௌகர்யங்களைப்பற்றி ஒரு வ்யாஸம் வாசித்தார். அந்த மீட்டிங்கில் ப்ரெஸிடெண்டாக இருந்த பாட்டன் என்னும் காலேஜ் ப்ரின்ஸிபல், ஸங்கத்தின் மெம்பர்கள் வாய்ப்பேச்சோடு மாத்ரம் நிற்கக் கூடாதென்றும், பெண் கல்வியைப் பரவச் செய்ய முயற்சிகள் எடுத்துக்கொண்டு உழைக்க வேண்டுமென்றும் சொன்னார்.

இதன்மேல் மிஸ்டர் நௌரோஜி, சில மெம்பர்களைத் துணையாகக் கொண்டு, பம்பாய் நகரத்தில் பற்பல பாகங்களில் பெண்கள் பாடசாலைகள் ஏற்படுத்தி, அவரும் மெம்பர்களும் ஒழிந்த நேரங்களில் பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்து வந்தார்கள். அந்தப் பாடசாலைகளில் பல இன்னும் ஷை ஸங்கத்தின் ஆதரவில் நடந்து வருகின்றன. ஆகவே மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி பெண் கல்வியை முதல் முதல் ஸ்தாபித்தவர்களில் ஒருவராவர். மிஸ்டர் நௌரோஜி, பம்பாய் அஸோஸியேஷன், விதவா விவாஹஸங்கம், விக்டோரி அண்ட் அல்பர்ட் ம்யூஸியம், பார்ஸி ஜிம்னாஸியம் என்னும் தேகப் பயிற்சி சாலை முதலிய பல ஸ்தாபனங்களையும் ஏற்படுத்துவதில் முதன்மையாயிருந்தார்.

1851-ம் வர்ஷத்தில் அவர் 'ரஸ்ட் காப்டார்' என்னும் குஜராத்தி வாரப் பத்ரிகையை ஏற்படுத்தி, இரண்டு வர்ஷம் அதை நடத்திவந்தார். அதில் அவர் ஆசாரம், மதம், கல்வி ஆகிய இவைகளை சீர்திருத்த வேண்டியதின் அவச்யத்தைப் பற்றி வற்புறுத்தி வந்தார். இவைகள் விஷயமாக அவர் செய்த முயற்சிகளால் தான் மேற்கு இந்தியாவில் ஆசார சீர்திருத்தம், பெண் கல்வி, முதலிய சீர்திருத்தங்கள் ரொம்ப முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. அவர்தான் பம்பாய் ராஜதானியில் தேசபாஷைப் பத்ரிகையை முதலில் ஸ்தாபித்தவர்.

### இங்கலண்டுக்குப் போனது.

மிஸ்டர் நௌரோஜி பம்பாயிலிருந்த வரையில் ராஜாங்க விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளவில்லை. அவர் காமா அண்ட் கம்பெனியின் ப்ரதிநிதியாக லண்டனுக்குப் போன பிறகு, ராஜாங்க விஷயங்களைப்பற்றி கவனிக்கலானார். அவர் இங்க்லீஷ் ஜனங்களுக்கு இந்தியாவின் உண்மையான நிலைமையை எடுத்துக் காட்டி, அவர்களுடைய கடமைகளைத் தெரிவிக்க ஸங்கங்கள் ஏற்படுத்த முயன்றார். முதலில் லண்டன் இந்திய ஸங்கம் என்ற ஸங்கத்தை ஸ்தாபித்தார். பிறகு ஈஸ்ட் இந்தியா அஸோஸியேஷன் என்ற ஒரு பெரிய ஸங்கம் 1867-ம் வர்ஷத்தில் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார். அதில் இந்தியா ஸம்பந்தமான பல விஷயங்களைப்பற்றி விவாதங்கள் நடக்கவும், அவைகளை வெளியிடவும் ஏற்பாடு செய்தார். அந்த ஸங்கத்தினுடைய பத்ரிகையின் ஆரம்ப காலத்தில் இந்தியா ஸம்பந்தமான பல விஷயங்களைப்பற்றி மிஸ்டர் நௌரோஜி எழுதின அநேக வ்யாஸங்கள் அதில் வெளியாயிருக்கின்றன.

இதோடு நில்லாமல், மிஸ்டர் நௌரோஜி, பல இலக்கிய ஸங்கங்களிலும் சாஸ்த்ரீய ஸங்கங்களிலும் சேர்ந்துகொண்டு இந்தியாவுக்காக உழைத்துவந்தார். லண்டனிலுள்ள யூனிவர்ஸிட்டி காலேஜில் குஜராத்தி பாஷைக்கு ப்ரொபஸராகச் சேர்ந்து, பிறகு அந்தக் காலேஜின் ஸெனேட்டிலும் (காலேஜ் ஸபையிலும்) மெம்பராகச் சேர்ந்துகொண்டார். அவர் இவையெல்லாம் செய்ததின் முக்ய நோக்கம் என்னவென்றால், இந்தியர்களுடைய குறைகளை இங்க்லீஷ்காரர்களுக்குத் தெரிவிப்பதும் ஆசியா வாஸிகள் தாழ்ந்தவர்கள் என்று ஐரோப்பியர்கள் கொண்டிருக்கும் தப்பெண்ணத்தை ஒழிப்பதுமே. இதற்காக அவர் பலவிடங்களில் ப்ரஸங்கங்கள் செய்தும், பத்ரிகைகளுக்கு வ்யாஸங்கள் எழுதியும் வந்தார். இதனால் அவருக்கு இங்க்லண்டில் பேரும் புகழும் உண்டாயிற்று.



1862-ம் வர்ஷத்தில் மிஸ்டர் நௌரோஜி மெஸ்ஸர்ஸ் காமா அண்ட் கம்பெனியிலிருந்து பிரிந்து ஸொந்தத்தில் ஒரு கம்பெனி நடத்தி வந்தார். ஆனால் துரத்ருஷ்ட வசத்தால் 1866-ம் வர்ஷத்தில் அவருடைய கம்பெனி முறிந்து போயிற்று. ஆனால் அவர் நாணயமுள்ளவரென்றும், ஒழுங்குத் தப்பாய் நடப்பவரல்லவென்றும் அவருக்குக் கடன் கொடுத்தவர்களில் பலருக்குத் தெரியுமாதலால், அவர்களுடைய தயவாலும், மிஸ்டர் நௌரோஜியினுடைய ஸ்நேஹிதர்களுடைய உதவியாலும் தமக்கு நேர்ந்த கஷ்டத்திலிருந்து தமது பெயர் கெடாமல் மீட்டுக்கொண்டு, 1869-ம் வர்ஷம் இந்தியா வந்து சேர்ந்தார்.

பம்பாய் வந்ததும் பம்பாய் வாஸிகள் அவரை வெகு விமரிசையாய் வரவேற்றார்கள். அவர் இங்க்லண்டிலிருந்த போது இந்தியாவுக்காக உழைத்ததின் நிமித்தம், அவருக்கு 30,000 ரூபாய் கொண்ட ஒரு பணப் பையை ஒரு வரவேற்பு உபசாரப் பத்ரிகையுடன் கொடுத்தார்கள். மிஸ்டர் நௌரோஜி அந்தப் பணத்தில் சிறிதளவும் தமது ஸொந்தச் செலவுக்கு வைத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையும் பொது நன்மைக்கான வேலைகளுக்குக் கொடுத்து உதவினார்.

### இந்தியாவின் வறுமை; பாஸட் கமிட்டியில் ஸாக்ஷ்யம் சொன்னது.

பிறகு சிலகாலத்துக்கெல்லாம் மிஸ்டர் நௌரோஜி மறுபடியும் இங்க்லண்டுக்குப் போனார். இந்தத் தடவை அவர் இந்தியாவின் ரொம்ப தரித்ரமான நிலைமையை எடுத்துக் காட்டினார். அப்போது இந்திய ராஜாங்கத்தின் வரவு செலவைப்பற்றி விசாரிக்க பாஸட் கமிட்டியென்று ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருந்தது. அதன் முன் ஸாக்ஷ்யம் சொல்ல மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியை ஒரு ஸாக்ஷியாக நியமித்திருந்தார்கள். மிஸ்டர் நௌரோஜி அதில் ஸாக்ஷ்யம் சொன்னபோது, ஸர்க்கார் ப்ரசுரங்களையும், தக்க ப்ரமுகர்கள் எழுதியுள்ள புஸ்தகங்களையும் ஆதாரமாக எடுத்துக்கொண்டு, இந்தியர்கள் ரொம்ப ஏழைகளென்றும், சராசரியில் ஒரு இந்தியருக்கு 20 ரூபாய்க்குமேல் வரும்படி கிடையாதென்றும், ஆனால் வரியோ தலைக்கு மூன்று ரூபாய் வீதமாகிறதென்றும் ரூபித்துக் காட்டினார். மிஸ்டர் நௌரோஜி இப்படிப் பேசினதை இந்தியாவிலுள்ள இங்க்லீஷ் பத்ரிகைகளும், இங்க்லீஷ் உத்யோகஸ்தர்களும் ஆக்ஷேபித்து எழுதலானார்கள். இதனால் விவாதம் வளரலாயிற்று. ஆனால் 1882-ம் வர்ஷத்தில் வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் வரவு செலவு மெம்பராயிருந்த ஸர் எவலின் பேரிங் என்பவர் வெகு ச்ரமப்பட்டுக் கணக்குகள் போட்டுப் பார்த்து, ஒரு ப்ரிட்டிஷ் இந்தியரின் சராசரி வரும்படி உயர்ந்தது வர்ஷத்துக்கு 27 ரூபாய்க்கு மேலில்லையென்று ஒப்புக்கொண்டார். இந்தியரின் சராசரி வர்ஷ வரும்படி 20 ரூபாய்க்கு மேலில்லையென்பது மிஸ்டர் நௌரோஜியின் கக்ஷியாதலால், அவர் ஸர் எவலின் பேரிங்குக்கு கடிதம் எழுதி, 27 ரூபாய் என்று சொல்லுவதற்கு ஆதாரங்கள் என்னவென்று தெரிவிக்குப்படி கேட்டார். ஆனால் ஸர் எவலின் அவைகளைத் தெரிவிக்க முன் வரவில்லை. இருந்தாலும் வர்ஷ வரும்படி 27 ரூபாய் என்றதினாலேயே இந்தியர்கள் ரொம்ப ஏழையென்பது வ்யக்தமாய் ஏற்பட்டுவிட்டது.

மிஸ்டர் நௌரோஜி பாஸட் கமிட்டியில் சொன்ன ஸாக்ஷ்யத்தில் ப்ரிட்டிஷ் இந்திய

அரசாட்சியில் உள்ள குறைகளில் பலவற்றை எடுத்துக் காட்டினார். உதாரணமாக அரசாட்சியின் அபாரமான செலவு, வர்ஷந்தோறும் இந்தியாவிலிருந்து இங்க்லண்டுக்குப் பணம் போவது, ராஜாங்கத்தில் இந்தியர்களுக்கு உயர்ந்த உத்யோகங்கள் கொடுக்காதது, முதலியவைகளைப் பற்றி பேசினார்.

அவர் 1873-ம் வர்ஷத்தில் "இந்தியாவின் வறுமை" யென்று ஒரு சிறு புஸ்தகம் வெளியிட்டார். அதில் அவர் இந்தியர்கள் ரொம்ப ஏழை என்று சொல்லி வந்த கொள்கைக்கு ஆதாரமாயுள்ள கணக்கு விவரங்களை யெல்லாம் எழுதியிருந்தார். அதே புஸ்தகம் 7-வர்ஷங் கழித்து "இந்தியாவின் நிலைமை" யென்ற பெயருடன் விஸ்தரித்து எழுதப்பட்டு வெளியாயிற்று.

பரோடாவில் திவானாக இருந்தது.

மிஸ்டர் நௌரோஜி 1874-ம் வர்ஷத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவந்து பரோடா ஸமஸ்தானத்துக்கு திவானாக அமர்ந்தார். அந்த ராஜ்யமானது அப்போது சீர்கேடான நிலைமையிலிருந்தது. அதன் அரசர் முல்ஹார் ராவ் கெய்க்வார் தமது ராஜ்யத்தை சரியாக ஆண்டு வரவில்லை. அவருக்கு ஆளுந்திறமை போதாது. அவருடைய நிர்வாக உத்யோகஸ்தர்கள் திறமை யற்றவர்களாக இருந்ததோடு ஜனங்களைப் பல வழியிலும் ஹிம்ஸை செய்துவந்தார்கள். அங்கிருந்த போலீஸாரும் ஜனங்களை ஹிம்ஸித்து வந்தார்கள். நீதி ஸ்தலமும் கெட்டுப் போயிருந்தது. பாரபக்ஷமில்லாத ந்யாயம் கிடைப்பதரிதாயிருந்தது. இவைகளெல்லாம் போதாவென்று, அங்கிருந்த ப்ரிட்டிஷ் ரெஸிடெண்ட் ராஜ்ய வ்யவஹாரங்களில் தலையிட்டுச் சீர் திருத்தங்கள் செய்யாமலிருந்ததோடு, பிறர் தலையிட்டு சீர்திருத்தம் செய்யவும் ஸம்மதப்படவில்லை. ஆனால் மிஸ்டர் நௌரோஜி ஊக்கத்துடன் உழைக்க ஆரம்பித்து, பற்பல டிபார்ட்மெண்டுகளை சீர்திருத்தி, கோர்ட்டுகளை ஒழுங்குபடுத்தி, எல்லாருக்கும் தர்ம ந்யாயம் கிடைக்கும்படி செய்தார். இதனால் அவருக்குப் பல விரோதிகள் ஏற்பட்டார்கள். அவர்கள் மிஸ்டர் நௌரோஜியின் ஆட்சியில் பல பெருங் குற்றங்கள் கற்பனை செய்தார்கள். ஆனால் அவர் அவைகளுக்கெல்லாம் தக்க ஸமாதானம் சொல்லவே, அவருடைய பெயருக்கு ஒரு கேடும் வரவில்லை. அப்போதிருந்த ப்ரிட்டிஷ் ரெஸிடெண்ட்தான் ராஜாங்கத்தின் அபிவ்ருத்திக்குத் தடையாயிருந்தாரென்று தெரியவந்தது. இதன்மேல் அப்போதிருந்த வைஸ்ராய் அவரை (ப்ரிட்டிஷ் ரெஸிடெண்டை) வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

பம்பாய் முனிஸிபாலிடியும் மிஸ்டர் நௌரோஜியும்.

மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி 1875-ம் வர்ஷம் முதல் 1877-ம் வர்ஷம்வரையில் பம்பாய் முனிஸிபல் ஸபையில் ஒரு மெம்பராக இருந்தார். அதற்குப் பிறகு லார்ட் லிட்டன் இந்தியாவின் வைஸ்ராயாக வந்து, ஜனங்களுக்கு பாதகமாக அரசாட்சியை நடத்திவந்ததனால், மிஸ்டர் நௌரோஜி அவர் வேலையை விட்டுப் போகும்வரையில் பொதுக் காரியங்கள் ஒன்றிலும் கலந்துகொள்ளாமல் இருந்தார்.

பிறகு அவர்போனதும், மறுபடியும் ராஜாங்க விஷயங்களிலும் வேறு பொதுக் காரியங்களிலும் கலந்து உழைத்துவந்தார். மறுபடியும் அவர் பம்பாய் முனிஸிபாலிடியில் ஒரு மெம்பராகச் சேர்ந்துகொண்டார். அவருக்கு வரவு செலவு விஷயங்களிலும், கணக்குகளிலும் விசேஷதிறமை உண்டு. இதனால் அவர் முனிஸிபாலிட்டியின் கணக்குகளில் இருந்த ஒரு பிழையைக் கண்டுபிடித்து, அதன் மூலமாய் முனிஸிபாலிடிக்கு 10 லக்ஷம் ரூபாய் நஷ்டமேற்படாமல் செய்தார். இவர் செய்த உதவிக்கு ச்லாகிப்பதாக அந்த கார்ப்பரேஷன் ஸபையில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.



அவர் 1885-ம் வர்ஷத்தில் பம்பாய் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் மெம்பராக நியமனம் செய்யப்பட்டார். அந்த வர்ஷத்தில்தான் இந்தியன் நாஷனல் காங்க்ரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. அது விஷயமாய் அவர் விசேஷ ஊக்கமெடுத்து வந்தார்.

மிஸ்டர் நௌரோஜியும் பார்லிமெண்டும்.

மிஸ்டர் நௌரோஜிக்கு வெகுநாளாக பார்லிமெண்டில் காமன்ஸ் ஸபையில் மெம்பராக வேண்டுமென்று ஒரு அவா இருந்தது. அதனால் அவர் 1886-ம் வர்ஷத்தில் மறுபடியும் இங்க்லண்டுக்குப் போனார். அப்போது இங்க்லண்டில் பார்லிமெண்டுக்கு எலெக்ஷன் நடந்துகொண்டிருந்தது. இங்க்லண்டிலுள்ள பார்லிமெண்டில் நான்கு கக்ஷிகள் இருக்கின்றன. அவையாவன: லிபரல், யூனியனிஸ்ட், லேபரைட், நாஷனலிஸ்ட் என்பனவாகும். இங்க்லண்டில் எலெக்ஷன் காலத்தில் ஒவ்வொரு ராஜாங்கக் கக்ஷியாரும் தங்களுக்கு ஒரு ப்ரதிநிதியை நியமித்து அவரைப் பார்லிமெண்டுக்கு மெம்பராகத் தெரிந்தெடுக்க முயற்சி செய்வது வழக்கம். அதே மாதிரி ஹால்பர்ன் என்னுமிடத்தில் லிபரல் கக்ஷியார் மிஸ்டர் நௌரோஜியை அபேக்ஷகராக நியமித்தார்கள்.

அந்த ஸமயம் இங்க்லண்டில் ஐயர்லண்டுக்கு ஸ்வய ஆட்சி கொடுப்பதா இல்லையா என்ற கேள்வி பலமாயிருந்தது. லிபரல் கக்ஷியார் ஸ்வய ஆட்சி கொடுக்க ப்ரியப்பட்டார்கள். யூனியனிஸ்ட் கக்ஷியார் இதற்கு ஸம்மதப்படவில்லை. பொதுவாய்ச் சொல்லுமிடத்து தேசத்தில் பெரும்பான்மையோர் ஐயர்லண்டுக்கு ஸ்வய ஆட்சி கொடுக்க இஷ்டப்படவில்லை. அதாவது யூனியனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்தவர்களே அதிகமாயிருந்தார்கள். இதனால் மிஸ்டர் நௌரோஜிக்கு அதிக வோட் கிடைக்கவில்லை. 1,950 வோட்டுகளே கிடைத்தன. யூனியனிஸ்ட் கக்ஷியைச்சேர்ந்த அவருடைய எதிராளிக்கு 3,651 வோட்டுகள் கிடைத்தன. ஆகவே மிஸ்டர் நௌரோஜி அந்தத் தடவை பார்லிமெண்டுக்கு போக முடியவில்லை.

அந்த வர்ஷக் கடைசியில் அவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்து, கல்கத்தாவில் நடந்த இந்தியன் நாஷனல் காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். அப்போது இந்தியாவில் ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒருகமிஷன் நியமிக்கப்பட்டு, அது விசாரணை நடத்திக் கொண்டிருந்தது. 1887-ம் வர்ஷம் ஜனவரி மாஸத்தில் அவர் அந்தக் கமிஷனில் ஸாக்ஷ்யம் சொன்னார். பிறகு அவர் மறுபடியும் இங்க்லண்டுக்குப்போய் பார்லிமெண்டில் மெம்பராவதற்கு முயற்சிகள் செய்துவந்தார். 5-வர்ஷங் கழித்து அவர் ஸெண்ட்ரல் பின்ஸ்பரி என்னும் ஸ்தலத்துக்கு ப்ரதிநிதியாக பார்லிமெண்டில் காமன்ஸ் ஸபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் பார்லிமெண்டில் இருந்த சில மெம்பர்களைச் சேர்த்துக்கொண்டு, இந்தியன் பார்லிமெண்டரி கமிட்டி என்று ஒரு ஸபை ஏற்படுத்தி, ப்ரிட்டிஷ் மெம்பர்களை இந்திய விஷயங்களில் தலையிடும்படி தூண்டிவந்தார். அந்த ஸபையானது வெகு காலம்வரையில் இந்தியா விஷயமாய் உதவியாக இருந்துவந்தது.

பார்லிமெண்டில் சேர்ந்த மறு வர்ஷம் மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி, மிஸ்டர் ஹெர்பர்ட் பால் என்னும் மெம்பரைக் கொண்டு, இந்தியன் ஸிவில் ஸெர்விஸுக்கு இங்க்லண்டிலும் இந்தியாவிலும் ஸம காலப் போட்டிப் பரீக்ஷை நடத்தி உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம்

வெண்டு வரச் செய்தார். அதற்காக அவர் விசேஷ ஊக்கமெடுத்து உழைத்ததால், இந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஆக்ஷேபித்துங்கூட, பார்லிமெண்டில் மெஜாரிடியால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் கவர்ன்மெண்டார் இந்தத் தீர்மானத்தை அனுஸரித்து ஒரு சீர்திருத்தமும் செய்யவில்லை.

மிஸ்டர் நௌரோஜி பார்லிமெண்டில் இருந்ததின் ஒரு முக்யமான ப்ரயோஜன மென்னவென்றால், அவருடைய முயற்சியால் இந்தியாவின் வரவு செலவு விஷயங்களைப்பற்றி கவனிக்க 1895-ம் வர்ஷத்தில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டதே. அந்தக் கமிஷனில் அவர் ஒரு மெம்பராகவும் நியமிக்கப்பட்டார். அதில் அவர் சொன்ன ஸாக்ஷ்யங்களும், எழுதிய ரிபோர்ட்டுகளும் ரொம்ப உபயோகமுள்ளவைகளாகும்.

1893-ம் வர்ஷத்தில் அவர் மறுபடி இந்தியாவுக்குத் திரும்பி வந்து லாகூரில் நடந்த இந்தியன் நாஷனல் காங்கிரஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் பம்பாயிலிருந்து லாகூருக்குப் போனபோது, வழியில் அவருக்கு நடந்த உபசாரங்கள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. லாகூரில் அவருடைய வண்டியை சிறுவர்கள் இழுத்துச் சென்றார்கள். லாகூரில் அவருக்கு நடந்த உபசாரங்கள் ரஞ்ஜித்ஸிங் மஹாராஜா காலத்துக்குப் பிறகு எவருக்கும் நடக்கவில்லையாம்.

1895-ம் வர்ஷத்தில் இங்கிலண்டில் மறுபடியும் எலெக்ஷன் நேர்ந்தது. அந்தத் தடவை லிபரல் கக்ஷியார் தோற்றுப் போனார்கள். மிஸ்டர் நௌரோஜியும் லிபரல் கக்ஷியைச் சேர்ந்தவராதலால், அநேக லிபரல் மெம்பர்களைப் போலவே, பார்லிமெண்டில் அவருக்கு ஸ்தானம் கிடைக்காமல் போயிற்று. யூனியனிஸ்ட் கக்ஷியைச்சேர்ந்த ஒருவர் இவருக்கு பதிலாக மெம்பராகிவிட்டார். இருந்தாலும் மிஸ்டர் நௌரோஜி இந்தியாவுக்காக பாடுபட இங்கிலண்டில் இருக்கவேண்டுமென்றும், இன்னொரு முறை பார்லிமெண்டுக்கு ப்ரயத்தனம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்து, இங்கிலண்டிலேயே இருந்தார். ஆனால் மறுமுறையும் அவருக்கு பார்லிமெண்டில் ஸ்தானம் கிடைக்கவில்லை. அங்கிருந்தவரையில் அவர் இந்தியர்களின் குறைகளை நிவர்த்திக்க மிகவும் பாடுபட்டு வந்தார்.

மிஸ்டர் நௌரோஜி 1906-ம் வர்ஷத்தில் மறுபடி இந்தியாவுக்கு வந்து காங்கிரஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். அந்த ஸமயம் தான் அவர் இந்தியாவுக்கு ஸ்வய ஆட்சி வேண்டுமென்று தெரிவித்தது. அது முதல் கொண்டு தான் இந்தியர்கள் ஸ்வய ஆட்சி வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள்.

மிஸடர் தாதாபாய் நௌரோஜி 1907-ம் வர்ஷம் ஜனவரி மாஸத்தில் இங்கிலண்டுக்குப் போனார். அவருக்கு இங்கிலண்டில் இருந்து கொண்டு, இந்தியாவுக்காக பாடுபடவேண்டு மென்று அவா இருந்தது. முன்போலவே அவர் ப்ரிட்டிஷ் கனவான்களை இந்திய விஷயங்களில் ஊக்கமெடுத்துக் கொள்ளும்படி செய்ய எண்ணினார். ஆனால் அவருக்கு தேஹ அசதி ஏற்படவே, வைத்யர்கள் அவரை இந்தியாவுக்குத் திரும்பிப் போகும்படி சொன்னார்கள். இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகு, சில காலம் பம்பாயில் இருந்துவிட்டு, பிறகு அவர் அந்தப்பட்டணத்துக்கு ஸமீபத்திலுள்ள வெர்ஸோவா என்னும் ஊரில் வஸித்துவந்தார். அதுமுதல் அவருடைய ஜன்ம தினமானது தேசமெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற வர்ஷம் பம்பாய் யூனிவர்ஸிட்டியார் அவருக்கு எல். எல். டி. பட்டம் கொடுத்தார்கள். அவர் சிலகாலமாக அதிக நோய்ப்பட்டிருந்தார். சில வாரங்களுக்குமுன் அவர் பம்பாய்க்கு வைத்யம் பார்த்துக்கொள்ள வந்தார். என்ன வைத்யம் செய்தும் பயன்படாமல் சென்ற ஜூன்மாஸம் 30-ந்தேதியன்று காலகதியடைந்தார்.

அவர் இறந்துபோகும்போது அவருக்கு வயது 92 நடந்துகொண்டிருந்தது.

மிஸ்டர் நௌரோஜி 60 வர்ஷகாலம் அதாவது 1845-ம் வர்ஷம் முதல் 1907-ம் வர்ஷம் வரையில் தேச நன்மைக்காக இடைவிடாது பாடுபட்டுவந்தார். அதற்குப் பிறகுங்கூட, பொது வேலைகளில் கலந்து உழைக்காவிட்டாலும், எல்லாவற்றையும் அதிக ஊக்கத்துடன் கவனித்துவந்து, அப்போதைக்கப்போது இந்தியர்களுக்கு புத்திமதி யளித்துவந்தார்.

மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி எல்லாராலும் கொண்டாடப்படுவதை உத்தேசித்து, இந்தியாவிலுள்ள பார்ஸி மத குருவானவர் அவருடைய பெயரை மஹான்களின் வரிசையில் சேர்த்திருக்கிறார்.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### CASHEW NUT.

### முந்திரிக் கொட்டை.

கொஞ்சம் நாள்களுக்குமுன் மலையாளத்திலிருந்து ஸுமார் ரூபா 50,000 பெறுமானமுள்ள முந்திரிக்கொட்டை இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்று தெரியவருகிறது. இந்த வ்யாபாரம் நூதனமாக உண்டாக்கப்பட்டதென்று சிலர் நினைக்கக்கூடும். அப்படியல்ல. முந்திரியானது கொட்டை ரூபமாயும், பருப்பு ரூபமாயும் வெகு காலமாக இதர தேசங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. முக்யமாக மங்களூர், கொச்சி, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது. வடக்கில் கோவா பட்டணம் முதல், தெற்கில் திருவாங்கூர் வரையிலுள்ள ப்ரதேசங்களில் கிடைக்கும் முந்திரிக் கொட்டைகளும், பருப்பும் பம்பாய் மார்க்கமாக இதர தேசங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. பம்பாயிலிருந்து அனுப்பப்படும் முந்திரி அநேகமாய் லண்டனுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆனால் ஐரோப்பாக் கண்டத்திற்குத் தேவையான முந்திரி பெரும்பாலும் போர்த்துகீஸ் கிழக்கு ஆப்ரிகாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. விலை, வாதாம் பருப்பின் உற்பத்திக்கு தகுந்தபடி மாறிக் கொண்டிருக்கும்.

முந்திரி மரமானது, ஆதியில், போர்த்துகீஸ் ஜனங்களால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. அவர்களேதான் இந்த மரத்தை வெஸ்ட் இண்டீஸிலும், ஆப்ரிக்காவிலும் பரவச் செய்தவர்கள். அதிக ப்ரயோஜனமுள்ள இன்னும் அநேக வ்ருக்ஷ ஜாதிகளை போர்ச்சுகீஸ் ஜனங்கள் இந்தியாவில் பரவச் செய்திருக்கிறார்கள். கொய்யா, பப்பாளி, அன்னாஸ் முதலிய செடிகள் போர்த்துகீஸ் ஜனங்களால் தான் முதலில் இந்தியாவில் கொண்டுவரப்பட்டு வ்ருத்தி செய்யப்பட்டன. முந்திரி மரம் ஒரு கெட்டியான மரம்; பார்வைக்கு கடுக்காய் மரம் போலிருக்கும். இலைகளும் கடுக்காய் மரத்தின் வாஸனையுடையனவாயிருக்கும். ஆனால் கடுக்காய் மரம்போல் அவ்வளவு உயரம் வளர்கிறதில்லை. கூடியவரையில் நல்ல நிழலைக்கொடுக்கும். திருவாங்கூர் முதல் கோவாவரையில் எங்கு பார்த்தாலும் ஒரே முந்திரிக் காடாயிருப்பது ஆச்சரியமாயிருக்கும். முக்யமாக, தென்கன்னடம், திருவாங்கூர் ப்ரதேசங்களில் இச் சோலைகள் அதிகம். மலையாளத்தில் சௌகாட்டு ப்ரதேசத்தில் அதிகமா யிருக்கின்றன. இவ்விடங்களில் இம்மரத்தை ஜனங்கள் ஜாக்ரதையுடன் பாதுகாக்காவிட்டாலும், அவைகள் செழிப்பாக வளர்கின்றன.

### முந்திரிப் பழம்.

முந்திரிப்பழம், மலையாளம் முதலிய விடங்களில் பறங்கி மாம்பழம் என்று வழங்கிவருகிறது. பழம் மஞ்சள் நிறமாகவும் பழுப்பு நிறமுள்ளதாகவுமிருக்கும். ஸுமார் 1 அங்குலம் முதல் 2 அங்குலம் வரையில் நீளமுள்ளதாயும், அடியில் பெருத்து நுனியில் கூராகவுமிருக்கும். ரஸம் அதிகமாகவும், ஒருவிதமான வாஸனையோடு கூடினதாகவு மிருக்கும். சில விடங்களில் இந்தப் பழத்தை மாடுகளுக்குத் தீனியாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். ஏழை ஜனங்களில் அநேகர் இந்தப் பழத்தைச் சாப்பிடுகிறார்கள். மத்யான ஆகாரத்திற்குப் பதிலாக இந்தப் பழத்தை ஏழை ஜனங்களில் அநேகர் உபயோகப்படுத்துகிறார்கள். இதனால் தேக ஸௌக்யத்திற்குக் கெடுதி நேரிடும். வெஸ்ட் இண்டீஸ் தீவுகளில் இந்தப் பழத்தை வெகுநாள் வரையும் கெட்டுப்போகாமலிருக்கும்படி செய்கிறார்கள். இதன் ரஸத்திலிருந்து ப்ரேஸில், போர்த்துகீஸ் ஆப்ரிக்கா முதலான இடங்களில் ஒருவிதமான மதுபானம் தயார் செய்கிறார்கள். அதிலிருந்து ஒரு விதமான சாராயத்தையும் இறக்குகிறார்கள். திருவாங்கூர் கொச்சி ஸமஸ்தானங்களில் கொஞ்ச நாளுக்குமுன் முந்திரியிலிருந்து ஒரு விதமான சாராயத்தை இறக்கி வந்தார்கள். இப்பொழுதும் திருட்டுத்தனமாக மேலே சொன்ன இடங்களிலும், இன்னும் இதர இடங்களிலும் சாராயத்தை இறக்குகிறார்கள். மலையாளத்திலுள்ள கள்ளுக் கடைக்காரர்கள் முந்திரி ரஸத்தை கள்ளுடன் கலப்பதுண்டு. அப்படிச் செய்வதனால் கள்ளின் போதை அதிகரிக்கிறதாம். அதிகமாகப் பேதியாவதற்கு ஒரு மருந்தாக வைத்யர்கள் இந்த ரஸத்தை உபயோகப்படுத்துகிறார்கள்.

### எண்ணெய்.

முந்திரிக் கொட்டையின் எண்ணெய் அதிக கார

முன்னதாயும், எரிச்சலை உண்டு பண்ணக்கூடியதாயு மிருக்கும். இந்த எண்ணெயை பாலுண்ணி, ரணங்கள், இன்னும் வேறு விதமான காயம் இவைகளுக்கு மருந்தாக உபயோகப்படுத்தும் விஷயம் ஸாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

பருப்பு.

முந்திரிப் பருப்பு அதிக பித்தமென்று சொல்லுகிறார்கள். வாதாம் பருப்பைப்போல் ஏராளமாக உபயோகப்படாம லிருந்தாலும், அதை ஸாதாரணமாக சர்க்கரையுடனாவது, சர்க்கரை ஸம்பந்தப்பட்ட தின்பண்டங்களுடனாவது உபயோகப்படுத்துகிறார்கள். பணியாரங்கள் செய்வதில் முந்திரிப் பருப்பை ஏராளமாக உபயோகப்படுத்துகிறார்கள். "சாக்கொலேட்" என்று சொல்லப்படும் தின்பண்டம் செய்வதில் இது அதிகமாக ப்ரயோஜனப்படுகிறது. இந்தியாவில் முந்திரிப் பருப்பு ஏராளமாகக் கடைகளில் விற்கப்படுகிறது. பருப்பு வறுத்த பிறகு வெகு ருசிகரமாயிருக்கும். மெடீரா சாராயத்திற்கு நல்ல பரிமளம் கொடுக்கும்பொருட்டு முந்திரிப் பருப்பை உபயோகப்படுத்துகிறார்கள். பங்களூரில் ஒரு வ்யாபாரி வெகு காலமாக முந்திரிப் பருப்பிலிருந்து சாகொலேட் என்று சொல்லப்பட்ட ஐரோப்பிய தின்பண்டத்திற்குச் ஸமானமான ஒரு பக்ஷணத்தைச்செய்து விற்று வருகிறார்.

பிசின்.

முந்திரி மரத்திலிருந்து ஒரு விதமான பிசின் உண்டாகிறது. அதை ஜனங்கள் சேகரித்து அனேக விதமாய் ப்ரயோஜனப்படுத்துகிறார்கள். அந்தப் பிசின் அநேக வர்ணங்களில் கிடைக்கும். சிவப்பு வர்ணமும், மஞ்சள் வர்ணமுமுள்ள பிசின் தான் அதிகமாகக் கிடைக்கிறது. அதிலிருந்து தரமான வார்னிஷ் செய்யப்படுகிறது. மேலும் இப்பிசின் ஸம்பந்தப்பட்ட வார்னிஷுக்கு பூச்சிகளைக் கொல்லும் சக்தி யுண்டு. இவ்வித வார்னிஷ் பூசப்பட்ட இடங்களில் பூச்சிகளே சேரா. வீடுகளில் செல்லு, கறையான் முதலிய பூச்சிகள் சேராமலிருக்கும் பொருட்டும், மர ஸாமான்களும் புஸ்தகம் வகையறாக்களும் பூச்சிகளினால் சேதமாகாமலிருக்கும் பொருட்டும், முந்திரிப் பிசினினால் செய்யப்பட்ட வார்னிஷைப் பூசுகிறார்கள். முந்திரி மரத்தின் பட்டையிலிருந்து கிடைக்கும் பிசினை புஸ்தகம் பயிண்டு செய்வதில் ப்ரயோஜனப் படுத்துகிறார்கள்.

முந்திரி மரப் பட்டையிலிருந்து பால்போல் இறக்கப்படும் ரஸத்திலிருந்து அழியாத இங்கி செய்யப்படுகிறது. முந்திரி மரத்தின் பட்டையை அனேக ஔஷதங்களாக ப்ரயோகிக்கிறார்கள். தோல் பதனிடுவதற்கும் பட்டை ஏராளமாக உபயோகப்படுகிறது. முந்திரிமரத்தை எரித்துக் கரிக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

## TRAINING DULL CHILDREN.

### மந்தமான குழந்தைகளை பயிற்சி செய்தல்.

ஸமீபத்தில் வெளிவந்த "சத்திய வேத பாதுகாவல"னில் இது விஷயமாக ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

நமது பாலிகா பாடசாலைகளில் ப்ரதி வகுப்பிலும் மந்த புத்தியுள்ள குழந்தைகள் ஏறக்குறைய சரி பாதி இருக்கிறார்கள். உபாத்யாயர்கள் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும்போது, இந்த மந்த புத்தியுள்ள குழந்தைகள் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்குமேயன்றி, அவர்களுடைய ஞாபகம் வெளியே உலாவிக்கொண்டுதானிருக்கும். ஒரு பாடத்தைப் பல முறை சொல்லிக்கொடுத்துக் கேட்டாலும், இந்த மந்த புத்தியுள்ள குழந்தைகள் விரும்பார்கள். அப்போது உபாத்யாயருக்குக் கோபம் வரும். சில ஸமயம் குழந்தைகளை அடிக்க நேரிடும். பாடம் தெரியவில்லையேயென்று அடித்தால், குழந்தைகள் மிகவும் மந்தமாகிவிடும். குழந்தைகளை அடிக்கக்கூடாது. பெற்றோர்கள் குழந்தைகளை உபாத்யாயரிடம் அடைக்கலமாக விட்டிருப்பது, அவர்களை நல்லவழியில் திருப்பி மேலான நெறியைப் போதிக்கிறதற்காகவே யன்றி வேறல்ல. குழந்தைகளுக்கு அன்புடன் கற்றுக் கொடுக்கவேண்டும். இன்று மந்தமான குழந்தைகள் நாளை புத்திசாலி யாகிவிடும். பள்ளிக்கூடத்தில் மிகவும் மந்தமாயிருந்த குழந்தைகள் பிற்கால வாழ்க்கையில் நல்ல பதவியைப்பெற்று வந்திருக்கிறார்களென்பது தெரிந்த விஷயம். ஒரு குழந்தையை மந்தமாகச் செய்வதும், புத்திசாலியாகச் செய்வதும் உபாத்யாயரிடம் இருக்கிறது. சில உபாத்யாயர்கள் தங்கள் கஷ்டத்தை கவனித்து, இந்த மந்த புத்தியுள்ள குழந்தைகளைக் கேள்விகள் கேட்காமலும் அதிகமாகக் கவனிக்காமலு மிருக்க நேரிடும். ஒரு வகுப்பில் புத்திசாலிக் குழந்தைகளை மாத்ரம் கவனித்துவிட்டு, தாங்கள் அதிக ச்ரமத்திற்கு ஆளாகாமலிருக்க எண்ணமுமுண்டாகும்.



மேற்கண்ட குறிப்புகள் மந்த புத்தியுள்ள குழந்தைகளைச் சுறு சுறுப்பாக்குவதற்கு அனுகூலமாயிருக்கும்.

உபாத்யாயர் ஒரு வகுப்பில் தாம் சொல்லிக் கொடுத்துவரும் போதனா முறையை இந்த மந்த புத்தியுள்ள குழந்தைகளின் மூளையின் வலிமைக்குத் தகுந்தபடி அமைத்துக்கொள்ளவேண்டும். மந்த புத்தியுள்ளவர்கள் வகுப்பில் தூங்காதபடியும், அவர்கள் மனம் வேறு இடம் நாடாமலிருக்கும்படியும், அவர்களை அடிக்கடி தூண்டவேண்டும். கரும் பலகையில் அவர்களை எழுதச் சொல்ல வேண்டும். புத்திசாலியாயுள்ள குழந்தைகளின் பக்கத்தில் மந்தமான குழந்தைகளை உட்கார வைக்கவேண்டும். ஒரு வகுப்பு மிகவும் சோம்பலாயிருந்தால் உடனே தேகப் பயிற்சி செய்ய அழைத்துப் போகவேண்டும். அல்லது கெட்டிக்காரக் குழந்தைகளைப் பாடத்தைப் பார்த்துப் படிக்கச் சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளை அதுமாதிரியாகவே உரத்துப் படிக்கச் சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளைக் கேள்விகள் கேட்கும்போது, உட்காரவைத்துக் கேட்பது நலம். மனக்கணக்கு கேட்கவேண்டும். அதன் சரியான விடையை விரைவாய் ஓடி கரும் பலகையில் முதல் எழுதுகிற குழந்தைக்கு வெகுமதி கொடுத்து உத்ஸாகப்படுத்த வேண்டும். இப்படியாகப் பலமுறைகளினால் மந்தமான குழந்தைகள் சுறு சுறுப்பாகி வந்திருக்கிறார்கள். இது அனுபவம். குழந்தைகளை அன்பு என்கிற கயிற்றினால் கட்டி, அவர்களுக்குப் போதித்துவந்தால், உபாத்யாயர்களின் ச்ரமம் வெகு தூரம் நீங்கும். குழந்தைகளும் சுறுசுறுப்புடன் படித்து வருவார்கள். பள்ளிக்கூடத்துக்கு வரும்போது குழந்தைகள் ஸந்தோஷமாக வந்து உபாத்யாயரைக் காண்பார்கள். பள்ளிக்கூடம் விட்டுப்போகும்போதும் குதூகலமாக வீட்டுக்குப் போக இட முண்டாகும்.

மந்த புத்தியுள்ள குழந்தைகள் மேற்கண்ட அனுபவ முறைகளினால், சுறுசுறுப்பை அடையாமலிருந்தாலாவது அல்லது மந்தத்தனத்தை அதிகமாக அடைந்தாலாவது உபாத்யாயர்கள் மௌனமாக இருக்கக் கூடாது. உடனே இவ்விஷயத்தைப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தி வைத்யரைக் கொண்டு குழந்தையின் மூளையைப் பரீக்ஷைசெய்யவேண்டும். தெரியாத பெற்றோர்களுக்குப் பள்ளிக்கூடத்துத் தலைமையதிகாரி எடுத்துச்சொல்லவேண்டும். குழந்தையின் மூளைக் கோளாறுகளை நிபுண வைத்யர்களாலும் அறியமுடியுமே யன்றி ஸாமான்யர்களால் அறிய முடியாத கார்யம். ஐரோப்பாவில் மிகவும் மந்தமான குழந்தைகள் வைத்யர்களால் பரீக்ஷிக்கப்பட்டதற்குப் பிறகு, சுறுசுறுப் புள்ளவர்களாயும் நல்ல புத்திசாலிகளாயும் இருக்கிறார்கள். ஒவ்வொரு பாடசாலைக்கும் கிட்ட வைத்யர்கள் இருப்பது அவச்யம். ஸாதாரணமாக ஏழைப் பெற்றோர்கள் வைத்யர்களுக்குப் பணம் கொடுத்துக் குழந்தையைப் பரீக்ஷிக்க முடியாததாலேயால், பள்ளிக்கூட அதிகாரிகள் நிபுண வைத்யர்களை வைத்துக்கொள்வது நலமாகும்.

## HEALTH NOTES.

### ஸுகாதாரக் குறிப்புகள்.

சுகாதார விதிச் சுருக்கம் விரும்பு.
சுத்தக் காற்றைச் சுவாசித்திரு.
ஜீவஜந்து நெருக்கமேவுவதைவிடு.
கிலேவிளக்கறையி னித்திரை கொள்ளாதே.
அழுகின வஸ்துவை யாசித்தலாகா.
தோப்பி லிரவிற் றூங்கலாகாது.
தூர்க்கந்தத்தைச் சுவாசித்தலாகாது.
காற்றுள்ளவிடத்தில் வீற்றிருப்பேபோதும்.
சுகமே பகலிற் றேப்பிலிருப்பது.
மழைபெய்யக் காற்று மாசினைப்போக்கும்.
வீட்டிற் குப்பை விழச்செய்யாதே.
வீட்டருகு குப்பை மேவலுக் கிடே.
ஆடு மாடுகள்வீட் டருகில்லையாதே.
வீட்டில் மலஞ்சலம் விடுத்தலாகா.
விடுத்தாலுடனே வெளியாக்கவேண்டும்.
தூர்க்கந்த வினைகளைத் தூரத்தினில்வை.
தேகம் வஸ்திரம் கிரகந் தினமுஞ் சுத்திசெய்.
கரித்துகள் தூர்க்கந்தங் காணுதோட்டிடும்.
வீட்டிற் கடிக்கடி வெள்ளையடித்துவா.
உப்பைப்புகைக்க வோடும்விஷவாயு.
அயோடினைக் கண்டா லகலும்வஸூரி.
செம்புந்திராவகமுஞ் சேர்க்கவே நாற்றம்போம்.
கந்தகப்புகையாற் காணுதுவிஷவாயு
சுகாதாரம் விட்டாற் சுகமென்பதில்லை.
சுகாதாரம் விரும்பிச் சுகமாக வாழ்க.
சுத்தஜலபானஞ் சுத்தத்திற் காதாரம்.
கண்ணாடிபோலக் காண்பது சுத்தநீர்.
இரசனை வாசனை யற்றது சுத்தநீர்.

ஸம்பற்பஷ்ப மாண்பது சுத்தநீர்.
பருப்புக்காய் வேகும் பக்குவஞ் சுத்தநீர்
அசுத்த ஜல பானத்தா லநேக சுரக்களாம்.
அசுத்த ஜலபானத்தா லநேக பேதியாம்.
அசுத்த ஜலபானத்தாலண்டிடும் வாந்தி.
சுண்ணத்தரை நீராற்குழ்குடனேய் மந்தமாம்.
சுண்ணத்தரை நீராற் சுகக்கேடும் பேதியாம்.
அழுக்கு ஜலபானத்தா லற்புதச் சிலந்தியாம்.
அழுக்குஜல முழுக்கா லணுகிடுஞ் சிலந்தி.
அழுக்கு ஜலத்தா லநேக வியாதிகள்.
சுத்தமழைநீரே உத்தமஞ் சுகத்திற்கு
அசுத்தமழைநீரா லளவிலாக்கேடு.
சுத்தநதிநீரால் முத்தோஷந் தாகம்போம்.
கெட்டநதிநீரால் வெட்டைசுரம் பேதியாம்.
அசுத்தக்குளத்து நீராகா சுகத்திற்கு,
சுத்தமிலா வேரிநீர் நத்திஞல் வாதம்.
சுத்தக்கிணற்றுநீர் சுகமாகும் நாளும்.
பாறையது நீராற் பலபல தோஷமாம்.
சுக்கான்பாறைநீர் மூக்கு மூத்திரக்கபம்.
கரும்பாறைநீராற் பெரும்பயன் சுகத்திற்கு.
அருவிநீரா லழகுபெருந் தேகம்.
வடிகட்டநீரின் வளர்குற்ற நீக்கும்.
காய்ச்சினல்நீரின் கடுக்தோஷம் நீக்கும்.
ஸ்நாநஞ்செய்வதே சகலசௌக்கியம்.
தினஸ்நாநத்தால் மனேபலவிருத்தியாம்.
தினஸ்நாநத்தாற் தேகசுகவிருத்தி.
தினஸ்நாநத்தாற் தீருஞ்சொறிநோய்.
தினஸ்நாநத்தாற் தேகம் பெருக்கும்.
ஸ்நாநவிதியறியார் சுகவிதியறியார்.
ஸ்நாநஞ் செய்யார் சுகவீனராவார்
சுத்தஜல ஸ்நாந மெத்தவிசேஷம்
உதயஸ்நாந முடம்பிற்குறுதி
போஜன ஸ்நாநம் பொல்லாது நீக்கு
குளிர்ந்த ஸ்நாநங் கொடுக்குமுற்சாகம்
குளிர்ந்த ஸ்நாநத்தாற் றெளிக்தோடுமிரத்தம்
குளிர்ந்த ஸ்நாநத்தாற் குதுகலிப்புண்டாம்
குளிர்ந்த ஸ்நாநத்தாற் கூடும்பலஞ்சுகம்.
குளிர்ந்த ஸ்நாநந் தெளிந்தறிந்தாடு.
குளிர்ந்த ஸ்நாநங் கூடாது களைப்பில்
இளவெந்நீர் ஸ்நாந மிதமாங்குளிரில்.
இளவெந்நீர் ஸ்நாநமிசையுங்களைத்தோர்க்கு.

—சுகாதாரபோதினி.

## PUSHPARAGAM.

### புஷ்ப ராகம்.

### உண்டாகும் இடங்கள்.

இமயமலையிலும், விந்தியமலையிலும், ஸ்படிகக் கற்கள் உற்பத்தியாகும் இடங்களிலும், தாமிர நதியிலும், சிங்களத் தீவிலும், மற்றும் சில இடங்களிலும் புஷ்பராகங்கள் உற்பத்தியாகின்றன.

### லக்ஷணம்.

புஷ்பராகக்கற்கள் வெண்மையான புஷ்பம்போலவும், கர்ணிகா புஷ்பத்தின் நிறம்போலவும், பளபளப்புடன் நெருப்புப் பொறிபோல் காந்தி வீசிக்கொண்டிருக்கும். இவ்விதக் கற்களை ஸ்ரீ ப்ரம்ம தேவர் மேன்மேலும் வ்ருத்தி பண்ணிக்கொண்டு வருகிறர்.

புஷ்பராகத்தில் புள்ளி, தூசி இல்லாதனவும், கனமான த்ராஸ தோஷம் இல்லாதனவுமாயுள்ள கற்கள் மிக உயர்ந்தன.

### குற்றங்கள்.

1. இயற்கையாயுள்ள வெண்மை நிறமில்லாமல் மஞ்சள் நிறமாயிருத்தல், 2. பலவர்ணமாயிருத்தல், 3. கரடு முரடாயிருத்தல், 4. பச்சையாயிருத்தல், 5. துளை, கோடு, புள்ளி, த்ராஸம் ஆகிய இவற்றுடன் கூடியிருத்தல் என தோஷங்கள் பலவகைப்படும்.

### அணிவதன் பலன்கள்.

மேற்சொன்ன தோஷங்களில்லாதனவும், மிகுந்த ஒளியுடையனவுமான புஷ்பராகங்களை அணிந்தால் தேக ஆரோக்கியமும், அழகும், ஸௌகமும், செல்வமும் அதிகரிக்கும்.

இந்தப் புஷ்பராகக் கற்களை மருந்துகள் செய்வதற்கும் உபயோகிக்கிறார்கள். "அக்னி புஷ்டியை உண்டு பண்ணி ஜீரணத்தைக் கொடுக்கும்; தாகத்தை அடக்கும்; வயிற்றுப்பூச்சி, வெளிப்பூரு, கபம் ஆகிய இவை முதலியவற்றை நீக்கும். 80-விதமான வாத ரோகத்தையும் கண்டித்து, தோல் தோஷத்தையும் நீக்கும்" என்று ரஸரத்ன ஸமுச்சயம் என்னும் க்ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.—'ரத்ன ப்ரகாசம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.



# News and Notes.

## வர்த்தமானக் குறிப்புகள்.

### சென்னையில் மதுபானம்.

மற்றெல்லா மாகாணங்களையும்விட சென்னை ராஜதானியில் தான் மதுபான வகைகள் அதிகமாகச் செலவழிகின்றன வென்று தெரியவருகிறது. 1913-14-ம் வர்ஷத்தில் வங்காளத்தில் மதுபான வரியால் ராஜாங்கத்தாருக்கு 153 லக்ஷம் ரூபாயும், பம்பாயில் 222 லக்ஷம் ரூபாயும், சென்னை ராஜதானியில் 365 லக்ஷம் ரூபாயும் கிடைத்திருக்கிறது. அதாவது வங்காளம், பம்பாய் ஆகிய இரண்டு மாகாணங்களிலும் மதுபானத்துக்காகச் செலவிடப்படும் தொகை சென்னைமாகாணம் ஒன்றில் செலவழிகிறது. இதனுல் நமது ராஜதானியில் குடியின் பெருக்கம் இவ்வளவினது என்று நன்ருய்த் தெரிகிறது. இந்த 1917-18-ம் வர்ஷத்தில் நமது ராஜதானியில் 13 லக்ஷம் ரூபாய் அதிகமாக மதுபான வரியால் கிடைக்குமென்று கவர்ன்மெண்டார் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இனி, சென்னை நகரைமட்டும் கவனிப்போம். 1900 1901-ம் வருஷத்தில் சென்னையில் 43,665 காலன் சாராயம் செலவானதாகத் தெரிகிறது. (காலன் என்பது பட்டணம் படியால் 2·4 படி கொண்டது.) ஆனுல் சென்ற (1915 - 1916) வர்ஷத்திலோ 105, 266 காலன் விற்பனையாயிருக்கிறது. 1900-ம் வர்ஷத்தில் சென்னையில் 48 சாராயக்கடைகள் இருந்தன. இப்பொழுது 28 கடைகள் தான் இருக்கின்றன. அப்பொழுது காலன் ஒன்றக்கு ரூபாய் 5-10-0 தீர்வை. இப்பொழுது ரூபாய் 8-2-0. இதனுல் கள்ளுக் கடைகளைக் குறைப்பதும், வரியை அதிகப்படுத்துவதும் கள்குடியைக் குறைப்பதற்கு வழியல்லவென்பது மிகத் தெளிவாய்விட்டது.

ஜனப்பெருக்கால் ஒருக்கால் குடி பெருகிவிட்டதா என்று கவனித்தால், அதுவும் இல்லை. சென்ற 15 வர்ஷத்தில் சென்னை நகரின் ஜனத்தொகை நூற்றுக்கு 2 வீதம் உயர்ந்திருக்கிறது. ஆனுல் குடியோ 100-க்கு 200 வீதம் பெருகிவிட்டதென்று ராஜாங்கத்தார் கணக்கெடுத்திருக்கிறார்கள்!

முன்போல ஜனங்கள் கள்குடிக்காமல், சாராயத்தை அதிகமாகக் குடித்துவருகிறார்கள். இதற்குக் காரணம் மதுபானம் குடிக்கும் ஜனங்கள், நாகரீக முதிர்ச்சியால், கள்ளைப் புறக்கணித்து, அதிக நாகரீகமுள்ளதாகத் தோற்றும் சாராயத்தின் மேல் ப்ரியங் கொண்டிருப்பதே.

மதுபானத்தைக் குறைக்க முன்பு செய்த ஏற்பாடுகளாகிய, மதுபானக் கடைகளின் தொகையைக் குறைப்பது, சாராயத்தின் விலையை அதிகப்படுத்துவது ஆகிய இவைகளால் மதுபானம் குறைவடையவில்லையென்று கண்ட கவர்ன்மெண்டார், சென்னை நகரில் குடி அதிகரிப்பதைப்பற்றி, விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். இதில் 4 ஐரோப்பியர்களும் ஒரு இந்தியரும் இருக்கிறார்கள். அந்த இந்தியர் டாக்டர் மாதவன் நாயர் ஆவர்.

### நீர் தாரை கண்டு பிடித்தல்.

(1) கிணறு இல்லாத இடத்தில் பிரப்பஞ் செடியிருந்தால், அதற்கு மேற்கே $4\frac{1}{2}$ அடி ஆழத்தில் தண்ணீர் அகப்படும்.

(2) ஜம்பு மரத்திற்கு கிழக்கே பள்ளங்கள் இருந்தால், அந்த மரத்திற்குதெற்கில் $16\frac{3}{4}$-அடி ஆழத்தில் தண்ணீர் அகப்படும்.

(3) இரண்டாவது சொன்ன ஸந்தர்ப்பங்களில் எலும்பும், ஆகாயநிறமான கீழ்வரிசை பண்ணும் புருவின்நிறம் வாய்ந்த கற்களும் அகப்படும்.

(4) நாகதாளிப் புதருக்குத் தெற்கில் $4\frac{1}{2}$ அடிக்கு அப்புறம் ஓர் பள்ளம் இருந்தால், கொஞ்சம் ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும்.

(5) போர்மரத்திற்கு கிழக்கே அநேகம் பள்ளங்கள் இருந்தால், அதற்கு மேற்கே $16\frac{3}{4}$ அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும்.

(6) போர்மரத்திற்குத் தெற்கே ஓர் பள்ளம் இருந்தால், அதற்குக்கிழக்கே 8 அடி $4\frac{1}{2}$ அங்குல ஆழத்தில் நீர் தாரை யிருக்கும்.

(7) தரை மட்டத்திற்கு $1\frac{1}{2}$ அடி ஆழத்தில் எந்த மரத்தின் வேர்களிலாவது தவளைகள் இருந்தால், 25 அடி $1\frac{1}{2}$ அங்குலத்திற்குக்கீழ் அதேமரத்தின் கீழ் தண்ணீர் அகப்படும். இந்த குணத்தை அறிந்து கொண்டுதான் கிணறு தோண்ட வேண்டும்.

(8) மௌரா மரத்திற்கு வடக்காக பாம்பின் பள்ளம் இருந்தால், 7½ அடிக்குக்கீழ் தண்ணீர் அகப்படும்.
-தொழில்.

கண்ணாடித் தொழில்.

சென்னையில் மதராஸ் கண்ணாடிச் சாலையில் ஸோடா வாட்டர் குப்பிகள் பரீக்ஷார்த்தமாகச் செய்யப்பட்டுவந்தன. ஸமீபத்தில் கைத்தொழில் டிரெக்டர் அந்த வேலைகளை நிறுத்திவிட்டார். சென்ற மார்ச்சு மாஸத்தில் கவர்ன்மெண்டார், மறுபடியும் ஸோடா வாட்டர் குப்பிகள் செய்து பார்க்கலாமா வென்றும், அது முடியாவிட்டால், இதர கண்ணாடி ஸாமான்கள் செய்ய முயற்சிக்கலாமாவென்றும், ஆராய்ச்சி செய்ய ஒரு கமிட்டி நியமித்தார்கள். அந்தக் கமிட்டியார் ஸமீபத்தில் ஒரு ரிபோர்ட்டு எழுதி வெளியிட்டார்கள். அதில் அவர்கள், விறகு, ஸாமான்கள், வேலையாட்கள் முதலிய பல அம்சங்களையும் ஆராய்ச்சி செய்து பார்த்து, ஸோடா வாட்டர் குப்பிகள் செய்யும் வேலையை நிறுத்தினது சரியென்றும், அதை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டியதில்லை யென்றும், இதர கண்ணாடி ஸாமான்கள் செய்ய ஒரு தொழில்சாலை ஸ்தாபிக்கமுடியும் என்று நிச்சயமாய்த் தோன்றினலொழிய, அவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ய தொழில்சாலை ஏற்படுத்துவது யுக்தமல்லவென்றும், மேலும் அதற்கு கண்ணாடித் தொழில் நிபுணருடைய உதவிவேண்டி யிருக்குமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள், கண்ணாடி செய்வதற்கு உதவும் மண் எங்கெங்கு இருக்கிறதென்று ஒரு ஸர்வே செய்யவேண்டுமென்றும், நாட்டுவளையல் தொழிலைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

மாணவர்களும் புகைச்சுருட்டுக் குடித்தலும்.

வங்காள ராஜதானியில் புகைச்சுருட்டுக் குடிக்கும் வழக்கம் வாலிபர்களிடம் பரவிக்கொண்டிருக்கிறதாக தெரிகிறது. அந்த ராஜதானியின் வித்யா கர்த்தர், சுருட்டுக் குடிக்கும்வழக்கத்தை நிறுத்துவது ஸம்பந்தமாக பாடசாலைத் தலைவர்களுக்கு ஒரு சுற்றுப் பத்திரிகை அனுப்பியிருக்கிறார். அதில் அவர், சிறுவர்கள் சுருட்டுக் குடிக்கும் வழக்கத்தைக் கொள்ளாமலிருக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். மேலும் பாடசாலை, காலேஜ் இவைகளின் தலைவர்கள், பள்ளிக்கூடக் கட்டிடங்களில் சுருட்டுகள், ஸிகரெட்டுகள் விற்பதையும், சிறுவர்கள் பள்ளிக்கூடக் கட்டிடங்களிலும் வெளியிலும் சுருட்டுக் குடிப்பதையும், கண்டிப்பாய் தடுக்க வேண்டுமென்றும், அவர்கள், சுருட்டுக் குடிப்பதால் தேகத்துக்கு நேரிடும் கெடுதிகளை பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்றும், அதோடு உபாத்யாயர்களும் பள்ளிக்கூடத்திலும், பிறவிடங்களில் மாணவர்களெதிரிலும் சுருட்டுக் குடிக்காமலிருக்க வேண்டுமென்றும், உத்தரவு மீறிச் சுருட்டுக் குடிக்கும் பிள்ளைகளை முதலில் எச்சரிக்கை செய்து, அதற்கும் சரிப்படாவிட்டால் அவர்களை தண்டிக்க வேண்டுமென்றும் டை சுற்றுப் பத்திரிகையில் தெரிவித்திருக்கிறார்.

ஓர் அறை ஈரமாயிருப்பதை அறியும் உபாயம்.

நாம் வாஸம் செய்கிற அறை ஈரமாயிருந்தால், அதனால் தேஹம் ஆரோக்யக் குறைவை அடையும் என்பது அநேகருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் ஒரு அறை ஈரமாயிருப்பதையும் ஈரமில்லாதிருப்பதையும் கண்களால் பார்த்தே தெரிந்துகொள்வது கஷ்டம்; பார்ப்பதற்கு உலர்ந்திருப்பதாகத் தோற்றும் அறையும், விசேஷமாக ஆகாயமும் ஈரமுமாயிருக்கக்கூடும். இதை நிச்சயிப்பதற்காக வீட்டில் அடியில் வரும் பரிசோதனையைச் செய்து பார்க்கலாம்:—இரண்டு ராத்தல் அளவுள்ள சுண்ணாம்பை அறையினுள் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, சற்றும் காற்றுப் புகாதபடி கதவையும் சாளரங்களையும் நன்றாக மூடிவிட்டு அப்பால் 24-மணி ஸாவகாசம் கழித்து அந்தச் சுண்ணாம்பை எடை போட்டுப் பார்க்கவும்; அப்பொழுது அது நிறையில் 10-க்ராமுக்கு அதிகமாக இருந்தால், அந்த அறை ஈரமாயிருக்கிறதென்றும், அவ்வளவு ஈரம் ஆரோக்யத்திற்குத் தகாதென்றும் நிச்சயிக்கலாம்—வைத்திய கலாநிதி.

இருமலில் உஷ்ண ஜலத்தின் உபயோகம்.

அடிக்கடி காஸத்தினால் வருந்துபவருக்கு திடீரென்று உண்டாகும் இருமலைத் தடுப்பதற்கு உஷ்ண ஜலம் சிறந்த ஔஷதம் என்று அறியப்படுகிறது; முக்யமாக க்ஷயகாலத்தில் தற்காலம் சாந்தி யுண்டு பண்ணுவதற்கு இதை உபயோகிப்பது நலம். திடீரென்று வேகத்துடன் கிளம்பும் இருமல், உஷ்ண ஜலத்தை இரண்டு மூன்று விழுக்குகள் உட்கொண்டவுடனே ஆச்சரியப்படும்படி தணிவடையும். இருமலுக்கு முக்யமாக உபயோகிக்கப்படும், வேறு ஔஷதங்கள் ஜீர்ண சக்தியையும் பசியையும் கெடுத்து விடுவது வழக்கம். ஆனால் உஷ்ண ஜலமோ தேஹத்தில் இயற்கையில் நடக்கேறும் ஜீர்ண வேலை முதலிய எந்த செயல்களுக்கும் சிறிதும் விரோதம் செய்யாமல் இருமலைத் தணிக்கச்செய்யும் இயல்புடையது. இருமலின் வேகம் தோன்றும்போதெல்லாம் நன்கு கொதிக்க வைத்த ஜலத்தை உட்கொள்ளவேண்டும்.—



“ஔவை.”

இது வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தமிழ்பண்டிதர் மிஸ்டர் பி. கே. ஸ்ரீநிவாஸாசார்யார் இயற்றியது. இதில் சங்க காலத்திலிருந்த ஔவை; கம்பர் ஒட்டக்கூத்தர் காலத்திலிருந்த ஔவை ஆகிய இருவருடைய பிறப்பு, வளர்ப்பு, கவித்திறமை, பிறவரலாறுகள் முதலியவைகள் தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஔவைகளின் சரித்ரங்களை முழுவதும் அறிய விரும்புவோருக்கு இந்த நூல் பெரிதும் பயன்படும். இதன் விலை அணா 6. வேண்டுவோர் வேலூர் ஜனோபகாரி ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

ஒப்பந்தக்கூலி ஏற்பாடு.

சென்றவர்ஷம் ஒப்பந்தக் கூலி ஏற்பாட்டின்மேல் சென்னையிலிருந்து அநேக கூலியாட்கள் வெளிநாடுகளுக்குப் போனார்கள். அதன் விவரம் வருமாறு.

| | |
|---|---|
| ட்ரினிடாடுக்கு | 909 |
| ஜமெய்க்காவுக்கு | 258 |
| பிஜிதீவுகளுக்கு | 950 |
| ப்ரிட்டிஷ் கயானாவுக்கு | 387 |
| ஆகமொத்தம் | 2,504 |

இவர்களில் 100 பேர்களுக்கு 30 பேர்கள் வீதம் ஸ்திரீகளாவர்.

சென்றவர்ஷத்தில் நேட்டாலிலிருந்து 4,007 ஒப்பந்தக்கூலிகளும், மொரிஷஸிலிருந்து 128பேர்களும், பிஜியிலிருந்து 243 பேர்களும் சென்னைக்குத் திரும்பி வந்தார்கள்.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற ஏப்ரல் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 25 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | ரூ. |
|---|---|
| 8 பாங்கி லேவாதேவி கம்பெனிகள். | 4,65,000 |
| 1 ரெயில்வே ட்ராம்வே கம்பெனி, | 1,00,000 |
| 1 கப்பலில் ஸாமான் ஏற்றி இறக்கும் கம்பெனி. | 5,00,000 |
| 5 இதர வ்யாபாரக் கம்பெனிகள். | 10,00,000 |
| 1 அரிசி மில் கம்பெனி. | 1,50,000 |
| 5 தேயிலைத்தோட்டக் கம்பெனிகள். | 13,00,000 |
| 1 தோட்டக் கம்பெனி, (மேலே சொன்னது தவிர) | 1,00,000 |
| 2 நிலக்கரி சுரங்கக் கம்பெனி. | 9,00,000 |
| 1 கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 2,00,000 |
| 25 | 47,15 000 |

ஒரு தர்மம்.

மைஸூரில் ரெவின்யூ கமிஷனராக இருந்து ஸமீபத்தில் காலஞ்சென்ற ராவ் பகதூர் ஏ. ரங்கஸாமி அய்யங்கார் தமது உயிலில் தர்ம கார்யங்களுக்காக 20,000 ரூபாய் எழுதி வைத்திருக்கிறார். இதில் கோகலே ஏற்படுத்தி விட்டுப்போன இந்திய ஊழிய ஸங்கத்துக்கு 30,000 ரூபாய் சேரும். பாக்கித்தொகை கல்விக்கும், ப்ராம்மண விதவைகளுடைய முன்னேற்றத்துக்கும், இதர நற்கார்யங்களுக்கும் செலவழிக்கப்படும்.

ஒருவர் இருக்கவேண்டிய நிறை.

ஒருவர் எவ்வளவு நிறையுள்ளவரா யிருக்கவேண்டுமென்பதை பின்வரும் வழியால் கண்டுகொள்ளலாம். ஒருவருடைய உயரத்திலிருந்து 5 அடியைக் கழித்து வரும் மீதியை அங்குல மாக்கி, 5½-ஆல் பெருக்கி, பெருக்குத் தொகையுடன் 110-ஐக்கூட்டவும். வரும் தொகையை ராத்தலாகக் கொள்ளவும். அதுதான் அவர் இருக்கவேண்டிய நிறையாகும்.

இந்தியா மந்த்ரி ஸபை.

வங்காளத்தைச் சேர்ந்த ஆனரபின் மிஸ்டர் பூபேந்த்ர நாத் வஸுவும், இந்தூரைச் சேர்ந்த ஆனரபின் ஸர் ப்ரபா சங்கர் பட்டாணியும் இந்தியா மந்த்ரியின் ஸபையில் மெம்பராக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்தியா மந்த்ரி ஸபையில் ஏற்கனவே ஒரு இந்தியரிருப்பதால், அந்த ஸபையில் மொத்தம் 3 இந்தியர்களிருக்கிறார்கள்.

கால்நடை வைத்யம்.

ம்ருகவைத்ய டிபார்ட்மெண்டைச் சேர்ந்த வெடிரினரி அஸிஸ்டெண்டுகள் சுற்று ப்ரயாணம் செய்

யும்போது, இவ்வசமாகக் கால்நடைகளுக்குண்டாகும் ஸாதாரண நோய்களுக்கு வைத்யம் செய்ய வேண்டுமென்றும், சாலைகளுக்கு விதைபெடுக்க வேண்டுமென்றும், ஆனால் பணக்கார மிராசதார்களிட மிருந்தும், வ்யாபாரிகளிட மிருந்தும் வைத்யத்துக்கு பணம் வாங்கலாமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

**யுத்தச் செலவு.**

இங்க்லண்டில் யுத்தச் செலவு மிகவும் அதிகரித்திருக்கிறது. சென்ற அக்டோபர் 8-ந் தேதியிலிருந்து டிஸம்பர் 9-ந் தேதிவரையில் தினம் $8\frac{1}{2}$ கோடி வீதத்துக்கும் மேலாகச் செலவழிந்தது. சென்ற ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து மேமாஸம் 5-ந்தேதிவரையில் தினம் 11 கோடியே 17 லக்ஷம் ரூபாய் வீதம் செலவழிந்தது. மேமாஸம் 6-ந் தேதியிலிருந்து ஜூன் மாஸம் 9-ந்தேதி வரையில் தினம் 11 கோடியே 30 லக்ஷம் ரூபாய் வீதம் செலவழிந்தது.

**"ஸாவித்திரி".**

இது வரகவி திரு. அ. ஸுப்ரமண்ய பாரதி இயற்றியது. இது அச்வபதியின் புத்ரியும் ஸத்யவானுடைய மனைவியுமான ஸாவித்ரி யென்னும் கற்புக் கரசியின் மகிமையைப்பற்றிக் கூறுவது. இதில் ஆங்காங்கு பல நீதிகள் விரிவாயும் தெளிவாயும் எழுதப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமியர்கள் அவசியம் வாசிக்கவேண்டிய புஸ்தகங்களில் இது ஒன்றாகும். இதன் விலை அணா 4. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ், என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

**"சந்திரகாசன்".**

'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும் நீதியை நன்குவிளக்கும் இக்கதை சிறுவர்கள் எளிதில் படித்துணருமாறு பல நீதிகளுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதை இயற்றியவர் வரகவி-திரு. அ. ஸுப்ரமண்ய பாரதி. புஸ்தகத்தின் கடைசியில் பொறாமையால் ஏற்படும் கெடுதிகளை விளக்கும் சில திருக்குறள் செய்யுள்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 2. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ், என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

**ஐரோப்பிய யுத்தம்.**

**ஜூன் ௴ 19-தேதி.**

ப்ரிட்டிஷார் மெஸ்ஸின்ஸ் ப்ரதேசத்திலும் ஆர்ராஸ் ப்ரதேசத்திலும் முன்சென்றிருக்கிறார்கள்.

**26-தேதி.**

ப்ரிட்டிஷார் மெஸ்ஸின்ஸ் ப்ரதேசத்திலும் லென்ஸுக்குப் பக்கத்திலும் முன்சென்று வருகிறார்கள். ஜெர்மன் ஸைன்யங்களில் மூன்றில் இரண்டுபாகம் மேற்குப் போர்முகத்திலும், ஒருபாகம் கிழக்குப் போர்முகத்திலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**ஜூலை ௴ 8-தேதி.**

ரஷ்யர்கள் கலீஷ்யாவில் யுத்தம் தொடங்கியிருக்கிறார்கள். 142 மைல் நீளமுள்ள போர்முகத்தில் பீரங்கி யுத்தம் நடக்கிறது. அவர்கள் கோனியுகி என்னும் ஊரையும், 10,000 எதிரி போர்வீரர்களையும் பிடித்திருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் துருப்புகள் லென்ஸுக்குத் தெற்கில் முன்சென்று அவியன் என்னும் இடத்தைப் பிடித்திருக்கின்றன. இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் அக்வெல்லா கணவாயில் ஒரு பாகத்தை விட்டு விட்டுப் பின் வாங்கியிருக்கிறார்கள்.

**6-தேதி.**

ரஷ்யர்கள் கிழக்குப்போர்முகத்தில் முன்னேறி வருகிறார்கள். அவர்கள் ஸோப்ரோவுக்குப் பக்கத்தில் உள்ள இரண்டு க்ராமங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

**10-தேதி.**

ரஷ்யர்கள் ஜெஸுபோல் என்னும் பட்டணத்தையும், வேறு நான்கு க்ராமங்களையும் பிடித்திருக்கிறார்கள். ப்ரெஞ்ச் ஏரோப்லேன்கள் எஸென் என்னுமிடத்திலுள்ள க்ருப் பீரங்கித்தொழில் சாலையில் வெடிகுண்டுகள் போட்டன. 22 ஜெர்மன் ஏரோப்லேன்கள் லண்டனில் வெடிகுண்டுகள் போட்டன. 43 பேர்கள் இறந்துபோனார்கள்.

**12-தேதி.**

மிஸ்டர் ஆஸ்டின் சேம்பர்லேன் இந்தியா மந்த்ரி வேலையை ராஜிநாமா செய்துவிட்டார்.

**13-தேதி.**

ரஷ்யர்கள் ஹாலிக்ஸ் என்னுமிடைத்தைப் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் ஸ்டானிஸ்லாவிலிருந்து முன் சென்று காலஸ் என்னு மிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

**14-தேதி.**

ஜெர்மன் ப்ரதம மந்த்ரியாகிய ஹெர் வான் பெத்மன் ஹால்வெக் தமது வேலையை ராஜிநாமா செய்து விட்டார். அவருக்குப் பதிலாக டாக்டர் மைக்கேலிஸ் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**17-தேதி.**

ப்ரிட்டிஷ் ராஜ குடும்பத்தின் பெயர் விண்ட் ஸர் குடும்ப மென்றிருக்கவேண்டுமென்று ஜார்ஜ் அரசர் தீர்மானித்திருக்கிறார்.

**20-தேதி.**

ப்ரிட்டிஷார் மேற்குப் போர் முகத்தில் வாரங்டனுக்கு வடமேற்கிலும் வேறு ஒரு இடத்திலும் முன்சென்றிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் காலஸ் என்னும் ஊரை விட்டு விட்டு லாம்னிட்ஸா நதிக்குப் பின்னால் பின் வாங்கிச் சென்றார்கள்.


# ஜனாபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்ற வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்கள ௵ ஆவணி ௴. AUGUST—SEPT. 1917. { ஸஞ்சிகை 8. No. 8.


13 OCT 1917 MADRAS

## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| ⅛ do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | அயல்நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப் பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 | பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ | ,, ,, ,, | 2 8 0 |
| ¼ | ,, ,, ,, | 1 4 0 |
| ⅛ | ,, ,, ,, | 1 0 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒரு பாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# PANCHAYAT COURTS.
## பஞ்சாயத்துக் கோர்ட்டுகள்.

சென்னை ராஜதானியில் க்ராமக் கோர்ட்டுகள் நூறு வர்ஷ காலத்துக்கு மேலாக சாஸன மூலமான ஆதாரத்தின்பேரில் ஏற்பட்டிருக்கின்றன; அவை 1888-ம் ௵த்து க்ராமக் கோர்ட்டுகள் ஆக்ட் செலாவணியாகத் தொடங்கின 1889-ம் ௵ முதல், இப்போதுள்ள மாதிரியாகவே இருந்து வருகின்றன. இந்த ஆக்டின்படி இரண்டு விதமான கோர்ட்டுகள் உண்டு; அவை க்ராம முன்ஸிப் தனியாக இருந்து விசாரணை நடத்தும் கோர்ட்டும், ஷை ஆக்ட் 9-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட பெஞ்ச் கோர்ட் என்னும் ந்யாய ஸபைக் கோர்ட்டுமாகும். க்ராம முன்ஸிபுகள் தனியேயிருந்து விசாரணை நடத்தும் கோர்ட்டுகளில் இப்போது வர்ஷவாரியில் 1,30,000 வ்யாஜ்யங்களுக்கு மேற்பட்டு பைஸலாகின்றன. பெஞ்ச் கோர்ட்டுகள் விஷயத்தில் ஜனங்களுக்கு அவ்வளவு ப்ரியமில்லை; ஏனென்றால், ஒவ்வொரு வர்ஷத்திலும் அந்த கோர்ட்டுகள் ஸுமார் 7,000 வ்யாஜ்யங்கள்தான் பரிசீலனை செய்கின்றன. பெஞ்ச் கோர்ட்டில் க்ராம முன்ஸிபும், கலெக்டரால் தயார் செய்யப்பட்ட க்ராமத்தார்களைப்பற்றிய ஒரு ஜாப்தாவிலிருந்து வாதியால் ஒருவரும் ப்ரதிவாதியால் ஒருவருமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டு பேர்களும் இருப்பார்கள். ஆகவே, பெஞ்ச் கோர்ட்டானது பஞ்சாயத்தை ஒத்திருக்கிறதென்று சொல்லுவதைக்காட்டிலும், மத்யஸ்த ஸபையையே ஒத்திருக்கிறதென்று சொல்லலாம்.

க்ராமக் கோர்ட்டுகளில் சிறு கேஸுகள் அதிகமாய்ப் பைஸலாகின்றனவென்றாலும், அந்தக் கோர்ட்டுகளில் பைஸலாகக்கூடிய ஸுமார் 60,000 கேஸுகள் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டுகளுக்குப் போகின்றனவாதலால், இந்த க்ராமக் கோர்ட்டுகளை இன்னும் அதிகமாக உபயோகப்படும்படி செய்யலாமென்றேற்படுகிறது. இது விஷயமாய்ப் பரிசீலனை செய்ய கவர்ன்மெண்டார் மிஸ்டர் பிலிப்ஸ் என்பவரை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர் பரிசீலனைசெய்து க்ராமக் கோர்ட்டுகள் ஆக்ட் 9-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பெஞ்ச கோர்ட்டுகள் சரியாக நடக்கவில்லையென்றும், ஏதாவது ஒருவகையான பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்த வேண்டுமென்று ஜனங்கள் ஒரே மாதிரியாய் அபிப்ராயப் படுகிறார்களென்றும் தெரிவித்தார்.

கவர்ன்மெண்டாரும் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்படுகிற பக்ஷத்தில், இப்போது டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டுகளுக்கு வரும் அல்ப வ்யாஜ்யங்களில் பெரும்பான்மை க்ராமக் கோர்ட்டுகளுக்கு கொண்டு போகப்படுமென்று எண்ணி, அவைகளை ஸ்தாபிப்பதற்காக ஷை ஆக்ட்டைத் திருத்த ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள்.

முன் இருந்த பெஞ்ச் கோர்ட்டுகளுக்கு பதிலாக, ஜில்லா கலெக்டரால் நியமிக்கப்பட்ட மெம்பர்களடங்கிய பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்படும்.

இந்தப் பஞ்சாயத்துமெம்பர்கள், ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டுகள் அடங்கிய ஒரு ஸபை எந்த மாதிரி கூடி கோர்ட் நடத்துவார்களோ, அந்த மாதிரி கூடி கோர்ட் நடத்துவார்கள்; அதாவது, பஞ்சாயத்தைச் சேர்ந்த மெம்பர்களெல்லாரும் ஹாஜராகலாம். அவர்களில் குறைந்தது மூன்று பேர் வந்திருந்தால் கோர்ட் வேலையை நடத்த ஆரம்பிக்கலாம். கலெக்டரானவர் பஞ்சாயத்தார்களைத் தெரிந்தெடுக்கும்போது அவ்வவ்விடத்திலுள்ள ஜனங்களின் விருப்பத்தைக் கூடியமட்டில் அநுஸரித்து தெரிந்தெடுக்கவேண்டும்.



வ்யாஜ்யங்களின் விஷயத்தில், ஒரு க்ராமக்கோர்ட்டின் அதிகார வரம்பு இருபது ரூபாயென்று 1888-ம் ௵த்தில் நிஷ்கர்ஷை செய்யப்பட்டது. இப்போது அந்த அதிகார வரம்பை ஐம்பது ரூபாயளவுக்கு உயர்த்துவது அநுகூலமாயிருக்குமென்று எண்ணி, கவர்ன்மெண்டார் அவ்விதமே சட்டத்தைப் திருத்தப்போகிறார்கள்.

1816-ம் ௵த்திய சென்னபட்டணத்து க்ராமப் பஞ்சாயத்து ரெகுலேஷன் அநேகமாய் உபயோகப்படுவதில்லை யாகையாலும், தற்காலத்திய ஆவச்யகங்களுக்கு ஏற்றபடியில்லையாகையாலும், அதையும் ரத்துசெய்ய உத்தேசித்திருக்கிறார்கள்.

க்ரிமினல் கேஸுகள் விஷயமாய் க்ராமக் கோர்ட்டுகளுக்குள்ள அதிகார வரம்பைப் பற்றியோவென்றால், தனியேயிருந்து கோர்ட் நடத்தும் க்ராம மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரங்களை அதிகப்படுத்த கவர்ன்மெண்டார் உத்தேசிக்கவில்லை; ஆனால், இப்போது க்ரமமான கோர்ட்டுகளுக்கு முன்பாகப் போகும் பழிப்பது, தாக்குவது, சண்டைபோடுவது முதலியவைபோன்ற அல்ப குற்றங்களில் பெரும்பான்மையானவைகளை இப்போது ஏற்படுத்த உத்தேசிக்கும் பஞ்சாயத்து கோர்ட்டுகளில் பரிசீலனை செய்வது அநுகூலமாயிருக்குமென்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட ப்ராதுகளில் எத்தனையோ ப்ராதுகள் தள்ளிவிடப்பட்டோ அல்லது அவைகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டோ போவது அடியிற்கண்ட விவரக்கணக்குகளைப் பார்த்தால் தெரியவரும்:—

| குற்றம். | தள்ளிவிடப்பட்டது அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவன் விடுதலையடைந்தது. | குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டது. |
|---|---|---|
| பழிப்பது | 15,809 | 1,520 |
| தாக்குவது | 37,0[illegible]7 | 3,456 |
| கெடுதி | 11,932 | 1,789 |
| துன்பம் | 47,093 | 7,151 |
| தூராக்ருதமாய் நுழைவது | 11,882 | 2,600 |

ஆகவே ஷை மசோதா ஆக்டின் 117-வது பகுதியில் குறிப்பிட்ட அடியில் வரும் அல்ப குற்றங்களைப் பரிசீலனை செய்யும் அதிகாரத்தைப் பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

1. இந்தியன் பினல் கோடு 504-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சண்டை யிழுப்பதற்காகப் பழித்தல்.

2. இ. பினல் கோடு 352-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி அதிக கோபமேற்படாமல் வேறு முகாந்தரத்தால் பிறரைத் தாக்குவது.

3. இந்தியன் பினல் கோடு 159-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி இரண்டு அல்லது பலர் சேர்ந்து சண்டை போட்டு, பொது அமரிக்கையைக் கெடுப்பது.

4. இந்தியன் பினல் கோட் 277-வது பிரிவில் சொல்லப்பட்டபடி ஜனங்களுக்கு உபயோகமான யாதொரு ஊற்று அல்லது தடாகத்தின் ஜலத்தைக் கெடுப்பது அல்லது அழுக்காக்குவது;

5. பட்டணங்களில் நடக்கும் அஸங்கியங்கள் அல்லது ஸங்கடங்களைப்பற்றிய 1889-ம் ௵த்து ஆக்டின் 3-வது பிரிவைச் சேர்ந்த (9) குறிப்பிட்ட உட்பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடி தூசு, குப்பை முதலான கசுமாலங்களைக் கொட்டிவைப்பது;

6. பட்டணங்களில் நடக்கும் அஸங்கியங்கள் அல்லது ஸங்கடங்களைப்பற்றிய 1889-ம் ௵த்து ஆக்டின் 3-வது பிரிவைச் சேர்ந்த (11) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லப்பட்டப்படி பொது ஸ்தலங்களில் மல ஜல விஸர்ஜனம் செய்தல், குழந்தைகளை அப்படிச் செய்ய விடல்;

7. பட்டணங்களில் நடக்கும் அமலங்களின் அல்லது ஸங்கடங்களைப்பற்றிய 1889-ம் வருஷத்து ஆக்டின் 3-வது பிரிவைச்சேர்ந்த (12) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லப்பட்டபடி குடித்து வெறி கொள்ளுவது, அல்லது கலகம் உண்டாகும்படியாகவாவது அசப்யமாகவாவது நடப்பது;

8. இந்தியன் பினல் கோட் 378-வது பிரிவில் சொல்லப்பட்டபடி திருட்டு; ஆனால், திருட்டு ஸொத்தின் மதிப்பு பத்து ரூபாய்க்கு மேற்படாமலும், குற்றவாளி திருட்டுக் குற்றம் செய்தவனென்று முன்னமே தீர்மானிக்கப்படாதவனாயும் இருக்கவேண்டும்.

9. இந்தியன் பினல் கோட் 425-வது பிரிவில் சொல்லப்பட்டபடி கெடுதி; ஆனால், அதனால் உண்டாகும் சேதத்தின் மதிப்பானது பத்து ரூபாய்க்கு மேற்படக் கூடாது;

10. இந்தியன் பினல் கோட் 441-வது பிரிவில் சொல்லப்பட்டபடி அக்ரமமாய் நுழைவது;

11. இந்தியன் பினல் கோட் 319-வது பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடி துன்பம்;

12. பஞ்சாயத்து கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படத் தக்கதென்று ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னரவர்கள் ப்ரதேச கெஜட்டில் விளம்பர மூலமாய்ப் பிரசித்தஞ் செய்யக்கூடிய வேறே யாதொரு குற்றம்;

ஆனால், (8), (9) குறிப்பிட்ட பகுதிகளின் படிக்கான குற்றங்களின் விஷயத்திலே, எந்தக் கேஸுகளில் திருடப்பட்ட ஸொத்தின் அல்லது உண்டாக்கப்பட்ட சேதத்தின் மதிப்பு இருபது ரூபாய்க்கு மேற்படாமலிருக்கிறதோ, அந்த கேஸுகளை விசாரிக்க பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்க ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னரவர்களுக்கு அதிகாரம் உண்டு.

மேலும், 1816-ம் வருஷத்து 11-வது ரெகுலேஷனில் குற்றவாளிகளைத் தொழுவில் போட்டு வைத்து தண்டிப்பதற்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது; இப்போது இந்த தண்டனையை கவர்ன்மெண்டார் ஒழித்துவிடப் போகிறார்கள்.

தற்காலம் க்ராமக் கோர்ட்டுகள் விசாரிக்கும் எல்லாக் கேஸுகளையும் இதர க்ரமமான விஷயில் க்ரிமினல் கோர்ட்டுகளும் விசாரிக்கலாம். க்ராமக் கோர்ட்டுகள் மாத்ரம் விசாரிக்கக் கூடியவை யென்று தனியான வ்யவஹாரங்கள் கிடையா. இப்போது ஸ்தாபிக்கப்போகிற பெஞ்சு கோர்ட்டுகள் ஜனங்களுக்குப் பிடித்தமா யிருக்கிறதென்று அநுபவத்தில் தெரியவந்தால், பின்னால் அந்தக் கோர்ட்டுகளுக்கென்று அதிகாரவரம்பு ஏற்படுத்தலாமென்று கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள்.

ஆனால் ஜனங்கள் க்ராமக் கோர்ட்டுகளை அதிகமாக நாடுவதற்காக ஷை க்ராமக் கோர்ட்டு திருத்த மசோதாவில் இன்னொரு திருத்தம் செய்திருக்கிறார்கள். அதாவது டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டில் விசாரணைக்கு வரும் எந்தக் கேஸாவது க்ராமக் கோர்ட்டில் தாக்கல் செய்திருக்க வேண்டிய கேஸ் என்று டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் அபிப்ராயப்பட்டால், அந்தக் கேஸில் வாதி ஜயமடைந்தால், அவருக்கு செலவு ஒத்துக் கொடுக்கப்படமாட்டாது. ப்ரதிவாதி ஜயமடைந்தால் அவருக்கு, வக்கீலுக்குக் கொடுக்க வேண்டிய பீஸ் மாத்ரம் ஒத்துக் கொடுக்கப்படும். மேலும் பஞ்சாயத்துக் கோர்ட்டில் விசாரணை செய்யக்கூடிய ஒரு கேஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் போனால், மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்தக் கேஸை பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு விசாரணைக்கு அனுப்பலாம் என்றும் ஷை மசோதாவில் ஏற்படுத்தியிருக்கிறது.



# THE CLOCK AND WATCH INDUSTRY OF JAPAN.

## ஜப்பானில் கடிகாரம் செய்யும் தொழில்.

பூர்வ காலத்தில் முன்னோர்கள் பக்ஷிகளின் சத்தங்களினாலும், ஸூர்ய சந்த்ரர்களின் கதியினாலும், நக்ஷத்ரங்களின் நிலையினாலும் காலங்களைக் கணக்கிட்டு வந்தார்கள். ஜாமக் கோழி ஜாமத்திற்கு ஜாமம் கத்தும். காக்கைகள் விடியற் காலத்தில் கத்தி எழுப்பும். கோட்டான்கள், ஆந்தைகள் நள்ளிருளை நன்றாகத் தெரிவிக்கும். இவ்வாறே ம்ருக ஜாதிகளுள்ளும், சிங்கம், புலி, பூனை, செந்நாய், ஓநாய், நரி முதலியவையும், தங்களுடைய ஸஞ்சாரத்தினால் காலங்களை, காட்டின் ஸமீபத்தில் வஸிப்பவர்களுக்குக் காட்டி வந்தன. இன்னும் உதயமானதும் ஸூர்ய வெளிச்சத்தால் ஏற்படும் நிழலையளந்து நாழிகையைக் கணக்கிட்டு வந்தார்கள். சந்த்ரன், நக்ஷத்ரங்கள் உதயமானதும் அப்போதைப்போது காலவரையறைகள் செய்துவந்தார்கள். ஒவ்வொரு பக்ஷியும் ம்ருகமும், இன்னின்ன காலத்தில் கத்தும் என்பதற்குப் பூர்வீக ஹிந்துக்கள் சாஸ்த்ர மேற்படுத்தி, அவற்றின் பலன்களையும் குறித்து வைத்திருக்கிறார்கள். இப்போது வயது முதிர்ந்த பெரியோர்கள் அப்படியே மேற்கூறிய சப்தங்களைக்கொண்டு நேரத்தை கணக்கிட்டுச் சொல்வதை நாமறிவோம். அதற்கப்புறம், நாளாக நாளாக நவீனமான நாழிகை காட்டும் கருவிகளை நம்மவர்கள் தம்முடைய புத்தி சாதுர்யத்தினால் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இப்படியாக கால மறிவதற்கு உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் ஒவ்வொரு ஏற்பாட்டைப் பண்ணிக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ரோமர்கள், க்ரேக்கர்கள், அரேபியர்கள், ஹிந்துக்கள், சீனர்கள்போன்ற ஒவ்வொரு தேசத்தவர்களும், காலமறிய ஒவ்வொரு வழியை ஏற்பாடு செய்துவைத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த விஷயத்தில் ஜப்பான் தேசமும் வெகு காலம் முதற்கொண்டே நாழிகை பறிவிக்கும் கருவியை ஒருவாறாக ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அந்த நாட்டார் எவ்வாறு நாழிகையை அறிந்து வந்தார்கள்; அவர்கள் வ்யாபார ஸாமானாக நாழிகையளக்கும் கருவியை எப்படிச் செய்தார்கள் என்று அறியச் சில ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி இங்கே வ்யவஹரிக்கிறோம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னால், ஜப்பானில் அரசு செலுத்திவந்த டெஞ்சி என்பவர், சீனாவில் உபயோகமாயிருந்த ஒருவகையான காலமறிவிக்கும் கருவியைப்போல் ஒரு கருவி செய்வித்தார். அது க்ரேக்க தேசத்திலும், ரோமன் தேசத்திலும் செய்யப்பட்ட மாதிரியை ஒத்திருந்தது. அந்தக் காலம் அளக்கும் கருவி நாலு பெட்டிகளால் செய்யப்பட்டிருந்தது. முதல் பெட்டிக்கு இருளடைந்த உலகம், இரண்டாவது பெட்டிக்கு ப்ரகாசமான உலகம், மூன்றாவது பெட்டிக்குத் தட்டையடிவாரம், நான்காவது பெட்டிக்கு எல்லா ஜலமும் நிறையும் அடிவாரம் என்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இந்தப் பெட்டிகள் ஒன்றின்மேலொன்று அடுக்காய் வைக்கப்பட்டிருந்தன. எல்லாப்பெட்டிகளும் ஒன்றோடொன்று குழாய்களால் இணைக்கப்பட்டிருந்தன. குழாய்களின் வழியாய் ஜலம் கீழ்ப் பெட்டிக்கு சொட்டுசொட்டாய் இறங்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்லா ஜலமும் தங்கும் பெட்டியின் நடுப்பாகத்தில், ஒரு அம்பு மிதக்கவிடப்பட்டிருக்கும். அந்த அம்பானது பெட்டியில் தண்ணீர் சேரச்சேர, மேலே மிதக்கும்படியாய் விடப்பட்டிருக்கும். பெட்டிக்குள் அம்பு மிதக்கும்பாகத்தில் குறிப்பிட்டிருக்கும் குறிகள் அந்தந்தக் காலத்தைக்

காண்பிக்கக்கூடியனவாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரு பகலும் இரவும் சேர்ந்த ஒரு நாள் 48 பாகங்களாக வகுக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு பாகமும் ஒரு மணியாகும். ஒவ்வொரு மணியும் நான்கு நிமிஷங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

இந்தக் காலங்காட்டும் கருவி கவர்ன்மெண்டு ஆபிஸில் வைக்கப்பட்டிருந்தது. இதை கவனிப்பதற்கு கவர்ன்மெண்டில் தனியாக உத்யோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இந்த உத்யோகஸ்தர்களின்கீழ் உதவி உத்யோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இந்த உதவி உத்யோகஸ்தர்கள் காலங்களின் கணக்கை அப்போதப்போது ஜாக்ரதையாய்க் குறித்து வைத்துக்கொண்டு அந்தக் கணக்கைத் தங்கள் மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். அவர்கள் 'மணி'க் கணக்கை, பெரிய மணிகளின் மூலமாய்க் கணக்குப்போலடித்துப் பொது ஜனங்களுக்கு அறிவிப்பார்கள். இந்தக் காலத்தை அறிவிக்கும் ஆபீஸின் தலைவருக்கு கால யந்த்ரத்தின் டாக்டர் என்று பெயர். இந்த மாதிரியாய் நாழிகையை அறியும் வழக்கம் 12-வது நூற்றாண்டின் கடைசி வரையில் அநுஷ்டானத்திலிருந்தது. அந்தக் காலத்திற்கப்புறம், ரோமானிய தேசத்தில் உபயோகத்திலிருந்த 'அவர்-க்ளாஸ்' என்னும் மணி தெரிவிக்கும் கண்ணாடிக் குப்பி கொண்டுவரப்பட்டது. அந்தக் குப்பியில் மண் போட்டு, அது கீழ்க் குப்பியில் விழும் காலத்தைக்கணக்கிட்டு நாழிகை அறிந்துவந்தார்கள்.

1550-ஆம் வர்ஷத்தில் கீர்த்திபெற்ற பாதிரியான ப்ரான்ஸிஸ் ஸேவியர் என்பவர் ஜப்பானில் கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்வதற்காகப் போனபோது, அங்கே ஒரு சிற்றரசருக்கு ஒரு கைக்கடிகாரம் கொடுத்தார். இந்தக் கடிகாரம் மேல்நாட்டார் செய்தது.

ஜப்பானிய சரித்ரத்தில் இந்த ஸமயத்தில் தான் ஜப்பானியர் மேல் நாட்டுக் கடிகாரத்தைப் பெற்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐரோப்பியர்கள் ஜப்பானில் இந்த வர்ஷம் முதல் வந்து, நாளாவர்த்தியில் அநேக மேல்நாட்டு ஸாமான்களை ஜப்பானுக்குக் கொண்டு வந்தார்கள். 1612-ஆம் வர்ஷத்தில், பிலிப்பைன் தீவுகளின் கவர்னர், மற்றொரு கடிகாரத்தை மற்றொரு ஜப்பானிய சிற்றரசருக்குக் கொடுத்தார். அந்தக் கடிகாரம் நாளைக்கும் அவன் காலத்திய ஞாபகச் சின்னமாக வைத்துக் காப்பாற்றப்பட்டுவருகிறது. பின்னால், வெகு காலம் வரையில் இந்த மாதிரிக் கடிகாரமே உபயோகப்பட்டு வந்தது. அதற்கப்புறம் எல்லா அன்யர்களும் லைஸென்ஸ் இல்லாமல் ஜப்பானில் வந்து வ்யாபாரம் செய்யலாமென்று கவர்ன்மெண்டார் அநுமதி கொடுக்கவே, அதற்கப்புறம் மேல்நாட்டிலிருந்து பலவகைப்பட்ட கடிகாரங்கள் ஜப்பானில் ஏராளமாய் இறக்குமதியாயின. இப்போதுங்கூட ஜப்பானியர்கள் தமது நாட்டில் ஸொந்தமாய் கடிகாரங்கள் செய்யும் தொழிலை ஸ்தாபித்து நடத்தி வந்தும், அன்ய தேசங்களிலிருந்து ஏராளமாய் கடிகாரங்களை தருவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த தேசம், கடிகாரக் கைத்தொழிலை எப்படி மேற்போட்டுக்கொண்டு செய்து ப்ரக்யாதி பெற்றது என்று அறிய எல்லாரும் ஆவலாயிருப்பார்கள். 1873-ம் வர்ஷத்தில் டானக ஹியஸாகா என்னும் ஜப்பானியர் ஆஸ்ட்ரியா தேசத்தில் வியன்னா வென்னும் தலை நகரத்தில் நடந்த கண்காட்சி சாலைக்கு ஜப்பானிலிருந்து போயிருந்தார். அவர் அவ்விடத்தில் கடிகாரம் செய்யும் தொழிலில் ஊக்கங்கொண்டு அதைக் கற்றுக்கொண்டு தமது தேசத்துக்கு வந்து கடிகாரம் செய்யும் தொழிலை ஏற்படுத்தினார். 1887-ஆம் வர்ஷ வாக்கில் ஜப்பானில் நல்ல கடிகாரங்கள் செய்யப்படலாயின. என்றாலும் 1892-ஆம் வர்ஷத்தில் தான் கடிகாரம் செய்யும் யந்த்ரசாலை பெரிதாக ஜப்பானில் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த யந்த்ரசாலை மிகவும் செவ்வையாய் அமைக்கப்பட்டது. அந்த யந்த்ரசாலையின் பெயர் ஸீயகோஷா யந்த்ர சாலை என்பது.



ஜப்பானில் தற்காலம் அநேகர் இத்தொழிலில் அமர்ந்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலார், கடிகாரங்களின் பாகங்களை மட்டும் செய்கிறார்கள். சில தொழில் சாலைக்காரர்கள் நாட்டில் செய்யப்படும் கடிகார பாகங்களை வாங்கியும், அயல் நாடுகளிலிருந்து அவைகளைத் தருவித்தும், ஒன்று சேர்த்து, கடிகாரங்களாக அமைத்து விற்கிறார்கள். வேறு சில தொழில்சாலைக்காரர்கள் ஸொந்தத்திலேயே கடிகாரத்தின் எல்லா பாகங்களையும் செய்து, அவைகளைக்கொண்டு கடிகாரங்கள் செய்து விற்கிறார்கள்.

ஜப்பானில் வெள்ளி கடிகாரங்களுக்கு அதிக க்ராக்கி ஏற்பட்டிருக்கிறது. அவைகளுக்கு அடுத்தபடிதான் நிக்கல் கடிகாரங்களும் மற்றவைகளும். இறக்குமதியின்மேல் இப்போது பளுவாய் வரி ஏற்பட்டுள்ள போதிலும், வர்ஷவாரியில் கடிகார ஸாமான்கள் ஜப்பானில் இறக்குமதியாவது என்னவோ குறைந்தபாடில்லை. ஸ்விட்ஸர்லண்டிலிருந்து மட்டும் 7-லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள கைக்கடிகாரங்களும், யுனைடட்ஸ்டேட்ஸிலிருந்து 4 லக்ஷம் ரூபாய் பெறுமான கடிகாரங்களும் வர்ஷவாரியில் ஜப்பானில் இறக்குமதியாகின்றன. மொத்தம் 90 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள க்ளாக்குகள் வர்ஷவாரியில் ஜப்பானில் இறக்குமதியாகின்றன. கடிகார ஸாமான்களாக மட்டும் ஜப்பானில் வர்ஷாவாரியில் 4 லக்ஷம் ரூபாய்க்கு இறக்குமதியாகின்றன. இந்த ஸாமான்கள் பெரும்பாலும் ஸ்விட்ஸர்லண்டிலிருந்தும் யுனைடட் ஸ்டேட்ஸிலிருந்தும் இறக்குமதியாகின்றன. இப்போது பெரும்பாலும் ஜப்பானில் செய்த கடிகாரங்களே ஜப்பானியரிடைகளில் உபயோகமாகி வருகின்றன. ரொம்ப வேலைப்பாடுள்ளவைகளும், விலையுயர்ந்தவைகளுமே அன்யநாடுகளிலிருந்து வருகின்றன.

ஜப்பானின் ப்ரதான பட்டணமாகிய டோகியோவில் மட்டும் வர்ஷந்தோறும் 2½ லக்ஷம் கடிகாரங்கள் செய்யப்படுகின்றன. ஒஸாகா முதலிய பட்டணங்களில் பதினாயிரம் கடிகாரங்களுக்கு மேலாகச் செய்யப்படுகின்றன. டோகியோவில் மட்டும் 5½ லக்ஷம் தொங்கும் கடிகாரங்களும், நிலையாய் நிற்கும் கடிகாரங்களும் செய்யப்படுகின்றன. மற்றைய வ்யாபார ஸ்தலங்களில் இவற்றிற்குக் கொஞ்சம் குறைவாக கடிகாரங்கள் செய்யப்படுகின்றன. கடிகாரம் செய்யும் பட்டணங்களாகிய டோக்யோ, ஒஸாகா என்னும் இரண்டிடங்களிலும் வர்ஷாவாரியில் 22 லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள கடிகாரங்கள் செய்யப்படுகின்றன. ஜப்பானில் செய்யப்படும் கடிகாரங்கள் ஏராளமாய் அங்கேயே செலவழிவதோடுகூட கொரியா, மஞ்சூரியா, சீனா, மலாய்த்தீவுகள், இந்தியா முதலிய இடங்களுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மொத்தமாய் இவ்விடங்களுக்கு வர்ஷவாரியில் 15 லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள கடிகாரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் சொன்ன விவரங்களெல்லாம் யுத்தத்துக்கு முந்திய நிலைமையைப் பற்றியவையாகும்.

முதல் முதலாக, ஜப்பானில் ஏற்பட்ட கடிகாரத்தொழிற்சாலை, இப்போது மிகவும் உன்னத ஸ்திதியிலிருந்துவருகிறது. அந்த பழைய வேலைச்சாலையில் புதிதான யந்த்ரங்களை வாங்கிவைத்து வேலை நடத்திவருகிறார்கள். இந்த யந்த்ரசாலை மேல்நாட்டார் செய்யும் கடிகாரங்கள்போல் செய்வதில்மட்டும் திருப்தியடையாமல், அந்த தேசத்துக்கேற்றவையான நூதன கடியாரங்களையும் செய்துவருகிறது. இந்தக் கம்பெனி செய்துவரும்

வேலையினால், ஜெர்மனியர்களும், அமெரிக்கர்களும், ஜப்பானில் தம் யந்த்ரங்களை அனுப்பிச் செய்துவந்த வ்யாபாரம் ஜப்பானில் ஒய்ந்துவிட்டது.

இப்போது இந்தியாவில் ஏராளமாய்த் தொங்கும் கடிகாரங்களும், நிலையாய் நிற்கும் கடிகாரங்களும் ஜப்பானிலிருந்து அதிகமாய் ஏற்றுமதி செய்யப்பட்டு உபயோகப்பட்டு வருகிறது. இந்தியாவில் கைக்கடிகாரங்களுக்கு க்ராக்கியேயில்லை. சென்ற பத்து வருஷங்களுக்கு முன்னால் முதற்கொண்டுதான், ஜப்பான் இந்தியாவுக்கு கடிகாரங்கள் அனுப்ப ஆரம்பித்தது.

இந்த காலத்துக்குள் நமது தேசத்துக்கு வரும் ஜப்பானிய கடிகாரங்களின் தொகை மிகவும் அதிகரித்திருக்கிறது. ஜப்பானிய கடிகாரங்களின் உயர்வு தாழ்வு ஒருபுறமிருக்க, அவைகள் மலிவாயிருப்பதோடு, அதிகமாய் ஏற்றுமதியாகி வேண்டியபோது விலைக்குக் கிடைப்பதே, அதன் வ்யாபாரம் வலுத்ததற்குக் காரணமென்று சொல்லலாம்.

யுத்தமாரம்பமாவதற்கு முந்தின வர்ஷத்தில் இந்தியாவில் ஜப்பானிலிருந்து இரண்டு லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள கடிகாரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இப்போது நடக்கும் மஹா யுத்தத்தினால் ஜப்பானின் ஏற்றுமதி வ்யாபாரத்துக்கு லௌகர்யமேற்பட்டிருக்கிறது. இதனால் ஜப்பானியர்கள் தாங்கள் செய்யும் கடிகாரங்களை அன்ய தேசங்களுக்கு அதிகமாக அனுப்பி வருகிறார்கள். அதிலும் முக்யமாய் இந்தியாவுக்கு அதிகமாய் ஏற்றுமதி செய்யத் ஆரம்பித்திருக்கிறார்கள். ஜப்பானில் புதிய கம்பெனிகள் பல ஸ்தாபிக்கப்பட்டு வேலைசெய்து வருகின்றன. ஜப்பானிய ஏற்றுமதி வ்யாபாரம் முன்னையைக்காட்டிலும் இப்போது அதிகமாகி யிருக்கிறது. இப்போது ஜப்பானியக் கடிகாரக் கைத்தொழில் முன்னையைக் காட்டிலும் ப்ரபலமாகி விட்டது. இந்த வீட்டுக் கைத்தொழிலாகிய கடிகாரம் செய்யும் வேலையை ஜப்பானில் ஆண் பெண் இருபாலருமாக ஆயிரக்கணக்கான ஜனங்கள் செய்து லாபமடைந்து வருகிறார்கள்.

## PLACES OF SAFETY IN THUNDER-STORMS.

## இடி இடிக்கும் காலத்தில் பத்ரமான இடங்கள்.

இடியும் மின்னலும் அதிகமாயிருக்கும் காலத்தில் எந்த இடத்தில் இருப்பதில் ஆபத்துக்குறைவு, எங்கு இருப்பதில் ஆபத்து அதிகம் என்பதைப்பற்றி அமெரிக்க ஐக்ய நாடுகளில் உள்ள ஒரு டிபார்ட்மெண்டார் சில விவரங்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒரு வீட்டில் இடி விழுந்தால், இடி வீட்டின் எந்த பாகத்தைத் தாக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை. வீட்டின் எந்த பாகத்தையும், எந்த பாகத்திலுள்ளவர்களையும் தாக்கக்கூடும். ஆனால் மற்ற பாகங்களைவிட, உயரமான புகைப் போக்கி, டெலிபோன் முதலிய மின்ஸார யந்த்ரங்கள் உள்ள இடங்கள் ஆகிய இவைகளைத்தான் இடியானது விசேஷமாய்த் தாக்கும்.

வீட்டுக்கு வெளியில் இடிக்கு பத்ரமான இடம் அடர்த்தியான தோப்பாகும். தோப்புகளிலும் இடி விழக்கூடும். ஆனால் தோப்பில் பல மரங்களிருப்பதால் எந்த மரத்தில் விழுமென்ற நிச்சயமில்லை. நாம் தங்கியிருக்கும் மரத்தில் இடிவிழாமல் இருந்தாலுமிருக்கலாம். ஆனால் இடிக்கு பயந்து தனியாய் நிற்கும் மரத்தடியில்போய் நிற்பது ஆபத்துக்கு இடமானது. பெரிய கட்டிடங்களுக்கு ஸமீபமாயிராத கொட்டகைகளும் ஆபத்துக்கிடமானவைகளே.

இடி மின்னல் காலங்களில் கம்பி வேலிகளுக்குப் பக்கத்தில்போவது கூடாது.

இடி இடிக்கும்போது வெளியில் மரங்களின் கீழும், அவைகளின் பக்கத்திலு மிருப்பதைவிட, வீட்டுக்குள் இருப்பது நல்லது. மரங்களுக்குப் பக்கத்தில் இருக்கும்போது இடி விழுந்தால், அருகில் இருக்கும் மனிதர்கள் உயிர் பிழைப்பது அரிது. அப்படிப்பட்ட இடங்களில் இடிதாக்கிப் பிழைத்தவர்கள் 35-க்கு 1-க்கு மேலில்லை. ஆனால் வீடுகளில் இடி விழுந்ததில், பாதிப்பேர்கள் இடியால் சாகாமல் பிழைத்திருக்கிறார்கள்.

இடி இடிக்கும்போது ரொம்ப பத்ரமான இடம் எதுவென்றால், பூமிக்குள் உள்ள சுரங்க அறையும், உலோகத்தால் செய்யப்பட்ட கூடுபோன்ற அறையுமே. இவைகளிலிருப்பவர்கள் இடிக்கு பயப்படவேண்டியதில்லை. தற்காலம் அமெரிக்காவில் ஆகாய மளாவும்படியான உன்னதமான கட்டிடங்களில் பல எஃகினால் கட்டப்பட்டவை. அவைகளுக்குள் இருப்பவர்களுக்கு இடி பயமே கிடையாது. ஏனென்றால், கட்டிடங்களே உலோகத்தாலானவை யாதலால், இடியானது அவைகளின் மேல் விழுந்தாலும், உள்ளிருப்பவர்களை ஒன்றும் செய்யாமல் பூமிக்குள் போய்விடுகிறது. இந்தக் கட்டிடங்களுக்கு இடிவாங்கிகள் என்னும் உலோகத்தாலான கழிகள் வைக்கவேண்டியதில்லை. இந்த இரண்டு இடங்களுக்கும் அடுத்தபடியாக பத்ரமான இடம் இடிவாங்கியுள்ள வீடுகளாகும்.

மாடுகள் இடி இடிக்கும் காலத்தில் இடிக்குப் பயந்து தனியான மரங்களண்டைபோய் அம்மரங்களில்விழும் இடியால் தாக்கப்பட்டுச் சாவதுண்டு. வீட்டுக்கு ஸமீபத்திலும், பட்டிகளிலும் உள்ள மரங்களுக்கும் இடி தாங்கி வைப்பது சில ஸமயங்களில் நன்மையை உண்டாக்கும். மரத்தின் உயரமான கிளையிலிருந்து பூமியில் ரொம்ப ஆழம்வரையில் தாம்ரக் கம்பியைக் கட்டிவைத்தால், அது இடிவாங்கியாக உபயோகப்படும்.

சில ஸமயங்களில் மாடுகள் இடி இடிக்கும்போது கம்பி வேலிகளின்மேல் உரைவதாலும் இறந்து போகின்றன. ஏனென்றால், இடி இடிக்கும்போது, மின்ஸாரமானது கம்பி வேலிகளில் அதிகமாகச் சேர்ந்துகொண்டு, மாடுகள் அவைகளின்மேல் பட்டவுடன் அவைகளைக் கொன்று விடுகின்றன. ஆனால் கம்பிகளைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஸ்தம்பங்கள் இரும்பு முதலிய உலோகங்களால் செய்யப்பட்டிருந்தால், கம்பிகளிலுள்ள மின்ஸாரம் ஸ்தம்பங்கள் வழியாக பூமியில் போய்விடும். மாடுகளுக்கு ஆபத்து நேரிடாது.

வீடுகளில் இடிவாங்கி வைப்பதின் காரணம் இன்னதென்பதைப்பற்றி முற்காலத்தில் ஜனங்கள் கொண்டிருந்த கொள்கையென்னவென்றால், மேகத்திலிருந்து மின்ஸாரரூபமான இடியை, இடி வாங்கியானது க்ரஹித்து பூமிக்குள் பத்ரமாய்க் கொண்டுபோய் விட்டுவிடுகிறது; இதனால் வீடானது இடியால் தாக்கப்படாமல் தப்புகிறது என்பதே.

ஆனால் தற்கால சாஸ்த்ரீயக்கொள்கை பின்வருமாறு. மின்ஸாரத்தில் இரண்டுவகைகள் இருக்கின்றன. அவையாவன, பாஸிடிவ் மின்ஸாரம், நெகடிவ் மின்ஸாரம் என்பவை. இந்த இரண்டு மின்ஸாரமும் ஒன்றோடொன்று சேர முயலும். மேகத்தில் ஒரு வகையும் பூமியில் இன்னொரு வகையும் இருந்து, மேகம் பூமிக்கு ஸமீபத்தில் தாழ்வாக இருந்தால், இரண்டு வகையும் ஒன்று சேர முயலும். பூமியிலுள்ள மின்ஸாரமானது வீடுமுழுவதும் வ்யாபித்து, வீட்டின் உயர்ந்த பாகம் வரையில் போகும். மேகம் பூமிக்கு ஸமீபமாயிருந்து,

இதர ஸௌகர்யங்களுமிருந்தால் மேகத்தினுள்ள மின்ஸாரம் வீட்டிலுள்ள மின்ஸாரத்தோடு சேர்ந்துகொள்ளும். அப்போது வீடானது ஆபத்துக்குள்ளாகிறது. ஆனால் வீட்டில் இடிவாங்கி வைத்துவிட்டால், பூமியிலுள்ள மின்ஸாரமானது இடிவாங்கி வழியாக உயரப்போய் ஆகாயத்தில் சேரும். இடி தாக்கினாலும் இடியின் வேகமானது இடிவாங்கியாகிய உலோகக்கம்பி வழியாக பூமிக்குள் போய்விடும். வீட்டுக்கு யாதொரு கெடுதியும் நேராது.

அதிக ஆடம்பரமில்லாத ஸாமான்ய வீடுகளில் இடிவாங்கி வைத்தால், வீட்டுக்கு யாதொரு கெடுதியும் ஏற்படாது. புகைப்போக்கிகள், உலோகத்தாலான பாகங்கள் முதலியவை அதிகமாயுள்ள கட்டிடங்களில் இடிவாங்கியின் உபயோகம் சற்றுக்குறையும். ஏனென்றால், இடியின்போக்கை இவைகள் தடை செய்கின்றன. இடி வாங்கியாகிய உலோகக் கழிகளுக்குப் பக்கத்தில் உலோகத்தாலாகிய குழாய்கள், ஆணிகள் முதலியவை இருந்தால் இடிவாங்கியை அவைகளோடு ஸம்பந்தப்படுத்தி விட வேண்டும்.

இடிவாங்கி ஏற்படுத்தும் வழக்கத்தை முதலில் ஆரம்பித்தவர் பெஞ்சமின் ப்ராங்க்லின் என்னும் அமெரிக்கராவர். 1750ம் வர்ஷத்தில் அவர், வீடுகளின் உயர்ந்த பாகத்தில் கூர்மையான நுனியுள்ள இரும்புக் கழிகளை வைத்து, அவைகளின் தொடர்ச்சியாக பூமிவரை இரும்புக்கழிகளை அமைத்து கீழே கொண்டுவந்து, பூமிக்குள் ஆழத்தில் நட்டால், இடியானது வீட்டைத்தாக்காமல் பூமிக்குள் போய்விடுமென்று தெரிவித்தார். முதலில் அநேகர் இந்த நூதன ஏற்பாட்டை அங்கீகரிக்கவில்லை. சில மத அதிகாரிகள், பாவஞ்செய்தவர்களை தண்டிப்பதற்காகக் கடவுளால் ஏற்பட்டிருக்கும் இடியைத் தடுப்பது கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள். வேறு சிலர் இடிவாங்கி வைப்பதால் நிலங்களில் மாஸூல் சரியாக விளைவதில்லையென்றும், பூகம்பங்கள் முதலியவை உண்டாகின்றனவென்றும் எண்ணினார்கள். அவர்கள் இந்த அபிப்ராயங்கொண்டு முதல் முதலில் ஏற்படுத்தப்பட்ட இடிவாங்கிகளை நாசம் செய்துவிட்டார்கள். முதல் முதலில் வெனீஸ் நாட்டில்தான் கவர்ன்மெண்டாரே இடிவாங்கி வைக்கும் ஏற்பாட்டை அநுஸரித்தார்கள். 1778-ம் வர்ஷம் மே மாஸம் 9-ந்தேதியன்று அந்நாட்டிலுள்ள எல்லா ஸர்க்கார் கட்டிடங்களுக்கும் இடிவாங்கி வைக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அது முதல் பற்பல தேசங்களில் இடிவாங்கி அமைக்கும் ஏற்பாடு பரவலாயிற்று.

வீடுகளில் இடிவாங்கிக் கழிகள் அமைக்கும்போது, கழிகளின் அடிப்பாகம் பூமிக்குள் எப்போதும் ஈரமாயிருக்கப்பட்ட ஆழம்வரையில் போயிருந்தால், வீட்டிற்கு இடியால் யாதொரு கெடுதியும் ஏற்படாதென்னலாம்.


### உபாத்யாயர்களுக்கான புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 723. பூ தத்வ போதினி ... | 0 | 6 | 0 |
| எம். ஆர். ஸுப்ரமண்ய அய்யர் எழுதியது. ஜியாலஜி என்னும் பூதத்வ சாஸ்த்ரம் அடங்கியுள்ளது. | | | |
| 342. ப்ராணி சாஸ்திரம் (Zoology) முதல் பாகம் ... | 0 | 9 | 0 |
| 569. தமிழ் சரீர சாஸ்திம் (Physiology) | 0 | 8 | 0 |
| 537. வான சாஸ்திரம் ... | 1 | 0 | 0 |
| கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் கணிதபோதசராகிய என். பாலகிருஷ்ணய்யர் இயற்றியது. | | | |
| 409. செல்வவிருத்தி விளக்கம் ... | 1 | 0 | 0 |
| இது டி. எஸ். ஸுப்ரமண்ய அய்யர், எம். ஏ., எல். டி. இயற்றியது. பொருளாதார சாஸ்த்ரத்தைப் பற்றிக் கூறுவது. | | | |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
மதராஸ்.




## CIVIC AND SOCIAL ACTIVITIES.

### ப்ரஜா லக்ஷணமும், ஜனஸமூக வாழ்க்கையும்.

சென்ற ஜூன் மாஸத்தில் பங்களூரில் மைஸூர் ஸிவிக், ஸோஷல் கான்பரென்ஸ் கூடினபோது, மைஸூர் திவான் ஸர். எம். விச்வேச்வரஐயா, ப்ரஜாலக்ஷண விஷயமாயும் ஜனஸமூக சீர்திருத்த விஷயமாயும் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிப் பேசினார். அதன் ஸாராம்சம் வருமாறு:—

ப்ரஜா லக்ஷணம்.

ஒவ்வொரு குடித்தனக்காரனும் செய்யவேண்டிய கடமைகளாவன. (1) தன்வீட்டையும் தன் அக்கம் பக்கங்களையும் சுத்தமாய் வைத்திருப்பது.

(2) தான் கடனில்லாமல் வாழ்வது.

(3) தன் குடும்பத்திலுள்ளவர்களுக்கு தக்க கல்வி கற்பிப்பது.

(4) குடும்பத்தவர்களை லாபந் தரக்கூடிய தொழில்களைச் செய்யும்படி பார்த்துக்கொள்வது.

மேற்கூறிய விஷயங்களை ஒவ்வொருவனும் தவறாமல் செய்துவரும் பக்ஷத்தில், அது, வேலை செய்யாத சோம்பேறிகள், திறமையற்றவர்கள் ஆகிய இவர்களின் தொகையைக் குறைப்பதற்காக ராஜாங்கத்தார் செய்துவரும் முயற்சிக்கு அதிக ஸாதகமாயிருக்கும். ஜனங்கள் ஸர்க்காருக்கு வரிகொடுத்து, சட்டங்களின்படி ஏற்பட்டுள்ள கடமைகளைச் செய்வதுடன் இன்னும் சில காரியங்களை அவர்கள் செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவையாவன:—

(1) முனிஸிபாலிடி அல்லது இதர ஸ்தல ஸ்தாபனங்களுக்கு தக்க ப்ரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புவது.

(2) வரி செலுத்துவோர் ஸங்கம் முதலிய ஸங்கங்களை ஸ்தாபித்து மேற்படி ப்ரதிநிதிகளின் வேலைகளை கவனித்து வருவது.

(3) தர்மங்கள், வைத்ய உதவி ஆகிய இவைகளை நடத்துவதற்கு உதவிசெய்தல்.

(4) ஜனங்களது ஸௌகர்யங்களை மேன்மேலும் வ்ருத்திசெய்ய நகர அபிவ்ருத்தி ஸங்கத்தை ஒவ்வொரு முக்ய பட்டணத்திலும் ஸ்தாபித்து தக்கவழிகளைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். பட்டணங்களில் உள்ள ஒவ்வொரு குடித்தனக்காரனும் தனது நகரத்தின் செல்வ அபிவ்ருத்தி விஷயத்தில் அக்கறை காட்ட வேண்டும்.

பட்டணங்களில் உள்ள ப்ரஜைகள் பின்வரும் விஷயங்களையும் கவனிக்கவேண்டும். கல்வி யபிவ்ருத்திக்குவேண்டிய ஸாதனங்களை ஏற்படுத்திக்கொடுத்தல், தமது பட்டணங்களுக்குவரும் ப்ரயாணிகளுக்கு ஸௌகர்யங்கள் ஏற்படுத்துதல், கைத்தொழில்கள் ஏற்படுத்துவது, ஜனங்களுக்குள் சிக்கனத்தை வ்ருத்தி செய்வது, ஜனங்களுக்கு இருக்கும் கடன்களைக் குறைக்க வழிதேடுவது, கோவாபரேடிவ் ஸங்கங்கள், வ்யாபார ஸங்கங்கள் ஏற்படுத்துவது முதலியவைகள்.

தாமிருக்கும் க்ராமம் அல்லது பட்டணத்தின் அபிவ்ருத்திக்காக ஒவ்வொருவரும் பாடுபடவேண்டியதுபோலவே, தேசம் முழுமைக்குமான பொதுக் கார்யங்களுக்கும் உழைக்கக் கடமைப்பட்டவராவர். தேச முழுமைக்கும் நன்மை உண்டாக்கக் கூடியவையான வேலைகளில், உதாரணமாக, சாஸ்த்ரம், கல்வியறிவு, சித்ரவேலைகள் ஆகிய இவைகளின் அபிவ்ருத்திக்கான எல்லா முயற்சிகளிலும் அவர் கலந்து கொள்ளவேண்டும்.

இவைகள் விஷயமாக ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய குணங்கள் என்னவென்றால், கடினமான வேலைகளையும் செய்யத் திறமை; காலந் தவறாமல் செய்யவேண்டிய தொழில்

செய்தல், எஜமானர் அல்லது மேற்பார்வை செய்பவர் இல்லாதபோதும் செய்யவேண்டிய வேலையில் கவனமாயிருத்தல், முதலியவைகளே.

பிறருக்கு அடங்கி நடத்தல், வணக்கம் ஆகிய குணங்கள் நம்மிடம் இருக்கின்றன. நமக்குவேண்டிய இதர குணங்கள் என்னவென்றால், ஒற்றுமையாய் சேர்ந்து உழைத்தல், பலர் சேர்ந்து நடத்தும் வேலைகளில் சச்சரவில்லாமல் பார்த்துக்கொள்வது, பெரிய தொகையுள்ள ஜனஸமூகத்தை அடக்கியாள ஸாமர்த்யம் ஆகிய இவைகளாகும். இம்மாதிரி நற்குணங்களை, நெடுநாள் அப்பியாஸத்தினாலேயும், ஸமயம் வாய்க்கும்போது விட்டுவிடாமல் இந்தக் குணங்களை வ்ருத்தி செய்யக்கூடிய காரியத்தைச் செய்வதனாலேயும், நாம் அடையலாம்.

நம்மிடத்திலிருக்கும் ஒரு கெடுதி என்னவென்றால், இதரர்கள் செய்யும் நல்ல கார்யத்தைப்பற்றிப் புகழ்ச்சியாகப் பேசாமல், அவர்களிடத்தில் அல்ப விஷயங்களில் குற்றம் கண்டு பிடிப்பது. இதனால் என்ன நேரிடுகிறது என்றால், பொதுக் கார்யத்திற்காக உழைப்பவர்களின் தொகை மிகக் குறைவாயிருக்கிறது. அனாவச்யமாக ஒருவரைப்பற்றி தூஷணை சொல்லாமலிருக்கும் பக்ஷத்தில், எத்தனையோ பேர்கள் பொதுக் கார்யங்களில் முன் நின்று உழைப்பார்கள். மேற்கூறியவைகளெல்லாம் ஸித்திபெற சில ஸாதனங்கள் உண்டு.

(1) நமது பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு இம்மாதிரி நற்குணங்களை வ்ருத்தி செய்யும்பொருட்டு, தனியாக பாடம்சொல்லி புத்தி புகட்ட ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

(2) பொது மேடைகளில் நின்று மேற்படி ஸத்விஷயங்களைக் குறித்து பகிரங்கமாய் ஜனங்களுக்கு போதிக்கவேண்டும்.

ஜன ஸமூக ஆசார விஷயங்கள்.

நமது ஜனஸமூகம் மேன்மேலும் வ்ருத்தியடையத் தடையாக நிற்கின்ற சிலபழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் ஒழித்து விடுவது அல்லது சீர்திருத்துவது ஒவ்வொருவரும் தக்க முயற்சிகள் செய்யவேண்டும். ஜாதி ஏற்பாட்டால் நமக்கு பலகெடுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஏற்பாட்டால் ஜனத்தொகையில் ஒரு பெரும் பாகத்தார் சாச்வதமான தாழ்வை அடைந்திருக்கிறார்கள். தாழ்ந்த ஜாதிகளெனப் படுவோர்கள் இருக்கும் நிலைமையானது நமது ஜனஸமூகத்தின் கௌரவத்தைக் குறைக்கக் கூடியதாயிருக்கிறது. அவர்களுடைய நிலைமையை நாம் உயர்த்தவேண்டியது அவச்யமாகும். முதலாவது அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுடைய கெட்ட வழக்கங்களை ஒழித்து, அவர்களை நல்வழியில் நடக்கும்படி செய்ய பரோபகார ஸங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். நமது கல்யாண வழக்கங்கள் நமது ஜன ஸமுதாய அபிவ்ருத்திக்கு ஒரு பெரிய தடையாயிருக்கிறது. ஒவ்வொரு வர்ஷமும் சிறு குழந்தைகள் இளம்ப்ராயத்திலேயே மாண்டு போவதற்குக் காரணம் என்ன? முதல் காரணம் பால்ய விவாகம். பால்ய விவாகத்தினால் சிறு ப்ராயத்திலேயே பெண்களுக்கு குடும்ப பாரம் வந்துவிடுகிறது. அதன் காரணமாக மனோ வ்யாகூலம், தேக பலக் குறைவு ஆகிய இவைகள் ஏற்படுகின்றன. இரண்டாவது காரணம் வேறு ஜாதிப் பிரிவுகளில் ஸம்பந்தம் செய்யாமை. ஜாதியின் உட்பிரிவுகளுக்குள் கல்யாணம் செய்ய முயற்சிக்கவேண்டும். இதனால் வரன்கள் தேடுவது ஸுலபமாகும். வரதக்ஷிணை கொடுக்கவேண்டிய அவச்யம் குறையும்.

விதவைகள் புனர் விவாகம் செய்துகொள்



வதில் யாதொரு தடையுமிருக்கக்கூடாது, முக்யமாய் ஒருபாவமும் அறியாத அதி பால்ய விதவைகள் மறுபடி கலியாணம் செய்துகொள்வதில் உள்ள தடைகளை கொஞ்சம் கொஞ்சமாய் ஒழிக்கவேண்டும். பால்ய விதவைகளை மொட்டை யடித்துத்தான் தீரவேண்டும், ஆபரணம் போட்டுக்கொள்ளப்படாது என்கிற கொடிய வழக்கங்களை உடனே யாதொரு தாமஸமுமில்லாமல் நிறுத்தவேண்டும்.

நமது ஸமுதாயத்திலுள்ள மற்றொரு கெட்ட வழக்கம் என்னவெனில், கல்யாணம் கருமாந்திரம் முதலிய சுபாசுப கார்யங்களுக்கு கண்ணை மூடிக்கொண்டு ஏராளமாய்ச் செலவிடுவது. அனேகம் பேர்கள் தங்கள் கல்யாணத்துக்குவாங்கின கடனைத் தீர்க்கமுடியாமல் ஆயுள் பர்யந்தம் கடனாளிகளாகவே யிருந்து அவஸ்தைப்பட்டுச் சாகிறார்கள். சுபாசுப கார்யங்களுக்கும், மத ஸம்பந்தமான கார்யங்களுக்கும் செலவிடும் தொகையைக் குறைக்க யத்தனிப்பது நமது ஆசார சீர்திருத்தத்தின் முக்ய முயற்சிகளில் ஒன்றாயிருக்கவேண்டும்.

ஒவ்வொரு பண்டிகைக்கும், சுபா சுபங்களுக்கும் இவ்வளவுதான் செலவழிக்க வேண்டுமென்று விவரமாக ஒரு திட்டம் தயாரித்து, அதை யனுஸரித்துச் செலவு செய்யும்படி ஜனங்களுக்கு போதிக்கவேண்டும். நாளைக்கு 'அன்னமோ ராமச்சந்திரா' என்று இருக்கக்கூடிய பரம ஏழைகள்கூட, தடபுடலாக எங்கேயாவது கடன் வாங்கி கல்யாண கருமாந்திரங்கள்செய்து, தங்களையும் பெரிய பணக்காரர்கள் என்று எல்லோரும் நினைத்துக் கொள்ளும்படிக்கு வீண்செலவு செய்கிறார்கள்.

அந்தோ பாவம்! இவர்கள் பின்னாலல்லவோ கஷ்டப்படப் போகிறார்கள். இம்மாதிரி வீண் செலவு செய்யக்கூடாதென்று ஜனங்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும்.

நூதன முறைப்படி குடும்ப வ்யவகாரங்களை வகிக்கவும், ஸங்கீதம், படம் வரைதல் முதலிய அரிய வித்தைகளை வ்ருத்தி செய்யவும், நமது பெண்மணிகளுக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். அவர்களது புத்தி சாதுர்யத்தையும், ஸ்வய நம்பிக்கையையும் மேன்மேலும் வ்ருத்தி செய்ய நாம் இடங்கொடுக்காமல், அடுப்பங் கரையையே கட்டி அழும்படி செய்கிறோம். அம்மாதிரி செய்வது சுத்த பிசகு. அவர்களில் கணவர்களை இழந்தவர்கள் பிற்காலத்தில் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள சக்தி யற்றவர்களாய் அவஸ்தைப்பட நேரிடும்.

நம்மவர்களில் ஆண்களும் பெண்களும் பொதுக்கூட்டங்களில் யாதொரு வித்யாஸமுமில்லாமல் தாராளமாக கலந்து உலாவி அளவளாவுவது மிகவும் அருமை. இந்த விஷயத்தில் உயர் குலத்தாரைவிட நமது ஸமூகத்திலுள்ள ஏழை வகுப்பார்கள் எவ்வளவோ முன்னேற்ற முள்ளவர்களா யிருக்கிறார்கள். ஒரு ஆங்கிலேயனுடைய வீடு ஒரு சிறந்த மாளிகை; ஒரு இந்தியனுடைய வீடோ அனேகமாய் பெண்களது சிறைச்சாலை என்று சொல்லவேண்டியதா யிருக்கிறது.

வட இந்தியாவில் கோஷா வழக்கம் இருந்து வருகிறது. இந்த வழக்கமுள்ள ஜாதிகளில் ஸ்த்ரீகள் தங்கள் கணவனல்லாத இதர புருஷர்கள் முன் தலைகாட்டுவது கூடாது. புருஷர்களும் தங்கள் மனைவியொழிந்த இதர ஸ்த்ரீகளைப் பார்ப்பதும் கூடாத கார்யமாகும். ஸமீபத்தில் ஒரு வட தேசத்து கனவான், தமது ஸஹோதரனுடைய மனைவியை, எங்கேயாவது கண்டால், தாம் அடையாளங் கண்டு பிடிக்கமுடியாதென்று சொன்னாராம்.

பெண்களுக்கு குடும்ப விவகாரங்களை நடத்தக் கற்பிப்பதுமல்லாமல், முக்யமாக மத்ய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும் அவர்களது நிலைமைக்கும் ஸாமர்த்யத்துக்

கும் தருந்தாற்போல் கைத்தொழில்களை கற்றுக்கொடுக்கவேண்டும். இந்த மகா யுத்தத்தால் ஸ்த்ரீகளுக்குப் பல துறைகளிலும் உழைக்க ஸாமர்த்ய முண்டென்று ஸ்பஷ்டமாய்த் தெரிய வந்திருக்கிறது. ஆகையால் பெண்கள் ஒரு வேலைக்கும் லாயக்கானவர்களல்ல என்று நினைக்காமல், அவர்களது ஸாமர்த்யத்தை வ்ருத்தி செய்யும் பக்ஷத்தில், நமது தேச க்ஷேம அபிவ்ருத்திக்கு எவ்வளவோ அனுகூலமாயிருக்கும்.

மதத்தினால் ஏற்படும் பழக்கவழக்கங்கள் ஸமூக நன்மைக்கு அனுகூலமாயிருக்கின்றன. நமது கோயில்களையும், கடவுளை ஆராதனை செய்வதற் கேற்பட்ட இதர இடங்களையும் ரொம்ப சுத்தமாயும் சுசியாயும் வைத்துக் கொள்ள முயலவேண்டும். அவைகளை மேற்பார்வைசெய்து நிர்வகிப்பதற்கு, ரொம்ப உத்தமான நடத்தையுள்ளவர்களையே நியமிக்கவேண்டும்.

தற்ஸமயம் ஸமுத்ர யாத்ரை விஷயமாயும், ஆகார பானாதிகள் விஷயமாகவும் உள்ள நிபந்தனைகள் குறைந்துவருகின்றன.

## THE DEVIL WORSHIPPERS.

### பூத உபாஸகர்கள்.

ஆசியா துருக்கியைச் சேர்ந்த மெஸபோடேமியா ப்ரதேசத்தில் மோஸூல் என்னும் பட்டணத்துக்குப் பக்கத்திலுள்ள இடங்களில் எஸிடி என்று ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள், கிறிஸ்தவ மதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஸேட்டன் என்னும் தீச்செயல்களுக்கு அதிபதியாகிய பாபராஜனை உபாஸிக்கிறார்களாம். ஸேட்டன் என்பவன் முன்பு ஸ்வர்க்கத்திலிருந்த தேவ தூதர்களில் ஒருவனென்றும், அவன் அக்ருத்யங்களில் மனமுள்ளவனுப், பூமியிலுள்ள ஜனங்களை பாவச் செயல்கள் செய்யும்படி தூண்டினதினால், கடவுள் அவனை நரக லோகத்தில் தள்ளிவிட்டாரென்றும் சொல்வதுண்டு. கடவுளால் ஒதுக்கப்பட்ட கெட்ட தூதனை ஆராதிப்பதால் அந்த எஸிடி என்னும் ஜாதியாரை இதர ஜாதிகள் தாழ்வாகக் கூறுவதுண்டு. அதோடு இன்னொரு முக்ய காரணமுமுண்டு. மெஸபொடேமியாவிலுள்ள பற்பல ஜாதிகளுள் ஒவ்வொரு ஜாதிக்கும் அவரவர் மதத்தைப்பற்றிய வேத புஸ்தகம் உண்டு. ஆனால் எஸிடி ஜாதிக்கோ அப்படிப்பட்ட வேத புஸ்தகம் ஒன்றுமில்லை. இதனால் இதர ஜாதியார் அவர்களை வெகுவாய்த் தாழ்த்திக் கூறுகிறார்கள்.

ஆனால் வம்சபரம்பரையாய் வழங்கிவரும் மத ஸம்பந்தமான பல கதைகள் அவர்கள் மதத்தில் உண்டு.

எஸிடி ஜாதியார் எந்த ஜாதியிலிருந்து உற்பத்தியானார்களென்று தெரியவில்லை. அவர்கள் அர்மீனிய ஜாதியிலிருந்து உண்டானவர்களென்று சிலர் சொல்லுகிறார்கள். அவர்களுடைய தேக அமைப்பும் தோற்றமும் அவர்கள் குர்டிஷ் ஜாதியைச் சேர்ந்தவர்களென்று அனுமானிக்க இடங்கொடுக்கின்றன. மேலும் அவர்கள் பாஷையானது குர்டிஷ் பாஷையைச் சேர்ந்தது.

மோஸூலைச் சுற்றியுள்ள ஸமவெளிகளில் தான் இந்த ஜாதியார் அதிகமாயிருக்கிறார்கள். மோஸூலுக்கு மேற்கே ஜெபல் ஸின்ஜார் என்னுமிடத்திலும், மார்டின் என்னுமிடத்துக்குப் பக்கத்திலும், வான் ஏரிக்கு வடமேற்கிலும், காகஸஸ் ப்ரதேசத்தில் டிப்ளிஸ் என்னும் இடத்துக்கு ஸமீபத்திலும் இந்த ஜாதியார் ஸ்வல்பமாக இருக்கிறார்கள். ஜபல் ஸின்ஜார் என்னுமிடத்திலிருப்பவர்கள் ராஜாங்கத்துக்கு உள்படாமல் ஸ்வேச்சையாயிருக்கிறார்கள். சில ஸமயங்களில் அவர்களுக்கும் துருக்கிய கவர்ன்மெண்டுக்கும் மனஸ்தாபங்களும், சிறு சண்டைகளும் ஏற்பட்டதுண்டு. துருக்கி கவர்ன்மெண்டார் பலதடவைகளில் அவர்களை பலவந்தமாய் மகம்மதிய மதத்தில் சேர்க்க முயன்றார்கள். அம்முயற்சிகள் பயன்படவில்லை. ஷேக் ஆடி என்னுமிடத்திலுள்ள இந்த ஜாதியாரின் கோவிலை இரண்டொரு தடவை மசூதியாக மாற்றினார்கள். 1892-ம் வர்ஷத்தில் துருக்கியின் சில பாகங்களில் பெரும் கொலைகள் நடந்தபோது, விக்டோரியா மகாராணியார் இவர்கள் விஷயமாய் வக்கலெடுத்து உழைத்து, அந்தக் கோயிலை அவர்கள் வசமே கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்தக் கோயிலை துருக்கியர்கள் இடித்து நாசம் செய்துவிட்டார்கள். 1908-ம் வர்ஷத்தில் துருக்கியின் ராஜாங்கத்தில் சில மாறுபாடுகள் ஏற்படவே, அதன் பலனாக அந்தக் கோவில் எஸிடி ஜாதியாரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. பிறகு அது திரும்பவும் கட்டப்பட்டது.

#### அவர்களுடைய ஆசாரங்கள்.

எஸிடி ஜாதியார் ரொம்ப தாழ்ந்த வகுப்பார்கள். ஆனால் அவர்கள் குர்டிஸ்டானிலுள்ள மற்றெல்லா ஜாதியாரையும்விட ரொம்ப சுத்தமும் சுசி ருசியுமுள்ளவர்கள். அவர்கள் வெண்மையான உடைகளையே உடுத்திக்கொள்ளுகிறார்கள். நன்றாய் அமைக்கப்பட்ட க்ராமங்களில் வஸிக்கிறார்கள். க்ராமங்களைச் சுற்றிலும் ஒலிவை மரங்களும் வாதா மரங்களும் ஏராளமாய் தோட்டங்களாக இருக்கும். அவர்கள் பசித்து வருபவர்களுக்கு அன்னமில்லையென்று சொல்லமாட்டார்கள். அவர்கள் சாப்பிடும் உணவில் எதுவும் மகம்மதியர்களாகட்டும், கிறிஸ்தவர்களாகட்டும் சாப்பிடக் கூடாததல்ல.

#### ஜாதித் தலைவர்.

அந்த ஜாதியாரின் தற்போதைய தலைவர் மோஸூலுக்கு 25-மைல் வடகிழக்கிலுள்ள பாட்ரி என்னும் ஊரில் வஸிக்கிறார். அவர் ரொம்ப பால்யம். இருந்தாலும், அவர்தான் அந்த ஜாதியாரின் வ்யவஹாரங்களையும் வழக்குகளையும் தீர்த்துவருகிறார்.

#### அவர்களுடைய மதம்.

அந்த ஜாதியார் தங்களுடைய மத விஷயமாய் ஒன்றும் வெளியிடுவதில்லை. அவர்களுடைய மதமானது பற்பல மதக் கொள்கைகளுடைய மிச்ரமமாகும். அவர்களுக்கு கிறிஸ்தவர்களைப்போல் ஞானஸ்நானம் உண்டு. அவர்கள் ஸூர்யனையும் அக்னியையும் உபாஸிப்பதும் உண்டு. முக்ய தெய்வமாகிய ஸேட்டனை "மாலிக் டாஸ்" என்றுதான் வழங்குவார்கள். மாலிக்டாஸ் என்றால் மயிலரசன் என்று அர்த்தம். அந்த தேவதையினிடம் அவர்களுக்கு மர்யாதையும் பயமுமுண்டு. ஸேட்டன் ஸ்வர்க்கலோகத்திலிருந்து தள்ளப்பட்ட ஒரு தேவதூதரென்றும், என்றைக்காவதொரு நாள் அவருக்கு தேவ பதவி கிடைக்குமென்றும், இப்போது அதாவது ஸேட்டன் ஸ்வர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டிருக்கும் இந்த ஸமயத்தில் யார் அவர் பக்ஷமாக இருக்கிறார்களோ, அவர்களை, அவர் தேவ பதவி கிடைத்த பிறகு ஹிம்ஸிக்காமல் நன்றாய் நடத்தக்கூடுமென்றும் எண்ணி, அதனால் எஸிடி ஜாதியார் அவரை உபாஸித்து வருகிறார்கள்.

#### புண்ய க்ஷேத்ரம்.

குர்டிஷ் மலைகளுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு பள்ளத்தாக்கில் அந்த ஜாதியாருக்கு ஒரு கோவிலுண்டு. அதன் பெயர் ஷேக்அலியின்

கோயில் என்பது. அந்த ஜாதியாரின் தீர்க்க தர்சியாகிய ஷேக் அலியென்பவர் அதில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதால் அந்தக் கோவிலுக்கு அப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் புண்ணிய க்ஷேத்ரத்தை தர்சனம் செய்ய எஸிடி ஜனங்கள் ஒவ்வொரு இலையுதிர் பர்வமும் போவார்கள். பள்ளத்தாக்குக்கு வந்ததும் ஒவ்வொருவரும் அங்குள்ள நதிகளிலும் ஊற்றுகளிலும் ஸ்நானம்செய்து, காலில் ஜோடு முதலியவையில்லாமல் கோவிலுக்குப் போவார்கள். வேறு ஜாதியார் கோவிக்கு வந்தால் ஸ்நானம் செய்யவேண்டியதில்லை. ஆனால் அவர்களும் வெறுங் காலோடுதான் கோவிலுக்குள் நுழையவேண்டும். கோவிலின் மத்தியில் ஷேக் அலியின் ஸமாதியும் 'மாலிக் டாஸ்' என்னும் தேவதையின் விக்ரகமும் இருக்கின்றன. ஆனால் எவரையும் அந்த தேவதையின் விக்ரகத்தைப் பார்க்க விடுவதில்லை. ஏனென்றால் அதுரொம்ப தெய்வீகமாம்.

ஆனால் 1912-ம் வர்ஷத்தில் ஒரு எஸிடி ஜாதியான் அந்த விக்ரகத்தைத்திருடி மோஸூலுக்குக் கொண்டுபோய், அதை போட்டோ படம் பிடித்துவிட்டான். அந்த விக்ரகம் பார்வைக்கு ஒரு புறாவைப் போலிருக்கிறதாம். மயிலை அவ்வளவாக ஒத்திருக்கவில்லை.

முக்யமான உத்ஸவம் 3-நாள் நடக்கும். அப்போது அங்கே வந்திருப்பவர்கள் பகலில் ஆடிப்பாடி விருந்துண்டு காலங்கழிப்பார்கள். இரவில் எண்ணெய் விளக்கேற்றி, பாறை கற்களால் கட்டப்பட்டுள்ள அந்தக் கோவிலின் எல்லா இடுக்குகளிலும் வைப்பார்கள். மறுநாள் அதிகாலையில் கோவிலுக்கு வந்திருப்பவர்கள் எல்லாரும், விளக்குப் புகையால் கறுப்பாயிருக்கும் ஒவ்வொரு சந்து பொந்தையும் முத்தமிட்டு வருவார்கள்.

கோவிலிலுள்ள விக்ரகமே யல்லாமல், மாலிக்டாஸுக்கு வேறு நாலைந்து விக்ரகங்கள் உண்டு. அதை ஜனங்கள் ஸதா ஊரூராய் எடுத்துக்கொண்டுபோய் ஜனங்களுக்கு தர்சனம் காட்டுவார்கள். ஒவ்வொரு ஊராரும் விக்ரகம் தங்கள் ஊருக்கு வருவதற்காகப் பணம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு எஸிடிக்கும் ஷேக் ஆலி கோவிலிருக்கும் ஊரிலிருந்து கொண்டுவந்த மண்ணில் கொஞ்சம் கொடுப்பார்கள்.

மொத்தத்தில் பார்க்கப்போனால் எஸிடி ஜாதியார் ரொம்ப ஸாதுக்கள். அவர்கள் வேண்டுவதெல்லாம் பிறர் தங்களை ஹிம்ஸிக்காமலிருப்பதே. அவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் கிடையாது. படிப்பில் அவர்களுக்கு ப்ரியம் கிடையாது. அவர்கள் துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் வைத்துக்கொள்வதில்லை. ராஜாங்க விஷயங்களில் கலந்து கொள்வதுமில்லை.

---


மத ஸம்பந்தமான புஸ்தகங்கள்.

746. மகாபாரத வினாவிடை 1-ம் பாகம். 0 12 0
இதில் ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்யோக பர்வங்கள் அடங்கியிருக்கின்றன. துரைத்தனத்தாரால் பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமென்று அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

747. 2-ம் பாகம் ... 0 12 0
பீஷ்மபர்வம் முதல் ஸ்த்ரீபர்வம் முடிய உள்ளது.

748. 3-ம் பாகம். ... 0 12 0
சாந்திபர்வம் முதல் கடைசி முடிய உள்ளது.

749. ஸ்ரீமத் பாகவத வினாவிடை 1-ம் பாகம் ... 1 0 0
பல படங்கள் உள்ளது. முதல் 9-ஸ்கந்தங்கள் அடங்கியது.

750. ஷை இரண்டாம் பாகம் ... 1 0 0
பல படங்கள் உள்ளது. கடைசி 3-ஸ்கந்தங்கள் அடங்கியது.

ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.




## THE AUTOBIOGRAPHY OF DADHABAI NAOROJI.

### தாதாபாய் நௌரோஜியின் ஸ்வ சரித்ரம்.

(1904-ம் வர்ஷத்தில் மிஸ்டர் நௌரோஜி, லண்டனிலுள்ள எம். ஏ. பி. என்னும் வாராந்த பத்ரிகைக்கு தமது ஸ்வசரித்ரத்தை எழுதினார். அதிலிருந்து சில முக்யமான பாகங்களை இங்கே மொழி பெயர்த்துத் தருகிறோம்.)

நான் சிறு குழந்தையா யிருந்தபொழுது என் மனதில் தோன்றினதில் ஒன்று எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. என் தகப்பனார் இறந்துபோனதால், என் ஸ்நேகிதர்கள் என் பேரில் அனுதாபங் காட்டுவதுபோலவே, சந்த்ரனும் என்பேரில் மிகவும் அனுதாபம் காட்டினதாக நான் எண்ணிவந்தேன். நான் வீட்டின் பின்புறத்திற்கு போனாலும் சரி, முன்பக்கத்திற்கு போனாலும் சரி, சந்த்ரனும் கூடவே வந்துகொண்டிருந்ததாகத் தோன்றிற்று. அப்போது சந்த்ரனும் பிறரும் என்மேல் அனுதாபம் காட்டினது எனக்கு ப்ரியமாயிருந்தது. இப்போதும் பிறர் அனுதாபங்காட்டுவது எனக்கு ப்ரியமாகவே இருக்கிறது.

இன்னொரு பால்ய ஸம்பவத்தை இங்கு தெரிவிக்கிறேன். அது எனக்கு ஞாபகமில்லை. பிற்காலத்தில் என்தாயார் எனக்கு அதைத் தெரிவித்தார். யாராவது பையன் என்னை வைதால், அந்தக் கெட்ட வார்த்தைகள் அவன் வாயிலேயே இருக்கும் என்று நான் சொல்லுவது வழக்கமாம்.

நான் சிறு பையனா யிருந்தபோது 'க்ரிக்கெட்' விளையாட்டில் எனக்குமிகவும் ப்ரியம். அதில் மிகவும் கெட்டிக்காரனென்று எனக்கு பெயரும் உண்டு. நான் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்தபோது ஸூர்ய வெப்பத்தைக்கூட கவனியாமல் மத்யானம் சாப்பாட்டிற்காக விடும் அரைமணி நேரத்தில் கூட தினந்தோறும் விளையாடுவது வழக்கம்.

எனக்கு மனக்கணிதத்தில் திறமையிருந்தது. அதோடு நான் மிகவும்சிறிய பையனாயும் பார்வைக்கு மிகவும் லக்ஷணமானவனாயும் இருந்ததால், யார் பள்ளிக்கூடத்தைப் பார்க்கவந்தாலும், என்னையே அவர்களிடம் காட்டுவது வழக்கம். பள்ளிக்கூடத்தில் எல்லாப் பையன்களையும் ரோட்டுக்கு பக்கத்தில் நிறுத்தி மனக்கணக்குக் கேட்பது வழக்கம். நான் எப்பொழுதும் சீக்ரமாய் பதில் சொல்லுவது வழக்கமானதால், கூட்டங்கூடியிருந்த ஜனங்களெல்லாம் என்னைப் பார்த்து மிகவும் ஆச்சர்யப்படுவது வழக்கம்.

நான் லக்ஷணமான நிறமுள்ளவனாயும், கால் கைகள் ரொம்ப அழகுள்ளவனாயும் இருந்ததால், கல்யாணங்கள் ஊர்கோலங்கள் முதலிய ஸம்பவங்களில், எனக்கு ஒரு இங்கிலீஷ் அட்மிரல் அல்லது ஜெனரல் வேஷமோ, அல்லது ராஜ ஸபைக்குரிய வேஷமோ போட்டு வேடிக்கை செய்வதுண்டு. என் பெற்றோர்களும் ஸ்நேகிதர்களும் என்னைப் பார்த்து "என் வெள்ளைக்காரக் கண்மணி" என்று சொல்லுவது வழக்கம். அப்போது என் வாழ்நாளின் பெரும்பாகத்தை வெள்ளைக்காரர்களுடைய தேசத்தில் கழிப்பேனென்றுவது, அவர்களுடைய உடையையே தரிப்பேனென்றுவது ஸ்வப்னத்தில் கூட எண்ணம் கிடையாது.

ஆங்கில ராஜ ஸபை உடையை நான் தரித்தபோதெல்லாம், எனக்கு பால்யத்தில் கல்யாணங்களிலும் ஊர்வலங்களிலும், ஒவ்வொருவரும் சொன்னது ஞாபகத்துக்கு வருவது வழக்கம்.

ராஜ ஸபை உடையை தரித்துக்கொண்டு, இம்பீரியல் இன்ஸ்டிட்யூட் என்னும் ஸபையின் கட்டிடத்தை விக்டோரியா மஹாராணி திறந்து வைத்த ஸமயத்தில், அவரை வரவேற்ப

நத்தாக ஏற்பட்ட கமிட்டியில் நான் ஒருவனாக இருந்து அவரை வரவேற்றேன். அப்பொழுது நான் ராஜஸபை உடையைத் தரித்திருந்ததால், பால்ய ஞாபகம் வந்து, "வாஸ்தவத்தில் நான் இப்பொழுது ராஜஸபையைச் சேர்ந்தவன்" என்று எண்ணி மகிழ்ந்தேன்.

நான் பால்யத்தில் அடிக்கடி பார்ஸி ஜனங்களுக்கு "ஷானமா" என்னும் பெர்ஸிய இதிகாஸத்தின் குஜராத்தி பதிப்பை படித்துக் காட்டுவது வழக்கம். இப்படிச் செய்தது என் [illegible] நடத்தையின் போக்கை அமைக்க முக்கிய காரணமாயிருந்ததென்று நான் சொல்லவும் வேண்டுமோ?

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் பம்பாய் நகரத்தில் "ஸ்வதேச வித்யா ஸங்கம்" என்று ஒரு ஸங்கம் ஏற்பட்டது. அந்த ஸங்கத்தார் தேச பாஷையிலும், இங்கிலீஷிலும் இரண்டு பாடசாலைகளை ஏற்படுத்தினார்கள். எனக்கு தேச பாஷை கற்றுக்கொடுத்த உபாத்யாயருக்கு இந்த ஸங்கத்தின் விஷயங்களைப் பற்றி அதிகமாய் தெரியாது. ஆனாலும் அவர் ஸர்க்கார் ஆதீனத்தின்மேல் பள்ளிக்கூடம் நடக்கிறது என்றதைக்கொண்டு தம் பையனை அங்கே படிக்க அனுப்பினார். என் தாயாரிடமும் ரொம்பவும் சிபார்சு செய்து என்னையும் அங்கேயே போய்ப் படிக்கும்படி செய்தார். இதுதான் என்னுடைய படிப்புக்கு ஆதி காரணம். அப்பொழுது படிப்பு முழுமையும் இனாம் தான். யாதொரு செலவும் கிடையாது. இப்பொழுதிருக்கிறபடி சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தால், என் தாயார் என்னை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியிருக்கவே முடியாது. இந்தக் காரணத்தால் தான் என் மனதில் "படிப்பு எல்லாருக்கும் இலவசமாய்க் கிட்டவேண்டும்." என்றும், எளியவனாலும் சரி, மிகவும் பணக்காரனானாலும் சரி அவனவன் மனோ சக்திக்குத் தகுந்தபடி படிப்பை விருத்தி செய்துகொள்ள எல்லா ஸௌகர்யங்களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், ஆரம்பப் படிப்பை இலவசமாக்க வேண்டுமென்றும் என்மனதில் பட்டது.

எனக்கு 15 வயது ஆனபோதுதான், எனக்கு விவரம் தெரியும் பருவம் வந்தது. நான் ஒரு நாள் ஒரு சாலையில் ஓரிடத்தில் போகும்போது, இனி ஒருபோதும் இழிவான வார்த்தைகளை ப்ரயோகிப்பதில்லையென்று ப்ரதிக்ஞை செய்துகொண்டேன். அப்போது ப்ரதிக்ஞை செய்தது நேற்று நடந்ததுபோலிருக்கிறது. அது முதல் நான், எனக்கு படிப்பு ஏற ஏற, இதைச் செய்யக்கூடாது, அதைச் செய்யக்கூடாதென்று ப்ரதிக்ஞைகள் செய்துகொண்டேன். அந்த ப்ரதிக்ஞைகளை விடாமல் காப்பாற்றி வந்தேனென்று நான் சொல்லக் கூடும்.

நான் சிறிய பையனாயிருந்தபொழுது சாப்பிடுவதற்குமுன் கொஞ்ச மதுபானம் செய்வது வழக்கம். ஒரு நாள் வீட்டில் சாராயம் இல்லை. எதிரிலிருந்த கடையில் போய் குடித்து வரும்படி என்னை அனுப்பினார்கள். எனக்கு அப்பொழுது அங்கே போனதில் ஏற்பட்ட அவமானத்தையும், வெட்கத்தையும், ஒரு பொழுதும் மறக்க முடியாது. அது போதும் போதுமென்று ஆய்விட்டது. மறுபடியும் சாராயக் கடையில் நான் கால் வைத்ததே கிடையாது.

நான் பள்ளிக்கூடத்தில் வாசிக்கப்போனபோது, அங்கே இரண்டு ஆங்கிலேய உபாத்யாயர்களிருந்தார்கள். ஒருவர் இங்கிலீஷுக்கும், மற்றொருவர் கணக்குக்குமாக நியமிக்கப் பட்டிருந்தார்கள். இரண்டு பேருக்கும் ஏதோ மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டது. உடனே பள்ளிக் கூடத்திலுள்ள பையன்களை இரண்டு பங்காகப் பிரித்து, அவரவர்கள் வகுப்பை அவரவர்களே எடுத்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருவர் மிகவும் நல்ல கண்டிப்புக்காரர்; மற்றவருக்கு அந்த ஸமாசாரமே தெரியாது. என்னுடைய பாக்யம் இரண்டாவது சொன்ன உபாத்யாயரிடம் படிக்கும்படி நேரிட்டது. அவர் பையன்கள் விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. எங்களுக்கு என்ன என்ன தோன்றிற்றோ அதன் ப்ரகாரமே செய்யலாம். கண்டிப்பு ஒன்றும் கிடையாது. ஆனாலும் எனக்கு சோம்பேறித்தனமாய் நாட்களைக் கழிக்க இஷ்டமில்லை. என்னுடைய ஸ்வபாவம் ஏதாவது செய்துகொண்டேயிருக்கவேண்டும். அரை நாழிகூட சும்மா இருக்க முடியாது. பாடம் படிக்கவேண்டிய கட்டுப்பாடு ஏற்படவில்லை. ஆகையினால் எந்த விதம் காலத்தை கழிக்கலாமென்று யோசித்துக் கொண்டிருந்தேன். எனக்கு நல்ல ஞாபக சக்தி யுண்டு. கேட்ட கதைகளை அப்படியே ஒன்றுகூட விடாமல் நன்றாய்ச் சொல்லுவதில் ஸாமர்த்யம் அதிகம். ஆனதினால் எனக்கு அநேக கதைகள் நன்றாய்த் தெரியும். அநேகம் பையன்கள் ஒன்றுசேர்ந்து நான் சொல்லும் கதைகளைக் கேட்பார்கள். கண்டிப்பே கிடையாதாகையினால், அநேகம் பையன்கள் ஒன்று சேர்ந்து வெளியில் போய் விளையாடுவதுகூட வழக்கம். இப்படி விளையாட்டில் நாள் முழுவதையுங்கூட கழிப்பது வழக்கம். இப்படி ஒரு வர்ஷ காலம் யாதொரு படிப்புமில்லாமல் சென்றது. அப்படியிருந்த காலத்திலுங்கூட கொஞ்சம் நன்மையே எனக்கு ஏற்பட்டது. என்னுடைய கதை சொல்லும் சக்தியாலும், விளையாட்டில் கெட்டிக்காரத் தனத்தாலும், நான் பையன்களுக்குத் தலைவனானேன். அதனால் எனக்கு தன்னம்பிக்கையும் தைர்யமும் உண்டாயின. ஒரு பள்ளிக்கூடப் பரீக்ஷையில் ஒரு பையன் ரெடி ரெக்கனர் என்ற வாய்பாட்டுப் புஸ்தகத்தை நன்றாய் உருப்போட்டுவிட்டு, எனக்கு கட்டாயம் கிடைக்குமென்றிருந்த வெகுமதியை வாங்கிவிட்டான். ஆனால் ப்ரைஸ் கொடுக்கும் ஸமயத்தில் புஸ்தகத்திலில்லாத சில கேள்விகளை கேட்டதும், பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். இதுதான் ஸமயமென்று நான் ஓட்டமாய் முன்வந்து பதில் அளித்தேன். அப்பொழுதே கூட்டத்திலிருந்த ஒரு ஆங்கிலேய கனவான் எனக்கு ஒரு பரிசு அளித்தார். மிஸஸ் போஸ்டன் என்னும் ஆங்கில ஸ்த்ரீ அப்பொழுது தேச ஸஞ்சாரம் செய்துகொண்டு அந்த ஸமயத்தில் அங்கே வந்திருந்ததனால், இந்த ஸமாசாரத்தை அவள் எழுதிய புஸ்தகமாகிய 'வெஸ்டர்ன் இண்டியா' என்னும் நூலில் குறித்து வைத்திருக்கிறாள்.

இளமைப் பருவத்தில் நடந்த ஸங்கதிகளை இம்மட்டோடு நிறுத்துகிறேன். தேசபாஷை பள்ளிக்கூடத்திலும் ஆங்கிலப் பள்ளிக்கூடத்திலும் படித்ததன் பிறகு எல்பின்ஸ்டன் காலேஜில் போய்ச் சேர்ந்தேன். அங்கேயும் எனக்கு நல்ல அத்ருஷ்டமென்றே சொல்ல வேண்டும். கீழ்க்கடைப் பள்ளிக்கூடங்களில் மாதிரி, அங்கேயும் சம்பளம் கிடையாது. ஆனால் காலேஜில் வாசிக்க வேண்டுமானால் நன்றாய்த் தேறி ஸ்காலர்ஷிப் பெற்றால்தான் படிக்கலாமென்றிருந்தது. நல்லவேளையாய் ஒரு ஸ்காலர்ஷிப் எனக்குக் கிடைத்தது.

இந்தக் காலத்தில் நான் வாசித்த புஸ்தகங்களுள் என்னுடைய நடத்தையையும் பிற்கால வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்தியவை பிர்டெளஸி என்பவர் செய்த, குஜராத்தி புஸ்தகமாகிய 'ஷானமாவும்' ஸொராஸ்ட்ரியர்களுடைய கடமைகள் என்னும் புஸ்தகமுமே. மனம் வாக்கு, செய்கை ஆகிய இவைகள் சுத்தமாக இருக்கவேண்டுமென்பதே நான் அவைகளிலிருந்து அறிந்துகொண்ட கற்பனைகளாகும். ஆனால் நான் அதிகமாய் வாசித்து ஸந்தோஷமடைந்தது இங்கிலீஷ் நூல்களே.

வாட் என்பவர் எழுதியுள்ள ‘மன அபிவிருத்தி’ என்னும் நூலைப் படித்ததில் எப்படி எழுதுவது, எழுதுவதில் நடை எப்படியிருக்கவேண்டுமென்பது, விளங்கிற்று. அதாவது, ஒரு வார்த்தை உபயோகிக்கவேண்டிய இடத்தில் அனாவச்யமாய்ப் பல வார்த்தைகளை உபயோகிக்காமலிருப்பது; தெளிவாக எழுதுவது ஆகிய இவைகளே.

படிப்பு அதிகமாக ஆக, எனது மனமானது விசாலமடைந்து பல விஷயங்களைப் பற்றி சிந்திக்கலாயிற்று. நான் ஏழையாயிருந்து; இலவசமாய்ப் படித்தது, பொது ஜனங்களின் உதவியாலாகையால், நானும் பெரியவனான பிறகு ஜனங்களுக்கு என்னாலான உத்தமமான கைங்கர்யங்களைச் செய்யவேண்டுமென்று தீர்மானங் கொண்டேன். இவ்விதமாக எண்ணிக்கொண்டிருக்கையில், அடிமை வ்யாபாரத்தைப்பற்றி க்ளார்க்ஸன் என்பவர் எழுதிய நூலும், ஹோவர்ட் என்னும் பரோபகாரியின் ஜீவ்ய சரித்ர நூலும் எனக்குக் கிடைத்தன. அவைகளை வாசித்ததும், என் தீர்மானம் உறுதிபடைந்தது. ஸௌகர்யபட்டபோதெல்லாம் ஜனங்களுக்கு உழைப்பதையே எனது வாழ்நாளின் நோக்கமாகக் கொண்டேன்.

நான் காலேஜில் கடைசி வகுப்பில் வாசித்துக்கொண்டிருக்கையில், அப்போது போர்ட் அப் எடுகேஷன் என்னும் வித்யா போர்டுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்த ஸர் எர்ஸ்கைன் பெர்ரி என்பவர் என்மேல் நல்ல அபிப்ராயங் கொண்டு, என்னை சட்டம் படிக்க இங்கிலண்டுக்கு அனுப்புவதாகச் சொன்னார். அதற்கு ஏற்படும் செலவில் ஒரு பாதித் தொகையை எனது ஸமூகத்தார் கொடுத்தால், மறுபாதியைத் தாம் தருவதாகச் சொன்னார். எனது ஜாதியிலுள்ள பெரியவர்கள், நான் இங்கிலண்டுக்குப் போனால், கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிடுவேனென்று பயந்ததால் போலும், அந்த யோசனை நிறைவேறவில்லை. அநேக வர்ஷங்களுக்குப் பிறகு நான் இங்கிலண்டுக்குப் போய் அப்போது இந்தியா கௌன்ஸிலில் மெம்பராக இருந்த ஸர் எர்ஸ்கைன் பெர்ரியை இந்தியா ஆபீஸில் கண்டபோது, அவர், நமது ப்ரேரணை ஒப்புக்கொள்ளப்படாமல் போனது நல்லதுதானென்றும், பாரிஸ்டராகப் போயிருந்தால், இப்போதுபோல, பொது ஜன நன்மைக்கு அதிகம் உழைக்க முடியாமலிருந்திருக்குமென்றும் சொன்னார்.

எனது வாழ்நாளின் ஆரம்ப காலத்தில் நடந்த ஒரு பெரிய ஸம்பவம், நான் வாசித்த எல்பின்ஸ்டன் காலேஜிலேயே கணிதம், ப்ரக்ருதி சாஸ்த்ரம் ஆகிய இவைகளைக் கற்பிக்க நான் ஒரு ப்ரொபஸராய் நியமிக்கப் பட்டதே. எலிபின்ஸ்டன் ப்ரொபஸர் என்ற பட்டமுள்ள முதல் இந்திய ப்ரொபஸர் நான்தான்.

அந்தப் பட்டத்தை நான் ரொம்ப அருமையுள்ள பட்டமாகவும் கௌரவமாகவும் எண்ணி வருகிறேன். அது விஷயத்தில் எனக்கு ரொம்ப ஸந்தோஷம். இப்போதும் அநேக ஸகபாடிகளும் மாணவர்களும் என்னை தாதாபாய் ப்ரொபஸர் என்று அழைக்கிறார்கள்.

நான் சிறுவனாயிருக்கும்போது செய்தவைகளின் பலன்களை தற்காலத்தில் என்னுடைய தேசத்து ஜனங்கள் காட்டும் ப்ரியத்தினால் நான் நன்றாய் அனுபவிக்கிறேன். “இந்தியாவின் பெருங்கிழவன்” என்று என்னை ஜனங்கள் அழைப்பதில் எனக்கு மிகவும் ஸந்தோஷம். அப்படி ஸந்தோஷப்படுவது தற்பெருமையா ? அல்ல.

இப்படி ஜனங்களெல்லாரும் என்னைக் கூப்பிடுவது என்னுடைய தேசத்து ஜனங்களின் அன்பையும், நன்றியையும், அவர்களுடைய உதார குணத்தையும் காட்டுகிறதே தவிர



வேறொன்றுமில்லை. இப்படிக் கூப்பிடுவதற்கு எனக்கு யோக்யதை இருக்கிறதோ இல்லையோ. அதுதான் நான் அடையக்கூடிய பெரிய ஸன்மானமாகும். ஒரு ஸமயத்தில் என்னுடைய ஸ்நேகிதர்களில் ஒருவர் மறுபடியும் நீ சிறு பையனாக ஆகி முன்போல வாழ்நாளைக் கழிக்க இஷ்டமா” என்று கேட்டார். அதற்கு நான் “ஆம், அதனாலுண்டான லாப நஷ்டத்துடன் மறுபடியும் வாழ்நாளை பால்ய முதல் ஆரம்பிக்க மிகவும் ஆசைப்படுகிறேன.” என்று சொன்னேன்.

இதோடு நான் எனது வ்ருத்தாந்தத்தை நிறுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் இந்த வ்ருத்தாந்தத்தில் கடைசியாக என் தாயாரைப் பற்றிச் சொல்லுகிறேன். கடைசியில் சொல்லுகிறேனென்றாலும், அவள் தான் எல்லாவற்றிற்கும் முதலாக இருக்கிறாள். நான் இளங் குழந்தையாக இருந்தபோதே வைதவ்யம் அடைந்து விட்டாள்; ஆனால் அவள் என்மேல் அதிக வாஞ்சை வைத்தவளாய் என்னை கவனிக்கவேண்டி மறுவிவாகம் செய்துகொள்ளாமலிருந்துவிட்டாள். அவள் தனது ஸகோதரருடைய உதவியைக்கொண்டு தன் குழந்தைக்காகப் பாடுபட்டாள்.

எழுதப் படிக்க தெரியாத போதிலும், என்மீது மிகவும் ப்ரியமாயிருந்த போதிலும், அவள் ஒரு புத்திசாலி பெண்ணே என்னுடைய எண்ணம். என்னை கண்டபடி திரியவிடாமல் கண்டிப்பாயிருந்து என்னைச் சூழ்ந்திருந்த கெட்டநடவடிக்கைகளுள் ஒன்றும் எனக்கு வராதபடி காப்பாற்றி வந்தாள்.

அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு அவள் ஒரு யுக்தியும், புத்தியும் சொல்லுபவள். அந்நாளில் உண்டான கெடுதல்களிலிருந்து ஜனங்களை சீர்திருத்த முயன்ற ஸமயத்திலும், பெண் கல்விக்காக முயற்சிசெய்த போதும், இதர சீர்திருத்தங்களுக்காக முயன்ற ஸமயத்திலும் என் தாயார் எனக்கு செய்த உபகாரம் இவ்வளவு அவ்வளவு என்பதில்லை. நான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்தது அவளுடைய உதவியினாலே தவிர வேறல்ல.

## HISTORY OF MYSORE.

By V. SWAMINATHA SARMA.

## மைஸூரின் சரித்ரம்.

[ சென்ற மாஸத்து ‘ஜனாபிமானி’யில் 266-ம் பக்கத் தொடர்ச்சி.]

தென்னிந்தியா மொத்தத்தில் விஷயங்கள் இப்படியிருக்க, ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜப்ரதிநிதியின்கீழ் இருந்த அநேக முக்யஸ்தர்களில், ஒருவன் ப்ரபலமடையலானான். தான் குஜராத் தேசத்திலிருந்து வந்த யாதவ வம்சத்தவர்களைச் சேர்ந்தவன் என்று அவன் சொல்லிக்கொண்டான். அவனுக்கு ராஜஉடையார் என்று பெயர். அவனுடைய வம்சத்து முதல்வன் கோதாவரி நதிக்கரையிலிருந்து மைஸூருக்கு வந்தான். அவன் முதல், அவனுடைய வம்சஸ்தர்கள் மைஸூரைச்சேர்ந்த சில [illegible]களை அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். ராஜ உடையார் தனக்கு அந்த பரம்பரையாய் வந்த நாடுகளை அனுபவிக்க யோக்யதை வந்ததும், தன் நாட்டை விஸ்தரிக்க எண்ணங் கொண்டான். அந்த எண்ணம் ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜப்ரதிநிதி ஸ்தானத்தை தான் அடைந்த பிறகுதான் முடியும்போல் தோன்றிற்று. அப்பொழுது பெனுகொண்டாவிலிருந்த வெங்கடபதி ராயருக்கும் அவனுடைய ஸேனா

800 009
162029

தி குமாரனை ஸ்ரீரங்கப்பட்டணம் திருமலை ராயருக்கும் மனஸ்தாபம் உண்டாயிருந்தது. இதுதான் தக்க ஸமயம் என்று எண்ணி ராஜ உடையார் ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜ ப்ரதிநிதியைப்போய் தாக்கினான். உடனே அந்தத் திருமலைராயர் உயிர்தப்பி ஓடினார். ஆயினும் அவர் பிறகு கொல்லப்பட்டார். அதன் பலனாக ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜ உடையார் வசமாயிற்று. மைஸூரும் அதைச் சேர்ந்த சில பாகங்களும் ஸ்ரீரங்கப்பட்டணமும் அதைச் சேர்ந்த சில பாகமுமே அப்பொழுது மைஸூர் ராஜ்யமாயிருந்தது. இந்த மைஸூர் ராஜ்யத்தை ராஜ உடையாரும் அவனுக்குப் பின் வந்த சில அரசர்களும் விசாலிக்க ப்ரயத்தனப்படவில்லை. பிறகு ராஜ்யம் கான்டீரவ நரஸ ராஜ உடையாருக்கு வந்தவுடன், அவன் சென்னபட்ணா ராஜப்ரதிநிதி ஸ்தானத்தைக் கவர்ந்து கொண்டதுமன்றி ராஜ்யத்தையும் மிகவும் விசாலித்தான். அவனுக்குப் பின் தொட்ட தேவராஜ உடையார் ஸிம்மாஸனத்திற்கு வந்து, தும்கூர், சிதல்தூர்க்கம் முதலிய ஜில்லாக்களை தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். அவனுக்குப் பின்வந்த சிக்க தேவராஜ உடையார் எக்கோஜியினிடமிருந்து பங்களூரை விலைக்கு வாங்கினான். ஏறக்குறைய அவுரங்கஸீப் காலத்தில் இருந்த இந்தச் சிக்க தேவராஜ உடையார், பிறகு, ராஜ்யத்தைச் சீர்திருத்த ஆரம்பித்தார். இந்த விஷயத்தில் முதலில் எலந்தூரைச் சேர்ந்த ஜைனபண்டிதர் விசலக்ஷண ரென்பவரும் பிறகு திருமலை ஐயங்கார் என்பவரும் அவருக்கு உதவினார்கள். இப்படி ராஜ்ய சீர்திருத்தம் நடந்துகொண்டிருக்கையில், தன்னுடைய பெரிய ராஜ்யத்தைத் தன் ஊமைப்பிள்ளையினிடத்தில் ஒப்புவித்து கி. பி. 1704-ம் வருஷத்தில் இறந்தான். "மூக்க அரசு" என்னும் இவன் காலத்திலும் திருமலை ஐயங்காரே மந்திரியாயிருந்து ராஜ்யத்தை சரியாக பரிபாலித்துவந்தார். அப்படியே அந்த ஊமை அரசனும் காலஞ் சென்றான். அவனுடைய பின்னை காலத்தில் மைஸூர் ராஜ்யமானது இரண்டு ஆபத்துகளுக்கு உள்பட்டது. மஹாராஷ்டிரர்களும் தக்ஷிணத்து மகம்மதியர்களும் படையெடுக்க ஆரம்பித்தார்கள். இந்த ஸமயத்தில் தளவாய்கள் என்னப்பட்ட ஒரு பிரிவார் ராஜ்ய விஷயத்தில் மிகவும் ப்ரபலராய் விளங்கினார்கள். அவர்கள் தேவனஹள்ளி, சிக்கபல்லூர், ச்யவனதுர்க்கம் முதலியவைகளை ஜயித்துக்கொடுத்ததுமன்றி, மஹாராஷ்டிரர்களையும் எதிர்த்து நின்றார்கள்.

இந்த அரசன் இறந்த பிறகு ராஜ்யத்திற்கு சரியான வார்ஸ் ஒருவருமில்லை. முதலில் ஒருவனை ராஜனாக ஏற்படுத்தினார்கள். அவன் ப்ரயோஜனமுள்ளவனாயில்லை. ஆகவே அவனைத் தள்ளிவிட்டு கிருஷ்ணராஜா என்கிற ஒரு குழந்தையை ஸிம்மாஸனத்தில் வைத்தார்கள். அப்பொழுது தளவாய், ப்ரதான், ஸர்வாதிகாரி என்ற மூன்று உத்யோகஸ்தர்கள் ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். இந்த மூன்று உத்யோகங்களை மூன்று ஸகோதரர்கள் முறையே வகித்து வந்தார்கள்.

இந்த ஸமயத்தில் ஸமஸூர் சேனையில் யாவருடைய கவனத்தையும் இழுத்த ஒரு மகம்மதியன் தோன்றினான். அவன்தான் பெயர் பெற்ற ஹைதர். அவன், நஞ்சராஜனின் தலைமையின் கீழ் மைஸூர் ராஜ்யத்து சேனையானது சிராவின் நவாபிற்கு விரோதமாகப் படையெடுத்துச் சென்றபோது தேவனஹள்ளி முற்றுகையில் அவன் மிகவும் ப்ரபலனானான். இன்னும் 18-வது நூற்றாண்டில் நடந்த கர்னாடகச் சண்டைகளில் அவனுடைய புகழ் எங்கும் பரவிற்று. இந்த ஸமயத்தில் தளவாய் உத்யோகத்திலிருந்த தேவராஜன் கிழவனாய்ப் போய்விட்டதால், உத்யோகத்திலிருந்து நீங்கவேண்டியதாயிருந்தது. ஹைதரின் தலைவனான நஞ்சராஜன் அந்தப் பதவிக்கு வந்தான். இந்த நஞ்சராஜன் திருச்சினாப்பள்ளிக்கு ஒரு யுத்தம் காரணமாகப் போய்த் திரும்பி மைஸூருக்கு வருகையில், அரண்மனையிலுள்ள சில ப்ரதானிகள் தன்னிடத்தில் வெறுப்புடன் நடந்துகொண்டதைக் கண்டான். இப்பொழுது யுக்த வயது அடைந்திருந்த க்ருஷ்ணராஜா இந்த மந்திரிகளினுடைய கையினின்றும் விடுபட்டு ஸ்வயமாய் ஆள இஷ்டங்கொண்டான். ஆகவே அரண்மனையிலுள்ள அரசனுக்கு வேண்டிய சிலர் ஹைதருடைய உதவியை வேண்டினார்கள். உடனே நஞ்சராஜன் உத்யோகத்தினின்றும் தள்ளப்பட்டான். ஹைதர் முக்ய ஸ்தானாதிபத்யத்தை அடைந்தான். மஹாராஷ்ட்ரர்களையும் சிராவின் நவாப் முதலானவர்களையும் மைஸூரின்மேல் படையெடுக்க வொட்டாதபடி செய்தான். ராஜ்ய பொக்கிஷத்தை வ்ருத்தி செய்தான். இப்படியெல்லாம் அவன் செய்தபோதிலும், ராஜ்ய முழுவதிற்கும் தானே அரசனாய் விடவேண்டுமென்ற கொடிய எண்ணம் அவன் கொள்ளவில்லை. தான் அந்த ராஜ்யத்தின் அரசனாவதற்கு அர்கனல்லன் என்பதை அவன் உணர்ந்திருந்தான். இது முக்யமாய் கவனிக்கவேண்டிய விஷயம்.

க்ருஷ்ண ராஜா காலஞ் சென்றுவிட, ராஜ வம்சத்தில் ஒரு குழந்தையை ஸிம்மாஸனத்தில் இருத்தினான். அவன் எப்படி அந்தக் குழந்தையை அரசனாக்கினான் என்பது கீழ் வருவனவற்றால் விளங்கும் :—

"ஹைதர் ராஜ வம்சத்தைச்சேர்ந்த எல்லாக் குழந்தைகளையும் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுவரச் செய்தான். அரண்மனையின் நடுவில் இருக்கப்பட்ட மண்டபத்தில் பழங்கள், மிட்டாய்கள், பொம்மைகள் இன்னும் இதர விளையாட்டு ஸாமான்கள் முதலியவாவும் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. உடனே ராஜ வம்சத்துக் குழந்தைகள் யாவும் தங்களுக்கு இஷ்டமானதை எடுத்துக்கொள்ளும்படி விடப்பட்டார்கள். உடனே எல்லாக் குழந்தைகளும் மிட்டாய் முதலிய பக்ஷணங்களிலும் பழங்களிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தின. ஆனால் அதில் ஒரு குழந்தை மாத்ரம் அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு கட்டியை தன் வலதுகையில் எடுத்துக் கொண்டு இடதுகையில் ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்துக்கொண்டது. "அதோ, அவன் தான் அரசன்" என்று ஸந்தோஷத்துடன் கூவினான் ஹைதர். உடனே "அக் குழந்தையை ஸிம்மாஸனத்தில் ஏற்றி முடி சூட்டிவைத்தான்."

இந்தக் குழந்தை பெயர்தான் நஞ்சராஜன் என்பர். ஹைதர் பிறகு தன் ராஜ்யத்தை வடக்கே க்ருஷ்ணாநதி வரைக்கும் தெற்கே திண்டுக்கல் வரைக்கும் பரவச் செய்தான்.

இப்படிப்பட்ட சிறந்த ராஜ்யத்தை தன் குமாரன் திப்புவினிடம் ஒப்புவித்துவிட்டு 1782-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 17-ந்தேதி காலஞ் சென்றான். திப்பு தன் தகப்பனாரைப் போலவே ராஜ்யத்தை விஸ்தரிக்க எண்ணங்கொண்டு பல பேருடன் யுத்தம் புரிந்து 1799-வருஷம் ஸ்ரீரங்கப்பட்டணத்துச் சண்டையில் இறந்தான். அதன் பிறகு 3-வது க்ருஷ்ணராஜ உடையார் பஹதூர் [அதாவது இப்பொழுது ஆளும் க்ருஷ்ணராஜ உடையாரின் பாட்டனார்] ஸிம்மாஸனத்திற்கு வந்து 1868-ம் வர்ஷம் வரை ஆண்டுவந்தார். இவர் காலத்தில் தான், மஹா மதியூகியான பூர்ணையர் மந்த்ரியாயிருந்தது. அப்பொழுது ஸர் பார்ரி க்ளோஸ் ப்ரிட்டிஷ் ரெஸிடெண்டாகவும், ஸர். ஆர்தர் வெல்லெஸ்லி சேனைத் தலைவராகவும் விளங்கினார்கள். இந்த க்ருஷ்ணராஜ உடை

யார் 1868-ம் வருஷம் மார்ச்சு மாதம் 27தேதி இறந்துவிட்டார். அப்பொழுது அவருடைய ஸ்வீகார புத்திரனுக்கு வயது 6. இவர்தான் ஸ்ரீ சாம ராஜேந்த்ர உடையார். இவருடைய 18-வது வயது வரைக்கும் ஆங்கிலேயர் மைஸூரைக் காப்பாற்றி, இவருக்கு ஆளும்படியான சக்தி வந்ததும் இவரிடத்தில் கொடுத்துவிட்டார்கள். இவர் 1894-ம் வர்ஷம் வரைக்கும் ஆண்டு அந்த வர்ஷக் கடைசியில் இறந்துபோனார். இவர் இறக்கும்போது இவர் குமாரருக்கு வயது 10. இவர்தான் க்ருஷ்ணராஜ உடையார். இவருக்கு யுக்த வயது வரும் வரைக்கும் இவருடைய தாயார் மஹாராணி வாணீ விலாஸ ஸந்நிதானம் ஆண்டு வந்து, 1902-ம் வர்ஷம் இவரிடம் ராஜ்யத்தை ஒப்புவித்தார். இவருடைய ஆட்சியில் மைஸூர் ராஜ்யமானது பலவகைகளில் முன்னேற்றமடைந்து வருகிறது.

வேங்கனத்தூர் - ஸ்வாமிநாத சர்மா.

## SASEMIRA.

BY K. T. SUNDARARAJA ACHARIAR, B. A., L. T.

## ஸஸேமிரா.

‘ஸஸேமிரா’ என்றால் என்னவென்பது எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். ஒரு கார்யம் ஸந்தேகமாக இருந்து, ஆகுமென்றாவது, ஆகாதென்றாவது நிச்சயமாய்ச் சொல்லுவதற்கு இடமில்லாமலிருந்தால், கார்யம் இழுப்பாயிருக்கிறதென்றும், ஸஸேமிராவாயிருக்கிறதென்றும் சொல்லுவது வழக்கம். அநேகமாய் எல்லாருக்கும் இதன் உபயோகம் நன்றாய்த் தெரியும். ஆனால் ஏன் இழுப்பாயும், ஸந்தேகமாயுமிருக்கிற கார்யங்களுக்கு ஸஸேமிராவென்று சொல்லவேண்டுமென்பது அநேகர்களுக்குத் தெரியாது. ‘ஸஸேமிரா’ என்கிற வார்த்தையில் நாலு அக்ஷரங்கள் இருக்கின்றன. அந்த நான்கு அக்ஷரங்களும் நான்கு முக்யமான நீதிகளுக்கு பதிலாக நிற்கின்றன. அந்த நீதிகள் என்ன என்பதை இவ்விடத்தில் கவனிப்போம். [இவ்விடத்தில் சொல்லப்போகிற கதை அநேகமாய் ப்ராசீன கதையை ஒத்திருக்கும். ஆனால் இரண்டொரு இடங்களில் ப்ரம்பரையாய்க் கேட்டு வந்ததை அநுஸரித்து, ப்ராசீன கதையிலிருந்து சற்று விலகியிருக்கும். அப்படிச் செய்வதே கதையை நன்றாய் அறியும்படி செய்வதற்கு காரணமாயிருப்பதால், அப்படியே எழுதப்பட்டிருக்கிறது.]

வெகு காலத்திற்கு முன் இந்தியா தேசமானது 56 தேசங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. அதில் “விசாலா” என்ற பெயருடைய ஒரு பெரிய தேசம் ஒன்று உண்டு. அதற்கு முக்ய பட்டணம் உஜ்ஜயனி. அதிலிருந்து தான் பூர்விக இந்திய வான சாஸ்த்ர வித்பன்னர்கள், பூ ரேகைகளை கணித்து வந்தார்கள். தற்காலத்தில் ஆங்கிலேய வான சாஸ்த்ர வித்பன்னர்களுக்கு லண்டன் நகரம் எப்படியோ, ப்ரெஞ்சுக்காரர்களுக்கு பாரிஸ் நகரம் எப்படியோ, அதே மாதிரி உஜ்ஜயனியும் பூர்விகத்தில் முக்யமாயிருந்ததென்பதற்கு ஸந்தேகமே கிடையாது. நீர்வளம், நிலவளம் பொருந்திய அந்த தேசத்தில் ‘நந்தன்’ என்று மிகவும் கீர்த்திபெற்ற ஒரு அரசன் அரசு புரிந்து வந்தான். அவன் தன்னுடைய பராக்ரமத்தினால் இதர ராஜாக்கள் எல்லாரையும் ஜயித்து அவர்களையெல்லாம் தனக்குக் கீழ்ப்படிந்தவர்களாயும், தனக்குக் கப்பங்கட்ட வேண்டியவர்களாயும் செய்துவிட்டான். இந்தியா முழுவதும் ஒரே குடைக்குள் (ஒரே ஆட்சிக்குள்) ஆய்விட்டது. ஜனங்களை ஸந்தோஷப்படுத்துவதிலும், அவர்களை த்ருப்திப்படுத்துவதிலும், அவனுக்கு ப்ரீதி அதிகமாயிருந்ததினால், ‘நந்தன்’ என்னும் பெயர் அவனுக்குக் காரணப்பெயராகவே ஆயிற்று. அவனுக்கு “பஹுச்ருதன்” என்ற மந்த்ரி ஒருவனிருந்தான். “பஹுச்ருதன்” என்கிற ஸம்ஸ்க்ருத பதத்திற்கு ரொம்ப விஷயங்களை நன்றாய்க் கேட்டு அறிந்தவன் என்று அர்த்தம். ராஜாவின் பட்டமஹிஷிக்கு ‘பானுமதி’ என்று பெயர். ராஜகுமாரன் பெயர் ‘ஜயபாலன்.’

நந்த மஹாராஜாவுக்கு ஸதா பானுமதியைப் பற்றியே தான் நினைவு. அவளை விட்டு ஒரு க்ஷணங்கூட பிரிந்திருக்க மாட்டான். தான் எவ்விடம் போனாலும், அவளையும் கூடவே அழைத்துக்கொண்டு போவது வழக்கம். ராஜ ஸதஸிலுங்கூட அப்படியே அவளுடன் ஸிம்மாஸனத்தில் உட்காருவது வழக்கம். இதைப் பார்த்த மந்த்ரி மிகவும் துக்கத்துடன் கூடினவனானான். மந்த்ரி நாலுவேதம், ஆறு சாஸ்த்ரம், 64 கலைகள் ஆகிய இவைகளைக் கற்றவனாதலால், சாஸ்த்ரங்களெல்லாம் “அஸூர்யம்பச்யா ராஜதாரா:” அதாவது ராஜஸ்த்ரீகள் ஸூர்யனைக்கூடப் பார்க்கக் கூடாது என்று முறையிடுகிறபடியால் இப்படி அரசன் செய்வது அசாஸ்த்ரம் என்று மிகவும் வருத்தப்பட்டான். இந்த ஸமாசாரத்தை அரசனிடம் சொல்லாமலிருக்கவும் மனஸு ஸஹிக்கவில்லை. சொல்வது எப்படி என்று பலவாறாய் யோசித்து, கடைசியாய் நல்ல ஸமயம் பார்த்து அரசனிடத்தில் மிகவும் விநயத்துடன் தெரிவித்தான். அரசனும் அதை ஸரியென்று ஒத்துக்கொண்டான். ஆனால் பானுமதி பக்கத்திலில்லாமல் ஒரு நிமிஷங்கூட தன்னாலிருக்க முடியாதென்றும், அப்படி அவளைவிட்டுப் பிரியாமலிருப்பதற்கும், மந்த்ரி சொல்லும் ப்ரகாரம் நடப்பதற்கும் ஏதாவது உபாயம் உண்டானால் சொல்லும்படி அரசன் மந்த்ரியைக் கேட்டான். மந்த்ரி வெகு காலம் யோசித்து பின்வரும் பதிலை ராஜனிடத்தில் தெரிவித்துக்கொண்டான்.

“மஹாராஜாவே! நம்முடைய நாட்டில் மிகவும் ஸமர்த்தர்களான சில்பிகளிருக்கிறார்கள். பார்த்த ரூபத்தை அதே ப்ரகாரம் எழுதுவதில் மிகவும் ஸாமர்த்யசாலிகள். அவர்களைக்கொண்டு பானுமதி மாதிரி ஒரு பிம்பத்தை செய்வித்து அதை எப்பொழுதும் பக்கத்தில் வைத்துக் கொள்வதினால் யாதொரு விதமான பிசகும் ஏற்பட மாட்டாது”

அதைக் கேட்ட அரசன் தனது மந்த்ரியின் புத்திசாலித்தனத்தை மிகவும் மெச்சி, அப்படிச் செய்வதே மிகவும் நல்லதென்று எண்ணி, அதன் ப்ரகாரம் தேர்ந்த சில்பி ஒருவனுக்கு உத்தரவு அளித்தான். அந்த சில்பி மிகவும் வேகத்துடன், தான் கற்ற வித்தையை எல்லாம் நன்றாய்க் காட்டி நல்ல பிம்பத்தை அதி சீக்ரமாகவே செய்து முடிக்க யத்தனித்தான். அரசன் தினந்தோறும் பிம்பத்தைக் குறித்து விசாரணைகள் செய்துகொண்டே வந்தான். கடைசியாய் ஒரு நாள் எல்லா வேலையும் ஆய்விட்டதென்றும், நெற்றியில் திலகம் மட்டிலும் வைக்கவேண்டுமென்றும், குறிப்பிட்ட தினத்தில் பாக்கியாயிருக்கிற திலகம் வைக்கவேண்டியதையும் முடித்து, ராஜ ஸபையில் சேர்ப்பதாயும் சில்பி அரசனிடம் தெரிவித்துக் கொண்டான். சில்பி தன் வேலை முழுவதும் ஆய்விட்டதென்று எண்ணி நெற்றியில் ஒரு நல்ல திலகத்தை வைக்கப்போனான். எப்படி ஒரு ஸ்த்ரீ குளித்து தலையை வாரி, ஆடை ஆபரணங்கள் தரித்து கடைசியாய்த் தன் நெற்றிக்கு பொட்டு வைத்துக் கொள்வாளோ, அதே ப்ரகாரம், பிம்பத்துக்கு நெற்றியில் பொட்டு வைப்பது வேலை முடிந்த

திற்கு அடையாளம். சில்பி பொட்டை நெற்றியில் வைத்ததும் அது ஒட்டவில்லை. பலவாறு முயன்றும் கீழேயே விழுந்துவிட்டது. அது இடது தொடைக்குமேல் விழ்ந்தது. எந்த விதம் வைக்க முயன்றாலும் அங்கேயே அது விழ்ந்தது. கடைசியாய் சில்பிக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. மதி மயங்கித் திகைத்தான். கடைசியாய் நாம் இந்த வேலையைச் செய்து முடிக்காவிட்டால், அரசன் மிகவும் கடுமையான தண்டனையை நமக்கு விதித்துவிடுவானென்று பயந்து காலையில் எழுந்து வாசல் கதவைத் தாளிட்டுவிட்டு, ஒருவரும் அறியாத வண்ணம் கொல்லைப் பக்கமாக வேறே எங்கேயாவது போய் வயிறு வளர்க்கலாமென்று எண்ணிப் புறப்பட்டான். இவ்வளவு நாளாய் அரசனுடைய ப்ரீதியும், ஸந்தோஷமும் கிடைக்கப் போகிறதென்று நாளுக்கு நாள் மிகவும் ஊக்கத்துடனும், உத்ஸாஹத்துடனும் வேலைசெய்துவந்த சில்பிக்கு பொட்டு நெற்றியில் ஒட்டாத காரணத்தால் திரும்பி வராதபடி ராஜ்யத்தை விட்டுப் போகும்படி ஆய்விட்டதே என்று மிகவும் வருத்தமுண்டாயிற்று. முகக் களைகளெல்லாம் மாறிவிட்டன. சில்பி குரங்கு சாகக் கொடுத்த ஆண்டி மாதிரி ஆகிவிட்டான். இவ்வளவு அலங்காரத்துடன் அவன் அதிகாலையில் ஊருக்கு வெளியே போய்க் கொண்டிருந்தான். அந்த அரசனின் முக்ய குருவாகிய சாரதானந்தர் ஊருக்கு வெளியில் ப்ராத ஸ்நானத்திற்காகப் போயிருந்தார். அவர் அந்த சில்பியைக் கண்டதும் அவ்வளவு காலையில் சில்பி வெளியில் போவதன் காரணத்தைக் கேட்க, சில்பி நடந்த வ்ருத்தாந்தம் முழுவதையும் குருவினிடத்தில் அதிக வணக்கத்துடன் தெரிவித்துக்கொண்டான். உடனே புறப்பட்டுப் போக குருவை உத்தரவு கேட்டான். குரு ஒன்றுக்கும் பயப்படவேண்டா மென்றும், தான் எல்லா விஷயங்களையும் சரிவர நடத்தி வைப்பதாயும், தேறுதல் சொன்னார். ப்ராமணர் வாக்கு பலிக்குமென்ற எண்ணத்துடன் சில்பிக்கும் கொஞ்சம் மனஸு தைர்யம் ஏற்பட்டது. சாரதானந்தர் தமது அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சில்பியுடன் அவன் வீட்டிற்குப் புறப்பட்டார். பிம்பம் மிகவும் அழகாயிருப்பதைப் பார்த்து மிகவும் ஆனந்தப்பட்டார். கடைசியாய் அவர் திலகத்தை எடுத்து நெற்றியில் வைக்கும்படி சொன்னார். சில்பி அப்படியே செய்ய, அது முன்போலவே அதே இடத்தில் விழுந்தது. உடனே ப்ராமணர் "ராஜஸ்த்ரீ பத்மினீ ஜாதி யானதால், மர்ம ஸ்தானத்தின் அருகாமையில் ஒரு மச்சமிருக்கவேண்டு மென்று சாஸ்த்ரம். அதை சில்பி பிம்பத்தில் காட்டாததினால், திலகம் அதே இடத்தில் விழுந்து கொண்டு வருகிற" தென்று தனக்குள்ளே எண்ணினார். அந்த மர்ம ஸ்தானத்தில் ராஜ ஸ்த்ரீக்கு ஒரு மச்சமிருக்கிறதென்றும், அந்த இடத்தில் ஒரு மச்சத்தை வைக்கும்படிக்கும், பிற்பாடு நெற்றியில் திலகம் வைக்கும்படிக்கும் உத்தரவு அளித்தார். அப்படியே சில்பி செய்தான். மச்சமும் ஏற்பட்டு விட்டது. திலகமும் நெற்றியில் வைத்தாய் விட்டது. சில்பி சாரதானந்தரை மிகவும் ஸந்தோஷப்படுத்தி ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்தான். ப்ராமணரும் வீடு போய்ச் சேர்ந்தார். சில்பி அரசனிடம் போய் தன் வேலை முடிந்துவிட்டதென்று தெரிவித்துக் கொண்டான். குறிப்பிட்ட நேரத்தில் பட்டமஹிஷியின் பிம்பமானது அரசனுடைய ஸதஸுக்கு தகுந்த மர்யாதையுடன் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கப்பட்டது. அரசனும் பார்த்து ஸந்தோஷப்பட்டு சில்பிக்கு தகுந்தபடி வெகுமான மளித்தான். இரண்டொருநாள் கழிந்தபிற்பாடு, அரசன் சில்பியை நோக்கி வேலையைப் பூராவும் சீக்ரமாகவே



முடித்தும், திலகம் வைக்க ரொம்ப நாட்கள் ஆனதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தான். சில்பி திடுக்கிட்டு ஒன்றும் சொல்லாமல், என்ன சொல்வதென்று மயங்கி நின்றான். பலவாறாக அந்தக் கேள்வியை கழித்துவிடப் பார்த்தும், அரசன் பிடிவாதமாய்க் கேட்டபடியினால், ரொம்ப நடுக்கத்துடன் உள்ளதை உள்ளபடியே தெரிவித்தான். இதைக் கேட்டதும் அரசனுக்கு அளவற்ற கோபம் உண்டாயிற்று. கண்கள் இரண்டும் எட்டிப் பழம்போல் சிவந்து விட்டன. பேசவும் நாக்கு எழும்பவில்லை. உதடுகள் இரண்டும் துடித்தன. உடனே சில்பியை வெளியே போக உத்தரவு அளித்துவிட்டு, "சாரதானந்தருக்கும் நமுடைய பட்டமஹிஷிக்கும் ஏதோ ரகஸ்ய ஸம்பந்த மிருக்கவேண்டும். இல்லாத விஷயத்தில் மர்ம ஸ்தானத்திலிருக்கிற மச்சம் அவருக்குத் தெரிய ந்யாயமில்லை" என்று பலவாறாய் யோசித்தான். இந்த மானக்கேடு வெளியில் பரவாத வண்ணம், அந்த ப்ராமணரைக் கொல்லும்படிக்கு மந்த்ரிக்கு உத்தரவு அளித்தான். மந்த்ரி அரசனுடைய கோபத்தையும், மேலும் அவ்விடத்தில் நடந்த ஸங்கதிகளையும் நன்றாய் அறிந்து, தற்காலம் அரசனிடம் வாதாடக் கூடாதென்று எண்ணி, அப்படியே தானே போய் கொலை செய்வதாய் ஒத்துக்கொண்டான். சாரதானந்தரை நோக்கிப் புறப்பட்டுப் போய், அவரிடத்தில் ஸங்கதிகளைத் தெரிவித்து அவரை கொலைக்களத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். அவர் ப்ராமண ராகையினால் "யத்பாவி தத்பவது" எது நடக்கவேண்டும்மா அது நடந்தேதீரும், நம்மால் ஒன்றும் மாற்ற முடியாதென்று மனஸை தைர்யப்படுத்திக் கொண்டு விசாரமில்லாமல் கொலைக் களத்திற்குச் சென்றார்.

அவர் கடைசியாக பின் வரும் ச்லோகத்தினால் ஈச்வரனைக் குறித்து த்யானித்தார்.

"வனேரணே சத்ருஜலாக்னி மத்யே
மஹார்ணவே பர்வத மஸ்தகேவா।
ஸுப்தம் ப்ரமத்தம் விஷம ஸ்திதம்வா
ரக்ஷந்தி புண்யானி புராக்ருதானி॥

அதாவது, "காட்டிலிருந்தாலும் சரி, மிகவும் உக்ரமாய்ச் சண்டை நடக்கும் யுத்தகளத்திலிருந்தாலும் சரி, சத்ருக்களுடைய மத்தியிலிருந்தாலும் சரி, ஜல மத்தியிலிருந்தாலும் சரி, காடி, புலி, யானை, ஸிம்மம் முதலிய காட்டு ம்ருகங்களிருக்கிற இடத்திலிருந்தாலும் சரி, அல்லது மிகவும் ச்ரமத்துடன் ஏறக்கூடிய பர்வதங்களுடைய உயர்ந்த சிகரங்களி லிருந்தாலும் சரி, தூங்கிக் கொண்டிருந்தாலும் சரி, விழித்துக் கொண்டிருந்தாலும் சரி, கஷ்ட திசையிலிருந்தாலும் சரி, முன் ஜன்மாவில் செய்யப்பட்ட புண்யங்கள் தான் ஒரு மனிதனைக் காப்பாற்றுகின்றனவே யல்லாமல் வேறேயில்லை."

இதைக் கேட்ட மந்த்ரிக்கு தான் செய்யப்போவதின் லாப நஷ்டம் தன்னையே பாதிக்குமென்றும், இதன் பாபத்துக்கு தானே உள்ளாக வேண்டுமென்றும், அரசனும் சரிவர யோசித்து உத்தரவை அளிக்காததினாலும், கோபத்தினால் பிடிக்கப்பட்ட ஸமயத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவாகையினாலும், அதை சரிவர நிறைவேற்றுததினால் தனக்கு ராஜ த்ரோகமும் ஏற்படமாட்டாது என்றும் பலவாறாக யோசித்து சாரதானந்தரை நோக்கி, தான் செய்த தப்பிதத்தை க்ஷமித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவரை தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கே அவரை ஒரு ரஹஸ்யமான இடத்தில் வைத்து, மிகவும் மர்யாதையாய் நடத்தி வந்தான். பிறகு மந்த்ரி அரசனிடம் வந்து தானே நேரில் அந்த ப்ராமணரைக் கொன்றுவிட்டதாகத் தெரிவித்தான். அரசனும் மிகவும் ஸந்தோஷத்துடன் மந்த்ரி

யினுடைய குணங்களை மெச்சி அவனுக்கு வேண்டியபடி இனும் கொடுத்து அனுப்பினார்.

இந்த ஸமாசாரம் நடந்து அநேக நாட்கள் கழிந்த பிறகு, அரச குமாரனாகிய ஜயபாலன் வேட்டைக்குப் புறப்பட்டான். அப்பொழுது அநேக விதமான அபசகுனங்கள் ஏற்பட்டன. இவ்வளவு அபசகுனங்களைக்கூட கவனியாமல் வேட்டைக்கு அவச்யம் போய்த் தான் தீருவதாயிருந்தான். அவனுக்கு மந்த்ரி புத்ரன் ஸ்நேகிதம். அவனையும் தன்னுடன்கூட வரும்படி கேட்டுக்கொண்டான். அவன் பலவிதமான க்ரந்தங்களை யெல்லாம் பார்த்தவனாகையினால், தான் வரமுடியாதென்று சொன்னதோடுகூட, ராஜ குமாரனையும் பலவிதமாய்ச் சொல்லி தடுக்க முயன்றான். என்ன செய்தும் பயன்படவில்லை. கடைசியாய், அவனவன் கர்மத்தை அவனவனே அநுபவித்து தீரவேண்டும். வரும் விதி ராத்தங்கமாட்டாது. ஸ்வர்ணமான மானை ஒருவரும் செய்ததுமில்லை. இதற்கு முன் பார்த்ததுமில்லை. கேட்டதுமில்லை. அப்படியிருந்தும் ஜகதீசனை ஸ்ரீ ராகவனுக்குக்கூட ஸீதா பிராட்டி சொன்னவுடன், ஸ்வர்ணமானை பிடிக்க வேண்டுமென்று எண்ணம் தோன்றியது விதியின் பயனன்றோ? மேலும் கைலாஸ நாதனாகிய பரமசிவனுக்கு பிக்ஷாடனம் செய்யும்படி நேர்ந்ததும் விதியின் பயனன்றோ? விதியை வெல்ல ஒருவராலும் முடியாது. ஆகையினால் ராஜ குமாரனுக்கு ஏதோ கஷ்டகாலம் வந்துவிட்டதென்று நினைத்து, தான் போகாமலிருந்துவிட்டான். ராஜகுமாரன் வேட்டைக்கு அதி வேகமாய் ரொம்பவும் கோபத்துடன் புறப்பட்டுவிட்டான். பின்னாலே வரும் ஸைன்யங்களைக்கூட கவனியாமல் வெகுதூரம் போய்விட்டான். காண்டா ம்ருகம், புலி, ஸிம்மம், யானை, சிறுத்தை முதலிய துஷ்ட ம்ருகங்க ளிருக்கும் காட்டை நோக்கிச் சென்றான். காட்டிற்குள் வெகுதூரம் போய்த் திரும்பிப் பார்த்தான். ஸைன்யமானது வெகு தூரத்துக்கு அப்பால் வருவதாய்க் காணப்பட்டது. தானும் தன் குதிரையும் தனிமையாய் வந்ததைப்பற்றி விசாரப்பட்டுக் கொண்டு நாலா பக்கமும் பார்த்தான். பயம் உண்டாயிற்று. பார்க்கப் பார்க்க பயம் அதிகரித்தது. நினைக்க நினைக்க வருத்தம் மேலிட்டது. ரொம்ப தூரம் அதிவேகமாய் வந்ததினால் ச்ரமம் மிகவும் அதிகமாயிருந்தது. மனஸை ஒருவிதமாய் தேற்றிக்கொண்டு, குதிரையை விட்டு இறங்கி, அதை ஒரு மரத்தில் கட்டினான். தானும் வேண்டிய மட்டும் தீர்த்தத்தை பானம் செய்துவிட்டு அந்த மரத்தடியிலேயே இளைப்பாறினான். ராஜாவின் பின் வந்த ஸைன்யத்துக்கு கொஞ்ச தூரம் வந்த பிறகு எந்த வழியாய் ராஜகுமாரன் போனானென்பது விளங்கவில்லை. வழிகள் பலவாறாய்ச் சென்றன. ஒன்றும் தெரியாமல் கடைசியாய் அந்த இடத்திலேயே ராஜகுமாரனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு, நின்றுவிட்டது. ஸைன்யத்தின் விசாரம் ராஜகுமாரனைக் காணோமே என்பது. ராஜகுமாரனின் விசாரம் இன்னும் ஸைனயம் வந்து சேரவில்லையே என்பது. "என்ன செய்வோம். தனிமையாய் இந்த பயங்கரமான காட்டில் அகப்பட்டுக் கொண்டு விட்டோமே. இனி தப்பிப் பிழைத்தால்தான் நிஜம். அதுவரை நிச்சயமில்லை" என்று தன் மனஸுக்குள்ளே அரச குமாரன் தீர்மானித்து விட்டான்.

இவன் பலவாறாக யோசித்துக் கொண்டு ச்ரம பரிகாரம் பண்ணுமளவில், இடியைக் காட்டிலும் அதி பயங்கரமான ஒரு சப்தம் கேட்டது. உடனே திடுக்கிட்டு, உள்ளம் பதறி, நாக்கு உளறி, ஒன்றும் தெரியாமல் கண்களைத் திறந்து பார்க்குமளவில், ஒரு பயங்கரமான புலியானது தன்னை நோக்கி சற்று



தூரத்தில் வருவதைப் பார்த்தான். என்ன செய்வதென்று தோன்றவில்லை. உடனே அந்த மரத்தின்மேலே ஏறி ஒளிந்துகொள்ளலாமென்று நினைத்து, உடனே ஏறிக் கொண்டான். குதிரையானது பயந்து அதிக விரைவாக ஓட்டம் பிடித்து வந்த வழியே போய் விட்டது. புலிக்கு அது அகப்படவில்லை.

மரத்தின்மேல் ஏறினதும் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தான். ஒரு கரடி அவ்விடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தது. அவனைப் பார்த்ததும் அது அவனை நோக்கி வந்தது. அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இந்த ஸ்திதியிலிருக்கும் ராஜகுமாரனைப் பார்த்து மிகவும் பரிதபித்து ஆபத்தில் உதவி செய்யும் அன்பனைப்போல் ஸமீபத்தில் வந்து கைகளை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது. பிடித்துக் கொண்டதும் ராஜகுமாரனுக்கு பயம் அதிகரித்து விட்டது.

கரடி—"ஹே ராஜகுமாரா! நீ பயப்படாதே. நான் உனக்கு ஒருவிதமான தீங்கும் செய்ய மாட்டேன்" என்றது. ராஜகுமாரன், "கரடி, நீ ஜனங்களைக் கொன்று ஜீவிக்கும் ஒரு வித துஷ்ட ம்ருகம். என்னுடைய விதிவசத்தால் நான் உன்னிடம் அகப்பட்டுக் கொண்டேன். நீயாக தயவுசெய்து விட்டாலும் சரி, அல்லது கெடுதல் செய்தாலும் சரி." என்றான்.

கரடி.-"சரணமென்று அடைந்தவனைவிட்டு விடக் கூடாது. நான் துஷ்ட ம்ருகமாயிருந்த போதிலும், நீ என்னை சரணமென்று அடைந்தபடியால் என் உயிரைக் கொடுத்தாவது உன் உயிரை காப்பாற்றுகிறேன். கொஞ்சமாவது பயப்படாமலிரு" என்றது. இதைக் கேட்ட ராஜகுமாரன் கரடியைத் தஞ்சமாக எண்ணி சீக்ரம நித்ரைபோய் விட்டான். நித்ரையுடன் கூடி யிருந்த ராஜகுமாரனை மிகவும் ஜாக்ரதையாய்க் கரடி ரக்ஷித்தது. இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த புலியானது, மரத்தடியிலிருந்து சொன்னதாவது. "ஹே, கரடியே, நீயும் காட்டில் வசிக்கும் ஒரு ஜந்து. நானும் அப்படியே. நாம் இருவரும் மனிதர்களைக் கொன்று காட்டில் வசிக்கும் துஷ்ட ஜந்துக்கள். நாமிருவருக்கும் மனுஷ்யர்கள் ஸ்வபாவமான விரோதிகள். அப்படியிருக்க நீ இந்தப் பிரகாரம் அவனை ரக்ஷிப்பது நமக்கே கெடுதலாய் முடியும்."

கரடி.—"ஹே, புலியே, நீ சொல்வதெல்லாம் உண்மையே. சரணமடைந்தவன் எப்பேர்ப்பட்டவனா யிருந்தபோதிலும் அவனை விட்டுவிடக் கூடாது. தன்னுடைய நேர் விரோதியான ராவணனுடைய தம்பியாகிய விபீஷணர் சரணமடைந்தபோது, ஸ்ரீராமர் அவருக்குக்கூட அபயம் கொடுக்கவில்லையா? மேலும் யார் ஒருவன் விச்வாஸ த்ரோஹம் செய்தாலும், நம்பிக்கை த்ரோஹம் செய்தாலும், இவ்விருவர்களும் சந்த்ர ஸூர்யர்களிருக்கும் வரையில் நரகத்திலே கிடக்கிறார்கள் என்று பலவாறாய் சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. ஆகையினால் நான் என் ப்ராணனைக் கொடுத்துக்கூட அவனை ரக்ஷிக்கப் போகிறேன்" என்றது.

புலி பலவாறாகக் கரடியினிடத்தில் வாதாடியும் ஒன்றும் பயன்படவில்லை. இதற்குள் ராஜகுமாரனும் விழித்துக்கொண்டான். ராஜகுமாரன் விழித்துக் கொண்டதைப் பார்த்து, கரடியானது தான் மிகவும் களைத்திருப்பதாயும், கொஞ்சம் தூங்கப்போவதாயும் தெரிவித்துவிட்டு, ராஜகுமாரனை ஜாக்ரதையாயிருக்கும்படி சொல்லிற்று. ராஜகுமாரனும் ஒத்துக்கொண்டான். கரடி தூங்கிவிட்டது. ராஜகுமாரனைப் பார்த்து புலி, கரடியைக் கீழே தள்ளிவிடும்படியாயும், அப்படிச் செய்தால கரடியைத் தான் தின்று போவதாயும், ராஜகுமாரனும் க்ஷேமமாய் ஊர்போய்ச் சேரலாமென்றும் தெரிவித்தது. இந்த உபாயம்

ராஜகுமாரனுக்கு மிகவும் சரியாகவே தோன்றிற்று. உடனே கரடியைத் தள்ளினான். அது திடுக்கிட்டு விழித்துக்கொண்டு மற்றொரு கிளையைப் பிடித்துக்கொண்டுவிட்டது. கீழே விழவுமில்லை. அதைப் பார்த்த ராஜகுமாரனுக்கு பயம் ரொம்பவும் அதிகமாயிற்று. கண்டபடி புலம்பவும் அழவும் ஆரம்பித்தான். கரடிக்கும் கோபம் வந்தது. அந்த ராஜகுமாரனை கண்டபடி பேசி "நீ செய்த பாபங்களின் பலனை, நீயே அனுபவிக்க வேண்டும். நீ பயப்படுவதில் ப்ரயோஜனமில்லை. ஆகையினால் நீ 'ஸஸேமிரா' என்று சொல்லிக்கொண்டே பிசாசுகளைப் போலத் திரியவேண்டும்" என்று சொல்லிவிட்டு, மரத்திலிருந்து கீழே யிறங்கிப் போய்விட்டது. புலியும் தன் இருப்பிடம் போய்விட்டது. பொழுது விடிந்ததும் ராஜகுமாரன் "ஸஸேமிரா" என்று சொல்லிக்கொண்டே திரியலானான். குதிரையானது புறப்பட்ட இடத்திற்கு யஜமானில்லாமல் வந்ததைக் கண்ட ஸைன்யங்கள் ராஜகுமாரனுக்கு ஏதோ ஒரு ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி, மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு அரசனிடம் போய் நடந்த ஸமாசாரத்தைத் தெரிவித்தன. அவற்றைக் கேட்ட அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. புலம்பினான். அழுதான். யார் என்ன ஸமாதானம் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வாடினான். தன் உயிரை விட்டுவிடுவது நல்லதென்று கதறினான். மந்த்ரி இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு ஜயபாலன் வேட்டையாடச் சென்ற மார்க்கத்தை நோக்கி அவனைத் தேடப் புறப்பட்டான். அரசனும் கூடவே சென்றான். அவனுக்கு ஒரு க்ஷணங்கூட தனிமையாயிருக்கத் தோன்றவில்லை. ரத, கஜ, துரக, பதாதிகளுடன் கூடின ஸைன்யங்கள் கூடச் சென்றன. வெகுதூரம் அலைந்து திரிந்து கடைசியாய், பைத்யம் பிடித்து "ஸஸேமிரா" என்று சொல்லிக் கொண்டே திரிகிற பையனைப் பார்த்தார்கள். ஒரு விதத்தில் ஆனந்தமும், மற்றொரு விதத்தில் அளவில்லாத துக்கமும் உண்டாயிற்று. எல்லாருக்கும் ராஜகுமாரன் உயிருடன் அகப்பட்டு விட்டான் என்ற ஸந்தோஷம் மட்டிலும் அதிகமாயிருந்தது. அவனை ஊருக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். நாளுக்கு நாள் பையனைப் பார்க்கப்பார்க்க அரசனுக்கு வருத்தம் அதிகமாயுண்டாயிற்று. "சாரதானந்தரிருந்தால் அதிசீக்ரத்தில் ஒரு உபாயத்தைச் சொல்லி வ்யாதியை குணமாக்கி விடுவாரே. அவரை யோசியாமல் கொன்று விட்டோமே" என்று வருத்தப்பட்டான். மந்த்ரியினிடத்தில் கடைசியாய் எப்படியாவது இந்த வ்யாதியை குணமாக்குகிறவர்களுக்கு ராஜ்யத்தில் பாதி கொடுக்கத் தயாராயிருப்பதாய் எல்லாருக்கும் தெரிவிக்கும்படிக்கு கட்டளையிட்டான். மந்த்ரி இதையெல்லாம் தன் வீட்டில் ஒளிந்துகொண்டிருக்கும் சாரதானந்தரிடம் தெரிவித்தான். தான் அதை சீக்ரம் ஸ்வஸ்தப் படுத்துவதாய் அரசனிடம் போய் தெரிவிக்கும்படிச் சொன்னார். மந்த்ரி தன் வீட்டில் ஒரு பெண் வந்திருப்பதாயும் அவளுக்கு உத்தரவு கொடுத்தால் அவள் இதை குணப்படுத்துவதாக சொல்லுகிறதாயும் சொன்னான். அதைக் கேட்ட அரசன் மிகவும் உத்ஸாஹத்துடன் அவளை உடனே அழைத்து வரும்படி ஆஜ்ஞாபித்தான். உடனே ஸதஸில் ராஜகுமாரனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். சாரதானந்தர் என்ற பெண்ணை நடுவில் ஒரு திரைக்குள்ளே ஒருவருக்கும் தெரியாமல் மந்த்ரி உட்கார வைத்தான். உடனே பெண் வேஷம் பூண்ட சாரதானந்தர் ராஜகுமாரனை நோக்கி பின்வரும் ச்லோகத்தைச் சொன்னார்.



1. ஸத்பாவம் ப்ரதி பன்னானாம்
வஞ்சனே கா விதக்ததா।
அங்கமாருஹ்ய ஸுப்தானாம்
ஹனனே கிம்னு பௌருஷம் ॥

(தாத்பர்யம்.) நல்ல ஸ்வபாவத்தை அடைந்தவர்களை வஞ்சிப்பதில் என்ன கெட்டிக்காரத்தன மிருக்கின்றது? (அவர்கள் சொன்னதை எல்லாம் சரி என்றே எண்ணப்பட்டவர்கள்.) நீயே சரணமென்று அடைந்து மடியின் மேல் தூங்குகிறவனை கொல்லுவதில் என்ன கெட்டிக்காரத்தன மிருக்கிறது (ஒன்றுமில்லை என்பது கருத்து).

அதைக்கேட்டதும் ராஜபுத்ரன் 'ஸ' என்கிற பதத்தை விட்டுவிட்டு "ஸேமிரா" என்றான். அதன் பிறகு சாரதானந்தர் பின்வரும் ச்லோகத்தைச் சொன்னார்.

2. ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய
கங்கா ஸாகர ஸங்கமம்।
ப்ர்மஹத்யா ப்ரமுச்யேத
மித்ர த்ரோஹீ ந முச்யதே ॥

(தா-ம்.) என்ன பாபங்கள் செய்தாலும் ப்ராயசித்தம் உண்டு. ரொம்பவும் கெடுதலான ப்ர்ம்ம ஹத்யாதி பாபங்களை செய்தாலும் கூட, ஸேதுக் கரையையும், கங்கா நதியும் ஸமுத்ரமும் சேருகிறதையும் கண்டுவிட்டால், பாபம் போய்விடும். ஆனால் மித்ர த்ரோகமாகிற பாபத்துக்கு ப்ராயசித்தம் கிடையவே கிடையாது.

இதன் மேல் ராஜகுமாரன் இரண்டாவது அக்ஷரமாகிற 'ஸே' என்கிறதை விட்டுவிட்டு "மிரா" என்று சொல்லத்தொடங்கினான். அரசனுக்கு இதற்குள்ளே அளவற்ற உத்ஸாஹம் உண்டாயிற்று. மறுபடியும் சாரதானந்தர் இன்னொரு ச்லோகத்தைச் சொன்னார். அது வருமாறு.

மித்ர த்ரோஹீ க்ருதக்னச்ச
யச்ச விச்வாஸ காதக:।
த்ரயஸ்தே நரகம் யாந்தி
யாவச் சந்த்ர திவாகரௌ ॥

3. மித்ரனுக்கு த்ரோகம் செய்கிறவனுக்கும், செய்த நன்றியை மறக்கிறவனுக்கும், நம்பிக்கைத் துரோகம் செய்கிறவனுக்கும், ஸூர்ய சந்த்ரர்களிருக்கிறவரையில் நரகமுண்டு. அவர்கள் எப்பொழுதும் நரகத்திலேயே யிருப்பார்கள். அவர்களுக்கு மோக்ஷமே கிடையாது.

இதைக் கேட்டதும் ராஜ குமாரன் 'மி' என்பதை விட்டு விட்டு 'ரா' என்று சொன்னான். சாரதானந்தர் நாலாவதாக ஒரு ச்லோகத்தைச் சொன்னார். அது வருமாறு.

ராஜன் போஸ்தவ புத்ரஸ்ய
யதி கல்யாண மிச்சஸி।
தானம் தேஹி த்விஜா திப்யோ
வர்ணானாம் ப்ராமணோ குரு: ॥

4. ஹே, அரசனே! உன் பிள்ளைக்கு மங்களம் உண்டாக ஆசைப்படுவாயானால், ப்ராமணர்களின் பொருட்டு யதேஷ்டமாய் தான தர்மம் செய்யவேண்டும். ஏனென்றால், ப்ர்ம்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களாகிய நாலு வர்ணங்களிலும் ப்ராமணர்களே உத்க்ருஷ்டமானவர்கள்.

இதைக் கேட்டதும் ராஜகுமாரன் 'ரா' என்று சொல்வதை விட்டு விட்டு எல்லாரையும் போலப் பேசத் தொடங்கினான். உடனே நடந்த வ்ருத்தாந்தத்தை அரசனிடம் தெரிவித்தான். அரசனும் அந்தப் பெண் யாரென்று பார்க்குமளவில், சாரதானந்தரென்று தெரிந்தது. மந்த்ரியினிட மிருந்து சாரதானந்தருடைய வ்ருத்தாந்தத்தையும் தெரிந்து கொண்டான். உடனே அரசன் சாரதானந்தரை நோக்கி, எப்படி இந்த வ்ருத்தாந்தங்களெல்லாம் அவருக்குத் தெரிந்ததென்று கேட்க அவர் ஈச்வரானுக்ரஹத்தால் தனக்குத் தெரிய வந்ததென்றும் அதேமாதிரித் தான் பானுமதியின் மர்ம ஸ்தானத்திலுள்ள மச்சமும் தெரியவந்ததென்றும், அறிவித்தார். உடனே அரசனும், ஜயபாலனும், பானுமதியுடன் ஸாஷ்டாங்கமாய் சாரதானந்தரை நமஸ்காரஞ்செய்து, அவருடைய அனுக்ரகத்தைப்பெற்று, வெகுகாலம் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்கள். எல்லாரும் க்ஷேமமாயிருந்தார்கள்.

கே. டி. ஸுந்தரராஜ ஆச்சாரியார்.

# AMERICAN ALOE.

By M. P. ARABI MAHAMMAD ABDUL KADER.

## ரெயில் கற்றாழை.

### பயிரின் ஸ்வபாவம்.

இதை நாருக்காகவும் தோட்ட வேலிக்காகவும் பயிர் செய்யலாம். இது சாகுபடி செய்யப்படாமல் தானாகவே ஏராளமாய் வளருகிறது. அநேகமாய் எல்லாக் கற்றாழைகளிலிருந்தும் நார் எடுத்தாலும், இந்தக் கற்றாழையில்தான் நார் மிகுதியாய் எடுக்கலாம்.

### விளையக்கூடிய பூமி.

இது எல்லா பூமிகளிலும் வளர்ந்தாலும், செவ்வல், கரிசல் முதலிய இடங்களில் நன்றாய் வளரும். எல்லாவற்றிலும் களிமண் பூமிதான் மிகவும் நல்லது. இதை நிழலிலும்கூட சாகுபடி செய்தாலும் வளரும். ஆனால், கற்றாழைக்கு ஸூர்ய வெளிச்சம் நன்றாய்ப் படாவிட்டால் மடல்கள் சற்று சிறந்து வளரும்.

### வேலியைப் பக்வப்படுத்தல்.

முக்யமாய் வேலிக்காக நடுவதானால், வயலைச்சுற்றி 4, 5 அடி உயரமுள்ள கரைபோட்டுக் கரைகளின்மேல் கற்றாழைக் கிழங்குகளை 3½ அல்லது 4, அடிக்கு ஒரு கிழங்காய் இடைவிட்டு நடவேண்டும். இரண்டுமுழ நீளமுள்ள கரைபோட 1½ அணா செலவாகும். இதை வேலிக்கல்லாமல் நாருக்காகவே சாகுபடிசெய்யும் பக்ஷத்தில், நிலத்தை உழுது, 2 அடி ஆழமுள்ள குழிதோண்டி அக் குழிகளில் உரமிட்டுக் கிழங்குகளைப் பதிய மிடவேண்டும். நடும்பொழுது 7 அடிக்கு ஒரு குழிதோண்டி நடவேண்டும்.

### நாரெடுத்தல்.

இதை நட்ட 2½ அல்லது 3 வர்ஷத்தில் மடல்கள் அறுப்பதற்குத் தயாராகும். ஆனால் 4, 5, வர்ஷங்களில் இதை அறுப்பதுதான் நன்று. பிறகு 10 மாஸத்திற்கு ஒருதரம் மடல்களை அறுக்கலாம். 6-வது வர்ஷத்தில் 100 மணங்கு மடல்களிலிருந்து 2½ மணங்கு நார் எடுக்கலாம். முற்றாத மடலிருந்து குட்டையான நார் கிடைக்கும். ஒரு மடல் ஸுமார் 2½ ராத்தல் நிறை இருக்கும். ஒருமடலை 2,3, பங்காய் நீளத்தில் கிழித்துக்கொள்ளவேண்டும். ஒருமுழ நீளமும் 4 அங்குல அகலமுமுள்ள ஒரு மூங்கிற்பட்டையின் ஒரு பக்கத்தைக் கத்தியின் அறுக்கும் பக்கத்தைப்போல் சீவி, ஒரு இழைமை சுமார் ¾ கெஜம் நீளம் 8 அங்குல அகலம் 4 அங்குல கனமும் உள்ள பலகையின் பேரில்வைத்து, கற்றாழையின் ஒரு நுனியை வலதுகால் பெருவிரலால் அமிழ்த்திப் பிடித்துக்கொண்டு அந் மூங்கிற்பட்டையின் கூரான பக்கத்தைக் கற்றாழையின்பேரில் வைத்து அழுத்தித் தள்ளத்தள்ள, மேலிருக்கும் சோறு போன்ற பாகமெல்லாம் நீங்கி வெண்மையான நார் காணப்படும். அதைவெயிலிற் காயவைத்துக் கயிறுகளாகத்திரித்து உபயோகிக்கலாம். கோணிப்பையைத் தைக்கும் மெல்லிய கயிறுகளாகவும் திரிக்கலாம்.

### நாரெடுக்க இன்னொரு முறை.

நிற்க. இந்த மடல்களை 10, 15 நாள் தண்ணீரில் ஊறப்போட்டு அழுகினபின் எடுத்துக் கல்லின்பேரில் வேஷ்டி துவைப்பதுபோல் துவைத்தும் நார் எடுக்கலாம். இந்தக் கற்றாழையின் சாறு நமது தேகத்தில் பட்டால் அரிப்பை யுண்டாக்குமாதலால், சற்று ஜாக்ரதையுடனிருந்து வேலை செய்யவேண்டும். ஆனால் இந்த அரிப்பு ஸுமார் இரண்டுமணி நேரத்திற்குள் மாறிவிடும். முதலில்சொல்லிய முறைப்படி எடுக்கப்பட்ட நார் சற்று உயர்ந்தது. லண்டனில் ஒருடன் நார் ஸுமார் 375 ரூபாய்க்கு விலைபோகிறதாம். தண்ணீரில் ஊறவைத்து எடுத்த நார் ஸுமார் 150 ரூபாய்க்கு விலைபோகிறதாம். இந்த நாரை யந்த்ரங்களைக்கொண்டும் எடுப்பதுண்டு. இதிலிருந்து எடுக்கப்படும் நார் விலை ஜாஸ்தி. ஒரு பவுண்டு நார் ஸுமார் 2½ அணாவிற்குக் கிடைக்கும்.

### இதன் உபயோகம்.

கற்றாழை நார் விவஸாயத்துக்கு ஏற்றதாய் பயிர்களுக்குத் தண்ணீர் இறைக்க மிகவும் கெட்டியான வடமாக உபயோகிக்கப்படுகிறது. கோரைப்பாய் நெய்ய உதவுகிறது. கற்றாழை வேலிக்கு பலமான அடைப்பாகிறது. இதை உத்தேசித்தே இருப்புப்பாதைகளின் இருபக்கங்களிலும் வைத்து உண்டாக்கி யிருக்கிறார்கள்.

எம். பி. அரபு முகம்மது அப்துல் காதர்.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### BRINJAL.

### கத்தரிச் செடி.

இதன் சாகுபடி விஷயமாக 'தொழில்' பத்ரிகையில் ஒரு வ்யாஸம் வெளிவந்துள்ளது.

ஸாதாரண தோட்டக்கால் பயிரில் கத்தரியானது மழை கால ஆரம்பத்திலும் ஸெப்டம்பர் மாஸமுதல் நவம்பர் மாஸம் வரையிலும் விதைக்கப்படுகிறது. செடிகளை 1½ முதல் 2 அடி தூரத்துக்கு ஒன்றாக நடுவது வழக்கம். ஸாதாரணமாக கத்தரிப் பயிர் ஆகஸ்ட் மாஸத்தில் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். அது முதல் குளிர்காலம் கடைசி வரையிலும் பலித ஸ்திதியிலேயே இருக்கிறது. அந்தக் காலத்தில் வேறு பயிர்கள் பலன் கொடுக்காததனால், மூன்று மாஸ கால பர்யந்தம் அதுதான் காய்கறிக்கு ஆதாரமாகிறது.

### நிலம்.

உயர்ந்ததும் நன்றாய் நீர் வடியக்கூடியதுமான மணல் பாங்கான நிலமே கத்தரி சாகுபடிக்கு உத்தமமான பூமியாகும். களிமண் நிலத்தில் செடியும் காயும் உருவத்தில் சிறந்திருக்கும். நல்ல வளமையான நிலத்தில் கத்தரிச் செடிகள் அதிக செழிப்பாய் வளர்ந்து அதிக மாஸமிலைக் கொடுக்கின்றன. சென்னை ராஜதானியில் கண்டங் கத்தரிக்காயென்று ஒரு வகை தானாகவே நிலத்தில் படர்ந்து பயிராகிறது. அது முட்களை யுடையது. காய்கள் கொத்துக்கொத்தாய்க் காய்க்கின்றன. முட்களுள்ளது. இந்த வகையிலேயே பயிராக்கப்பட்டப் பெரிய செடிகளும் உண்டு. அவைகளில் முட்கள் இல்லை. காய்கள் கொத்துக் கொத்தாய்க் காய்க்கின்றன. பெங்களூர் கத்தரிக்காய் என்பது காயின் ரூபத்திலேயும் ருசியிலேயும் நிறத்திலேயும் மற்றக் காய்களைவிட வேறாக இருக்கிறது. மேற்சொன்ன கண்டங்கத்தரிக்காய்கள் சுண்டைக்காய் ப்ரமாணந்தானிருக்கும். காய்கறிக்கு அவ்வளவு ச்ரேஷ்டமானதல்ல. பெங்களூர்க் கத்தரிக்காய்ப் பச்சை நிறமாயிருக்கிறது. மேற்பார்வைக்குப் பட்டை பட்டையாய் உப்பிக் கவிந்திருக்கிறது. கொஞ்சம் நீளவாட்ட மாயிருக்கிறது. சென்னை ராஜதானியிலுள்ள மற்ற கத்தரிக்காய்கள் பல வர்ணங்களுள்ளவை. சில வெள்ளை நிறமாய்ப் பருத்து நீண்டிருக்கின்றன. அவற்றில் வித்து அவ்வளவாயில்லை. சில சுத்த வெண்மையா யிருக்கின்றன ஆனால் அதிக விதையுள்ளன. சில கருஞ் சிவப்பாயிருக்கின்றன. ஆனால் வித்து காணப்படும். சில சிறு ராசியாய்க் கருப்பு நிறமாயிருக்கும். வித்து கொஞ்சமாயிருக்கும். சென்னைக்கடுத்த பூந்தமல்லிக் காய் ரோஜா ரங்கை உடையதாயிருக்கிறது. பார்ப்பதற்குக் கண்ணை கவரத்தக்கதா யிருக்கிறது. திருவள்ளூர் காய் அதிகப் பெரிதாயும் சதைப்பற்றாகவும், வித்துகள் சிறியனவாகவும் இருக்கிறது. வட தேசங்களில் தெலுங்கு ஜில்லாக்களில் முக்யமாய் நெல்லூரில் கத்தரிக்காய் ஏராளமாய்ப் பயிராகிறது. அவைகளை வற்றல் போட்டு, அகப்படாத காலத்திற்கு உபயோகமாகும்படி வைத்துக்கொள்ளுகிறார்கள். விற்பனைக்கு வெளியிலும் அனுப்புகிறார்கள். தென் தேசங்களில் தமிழ் ஜில்லாக்களில் கத்தரிக்காய் நீண்டதாய் அகப்படும். சிவப்பு வெண்மை நிறத்தையுடையதாயிருக்கும்.

### விதையும் நாற்றும்.

தங்கள் உபயோகத்திற்காக பயிர் செய்யும் குடிகள் ஸாதாரணமாய் முன் மாஸூலிலிருந்து விதையை சேகரித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். இதற்காக காய்களைப் பழுக்கும்படி விடுகிறார்கள். அவை பொன் போன்ற மஞ்சள் நிறத்தை யுடையனவாகின்றன. அவை முற்றினதும் அவைகளை அறுத்துச் சிறிது அழுக வைக்கிறார்கள். காய்களை மத்தியி லறுத்து 1-நாள் அல்லது 2-நாளைக்கு குவியலாய் வைக்கிறார்கள். பிறகு விதையை எடுத்து நீரில் கழுவி வெயிலில் உலர்த்துகிறார்கள். விதையை முதலில் பாத்தியில் நாற்று விடுகிறார்கள். அதற்குக் குளிர்ந்த நிழலான இடம் தேர்ந்தெடுக்கிறார்கள். நிலம் மணல் மிச்ரமமா யிருக்கவேண்டும். அந்த நிலத்தை அடிக்கடி உழுகிறார்கள். அல்லது மண்வெட்டியால் கொத்துகிறார்கள். மண் கட்டிகளை நன்றாய் உடைக்கிறார்கள். சாம்பல் கொட்டி மண்ணை வளப்பமாக்குகிறார்கள் நன்றாய் மட்கிப்போன சாணத்தையும் மாட்டுக் கொட்டகைத் தரையிலிருந்து எடுத்த மண்ணையும் சேர்த்து வளப்பமாக்குகிறார்கள். நிலமானது காற்று வீசப்பட்டதாகவும் ஸூர்ய உஷ்ணம்

தாக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டியது. பூமியானது நாற்றுக்காக நன்றாய் தயார் செய்யப்பட்ட பிறகு, அந்த இடத்தை ஐந்து சதுர அடியுள்ள சிறு பாத்திகளாகப் பிரிக்கிறார்கள். நாற்று விதைத்தல் மார்ச்சுமாதம் மத்தியிலிருந்து மேமாதம் மத்திவரைக்கும் நடக்கிறது. விதைகள் முளைக்கப் போதுமான ஈரம் நிலத்தில் இல்லாவிட்டால் (இந்தக் காலத்தில் ஸாதாரணமாய் ஜலம் இல்லாமற்போகிறது.) நிலத்திற்கு நீர் பாய்ச்சுகிறார்கள். அதிகமாயுள்ள ஈரம் வற்றிப்போனதும் ஸாயங்காலத்தில் விதையை ஜாக்ரதையாய் விதைக்கிறார்கள். கூடியவரையில் விதையை ஸமப்பரவலாய் விதைக்கவேண்டும். அதைக் கொஞ்சம் மூடிவைக்கவேண்டும். கத்தரி நாற்று அதிக நெருக்கமாய் உண்டாகிறது. ஒரு அவுன்ஸ் விதை 1000 நாற்றை உண்டாக்கும். ஒரு ஏகருக்கு 8 அவுன்ஸ் விதை வேண்டியிருக்கிறது. சில நாள் வரைக்கும் அந்த பூமிக்கு ப்ரதி மாலையும் நீர் பாய்ச்சவேண்டியது அவச்யமாகும். ஆனால் அதிக ஈரம் இருக்கக்கூடாது. நாற்று விடுகிற இடம் அதிக ஸூர்ய வெப்பம் படத்தக்கதா யிருந்தால், பூமியை ஈச்சம் ஓலையாலாவது அல்லது வைக்கோலினாலாவது மூடவேண்டும். நாலைந்து தினத்தில் முளை கிளம்பும். எத்தனை தடவை நீர் வேண்டியிருக்கிறதோ அத்தனை முறையும் நீர் பாய்ச்சிக்கொண்டே இருக்கவேண்டும். அதிக மழை பெய்தால் ஜலத்தை வடியவிட ஏற்பாடு செய்யவேண்டும். நிலம் சரியாய்த் தயார் செய்யாதிருந்தால், களை பிடுங்குவது அவசியமாகும். நாற்றுகள் சில வேளைகளில் அநேக ஜந்துக்களால் நாசத்தை அடைகின்றன.

### நிலம் கோத்தல்.

கத்தரி நாற்று நடவேண்டிய நிலத்தை நன்றாய் மண்வெட்டியால் கொத்தி, மண்ணைக் காற்றாடவிட வேண்டும்.

### நாற்றுப் பிடுங்கி நடல்.

வயலைச் சுற்றிலும் மடை வெட்டுகிறார்கள். வயல் அதிக நீளமுள்ளதாயிருந்தால், அதன் குறுக்காய் சில நீர்க் கால்வாய்கள் வெட்டப்படுகின்றன. பிறகு மண்வெட்டியால் 36 அங்குலம் விட்டுப் பாத்தி கோலுகிறார்கள். இந்தப் பாத்தியின் அடியில் தோண்டப்பட்ட பள்ளங்களில் கத்திரி நாற்றை ஸுமார் 30 முதல் 36 அங்குலம் வரையில் விட்டுவிட்டு நடுகிறார்கள். கூடுமானால் நல்ல மழை பெய்த பிறகு நாற்றுகளை நட வேண்டும்.

### எருப் போடல்.

சாணத்தை எருவாகப் போடும்போது அது நன்றாய் மட்கி யிருக்கவேண்டும். பின்னாக்கு எரு போடுவதாயிருந்தால், ஒவ்வொரு செடிக்கும் தனித்தனியாய் பரப்பவேண்டும். வயல் முழுவதிலும் பரப்புவதில் ப்ரயோஜனமில்லை. எருவும் சாணமும் புதிதாயிருந்தால், செடியின் இலை வளர்ச்சியை வ்ருத்தி செய்து, பலமளிக்கும் சக்தியை அடக்கிவிடும்.

செடிகள் வேர் ஊன்றினதும் வரிசைகளுக்கு மத்தியிலுள்ள இடத்தை மண்வெட்டியால் கொத்தி விட வேண்டும். பின்பு இரண்டு வாரம் கழித்து இரண்டாவது முறை கொத்தவேண்டும்.

## METEORS.

### பூமியில் விழும் நக்ஷத்ரங்கள்.

ஸாதாரணமாக க்ருஷ்ண பக்ஷத்தில் ராக்காலங்களில், இருண்டு, நக்ஷத்ர மண்டலம் ஜ்வலித்துக் கொண்டிருக்கும். இந்த நாட்களில் ஆகாயம் தெளிவாயிருக்கும்போது, திடீரென்று நக்ஷத்ரம் போன்ற வஸ்துக்கள் நமது பூமிக்கு ஸமீபத்தில் ஓடிவந்து கீழே விழுவனவாகக் காணப்படுவதை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். இவை என்ன ஆச்சர்யத்தை விளைவிக்கின்றன !

இவை திடீரென்று கிளம்பி பூமி மார்க்கமாய் ப்ரகாசத்துடன் வந்து, பிறகு அணைந்து போகின்றன, அல்லது அழிந்து போகின்றனவென்றே சொல்லலாம். இவைகள் செல்லும் போது இவைகளுக்குப் பின்னால் ப்ரகாசமான வால்போன்ற ஜோதி காணப்படுவதுண்டு. இந்த வாலும் அழிந்து கொண்டே வந்து கடைசியில் மறைகிறது. எல்லாம் க்ஷணத்தில் மறைகின்றன. இவைகளுக்குத்தான் விழும் நக்ஷத்ரங்கள் அல்லது உதிர் நக்ஷத்ரங்கள் என்று பெயர். உல்கங்கள் என்றும் சொல்லுவதுண்டு. இவைகளைப்பற்றி ஸமீபத்தில் வெளிவந்த "விவேகபோதினி"யில் ஒரு வ்யாஸம் எழுதப்பட்டுள்ளது.

இவைகள் அழிகிறதற்கே உண்டாகின்றனபோலும்; பிறந்தவுடன் இறக்கின்றன. இவைகளைப் பார்ப்பது பாவமென்றும், தோஷமென்றும், இவைகளைப் பார்த்தவுடன் பச்சை மரங்களையும் செடிகளையும் பார்க்க வேண்டுமென்றும் சொல்லுவ



துண்டு. புண்யம் செய்த மனிதர்களின் ஆத்மாக்கள் இப்படி ஜோதி ரூபமாய் வெளிக் கிளம்புகின்றன வென்றும் சிலர் சொல்லுவதுண்டு.

இவைகள் என்ன ! எங்கிருந்து வருகின்றன ? சிற்சில வால் நக்ஷத்ரங்கள் வெடித்துச் சிதறி, சிறிய துண்டுகளாகின்றன. இந்தச்சிறு துண்டுகள் மிகவேகத்துடன் அந்த வால் நக்ஷத்ரங்களின் பாதைகளிலேயே சுற்றுகின்றன. இவைகள் ஸ்வபாவத்தில் மிக ப்ரகாசமான வஸ்துக்களல்ல. சில ஸமயங்களில் இவை பூமிக்கு ஸமீபத்தில் வரும்போது, இவை அதிக வேகத்துடன் ஓடுவதால் பூமியின் ஆகாயமண்டலத்தில் அறைபடுகின்றன. அதாவது வாயுமண்டலத்தின் காற்றோடு மோதுகின்றன. இரண்டு வஸ்துக்களை ஒன்றோடு ஒன்று தேய்த்தால், உஷ்ணமுண்டாகுமென்பது நமக்குத் தெரிந்த விஷயம். இந்த உஷ்ணத்தால் இந்த வஸ்துக்கள் ஆவியாக மாறி எரிகின்றன. இதன் ப்ரகாசந்தான் நமக்குத் தெரிகிறது. சில வஸ்துக்கள் முழுவதும் எரிய கீழே யொன்றும் விழாமலிருக்கும். சில எரிந்த பிறகு கீழேவிழும். சாம்பலில் கொஞ்சம் இரும்பும், நிக்கலும், கரியும் சேர்ந்திருக்கின்றன. இம்மாதிரி நக்ஷத்ரங்கள் ஒரு வர்ஷத்தில் கோடிக்கணக்காக விழுகின்றன. இவை இரவில் மாத்ரம் விழுகின்றனவென்று நினைக்க வேண்டாம். பகலிலும் விழுகின்றன. ஆனால் ஸூர்ய ப்ரகாசத்தால் கண்ணுக்குத் தெரிவதில்லை.

சில ஸமயங்களில் இவை கும்பலாய் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து நக்ஷத்ர மாரியாகப் பெய்வதுண்டு. இவை ஸாதாரணமாக 50 முதல் 150 மைல் உயரத்திலிருந்து நமக்குக் காணப்பட்டு, பூமிக்கு ஸுமார் 20 அல்லது 25 மைல் உயரத்திலிருக்கும்போதே மறைந்துவிடுகின்றன. நக்ஷத்ர மாரி உண்டாகும் போது, இவை ஓரிடத்திலிருந்து கிளம்புகின்றன. இம்மாதிரி நக்ஷத்ரங்கள் விழுவதை நாம் தினம் பார்த்தபோதிலும், ஒவ்வொரு வர்ஷத்திலும் சில தினங்களில் மாத்ரமே இவை விசேஷமாக விழுகின்றன. ஸாதாரணமாக நவம்பர் மாஸம் 13-ம், 14-ம் தேதிகளிலும், ஆகஸ்டு மாஸம் 10-ம்தேதிமுதல் 12-தேதி வரையிலும் இவை அதிகமாக விழுகின்றன. அப்பொழுது இவை ஒவ்வொரு இரவிலும் நூற்றுக்கணக்காய் விழுவதைப் பார்க்கலாம். இவைகள் நமது வெறுங் கண்ணுக்குத் தெரிந்து விழும்நக்ஷத்திரங்கள். நாம் தூரத்ருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் இவை கணக்கில்லாமல் விழுவதைப் பார்க்கலாம். இவை அற்புதக் காட்சியே !

இவற்றுள் பெரியவை சில ஸமயங்களில் வெடித்துச் சிதறுவதுண்டு. அப்பொழுது அவற்றின் துண்டுகள் பூமியில் விழும். இம்மாதிரி பூமியில் விழுந்தவை பூமியிலுள்ள கற்கள்போலவேயிருக்கும். இப்பேர்ப்பட்ட கற்களை ஆகாசக் கற்கள் என்று சொல்லலாம்.

## PREVENTION OF INFECTION.

### தொற்று வ்யாதிகளைத் தடுப்பதற்கான முறைகள்.

ஜனங்களுக்குள் ஸுகாதாரக் குறைவாலும், ஜாக்ரதைக் குறைவாலும் தொற்று நோய்கள் பல பரவி, அவற்றின் காரணமாக ஏராளமாக ஜனங்கள் மாண்டு போகிறார்கள். தொற்று நோய்கள் பலவற்றுள் குடல் ஸம்பந்தமான நோய்களைத் தடுப்பதற்கான முறைகளுள் சிலவற்றைக் கீழே குறிப்பிடுவோம்:—

(1) நோய்கண்ட பிணியாளியை உடனே மற்ற பந்து மித்ரர்களிடமிருந்து பிரித்துத் தனியாக ஒரு அறைக்குள் வைக்கவேண்டும்.

(2) பிணியாளியிருக்கும் அறையானது நல்ல காற்றோட்டமுள்ளதா யிருக்கவேண்டும். அறையின் ஜன்னல்களைத் திறந்தே வைக்கவேண்டும். பகலில் அறைக்குள் போதுமான ஸூர்ய வெளிச்சம் தங்கவேண்டும்.

(3) அறைக்குள் வ்யாதி க்ருமிகளைக் கொண்டு வந்து சேர்க்கும் ஈக்கள் முதலியன வராமல் தடுப்பதற்கு, அறையின் கதவை மூடியாவது அல்லது திரை போட்டாவது வைக்கவேண்டும்.

(4) பிணியாளி இருக்கும் அறையின் தரையைத் தினந்தோறும் லோஷன் முதலியனவற்றைக் கொண்டு சுத்தம் செய்யவேண்டும்.

(5) அறையில் அவசியம் தேவையான ஸாமான்களைத் தவிர வேறொன்றும் இருக்கலாகாது. ஸாமான்கள் அதிகமிருந்தால், பிணியாளிக்குப் பல அஸௌகர்யங்கள் நேரிடக்கூடும்.

(6) பிணியாளியைப் பராமரிப்பவர்கள், தங்கள் கைகால்களைச் சுத்தி செய்துகொள்வதற்காக அறையின் ஒரு மூலையில் லோஷன் வைத்திருக்கவேண்டும்.

(7) பிணியாளிக்கு உதவியாக அறையில் இரண்டு பேர்களுக்குமேல் இருத்தல் கூடாது. இவர்கள் பிணியாளியோடு கூடவே இருக்கவேண்டும் ;

வீட்டிலிருக்கும் மற்றவர்களோடு கலக்கக்கூடாது. அவ்விதம் கலக்க நேரிட்டால் தங்கள் கைகால்களை முதலில் ஸோப்பைக்கொண்டு சுத்தி செய்து, பிறகு லோஷனைக் கொண்டு கழுவவேண்டும்.

(8) பிணியாளிக்காக உபயோகப்படுத்தப்பட்ட பாத்ரங்கள் முதலியவற்றை மற்றவர்கள் உபயோகப்படுத்தக்கூடாது. இந்தப் பாத்ரங்களை ஒரு முறை பிணியாளி உபயோகித்துவிட்டால், வெந்நீரைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்ட பிறகே மறுபடியும் உபயோகிக்கலாம்.

(9) பிணியாளியால் கழிக்கப்படும் மலமூத்ராதிகளை அப்புறப்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் பாத்ரவகைகளைப் பிணியற்றவர்கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் உபயோகிக்கக் கூடாது.

(10) பிணியாளி உபயோகிக்கும் படுக்கை, துணி முதலியவற்றைக் கூடுமானவரையில் பரிசுத்தமாகவே வைத்திருக்கவேண்டும். இவைகள் உபயோகப்படுத்தப்பட்ட பிறகு, க்ருமிகளை நாசமாக்க உபயோகிக்கும் த்ரவத்தில் 6-மணிநேரம் வரை ஊறவைத்துப் பிறகு துவைத்து சுத்தி செய்யவேண்டும்.

(11) பிணியாளியினுடைய மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும் ஒழுகும் அல்லது சொட்டும் த்ரவத்தை ப்ரத்யேகமாக ஒரு மெல்லிய ஆடையால் துடைத்து, வெளியே ஜன ஸஞ்சாரமற்ற இடத்தில் எறிந்துவிடவேண்டும்; அல்லது தீயால் எரித்துவிடவேண்டும். அந்த த்ரவத்தைப் பிணியாளி தன்னுடைய படுக்கைத் துணியைக்கொண்டாவது, வேறு தான் உபயோகிக்கும் துணியைக்கொண்டாவது துடைக்கக் கூடாது.

(12) பிணியாளியோடு கூட இருப்பவர்கள் பிணியாளியால் வெளியிடப்படும் காற்றை ஒருபோதும் ச்வாஸிக்கக்கூடாது. இந்த அறையில் தங்கும் காற்றில் வ்யாதி க்ருமிகள் இருக்கக் கூடுமாதலால், பிணியற்றவர்கள் வெகு ஜாக்ரதையாக அங்கு இருத்தல் அவச்யம்.

(13) அன்யர்களை பிணியாளி இருக்கும் அறைக்குள் விடக்கூடாது. பிணியாளிக்கு நெருங்கின பந்துவாயிருந்தால், அவர்களைமாத்ரம் உள்ளே விடுவது உத்தமம்.

(14) அறையிலிருந்து பிணியாளியை வெளிப்படுத்தினபிறகு, அறையையும் அங்கிருக்கும் ஸாமான்களையும் க்ருமிகளை நாசமாக்கும் த்ரவத்தைக்கொண்டு நன்றாய் சுத்தி செய்யவேண்டும்.—ஜனோபகாரி.

## REVIEWS OF BOOKS.

## புஸ்தக விமர்சனம்.

"மரண பயம் வேண்டாம்."

இது மிஸ்டர் லெட்பீட்டர் எழுதிய ஒரு நூலை அனுஸரித்து ஆங்காங்கு பகவத்கீதை முதலிய ஆர்ய நூல்களிலிருந்து மேற்கோளுடன் எழுதப்பட்ட ஒரு வ்யாஸமாகும். இதில் ஆத்மா இறப்பதில்லையென்பதும், பழைய ஆடையைக் கழித்துப் புதிய ஆடையை உடுத்துவதுபோல ஆத்மாவானது ஒரு தேகத்தை விட்டு மறுதேகத்தை அடைகிற தென்பதும் இன்னும் வேறுபல அரிய விஷயங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு இரண்டு. வேண்டுவோர் மதுரை ப்ரும்ம ஞான மந்திரத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

காரைக்காலம்மை சரிதை.

இது வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசார்யார் இயற்றியது. காரைக்காலிலிருந்த சிவ பக்தரும் புனிதவதி என்னும் இயற்பெயர் கொண்டவரும், 63 நாயன்மாரில் ஒருவருமாகிய காரைக்காலம்மையின் சரித்ரம் பெரிய புராணத்தி லுள்ளபடி இதில் எளிய வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. சிறுவர் சிறுமியர் யாவரும் வாசிக்க வேண்டிய புஸ்தகங்களுள் இது ஒன்றாகும். இதன் விலை அணு 1. வேண்டுவோர் வேலூர் 'ஜனோபகாரி' ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

"கர்நாடக யோகினிக் கதை". நம்பர். 1.

இது பால ஸரஸ்வதி தேவ குஞ்சரியம்மாள் இயற்றியது. இதில் தேவதைகள் ஸம்பந்தமான 5 இனிய கதைகள் அடங்கியுள்ளன. இது சிறுவர் சிறுமிகள் படிக்கும்படியாக தெளிவான நடையில் எழுதப்பட்டுள்ளது. வித்யா இலாகாவால் அங்கீகரிக்கப்பட்டது. நான்காம் பதிப்பு இப்போது வெளியாகியிருக்கிறது. இதன் விலை அணு 5. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3. 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ் என்று எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

"சங்க நூல்களின் காலம்."

இது சென்னை பச்சையப்பன் கலாசாலை தமிழ்ச் சங்கத்தில் ப்ரொபஸர் எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் இங்க்லீஷில் செய்த ஒரு ப்ரஸங்கமாகும். ஏற்கனவே அவர் இது விஷயமாகச் செய்துள்ள ஆராய்ச்சிகளை இதில் நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். இங்க்லீஷ் தெரிந்த தமிழ் அபிமானிகள் யாவருக்கும் இது பயன்படும். வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



# News and Notes.

## வர்த்தமானக் குறிப்புகள்.

கால்நடையாய் லோக ஸஞ்சாரம்.

ந்யூஸிலண்ட் தேசத்தில் பிறந்த மிஸ்டர் இ. மூர் என்பவர், தாம்விடாமல் பத்து வர்ஷம் நடந்துகொண்டே இந்த லோக முழுவதும் ஸஞ்சாரம் செய்வதாக 6000-பவுன் பந்தயம் போட்டிருக்கிறார். இவர் 1907 வர்ஷம் நடக்க ஆரம்பித்தார். 1917-ம் வர்ஷம் ஆகஸ்ட் மாஸத்துக்குள் இவர்நடை முடிந்துவிடவேண்டும். இதுவரையில் இவர் ஐரோப்பா, ஆசியா, ஆப்ரிக்கா முதலான கண்டங்கள் வழியாய் 60,000 மைலுக்கு மேல் நடந்திருக்கிறார்.

இவர் செய்திருக்கும் ஒப்பந்தத்தில் 35-நிபந்தனைகள் இருக்கின்றன. இவர் போகும் வழியில் பிச்சையெடுக்காமலும், கடன் வாங்காமலும், திருடாமலும், இருக்கவேண்டும். யாதொரு ஸந்தர்ப்பத்திலும் வண்டியில் ஏறக்கூடாது. நாள் முழுவதும் நடந்தே தீரவேண்டும். இவர் வண்டியில் போவதை யாராவது பார்த்துவிட்டால், அவருக்கு இவர் 100 பவுன் கொடுக்க வேண்டியதோடு, பந்தயத்தையும் இழக்க வேண்டும்.

இவர் வ்யவஸாய வேலை செய்து ஜீவனம் செய்து கொண்டு வருகிறார். பொம்மைப் படங்களை விற்று ஸம்பாதிப்பது ஒப்பந்தத்துக்கு விரோதமாகும். ஆனால் இவர் கொடுக்கும் படங்களை வாங்கிக் கொள்ளுகிறவர்கள் தாங்களே இஷ்டப்பட்டு இவருக்குக் கொடுக்கும் பணத்தை இவர் வாங்கிக் கொள்ளலாம். ஸாதாரணமாய் அனேகர் இப்படி செய்கிறார்களாம்.

ஒப்பந்தத்தில் இன்னொரு முக்யமான நிபந்தனையென்னவென்றால், இவர் கையில் எப்பொழுதும் பணம் கொஞ்சமாவது இருந்து கொண்டிருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் பந்தயத்தை இழந்து விடுவார். இதைப் பரீக்ஷை செய்வதற்காக அனேக தேசங்களில் ஜனங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

சென்னையில் பொருள் காட்சி.

சென்னையில் அடுத்த டிஸம்பரில் ஒரு பொருட்காட்சி நடக்கப்போகிறது. அந்தப் பொருட்காட்சி மாகாண கவர்ன்மெண்டாரின் ஆதரவைக் கொண்டு, தொழில் இலாகாத் தலைவரால் ஏற்பாடு செய்யப்படும். பொருட்காட்சியை நடத்த ஒரு நிர்வாகக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிர்வாகக் கமிட்டிக்கு தொழில் இலாகா டிரெக்டராகிய மிஸ்டர் இன்ஸ் சேர்மனுவார். ராவ் பகதூர் விஜயராகவாசாரியார் அந்தக் கமிட்டியின் ஸெக்ரெட்டரி யாவார். அடியிற் கண்ட பிரிவுப்படி ஸாமான்கள் பொருட்காட்சியில் வைக்கப்படும்.

1. ஆகார வகைகளும், குடிக்கும் பான வகைகளும், புகையிலையும், பக்வம் பண்ணின இறைச்சி, மீன், பிஸ்கோத்து, ஜவ்வரிசி, கூவைக்கிழங்கு, மா, தேயிலை வகையராக்கள்.

2. வீட்டுக்குவேண்டிய ஸாமான்களும் தரித்துக் கொள்ளும் உடைகளும், பருத்தியினாலும், கம்பளியினாலும், நெய்த துணிகள் அதாவது கம்பளிகள், படுக்கை விரிப்புகள், ஜமக்காளங்கள், துவாலைகள் முதலியன.

3. யந்த்ரங்கள் வகையரா ஸாமான்கள் அதாவது எண்ணெய் என்ஜின்கள், அரிசி அரைக்கும் யந்த்ரங்கள், கரும்பு அரைக்கும் யந்த்ரங்கள், தோல்கள் முதலியன.

4. மருந்துகள், ரஸாயனச் சரக்குகள், ரஸாயன உரங்கள் முதலியன.

5. சில்லரைக் கடுதாசி, பேனா, பென்ஸில், மை, விநோதமான தோல்பை, சேணம் முதலியன.

யுத்தமும் நிஜாமும்.

நிஜாம் அரசர் யுத்தத்துக்காக பின்வரும் தொகைகளைக் கடனாகவும் இனாமாகவும் கொடுத்திருக்கிறார்.

நன்கொடை.

| | | |
|---|---|---|
| சென்ற ஜூன் மாஸம் முடிய | | ரூ. |
| தரைச் சண்டைக்கு | ... | 1,02,00,000 |
| ஷை கப்பல் சண்டைக்கு | ... | 15,00,000 |
| பற்பல யுத்தகஷ்ட நிதிகளுக்கு | .. | 3,00,000 |
| ஆகமொத்தம் நன்கொடை | ... | 1,20,00,000 |

கடன்கள்.

| | | |
|---|---|---|
| 1916-ம் வர்ஷத்திய 100-க்கு 4-வட்டி வீதக்கடன் | ... | 39,00,000 |
| 1917-ம் வர்ஷத்திய யுத்தக்கடன் | | 75,00,000 |
| மொத்தம் கடன் | ... | 1,14,00,000 |

| | |
|---|---|
| மொத்தம் யுத்தத்துக்காகச் செலவழித்தது | ... 2,34,00,000 |

நிஜாம் அரசர் மாஸம் 3 லக்ஷம் ரூபாய் வீதம் யுத்தம் முடியுமட்டும், தரைச் சண்டைக்குக் கொடுத்து வருகிறார். முதல் பாபத்து சென்ற ஜூன் மாஸம் முடியக்கொடுத்த தொகையாகும். இரண்டாவது பாபத்தாகிய 15 லக்ஷம் ரூபாய் ஸப்மரீனை ஒழிக்க கப்பல் படை ஆபீஸுக்குக் கொடுத்ததாகும்.

ப்ராம்மணருக்கு ஒரு செட்டிப்பெண் மனைவியானது.

குலம் கோத்ரம் விசாரிக்காமல் தரகர்களைக் கொண்டு விவாகத்துக்குப் பெண் நிச்சயம் செய்வது சில ஸமயங்களில் கெடுதலாக முடிகிறது. ஸமீபத்தில் பெஜவாடாவிலுள்ள ஒரு ப்ராம்மணர் கல்யாணம் செய்துகொள்ள விரும்பி, தென்மலையாளம் திருவானை மலையிலுள்ள ஒரு ப்ராம்மணரைத் தமக்கு ஒரு பெண் தேட நியமித்தார். அவர் ஒரு செட்டி ஜாதிப் பெண்ணை ப்ராம்மணரைப்போல் நடிக்கச் செய்து கல்யாணம் செய்வித்து, பெண்ணின் பெற்றோர்களிடம் பணம் பெற்றார். இந்த சூதில் ஒரு அம்பட்டன் உள்பட வேறு மூன்றுபேர் ஸம்பந்தப் பட்டிருக்கிறார்களாம். அம்பட்டனுக்கு பேச்சுப்படி பணம் கிடைக்காததால், அவன் இவ்விஷயத்தை வெளிக்குக் கொண்டுவந்து விட்டான். இதன் மேல் மணமகன் வழக்குத் தொடர, ஆறு குற்றவாளிகளுக்கும் தனித்தனியே ஆறுமாஸம் கடுங்காவல் கிடைத்தது.

மறு ஸெட்டில்மெண்டும் ஜனங்களின் பொருளாதார நிலைமையும்.

சென்ற ஏப்ரல் மாஸம் 2-ந்தேதி நடந்த சென்னை சட்டஸபை மீட்டிங்கில் கவர்ன்மெண்டார் பின்வரும் தீர்மானத்தை அங்கீகரித்தார்கள். இனி ஸெட்டில்மெண்ட் செய்யும்போது ஸெட்டில்மெண்ட் செய்யப்படும் ப்ரதேசங்களிலுள்ள சில க்ராமங்களில் சில குடும்பங்களின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஸெட்டில்மெண்ட் ஆபீஸர் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதே. இந்தத் தீர்மானத்தை அனுஸரித்து எல்லா ஸெட்டில்மெண்ட் உத்யோகஸ்தர்களுக்கும் வேண்டிய உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும், அதற்கேற்றபோல் ஸெட்டில்மெண்ட் மான்யுவலை திருத்தவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

ப்ரிட்டிஷ் இந்தியாவிலும் மைஸூர் ராஜ்யத்திலும் சென்ற மே மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 20 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப் பட்டிருக்கின்றன.

| | |
|---|---|
| 5 பாங்கிலேவாதேவி கம்பெனிகள் | 3,50,000 |
| 2 ரெயில்வே ட்ராம்வே கம்பெனிகள் | 27,00,000 |
| 4 வ்யாபாரக் கம்பெனிகள் | 12,15,000 |
| 2 தேயிலைத் தோட்டக் கம்பெனிகள் | 4,00,000 |
| 1 இதர தோட்டக்கம்பெனி | 1,98,000 |
| 1 நிலக்கரிச் சுரங்கக்கம்பெனி | 2,00,000 |
| 1 இதர சுரங்கக்கம்பெனி | 30,00,000 |
| 1 நிலங்கட்டிடக்கம்பெனி | 1,00,000 |
| 1 பனிக்கட்டிக்கம்பெனி | 60,000 |
| 2 கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 51,0,000 |
| 20 மொத்தம்... | 87,33,000 |

ஒரு ரெயில்வே தொழில் பாடசாலை.

ரெயில்வே கம்பெனியில் வேலைக்குப்போக ப்ரியப்படும் மாணாக்கர்களுக்கு அத்தொழிலுக்கு வேண்டிய விஷயங்களை போதிப்பதற்காக, திருச்சிராப்பள்ளியில், தொழிற்சாலை யொன்றை ஸ்தாபிக்கவேண்டுமென்று தென்னிந்தியா ரெயில்வே கம்பெனி மாஜி ட்ராபிக் இன்ஸ்பெக்டரான மிஸ்டர் பி. வி. சாமராவ் உத்தேசித்திருக்கிறார். இவ்வித தொழிற்சாலை, தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அது திருச்சிராப்பள்ளியில் ஸ்தாபிக்கப்படும். ஸெப்டெம்பர் மாஸத்தில் வகுப்புகள் ஏற்படும். ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேர்ந்திருக்கும் இந்திய மாணாக்கர்களும், 4-வது பாரம் முடிய படித்திருக்கும் ஆங்கிலோ-இந்திய மாணாக்கர்களும், மேற்கண்ட வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

விவஸாயப் பண்ணைகளும் ஜில்லா உத்யோகஸ்தர்களும்.

ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த ஜில்லா உத்யோகஸ்தர்கள் விவஸாயப் பண்ணைகளைப்போய்ப் பார்வையிட்டு, தமது ஜில்லாக்களில் விவஸாய அபிவ்ருத்திக்கு எவ்வளவு இடமிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு



போட்டிருக்கிறார்கள். விவஸாயப் பண்ணைகள் ஏற்படாத ஜில்லாக்களின் கலெக்டர்கள் ஸ்வதாவாக ஸமீபத்திலுள்ள விவஸாயப் பண்ணைகளுக்குப் போகலாமென்றும், அவர்கள் சில தெரிந்தெடுக்கப்பட்ட டிவிஷனல் ஆபீஸர்களுக்கும் தாசில்தார்களுக்கும் விவஸாயப் பண்ணைகளுக்குப் போய்வர அநுமதி கொடுக்கலாமென்றும் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

காலஞ்சென்ற எ. ரஸூல்.

கல்கத்தாவில் ப்ரபல பாரிஸ்டரும், காங்க்ரெஸ் அபிமானியும், கல்கத்தா ஹோம் ரூல் லீகின் காரியதரிசியுமாகிய ஆனரபிள் மிஸ்டர் அப்துல் ரஸூல் சென்ற ஜூலை மாஸம் 31-ந் தேதி கால கதியடைந்தார். அவர் காங்க்ரெஸைச் சேர்ந்திருந்ததோடு, முஸ்லீம் லீக்கிலும் ப்ரபலமான தலைவர்களில் ஒருவராயிருந்தார். ஹிந்து மகம்மதிய ஒற்றுமையை வ்ருத்தி செய்ய மிகவும் பாடுபட்டு வந்தார். அவர் இறந்தபோது அவருக்கு வயது 47. அவர் ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீயைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தார்.

இந்திய ராஜாங்க சீர்திருத்தம்.

இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மாண்டேகு இந்த மாஸம் 20-ந்தேதியன்று பார்லிமெண்டில் இந்தியாவின் ராஜாங்க சீர்திருத்தத்தைப்பற்றி ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கொண்டிருக்கும் கொள்கைகளை வெளியிட்டார். அவையாவன:—இந்தியர்களை அதிகமாக ராஜாங்கவிஷயங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதும், ஸ்வய ஆட்சி ஸ்தாபனங்களை வ்ருத்தி செய்யவேண்டுமென்பதும், காலக்ரமத்தில் இந்தியாவுக்கு பொறுப்புள்ள கவர்ன்மெண்ட் ஏற்படும்படி செய்வதுமே. இது விஷயமாக இந்தியாவில் வைஸ்ராய், மாகாண கவர்ன்மெண்டுகள், ராஜ்யஸ்தாபனங்கள் ஆகிய இவைகளுடன் கலந்து யோசிப்பதற்காக மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு கூடிய சீக்கிரத்தில் வருவாராம்.

சென்னை மாகாண விசேஷ காண்பரென்ஸ்.

சென்னை மாகாண விசேஷ காண்பரென்ஸ் ஆகஸ்ட் மாஸம் 25, 26-தேதிகளில் கூடிற்று. திவான்பகதூர் பி. கேசவபிள்ளை ப்ரெஸிடெண்டாக இருந்தார். இந்திய பாதுகாப்புச் சட்டத்தைக்கொண்டு ஜனங்களை ஹிம்ஸிப்பது கூடாதென்றும், ஜனங்கள் ஸாத்விக எதிர்ப்பைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், மிஸஸ் அனிபெஸண்டையும் ராஜ்யவிஷயங்களில் ஊக்கம் காட்டினதற்காக பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கும் இதரர்களையும் விடுதலை செய்யவேண்டுமென்றும், வேறு சில விஷயங்களைப்பற்றியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பத்து வர்ஷம் கர்ப்பமாயிருந்தது.

மலையாளத்தில் ஒரு ஸ்த்ரீ பத்து வர்ஷம் கர்ப்பமாயிருந்தாளாம். அவள் அத்தனை வர்ஷ காலம் இரைப்பை ஸம்பந்தமான ஒரு வ்யாதியால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தாள். ஸமீபத்தில் அவள் வயிற்றை அறுத்துப் பார்க்கையில் ஆறங்குலம் நீளமுள்ள ஒரு கறுப்பான கரு காணப்பட்டது. அந்தக் கரு ஒரு த்ரவசத்தில் மூழ்கிக்கிடந்ததால் அத்தனை வர்ஷமாகக் கெடாமலிருந்து, கர்ப்பமென்று சொல்லும்படி செய்துவிட்டது. இந்த ஸ்த்ரீ தற்போது ஆபரேஷனிலிருந்து ஸ்வஸ்த மடைந்திருக்கிறாள்.

வெந்நீர் குடித்தல்.

கீழே குறிப்பிடப்படும் நான்கு வகுப்பார்களும் வெந்நீரைக் குடிக்கக்கூடாது:—(1) ஹ்ருதய எரிச்சலுள்ளவர்கள், (2) விரிந்த வயிறுள்ளவர்கள், (3) வயிற்றில் புண்ணுள்ளவர்கள், (4) வயிற்றுவலியுள்ளவர்கள்.

ஜனங்கள் தாக சாந்திக்காக வெந்நீர் சாப்பிடுகிறார்கள். குளிர்ந்த நீரைக்காட்டிலும் வெந்நீர் தாக சாந்தி செய்யும். இன்னும், காபி முதலியவற்றைக் காட்டிலும், வெந்நீர் தேகத்திற்குச் சுறுசுறுப்பை யுண்டாக்கும்.

கல்கத்தாவில் பத்ரிகைகள்.

கல்கத்தாவில் 475 - அச்சாபீஸுகளிருக்கின்றன. அங்கே வெளியாகும் பத்ரிகைகள்:—

15 தினஸரி பத்ரிகைகள்.
3 வாரமிருமுறை பத்ரிகைகள்.
37 வாரப் பத்ரிகைகள்.
7 மாதமிருமுறைப் பத்ரிகைகள்.
142 மாதப் பத்ரிகைகள்.
35 பத்ரிகைகள் வர்ஷத்திற்கு நான்குமுறை.

மைஸூர் யூனிவர்ஸிடி.

மைஸூர் ஸர்வகலாசாலையில் ஒரு இஞ்ஜினியரிங் பிரிவும் ஒரு வ்யாபாரப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பாச்சலர் அப் ஆர்ட்ஸ் (பி. ஏ.) பட்டத்தைப் போல பாச்சலர் ஆப் இஞ்ஜினியரிங் பட்டமும்,

பாச்சலர் ஆப் காமர்ஸ் (வ்யாபாரம்) பட்டமும் கொடுக்கப்படும். இந்தப் பட்டங்களுக்கான வகுப்புகள் ஆரம்பமாயிருக்கின்றன.

மெழுகு வர்த்தி.

மெழுகு வர்த்திகள் குழாயின் அளவுக்குச் சற்றுப் பெரியன வாயிருந்தால், அவைகளின் மேற்புறத்தை சீவி பருமனைக் குறைக்க வேண்டியதில்லை. அவைகளை ஒரு நிமிஷம் கொதிக்கும் ஜலத்தில் அமிழ்த்தி எடுத்தால், பிறகு குழாயில் வைக்கமுடியும்.

ஐரோப்பிய யுத்தம்.

ஜூலைமீ 24-தேதி.

ரஷ்யப் போர்முகத்தில் எதிரிகள் பலமாய்த் தாக்கினதாலும், ரஷ்ய ஸைன்யங்களில் சில வேண்டுமென்றே பின்னடைந்ததாலும், எதிரிகள் கலீஷ்யாவில் டார்னுபோல் என்னும் இடத்தைப் பிடித்தார்கள்.

27-தேதி.

ரஷ்யர்கள் இன்னும் பின்சென்று கொண்டிருக்கிறார்கள். எதிரிகள் ஹாலிக், ஸ்டானிஸ்லாவ், பக்ஸாக்ஸ், துமாவி, ஒட்டினியா, டிலேடின் முதலிய ஸ்தலங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

29-தேதி.

ஸயாம் சவர்மெண்டார் ஆஸ்ட்ரியா ஹங்கேரியின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறார்கள்.

30-தேதி.

ஜெர்மானியர்கள் கலீஷ்யாவில் கோலோமியா என்னும் ஸ்தலத்தைப் பிடித்திருக்கிறார்கள். பண்டுல், மால்டேவியா என்னும் ப்ரதேசங்களுக்கு மேற்கிலுள்ள மலைகளில் ரஷ்யர்கள், பின்னடைந்தார்கள். 'அரியாடேன்' என்னும் க்ரூஸர் டார்பிடோவால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

ஆகஸ்ட்மீ 3-தேதி.

மேற்குப் போர்முகத்தில் ப்ரிட்டிஷார் பாஷிவிலி, ஹால்பீக் என்னும் ஸ்தலங்களுக்கு அருகில் சில இடங்களையும், ப்ரெஞ்ச்சுக்காரர்கள் பிக்ஸ்பூட் என்னுமிடத்தையும் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் பின்சென்று கொண்டிருக்கிறார்கள். எதிரிகள் கிம்பொலாங்குக்குப் பக்கம் போயிருக்கிறார்கள். ஜெனரல் கார்னிலாப் இப்போது ரஷ்ய ஸேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

7-தேதி.

ப்ரிட்டிஷார் ஸான் ஜூலியன் என்னும் பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் இப்போது அநேகமாய் புகோவினாவைக் காலி செய்துவிட்டார்கள். எதிரிகள் ஸெர்னோவிட்ஸ், கிம்பொலாங், ராடக் என்னும் இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

10-தேதி.

கிழக்குப் போர்முகத்தில் ஸெர்னோவிட்ஸுக்கும் ரொமேனியாவின் வடபாகத்துக்கும் நடுவில் எதிரிகள் ரஷ்யர்களை பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். வடமால்டேவியாவில் போஸானிக்கு வடக்கில் எதிரிகள் ரஷ்யர்களையும் ருமேனியர்களையும் பின்னுக்குத் தள்ளினார்கள்,

14-தேதி.

சீனா கவர்ன்மெண்ட் ஆஸ்ட்ரியாவின்மேலும் ஜெர்மனியின்மேலும் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ப்ரிட்டிஷார் மேற்குப் போர்முகத்தில் வெஸ்ட்ஹாக் என்னும் ஸ்தலத்தைப் பிடித்திருக்கிறார்கள். எதிரிகள் மால்டேவியாவில் பான்வின் என்னும் ஸ்தலத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

ரோமிலிருக்கும் கத்தோலிக் கிறிஸ்தவர்களின் குருவாகிய போப் யுத்ததேச ராஜாங்கங்களுக்கு ஸமாதான விஷயமாய் ஒருகடிதம் எழுதியிருக்கிறார்.

17-தேதி.

ப்ரிட்டிஷார் லென்ஸுக்கும், யிப்ரஸுக்கும் பக்கத்தில் முன்சென்றிருக்கிறார்கள். அவர்கள் லாஞ்ஜ்மார்க் என்னும் ஊரையும் பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யர்களும் ருமேனியர்களும் வடமால்டேவியாவில் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

21-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் வெர்டுனுக்குப் பக்கத்தில் முன்சென்றன. இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் பலமாக சண்டை செய்துவருகிறார்கள்.

நாநா ஸங்கதி.

வாணியம்பாடியில் ஸ்தாபிக்க உத்தேசித்திருந்த உஸ்மானியா காலேஜ் ஒரு வர்ஷத்துக்குப் பிறகு சென்னை நகரத்தில் ஸ்தாபிக்கப்படுமென்று தெரியவருகிறது.

* * *

சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் சீப் ஜட்ஜாகிய திவான்பகதூர் வி. க்ருஷ்ணன் சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக ஆக்ட் செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *

ராவ் பகதூர் டி. விஜயராகவச்சார்யார் சென்னை முனிஸிபல் கார்ப்ரேஷனுக்கு ஆக்டிங் ப்ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *

திருச்சினாப்பள்ளி ஸெண்ட் ஜோஸப் காலேஜில் ஒரு எல். டி. வகுப்பு புதிதாக ஏற்பட்டிருக்கிறது. பி. ஏ. பரீக்ஷை தேறிய உபாத்யாயர்களைப் பயிற்றுவதற்காக இந்த வகுப்பு ஆரம்பமாயிருக்கிறது.

* * *

சென்னையிலுள்ள ஸ்த்ரீகள் காலேஜை "ஸ்த்ரீகளுக்கான க்வீன் மேரீஸ் காலேஜ்" என்று பெயரிடுவதற்கு நமது சக்ரவர்த்தினி ஸம்மதித்திருக்கிறார்.

* * *

மிஸ்டர் மாண்டேகு இந்தியா மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்களஸூ புரட்டாசிமீ. SEPT.—OCT. 1917. { ஸஞ்சிகை 9. No. 9.


## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | | | Foreign. Rs. A. P. | | |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Page ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do ... | 2 | 8 | 0 | do |
| ¼ do ... | 1 | 4 | 0 | do |
| ⅛ do ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

**No** money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | | | அந்யநாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறு மாஸத்துக்கு... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப் பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ | ,, ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ | ,, ,, ,, | 1 | 4 | 0 |
| ⅛ | ,, ,, ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒரு பாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்,

## HINDRANCES TO AGRICULTURE.

## வ்யவஸாய அபிவ்ருத்திக்கு இடையூறுகள்.

மேல்நாடுகளில் நடந்துவரும் வ்யவஸாயத்தை உத்தேசிக்கையில், நமது நாட்டு வ்யவஸாயம் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதென்று சொல்லலாம். ஸுமார் 30 வர்ஷங்களுக்கு முன்னால் ஐரோப்பிய உத்யோகஸ்தர்களும் வேறு சிலரும் இந்திய வ்யவஸாயத்தை வ்ருத்தி செய்வதற்காக, மேல்நாட்டு முறைகளையும், கருவிகளையும் உபயோகிக்க வேண்டுமென்றும், மேல்நாட்டிலிருந்து கால் நடைகளைக் கொண்டுவந்து, அவைகளின் மூலமாக இங்குள்ள கால்நடைகளை வ்ருத்திசெய்ய வேண்டுமென்றும், அபிப்ராயப்பட்டார்கள். இந்த தேசத்தின் நிலைமைகளில் அவ்விதம் செய்வது யுக்தமா என்று ஆராயவில்லை. சென்ற சில வர்ஷங்களாகத்தான் அந்த அபிப்ராயம் தவறென்று கண்டுகொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், நமது நாட்டு வ்யவஸாயமானது பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட அனுபோகத்தின்மேல் நடந்துவருகிறது. அப்படியிருக்க, இந்தியாவின் நிலைமைகளுக்கு ஒத்தனவாயிராத வேறு நிலைமைகளில் கண்டறிந்த பொது விஷயங்களை அனுஸரித்து, இந்தியாவின் வ்யவஸாயத்தை சீர்திருத்துவது முடியாத கார்யம். நமது தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதி, நிலவளம், ஜனங்களுடைய குணவிசேஷங்கள், பழக்க வழக்கங்கள் ஆகிய இவைகளையும் கவனித்து, இவைகளை உத்தேசிக்கும்போது மேல்நாட்டு முறைகள் எவ்வளவுதூரம் பயன்படுமென்று பார்க்க வேண்டும். இந்திய வ்யவஸாயத்தை சீர்திருத்துவதற்காக இந்திய முறைகளை முற்றிலும் கண்டனம் செய்வது கூடாது. அதற்காக இந்தியாவிலுள்ள எதையும் ச்லாகித்து பேசுவதிலும் ப்ரயோஜனமில்லை. இரண்டையும் அனுஸரித்துக்கொண்டு எந்த முறை கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்றதோ அதை அனுஸரிக்க வேண்டும்.

இந்திய வ்யவஸாயமானது வெகுநாள்பட்ட அனுபோகத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறபோதிலும் அதை இன்னும் அபிவ்ருத்தி செய்யவேண்டும். இங்க்லண்டில் ஒரு ஏக்கருக்கு 33 புஷல் கோதுமை கிடைக்க இந்தியாவிலோ 12 புஷல் கோதுமைதான் கிடைக்கிறது. இதனால் நமது தேசத்து வ்யவஸாயத்தை எவ்வளவு முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்பது நன்கு விளங்குகிறது.

ஆனால் இந்தக் கார்யம் ஸுலபமானதல்ல. அனேக காரணங்கள் வ்யவஸாய அபிவ்ருத்திக்குத் தடையாயிருக்கின்றன. என்னென்ன அம்சங்கள் இடையூறாக இருக்கின்றனவென்பதைப்பற்றி ஆனரபில் ஸர் எ. ஜி. கார்ட்யூ ஸமீபத்தில் செய்த ஒரு ப்ரஸங்கத்தில் விவரித்திருக்கிறார். அவைகளை இங்கு சுருக்கமாய் எழுதுகிறோம்.

### எழுதப் படிக்கத் தெரியாமை.

அவைகளுள் முக்யமானது குடியானவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பது. குடியானவர்கள் ஸ்வபாவமாகவே யுக்தியூகமுள்ளவர்களாக இருக்கிறார்களென்றாலும், வம்ச பரம்பரையான வ்யவஸாய அனுபோகம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென்றாலும், அவர்களுக்குக் கல்வியறிவில்லாதது பாதகமாகவே இருக்கிறது. வ்யவஸாய ஸம்பந்தமான முறைகளையும் பரீக்ஷைகளையும் அவர்கள் வாசித்து அறிந்துகொள்வது முடிவதில்லை. அவர்கள் கற்றுக்கொள்ளக் கூடியவையெல்லாம் வாய்மொழியாகக் கேட்டவைகள்தான். அப்போதுங்கூட அவர்களுக்கு பொது அறிவு மட்டாதலால், எல்லா விஷயங்களையும் க்ரஹித்துக் கொள்வது அபூர்வம். எந்தமுறையைப்பற்றியாவது சொன்னால், அவர்கள் அதனால் ஏற்படும் பலாபலன்களை க்ரஹித்துக் கொண்டு நடக்கக்கூடும். ஆனால் அந்த முறைகளை அனுஸரிப்பதால் லாபம் ஏற்படுவானேன் என்று காரணங்களை ஆராய்ந்தறிய அவர்களுக்கு சக்தி போதாது. ஆகவே நாம் கவனிக்க வேண்டிய முதல் விஷயம் என்னவென்றால், வ்யவஸாய வகுப்பாருக்குக் கல்விகற்றுக் கொடுப்பதே.

ஸர்க்காருக்கு வரும் வரும்படியைக் கொண்டு எல்லா வ்யவஸாயிகளுக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதெப்படியென்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கிறது. நமது ராஜதானியில் 420 லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். இந்த ஜனத்தொகையானது பத்து வர்ஷத்துக்கு 30 லக்ஷம்வீதம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. தத்ஸமயம் ஜனத்தொகையானது 440 லக்ஷமாக இருக்கலாம். இவர்களில் 60 அல்லது 70 லக்ஷம் பேர்கள் சிறுவர்களாக இருக்கக்கூடும். கவர்ன்மெண்டுக்குத் தற்போது கிடைத்து வரும் வருமானத்தைவிட ரொம்ப அதிகமாக வரும்படி கிடைத்தாலொழிய இந்த 60, 70 லக்ஷம் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதென்பது எப்படி ஸாத்யமாகும்? மாகாண உபயோகத்துக்காகக் கிடைக்கும் மொத்தம் மாகாண வரும்படியோ 7½ கோடி ரூபாய்தான். இந்த வரும்படியைக் கொண்டு எதெதற்குச் செலவழிக்கிறது? ஆனால் வ்யவஸாயிகளுக்குக் கல்வி கற்பிக்கும் வரையில் அவர்கள் முன்னேறுவது சற்று ச்ரமந்தான்.

### மூலதன மின்மை.

சிலர் வ்யவஸாய அபிவ்ருத்திக்கு அவச்யம் வேண்டியது கல்வி யல்லவென்றும், வ்யவஸாயிகளுக்கு செல்வ அபிவ்ருத்தி ஏற்படும்படி செய்வதே முக்யமென்றும், பிற்பாடு கல்வி அபிவ்ருத்தியைப்பற்றி கவனித்துக்கொள்ளலாமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தக் கொள்கை சரியல்லவென்று தோன்றுவதாக ஸர். எ. ஜி. கார்ட்யூ சொல்லுகிறார்.

### ஜனஸமூக ஏற்பாடும், ஸொத்தைப்பற்றிய சட்டமும்.

விவஸாய முன்னேற்றத்துக்கு படிப்பின்மை ஒரு தடையாயிருப்பதேயல்லாமல், இந்தியர்களின் ஜன ஸமூக ஏற்பாடும் ஸொத்துக்களைப்பற்றிய சட்டமும் தடைகளாக இருக்கின்றன. இவைகள் வ்யவஸாய முன்னேற்றத்தையும் கைத்தொழில் அபிவ்ருத்தியையும் நோக்கமாகக் கொண்டு ஏற்படவில்லை. இவைகள் மத ஸம்பந்தமான ஆதாரங்களின் மேல் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை தற்கால நிலைமைகளுக்குத் தகுந்தபடி மாற்றுவது ச்ரம ஸாத்யமான கார்யமாகும். நமது நாட்டில் ஸொத்தைப்பற்றிய சட்டமென்னவென்றால், குடும்பத்தில் ஜனித்த ஒவ்வொரு பிள்ளையும் அந்தக் குடும்ப ஸொத்தில் பாத்யமுள்ளவனாகிறான். அவன் எப்போது விரும்பினாலும் அவன் பாகம்செய்துகொண்டு பிரிந்துவிடலாம். இப்படிப்பட்ட ஏற்பாட்டால் பொருளாதார விஷயமாய் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. தற்காலம் மேல்நாட்டு நாகரீகத்தால் அநேகர் தனியாக இருக்க எண்ணங்கொண்டு ஸொத்துக்களைப் பிரித்துக்கொண்டு போகிறார்கள். இதனால் நிலங்கள் நாளடைவில் சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுப் போகின்றன. ரொம்ப சிறு துண்டுகளாகி விட்டால், அவை வ்யவஸாய அபிவ்ருத்திக்கு ரொம்ப தடையாக இருக்கின்றன. உதாரணமாக ஒரு க்ராமத்தில் ஒரு ஸர்வே வயல் 7 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. அது 19 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த 19 துண்டுகளும் 6 பட்டாதாரர்களுக்கு ஸொந்தம். அவர்களுள் ஒருவருக்கு தனித்தனியாக உள்ள 9 துண்டுநிலங்கள் இருக்கின்

றன. அந்தத் துண்டுகள் ½ ஏக்கர் முதல் 1-ஸெண்ட் வரை விஸ்தீரணமுள்ளவை. இன்னொரு க்ராமத்தில் 1·66 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் ரூ. 4-10 அணா கிஸ்தியுள்ளதுமான ஒரு ஸர்வே நிலம் 37 சிறு துண்டு நிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு சிறியனவாக நிலங்கள் இருக்கும்பக்ஷத்தில் வ்யவஸாய அபிவ்ருத்தி தடைபடுவதற்கு ஆக்ஷேபனை யென்ன?

ஒருவருடைய பூஸொத்துக்கள் ஒரே தொடர்ச்சியாயிராமல் தனித்தனி இடங்களில் சிறு சிறு துண்டு நிலங்களா யிருப்பதால், பற்பலவிதங்களில் கெடுதல் ஏற்படுகிறது. முதலாளி ஒரே இடத்திலிருந்துகொண்டு வேலை செய்பவர்களை சரியாய் மேற்பார்வை செய்ய முடியாது. வ்யவஸாயக் கருவிகளை ஒரு துண்டு நிலத்திலிருந்து இன்னொரு நிலத்துக்கு அடிக்கடி எடுத்துப்போக வேண்டியிருக்கிறது. இதனால் காலம் வீணாகப் போவதோடு, பெரிய கருவிகளை உபயோகிக்க முடியாமல் லேசாகவும் ஸுலபமாய்த் தூக்கிக்கொண்டு போகக் கூடியவுமான கருவிகளையே உபயோகிக்க வேண்டியிருக்கிறது. வ்யவஸாயி தனது நிலத்திற்கு வேலிபோட்டு, தனது மாடுகளை மேய விடுவதென்பது முடிவதில்லை. மேலும் அவர் அக்கம் பக்கத்து நிலங்களில் பயிரிடும் பயிர்களை அனுஸரித்துத் தான் சாகுபடி செய்யலாமே யொழிய, வேறு பயிர்களை சாகுபடி செய்வது கூடாது. ஏனென்றால், அவர் செய்யும் பயிர் அக்கம்பக்கத்துப் பயிர்களைவிட அதிக காலம் நிலத்திலிருக்குமானால், ஊரிலுள்ள மாடுகள் அறுவடையான நிலங்களில் மேய வந்து, பயிரிருக்கும் வயலிலும் புகுந்து பயிரை நாசம் செய்துவிடும். ஸ்வல்ப நிலங்களுள்ளவர்கள் கிணறுவெட்டுதல் போன்ற வ்யவஸாயச் சீர்திருத்தங்களைச் செய்யமுடியாது. சிறு சிறு துண்டுகளாகப் பிரிப்பதில் நீரோடைகளைப் பற்றிய சண்டைகளும், போய்வர வழி பாதையைச் சண்டைகளும், இதர சச்சரவுகளும் ஏற்படுகின்றன. வரப்புகள் போடுவதாலும் ஒரு பாகம் நிலம் ஸாகுபடிக்கு லாயக்கில்லாமல் போகிறது. இந்தக் கஷ்டங்களையெல்லாம் நிவர்த்திசெய்ய ஸொத்துக்களைப்பற்றிய ஹிந்துச் சட்டத்தை மாற்றவேண்டியது அவசியம். ஆனால் ஜனங்களோ அவ்வித மாறுபாடுகளுக்கு ஸம்மதியார்கள்.

### இதர தடைகள்.

முற்காலத்தில் ஜனங்கள் பத்ரத்தை உத்தேசித்து, க்ராம நத்தத்தில் மற்ற க்ராமவாஸிகளோடு வஸிக்கத் தொடங்கின வழக்கம் இன்றைக்கும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. இதனால் வீட்டுக் குப்பை கூளங்களும், தொழுவத்தெருவும் வயல்களுக்கு அதிகம் கிடைப்பதில்லை. வ்யவஸாயி தமது நிலத்திலேயே குடியிருந்தால், நிலத்தை எவ்வளவு நன்றாய் கவனிப்பாரோ அவ்வளவு ச்ரத்தையாய் நிலத்தை கவனிக்க முடிவதில்லை. மேலும் வ்யவஸாயிகள் கைமேல் பலன் கொடுக்கும் சீர்திருத்தங்களைத்தான் கவனிக்கிறார்களே ஒழிய, நாள்பட்டுப் பலன் கொடுக்கக்கூடியவைகளை கவனிப்பதில்லை. மேலும் அவர்கள் கையில் கிடைக்கும் பணத்தை நிலத்தின் அபிவ்ருத்திக்காக செலவழிக்காமல், கல்யாணம் முதலியவைகளுக்குச் செலவழித்து விடுகிறார்கள்.

இவ்வித தடைகள் இருந்தாலும் சில [illegible] குறிகள் இல்லாமல் போகவில்லை. [illegible] நாளுக்கு நாள் நிதானமாக வ்ருத்தியடைந்து கொண்டு வருகிறது. கோவாபரேடிவ் முயற்சியானது சென்ற பத்து வர்ஷங்களாக ரொம்ப முன்னேற்ற மடைந்திருக்கிறது. இது போலவே இன்னும் பத்து வர்ஷம் வ்ருத்தியடைந்து வருமானால், வ்யவஸாய சீர்திருத்தத்துக்கு ரொம்ப ஸாதகமேற்படும்.



## HOW ANIMALS CLEAN THEMSELVES.

## ம்ருகங்கள் தங்களை சுத்தம் செய்துகொள்ளும் விதம்.

மனிதர்களால் வசப்படுத்தப்பட்டுப் பழக்கப்படாமல் யதேச்சையாய் இருக்கும் ம்ருகங்களில் பெரும்பான்மையானவை தங்களுடைய தேக சுத்தத்தைப்பற்றி ரொம்பவும் கவனிக்கின்றனவாம். அவைகள் தங்கள் தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ள எடுத்துக்கொள்ளும் ச்ரமத்தைப் பார்த்தால், மனிதப் பிறவியைச் சேர்ந்த நாம் நமது தேக சுத்தத்தை சரிவர கவனிக்கவில்லை யென்றே சொல்லலாம்.

மிகச் சிறிய ப்ராணியாகிய சுண்டெலி தனது உடம்பைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளும்பொருட்டு தன் வாழ்நாளில் பாதி காலத்தை செலவழிக்கிறது. அது பயிர்களின் தாள்மேல் ஏறி தன் வாலினால் வைக்கோலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வெகு வேகமாக தன்னுடைய முகத்தை நன்றாக சுத்தி செய்துகொள்ளும். முதல் முதலில் அது தனது முன் பாதங்களை நன்றாய் அழுக்கில்லாமல் நக்கிவிட்டு, பிறகு அந்தப் பாதங்களால் தனது தலையையும் மூக்கையும் சுத்தமாக துடைத்துக்கொள்ளும். அப்புறம் தனது காதுகளையும், முதுகையும் தனக்கு த்ருப்தியாகும் வரையில் நன்றாய் சுத்தம் செய்யும். கடைசியாக தனது பின் கால்களையும், வயிற்றின் மேல்பாகத்தையும் வாலையும் ஸுமார் 8,10, தடவை துடைத்துவிட்டுத்தான் அது ஆகாரம் எடுத்துக்கொள்ளும்.

சுண்டெலி தன் வாலை சுத்தம் செய்து கொள்ள எவ்வளவு ச்ரமம் எடுத்துக்கொள்கிறதோ, அவ்வளவு ச்ரமம் ஸாதாரண எலிகள் எடுத்துக்கொள்வதில்லை. காட்டு எலிகளது வால்கள் மிகவும் அழுக்கு படிந்தனவாயும், பார்ப்பதற்கு அஸங்கியமாயும் இருக்கும்.

குழி முயல்களும், ஸாதாரண முயல்களும் தங்களது உடம்பை வெகு சுத்தமாய் வைத்துக்கொள்ளும். சாப்பிடுவதற்கு போகுமுன், குழிமுயல் ஒரு இடத்தில் நன்றாக உட்கார்ந்துகொண்டு, பாதங்களைத் திருப்பித் திருப்பி நன்றாக நக்கின பிறகு, தன் மூக்கை நன்றாக துடைத்துக்கொள்ளும். அப்புறம் ஒவ்வொரு காதையும் பின் பக்கமும் முன் பக்கமும் நன்றாகப் பலமுறை தேய்த்துவிட்டு, கண்களை நன்றாய்த் துடைத்துக்கொள்ளும். பகலில் நன்றாகத் தூங்கி எழுந்தபிறகு தங்களுடைய முகத்தைக் குழிமுயல்கள் நன்றாய் தேய்த்துத் துடைக்கும். எப்பொழுதாவது சதுப்பாயிருக்கும் இடங்களில் தங்களது கால்கள் பட்டுவிட்டால், அந்த கால்களை சுத்தம் செய்யாமல் தங்களது இருப்பிடத்திற்கு அவைகள் போகா. அதனால்தான் பார்ப்பதற்கு குழிமுயல்கள் வெகு அழகாயும் சுத்தமாயும் இருக்கின்றன.

எல்லாவற்றையும்விட, பூனைதான் தன் உடம்பை ரொம்ப சுத்தமாக வைத்துக்கொள்ளும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தாண்டும்பொழுது பூனை எங்கேயாவது சேறு, கூளம், குப்பை இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு, சுத்தமாய் இருக்குமிடத்தில் தான் குதிக்கும். தப்பித் தவறி அழுக்கான இடத்தில் குதித்து விட்டால், உடனே அது தனது கால்களை சுத்தம் செய்து பிறகுதான் மறு கார்யம் பார்க்கும்.

பூனை ஜாதியில் 'போல்காட்' என்ற ஒரு இனம் உண்டு. அந்த இனத்தைச் சேர்ந்த பூனை பார்ப்பதற்கு வெகு அழகாயிருக்கும். அதின் உடம்பிலுள்ள மயிர்கள் மிகவும் பளபளப்பாயும் மெல்லியனவாயுமிருக்கும். தனது

தேகத்தில் ஏதாவது அழுக்கு படிந்தால், தனது நாக்கால் நக்கியும், நல்ல பசுந்தரையிலாவது அல்லது சுரசுரப்பான பூமியிலாவது புரண்டும், அந்த அழுக்கைப் போக்கிக்கொள்ளும்.

சில ஆடுமாடுகள் தங்களது தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ள அதிக ச்ரமம் எடுத்துக்கொள்கின்றன. எதிர் எதிராய் நின்றுகொண்டு ஒரு ம்ருகத்தினது தேகத்திலிருக்கும் அழுக்கை இன்னொரு ம்ருகம் நக்கி எடுப்பதை அநேகர் கவனித்திருக்கலாம். உதாரணமாக தாய்ப் பசுவானது தனது கன்றுக்குட்டியின் உடம்பிலிருக்கும் அழுக்கை சிறிதும் விடாமல் நாக்கால் நக்கும் காட்சியைப் பார்க்கப் பார்க்க விநோதமாயிருக்கும். குதிரைகளினது உடம்பிலிருக்கும் அழுக்கைப் போக்க குதிரைக்காரன் தேய்ப்பது போதாமல், சில குதிரைகள், ஸாதாரண தரையிலும், மணல் வெளியிலும் புரண்டு தங்களது தேக ஸௌக்யத்தைக் காப்பாற்றுகின்றன. மேல்நாடுகளில் குதிரை வளர்ப்பவர்களில் சிலர் குதிரைகள் புரளுவதற்காகவென்று மணல் கூடங்கள் தயார் செய்திருக்கிறார்கள்.

அண்டங்காக்கைகள் தங்களது இறக்கைகளை பளபளப்பாயும் சுத்தமாயும் வைத்துக்கொள்ளும்பொருட்டு, தண்ணீரைக் கண்ட இடங்களிலெல்லாம், தங்களது உடம்பை முழுவதும் நனைத்து முழுகி முழுகி ஸ்நானம் செய்யும். வெயில்காலம், மழைகாலம் ஒன்றையும் கவனிக்காமல் அவைகள் நாள் தப்பாமல் மூழ்கி உடம்பை சுத்தம் செய்யும். மழைக்காலத்திலும், நல்ல மூடுபனிக் காலத்திலும் மனிதர்களைப்போலவே காக்கைகளும் ஸ்நானம் செய்யுமுன் குளிரினால் சற்று நடுங்கிக்கொண்டிருந்து, பிறகு திடீரென்று ஜலத்தில் விழுந்து ஸ்நானம் செய்வதைப் பலர் பார்த்திருக்கலாம். அதே மாதிரி ஆந்தையும் வெய்யிற்காலத்தில் நாள் தவறாமல் தன் உடம்பு முழுவதையும் தண்ணீரில் நனைத்து அசுத்தத்தைப் போக்கிக் கொள்ளுகிறதாம். வாத்துக் கூட்டத்தைச்சேர்ந்த பக்ஷிகளெல்லாம் தண்ணீரில் முழுகி, அமிழ்ந்து எழுந்திருக்காவிட்டால், நெடுநாளைக்குப் பிழைத்து இருக்க மாட்டா என்று சொல்லப்படுகிறது. அதனால் தான் வாத்து, நீர்க்கோழி முதலிய பக்ஷிகளெல்லாம் தண்ணீரிலேயே அதிகமாய் இருக்க இஷ்டப்படுகின்றன.

குளவி, தேன், ஈ, எறும்பு, தவளை, பாம்பு ஆகிய இவைகளும் அவைகளுக்குத் தகுந்த மாதிரி தேகத்தைச் சுத்தம் செய்வதில் கவனிப்பாயிருக்கின்றன.

## CARE OF THE CHILD IN AMERICA.

### அமெரிக்காவில் பால ஸம்ரக்ஷணம்.

இன்றைக்குக் குழந்தைகளாயிருப்பவர்கள்தான் நாளைக்குப் பெரியவர்களாகிறார்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதாதலால், சிறு வயதிலேயே குழந்தைகளைத் தக்க விதமாக வளர்த்தால்தான் பிற்காலத்தில் திடகாத்ர சரீரமுள்ள ப்ரஜைகள் ஏற்படக்கூடும். ஒரு தேசத்தார் குழந்தைகளை எவ்விதம் வளர்க்கிறார்கள் என்பதைக்கொண்டு அந்த தேசத்தாரின் உயர்வு தாழ்வை நிதானித்துவிடலாம்.

பால நகர வாஸிகளாகிய தங்கள் குழந்தைகளை வ்ருத்திக்குக்கொண்டு வரும் விதம்; வீடுகளில் குழந்தைகளுக்கேற்பட்ட ஸௌகர்யங்கள்; குடி தண்ணீரினுடைய பரிசுத்தம், பால் ஸப்ளை செய்கிறவர்களுடைய ஆசாரம், ச்ரத்தை; குப்பை முதலான அசுத்தங்களை அப்புறப்படுத்துவதற்கேற்பட்ட விதிகள்; ஈ, கொசு முதலிய பூச்சிகளாலுண்டாகக் கூடிய அஸௌகர்யங்களை தடுப்பதற்கான மார்க்கங்கள்; சாக்கடைகளின் நிலைமை; உட்கொள்ளவேண்டிய காற்றின் பரிசுத்த நிலைமை, தேகப் பயிற்சிக்கு இன்றியமையாத வேலை முதலியவைகள், பொதுவாய் தங்கள் ஸுகாதார நிலைமைகளையவர்கள் கவனிக்கிற விதம் முதலிய இவைகளினால் அவர்களுடைய ஸ்திதியை நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம்.



தற்காலம் மேல்நாடுகளில் குழந்தைகளின் க்ஷேமத்தைப்பற்றி அதிகமாய் கவனித்துவருகிறார்கள். அமெரிக்காவில் குழந்தைகள் விஷயமாய் என்ன செய்து வருகிறார்களென்பதை இங்கு விவரிக்கிறோம். 200 வர்ஷங்களுக்குமுன் ஜனங்களுக்கு குழந்தை வளர்ப்பது ஸம்பந்தமான சாஸ்த்ர அறிவு ரொம்ப குறைவாயிருந்தது. இங்க்லண்டில் குழந்தைகள் பெரும்பாலும் ஐந்து வயதுக்குமுந்தியே இறந்துகொண்டு வந்தன. ஐரோப்பா கண்டம் முழுவதுமே அப்படித்தான். இதற்குக் காரணம் தரித்ரமும், அறியாமையும், அஜாக்ரதையுமே. காலக்ரமத்தில் வீடுகள் விஷயமாக செய்யக்கூடிய வ்ருத்தியாம்சங்கள், வைத்ய சாஸ்த்ரத்தின் அபிவ்ருத்தி, ஆகாரத்தினளவு, குணம் இவைகளின் வ்ருத்தி, ஸுகாதார ஏற்பாடுகளுக்கான சட்டதிட்டங்கள் அமுலுக்கு வந்தது முதலிய காரணங்களினால் மரண ஸங்க்யை குறைந்துவந்து, 1840-ம் வர்ஷத்தில் தற்போதுள்ள மரண விகிதத்துக்கு சற்று அதிகமாயிருந்தது. அதற்குப் பிறகு சில வர்ஷங்களுக்கு முன்னால் வரையில் மரண விகிதம் ஒரே சீராயிருந்தது. சென்ற சில காலமாக ஜனோபகாரிகள் குழந்தை மரணத்தை இன்னும் குறைக்க ஏற்பாடு செய்யலானார்கள்.

குழந்தைகள் இறந்து போகாமல் காக்க அனுஷ்டிக்கப்படும் தற்கால முறைகள் எல்லாம் நூதனமானவை. ப்ரான்ஸில் தான் இவைகள் முதல் முதலாக அனுஷ்டிக்கப்பட்டன. அதுமுதல் உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் அவை பரவலாயின.

மற்றெல்லா தேசங்களையும்விட ந்யூஸீலண்டில்தான் சிசுமரணம் ரொம்ப குறைவாயிருக்கிறது. அமெரிக்கா ஐக்ய நாடுகளில் சிசு மரண விகிதம் நிச்சயமாய்த் தெரியாவிட்டாலும், ந்யூஸீலண்டின் விகிதத்துக்கு இரண்டு மடங்காகுமென்று சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் குழந்தை மரணத்தைத் தடுக்கவும், குழந்தைகளைச் சரியாய் வளர்க்கும்படி செய்யவும் ஏற்பட்டுள்ள மார்க்கங்களுள் முக்யமானது "சில்ட்ரன்ஸ் பீரோ" என்னும் குழந்தை ஆராய்ச்சி சாலையாகும். அதன் தலைவி மிஸ் ஜூலியா லத்ராப் என்னும் ஒரு ஸ்த்ரீயாகும். அது ஐக்ய நாடுகளின் இண்டஸ்டிரியல் டிபார்டுமெண்டின் ஒரு கிளையாகும். அது ஏற்பட்டு நான்கு வர்ஷங்கள் தானாகின்றன. அமெரிக்காவில் பற்பல விஷயங்களைப்பற்றி கவனிக்க கவர்ன்மெண்டார் பல டிபார்ட்டுமெண்டுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த தேசத்தில் இவைகளுக்கு 'பீரோ' என்று பெயர். பன்றிகள், குதிரைகள், பசுக்களிவைகளைப்பற்றி கவனிக்க ஒரு பீரோ ஏற்பட்டிருக்கிறது. அதே மாதிரி காடு சுரங்கமிவைகள் ஸம்பந்தமாக ஒரு பீரோ இருக்கிறது.

இப்படி பற்பல பீரோக்களிருந்தும், குழந்தைகளின் க்ஷேமத்தை கவனிக்க ஒரு பீரோ ஏற்படுத்த அநேகர் ஸம்மதிக்கவில்லை. அநேக வர்ஷங்கள் இதற்காக ச்ரமப் பட்டதன்மேல் தான் "சில்ட்ரன்ஸ் பீரோ" ஏற்படலாயிற்று,

குழந்தையின் க்ஷேமத்திற்காதாரமான அம்சங்களைப்பற்றி விசாரணை செய்வதும், அப்படி விசாரணை செய்வதினாலேற்படுகிற ஞானத்தை எங்கும் கல்வி மூலமாய் பரவச் செய்வதுமே இந்த பிரோவின் வேலையாகும்.

சிசு பரிபாலனத்தைப்பற்றிய விஷயங்களை ஜனங்களுக்குப் பரவச்செய்ய "பேபி வீக்" அதாவது "குழந்தை வாரம்" என்னும் ஒரு ஸம்பவத்தைக் கொண்டாடுகிறார்கள். குழந்தை வாரத்தின் நோக்கம் இரண்டாகும். குழந்தைகள் வளர்ப்பது ஸம்பந்தமான சாஸ்திர விஷயங்களை பெற்றோர்களுக்கு அறிவிப்பது ஒன்று.

இன்னொரு நோக்கமாவது ஜனங்களுக்கு இது விஷயத்தில் அதிக ஊக்கம் உண்டாகும்படி செய்வது. இந்த நோக்கங்களை பத்ரிகைகள், விளம்பரங்கள், மீட்டிங்குகள் மூலமாயும், விருந்துகள் மூலமாயும், காட்சிகள், கான்பரன்ஸ்கள், நாடகங்கள் இவைகள் மூலமாயும் நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள்.

இவைகள் ஜனஸமூகத்தாரெல்லாரும் சேர்ந்து செய்யவேண்டிய வேலைகளாகும். இவைகளால் ஜனங்களுக்குச் சிசு பரிபாலனத்தில் அதிக ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்க ஐக்ய நாடுகளில் சென்ற 1916-ப்௵ மார்ச்சு௴ 4௳ யன்று தொடங்கி ஒரு வாரம்வரையில் அமெரிக்காவிலுள்ள முக்ய பட்டணங்களிலெல்லாம் குழந்தை வாரம் கொண்டாடினார்கள்.

ந்யூ யார்க் பட்டணத்தில் இந்தக் கொண்டாட்டம் விமரிசையாக நடைபெற்றது. அந்தப் பட்டணத்து மேயர் குழந்தை பரிபாலன கமிஷன் ஒன்று ஏற்படுத்தி, அந்த ஊரிலுள்ள சில முக்யமான ஸங்கங்களிலிருந்து மெம்பர்களைத் தெரிந்தெடுத்துக் கமிஷனில் நியமித்தார். அவர்களின் கொள்கையாவது:—குழந்தைகள் நன்றாயிருந்தால் ஜனங்கள் நன்றாயிருப்பார்கள்; அதனால் நகரமே நன்றாயிருக்கும்—என்பதே. தெருக்களில் ஓடும் ட்ராம் வண்டிகளிலும் பூமிக்குள் போகும் வண்டிகளிலும் தாய்மார்கள் குழந்தைகள் இவைகளுடைய படங்களும் மேற்சொன்ன நோக்கையும் அடங்கிய கடுதாசிகள் ஒட்டப்பட்டன. வீடுகளின் ஜன்னல்களிலும், வேறிடங்களிலும் இருட்டில் ப்ரகாசமாய்த் தெரிவதற்காக விளக்குகள் அமைந்த படங்களும், குழந்தைகளைப்பற்றிய விவரங்களும் அடங்கிய பலகைகள் தொங்கவிடப்பட்டன. ஸமாசார பத்ரிகைகளிலும் குழந்தைகள் ஸம்பந்தமான வ்யாஸங்கள் எழுதப்பட்டன. அந்த வாரத்தில் மாத்ரம் 230 பத்ரிகைகளில் 1,500 பத்திகள் வரையில் இந்த விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டனவாம். ஜவுளிக்கடைகளிலிருந்து அனுப்பப்படும் குழந்தைகளுடைய ஆடைகளடங்கிய மூட்டைகளுடன், கோடை காலத்தில் குழந்தைகளுக்கு வஸ்த்ரம் உடுத்தும் விதத்தைப்பற்றி 25,000 துண்டுப் பத்ரிகைகள் அனுப்பப்பட்டன. மருந்துக் கடைகளிலிருந்தும், பால் கடைகளிலிருந்தும் அனுப்பப்படும் ஒவ்வொரு ஸாமானுடனும், பாலையும் பால்கொடுக்க உதவும் பால் புட்டியையும் பத்ரமாக வைத்துக்கொள்ள வேண்டியதின் அவச்யத்தைப்பற்றி துண்டுப் பத்ரிகைகள் அனுப்பப்பட்டன.

அந்த நகரத்தில் குழந்தை வாரத்தின் ஒவ்வொருநாளும் என்ன செய்தார்கள் என்பதை விவரிக்கிறோம்.

1-வது நாள் சனிக்கிழமை. கோவில்களில் மேயர் எழுதியனுப்பின குழந்தை விஷயமான கடிதத்தைப் படித்தல்.

2-வது நாள் ஞாயிற்றுக்கிழமை. ஞாயிற்றுக்கிழமைப் பத்ரிகைகளில் குழந்தை வளர்ப்பைப்பற்றிய வ்யாஸங்கள்.



3-வது நாள் திங்கட்கிழமை "சிறு தாய்மார்களின்" தினம் கொண்டாடப்பட்டது. அதாவது பள்ளிக்கூடங்களிலுள்ள சிறு பெண்களை பிற்காலத்திய தாய்மார்களாக பாவித்து, அவர்களுக்கு குழந்தை வளர்ப்பைப்பற்றிய விஷயங்களைத் தெரிவித்தல். அன்றையதினம் குழந்தை ஸம்ரக்ஷணையைப் பற்றி 10 லக்ஷம் துண்டுப் பத்ரிகைகளும் புஸ்தகங்களும் இலவசமாய்க் கொடுக்கப்பட்டன.

4-வது நாள் செவ்வாய்க்கிழமை குழந்தைகளுக்குப் பால் விற்கப்படும் ஸ்தலங்களைப் போய்ப் பார்வையிடுதல். வ்யாபார ஸங்கங்கள், ஜனஸமூகஸங்கங்கள் ஆகிய இவைகளின் ப்ரதிநிதிகளுக்காக ஸர்க்கார் மோட்டார் வண்டிகள் இலவசமாக விடப்பட்டன.

5-வது நாள் புதன்கிழமை ஆஸ்பத்ரிகளையும், மருந்துச்சாலைகளையும் போய்ப் பார்வையிட்டு குழந்தை ஸம்பந்தமான விஷயங்களை அறிதல்.

6-வது நாள் குழந்தைகளைக் காப்பாற்றி வரும் ஸ்தாபனங்களில் அவைகளைப் பார்க்க வருபவர்களுக்கு குழந்தைகளைப் பராமரிக்கும் வழிகள் நிரூபிக்கப்பட்டன. பிற்பகலில் குழந்தைகளையும் தாய்மார்களையும் மோட்டார் வண்டிகளில் ஏற்றி ஸவாரிபோனார்கள். வந்த குழந்தைகளில் ரொம்ப நேர்த்தியாயிருந்த குழந்தைக்கு ஒரு பெரிய வெகுமதியளித்தார்கள்.

7-வது நாள். இன்று 20,000 குழந்தைகளையும் தாய்மார்களையும் இலவசமாக ஸாதாரண படகுகளிலும் ஸ்டீம் படகுகளிலும் ஏற்றிக் கொண்டு உல்லாஸ ஸஞ்சாரம் செய்யவிட்டார்கள். படகுகளில் ஸர்க்கார் வைத்யரும் நர்ஸும் கூடவிருந்து குழந்தைகளை வளர்ப்பதைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார்கள். இதைத் தவிர உல்லாஸத் தோட்டங்களிலும் விளையாடும் ஸ்தலங்களிலும் ஸங்கீதக் கச்சேரிகள் நடைபெற்றன.

இவ்விதம் குழந்தை வாரம் நடத்துவதைத் தவிர, வேறு ஸாதனங்களும் அந்த தேசத்தில் ஏற்பட்டிருக்கின்றன. 141 நகரங்களில் குழந்தைகளின் ஸௌக்யத்தை கவனிக்க அநேக ஆபீஸுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தாய்மார்கள் அவ்விடங்களுக்குப்போய் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுப்பது விஷயமாய் ஆலோசனைக் கேட்டுக்கொண்டு போகிறார்கள்.

அந்த ஸ்டேஷன்களில் நர்ஸ்களும் இருக்கிறார்கள். அவர்கள் வீடுகளுக்குப்போய் டாக்டர்கள் சொன்ன விதிகளைத் தாய்மார்கள் அனுஷ்டிக்கிறார்களா வென்று கவனித்து வருகிறார்கள். சீக்கிரம் ப்ரஸவிக்கக்கூடிய பெண்பிள்ளைகளுக்கு ஸுகாதார ஸம்பந்தமான புத்திமதிகள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. 182 நகரங்களில் இந்தமாதிரி வேலைகள் நடக்கின்றன. அந்த தேசத்தில் 32 நாடுகளில் குழந்தைகள் குருடாய் பிறக்காமலிருக்கும்படி அதற்கென்று ஏற்பட்ட சிகிச்சைகள் செய்யும்படி கட்டாயப்படுத்த சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சில உயர்தரப் பள்ளிக்கூடங்களில் பெண்பிள்ளைகளுக்கு டாக்டர்கள், குழந்தைக்கு எப்படி ஸ்நானம் செய்துவைப்பது, எப்படி உடுப்பது, எப்படி ஆகாரங்கொடுப்பது என்பவைகளைப்பற்றி உபன்யாஸம் செய்கிறார்கள்.

குழந்தை என்ன கேட்கிறதோ அதையெல்லாம் கொடுக்கிறது தாய்களுக்கழகல்ல. தாய்கள் குழந்தைகளுடைய ஸௌகர்யத்துக்கென்ன அவச்யமோ அவைகளை நன்றாய்த் தெரிந்துகொண்டால், குழந்தை வளர்ப்பதில் பிசகுகள் நேரிடா.

## THE KUTUB MINAR.
## குடுப் மினர் கோபுரம்.

டெல்லியிலுள்ள குடுப் மினர் கோபுரமானது, அந்த நகரில் ஆண்டுவந்த அடிமை வம்சத்து அரசர்களுள் ஒருவராகிய ஆல்டாம்ஷ் என்பவரால் கட்டி முடிக்கப்பட்டதென்று பலர் நம்பிவருகிறார்கள். அல்டாம்ஷ் 13-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டில்லியில் ஆண்டுவந்தார். அப்படி நம்புவதற்குக் காரணமென்னவென்றால், கோபுரமானது மகம்மதிய சிற்பமுறையில் கட்டப்பட்டிருக்கிறதென்பதே.

லாகூர் சட்ட காலேஜில் ப்ரின்ஸ்பலாயிருக்கும் மிஸ்டர் கன்வார்ஸெய்ன் என்பவர் அது சரியான கொள்கை யல்லவென்று சொல்லுகிறார். அது இன்னும் வெகு காலத்துக்குமுன் கட்டப்பட்டதென்றும், டில்லியை ஜயித்து பல தடவைகளில் அதை தங்கள் ராஜதானியாய்ச்செய்துகொண்ட பழைய ஹிந்து ராஜாக்களில் ஒருவர், டில்லியை ஜயித்ததற்காக ராஜஸூயயாகஞ்செய்து அதற்கு அடையாளமாக இந்த குடுப் மினரைக் கட்டியிருக்கவேண்டுமென்று அவர் சொல்லுகிறார்.

ஸுமார் 1960-வர்ஷங்களுக்குமுன் டில்லியில் டில்லு என்ற அரசர் ஆண்டுவந்தார். அவர் காலத்தில்தான் அந்த பட்டணத்துக்கு டில்லியென்ற பெயர் வந்தது. உஜ்ஜனியை ஆண்டுவந்த விக்ரமாதித்யன் ஸிந்து நதி வரையில் தன்னுடைய அரசாட்சியை விஸ்தரித்து டில்லு ராஜாவைத் தோற்கடித்து ராஜஸூயயாகஞ் செய்து கிறிஸ்து பிறக்குமுன் 57-ம் வர்ஷத்தில் விக்ரம சகத்தை ஸ்தாபித்தார். கிறிஸ்து பிறந்து 7-வது நூற்றாண்டுக்குப் பின் டில்லியில் ஒருவரும் ஆளவில்லை. பிறகு அனங்கபால் என்னும் ராஜா அதை மறுபடியும் தன் ராஜதானியாய்ச்செய்து, அங்கே ஒரு இரும்பு ஸ்தம்பத்தை ஸ்தாபனஞ் செய்தார். அவருக்குச் சில காலத்துக்குப் பிறகு டில்லியின்பேரில் படையெடுத்துச்சென்ற அரசன் விசால்தேவ் விக்ரம ராஜ என்றவர் குடுப் மினரைச் சுற்றியுள்ள கோவிலைக் கட்டினர். மேற்சொன்ன பல அரசர்களில் யாராவது ஒருவர் அந்த மினரைக் கட்டியிருக்கலாம். அந்த குடுப் மினருடைய விஸ்தீரணத்தையும் அதினுடைய கட்டிடங்களையும், பாழான விடங்களையும், ஆல்டாமிஷ் மசூதியையும், ராய்பதோரா கோவிலையும், அவைகளினுறுப்புகளையும் அடையாளங்களையும் கவனித்து ஒத்துப்பார்த்தால், முதலில் குடுப் மினர் ஏழுமாடிகளுள்ள கட்டிடமாயிருந்ததாகவும், அந்த கட்டிட தினிஸானது தென்னிந்தியாவில் காணக்கூடிய அனேக கோவில்களின் தினிஸைப்போலவும், ஹிந்து சிற்ப சாஸ்த்ர மாதிரியாயும் இருப்பதாகவும் வெளியாகிறது.

மகம்மதிய காலத்தில் கட்டப்பட்ட அல்டாம்ஷ் மசூதியின் கட்டிடவேலையும் குடுப் மினர் கட்டிடவேலையும் ஒரே தினிஸாயிருந்தாலும், குடுப்மினரில் காணப்படும் மணி, சங்கிலியுடன் கூடிய விசித்ர விநோதங்கள் ஆல்டாமிஷ் மசூதியிலில்லை. இதுதான் இரண்டுக்குமுள்ள முக்ய வித்யாஸம். இரண்டும் ஒரே மாதிரியான வேலைப்பாடாயிருப்பதற்குக் காரணமென்னவெனில், மசூதியில் வேலை செய்த சிற்பிகள் குடுபில் வேலைசெய்த சிற்பிகளின் பிள்ளைகள் பேரன்களாயிருந்ததே. குடுபில் கோரானிலிருந்து எடுத்தெழுதப்பட்ட கவிகளடங்கிய கற்கள், அதில் மற்ற விடங்களிலுள்ள கற்கள் அடிமுந்தியும் முகம் பிந்தியுமாயிருப்பதுபோலிராமல், முகம் முந்தியும் அடி பிந்தியுமாயிருக்கின்றன. இதற்குக் காரணம் இவைகள் மகம்மதியர்காளில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டன என்பதே. சில ஐரோப்பிய நிபுணர்கள் குடுப் மினரின் அமைப்புக்கும் அல்டாம்ஷ் மசூதியின் அமைப்புக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லையென்று அபிப்ராயப்படுவதோடு, குடுப் மினர் கோபுரமானது மகம்மதியர் காலத்து முன்னால் ஹிந்துக்களால் கட்டப்பட்டது என்று சொல்லுகிறார்கள்.

குடுப் மினர் கோபுரமானது முன்பு ஒரு தடவை இடிவிழுந்து சேதமடைந்ததென்றும், அதனால் டில்லியில் 1351-ம் வர்ஷம் ஆண்டுவந்த பிரோஸ்ஷா அரசர் அந்த கோபுரத்தைப் பழுதுபார்த்து சரிப்படுத்தினரென்றும் சொல்லப்படுகிறது. மொத்தத்தில் இந்த கோபுரம் 7-தடவை புதுப்பிக்கப் பட்டது.



## TREES PRODUCING DYES, OIL AND FIBRE.

By Y. S. VENKATARAMANA AIYAR, B.A., B.L.

## சாயம், எண்ணெய், நார் முதலியவற்றிற்கு உபயோகமாகும் மரங்கள்.

தற்காலம் நடந்து வரும் பெரிய யுத்தமானது இந்திய வ்யாபாரத்தை தலை கீழாக்கி, இந்திய கைத்தொழில்களில் பெரிய குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. எவ்வளவு வரையில் லாபகரமாய் பலவித கைத்தொழிற்சாலைகளை ஏற்படுத்தலா மென்பதை அறியும்படி இந்திய கைத்தொழில் கமிஷனும் விசாரணை நடத்திவந்திருக்கிறது. இந்திய ஜனங்களோ, தாங்கள் அதிகமாய் பிறதேசங்களுடன் வ்யாபாரம் செய்ய முடியாமல்போனலும், தங்களுக்கு வேண்டியவைகளையாவது நமது தேசத்திலேயே ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்து வருகிறார்கள்.

தற்காலத்தில் இந்தியர்கள் அதிகமாக கைத்தொழில் விஷயங்களை கவனித்து வருகிறார்கள். இத்தருணத்தில் இந்தியாவில் சாயமெடுத்தல், எண்ணெய் இறக்குதல், நார் உரித்தல், தோல் பதனிடுதல் ஆகிய கைத்தொழில்களுக்கு இன்னின்ன ஸாமான்கள் கிடைக்கக் கூடுமென்பதை கவனித்தல் நலம். வர்ஷந்தோறும் ஷை கார்யங்களுக்காக பயிர்செய்யப்படும் நிலக்கடலை, நீலிபோன்ற சிறுசெடி பூண்டுகளை யாவரும் நன்கறிவார்கள். ஒருதரம் உற்பத்தி செய்துவிட்டால் நிரந்தரமாய் ஷை ஸாமான்களை கொடுக்கக்கூடிய சில மரங்களை மாத்ரம் இங்கு கவனிப்போம்.

### I. சாயம்.

(1) ரங்கமாலி (Bixa Orellana). இது ஸாதாரணமாய் பெரிய மரமாவதில்லை. இந்தச்செடியை விதையிலிருந்து ஸுலபமாய் உற்பத்தியாக்கலாம். விதையை மூடியிருக்கும் சிவந்த தோலினின்றும் பிரகாசமான மஞ்சள் நிறமுள்ள ஆர்னட்டோ என்னும் சாயம் உண்டாகிறது. கொதிக்கும் ஜலத்தில் ஷை பீலியை போட்டு நசுக்கினல், விதைகள் தனியாய் வந்துவிடும். பிறகு ஜலத்தை தெளியவைத்தால் பீலிகள் அடியில் தங்கும். மேலுள்ள ஜலத்தை கொட்டிவிட்டு, அடியிலுள்ள பீலி முதலிய வண்டல்களை கொஞ்சம் எண்ணெயுடன் கலந்து அகலமான பாத்ரங்களில் போட்டு நிழலில் உலரவிடவேண்டும். ஆர்னட்டோ சாயம் இப்பொழுது அதிகமாய் உபயோகப்படுவதில்லை. முன் காலத்தில் பட்டுக்கும் சீட்டிகளுக்கும் அதிகமாய் உபயோகபட்டு வந்தது.

(2) படாங்கம்; சபாங்கம். (The Sappan-wood tree. Caesalpina Sappan).

இது சிறிய முள்செடி. விதையினின்றும் ஸுலபமாய் உற்பத்தியாகும். இறகுபோன்ற

இலைகளும் பெரிய மஞ்சள் புஷ்பங்களும் கூடிய இச்செடி பார்ப்பதற்கு சேர்த்தியாயிருக்கும். சிவப்பு நிறமுள்ள வைரம்பாய்ந்த மரத்திலிருந்து "குலால்" என்னும் வர்ணம் உற்பத்தியாகிறது. ஜலத்தை செந்நிறமாக்கும் இந்த மரத்தில் மருந்து குணமுமுண்டு. இந்த சாயம் நல்ல விலைபாய் விற்கிறது.

(3) தாசாணி. (The Shoe-flower. Hibiscus Rosa-Sinensis). இதில் பலவகைகள் உண்டு. இதுதோலை கறுப்பு நிறமாக்கும்.

(4) சேராங்கொட்டை மரம். (The Marking-nut tree. Semecarpus Anacardium). இதன் பழம் அல்லது கொட்டையில் அதிக உறைப்பான (காரமுள்ள) தைலமிருக்கிறது. இதை மருந்துவகையில் அதிகமாய் உபயோகப் படுத்துவார்கள். தவிர இது கறுப்பு மெருகு எண்ணையாகும். சுண்ணாம்பு ஜலத்துடன்சேர்த்து துணிகளுக்கு அடையாளம் போட உபயோகப்படும். யானைகளைப் பழக்குவதில் எண்ணெய் உபயோகமாகும்.

(5) கடுக்காய் மரம். (The black Myrobalan tree. Terminalia Chebula). இலைகளில் பூச்சிகள் முட்டையிடவும் அவை முரடுதட்டி உருண்டை கொட்டையாகும். சிறு குருத்துகளிலும் இவ்விதம் உண்டாகலாம். இவைக்கும் மரத்தின் பழத்திற்கும் சம்பந்தமில்லை. இவை அதிக துவர்ப்புள்ளன. இவையினின்றும் நல்ல எழுதும் மை காய்ச்சலாம். முற்காலத்தில் கிழக்கில் பெயர்பெற்று வந்த சிட்டி சாயக்காரரின் மஞ்சள் சாயம் இதிலிருந்துதான் உண்டாகும். மிகச் சிறந்த மஞ்சள் சாயம் இதினின்றும் உண்டாகும். மரத்தின் பழங்கள் உலர்ந்தால் கடுக்காயாகின்றன.

(6) பட்டுப்பூச்சி செடி. (The Indian Mulberry tree. Morinda Citrifolia ) இது எப்பொழுதும் பச்சையாயிருக்கும் சிறிய செடி. பளபளப்புள்ள இலையும், வாஸனையுள்ள வெண்ணிறமான புஷ்பங்களையுமுடையது. இதன் வேர்களிலிருந்து மட்டி வர்ணமான மஞ்சள் சாயமிறக்கப்படும்.

(7) சந்தனவேம்பு. கல்களிஞ்சி. (Cedrela Toona). மலைகாடுகளிலும் குடகிலும். இது பெரிய மரமாகிறது. விதையினின்றும் ஸுலபமாய் உண்டாக்கலாம். தேன் வாஸனையுள்ள புஷ்பங்களினின்று "குல்நாரி" என்னும் சிகப்பு, மஞ்சள் சாயங்கள் இறக்கப்படும். மரமும் விலையுள்ளது. பலவித தச்சுவேலைகளில் உபயோகமாகும்.

(8) மாதுளை. (The Pomegranate tree. Punica granatum). இப்பழம் மகமதியர்களுக்கு மிக ப்ரீதியானது. பட்டையினின்றும் சாயமிறக்கப்படும். பழத்தின் தோலினின்றும் அதிக மஞ்சள் நிறமுள்ள சாயமுண்டாகிறது.

(9) வேம்பாடம் பட்டை. (Venbilags Madraspatna). அதிக உன்னதமான மரங்களின் மீதேறும் பெரிய கொடி. வேர், பட்டை இவைகளிலிருந்து பேர்போன மஞ்சள்கலந்த சிவந்த சாயம் இறக்கப்படும்.

(10) கபிலிமரம். (The Kamala-Dye-tree. Mallotus Philippinensis). மரம் தழைக்க அதிக ஈரம்வேண்டியிருப்பதால், நதிகள், கால்வாய் ஓரங்களிலும், மலை ஸமீபத்திலும் அநேகமாய் பார்க்கலாம். பழம் பழுக்கும்பொழுது மண் வாஸனை யடிக்கும். இதிலிருந்துசெடியை கண்டு பிடிக்கலாம். காய் காய்க்கும்பொழுதே அதை சுற்றிலும் சுத்த சிவப்பானபொடி நிரம்பியிருக்கும். பழுத்த பிற்பாடு பழத்திலிருந்து அப்பொடியை துணியின்மீது உதிர்ப்பார்கள். இதுவே முன்காலத்தில் ப்ரஸித்திபெற்ற "கமலா" என்னும் சாயம். ஆனால் ப்ரயோஜனமற்றவும் மலிவாய் கிடைக்கக் கூடியவுமான சாயங்கள் உற்பத்தியானவுடன், இது அதிகமாய் வெளிவருகிறதில்லை. சாயத்திற்கு மாத்ரமேயல்லாமல் வயிற்றுப் பூச்சிகளை கொல்ல மருந்தாகவும் இதற்கு இப்பொழுதும் க்ராக்கியுண்டு.

(11) வெப்பாலை. (Ivorywood. Wrightia Tinctoria). வாஸனையுள்ள இதன் வெண்ணிறமான புஷ்பங்கள் பூஜைகளில் உபயோகப்படும். கடைச்சல் வேலைகளுக்கு இந்த மரம் சிறந்தது. மைஸூர் ஸமஸ்தானத்தில் மத்தூர் சென்னபட்டணத்தில் இந்த மரத்தால் அநேகவித பொம்மைகள் செய்கிறார்கள். இலைகள் உலர கறுப்பு நிறமாகும். அதிலிருந்து ஓர் வித நீலிச்சாயம் இறக்கப்படும். இப்பொழுதும் மைஸூரில் இந்தச் சாயம் இறக்கப்படுகிறது.

(12) செஞ்சந்தனம், சந்தனவேங்கை. (The red Sanders or Sanders red tree. Pterocarpus Santalinus). கடப்பை, ஆற்காடு ஜில்லாக்களில் இவைகளைக் காணலாம். மரத்தின் சேகை புதிதாய் அறுக்கும்பொழுது ஆரஞ்சு வர்ணமாக இருக்கும். காற்றாட ஊதா நிறமாகவும் மாறும். சில சடங்குகள் நடத்தும்பொழுது மரத்தை அரைத்து தேகத்தில் பூசிக்கொள்வதுண்டு. ஆகையால் தான் இதற்கு செஞ்சந்தனம் என்று பெயர்வந்தது. மரத்தையும் வேர்களையும் துண்டுகளையும் சாயத்திற்காகவே ஏற்றுமதி செய்கிறார்கள். ப்ரெஞ்ச் பாலிஷ் (French polish) என்னும் மெருகு எண்ணெயில் இது சேர்க்கையாகும். சில காலத்திற்குமுந்தி 1000 ராத்தல்கொண்ட வேர் முதலிய துண்டுகள் 9 ரூபாய் வரை விற்றது.

(13) மஞ்சித். (The Indian Madder-Rubia Cordifolia). காலி இடங்களிலும் க்ராமாந்தர வேலிகளிலும் குன்றுகளிலும் இக்கொடி படர்ந்திருப்பதை காணலாம். வேரினின்றும் சிவப்புச் சாயமிறக்கப்படும்.

(14) சருவேலன், வெள்வேலன். இவற்றின் பட்டையினின்றும் சிவப்பு சாயம் இறக்கலாம். (இன்னும் வரும்.)

ஒய். எஸ். வெங்கட்டரமணய்யர்.



## STORY TELLING.

K. T. SUNDARARAJACHARIAR, B. A., L. T.

## கதை சொல்லுதல்.

கதைகள் எப்பொழுது ஏற்பட்டனவென்பது ஒருவருக்கும் தெரியாது. வெகு நாளாயிருக்கின்றன வென்பது மட்டிலும் நிச்சயம். ஹிந்துக்களினுடைய புராதன புஸ்தகங்களிலும், மகம்மதியர்களினுடைய புஸ்தகங்களிலும், கிறிஸ்தவர்களினுடைய முக்ய புஸ்தகமாகிய பைபிளிலும், கதைகள் காணப்படுகின்றன. மற்ற மதங்களிலும் இப்படியே தானிருக்கின்றன. ஏனென்றால் ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு ஸத் விஷயத்தை உபதேசிக்க வேண்டுமானால், கதை மூலமாக உபதேசிப்பது வெகு காலத்து வழக்கமாயிருக்கிறது. ஏன் அப்படி யிருக்கவேண்டும்? இதைத் தவிர வேறே உபாயங்கள் இல்லையா என்று பார்க்குமளவில், இப்படிச் செய்வதே உபதேசித்ததை ஜனங்கள் சீக்ரமாயும் நன்றாயும் அறியும்படி செய்கிறது. ஆகையினால்தான் அநாதி காலமாய்க்கொண்டு பூர்வீகர்களெல்லாம், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், இந்த உபாயத்தை அனுஸரித்து வந்திருக்கிறார்கள். இப்பொழுதுங்கூட குழந்தைகளானாலுஞ் சரி, பாலியர்களானாலுஞ் சரி, வயஸு ஆனவர்களானாலுஞ் சரி, எல்லாருக்கும் கதை கேட்பதிலும் ஆனந்தம், கேட்டதை மற்றவர்களுக்குச் சொல்வதிலும் த்ருப்தி.

குழந்தைகள் அதி பால்யமாயிருக்கும் ஸமயத்தில்கூட கதை கேட்க ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்கு கதை யென்றால் பரமானந்தம். சாப்பிடாமல் பிடிவாதம்செய்கிற குழந்தைகள் கூட, கதைகளைச்சொல்லி சாதத்தை ஊட்டினால் சாப்பிடுகின்றன.

குழந்தைகள் அதி பால்யமாயிருக்கும் ஸமயத்தில் அவர்களுக்கு எந்தக் கதைகளைச் சொல்லலாம், எந்தக் கதைகளைச் சொல்லக்கூடாதென்று கவனிப்போம். ஒருவனுடைய நடத்தையானது அவனுடன்கூட விளையாடும் தோழர்களின் நடத்தையையும், அவர்கள் படிக்கும் புஸ்தகங்கள் கற்பிக்கும் நீதிகளையும் பொருத்திருக்கிறது. கெட்டுப்போன இரண்டு மாம்பழங்களோடுகூட ஒருடஜன் நல்லபழங்களை வைத்துவிட்டு, சில நாட்கள் கழிந்தபின் பார்த்தால் எல்லாப்பழங்களும் அழுகியே இருக்கும். அதேமாதிரி குழந்தைகளைக் கெட்டஸகவாஸத்தில் விட்டுவைத்தால், சில காலத்துக்குள் அவர்கள்கெட்டுப்போவார்கள். ஆகையால் குழந்தைகளுக்குத் நல்ல பையன்களையே தோழர்களாக இருக்கவிடவேண்டும். தோழர்களைப்போலவே கதைகளும் குழந்தைகளை நல்வழியில் திருப்பக்கூடியவைகளாக இருக்கவேண்டும். கதை சொல்லுவதில் கவனிக்கவேண்டியவை பின்வருமாறு.

(1) கதையானது அவர்களுடைய புத்திக்கு எட்டினதாயும், அவர்கள் அறியக்கூடியதாயும், அதிக பெரியதாயிராமலும் இருக்கவேண்டும்.

(2) கதையைக் குழந்தைகள் நன்றாய்க் கேட்ட மாத்ரத்தில், அதன்ஸாராம்சம் இன்னதென்று தெரிந்து, மறுபடியும் அவர்கள் சொல்லும்படியான எளியநடையில் அவர்களுக்குச் சொல்லவேண்டும். சில ஸமயங்களில் திரும்பத் திரும்பச்சொல்லவேண்டியிருக்கும். அதனால் பிசகு கிடையாது. சொல்லுவது அவர்களுக்குத் தெரிந்து, அவர்கள் அதைப் பின்தொடரவேண்டு மென்பதுதான் முக்யம்.

(3) கதையைச் சொன்ன மாத்ரத்தில் சிறுவர்களினுடைய மனதில் ஒரு புத்திமதி ஏற்படவேண்டும். இந்த புத்திமதியை கதைக்கு முன்னமேயாவது, அல்லது கதை சொல்லிமுடிந்த மாத்ரத்திலாவது, குழந்தைகளுக்கு தெரிவிக்கக்கூடாது. அவர்களிடமிருந்து இதை வாங்கவேண்டும். முதல் முதலில் சொல்லத் தவறினாலும், உடனேயாவது சொல்லும்படி இரண்டொரு கேள்விகளைக் கேட்கவேண்டும். அப்படிக்கேட்டும் சொல்லத் தவறினால் கதையை அவர்கள் நன்றாய் அறியவில்லை என்பது ஏற்படும்.

(4) மேலும், கதைகள் சொல்லும் நீதியானது எப்பொழுதும் குழந்தைகளுக்குவேண்டிய புத்தியைக் கொடுக்கக் கூடியதாயிருக்கவேண்டியது அவச்யம் உதாரணமாக "பொய் சொல்லக்கூடாது"; "உண்மையே பேசவேண்டியது" முதலானவைகள்.

(5) இந்த புத்திமதிகள் அவர்களால் அனுஷ்டிக்கக் கூடியதாயும், அவர்களுடைய புத்திக்கு எட்டக்கூடியதாயு மிருக்கவேண்டும். சிறு பையன்களுக்கு "பரப்ரும்ம" ஸ்வரூபத்தைக் குறித்து உபதேசிப்பதில் ப்ரயோஜனமில்லை.

(6) நீதி வாக்யங்களெல்லாம் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கக்கூடாது. இன்றைக்கு தாயார் சொல்வதை கேட்கவேண்டுமென்றும், மறுநாள் அதற்கு விரோதமாய் ஒரு கதையும் சொன்னால், பையன்களுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் இரண்டையும் விட்டுவிடுவார்கள். அல்லது தோன்றினபடி செய்வார்கள்.

(7) அவரவர்கள் வயஸுக்கு தகுந்தபடி நீண்டதாயும், அனாவச்யமான வர்ணனைகளினாலும், கதைக்கு ஸம்பந்தமில்லாத வர்ணனைகளாலும், முக்யமான ஸமாசாரத்திலிருந்து விலகிப்போகாமலும் இருக்கவேண்டும். அப்படிக் இல்லாவிட்டால் அனாவச்யமான வர்



ணனைகளில் பையன்களுடைய புத்தி சென்று கதையின் முக்ய பாகத்தை அவர்கள் மறந்து விடுவார்கள்.

(8) கதைகளை குழந்தைகளுக்குச் சொல்லுவதில் நன்மைக்கு நன்மையும், தீமைக்கு தீமையும் பலனாக அமைந்துள்ள கதைகளையே தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு உலகத்தின் அனுபோகம் இன்னும் ஏற்படவில்லை. அவர்களுடைய மனஸு முழுவதும் நல்ல எண்ணங்களுடன் கூடினதாயுமிருக்கும். நன்மை செய்தால்தான் நன்மை விளையும்; ஆகையினால் நாம் நன்மையே செய்ய வேண்டுமென்பது அவர்கள் மனதில் நன்றாய் ஏற்படவேண்டியது. இல்லாத விஷயத்தில் அவர்கள் மனஸு கலங்கி இஷ்டப்படி செய்யத் தொடங்கி விடுவார்கள்.

(9) கதையைக் கேட்ட மாத்ரத்தில் குழந்தைகளினுடைய மனதில் அனாவச்யமான பயமும், கெடுதலும் உண்டாக்கக்கூடாது. நாம் செய்யும் கார்யங்களினுடைய லாபநஷ்டங்களை நாமே அனுபவிக்கவேண்டியது. நல்லதுசெய்தால் நல்லதுவிளையும், கெடுதல்செய்தால் கெடுதல் விளையுமென்பது தவிர, மற்றபடி கெட்ட நம்பிக்கைகளை அவர்கள் மனதில் உண்டாக்கக்கூடிய கதைகளைச்சொல்லவேகூடாது.

சில குழந்தைகளுக்கு சில வகைக் கதைகளிலே தான் ப்ரியமிருக்கிறது. ஆகையினால் குழந்தைகளுக்கு எந்தக் கதைகளில் ப்ரியம் ஏற்படுகிறதோ அந்தமாதிரிக் கதைகளைச் சொல்லி அவர்களை உத்ஸாஹப்படுத்த வேண்டுமே தவிர, நமக்கு தெரிந்ததையெல்லாம் சொல்லதுகூடாது.

குழந்தைகளுக்கு பால்ய வயஸில் சொல்லும் கதைகளில் ஸுகமும் உத்ஸாகமும் அதிகப்பட்டதாயும், கஷ்டம் மிகவும் குறைந்ததாயுமிருக்கவேண்டும். ஏனென்றால் உத்ஸாஹம்தான் குழந்தைகளின் தேக வளர்ச்சிக்கு முக்ய காரணமாயிருக்கிறது. அவர்களுக்கு பொம்மைகள் வாஸ்தவமான தோழர்களே. அவர்கள் பொம்மைகளோடு பேசுகிறார்கள். அப்படி அவர்கள் செய்வதற்குக் காரணம், பகுத்தறியும் சக்தி ஏற்படாததே. ஆதலினால் அந்தவயஸில் தேவதைகள், பூதகணங்கள் ஆகிய இவைகள் ஸம்பந்தப்பட்ட கதைகளை அவர்களுக்குச் சொல்லுவதினால் கெடுதலில்லை. சிலர் இப்படிப்பட்டக் கதைகளைச் சொல்லுவதனால் குழந்தைகளுக்கு உலக வ்யாபாரத்திற்கு விரோதமான எண்ணம் ஆதியிலேயே ஏற்படுகிறது என்றும், அப்படி ஏற்படுவதனால் உலகத்தின் யதார்த்த ஸமாசாரம் தெரியாமல் போகிறதென்றும், சொல்லுகிறார்கள். அது பிசகென்றே தோன்றுகிறது. ரொம்பநாளாய், எல்லா தேசங்களிலும், எல்லா மதஸ்தர்களும் இப்படிப்பட்ட தேவதா ஸம்பந்தமுள்ள கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொண்டே வருகிறார்கள். மேலும் குழந்தைகளினுடைய மனதில் அப்படிப்பட்ட எண்ணங்களெல்லாம் அந்த வயதில் ஏற்படுவது ஸகஜமாயிருக்கிறது. அப்போதைக்கு அவர்களுக்கு ஒரு விதமான ஆனந்தம் ஏற்படுகிறது. காலமாக ஆக புத்திக்கூர்மை ஏற்படவே, அவர்களுக்கு அந்தக் கதைகளில் ஆசையும் போய்விடுகிறது. ஆகையினால் எந்த வயஸாயிருந்தாலும், வயஸுக்கு தகுந்தபடி கதைகளைச் சொல்லவேண்டும்.

கதைகள் படிப்பதினால் ஏற்படும் ப்ரயோஜனங்கள் அநேகமிருக்கின்றன:—

(1) சிறுவர்களினுடைய பாஷாஞானத்தைக் கதைகள் அதிகப்படுத்துகின்றன. ஒரு கதையைப் பையன்களுக்கு தெரியும்படி கறுப்புப் பலகையில் வ்யக்தமாய் எழுதிவிட்டால், அதைப் பார்த்து பையன்கள் நன்றாய் அறிந்து கொள்வார்கள். கதையைத் தெறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையினால் பாஷையையும்,

அதன் வார்த்தைகளையும் நன்றாய் அறிந்து கொள்ளுகிறார்கள்.

(2) கதைகள் மூலமாக அநேக விஷயங்களை பையன்களுக்கு ஸௌலபமாய் கற்பித்துவிடலாம். காட்டு ம்ருகங்களைப்பற்றியும் செடி முதலானவைகளைப்பற்றியும் மற்றுமுள்ள அநேக விஷயங்களைப்பற்றியும் அவர்கள் அறிந்துகொள்ள இடமுண்டு.

(3) சொன்ன கதைகளைத் திருப்பிச் சொல்வதினால் அவர்களுக்கு சொல்லுந்திறமை வ்ருத்தியாகிறது.

இப்படிப்பட்ட உபயோகங்களையெல்லாம் உத்தேசித்துத்தான் தற்காலத்திய வித்யா வித்வன்னர்கள் கீழ் வகுப்புகளில்கூட தேசசரித்ரம், பூகோளசாஸ்த்ரம் முதலியபாடங்களுக்கு உரிய கதைகளைக் கற்பித்துவருகிறார்கள். அப்படிச் செய்வதானது பின்னிட்டு வாசிக்கப்போகும் பாடங்களுக்கு நல்ல அஸ்திவாரமாக ஏற்படுகிறது. கதைகளை எல்லாரும் சொல்ல முடியாது. அதை சரிவரச் சொல்வது மிகவும் கடினம். கதை சொல்லுபவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களாவன:—

(1) அடுத்த வகுப்பில் அவர்கள் வாசிக்க வேண்டிய ஸமாசாரங்களை இப்பொழுது கதைரூபமாய் சொல்லவேண்டியது. இதுதான் கான்ஸென்ட்ரிக் (Concentric System) ஸிஸ்டம் என்னும் ஏற்பாட்டின் கொள்கை.

(2) கதை சொல்லும் ஸமயத்தில் பையன்களின் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டியது. அவர்களுக்கு சொல்லுவது விளங்குகிறதா என்று பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும்.

(3) கதைகளில் உண்டாகும் விஷயங்களை நன்றாய் நடித்துக் காட்டவேண்டும். சிரிக்க வேண்டிய ஸமயத்தில் சிரித்தும், அநுதாபம் காட்டவேண்டிய ஸமயத்தில் அநுதாபத்தைக் காட்டியும் சொல்லவேண்டும்.

(4) இப்படிச் செய்வதற்கு கதைகளை புஸ்தகங்களிலிருந்து படிக்காமல், தானே சொல்ல வேண்டும். சொல்லும் ஸமயத்தில் விநோதமாகக் காணப்படும் பேச்சு வழக்கங்களையும் சைகைகளும் ஏற்படாமல் சொல்லவேண்டும். ஏனென்றால் பையன்கள் உபாத்யாயருக்கு ஏற்பட்டுள்ள சைகைகளையும் பேச்சு வழக்கங்களையும் கவனித்துக்கொண்டிருப்பார்கள். கதையை விட்டுவிடுவார்கள்.

(5) கதை சொல்லுபவர்கள் தெளிவாயும், பையன்களுக்கு விளங்கும்படியாயும் பேச வேண்டும். நடுவில் பையன்களை கேள்விகள் கேட்கக்கூடாது. அப்படிச் செய்வதனால் முன் சொன்னதற்கும் பின் சொல்லப்போவதற்கும் உண்டான ஸம்பந்தம் மறந்துவிடும். ஆனால் பையன்கள் யாராவது கேள்விகள்கேட்டால், அதற்கு மட்டிலும் பதில் உடனே சுருக்கமாய்ச் சொல்லவேண்டியது. இல்லாவிட்டால் பையன்களுக்கு மேலே ஓடாது. அனாவச்யமானவும், கதைக்கு ஸம்பந்தமில்லாதவுமான கேள்விகளை கேட்க விடக்கூடாது.

கதை சொல்லுவதானது எல்லா வகுப்பிலும் ஏற்பட்டிருக்கிறது. மேலே போகப் போக ஓரல் காம்போஸிஷன் என்னும் வாய்மொழியாக வ்யாஸம் செய்தலில் கதைகள் மிகவும் பயன்படும்.

மேலேசொன்ன காரணங்களால் பையன்களுக்கு சரியான கதைகளைச் சொல்லவேண்டியது, அவர்களுடைய நன்மையையே எப்பொழுதும் கருதுகிறவர்களான பெற்றோர்களினுடையவும், உபாத்யாயர்களினுடையவும் கடமையாகும் என்பது நிச்சயம்.

கே. டி. ஸௌந்தரராஜாச்சார்யார்.



# INDIAN VITAL STATISTICS.

## இந்தியாவின் ஜனன மரணக் கணக்கு.

ஜனன மரணக் கணக்குகளால் ஒரு தேசத்தின் ஸௌகாதார நிலைமையை நன்கு அறிந்து கொள்ளலாம். நமது தேசத்தின் ஜனன மரணக் கணக்குகள் இந்தியா கவர்ன்மெண்டின் கணக்கு விவர டிபார்ட்மெண்டாரால் வர்ஷந்தோறும் தயார் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் பூர்த்தியான கணக்கு விவரங்களாக மாட்டாவானாலும், வர்ஷா வர்ஷம் நமது தேசத்தின் ஸௌகாதார நிலைமை எப்படியிருக்கிற தென்பதைக் காட்ட அவை போதுமானவை.

ஜனன மரணக் கணக்குகள் மொத்தம் ஜனத்தொகையில் 1000-க்கு இத்தனை யென்று தயார் செய்யப்படும். சென்ற 1913-14-ம் வர்ஷத்தோடு முடிகிற 10-வர்ஷங்களில் நமது தேசத்தின் நிலைமை எப்படி யிருந்ததென்று பார்ப்போம்.

### மரண விகிதம்.

மேற்சொன்ன 10 வர்ஷங்களில் முதல் 5-வர்ஷத்தில் இந்தியா முழுவதுக்கும் மரண விகிதம் அடியில் வருமாறு.

| | | 1000-ஜனங்களுக்கு இத்தனை மரணம். |
|---|---|---|
| 1904 | ... | 33·05 |
| 1905 | ... | 36·14 |
| 1906 | ... | 35·30 |
| 1907 | ... | 37·18 |
| 1908 | ... | 38·21 |

இந்த ஐந்து வர்ஷங்களில் மரணவிகிதமானது முதல் வர்ஷத்தில் 33·05-லிருந்து 5-வது வர்ஷத்தில் 38·21-க்கு அதிகரித்திருக்கிறது. அதாவது நூற்றுக்கு 5·16-விதம் அதிகம். எனவே இந்தியாவின் ஸௌகாதாரம் 100-க்கு 15-விதம் குறைந்துபோய்விட்டது.

ஆனால் 1909-ம் வர்ஷத்தில் மரண விகிதம் 1000-க்கு 30-91-ஆகக் குறைந்துவிட்டது. திடீரென்று ஒரு வர்ஷத்தில் 1000-க்கு 7·30 குறைந்துபோனதால், ஒரு ஸமயம் கணக்குகள் தவறானவையோ என்று ஸந்தேகிக்க இடமேற்படுகிறது. ஆனால் அதற்குப் பிறகு மரண விகிதம் ஒரே ரீதியாய்க் குறைந்து கொண்டே வந்திருக்கிறது.

| | | மரணவிகிதம் 1000-க்கு இத்தனை. |
|---|---|---|
| 1909 | ... | 30·91 |
| 1910 | ... | 33·20 |
| 1911 | ... | 32·41 |
| 1912 | ... | 29·71 |
| 1913 | ... | 28·72 |

1910-ம் வர்ஷத்து மரண விகிதமானது (33·20) 1904-ம் வர்ஷத்திய மரண விகிதத்துக்கு (330·5)க்கிட்டத் தட்ட சரியாயிருக்கிறது. 1911-ம் வர்ஷம் முதல் மரண விகிதம் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. 1913-ம் வர்ஷத்தில் மரண விகிதம் 1000-க்கு 28·72-விதமாகும். ஆகவே முதல் ஏழு வர்ஷத்துக்குப் பிறகு ஜன ஸௌகாதாரம் வ்ருத்தியாகி வருகிறதென்னலாம்.

### ஜனன விகிதம்.

ஆனால் மரண விகிதத்தைக் கொண்டே ஜனங்களின் நிலைமையை திட்டமாய் அறிவது முடியாது. ஜனன விகிதத்தையும் பார்க்க வேண்டும். நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டிருக்கும் 10-வர்ஷங்களில் முதல் 5-வர்ஷங்களின் ஜனன விகிதம் வருமாறு.

| | | ஜனன விகிதம் 1000-க்கு இத்தனை. |
|---|---|---|
| 1904 | ... | 40·87 |
| 1905 | ... | 39·14 |
| 1906 | ... | 37·36 |
| 1907 | ... | 37·16 |
| 1908 | ... | 37·70 |

ஆகவே இந்த 5-வர்ஷத்தில் மரண விகிதம் அதிகரித்திருக்க ஜனன விகிதம் கிரமமாய்க் குறைந்துகொண்டு வந்திருக்கிறது. இந்தக் குறைவு (அதாவது 3·17) நூற்றுக்கு 7-விகிதத்துக்கு மேலாகும். அடுத்த 5-வர்ஷத்தின் விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1909 | ... | 36.65 |
| 1910 | ... | 39·52 |
| 1911 | ... | 38·59 |
| 1912 | ... | 38·95 |
| 1913 | ... | 39·37 |

இந்த ஐந்து வர்ஷங்களில் ஜனன விகிதம் ஏறிவருகிறது. ஆனால் 1904-ம் வர்ஷத்திய ஜனன விகிதத்துக்கு எட்டவில்லை.

ஆனால் இது விஷயமாய் ஒன்று கவனிக்க வேண்டி யிருக்கிறது. அதாவது எங்கே ஜனன விகிதம் அதிகமோ அங்கே மரண விகிதம் அதிகமாயிருக்கிறதென்பதே. உதாரணமாக ஐக்யமாகாணங்கள், மத்ய மாகாணங்கள், பஞ்சாப், டெல்லி ஆகிய இந்த மாகாணங்களில் ஜனன விகிதத்தைப் போலவே மரண விகிதமும் அதிகமாயிருக்கிறது.

| | ஜனன விகிதம். | | மரண விகிதம். |
|---|---|---|---|
| ஐக்ய மாகாணங்கள் | 47·67 | - | 34·84 |
| மத்ய மாகாணங்கள் | 49·26 | - | 30·28 |
| பஞ்சாப் | 45·40 | - | 30·19 |
| டெல்லி | 44·84 | - | 39·99 |

மரண விகிதத்தை கவனிக்காமல் ஜனன விகிதத்தை மாத்ரம் ஒருவர் கவனித்தால், இந்த நான்கு மாகாணங்களிலும் ஸுகாதாரமும் இதர ஜனஸமூக விஷயங்களும் நன்றாயிருக்கிறதால்தான், ஜனன விகிதம் அதிகமாயிற்றென்று தப்பபிப்ராயம் கொள்ளக்கூடும். சரியான நிலைமை தெரியவேண்டுமானால் ஜனன விகிதத்தில் மரண விகிதம் போக பாக்கி எவ்வளவென்று பார்க்கவேண்டும்.

அடியில் வரும் அட்டவணையில் இந்தியாவிலுள்ள பற்பல மாகாணங்களில் 1913-ம் வர்ஷத்தில் ஜனன மரண விகிதங்களும், மரணம் போக பாக்கியுள்ள ஜனனம் எவ்வளவு என்பதும் காட்டப்பட்டிருக்கின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| ஐக்ய மாகாணங்கள் | ... | 47·67 | 34·84 | 12·83 |
| மத்ய மாகாணங்கள் | ... | 49·26 | 30·28 | 18·98 |
| பஞ்சாப் | ... | 45·40 | 30·19 | 15·21 |
| டெல்லி | ... | 44·84 | 39·99 | 4·85 |
| ஆஜ்மீர் | ... | 43·19 | 25·85 | 17·34 |
| பேஹார் ஒரிஸ்ஸா | ... | 42·10 | 29·14 | 12·86 |
| வடமேற்கு மாகாணங்களி | | 36·20 | 24·65 | 11·55 |
| பம்பாய் | ... | 34·96 | 26·63 | 8·33 |
| வங்காளம் | ... | 33·75 | 29·38 | 4·37 |
| அஸ்ஸாம் | ... | 33·06 | 27·66 | 5·40 |
| பர்மா | ... | 32·61 | 24·99 | 7·62 |
| சென்னை | .. | 32·20 | 21·40 | 10·80 |
| குடகு | ... | 25·88 | 33·48 | 7·60 |

இந்த அட்டவணையால் ஜனன விகிதம் பார்வைக்கு அதிகமாகத் தோன்றினாலும், மரண விகிதத்தைக் கழித்துவிட்டால், நிகரான மரண விகிதம் ஏறக்குறைவா யிருக்கிறது. நிகரான ஜனன விகிதத்தை மாத்ரம் உயர்ந்ததிலிருந்து வரிசை க்ரமமாய் காட்ட கீழே ஒரு அட்டவணை கொடுக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | மத்ய மாகாணங்கள் | ... | 18·98 |
| 2 | ஆஜ்மீர் | ... | 17·34 |
| 3 | பஞ்சாப் | ... | 15·11 |
| 4 | ஐக்ய மாகாணங்கள் | ... | 12·83 |
| 5 | பேஹார் ஒரிஸ்ஸா | ... | 12·86 |
| 6 | வடமேற்கு மாகாணங்கள் | ... | 11·55 |
| 7 | மதராஸ் | ... | 10·80 |
| 8 | பம்பாய் | ... | 8·33 |
| 9 | பர்மா | ... | 7·62 |
| 10 | டெல்லி | ... | 4·85 |
| 11 | அஸ்ஸாம் | ... | 5·40 |
| 12 | வங்காளம் | ... | 4·37 |

இந்த அட்டவணையைச் சற்றுக் கவனிப்போம்.

சென்னையில் மரண விகிதம் குறைவாயிருந்ததுபோலவே, ஜனன விகிதமும் குறைவாயிருந்தது. வடமேற்கு எல்லை மாகாணங்களிலும் மரணவிகிதம் 24·65-ஆக இருக்க, ஜனன விகிதம் 36·20. பம்பாயில் மரண விகிதம் 26·63 ; ஜனன விகிதம் 36·97. வங்காளத்தில் மரண விகிதம் 29.38 ஜனன விகிதம்32·75

ஆகவே ஒரு மாகாணத்தில் ஜனன விகிதம் மாத்ரம் அதிகமாயிருத்தலும் அல்லது மரண விகிதம் மாத்ரம் குறைவாயிருப்பதும் போதாது. ஜனன விகிதத்தைவிட மரண விகிதம் ரொம்ப குறைவா யிருந்தால்தான், அந்த மாகாணத்தில் ஸுகாதாரம் நல்ல நிலைமையிலிருக்கிறதென்றும், ஜனத்தொகை வ்ருத்தியடையக் கூடுமென்றும் சொல்லலாம்.

வங்காளத்தில் 4½ கோடி ஜனங்களிருந்தும் நிகரான ஜனப்பெருக்கம் 1000-க்கு 4·37 தானாகிறது. இது இவ்விஷயத்தில் மற்றெல்லா மாகாணங்களையும்விட தாழ்வாயிருக்கிறது. பம்பாயில் நிகரான ஜனப்பெருக்கம் 8·33 விதமாகையால், இது 8-வதாக நிற்கிறது. சென்னை ராஜதானியில் மரண விகிதம் ரொம்ப குறைவாயிருந்தாலும், ஜனன விகிதமும் குறைவாயிருப்பதால், ஜனப் பெருக்கத்தில் 7-வதாக இருக்கிறது.



## VARIOLA.

### ஆடு மாடுகளுக்கு வரும் அம்மை.

ம்ருகங்களுக்கும் மனிதனுக்கும் வரும் அம்மையானது பலவகைப்பட்டது. ஒவ்வொரு வகையும் ஒவ்வொருவித ம்ருகத்தைத் தாக்குகிறது. எல்லா அம்மையிலும் தோலில் கொப்புளங்கள் உண்டாகின்றனவென்றாலும், மற்ற அம்சங்களில் ஒன்றுக்கொன்று வித்யாஸங்கள் உண்டு.

அம்மைகளுள் மனிதனுக்கும் செம்மறியாட்டுக்கும் வரும் வகைகள் மற்ற வகைகளைவிட ரொம்பக் கடுமையானவை. இந்த இரண்டு வகைகளும் குணத்தில் ஒன்றுக்கொன்று வித்யாஸமானவை.

உதாரணமாக ஒரு மனிதனுக்கு ஒரு தடவை அம்மை பூட்டி அவன் பிழைத்தால், மறுபடி அவனுக்கு அம்மை பூட்டுவது அரிது. ஆனால் செம்மறியாடுகளுக்கு மறுபடியும் மறுபடியும் அம்மை காணலாம். செம்மறியாடுகளுக்கு வரும் அம்மையானது மனிதர்களிடம் பரவுவதில்லை. இந்த வ்யாதிக்கு ஆதாரமான வ்யாதி க்ருமி இன்னதென்று நிச்சயமாய்க் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த வ்யாதியானது, இது கண்ட ஆட்டின்மேல் ஸம்ஸர்கதேகமுள்ள ஆடுகள் படுவதாலும், வ்யாதிப்பட்ட ஆடுகளின்மேல் பட்ட ஜீவ ராசிகளோ, வஸ்துக்களோ ஸம்ஸர்கதேகமுள்ள ஆடுகளின்மேல் படுவதாலும், ஆடுகளுக்குள் பரவுகிறது. பால் கறக்கிறவர்கள் மூலமாக மாடுகளுக்கு வரும் அம்மை மாடுகளுக்குள் பரவுகிறது. இந்த வ்யாஸத்தில் மாடுகளுக்கும் செம்மறியாடுகளுக்கும் வரும் அம்மைகளை விவரிக்கிறோம்.

வ்யாதிக் குறிகள்:— அம்மை வ்யாதியின் க்ருமிகள் தேகத்தில் சேர்ந்து வ்யாதி வெளிப்படையாகத் தோன்ற 3-முதல் 5-நாள்கள் வரையில் செல்லும். மாடுகளில் தோன்றும் இந்த வ்யாதி கடுமையானதல்ல. இது விசேஷமாக கறவை மாடுகளின் மடியையும் முலைக் காம்புகளையும் தான் நோய் படுத்துகிறது ஸாதாரணமாக இந்த வ்யாதி உண்டானவுடன் கொஞ்சம் காய்ச்சலும், வேறு சில தேகக் கோளாறுகளும் உண்டாகும். பாலின் அளவு குறைவுபடும். பட்டாணி யளவு பரு

டிலுள்ள சிவந்த தடிப்புகள் மடியிலும் முலைக் காம்பிலும் உண்டாகும். இரண்டொரு நாட்களில் அவைகள் கொப்புளங்களாக மாறும். அவைகளில் தெளிவான ஜலம் இருக்கும். பிறகு 10-வது நாள்கள் வரையில் பெருத்துக் கொண்டுபோகும். ஜலமும் சீயாக மாறும். பிறகு அவை காய்ந்துபோய் பழுப்பு நிறமான செதில்களாகி 20-நாள்களில் உதிர்ந்துவிடும். விசேஷமாக இந்தக் கொப்புளங்கள் மாடுகளின் இதர பாகங்களில் பரவுவதில்லை. அபூர்வமான ஸந்தர்ப்பங்களில் அது தலை, தொடைகளின் உள்பாகம், காளை மாடுகளின் வ்ருஷணம் ஆகிய இவைகளுக்கும் பரவக்கூடும்.

கன்றுகளுக்கு இந்த வ்யாதி வாயிலும் உதட்டிலும் காணும். குதிரைகளுக்கு குதிகாலிலும், மர்மஸ்தானங்களிலும், உதட்டிலும் மூக்கிலும் காண்பது வழக்கம். வெள்ளாடுகளுக்கு இந்த வ்யாதி ஸாதாரணமாய் வருவதில்லை. செம்மறியாடுகளுக்கு வரும் அம்மையானது, வ்யாதி க்ருமி தேகத்தில் சேர்ந்த 4-முதல் 7-நாள்களுக்குள், வெளிப்படையாகத் தெரியும். சில ஸமயங்களில் அதிக காலங் கழித்தும் வ்யாதி வெளிப்படையாவதுண்டு. வ்யாதி கண்ட ஆட்டுக்குக் காய்ச்சல் வரும். அது மற்ற ஆடுகளோடு சேராமல் தனியாகப் போய்விடும். இரையெடுப்பதும் அசை போடுவதும் இல்லை. கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் ஜலம் வடியும். வேகமாக மூச்சுவிடும். வெண்மையான தோல் உள்ளதும், மயிர் இல்லாததுமான பாகங்கள் அதாவது, தலை, தொடைகளின் உள்புறம், மடி, அக்குள் ஆகிய இவைகள் சிவந்து காணப்படும். இது காணப்பட்ட இரண்டு நாட்களுக்கெல்லாம் அவ்விடங்களில் சிறு பருக்கள் காணப்படும். அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் அவை கொப்புளங்களாக மாறும். பிறகு ஐந்தாறு நாட்களுக்கெல்லாம் அவை சீயுள்ள கொப்புளங்களாக மாறும். அவை வரவரப் பெரியனவாகி, சுற்றிலுமுள்ள தோலில் வீக்கமுண்டாக்கும். முக்யமாய்த் தலையிலுள்ள கொப்புளங்களில் தான் வீக்கம் அதிகமாயிருக்கும். பிறகு அவை உலர்ந்துபோய் ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு உதிர்ந்துவிடும். அவை இருந்த இடத்தில் சிறு பள்ளங்கள் இருக்கும்.

சில ஸமயங்களில் 'இந்தக் கொப்புளங்கள் ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டு பெரியனவாகிவிடும். அப்போது காய்ச்சல் உக்ரமாயிருக்கும். தேகத்தில் கடுமையான கோளாறுகள் உண்டாகலாம். வயிற்றுப்போக்கு உண்டாகலாம். கடைசியாய் ஆடுகளுக்குக் கண் தெரியாமலும் போகலாம்.

வ்யாதி உக்ரமாயிராவிட்டால், ஆடுகள் 3-முதல் 4-வாரங்களில் பிழைத்துக் கொள்ளுகின்றன. கொப்புளங்கள் ஒன்று சேரும் கேஸுகளில் ஆடுகள் இறப்பது ஸகஜம். ஸாதாரணமாக இந்த வ்யாதி தோன்றுங் காலங்களில் வ்யாதிகண்ட ஆடுகளில் 100-க்கு 20-முதல் 30-வரை இறந்துவிடும். வ்யாதி கடுமையாயிராவிட்டால் சாவு விகிதம் இன்னும் குறைவாயிருக்கும். கடுமையான ஸந்தர்ப்பங்களில் 100-க்கு 90-வீதம் கூட இறப்பதுண்டு. வ்யாதி கண்டு பிழைத்த ஆடுகளுக்கு மறுபடியும் இந்த வ்யாதி ஸாதாரணமாய் வருவதில்லை.

## மாடுகளுக்கு வைத்யம்.

வ்யாதி கண்ட எல்லா மாடுகளுக்குமே வைத்யம் செய்யவேண்டியது அவச்யமில்லை. பின்வரும் பேதி மருந்தை உள்ளுக்குக் கொடுக்கலாம்.

| | |
|---|---|
| எப்ஸம் ஸால்ட் என்னும் பேதி உப்பு. | 1-ராத்தல். |
| பொடி செய்த சுக்கு | ½ ஔன்ஸ். |
| பொடி செய்த கந்தகம். | 2 ஔன்ஸ். |
| தேன் பாகு. | 8 ஔன்ஸ். |



இவைகளை பட்டணம் படியால் அரையே அரைக்கால் படி சுடு ஜலத்தில் கலந்து குளிர்ந்த பிறகு உள்ளுக்குக் கொடுக்கவும். மாட்டுக்கு குறைவான ஆகாரம் கொடுக்கவேண்டும். பசுவின் பாலை, மடியிலும் முலைகாம்பிலும் உள்ள புண்களுக்குக் கெடுதி உண்டாகாதபடி கறந்துவிடவேண்டும். அது மனிதர்கள் குடிப்பதற்கு ஏற்றதல்ல. கன்றுக்குட்டிகள் பால் ஊட்டுவதாயிருந்தால், அவைகளால் புண்களுக்குக் கெடுதி ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். உடைந்துபோன கொப்புளங்களையும் புண்களையும் பின்வருமாறு தயார் செய்த போரிக் லோஷனைவிட்டுக் கழுவி பொடிசெய்த வெண்காரத்தை அவைகளின் மேல் தூவவேண்டும்.

## போரிக் லோஷன்.

| | |
|---|---|
| பொடிசெய்த வெண்காரம் | ½ ஔன்ஸ். |
| சுத்த ஜலம். | காலேவீசம்படி. |

ஜலத்தில் வெண்காரத்தைக் கரைத்து உபயோகிக்கவும். (வெண்காரத்துக்கு பதிலாக படிக்காரத்தை அதே அளவு உபயோகித்தால் படிக்கார லோஷனாகும்.)

வ்யாதி கண்ட மாடுகளையும் அவைகளின் கன்றுகளையும் தனியாகக் கட்டிவைக்கவேண்டும். பால் கறக்கிறவர்கள் தங்கள் கைகளை க்ருமி ஹரமான மருந்து போட்டுச் சுத்தம் செய்யவேண்டும்.

பால் கறக்க உபயோகப்படும் எல்லாப் பாத்ரங்களையும் கொதிக்கும் ஜலத்தால் சுத்தம் செய்யவேண்டும்.

## செம்மறியாடுகளுக்கு சிகித்ஸை.

வ்யாதி கண்ட ஆடுகளை உலர்ந்ததும், குளிர்ச்சியானதுமான இடத்தில் கட்டிவைக்கவேண்டும். ஆனால் மழையும் வெயிலும் தாக்காத இடமாயிருக்க வேண்டும். ஈக்களும், வ்யாதியைப் பரவச் செய்யக்கூடிய இதர ஜந்துக்களும் அவ்விடங்களில் அதிகமாக வராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். ஆடுகள் நக்குவதற்காக, அவைகளுக்கு ஸமீபத்தில் வேண்டியமட்டும் கல்லுப்பும், சுத்தமான குடிஜலமும், சீக்ரம் ஜீர்ணமாகக் கூடிய உணவும் போடவேண்டும். தினந்தோறும் பொட்டிலுப்பை ஒரு ட்ராம் அளவில் அதாவது மூன்று-அரைக்கால் ரூபாய் எடை அளவில் தீனியோடு கலந்து கொடுப்பது நல்லது. கொப்புளங்களை பொடிசெய்த வெண்காரம் வைத்துக்கட்டவேண்டும். அல்லது பின் மருந்துகளையும் உபயோகிக்கலாம்.

| | | |
|---|---|---|
| (1) | பினைல் | 1-பங்கு. |
| | ஜலம் | 100-பங்கு. |

இவைகளைக் கலந்து உபயோகிக்கவும்.

| | | |
|---|---|---|
| (2) | கற்பூரம் | 1-பாகம். |
| | நல்லெண்ணெய் | 4-பாகம். |

இவைகளைக் கலந்து உபயோகிக்கவும்.

(3) பொடி செய்த வெண்காரம்
,, மரக்கரி
,, படிக்காரம்
,, மயில் துத்தம்.

இவைகளை ஸம எடையாக எடுத்து ஒன்று சேர்த்து காயங்களைக் கட்ட உபயோகிக்கவும்.

ஆடுகளின் கண்களையும், மூக்கையும் மேலே சொன்ன போரிக் லோஷனைக் கொண்டாவது, படிக்கார லோஷனைக் கொண்டாவது அலம்பவேண்டும்.

வ்யாதியான ஆடுகள் உள்ள மந்தைகளை தனியாக வைக்கவேண்டும். அவற்றில் உள்ள வ்யாதிகண்ட ஆடுகளை மற்ற ஆடுகளோடு சேரவொட்டாமல் பிரித்துக்கட்டவேண்டும். வ்யாதியற்றமந்தைகளை ஸௌகர்யமான இடங்களுக்கு ஓட்டிப்போகவேண்டும். பக்கத்திலுள்ள ஆட்டு மந்தைகளை நோய்கண்ட மந்தைகளோடு சேர்க்காமலிருக்கும்படி, அந்த மந்தைக்காரர்களுக்கு சொல்லவேண்டும். செத்த ஆடுகளை எரித்து விடவேண்டும். அல்

லது ஆழமான பள்ளங்களில் புதைத்து விட வேண்டும். நோய்கண்ட ம்ருகங்கள் இருந்த இடங்களை க்ருமி ஹரமான மருந்து போட்டு சுத்தம் செய்வதில் அதிக ஜாக்ரதையாக இருக்கவேண்டும். நோய் கடுமையாகப் பரவி வரும்போது, வ்யாதி கண்ட ஆடுகளையும், வ்யாதி உண்டென்று ஸந்தேகித்த ஆடுகளையும் கொன்று விடுவதால் வ்யாதி பரவாமலிருக்கும். புண்கள் உலர்ந்து, செதில்கள் உதிரும்போது தான் வ்யாதியானது உக்ரமான தொற்று வ்யாதியின் லக்ஷணத்தை அடைகிறது. வ்யாதி கண்ட ம்ருகங்கள், பிழைத்த ஆறு வாரங்கள் வரையில், வ்யாதியைப் பரவச் செய்யக் கூடும்.

வ்யாதி பரவியிருக்கும் ஸ்தலங்களில் ஆடுகளுக்கு இந்த வ்யாதிக்கான அம்மையைக் குத்தலாம். ஆனால் இந்த முறையைத் தகுந்த வைத்யர்கள் சிபார்சு செய்தால் தான் அனுஷ்டிக்கலாம். அப்போதும் வைத்யர்கள் தான் செய்யவேண்டும்.

## EXPORT OF OIL SEEDS.

### எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி.

இந்த ஐரோப்பிய மஹாயுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் சென்னை ராஜதானியிலிருந்து ஏற்றுமதியான சரக்குகளில் எண்ணெய் வித்துக்கள்தான் அதிகமாக இருந்தன. யுத்தத்துக்கு முந்தின வர்ஷமாகிய 1913-14-ம் வர்ஷத்தில் மொத்தம் ஏற்றுமதியான சரக்குகளின் விலையில் நூற்றில் 21-பாகம் எண்ணெய் வித்துக்களின் விலையாகும். சென்ற 1916-17-ம் வர்ஷத்திலோ ஏற்றுமதியான எண்ணெய் வித்துக்களின் விலை மொத்தம் ஏற்றுமதிச் சரக்குகளின் விலையில் 100-க்கு 8·33-வீதமாக இருந்தது. அதற்கு முந்தின வர்ஷமாகிய 1915-16-ம் வர்ஷத்திய ஏற்றுமதியை உத்தேசிக்கையில், 1916-17-ம் வர்ஷத்திய எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதியானது நிறையில் 100-க்கு 44-வீதமும், விலையில் 100-க்கு 25-வீதமும் குறைந்துபோயிருக்கிறது.

அடியில்வரும் அட்டவணையால் எந்தெந்த வகை வித்துக்களின் ஏற்றுமதி எவ்வளவு தூரம் குறைந்து போயிருக்கிறதென்பது விளங்கும்.

| வித்துக்கள். | 1915-16. | | 1916-17. | | 1916-17-ல் அதிகம் அல்லது குறைவு. | |
|---|---|---|---|---|---|---|
| | அந்தர். | லக்ஷம் ரூபாய். | அந்தர். | லக்ஷம் ரூபாய். | அந்தர். | லக்ஷம் ரூபாய். |
| வேர்க்கடலை ... | 30,24,728 | 214·36 | 13,37,932 | 109·36 | -16,86,796 | -105·00 |
| கொப்பரை ... | 312,060 | 57·04 | 5,04,518 | 94·28 | +192,458 | +37·24 |
| ஆமணக்கம் வித்து ... | 108,620 | 6·90 | 50,016 | 3·66 | -58,604 | -3·24 |
| பருத்திவிதை ... | 43,220 | 1·65 | 36,700 | 1·42 | -6,520 | -0·23 |
| எள் ... | 20,324 | 1·83 | 8,295 | 0·76 | -12,029 | -1·07 |
| ஆவியாகக்கூடிய எண்ணெய் வித்துகள் ... | 30,089 | 3·90 | 36,695 | 4·31 | +6606 | +0·41 |
| மற்றவகைகள் ... | 12,074 | 0·94 | 3,430 | 0·41 | -8,644 | -0·53 |
| மொத்தம்... | 35,51,115 | 286·62 | 19,77,586 | 214,20 | -15,73,529 | -72·42 |



வேர்க்கடலை:—சென்ற வர்ஷத்திய வேர்க்கடலை ஏற்றுமதியானது மொத்தம் எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதியில் 100-க்கு 68 வீதமாக இருந்தது. யுத்தத்துக்கு முன் வர்ஷந்தோறும் சராசரியில் 344·49 லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள 1,97,318 டன் வேர்க்கடலை ஏற்றுமதியாயிற்று. யுத்தம் ஆரம்பித்த வர்ஷமாகிய 1914-15-ம் வர்ஷத்தில் இதன் ஏற்றுமதியானது நிறையில் நூற்றுக்கு 42-வீதமும், பெறுமானத்தில் 45-வீதமும் குறைவுபட்டது. ஆனால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகாமல் நின்றுபோன வேர்க்கடலையில் பெரும்பாகம் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டது. 1915-16-ம் வர்ஷத்தில் வேர்க்கடலைக்கு அன்ய தேசங்களில் க்ராக்கி ஏற்படலாயிற்று. அதனால் அந்த வர்ஷம் மார்ஸேல்ஸுக்கு வேர்க்கடலை அதிகமாகப் போயிற்று. ஆனால் மத்யதரைக் கடலிலுள்ள துறைமுகங்களுக்குக் கப்பல் சார்ஜ் அதிகமாயிருந்ததால், அந்த வர்ஷத்தில் அறுவடையான மாஸமுல் விலைப்போகுமோ என்பதைப் பற்றிய ஸந்தேகம் வரவே, வேர்க்கடலையின் விலை ரொம்பவும் குறையலாயிற்று. ஆயினும் அந்த வர்ஷக் கடைசியில் வ்யாபார நிலைமை சற்று த்ருப்திகரமாக மாறிற்று. ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில்மெண்டுகளுக்கும், கடல்கரையோரமாக வங்காளத்துக்கும், பம்பாய்க்கும் வேர்க்கடலை அதிகமாக அனுப்பப்படவே, அதன்விலை சற்று உயரலாயிற்று. 1915-16-ம் வர்ஷத்தில் விலை தூக்கமாயிருந்ததால், 1916-17-ம் வர்ஷத்தில் விவஸாயிகள் அதிகமாக வேர்க்கடலையை ஸாகுபடி செய்யலானார்கள். முக்யமாய் டெக்கான் ஜில்லாக்களில் தான் சாகுபடி அதிகம். அங்கே பருத்தி விளையும் நிலத்தில்கூட இதைப் பயிரிட்டிருக்கிறார்கள். இந்தப் பயிரிலிருந்து கிடைக்கக் கூடிய மாஸுல் முந்திய வர்ஷத்தைவிட நூற்றுக்கு 30 வீதம் அதிகமா யிருக்குமென்றும், மொத்தம் மாஸுல் 8,25,000 டன் என்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

1916-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸத் தொடக்கத்தில் 500 ராத்தல் கொண்ட ஒரு கண்டி வேர்க்கடலை 35 ரூபாயாக விருந்தது. அந்த மாஸக் கடைசியில் 38½ ரூபாயாக உயர்ந்தது. ஆனால் ஜுலை மாஸத்தில் 34 ரூபாயாகக் குறைந்தது. மறுபடியும் ஸெப்டம்பர் மாஸக் கடைசியில் 37 ரூபாயாக உயர்ந்தது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வர்ஷக் கடைசியில் 26½ ரூபாய்க்கு வந்துவிட்டது. மொத்தம் ஏற்றுமதியான வேர்க்கடலையில் 100-க்கு 90 பாகம் மார்ஸேல்ஸுக்கு அனுப்பப்பட்டது.

யுத்தத்தால் அந்தத் துறைமுகத்துக்குக் கப்பல் சார்ஜ் எவ்வளவுதூரம் மாறுபாடடைந்து வந்திருக்கிறதென்று பார்க்க ஆச்சர்யமாயிருக்கிறது. யுத்தம் ஆரம்பித்த மாஸமாகிய 1914-ம் வர்ஷம் ஜுலை மாஸத்தில் கப்பல் சார்ஜானது ஒரு டன்னுக்கு 17 ரூ. 13 அணாவாக இருந்தது. அதே வர்ஷம் நவம்பர் மாஸத்தில் 26 ரூ. 2 அணாவாக உயர்ந்தது. 1915-ம் வர்ஷம் நவம்பர் மாஸத்திலோ ஒரு டன்னுக்கு சார்ஜ் 93 ரூ. 12 அணா ஆகும், 1916-ம் வர்ஷம் நவம்பர் மாஸத்தில் 206 ரூ. 4 அணா இருந்தது. அதற்குப் பிறகுங்கூட சார்ஜ் உயர்ந்துகொண்டு தான் வந்திருக்கிறது. ஒரு ஸமயம் ஒரு டன்னுக்கு 337 ரூ. 8 அணா வீதம் சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடியில் வரும் அட்டவணையில் சென்னை ராஜதானியிலுள்ள ஒவ்வொரு முக்யமான துறை முகத்திலிருந்தும் எவ்வளவு வேர்க்கடலை ஏற்றுமதியாயிற்றென்பது காட்டப்பட்டிருக்கிறது.

| | 1915-16 டன்கள். | 1916-17 டன்கள். |
|---|---|---|
| சென்னை | 75,636 | 38,403 |
| கடலூர் | 42,923 | 13,562 |

| | | |
|---|---|---|
| நாகப்பட்டினம் | 19,805 | 7,444 |
| பரங்கிப்பேட்டை | 12,476 | 5,700 |
| இதர துறைமுகங்கள் | 396 | 1,788 |
| மொத்தம் | 151,236 | 66,897 |
| புதுச்சேரி | 42,238 | 19,568 |

கொப்பரை:—யுத்தத்துக்குமுன் ஜெர்மனி தான் கொப்பரையை அதிகமாக வாங்கி வந்தது. அதற்கு அடுத்தபடியாக பெல்ஜியமும் ருஷ்யாவும் அதிகமாக வாங்கி வந்தன. யுத்தம் ஆரம்பிக்கவும், அவைகளோடு நடந்து வந்த வ்யாபாரம் நின்றுபோயிற்று. இதனால் சென்னையில் கொப்பரை வ்யாபாரத்துக்கு பாதக மேற்பட்டது. இதை அறிந்த இங்கிலீஷ் தொழிலாளிகள் கொப்பரையை வாங்கி தாவர வெண்ணெய் செய்யலானார்கள். அவர்கள் தேங்கா யெண்ணெயையும் அதிகமாக வாங்கலானார்கள். ப்ரான்ஸும் சென்ற இரண்டு வர்ஷங்களாகக் கொப்பரையின் இறக்குமதியை அதிகமாக்கி யிருக்கிறது. யுத்தத்துக்குமுன் சென்னையிலிருந்து அன்யதேசங்களுக்கு ஏற்றுமதியான கொப்பரையில் 100-க்கு 8 பாகந்தான் ப்ரான்ஸுக்குப் போய்க் கொண்டிருந்தது. ஆனால் சென்ற இரண்டு வர்ஷங்களாக 100-க்கு 56 விதமும் 83 விதமும் போய்க்கொண்டிருக்கிறது. யுனைடட் கிங்டத்துக்கு சென்ற இரண்டு வர்ஷங்களாக மொத்தம் கொப்பரை ஏற்றுமதியில் 100-க்கு 48 விதமும் 12 விதமும் போயிற்று.

அடியில் கண்ட அட்டவணையில் தென்னை மரப்பொருள்கள் பலவற்றின் வ்யாபாரம் காட்டப்பட்டிருக்கிறது.

| | 1915-16. | | 1916-17. | | 1916-17-ல் அதிகம் அல்லது குறைவு. | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு. | லக்ஷம் ரூபாய். | அளவு. | லக்ஷம் ரூபாய். | அளவு. | லக்ஷம் ரூபாய். |
| கொப்பரை (அந்தர்) ... | 312,060 | 57,04 | 504,518 | 94·28 | +192,458 | +37·24 |
| நாரால் செய்த ஸாமான்கள் (அ) | 536,157 | 63,19 | 557,843 | 63·54 | 21,686 | 0·35 |
| தேங்காய் எண்ணெய் (காலன்) | 2,015,657 | 38,57 | 20,18,587 | 42·53 | +2,930 | +3·96 |
| கதம்பைக் கயிறு (அந்தர்) ... | 13,575 | 1·48 | 12,543 | 1,16 | -1,032 | -0·32 |
| நார் (அந்தர்) ... | 5,230 | 0·52 | 4,406 | 0·45 | -8,24 | -0·07 |
| தேங்காய் (எண்ணிக்கை) ... | 163,150 | 0·07 | 32,050 | 0·01 | -1,31,100 | -0·06 |
| தேங்காய்ப் பிண்ணாக்கு. (அந்) | 1,328 | 0·05 | 1 | ... | -1,327 | -0·05 |
| மொத்தம்... | ... | 160,92 | ... | 201,97 | ... | +41·05 |

ஆமணக்கு வித்து:—சென்ற இரண்டு பருவங்களாக ஆமணக்கு மாஸூல் ரொம்ப குறைவாக இருந்தது. சென்ற வர்ஷத்தில் ஆமணக்கு வித்தின் ஏற்றுமதியானது அதற்கு முந்தின வர்ஷங்களைவிட ரொம்ப குறைவாகும். 1915-16-ம் வர்ஷத்தில் ஏற்றுமதியானதில் பாதிதான் 1916-17-ல் ஏற்றுமதியாயிற்று. ஆனால் இதைக்கொண்டே ஆமணக்கின் வ்யாபாரம் ரொம்ப குறைந்துவிட்டதாக எண்ணக்கூடாது. ஏனென்றால் முன்பு விதையை ஐரோப்பாவுக்கு அனுப்பி வந்ததற்கு பதிலாக இப்போது இங்கேயே எண்ணெயெடுத்து எண்ணெயாக ஐரோப்பாவுக்கு அனுப்பிவருகிறார்கள். சென்ற இரண்டு வர்ஷங்களாக ஆமணக்கெண்ணெயின் ஏற்றுமதியானது ரொம்பவும் அதிகரித்திருக்கிறது.

எள்:—எள் சாகுபடியின் விஸ்தீரணமானது 100-க்கு 16-பங்கு விதம் குறைந்துபோய் விட்டது. எள் பயிரிட்ட பூமியில் வேர்க்கடலையும் அவுரியும் பயிரிட்டு வருகிறார்கள். 1916-17-ம் வர்ஷத்திய எள் மாஸூல் அதற்கு முந்திய வர்ஷத்தியதைவிட 100-க்கு 12-பங்கு குறைவு. ஏற்றுமதியும் நிறையில 100-க்கு 60 விதமும், பெறுமானத்தில் 100-க்கு 58 விதமுமாக குறைந்து போய்விட்டது.



# KAMBAN AND KULOTHUNGA CHOLA.

BY O. SAMPATH AIYANGAR.

## கம்பரும் குலோத்துங்க சோழனும்.

ஒரு நாள் ஸாயங்காலம் குலோத்துங்க சோழனும் வித்வ சிரோமணியாகிய கம்பரும் நந்தவனத்துக்குப் போய் உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மந்த மாருதம் ஜில்லென வீசிக்கொண்டிருந்தது. சோழன் இருந்தாற்போல் இருந்து கலகலவென்று சிரித்தான். கம்பர் அவனைப் பார்த்து "ஏன் சிரிக்கிறீர்?" என்று கேட்டார். அரசன் "இந்த ராஜ்யமும் இதிலுள்ள ஸகல ஜனங்களும் நமக்கு ஐக்யமல்லவா வென்று நினைக்கும்போது எனக்குச் சிரிப்பு வந்தது" என்றான். கம்பர் "எல்லாம் உமக்கு ஐக்யமென்பதற்கும், நீர் நமக்கு ஐக்ய மென்பதற்கும் யாதொரு ஸந்தேகமும் இல்லை" என்று சொல்லிச் சிரித்தார். அதைக் கேட்டதும் சோழனுடைய முகம் வாடிப்போயிற்று. தான் கொடுப்பதை வாங்கி ஜீவிக்கும் வித்வான் தன்னை மதியாமல் இப்படிப் பேசலாமாவென்று அவன் மிகக் கோபங்கொண்டான். உடனே அவன் ஒன்றும் பேசாமல் அவ்விடம் விட்டெழுந்து அரண்மனைக்குப் போய் மனக் கலக்கத்துடன் ஒரு படுக்கையில் படுத்துக் கொண்டான்.

அரசனுடைய மனைவி சிற்றுண்டி எடுத்து வந்து அதை உண்ணும்படி தன் கணவனை வெகு பரிவுடன் வேண்டினாள். எவ்வளவு வேண்டியும் அவன் ஒன்றும் பதில் பேசாமையால், ராஜபத்னி அவ்விடம் விட்டுப்போய் அரசனுடைய வைப்பாட்டியாகிய பொன்னி என்னும் தாஸியை வரவழைத்து ராஜனுடைய மனக் கலக்கத்தை நீக்கும்படி அவனை வேண்டிக்கொண்டாள். பொன்னி சற்று நேரம் அரசனுடன் வெகு ஸரஸமாகப் பேசி அவனுடைய கலக்கத்திற்குக் காரணம் என்னவென்று கேட்டாள். சோழன் நந்தவனத்தில் கம்பருக்கும் தனக்கும் நடந்த ஸம்பாஷணையை அவளிடம் தெரிவித்தான். அதைக் கேட்ட பொன்னி "இதற்குத் தானா இவ்வளவு யோசனை? உம்மைத் தமக்கு ஐக்யமென்று சும்மா வாயினால் சொன்ன கம்பனை நான் உண்மையாய் எனக்கு அடிமையாக்கிக் கொள்ளுகிறேன். என் ஸாமர்த்யத்தைப் பாரும்" என்று சொல்லித் தேற்றி விட்டுத் தன் வீடு போய்ச் சேர்ந்தாள். அவள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும், தன் தாதியை அழைத்து, கம்பர் தெருவிலே போனால் அவரைத் தன்னிடம் அழைத்து வரும்படி கட்டளை இட்டுவிட்டு, மஞ்சத்தின் மேல் படுத்துக் கொண்டாள்.

வெகு நேரம் வரையில் அரசன் திரும்பி வருவான் என்று பூஞ்சோலையில் காத்திருந்த கம்பர் அவன் வாராதது கண்டு, வீட்டுக்குத் திரும்பினார். தாஸி பொன்னி வீட்டின் வீதிப் புறமாக அவர் போய்க்கொண்டிருந்தபொழுது, தன் தலைவி கூப்பிடுவதாகச் சொல்லி, தாதி அவரை உள்ளே அழைத்துச் சென்றாள். உடனே பொன்னி ஓடி வந்து கம்பரைக் கட்டிக்கொண்டு அவர்மேல் தான் காதல் கொண்டதாகத் தெரிவித்தாள். கம்பர் "அம்மா! நீ அரசன் மனைவியா யிருப்பதனால் எனக்கு மகளாக வேண்டும். ஆகையால் உன் வேண்டுகோளுக்கு இணங்குவது தோஷத்திற்கு இடமாகும். இதைத் தவிர வேறு எதைச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன்" என்றார். அப்படியே செய்வதாக ஸத்யம் பண்ணும்படி பொன்னி அவரைக் கேட்க, அவர் தாமறியாமல் ஸத்யம் பண்ணினார். உடனே பொன்னி "நீர் எனக்கு

அடிமை என்பதாக சாஸனம் எழுதிக் கொடும்" என்று கேட்டாள். கம்பர் ஏடும் எழுத்தாணியுங் கொண்டு "தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை" என்று எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அப்பொழுதே பொன்னி அந்தச் சீட்டை எடுத்துக் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்தாள். மறு நாள் கம்பரை அவமானப்படுத்த வேண்டுமென்று சோழன் ஸபை கூட்டினான். கம்பரும் மற்றுமுள்ள வித்வான்களும் ஸபைக்கு வந்திருந்தார்கள். அரசன் அந்தச் சீட்டைக் கம்பருக்குக் காட்டி "இது உம்முடையது தானா?" என்று கேட்டான். கம்பர் அது தன்னுடையதே என்று எல்லோரும் அறிய ஒத்துக் கொண்ட பிறகு, அரசன் ஒருவனை அழைத்து அதை எல்லோரும் கேட்கும்படி வாசிக்கச் சொன்னான். அதைக் கேட்டதும் அநேகர் சிரித்தார்கள். பிறகு அரசன் கம்பரைப் பார்த்து "தாசி பொன்னிக்கு நீர் அடிமையா யிருப்பது உமக்கு அவமானமில்லையா?" என்று கேட்டான். கம்பர் சிரித்துக்கொண்டே "அதன் சரியான அர்த்தத்தை அறிந்தவர்களுக்கு அவமானம் ஏது?" என்றார். பிறகு அரசன் அதன் அர்த்தத்தை விளங்கச் சொல்லவேண்டுமென்று கேட்க, கம்பர் "தாய் - அன்னை; சி - மங்களகரம்; பொன்னி - லக்ஷ்மி; உலக மாதாவாகிய ஸ்ரீமஹா லக்ஷ்மிக்குக் கம்பர் அடிமை என்பது தாத்பர்யம். இதனால் நமக்கு இழிவு வருமா? நீர் ஏன் நம்மை வ்யர்த்தமாய்ப் பரிஹாஸம் செய்கிறீர்?" என்று சொன்னார்.

அதைக் கேட்ட சோழன் தன் எண்ணம் ஈடேறாததற்காக வருத்த மடைந்தான். வித்வான்கள் தாங்கள் சொன்ன சொற்களுக்கு ஸமயத்துக்கு ஏற்றபடி அர்த்தம் சொல்லுவார்களாதலால், அவர்களை நம்பக்கூடாதென்று அவனுக்கு மிகவும் கோபம் உண்டாயிற்று. ஆதலால் அவன்,

"போற்றினும் போற்றுவர்; பொருள்கொடாவிடில்
தூற்றினும் தூற்றுவர்; சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர்; வன்கணாளர்கள்;
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே"

என்ற ஒரு பாடலைச் சொல்லி, கம்பரை நோக்கி, "இன்று முதல் நீர் என் தேசத்தில் இருக்கவேண்டாம். நான் உமக்குக் கொடுத்திருக்கிற விருதுகள் முதலானவைகளை வைத்துவிட்டு எங்கேயாவது போய் விடும்" என்றான். கம்பர் அது கேட்டுச் சோழன் மேல் கோபங்கொண்டு,

"காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ—மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியுங் கொற்றவா! நீமுனிந்தால்
இல்லையோ வெங்கட் கிடம்" [தால்.

"மன்னவனு நீயோ? வளநாடு முன்னதோ?
உன்னை யறிந்தோ தமிழை யோதினேன்?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ! வுண்
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு! [போ

என்னும் பாடல்களைப் பாடி ஸகல விருதுகளையும் அரசனிடம் வைத்துவிட்டு புறப்பட்டுவிட்டார். அவர் போகும்பொழுது சோழனைப் பார்த்து "இனி உன்னிடத்தி லிரேன். இந்த க்ஷணமே போகிறேன். இதோ பார், உன்னை விட்டு நாம் போகும்பொழுது கட்டிய துணியோடே போகிறேன். திரும்பி வரும்பொழுதோ உன்னிடத்தில் கப்பம்வாங்கி வருகின்ற உனக்கு மேலாகிய அரசன் எனக்கு அடைப்பைக்காரனாகித் தாம்பூலம் மடித்துக் கொடுக்கத் தக்க ஸ்திதியுடனே வருகிறேன்" என்று சபதம் பண்ணினார்

கம்பர் அநேக ஊர்களைக் கடந்து சென்று கடைசியாகச் சேர தேசம் போய்ச் சேர்ந்தார். அவர் அந்த தேசத்திலுள்ள ஒரு ப்ரபுவை அடுத்து "ஐயா, நான் கம்பரிடம் அடைப்பைக்காரனாக இருந்தவன். அவர் சோழனிடம் விரோதங்கொண்டு எங்கேயோ போய்விட்டார். ஆகையால் நானும் அந்த ஊரை விட்டு வந்துவிட்டேன். நீங்கள் ஏழையின்மேல் க்ருபை வைத்து எங்கேயாவது கைகாட்டினால் உங்கள் பெயரைச் சொல்லி ஜீவிப்பேன்" என்றார். அந்த ப்ரபு கம்பரைச் சேரனிடம் அடைப்பைக்காரனாக அமர்த்தினார்.

கம்பர் தாம் இன்னார் என்பதை ஒருவருக்கும் வெளியிடாமலே சேர ராஜனுக்கு அடைப்பைக்காரனாகக் காலங் கழித்து வந்தார்; அதாவது அவர் தாம்பூலத்தட்டைக் கையில் ஏந்தி அரசன் பக்கத்தில் இருந்து அவனுக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுத்துக்கொண்டு இருந்தார். ஒரு நாள் சேரன் கம்ப ராமாயணத்தை ப்ரஸங்கம் செய்ய வேண்டுமென்று அரண்மனை வித்வான்களை வேண்டிக்கொண்டான். அப்படியே அவர்கள் ராமாயணத்தைப் படித்து அர்த்தம் சொல்லி ப்ரஸங்கம் பண்ணி வந்தார்கள். எல்லோரும் அவர்கள் சொல்லியதைக் கேட்டு ஸந்தோஷமடைந்தார்கள். ஆனால் சேரனுடைய அடைப்பைக்காரனாக இருந்த கம்பர் மாத்ரம் ஸந்தோஷிக்க வேண்டிய இடத்தில் வ்யஸனப்பட்டுக்கொண்டும், வ்யஸனிக்கவேண்டிய இடத்தில் ஸந்தோஷப்பட்டுக் கொண்டும் இருந்தார். அதை கவனித்த சேரன் அதற்கு யாது காரணம் என்று அவரைக் கேட்டான். அவர் "மஹாராஜாவே! இந்த ப்ரஸங்கம் க்ரந்த கர்த்தாவாகிய கம்பர் கருத்துக்கு இசைந்திருக்கவில்லை." என்றார். சேரன் "கம்பர் கருத்து உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்க, அவர் "கம்பரிடத்தில் நான் அடைப்பைக்காரனாயிருக்கையில் அருகில் நின்று அவர் ப்ரஸங்கிக்கக் கேட்டிருக்கிறேன்" என்றார். சேரன் "உனக்கு ப்ரஸங்கிக்கத் தெரியுமா?" என்றான். கம்பர் கூடியவரையில் ப்ரஸங்கிக்கத் தெரியும் என்று சொல்லிவிட்டு, கேட்பவர்களுக்கு ஆனந்த முண்டாகும்படி கர்ணாம்ருதமாக ப்ரஸங்கம் பண்ணினார். அதைக் கேட்ட வித்வான்கள் "கேவலமான அடைப்பைக்காரனும் இப்படி ப்ரஸங்கம் செய்வதா!" என்று ஆச்சர்ய மடைந்து வெட்கித் தலை குனிந்தார்கள். சேரன் "கம்பரிடம் அடைப்பைக் காரனாக இருந்த இவனே இப்படி ப்ரஸங்கம் பண்ணினால் கம்பர் எப்படிச் செய்வாரோ!" என்று அதிசயித்து அன்றுமுதல் தன் அடைப்பைக்காரனை அதிகமாக நேசித்து வந்தான். அநேக ஸமயங்களில் அரசன் தன் அடைப்பைக்காரனோடு ஸமபோஜனம் பண்ணுவான்.

அடைப்பைக்காரனிடம் அரசன் அவ்வளவு நேசங் கொண்டிருந்ததைப் பார்த்த வித்வான்கள் பொறாமை கொண்டார்கள். ஆகவே அவர்கள் எப்படியாவது அடைப்பைக்காரனை அவமானப் படுத்தவேண்டுமென்று தீர்மானித்து, ராஜாவுக்கு க்ஷவரம் செய்கிற அம்பட்டனிடம் போய் "ராஜாவின் அடைப்பைக்காரன் உன் தாயாதி யென்று நீ எப்படியாவது ருஜூப்படுத்தினால் உனக்கு இரண்டாயிரம் வராகன் தருகிறோம்" என்றார்கள். அம்பட்டன் அப்படியே செய்வதாக ஸம்மதித்துப் பணத்தை வாங்கிக் கொண்டான்.

கம்பர் ராஜ ஸபையை விட்டு வெளியே போனபொழுது அரண்மனை வாயிலில் காத்திருந்த அம்பட்டன் குடுகுடுவென்று ஓடி வந்து அவரைக் கட்டிக்கொண்டு அழுது "அண்ணே! இத்தனை காலமாக உன்னைக் காணோமே, எங்கே போயிருந்தாய்?" என்றான். மர்மத்தை அறிந்த கம்பர் அவனைக் கட்டிக்கொண்டு தேறுதல் சொல்லுகிறவர் போல நடித்து, அவனோடு அவன் வீட்டுக்குப்

போனார். அரசனும் மற்றவர்களும் "அடைப்பைக்காரன் அம்பட்டனிடம் ஸொந்தம் பாராட்டுகிறானே! தெரியாமல் மோசம் போனோமே!" என்று க்லேச மடைந்தார்கள். ஆயினும் அதன் உண்மையை அறிய வேண்டுமென்று எண்ணி, அரசன் வேவுகாரர்களை அனுப்பி பிறகு நடப்பதை அறிந்து வரும்படி கட்டளையிட்டான். கம்பர் தன் தம்பியென்று நடித்த அம்பட்டன் வீட்டுக்குப்போய் அவன் குழந்தைகளை எடுத்து மார் போடணைத்து முத்தம் தந்தார். பிறகு அம்பட்டன் அவரைச் சாப்பிடச் சொன்னான். அப்பொழுது கம்பர் "தம்பி, சாப்பிடுகிறேன். ஆனால் அதற்கு முன் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும். நான் இந்தக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து போனபோது நமக்கு பாகம் ஏற்படாதிருந்தது உனக்குத் தெரிந்த விஷயமே. ஆகையால் அப்பொழுது பொதுவில் இருந்த 4000 வராகனில் என் பாகம் 2000 வராகன் உண்டே, அது எங்கே?" என்றார். அம்பட்டன் வித்வான்கள் கொடுத்த 2000 வராகனையும் கம்பர் முன் வைத்தான். பிறகு கம்பர் "தம்பி, இது சரிதான். இருபது வருஷகாலமாக நீ ராஜாவுக்கு க்ஷவரம் செய்து வந்ததுபோல் நானும் என் பாகத்துக்கு 20 வருஷம் தொழில் செய்ய வேண்டுமே, அதற்கு என்ன சொல்லுகிறாய்?" என்றார். அம்பட்டன் "தடையென்ன? உன் இஷ்டப்ரகாரம் ஆகட்டும்" என்றான். கம்பர் 'தம்பி, நீ ஸம்மதிக்கிறாய். என்னிடம் க்ஷவரம் செய்து கொள்ள ராஜா ஸம்மதிப்பாரோ, ஸம்மதிக்க மாட்டாரோ? அதைக் கேட்டறியலாம் வா" என்று சொல்லி அவனை அரசனிடம் அழைத்துப் போனார்.

அரசன், அடைப்பைக்காரன் அம்பட்டனோடு உறவு கொண்டாடியதைக் கண்டு மனக்கலக்க மடைந்தானென்றாலும், இன்னும் என்ன நடக்கிறது பார்ப்போம் என்று எண்ணிக்கொண்டு, தான் அடைப்பைக்காரனிடம் க்ஷவரம் செய்து கொள்வதாக ஸம்மதித்தான். உடனே கம்பர் ஸரஸ்வதியை மனதில் த்யானித்து தன்னைக் காக்கும்படி வேண்டினார். ஸரஸ்வதியும் அவர்மேல் க்ருபைகூர்ந்து தன் வஜ்ரச் சிலம்புகளில் ஒன்றை அவருக்குக் கொடுத்தாள். கம்பர் அதை எடுத்து ராஜாவின் கையில் கொடுத்து "'மஹா ராஜாவே! இந்த நாவிதனும் நானும் ஸகோதரர்கள். எங்கள் குடும்பத்தில் இம்மாதிரி ஒரு ஜதை சிலம்பு இருந்தது. ஒன்றை நான் எடுத்துக் கொண்டு போய் விட்டேன். இதுதான் அது. இதன் ஜதை அவனிடம் இருக்கவேண்டும். அதைத் தாங்கள் வாங்கிக் கொள்ளவேண்டும். ஏழைகளாகிய எங்களுக்கு இது தகுந்ததன்று. உங்கள் போன்ற மஹாராஜாக்களுக்கே உரியது" என்றார். எத்தனை தரம் கேட்டும் சிலம்பு தன்னிடம் இல்லையென்று அம்பட்டன் சொல்லவே, அவன் பொய் சொல்லுகிறான் என்று எண்ணி, சேவகர்கள் அவனைக் கட்டி அடித்தார்கள். அடி பொறுக்கமாட்டாமல், அம்பட்டன் வித்வான்கள் செய்த சூதை அரசனிடம் சொல்லிவிட்டான். அந்த சிலம்பு ஸரஸ்வதியுடைய தென்றும், தன்னுடைய அடைப்பைக்காரன் கம்பரே என்றும் அறிந்து, சேரன் கம்பரை வணங்கி நமஸ்கரித்து, தான் தெரியாமல் செய்த பிழைகளைப் பொறுத்துக்கொள்ளும்படி அவரை வேண்டிக் கொண்டான்.

கம்பர் சென்ற நாளாக வருத்த முற்றிருந்த சோழன் தன் பிழையைப் பொறுத்தருளி திரும்பவும் தன் நாட்டுக்கு வரவேண்டுமென்று கம்பருக்குக் கடிதம் எழுதினான். கம்பர் சேரனிடம் விடை பெற்றுக்கொண்டு சோழ தேசத்திற்குப் புறப்பட்டார். சேரன் கொஞ்சதூரம் அவரோடு சென்று "உங்களுடைய சபதத்தை மறந்து விட்டீர்களே!" என்றான். கம்பர் "மறக்கவில்லை. அங்கே போய்ச் சேர்ந்த பிறகு தெரிவிக்கிறேன். அப்பொழுது நீங்கள் வரலாம்" என்று சொல்லி விட்டுச் சென்றார். கம்பர் தன்னிடம் அடைப்பைக்காரனா யிருந்ததற்குப் பதிலாகத் தான் அவருக்கு அடைப்பைத் தொழில் செய்ய வேண்டுமென்று சேரன் எண்ணி இருந்தான்.



சோழன் கம்பரை ஸந்தோஷத்துடன் வரவேற்று உபசரித்தான், ஒரு நாள் அவன் கம்பரை நோக்கி "நீர் இங்கிருந்து போகும் பொழுது செய்த சபதம் நிறைவேறாமல் போயிற்றே!" என்று பரிஹாஸமாகக் கேட்டான். கம்பர் "அது இன்று எட்டாம் நாள் நிறைவேறும்" என்று சொல்லிவிட்டுச் சேரனுக்குக் கடிதம் எழுதினார். சேரன் அடைப்பைக்காரன்போல் வேஷந்தரித்து ஓர் அழகிய குதிரையின்மேல் ஏறிக்கொண்டு எட்டாம் நாள் பகலில் வந்து சேர்ந்தான். அப்பொழுது சோழன் கொலு விற்றிருந்தான். கம்பர் அவன் பக்கத்தில் ஓர் ஆஸனத்தில் அமர்ந்திருந்தார். சேரன் ஸிம்மாஸன மேடைமேல் ஏறிவந்து கம்பரின் பக்கத்தில் நின்றுகொண்டு அவருக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுத்தான். கம்பர் வெற்றிலையை வாங்கி விரல் சந்தில் வைத்துக் கொண்டார். அடைப்பைக்காரனாக வந்தவன் சேரன் என்று சோழனுடைய மகள் அறிந்துகொண்டு தன் தகப்பனுக்குச் சைகை காட்டினாள். கம்பர் அதை அறிந்து சேரனுக்கு ஜாடை காட்ட, அவன் திடீரென்று அவ்விடம் விட்டுப்போய் வெளியிலிருந்த குதிரைமேல் ஏறிக்கொண்டு தன் தேசத்திற்குப் போய் விட்டான்.

பிறகு சோழன் கம்பரை நோக்கி "உம்முடைய பக்கத்தில் வந்திருந்தவன் யார்?" என்று கேட்டான். கம்பர் "அவன் தான் சேர மஹாராஜன்" என்று பதில் சொன்னார். அரசன் "அவனை ஏன் அனுப்பி விட்டீர்?" என்று கேட்க, கம்பர் "உன்னிடம் கப்பம் வாங்கும் அரசன் உன் அரண்மனையில் தனியாக வந்திருக்கிறான் என்பதை யறிந்தால், நீ அவனைச் சிறைப்படுத்திக் கொள்வாய் என்று எண்ணி அனுப்பி விட்டேன்" என்றார். "அவன் உமக்கு மடித்துக் கொடுத்த வெற்றிலைச் சுருளை ஒவ்வொன்றாக வாங்கி விரல் சந்தில் வைத்துக்கொண்டீரே யல்லாமல் தரித்துக் கொள்ளவில்லையே, அதென்ன?" என்று சோழன் கேட்டான். "அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்ரியில் குடை பிடிப்பார்; நான் அப்படி நடக்க மாட்டேன், சக்ரேச்வரனாகிய அவர் என்னை மதித்து கௌரவப்படுத்தும் பொருட்டு அவ்விதமாகச் செய்ய, நான் அது தெரியாமல் தலை விரித்துக்கொண்டு ஆடலாமா? வாங்கித் தரித்துக் கொள்வது மர்யாதையா?" என்று கம்பர் சொன்னார். அதைக் கேட்ட சோழன் கம்பரின் வித்யா ஸாமர்த்யத்தைக் காட்டிலும், ஒழுக்கமும் லௌகிகமும் மேம்பட்டிருந்ததென்று கொண்டாடினான்.

ஏ. ஸம்பத் ஐயங்கார்.


உபாத்யாயர்களுக்கான புஸ்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 723. | பூதத்வ போதினி ... | 0 | 6 | 0 |
| | எம். ஆர். ஸுப்ரமண்ய அய்யர் எழுதியது. ஜியாலஜி என்னும் பூதத்வ சாஸ்த்ரம் அடங்கியுள்ளது. | | | |
| 342. | ப்ராணி சாஸ்திரம் (Zoology) முதல் பாகம் ... | 0 | 9 | 0 |
| 569. | தமிழ் சரீர சாஸ்திரம் (Physiology) | 0 | 8 | 0 |
| 281. | பழமொழித் தீபிகை ... | 1 | 0 | 0 |
| | இதில் பல பழமொழிகளும் அவைகளின் தாத்பர்யங்களும், அவைகளை விளக்கக் கதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. | | | |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ்

## DHADABHAI NOWROJI IN PRIVATE LIFE.
## தாதாபாய் நௌரோஜியின் குணதிசயங்கள்.

தாதாபாய் நௌரோஜி கவர்ன்மெண்டின் குறைகளை தயாதாக்ஷண்ய மில்லாமல் கணக்கு விவரங்களுடன் எடுத்துக் கூறிக் கண்டிப் பதை, அவர் எழுதியுள்ள புஸ்தகங்கள் மூல மாகவும், அவர் செய்துள்ள ப்ரஸங்கங்கள் மூலமாகவும் வாசித்துள்ளவர்களில் சிலர் அவர் மூர்க்கமும் பிடிவாதமும் உள்ளவரென் றும், ஒன்றுக்கும் அசையாத மனம் படைத்த வரென்றும், சொல்லுவதுண்டு. ஆனால், அவரை நேரில் பார்த்துவிட்டால், அவருடைய சாந்தமான முகமும், ஸாமான்யமான நடை யுடை பாவனைகளும், அவர்களுக்கு ஆச்சர் யத்தைக் கொடுக்கும். உண்மையில், தாதா பாய் நௌரோஜி வாதங்களில் விட்டுக் கொடுப்பவரல்ல ரென்றாலும், மற்ற விஷயங் களில், தன் எதிரிகளிடத்தில் மர்யாதையா யும், விச்வாஸமாயும் இருக்கப்பட்டவர். அவர், தமக்கு எதிராளியாக இருக்கப்பட்டவ ரோடு ராஜாங்கக் கொள்கைகளையும், வேறு பொது விஷயங்களையும் பற்றிய வாதங்களில் தான் கண்டிப்பா யிருப்பாரே ஒழிய, ஸாதா ரண காலங்களில் அபிப்ராய பேதங்களை ஒழித்து, ஸ்நேகிதரைப்போல் நடந்து கொள் வார். இந்த ஸ்வபாவத்தை யறிந்த பலர் அவரிடம் எப்போதும் மர்யாதையாயும் அன் பாயும் நடந்துவந்தார்கள். அவருக்கு விரோதி களே கிடையாது என்னலாம்.

அவர் தமது ஆபீஸையும் படிக்கும் புஸ்தக சாலையையும் விட்டு வெளியில் வந்துவிட்டால், அவைகளைப் பற்றிய வேலைகளையும் கவலைகளை யும் உடனே மறந்துவிடுவார். தமது ஸ்நேகி தர்களைக் கண்டு பேசும்போதெல்லாம் ஸந்தோ ஷமாகவே இருப்பார். அவருடைய பேச்சுகள் தெளிவாயும், வீண்வார்த்தைகளா யிராமலும், விஷயங்கள் நிரம்பினவாயும், பரிசுத்தமாயும், ஸந்தோஷம் தரத்தக்கனவாயும் இருக்கும். அவரிடம் பேசுவதும், பேசக் கேட்பதும் ஆனந்தமாகவும், ப்ரயோஜன முள்ளதாகவும் இருக்கும். பிறர் மனதை வருத்தக்கூடிய ஒரு கடுஞ்சொல்லும் அவர் பேச்சில் வராது. அவ ரைப் பார்த்த மாத்ரத்திலேயே காண வரும் எல்லாரும் அவர் வீட்டைத் தம் வீடாக பாவித்து தாராளமாய்ப் பேசி உறவாட எண் ணுவார்கள். சிலரைப்போல் அவர் பிறரைப் பேசவொட்டாமல் தாமே ஸதா பேசிக்கொண் டிருப்பதில்லை. பிறரையே பேசவிட்டு, தாம் மௌனம் ஸாதிப்பது மில்லை. அவருக்கு ஸமயோசித மறிந்து வேடிக்கையாகவும், அனு தாபத்துடனும் பேசத் தெரியும். அவருடன் பேசவருபவர்கள் அவர் பேச்சைக் கேட்டு அலுக்கும்படி அவர் பேசுவதில்லை. யார் தம் முடன் பேசவந்தாலும், வந்தவருடைய மனோ நிலைமையை அறிந்து அதற்குத் தக்கப்படி பேசுவார். ஒரு குழந்தை பேச வந்தாலும், குழந்தையைப் போலவே தாமும் வேடிக்கை யாகவும் தமாஷாகவும் பேசுவார். கற்றோ ரிடம் பேசும்போது அவர்களுக்கேற்ற விதமா கப் பேசுவார். தமது வீட்டுக்கு வரும் நெருங் கிய ஸ்நேகிதர்களிடமும், பந்துக்களிடமும் ஸந்தோஷமாகவும் உத்ஸாகமாகவும் நடந்து கொள்வார். யாரிடமும் படோடோபமாய் இருப்பது கிடையாது. தமது ஆபீஸில் உள்ள வேலைக்காரர்களிடத்தில் கூட கோபமாய்ப் பேசு வதும் அதிகாரம் காட்டி நடப்பதும் கிடை யாது.

அவர் தமது ஸ்நேகிதர்களிடம் உண்மை யான நட்புக் கொண்டிருந்தார். அவர் ஸ்நே கிதர்களில் கஷ்டதசையிலுள்ளவர்கள் எவரும் அவரிடம் வந்து அத்ருப்தியுடன் போன தில்லை. ஆலோசனையோ, ஆறுதலோ, பண



உதவியோ, ஏதோ தம்மாலானதை இல்லை யென்னாமல் உதவி வந்தார். அநேக ஸ்நேகி தர்களுக்கு அவர் பண உதவிசெய்து ஆபத்து களிலிருந்து மீட்டியிருக்கிறார். சில வல் நெஞ் சர்கள் அவருடைய தாராள சிந்தையைக் கண்டு, அவரிடம் நேசம் பாராட்டி அவருக்கு பண நஷ்டம் உண்டாக்கினதுமுண்டு. ஆனால், அதற்காக அவர் அவர்களை ஒன்றும் செய்யா மல் விட்டுவிடுவார்.

நௌரோஜி ஸுகத்தையும் துக்கத்தையும் ஸமமாக பாவிப்பவர். அவருக்கு கஷ்டகாலம் வந்தபோதும் அவர் அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் எப்போதும் போலவே மன அமைதி குறையாமலிருப்பார்.

நௌரோஜிக்கு படாடோப வாழ்க்கை பிடிக்காது. அவர் வ்யாபாரம் செய்து நல்ல லாபம் அடைந்து வந்தபோதும், அவர் ஸாதா ரண மனிதர்களைப் போலவே நடை யுடை பாவனைகளில் மாறாமல் இருந்து வந்தார் அவருக்கு ஸொந்தத்தில் வண்டி யுண்டென்று லும், அது அவருடைய ஸ்நேகிதர்களுக்கும் வீட்டிலுள்ளவர்களுக்குந்தான் அதிகம் பயன்பட்டுவந்தது. அவர் வெகுவாய் நடந்தே போவது வழக்கம். அல்லது ஆம்னிபஸ் என்னும் பொது ஜனங்களுக்கான வண்டியில் ஏறிப் போவது வழக்கம்.

நௌரோஜி உடை விஷயத்தில் ஸமயோ சிதம்போல் நடப்பவர். இங்க்லண்டிலிருக்கும் போது அந்த தேச வழக்கத்துக்கு அனுகுண மாக உடை தரிப்பார், இந்தியாவுக்கு வந்து விட்டால், தலைப்பாகையும் தளர்த்தியான ட்ரௌஸர்ஸும் (கால்சட்டையும்) தரிப்பார்.

## THE PADSHA'S BRIDE.
## பாதுஷாவின் மணமகள்.

ஒரு ஸமயம் ஸிந்து ராஜ்யத்தின் பாதுஷா வாகிய அஹமத் ஷா கோடைகாலத்தை ஸுக மாகக் கழிப்பதற்காக தன் ப்ரதான பட்ட ணத்தைவிட்டு ஒரு பெரிய ஏரிக்கரையின் மேலுள்ள அரண்மனையில் வந்து தங்கியிருந் தான். அந்த ஏரியின் ஜலம் மிகவும் சுத்தமாக வும் தெளிவாகவும் இருந்தபடியால், அதற்கு வெள்ளி ஏரி என்று பெயர் வழங்கியது.

ஒரு நாள் பாதுஷா தன் ஸ்நேகிதர்களோடு அரண்மனையில் ஸந்தோஷமாக உண்டுகளித்த பிறகு, ஸாயங்காலம் அவர்களை அழைத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான். அவர்க ளெல்லோரும் ஒரு லேசான படகில் ஏறிக் கொண்டு வேடிக்கை யார்த்தமாய் ஏரியில் போனார்கள்; அப்பொழுது சந்த்ரன் தன் குளிர்ந்த கிரணங்களைப் பரப்பி ப்ரகாசித்துக் கொண்டிருந்தான். நிலவின் வெளிச்சம் ஏரி யின் தண்ணீரில் ப்ரதிபலித்ததைக் காண பட கில் சென்றவர்களுக்கு மிக்க ஸந்தோஷம் உண்டாயிற்று. அந்தப் படகில் உட்கார்ந்தி ருந்த மஹம்மதிய பாடகர்கள் பாதுஷாவின் வீரச் செய்கைகளையும் ஜயத்தையும் அரிய குணங்களையும் பற்றிப் புகழ்ந்துபாடினார்கள். பிறகு அவர்கள் ஸ்வர்க்கத்தைப்பற்றியும், அங் குள்ள தேவகன்னிகைகளைப்பற்றியும், ரோஜா முதலிய அழகிய புஷ்பங்களின் மனோஹர மான வாஸனையைப்பற்றியும் விசேஷித்துப் பாடினார்கள். அவர்கள் இவ்விதமாகப் பாடி முடிந்தவுடன், அவர்களோடிருந்த ஹிந்து பாடகர்கள் அழகிலும் குணத்திலும் சிறந்த ஒரு ரஜபுத்ர கன்னிகையை வர்ணித்து இனிய குரலுடன் பாடினார்கள். பாதுஷா யௌவன பருவத்தை யடைந்தவனாக இருந்தபடி யால், பாடகர்கள் புகழ்ந்த ரஜபுத்ர கன்

ளிகை அழகில் சிறந்தவளென்பதைக் கேட்டவுடன், அவன் நாக்கில் தண்ணீர் சுரந்தது. அப்படிப்பட்ட பெண்ணைத் தான் எவ்விதமாவது விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று உடனே தீர்மானம் பண்ணிவிட்டான். அவன் மிகுந்த கவலை கொண்டவனுகி அந்தப் பாடகர்களை நோக்கி "நீங்கள் புகழ்ந்து பேசும் பெண் எப்பொழுது இருந்தவள்? அவளை யார் கல்யாணம் செய்து கொண்டது?" என்று கேட்டான். பாடகர்களில் ஒருவன் "மஹாராஜ்! அவள் இப்பொழுது இருக்கிறாள். அவளை இன்னும் ஒருவரும் விவாஹம் பண்ணிக் கொள்ளவில்லை. அவள் பர்பத்ஸிங்கின் ஏகபுத்ரி. அவள் பெயர் லாலா என்பது" என்று பதில் சொன்னுன். அதைக் கேட்டதும் பாதுஷா ஒருவிதமாக தைர்யம் கொண்டு "ஸரி, நீங்கள் சொல்லியமாதிரி அந்தப் பெண் அழகில் சிறந்தவளாக இல்லாவிட்டால், தக்ஷணமே உங்களைச் சிரச்சேதம் செய்துவிடுவேன்" என்று சொன்னுன். அவன் மனதில் அந்தப் பெண்ணைப் பற்றிய எண்ணம் குடிகொண்டு விட்டபடியால், அவனுக்கு வேறு விதமான ஸந்தோஷத்தில் மனம் நாடவில்லை. ஆகவே, அவன் படகைக் கரைக்குக் கொண்டு போகும்படி உத்தரவுசெய்து, அதை விட்டு இறங்கித் தன் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

மறுநாள் அஹமத்ஷாவும் தன் விவாஹ விஷயத்தைப் பற்றி ப்ரதான ப்ராம்மண மந்த்ரியோடு கலந்து ஆலோசித்தான். அந்த மந்த்ரியும் லாலா அழகில் மிகவும் சிறந்தவளென்று அவனிடம் தெரிவிக்கவே, அவனுக்கு அந்தப்பெண்ணின்மேல் உண்டாகியிருந்த ஆசை அளவில்லாமல் அதிகரித்துவிட்டது. அவன் தனக்குக் கீழ்ப்பட்டிருந்த பர்பத் ஸிங்கின் மகளென்று கேள்விப்பட்டதும் அவளை எப்படியும் மனைவியாக்கிக் கொள்ளலாமென்று பாதுஷா தைர்யம் பண்ணிக் கொண்டான். ஆகவே தான் லாலாவை விவாஹம் செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதாக அவள் தகப்பனுக்குத் தெரிவிக்கும்படி மந்த்ரிக்குக் கட்டளையிட்டான். இந்தப் பெண்ணின் விஷயத்தில் தன்னுடைய அதிகாரமும் புகழும் உதவிசெய்யவமாட்டா வென்பதைப் பாதுஷா கண்டறியவில்லை! அநேக ரஜபுத்ரர்கள் தங்கள் பெண்களை அஹமத்ஷாவுக்கும் அவனைச் சேர்ந்த ப்ரபுக்களுக்கும் கல்யாணம் செய்து கொடுத்திருந்தார்கள். ஆனுல் பர்பத் ஸிங் ரஜபுத்ரர்களுள் மிகவும் வைராக்யமுடையவன். அஹமத்ஷாவை விவாஹம் செய்து கொள்வதனுல் தன் மகள் ராணியாகி பாதுஷாவுக்கு ஸமானமாக ஸிம்மாஸனத்தில் உட்காரக் கூடுமென்று அவன் அறிந்திருந்தாலும், ரஜபுத்ர வம்சத்தில் பிறந்த பெண் ஹிந்து மதத்தையும் ஹிந்துக்களையும் கேவலமாக நடத்தும் மஹம்மதியனுக்கு மனைவியாவதைப் பார்க்கிலும் மாண்டுபோவது கௌரவமானதென்று எண்ணியிருந்தான். அஹமத்ஷா தனக்கு மேலான பாதுஷாவாக இருந்தாலும், இந்த விஷயத்தில் அவனுடைய எண்ணத்திற்கு உடன்படக் கூடாதென்று உறுதியாக இருந்தான். ஆனுல் பாதுஷா அதிகாரத்திலும் ஸைன்யத்திலும் பெரியவனுதலால் அவனோடு திடீரென்று விரோதங் கொள்ளக் கூடாதென்று தீர்மானித்தான். அவன் பாதுஷாவின் இஷ்டப்படியே லாலாவை அவனுக்கு விவாஹம் செய்துகொடுப்பதாகப் பாசாங்கு செய்தான். பிறகு அவன் தன்னைச் சேர்ந்தவர்களோடு ஆஹுர் என்னும் மலைக்கோட்டைக்குள் போய் எதிரிகள் எதிர்க்காதபடி பந்தோபஸ்தாக இருந்தான்.

(இன்னும் வரும்.)



# REVIEW OF THE PRESS.
## பத்ரிகை ஆராய்ச்சி.

### QUALIFICATIONS OF A TEACHER.
### உபாத்யாயருக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள்.

ஸமீபத்தில் வெளிவந்த 'விவேகசிந்தாமணி'யில் உபாத்யாயர்களுக்கு இருக்கவேண்டிய முக்ய லக்ஷணங்களைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

உபாத்யாயர்கள் தேக ஆரோக்யமுள்ளவர்களாயிருக்கவேண்டும். சரீரத்துக்கும் மனஸுக்கும் நெருங்கிய ஸம்பந்தமுண்டு. அஸௌக்ய ஸ்திதியிலிருப்பவனிடத்தில் போய் நாம் ஒரு விஷயத்தை யோசனை செய்து சொல்லும்படி கேட்டால், அவன் தன்னுல் அப்பொழுது முடியாதென்பான். அவன் மனம் வேலை செய்யாது. அதே மாதிரி மனம் வ்யாகுலமடைந்தவனுடைய உடம்பு மெலிந்துபோகும். இதனுல் மனஸும் சரீரமும் ஒன்றோடொன்று ஸம்பந்தப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. சரீரம் திடமாயினு விட்டால், மனஸு திடமாயிராது ஆகையால் தேகாரோக்யமில்லாதவர்களை உபாத்யாயர் வேலைக்கு நியமிக்கக்கூடாது. இவர்களுக்கும் எப்பொழுதும் குதித்து விளையாடி குதூகலமாயிருக்கும் சிறு பிள்ளைகளுக்கும் ஒத்துவராது. அல்ப விஷயங்களுக்கெல்லாம் கோபங்கொண்டு கடினமாய்த் தண்டிப்பார். நோயுள்ளவர்களாயிருந்தால், அடிக்கடி வீட்டிலிருக்கும்படியாய் நேரிடும். பிள்ளைகளின் வித்யாபிவ்ருத்திக்குப் பங்கமுண்டாகும். ஆகையால் இந்த வேலையில் புகுகிறவர்கள் சரீர திடமுள்ளவர்களாயிருப்பதுடன், பின்னும் ஆரோக்யமாயிருக்கும் பொருட்டு தங்கள் ஆகாரம் நித்ரை, தேகப்பயிற்சி, இவைகளில் ஜாக்ரதை யுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

சிறு பிள்ளைகள் பெரியவர்களின் ரூபத்தைக்கண்டு தான் பயப்படுவதும் மர்யாதை செய்வதும். சரீரம் எப்படியிருந்தாலென்ன, யோக்யதையை யறிந்தவர் மர்யாதை செய்யவேண்டியதென்பது அவ்வளவாய் அவர்களுக்குத் தெரியாது. சிலருக்கு ஸ்வபாவத்திலேயே சரீரம், நடை முதலியவை காம்பீர்யமாயும், பார்ப்போருக்கு பயத்தையும் பக்தியையும் உண்டுபண்ணத்தக்கவையாயும் ஏற்பட்டிருக்கும் இந்த பாக்யம் எல்லாருக்கும் கிடைக்காது. உபாத்யாயர்கள் எல்லாரும் இப்படி யில்லாமல்போனுலும், அங்கஹீனமற்றவர்களாயாவது இருக்கவேண்டும். ஒரு உபாத்யாயர் நொண்டியாயிருந்தால், அவரிடத்தில் பிள்ளைகளுக்கு பயமும் பக்தியும் உண்டாவது கஷ்டம். பிறரைப்போல் செய்கிற ஸ்வபாவம் பிள்ளைகளிடத்திலுண்டாதலால், நொண்டி நொண்டி நடக்கும் உபாத்யாயரைப் பார்த்தால், அவரைப்போலவே அவருக்குப் பின் தாமும் நொண்டிநொண்டி நடப்பார்கள். அது கடைசியில் உபாத்யாயரை கேலி பண்ணுவதில் முடியும். அவரிடத்தில் மர்யாதையும் குறைந்துபோகும்.

உபாத்யாயர் பேச ஆரம்பித்தவுடனே சப்தமின்றி ரென்றிருந்து, பிள்ளைகளை சந்தடிசெய்யாமல் அடக்கி, அவர் சொல்லும் வார்த்தைகளை கவனிக்கச் செய்கிறதா யிருக்கவேண்டும். மிகவும் தாழ்ந்த குரலுடனும் பேசக்கூடாது. அதிக உரத்த கூச்சல் போட்டுக்கொண்டும் பேசக்கூடாது. வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு எந்த மட்டில் உரத்துப்பேசினுல் போதுமோ அந்த விதமாய்ப் பேசவேண்டியது.

கூர்மையான கண்ணும் காதும் உடையவராயிருக்க வேண்டும். வகுப்பில் பாடம் நடக்கும்பொழுது அனுவச்யமான சப்தம் கொஞ்சம் கிளம்பினுலும் சரி, அல்லது, பிள்ளைகள் சற்று கவனத்தப்பாய் அங்குமிங்கும் பார்த்தாலும் சரி, அந்த சப்தத்தையும், கவனத்தப்பையும் உடனே யறியக்கூடிய அவ்வளவு கூர்மையான காதும் கண்ணும் உபாத்யாயர் உடையவராயிருக்க வேண்டும்.

போதிக்குந் திறமையுடையவர்களா யிருக்கவேண்டும். கல்விமட்டுமிருந்தால் போதாது, கற்பிக்குந் திறமையும் இருக்கவேண்டும். படித்தவர்களில் அநேகருக்கு தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைத் தெளிவாய்ப் பிறருக்கு மனதிற் படும்படி சொல்லும் சக்தியிருப்பதில்லை. போதிக்கும் திறமை ஸ்வபாவத்திலேயே யிருப்பது ச்ரேஷ்டம். அப்படியில்லாதவர்கள் கூட ச்ரமப்பட்டு அந்தத் திறமையைத் தங்களிடத்தில் ஏற்படுத்திக்கொள்ளலாம். அனுபவத்தினுலும் இந்தத் திறமை ஏற்படும்.

தான் கற்பிக்கப் புகும் விஷயத்தில் பூர்ண ஞானமுடையவரா யிருக்கவேண்டியது. ஒரு விஷயத்தை நாம் பிறருக்குக் கற்பிக்க வேண்டுமானுல், அதை

நாம் முன்னாடி நன்றாய் அறிந்துகொண்டிருக்கவேண்டும். தம்மைப் பார்க்கிலும் அதிக மடங்கு படிப்பும் ஞானமும் உபாத்யாயரிடத்தில் உண்டென்ற எண்ணம் பிள்ளைகளுக்கு உண்டானால்தான், அந்த உபாத்யாயரிடத்தில் அவர்களுக்கு பயமும் பக்தியும் தோன்றும். "பிள்ளைகளைப் பார்க்கிலும் எனக்கு ப்ரபஞ்ச ஞானம் அதிகமாகையால், எனக்கு முந்தி தெரியாத அம்சமானாலும், அன்றன்றைக்கு வேண்டியதை அப்போதைக்கப்போது படித்துப் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க என்னால் முடியாதா" என்று சிலர் நினைக்கலாம். இது தப்பெண்ணம். நாம் படித்துக்கொண்டே போகும்பொழுது எல்லாம் ஸுலபமாய் தெரிந்துவிட்டாற்போலத் தான் தோன்றும். பிறருக்கு எடுத்துச் சொல்லப் புகுந்தாலோ, முன் நமக்குத் தோன்றாத ஸந்தேகங்கள் தோன்றும். நமக்கே தெளிவாய்த் தெரியாத விஷயத்தைப்பற்றிப் பிள்ளைகளுக்கு நாம் கற்பிக்கும்பொழுது, நாம் எதிர்பார்த்திராத கடினங்கள் பிள்ளைகளுக்குத் தோன்றி, உபாத்யாயரிடம் ஸந்தேகம் தெரிந்துகொள்ள அவர்கள் கேள்விகள் போடலாம். அந்த ஸமயத்தில் அவர் விழிக்கும்படியாய்த் தான் வரும். இப்படி ஸம்பவித்தலால் உபாத்யாயருக்கு அவமானம்நேரிட்டு ஏற்கனவே அவரிடத்தில் பிள்ளைகள் வைத்திருந்த கௌரவம் குறைந்துபோகும்.

உபாத்யாயர் மேல்மேல் படித்து தன் ஞானத்தை வ்ருத்திசெய்ய வேண்டுமென்ற ஆவல் கொண்டவராயிருக்கவேண்டும். இது முன்சொல்லிய லக்ஷணத்துக்கு அவச்யமானது. புது விஷயங்களைத் தெரிந்துகொண்டேயிருந்தால், அதனால் புத்திக்கு அதிக தெளிவுண்டாகி, பிள்ளைகளுக்கு கற்பிக்குந் திறமை விருத்தியடையும்.

உபாத்யாயருக்கும் பிள்ளைகளுக்கும் ஒற்றுமை யிருக்கவேண்டும். அதாவது உபாத்யாயர் எவ்வளவு பெரிய படிப்புள்ளவராயிருந்தாலும், பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்பொழுது தன்னையும் அவர்களில் ஒருவராய் பாவித்துக்கொண்டால்தான், பிள்ளைகளுக்கு எந்த விடங்களில் ஸந்தேகம் தோன்றுமோ அவைகளைத் தெரிந்துகொண்டு தகுந்தபடி போதிப்பார்.

பிள்ளைகளை யடக்கியாளும் திறமை சிலருக்கு ஸ்வபாவத்திலேயே யிருக்கும். சில உபாத்யாயர்கள் வகுப்பண்டை வரும்பொழுதே பிள்ளைகள் அவரவர்களிடத்திலுட்கார்ந்து கிச்சென்ற சப்தங்கூட வில்லாமல் அமரிக்கையா யிருப்பார்கள். இன்னும் சில உபாத்யாயர்கள் வகுப்பில் வந்துட்கார்ந்தும், அவர் வந்ததைப் பிள்ளைகள் சற்றேனும் கவனியாமல் அவரவர்கள் தங்கள் கார்யத்திலிருப்பதையிட்டு, "சரியாயுட்காரு," "புஸ்தகங்களை மூடு," "நீ பெஞ்சிமேல் நில்லு" என்று சரமாரியாய் அடுத்தடுத்து தண்டனைகள் விதித்துக்கொண்டிருந்தபோதிலும், லக்ஷ்யம் செய்யாமல், அவரையே எதிர்த்துப் பேசுவதும் உண்டு. முதலில் வந்தவரிடத்தில் அவ்வளவடக்கத்துடனிருந்தவர்கள் இவரைக்கண்ட மாத்ரத்தில் இப்படி மாறுவதேன்? இதற்கெல்லாம் காரணமென்ன? முதலில் வந்தவரிடத்தில் பிள்ளைகளுக்கு பயமும் பக்தியுமுண்டு. இவரிடத்தில் அதில்லை. உபாத்யாயருக்கு பெருத்த யோக்யதையுண்டென்று பிள்ளைகளறிந்தால்தான், அவரிடத்தில் மர்யாதையாயிருப்பார்கள். யோக்யதையிருப்பதுடன் உபாத்யாயருக்கு மனோதிடமிருக்கவேண்டும். இத்தனை பிள்ளைகளையும் நான் என்னமாயடக்கி ஆளப்போகிறேன் என்று அதைர்யம் வந்தால், உடனே யவர் வேலையை விட்டுவிட வேண்டியதுதான். தன்னிடத்திலேயே தனக்கு நம்பிக்கை யில்லாமற்போனால் மேலே ஒரு கார்யமும் முடியாது.

ஸமயோசிதமாய் நடந்துகொள்ளக்கூடிய யுக்தியும் புத்தியும் ஸாமர்த்யமும் உபாத்யாயரிடத்திலிருக்கவேண்டும்.

உபாத்தியாயர் வேலை கடினமானது. மேலும் படிக்க வரும் பிள்ளைகளில் மந்த புத்தி யுள்ளவர்கள் அதிகமாயிருப்பார்கள். சில ஸமயங்களில் எத்தனை தடவை ஒரே ஸங்கதியைப்பற்றி உபாத்யாயர் கரடியாகக் கத்திச் சொன்னாலும் அவர்கள் மனதில் படாது. அப்பொழுதுகூட அவர்கள்பேரில் சற்றேனுங் கோபங்கொள்ளாமல், நன்றாய் விளக்கிக்காட்டாத குற்றம் தன்னுடையதென்று நினைத்து மறுபடியும் சொல்ல முயலவேண்டும். ஆதலால் உபாத்யாயர் விடாமுயற்சி யுள்ளவராயும் பொறுமையுள்ளவராயுமிருக்கவேண்டும்.

உபாத்யாயர் பக்ஷபாதமில்லாதவரா யிருக்கவேண்டும். இது ந்யாயம், இது அந்யாய மென்பது பிள்ளைகளுக்கு நன்றாய்த்தெரியும். சில பிள்ளைகளை ஒரு மாதிரியாயும், மற்றும் சிலரை வேறுமாதிரியாயும்நடத்தினால், அவரிடத்தில் பிள்ளைகளுக்கு நம்பிக்கை யிராது.

ஸத்யம் தவறாமை. உபாத்யாயர் தான்சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும், செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஸத்யத்தை மேலாகக்கொண்ட வராயிருக்கவேண்டும். உபாத்யாயர் ஸத்யம் தவறாதவராயிருந்தால் பிள்ளைகளுக்கும் அதே நன்னடவடிக்கை படியும்.

பிள்ளைகளின் நன்மையை உத்தேசித்து உபாத்யாயர் தம்மிடத்துள்ள துரப்பழக்கங்களையெல்லாம் நீக்கி, நாள் தப்பாமல் குறிப்பிட்ட மணிக்குப் பள்ளிக்கூடத்துக்கு வருதல், சரீரத்திலும் உடுப்பிலும் பரிசுத்தமாயிருத்தல் முதலிய நல்ல வழக்கங்களை பிள்ளைகளும் அநுஸரிக்கும்படி அப்யஸித்து வரவேண்டியது.

## THE WAY OF SOUND SLEEP.

### நல்ல நித்ரை யடையும் வழி.

ஸமீபத்தில் வெளிவந்த 'வைத்யகலாநிதி'யில் இது விஷயமாய் ஒரு வ்யாஸம் காணப்படுகிறது.

இரவில் நல்ல நித்ரையை விரும்புவோர் பகலில் படுத்துறங்குவதும், பகலில் தூக்கம் வருவதற்கு அநுகூலமான வேலைகளைச் செய்வதும் கூடாது.

நித்ரையில் பரிசுத்த வாயு அவச்யமானது. வஸிப்பது மாடிவீடாக இருந்தால், அதில் படுக்கையறையை மெத்தையிலேயே ஏற்படுத்திக்கொள்வது அவச்யமாகும். நகரங்களில் விஷ வாயுக்கள் அதிகமாகப் பரவியிருப்பதும், அந்த வாயுக்கள் பூமி மட்டத்திற்கு ஸமீபத்திலேயே அதிகமாயிருப்பதும் இயல்பாகையால், முக்யமாய் நகரங்களில் மெத்தையிலேயே சயனக்ருஹத்தை அமைப்பது மிகவும் முக்யம்.

படுக்கையறை எவ்விடத்தில் அமைக்கப்பட்டிருந்தபோதிலும், தாராளமாய் காற்று போவதற்கு தகுந்த ஏற்பாடுகள் இருக்கவேண்டும். ஆனால் அறையில் உலாவும் காற்று ஈரம் நிரம்பியதா யில்லாமலிருக்கவேண்டும். அப்படி ஈரம் நிரம்பியதானால், அந்த ஈரம் தேஹத்தைத் தாக்காம லிருக்கும்படி முன் ஜாக்ரதையோடு இருப்பது அவச்யமாகும்.

நல்ல நித்ரையை அநுபவிப்பதற்கு, சயனக்ருஹம் குளிர்ந்து (வெப்பம் நீங்கி) இருப்பது அவசயம். சீதளமான காலங்களில், படுக்கையறையில் அநேகம் ஜனங்களுக்கு 30 முதல் 40 டிக்ரி உஷ்ணம் போதுமானது. பிணியாளி படுக்கும் அறையில் 50 டிக்ரி உஷ்ணம் இருப்பது நலம்.

சயனிக்கும் படுக்கையும், நல்ல நித்ரை வருவதற்குக் கவனிக்கவேண்டிய முக்யமான ஸாதனங்களுள் ஒன்று. மெதுவான இறகுகளின் தூலிகைகளால் ஆக்கிய படுக்கையில் சயனிப்பது விஷய தத்வ முணர்ந்தவர்களால் விரும்பப்படமாட்டாது; மெத்தையானது தளர்ந்து வழவழப்பாயில்லாமல் உரப்பாகவும் அழுத்தமாகவும் இருக்கவேண்டும். மேலும் அவனவனுடைய இஷ்டத்திற்குத் தகுந்தபடியும் அது அமைக்கப்பட்டிருக்கவேண்டும். சிலருக்குத் தளர்ந்துள்ள மெதுவான படுக்கையில் விருப்பமிருக்கலாம்; வேறு சிலருக்கு கெட்டியான படுக்கையில் விருப்பமிருக்கும். படுக்கை ஸௌகர்யமாய் அமையாததாலும், அதன் மேல்விரிப்புகள் தகுந்தவாறு பரப்பி அமைக்கப்படாததாலும், அநேகம் பெயர்கள் இரவில் அமைதியாகத் தூங்க முடியாமலே கஷ்டப்படுவது வழக்கம். ஆனால் தமக்கு நித்ரை வராததற்குக் காரணம் சரிவர அமைக்கப்படாத படுக்கையே யென்று அவர்களில் பெரும்பாலோர் கவனிப்பதில்லை. படுக்கையின்மேல் கனமானதும் உஷ்ணமுள்ளதுமான நல்ல விரிப்பைப் போட்டு வைக்கவேண்டும்.

நித்ரையின்மை யென்பது ஒரு வ்யாதியல்ல; அது ஏதோ ஒன்றின் குறியாகும். சரீரத்தில்ஏதோ இயற்கைக்கு விரோதமான நிலைமை உண்டாயிருப்பதை அது குறிப்பிடுகிறது; அதாவது தேஹத்தில் ஏதோ அவயவம் கோளாறடைந்ததாகவோ, மூளை அல்லது நரம்பு மண்டலம் கலவரமடைந்திருப்பதாகவோ அந்தக் குறியினால் அறியலாம்; அக்கோளாறுகள் மனிதனுக்குத் தெரிந்தும் அல்லது உணர்ச்சிக்கு எட்டாமலும் உண்டாயிருக்கக்கூடும். மனக் கவலையோ, மனோரதபங்கமோ, துயரமோ, இவற்றில் ஏதேனும் மனிதனுடைய மனதைக் கஷ்டப்படுத்தி, மூளை ஸம்பந்தமான கலவரத்தை உண்டுபண்ணலாம். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சயனத்தில் படுக்கப் போகாமலும், ப்ரதிதினமும் ஒரே சீராக ஏற்ற ஸமயத்தில் நித்ரை செய்யாமலும் வலுவில் கண் விழிப்பவர் பலவிதமான மானஸிக சாரீர ஸம்பந்தமான கோளாறுகளுக்கு உள்படுவதுடன், அவர்களுக்கு அநேகமாய் எப்பொழுதுமே அமைதியாகத் தூக்கமும் உண்டாகாமல் நித்ராபங்கம் என்கிற துன்பத்திற்கு அவர்கள் ஆளாகிறார்கள்.

காப்பி, தேயிலை, மத்யம், மற்றுமுள்ள அபினி முத

லிய சரக்குகள் ஆகிய இவைகளை உபயோகிப்பது நித்ராபங்கத்திற்குக் காரணமாகும். மதுபானம் செய்ய ஆரம்பிப்பவருக்கு, முதலில், அதனால் நல்ல நித்ரை வருவது வாஸ்தவமானாலும், அதை வழக்கமாய் உபயோகித்து வரும்போது, தூக்கம் வருவது நாளுக்கு நாள் மிகவும் கஷ்டஸாத்யமாய் விடுகிறதென்பது உண்மையென்பதை கவனிக்கவேண்டும். நித்ரை உண்டாவதற்கென்று சில ஒளஷதச் சரக்குகளை உபயோகிப்பதால், மதுபானத்தினால் உண்டாகும் பலனே ஸம்பவிக்கும்.

அஜீர்ணம், மலபந்தம், அதிஸாரம், ஹ்ருதய ரோகங்கள், கிருக்கங்களைப்பற்றிய கோளாறுகள், கல்லீரலின் விகாரம், மற்றுமுள்ள இதர அவயவங்களின் சீர்கேடு, இவைகளாலும் அமைதியாக நித்ரை யுண்டாவதில்லை. மனக்கோளாற்றால் அஜீர்ணம் முதலிய கெடுதிகள் ஸம்பவிப்பதும், இவை அனைத்தாலும் நித்ரை சீர்கெடுவதும் உண்டு. ஆகவே பொதுவில் சரீரத்தில் எந்த அவயவத்திற்கும் இயற்கைக்கு விரோதமான மாறுபாடு உண்டாகாமல், தேஹத்தையும் மனஸையும் முற்றிலும் ஆரோக்ய நிலைமையிலும், இன்பமான ஸ்திதியிலும் அமைத்து வைக்கவேண்டியது ஸுகமாக நித்ரை உண்டாவதற்கு இன்றியமையாத விஷயங்களாகும்.

## PRICKLY PEAR.
## சப்பாத்திக் கள்ளி.

சப்பாத்திக் கள்ளி க்ராமத்தார்களுக்கு மிகவும் தொந்தரவு கொடுக்கும் ஓர் செடி. இது நமது தேசத்துக்கு ஸொந்தமானதல்ல. ஆதியில் இதை யாரோ ஒரு ஐரோப்பியர் இந்தியாவுக்கு வேடிக்கையாக சட்டியில் வளர்க்கும் பூண்டாகக் கொண்டுவந்து தமது பங்களாவில் வைத்துக் காப்பாற்றி வந்தாராம். அது நாளடைவில் வ்ருத்தியடைந்து நாடெங்கும் பரவிவிட்டது. இதை ஒழிக்க என்ன முயற்சிகள்செய்தும் பயன்படவில்லை.

இது அநேக ஊர்களில் ஸமுதாய நிலங்களில் அதிக்ரமித்து, சாலைகள், வழிநடைகள் முதலியவைகளைக் குறுக்கி வருகிறது இதனால் ஸுகாதாரத்துக்கு கெடுதலுண்டாகிறது. பாம்பு முதலிய துஷ்ட ஜந்துக்களுக்கு இருப்பிடமாகிறது. இப்படிப்பட்ட சப்பாத்திக் கள்ளியினால் அமெரிக்காவில் நன்மையும் உண்டாகிறதாமென்று 'வமேசபோதினி' எழுதுகிறது.

ஆழக் கிடங்கு பறித்து, சப்பாத்தி இட்டு, மணல் வாரிப்போட்டு, அதன்மேல் தென்னைவாழை முதலியவைகளைப் பயிரிட்டால் அவை வெகு செழிப்பாகக் கிளம்புவதைப் பார்க்கலாம். ஒரு தரம் கொளுத்தினவுடன் வெந்து நின்று காய ஆரம்பிக்கும். அப்போது அடுத்தப்படியாய் நெருப்பிட்டு இரண்டு மூன்று வாரங்களுக்குக் கவனமாக இருந்தால், இதை இருந்தவிடம் தெரியாமல் அழித்துவிடலாம். கொஞ்சம் சோம்பலடைந்து பிறகு பார்த்துக்கொள்வோ மென்றிருந்தால், அது இடங்கொண்டு பரவ ஆரம்பித்துவிடும்.

இதை அமெரிக்கர் பல விதங்களில் உபயோகமுள்ளதாகச்செய்து வருகிறார்களாம். முள்ளெடுக்கும் கருவி ஒன்றால் முள்கொத்துக்களை நீக்கி, சதையாயிருக்கும் பாகத்தைத் துண்டாக்கி வேகவைத்தோ, வேக வைக்காமலோ எடுத்து, பருத்திக்கொட்டையோடும் தவிட்டோடும் பிசிறி கால்நடைகளுக்கு உணவாக இடுகிறார்கள். டெக்ஸாஸ் நாட்டில் ஆயிரக்கணக்கான கறவைப் பசுக்களின் மந்தைகளுக்கு இதை உணவாய்க் கொடுப்பதால் பசுக்கள் ஸமர்த்தியாய்ப் பால் கறக்கின்றனவாம் ஸான் அந்தோனியோ என்னும் இடத்தில் மனிதர்களும் இதைப் பக்வப்படுத்திப் போஜன பதார்த்த மாக்குகிறார்களாம். இப்படிப் பல விதங்களில் உபயோகப்படுவதால், இருந்த பயிரெல்லாம் அறுவடையாய் விடவே, தோட்டங்களில் சப்பாத்தியைப் பயிர் செய்ய ஆரம்பித்திருக்கிறார்களாம்.

மூல உபத்ரவத்தால் வருந்திய அமெரிக்க இஞ்சினியர் ஒருவர் சப்பாத்தியைக் கண்டால் குதிரையினின்றும் தரையில் தாவிக்குதித்து சப்பாத்திப் பழத்தை வேண்டியமட்டும் பறித்து முள்நீக்கித் தின்றுகொண்டு போவது வழக்கமாம். பெருங்காலாக இருந்தால், முள்கழித்த சப்பாத்தி இலைகளை வேகவைத்து நசுக்கி, வீக்கத்தில் வைத்துக் கட்டக் குணமாகும் வெட்டுக் காயங்களை ஆற்றும். வயிற்றுளைவையும் சப்பாத்திச் சாறு ஆற்றும். முப்பட்டை முள், வயிற்றில் அகப்பட்டுக் கொண்டால் சாவு. அதை இரண்டு முறை கொளுத்தி சாம்பலாக்கி எரு விட்டால் நல்ல உரமாம் மாடுகள் உடம்பில் ஊதத்த சப்பாத்தி தானாக மெதுத் தன்மை யடைந்து வெளிப்படும்.

சப்பாத்தி முள்ளுக்கு நல்லெண்ணெய் மாற்று.



# News and Notes.
# வர்த்தமானக் குறிப்புகள்.

வாதுமை.

இந்த மரம், மேல் ஆசியாவில் ஆதியில் உற்பத்தியாகி வந்தது. இப்பொழுது பஞ்சாப் ப்ராந்தங்களில் இது பயிரிடப்படுகிறது. காச்மீரத்திலும், ஆப்கனிஸ்தானத்திலும் விசேஷமாய் வளர்க்கப்பட்டு வருகிறது. இதில் இரண்டு வகைகளுண்டு; ஒன்று இனிய சுவையுடையது, மற்றொன்று கைப்பு; ஆனால் வ்ருக்ஷ சாஸ்த்ர தத்வப்படி இவ்விரண்டுக்கும் வித்தியாஸம் காணப்படுவதில்லை.

மதுர ரஸமுள்ள வாதுமை மிகவும் ஸ்நிக்த குணமுள்ளதும், தேஹத்தைப் போஷிக்கக் கூடிய குணமுடையது மாயிருக்கும். இதைச் சேர்த்து அடியில் குறிப்பிடப்படுமாறு தயார் செய்யப்படும் சூர்ணத்தை பலவீனங்களில் கொடுத்துவரலாம்.

ஓடு நீக்கிய வாதுமைப் பருப்பு எட்டு பலம், சுத்தி செய்த சர்க்கரை 4-பலம், உயர்ந்த வேலம் பிசின் ஒரு பலம் இவற்றைத் தனித்தனியே சூர்ணம் செய்து, அப்பால் ஒன்றாகக் கலந்துவிடவும். இந்த சூர்ணத்தை வேளைக்கு இரண்டு தோலா வீதம் தினம் ஒன்றுக்கு மூன்று வேளை வீதம் உட்கொள்ளவும். வாதுமையிலிருந்து எடுக்கப்படும் தைலம் மிகவும் நறும்மணம் வீசும். இதன் தைலம் மேகரோகங்களில் நல்ல பயன் தரக்கூடியது என்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம். வாதுமையின் மேல் ஓடுகளை எரித்துச் சாம்பலாகச் செய்து, சிறிது உப்புக்கற்களையும் கலந்து இடித்து, வஸ்திரகாளிதம் செய்து, சில விதமான பல்வலிகளைப் போக்க தந்த சூர்ணமாய் உபயோகிக்கலாம். கைப்பான வாதுமையை ஆமவாதம் என்னும் கீல்வாயுவில் மேலுக்குப் பற்றுப் போடுவதற்கு வடதேசங்களில் உபயோகிப்பது வழக்கம்.—வைத்திய கலாநிதி.

ந்யூமோனியா என்னும் ச்வாஸ ரோகம்.

இந்த ரோகம க்ருமி ஸம்பந்தமானது. க்ருமிகளால் தான் விசேஷமாக இது மனிதர்களுக்குள் பரவுகிறது. இந்த க்ருமிகள் மூக்கிலும் தொண்டையிலும் சேர்ந்து வ்யாதியை உண்டாக்குகின்றன. க்ருமி சேர்ந்தவர்கள் பலசாலிகளாகவும் ஸௌக்யமாகவும் இருந்தால், ஜலதோஷம் மாத்ரம் உண்டாகும். நோய்ப்பட்டு மெலிந்திருந்தால் ச்வாஸ ரோகம் உண்டாகும். ஜலதோஷத்தையும் ச்வாஸரோகத்தையும் வ்ருத்தி செய்வதில் கெட்ட காற்றுதான் முக்யமான காரணமாகும். காற்று தாராளமாய் வீசும் அடைப்பில்லாத இடங்களில் படுப்பவர்களுக்கும், பனிக்காலங்களில் இரவில் அறைகளின் ஜன்னல்களைச் சாத்தாமல் படுத்துக்கொள்ளுபவர்களுக்கும் ஜலதோஷம் வருவது அரிது. வந்தாலும் அற்பமாயிருக்கும். ந்யூமோனியாவாகக் காணுவதில்லை. ஜலதோஷமுள்ளவர்களிடம் பலமற்றவர்களை நெருங்கவிடக் கூடாது. ஏனென்றால், பலாட்டியர்களுக்கு வரும் ஜலதோஷமானது பலங்குறைந்த வயோதிகர்களுக்கும் குழந்தைகளுக்கும் வந்தால் ந்யூமோனியாவாக மாறக்கூடும்.

விலக்கவேண்டியவை.

ஒருவர் உபயோகித்தத் துணியை மற்றொருவர் எதற்கும் உபயோகிக்கக் கூடாது.

வ்யாயாமம் (தேஹவுழைப்பு) செய்தபிறகு ஈரமுள்ள இடங்களில் உட்காரக்கூடாது.

பலருக்குப் பொதுவான பாத்ரத்தை எதையும் குடிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது.

பாதங்களை ஈரமாக வைத்திருக்கக் கூடாது. அதனால் கபஜ்வரம் உண்டாகும்.

ஜலதோஷத்திற்கு ஆரம்பத்திலேயே ஏற்ற சிகித்ஸை செய்யத் தவறக்கூடாது.

சூடான அறையில் மிகவும் கனமான உடைகளைத் தரித்துக்கொண்டு இருக்கக்கூடாது.

சிறுவர்கள் அஸௌக்யமாயிருக்கையில், அவர்களைப் பள்ளிக்கு அனுப்பக்கூடாது.

தொண்டைப்புண் எவ்வளவு ஸ்வல்பமா யிருந்தபோதிலும், சீக்ரத்தில் அதற்குச் சிகிச்சை செய்யாமலிருக்கக்கூடாது.

குழந்தை அஸௌக்யமானால், உடனே வைத்யரை அழைத்து ஏற்ற பரிஹாரம் செய்வதில் தவறக்கூடாது.

வாட்டர் ஹயஸிந்த்.

வாட்டர் ஹயஸிந்த் என்னும் களைப்பூண்டு நமது

தேசத்தில் ஏராளமாகப் பரவிவருகிறது. அதை ஒழிக்க ஒரு நல்ல உபாயமிருக்கிறது. அதாவது அதை மட்கவைத்தோ அல்லது எரித்தோ எருவாக உபயோகிப்பதே. இந்தப் பயிரில் பொட்டாஷ் ஸத்து அதிகமாக இருப்பதால், அது நல்ல எருவென்று தெரிகிறது. அதை வங்காளத்தில் ஜூட் என்னும் சணல் பயிருக்கு உபயோகித்ததில் ஏக்கருக்கு 6-மணங்கு நார் அதிகமாகக் கிடைத்ததாம். எரித்த சாம்பலை உபயோகிப்பதைவிட மட்க வைத்து உபயோகிப்பது லாபகரம்.

### செலாவணியிலிருக்கும் விநோதமான நாணயங்கள்.

ஜெர்மனியில் இப்போது இரும்பு நாணயங்கள் செலாவணியிலிருக்கின்றன. மெக்ஸிகோ என்னும் தேசத்தில் அட்டையில் செய்யப்பட்ட நாணயங்கள் செலாவணியாகி வருகின்றன. பர்மாவிலும், சீனாவிலும் பீங்கான் நாணயங்கள் செலாவணியிலிருக்கின்றன.

தென்னமெரிக்காவிற்கு வடக்கே மேலிந்தியத் தீவுகளிலொன்றாகிய ஸாந்தாக்ரஸ் தீவில், பக்ஷியிறகினால் செய்தநாணயங்களை இப்போது உபயோகித்து வருகிறார்கள். அங்கு அகப்படும் ஒரு தினுஸான கிளியின் நீல நிறமான அடி இறக்கைகளினால் அந்நாணயம் செய்யப்படுகின்றது. ஆஸ்ட்ரேலியாவின் கிழக்கே பஸிபிக் மஹா ஸமுத்ரத்தில் லாயல்டி தீவுகள் என்ற தீவுகள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் பழங்களையே தின்று ஜீவிக்கும் ஒருவித அபூர்வமான வௌவாலின் காதுகளின் பின்பக்கத்து மயிர்களை பல மாதிரியான நீண்ட கயிறுகளாகப் பின்னி, அவற்றை நாணயமாகச் செலாவணி செய்துகொள்ளுகிறார்கள்.

### காய் கறிப் பயிர்களுக்கு ஜலம் பாய்ச்சுதல்.

முட்டைகோஸ், சிக்கரி, லெட்டிஸ் முதலிய கீரை வகைகளுக்கு ஜலம் பாய்ச்ச ஒரு புதுமுறை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பழைய முறைப்படி ஒரு நாள் விட்டு ஒருநாள் ஜலம் ஊற்றுவிதைவிட, ஸதா ஜலம் பாயும்படி செய்வதே புதிய முறையின் முக்ய கொள்கையாகும். ஒவ்வொரு செடியின் பக்கத்திலும் வாயகன்ற ஒரு பாத்ரத்தில் ஜலம் ஊற்றி வைத்து பருத்தி அல்லது சணலால் செய்த துணியைக் கொண்டு திரித்த ஒரு திரியை நனைத்து, பாத்ரத்தில் ஒருநுனியும், செடியின் வேர்ப் பக்கத்தில் ஒருநுனியும் இருக்கும்படி வைத்தால், ஜலமானது சொட்டு சொட்டாக விழும். இதனால் செடிக்கு எவ்வளவு ஜலம் வேண்டுமோ அவ்வளவு ஜலந்தான் விழும். இந்த முறை ஸ்வல்ப செடிகளுள்ள வீட்டுத் தோட்டங்களுக்குத் தான் ஏற்றதேயொழிய, பெரிய காய் கறித் தோட்டங்களுக்கு விசேஷமாய் உபயோகப் படாது.

### தமிழ்க் கல்வி ஸங்கம்.

இப்பெயர்கொண்ட ஸங்கமொன்று சென்னையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதன் நோக்கம் தமிழ் நாட்டில் உள்ள பாமரஜனங்களுக்கு தற்காலத்திய கல்வியை பரவச் செய்வதாகும். இதற்காக இந்த ஸங்கத்தார் பத்ரிகைகளும் புஸ்தகங்களும் ப்ரசுரம் செய்யவும், ப்ரஸங்கங்கள் நடக்க ஏற்பாடு செய்யவும் உத்தேசித்திருக்கிறார்கள். இந்த ஸங்கத்தின் மூலதனம் 10,000 ரூபாயாகும். ஒரு பங்கின் விலை 50 ரூபாய். ஆனால் தற்போது பங்கு ஒன்றுக்கு 10 ரூபாய்தான் வஸூல் செய்யப்படும் இந்த ஸங்கத்துக்கு ஜட்ஜ் ஸதாசிவ ஐயர் ப்ரெஸிடெண்டாவர். ராமநாதபுரம் ராஜா வைஸ் ப்ரெஸிடெண்ட். அநேக ப்ரமுகர்கள் இந்த ஸங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

### முதலாவது சென்னைக் காலாள்படை.

தேச பாதுகாப்பு ஸேனையின் முதலாவது சென்னைக் காலாள்படையை ஏற்படுத்த இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். அதில் 2.0 வீரர்கள் இருப்பார்கள். அவர்களை நடத்த சில ஐரோப்பிய உத்யோகஸ்தர்களும் இந்திய உத்யோகஸ்தர்களும் நியமிக்கப் படுவார்கள். இந்தக் காலாள் படை, நிர்வாகம், பயிற்சி முதலியவைகளுக்காக திருச்சிறாப்பள்ளியிலுள்ள 80-வது காலாள் படையோடு சேர்க்கப்படும். இந்தப் படைக்கு உடைகள், ஆயுதங்கள் ஆகிய இவைகளை ஸப்ளை செய்வது விஷயமாக ஷை 80-வது சர்னாடிக் காலாள் படையின் தலைவர் கவனித்து வருவார்.

சென்னைக் காலாள்படையிலுள்ள ஒவ்வொருவரும் 3 மாஸம் பயிற்சி பெறவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் உடைகளை பயிற்சி முடிந்ததும் ராணுவ அதிகாரிகளிடம் ஒப்புவிக்கவேண்டும். அவைகளில் உபயோகிக்கக்கூடிய வைகளை சுத்தம் செய்து வேண்டும்போது உபயோகிக்கக் கொடுப்பார்கள்.



### இந்தியாவில் வ்யாஜ்யங்கள்.

சென்ற 1915-ம் வர்ஷத்தில் ப்ரிட்டிஷ் இந்தியா முழுவதிலும் தாக்கலான ஸிவில் வ்யவஹாரங்களின் தொகை 22,26,000. அவைகளின் பெறுமானம் 47,33,17,000 ரூபாய். அதற்கு முந்தின வர்ஷம் 36,74,53,000 ரூபாய் பெறுமானமுள்ள 18,04.000 வ்யாஜ்யங்கள் தாக்கலாயின. மொத்தம் ப்ரிட்டிஷ் இந்தியவின் ஜனத்தொகையில் மூன்றில் ஒருபங்குள்ள வங்காளம், சென்னை ராஜதானிகளில் மொத்தம் வ்யவஹாரங்களில் பாதிக்குமேல் தாக்கலாயின. மொத்தம் ஜனத்தொகையில் ஐந்தில் ஒருபங்குள்ள ஐக்ய மாகாணங்களில் 2,13,000 வ்யாஜ்யங்கள்தான் தாக்கலாயின. ஆஜ்மீர், மீர்வாரா, டெல்லி, குடகு, வங்காளம், சென்னை ஆகிய இந்த மாகாணங்களில் தான் வ்யாஜ்ய வ்யவஹாரங்கள் அதிகமென்று தெரிகிறது.

### ஜில்லா போர்டுகளுக்கு உத்யோகஸ்தரல்லாத ப்ரெஸிடெண்டுகள்.

சென்னை கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாக நான்கு ஜில்லாபோர்டுகளுக்கு உத்யோகஸ்தர்களல்லாத கனவான்களை ப்ரெஸிடெண்டாக நியமிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்கள் போர்டு வ்யவஹாரங்களில் முக்யமானவைகளை மாத்ரம் கவனித்து வருவார்கள். மாமூல்வேலைகளை கவனிக்க தனி உத்யோகஸ்தர்கள் வைஸ் ப்ரெஸிடெண்டுகளாக நியமிக்கப் படுவார்கள்.

### கீல்வாதமும் ஸோடா உப்பும்.

கீல்வாதத்தில் கணுக்காலில் வீக்கமும் வலியுமிருக்கும்போது, ஸோடா உப்பை ஜலம் விட்டுக் குழைத்து வீக்கத்தில் தடவி, ஈரம் காயாதபடி பார்த்து வந்தால் குணமேற்படுமாம்.

### மிஸ்ஸஸ் அனிபெஸண்ட்.

பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருந்த மிஸ்ஸஸ் அனிபெஸண்ட், மிஸ்டர் வாடியா, மிஸ்டர் அருண்டேல் ஆகிய இவர்களை சென்னை கவர்ன்மெண்டார் விடுதலை செய்துவிட்டார்கள்.

### ஐரோப்பிய யுத்தம்.

ஆகஸ்ட் ௴ 31-தேதி.

ரஷ்ய ஸைன்யத்தில் வீரர்கள் அதிகாரிகளுக்கு அடங்கி நடப்பது குறைந்ததால் எதிரிகள் முன்னேறி வருகிறார்கள். ஜெர்மானியர்கள் போலான்ஸ் என்னுமிடத்தைப் பிடித்ததோடு, ஸெர்னோவிட்ஸுக்குப் பக்கத்தில் ராகெட்னு என்னுமிடத்திலும், போஷானி என்னுமிடத்துக்குப் பக்கத்திலும் ரஷ்யர்களைத் துரத்தியடித்தார்கள். ரஷ்யர்கள் துருக்கியப் போர்முகத்தில் ஸெரிபார் எரிக்கு தென்கிழக்கில் முன் சென்றார்கள்.

ஸெப்டம்பர் ௴ 4-தேதி.

மேற்குப் போர்முகத்தில் ஹார்கின்கோர்ட்டுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்கள் முன்சென்றார்கள்.

இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் முன் சென்று வருகிறார்கள்.

ஜெர்மானியர்கள் ரிகாவைப் பிடித்திருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷ் சிறு கப்பல் படையொன்று ஜட்லண்ட் தீபகல்பத்துக்குப் பக்கத்தில் 4-எதிரி சுரங்கம் வாரும் கப்பல்களை மூழ்கடித்தது.

7-தேதி.

இட்டாலியர்கள் இஸான்ஸோ போர் முகத்தில் முன்சென்று வருகிறார்கள். ஜெர்மானியர்கள் ரிகாவிலிருந்து 43 மைல் வடகிழக்கில் முன் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ட்வினா நதியின் முகத்வாரத்திலுள்ள டுமிமாண்ட் என்னும் ஸ்தலத்தையும் பிடித்திருக்கிறார்கள்.

8-தேதி.

ஜெர்மானியர்கள் ஜெனரல் வான் ஆல்டன் என்பவரை ரிகாவுக்கு கவர்னராக நியமித்திருக்கிறார்கள். ரஷ்ய கவர்ன்மெண்டார் ராஜாங்க பாங்கியையும், பீரங்கிப்படையை தலைமை ஸ்தானத்தையும் நிஜ்னி நவகொரடுக்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

11-தேதி.

வெர்டேன் போர்முகத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் சாம் காட்டையும் கௌரியர்ஸ் காட்டிற்கு அருகிலுள்ள குன்றையும் பிடித்தன. கொரிஸியாவுக்கு வடகிழக்கில் யுத்தம் பலமாய் நடந்து கொண்டிருக்கிறது.

14 தேதி.

இட்டாலியர்களும் ஆஸ்ட்ரியர்களும் காப்ரியல் மலைகளில் பலமாக சண்டை செய்துவருகிறார்கள். ஆஸ்ட்ரியர்கள் சற்று முன்சென்று வருகிறார்கள். ரஷ்யர்கள் ம்லூப் நதிக் கரையில் சற்று முன்சென்று வருகிறார்கள்.

21-தேதி

ப்ரிட்டிஷார் யிப்ரஸ்-மெனின் ரோடுக்குப் பக்கத்தில் முன் சென்றிருக்கிறார்கள்.

**29-தேதி.**

கார்லோ பிடபூமியில் பலமான பீரங்கி யுத்தம் நடந்தது. ஜெர்மானியர்கள் ஜேகப்ஸ்டாட்டைப் பிடித்திருக்கிறார்கள்.

**நாநா ஸங்கதி.**

கோலாப்பூர் மஹாராஜா தமது ராஜ்யத்தில் ப்ரைமெரிக் கல்வியை இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். காகன் ப்ரதேசத்துச் சிற்றரசரும் தமது நாட்டில் இலவசமாய்க் கல்வி கற்றுக் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்.

* * *

ஸ்தல ஸ்தாபனங்கள் இஷ்டப்பட்டால் ப்ரைமரிக் கல்வியைக் கட்டாயப்படுத்திக் கற்றுக்கொடுக்க அதிகாரம் கொடுப்பதற்காக பஞ்சாப் கவர்ன்மெண்டார் ஒரு மசோதா தயார்செய்து கொண்டிருக்கிறார்களாம்.

* * *

இந்தியா முழுமையிலும் இந்திய பாதுகாப்புப்படைக்கு மனுப்போட்ட இந்தியர்களின் மொத்தத்தொகை 3803-பேர்கள்.

* * *

இந்தியா கவர்ன்மெண்டார் வெள்ளியையும் வெள்ளி நாணயங்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்றும், இந்திய வெள்ளி நாணயங்களொழிந்த இதர நாணயங்களையும் வெள்ளியையும் கவர்ன்மெண்ட் உத்தரவின்றி இறக்குமதி செய்யக்கூடாதென்றும் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

* * *

பல்கேரியாவின் ராணி இறந்துபோய் விட்டதாகத் தெரிகிறது.

## REVIEW OF BOOKS.

## புஸ்தக விமர்சனம்.

**மாயூர ஸ்தல மான்மியம்.**

இது பண்டித வி. ஸுப்ரமண்ய ஐயர் எழுதியது. மகாவித்வான் மீனாக்ஷி ஸுந்தரம்பிள்ளை செய்யுள் நூலாகஎழுதியுள்ள மாயூரஸ்தல புராணத்தை, தமிழ் வல்லோரேயன்றி இதரரும் படித்து ஆனந்திக்கும்படி, அந்த நூலை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்த வசன நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூலில் மாயவரத்தின் புராண மகிமைகளெல்லாம் இனிய செந்தமிழ் நடையில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இந்த வசனநூல் 50 சருக்கங்கள்கொண்டது. இதை யாவரும் வாங்கி வாசிக்கலாம். இதன் விலை அணா 4 வேண்டுவோர் பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர், உதவிப் பத்ராசிரியர், சுதேசமித்ரன் சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஹாஸ்ய மஞ்சரி.**

ஜனுபிமானியில் வெகு காலமாக வெளி வந்துள்ள வேடிக்கைக் கதைகளில் ரொம்ப ரஸமானவைகள் இப்போது மேற்குறித்த பெயருடன் புஸ்தகரூபமாக வெளியிடப் பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் உபாத்யாயர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பிள்ளைகள் கூறும் சாதுர்யமான மறுமொழிகள் கோர்ட்டுகளில் ஸாக்ஷிகள், வக்கீல்கள், ஜட்ஜுகள் முதலியவர்களுக்குள் நடக்கும் வேடிக்கையான ஸம்பாஷணைகள், காதலர் காதலிகளுக்குள் நடக்கும் ஹாஸ்யமும் ச்ருங்காரமுமான ஸம்பாஷணைகள், சிலர் தங்களை ஸமர்த்தர்களென்று மதித்துப்பேசும் அசட்டுப் பேச்சுகள் முதலிய 160 வேடிக்கைக் கதைகளும் ஸம்பாஷணைகளும் இதில் அடங்கியுள்ளன. இந்தப் புஸ்தகத்தை யாவரும் வாசித்து ஸந்தோஷமடையலாம். விலை அணா 6. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித் தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**பெற்ற மனம் பித்து.**

'ஜனுபிமானி'யில் வெளிவந்த இந்த ரஸமான சிறு கதை இப்போது புஸ்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 2. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, கொண்டிசெட்டித்தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**"சங்கநூல்களின் காலம்."**

இது சென்னை பச்சையப்பன் கலாசாலை தமிழ் ஸங்கத்தில் ப்ரொபஸர் எஸ். க்ருஷ்ணஸாமி ஐயங்கார் இங்க்லீஷில் செய்த ஒரு ப்ரஸங்கமாகும். ஏற்கனவே அவர் இது விஷயமாகச் செய்துள்ள ஆராய்ச்சிகளை இதில் நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். இங்க்லீஷ் தெரிந்த தமிழ் அபிமானிகள் யாவருக்கும் இது பயன்படும். வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**"ஜனஸமுதாய ஊழியம்."**

இது சென்னை பச்சையப்பன் காலேஜ் தமிழ்ச் சங்கத்தின் ஒரு ப்ரசுரமாகும். இது ஸ்வாமி ருத்ர கோடீச்வரர் செய்தது. ஜனஸமுதாய ஊழியத்தில் பற்றுள்ளவர் யாவருக்கும் பயன்படும். இதன் விலை அணா 2. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி 3,4, கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

## THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்கள வருஷ ஐப்பசிமீ, OCT.—NOV., 1917. { ஸஞ்சிகை 10. No. 10.


## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| ⅛ do | - ... 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | அயல்நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப் பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ | ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ | ,, | ,, | ,, | 1 4 0 |
| ⅛ | ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒரு பாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# THE DIRECTION OF INDIAN TRADE IN 1916-17.
## 1916-17-ம் வர்ஷத்தில் இந்திய வ்யாபாரத்தின் போக்கு.

1916-17-ம் வர்ஷத்தில் இந்தியாவின் அன்ய நாட்டு வ்யாபாரமானது அதற்கு முந்திய வர்ஷத்தியதைவிட அதிகமாயிருந்தது. இறக்குமதிகள் 100-க்கு 13-க்குமேல் அதிகமாயின. ஏற்றுமதிகள் 100-க்கு 21 விதம் அதிகமாயின. மறு ஏற்றுமதிகள் அதாவது அன்ய தேசங்களிலிருந்து இறக்குமதியாகி, உடனே மறுபடியும் பிறதேசங்களுக்கு ஏற்றுமதியான சரக்குகளின் பெறுமானம் 100-க்கு 60 விதம் அதிகரித்தது. இறக்குமதி, ஏற்றுமதி, மறு ஏற்றுமதி ஆகிய இவைகளின் பெறுமானம் யுத்தத்துக்கு முந்திய 5 வர்ஷங்களின் சராசரியைவிட அதிகமாயிருந்தன. 1915-16, 1916-17-ம் வர்ஷங்களிலும், யுத்தத்துக்கு முந்திய வர்ஷங்களிலும் வ்யாபாரத்தின் பெறுமானம் எப்படி இருந்ததென்பதைக் கீழேவரும் அட்டவணையில் காட்டியிருக்கிறோம்.

| — | யுத்தத்துக்கு முந்தின 5 வர்ஷங்களின் சராசரி. | 1915-16. | 1916-17. |
|---|---|---|---|
| | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. |
| **இறக்குமதி.** | | | |
| வ்யாபாரச் சரக்குகள். ... | 145,84·72 | 131,98·62 | 149,62·20 |
| தங்கம். ... | 32,78·41 | 5,24·42 | 13,83·79 |
| வெள்ளி. ... | 10,88·26 | 6,61·10 | 1,55·96 |
| மொத்தம் இறக்குமதி ... | 189,51·39 | 143,84·14 | 164,51.95 |
| **ஏற்றுமதி.** | | | |
| இந்தியச் சரக்குகள் ... | 219,49.73 | 192,53·43 | 233,15.36 |
| அன்யதேசச் சரக்குகள் (மறு ஏற்றுமதி) ... | 4,61.88 | 4,84·59 | 7,73.81 |
| தங்கம் ... | 3,92.07 | 6,89.08 | 6.18 |
| வெள்ளி ... | 3,67.35 | 1,33.50 | 4,87.98 |
| மொத்தம் ஏற்றுமதி ... | 231,71·03 | 204,80·60 | 245,82,83 |
| மொத்தம் வ்யாபாரம் ... | 421,22·42 | 348,64·74 | 410,34·78 |

மேலே காட்டிய அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள பெறுமானங்கள் அந்தந்த வர்ஷங்களில் ஒவ்வொரு வ்யாபாரச் சரக்குகளும் விற்றுவந்த விலையை அநுஸரித்துப் போடப்பட்டிருக்கின்றன.

ஆனால் யுத்தம் காரணமாக அநேக ஸாமான்கள் அதிக விலையேறி விற்பதால், குறைந்த அளவுக்கு ஸாமான்கள் ஏற்றுமதி இறக்குமதியானாலும், பெறுமானம் அதிகமாகக் காட்டுகிறது. ஆகையால் 1916-17-ம் வர்ஷத்தில்



இருந்த விலை வாசிகளின்படி பார்க்காமல், 1915-16-ம் வர்ஷத்திய விலைவாசிப்படி கணக்குகள் தயாரித்துப் பார்த்தால், வ்யாபாரத்தின் உண்மையான நிலைமை ஸுமாராகத் தெரியும். அவ்விதம் 1915-16-ம் வர்ஷத்திய விலைகளின்படி கணக்கிட்டால் 1916-17-ம் வர்ஷத்தில் இறக்குமதியின் மதிப்பு 118 கோடி ரூபாயாகிறது. (அட்டவணையில் காட்டியுள்ளபடி 150 கோடி ரூ.) ஏற்றும்தியின் பெறுமானம் 203 கோடி ரூபாயாகும். (அட்டவணையில் காட்டியுள்ளபடி 233 கோடி ரூ.) ஆகவே விலைவாசியின் ஏற்றத்தால் இறக்குமதி 32 கோடி ரூபாய் அதாவது 100-க்கு 27 விதமும், ஏற்றுமதி 30 கோடி ரூபாய் அதாவது 100-க்கு 15 விதமும் அதிகமாய்க் காட்டுகிறது.

### வ்யாபாரத்தின் போக்கு.

சென்ற 1916-17-ம் வர்ஷத்திலும், அதற்கு முந்திய வர்ஷத்திலும் இந்தியாவானது எந்தெந்த தேசங்களுடன் எந்த அளவுக்கு வ்யாபாரம் செய்ததென்பது அடியில் வரும் அட்டவணையில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள எண்கள் ஒவ்வொரு வர்ஷத்திலும் ஒவ்வொரு தேசத்துக்கும் மொத்தம் ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மொத்த வ்யாபாரத்தில் 100-க்கு இவ்வளவு போய்க்கொண்டிருந்ததென்பதைக்காட்டுகிறது.

| — | இறக்குமதி. | | | ஏற்றுமதி. | | | மொத்தம் வ்யாபாரம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | யுத்தத்துக்குமுன் சராசரி. | 1915-17. | 1916-17. | யுத்தத்துக்குமுன் சராசரி. | 1915-16. | 1916-17. | யுத்தத்துக்குமுன் சராசரி. | 1915-16 | 1916-17 |
| யுனைடட்கிங்டம் ... | 62·8 | 59·4 | 58·7 | 25·1 | 38.0 | 33·3 | 40·0 | 46·6 | 43·1 |
| பிரிட்டிஷாருக்கு ஸொந்தமான நாடுகள் ... | 7·0 | 8.3 | 7.0 | 16·8 | 17·4 | 17·1 | 12·9 | 13·8 | 13·2 |
| மொத்தம் ப்ரிட்டிஷ் ராஜ்யம் ... | 69·8 | 67·7 | 65·7 | 41·9 | 55·4 | 50·4 | 52·9 | 60·4 | 56·3 |
| நேசதேசங்கள் ... | 7·1 | 9·0 | 12·2 | 23·6 | 21·7 | 23·3 | 17·1 | 16·6 | 19·0 |
| நடுநிலைமைத் தேசங்கள். | 14·5 | 23·0 | 22·1 | 20.9 | 22·9 | 26·3 | 18·4 | 22·9 | 24·7 |
| எதிரி தேசங்கள் ... | 8.6 | ·3 | ... | 13.6 | ... | ... | 11·6 | ·1 | ... |
| மொத்தம் அன்ய தேசங்கள் ... | 30·2 | 32·3 | 34·3 | 58·1 | 44·6 | 49·6 | 47·1 | 39·6 | 43·7 |

இந்தக் கணக்குகளில் வ்யாபாரச் சரக்குகளைப் பற்றிய விவரங்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கின்றனவேயொழிய, தங்கம் வெள்ளி ஆகிய இவைகளின் ஏற்றுமதி இறக்குமதி சேர்க்கப்படவில்லை. மேலும் 1916-17-ம் வர்ஷத்தில் அமெரிக்க ஐக்ய நாடுகள் யுத்தத்தில் சேரவில்லையாகையால், அந்த தேசம் நடுநிலைமைத் தேசங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மேலே காட்டியுள்ள அட்டவணையின்படி, ப்ரிட்டிஷ் ராஜ்யத்தோடு இந்தியா செய்து வந்த வ்யாபாரமானது யுத்தத்துக்கு முன்னால் இருந்த சராசரியைவிட 1916-17-ம் வர்ஷத்தில் அதிகரித்திருக்கிறது. ஆனால் ப்ரிட்டிஷ் ராஜ்யமொழிந்த அன்யதேசங்களோடு இந்தியா நடத்திவந்த வ்யாபாரமோ குறைவடைந்திருக்கிறது. இதற்குக்காரணம் எதிரி தேசங்களோடு நடந்துவந்த வ்யாபாரம் அடியோடு நின்றுபோனதே. யுத்தத்துக்குமுன் எதிரி

தேசங்களோடு நடந்துவந்த வ்யாபாரம் மொத்தம் வ்யாபாரத்தில் நூற்றுக்கு 12 வீதமாக இருந்தது.

எதிரி தேசங்களொழிந்த அன்யதேசங்களாகிய நேசதேசங்களும், நடுநிலைமைத் தேசங்களும், இந்தியாவோடு நடத்திவரும் வ்யாபாரத்தை வ்ருத்தி செய்திருக்கின்றன. மேலும் யுத்தத்துக்கு முன்பு எதிரி தேசங்களோடு இந்தியா நடத்திவந்த வ்யாபாரத்தில் பெரும் பாகம் இப்போது நடுநிலைமைத் தேசங்களோடு நடந்துவருகிறது. சிறுபான்மை யுனைடட் கிங்டத்தோடும், நேசதேசங்களோடும் நடந்துவருகிறது.

இறக்குமதி வ்யாபாரம்.

ப்ரிட்டிஷ் ராஜ்யத்தோடு இந்தியா நடத்திவரும் இறக்குமதி வ்யாபாரம் யுத்தத்துக்கு முந்தி இருந்ததைவிட சற்றுக் குறைவடைந்திருக்கிறது. இருந்தாலும் மொத்தம் இறக்குமதியில் மூன்றில் 2-பாகம் ப்ரிட்டிஷ் ராஜ்யத்திலிருந்துதான் வந்தது. இப்படிக் குறைந்ததற்குக் காரணம் யுனைடட் கிங்டத்திலிருந்து ஸாமான்கள் குறைவாய் வந்ததே. அங்கே யுத்தவேலைகளே அதிகமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. இதர ப்ரிட்டிஷ் நாடுகளிலிருந்து வந்த இறக்குமதியின் பெறுமானத்தில் அதிக மாறுபாடு ஒன்றுமில்லை. இது இப்படியாக, நடுநிலைமைத் தேசங்களும், நேசதேசங்களும் அதிகமாக ஸாமான்கள் இந்தியாவுக்கு அனுப்பிவருகின்றன. முன்பு எதிரி தேசங்களோடு இந்தியா நடத்திவந்த இறக்குமதி வ்யாபாரம் மொத்தம் இறக்குமதியில் 100-க்கு 9-வீதமாக இருந்தது. இப்போது அவைகளுக்கு பதிலாக ஜப்பானும், அமெரிக்க ஐக்ய நாடுகளும் தங்கள் இறக்குமதியை உயர்த்தியிருக்கின்றன.

ஏற்றுமதி.

யுத்தத்துக்கு முன்னால் இந்தியாவின் ஏற்றுமதியில் பெரும்பாகம், அதாவது 100-க்கு 58-பாகம் ப்ரிட்டிஷ் ராஜ்ய மொழிந்த அன்ய தேசங்களுக்குப் போய்க்கொண்டிருந்தது. இந்தியாவின் மூலப்பொருள்களுக்கும் இதரப் பொருள்களுக்கும் அந்த தேசங்களில் அதிக க்ராக்கி இருந்தது. மொத்தம் ஏற்றுமதியில் 100-க்கு 42-வீதந்தான் ப்ரிட்டிஷ் தேசங்களுக்குப் போய்க்கொண்டிருந்தது. ஆனால் 1916-17-ம் வர்ஷத்தில் ப்ரிட்டிஷ் ராஜ்யத்துக்குப் போய்க்கொண்டிருந்த ஏற்றுமதிச் சரக்குகளின் மதிப்பு நூற்றுக்கு 50-வீதமாக உயர்ந்தது. இதற்கு முக்ய காரணம் யுனைடட் கிங்டத்துக்கு அதிகமாக சரக்குகள்போனதே. யுத்தத்துக்கு முன்பு மொத்தம் ஏற்றுமதியில் நாலில் ஒருபாகம் யுனைடட் கிங்டத்துக்குப் போய்க்கொண்டிருக்க, இப்போதோ மூன்றில் ஒரு பாகம் அந்த தேசத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது. யுத்தத்துக்குமுன் மொத்தம் ஏற்றுமதியில் நூற்றுக்கு 13·6-பங்கு ஜெர்மனிக்கும், இதர எதிரி தேசங்களுக்கும் போய்க்கொண்டிருந்தது. இவைகளுடன் நடந்துவந்த ஏற்றுமதி வ்யாபாரம் நின்றுபோனதால், ப்ரிட்டிஷ் ராஜ்யமொழிந்த இதர தேசங்களோடு இந்தியா நடத்திவந்த ஏற்றுமதி வ்யாபாரம் குறையலாயிற்று. இந்தியா நேசதேசங்களோடு நடத்திவரும் ஏற்றுமதி வ்யாபாரம் மாறுபாடடையவில்லை. ஆனால் நடுநிலைமைத் தேசங்களோடு நடத்திவரும் வ்யாபாரம் சற்று உயர்ந்துவருகிறது. முக்யமாய் அமெரிக்க ஐக்ய நாடுகள்தான் முன்னைவிட அதிகமாக ஸாமான்கள் தருவித்து வருகிறது.

ஜப்பானோடு வ்யாபாரம்.

ஜப்பானோடு இந்தியா நடத்திவரும் வ்யாபாரமானது ரொம்பவும் அதிகரித்து வருகிறது. யுத்தத்துக்குமுன் மொத்தம் இறக்குமதியில் நூற்றுக்கு 2·5 பாகம் ஜப்பானிலிருந்துவந்தது. ஆனால் சென்ற 1916-17-ம் வர்



ஷத்தில் மொத்தம் இறக்குமதியில் நூற்றுக்கு 8.9 பாகம் ஜப்பானிலிருந்து வந்தது. ஏற்றுமதி விஷயத்திலும் ஜப்பான் அதிகமாக இந்திய சரக்குகளை வாங்கி வருகிறது. யுத்தத்துக்குமுன் மொத்தம் ஏற்றுமதியில் 100-க்கு 7·5-பாகம் ஜப்பானுக்குப் போய்க்கொண்டிருந்தது. இப்போதோ (1916-17) 100-க்கு 11-பாகம் ஜப்பானுக்குப் போகிறது ப்ரிட்டிஷ் ராஜ்யத்தை கணக்கில் சேர்க்காமல் பார்த்தால், இப்போது ஜப்பான் இறக்குமதி விஷயத்தில் முதன்மையான தேசமாகவும், ஏற்றுமதி விஷயத்தில் இரண்டாவது தேசமாகவும் இருக்கிறது. ஏற்றுமதி விஷயத்தில் முதன்மையாக நிற்பது அமெரிக்க ஐக்ய நாடுகளே.

ஜப்பானிலிருந்து வரும் இறக்குமதிகளில் முக்யமானது பருத்திப்பீஸ் துணியாகும். யுத்தத்துக்குமுன் ஜப்பானிலிருந்து 6-லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் வந்து கொண்டிருக்க, சென்ற 1916-17-ம் வர்ஷத்தில் 243-லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் இந்தியாவில் இறக்குமதியாயின. பருத்தித் துணிகளுக்கு அடுத்தபடியாக ஜப்பானிலிருந்துவரும் முக்யமான ஸாமான்களாவன; பட்டுத்துணிகள், ஸ்டாக்கிங்கள் முதலிய வஸ்த்ரங்கள், நெருப்புப் பெட்டி, கண்ணாடி, பருத்தி நூல்.

ஜப்பானுக்குப் போகும் ஏற்றுமதிப் பொருள்களில் முக்யமானது பருத்தியாகும். இது ஜப்பானுக்கு அனுப்பப்படும் மொத்தம் ஏற்றுமதியில் 10-ல் 9-பாகத்துக்கு மேலாகும்.

அமெரிக்காவோடு வ்யாபாரம்.

அமெரிக்கா ஐக்ய நாடுகளுடன் இந்தியா செய்துவரும் வ்யாபாரமும் ரொம்ப அபிவ்ருத்தி யடைந்திருக்கிறது. யுத்தத்துக்கு முந்தின வர்ஷங்களில் மொத்தம் இறக்குமதியில் 100-ல் 3.1 பாகம் அந்த தேசத்திலிருந்து வந்தது. சென்ற 1916-17ம் வர்ஷத்திலோ மொத்தம் இறக்குமதியில் 100-ல் 7·3 பாகம் அந்த தேசத்திலிருந்து வந்தது. ஏற்றுமதி விஷயத்திலோ வென்றால் யுத்தத்துக்கு முந்தி 100-க்கு 7·5 பாகம் அமெரிக்கா ஐக்யநாடுகளுக்குப்போக, சென்றவர்ஷத்தில் 100-ல் 12·9 பாகம் அந்த தேசத்துக்குப் போயிற்று. ஆகவே அமெரிக்க ஐக்யநாடுகளோடு நாம் செய்துவரும் இறக்குமதி வ்யாபாரம் 100-க்கு 144-வீதமும், ஏற்றுமதி வ்யாபாரம் 100-க்கு 84-வீதமும் அதிகரித்திருக்கிறது. மொத்தம் அமெரிக்க இறக்குமதியில் மூன்றில் இரண்டு பாகம் இரும்பு, உருக்கு, மோட்டார்வண்டிகள், கிரவின் முதலிய எண்ணெய்கள் ஆகிய இவைகளாகும். அந்த தேசத்துக்கு அனுப்பும் ஏற்றுமதிச் சரக்குகளில் 5-ல் 4-பாகம் பதனிடாத ஆட்டுத்தோலும், மாட்டுத்தோலும், ஜூட்சணல் நாரும் நார்ப்பொருளுமாகும்.

## SAINT MANICKAVACHAKA.

### மாணிக்கவாசக ஸ்வாமிகள்.

அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரர், மாணிக்கவாசகர், என்கிற நால்வரும் ப்ரஸித்திபெற்ற சைவ சமயாசாரியர்கள். அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரர் ஆகிய மூவரும் தேவாரம் பாடியவர்கள். மாணிக்கவாசகர் திருவாசகம் என்கிற பாடல்களைப் பாடினர். அவர் மதுரை ஜில்லாவில், மேலூருக்கு 6-மைல் தென்மேற்கேயுள்ள திருவாதவூர் என்கிற க்ராமத்திலே ப்ராமண குலத்திலே பிறந்து வளர்ந்துவந்தார். 'விளையும் பயிர்முளையிலே தெரியும்' என்றபடி இவர் இளம்பிராயம்முதல் மிக்க புத்தி நுட்பமுள்ளவராயும், சாதுர்ய வாக்குள்ளவராயு

விளங்கிவந்தார். அவர் பதினாறு வயதிற்குள்ளாகவே நான்கு வேதங்களையும் 64 கலைகளையும் நன்றாய்க் கற்று கைதேர்ந்த பண்டிதரானார்.

இந்த ஸமயத்தில் பாண்டிய நாட்டு அரசனான அரிமர்த்தன பாண்டியன் மதுரையிலே செங்கோல் செலுத்திவந்தான். இந்தப் பாண்டியன் மாணிக்கவாசகருடைய புத்திகூர்மையும் பாண்டித்யத்தையும் கேள்விப்பட்டு அவரை அழைப்பித்து, அவரது ஸாமர்த்யத்தையும் கல்வித்திறமையையும் மெச்சிப்பேசி, 'ப்ரம்மராயன்' என்ற பட்டம் தந்து தனது ப்ரதான மந்த்ரியாக அவரை நியமித்துக்கொண்டான். அவரும் அரசனிடத்தில் மிக்க அன்பும் விச்வாசமும் உள்ளவராகி, கொஞ்சகாலம் ராஜாங்கத்தில் அதிக செல்வாக்கும் அதிகாரமும் உள்ளவராக இருந்தார். சிலகாலங்கழித்து 'என்ன! இந்த உலகப் பற்றில் அகப்பட்டு எத்தனை நாள் அவஸ்தைப்படுவது, இந்த உலகத்தில் பாவம் தவிர என்ன இருக்கிறது, எப்பொழுது இப்பாவச் சேர்க்கையினின்றும் நீங்கி நல்லகதி யடைவது,' என்று மனக்லேசமடையலானார். இப்படியிருக்க, அரசன் தனது குதிரை லாயங்களை ஒருநாள் பார்வையிட்டு, நல்ல குதிரைகள் குறைவாயிருப்பதைக் கண்டு, மனவருத்தங்கொண்டு, தனது மந்த்ரியாகிய மாணிக்கவாசகரை யழைத்து, வேண்டிய பணம் கொடுத்து 'நீர் எங்கேயாவது போய் நல்ல புதுக் குதிரைகளை நமது உபயோகத்திற்கு வாங்கி வாரும்' என்று கட்டளையிட்டு அனுப்பினான். மாணிக்கவாசகரும் அப்படியே புறப்பட்டு போய்க்கொண்டிருக்கும்பொழுது ஒரு, நாள் தஞ்சாவூர் ஜில்லாவில் தற்சமயம் 'ஆவுடையார் கோயில்' என்று வழங்கிவருகிற 'திருப்பெருந்துறை' என்கிற இடத்தில் தங்கினார். அவ்வூர் வழியாகத்தான் யாத்ரைசெய்பவர்கள் ராமேச்வரத்திற்கு போகவேண்டும். அங்கு தங்கியிருந்தபொழுது ஒரு இரவு சிவபெருமான் ரிஷப வாகனரூடராய் எழுந்தருளி மாணிக்கவாசகருக்கு தர்சனம் தந்தார். சிவதரிசனம் கண்டதும் இவர் மனம் களிப்புற்று, ஆனந்தபரவசமாகி, தான் குதிரைவாங்குவதற்காக கொண்டுவந்த பணத்தையெல்லாம் கோயில்கட்டுவதிலும், ஏழைகளுக்கு அன்னமளிப்பதிலும் செலவு செய்துவிட்டார். தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அரசருக்கு பலமுறை சொல்லியனுப்பினார். ஒன்றும் பயன்படாததால் மிகவும் வருத்தமுற்று என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கும்பொழுது ஒரு நாள் ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. அதாவது 'பக்தா! குதிரையைப் பற்றி பயப்படாதே. இப்பொழுதே உனது அரசரிடம்போய் இன்னும் மூன்றுநாட்களில் குதிரைகள் வந்துசேரும் என்றுசொல்' என்பதே. இவ்வாக்கைக் கேட்டதும் சற்று தைர்யமுண்டாகி அப்படியே மதுரைப் பட்டணம்போய் அரசரிடம் அந்தச் செய்தியைச் சொன்னார்.

குறித்தகாலத்தில் குதிரைகள் வாராததால், அரசர், மந்த்ரி தன்னை மோசம்செய்தாரென்று எண்ணி, அவரை மிகவும் கோபித்து சிறைச்சாலைக்கு அனுப்பினார். மாணிக்கவாசகர் துக்கமுற்று சிவபெருமானைத் துதிக்க தன் பக்தனது மனக்கவலையைப்போக்கி, ஜயிலினின்றும் விடுதலைசெய்ய, சிவபெருமான் குதிரைக்காரன் வேஷம் பூண்டு குதிரைகளுடன் வந்துசேர்ந்தார். அவர் கொண்டுவந்த குதிரைகள் உண்மையான குதிரைகள் அல்ல. அவை உண்மையில் நரிகள். சிவபெருமானது உத்திரவினால் அவைகள் குதிரை வேஷம் கொண்டன. அந்தக் குதிரைகளை லாயத்தில் கட்டினார்கள். அவைகள் தீனி ஒன்றும் தின்னாததால் பசியால் அவஸ்தைப்பட்டன. நல்ல நடுராத்திரியில் அக்குதிரைகள், தங்கள் ஸ்பாவ நரிவேஷம் கொண்டு, அரசனது குதிரைகளைக் கடித்துவிட்டு காட்டிற்கு ஓடிப்போயின. அங்குள்ள வேலைக்காரர்கள் நரிகளின் சப்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்டு குதிரைகளுக்கு நடந்த ஆபத்தைத் தெரிவிக்க, அரசர் கோபாவேசராகி, இது மந்த்ரியினது சூதுதான் என்று யூகித்து அவரை கொடுமையாக நடத்தும்படி தன் வேலைக்காரர்களுக்கு உத்திரவு அளித்தான். தன் பக்தன் இக்கொடிய தண்டனைகளால் அவஸ்தைப்படுவதைப் பார்த்து, சிவபெருமான் பாண்டியத் தலைப்பட்டணமாகிய மதுரை அழிந்துபோகும்படி வைகை யாற்றில் பெரிய ரப்வாகம் உண்டாக்கினார். வைகையாறு வெள்ள ப்ரவாகமாய் இருப்பதைப் பார்த்து, வேலைக்காரர்கள் மாணிக்கவாசகரை தொந்திரவு செய்யாமல் சும்மாவிட்டார்கள். அரசர் ராஜாங்க அதிகாரிகளையெல்லாம் அழைப்பித்து வெள்ளத்தைத் தடுக்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று ஆலோசனைகேட்க, மதுரையிலுள்ள ஒவ்வொரு நகரவாஸியும், ஆண்பெண் இருபாலாரும், ஆற்றின்கரையை உயர்த்த உதவிசெய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்பட்டணத்திலுள்ள எல்லோரும் அப்படியே ஒப்புக்கொண்டு வேலைசெய்யப் போனார்கள். ஆனால் புட்டு சமைத்துவிற்கும் வந்தி என்கிற ஒரு வாணியக்கிழவி, மிகவும் பரம ஏழையானதால், வேலையில் தன் பங்கைச் செய்ய ஒரு கூலிக்காரனுக்கு பணம்கொடுக்க அசக்தையாயிருந்தாள். என்னசெய்வதென்று தெரியாமல் ஸங்கடப்பட்டுக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த சிவபெருமான் ஒரு கூலி வேஷம் போட்டுக்கொண்டு அவளிடம் போய், தமக்கு புட்டுக் கொடுத்தால் தாம் போய் அவள் பங்குவேலையை செய்வதாகச் சொன்னார். கிழவியும் ஸம்மதிக்கவே, ஒரு கூடையும், மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப் போனார். ஆனால் அவர் அங்கே சரியாக வேலைசெய்யாமல், கால தாமஸம் செய்துகொண்டிருந்தார். அதைக் கண்ட அரசர் கோபங்கொண்டு சிவபெருமானை ஒரு அடி அடித்தான். உடனே அவர் பயந்து வேலைசெய்வதுபோல் பாவனைசெய்து ஒரு கூடை மண் எடுத்து எங்கே பள்ளமாயிருந்ததோ அங்கே போட அப்பள்ளமானது மேடிட்டு சரியாயிற்று. இதைக் கண்டு எல்லாரும் அதிக ஆச்சரியமடைந்து இருக்கும்போது, திடீரென்று சிவபெருமான் கூலிவேஷத்தினின்றும் நீங்கி மறைந்தார். இவர் யாராயிருக்கலாமென்று அரசர் மற்றவர்களுடன் ஆலோசனை செய்து கொண்டிருக்கும்பொழுது, அரசன் தன்முதுகில் பிரம்பால் அடித்த அடையாளம் ஒன்று இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். விசாரித்ததின்பேரில் அப்பட்டணத்திலுள்ள ஆண் பெண் உள்பட எல்லா உயிர்வாழ்பவைகளின் முதுகுகளின்பேரிலும் பிரம்பால் அடித்த காயம் ஒன்று தென்பட்டது. இதற்குக் காரணம் என்னவெனில் சிவபெருமான் ஸர்வவ்யாபகரானதால். அவர் முதுகில் அடித்த பிரம்புக் காயம் உலகத்தில் இருக்கும் ஸகல ஜீவராசிகளின் முதுகிலும் தென்பட்டது. இதைக்கண்டு ஆச்சரியமடைந்த அரசன் இதன் உண்மையை அறிந்துக் கொள்ள எண்ணி, தன் ஸிப்பந்திகளுடன் வந்தி என்பவள் வீட்டை யணுகினான். இதைக் கண்ட அவள் ஏதோ தனக்கு ஆபத்து வந்தது என்று நடுநடுங்கி, அந்த நடுக்கத்தால் பயந்து கீழே விழுந்து இறந்துபோனாள். அவளது ஆத்மா தெய்வ விமானத்தின் மூலமாக மேளதாள கோஷங்களுடன் கைலாஸத்தைச் சேர்ந்தது. ஆவணி மாதத்தில் மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலில் நடக்கும் புட்டுத் திருவிழா என்கிற உத்ஸவத்திற்கு இதுதான் ஐதிகம்.

பிறகு ஆகாயத்தில் ஒரு அசரீரிவாக்கு உண்டாயிற்று. அரசன் மாணிக்கவாசகரை மன்னிக்கவேண்டுமென்றும், பணத்தைக் கேட்காமல் விட்டுவிட வேண்டுமென்றும் அந்த

ளாக்கு தெரிவித்தது. அதன்மேல் அரசன் அந்த தெய்வக் கட்டளையின்படி நடந்து, மாணிக்கவாசகரை சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்தான். இதன்மேல் மாணிக்கவாசகர் பூலோக கைலாஸமாகிய சிதம்பரத்தையடைந்து ஸ்ரீ நடராஜ ஸ்வாமியை கண்குளிர மனப்பூர்த்தியாக தர்சித்து, சிதம்பரத்திற்கு மேற்கேயுள்ள தில்லை வனம் சேர்ந்து தபஸு செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்க, பௌத்த அரசரும் அவரது பௌத்த மத குருமார்களும் சிதம்பரத்தையடைந்து அங்குள்ள தில்லை மூவாயிரவருடன் மத விஷயங்களைக் குறித்து வாதிக்கத் தொடங்கினார்கள். அந்த தீக்ஷிதர்கள் அந்த பௌத்த மதஸ்தர்களுடன் வாதிக்கமுடியாதவர்களாய் ஸ்ரீ நடராஜரை வேண்டிக்கொள்ள, அவர் தவம் செய்து கொண்டிருந்த மாணிக்கவாசகரை அழைத்துவந்து வாதிக்கவிடுங்கள் என்று அனுக்ரகம் செய்தார். அவர்கள் அப்படியே மாணிக்கவாசகரை அழைத்துவரவே, அவர் பௌத்த குருக்களுடன் வாதித்து, அவர்களைத் தோற்கடித்து சைவமதஸ்தர்களாகும்படி செய்தார். இவ்விஷயமானது உண்மையாக நடந்த சரித்ர விஷயம். தென் இந்தியாவில் அப்பொழுது முதற்கொண்டு பௌத்த மதம் ஓங்கிப் பரவவில்லை.

இச்செய்தியானது நாடெங்கும் பரவ மாணிக்கவாசகரது கீர்த்தி ப்ரபலமாயிற்று. இம்மகானது ப்ரதாபத்தையும், சிதம்பரத்தில் பௌத்தமதஸ்தர்களது தோல்வியையும் கேள்வியுற்ற பௌத்தமதஸ்தராகிய சோழ நாட்டரசர், தனது ஊமைப் பெண்ணை அழைத்துக்கொண்டு சிதம்பரம் போய் மாணிக்கவாசகரை யணுகி, "என் பெண் ஊமையாயிருக்கிறாள். அவளது ஊமையைப் போக்கி, அவளைப் பேசச்செய்வீராகில், நான் எனது பௌத்த மதத்தைவிட்டு உமது சைவமதத்தைக் கைப்பற்றுகிறேன்" என்று சொல்ல மாணிக்கவாசகர் அப்படியே ஒப்புக்கொண்டு, விபூதியை எடுத்து சில மந்த்ரங்கள் சொல்லி அவள் நெற்றியில் தடவ, ஊமையாயிருந்த அவள் மிகவும் தாராளமாக பேசத் தொடங்கினாள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ட சோழராஜன் அம்மகானது திருவடிகளில் சாஷ்டாங்கமாக தண்டனிட்டு, தான் முன்பு சொன்ன ப்ரகாரம் சைவமதத்தைத் தழுவினான். இதைக் கேள்வியுற்ற அநேகர் சைவ மதத்தைத் தழுவினார்கள்.

மாணிக்கவாசகருக்குப் பிறகு ஜீவித்திருந்த அப்பர்ஸ்வாமிகளும் சமண மதத்தைவிட்டு சைவமதத்தைக் கைப்பற்றி அதைப்பரவச் செய்தார். மாணிக்கவாசகரும் ஸ்ரீநடராஜர் கோயிலை அணுகி அவரைத் தர்சித்து நெடுநாள் வாழ்ந்திருந்து பிறகு கைலாஸத்தையடைந்தார்.

---


ஜீவ்ய சரித்ரங்கள்.

67. அக்பர் ... 0 10 0
இது மொகலாய சக்ரவர்த்திகளில் ஒருவராகிய அக்பரின் சரித்ரமாகும்—டி. செல்வக்கேசவராய முதலியார் இயற்றியது.

529. ஜேம்ஸ் எ. கார்பீல்ட் சரித்ரம் ... 0 10 0
அமெரிக்கா ஐக்யநாடுகளின் ப்ரெஸிடெண்டாயிருந்த ஜேம்ஸ் எ. கார்பீல்ட் என்பவரின் சரித்ரம். இது எ. ஸுப்ரமண்ய அய்யர் இயற்றியது.

614. கோபால கிருஷ்ண கோகலே ... 0 8 0
இது பூனா பெர்குஸன் காலேஜ் ப்ரின்ஸிபாலாகிய மிஸ்டர் பராஞ்சபே இயற்றிய நூலின் மொழிபெயர்ப்பு. உ. வே. கோவிந்தசாமிராஸு இயற்றியது.
டை உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டது. பல படங்களுடன் கூடியது.

721. ஒட்டக்கூத்தர், இரட்டையர், படிக்காசுப் புலவர் இவர்கள் சரித்ரம் ... 0 8 0
சி. கு. நாராயணஸாமி முதலியார் இயற்றியது. நூதன ஆராய்ச்சி விஷயங்கள் அடங்கியது.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ்.




## CULTIVATION OF ONIONS.

### வெங்காய ஸாகுபடி.

வெங்காயமானது நமது நாட்டிலும் வெளி தேசங்களிலும் விலைபோகக்கூடிய ஒரு தோட்டப்பயிர். மாஸூல். அது பாமர ஜனங்கள் எல்லாரும் உபயோகிக்கும் ஒரு போஜன பதார்த்தமாகும். மேலும் அதை நல்ல விலை கிடைக்கும் வரையில் பத்ரப்படுத்தி வைத்திருந்து, லாபம் கிடைக்கும்போது விற்க ஏற்றது.

#### நிலம்.

வெங்காயம் பாசனமுள்ள நிலத்தில்தான் விளையுமாகையாலும், அதின் கிழங்கு பூமியிலேயே வளர்ந்துபெரியதாகவேண்டியதாலும், நிலமானது ரொம்ப ஆழம் வளமையுள்ளதாகவும், நல்ல வடிகால் உள்ளதாகவும் இருக்க வேண்டியது அவச்யமாகும். ஆனால் அது ஸுமாரான ஆழம்வரையில் புலபுலத்திருக்கும் எந்தப் பூமியிலும் வளரக்கூடியது. களிப்பான நிலம் அதற்கு உதவாது.

#### பயிராகும் காலம்.

வெங்காயம் எந்த மாஸத்திலும் பயிர் செய்யக்கூடிய பயிர். இருந்தாலும் குளிர் காலத்தில் பயிராகும் வெங்காயம் அதிக மாஸூல் கொடுக்கக்கூடியது. ரொம்ப மழை பெய்யுங் காலத்தில் பயிராகும் வெங்காயம் அதிக மாஸூல் கொடுப்பதில்லை. ஏனென்றால் அதிக ஜலம் அந்தப் பயிருக்கு ஆவதில்லை.

#### நிலத்தைப் பண்படுத்தல்.

நிலத்தை 9 அங்குல ஆழத்துக்கு நன்றாய் உழுது, மண்ணைப் புழுதி யாக்கவேண்டும். உழுவதற்கு முன்னால் ஏக்கரொன்றுக்கு 8 முதல் 10 டன் வரையில் தொழுவத்தெருவோ, அல்லது நன்றாய்த் தயார் செய்த எருவோ போடவேண்டும்:

#### விதையும் விதைத்தலும்.

வெங்காய விதையை முதலில் நாற்றங்காலில் விதைத்து, பிறகு நாற்றைப் பெயர்த்து வயலில் நடுவதுதான் நல்லது. நாற்றங்காலை ஆழமாய் உழுதோ கொத்தியோ விட்டு மண்ணைப் புழுதியாக்கவேண்டும் ஏக்கர் ஒன்றுக்கு 20 டன் விதம் தொழுவத்தெருவும், அதன்மேல் சாம்பலும் போடவேண்டும். பிறகு அவைகளைப் பாத்திகளாகப் பிரிக்கவேண்டும்.

இந்தப் பாத்திகளில் விதையை ஸமனாக விதைக்கவேண்டும். 10 முதல் 12 ராத்தல் விதையைத் தெளித்தால், ஒரு ஏக்கருக்கு நடப் போதுமான நாற்றுகள் கிடைக்கும். விதையைத் தெளித்தபிறகு, விதையின்மேல் ஒரு மெல்லியபடை மண் தங்கும்படி மண் தூவவேண்டும். முதலில் ஜலம் விடும்போது ரொம்ப ஜாக்ரதையாக இருக்கவேண்டும். விதைகள் எல்லாம் முளைத்தாகிறவரையில், கையால் ஜலம் தெளிக்கவேண்டுமே யொழிய, வாய்க்கால் மூலமாய்ப் பாய்ச்சக்கூடாது. தினந்தோறும் இரண்டுதடவை கையால் ஜலம் தெளிக்கவேண்டும். விதைகள் முளைத்து திடமானபிறகு கையால் ஜலம் தெளிக்காமல் கால்வாய்மூலமாகப் பாய்ச்சலாம். நாற்றங்காலில் களைகள் கொஞ்சங்கூட இராதபடி ஜாக்ரதை எடுத்துக் கொள்ளவேண்டும். 5 அல்லது ஆறுவாரங்களுக்குள் நாற்றுகள் பெயர்த்து நடத் தயாராயிருக்கும். அப்போது அவைகள் 6 அங்குல உயரமிருக்கும். 9 அங்குலத்துக்குமேல் உயரமான நாற்றுகள் வயலில் நடத் தகுந்தவையல்ல.

#### நாற்றுகளை நடுதல்.

நாற்றுகளை வயலில் நடுவதற்குமுன்னால், வயலை நன்றாய்ப்பண்படுத்தி பாத்திகளாகவோ, அல்லது நீண்ட வரப்புகளும் அவைகளை ஒட்டி பள்ளங்களுமாகவோ செய்துகொள்ளவேண்டும். இரண்டாவது முறையில் நாட்டுக்கலப்பையால் ஒருசால் ஓட்டி, அதனால் ஏற்படும்

பள்ளத்தை வாய்க்காலாகவும், பக்கவாட்டில் விழும் மண்ணை வரப்பாகவும் அமைத்துகொண்டு, வரப்பில் நாற்றுகளை நடவேண்டும். வரப்புகள் ஒன்றுக்கொன்று 15 அங்குல தூரம் உள்ளவைகளாக இருக்கவேண்டும். எல்லாப் பள்ளங்களிலும் ஜலம் பாய்வதற்காக வயலின்குறுக்கே கால்வாய்கள் ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் வரப்பும் வாய்க்காலும் அமைத்து நடுவதால் அதிக மாஸூலும் லாபமும் கிடைக்கிறதென்று சொல்லப்படுகிறது. சிலர் ஸாதாரண பாத்திகளில் விதைப்பதே நல்லதென்கிறார்கள். ஏனென்றால் கிடைக்கும் கிழங்குகள் ஒரே ராசியாயிருப்பதோடு, இரண்டு மூன்று கிழங்குகள் ஒன்றுசேர்ந்திருந்து பிற்பாடு பிளந்துபோகிறவையாயிராமல், ஒரே கிழங்காயுமிருக்கின்றனவாம். வரப்புகளில் நடும் கிழங்கோ பத்ரப்படுத்தி வைத்திருந்தால் இரண்டு மூன்று கிழங்குகளாகப் பிரிந்து அழுகி சேதமுண்டாகிறதாம்.

நாற்றுகளை வயலில் நடுவதற்கு முதல் நாள் நாற்றங்காலுக்கு ஜலம் பாய்ச்சவேண்டும். ஏனென்றால் நாற்றுகளைப் பிடுங்கும்போது, அவை ஒடியாமல் வரும். நடப்போகிறவன்று தான் நாற்றுகளைப் பிடுங்குவது நல்லது. பிடுங்கின நாற்றுகளை வேர்களில் உள்ள மண்ணோடு கூடைகளில் ஜாக்ரதையாக வைக்கவேண்டும். நாற்றுகளின் தழைகளை நறுக்கி விடுவது நல்லது. பிறகு வயலுக்கு ஜலம் பாய்ச்சி மண் இளகினவுடன் நாற்றுகளை நான்கு அங்குல தூரத்துக்கு ஒன்றாக நடவேண்டும். நட்ட மூன்றாவது நான்காவது நாள் ஒரு தடவை ஜலம் பாய்ச்சவேண்டும். அதற்குப் பிறகு நான்கு நாள்கள் கழித்து இன்னொரு முறை ஜலம் பாய்ச்சவேண்டும். இதற்குள் நாற்றுகள் நன்றாக வேர்பிடித்துக்கொள்ளும். இதற்குப் பிறகு வேண்டும்போது, அதாவது ஸுமார் 8 அல்லது 10 நாள்களுக்கு ஒருதடவை ஜலம் பாய்ச்சுவதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஆனால் நாற்றுநட்ட ஒரு மாஸத்துக்குப்பிறகு ஏக்கர் ஒன்றுக்கு 300 முதல் 400 ராத்தல்வரையில் ஸல்பேட் அம்மோனியாவாவது, 400 முதல் 500 வரையில் நைட்ரேட் அப் ஸோடாவாவது போட்டால், மாஸூல் இன்னும் அதிகமாகக் கிடைக்குமென்று பூஸா விவஸாய காலேஜின் பண்ணையில் செய்த பரீக்ஷைகளால் தெரிகிறது. ஸல்பேட் அப் அம்மோனியாவைவிட நைட்ரேட் அப் ஸோடா ச்லாக்யமானது. மழை காலத்தில் இரண்டொரு தடவை களையெடுத்து மண்ணைக் கிளறிக் கொடுத்தல் அவச்யமாகும்.

அறுவடை.

நாற்றுகள் நட்ட 4-மாஸங்களுக்குப் பிறகு சில பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும். அவற்றின் பூக்களைக் கிள்ளி யெறிந்துவிடவேண்டும். பிறகு ஒரு மாஸத்துக்கெல்லாம் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிக் கீழே சாயும்.

இப்படி இருப்பதானது வெங்காயம் அறுவடையாக ஏற்றது என்பதைக்குறிப்பிடும். பிறகு கையால் வெங்காயச் செடிகளைக் கிழங்குகளுடன் பிடுங்கி எடுக்கவேண்டும். வெங்காயம் அதிக ஆழத்தில் கிழங்கு வைப்பதில்லையாகையாலும் கிழங்குகள் பூமி மட்டத்துக்கு ஸமீபத்திலிருப்பதாலும் கிழங்குகளை ஸுலபமாய் எடுத்து விடலாம். கிழங்குகளை எடுத்த பிறகு வேர்களையும் இலைகளையும் நறுக்கி விட்டு, கிழங்கின் மேலுள்ள புரைகளை எடுத்து விடவேண்டும். பிறகு கிழங்குகள் விற்பனைக்குத் தயாராக இருக்கும். காயம்பட்ட, அல்லது வேறுவிதத்தில் கெடுதலான கிழங்குகளைப் பிரித்தெடுத்து விடவேண்டும். இல்லாவிட்டால் அவைகள் மற்ற நல்ல கிழங்குகளை அழுகச் செய்வதோடு, அவைகள் சேர்ந்திருப்பதால் வெங்காயம் மொத்தத்தில் பார்வைக்கு நன்றாயிராமல், அதிக விலைக்கு விற்பதில்லை.



மாஸூல்.

ஸாமான்ய வளப்பமுள்ள கரிசல் நிலத்தில் மாரி காலத்து வெங்காயப் பயிரில் ஒரு ஏக்கருக்கு 20,000 ராத்தல் விதம் வெங்காயம் கிடைக்கும். இது ஸுமார் 150 ரூபாய்க்கு விலை போகும். நிலம் வளப்பக் குறைவாக இருந்தால், 10,000 ராத்தல்தான் கிடைக்கும். ரொம்ப உயர்ந்த நிலத்தில் 30,000 ராத்தல் வெங்காயமும் அதற்குமேலும் கிடைப்பதுண்டு. பாசனமில்லாத மானாவாரி நிலங்களில் பனிக்காலத்துப் பயிரில் ஏக்கருக்கு 5,000 ராத்தல் விதம் கிடைக்கும்.

பத்ரப்படுத்தி வைத்தல்.

வெங்காய மாஸூல் எல்லாம் அறுவடையானவுடன் ஏக காலத்தில் விற்பனைக்கு வருவதால், அந்த ஸமயத்தில் வெங்காயத்துக்கு அதிக விலை கிடைப்பதில்லை. ஆகையால் நல்ல விலை கிடைக்கும் வரையில் அதைப் பத்ரப்படுத்தி வைக்கவேண்டியது அவச்யம். வெங்காயத்தை ஈரமில்லாததும், குளிர்ந்ததும், நல்ல காற்றோட்டமுள்ளதுமான இடத்தில் கொட்டி வைத்திருந்தால், அதிக சேதம் ஏற்படாமல் வெகு காலம் அப்படியே இருக்கும். பத்ரப்படுத்தி வைக்குமுன் அழுகியிருக்கும் வெங்காயத்தைப் பொறுக்கி எடுத்துவிடவேண்டும். சிறுசிறு குவியல்களாகப் போட்டு வைக்கவேண்டும். பெரிய குவியல்களாக இருந்தால் அதிக உஷ்ணம் உண்டாகி, வெங்காயம் கெட்டுப்போகும். குவியல்களை அடிக்கடி பிரித்துப்பார்த்து, கெட்ட வெங்காயங்களை பொறுக்கி எடுத்துவிட வேண்டும்.

வெங்காய விதைகள்.

விதையிலிருந்து பயிரிட்ட வெங்காயத்தை, முதல் பருவத்தில் பூக்கவிட்டால், நல்ல விதை கொடுப்பதில்லை. அப்படிப் பூத்த செடிகளில் உண்டாகும் விதைகளை விதைத்தால், நன்றாகக் கிழங்கு வைப்பதில்லை. நல்ல விதை வேண்டுமானால், மாஸூல் எடுத்தபிறகு கிழங்குகளை சில மாஸம் கெடாமல் வைத்திருந்து, பிறகு வயலை நன்றாக உழுது நல்ல எருவிட்டு, அதில் நடவேண்டும் வெங்காயத்தை 18 அங்குலத்துக்கு ஒன்றாக நடவேண்டும். அவை பூக்க ஆரம்பித்த 5 மாஸத்தில் நல்ல விதை கொடுக்கும். மற்ற பயிர்களைப் போலவே நீர் பாய்ச்சுதல், களையெடுத்தல் முதலியவைகளை கவனித்து வரவேண்டும். ஸாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 200 ராத்தல் விதை கிடைக்கும். ஒரு ராத்தல் ஸாதாரணமாக $\frac{1}{2}$ ரூபாய்க்கு விலை போகும்.

## SUMMER SLEEPY HEADS.

BY PANDIT V. SUBRAMANIA AIYER.

### கோடைகாலத்தில் உறங்கும் ப்ராணிகள்.

உலகத்தில் நதிகள், ஏரிகள், குளங்கள், தடாகங்கள் முதலியன இருக்கின்றன. சில நதிகள் ஜீவ நதிகளாக இருக்கின்றன. சில நதிகள் மழைகாலத்திலே ஜலம் நிறைந்திருந்து கோடைகாலத்தில் வற்றிப்போகின்றன. அப்படியே தடாகங்களும் ஏரிகளும் குளங்களும் சிலகாலம் நீர் நிறைந்தும் சிலகாலம் வற்றியுமிருக்கின்றன. இந்த நீர்நிலைகளில் ஜலம் இருந்த காலத்தில் வந்து வாழ்ந்த ப்ராணிகளாகிய பறவைகள், தண்ணீர்வற்றின காலத்தில், வேறு ஜலம் நிறைந்த இடங்களை நாடிப் போகின்றன. ஆனால் அந்நீர் நிலைகளில் வாழ்ந்த முதலைகள், மீனினங்கள் பலவும் எங்கு போகின்றன? அவைகளில் முளைத்தெழுந்த கொட்டி, ஆம்பல், நெய்தல் முதலிய செடிகள், ஜலம் குறைந்து வறண்டுபோன

காலத்தில், ஒட்டி யுலர்ந்து போகின்றன. பின்னிட்டு அவைகள் ஜலம் வந்த காலத்தில் முளைத்துச் செழுமையை அடைகின்றன. இதை ஒட்டியே

"அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பாடலின் தாத்பர்யப்படி, தடாகங்களில் ஆகாரார்த்தமாக வந்த பறவைகள், குளம் வறண்ட காலத்தில் அவ்விடத்தை விட்டு வேறு குளத்திற்குப் போய் விடுகின்றன. ஜலம் இருந்தபோது செடி கொடிகளுடன் இருந்த மீன்கள், தவளைகள் முதலியன எங்கு போயின என்பதைப்பற்றி அப்பாடலில் சொல்லப்படவில்லை. சில மீன்கள், தவளைகள், ஆமைகள் முதலியவைகள், குளம் வறண்ட காலத்திலே, வேறெங்கும்போகாமல், அக்குளத்தின் மண்ணினடியில் அமிழ்ந்தித் தூங்குகின்றன. செடி கொடிகள், குளங்களில் ஜலம் வந்த மழைகாலத்தில் முளைத்தெழுவதுபோல் இந்த ஜலசரங்களும், தங்கள் கோடைகாலத் தூக்கத்தினின்றும் எழுந்து துள்ளி விளையாடுகின்றன. இல்லாவிட்டால், ஜலமில்லாத குளத்தில் திடீரென மழைபெய்து ஜலம் நிறைந்தபோது மீன்கள் துள்ளிக் குதிப்பதெப்படி? அம்மீன்கள் எங்கிருந்து வந்தன என்பதை கவனிக்க எவருக்கும் ஆச்சர்யமுண்டாகும்? மழையுடன் மீன்கள் குளத்தில் விழுந்தனவா? மீன் பிடித்து ஜீவனம் செய்யும் செம்படவனைக் கேட்டால் அவனுக்காவது அந்தச் செய்தி தெரியுமா? இந்த விஷயம் அனுபோகஸ்தர்களுக்கே தெரியவரும். இந்தியா, ஆப்ரிக்கா முதலிய ப்ரதேசங்களில் ஸஞ்சாரஞ் செய்து, இவ்விஷயத்தை கவனித்தவர்களே இவ்விஷயத்தைப்பற்றி விளக்கியிருக்கிறார்கள். இந்தியாவிலும், ஆப்ரிக்காவிலும் உள்ள அநேக மழைகாலத்து நதிகளில் மாம்ஸபக்ஷணிகளாகிய முதலைகள் வஸிக்கின்றன. அவை வெயில் காலத்தில், எங்குபோகின்றனவென்றால், நதியோரத்தில் வஸிக்கும் சில ஜாதி முதலைகள் தண்ணீர் வற்றும் என்று முன்யோசனையுடையவையாய், மனிதர் கண்ணுக்குத் தெரியாத பள்ளங்களை அடைந்து அவற்றில் மறைந்து கொண்டு, மாரிகாலம் வரும் வரையில் தூங்குகின்றன.

அஸாம் நாட்டில், ஒரு ஸமயத்தில் பன்றிகள் தம் வழக்கப்படி, கோடை காலத்தில் வறண்டிருந்த குளத்தின் அடித்தரையை ஆகாரத்தின்பொருட்டுக் கிளறினபோது, கோடைகாலத் தூக்கத்திலிருந்த பல மீன் இனங்களை வெளிப்படுத்தின. ஆகவே கோடைகாலத்தையுத்தேசித்து இம்மீன்கள் குளங்களினடிகளின் வெகு ஆழத்தில் புகுந்து அங்குள்ள ஈரத்தின் உதவியினால் உயிரோடிருந்து, மழை பெய்து ஜலம் நிரம்பியபோது எப்போதும்போல நீர்ப் பரப்புக்கு வந்து ஜீவனம் செய்கின்றனவென்று தெரிகிறது. தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆஸ்ட்ரேலியா முதலிய பெரிய நிலப்பாகங்களில் நிரக்ஷரேகை செல்லும்படியான உஷ்ணமான பாகங்களில் கோடை காலத்தில் ஆறுகள் வற்றிப்போவது ஸகஜம். ஆகையினால், அந்த பாகங்களிலுள்ள மீன்கள் அவ்வாறுகள் கற்பாறைகளா யிருந்தாலும், மணல்பாங்காயிருக்குமிடங்களுக்கு முன்னாடியே போய், மறைந்துகொண்டு கோடைகாலத்தைக் கழிக்கவேண்டும். இப்படி அவைகள் செய்யாமல் போனால், மீன்களின் ஸமூகமே அந்த பாகங்களில் பிழைத்திருக்க வழி இராது.

முதலை இனங்களில் சில தாம் வஸித்த ஆறு குளங்களில் மண்ணுக்குள் படுக்கை கொண்டுறங்கும். சில ஆமைகளும் இவ்விதம் செய்வதுண்டு. ஸிலோனிகா முதலிய இடங்களில் கோடைகாலங்களில், அவற்றை ஆற்



றின் அடித்தரையிலிருந்து மண்ணுடன் வெட்டி எடுத்து, அசையாமல் அன்ய நாடுகளுக்கு அனுப்புவதுண்டு. அவை போய்ச் சேர்ந்து இரண்டு மூன்று வாரங்கள் கழித்து அவைகளின் மேலுள்ள மண் மூட்டத்தை எடுக்கிறவரையில் அவை உயிருடனிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில ஜாதி முதலைகள் இப்படி உயிர்வாழ்வதை விட்டு, ஜலமுள்ள இடங்களுக்கு ப்ரயாணப்பட்டுச் செல்லுகின்றன. அப்படிச் செல்லும்போது, ராத்ரிகாலங்களில் கைபிடிச் சுவர்களில்லாத கிணறுகளில் தடுமாறி விழுகின்றன. பெண் முதலைகள் பீதியினால் முட்டைகளைப் போகும் வழிகளிலேயே இட்டுவிட்டுப் போகின்றன.

கிரேக்க தேசத்து ஆமைகளில் பல கோடைகாலத்தில் தூங்குகின்றனவாம். அவை தம் ஆகாரங்களைத் தேடிக்கொண்டு கோடைகாலத்தில் குளத்துக்குக் குளம் போய் அங்கு அகப்படும் தவளை மீன் முதலியவற்றைத் தின்றுகொண்டு, கடைசியில் ஒன்றும் அகப்படாமற் போகையில், பக்கத்திலுள்ள மலையோரத்திற் போய் மனிதர் கண்ணுக்கப்படாத இடத்தில் கோடைகாலத் தூக்கம் தூங்குகின்றன.

மத்ய ஆஸ்ட்ரேலியா ப்ரதேசத்தில் ஒருவிதமான தவளை கோடைகாலத்தில் ஜலமில்லாமற் போவதற்கு முந்தி, தான் பழகிய இடத்தில் அதிக ஆழமுள்ள ஒரு சந்து உண்டுபண்ணிக்கொண்டு அதிலிருந்துகொண்டு ஸுகமாய்க் கோடை காலத்தைக் கழிக்கிறது. அங்குள்ள சில ஜாதித் தவளைகளின் தேகத்தில் கோடைகாலத்திற்கென்று ஒரு பை ஏற்பட்டிருக்கிறது. அதில், கோடைகாலத்திற்குவேண்டிய நீரை நிரப்பி வைத்துக்கொண்டு பெருத்துவிடுகிறது. இதனால் இந்த ப்ராணி, மனிதன் ஸகிக்க முடியாத உஷ்ண காலத்தையும் ஸகித்து உயிர்வாழுகிறது.

மழை காலத்தில் பாலைவனம் நந்தவனமாகும். வெயில்காலத்தில் நீர் நிறைந்த நதிகள் பாலைவனமாகவும் காணப்படும். ஆகவே அப்படிப்பட்ட கோடை காலங்களில் ஜலமில்லாமல் வளரக்கூடிய ப்ராணிகள், செடிகொடிகள் ஆகிய இவைகள் தான் ஜீவித்திருக்கலாம், மற்றவை உயிர்விட வேண்டியதுதான். ஆகையால் இவைகள் அக்காலத்துக்குத் தப்பிப் பிழைக்க வழி தேடவேண்டும். ஆகவேதான் ஜலத்தில் வாழும் ப்ராணிகள் வெயில்காலத்தில் உறங்க வேண்டியவையா யிருக்கின்றன. உஷ்ண தேசங்களில் மனிதர்கள்கூட வெயில் கடுமையாய் காயும் போது மத்யான காலத்தில் நன்றாய்த் தூங்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். ப்ராணிகள்கூட வெயிலில் ஜலத்தருகில் குளிர்ச்சிக்காகப் படுத்துறங்குகின்றன. நரிகள், புலிகள் முதலியவை வெயிலெறிக்கும் உஷ்ண காலத்தில் மத்யான காலத்தில் வெளிப்படுவதும் அபூர்வம்.

ஆகவே, ப்ராணிகளுக்குக் கோடை காலத் தூக்கம் மிகவும் முக்யம் என்பது தெளிவாகிறது. அப்படி யில்லாவிட்டால் ப்ராணிகள் ரொம்ப ச்ரமம் அடையும்.

பண்டித வி. ஸுப்ரமண்ய ஐயர்.

---


உபாத்யாயர்களுக்கான புஸ்தகங்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 723. | பூதத்வ போதினி ... | 0 | 6 | 0 |
| | எம். ஆர். ஸுப்ரமண்ய அய்யர் எழுதியது. ஜியாலஜி என்னும் பூதத்வ சாஸ்த்ரம் அடங்கியுள்ளது. | | | |
| 312. | ப்ராணி சாஸ்திரம் (Zoology) முதல் பாகம் ... | 0 | 9 | 0 |
| 569. | தமிழ் சரீர சாஸ்திம் (Physiology) | 0 | 8 | 0 |
| 281. | பழமொழித் தீபிகை ... | 1 | 0 | 0 |
| | இதில் பல பழமொழிகளும் அவைகளின் தாத்பர்யங்களும், அவைகளை விளக்கக் கதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. | | | |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.

## HARDWAR.
## ஹரித்வாரம்.

பழைய நாள் முதல் நமது நாட்டிலுள்ள பேர்போன புராதன யாத்ரை ஸ்தலங்களில் இது ஒன்றாகும். இது வட இந்தியாவில் கங்கைக்கரையிலிருக்கிறது. காசியிலிருந்து வட மேற்கே ஸுமார் 550 மைலும், டில்லியிலிருந்து 120 மைலும் இருக்கிறது. ஹரித்வாரம் என்னும் பெயருக்கு வைகுண்டத்திற்கு ஏறும் ஏணி என்றர்த்தம். இவ்விடத்தில் கங்காநதியானது இமயமலையிலிருந்து ஸம பூமியில் பாய்கிறபடியால் இப்பட்டணத்திற்கு கங்காத்வாரம் என்றும் ஒரு பெயர் உண்டு.

இந்தப்பட்டணமானது கங்கை நதிக் கரைக்கு கிழக்கு மேற்கா யிருக்கிறது. கொஞ்சகாலமாகத்தான் இதன் ஜனத்தொகை அதிகம். இவ்விடத்தில் முக்கால் பங்கு வீடுகளுக்கு பணக்கார ஸாதுக்கள் ஸொந்தக்காரர்கள். யாத்ரிகர்களுக்கு வழிகாட்டிகளா யிருக்கும் பண்டாக்களுக்கு ஸொந்தமாகவும் சில வீடுகள் உண்டு. சில சிற்றரசர்களும் இங்கு தங்கியிருக்க அரண்மனைகள் கட்டியிருக்கிறார்கள்.

### பொது தர்மசாலைகள்.

இந்தப் பட்டணத்தில் யாத்ரை செய்யும் தேசாந்த்ரிகள் தங்குவதற்காக அநேக தர்ம சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த தர்மசாலைகளில் ஜனங்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்கள் கிடைக்கும்படி தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதர யாத்ரை ஸ்தலங்களைபோலில்லாமல் இந்த ஸ்தலமானது ஸுகாதார விஷயத்தில் பேர்போனது. கட்டிடங்கள் பார்ப்பதற்கு சுத்தமாயும், ஸ்நானம் செய்வதற்கு ஜலவஸதிகள் ஸௌகர்யமாயும் இருக்கின்றன. ஸ்த்ரீகள் தனியாக ஸ்நானம் செய்யவும் கும்பலில் அவஸ்தைப்படாமல் ஸௌகர்யமா யிருக்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஹரித்வாரம் உள்ள ப்ரதேசம் மணல்பூமி. தான்யம் விளைவதற்கு வளமான பூமியல்ல. மா, கொய்யா, அத்தி முதலிய பழ தினுஸுகள் அபரிமிதமாய் கிடைக்கின்றன. குடிப்பதற்கு நல்ல ஜல வஸதிகள் உள்ள கிணறுகள் பல உண்டு. ஜலம் மிகவும் ருசியாயும் குளிர்ச்சியாயும் இருக்கும். ஆனால் கங்கை நதியில் வரும் ஜலத்தை துணியினால் வடிகட்டி சாப்பிடுவது மிகவும் நலம். இல்லாவிட்டால் அஜீர்ணத்தால் ஜனங்கள் மிகவும் அவஸ்தைப்பட நேரிடும். அந்தப் பட்டணத்திற்குப் போகிறவர்கள் பசியெடுக்கவில்லையென்று முறையிடமாட்டார்கள். ஏனெனில் அதன் சீதோஷ்ண ஸ்திதி பசியை அதிகம் உண்டாக்கி, அஜீர்ணத்தையும் மலச்சிக்கலையும் போக்கும் தன்மையுள்ளது. மற்ற ஸமவெளிகளைப்போல் இல்லாமல், இவ்விடத்தில் நல்ல வெயில் மாஸங்களில்கூட அனல்காற்று என்பதே கிடையாது. எங்கு பார்த்தாலும் பார்ப்பதற்கு பச்சென்று இருக்கும். வெய்யில் மாஸங்களில் கங்கை நதி யோரத்தில் ஸாயங்காலவேளைகளில் உட்கார்ந்தால், மிகவும் உல்லாஸமாய் இருக்கும். இப்பட்டணத்துப் பக்கமாகப் பாயும் கங்கை நதியில் முழங்கால் ஜலத்திற்குமேல் ஸ்நானம் செய்யப் போவது கூடாது. ஏனெனில் ஜலம் வரும் வேகமானது மனிதனை அடித்துத் தள்ளும்.

### க்ஷேத்ர விசேஷங்கள்.

இந்தப் பட்டணத்தினுடைய முக்ய தேவதை கங்காதேவி. இங்கே முக்யமான ஸ்நான கட்டம் ஹரிகை பெயரி என்ற பெயர்கொண்டது. அங்கே ஸாயங்கால வேளைகளில் ஜனங்கள் திரள்திரளாகப் போய் கங்காதேவிக்கு ஆராதனை செய்வார்கள். மேற்படி கட்டத்தில் உள்ள ஒரு சுவரில் விஷ்ணு பாதம் ஒன்று செதுக்கப்பட்டிருக்கிறது. பட்டணத்துக்கு அருகாமையில் நதியோரமாக வ்ராஹம குண்ட் (Vrahama Kund) என்ற இடம் ஒன்று இருக்கிறது. அங்கே பிதுர்க்களுக்கு ச்ராத்தம் முதலியவைகள் செய்வதுண்டு. இந்த ஊரில் முக்யமான கோயில்களுள் கங்காத்வாரம் என்பதும், காயித்ரி தேவி கோயிலும் வெகு முக்யமானவை. ஒவ்வொரு வர்ஷமும் வைகாசிமீ முதல் தேதியில் பெரியசந்தை அப்பட்டணத்தில் கூடுவது உண்டு. 12 வர்ஷங்களுக்கு ஒரு தரம் 'மகாகும்பம்' என்ற விசேஷ உத்ஸவம் ப்ரயாகை, ஹரித்வாரம், நாஸிக், உஜைனி என்கிற நான்கு க்ஷேத்ரங்களில் நடப்பது உண்டு. ஹரித்வாரத்தில் மேற்படி மகாகும்பம் நடக்கும்போது நாலா பக்கங்களிலிருந்தும் தூர தேசங்களிலிருந்தும் ஜனங்கள் திரள் திரளாகவந்து கூடுவார்கள். மேற்படி மகா கும்பத்தின் வரலாற்றைப்பற்றி பத்ம புராணத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது. திருப்பாற்கடலை மந்த்ரகிரி மலையால் முன்பு தேவர்களும் அஸுரர்களும் கடைந்தபொழுது, ஒரு கும்பம் அதாவது ஒரு சிறிய ஜாடி அதிலிருந்து கிடைத்தது. அந்த ஜாடியில் நிறைய தேவாமிர்தம் இருந்தது. தேவாமிர்தம் மரணத்தைக் தடுக்குமாதலால், அஸுரர்கள் அதிக ஆசையுடன் அந்த ஜாடியைக் கைப்பற்றினார்கள். தேவர்கள் இதைப் பார்த்து மனம் நொந்து, விஷ்ணுவின் வாகனமாகிய கருடபகவானுக்குத் தெரிவிக்க, அவர் அந்த ஜாடியை தன் மூக்கால் பிடுங்கித் தூக்கிக்கொண்டு பறந்தோடினார். அஸுரர்கள் அவரைப் பின்பற்றி துரத்தியோடினார்கள். கருடன் அந்த ஜாடியை அஸுரர்களினின்றும் தப்புவிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் அதிக வேகமாய் ஓடும் பொழுது, அந்த ஜாடியானது ப்ரயாகை ஹரித்வாரம், நாஸிக், உஜைன் என்கிற நாலு இடங்களிலும் விழுந்தது. ஒவ்வொரு தடவை விழுந்தபோதும், கருடன், கலசம் அஸுரர்களிடம் அகப்படுவதற்கு முன்னமேயே தன் அலகால் தூக்கி எடுத்துக்கொண்டு போய்விட்டார். இந்த நான்கு இடங்களும் தேவாமிர்த கும்பம் விழுந்த இடங்களானதால், முறைப்ப்ரகாரம் மேற்படி இடங்களில் 12 வர்ஷத்திற்கு ஒரு தடவை கும்பமேளம் என்கிற விசேஷ உத்ஸவம் நடந்தேறிவருகிறது. மாயா தேவி கோயில், ராஜாதக்ஷ ப்ரஜாபதி கோயில் சண்டிதேவி கோயில், வில்வகேசவ மகாதேவர் கோயில் என்ற கோயில்களும் வெகு சிறப்புப்பெற்றவை.

### பாடசாலைகள்.

இந்தப் பட்டணத்தில் தேவ பாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்தை போதிப்பதற்காக அநேக பாடசாலைகள் ஸாதுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பாடசாலைகளில் முதன்மையானது ரிஷிகுலம் என்ற பாடசாலை. முக்யமானகொள்கை என்னவென்றால், மாணவர்களுக்குபழைய நாளையப்ரும்மசாரி ஆச்ரமத்தை அனுஸரித்துக் கல்வி கற்பிப்பதே. இதற்கு அடுத்தது ஸ்ரீமதி ஸத்யபால தேவி தேசாயினுடைய ஸங்கீத கலாசாலையும், கன்ய ப்ரம்மசர்ய ஆச்ரமமும். மேற்படி ஸங்கீத கலாசாலையில் இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் மாதர்கள் வந்து ஸங்கீதம் கற்றுக்கொள்ளலாம். மிஸஸ் ஸத்யபால தேவி பல தடவைகளில் ஸங்கீதத்தைப்பற்றி பல விடங்களில் ப்ரஸங்கங்கள் செய்திருக்கிறார். அவர் எம். ஏ. பட்டம் பெற்றவர். ஸங்கீதத்தில் பெரிய வித்வானானதால், ஸங்கீத டாக்டர் (Doctor of Music) என்ற பட்டம் மேல் நாட்டு ஸர்வ கலாசாலைகளால் இவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹிந்துப் பெண்களுக்கு பல வித்தைகளிலும், சாஸ்திரங்களிலும், முக்யமாக

ஸங்கீத சாஸ்த்ரத்திலும் பாண்டித்யம் ஏற்படவேண்டுமென்பதே மிஸ்ஸஸ் ஸத்ய பாலதேவியின் கொள்கையாகும். அங்கு படிக்கும் பெண் மாணவர்களுக்கு நல்ல சாப்பாடு விடுதிகளும் வேண்டிய ஸௌகர்யங்களும் ஏற்பாடாயிருக்கின்றன.

பொதுக் குறிப்புகள்.

ஹரித்வாரத்துக்குப் போகும் ஒவ்வொரு ப்ரயாணியிடமும் ரெயில்வே டிக்கட்டு சார்ஜுக்குமேல் ஒரு அணா வஸூல் செய்கிறார்கள். அந்தப் பணத்தைக்கொண்டு ஹரித்வாரம் முனிஸிபாலிடியார் ஜனங்களுக்கு வேண்டிய ஸுகாதார ஸௌகர்யங்களை விசேஷ காலங்களிலும் ஸாதாரண காலங்களிலும் கவனிக்கிறார்கள். ஹிந்துக்கள் இறந்துபோன பந்துக்களுடைய எரித்த சாம்பலைக் கங்கையாற்றில் போட்டால் புண்யம் உண்டு என்று நினைத்து, சாம்பலை இந்த ஊருக்கு கொண்டுவந்து கங்கையில் போடுகிறார்கள்.

இந்த ஊரில் குரங்குகள் அதிகம். இவைகளுக்கு உண்பதற்கு பழம், தேங்காய் முதலியவைகளைக் கொடுத்தால் அவைகள் ஜனங்களைத் தொந்திரவு செய்வதில்லை. அங்கு வருபவர்களெல்லாரும் அவைகளை ஸ்ரீராமரது ஸைன்யம் என்று நினைத்து அவைகளுக்கு பயபக்தியுடன் தின் பண்டங்களைத் தருவது வழக்கம். கங்கையானது ஹரித்வாரத்தில் மிகவும் வேகமாய் ஓடும். அதனால் படகுகள் ஆற்றில் போவது கிடையாது.

இந்தப்பட்டணத்தில் எல்லா வஸ்துக்களும் அதிக விலையாய் விற்கின்றன. ஒரு சேர் ஸாதாரண மிட்டாய் விலை ரூ. 1—4—0 அல்லது ரூ. 1—8—0. ஆனால் அது அப்பட்டம் மிட்டாயாயிருக்கும். பால் நல்லதாய்க்கிடைக்காது. ஒரு சேர் 3 அல்லது 4 அணா விலையாகும். அதுவும் தண்ணீர் பாதியும் பால் பாதியுமாகத் தானிருக்கும். காய்கறிகள் கூட அதிகவிலை. கூலியாட்களுக்கும் கூலி அதிகம். ஒரு கூலியின் மாஸச் சம்பளம் 10 அல்லது 12 ரூபாய். தச்சன், கொல்லத்துக்காரன், கல்வெட்டி ஆகிய இவர்கள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்குக் குறைந்த கூலிக்கு வேலை செய்வதில்லை. கட்டிட ஸாமான்களின் விலையும் அதிகம்

## INFLAMMATION OF THE UDDER.

### மடி வீக்கம்.

மாடுகளுக்கு வரும் இந்த வ்யாதி இரண்டு வகைப்படும். ஒன்று தொற்று வ்யாதியாகும். இன்னொன்று தொற்று வ்யாதியாயிராதது. இந்தியாவில் முதல் வகுப்பு அதிகமாகக் காணப்படுவது கிடையாது. இரண்டாவது வகுப்புத்தான் விசேஷம். அதனால் தான் அதிக தொல்லை ஏற்படுகிறது.

முதல் வகுப்பாகிய தொற்று வ்யாதிக்கு ஆதாரமான க்ருமிகள் மாட்டு மடியைச் சேர்ந்த ஜீவ அறைகளில் சேர்ந்து கொண்டு மடியை வீங்கச் செய்கிறது. பிறகு, வ்யாதி அம்சங்கள், வ்யாதிப்பட்ட மாடுகள் இதர மாடுகளோடு படுவதால் அந்த இதர மாடுகளிடமும் பரவுகின்றன. தொற்று வ்யாதியாயிராத இரண்டாவது வகுப்பு மடி வீக்கத்துக்கு அநேக காரணங்கள் உண்டு. இந்த இரண்டாவது வகுப்பு வ்யாதியானது ஸமீபத்தில் கன்று போட்ட மாடுகளுக்கு விசேஷமாக வரும். புதிதாகக் கன்று போட்ட மாடுகளின் மடிகள் பெருத்து வீங்கியிருக்கும். முலைக் காம்புகள் ம்ருதுவாயும், சீக்ரம் காயம் முதலியவை ஏற்படக் கூடியவையாயும் இருக்கும். காயங்கள் ஏதாவது ஏற்பட்டால், அவைகளின் மூலமாக அழுக்கு தூசிகள் மடியில் சேரக்கூடும். பால் கறந்த பிறகு முலைக் காம்பில் பால் ஈரம் இருக்கவிட்டு, குளிரும் சேர்ந்து கொண்டால், மடிவீக்கம் ஏற்படும். மடியில் அதிக பால் இருக்கவிடுவதும், முலைக் காம்புகள் வழியாக அழுக்கு மடியில் சேர விடுவதும், பொதுவாக ஸுகாதாரக் குறைவும் இந்த வ்யாதிக்குக் காரணங்களாகும். மடியில் காயங்கள் ஏற்பட்டாலும் அவைகளின் மூலமாக தூசி உள்ளேபுகுந்து வ்யாதியை உண்டாக்கிவிடும். இந்த வ்யாதியை அப்படியே விட்டுவிட்டால் பின்னால் ரொம்ப கெடுதலேற்படுமாகையால், இது விஷயமாக அதிக கவலை எடுத்துக் கொள்ளவேண்டியது அவச்யமாகும். மடியில் கட்டிகள் உண்டாகி தோல்கள் உரிந்து விழும். மடி சிறுத்துப் போகலாம். பால் சுரப்பது குறைந்தோ நின்றோ போகலாம். அல்லது முலைக்காம்புகளில் ஒன்றோ பலவோ அடைபட்டுப் போகலாம்.

வ்யாதியின் அடையாளங்கள்.

வ்யாதியில் மூன்று நிலைமைகள் உண்டு. முதல் நிலைமையாகிய தீவ்ரமான வ்யாதியில் மடி முழுவதுமோ, அல்லது அதில் பெரும்பாகமோ ரொம்ப வீக்கமடையும். தேகத்தில் வேறு கோளாறுகளும் காணப்படும். காய்ச்சல் அதிகமாக இருக்கும். தேகம் முழுவதும் வலி இருக்கும். மாடு தீனி எடுப்பதில்லை. அசைபோடுவதுமில்லை. முலைக் காம்புகளில் ஒன்றோ பலவோ கெட்டியாகி பால் கறப்பது கஷ்டமாகும். முதலில் பால் குறைவாயிருக்கும். அதன் நிறம் மஞ்சளாக இருக்கும். பிற்பாடு ரத்தம் கலந்ததாகவும் கெட்ட வாஸனை உள்ளதாகவும் இருக்கும். இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பிறகு கொப்புளத்திலுள்ள சீயைப் போலிருக்கும். சில வேளைகளில் பாலே வருவதில்லை. பிறகு மடியைச் சேர்ந்த சதை அழுகி துர்மாம்ஸமாகி, மடி குளிர்ந்து போய், பார்வைக்குப் பச்சை கலந்த கறுப்பாகித் தோன்றும். பிறகு வ்யாதிக் குறிகள் அபாயகரமாகி, மாடு இறந்துபோகும்.

இரண்டாவது நிலைமையாகிய பாதி தீவ்ரமான வ்யாதியில் தேகக் கோளாறுகள் அவ்வளவு அதிகமாக இருப்பதில்லை. பாலின் அளவும் அதிகம் குறைவதில்லை. சரியானபடி வைத்யம் செய்தால் மாடுகள் சீக்ரம் ஸ்வஸ்தமடைகின்றன. ஆனால் அவை மறுபடியும் கன்றுபோடும் வரையில், பாலின் அளவு சற்றுக் குறைவாகவே இருக்கும்.

மூன்றாவது நிலைமையாகிய நாள்பட்டிருக்கும் வ்யாதியில் வ்யாதிக் குறிகள் மெதுவாக வ்ருத்தியடைகின்றன. சிலகாலம் வரையில் வ்யாதி இருப்பதே தெரியாமலிருக்கலாம். முதலில் ஒரு முலைக்காம்பின் பக்கத்தில் தான் வ்யாதி உண்டாகும். முலைக் காம்புக்குமேலே சில மேடுகள் உண்டாகும். அவை வரவரப் பருக்கும். பாலின் அளவும் தன்மையும் குறைவடையும். பாலின் நிறம் மஞ்சளாகும்.

காலக்ரமத்தில் மடியின் பாகம் கெட்டியாகி கட்டிகள் உண்டாகும். கட்டிகள் ஏற்பட்ட பிறகு தேகத்தில் இதர கோளாறுகள் ஏற்படலாம். முலைக்காம்பிலிருந்து சீ முதலியவை வரலாம். மடியின் உள்தசைகள் நாசமடைந்தோ, கெட்டியாய்ப் போயோ விடும். பாலும் நின்று விடும். கடைசியில் மடியின் அந்த பாகம் வேலை செய்ய சக்தியற்றுப் போகும். ஆனால் மாடு மறுபடியும் கன்று போட்டால், மடியில் பால் சற்று சுரக்கலாம்.

க்ஷயரோகத்தாலும் வேறு ரோகங்களாலும் மடி வீக்கம் ஏற்படுவதுண்டு.

சிகித்ஸை.

வ்யாதி கண்ட மாட்டை நல்ல காற்றோட்டமுள்ளதும், குளிருக்கு அடைப்பாயிருக்கிறதுமான கொட்டில்களில் கட்டிவைக்கவேண்டும்.

கொட்டிலையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். வ்யாதி தீவ்ரமாயோ பாதி தீவ்ரமாயோ இருக்கும் நிலைமைகளில் அடியில் வரும் விரேசன மருந்தை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

எப்ஸம் ஸால்ட் என்னும்
பேதி உப்பு ... 1 ராத்தல்
பொடிசெய்த சுக்கு ... ½ ஔன்ஸ்
பொடி செய்த கந்தகம்... 2 ஔன்ஸ்
தேன்பாகு ... 8 ஔன்ஸ்

இவைகளை பட்டணம் படியால் அரையே அரைக்கால் படி சுடு ஜலத்தில் கலந்து ஆறின பின் உள்ளுக்குக் கொடுக்கவும். பிறகு பின் வரும் பல வ்ருத்தி மருந்தை உள்ளுக்குக் கொடுக்கவும்.

சாராயம் ... 4 ஔன்ஸ்
பொடி செய்த சுக்கு ... ½ ஔன்ஸ்
பொடி செய்த மிளகு ... 2 ட்ராம்

இவைகளைக் கலந்து காலை விசம்படி கஞ்சியில் சேர்த்துக் கொடுக்கவும். மாட்டுக்கு வலி அதிகமாயிருந்தால் பின்வரும் மருந்தை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

பொடிசெய்த அபின் அல்லது
கஞ்சா இலை ... 3 ட்ராம்
பொடிசெய்த பெருங்காயம்... 3 ட்ராம்
பொடி செய்த சுக்கு ... ½ ஔன்ஸ்
நாட்டு சாராயம் ... 4 ஔன்ஸ்

இவைகளைக் கலந்து காலை விசம்படி கஞ்சியில் கலந்து கொடுக்கவேண்டும். மடிக்கு ஒத்தடம் கொடுப்பது அவச்யம். அடிக்கடி பாலைக் கரந்துவிடவேண்டும். பாலைக் கறக்க சில ஸமயம் ஸைபன் குழாய்வைத்துக் கறக்க வேண்டியிருக்கும். ரொம்ப கெட்டிருக்கும் மடியிலிருந்து துர்நீரை வெளிப்படுத்த முலைக் காம்பை வெட்டி எறியவேண்டியிருக்கும். பெரிய கட்டிகளிருந்தால், அவைகளை அறுத்து துர்நீரை வெளிப்படுத்தி, வெங்காரம் அல்லது படிக்காரம் கரைத்த ஜலம் போட்டு சுத்தம் செய்ய வேண்டியிருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட சிக்கலான ஸந்தர்ப்பங்களில், கால்நடை வைத்யர்களில் தேர்ந்தவர்களைக் கொண்டு வைத்யம் செய்யவேண்டியது அவச்யமாகும்.

நாள்பட்ட வ்யாதிகளுக்கு சிகித்ஸை செய்வதில் குணமேற்படுவது அரிது. ஸாதாரணமாய் இந்த நிலைமையில் பால் சுரக்கும் தன்மை மடிக்கு இல்லாமல் போவது ஸகஜம்.

வ்யாதியைத் தடுத்தல்.

பசுமாடுகளை நல்ல ஸுகாதார நிலைமையில் வைத்து ஸம்ரக்ஷிப்பதோடு, அவைகளின் மடிகளுக்கு யாதொரு கெடுதலும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். மடி வீக்கமுள்ள பசுக்களை தனியாகக் கட்டி வைத்து, அவைகளுக்கென்று தனியாகப் பால் கறக்கிறவர்களை நியமிக்கவேண்டும்.

---


| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 837. இந்தியா தேசத்து இணையிலா மகான்கள் ... | 1 | 0 | 0 |
| நம்பர் 1- 4-வரையில் அடங்கியுள்ளது. அநேக பக்தர்களின் சரித்ரங்கள் அடங்கியது. டி. பக்தவத்ஸலம், பி.எ. எழுதியது. | | | 0 |
| 708. தாயுமானவர் சரித்ரம் ... | 0 | 2 | 0 |
| சுத்தப் பதிப்பு. படமுள்ளது. | | | |
| நாவல்களும் கதைகளும். | | | |
| 137. விஜய சுந்தரம் ... | 2 | 0 | 0 |
| தி. ம. பொன்னுசாமி பிள்ளை, அவர்களால் இயற்றப்பட்டது. | | | |
| 201. ஜடாவல்லவர் ... | 1 | 8 | 0 |
| வரகவி. திரு. அ. ஸுப்ரமண்ய பாரதி இயற்றியது. | | | |
| 349. பத்மாவதி சரித்ரம் ... | 1 | 4 | 0 |
| அநேக படங்களுடன் கூடியது.— அ. மாதவய்யா எழுதியது. | | | |
| 347. ஷை காலிகோ ... | 1 | 8 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.




## A SILK WEAVER'S CO-OPERATIVE SOCIETY.

### பட்டு நூல் காரர்களின் கோவாபரெடிவ் ஸங்கம்.

வடக்கே கஞ்சம் ஜில்லாவில் பட்டு நெசவுக்காரர்கள் ரொம்ப தாழ்ந்த நிலைமையில் இருப்பதை உத்தேசித்து, அவர்களை உயர்த்துவதற்காக அவர்களுக்குள் ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்து சேணியர்கள் தங்கள் ஜீவனத்துக்கு ஸாவ்காரர்களையே நம்பியிருந்து வருகிறார்கள். ஸாவ்காரர்கள் நெசவுக்கு வேண்டியிருக்கும் நூல், சாயம் முதலியவைகளை கடனாக சேணியர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். சில சேணியர்கள்தான் ரொக்கத்துக்கு வாங்குகிறார்கள். நூல், சாயம் விற்பவர்கள் வேறு கிடையாதாகையால், அவர்கள் சொன்ன விலை தான் சேணியர்கள் கொடுக்கவேண்டி யிருக்கிறது. விலையும் ரொம்ப அதிகம். அப்படி அதிக விலை கொடுத்து வாங்கின நூலைக் கொண்டு தயார் செய்த துணிகளை சேணியர்கள் ஸாவ்கார்களிடமே விற்றுவிடுவது வழக்கம். இப்படி அவர்களிடம் விற்கவேண்டுமென்ற நிபந்தனை ஒன்றுமில்லாவிட்டாலும், அவ்வழக்கம் ஒரு பழைய நாளைய மாமூலாக நடந்து வருகிறது. அவ்வழக்கத்தை ஒரு நாளும் சேணியர்கள் மீறி நடப்பதில்லை. ஆகவே ஸாவ்காரர்கள் பொருள் செய்வோருக்கும் வாங்குவோருக்கும் இடையில் இருந்து கொண்டு, லாபத்தில் பெரும்பாகத்தை அடித்துக்கொண்டு போகிறார்கள். சேணியர்கள் பெறுவதெல்லாம் ஜீவனத்துக்குப் போதுமான அளவுதான்.

சேணியர்கள் ஸாவ்கார்களையே நம்பியிருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு (சேணியர்களுக்கு) போதுமான மூலதனமில்லாமையும், அவர்கள் ஏழைகளானதால், நல்ல லாபமான விலை கிடைக்கும் வரையில் தாங்கள் செய்யும் துணிகளை விற்காமல் வைத்திருக்க முடியாமையுமே. அவர்களிடம் போதுமான மூலதனமிருந்தால் அவர்கள் ஒன்றுசேர்ந்து, நூல், சாயம் முதலியவைகளை சில்லறையாக வாங்காமல் அவை தயார் செய்யுமிடத்திலிருந்து மொத்தத்தில் வாங்கலாம். இதனால் விலை குறைவாய்க் கிடைக்கும். இன்னும் அவர்கள் சற்று பணக்காரர்களாக இருந்தால், நல்ல விலை கிடைக்கும் வரையில் காத்திருந்து, அதிக விலை கொடுப்பவர்களுக்கு விற்கலாம். இவ்விதம் இரண்டு வகையாலும் கிடைக்கக்கூடிய லாபத்தை இப்போது பர்ஹம்பூர் ஸாவ்கார்கள் அடித்துக்கொண்டு போகிறார்கள். ஸாவ்கார்களுக்கு வேண்டிய அளவு செல்வமிருப்பதால், அவர்கள் முன் போட்டுப் புரட்டுவது ஸௌகர்யமா யிருக்கிறது. சேணியர்களுக்குப் பணமில்லாததால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அவர்களுக்குப் பணம் வேண்டுமானால், அதற்கு ஏற்ற வழி அவர்கள் ஒன்று சேர்ந்து பொறுப்பு வரையறுக்கப்படாத ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் ஸ்தாபிப்பதே. சேணியர்களுடைய ஸொத்து மொத்தத்தில் பார்த்தாலும் ரொம்ப ஸ்வல்பந்தான். ஆனாலும் அவர்கள் திறமையுள்ள வேலைக்காரர்களாகையாலும், அவர்களுடைய ஸங்கம் பொறுப்பு வரையறுக்கப்படாததாகையாலும், அந்த ஸங்கத்துக்குத் தக்க மேற்பார்வை யிருக்கும் பக்ஷத்தில், அவர்களுக்குப் பணம் கிடைப்பது அவ்வளவு கஷ்டமல்ல. ஸங்கத்தில் சேர்ந்த சேணிய மெம்பர்கள் நெய்த துணிகளை ஸங்கத்தின் மூலமாக விற்பதால் துணிகளுக்குத் தக்க விலை கிடைக்கும்.

ஆனால் இதற்கு ஸங்கமானது விளம்பரம்

செய்வதோடு, துணிகள் உயர்ந்தனவாகவும், பித்தலாட்டமில்லாதனவாகவும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். இந்த நோக்கத்தைக்கொண்டு அந்த ப்ரதேசத்திலுள்ள சில கோவாபரேஷன் அபிமானிகள் சென்ற 1916-ம் வர்ஷம் ஜனவரி மாஸம் முதல் சேணியர்களுக்குள் ஒரு கோவாபரேடிவ் ஸங்கம் ஸ்தாபிக்க முயன்று வந்தார்கள். ஆனால் அது ஸுலபத்தில் ஆகிற கார்யமாக இல்லை. பெரிய பணக்கார ஸாவ்கார்கள் இந்த முயற்சிக்கு இடையூறாக நின்று வேலை செய்தார்கள்.

ஒன்றுந் தெரியாத சேணியர்கள் பயத்தால் இதில் சேரப் பின்வாங்கினார்கள். இருந்தாலும் இடைவிடாமல் ப்ரஸங்கம் செய்து கோவாபரேஷனின் நன்மைகளை சேணியர்களுக்கு எடுத்துச் சொன்னதன்மேல், சென்ற டிஸம்பர் மாஸத்தில் சேணியர்கள் ஸங்கம் ஸ்தாபிக்க இசைந்தார்கள். அந்த மாஸத்தில் ஷை ஸங்கம் ரெஜிஸ்டராயிற்று. சென்ற ஜனவரி மாஸம் முதல் வேலை ஆரம்பித்தது.

இந்த ஸங்கம் பொறுப்பு வரையறுக்கப்படாத ஸங்கமாகும். ஒவ்வொரு பங்கின் விலை 50 ரூபாயாகும். இதில் 5 ரூபாய் மெம்பர் சேரும்போது செலுத்திவிடவேண்டும். பாக்கி 45 ரூபாயையும் 45 மாஸங்களில் மாஸம் 1 ரூபாயாகச் செலுத்திவிடவேண்டும். ஒவ்வொரு மெம்பரும் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளவேண்டியது கட்டாயம். ஆனால் 2-பங்குக்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது. பங்கு ஒன்றுக்கு 100 ரூபாய் விதம் மெம்பர்கள் கடன் பெறலாகும். ஸாதாரணமாக இத்தொகைக்கு நூல், சாயம் முதலிய மூலப்பொருள்கள் கடனாகக் கொடுக்கப்படும். சில ஸமயங்களில் ஒரு சிறு தொகை ரொக்கமாகக் கடன் கொடுத்து, அதற்கு ஏற்றாற்போல மூலப்பொருள்களில் குறைத்து விடுவதுண்டு. இந்தக் கடனுக்கு, கடன் வாங்கும் மெம்பரும் ஜாமீனாக வேறு இரண்டு மெம்பர்களும் சேர்ந்து பத்ரம் எழுதிக் கொடுப்பார்கள். சில ஸந்தர்ப்பங்களில் பந்தகம் முதலியன இல்லாத வீடுகள் ஈடாகக் காட்டப்படுவதுண்டு.

கஞ்சம் ஜில்லாவிலுள்ள ஸெண்ட்ரல் பாங்கியார் இந்த ஸங்கத்துக்காக 1000 ரூபாய் ரொக்கமாகக் கடன் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

இந்த ஸங்கத்தை நடத்த மெம்பர்களால் தங்களுக்குள் தெரிந்தெடுக்கப்பட்ட 5 பேர்கள் கொண்ட ஒரு பஞ்சாயத்து ஏற்பட்டிருக்கிறது. கணக்குகள் வைத்துக்கொள்ளவும், மாஸாமாஸம் பணம் வஸூல் செய்யவும் ஒரு குமாஸ்தா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மெம்பர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்கு ஒரு ரூபாய்க்கு மாஸம் $1\frac{1}{2}$ பை விதம் வட்டி வஸூல் செய்யப்படும்.

ஒவ்வொரு கடனையும் மெம்பர்கள் 3 மாஸத்தில் செலுத்திவிட வேண்டும். தக்க காரணங்களிருந்தால் சில ஸமயங்களில் கடன் தவணையை 6 மாஸம் வரையில் அதிகப்படுத்துவார்கள்.

உள்ளூரிலுள்ள பட்டுநூல் வ்யாபாரிகள் வடக்கே மால்டாவிலுள்ள பட்டுநூல் வ்யாபாரிகளிடம், இந்த ஸங்கம் ஒருபோலி ஏற்பாடென்று சொல்லி மால்டா வ்யாபாரிகளை பயமுறுத்தினதால், ஸங்கத்து மெம்பர்களுக்கு வேண்டிய நூலை வங்காளத்துக் கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார் மூலமாகத் தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விதம் 800 ரூபாய்க்கு நூல் வாங்கி 10 மெம்பர்களுக்கு கடனாகக் கொடுக்கப்பட்டது. இதைத் தவிர மெம்பர்களுக்கு 20 ரூபாய்க்கு மேற்படாமல் ரொக்கமும் கடன் கொடுக்கப்பட்டது. இவ்விதம் வாங்கின பட்டுநூல், உள்ளூரில் விற்கும் நூலைவிட உயர்ந்தது. விலையும் அதிகமில்லையாம். இப்போது ஸங்கத்தார் மெம்பர்கள் நெய்யும் துணிகளை சரியான விலைக்கு விற்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறார்கள்.



இந்த ஸங்கத்தில் சேரும் மெம்பர்கள் எவ்விதம் தங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ளக்கூடும் என்பதை ஒரு குறிப்பிட்ட அளவு நூலைக்கொண்டு நெய்வதில் ஏற்படும் செலவைப்பற்றிய அடியில் வரும் கணக்கால் அறிந்துகொள்ளலாம்.

| | ஸாவ்காரிடம் கடன் வாங்கினபோது | | | ஸங்கத்தில் சேர்ந்தபிறகு. | | |
|---|---|---|---|---|---|---|
| பட்டுநூலின் விலை ... | 23 | 0 | 0 | 20 | 0 | 0 |
| சாயம் ... | 4 | 0 | 0 | 4 | 0 | 0 |
| நூலைத்தயாராக்குதல் ... | 4 | 0 | 0 | 4 | 0 | 0 |
| மொத்தம் | 31 | 0 | 0 | 28 | 0 | 0 |
| துணிகளை விற்றதில் கிடைப்பது ... | 45 | 0 | 0 | 48 | 0 | 0 |
| சேணியனுக்குக் கிடைக்கும் கூலி ... | 14 | 0 | 0 | 20 | 0 | 0 |

ஆகவே ஸாவ்காரிடம் நூல் வாங்குவதிலும், துணியை விற்பதிலும் சேணியனுக்கு நஷ்டம் ஏற்படுகிறதென்றும், ஸங்கத்தில் சேர்ந்து மொத்தத்தில் நூல் வாங்கி ஸங்கத்தின் மூலமாக விற்பதால் லாபம் கிடைக்கிறதென்றும் இதனால் விளங்கும்.

இந்த ஸங்கம் நன்றாய் நடைபெற்று, இதைப்போல் பலவிடங்களிலும் நெசவுக்காரர்கள் ஸங்கம் ஏற்படுமானால், அவர்களுடைய நிலைமை ரொம்பவும் வ்ருத்தியடையும்.

## TREES PRODUCING DYES, OIL AND FIBRE.

By Y. S. VENKATARAMANA AIYAR, B.A., B.L.

## சாயம், எண்ணெய், நார் முதலிய வற்றிற்காகும் மரங்கள்.

(சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் 353-ம் பக்கத் தொடர்ச்சி.)

### எண்ணெய்.

(1) நாட்டு அக்ரோட் மரம் (Indian Walunt or Candleberry tree) (Aleurites Moluccana). விதையை அழுகிய எருவுடன் கலந்த சேற்றில் புதைத்து வைக்க, ஒரு மாஸத்தில் முளைக்கும். பழத்தை சாப்பிடுவதுண்டு. கொட்டையை அழுத்துவதாலும், காய்ச்சுவதாலும் ஓர் உயர்ந்த எண்ணெய் வெளிவரும். சாயம் சீக்ரத்தில் உலருவதற்காக இந்த எண்ணெயை சாயத்தின்மீது பூசுவார்கள். இது ஆழிவிதை எண்ணெயைவிடச் (Linseed oil) சிறந்தது. மூங்கில் குச்சியை நீண்ட ஊசி போல் செய்து கொட்டைகளை கோத்து எரியவிட்டால் மணிக் கணக்காய் ப்ரகாசமாக எரியும்.

(2) இலுப்பை மரம் (Bassia longifolia). இதன் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் அநேக மருந்து வகைகளில் உபயோகப்படுகிறது. ஸோப், மெழுகுவர்த்திகள் செய்ய இந்த எண்ணெய் தகுதியானது. விளக்கு நன்றாய் எரியும். இதை விசேஷமாக ஹிந்துக்கள் மதிப்பார்கள். இதை நெய்யுடன் வ்யாபாரிகள் கலப்பதுண்டு. ஆனால் அதனுடைய கசப்பால் அதன் சேர்க்கையை ஸுலபமாய் அறிந்துகொள்ளலாம்.

(3) லவங்கப்பட்டை மரம் (Cinnamonum Zeylanicum). உள்பட்டையிலிருந்து லவங்கப்பட்டை எண்ணெய் இறக்கப்படும். இலையும் வேருங்கூட எண்ணெயைக் கொடுக்கின்றன. லவங்கப்பட்டை எண்ணெய் ஸன்னிபாத (டைபாய்ட்) ஜ்வரத்தை சீக்ரத்தில் ஸ்வஸ்தமாக்குமாம்.

(4) தென்னைமரம் (The Cocoanut, Cocus Nucifera). தேங்காய் எண்ணெய் இறக்கு

வது மலையாளத்தில் ஒரு முக்ய தொழிலாகும். ஆனாலும் மற்ற இடங்களிலும் காய்ச்சுவதுண்டு. இது யாவரும் அறிந்த விஷயம்.

(5) நேர்வாளம் (Croton Tigluim). முற்றின கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் அதிகமாய் பேதி உண்டாக்கும் சக்தியுள்ளது. முகத்திற்கு காந்தி கொடுக்க எண்ணெய் உபயோகப்படுத்தப்படும். அஜாக்ரதையாய் உபயோகித்தால் தோல் எடுபட்டுப் போகும்.

(6) செம்புளிச்சான் மரம் (The Red Cedar, Erythroxylon monogynum). இதன் கட்டையிலிருந்து எண்ணெய் இறக்கப்படும். அது வாயுப் பிடிப்பை நீக்கும்.

(7) காட்டிலைமரம், வஞ்சிமரம் (The Ceylon Oak, Schleichera Trifuga). கொட்டையிலிருந்து இறக்கப்படும் எண்ணெய் மருந்துச் சரக்காகும். சில இடங்களில் விளக்கெரிய உபயோகிக்கிறார்கள். தலையில் தடவ மயிர் வளர்ச்சியை உண்டாக்கும். இதுதான் "மகஸர்" (Macassar oil) என்னப்படுவது. ஜெர்மானியர் இதில் அதிக லாபத்தை அடைந்திருக்கிறார்கள். எண்ணெயுடன் துவர்ப்பான இதன் பட்டையை அரைத்துப் பூசுவதால் சிரங்கு சொரிகள் நீங்கும்.

(8) முருங்கை மரம். (The Drumstick tree, Moringa Pterygosperma). புறக்கடைகளிலும் தோட்டங்களிலும் காணக்கூடிய ம்ருதுவான மரம். இதன் கிழங்கு போன்ற வேர்களைக் குதிரைகள் நன்றாய் தின்னும். இதன் காய் கறிவகைகளில் உபயோகப்படும். ஒரு செடியின் காய்கள் ஒரு வருஷத்தில் 5 ரூபாய்க்கு விற்கும். ஆனால் இதன் வேறு உபயோகங்கள் எல்லார்க்கும் தெரியாது. முற்றின கொட்டையிலிருந்து ஓர் எண்ணெ எடுக்கப்படும். இந்த விஷயம் அநேகருக்கு தெரியாது. இந்த எண்ணெயே தான் கெடியாரம் செய்பவர்கள் உபயோகிக்கும் விலையுயர்ந்த பென் ஆயில் என்னும் (oil of Ben) எண்ணெயாகும். இந்த கைத்தொழிலை நம்மவர் கவனியாதது பிசகு. இந்தியாவில் உலக முழுவதிற்கும் உபயோகப்படக் கூடிய "பென்" எண்ணெயை ஸுலபமாய் இறக்கலாம்.

(9) சந்தனமரம். (The Sandal-wood tree. Santalum Album). இது யாவருமறிந்த விலையுயர்ந்த மரம். இதைப் பயிரிடுதல் முதலியன ஸர்க்கார் தாப்பிலேயே இருந்து வருகிறது. மரத்தின் க்ரயம் அதன் எண்ணெயின் குணத்தைப் பொருத்திருக்கிறது. மருந்து வகையிலும் வாஸனை வகையிலும் இதன் எண்ணெய்க்கு நாளுக்குநாள் க்ராக்கி அதிகபட்டு வருகிறது.

(10 & 11) வேப்ப மரம், புங்க மரம்.

நள௵ மாசி மாஸத்திய ஜனோபகாரி பத்ரிகையின் 63, 64, 65-ம் பக்கங்களிற் காண்க.

நார்.

(1) வாழை. (The Plantain). ஜனத்தொகையுள்ள விடத்தும் நீர்ப்பாசன வஸதியுள்ள விடத்தும் மனிதரை தொடர்ந்து செல்வதுபோல் இந்த மரத்தை எங்கும் காணலாம். இதன் பட்டையிலிருந்து நேர்த்தியான நார் கிடைக்கிறது. மானில்லா ஹெம்ப் மரம் (Manilla Hemp tree.) என்பது ஓர்வகை வாழைதான். இதன் நார் மிகவும் சிறந்தது. வேருக்கு ஸமீபத்திலும் இலை பிரியுமிடத்திலும் வெட்டிவிடவேண்டும். பூ, காய் வைப்பதற்கு முந்தியே வெட்டவேண்டும். பிறகு அதை நேராகப் பிளந்து தண்டை நீக்கிவிடவேண்டும். வெளிப்பட்டைகளின் நார் ம்ருதுவாகவிருக்கும். ஆகையால் நேர்த்தியான நெசவுக்கு உபயோகமாகும்.

(2) தென்னை. இதன் நார் பலவிஷயங்களுக்கு உபயோகமாகும். மட்டையிலிருந்து



நார் எடுப்பதும் கயிறு திரிப்பதும் யாவரும் அறிந்த விஷயம். இது கொச்சி ப்ராந்தியத்தின் முக்ய கைத்தொழிலாகும்.

(3) பேழைமரம். (Careya Arborea). இந்த மரம் முற்காலத்தில் சிப்பாய்களின் மத்தளத்திற்கு உபயோகப்பட்டு வந்தது. பட்டையிலிருந்து உறுதியான நார் கிடைக்கிறது. துப்பாக்கி மருந்துக்கு தீப்பிடிக்கசெய்யவும், பிரங்கி சுடுகிற வர்த்தியாகவும் உபயோகப்படுகிறது.

(4) மலைப்பனைமரம். (The Bastard Sago, hill toddy-palm. Caryora Urens). நீண்டு தொங்கிக் கொண்டிருக்கும் புஷ்பக் கிளைகள் அல்லது பழத்தார்கள் பார்ப்பவர் மனஸை கவரத்தக்கவை. புஷ்பக்கிளையை கல்யாண பந்தலில் கட்டுவார்கள். உறுதியான மட்டி நார் பட்டையினின்றும் கிடைக்கும். கயிறு, ப்ரஷ், கூடை, துடைப்பம்முதலிய பல வேலைகளுக்கு இந்த நார் உபயோகப்படும்.

(5) பனை (The Palmyra, Borassus flabifuller). கிழக்கு திசை தமிழ் நாட்டில் இம்மரத்தை எங்கும் காணலாம். இதன் பற்பல ப்ரயோஜனங்களை குறித்துள்ள ஒரு பாட்டில் இதற்கு 800 வித உபயோகங்கள் உண்டென்று கூறப்பட்டுள்ளது. இதன் நார் தற்காலம் விசேஷமாய் பல உபயோகங்களுக்காக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

(6) மரவுரி மரம் (The Upas and sack tree, Antiaris toxicaria). 250 அடி உயரம் வளரக்கூடியதும் எப்பொழுதும் பச்சையாயிருப்பதுமான ஓர் விநோதமான மரம். இதை பம்பாய் முதல் கன்யா குமரி வரையில் மேற்கு ப்ரதேசங்களில் காணலாம். குடகு, வயநாடு, திருவாங்கூர் முதலிய ப்ரதேசங்களில் மலையாளிகள் வெட்டுத் துண்டுகளிலிருந்து அப்படியே பட்டையை வட்டமாக உரித்து தான்யப் பைகளாக உபயோகிக்கிறார்கள். மேற்கு ப்ரதேசங்களில் மலைநாடுகளில் இதை ஸாதாரணமாய்ப் பார்க்கலாம். உள்பட்டையில் தான் அதிக நார் உண்டு. அது ஸ்வபாவத்திலேயே பைபோல் கோத்திருக்கிறது. மனிதருக்கு பைசெய்வதை காண்பிக்க ஜகதீசன் இந்த பட்டையை படைத்தார்போலும். இந்த நாரால் கயிறு பாய் முதலியன செய்யலாம்.

(7) வலம்புரி. இதைக்குறித்து 1916 வருஷத்திய ஆவணிமாதத்திய ஸஞ்சிகையில் 348-வது பக்கத்தில் காண்க.

தோல் பதனிடுதல் முதலியன.

(1) காஞ்சிவாலமரம். (The Camel's foot tree, Bauhinia Variegata). விதையிலிருந்து ஸுலபமாய் உற்பத்தி செய்யலாம். இதன் புஷ்பங்கள் மிகப்பெரியனவாயும் அழகாகவும் வாஸனையாகவும் இருக்கும். இதன் இலையும் குருத்தையும் சில இடங்களில் கறி செய்வதுண்டு. பட்டை தோல் பதனிடுவதற்கு ச்ரேஷ்டமானது.

(2) தான்றிமரம். (The Belerie Myrobolan) 80 அடி உயரம் வளரக்கூடிய பெரிய மரம். கேட்டுக்கும் துரத்ருஷ்டத்திற்கும் தேவதையான சனி பகவான் இதில் குடியிருப்பதாக நம்மவர் கொள்கை. ஹிந்துக்கள் அதன் நிழலில் உட்காருவதுமில்லை, மரத்தை வீட்டு ஸாமான்களுக்கு உபயோகிப்பதுமில்லை. இதில் பேய்கள் குடியிருக்கின்றனவென்று இதன் பக்கத்தில் நமது வட நாட்டார் நெருங்கமாட்டார்கள். தான்றிக்காய் வ்யாபாரச் சரக்கு. சாயம் காய்ச்சுவதற்கும் தோல் பதனிடுவதற்கும் அதிகமாய் உபயோகப்படுகிறது. ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகிறது.

(3) சவுக்குமரம். (Casuarina). இது யாவருக்கும் நன்றாய்த் தெரிந்த மரம். ஆனால் அதன் பட்டையைச் சுட்ட சாம்பல் சோப் செய்வதில் உபயோகமாகுமென்பதை யாவரும் அறிந்திருக்கமாட்டார்கள்.

(4) சாரப் பருப்பு மரம். (Buchanania

lati folia). இதன் பருப்புக்காக இதுபேர் மரம். பழத்திற்குள்ளிருக்கும் கொட்டை அல்லது பருப்பு பாதாமிக்கு பதிலாக உபயோகமாகிறது. பருப்பில் எண்ணெய் ஸத்து அதிகம். அந்த எண்ணெய் தித்திப்பாயிருக்கும். மரத்தின் பட்டை தோல் பதனிடுவதற்கு மிகச் சிறந்தது. திருவாங்கூரில் இந்த பட்டை வ்யாபாரம் அதிகமாய் நடக்கிறது.

(5) திவி திவி. (Divi-Divi). (Caessalpina Coriara). மஞ்சள் புஷ்பமும் அதிக பச்சையான இலையும் உள்ள குடைபோன்ற வட்டமான செடி. தோல் பதனிடுவதற்கு மிகச் சிறந்தது. இதன் காய் வளைந்திருக்கும். அதில் தோல் பதனிடும் சக்தி 100-க்கு 50 பாகமிருக்கிறது. விதையிலிருந்து உற்பத்தி செய்து எவ்விடத்திலும் பயிராக்கலாம். ஒரு டன் காய் 100 ரூபாய்க்கு விற்கும்.

(6) ஆவாரைச்செடி. (Cassia Auriculata) மிக உபயோகமான இந்தச் செடியை ஐரோப்பிய வர்த்தகர்கள் தோல் பதனிடும் பட்டையென்பார்கள். வெளி இடங்களில் இதனை அநேகமாய் பார்க்கலாம். கிளைகளின் ஓரத்தில் கொத்து கொத்தாய் பூக்கும். இதன் மஞ்சள் புஷ்பங்கள் பார்ப்பவர் மனஸை கவரத்தக்கன. தோல் பதனிடுபவர்க்கு இதன் பட்டை முக்யமாய்த் தேவை. இரும்பை எஃகுடன் சேர்த்து பதனிடுவதற்கும் இதன் வேர் உபயோகமாகிறது. இதன் பட்டையில் பெரிய வ்யாபாரம் நடந்து வருகிறது. சாயமும் இறக்கலாம். இதன் புஷ்பம், பட்டை, விதை இவைகள் ஆயுர்வேத ஔஷாதிகளில் அதிகமாய் உபயோகப்படுகின்றன.

(7) சருவேலன் வெள்வேலன்.

சென்ற தை மாஸத்திய ஜனோபிமானி பத்ரிகையில் 16-ம் பக்கத்திற் காண்க.

ஓய். எஸ். வேங்கட்டரமணய்யர், B. A., B. L.

## IMPURE AIR AND ITS EVILS.

By R. S. MANIYAM, B.A., L.T.

## அசுத்தமான ஆகாயமும் அதன் கெடுதிகளும்.

நாம் தேக ஆரோக்ய விஷயமாய் கவனிக்க வேண்டியவைகளுள் நாம் ச்வாஸிக்கும் ஆகாயமே முதன்மையானது. ஆகாயமென்பது பூமியைச் சுற்றியிருக்கும் ஒரு ஸமுத்ரம் என்றே சொல்லலாம். இது மனிதர்களாலும் ம்ருகங்களாலும் ஸதா உட்கொண்டு வெளியிடப்படுகிறதென்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே. ஆதலால், ஆகாயம் அசுத்தமாயிருக்கும் பக்ஷத்தில் அதை உட்கொள்ளும் ப்ராணிகளுக்குக் கெடுதி நேரிடுமென்பதைச் சொல்வானேன். ஸாதாரணமாக, காற்றோட்டமில்லாத ஒரு சிறிய அறையில் அநேகம் பேர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாலும் வேலைசெய்து கொண்டிருந்தாலும், கொஞ்ச நேரத்தில் ஒருவித மயக்கமுண்டாகி, மூச்சு சிறிது தடைப்பட்டு, வெளியில் சற்றுப்போய் திரும்பிவந்தால் ஸௌகர்யமாய் இருக்கும்போல் தோன்றுவது ஒவ்வொருவருக்கும் அநுபோகத்தில் ஏற்பட்டிருக்கலாம். அக்காலங்களில், உள்ளேவிட்டு வெளியே வரும்போது 'அப்பாடா' என்று நம்மையறியாமலே சொல்லிக்கொள்ளும் வார்த்தையே அடைபட்ட காற்றுக்கும் வெளிக் காற்றுக்கும் உள்ள பேதத்தை நன்றாய் விளக்குகிறதல்லவா? முன்பு 1756-ம் ௵த்தில் ஸுராஜ டவுலா என்னும் ஓர் வங்காள நவாபானவர் 146-பேர்களை ஒருமிக்க ஒரு சிறு இருட்டறையில் 12-மணி நேரம் அடைத்து வைத்ததாகவும், மறுநாள் பார்க்கையில் அவர்களுள் அநேகர் திக்கு முக்காடி இறந்து, ஏதோ 23-பேர் மட்டும் நல்ல காற்றுக்குத் திண்டிக்கொண்டிருந்ததாகவும் நமது தேச சரித்திரம் கூறுகிறது. இன்னும், சுண்டெலிபோன்ற ஒரு ப்ராணியை நாற்புறமும் காற்று போகவொட்டாமல் அடைக்கப்பட்ட ஒருகண்ணாடிப் பெட்டியில் போட்டுப் பூட்டி வைப்போமானால், அது சிறிது நேரம் அங்கு மிங்கு மோடிக்கொண்டிருந்து பிறகு உட்கொள்ள நல்ல ஆகாயம் இல்லாததால் இறந்துவிடும். இதைப் ப்ரத்யக்ஷமாக ஒவ்வொருவரும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். மேற்கூறியவைகளுக்கெல்லாம் நல்ல ஆகாயம் அசுத்தமாவதே முக்ய காரணமாகும். இனி, நல்ல ஆகாயம் எந்தெந்தக் காரணங்களால் அசுத்தமாகிறதென்பதை கவனிப்போம்.

ஜீவராசிகளனைத்துக்கும் அத்யாவச்யமான ச்வாஸத் தொழிலே இதற்கு முக்ய காரணமாகும். இதனால், ஜீவனுக்கு முக்யாதாரமான ப்ராணவாயு, ப்ராணிகளின் ச்வாஸப்பையை அடைந்து சரீரத்திலுள்ள கரிமுதலிய பதார்த்தங்களோடு கலந்து, குணம் மாறி, கரியமிலவாயு முதலியனவையாக வெளிப்படுகிறது. ஆகவே, ஆகாயத்திலுள்ள ப்ராணவாயு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து, ஆகாயம் முழுவதும் கரியமில வாயுவால் நிரம்ப இடமுண்டாகிறது. நம்முள் சிலர் ஸுலபமாக காற்றோட்டமும் வெளிச்சமும் இல்லாத அறைகளிலும், வீடுகளிலும் வஸிப்பதாலும், தூங்குவதாலும், அங்குள்ள ஸ்வல்ப நல்ல ஆகாயமும் சீக்ரம் குறைந்துபோய், வெளிப்படும் கரியமிலவாயுவையே அவர்கள் உட்கொள்ள நேரிடுகிறது. இவ்வாறு ஒரு தரம் ச்வாஸித்து விட்ட ஆகாயத்தையே மறுபடியும் உட்கொள்ளுவதனால், மயக்கம், தலைவலி முதலிய உபாதிகள் ஏற்பட ந்யாயமுண்டாகிறது. ஆகவே, தலைமுதல் கால் வரையில் போர்த்துக்கொண்டு தூங்கும் அப்யாஸத்தால் விளையுங் கெடுதிகளைச் சொல்ல வேண்டியதில்லை.

தவிரவும், விளக்கு எரிவதற்கும், அடுப்பு முதலியவை பற்றுவதற்கும் முக்யமானது ப்ராணவாயு. எரியும் எந்தப் பதார்த்தமும் ஆகாயத்திலுள்ள ப்ராணவாயுவுடன் ஸம்பந்தப்படுகிறது. இதனால், கொஞ்சங் கொஞ்சமாக ஆகாயத்திலுள்ள ப்ராணவாயு குறைந்து, எரியுங் காரணத்தால் ஏற்படும் கரியமிலவாயு முதலிய கெட்ட வாயுக்களே ஆகாயத்தை நிரப்புகின்றன. உதாரணமாக, ஒரு வாய் குறுகின கண்ணாடிப் பாத்ரத்தினுள் ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றிவைத்து பாத்ரத்தின் வாயை மூடிவிட்டால், கொஞ்ச நேரத்துக்குள் பாத்ரத்திலிருந்த சுத்த ஆகாயம் மாறி அசுத்தமாகுங் காரணம்பற்றி விளக்கு அணைந்து போகும். மேற்கூறிய இரண்டு காரணங்களாலும் ஏற்படும் அசுத்தமான ஆகாயத்தை ச்வாஸிப்பதனால் தேக பலஹீனமும், பௌருஷக் குறைவும், வளர்ச்சியின்மை முதலிய கெடுதிகளும் உண்டாவதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆகாயம் அசுத்தமாக இன்னும் சில காரணங்கள் உண்டு. அவைகளில் ஒன்று ப்ராணி, தாவர பதார்த்தங்கள் ஆகிய இவைகளை அழுகிப்போகும்படிவிட்டுவிடுதல். மேற்கூறியபதார்த்தங்கள் அழிந்து போனதும் அவை அழுக ஆரம்பித்து, அவைகளிலிருந்து ச்வாஸிக்கத் தகாத அநேக விதவிஷவாயுக்கள் உற்பத்தியாகி ஆகாயத்தோடுகலக்கின்றன. இந்தத் தன்மை, குளிர் தேசங்களைவிட உஷ்ண தேசங்களில் பதார்த்தங்களுக்கு வெகு சீக்கிரம் ஏற்படும். வீட்டுக்கு அருகாமையில் இறந்த ப்ராணிகளின் உறுப்புகள், மல மூத்ராதிகள், குப்பை முதலியன சேரவிடுதலும் மரம் செடி முதலியவை தண்ணீரில் அழுகி மட்கவிடுதலும் [illegible]

பத்தை அசுத்தப்படுத்துவதில் முக்ய காரணங்களாகின்றன. அன்றியும், ஜனங்கள் சில ஸமயங்களில் மல ஜலங்களைக் கழிக்க ரஸ்தாக்களிலும் தெருக்களிலுங்கூட உட்காருகிறார்கள். வேறு சிலர் தங்கள் வீட்டில் ஒரு புறத்தேயுள்ள கக்கூசு கொல்லை முதலியவற்றை உபயோகிக்கிறார்கள். ஆயினும், இவைகளைத் தவறாமல் கழுவி சுத்தஞ் செய்தாலன்றி, அங்கிருக்கும் அசுத்தங்கள் காய்ந்து காற்றால் அடித்துக்கொண்டு போகப்பட்டு, ஆகாயத்தோடு கலந்து அசுத்தமான ஆகாயம் பரவ மார்க்கம் ஏற்படுகிறது. இல்லாவிட்டால் அவை மழையில் கரைந்து பூமியோடு கலந்து அருகாமையிலுள்ள கிணற்றுநீர் முதலியவற்றோடு கலந்து, தண்ணீரையும் அசுத்தமாக்க ஹேதுவாகிறது.

தவிரவும், சாக்கடைகளைத் தெருவிலேயாயினும் கொல்லைகளிலேயாயினும் ஓட விடுவதனாலும், வீட்டிற்கு ஸமீபமாய் மாட்டுக்கொட்டில் இருப்பதாலும், எரு, சாணி, குப்பை முதலியவைகளைச் சேரவிடுவதாலும், துர்க்கந்தமுள்ளதும், தேகத்திற்குக் கெடுதி விளைக்கக் கூடியவையுமான வாயு பதார்த்தங்கள் அநேகம் உண்டாகி, ஆகாயத்தை அசுத்தப்படுத்துகின்றன. மேற்கூறிய அசுத்தமான ஆகாயத்தை உட்கொள்ளுவதால் அஜீர்ணம், வயிற்றுவலி, வாந்திபேதி முதலியனவும், தொண்டைப்புண், அக்கிப்படுவன் முதலியனவும் உண்டாகக் காரணம் ஏற்படுகிறது. கடைசியாக, கசாப்புக்கடை, தோல்கடை, சாயக்கடை முதலிய தொழில்சாலைகளிலும், இதர இடங்களிலும் நடத்தும் வேலைகளின் காரணமாக, ஆகாயம் அசுத்தப்பட ந்யாயமுண்டு. உதாரணமாக, தகரச் சுரங்கங்களில் வேலை செய்யும்போது தகரப்பொடியும், இரும்பினால் ஊசி, வாள், கத்தி முதலியவை செய்யும்போது ஏற்படும் இரும்புப்பொடியும் காற்றினாலடித்துக் கொண்டுபோகப்பட்டு ஆகாயத்தில்பரவ, அந்த ஆகாயத்தை உட்கொள்ளும் தொழிலாளிகள் மேற்சொன்ன பொடிகளினால் ச்வாஸக்குழாய்களில் ஏற்படும் எரிச்சலுடன் அநேக வித வ்யாதிகளுக்குள்ளாகிறார்கள். இரும்பு தகரம் முதலிய சுரங்கங்களில் வேலை செய்பவரிடத்து ச்வாஸாசய வ்யாதியும், களிமண், கண்ணாடி வேலைக்காரரிடத்து க்ஷய ரோகமும், ஈய வேலைக்காரரிடத்து வயிற்றுவலியும், செம்பு பித்தளை வார்ப்புச் சாலைகளில் உள்ள தொழிலாளிகளிடத்து ஒருவித குளிர் ஜ்வரமும், நெருப்புப் பெட்டி வேலைக்காரரிடத்து அந்த வேலையில் உபயோகிக்கப்படும் 'பாஸ்பரஸ்' என்னும் பதார்த்தத்தின் ஆவியை ச்வாஸிப்பதால், ஒருவித முடக்கு வ்யாதியும் ஸகஜமாய் ஏற்படுவதாக வைத்ய சாஸ்த்ர பண்டிதர்கள் அநுபோகத்தில் கண்டறிந்திருக்கிறார்கள். இன்னும் அநேக ஜ்வரங்களும் க்ஷய ரோகம் முதலிய கொடிய வ்யாதிகளும் உண்டாகக் காரணம், மேற்கூறிய பல விதங்களாலும் ஏற்பட்டு ஆகாயத்தோடு கலந்து வ்யாபிக்கும் நுட்பமான க்ருமிகளும், அசுத்தமான ஆகாயமுமேயாம்.

ஆர். எஸ். மணியம்.

---


| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 138. | ஞானசம்பந்தம் ... | 1 | 0 | 0 |
| | திரிசிரபுரம் ம. பொன்னுசாமி பிள்ளை இயற்றியது. | | | |
| 139. | ஞானம்பிகை ... | 1 | 4 | 0 |
| 735. | ரோஜா ... | 0 | 10 | 0 |
| | காதலன் காதலி இவர்கள் ஒருவர்க்கொருவர் எழுதிக்கொண்ட அன்பு நிறைந்த கடிதங்கள் அடங்கியது. | | | |
| 260. | ராஜாமணி ... | 0 | 8 | 0 |
| | ஹாஸ்யரஸமும் சோகரஸமும் உள்ள ஒரு நாவல். எ. ஹரிஹரய்யர் எழுதியது. | | | |
| 742. | க்ஷத்ரிய ரமணி ... | 0 | 2 | 0 |
| | ஸ்ரீசைலர் எழுதிய ஒரு சிறுகதை. | | | |

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.




## THE EMIGRATION CONFERENCE.

## இந்தியர்கள் அயல்நாடுகளுக்குக் குடியேறிப் போவதைப்பற்றிய கான்பரென்ஸ்.

நாளதுவரையில் இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்குப் பிழைப்புக்காகப் போகும் கூலியாட்கள் வெகுவாய் ஒப்பந்த ஏற்பாட்டின் பேரில் போய் அந்த அயல்நாடுகளில் வேலை செய்து வருகிறார்கள். ஒப்பந்தக் கூலி ஏற்பாடானது பல ஆக்ஷேபணைகளுக்கு இடமாக இருந்துவருகிறது. அதை ஒழித்து வேறுவித ஏற்பாட்டின்பேரில் கூலியாட்களை குடியேற விடவேண்டுமென்று எண்ணி, சென்ற மே மாஸத்தில் லண்டனில் ஒரு கான்பரென்ஸ் கூட்டப்பட்டது. இந்தியா மந்த்ரி ஆபீஸிலிருந்தும் குடியேற்ற நாட்டு மந்த்ரி ஆபீஸிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட உத்யோகஸ்தர்கள் அந்த கான்பரென்ஸில் மெம்பர்களாக இருந்தார்கள். அந்தக் கான்பரென்ஸில் ஒப்பந்த ஏற்பாட்டை ஒழித்து வேறுவிதமான ஏற்பாட்டில் இந்தியக் கூலியாட்களை ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பவேண்டுமென்று ப்ரேரித்திருக்கிறார்கள். அவர்கள் ப்ரேரித்திருக்கும் ஏற்பாட்டை இங்கே சுருக்கமாய் எழுதுகிறோம்.

### புது ஏற்பாடு.

புது ஏற்பாட்டின்படி ஒப்பந்தக் கூலி ஏற்பாடு முற்றிலும் ஒழிக்கப்படும். இந்தப் புது ஏற்பாட்டின் நோக்கமென்னவென்றால், கூலியாட்களுக்கு பண உதவிகளும் வேறு உதவிகளும் செய்து, அவர்களை, அவர்கள் குடியேறிப்போகும் நாடுகளில் ஸ்திரமாய்த் தங்கும்படிக்கு செய்வதும், அதனால் குடியேற்ற நாடுகளுக்கு வேண்டிய கூலியாட்கள் கிடைக்கும்படி செய்வதுமே. கூலியாட்கள் ஸ்திரமாய் அங்கு தங்குவதற்கு முன்னால், அவர்களை அவ்விடத்திய வாழ்க்கைக்கும் வேலைக்கும் ஒத்து நடக்கும்படி பயிற்றுவார்கள்.

குடியேறிப் போகிற கூலியாளுக்கு ஒருநாட்டில் போய்ச் சேரும்போது கடன் ஒன்றும் இராதபடி பார்த்துக் கொள்வார்கள். அவனை அந்த நாட்டுக்கு அழைத்துப் போனதற்கு ஏற்படும் செலவில் யாதொரு பாகமும் அவன் கொடுக்கவேண்டியதில்லை. அவன் இன்ன யஜமானனிடந்தான் வேலை செய்யவேண்டுமென்ற கட்டாயமும் கிடையாது. ஆனால் அவனுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து முதல் ஆறு மாஸத்துக்கு ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட யஜமானனிடம் அவன் வேலை செய்யவேண்டுமென்று மேற்சொன்ன கமிட்டியார் ப்ரேரித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவன் இஷ்டப்பட்ட யஜமானனிடம் போய் வேலை செய்து வரலாம். கூலியாட்கள் சாச்வதமாக அந்த நாட்டிலேயே தங்குவதாயிருந்தால் அவனுக்கு நிலம் கொடுக்கப்படுமாகையால், அதை உத்தேசித்து முதல் மூன்று வர்ஷத்துக்கு அவனை விவஸாய தொழில்களில் வேலை செய்யும்படி தூண்டுவார்கள்.

### இந்த ஏற்பாட்டுக்காகும் செலவு.

இந்த ஏற்பாட்டின்படி இந்தியாவிலிருந்து கூலியாள் தருவிப்பதற்கு ஏற்படும் செலவை அந்தந்தக் குடியேற்ற நாடுகளே ஏற்றுக் கொள்ளும். அந்தச் செலவுக்காக ஒரு நிதி ஏற்படுத்தி அந்த நிதிக்கு கூலியாட்களை வேலைக்கு வைத்துக்கொள்ளும் முதலாளிகளிடமிருந்து பணம் வஸூல் செய்யப்படும்.

### நிலம் கொடுத்து உதவுதல்.

'குடியேற்ற நாடுகளின் கவர்ன்மெண்டால் ஒப்புக்கொள்ளப்பட்ட முதலாளிகளிடம் 3 வர்ஷகாலம் வேலை செய்த இந்தியக் கூலியாட்

கள் அந்த நாட்டிலேயே தங்கியிருக்க இஷ்டப்பட்டால், அவர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்படும். அப்படிக் கொடுக்கப்படும் நிலங்கள் ஸாகுபடிக்கு லாயக்காயிராவிட்டால், அப்படி லாயக்காகும்படி செய்யவும், அந்த நிலங்களுக்கு பாசனம், வடிகால் முதலிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுக்கவும், நிலங்கள் காடாக இருந்தால் அவைகளை சீர்ப்படுத்திக் கொடுக்கவும், அந்த நிலங்களை கேட்கும் கூலியாட்களுக்குக் கொடுக்கவும், அவைகளை மேற்பார்வை செய்யவும் ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் ஒரு தனி இலாகா ஏற்படுத்துவார்கள். இந்த டிபார்ட்மெண்டார், நிலங்கள் பெறுவது ஸம்பந்தமாக கூலியாட்களுக்கு ஆலோசனை சொல்லுவார்கள். கூலியாட்கள் நிலம் பெறுவதில் யாதொரு இடையூறுமில்லாமல் வேண்டிய ஏற்பாடுகள் செய்வதும் இந்த டிபார்ட்மெண்டின் வேலையாகும்.

மூன்று வர்ஷம் வேலைசெய்த கூலியாட்களுள் இஷ்டப்படுகிறவர் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கருக்கு மேற்படாத நிலம் கொடுக்கப்படும். நிலம் பெற்ற பிறகு பத்து வர்ஷம் வரையில் கூலியாள் ஷை டிபார்ட்மெண்டின் உத்தரவில்லாமல் அதைப் பராதீனம் செய்வதும், அதை பந்தகம் முதலியன வைப்பதும் கூடாது. நிலம் கொடுக்கப்பட்ட பிறகு 2 வர்ஷத்துக்குள் அதைக் கூலியாள் சாகுபடி செய்யாவிட்டால் ஷை டிபார்ட்மெண்டாருக்கு அந்த நிலத்தைப் பிடுங்கிக்கொள்ள அதிகாரம் உண்டு.

வேலை செய்வதைப் பற்றிய நிபந்தனைகள்.

ஒவ்வொரு கூலியாளும் குடியேற்ற நாட்டில் போய்ச் சேர்ந்ததும், கவர்ன்மெண்டால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு முதலாளியிடம் 6 மாஸம் வேலை செய்யவேண்டும். கூலியாட்களை சரியாக நடத்தி வேலை வாங்கக்கூடியவரென்றும், கூலியாட்களுக்கு குடியிருப்பு வஸதிகளும் இதர வஸதிகளும் தக்கபடி செய்து கொடுக்கக் கூடியவரென்றும் தோன்றுகிற முதலாளிகளிடந்தான் கூலியாட்களை முதல் முதலில் வேலை செய்ய விடுவார்கள். முதல் 6 மாஸம் சேர்ந்தாற்போல ஒரு முதலாளியிடம் வேலை செய்ய வேண்டுமென்றாலும், கூலியாட்களின் ஸௌகர்யத்தை கவனித்து அவர்களை ரக்ஷிப்பதற்காக நியமிக்கப்படும் ப்ரொடக்டர் என்னும் உத்யோகஸ்தர், முதலாளி கூலியாட்களை சரியாக நடத்தவில்லையென்று எண்ணினாலும், வேறு தக்க காரணங்களிருந்தாலும், வேறு முதலாளியினிடம் வேலை செய்யச் சொல்லலாம். ஆறு மாஸமான பிறகு கூலியாள் இஷ்டப்பட்ட முதலாளியிடம் வேலை செய்யப் போகலாம். ஒரு யஜமானை விட்டு வேறு யஜமானனிடம் போகவேண்டுமானால், ஒரு மாஸம் நோட்டீஸ் கொடுத்தால் போதும். வேறு நிர்ப்பந்தங்கள் ஒன்றுமில்லை. வேலைக்குப் போவதில் ஒப்பந்தமாவது வேறு உடன்படிக்கையாவது ஒன்றும் கிடையாது. கூலியாள் வேலையைச் சரியாகச் செய்யாவிட்டால் யஜமானன் ஸிவில் கோர்ட்டு மூலமாக வழக்குத் தொடரலாமேயொழிய, க்ரிமினல் வ்யவஹாரம் நடத்த முடியாது. க்ரிமினல் தண்டனை ஒன்றும் கூலியாளுக்கு விதிக்கப்பட மாட்டாது.

கூலி.

கூலியாள்களுக்குக் குறைந்தது இவ்வளவு கூலி கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்படும். இந்தக் கூலி விகிதமானது ஜீவனச் செலவுக்குத் தக்கபடி ஏற்படுத்தப்படும். 5 வர்ஷத்துக்கு ஒரு தடவை கூலி விகிதத்தை கால தேச வர்த்தமானத்துக்குத் தக்கபடி மாற்றுவார்கள்.

கூலியானது பூராவும் கொடுக்கப்படும். பிடித்தங்கள் ஒன்றும் செய்யப்பட மாட்டாது.



குழந்தைகளுக்கு ஆகாரம்.

குடியேற்ற நாடுகளுக்கு இந்தியக் கூலியாள்களுடன்போகும் சிறுவர்களில் 11-வயதுக்குள்பட்டவர்களுக்கு சாப்பாடு இலவசமாகப் போட ஏற்பாடு செய்வார்கள். ஆகார திட்டத்தை கவர்ன்மெண்டாரே ஏற்படுத்துவார்கள். 5-வயஸுக்குள்பட்ட குழந்தைகளுக்கு, அவர்களின் பெற்றோர்கள் கவர்ன்மெண்டால் ஒப்புக்கொள்ளப்பட்ட முதலாளியிடம் வேலை செய்துவரும் வரையில், இனமாகப் பால் கொடுத்து உதவுவார்கள்.

கர்ப்பஸ்திரீகள்.

அதே மாதிரி கர்ப்ப ஸ்திரீகளுக்கும், வ்யாதியஸ்தர் முதலியவர்களைப் பராமரிக்கும் தாதிகளுக்கும், அவர்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட முதலாளிகளிடம் வேலை செய்து வந்தால், அவர்களுக்கு குறைந்தது ஆறுமாஸம் வரையில் இனமாக ஆகாரம் போடப்படும்.

வீடுகள்.

2) இந்தியர்களுக்குக் குறையாமல் கூலியாட்களை வேலைக்கு வைத்துக்கொள்ளும் முதலாளிகள் கல்யாணமான கூலியாள்களுக்கென்று தனி விடுதிகளும், கல்யாணமாகாத கூலியாள்களுக்கென்று தனி விடுதிகளும் கட்டிவைக்க வேண்டுமென்று சட்ட மேற்படுத்தவேண்டும். இதர முதலாளிகளையும் அவ்விதம் தனி விடுதிகள் ஏற்படுத்தும்படி கவர்ன்மெண்டார் கூடியமட்டும் வற்புறுத்த வேண்டும்.

நில உதவி.

விவஸாய வேலைகளில் அமர்ந்திருக்கும் வயதுவந்த ஆண் கூலியாட்களுக்கு, ஆறு மாஸம் வேலை செய்தபிறகு, அவர்கள் ப்ரியப்பட்டால், அவர்களுடைய ஸொந்த உபயோகத்துக்கும் ஸாகுபடிக்கும் வேண்டி 10 ஸெண்ட் தோட்ட நிலம் கொடுப்பார்கள். கூலியாட்கள் நன்றாய் வேலை செய்தால், அவர்களுக்கு கூடுமானால் ஸன்மானமாக 33 ஸெண்ட் நிலம் கொடுக்கப்படும்.

வைத்ய உதவி.

ஏற்கனவே உள்ள வைத்ய உதவிக்கான ஏற்பாடுகள் இனிமேலும் நடந்துவரும். இப்போதுள்ள ஏற்பாடுகளின்படி கூலியாட்கள் ஸாதாரண வைத்ய உதவி அடைவதோடு, ஹாஸ்பிடல்களில் செலவில்லாமல் தங்கியிருந்து வைத்யம் பார்த்துக்கொள்ளலாம் அல்லது மருந்து மாத்ரம் பெறலாம்.

கூலியாள்களை வேலைக்கு வைத்துக்கொள்ளும் முதலாளி.

மேலே சொன்னபடி கவர்ன்மெண்ட் உதவி பெற்று குடியேற்ற நாடுகளுக்கு போகும் இந்தியக் கூலியாள்களை வேலைக்கு வைத்துக் கொள்ள ப்ரியப்படும் முதலாளிகள் அந்தந்தக் குடியேற்ற நாடுகளில் உள்ள "ப்டொடக்டர் அப் இமிக்ரண்ட்ஸ்" என்னும் உத்யோகஸ்தருக்கு மனுப்போடவேண்டும். அவர்கள் கூலியாட்கள் விஷயமாகச் செய்யவிருக்கும் ஸௌகர்யங்களும் வஸதிகளும் கவர்ன்மெண்டாருடைய திட்டங்களுக்கு ஒத்திருந்தால், அந்த முதலாளிகளின் பெயர்களை ஒரு ரொஜிஸ்டரில் தாக்கல் செய்துகொள்ளுவார்கள். இவ்விதம் தெரிந்தெடுக்கப்பட்ட முதலாளி, பணங் கொடுத்து லைஸென்ஸ் பெற்று, அதன்மேல்தான் இந்தியக் கூலியாட்களை வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும். கவர்ன்மெண்ட் திட்டத்தின்படி கூலி, வேலை, வைத்ய உதவி, குடியிருப்பு வஸதிகள் ஆகிய இவைகள் ஏற்படுத்திக் கொடுக்காத முதலாளி இந்தியக் கூலியாள்களை வேலைக்கு வைத்துக் கொண்டால், அவரை "ப்ரொடெக்டர் அப் இமிக்ரண்ட்ஸ்" என்னும் உத்யோகஸ்தர் ப்ராஸிக்யூட் செய்யலாம். முதலாளிக்கு அபராதம் போடப்படும்.

இந்தியாவில் கூலியாள்கள் சேகரிப்பது விஷயமாய் மேற்சொன்ன கான்பரென்ஸில் செய்யப்பட்டிருக்கும் ப்ரேரணைகளைப்பற்றியும், அயல் நாடுகளுக்குப்போன கூலியாட்கள் இந்தியாவுக்குத் திரும்பி வருவது விஷயமாயும், மற்றவைகள் விஷயமாகவும் செய்திருக்கும் ப்ரேரணைகளையும் அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

## THE PADSHA'S BRIDE.

## பாதுஷாவின் மணமகள்.

(புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையில் 352-ம் பக்கத்தொடர்ச்சி.)

கல்யாணம் செய்துகொள்வதற்கு முன் பெண்ணுக்கு நல்ல ஆடை ஆபரணங்களை அனுப்புவது ரஜபுத்ரர்களுடைய வழக்கமாகையால், பாதுஷாவும், தான் கல்யாணம் பண்ணிக்கொள்ளவிருந்த லாலாவுக்கு தன் அந்தஸ்திற்கும் கௌரவத்திற்கும் ஏற்றபடி வெகுமதிகளை அனுப்பினான். பர்பத் ஸிங்கும் அவைகளை மறுக்காமல் வாங்கி வைத்துக்கொண்டான். காமத்தினால் கண்ணிழந்திருந்த பாதுஷா எப்பொழுது விவாகம் முடியுமென்று பரபரப்புடன் இருந்தான். இப்படியிருக்கும் ஸமயத்தில் பர்பத் ஸிங் ஆஹமீர் கோட்டைக்குப் போய்விட்ட செய்தி பாதுஷாவுக்கு எட்டியது. உடனே அவன் அநேகம் போர்வீரர்களோடு அந்தக் கோட்டையை நோக்கிப் போனான். பர்பத் ஸிங் தன் பெண்ணை ஸமாதானமாகக் கொடுத்துவிட்டால், அந்தப் போர்வீரர்களை முன்னும் பின்னும் அலங்காரமாகப் போக உபயோகிக்கலாமென்றும், கொடுக்க மறுத்தால் அவர்கள் உதவியால் போர்செய்து கோட்டையைப் பிடித்து லாலாவைக் கொண்டு வந்து விடலாமென்றும் பாதுஷா எண்ணியிருந்தான். ஆனால் உயிர் போவதாயிருந்தாலும் லாலாவை விட பர்பத் ஸிங்குக்கு மனமில்லை. படகிலிருந்த பாடகர்களின் வர்ணனை அவன் மனதில் இப்படிப்பட்ட தீமானத்தை உண்டுபண்ணிவிட்டது. பட்டத்து யானையின்மேல் கட்டியிருந்த வெள்ளி அம்பாரியில் பாதுஷா வெகு உல்லாஸமாகவும் கம்பீரமாகவும் உட்கார்ந்து போனான். மணமகளாகிய லாலாவை அழைத்து வருவதற்காக இன்னொரு யானையையும் அவன் தன்னோடு கொண்டுபோனான்.

அஹமத்ஷா ஆஹமீர் கோட்டை வாசலுக்கு முன்னே தன் பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தான். கோட்டைவாசற் கதவுகளெல்லாம் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, அவைகளைத் திறக்கும்படி பாதுஷா உள்ளே இருந்த ரஜபுத்ரர்களுக்கு உத்தரவு செய்தான். ஆனால் அவர்கள் திறக்கவுமில்லை, பதில் பேசவுமில்லை. தனக்குக் கீழ்ப்பட்டவர்கள் தன்னுடைய கட்டளையை மீறி நடக்கிறார்களே என்று பாதுஷாவுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அவன் என்ன செய்வதென்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில், கோட்டையிலிருந்து எய்த ஓர் கூர்மையான அம்பு அவனுடைய மகுடத்தின்மேல் விழுந்தது. அந்த அம்பில் ஒரு கடிதம் கட்டியிருந்தது. அதில் "பாதுஷாவே! இந்த அம்பு உன் மகுடத்தில் படும்படி எய்யும் திறமையுடைய எனக்கு அது உன் மண்டையைப் பிளந்துகொண்டு போகும்படி எய்வது கஷ்டமான கார்யமல்ல. ஆயினும் உன்னை அநாவச்யமாகக் கொல்ல என் மனம் இடந்தரவில்லை. கேவலமாகிய நீ ரஜபுத்ர வம்சத்தில் பிறந்த லாலாவை விவாஹம் செய்துகொண்டு எங்கள் வம்சத்தைக் கெடுக்க நினைப்பது மூடத்தனம். இதை எச்சரிக்கையாக வைத்துக்கொண்டு அந்த அந்யாய எண்ணத்தை நீக்கி விடு" என்று எழுதி இருந்தது.

லாலாவின்மேல் மோகங் கொண்டிருந்த பாதுஷாவின் கண்களில் கோபாக்னி வீசிற்று. ஸாதாரணமாக ஒருவன் தன்னை இழிவாகப் பேசியிருந்தாலும் அவனுக்கு அவ்வளவு கோபம் உண்டாயிராது. தன் உயிருக்கு மேலாகக் கருதியிருந்த லாலாவை மறக்கும்



படி சொல்லிய ரஜபுத்ர வீரர்களின் மேல் அவனுக்கு அடக்கமுடியாத கோபம் உண்டாயிற்று. இப்படியிருக்கையில் கோட்டைக்குள் இருந்தவர்கள் லாலாவுக்கென்று பாதுஷா வெகுமதியாக அனுப்பியிருந்த உயர்ந்த பட்டாடைகளை மூட்டையாகக் கட்டி, அவன் யானையின்காலண்டை வந்து விழும்படி கோபத்துடன் வீசி யெறிந்தார்கள். இவைகளைக் கண்டவுடன் இன்னும் என்ன அவமானமும் அபாயமும் ஸம்பவிக்குமோ வென்று பயந்து பாதுஷாவோடிருந்த போர்வீரர்கள் தாங்கள் நின்றிருந்த இடத்தைவிட்டு அப்பாற் போய்ப் பதுங்கினார்கள்.

பாதுஷா லாலாவுக்கு ஆடையாபரணங்களோடு மிக்க த்ரவ்யமும் அனுப்பியிருந்தான். அந்த த்ரவ்யத்தைக் கொண்டு பர்பத் ஸிங் வேண்டிய ஆயுதங்களையும் ஸாமான்களையும் வாங்கி வைத்துக்கொண்டு கோட்டைக்குள் பத்ரமாக இருந்தான். சண்டைசெய்து கோட்டைக்குள் ப்ரவேசிப்பது முடியாதென்று ஏற்பட்டபடியால், முற்றுகை போட்டு அதைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று பாதுஷா தீர்மானம் பண்ணினான். ஆகவே வெளியிலிருந்து ஒருவரும் கோட்டைக்குள் போக முடியாதபடி பாதுஷாவின் போர் வீரர்கள் கோட்டையை முற்றுகை செய்தார்கள். கோட்டைக்குள் போவதற்காக சுவர்களின்மேல் மஹம்மதியர்கள் ஏணிகளை வைத்து ஏறுவார்கள். உள்ளே இருந்த ரஜபுத்ரர்கள் அவர்கள் ஏணியின் உச்சியில் வரும் வரையில் சும்மா இருந்து பிறகு ஏணியோடு அவர்களைக் கீழே தள்ளிவிடுவார்கள்; பெரிய கற்களை எடுத்து வெளிப்புறத்திலிருக்கும் போர் வீரர்களின்மேல் எறிந்து கொல்லுவார்கள். முற்றுகை இம்மாதிரியாக இரண்டு மூன்று மாஸம் நடந்தது.

கோட்டைக்குள் பத்ரப்படுத்தியிருந்த உணவுப்பொருள்கள் குறைந்துகொண்டே வந்தபடியால், இனி உள்ளே இருக்கமுடியாதென்று ரஜபுத்ரர்கள் அறிந்துகொண்டார்கள். உயிரை இழப்பதாயிருந்தாலும், பாதுஷாவை எதிர்ப்பதேயல்லாமல், அவனுடைய இஷ்டத்திற்கு இணங்கி லாலாவைக் கொடுத்துத் தங்கள் கௌரவத்தை இழக்கக் கூடாதென்று அவர்கள் உறுதி செய்து கொண்டார்கள். உணவெல்லாம் ஆகிவிட்டால், தாங்களெல்லோரும் கோட்டையை விட்டு வெளியே வந்து பாதுஷாவின் போர்வீரர்களோடு சண்டை செய்ய வேண்டி வருமாகையால் தங்கள் மனைவி மக்களை மஹம்மதியரிடமிருந்து காக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணங்கொண்டார்கள். இப்படிப்பட்ட ஸமயங்களிலெல்லாம் அவர்கள் பெரிய தீயை மூட்டி, அதில் ஸ்த்ரீகளையும் குழந்தை குட்டிகளையும் ஆடையாபரணங்களையும் போட்டு எரித்து விடுவார்கள். இந்த வழக்கத்திற்கு ஜோஹார் என்று பெயர்.

பர்பத் ஸிங் முதலியோர் தங்கள் மனைவி மக்களைத் தீயில் எறிந்துவிட்டு சண்டை செய்ய வெளிக்கிளம்பி விட்டார்கள். சில ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்குத் துணையாக நின்று சண்டை செய்ய ஆயுதபாணிகளாக வெளியில் வந்தார்கள். ரஜபுத்ரர்கள் 3000பேருக்குக் குறைவாகவே இருந்தார்கள். மஹம்மதியர் 10,000பேர் இருந்தார்கள். ஆயினும் எப்படியும் இறப்பது நிச்சயமென்று கருதிய ரஜபுத்ரர்கள் வெகு தைர்யத்துடன் சண்டை செய்தார்கள். அவர்களுக்குமுன் இருந்த மஹம்மதியர்கள் பின் வாங்கிக் கொண்டே இருந்தார்கள். ரஜபுத்ரர்கள் எய்த அம்புகளினால் அநேக மஹம்மதியர்கள் மடிந்துபோனார்கள். ரஜபுத்ரர்களும் கொஞ்சங் கொஞ்சமாக மடிந்துகொண்டே வந்தார்கள்.

பர்பத் ஸிங்கின் குமாரனாகிய ராம் ஸிங் மெதுவாகப் பாதுஷா ஏறியிருந்த யானையண்டை வந்து அம்பாரியைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்து விட்டான். உடனே பாதுஷா அம்பாரியோடு கீழே விழுந்தான். ராம் ஸிங்கும் இன்னும் சிலரும் அவனைக் கொல்ல முயன்றார்கள். அதற்குள்ளாக அஹமத்ஷா கத்தியைக் கையில் உருவிக்கொண்டு அவர்களை எதிர்த்தான். அதைப் பார்த்திருந்த பாதுஷாவின் போர்வீரர்கள் அங்கே வந்து சூழ்ந்து கொண்டார்கள். சண்டை வெகு நேரம் நடந்தது. ரஜபுத்ரர்கள் அநேகமாய் மாண்டுபோனார்கள். பர்பத் ஸிங்கும் இறந்துபோனான். ராம்ஸிங் மீதியாக இருந்த வீரர்களோடு சண்டைசெய்து வந்தான். கடைசியில் அவனும் மற்றவர்களும் கொலையுண்டார்கள்.

ரஜபுத்ரர்கள் எல்லோரும் மடிந்த பிறகு பாதுஷா லாலாவை எடுத்து வரவேண்டுமென்னும் ஆவலுடன் கோட்டைக்குள் புகுந்தான்.

அங்கே மனுஷ ஸஞ்சாரமில்லாதிருந்ததை யும், எல்லோரும் விழுந்து மடிந்த நிலையும் கண்டவுடன் அவனுக்குப் பெருந் திகில் உண்டாயிற்று. தான் லாலாவுக்காக இவ்வளவு பேரைக் கொன்றதும் வீணாயிற்றே என்று அவன் வ்யஸனமுற்றான்.

கோட்டையை விட்டு வெளியே வந்து தன் பட்டணம் போன சிலநாட்களுக்குப் பிறகு பர்பத்ஸிங் லாலாவைத் தன் ஸ்நேகிதனாகிய ஒரு ரஜபுத்ர வீரனிடம் கோட்டையை முற்றுகை போடுவதற்கு முன்னமே ஒப்புவித்திருந்தானென்று பாதுஷாவுக்குத் தெரியவந்தது. ஆகவே அவன் சற்றுமுன்னே இழந்த ஆசையைத் திரும்பவும் கைக்கொண்டு, லாலாவைத் தன் வசம் அனுப்பவேண்டுமென்று அந்த ரஜபுத்ர வீரனுக்கு உத்தரவு அனுப்பினான். அவனும் பர்பத் ஸிங்கைப் போலவே மனவுறுதி உடையவனாகையால், தன் உயிர் போனாலும் தன் பாதுகாப்பிலிருந்த லாலாவைப் பாதுஷாவுக்குக் கொடுப்பதில்லையென்று தீர்மானித்துவிட்டான். ஆனால் லாலாவோ தன் நிமித்தம் அவன் உயிரை இழப்பது அனாவச்யமென்றும், தனக்குப் பாதுஷாவை விவாஹம்செய்துகொள்ள ஸம்மதமுண்டென்றும் தெரிவித்தாள். அதைக் கேள்வியுற்ற அஹமத்ஷா ஸந்தோஷத்தினால் மெய்ம் மறந்தவனாகி மோக்ஷ லோகத்தி லிருப்பதாகவே எண்ணிக்கொண்டான். பாதுஷா தனக்கு அனுப்பியது போலவே லாலாவும் அவனுக்கு விலையுயர்ந்த ஆடைகளை விவாஹ வெகுமதியாக அனுப்பினாள். இதைக் கேள்வியுற்ற ரஜபுத்ர வீரர்களெல்லாம் அவள்மேல் கோபங்கொண்டு, அவள் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பென்று இகழ்ந்து பேசினார்கள்.

பாதுஷா தன் விவாஹத்திற்கு வேண்டியவைகளை உடனே ஸித்தம் செய்யும்படி கட்டளை இட்டான். விவாஹம் ஏரிக்கரையின்மேல் இருந்த அரண்மனையிலேயே நடக்கவேண்டுமென்று அவன் ஏற்பாடு செய்தான். ரஜபுத்ர ஆசாரத்தின்படியே தன் கல்யாணம் நடக்கவேண்டுமென்று கருதி, பாதுஷா அநேக ப்ராம்மணர்களை வரவழைத்தான். விவாஹத்திற்கு ப்ரபுக்களும் சிற்றரசர்களும் திரள்திரளாக வந்து கூடினார்கள். பாதுஷா கேவலமான பெண்ணை விவாஹம் செய்துகொள்ளுகிறானென்று மஹம்மதியர்கள் மறைவில் இகழ்ந்து பேசினார்கள். கல்யாணம் யாதொரு தடையுமின்றி நிறைவேறிவிட்டது. பாதுஷா லாலாவோடு வெகு ஸந்தோஷத்துடன் உட்கார்ந்திருந்தான்.

விவாஹம் முடிந்தவுடன் லாலா பாதுஷாவைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு ஒரு தாழ்வாரத்துக்கு வந்தாள். அங்கிருந்து பார்த்தால் ஏரியும் அதைச் சார்ந்துள்ள இடமும் நன்றாகத் தெரியும். பாதுஷாவைப் பார்க்கவேண்டுமென்று ஏரிக் கரையிலும் அதன் பக்கத்திலுள்ள இடத்திலும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் நின்றிருந்தார்கள். அப்பொழுது லாலா பாதுஷாவைப் பார்த்துச் சிரித்து "இப்பொழுது நீங்கள் வெகு ஸந்தோஷத்துடன் இருக்கிறீர்கள், நமக்கு எப்பொழுது ஸந்தோஷம் அதிகரிக்கிறதோ அப்பொழுது கடவுளுக்கு நம்மீது பொறாமை உண்டாகிறது. சற்று நேரத்திற்குள் நாம் இறந்துவிட்டாலும் இறந்துவிடுவோம். நம்முடைய காயம் நிலையில்லாதது. தங்கள் குடிஜனங்கள் ஆவலோடு அதோ நிற்கிறார்கள். அவர்களை இப்பொழுதே கண்குளிரப் பாருங்கள்" என்றாள். பாதுஷா காமப்பித்து பிடித்திருந்தமையால், அவள் சொல்லியதன் கருத்தை அறியவில்லை. அவன் வெளிப்புறத்தில் இருந்த ஜனங்களைப் பார்த்துக்கொண்டே வெயில் படும்படியான இடத்தில் நின்றிருந்தான். ஸூர்ய உஷ்ணம் பட்டவுடன் பற்றி எரியும்படியாக லாலா தான் அவனுக்கு அனுப்பியிருந்த ஆடையில் சில விஷமுள்ள வஸ்துக்களைச் சேர்த்திருந்தபடியால் அது பற்றி எரிய ஆரம்பித்தது. பாதுஷா பயந்து இங்கும் அங்கும் ஓடினான். ஓடியும் ப்ரயோஜனப்படவில்லை. சற்று நேரத்துக்குள் அவன் பிணமாகக் கீழே விழுந்துவிட்டான். தன் தகப்பனையும் ஸஹோதரனையும் தன் வம்சத்தையும் மற்றுமுள்ள ரஜபுத்ரர்களையும் அந்யாயமாகக் கொன்ற பாவியைத் தான் ஸமயஸூசகத்தால் கொன்றதை எண்ணி ஸந்தோஷித்தவளாகி, லாலா அரண்மனையின் மேல்மாடியிலிருந்து ஏரியில் குதித்து உயிரிழந்தாள். அவளுடைய தைர்யமும் வைராக்யமும் யாவரும் நன்கு பாராட்டத் தக்கவை. சிற்றரசர்களை நடுங்க வைக்கும் பராக்ரமமுள்ள பாதுஷாவைக் கொன்ற லாலாவிடம் இருந்த வீரத்தனம் அவளுக்கு ஆபரணமாக விளங்கியது.

# REVIEW OF THE PRESS.
# பத்ரிகை ஆராய்ச்சி.

## DROWNING.
### தண்ணீரில் மூழ்கிப் போதல்.

இது விஷயமாக 'வைத்திய கலாநிதி'யில் ஒரு வ்யாஸம் வெளியாகியிருக்கிறது.

ஜலத்தில் விழுந்து அமிழ்ந்துவிடுவதால் ஏற்படும் தீமைகள் பல வகைப்படும்.' ஜலம் கொஞ்சம் சூடாயிருந்தால் முக்யமாய் ஸம்பவிக்கக்கூடிய தீங்கு மூச்சடைப்பு உண்டாவதேயாம்; ஆனால் ஸாதாரணமாய் எங்கும் ஸம்பவிக்கக்கூடிய ரீதியில், ஜலம் தேஹத்திலுள்ள உஷ்ணத்தைக் கவர்ந்திழுத்துக்கொள்ளக்கூடிய குளிர்ச்சியுடையதாயிருந்தால், மிகவும் பலமான அதிர்ச்சியினால் சரீரத்திற்கு ஒடுக்கம் உண்டாகும். மேலும் ஜலத்தில் விழுகிறவன் பலமான மூர்ச்சையடைந்து இறந்துவிடலாம்; அல்லது ரொம்ப கடுமையான ப்ரமை தோன்றியும் மரணம் ஸம்பவிக்கலாம். மிகவும் உயரத்திலிருந்து விழுந்தால், ஜலத்திலாவது கற்களிலாவது கரையோரங்களிலாவது வேகமாக மோதிக்கொண்டும் மரணமுண்டாகலாம். திடீரென்று ஜலத்தில் விழுந்து அமிழ்ந்து விடுகிறவர்களுக்கு முன்கூறிய விதமான தீங்குகளில் ஏதாவது ஒன்று ஸம்பவிப்பது வழக்கம்.

ஜலத்தில் மூழ்கியவர்களுக்கு உடனே செயற்கை ச்வாஸ முறையைக்கொண்டு ச்வாஸ வேலையை உண்டாக்கவும் துரிதப்படுத்தவும் வேண்டும்; ச்வாஸம் சீக்ரம் தோன்றாவிட்டால், விடா முயற்சியோடு இந்த முறையைக்கொண்டு ச்வாஸத்தை உண்டாக்க வெகு நேரம் ப்ரயத்தனம் பண்ணவேண்டும். இது விஷயமாய் 'ராயல் ஹ்யூமென் ஸொஸைடி' என்னும் ஸங்கத்தாரால் அடியில் வருமாறு விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

உடனே கைதேர்ந்த ஒரு வைத்யனை அழைத்து வருவதற்கு மனிதனை அனுப்பவேண்டும். துப்பட்டிகளும், உலர்ந்த வேறு துணிகளும் உடனே கொண்டு வரவேண்டும். பிணியாளியை எவ்வளவு நல்ல காற்றோட்டமுள்ள விடத்தில் விடலாமோ, அவ்வளவு நல்லவிடத்தில் விடவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் மூழ்கின மனிதனை கால் கீழே நிற்கும்படி நிறுத்தக்கூடாது.

இது ஸம்பந்தமாக நமது நோக்கத்தில் அவச்யம் இருக்கவேண்டிய மிகவும் முக்யமான இரண்டு விஷயங்கள் உண்டு; முதலிலும் உடனேயும் கவனிக்கக்கூடியது மூச்சடைப்புக்குக் காரணங்களைப் போக்கி தாராளமாய் ச்வாஸம் விடுவதற்கான உபாயங்களைச் செய்வது; ச்வாஸம் விடுவதற்கு ஆரம்பித்ததும், இரண்டாவதாகச் செய்யக்கூடியது உடலில் சூட்டையும் ரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கச் செய்யும் முயற்சியாகும்.

முதல் விதி:—ஜலத்தில் மூழ்கிய மனிதனை ஒரு ஒழுங்கான நிலைமையில் அமர்த்துவது:—மூழ்கினவனை மேடு பள்ளமில்லாத ஸமமான ப்ரதேசத்தில் மல்லாந்து படுக்க வைக்கவேண்டும்; தலைப்பக்கம் சற்றுத் தாழ்ந்தும் மற்ற உடம்பு சற்று உயர்ந்துமிருக்கும்படி அமர்த்துவது தரம். ஒரு மெல்லிய தலையணையையாவது, மடித்த உடுப்பு அல்லது துணிகளையாவது, தோள்களைச் சற்று உயர்த்தி அவற்றின்கீழ் வைக்கவும். கழுத்திலும் மார்பிலும் ஏதாவது கட்டுகள் அல்லது உடுப்புகள் இருந்தால், அவற்றை விலக்கி விடவேண்டும். சுற்றிலும் அநாவச்யமாகச் சேர்ந்திருக்கும் ஜனக்கூட்டத்தை அவ்விடத்தில் விடாமல் விலக்கிவிடவும்.

இரண்டாவது விதி:—ச்வாஸாசயத்தினுள் தாராளமாய் வாயு ப்ரவேசிக்கவேண்டிய முயற்சிகளைச் செய்வது:—இதற்காகப் பிணியாளியின் வாயையும் நாசி த்வாரங்களையும் ஒருவித அடைப்புமின்றி சுத்தம் செய்யவும்; வாயை நன்றாகத் திறந்துவைக்கவும்; நாக்கை வெளிப்புறமாயிழுத்துப் பிடிக்கவும்; கையில் வஸ்த்ரத்தை இரண்டு மூன்று மடிப்பாகச் சுற்றிக்கொண்டு நாக்கை கீழ்ப்பக்கமாய் இழுத்துப் பிடித்துக்கொண்டு, மேல் வாயையும் உயர்த்தி மேலுக்கு இழுத்தாற்போல் பிடிக்கவேண்டும். நாக்கு கையில் பிடிபடாதவரையில் பிணியாளியை முதுகுப் பக்கமாய்ப் படுக்கவைக்கக்கூடாது. ஒரு துணியைப் பந்துபோல் சுற்றி, அதைத் தரையில் வைத்து, அதன்மேல் இரைப்பைக்கு நேருள்ள வயிறு அழுந்தும்படி பிணியாளியைக் கவிழ்த்துப் பிடிக்கவும்; அவ்விதம் கவிழ்த்த பிறகு இரைப்பையில் சேர்ந்துள்ள ஜலம் வெளியில் கக்கும்படி, பின்னால் முதுகைச் சற்றுக் கீழே அழுத்

தவும்; பிறகு ச்வாஸாசயங்களில் புகுந்துள்ள ஜலத்தை வெளிப்படுத்த, சற்றுத் தலைகீழாகச் சாய்க்கவும். உடனே, நாக்கைக் கையினால் அழுத்தமாகப் பிடித்துக்கொண்டே பிணியாளியைப் புரட்டி நிமிர்த்திவிடவேண்டும். நாக்கை ஒரு ரப்பரால் அடிவாயோடு இழுத்துக் கட்டிவிடுவதும் நலம்.

மூன்றாவது விதி:—செயற்கை ச்வாஸத்தை உண்டுபண்ணுவது:—அதாவது பிணியாளி மூச்சு விடுவதற்கு முடியாத நிலைமையில் இருக்கையில் பலவித உபாயங்களால் ச்வாஸம் விடுவதுபோல் முயலச்செய்தல். இதில் (1) முதலில் மூச்சை உள்ளுக்கு வாங்கும்படி செய்விக்கவேண்டும். இதற்காகப் பிணியாளியின் தலைப்பக்கத்தில் சிகித்ஸை செய்பவன் உட்கார்ந்துகொண்டு, பிணியாளியின் இரண்டு கைகளையும் பிடித்து, அவ்விரண்டையும் அவனுடைய தலைக்கு இருபாரிசங்களை நோக்கி இழுத்து இரண்டு ஸெகண்டு வரையில் உயர்த்தினாற்போல் மெதுவாகப் பிடித்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் விலா எலும்புகள் உயர்ந்து எழும்ப, ஆகவே மார்பறை விசாலிக்க, ச்வாஸாசயங்களுக்குள் வாயு ப்ரவேசிக்க ஸௌகர்யம் ஏற்படும். (2) பிறகு மூச்சு வெளியாவதைத் தூண்டுதல். மூச்சு வாங்குவதற்காகக் கைகளை இரண்டு ஸெகண்டு வரையில் உயர்த்திப் பிடித்த பிறகு, தக்ஷணமே அக்கைகளைக் கீழே திருப்பி மடித்து, மார்பின் பக்கங்களில் மெதுவாக அழுத்தி இரண்டு ஸெகண்டு வரையில் பிடித்துக்கொள்ளவும். இதனால் விலா எலும்புகள் மார்பறையை அழுத்தி, ச்வாஸாசயங்களிலுள்ள அசுத்த வாயு வெளியாவதற்கு ஸௌகர்யம் ஏற்படுகிறது. (3) பிறகு முன்கூறிய விதமான இரண்டு வகையான செயல்களையும் தொடர்ந்து நிறைவேற்றவேண்டும். முன்கூறியவிதமாய் பிணியாளியின் கைகளைத் தலைப்பக்கமாகவும் மார்புப் பக்கமாகவும் இரண்டு ஸெகண்டுக்கு ஒருமுறை திருப்பித் திருப்பி அசைத்து, ஒரு நிமிஷத்திற்குப் பதினாறு தடவை வீதம் ஜாக்ரதையாகவும் ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் இந்தச் செயற்கை ச்வாஸ வேலையை நிறைவேற்றவும்; அதாவது பிணியாளி மெதுவாக தனக்குத்தானே மூச்சு விடுவதற்குத் திறமையுள்ளவனாக ஆகிறவரையில் இதைச் செய்யவேண்டும். இந்த முறையினால் ச்வாஸாசயங்களில் சுத்தவாயு ப்ரவேசிப்பதற்கும் அவற்றிலிருந்து அசுத்தவாயு வெளிவருவதற்கும் ஸௌகர்யம் ஏற்படுமாகையால், இதனால் இயற்கை ச்வாஸவேலையினால் உண்டாகக்கூடிய ப்ரயோஜனம் பெரும்பாலும் ஸம்பவிப்பதுண்டு.

நான்காவது விதி:—ச்வாஸ வேலையைத் தூண்டுதல்:—முற்கூறிய முறைகளைச் செய்து வருகையில், மூக்குப்பொடி யென்னும் நஸ்யத் தூளை மூக்கில் போட்டாவது, நவாஸார உப்பின் காரமான வாஸனையை முகரச் செய்தாவது, ஏதேனும் இறகுமுனையினால் தொண்டையைத் துளாவியாவது ச்வாஸ வேலையைத் தூண்டவும். மார்பையும் முகத்தையும் வெகு சுறுசுறுப்பாக வலிவுடன் தேய்த்து, சூடுண்டாக்கி, குளிர்ந்த ஜலத்தையும் உஷ்ண ஜலத்தையும் மாற்றி மாற்றி முகத்திலும் மார்பிலும் வீசித் தெளிக்கவும். செயற்கை ச்வாஸ வேலை நடந்து வருகையில், கம்பளித் துணியினால் உடம்பை, முக்யமாய் கால்களை, நன்றாகத் தேய்க்கலாம்.

மேற்கூறிய முயற்சிகளை நாடி துடிக்கவும், இயற்கை ச்வாஸம் உண்டாகவும் ஆரம்பிக்கிற வரையிலும் செய்யவேண்டும்; ப்ராணாபாயம் நேர்ந்திருப்பதாக ஸந்தேஹமுண்டான போதிலும், முற்கூறிய முயற்சிகளை ஒரு தகுந்த வைத்ய ஸஹாயம் கிடைக்கும் வரையிலுமாவது, அல்லது குறைந்தது ஒருமணி ஸாவகாசமாவது நடத்தவேண்டும். விஸ்கி, அல்லது ப்ராந்தியை இரண்டு ட்ராம் வீதம் சிறிது வெந்நீரில் கலந்து ஆஸன த்வாரத்தின் வழியாய் அரைமணிக்கு ஒரு தடவை வீதம் உள்ளே பீச்சலாம்.

செயற்கை ச்வாஸ வேலைக்கான முயற்சியினால் இயற்கை ச்வாஸம் உண்டானதாகத் தெரிந்ததும், உடல் சூட்டையும் ரத்த வோட்டத்தையும் வ்ருத்தி செய்ய முயலவேண்டும். இதற்காகப் பிணியாளியைக் கம்பளித் துணியினால் அல்லது துப்பட்டிகளால் போர்த்திவிடவும். கைகால்களைக் கீழிருந்து மேற்பக்கமாக வெகு சுறுசுறுப்பாகத் தேய்க்கவும். புட்டிகளில் வெந்நீரை ஊற்றி கால் பக்கங்களிலும், வயிற்றுப் பக்கங்களிலும் வைக்கவும். மார்பின்மேல் கம்பளியை வெந்நீரில் நனைத்து ஒற்றடமிடவும். விழுங்கக்கூடிய சக்தி சிறிது உண்டாயிருந்தால், உடனே சூடான ஜலத்தையாவது, காப்பியையாவது, சிறிது ப்ராந்தியை ஜலத்தில் கலந்தாவது உட்கொள்ளச் செய்யவும். பிணியாளியைப் படுக்கையில் ஸுகமாகப்



படுக்கவிட்டு, நன்றாய் நித்ரைபோவதற்கான வஸதிகளை அமைக்கவேண்டும். மூச்சு நன்றாக விடமுடியாமலிருந்தால், கடுகை அரைத்து மார்பிலும், முதுகிலும் சற்றுநேரம் பற்றுப்போட்டு வைப்பதால் குணமுண்டாகும்.

## EVIL EFFECTS OF COMMUNAL GRAZING.

### கால்நடைகளை ஊர்மந்தையுடன் மேயவிடுவதன் கேடுதிகள்.

ஸமீபத்தில் வெளிவந்த 'ஜனோபகாரி' யில் கால்நடைகளை ஊர்மந்தையுடன் மேயவிடுவதால் ஏற்படும் கெடுதிகளைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

ஸாதாரணமாய் க்ராமங்களில் மந்தை மாடுகள் மேய்வதற்குப் பொதுவான சில இடங்கள் உண்டு. அங்கு மந்தைமாடுகள் காலைமுதல் ஸாயங்காலம்வரையில் மேய்ந்துவருவது வழக்கம். மேய்ச்சல் தரைகளிலிருக்கும் புல் முதலியன எத்தனை மாடுகளுக்குப் போதுமோ அதைவிட அதிகமான மாடுகள் வந்து மேய்வதால், மாடுகளுக்குப் போதுமான தீனி கிடைப்பதில்லை. அவைகள் எப்பொழுதும் இளைத்தேயிருக்கின்றன. இந்த மேய்ச்சல் தரைகளைப் பாதுகாக்க எவரும் இல்லாததனாலும், அவை மாடுகளால் மிதிக்கப்பட்டு தரை கெட்டியாகிவிடுவதாலும், புல் அதிகமாய் முளைப்பதில்லை. இன்னும், மந்தைமாடுகள் மேய்ச்சலுக்குப் போகுமிடங்களில் அவைகளுக்கு சுத்தமான தண்ணீர் போதுமானவளவு குடிப்பதற்குக் கிடைப்பதில்லை.

மந்தை மாடுகள் இளைத்துப் போவதற்கு மற்றொரு காரணம் உண்டு. மாடுகளைக் காலைவேளையில் மேயவிட்டு வெயில் வேளையில் இளைப்பாறவிட்டால், அவற்றின் தேகம் நல்ல நிலைமையிலிருக்கும். அப்படிக்கில்லாமல் அவைகள் காலை பத்துமணிக்குமேல் வெயில் வேளையில் மேயப்போவதால், ச்ரமபரிகாரம் செய்துகொள்ள நேரமில்லாமலும், பல ஸமயங்களில் ஸாயங்காலம் வரையில் குடிக்கத் தண்ணீரில்லாமலும் கஷ்டப்படுகின்றன.

பசு மாடுகள் கவலை மாடுகளைப்போல் அவ்வளவு வேலை செய்யாவிட்டாலும், போதுமான அளவு ச்ரமபரிகாரம் செய்துகொள்ள வேண்டியது அவச்யம். கறவை மாடுகளை அவற்றின் கன்றுகளோடு மந்தைமாடுகளுடன் மேய்ச்சலுக்காக ஓட்டக்கூடாது. அப்படி ஓட்டுவதனால், பசுக்களுக்கு வேண்டியவளவு ச்ரமபரிகாரம் கிடைக்காமல் பாலின் அளவு குறைந்துவிடுகிறது. நாம் பல பசுக்களை வைத்திருப்பதைக் காட்டிலும், செம்மையாய்ப் போஷிக்கப்பட்ட இரண்டு மூன்று பசுக்களை வைத்திருந்தால், இவை அவைகளைக்காட்டிலும் அதிகமான அளவு பால்கொடுக்கும்; புஷ்டியான கன்றுகளையும் அடையலாம். குறைந்த தீனியை உட்கொள்ளும் பசுவின் சாணத்தைக்காட்டிலும், நன்கு போஷிக்கப்பட்ட பசுவின் சாணம் எருவுக்கு நல்லது.

ஒவ்வொரு மந்தையிலும் பருவம் வராத காளைகள் பல இருக்கக்கூடும். அம்மந்தைகளில் பசுக்களையும் மேயவிடுவதால், இவைகள் அக்காளைகளால் பொலியப்பட்டு மெலிந்த கன்றுகளையே ஈனுகின்றன. இதனால், நாம் நமது பசுக்களை மந்தைமாடுகளுடன் ஓட்டாமல், அவற்றை நல்ல பக்வம் வந்த காளைகளுடன் பொலியச் செய்யவேண்டும்.

கறவைப் பசுக்களை வறட்டுப் பசுக்கள் முதலானவைகளோடு சேரவிடாமல் அவற்றைத் தனியே மேயவிடவேண்டும். கறவைப் பசுக்களுக்காகத் தனியே கொஞ்சம் நிலத்தைவிட்டு, அதில் நிரம்பப் புல்முளைக்கும்படி செய்யவேண்டும். இவ்வாறு புல் நிரம்ப வளருகிற வரையில் எந்தமாடுகளையும் அதில் மேயவிடக்கூடாது.

மாடுகள் ஒரேகூட்டமாய் மேய்வதால் வ்யாதிகள் வெகுசீக்ரம் அவைகளுக்குள் பரவ ஹேதுவாகிறது. அடைப்பான், கோமாரி ஆகிய இவைகள் மாடுகளுக்குள் பரவும் முக்யமான வ்யாதிகள். இந்த நோய்கள் பரவ ஆரம்பித்தால், நோய்கண்ட மாடுகளை உடனே மற்ற மாடுகளிடத்திலிருந்து பிரித்து, அவற்றைத் தனித்தனியே கட்டி வேண்டிய சிகித்ஸை செய்யவேண்டும்.

## CHARACTERISTICS OF AN IDEAL WOMAN.

### உத்தம ஸ்த்ரீயின் லக்ஷணங்கள்.

ஸமீபத்தில் ப்ரசுரமான 'ஞானதீபிகை' என்னும் ஓர் நூலில்* உத்தம ஸ்த்ரீயின் லக்ஷணங்கள் தெளிவாக வரையப்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு எழுதுகிறோம்.

* இந்தப்புஸ்தகம் கிடைக்குமிடம்—ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி., 3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ். விலை ரூ. 1.

மனிதனது மனதைக் கவர்ந்து, அவனை ந்யாயமான அன்புக்குள்ளாக்கி, அவன் மனவில் அரசாளும் பெண் யார்? அதோ பார்! அவளே தன் மனத்தில் நிஷ்களங்கத்தோடும் தன் முகத்தில் நாணத்தோடும் கற்பமைந்த பெண்மணியாய் அங்கு செல்பவளாம். அவளது கைகள் தொழில் செய்யத் தேடுகின்றன. அவளது பாதம் வீணாய்த் திரிய விரும்புவதில்லை.

அவள் சுத்தமாய் உடுத்திக்கொண்டிருக்கிறாள்; மிதமான ஆகாரத்தை யுண்கிறாள். தாழ்வும் ஸாதுத் தன்மையும் அவளது சிரவில் க்ரீடமணிகள் போலுள்ளன. அவளது கண்டத்தில் வீணைகானம் அமைந்திருக்கிறது.

அவள் வார்த்தைகளில் எல்லாம் மர்யாதை அல்லது ஒழுக்கம் நிற்கிறது. அவளது பதிலில் அமைதியும் உண்மையும் குடியிருக்கின்றன. வணக்கமும், தாழ்வும், அவளது நடையின் படிப்பினைகளாம்; ஸமாதானமும், ஸுகமும் அவளுக்குக் கிடைக்கும் வெகுமதிகளாம்.

அவளுக்கு முன்னே விவேகம் நடக்கிறது. நன்னடத்தை அவளது வலது கைப்பக்கத்தில் செல்லுகிறது. அவள் கண்கள் ம்ருதுவையும் அநுராகத்தையும் காட்டுகின்றன. ஆனால், விவேகம், அவளது புருவங்களில் தன் செங்கோலோடு வீற்றிருக்கிறது.

விடர்களது நாக்கு அவள் முன்னிலையில் அடங்கிப் போகிறது. அவள் சீலத்தின் அச்சம் அவர்களை மௌனிகளாக்குகிறது. ஊரில் உண்டான அபவாதத்தினால் அயலவளது பேர் ஒவ்வொருவருடைய நாக்கிலும் அடிபடும்போது, தர்மமும், நற்குணமும் கற்புடையவளுடைய வாயைத் திறப்பியாதிருக்க, மௌனம் அவள் வாயைப் பூட்டிவைக்கிறது. அவள் நெஞ்சம் நன்மைக் கிருப்பிடமாம்; அதனால் அவள் பிறரிடத்துத் தீங்குகளிருப்பதாக ஸந்தேகிப்பதில்லை.

அவள் தன் வீட்டில் அமுல் செலுத்துகிறாள். அவ்வீடு சாந்தி மந்திரமாகிறது. அவள் நீதியாக அரசாட்சி செய்யும்போது எல்லாரும் அவளுக்குப் பணிந்து நடக்கிறார்கள். அதிகாலையிலெழுந்து தன் வேலையைச் செய்யப்புகுவதுடன், மற்றவர்களுக்கும் அவர்களது வேலைகளை யேவுகிறாள்.

அவளது குடும்பப் பாதுகாப்பில் அவளுக்குப் பரிபூர்ண ஸந்தோஷம். அதை அறிவதற்காகவே அவள் படிக்கிறாள்; சிக்கனமும், நேர்த்தியும் அவள் வீட்டிற் குடியிருக்கின்றன. அவள் குடும்ப கார்யத்தை விவேகமாய் நடத்துவது அவளது கணவனுக்குக் குல மர்யாதையைத் தருகிறது. அவளைப் பிறர் புகழ்வதைக்கேட்டுத் தனக்குள்ளேயே ஆநந்திக்கிறாள்.

அவள் தன் குழந்தைகளுக்கு ஸதா ஞானத்தைப் புகட்டுகிறாள். தன் நன்னடக்கையினாலேயே அவர்களது நடைகளை ஒழுங்குபடுத்துகிறாள். அவளது வாசகங்களே அக்குழந்தைகளுக்கு ஆணைகளாகின்றன. அவள் கண்வெருட்டிற்கு அவர் கீழ்ப்படிகிறார்கள்.

அவள் தன் வாயைத்திறந்து ஏவினால் அவளது வேலைக்காரர்கள் ஓடுகிறார்கள். ஒரு உத்தரவு கொடுத்ததும் அவ்வேலை செய்து தீர்ந்துவிடுகிறது. இவ்வளவும் அவளது அன்புக்காக நடைபெறுகிறது. அவள் காட்டும் பக்ஷம் அவர்களது காலுக்குச் சிறகு கட்டினது போலாகிறது.

வாழ்வு வந்தபோது அவள் பொங்கிப்போவதில்லை; தாழ்வு வந்தகாலத்தில் பொறுமையோடு தரித்ர கஷ்டத்தை யாற்றுகிறாள். அவள் தன் கணவனது கஷ்டங்களை அழகிய பேச்சுக்களால் நிவர்த்தியாக்குகிறாள்; அவளது பாராட்டுக்களால் அவை இனிமையாக்கப்படுகின்றன. அவன் தன் ஹ்ருதயத்தை அவள் நெஞ்சில் வைத்து ஆறுதலை யடைகிறான். அவளை மனைவியாகப் பெற்றவனே புண்ய புருஷன். அவளைத் தாயாகப் பெற்ற குழந்தையே பாக்யசாலி.

## TRY AGAIN.

### முயலுக மேன்மேல்.

முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்
முயலுக முயலுக மேன்மேல் முயலுக
முதலிற் கருமம் முடியா தொழியினும்,
முயலுக மேன்மேல்; முயலுக மேன்மேல்

தொடுத்தநல் லூக்கம் சோர்வுறா வண்ணம்
அடுத்து முயன்றால் ஆகா உளவோ?
அஞ்சேல்! வெற்றி அடைவது திண்ணம்.
நெஞ்சே, கருமம் நேருந் தனையும்
முயலுக மேன்மேல்; முயலுக மேன்மேல்.

எடுத்தநற் கருமம் இரண்டொரு காலில்
அடுத்தடுத் தழியினும், அஞ்சேல்! அஞ்சேல்!
முயன்றவக் கருமம் முடியுங் காறும்
முயலுக மேன்மேல்; முயலுக மேன்மேல்

நாடிக் கொண்டவந் நற்கரு மங்கள்
கூடா தொழியினும், குறை நமக் கிலையால்
எடுத்த கருமம் இடர்ப்படு மாயினும்
விடுத்ததை நெஞ்சே விதன முறாது
முயலுக மேன்மேல்; முயலுக மேன்மேல்.

பின்னுநீ கொண்டது பெருங்கா ரியமெனின்
முன்னி முயலுக; முயலுக மேன்மேல்
காலமே கருமம் முடிக்குங் கருவியாம்
ஏல அதனை எய்துங் காறும்
முயலுக மேன்மேல்; முயலுக மேன்மேல்.

அரிய கருமமும் பெரிய கருமமும்
உரிமையின் முடித்த உத்தமப் பெரியார்
முறையாற் பொறுமையால் முடித்தன ரதனால்
முயலுக மேன்மேல்; முயலுக மேன்மேல்.

—கல்லாசிரியன்.



# News and Notes.

## வர்த்தமானக் குறிப்புகள்.

யுத்தச்செலவு.

சென்ற மூன்று வர்ஷங்களில் இந்த மகாயுத்தத்துக்காக எவ்வளவு பணம் செலவாயிருக்கிறதென்பதற்கு திட்டமான கணக்குகள் கிடைக்காவிட்டாலும், உத்தேசமான கணக்குகள் போட்டுப்பார்த்தால், ஏராளமான தொகை செலவழிந்திருப்பதாகத் தெரிகிறது.

க்ரேட் ப்ரிட்டன் மாத்ரம் 5960 கோடி ரூபாய் கடன்வாங்கிச் செலவழித்திருக்கிறது. இதைத்தவிர, யுத்தத்துக்காகவென்று அதிக வரிபோட்டு 1050 கோடி ரூபாய் வஸூல் செய்து செலவழித்திருக்கிறது.

ப்ரான்ஸோ 3000 கோடி ரூபாய் கடன் வாங்கி யுத்தத்தில் செலவழித்திருக்கிறது. இதைத்தவிர அதிக வரிபோட்டும் பணம் வஸூல்செய்து செலவழித்திருக்கிறது. இட்டலியோ 1120 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. ரஷ்யாவானது யுத்தத்துக்காகவென்று 1500 கோடி ரூபாய் கடன்வாங்கிச் செலவழித்திருக்கிறது. அமெரிக்க ஐக்யநாடுகள் 600 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறது. ஜெர்மனி இதுவரையில் 4500 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறது. ஆஸ்ட்ரியா, துருக்கி இவற்றின் கடன் விவரம் சரியாய்த் தெரியவில்லை. ஆஸ்ட்ரியாவின் யுத்தக் கடன் 1050 கோடி ரூபாயாக விருக்கலாமென்று சிலர் மதிப்பிடுகிறார்கள். மேற்சொன்ன தேசங்கள் கடன் வாங்கினதைத் தவிர, அதிக வரி போட்டுப் பணம் வஸூல்செய்தும் செலவு செய்திருக்கும். அவைகளைச்சேர்க்காமல் கடன் பாபத்துகளை மாத்ரம் கவனித்தாலும் 18,750 கோடி ரூபாய் யுத்தத்துக்காகச் செலவழிந்திருக்கிறதென்று தெரிகிறது. இவ்வளவு தொகை செலவழிந்தும் இன்னும் யுத்தம் முடிந்தபாடில்லை. இந்த யுத்தச் செலவைப் பார்க்கும்போது முன்பு நடந்த யுத்தங்களில் ஏற்பட்ட செலவு உறைபோடக்கூடக் காணாது. முன்புநடந்த சில யுத்தங்களின் செலவுகளைக் கீழேகொடுக்கிறோம். ரஷ்யோ ஜப்பானிய யுத்தம் 754-கோடி ரூபாய்; தென்னாப்ரிக்கா போயர் யுத்தம் 405 கோடி ரூபாய்; 1870-ம் வர்ஷத்து ப்ரான்ஸ் ப்ரஷ்ய யுத்தம் 963 கோடி ரூபாய்; க்ரிமியன்யுத்தம் 410 கோடி ரூபாய்.

கோவாபரேடிவ் ஸங்கங்களில் ஸேவிங்க்ஸ் பாங்கி ஏற்பாடு.

கோவாபரேடிவ் ஸெண்ட்ரல் பாங்கிகளிலும், ப்ரைமரி ஸங்கங்களிலும் ஸேவிங்க்ஸ்பாங்கி அக்கௌண்ட், கர்ரண்ட் அக்கௌண்ட் ஆகிய இவைகளை நடத்துவது விஷயமாக கவர்ன்மெண்டார் சில நிபந்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவை பின்வருமாறு:

ஸெண்ட்ரல் பாங்கிகளில் எந்த மெம்பரிடமிருந்தும் ஒரு வர்ஷத்தில் 1000 ரூபாய்க்குமேல் ஸேவிங்க்ஸ் பாங்கி கணக்கில் வாங்கிக்கொள்ளக்கூடாது. எவர் கணக்கிலும் ஒரு தடவையில் 2000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகை இருக்கக்கூடாது; ஸேவிங்க்ஸ் பாங்கிக் கணக்கில்வரும் டெபாஸிட் தொகைக்கு வர்ஷத்துக்கு 100-க்கு $3\frac{1}{2}$-க்குமேல் வட்டி கொடுக்கக்கூடாது. வட்டிபோடுவதில் ஒவ்வொரு மாஸத்திலும், எந்தத்தேதியில் குறைந்ததொகை டெபாஸிட்டிலிருக்குமோ அந்தத் தொகையின் பேரில்தான் வட்டிக் கணக்குப் பார்க்கவேண்டும். ஸெண்ட்ரல் பாங்கிகள் ஸேவிங்க்ஸ் பாங்கிக் கணக்கில் பெறும்தொகையில் 100-க்கு 75-பாகத்தை கையில் ரொக்கமாகவோ, கவர்ன்மெண்ட் பத்ரங்களாகவோ வைத்துக்கொள்ளவேண்டும்.

ஸெண்ட்ரல் பாங்கிகளிலுள்ள கர்ரண்ட் அக்கௌண்டில்வரும் தொகைக்கு 100-க்கு வர்ஷத்துக்கு $2\frac{1}{2}$-க்குமேல் வட்டி கொடுக்கக்கூடாது. அப்படி வரும் தொகையில் 100-க்கு 75-பாகத்தை கையில் ரொக்கமாகவோ, கவர்ன்மெண்ட் பத்ரமாகவோ வைத்துக்கொள்ளவேண்டும். இந்த நிபந்தனைகள் ப்ரைமரி ஸங்கங்களுக்கும் ஏற்கும்.

எலுமிச்சம் பழம்.

எலுமிச்சம்பழமானது நமக்குப் பல வழிகளிலும் உபயோகப்படுகிறது. அன்ன த்வேஷம், அரோசிகம் முதலியவற்றால் வருந்துகிறவர்கள் எலுமிச்சம்பழத்தை உபயோகித்து நோயைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். இரண்டு பங்கு ஜலத்தில் ஒருபங்கு எலு

மிச்சம்பழம் ரஸம்விட்டு சிறிது ஸோடா உப்பையும் சேர்த்துச் சாப்பிட்டால் வயிற்றுப்புலம், அஜீர்ணம் முதலியவை நீங்கும். இரண்டு பங்கு ஜலத்துடன் ஒரு பங்கு எலுமிச்சம்பழம் ரஸத்தைச் சேர்த்துச் சாப்பிட்டால், அது தேகத்துக்கு ஸௌக்யத்தைக் கொடுக்குமென்று மேல்நாட்டு வைத்யர்கள் கூறுகிறார்கள். இன்னும், இது ஜீர்ண சக்தியை அதிகமாக்குகிறதென்றும், தேகத்திற்குள்ளிருக்கும் விஷப்பூச்சிகளை நீக்குகிறதென்றும், மலைக் காய்ச்சல், திமிர்வாதம், தொண்டைப்புண் முதலிய வ்யாதிகளுக்குத்தக்க ஔஷதமாகிறதென்றும் சொல்லப்படுகிறது. சில ப்ரஸித்தி பெற்ற வைத்ய சாஸ்த்ரிகள், எலுமிச்சம்பழ ரஸத்துக்கு வாந்திபேதியின் க்ருமிகளையும், மற்றும் கேடுகளை விளைவிக்கும் இதர க்ருமிகளையும் நாசமாக்கும் சக்தி உண்டென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸ்நானம்செய்யும் ஜலத்தில் நாலைந்து பழங்களைப் பிழிந்து அந்தத் தண்ணீரில் ஸ்நானம் செய்தால், தோலில் உள்ள அழுக்கு நீங்கித் தோல் சுத்தமடைகிறது. பித்தத்தை சமனம் செய்யும் சக்தி இதற்குண்டு. பூச்சிக்கடி முதலானவைகளுக்கு இதன் சாற்றைக்கொண்டு தேய்த்தால் குணமுண்டாகுமென்று சொல்லப்படுகிறது.

**கப உபத்ரவங்களுக்கு சிகித்ஸை.**

பிள்ளைகளுக்கு இருமலும் சளியும் பிடித்திருந்தால் அதற்கு கருந்துளசியும் ஆடாதோடையிலையும் புட்டவிப்பதுபோல் அவித்து சாறுபிழிந்து அதில் கோரோசனை சேர்த்து உள்ளுக்குக் கொடுத்துவிடவேண்டியது. இந்த மாதிரி ஒருவேளைக்கு மூன்று முறைகொடுக்க, கபம் முழுதும் குணமாகும். ஒருவயதுப் பிள்ளைக்குக் கருந்துளசியிலை 20, ஆடாதோடையிலை 2, கோரோசனை ஒரு வெந்தயமளவு. வயது ஏற ஏற கூட்டிக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு விசை கொடுக்கும்போதும் இதில் காட்டியிருக்கும் அளவுப்படி அப்போதப்போது புட்டவிப்பதுபோல அவித்துக் கொடுக்கவேண்டியது.

அடிக்கடி ஜலதோஷம் பிடிப்பவர்களும் தொண்டையில் கோழை கோழையாய் கபம் வந்து உபத்ரவப் படுபவர்களும் அடியிற்கண்ட மருந்தை உபயோகித்தால் மேற்கண்ட தொந்தரவு இல்லாமல் முழுதும் குணமடைவார்கள். ஏலம் பலம் 1, சீரகம் பலம் 2, கறுவாப்பட்டை அல்லது இலவங்கம் பலம் ½, அதிமதுரம் பலம் 3, சுக்கு பலம் ¼, திறிப்பலி பலம் ⅛, இவைகளைக் காயவைத்து இடித்து மெல்லிய துணியில் வடிகட்டி அதற்கு ஸம அளவு சீனக்கற்கண்டு சேர்த்து கால்பலம் வீதம் தினம் ராத்ரி சாப்பிட்ட பிறகு படுக்கைக்குப்போகுமுன் சாப்பிடவேண்டியது.

**கல்விக்காக க்ராண்ட்.**

சென்னை கவர்ன்மெண்டார் இந்தவர்ஷம் கல்வி அபிவ்ருத்திக்காக முனிஸிபாலிடிகளுக்கும் லோகல் போர்டுகளுக்கும் 17,80,709 ரூபாய் க்ராண்ட் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அதன் விவரம் பின்வருமாறு.

| | | ரூபாய். |
|---|---|---|
| 1. | கல்வி யபிவ்ருத்திக்கு வழக்கப்படி கொடுக்கும் தொகை ... | 1,93,627 |
| 2. | 1911-12-லிருந்து 1916-17-வரையில் ஏற்படுத்தப்பட்ட எலிமெண்டரி ஸ்கூல்களின் நிர்வாகத்துக்காக ... | 8,60,971 |
| 3. | எலிமெண்டரி ஸ்கூல்களில் அதிகப்படியாக உபாத்யாயர்கள் நியமிக்க | 2,19,049 |
| 4. | எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்கள் சம்பளத்தை ரூ. 8-லிருந்து 10-க்கு உயர்த்த ... | 99,780 |
| 5. | எலிமெண்டரி ஸ்கூல்களில் உள்ள உபாத்யாயர்களுக்கு அதிகப்படி காம்பிடேஷன் அல்லவன்ஸ் கொடுக்க ... | 2,28,620 |
| 6. | உபாத்யாயர்கள் மாணவர்களிடம் சம்பளம்வாங்குவது நின்றதற்கு பதிலாக அவர்களுக்குக்கொடுக்க .. | 23,930 |
| 7. | ஸெஷனல் ஸ்கூல்கள் ... | 49,981 |
| 8. | ஸெகண்டரி ஸ்கூல்களிலும் காலேஜுகளிலுமுள்ள உபாத்யாயர்களின் சம்பளத்தை உயர்த்த ... | 1,03,923 |
| 9. | ஸெகண்டரி ஸ்கூல்களில் ஹிந்துஸ்தானி கற்பிக்க உபாத்யாயர்கள் நியமிக்க ... | 828 |
| | மொத்தம்... | 17,80,709 |

இந்தத் தொகையில் 16,19,839 ரூபாய் லோகல் போர்டுகளுக்கும் 1,60,870 ரூபாய் முனிஸிபாலிடிகளுக்கும் கொடுக்கப்படும்.



**கௌரவ அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார்கள்.**

சென்னை கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாக சில கனவான்களை கௌரவ கோவாபரேடிவ் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராராக நியமிக்க உத்தேசித்திருக்கிறார்கள். அந்த கனவான்கள் உத்யோகத்தை வகிக்குமுன் ஒரு மாஸம் அல்லது 6 வாரம்வரையில் கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிலோ, அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிலோ கோவாபரேடிவ் வேலை ஸம்பந்தமாகப் பயிற்சி பெறவேண்டும். அதற்குப்பிறகு அவர்கள் ஒரு அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராருடன் 3 அல்லது 4 மாஸம் சுற்று ப்ரயாணம்செய்து கோவாபரேஷன் ஸம்பந்தமான வேலைகள் செய்யவேண்டும். இந்த கௌரவ அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராருக்கு ப்ரயாணச்செலவு கொடுக்கப்படமாட்டாது.

**"ஞானதீபிகை."**

இது ஒரு பண்டைக்காலத்து வடமொழி நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. இந்த நூல் முன்பு திபேத்திலுள்ள க்ராண்ட் லாமாவினிடமிருந்ததாகவும், அது பிறகு சீனுவுக்குக்கொண்டு போகப்பட்டதாகவும், அங்கே அது ஒரு ஆங்கிலேயரால் இங்க்லீஷில் மொழி பெயர்க்கப்பட்டதாவும், அந்த இங்க்லிஷ் மொழி பெயர்ப்பிலிருந்து இப்போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இந்த நீதிநூல் ஸர்வமதஸ்தருக்கும் ஏற்றதாக எழுதப்பட்டிருக்கிறது. இது மனிதருடைய ஸன்மார்க்கத்தை ஒழுங்குபடுத்துவதற் கேற்றவிதமாய் எழுதப்பட்டிருப்பதால் பெரியவர்களேயன்றி சிறுவர் சிறுமிகளும் வாசித்துப் பயனடையலாம். இது 50 அத்யாயங்கள்கொண்ட 12 காண்டங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. இதனை மொழிபெயர்த்தவர் எம். வி. சிவ ஸுப்ரமண்ய அய்யராவர். இதன் விலை ரூ. 1—0—0. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித்தெரு சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**இந்தியாவின் வ்யாபார ஊக்கம்.**

ப்ரிட்டிஷ் இந்தியாவிலும் மைஸூர் ஸமஸ்தானத்திலும் சென்ற ஜூலை மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 15 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | அச்சிட்டு ப்ரசுரம்செய்யும் கம்பெனி | 20,000 |
| 9 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னது தவிர) | 16,57,000 |
| 1 | அரிசி மில் | 20,000 |
| 1 | தேயிலைத்தோட்டக் கம்பெனி | |
| 1 | காப்பித்தோட்டக் கம்பெனி | 1,00,000 |
| 1 | வேறு தோட்டக் கம்பெனி | 1,00,000 |
| 1 | சுரங்கக் கம்பெனி | 1,00,000 |
| 15 | | 24,47,000 |

**ஸுகாதார ப்ரஸங்கங்கள்.**

சென்ற வர்ஷத்தில் சென்னை கவர்ன்மெண்டார் கடப்பை, க்ருஷ்ணா, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இந்த ஜில்லாக்களிலுள்ள பட்டணங்களிலும் க்ராமங்களிலும் ஸுகாதாரவிஷயமாய் ஜனங்களுக்கு ப்ரஸங்கம் செய்ய இரண்டு அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்களை நியமித்திருந்தார்கள். அவர்கள் ஜில்லா ஒன்றுக்கு இரண்டு மாஸம் வீதம் ஊர் ஊராகச் சுற்றி ப்ரஸங்கங்கள் செய்தார்கள். இந்த ஏற்பாடு திருப்திகரமாக இருப்பதாய்த் தெரிவதால், சென்னை கவர்ன்மெண்டார் இந்தவர்ஷமும் ஸுகாதார ப்ரஸங்கங்கள் நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வர்ஷம் 4-அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள் ப்ரஸங்கம்செய்ய நியமிக்கப்படுவார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் ஜில்லாவுக்கு 3-மாஸம் வீதம் 6-மாஸம் ப்ரஸங்கங்கள் செய்வார்கள். இந்த ப்ரஸங்கங்களில் வரும் விஷயங்களை விளக்க மாஜிக் லாண்டர்ன்கள் என்னும் படங்காட்டும் விளக்குகள் உபயோகிக்கப்படும்.

**"பூரண சுகம்."**

இது ஸ்வாமி அபேதானந்தர் ந்யூ யார்க்கில் செய்த ஒரு ப்ரஸங்கத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இந்த உபன்யாஸத்தில் பூரணஸுகம் என்பதென்ன? அதனை அடைவதெப்படி? சரீரத்தில் எதை ஒழித்தலால் அந்த ஸுகம் கைகூடுமென்பன முதலியவைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் நடை ஸுலபமாயும் தெளிவாயுமிருக்கிறது. இதன் விலை 0—1—6. வேண்டுவோர் இதை மொழி பெயர்த்தவராகிய எ. சொக்கலிங்கம்பிள்ளை, 12, ராமானுஜ ஐயர் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**செப்பு நீர்ப் பானை.**

செப்பு வெந்நீர்ப்பானை அல்லது எந்தப் பாத்ரமாவது நெருப்பிற்கு அருகாமையில் இருப்பதால் மங்கலாக

வாவது கரப்பாகவாவது போகுமானுல், ஒரு எலிமிச்சம்பழத்தை இரண்டாகத் துண்டித்து உப்பில் தோய்த்து பாத்ரத்தின் மேல் பாகமெல்லாம் தேய்க்கவேண்டும். ஆனுல் உடனே நீர்விட்டுக் கழுவவேண்டும். இல்லாவிட்டால் எலுமிச்சம் பழம் உலோகத்தை தின்றுவிடும்.

**சென்னையில் ஜல வஸதி.**

சென்னையில் ஜல வஸதியானது குறைவாயிருப்பதை உத்தேசித்து, சென்னை முனிஸிபாலிடியின் வேண்டுகோளின் பேரில், சென்னை கவர்ன்மெண்டார் சென்னை ஜலவஸதி வேலைகளைப்பற்றிப் பரிசீலனை செய்து குறைகளை நிவர்த்திப்பதற்கான மார்க்கங்களைத் தெரிவிக்க ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் ஸர்ஜன் ஜெனரல் பானர்மனும், ஸானிடரி கமிஷனரும், ஸானிடரி இஞ்ஜினியரும் மெம்பர்கள்.

**நமது சக்ரவர்த்தினியின் உருவப் படங்கள்.**

இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டோ, யுத்தகளத்தில் காயமடைந்தும், வ்யாதிப்பட்டும் இறந்தோ போன இந்தியப் போர்வீரர்கள், ராணுவ உத்யோகஸ்தர்கள் ஆகிய இவர்களுடைய மனைவிகள், தாய்மார்கள், அல்லது குமாரிகளுக்கு நமது சக்ரவர்த்தினியின் உருவப்படமொன்று கொடுக்கப்படும். இறந்துபோன வீரர்களின் பந்துக்களுக்கு நமது சக்ரவர்த்தினி எழுதியுள்ள அனுதாபக் கடிதம் ஒன்றும் அதோடு சேர்த்துக் கொடுக்கப்படும்.

**அடுப்புக்கரி பற்களைச் சுத்தம்செய்யும்.**

கொஞ்சம் சுத்தமான அடுப்புக்கரியை நன்றாகப் பொடிசெய்து, அதைக்கொண்டு பல் துலக்கினுல் பற்கள் வெண்மையாகக் காணப்படுவதோடு, அவற்றின் துர்நாற்றமும் விலகும்.

**ஐரோப்பிய யுத்தம்.**

*அக்டோபர்மீ 1-தேதி.*

ப்ரிட்டிஷார் மெஸபொடேமியாவில் ராமாடீ என்னும் ஸ்தலத்தையும், அங்கிருந்த துருக்கியப் படையையும் பிடித்திருக்கிருர்கள்.

**5-தேதி.**

ப்ரிட்டிஷார் யிப்ரஸுக்குக் கிழக்கில் முன் சென்று வருகிருர்கள். ரஷ்யர்கள் ரிகா போர்முகத்தில் ஒரு மைல் முன் சென்றுர்கள். 'ட்ரேக்' என்னும் ப்ரிட்டிஷ் க்ருஸர் எதிரிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

**9-தேதி.**

ஜெர்மனியில் நான்கு யுத்தக் கப்பல்களில், போர்வீரர்கள் கலகம் செய்து ஒரு கப்பலின் தலைவரை ஸமுத்ரத்தில் தள்ளிவிட்டு கரைக்கு வந்தார்கள். அவர்களை துரைப்படை யொன்று சூழ்ந்து கொண்டதன் மேல், அவர்கள் சரணமடைந்தார்கள். அதிகாரிகள் அவர்களில் மூன்றுபேர்களுக்கு மரணதண்டனையும், மற்றவர்களுக்கு வேறு கடுந் தண்டனைகளும் விதித்தார்கள். சரியான ஆகாரமில்லாமையும், ஜெர்மன் அபேதவாதிகளின் துர்ப்போதனைகளுந்தான் இந்தக் கலகத்துக்குக் காரணங்களாம்.

12-தேதி.

ப்ரிட்டிஷார் யிப்ரஸுக்குக் கிழக்கில் யுத்தம் செய்து முன்சென்று வருகிருர்கள். அவர்கள் போல்காபல் என்னுமிடத்தையும் ஹௌதல்ஸ்ட் என்னும் காட்டின் வெளிப்புறங்களையும் பிடித்திருக்கிருர்கள். பெல்ஜியத் துருப்புகள் கிழக்கு ஆப்ரிக்காவில் மாஹெஞ்ஜ் என்னும் இடத்தைப் பிடித்திருக்கிருர்கள்.

ஜெர்மன் கப்பல் படைமந்திரியாகிய வான் கபால் ராஜிநாமா செய்துவிட்டார்.

16-தேதி.

ப்ரிட்டிஷார் யிப்ரஸுக்குப் பக்கத்தில் முன் சென்று ஜெர்மனியரால் அரண்களுடன் பாதுகாக்கப்பட்டுவந்த பல விடங்களைப் பிடித்தார்கள். ஜெர்மன் கப்பல் படையானது ரிகா வளைகுடாவில் உள்ள ஒஸல் தீவையும் டாகாதீவையும் பிடித்திருக்கின்றன.

19-தேதி.

ஜெர்மன் கப்பல்படை ரிகாவளைகுடாவில் புகுந்திருக்கிறது. அதற்கும் ரஷ்ய கட்டல்படைக்கும் நேர்ந்த சண்டையில் ஒரு ரஷ்ய யுத்தக்கப்பல் மூழ்கிப்போயிற்று. அங்குள்ள ஒஸல்தீவையும் மூன்தீவையும் ஜெர்மானியர்கள் பிடித்திருக்கிருர்கள்.

23-தேதி.

ஜெர்மானியர்கள் டாகோதீவைப் பிடிற்திருக்கிருர்கள். அவர்கள் வெர்டர் தீபகல்பத்திலும் இறங்கியிருக்கிருர்கள். ரீகாவிலுள்ள ரஷ்யக் கப்பல்படையானது வடக்கே பின்வாங்கிப்போய்விட்டது ப்ரிட்டிஷார் ப்ரிட்டிஷ் கிழக்கு ஆப்ரிக்காவில் நிஜாங்கான் என்னும் ஊரைப்பிடித்திருக்கிருர்கள். சில வ்யாபாரக்கப்பல்களுக்கு உதவியாகப்போன இரண்டு ப்ரிட்டிஷ் டிஸ்ட்ராயர்களையும், அந்த வ்யாபாரக்கப்பல்களையும் ஜெர்மானியர்கள் மூழ்கடித்தார்கள்.

24-தேதி.

ஜெர்மானியர்கள் இஸான்ஸோ போர்முனையில் முன்சென்று வருகிருர்கள். அவர்கள் காபரெட்டோ, டூமக்கோ என்னும் இரண்டு இடங்களையும் பிடித்தார்கள்.

26-தேதி.

ஜெர்மானியர்கள் மேற்குப்போர்முகத்தில் பினன், சாவிக்னன், முதலிய சில இடங்களில் பின்னடைந்தார்கள். அமெரிக்கத் துருப்புகள் ப்ரான்ஸில் போர்முனையில் வந்துவிட்டனவென்றும் அமெரிக்க பீரங்கிப்படைதாக்க ஆரம்பித்துவிட்டதென்றும் சொல்லப்படுகிறது.

ப்ரேஜில் தேசமானது ஜெர்மனியின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

28-தேதி.

இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் பின்வாங்கியிருக்கிருர்கள்.

# ஜனாபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

**G. A. VaidyaRaman, B. A.,**
E D[illegible]

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்களஹு கார்த்திகைமீ, NOV.—DEC., 1917. { ஸஞ்சிகை 11. No. 11.

## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| ⅛ do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கி வருகிருர்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | அந்யநாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப் பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | | | 5 0 0 |
| ½ | " | " | " | 2 8 0 |
| ¼ | " | " | " | 1 4 0 |
| ⅛ | " | " | " | 1 0 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒரு பாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## THE OLDEST AGRICULTURAL EXPERIMENT STATION.

### முதல் முதலான வ்யவஸாய ஆராய்ச்சிப் பண்ணை.

இப்போது நமது நாட்டில் கவர்ன்மெண்டார் பல இடங்களில் விவஸாய ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தி விவஸாய விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஜனத்தலைவர்களாவது, பெரிய நிலஸ்வான்களாவது, ஸொந்தத்தில் விவஸாய ஆராய்ச்சிப் பண்ணைகள் நடத்துவதில்லை. ஆதியில் ஏற்பட்ட விவஸாய ஆராய்ச்சிப் பண்ணை கவர்ன்மெண்டால் ஏற்படுத்தப்படவில்லை. ஒரு நிலஸ்வானால் தான் ஏற்பட்டது. அது நாளடைவில் வ்ருத்தியடைந்து இப்போது மிகவும் க்யாதிபெற்று விளங்குகிறது. அதன் பெயர் ராதம்ஸ்டெட் வ்யவஸாயப் பண்ணையென்பது. அது இங்க்லண்டில் லண்டனுக்கு 30-மைல் வடமேற்கிலுள்ள ஹார்ப்பெண்டன் என்னும் ஊரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அது 1843-ம்வர்ஷத்தில் மிஸ்டர் ஜான் பென்னட் லாஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

லாஸ் என்பவர் நடுத்தர ஸொத்துள்ள ஒரு நிலஸ்வான். அவர் 1814-ம் வர்ஷம் ஜனனமானார். அவருக்கு 20-வது வயஸு வந்தபோது ராதெம்ஸ்டெட் என்று பெயர் கொண்ட பூர்விக குடும்ப ஸொத்துக்கள் அவர் வசம் வந்தன. அவர் பால்யத்தில் ஈட்டன், ஆக்ஸ்போர்ட் என்னும் பட்டணங்களிலுள்ள கலாசாலைகளில் வாசித்தவரென்றாலும், மற்ற பணக்கார நிலஸ்வான்களைப்போல் ஸர்க்கார் உத்யோகத்தையாவது, வக்கீல், வைத்யம் முதலிய இதர உயர்ந்த உத்யோகங்களையாவது நாடாமல், தமது நிலங்களை கவனித்து அதை சீர்திருத்துவதென்று தீர்மானித்தார்.

அவர் முதல் முதலில் நிலத்துக்கு எருவிடுவதால் ஏற்படும் பலாபலன்களைப்பற்றி கவனிக்கலானார். முதலில் தொட்டிகளில் செடிகளை வளர்த்து, அவைகளுக்கு வெவ்வேறு எருக்களிட்டு, பலாபலன்களை ஆராய்ச்சி செய்தார். ஆராய்ச்சிகள் ஸாதகமாக இருக்கவே, வயல்களில் எருக்களிட்டுப் பரீக்ஷை செய்தார். இவைகளாலும் நல்ல பலன் ஏற்பட்டது.

பிறகு அவர் தாது வர்க்க ஸம்பந்தமான பாஸ்பேட்டுகளைப்பற்றிப் பரீக்ஷை செய்கையில், அவைகளின்மேல் த்ராவகம் ஊற்றினால், அந்த பாஸ்பேட்டுகள் நல்ல உரமாக ஆகின்றனவென்று கண்டுபிடித்தார். இப்படிக் கிடைத்த உரப்பொருளுக்கு ஸூபர் பாஸ்பேட் என்று பெயர் கொடுத்தார். இந்த ஸூபர் பாஸ்பேட்டுதான் முதல்முதல் கண்டுபிடிக்கப்பட்ட செயற்கை உரமாகும்.

செயற்கை உரம் செய்து விற்பதால் நல்ல லாபம் கிடைக்குமென்று எண்ணின மிஸ்டர் லாஸ் அதைப் பிறர் எவரும் செய்து விற்காமலிருக்கவும், தாமே செய்து விற்கும்படிக்கும் அதை ரெஜிஸ்டர் செய்துகொண்டார். இதற்கு பேடண்ட் செய்தல் என்று பெயர். அக்கம் பக்கத்திலுள்ள வ்யவஸாயிகள் முதலில் இந்த ஸூபர்பாஸ்பேட்டை வாங்கி உபயோகிக்கப் பின்வாங்கினார்கள். ஆனால் மிஸ்டர் லாஸ் அதன் குணத்தை நன்கு பரவச் செய்யவே, வ்யவஸாயிகள் முதலில் கொஞ்சம் வாங்கி உபயோகித்து, உபயோகமுள்ளதென்று கண்டு பிறகு அதிகமாக வாங்கலானார்கள். அதன் குணங்கள் எல்லாருக்கும் தெரியவரவே, மிஸ்டர் லாஸுக்கு நல்ல லாபம் கிடைத்தது.

1843-ம் வர்ஷத்தில் மிஸ்டர் லாஸ் டாக்டர் கில்பர்ட் என்பவரை தமது விவஸாய ஆராய்ச்சிப் பண்ணைக்கு டிரெக்டராக நியமித்தார்.



அந்த வ்யவஸாயப் பண்ணையால் பொது வாய்வ்யவஸாயத்துக்கு அதிக உபகாரம் ஏற்படலாயிற்று. இதை அறிந்த பொதுஜனங்கள் 1855-ம் வர்ஷத்தில் பணம் சேகரித்து ஒரு ஆராய்ச்சிசாலைக் கட்டிடம் கட்டிக்கொடுத்தார்கள்.

1882-ம் வர்ஷத்தில் மிஸ்டர் லாஸ் தமது வ்யவஸாய தொழிலிலிருந்து நீங்கிக்கொண்டார். அவருக்கு அதற்குள் யதேஷ்டமாகப் பணம் சேர்ந்துவிட்டது. அவர் ஸூபர்பாஸ்பேட் வ்யாபாரத்தை விற்றுவிட்டு ஜனோபகாரமான வேலைகளில் உழைக்கலானார். ராதெம்ஸ்டெட்டைச் சேர்ந்த ஆராய்ச்சி சாலையிலும் பண்ணையிலும் பொது வ்யவஸாயவிஷயங்களை கவனிக்கும்படி ஏற்பாடு செய்தார். ஏழு வர்ஷம் கழித்து, அந்த ஆராய்ச்சிப் பண்ணை சாச்வதமாக நடந்து வருவதற்காக ஒரு ட்ரஸ்ட் ஏற்படுத்தினார். பண்ணைவேலைகள் நடந்து வந்த நிலத்தையும், ஆராய்ச்சி சாலையையும் பண்ணைக்கென்றே விட்டுவிட்டு, அதற்கு சாச்வதமான வரும்படி கிடைப்பதற்காக 15 லக்ஷம் ரூபாய் மூலதனம் வைத்தார். அந்தப் பண்ணையை நிர்வகிப்பதற்காக 9 பேர்கள் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தினார். அதில் ராதெம்ஸ்டெட் பூஸ்திதியின் ஸொந்தக்காரர் ஒரு மெம்பர். மற்ற எட்டு பேர்களும் இங்க்லண்டிலுள்ள பற்பல சாஸ்த்ரீய ஸங்கங்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

மிஸ்டர் லாஸுக்கு ஸர் பட்டம் கொடுக்கப்பட்டது. அவர் 1900-ம் வர்ஷத்தில் காலகதியடைந்தார்.

அவர் இறந்தபிறகு மேற்படி பண்ணையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 1911-ம் வர்ஷம் முதல் இங்க்லண்டின் வ்யவஸாய டிபார்ட்மெண்டார் வர்ஷந்தோறும் 37,500 ரூபாய் பண உதவி செய்து வருகிறார்கள்.

இனி அந்தப் பண்ணையில் நடந்துவரும் ஆராய்ச்சிகளைப்பற்றிச் சொல்லுகிறோம்.

வயலுக்கு எருவே போடாமல் ஸாகுபடி செய்து வந்தால் என்ன நேரிடுமென்பதைப் பரீக்ஷிப்பதற்காக, அங்கே ஒரு வயலில் சென்ற 67 வர்ஷகாலமாக எருப்போடாமலே கோதுமை ஸாகுபடி செய்து வருகிறார்கள். இப்போது அந்த வயலில் சராசரி ஏக்கருக்கு 11 புஷல்வீதம் மாஸூல்கிடைத்துவருகிறது. (ஒரு புஷல் கோதுமை 60 ராத்தல் நிறையுள்ளது.) இதனால் வர்ஷந்தோறும் எருவில்லாமலே ஒரே நிலத்தில் ஒரேவித பயிர் சாகுபடி செய்வது முடியாதென்று சிலர் சொல்லுவது சரியல்லவென்று ஏற்படுகிறது. உலகமுழுமைக்கும் கணக்கிட்டால், ஒரு ஏக்கருக்கு சராசரியில் 11 புஷல்தான் மாஸூல் கிடைக்கிறது. ஆனால் மாஸூல் இவ்வளவு குறைவாயிருப்பது, விவஸாயிகளுக்கு லாபகரமல்லவாகையால், எருவிட வேண்டியது அவச்யமாகிறது. தக்கபடி எருவிட்டால் ஏக்கருக்கு 40 முதல் 45 புஷல் வரையில் மாஸூல் கிடைக்கும்.

சில வயல்களில், பயிருணவு அம்சங்களில் ஏதாவது ஒன்று குறைவாயிருக்கும்படி, செயற்கை எருக்களிட்டு, அதனால் ஏற்படும் பலா பலன்களைப் பரீக்ஷித்து வருகிறார்கள். உதாரணமாக சில பாத்திகளில் பொடாஷ் ஸத்துள்ள எருக்களிடுவதில்லை. சில பாத்திகளில் நைட்ரொஜின் ஸத்துள்ள எருக்கள் போடுவதில்லை. இப்படிச் செய்து பார்த்ததில் செடியுணவு அம்சங்கள் எல்லாம் சரியாக இருக்கும். எரு போட்டால்தான் தக்க மாஸூல் கிடைக்குமென்று தெரியவந்தது.

ஸாகுபடியாகும் நிலத்தை தரிசாக வெகு காலம் விட்டுவைத்தால் என்ன ஆகும் என்

பதை அறியும் பொருட்டு ஒரு வயலை பல வர்ஷங்களாகத் தரிசாக விட்டுவைத்திருக்கிறார்கள். அதில் முன்பு கோதுமை ஸாகுபடியாகி வந்தது. இப்போது அதில் ஒருபாகம்புல் அடர்ந்ததாகவும் பாக்கி பாகம் செடி கொடிகள் அடர்ந்த புதர்களாகவும் இருக்கிறது. அதில் வளரும் புல்லை அறுப்பதே கிடையாது. ஒவ்வொரு வர்ஷமும் அது தானாகவளர்ந்து பிறகு மடிந்துபோகும். அந்த வயலைத் தரிசாக விடுமுன் அதில் வெகுகாலமாக கோதுமை சாகுபடிசெய்து வந்தார்கள். அப்படி கோதுமை சாகுபடி செய்ததால் நிலமானது கால க்ரமத்தில் வளமை குறைந்துபோயிருந்தது. ஆனால் சென்ற பல வர்ஷங்களாக அதைத் தரிசாகப் போட்டதில், நிலமானது ஆதியில் இருந்த வளப்பம் பெற்றுவிட்டதென்று அந்த வயலின் மண்ணைப் பரிசோதித்ததில் தெரிகிறது. இயற்கையின் போக்குப்படிவிட்டால், ரொம்ப வளப்பம் குறைந்த நிலமும் காலக்ரமத்தில் வளப்பமுள்ளதாக மாறிவிடும். இப்போது அந்த வயலானது கனடா, அர்ஜெண்டைன் முதலிய தேசங்களில் உள்ள கலப்பையே கண்டிராத ப்ரெய்ரி என்னும் தரிசு நிலங்களைப்போல் வளமையுள்ளதாக இருக்கிறது.

இங்க்லண்டில் உள்ள ஒரு பழைய வழக்கம் என்னவென்றால், சிலவர்ஷங்களுக்கு ஒரு தடவை நிலத்தைத் தரிசு போட்டுவைப்பதே. இதனால் நிலமானது ச்ரம பரிகாரம் செய்து கொண்டு, அடுத்த சாகுபடிகளில் நல்லமாஸூல் கொடுக்குமாம். இப்போது அப்படிச் செய்வதைவிட ஒரு வர்ஷத்தில் கோதுமைபோன்ற ஒரு பயிரும், மறுவர்ஷம் உருளைக்கிழங்கு, டர்னிப் கிழங்கு, முதலியவைகளுமாக இப்படி பயிர்களைமாற்றி சாகுபடி செய்வது நல்லதென்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

இந்த ஆராய்ச்சிப் பண்ணையில் முக்யமாய் நிலத்துமண் பயிரின் வளர்ச்சிக்கு எவ்விதத்தில் ஸாதகபாதகமாய் இருக்கின்றன வென்பது; நிலத்தின் தன்மையையும், எருவின் தன்மையையும் மாற்றுவதால் பயிரில் ஏற்படும் மாறுபாடுகள் ஆகிய இவைகளைப்பற்றியே கவனித்து வருகிறார்கள். நிலத்தில் குறைந்த செலவில் அதிக மாஸூல் கிடைக்கும்படி செய்வதே ஆராய்ச்சிப் பண்ணையின் முக்ய நோக்கமாகும்.

## THE USE OF THE CINEMATOGRAPH IN EDUCATION.

## படிப்பு கற்பிப்பதில் ஸினிமடோ க்ராப்பின் உபயோகம்

இந்தக் கருவியில் படங்களை வைத்துப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்குக் காண்பித்து அவைகளின் மூலமாகச் சிறுவர்களுக்கு அநேக விஷயங்களைக் கற்பிக்கிறார்கள். இந்த முறையை அமெரிக்கர்கள் அதிகமாக அனுஸரித்து வருகிறார்கள். ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டாரும் தங்கள் பள்ளிக்கூடங்களில் இந்த முறையை அனுஸரிப்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யா தேசத்தில் உள்ள உபாத்யாயர்கள் படங்களைக் ஸினிமாடோக்ராப்பில் வைத்துப்பிள்ளைகளுக்குக்காண்பித்தால் கெடுதி உண்டாகுமென்று முதலில் சொல்லிவந்தார்கள். அவர்கள்கூட இப்பொழுது தங்களுடைய பழைய அபிப்ராயத்தை மாற்றி இந்த முறையை அனுஸரிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். அநேக கவர்ன்மெண்ட் பாடசாலைகளில் இந்தக் கருவியை வாங்கி வைத்துக்கொண்டு பூர்விக நாட



கங்கள் ஸம்பந்தமாகவும், கல்வியறிவை வளர்க்கும் சாஸ்த்ர ஸம்பந்தமாகவும் உள்ள படங்களை அதில் வைத்துப் பிள்ளைகளுக்குக் காண்பிக்கிறார்கள். நீதிநூலைக் கற்பிப்பதற்காக ஜப்பான் தேசத்தவர்கள் இந்தக் கருவியை உபயோகிக்கிறார்கள். பெரியவர்கள் மாத்ரமேயல்லாமல் சிறுவர்களும் சில ஸமயங்களில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை ஜப்பான் தேசத்துப் பிள்ளைகளுக்கு படங்கள் மூலமாகக் கற்பித்து வருகிறார்கள். சில விஷயங்களைப் புஸ்தகங்களில் படித்தாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும், பிள்ளைகளுக்கு அவைகள் சரியாக விளங்காமல் போய்விடும். உயிருள்ள வஸ்துக்களைப்போல் அசைந்தாடும் ஸினிமாட்டோக்ராப் படங்களைப் பார்ப்பதினால், அப்படிப்பட்ட விஷயங்களைப் பிள்ளைகள் வெகு ஸுலபமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இங்க்லண்டிலும் இதுவிஷயமாக முயற்சிகள் நடந்துவருகின்றன. 1914-ம் வர்ஷத்திலேயே ஸினிமாடோக்ராப்பை கல்வி ஸாதனமாக உபயோகிப்பதைப்பற்றி பரிசீலனைசெய்ய எடுகேஷனல் ஸினிமடோக்ராப் அஸோஸியேஷன் என்று ஒரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

### கல்வி ஸம்பந்தமான உபயோகம்.

பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும்போது படங்களை வைத்துக்கொண்டு சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று எல்லோரும் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஸினிமடோக்ராபை உபயோகிப்பதில் அநேக கெடுதிகள் உண்டாகும் என்றும், வேறுவிதமான படங்களை உபயோகிப்பதே நல்லதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். மற்ற வகைப் படங்களைவிட இந்தக் கருவியில் வைத்துக் காண்பிக்கும் அசையும் படங்கள் பிள்ளைகள் கல்வி கற்பதில் ரொம்ப உதவியாயிருக்கின்றன. புஸ்தகங்களிலோ சுவரிலோ இருக்கும் படங்களைப் பார்ப்பதைக் காட்டிலும், அசையும் படங்களைப் பார்ப்பதுதான் பிள்ளைகளுக்கு அதிக ஸந்தோஷத்தை உண்டுபண்ணும். அசையும் படங்களை அவர்கள் வெகு கவனமாகப் பார்ப்பார்கள். அவைகளை எத்தனை முறை பார்த்தாலும் அவர்களுக்கு த்ருப்தி உண்டாகாது. அதிக வ்யாபாரம் நடக்குமிடத்தில் ஜனங்கள்போவதையும் வருவதையும், ஸாமான்கள் வாங்குவதையும் விற்பதையும் உபாத்யாயர் பிள்ளைகளுக்கு வாய்மொழியாகச் சொன்னால், அது நன்றாகவிளங்காது. அதையே அசையும் படங்களின் மூலமாகக் காண்பித்தால் அவர்கள் தாங்களே நேரில் அவ்விடத்திற்குப் போய் அவைகளைப் பார்ப்பதாக எண்ணிக்கொள்வார்கள். வேகமாகப்போகிற ஆகாய விமானத்தைப் பற்றியோ, அதிக உயரத்திலிருந்து விழும் நீர் வீழ்ச்சியைப் பற்றியோ உபாத்யாயர் பிள்ளைகளுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டுச் சொல்லியபோதிலும், அவை இப்படித்தான் இருக்கும் என்று பிள்ளைகள் அறிந்துகொள்ள மாட்டார்கள். அசையும் படங்களைப் பார்த்தால் நேரில் பார்ப்பது போல் தெளிவாகத் தெரியும்.

### சில ஆக்ஷேபணைகள்.

ஸினிமடோக்ராபில் வைத்துக் காட்டும் படங்கள் அதிக வேகமாக அசைந்தோடுகிறபடியால், பிள்ளைகள் அவைகளை முழு கவனத்தோடும் பார்க்கவேண்டியிருக்கிறது. அப்படிப் பார்ப்பது அவர்களுக்குக் கெடுதி உண்டாக்குமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஸாதாரணமான படத்தை ஒரு மணி நேரம் வகுப்பில் மாட்டிவைத்தாவது கறுப்புப் பலகையில் உபாத்யாயர் சீமைச் சுண்ணாம்பினால் படமெழுதியாவது பிள்ளைகளுக்குக் காண்பித்தால் சிறுவர்கள் அவைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் விஷயம் வெகுகாலம் மறவாமல் இருக்குமென்று அவர்கள் சொல்லு

கிறார்கள். அவர்கள் சொல்லுவது சில அம்சங்களில் சரியாக இருக்கிறது. ஆனால் கறுப்புப் பலகையிலோ காகிதத்திலோ எழுதிக் காண்பிக்க முடியாத விஷயங்களும் சில இருக்கின்றன. அவைகளைப் பிள்ளைகள் எப்படி அறிந்துகொள்வது? சிறிய பட்டுப்பூச்சி புழு வடிவத்தோடு முட்டையைவிட்டு வெளியே வருவதையாவது பின்னி இருந்த கூட்டிலிருந்து பெரிய பட்டுப்பூச்சி வெளிக்கிளம்பி ஓடுவதையாவது படங்களின் மூலமாகப் பிள்ளைகள் அறிந்துகொள்ளவேண்டுமானால், அசையும் படங்களின் மூலமாகவே அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும். மேலும் எரிமலை கற்குழம்புகளையும் நெருப்பையும் கக்குவது, பூகம்பம், பூமியிலிருந்து உஷ்ணஜலம் வேகத்துடன் வெளிக்கிளம்பி வெகு உயரம் ஸ்தம்பம்போல் போவது முதலியவைகளை அசையும் படங்கள்தான் நன்றாய் விளக்கிக் காட்டும். நிலையான படங்கள் தெளிவாய் காட்டமாட்டா.

சிலர் இதை உபயோகிப்பது விஷயமாய்ச் சொல்லும் இன்னொரு ஆக்ஷேபம் என்னவென்றால், பிள்ளைகளுக்கு இதனால் முயற்சி குறைவுபடுகிறதென்பதே. பிள்ளைகள் படத்தைப்பார்த்தால் போதுமென்று எண்ணி, தங்களுடைய உற்றுப் பார்க்கும் சக்தி முதலியவைகளை அபிவ்ருத்தி செய்வதில்லை. ஆனால் மனோ சக்திகளின் அபிவ்ருத்தியே முக்ய நோக்கமாகக் கொண்ட பாடங்களுக்குத் தான் இந்த ஆக்ஷேபம் ஏற்குமேயொழிய, மற்றவைகளுக்கெல்லாம் இது ஏற்காது. படங்கள் உபயோகிக்கவேண்டிய பாடங்களிலெல்லாம் அசையும் படங்களை உபயோகிக்கலாம். மனதினால் மாத்ரம் பாவனைசெய்து அறிந்துகொள்ளக் கூடாத விஷயங்களை அசையும் படங்களைப் பார்த்து ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். அந்தப் படங்களை அதிக கவனத்தோடு பார்த்தால் விஷயங்கள் நன்றாக மனதில் பதிந்து விடுகின்றன. போதிப்பதற்கு வேறு கருவிகள் இல்லாதபோது தான் ஸினெமடோக்ராபை உபயோகப்படுத்தவேண்டும். தோட்டங்களில் பயிராகும் செடிகளைப் பற்றிச் சொல்லும்போது, அவைகளையே நேராகக் கொண்டுவந்து காட்டவேண்டும். அவைகளை அசையும் படங்களின் மூலமாகக் காண்பிக்கவேண்டிய அவச்யமில்லை. எல்லா விஷயங்களையும் அறிந்துகொண்ட பிறகு அந்தச் செடிகளை எழுதியுள்ள அசையும் படங்களைப் பிள்ளைகளுக்குக் காண்பித்தால் அவர்கள் தாங்கள் நேரில் கவனித்த விஷயங்களை மறக்காமல் ஞாபகப்படுத்திக் கொள்ளுவார்கள். தோட்டத்தில் இல்லாத செடிகளை அசையும் படங்களின் மூலமாகக் காண்பிப்பது நல்லது.

ஸினெமடோக்ராபை அஜாக்ரதையாகவும் அதிகமாகவும் உபயோகப் படுத்தினால் சிறுவர்களுக்குக் கெடுதி உண்டாகுமென்பது உண்மைதான். அதை ஜாக்ரதையாக உபயோகப்படுத்துவதனால் ஒரு கெடுதியும் உண்டாகாது. நல்லதை விட்டுக் கெடுதலை மாத்திரம் கண்டுபிடிக்கப் போனால் ஒவ்வொன்றிலும் கெடுதல் கண்டுபிடிக்கலாம். க்ஷவரம் செய்துகொள்ளும் கத்தி அதிக உபயோகமானதாக இருந்தாலும் அஜாக்ரதையாக உபயோகித்தால் அதனால் எவ்வளவு கெடுதல் உண்டாகும்? கெடுதல் உண்டாகுமென்று எண்ணி அதை யாராவது உபயோகிக்காமல் இருந்து விடுவதுண்டா? ஆகவே அசையும் படங்களில் நல்லவைகளைத் தெரிந்து எடுத்து அவைகளைத் தகுந்த காலங்களில் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவேண்டும். அப்படிச் செய்வதில் யாதொரு கெடுதியும் இல்லை.

### சில பாதுகாப்புகள்.

ஸினெமடோக்ராபை போதிக்கும் முறையில் உபயோகிப்பதற்குமுன் பாடசாலை அதி



காரிகளைக் கலந்து யோசித்து, பிள்ளைகளுக்கு உபயோகமாகும் படங்களைத் தயார் செய்ய வேண்டும். அந்தப் படங்களைக் காண்பிப்பதற்காக ஒரு உபாத்யாயரை ப்ரத்யேகமாக நியமிக்கவேண்டும். படங்களைக் காண்பிப்பதற்குமுன் இன்ன விஷயத்தைப் பற்றிக் காண்பிக்கப்போகிறோம் என்று பிள்ளைகளுக்குத் தெளிவாகச் சொல்லவேண்டும். படங்களை வைத்துக் காண்பிக்கும் உபாத்யாயர் முக்ஸிடமான இடங்களில் பிள்ளைகளை அதிகமாகக் கவனிக்கச் செய்யவேண்டும். படங்களை அதிக வேகமாக ஓடவிடக்கூடாது. ஒரு தடவையில் இத்தனை படங்கள்தான் காட்டவேண்டுமென்று ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். $1\frac{1}{4}$-மணி நேரத்திற்குமேல் படங்களைக் காண்பிக்கக் கூடாது. இயற்கைப் பொருள்பாடஸம்பந்தமான படங்களைப் பார்க்கும்போது பிள்ளைகளுக்கு ஒருவரும் ஒன்றுஞ் சொல்லக்கூடாது.

## TIRUVALLUVAR.

BY PANDIT P. K. SRINIVASA ACHARIAR.

### திருவள்ளுவர்.

உலகத்திற்கு குருவென்னத்தக்க திருவள்ளுவர் என்னும் புலவர் இரண்டாயிரம் வர்ஷங்களுக்குமுன் சென்னையைச் சார்ந்த மயிலை நகரில் பிறந்தார். அவர் அந்தண ஜாதியாராகிய பகவன் என்பவர்க்கும், புலைச்சியாகிய ஆதியென்பவட்கும் புத்ரராய்த் தோன்றினாரென்றும், வள்ளுவர் மனையில் வளர்ந்தாரென்றும் கூறுவர். அவர் பிறந்த இடமும் வளர்ந்த இடமும் குறைவாயினும், அவரது ஞான அநுஷ்டானங்கள் சிறந்தனவாதலால், அவரை யாரும் மகானென்றே மதிக்கிறார்கள்.

"தாமரை பொன்முத்துச் சமரங்கோரோசனைபால்
பூமருதேன்பட்டு புனுகு சவ்வா(து)—ஆமழல்
எங்கேபிறந்தாலு மென்னாரே: நல்லோர்கள் [மற்று
எங்கே பிறந்தாலுமென்?"

என்பது உண்மையன்றோ?

அவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள் என்னும் நூல் தமிழ்வேதம் என்று சொல்லும்படி, உலகத்தில் முன்னோர், இடையோர், பின்னோர் ஆகிய அனைவருடைய அறிவும் காணுதற்கு இலக்காயிருக்கிறது. அது பற்றியே அக்காலத்திலிருந்த கடைச்சங்கத்தார் தனில் பரணர் என்பவர்

"வாலறிவின்
வள்ளுவரும்தக்குறள்வெண்பாவடியால் வையகத்தார்
உள்ளுவவெல் லா மளந்தா ரோர்ந்து"

என்றும், ஆசிரியர் நல்லந்துவனார்,

"சாற்றிய பல்கலையுந் தப்பாவருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பாலர்."

என்றும், மதுரைத் தமிழ்நாகனார்,

"எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இலலையால்." என்றும்,

செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்,

"உள்ளுந ருள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு"

என்றும் கூறினார்கள்.

வள்ளுவ ஜாதியிற் பிறந்தார், வளர்ந்தார், ஆதலால் வள்ளுவர் என்னும் பெயர்பெற்றாரென்று சிலரும், லோகோபகாரமாகத் திருக்குறளென்னும் அரியபெரிய நூலை இயற்றித் தந்தருளிய வண்மையை யுடைமையால் வள்ளுவர் என்னும் பெயர் பெற்றாரென்று பலரும் உரைப்பர். இவரது சிறப்புப்பற்றி இவர் பெயர்க்குமுன் "திரு" என்னும் அடைமொழி கொடுப்பதுடன், தலைவர் என்னும் பொருள்

தரும் "நாயனார்" என்பதையுங் கூட்டி இவரைத் "திருவள்ளுவ நாயனார்" என்பர்.

இவர் உலகத்தில் அரசர் முதல் அனைவரும் மெச்சத்தக்க சிறந்த ஞானி. இவர் தம்மை அக்காலத்தில் மன்னர் சிரமேற்கொண்டு வணங்கிப்போற்றி உபசரித்து ஏற்றுக்கொள்ள கூடுமாயினும், "தெண்ணீரடு புற்கையாயினும் தான்தந்த(து), உண்ணலின் ஊங்கினியதில்" என்று எண்ணி, ஐச்வரியவான்களை அநுஸரியாமல், தாம் தம் தேகப்ரயாஸையினால் (லோகோபகாரமாக திருக்குறள் நூலை இழைத்ததேபோல) தாளாண்மையுடன் நூலிழைத்து ஆடைநெய்து விற்று வரும் பணங்கொண்டு த்ருப்தியுடன் வாழ்ந்து வந்தார். இவர் கைத்தொழிலை ஆதரித்துக்கொண்டதைத் தற்காலத்தவர் கவனித்தல் வேண்டும். இவர்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றின் புறத்தாற்
போ ஒய்ப் பெறுவதெவன்"? [றிற்
"அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை."

என்று தாமே திருவாய்மலர்ந்தருளியபடி இல்லறத்தை மேற்கொண்டு ஆசரித்து வந்தார். இவரது வாழ்க்கைத் துணைவி மார்க்கஸகாய ரென்பவரது புத்ரியாகிய வாஸுகி என்பாள். இவர்க்கு அவள் பொன்னுக்கு ரத்னம்போல வாய்ந்தவள்; இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளெல்லாம் உடையவள்; வருவாய்க்குத் தக்கபடி வாழ்க்கை புரிபவள்; கற்பென்னுங் கலங்காநிலைமை பூண்டவள்; கணவனைத் தெய்வமென்று கருதுபவள்.

இவர் அக்காலத்தில் பக்வமுடைய பலர்க்கும் ஞானோபதேசஞ்செய்து உய்வித்தனர். இவரது சிஷ்யர்களில் முக்யர் வணிகராகிய ஏலேல சிங்கர் என்பவர். இவரிடம் திருவள்ளுவர் நூல் வாங்கி ஆடை நெய்தாரென்பர். ஏலேல சிங்கரது மகனாகிய அழகானந்தன் முதலியோர் திருவள்ளுவரை நோக்கி "கற்றற்கு எளியதாய் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையுந் தருவதாகிய ஓர் நூலை இயற்றித்தந்தருளல்வேண்டும்" என வேண்ட, அவர் 'அங்ஙனமே ஆக' என்று, அனைவர்க்கும் பயன்படுவதாக வேதாகம ஸாரங்களைத் திரட்டி, அறம், பொருள், இன்பம் என முப்பாலாக்கி, ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களால் ஒவ்வொரு பொருளையும் வற்புறுத்திக் கூறும் பப்பத்துப் பாடல்களையுடைய நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களாக ஒரு நூல் செய்து, அதற்குத் திருவள்ளுவரென்னும் தம் பெயரை நிறுத்தினார். பின்பு இவர் அதனை அக்காலத்தில் கல்வியிற் சிறந்தோராயிருந்த மதுரைக் கடைச்சங்கப் புலவர் முன்னிலையில் அரங்கேற்ற வெண்ணி, எடுத்துக்கொண்டு புறப்பட்டு, வழியில் இடைக்காடரும் தம் உடன்பிறந்தவளாகிய ஔவையும் எதிர்ப்பட, அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு சென்று, மதுரையை அடைந்து, அங்கு நக்கீரர் முதலிய சங்கப்புலவர் வினவிய அரிய வினாக்களுக்கெல்லாம் செந்தமிழ்ப் பாடலினால் விடையளித்து, அவர்களை வென்று, தாம் இயற்றிய நூலை அவர்கள்முன் எடுத்தோதி அரங்கேற்றினார். அதைக் கேட்டு அக்காலத்தில் மதுரைமா நகரில் அரசு வீற்றிருந்த உக்ரப்பெருவழுதியும், சங்கப் புலவர் நாற்பத்தொன்பது பேரும், திருவள்ளுவரையும் அவரது திருக்குறளையும் புகழ்ந்து நாற்பத்தொன்பது வெண்பாப் பாடி அதனை மிகவும் கொண்டாடினார்கள். அப்பாடல்கள் அடங்கியநூல் திருவள்ளுவமாலை" எனப் பெயருடையது. பிறகு திருவள்ளுவர் திருமயிலைக்கு மீண்டு, தமது இல்லஞ் சேர்ந்து பழையபடியே செய்தொழிலிற் பாபமில்லாததாகிய நெய்தொழிலைக் கைக்கொண்டு பல்நாள் சிறக்க இல்லறம் நடத்தி வந்தார்,



இங்ஙனமிருக்க, ஒருவர் இவர் மனைக்குச் சென்று, "இல்லறமோ, துறவறமோ சிறந்தது? சொல்லியருளவேண்டும்" என்று வினவி இவரது விடையை எதிர்பார்த்துப் பலநாள் காத்திருந்தனர். நாயனார் உத்தரமொன்றுஞ் சொல்லாமல் வந்தவரே அறிந்து போகும்படி சில செய்தார். அவையாவன:— ஒருநாள் தமது வாழ்க்கைத் துணைவிவாஸுகியம்மை கிணற்றில் ஜலந்தூக்கிக் கொண்டிருக்கையில் அவளை அழைத்தார். அவள் பாதிக் கிணற்றளவில் தூக்கின குடத்தை அவ்வாறே நிற்க விட்டு வந்தாள். அன்றியும் அவள் தமக்குப் பழையது பரிமாறி நிற்கையில், தாம் 'இது செந்தழல்போற் சுடுகிறது' என்றார். அவள் விரைவில் விசிறியெடுத்து அசைத்தாள். மற்றும், தாம் பகலில் ஆடைநெய்யும்போது கையிலிருந்த குழல் தவறிவிழுந்ததை எடுத்தற்கு மனைவியை 'விளக்குக்கொண்டுவா' என்றார். உடனே அவள் கொண்டுவந்தாள். இவற்றை வந்திருந்தவர் கண்டு, "கற்புடைய காரிகை வாய்த்தால் இல்லறமே சிறந்தது, இல்லையாயின், துறவறம் சிறந்தது" என்று எண்ணி வள்ளுவரை வணங்கி விடைப்பெற்றுப் போயினர்.

ஒரு நாள் ஸாயங்காலம் இவர் தாம் நெய்த ஆடையை விற்கும் பொருட்டுக் கடைத்தெருவிற் கொண்டுபோய்க் கையிற்பிடித்துக் கொண்டு நின்றார். அப்பொழுது இவரது திருக்குறளைப் படித்த சிறுவனொருவன், அவர் தம் குறளில் கூறியபடி அநுஷ்டானமுடையவரா என்பதை அறியவேண்டி, இவரிடம் அணுகி, இவரிடத்திலிருந்த ஆடையைக் கையில்வாங்கி, 'இதன்விலை என்ன?' என்று வினவினான். அதற்கு இவர், 'ஒருபணம்' என்று கூறினார். அவன் அதைக் குறுக்கே கிழித்து, 'இப்பாதியின் விலை என்ன?' என்று கேட்டான். இவர், 'அதன் விலை அரைப்பணம்' என்றார். மீண்டும் அந்தப்பயல், அந்தப்பாதியையும் இரண்டாகக் கிழித்து, 'இப்பொழுது இதன்விலை யாது?' என்றான். இவர், 'கால் பணம்' என்றார். அச்சிறுவன், தான் அவ்வாடையை ஒன்றுக்கும் உதவாதபடி கிழித்துவிடவும், இவர் பொறுத்திருந்ததைப் பார்த்து மகிழ்ந்து விலகிப்போய், பின்னும் இவரது சாந்தத்தைப் பரிசோதிக்க வேண்டுமென்று, மறுநாள், இவர் வீட்டில் நெய்துகொண்டிருக்கையில் அங்குச்சென்று, இவர் மனைவியாரைச் சண்டைக்கு இழுத்தான். இவர், தகுதியில்லாத அவன் செய்கையைக் கண்டு பொறாமல், வேலையைவிட்டு எழுந்துபோய், அவனைப்பிடித்து இறுக்கிக் கட்டுவாராயினர். அப்போது அச்சிறுவன் 'உமது புலமை பிறர்க்கு உபதேசித்தற்காகவே அமைந்தது போலும்!

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

என்று நீர் உமது நீதிநூலிற் கூறியது என்ன பயனுடையது?' என்றான். அதற்கு இவர், "நீ எனது நீதிநூலை முற்றும் கற்றிலை போலும்:

"செய்தக்க வல்லசெயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்."

என்று மேலே அந்நூலிலேயே கூறப்பட்டிருப்பதை ஆய்ந்து அறிவாயாக' என்றார். அவன் அதனைக்கேட்டு இவரது திறத்திற்கு வியந்து, தான் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டி, 'ஒவ்வொரு நீதியும் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப உணர்ந்து அநுஸரிக்கத்தக்கது' என்று அறிந்துகொண்டு, அவரிடம் விடைபெற்றுச் சென்றான். இவர் விஷயமாக இவை முதலிய பற்பல வரலாறுகள் வழங்குகின்றன.

இவரது மதம் இன்னதென்று எவ்விதத்திலும் நன்கு விளங்கவில்லை. இவர் தமது

திருக்குறள் நூலின் முதலிற் கூறிய கடவுள் வாழ்த்தும் பல சமயங்களுக்கும் பொதுவாகவேயுள்ளது. இவர்,

“அகரமுதல வெழுத்தெல்லாம்: ஆதி,
பகவன் முதற்றே யுலகு”

என்ற முதற் குறளில் தமது தாய்தந்தையர் இறந்து நன்றியறிவு பாராட்டுதலாகவும் “ஆதி பகவன்” என்ற பெயரை அமைத்தார் என்பர் சிலர்.

மாட்சிமைக்குணம் மிக்க பத்தினி வாஸுகி இறந்தபோது திருவள்ளுவர் ஞானியாயினும், அவருக்கு இனிய அவளது பிரிவைப் பொறுமல் வாய்விட்டு,

“அடிசிற்கினியாளே ! அன்புடையாளே !
படிசொற்றவறுதபாவாய் !—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழூஉம் பேதையே! போதியோ?
என்தூங்கும் என்கண் இரா”?

என்று சொல்லிப் புலம்பினர். இதனால் இவரது மனைவியின் இனிய குணம் நன்கு விளங்குகின்றது.

வள்ளுவர் தம் மனைவியாள் இறந்த பின்பு மயிலாப்பூரில் ஒரு மாசி மாஸத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் முக்தியடைந்தார். இவர் தேகவியோகமானதை அக்காலத்துத் தொண்டைமண்டலத்து மன்னன் கேள்வியுற்று, தனது ராஜதானியாகிய காஞ்சிபுரத்தைவிட்டு, மயிலாப்பூருக்கு விரைந்து வந்து, ஒரு சிறந்த சிற்பியைக் கொண்டு அத்திருவள்ளுவ நாயனாரது விக்ரகமொன்றைச் செய்து, ஆகமங்களிற் கூறிய விதி முறைப்படி அம்மயிலைமா நகரத்திலேயே அத்திருவுருவத்தை ப்ரதிஷ்டை செய்து, அதனை பூஜித்து நற்கதிபெற்று உஜ்ஜீவிக்கும்படி லிங்கதாரணர்களாகிய வீரசைவ சமயத்தவர் வசத்தில் ஒப்பித்தான் என்பர். இந்நாளிலும் அவர்களே அந்த விக்ரகத்தை பூஜித்து வருகின்றனர்.

---

## THE NEW CONCEPTION OF PUBLIC HEALTH.

### பொதுஜன ஸௌக்யத்தைப் பற்றிய புதுக்கொள்கை.

சென்ற சிலகாலமாக வைத்ய சாஸ்த்ர வித்பன்னர்களும் ராஜாங்க அதிகாரிகளும் பொதுஜன ஸுகாதாரத்தைப்பற்றி அதிகம் கவனித்து வருகிறார்கள். வைத்ய சாஸ்த்ர ஸம்பந்தமான ஆராய்ச்சிகள் நாளுக்குநாள் வ்ருத்தியடைந்து, பழைய காலயக் குருட்டு நம்பிக்கைகள் ஆதாரமற்றவையென்றும், பழைய சாஸ்த்ரீயக் கொள்கைகளில் பல அநுபவத்துக்கு ஒத்து வரவில்லையென்றும் ஸ்தாபித்து வருகின்றன. பொதுஜன க்ஷேமத்தால் தேசத்துக்கு ரொம்ப நன்மையுண்டென்று கண்டு அது விஷயமாய் முதல் முதலில் ஊக்கம் காட்டினவர் முன்பு இங்லண்டின் மந்த்ரியாயிருந்த ஜோஸப் சேம்பர்லெய்ன் என்பவரே. ஜனங்கள் அஸௌக்யமாயிராமல் திட சரீரிகளாயிருந்தால், அவர்கள் செய்யக்கூடிய வேலை அதிகமாகும். உதாரணமாக ஸிலோனில் உள்ள கூலியாட்களில் பெரும்பாலார் ஒருவகைச் சிலந்தி வ்யாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வ்யாதியில்லாமலிருந்தால் அவர்கள் வ்யாதிஸ்தர்களை விடக் கால்பங்கு அதிகமான வேலை செய்யமுடிகிறது. ஆகவே எல்லாக் கூலியாட்களையும் மேற்சொன்ன வ்யாதியிலிருந்து ஸ்வஸ்தப்படுத்தினால், அவர்கள் ஸுகசரீரிகளாக ஆவதோடு அவர்கள் செய்யக்கூடிய வேலையும் அதிகமாகும்.

மிஸ்டர் சேம்பர்லெய்னுடைய கொள்கை



களை ஜனங்கள் இப்போதுதான் அதிகமாக கவனித்து வருகிறார்கள்.

இவ்விதம் பொது ஜனங்கள் ஸுகாதார விஷயமாக அதிக ஊக்கம் காட்டிவந்தாலும், இங்லண்டிலும் பிற தேசங்களிலுமுள்ள படித்த வகுப்பார்களிடங்கூட இன்னும் வைத்ய ஸம்பந்தமான மூட நம்பிக்கைகள் குடிகொண்டிருக்கின்றன. தங்கத்தால் செய்த கல்யாண மோதிரத்தால் கண் இமைகளில் தேய்த்தால் கண் கட்டிகள் ஸ்வஸ்தமாகுமென்று பல ஆங்கிலேயர்கள் நம்பி வருகிறார்கள். காதில் த்வாரமிடுவதால் கண் நன்றாய்த் தெரியுமாம். சந்த்ரனின் வளர்பிறை தேய்பிறைக்குத் தகுந்தபடி பைத்யக்காரர்களின் பைத்யரோகம் மாறுபாடடையுமாம். க்ஷய ரோகம் வம்சபரம்பரையாக வரும் நோயாம். சிவப்பு ப்ளானலைக்கொண்டு தேய்ப்பதால், தொண்டைப் புண் ஸ்வஸ்தமடையுமாம். இன்னும் பலர் சின்னம்மையும் வேறு சில வ்யாதிகளும் குழந்தைகளுக்கு என்றைக்காவது ஒருநாள் வந்தே தீரும்; அது சீக்ரம் வந்து விடுவதுதான் நல்லது; குழந்தைகளை மேற்சொன்ன வ்யாதிகண்ட குழந்தைகளுடன் சேராமல் பிரித்து வைக்க வேண்டியது அவச்யமில்லை. அப்படிப் பிரித்து வைப்பதால் ப்ரயோஜனமுமில்லை என்று சொல்லி அவ்விதமே அநுஷ்டித்தும் வருகிறார்கள்.

#### பொதுஜன ஸுகாதாரம்.

சென்ற சிலகாலமாக வைத்திய சாஸ்த்ரத்தின் அபிவ்ருத்தியால் பொதுஜன ஸுகாதார விஷயமாக புது அபிப்ராயங்களும் லக்ஷ்யங்களும் தோன்றியிருக்கின்றன. உதாரணமாக பொதுஜன ஸுகாதாரம் என்றால் என்னவென்பதே இப்போது மாறுதலடைந்திருக்கிறது. இப்போது பொதுஜன ஸுகாதாரமென்பதில் (1) ஸுகாதாரத்தை வ்ருத்தி செய்வதோ (2) வ்யாதியை வராமல் தடுக்கவோ செய்யப்படும் எல்லா ஏற்பாடுகளும் அடங்கும். இதை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று மனிதனுடைய தேகத்தை ஸௌக்யமுள்ளதாக வைப்பதைப்பற்றியது. இரண்டாவது மனிதனைச் சுற்றியுள்ள சுற்றுப்புறங்களை ஸுகாதாரமுள்ளதாக வைப்பதைப் பற்றியது. ஸுகாதார விஷயமாய் உள்ள பழைய கொள்கைக்கும் புதிய கொள்கைக்கும் வித்யாஸமென்னவென்றால், பழைய கொள்கையில் மனிதன் இருக்கும் இடத்தை ஸுகாதாரமுள்ளதாக வைத்துக்கொள்வதே முக்யம். புதிய கொள்கையில் வெளிப்புற ஸுகாதாரம் அவ்வளவு முக்யமல்ல. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தேகத்தை ஸௌக்யமாகவும் வ்யாதி அணுகாதபடியும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே முக்யமானது. புது முறைப்படி மனிதன் தனக்குவரும் வ்யாதிக்குத் தானே காரணமாகிறான்.

வைத்ய சாஸ்த்ரிகள் தொற்று நோய்களை வராமல் தடுக்க அவை உண்டாகும் வழியையும், அவைபரவும் மார்க்கத்தையும் சரியாகக் கண்டுபிடிப்பதே தக்க ஸாதனமென்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். சில வர்ஷங்களுக்கு முன்னால் வரையில் ஸுகாதார சாஸ்த்ர வித்பன்னர்கள் இவைகளை அதிகம் கவனிக்கவில்லை. உதாரணமாக ஒன்று சொல்லலாம். 20 வர்ஷத்துக்கு முன்னால் யாவரும் காலராவானது ஜலத்தின் மூலமாகத்தான் ஜனங்களிடம் பரவுகிறதென்று எண்ணி வந்தார்கள். வேறு வழியாகப் பரவக்கூடுமென்று எவரும் எண்ணினதில்லை. இப்போதோ தொற்று வ்யாதிகள் முக்யமாய் 6 விதமாகப் பரவுவதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அவையாவன: ஜலம், பால், ஆகாரம், ஈக்கள், கடிக்கும் பூச்சிகள், எலி, முதலிய ஜந்துக்கள் ஒரு

வர்மேல் ஒருவர் படுவது, வ்யாதிஸ்தர் மூச்சை ச்வாஸிப்பது முதலியவையாம். ப்ளேக், மலேரியா, ஸன்னிபாத ஜ்வரம் முதலிய வ்யாதிகள் பரவுவதற்கு எலி, கொசு முதலிய கடிக்கும் பூச்சிகள் ஆகிய இவைகள் முக்ய காரணமாக இருக்கின்றன.

ஆகவே பொது ஸுகாதாரம் மாத்ரம் வ்யாதி பரவுவதைத் தடுக்குமென்று சொல்லுவதற்கில்லை. எந்த அசுத்தத்தால் அல்லது எந்தக் காரணத்தால் வ்யாதி பரவுகிறதோ அதைத்தடுப்பதால் வ்யாதி பரவாமலிருக்கும்.

1896-ம் வர்ஷத்தில் ப்ளேக் வந்தபோது எலிகளையும் ப்ளேக்கைப் பரவச்செய்யும் ஒருவகை ஈக்களை நாசம் செய்வதற்காகப் புகை போடவும், பெர்க்ளோரைட் அப் மெர்குரி என்னும் மருந்தால் வ்யாதிக் காதாரமானவைகளென்று ஸந்தேகித்த இடங்களை சுத்தம் செய்யவும், சாக்கடைகளில் மருந்து ஊற்றவும் கோடிக் கணக்காகப் பணம் செலவழிக்கப்பட்டது. ஆனால் ஸாதகம் அதிகமாய் ஒன்றும் ஏற்படவில்லை. ஸாதாரண ஸுகாதார முயற்சிகளால் ப்ளேக்கைத் தடுப்பது முடியாத கார்யமென்று தெரியவந்தது. இப்போது கண்டுபிடித்திருப்பது என்னவென்றால், ப்ளேக் வ்யாதியுள்ள ஒருவகை ஈ மனிதனைக் கடிக்காதபடி செய்தால், வ்யாதி பரவாதென்பதே. மேற்சொன்ன ஈ வ்ருத்தியடைய எலி வேண்டியிருப்பதால், எலி வீட்டுக்குள் வராதபடி செய்யவேண்டும். இதற்கு வீட்டில் எலிக்கு ஆகாரம் கிடைக்காதபடிக்கு செய்தும், வீட்டில் குப்பை, கல், மண் இவைகளின் குவியல்களில் அவை தங்கியிராதபடி குப்பை முதலியவைகளை அப்புறப்படுத்தியும் விடவேண்டும். இது முன் முறையைவிட ஸுலபமென்றாலும், ஜனங்களுடைய அச்சத்தையாலும், அறியாமையாலும், அனுஷ்டிக்கப் படுவதில்லை.

இன்னொரு உதாரணம் சொல்லலாம். சமையலறையில் பாத்ரம் பண்டங்களும், இடங்களும், பொதுவாய் ரொம்ப சுத்தமாய்க் காணப்பட்டாலும், சமையல்காரியின் கையில் சேரக்கூடிய அழுக்கு சுத்தம்செய்த பாத்ரத்தில் சேரவில்லையென்று சொல்ல முடியுமா? சுத்தம் செய்த பாத்ரத்தின்மேல் மூச்சுவிடுவதாலும், இருமுவதாலும், வ்யாதி க்ருமியுள்ள காற்றும், இருமும்போது வெளிவரும் வ்யாதி க்ருமியுள்ள ஜலம், கோழை இவைகளின் சிறு துளிகளும் அந்தப் பாத்ரத்தில் சேரமாட்டாவா? பொதுவாய்க் கண்ணுக்குத் தெரியும் அழுக்கால் வ்யாதி பரவுவது கிடையாது. சிரிக்கும்போதும் தும்பும்போதும் இருமும்போதும் வெளிவரும் கண்ணுக்குத் தெரியாததும், வ்யாதிக்ருமி ஸம்பந்தமுள்ளதுமான த்ரவத் துளிகளால் தான் அந்த வ்யாதி அதிகமாகப் பரவுகிறது. பொதுவாய்ச் சொல்லுமிடத்து பார்வைக்கு அவலக்ஷணமுள்ளதும் கெட்ட நாற்றமுள்ளதுமான அழுகின குப்பை செத்தையால் தொற்று வ்யாதி பரவுவதில்லை. வ்யாதி க்ருமிகளுள்ள பல ஜலங்கள் அதில் சேர்ந்தால்தான் அவை அபாயகரமானவையாகின்றன.

## மலேரியா.

மலேரியா, எண்டரிக் என்னும் ஸன்னிபாத ஜ்வரம் ஆகிய இந்த வ்யாதிகளைப்பற்றி கவனித்தால் வைத்ய சாஸ்த்ரம் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிற தென்பது நன்கு விளங்கும்.

மலேரியா என்னும் சொல்லுக்குக் கெட்ட காற்று என்று அர்த்தம். சென்ற நூற்றாண்டில் கடைசிப் பகுதிவரையில் யாவரும் இந்த வ்யாதி சதுப்பு நிலங்களில் உண்டாகும் ஒரு கெட்ட காற்றால் உண்டாகிறதென்று எண்ணிவந்தார்கள். அக்காலங்களில் மனிதர்கள் மூலமாக இந்த வ்யாதி ஒருவரிடமிருந்து



ஒருவரிடம் பரவக்கூடுமென்று எவரும் எண்ணவில்லை. மலேரியாக் காய்ச்சலுள்ள ப்ரதேசங்களில் அந்த வ்யாதி வராமல் தடுக்க க்வினைன் சாப்பிடுவதும், வீடுகளை உயர்ந்த தூண்களின்மேல் கட்டுவதுமே வழக்கமாக இருந்தன. வீட்டை உயரக் கட்டுவதன் காரண மென்னவென்றால் சதுப்பு நிலத்திலிருந்து உண்டாகும் விஷவாயு பூமிக்கு ஸமீபத்திலிருக்கிறதென்று எண்ணிவந்தார்கள்; வீட்டை உயரத்தில் கட்டினால், வீட்டிலுள்ளோர் கெட்டகாற்றை ச்வாஸிக்க நேரிடாது என்பது அவர்களுடைய எண்ணம். சில காலத்துக்கு முன் லாவரன் என்னும் நிபுணர் மனித ரத்தத்தில் மலேரியா வ்யாதி க்ருமியைக் கண்டுபிடித்தார். சிலகாலத்துக்குப் பிறகு இரண்டு சாஸ்த்ர நிபுணர்கள் இந்த வ்யாதி க்ருமியானது அனொபிலிஸ் என்னும் ஜாதிக் கொசுவால் மனிதர்களுக்குள் பரவக் கூடுமென்று கண்டுபிடித்தார். இதன்மேல் மலேரியா ஸம்பந்தமான வைத்ய சாஸ்த்ரக் கொள்கைகளெல்லாம் மாறுபாடடையலாயின. ஒரு மலேரியா வ்யாதிக்காரன் கொசுவின் மூலமாக இதர ஸுதேகிகளுக்கும் மலேரியா வ்யாதியைப் பரவச் செய்யக் கூடுமென்று ஏற்பட்டது. வ்யாதி பரவுவதற்கான மார்க்கங்கள் தெரியவரவே அதைத் தடுப்பதற்கான மார்க்கங்களையும் ஆலோசிக்கலானார்கள். அதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன. அவையாவன: (1) வ்யாதிஸ்தருடைய தேக ரத்தத்தில் உள்ள மலேரியா க்ருமிகளை க்வினைனை உள்ளுக்குக் கொடுத்து நாசம் செய்வது. (2) மலேரியா பரவுவதற்கு ஸாதகமாயுள்ள கொசுக்களை நிர்மூலமாக்குவது. (3) மனிதர்களுக்கு கொசுக்கடி ஏற்படாமலிருக்கும்படி ஜாக்ரதை எடுத்துக் கொள்ளுவது. இதன்மேல் வ்யாதியைத் தடுப்பதற்கான வழிகளைப் பற்றி இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டன. ஒரு கக்ஷியார் சொன்னதென்னவென்றால், கொசு உண்டாவதற்கு ஸாதகமாயுள்ள சதுப்பு நிலங்களை யெல்லாம் நீர் வடித்து கட்டாந்தரையாக்கிவிடவேண்டுமென்றும், குளம் குட்டைகளில் கிரஸின் எண்ணெய் ஊற்றி அவைகளில் கொசு வ்ருத்தியாகாதபடி செய்ய வேண்டுமென்றும், இந்த வேலைகளைச் செய்ய கொசு நிவாரணப் படைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் சொல்லி வந்தார்கள். இன்னொரு கக்ஷியாரோ இந்த மாதிரி வேலைசெய்து ஒழிப்பதென்பது அஸாத்யமென்றும், தக்க அளவில் க்வினைன் சாப்பிட்டு ரத்தத்திலுள்ள மலேரியா க்ருமிகளைக் கொல்ல வேண்டுமென்றும், கொசு கடிக்காமலிருப்பதற்காக கொசு வலை உபயோகிக்க வேண்டுமென்றும் கொசு வராதபடி வீடுகள் கட்டவேண்டுமென்றும் சொன்னார்கள். இப்படி இரண்டு கக்ஷிகளுக்கும் அபிப்ராயபேதம் ஏற்பட்டிருக்கும்போது வைத்ய ஆராய்ச்சியால் இன்னொரு முக்ய விஷயம் தெரிய வந்தது. ஸமீபத்தில் பம்பாயில் மலேரியா ப்ரபலமாயிருந்தபோது செய்த ஆராய்ச்சிகளால் குடித்தனக்காரர்களின் வீடுகளில் உள்ள சிறு கிணறுகளில் தான் வ்யாதியைப் பரவச் செய்யும் கொசு உற்பத்தியாகிறதென்றும், வெளியிடங்களிலுள்ள சதுப்பு நிலங்களில் உண்டாகும் கொசுக்கள் வ்யாதியைப் பரவச்செய்யவில்லையென்றும் தெரியவந்தது. ஆகவே கிணறுகளைத் தூர்த்தோ மூடியோ விட்டால் போதும்; அக்கம் பக்கத்து சதுப்பு நிலங்களை யெல்லாம் கட்டாந்தரையாக்க முயலவேண்டியதில்லை. இன்னும் சாஸ்த்ர ஆராய்ச்சியால் வ்யாதியைத் தடுப்பதற்கான முறைகள் இன்னும் ஸுலபமாகலாம். வெளியிலுள்ள சதுப்பு நிலங்களை யெல்லாம் மேடாக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

இதனால் நாம் அறிந்து கொள்ளக்கூடிய

தென்னவென்றால் ஒவ்வொரு வ்யாதிக்கும் காரணமின்னதென்றும், அது பரவும் விதம் இன்னதென்றும் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டும். பொது ஸுகாதாரத்தை மாத்ரம் நம்பியிருப்பதில் பயனில்லை.

காலஞ்சென்ற ஸர்ஜன் ஜெனரல் ஸர் பார்டிஸ் லூகிஸ் இந்தியாவில் பொதுவாய் ஸ்த்ரீகள் - அதிலும் தாய்மார்கள் தான் தொற்று வ்யாதியைப் பரவவிடுவதில் முக்ய காரணமாயிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார் அவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணம் வீட்டு ஸுகாதாரமும் குழந்தை வளர்ப்பும் தெரியாமையே. குழந்தைகளுக்கு எப்படியும் வ்யாதிவரும், அதைத் தடுப்பதில் பயனில்லையென்றும், குழந்தைகள் ரொம்ப சிறுவயஸாயிருக்கும்போதே வ்யாதிவந்தால் வ்யாதி கடுமையாயிராதென்றும் எண்ணி, தொற்று வ்யாதிவந்தால் வரட்டுமென்று சும்மா இருந்து விடுகிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு கடும் வ்யாதிகள் உண்டாகி அவைகள் சாச்வதமாக செவிடும், குருடுமாகிவிடுகின்றன. அல்லது அவைகளுக்கு க்ஷயரோக முண்டாகி வெகுநாளிருந்து உபத்ரவப்படுத்துகிறது. பிறந்தது முதல் 14 - வயதுவரையில் குழந்தைகளைத் தாய்மார்களே பராமரித்து வருகிறார்களாகையால், தாய்மார்களுக்கும் பெண்களுக்கும் தொற்று வ்யாதியைத் தடுப்பதெப்படி என்றும், ஸுகாதாரத்தை எப்படி கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும் கற்பிக்கவேண்டும். கவர்ன்மெண்டாரும் வ்யாதிக்காதாரங்களையும் அவை பரவும் மார்க்கங்களையும் கவனிக்கவேண்டும். ஜலம், பால், ஆகாரம் ஆகிய இவைகள் சுத்தமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஈக்கள் வ்ருத்தியாகாதபடி வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். ஸ்த்ரீகளோ ஆகாரம், பால் முதலியவற்றில் ஈக்களாலும் இதர காரணங்களாலும் அசுத்தம் சேராமலிருக்கும்படிக்கும் எலி, மூட்டுபூச்சி முதலியவை வீட்டில் சேராதபடிக்கும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

## HOME INDUSTRIES.
## வீட்டுக் கைத்தொழில்கள்.

வீட்டுக் கைத்தொழில்கள் என்றால், ஒவ்வொருவரும் தாம் கைக்கொண்டிருக்கும் ஜீவன மார்க்கத்திலிருந்து கிடைக்கும் வரும்படியை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், தமது ஒழிவுநேரங்களில் செய்யும் வேறு கைத்தொழில்களாகும். உதாரணமாக ஒரு வ்யவஸாயி தனது ஒழிவு நேரங்களில், தனது ஸ்வல்ப வரும்படியை அதிகப் படுத்தவேண்டி கூடை முடைதல், பாய் பின்னல், கயிறு திரித்தல் முதலிய வேலைகளைச் செய்து பொருள் ஸம்பாதித்தால், அவை வீட்டுக் கைத்தொழில்களாகும் என்று சொல்லலாம். சிலர் வீட்டில் செய்யப்படும் அல்லது செய்யக்கூடிய எல்லாக் கைத்தொழில்களும், (அவைகள் முக்ய ஜீவனத்தொழில்களாயிருந்தாலுஞ் சரி, உதவித் தொழில்களாயிருந்தாலுஞ் சரி,) வீட்டுக் கைத் தொழில்களாகுமென்று எண்ணுகிறார்கள். இதன்படி பார்த்தால் அநேகமாய் எல்லாக்கைத் தொழில்களையும் வீட்டிலேயே செய்யக்கூடுமாகையால், அவைகளையெல்லாம் வீட்டுக்கைத் தொழில்களென்றே சொல்ல வேண்டும். வேறுசிலர் குடும்பச்செலவுக்கில்லாமல் ஸொந்தச் செலவுக்குப் பணம் வேண்டுமென்பதை உத்தேசித்து வீட்டிலுள்ளார் ஒழிந்த நேரங்களில் ஏதேனும் தொழில்கள் செய்வதும், கடினமான வேலைகள் செய்து அலுத்தவர்கள், தங்களுடைய ஒழிவு நேரங்களில் விளையாட்டாகவும் ச்ரமபரிகாரமாகவும் ஏதேனும் தொழில்கள் செய்வதுமே வீட்டுக் கைத்தொழில்கள் என்று சொல்லுகிறார்கள்.



பணக்காரர்களும், தங்கள் வரும்படியை அவச்யம் அதிகப் படுத்தவேண்டு மென்றில்லாத மத்யதர வகுப்பாரும் கைத்தொழில்கள் செய்வதை இந்த வகையில் சேர்த்துக்கொள்ளலாம்.

வீட்டுக் கைத்தொழில்கள் பலவகைப்படும். அவைகள் பற்பல தேசங்களில் பற்பல விதமாக நடத்தப்பட்டு வருகின்றன. ஜெர்மனியிலும் இதர தேசங்களிலும் உள்ள வ்யவஸாயிகள் நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படி போதாமல் வேறு தொழில்களைச் செய்து பணம் ஸம்பாதிக்கிறார்கள். அங்கே வேறு வேலைகளில் அமர்ந்துள்ளவர்களும் தங்களுக்குக் கிடைக்கும் வரும்படி செலவுக்குப் போதாமல், தங்களுடைய ஓய்வு நேரங்களில் ஏதாவது வேறு வேலைசெய்து பொருள் ஸம்பாதிக்கிறார்கள்.

அன்ய தேசங்களில் வீட்டுக் கைத்தொழில்கள் எவ்விதம் நடந்து வருகின்றன என்பதைக் கீழே விவரிக்கிறோம். முதல் முறை என்னவென்றால், விற்பனையாக வேண்டிய ஸாமான்களை ஒவ்வொன்றாக ஒரு மனிதரே முழுமையும் செய்து முடிப்பது. இந்த முறை இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. மூங்கில், பிரம்பு இவைகளால் கூடை செய்வது, உடைகள் தயார்செய்வது, யந்த்ரத்தாலும் கையாலும் மேல்ஜோடு (ஸ்டாக்கிங்ஸ்) செய்தல் முதலிய பின்னல் வேலை, பொம்மை செய்தல் ஆகிய இவைகள் இந்த முறையில் செய்யப்படுகின்றன.

இரண்டாவது முறை என்னவென்றால், ஒரு ஸாமானின் பல பாகங்களைப் பலர் செய்வதும், கடைசியில் ஒருவர் அவைகளை ஒன்று சேர்த்து முழுஸாமானாக்குவதுமாகும். இங்லண்டில் ஸ்டாக்கிங்ஸுகள் இந்த முறையில் தயார் செய்யப்படுகின்றன. சிலர் ஸ்டாக்கிங்ஸின் மேல் பாகத்தை மாத்ரம் செய்வார்கள். வேறு சிலர் கணுக்கால் பாகத்தை மாத்ரம் செய்வார்கள். இன்னும் சிலர் கீழ் பாகத்தைச் செய்வார்கள். இந்த மூன்று பாகங்களையும் சிலர் ஒன்று சேர்த்து முழு ஸ்டாக்கிங்ஸாகச் செய்வார்கள். இந்தியாவில் இந்த ஏற்பாடு அபூர்வம். இது இந்தியாவில் அனுஷ்டானத்துக்கு வந்தால், அநேக வீட்டுக் கைத்தொழில்கள் நன்றாக அபிவ்ருத்தியடையும். இந்த ஏற்பாட்டில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வேலையே செய்வதால், காலதாமஸம் ஏற்படுவதற்கில்லை. முதல் முறையிலோ, ஒரு பொருளின் பாகங்கள் ஒன்றுக்கொன்று உருவத்திலும் அளவிலும் வித்யாஸப்பட்டால், அதற்குத் தகுந்தபடி யந்த்ரங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளுவதில் காலம் வீணாகிறது. மேலும் அதிக மாறுபாடுகள் இல்லாமல் ஒரே மாதிரியாயிருக்கும் ஒரு பாகத்தை மாத்ரம் தினந்தோறும் செய்வதென்றிருந்தால் அதிகமான வேலை செய்யக்கூடும். ஒரு ஸாமான் முழுவதும் செய்து பிறகு அடுத்த ஸாமான் செய்வதென்றிருந்தால் அதிக வேலை செய்ய முடியாது.

மூன்றாவது முறையென்ன வென்றால், ஒரு பொருளின் தனித்தனி பாகங்கள் வீடுகளில் தயார் செய்யப்படும். இவைகளை பெரிய தொழில் சாலையார் வாங்கி ஒன்று சேர்த்து முழுப்பொருளாகச் செய்வார்கள். வைக்கோலால் பின்னிச் செய்யப்படும் தொப்

...கள் இங்கிலண்டில் இந்த முறையில் தான் செய்யப்படுகின்றன.

ஜப்பானிலும் வேறு சில தேசங்களிலும் ஸ்டாக்கிங்ஸ் முதலியவைகளும் நெருப்புக் குச்சிகள் வைக்கும் பெட்டிகளும் இந்தமுறையில் தான் செய்யப்படுகின்றனவாம். ஸ்விட்ஸர்லண்டில் கைக்கடியாரத்தொழிலும், இங்கிலண்டிலுள்ள ஷெப்பீல்டில் கத்திகள் செய்யும் தொழிலும் இந்த முறையிலேயே செய்யப்படுகின்றன.

தற்காலம் யந்த்ர ஸாதனங்களால் வ்யாபாரப் பொருள்களை வெகு சீக்ரத்தில் அதிகமாகத் தயார் செய்யக்கூடுமாகையால், அநேக வீட்டுத்தொழில்கள் க்ஷீணித்துக் கொண்டுவருகின்றன. இதனால் அநேகர் அதிகப்படி ஸம்பாத்யத்துக்கு வழியில்லாமல் போகிறார்கள்.

வீட்டில் செய்த ஸாமான்களில் கடைச்சல் பிடித்தல், த்வாரங்கள் போடுதல் முதலிய வேலைகள் செய்து, வேலையைப் பூர்த்திசெய்து, செய்யப்பட்ட ஸாமான்களை பார்வைக்கு லக்ஷணமுள்ளவைகளாக்கிக் கொடுக்க ஒரு தொழில்சாலை ஏற்பட்டால், வீட்டுக் கைத்தொழில்கள் தொழிற்சாலைகளின் போட்டியால் நாசமடையாமல் வ்ருத்தியாகலாம். இந்த ஏற்பாடு அன்ய தேசங்கள் பலவற்றில் உண்டு. உலோக வேலை, விளக்குகள் செய்தல், லாந்தல்கள் செய்தல், பூட்டுகள், குடைகள். முதலியவை செய்தல் ஆகிய இந்தத் தொழில்களிலும் வேறு சில தொழில்களிலும் இந்த ஏற்பாடு லாபகரமானது. சென்னப்பட்டணத்திலுள்ள பெரம்பூர், நாகப்பட்டணம், மதுரை முதலிய விடங்களில் உள்ள ரெயில்வே ஒர்க்ஷாப்புகளில் வேலை செய்யும் வேலையாட்கள் இரவில் பூட்டுகள், டப்ளர்கள், கூஜாக்கள், பூஜை ஸாமான்கள் ஆகிய இவைகள் செய்து தங்கள் மனைவிகளைக் கொண்டு விற்பனை செய்து லாபம் அடைகிறார்கள். மேலே சொன்னபடி ஒரு தொழில்சாலை ஒன்று ஏற்பட்டு, இவர்கள் செய்யும் ஸாமான்களின் பாகங்களை ஒன்று சேர்த்து தக்கபடி சீர்திருத்திக் கொடுத்தால், அவைகள் நல்ல விலைக்குப் போகும். செய்வதற்கும் செலவு அதிகமாகாது. ஸாமான்கள் சீக்ரம் தயாராகும். இந்த உதவி செய்வதற்கு கூலியாக தொழில் சாலைக்கு ஸ்வல்ப பணம் கொடுப்பதற்கும் தொழிலாளிகள் பின்வாங்க மாட்டார்கள்.

## THE INDIAN EMIGRATION CONFERENCE.

### இந்தியர்கள் அயல்நாடுகளுக்குக் குடியேறிப்போவதைப்பற்றிய கான்பரென்ஸ்.

சென்றமாஸத்திய 'ஜனோபிமானி'யில் லண்டனில் குடியேற்றத்தைப்பற்றிப் பரிசீலனை செய்த கான்பரென்ஸ் ப்ரேரித்திருக்கும் ப்ரேரணைகளில் சிலவற்றைத் தெரிவித்தோம். இப்போது மற்ற ப்ரேரணைகளைச் சுருக்கி எழுதுகிறோம்.

#### எமிக்ரேஷன் உத்யோகஸ்தர்களும் ஸிப்பந்திகளும்.

முன்சொன்ன ஏற்பாடுகளின்படி குடியேற்ற நாடுகளில் போய் வேலைசெய்ய ப்ரியப்படும் இந்தியர்களை சேகரித்து அனுப்ப இந்தியாவில் பின்வரும் உத்யோகஸ்தர்கள் நியமிக்கப்படவேண்டும்.

#### ப்ரோடக்டர் அப் எமிக்ரண்ட்ஸ்.

இந்த வார்த்தைக்கு வெளிநாடுகளுக்குச் செல்வோரின் ஸம்ரக்ஷகர் என்பது அர்த்தம். இப்பெயர் கொண்ட உத்யோகஸ்தர் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண கவர்ன்மெண்டால் நியமிக்கப்படவேண்டும்.

#### எமிக்ரேஷன் கமிஷனர்.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு எமிக்ரேஷன் கமிஷனர் இருக்கவேண்டும். இவர் குடியேற்ற நாட்டு கவர்ன்மெண்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட வேண்டும். அவர் குடியேற்ற நாட்டு ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்தவராயிருக்கவேண்டும். அந்த நியமனத்துக்கு இந்தியாவிலுள்ள மாகாண கவர்ன்மெண்டார் ஸம்மதிக்கவேண்டும்.

#### எமிக்ரேஷன் இன்ஸ்பெக்டர்கள்.

அவச்யமானால் க்ராமங்களில் ஆள் சேர்ப்பதை மேற்பார்வை செய்வதற்காக எமிக்ரேஷன் இன்ஸ்பெக்டர்கள் என்று சில உத்யோகஸ்தர்களை நியமிக்கலாம். அவர்கள் இந்தியர்களாகவும் இருக்கலாம். அவர்கள் எமிக்ரேஷன் கமிஷனருக்குக் கீழ் வேலை செய்யவேண்டும். கௌரவமானவர்களையே இந்த வேலைக்கு நியமிக்கவேண்டும். அவர்களுக்கு படிப்படியாய் உயரும்படி சம்பள விகிதம் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் எவ்வளவு ப்ரதேசம் மேற்பார்வைக்குக் கொடுக்கப்படுமென்பதை குடியேற்ற நாட்டு கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டின் அங்கீகாரத்தின்மேல் ஏற்படுத்தவேண்டும்.

#### ஆள்கள் சேர்க்கும் ஏஜெண்டுகள்.

இவர்கள் எமிக்ரேஷன் கமிஷனரிடம் லைஸென்ஸ் பெற்றுத்தான் ஆள் சேர்க்கவேண்டும். ஏஜெண்ட் வேலை செய்யும் ஜில்லாவின் மாஜிஸ்ட்ரேட்டும் லைஸென்ஸுக்கு ஸம்மதிக்கவேண்டும். ஏஜெண்டுகளுக்கு கமிஷன் கொடுக்காமல் நிரந்த்ர சம்பளம் கொடுக்கவேண்டும். நன்றாய் வேலை செய்திருந்தால் வர்ஷக் கடைசியில் ஸ்வல்ப தொகை ஸன்மானமாகக் கொடுக்கப்படும். மற்றவர்களைவிட குடியேற்ற நாடுகளில் போயிருந்து வேலை செய்தவர்களையே அதிகமாக நியமிக்கவேண்டும்.

#### ப்ரோடெக்டர் அப் இமிக்ரண்ட்ஸ்.

அயல்நாடுகளில் குடியேறப் போகிறவர்களை கவனிக்க இந்தியாவில் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு ப்ரொடெக்டர் நியமிக்கப் படுவதுபோல, அயல்நாடுகளுக்குக் குடியேறிப்போன இந்தியர்களை கவனித்துவர ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் ஒரு குடியேற்ற நாட்டு உத்யோகஸ்தர் ப்ரொடெக்டராக நியமிக்கப் படவேண்டும். அவருக்கு குடியேறிப்போகும் இந்தியர்கள் பேசும் பாஷை தெரிந்திருப்பதோடு, அவர் அவர்களுடைய ஆசார வழக்கங்களையும் நன்றாய் அறிந்திருக்கவேண்டும்.

#### பரிசீலனை செய்தல்.

மூன்று வர்ஷத்துக்கு ஒருதடவை இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவிலிருந்து ஒரு உத்யோகஸ்தரையாவது உத்யோகஸ்தரல்லாத ஒரு கனவானையாவது குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பி, அங்கே இந்தியர்களுடைய நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்து தெரிவிக்கும்படி செய்யவேண்டும்.

#### டெபோக்கள்.

மேற்சொன்ன முறைப்படி கூலியாள் சேகரிக்கப்படும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏஜெண்டுகள் சேர்த்த கூலியாட்களை ஒரு டெபோவில் முதலில் தங்கச் செய்யவேண்டும். அவர்களை இன்ஸ்பெக்டர்கள் பார்வையிட்டு வெளிநாடுகளுக்குச் செல்லலாமா என்று தீர்மானிக்கவேண்டும். இந்த டெபோக்களில் யாவரும் தாராளமாய்ப் போய்வரலாம். கூலியாட்கள் யாதொரு கட்டுப்பாட்டுக்கும் அடங்கியிருக்கவேண்டியதில்லை. ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அந்த டெபோக்களை எப்போது வேண்டுமானாலும் போய்ப் பார்வையிடலாம். ஜில்லாவில் உள்ள கௌரவமுள்ள கனவான்கள் டெபோக்...

களைப் போய்ப் பார்வையிடும்படி விஸிடர்களாக நியமிக்கப் படவேண்டும்.

இந்த ஜில்லா டெபோக்களிலிருந்து கூலியாட்களை பொது டெப்போவுக்கு அனுப்பவேண்டும். அங்கே கூலியாட்களை வைத்யரைக் கொண்டு பரிசோதனை செய்தபிறகு, அவர்கள் குடியேறிப் போகத்தக்கவர்கள் என்று எமிக்ரேஷன் கமிஷனர் தீர்மானிக்கவேண்டும். இந்த டெபோவைப் பார்வையிடுவதற்கும் உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் விஸிடர்களாக நியமிக்கப்படவேண்டும். ஸெண்ட்ரல் டெப்போக்களும் ஜில்லா டெபோக்களும் எமிக்ரேஷன் கமிஷனருடைய ஆதீனத்திலிருக்கவேண்டும்.

குடியேறுவதைப் பற்றிய நிபந்தனைகள்.

ஒரு குறிப்பிட்ட ஸங்க்யை ஆண்களுக்கு இத்தனை பெண்கள் இருக்கவேண்டுமென்று யாதொரு வரையறையுமிருக்காது. விசேஷமாக முழுக்குடும்பங்களை—அதிலும் கல்யாணமாகாத சிறு பெண்கள் உள்ள குடும்பங்களை அப்படியே பூர்த்தியாகக் குடியேறவிடத் தூண்டுவார்கள். 18-வயஸுக்கு உள்பட்டவர்கள் தனியாகக் குடியேறிப் போகவிடமாட்டார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்கள் அல்லது கார்டியன்களுடன் தான் குடியேறிப் போகலாம். கெட்ட நடத்தையுள்ளவர்கள் குடியேறிப் போகாமலிருக்கும்படி செய்வதற்காக, குடும்பத்துடன் குடியேறிப்போகாமல் தனியாகப் போகவிரும்பும் ஸ்த்ரீகளை அயல்நாடுகளுக்கு விடமாட்டார்கள்.

கூலியாளைச் சேர்ந்த வயோதிகர்களும் வேலைசெய்ய முடியாதவர்களும் குடியேறிப் போவதைத் தடுக்க மாட்டார்கள். அவர்களும் கூலியாளுடன் போகலாம். ஒவ்வொரு கூலியாளுக்கும், அவன் குடியேறிப்போகும் நாட்டில் வேலையின் தன்மை, சம்பளம் முதலியவை, அங்குள்ள வாழ்க்கை நிலைமை ஆகிய இவைகளைப்பற்றித்தெரிவிக்கும் ஒரு விவரணப் பத்ரம் கொடுக்கப்படும். அதை அவனுக்குத் தெளிவாய் வாசித்து விளக்கிக் காட்டவேண்டும்.

புண்ய க்ஷேத்ரங்களில் உத்ஸவ காலங்களில் கூலியாள் சேகரிப்பது நிறுத்தப்படும்.

திரும்பி வருதல்.

குடியேற்ற நாட்டுக்குப்போன கூலியாள் அங்கிருந்து மறுபடியும்' இந்தியாவுக்குத் திரும்பி வர ப்ரியப்பட்டால், அப்படி வருங்காலம் மூன்று வர்ஷத்துக்கு மேற்பட்டிருந்தால் அரைச்சார்ஜ் கொடுக்கப்படும். 5-வர்ஷத்துக்கு மேற்பட்டால், முக்கால் வாசிச் சார்ஜும், 7-வர்ஷத்துக்கு மேற்பட்டிருந்தால் முழுச்சார்ஜும் இனமாகக் கொடுக்கப்படும். ஆனால் கூலியாள் சென்ற மாஸத்து 'ஜனோபிமானி'யில் 387-ம் பக்கம் கடைசி பாராவில் சொல்லியபடி நிலம் வாங்கிக்கொண்டுவிட்டால், கப்பல் சார்ஜ் கொடுக்கப்பட மாட்டாது.

ஒரு தடவை கப்பல் சார்ஜ் உதவி பெற்று இந்தியாவுக்குப் போய்த் திரும்பி குடியேற்ற நாட்டுக்குப் போனால் இரண்டாந் தடவை கப்பல் சார்ஜ் கொடுக்கப்பட மாட்டாது. கப்பல் சார்ஜ் ஸம்பந்தமாக உதவி வேண்டுவோர் ஆறு மாஸத்துக்கு முன்னால் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

ஆனால் எந்தக் கூலியாளையாவது இந்தியாவுக்கு அனுப்புவது உசிதமென்று ப்ரொடெக்டர் அப் எமிக்ரெண்ட்ஸ் தீர்மானித்தால், அவர் எப்போது வேண்டுமென்றாலும் கவர்னருடைய அங்கீகாரத்தின்மேல் கூலியாளுக்குச் செலவில்லாமல் அவனை இந்தியாவுக்கு அனுப்பி விடலாம்.

ஒப்பந்தக்கூலி நின்று போகவேண்டும்.

ஒப்பந்தக்கூலி ஏற்பாடுள்ள குடியேற்ற நாடுகளில் ஏற்கனவேயுள்ள ஒப்பந்தங்களை ஒழிக்கச் சட்டம் ஏற்பட்டாலொழிய அந்த நாடு



களுக்குக் கூலியாட்களை போகவிடக்கூடாது. ஒப்பந்தங்களை ரத்துசெய்யும் சட்டமானது, புதுமுறைப்படிபோகும் கூலியாட்கள் அந்த நாட்டில் போய்ச் சேருகிற தேதிமுதல் அமுலுக்கு வரவேண்டும்.

கல்யாண விஷயம்.

குடியேற்ற நாட்டில் அனுஷ்டானத்திலிருக்கும் கல்யாண ஸம்பந்தமான சட்டத்துக்கு விரோதமில்லாமலிருக்கிறவும், கல்யாணம் செய்துகொள்ளுபவர்களுடைய மதம் அல்லது ஜாதி வழக்கத்துக்கு ஒத்தபடி நடந்தேறியவுமான கல்யாணங்களை அவை நடந்த 15-நாட்களுக்குள் ஒரு ரெஜிஸ்ட்ராரிடம் ரெஜிஸ்டர் செய்துவிட்டால், அந்தக் கல்யாணங்கள் சட்டப்படி செல்லக்கூடியவையாகும். அதே மாதிரி ஜாதி அல்லது மதவழக்கத்துக்கு ஒத்தபடி ஸ்த்ரீ புருஷர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிவைத்துப் பிரிந்து அதை ரெஜிஸ்டர் செய்துவிட்டால், அப்படித் தள்ளிவைத்துப் பிரிந்ததும் சட்டப்படி செல்லும்.

## TUBERCULOSIS OF CATTLE.

### மாடுகளுக்கு வரும் க்ஷயம்.

ட்யூபர்குலாஸிஸ் என்று சொல்லப்பட்ட க்ஷயம் அல்லது எலும்புருக்கி நோய் எல்லா வகை ம்ருகங்களுக்கும், மனிதர்களுக்கும், பக்ஷிகளுக்கும் வரக்கூடிய ஒரு தொற்று வ்யாதி. ஆனால் வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கு வருவது அபூர்வம். இந்த வ்யாதி நமது தேசத்தில் கால் நடைகளுக்கு ஸகஜமல்லவென்றாலும், கட்டிப் போட்டிருக்கும் மாட்டு மந்தைகளில் இந்த வ்யாதி வந்ததுண்டு. முக்யமாக கறவை மாடுகளுக்குத் தான் இது அதிகமாக வருகிறது. பட்டணங்களில் மாடுகளை ஸுகாதாரமில்லாத கொட்டில்களில் கட்டிவருவதால் அவைகளின் மூலமாக க்ஷயரோகம் பரவக்கூடும். இதனால் மாடுகளுக்குள் மாத்ரம் க்ஷயரோகம் பரவி, அவைகள் இறக்குமென்பதில்லை. நோய்ப்பட்ட மாடுகளிலிருந்து கிடைக்கும் பால் மூலமாக மனிதர்களிடமும் இந்த வ்யாதி பரவக்கூடும். இந்த வ்யாதியானது நோயடைந்த ம்ருகங்களின் மல ஜலங்களிலும், மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் வெளிவரும் த்ரவங்களிலும் உள்ள ஒரு வகை க்ருமியால் உண்டாகிறது. இந்த க்ருமி கொட்டில்களிலுள்ள அசுத்தங்களிலும், புல், வைக்கோல் முதலிய தீவனப் பொருள்களிலும், ஜலத்திலும் சேர்ந்துகொண்டு வ்யாதியைப் பரவச்செய்கின்றன. க்ருமிகள் காற்றோடு சேர்ந்து கொண்டும் வ்யாதியைப் பரவச்செய்யும். வ்யாதி க்ருமிகளுள்ள காற்றை ச்வாஸிப்பதாலும், அவைகள் சேர்ந்துள்ள தீனி, ஜலம் இவற்றை உட்கொள்ளுவதாலும், வ்யாதி க்ருமிகள் ரத்தத்தில் சேருவதாலும், மாடுகள் பொலிவதாலும் வ்யாதி பரவும். வ்யாதிபரவுவதற்கு ஈரமும் குளிர்ச்சியும் ஸுகாதாரக் குறைவும் ஸாதகமாக இருக்கின்றன. வ்யாதி க்ருமி தேகத்தில் சேர்ந்து வ்யாதி வெளிப்படையாகத் தோன்ற 10 நாள் முதல் பல வாரங்கள் வரையில் செல்லும்.

வ்யாதியின் அறிகுறிகள்.

கால்நடைகளுக்கு வரும் இந்த வ்யாதியின் அறிகுறிகள் பின்வருவனவாகும். அநேகமாக மாடுகளின் நுரையீரல்தான் முக்யமாக பாதகமடையும். முதலில் வெளிப்படையாகத் தெரியும் அறிகுறி என்னவென்றால், ரொம்ப பலஹீனமாக சிறு இருமல் இருமுவ

தாகும். மாடு வேலைசெய்து ஜலம் குடித்த பிறகு இருமல் கடுமையாக இருக்கும். மாடு மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படும். இரைப்பையிலும் குடலிலும் வாயு நிரம்பியிருக்கும். உடம்பு ரொம்ப இளைத்துப்போகும். கண்கள் குழிந்துபோகும். பிறகு மாடு அடிக்கடி இரும ஆரம்பிக்கும். மூச்சுவிடுவது இன்னும் கஷ்டமாகும். பிறகு இந்த வ்யாதி ந்யூமோனியா என்னும் வ்யாதியாக மாறி மாடு இறந்து போகும்.

க்ஷயரோகத்தில் குடல் கெடுதலடையக் கூடும். அப்போது அடிவயிற்றில் நோவு இருப்பதாகத் தெரியும். பிறகு அதிஸாரம் உண்டாகி, மாடு நாளுக்கு நாள் இளைத்துப் போகும். மாட்டின் மடியும் கெடுதலடைவதுண்டு. அது முழுமையுமோ அல்லது அதன் ஒருபாகமோ வீக்கமடையும். வீங்கின பாகம் கெட்டியாகவும் வலியில்லாமலும் இருக்கும். முதலில் பால் ஜலம் கலந்ததாக இருக்கும். பிறகு மஞ்சளாகவும் குறைவாகவும் போகும். மாட்டின் மூளை கெட்டுப்போயிருந்தால், விசேஷ மனக்கிளர்ச்சியும், பார்வைக் குறைவும், வலிப்பும் உண்டாகலாம். மாட்டின் எலும்புகளும், மூட்டுகளும் கெடுதலடைவதுண்டு.

ஸாதாரணமாக சோதித்துப் பார்ப்பதாலேயே வ்யாதி இருப்பதும் இல்லாததும் தெரிவது கஷ்டம். கால்நடை வைத்யர்கள் ட்யூபர்குலின் என்னும் மருந்தை இன்ஜெக்ட் செய்து வ்யாதி உண்டா இல்லையா என்று கண்டு பிடித்து விடுவார்கள். வ்யாதி இல்லையானால், மருந்து இஞ்ஜெக்ட் செய்வதால் மாட்டுக்குக் கெடுதி ஒன்றும் ஏற்படாது. வ்யாதி இருந்தாலோ அந்த மருந்து சில கோளாறுகளை உண்டாக்கிவிடும்.

சிகித்ஸை.

இந்த வ்யாதிக்கு சிகித்ஸை செய்வது ப்ரயோஜனமில்லை. வ்யாதியானது அநேகமாய் ஸ்வஸ்தமாவதில்லை. மேலும் அவைகளால் இதர மாடுகளுக்கும் மனிதர்களும் இந்த வ்யாதி பரவக்கூடுமாகையால், வ்யாதி இருப்பது தெரிந்த உடனே மாடுகளை ஒழித்து விடுவது நல்லது என்று சொல்லப்படுகிறது,

வ்யாதி வராமல் தடுத்தல்.

வ்யாதி உள்ள ம்ருகங்களை எல்லாம் தனியாக அப்புறப்படுத்த வேண்டும். வ்யாதி உண்டென்று ஸந்தேகித்த மாடுகளின் தேகத்தில் டுபர்குலின் என்னும் மருந்தை இஞ்ஜெக்ட் செய்து, வ்யாதி உண்டா இல்லையா என்று நிச்சயம் செய்து கொள்ளவேண்டும். எந்த ப்ரதேசத்திலாவது இந்த க்ஷயரோகம் தோன்றினால் தக்க வைத்யர்களின் உதவியைக் கொண்டு இதைப் பரவவிடாமல் செய்யவேண்டும். கொட்டில்களை நல்ல காற்றோட்டமும் சுத்தமுமுள்ளனவாக வைத்து மாடுகளின் ஸௌகாதாரத்துக்குக் குறைவில்லாதபடி பார்த்து வந்தால், வ்யாதியைத்தடுப்பது ஸுலபமாகும். அதோடு, வ்யாதியுள்ள மாடு கொட்டில்களுக்குள் வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 464. கோஹர்ஜான் ... <br>ஆரணி - குப்புஸாமி முதலியார் இயற்றிய நாவல். | 0 | 8 | 0 |
| 668. பங்கஜவல்லிக் கதை ... <br>திருமயிலை - ராமலிங்க முதலியார் எழுதியநாவல். | 0 | 8 | 0 |
| 471. அபிநவக் கதைகள் ... <br>டி. செல்வகேசவராய முதலியார் இயற்றிய சிறு நாவல்கள் அடங்கியது. | 0 | 6 | 0 |
| 658. மாதவி அல்லது மாதவனின் மாயக்கோலை ... <br>பண்டிதர் டி. எஸ். ராஜமய்யர் எழுதிய நாவல். | 0 | 6 | 0 |
| 465. ஸ்ரீநிவாஸன் ... <br>ஆரணி-குப்புஸாமி முதலியார் இயற்றிய ஒருதுப்பறியும் நாவல். | 0 | 6 | 0 |

ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.



# HOW LIFE WAS CARRIED INTO NEW ZEALAND.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

## ந்யூஸீலண்டில் ஜீவராசிகள் போய்ச்சேர்ந்த விதம்.

ந்யூஸீலண்ட தீவு பஸிபிக் மஹா ஸமுத்ரத்தில் ஆசியாவுக்கு தென்கிழக்கு திக்கில் உள்ள தேசம். இது ஒரு காலத்தில் மற்றைய தீவுகளோடு ஆசியர்க் கண்டத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. அந்தப்பெரிய நிலப்பாகத்திலுள்ள ப்ராணிகள் இங்குவந்து சேர்வதற்கு வெகு காலத்திற்கு முன்னாலேயே, இந்த ந்யூஸீலந்து, ஆசியாவினின்றும் இயற்கைமாதேவியின் வன்மையால் பிரிவுபட்டதாகத் தெரிகிறது. இந்தத் தீவு நூறாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. இங்கிலண்ட், ஸ்காட்லாண்ட், வேல்ஸ் ஆகிய தீவுகளைக் காட்டிலும் பெரியது. இன்னும் அந்தத் தீவுகளின் சீதோஷ்ண நிலைகளைக் காட்டிலும் வாஸ யோக்யமான நல்ல சீதோஷ்ண நிலையைக் கொண்டது. இருந்தாலும் நம் காட்டுச் சிங்கங்கள், சிறுத்தைகள், சிவிங்கிகள், கரடிகள், ஓநாய்கள், கழுதைப் புலிகள், யானைகள், குதிரைகள், காட்டுப் பன்றிகள், மான்கள், காட்டுப் பசுக்கள், முயல்கள், குழிமுயல்கள், எலிகள், சுண்டெலிகள், முதலைகள், ஆமைகள், பாம்புகள் முதலியவை ஆசியாக் கண்டத்தில் இருந்தனபோல் அத்தீவில் வெகு காலம் வரையில் இருந்ததில்லை.

ந்யூஸீலண்டுக்கும் ஆஸ்ட்ரேலியாவுக்கும் 1200 மைல் தூரமுள்ளது, தென்னமெரிக்காவுக்கும் இதற்கும் 5 ஆயிரம் மைல்தூரம். இந்தத் தீவில் ஆதியில் தவளைகளில் ஒருவிதமும் ஸர்வவற்றில் சிலவும் சில பக்ஷிகளுந்தான் வஸித்து வந்தன.

வெகுகாலத்திற்குமுன் இத்தீவில் வஸித்த ஸர்வவற்றில் ஸ்பெண்டன் என்னும் முதுகெலும்புள்ளதும் பல்லியைப்போன்றதுமான தரைவாழ் ப்ராணி இன்னும் அங்கு வஸித்து வருவதைப் பார்க்கலாம். சீமைச் சுண்ணாம்பு மலை நமக்கு எவ்வளவு காலத்துக்குமுன் உண்டானதாக பூதத்வ சாஸ்த்ரப்படி கணக்கிடப் படுகிறதோ அதற்கு அவ்வளவு காலம் முன்னமேயே இந்த ப்ராணி இந்த தேசத்திலிருந்து வருவதாகக் கணக்குப் பண்ணலாம். அந்த ப்ராணி அன்றிருந்த நிலைமைக்கு அழிவில்லாதிருக்கிறது. ஒவ்வொரு ப்ராணியும் ஒவ்வொரு காலத்தை யநுஸரித்து உருவத்தில் மாறுதலடைந்ததுபோல் ஸ்பெண்டனுக்கு நேரவில்லை. அந்தக்காலத்திருந்த பக்ஷிகளில் சில இறகிழந்து வேற்றுருவமடைந்தன. ஆனால் இப்பல்லி போன்ற ஸ்பெண்டன் மட்டும் முன்னிருந்தபடியே இப்போதும் காணப்படுகிறது. இந்த ஸ்பெண்டனுக்கு மூன்று கண்கள் உண்டு. பூச்சிப் புழுக்களையும் தேள்களையும் உண்டு ஜீவிக்கும். அப்போது பக்ஷிகளே இந்த தீவில் ராஜ்யபாரம் செலுத்தின. பக்ஷிகளிலெல்லாம் பெரியது மோவா என்பது. அது ஆஸ்ட்ரிச்சைவிட ஒன்றேகால் மடங்கு பெரிதாயிருக்கும். வெகு உயரமான மனிதனைக் காட்டிலும் இந்தப்பக்ஷி மிகவும் உயரமானது.

மோவாக்களில் குட்டைக்காலுள்ளன, நீண்டகாலுள்ளன, மெல்லிய கால்களுள்ளன, தடித்த கால்களுள்ளன என பலவகைகள் இருந்தன. அவைகள் இறகுகளை இழந்தாலும், அவைகளுக்கு அங்கே சத்ரு பயமில்லாமலிருந்ததால், அவைகள் ரொம்ப வ்ருத்தியடைந்தன. கொஞ்சகாலத்துக்குமுன் அந்த ப்ராணிக்கு சத்ருக்கள் ஏற்பட்டதனால், அம்மாதிரி ஒரு ப்ராணி இப்போது காணக்கிடைப்பது அரிதாகிவிட்டது. அதன் எலும்புக்கூடுகளைத் தான் இப்போது நாம் பார்க்கலாம்.

500 வர்ஷங்களுக்கு முன்னால், பாலினீஷியா அல்லது தென் ஸமுத்ரத் தீவுகளிலிருந்து சில ஜனங்கள் படகுகளின் மூலமாக ப்ரயாணம் செய்து அந்தத் தீவில் குடியேறினார்கள். அவர்களே ஆதி ந்யூஸீலண்டு தேசத்தாராவர். அவர்கள் அங்கு சென்றபோது நாய்களையும், தங்களுக்குத் தெரியாமலே மூட்டை முடிச்சுகளில் மறைந்து வந்த எலிகளையும் கொண்டு போனார்கள். ஆகாரத்துக்காக வேண்டி தம் நாட்டில் விளைந்த வள்ளிக் கிழங்கையும் கொண்டுபோனார்கள்.

அவர்கள் அங்கு போனதும் அங்கு வஸித்து வந்த மோவா, கிவில் முதலிய பல பக்ஷிகளைக் கொன்று ஒவ்வொன்றாகத் தின்று ஜீவித்து வரலானார்கள். இப்படிச் செய்து அவர்கள் அவற்றில் பெரிய பக்ஷிகளாயிருப்பன வெல்லாவற்றையும் அழித்துவிட்டார்கள். கிவிஸ் என்பன ஆஸ்ட்ரிச்சை போன்ற சிறிய பக்ஷிஜாதிகள். அவைகளின் மூக்கு நீளமாயும், கால்கள் குட்டையாய் தடித்தனவாயும் இருக்கும். அவைகள் தம் தடித்த கால்களால் கோவேறு கழுதையைபோல உதைக்கும் ஸ்வபாவமுடையன. ஆதி ந்யூஸீலண்டார் கையில் அம்புகளாவது, துப்பாக்கிகளாவது இல்லாமலிருந்தமையால், அந்த நாட்டில் இவர்கள் போனபோது இருந்த பக்ஷிகளில் சிறியவை சீக்ரத்தில் நிர்மூலமாகாமலிருந்தன. அப்பக்ஷிகள், காடு முழுவதும் பரவி அங்குள்ள மலைகளிலும் காடுகளிலும் ஒளிந்து வாஸம் செய்துவந்தன. ஆதி ந்யூஸீலண்டார் பக்ஷிகள் ஆகாரத்துக்கு அகப்படாத ஸமயத்தில் கடற்கரைகளில் மீன் பிடித்துத்தின்றும் வள்ளிக்கிழங்குகளை விதைத்துப்பயிர்செய்தும் ஜீவிக்கலானார்கள். இன்னும் அந்தத் தீவிலே பேபெர்ன் (Fern) என்னும் கல்லுருவிச்செடிகளின் கிழங்குகள் கிடைத்தன. அவைகளைக் கொண்டும் அவர்கள் ஜீவித்தார்கள். இன்னும் அவர்கள் ஒருவரையொருவர் கொன்று நரமாம்ஸ பக்ஷணம் செய்வதும் உண்டு. அவர்களையே உலகத்தில் அநாகரீகர்களில் முதலாகச் சொல்லலாம். விக்டோரியா ராணி காலத்திற்கூட இந்த ஜாதியார் நரமாம்ஸ பக்ஷணிகளாகவே இருந்தார்கள். 1770-ஆம் வருஷம் காப்டன் கூக் இந்தத் தீவுக்கு வந்தபோதுகூட இவர்கள் இந்தத் தன்மையிலேயே இருந்தார்கள்.

அவர்கள் காப்டன் கூக் கொண்டுபோன படகு ஒன்றிலிருந்த ஜனங்களைக் கொன்று தின்று விட்டார்கள். அக்காலத்தில் நாறுபிரம் பேர்கள் மேயோரிகள் இருந்ததாகத் தெரிகிறது. மேயோரிகள் காப்டன் கூக் ஏறி வந்த 'எண்டவர்' என்ற கப்பலை ஒரு கடல் பக்ஷி யென்று நினைத்தார்கள். காப்டன் கரைக்கு ஏறிவந்த படகை அந்தப் பெரிய பக்ஷியின் குஞ்சென்று நினைத்தார்கள். அந்தப் படகில் இருந்தவர்களை தேவர்களென்றும், அவர்கள் துப்பாக்கியிலிருந்துவந்த குண்டுவெடியை இடியென்றும், நினைத்தார்கள், ஆயினும் அவர்கள் அந்த ஸ்வாமிகளைச் சபித்திட்டு தம் மீது படையெடுத்த கடற் பக்ஷியின்மேல் கற்களையும் தட்டிகளையும் எறிந்தார்கள்.

காப்டன் கூக் அவர்களுக்கு பன்றி, கோழி, வாத்து முதலியவைகளும் உருளைக்கிழங்கும் கொடுத்து உதவினர். அது முதல்கொண்டு தான் உயர்ந்த ப்ராணி வர்க்கங்கள் இந்தத் தனிமையான நிலத்தில்வந்து வஸிக்கும்படியாயிற்று. இத்தீவில வீட்டுப் பக்ஷிகளின் வம்சம் வரவர வ்ருத்தியடைந்தது. பன்றிகளெல்லாம் அந்தத் தீவில் பெருகி அத்தீவில் வெகு காலமாக வளர்ந்து வந்த ஸ்டெண்டன் என்னும் பல்லியை யெல்லாம் கொன்று தின்னத் துவக்கின. அவைகளில் சிலதான் ஒரு சிறு தீவில் காணப்படுகின்றன. பன்றியின் தொகை பெருகினதனால் அவைகளை வேட்டையாடி யொழிக்க



வேட்டைக்காரர்களை நியமிக்கவேண்டியதாயிற்று.

ஆஸ்ட்ரேலியாவிலிருந்து தப்பிபோடின கைதிகள் தான் ந்யூஸீலண்டில் முதல் முதல் குடியேறின வெள்ளைக்காரர்கள். அவர்களிற் சிலர் மேயோரிகள் கொன்று தின்றுவிட்டார்கள். மற்றும் சிலரை மேயோரிகள் ஆதரித்தார்கள். மேயோரிகள் கொடுத்த ஆகாரத்தையே அவர்கள் உண்ணவேண்டியதாயிருந்தது. பன்றிகள், கோழிகள், சுறுமீன்கள், உருளைக்கிழங்கு, கல்லுருவிக் கிழங்கு ஆகிய இவைகள் தான் அவர்களுக்கு ஆகாரமாயிருந்தன. வெல்லிங்டன் ப்ரபு இங்கிலண்டின் ப்ரதம மந்த்ரியாயிருந்தபோது, அவர் ந்யூஸீலண்டை பிரிட்டிஷ் குடியேற்ற நாடென ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். ஆனால் 1840-ஆம் வர்ஷம் முதல் அந்தத்தீவு ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடாகவே இருந்துவருகிறது. அதன் ராஜதானிப் பட்டணத்துக்கு வெல்லிங்டன் என்னும் பெயரே கொடுக்கப்பட்டது. கைதிகளுக்குப் பிறகு இந்தத்தீவில் குடியேறின ஐரோப்பியர்களுக்கு உண்ண அவர்களுக்கேற்ற தான்யம் வேண்டியிருந்தது. ஆகையால், நிலம் பயிரிடப் படுவதற்காக கலப்பைகளும் அவைகளை இழுத்து உழக் குதிரைகளும், எருதுகளும் வேண்டியிருந்தன. இவைகளுக்கு உண்ணப் புல்முதலியனவேண்டியிருந்தன. உலகத்திலுள்ள புல்வகைகள் ந்யூஸீலண்டில் இருந்ததில்லை. இப்புல் வகைகளையெல்லாம் இங்கிலண்டிலிருந்தே அங்கு கொண்டுபோக வேண்டியிருந்தது. இந்த ந்யூஸீலண்டு தீவில் ஏற்கனவே ஒருவிதமான சணல் இருந்தது. இந்தச் சணலைக்கொண்டு மேயோரிகள் பல நூறு வருஷங்களாக ஒருவித உடையை நெய்து உடுத்தி வந்தார்கள், ஆனால், இதில் குடியேறினவர்களுக்கு இன்னும் அதிக உஷ்ணமான உடைவேண்டியிருந்தது. அவர்களுக்குக் கம்பளியினால் செய்யப்பட்ட உடை தேவையாயிருந்தது. அதற்காக அவர்கள் ஆடுகளை அங்கு வளர்க்கவேண்டியிருந்தது. அங்கு தேயிலை, காப்பிக்கொட்டை, கொக்கோ முதலிய பானப்பொருள்களில்லை. மேயோரிகளுக்கு அநாகரீகமான ஆயுதங்களேயிருந்தன. ந்யூஸீலண்டிலுள்ள காடுகளில் மிக அழகான உபயோகமுள்ள மரங்களிருந்தன. அவைகளை வெட்டிக் கொணர்ந்து அறுக்க வேண்டியிருந்தது. உண்ண உணவும், உடுக்க உடையும், வேலைசெய்ய ஆயுதங்களும் ஸ்வேகம்பண்ணத் தகுந்த மனுஷர்களும் அங்கு இருந்ததில்லை. மாம்ஸ பக்ஷிணிகளாயிய மேயோரிகள் தான் இருந்தார்கள். வெள்ளைக்காரர்கள் அதில் குடிப்புகுந்தபோது அதில் இருந்த ப்ராணிகள் மிகவும் ஸ்வல்பமே. ஆனால், காலம் ஆக ஆக, அங்கேபோன வெள்ளைக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாக பக்ஷிகளையும் ம்ருகங்களையும் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அவர்கள் அவைகளை அங்கு கொண்டுவந்தது ஆச்சர்யமாகும். அந்தத் தீவில் வெள்ளைக்காரர்கள் குடியேறினபோது காடாய்க்கிடந்த அத்தீவுகளை ரொம்பவும் சரிப்படுத்த வேண்டியிருந்தது. அடர்ந்து காடாய்க் கிடந்த அநேகமரங்களை வெட்டித் தள்ளி வெட்டவெளியாக்க வேண்டியவேலையில் இவர்கள் ரொம்பவும் ச்ரமத்தை யடைந்தார்கள். நிலத்தைத் திருத்தினால் மாத்ரம் போதுமா? நிலத்தில் விதைக்க விதைவேண்டாமா? புல் முதல் எல்லா விதைகளையும் வெளியிலிருந்தே தருவிக்கவேண்டியிருந்தது. மனிதர்கள், ம்ருகங்களின் உணவுப் பொருள்களுக் குற்றவையெல்லாம் ந்யூஸீலண்டுக்கு அந்யதேசங்களிலிருந்து கப்பல் மூலமாகவே போகவேண்டியிருந்தது.

இப்படி விதைகள் வாங்கிக்கொண்டுபோய்

நிலங்களைப் பயிர் செய்வதற்குங்கூட சிலர் இடையூறு செய்ய தலைப்பட்டார்கள். ஒரு கெட்ட வ்யாபாரி நல்ல புல் விதையென்று சொல்லி ஒரு பிசாசச்செடி விதையை அனுப்ப, ந்யூஸீலண்டில் குடியேறினவர்கள் அவன் சொல்லை நம்பி அந்த விதைகளை விதைக்க, அது காடாய் மண்டிப்போய் மற்றப் பயிர்களையும் கெடுத்துவிட்டது. அந்தச் செடியை வேரோடு களைவது ப்ரம்ம ப்ரயத்னமாய்ப் போய்விட்டது. சிலர் வஞ்சனையாக அனுப்புவித்த முட்செடிகள் காடுகள்போல் மண்டிப் போய் ஏற்கனவே இருந்த புல்களையும் வளரவொட்டாமல் தடுத்துவிட்டது. இதற்கிடையில் சிலர் தண்ணீர் ப்ராந்தியங்களில் வளரும் பூண்டுகளை வளர்க்கவேண்டி அவ்விதைகளை நீர் நிலைகளில் விதைத்துவிட, அச்செடிகள் எல்லா நீரோட்டங்களிலும், ஆறுகளிலும் 12 அடி உயரமும் 3/4 அங்குல கனமுமுள்ளதாய் மண்டிவளர்ந்துவிட்டன. அவைகள் ஆறுகளில் மண்டி வளர்ந்துவிட்டதனால், அந்நீரோட்டங்களில் கப்பல் போக்குவரத்து செய்வதற்கு ஸாத்யமில்லாமல் போய்விட்டது.

நியூஸீலண்டில் விதைத்த விதைகளவ்வளவும் முளைக்க ஆரம்பித்து பழைய செடிகளையொழித்து வேரூன்றிக்கொள்ள ஆரம்பித்தன. இப்படி அநேகம் செடிகள் இங்கு வேரூன்றின. இருந்தாலும் ஆடு, மாடுகள், குதிரைகள் ஆகிய இவைகளுக்கு வேண்டிய புற்களில்லாமற்போகவே, அவைகளையும் இங்க்லண்டிலிருந்து தருவிக்கவேண்டியதாயிற்று. அப்படிக்கொண்டுவந்த கால்நடைத் தீவனப் பயிர்களில் க்ளோவர் என்றபயிர் முளைத்துச் செழுத்துப் பூத்ததேயொழிய, விதைகள் உண்டாகவில்லை. வேறொரு புல்லும் இதேமாதிரி விதை கட்டவில்லை. இதற்கென்னசெய்வதென்று யோசிக்க, பூக்களினின்று விதையுண்டாக்கவேண்டி தேனீக்களையும் வேறுசில ஈக்களையும் கொண்டுவரவேண்டியதென்று தீர்மானித்து அப்படியே இங்க்லண்டிலிருந்து அவைகளைக் கொண்டுவிட்டார்கள். அதன்பிறகு தீவனப்பயிர்களில் விதை உண்டாயின. இப்படி கால்நடைகளின் உணவுப் பொருள்கள் வ்ருத்தியாக, குதிரைகள், ஆடுகள், மாடுகள் முதலியவை வ்ருத்தியாயின. இப்படி இவை வ்ருத்தியாகவே காட்டுப் பன்றிகளை யழிக்கவேண்டிய ஸந்தர்ப்பம் நேரிட்டது. இப்பன்றிகள் பயிர்களை அழித்துக்கொண்டு உபத்ரவம் பண்ணினதாலும், உபயோகமான மற்ற ப்ராணிகளைப் பயமுறுத்திக் கொல்ல யத்தனித்ததாலும், இவற்றைக் கொல்லவேண்டியது அவச்யமாயிற்று. நெல்ஸன் என்ற மாகாணத்தில் மட்டும் மாஸம் 1-க்கு ஆயிரம் பன்றிகள் விதம் இரண்டுவர்ஷகாலம் வரையில் கொன்றுவந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. லண்டனில் விண்ட்ஸர் மாளிகையின் சிங்காரவனத்தில் ஸஞ்சரித்துவந்த சில அபூர்வமான மான்கள் நியூஸீலண்டின் வடபாகங்களிற்கு அனுப்பப்பட்டன. அவைகளே உலகத்திலுள்ள விசேஷ ஜாதி மான்களை உண்டாக்கி வம்ச வ்ருத்தியடைந்தன. தென்பாகங்களுக்குக் கொண்டுபோகப்பட்ட மான்களும் அங்கு வம்ச வ்ருத்தி யடைந்தன. அவைகள் இப்போது இங்க்லீஷ் மான்களைவிட உயர்ந்தினுஸாய் மலை ப்ராந்தியங்களிலுள்ள சில விதமான கஸ்தூரிமான்கள், ஆடுகள் இவைகளுடனே மிகவும் காட்டுத்தனமாய் கூடிக்குலாவித்திரிந்துவருகின்றன. இங்கு சிலர் குழிமுயல்களைக் கொண்டுவந்துவிட அவைகள் இங்கு ரொம்ப வம்ச வ்ருத்தியடைந்தன. ஆனால் அவைகள் பயிரைப் பாழ்பண்ணுகின்றன. ஆகையால் இங்கு புதிதாய்க் குடியேறுபவன் தன்வயலிலிருந்து இதை பணச்செலவு செய்து தொலைப்பதைவிட்டு, அவன் இவையில்லாத



வேறு நிலத்திற்கே போய் விடுவது நலமென்றெண்ணுகிறான். இந்தக் குழிமுயல்களுக்கு விரோதிகளான ஸ்டோட்ஸ், வீஸில்கள், கீரிப்பிள்ளைகள் முதலியவற்றை இங்கு கொண்டு விட்டும், அவைகள் குழிமுயல்களைப் பிடித்து நாசஞ்செய்யாமல் வீட்டுப்பக்ஷிகளைக் கொன்று தின்ன ஆரம்பித்துவிட்டன. இன்னும் அவைசிறிய ஆட்டுக்குட்டிகளையும் பிடித்துத் தின்ன ஆரம்பித்து, விசேஷ தொந்திரவை விளைத்து விட்டன.

அநேக பூச்சிகளும் புழுக்களுமிருந்து ந்யூஸீலண்டில் தொந்திரவுசெய்தன. இவைகளை ஒழிப்பதற்காக ஒவ்வொரு பக்ஷியாக பல ந்யூஸீலண்டு தீவில் கொண்டு சேர்க்கப்பட்டன. தூக்கணாங்குருவி, வானம்பாடி, ராபின்பக்ஷி, த்ரஷ், கறுப்புப்பறவை, பச்சைப்பறவை, தங்கப்பறவை, கூழைக்கடாக்கள், நீர்க்கோழிகள், மாடப்புறாக்கள், காக்கைகள் முதலியனவற்றைக் கப்பலில் ஏற்றி அங்குகொண்டு சேர்த்தார்கள். வானம்பாடி புழுக்களைத் தின்பதைவிட்டு தான்யக் கதிரை கிள்ளிக்கொண்டோடிவிடுகிறது என்று குடியானவர்கள் சொல்லுகிறார்கள். ஊர்க்குருவிகள் எங்கும் புகுந்து நாசம்செய்கின்றன. கரியபறவைகள் பழக்கொல்லைகளில் புகுந்து கொள்ளையடிக்கின்றன.

இப்படியாகக் கொஞ்சம்கொஞ்சமாக, ந்யூஸீலண்டுதீவில் மனிதர்கள், ம்ருகங்கள், பக்ஷிகள், பூண்டுகள் முதலியன ப்ரவேசித்து அந்தத் தீவை அழகு படுத்தலாயின. இவ்விதம் மனிதர்களாகக் கொண்டுவந்து சேர்த்தவைகளே யன்றி, வேறு இரண்டு ஜந்துக்கள் அங்கு போய்ச் சேர்ந்திருக்கின்றன. அவைகளால் உபத்ரவமேயன்றி நன்மையொன்றுமில்லை. ஐரோப்பியர்கள் கப்பல் மூலமாய் தங்கள் ஸாமான்களுடன் வந்தபோது, அந்தக் கப்பல்களிலேயே அவர்களுக்குத் தெரியாதபடி சாம்பல் நிறமான எலிகளும் வந்து ந்யூஸீலண்டில் புகுந்து வ்ருத்தியடைந்து, ஏற்கனவே அந்த நாட்டில் இருந்த ஒருவகைச் சிறு எலியை நாசம் செய்துவிட்டன. அதே மாதிரி ப்ரிட்டிஷ் நாடுகளிலுள்ள வீட்டு ஈக்களும் வந்துசேர்ந்து வ்ருத்தி யடைந்து அந்த நாட்டில் ஏற்கனவே இருந்த ஈக்களை நாசப்செய்துவிட்டன.

ஐரோப்பியர்கள் முதல் முதலில் ந்யூஸீலண்டுக்கு வந்தபோது, அங்குள்ள நதிகளில் இரண்டொருவகை மீன்களே இருந்தன. கால க்ரமத்தில் ப்ரிட்டிஷ் நாடுகளிலுள்ள ஸகல ஜாதி மீன்களும் இங்கு கொண்டுவரப்பட்டு, வ்ருத்தியாகி இருக்கின்றன. இந்த மீன்களை முதலில் முட்டையாகவே கொண்டு போனார்கள். இந்த முட்டைகளை அங்கு கொண்டுபோகவேண்டி பனிக்கட்டி தேவையாயிருந்தது. அக்காலத்தில் பனிக்கட்டி செய்யக் கப்பல்களில் யந்த்ரம் கிடையாது. ஆகவே பனிக்கட்டியை மீன் முட்டையுள்ள பெட்டிகளின்மேல் வைத்து அதை ப்ளானல் துணியினால் மூடி யனுப்பவேண்டியிருந்தது. இப்படிப் பதிமூவாயிரம் மைல் இந்தப் பனிக்கட்டியைக் கொண்டுபோகும்போது, இது கொஞ்சம் கொஞ்சமாய்த் தண்ணீராய் உருகிவிடநேரிடும். அப்போது அம்முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் உற்பத்தியாகி இறக்கநேரிடும். அல்லது சில ஸமயம் முட்டைகளே நாசமாகிவிடும். அல்லது அவ்விடம் முழுவதும் கெட்டுக் காளான்பூத்துப் போகும். அதற்கப்புறம் வேறு வழிகளால் அநேகவிதமான மீன்களை ந்யூஸீலண்டு ஆறுகளில் கொண்டுவிட, அவை இப்போது ப்ரபலித்துப்போ யிருக்கின்றன.

நரமாம்ஸ பக்ஷிணிகளாய் இந்த நியூஸீலண்டில் வஸித்துவந்த மேயோரி ஜாதியார் இப்போது அவ்வழக்கத்தை விட்டுவிட்டு நாகரீக

தளா யிருக்கிறார்கள். அவர்கள் இப்போது பயிர்செய்யும் தொழிலில் அமர்ந்திருக்கிறார்கள். தற்காலம் அந்த ஜாதியாரில் 50 ஆயிரம் பேர்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது கல்விச் செல்வத்தையும் பெற்று அநேக பட்டங்களும் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் யுத்தமுறையிற் பழகி காலிபோலி என்னுமிடத்தில் யுத்தரங்கத்தில் நின்று சண்டைசெய்துமிருக்கிறார்கள்.

பண்டித-வி. ஸுப்ரமண்ய ஐயர்.

## THE BOND OF THE BRACELET.

### வளையல் உடன்பாடு.

ஒரு காலத்தில் மான்ஸிங் என்னும் ரஜபுத்ர அரசன் வட இந்தியாவிலுள்ள நாகூரில் அரசாட்சி செய்துவந்தான். அவன் மொகலாய சக்ரவர்த்திக்குக் கப்பம் கட்டும் ஒரு சிற்றரசன். ஆகவே சக்ரவர்த்தி தக்ஷிணத்தில் யுத்தம்செய்ய நேரிட்டபோது மான்ஸிங் தன்னிடத்திலிருந்த அநேகம் போர்வீரர்களையும் அவர்களுக்குத் தலைவர்களாகத் தன் பிள்ளைகளையும் தக்ஷிணத்திற்கு அனுப்ப நேர்ந்தது. இந்த ஸங்கதியை அறிந்த கூர்ஜர அரசனாகிய பெரோஸ் ஷா என்பவன் நாகூரை எதிர்த்துப் பிடித்துக்கொள்ள அதுவே ஸமயமென்று எண்ணி அதன்மீது படையெடுத்து வந்தான். மான்ஸிங் அவனை அப்பொழுது எதிர்க்க எவ்விதத்திலும் சக்தியற்றவனாக இருந்தபடியால், தன் குடும்பத்தாரோடும், விலையுயர்ந்த பொருள்களோடும், ப்ரபுக்களோடும், மந்த்ரிகளோடும், சில போர்வீரர்களோடும் காட்வார் என்னும் மலைக்கோட்டைக்கு வந்துசேர்ந்தான். காட்வார் கோட்டைக்குள் ஏராளமான பண்டங்களும் குளங்களும் இருந்தனவென்றாலும், அதைச் சத்ருவினின்றும் காப்பாற்றப் போதுமான மனிதர்கள் இல்லை. மான்ஸிங் முதலியவர்கள் காட்வார் கோட்டைக்குவந்தபிறகு பெரோஸ் ஷாவின் சேனையும் அங்கே வந்து கோட்டையைச் சூழ்ந்துகொண்டிருந்தது. ரஜபுத்ரர்கள் மஹம்மதிய அரசனுக்குக் கீழ்ப்படிந்தால் உயிர் தப்பலாம்; இல்லாவிட்டால் அவர்களெல்லோரும் சாவது நிச்சயம்.

மான்ஸிங்கும் அவனைச்சேர்ந்தப்ரபுக்களும் சத்ருவின்முன் தாங்கள் என்ன செய்வதென்று கோட்டைக்குள் இருக்கும் பொது மண்டபத்தில் உட்கார்ந்து ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அக்கம்பக்கத்திலிருந்து உதவி கிடைக்கக் கூடுமானால் அதுவரையில் எதிரியை எதிர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அம்மாதிரி உதவி செய்யக்கூடியவர்கள் ஒருவருமில்லையென்று அவர்களுக்குத் தோன்றிற்று. ஆகவே இரண்டில் ஒன்று அவர்கள் செய்யவேண்டியிருந்தது. மஹம்மதிய அரசனுக்குக் கீழ்ப்படியவாவதுவேண்டும், உயிரை இழக்கவாவது ஸித்தமாக இருக்கவேண்டும். மஹம்மதியனுக்குக் கீழ்ப்படிவதைவிட இறந்துபோவதே மேலானதென்று தீர்மானித்தார்கள். அக்காலத்தில் ரஜபுத்ரர்களெல்லாம் இம்மாதிரியே நினைத்து வந்தார்கள். ஏனெனில் மஹம்மதிய அரசர்கள் கீழ்ப்படிந்து வருகிறவர்களை கௌரவமாக நடத்துகிற வழக்கமே கிடையாது. ஸ்த்ரீகளைக் கைப்பற்றுவதே அவர்களுடைய முக்யமான நோக்கமாக இருந்தது. இந்த மாதிரி அகௌரவம் உண்டாவதைக் காட்டிலும் உயிரைவிடுவது மேலானதென்று மான்ஸிங் முதலியவர்கள் தீர்மானித்தார்கள். கீழ்ப்படிவதாகப் பாசாங்கு செய்துகொண்டே கால தாமஸம் செய்து, தங்களால் ஆனவரையில் சத்ருக்களை எதிர்த்து, கடைசியாக ஜோஹர் என்னும் வழக்கப்படி தீமூட்டி தங்கள் மனைவி மக்களையும் பொருள்களையும் அதில் எரித்துவிட்டுச் சண்டைசெய்து உயிர் விடுவதென்று முடிவு செய்துகொண்டார்கள்.

ஆலோசனை முடிந்தும் அவரவர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள். அவர்கள் என்ன முடிவுசெய்தார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஸ்த்ரீகளும் சிறுவர்களும் வெகு ஆவலோடு காத்திருந்தார்கள். இறக்கவேண்டிய செய்தியைக்கேட்டுச் சிலர் ஸந்தோஷித்தார்கள்; இன்னும் சிலர் துக்கித்தார்கள். மான்ஸிங்கின் கடைசி மகளாகிய பன்னு என்பவளும் அவனோடிருந்தவர்களும் அரசனுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். ரஜபுத்ரர்கள் தங்கள் பெண்களினால் தங்களுக்குக் கவலையும் கஷ்டமும் உண்டாவதன்றி ஸௌகம் உண்டாவதில்லையென்று எண்ணினபோதிலும், மான்ஸிங் தன் மகள் விஷயத்தில் அந்தமாதிரி நினைக்கவில்லை. அவளுடைய தாயார் பதினைந்து வர்ஷங்களுக்கு முன்னமே காலஞ்சென்றுவிட்டாள். பன்னு குணத்திலும், ரூபத்திலும், அன்னாறிவிலும் சிறந்தவள். அவள் தன் தாயாரின் சாயலாகவே இருந்தபடியால், மான்ஸிங்குக்கு மற்றெல்லாக் குழந்தைகளையும்விட அவளிடம் அதிக விச்வாஸம் உண்டாயிருந்தது. ராஜாங்க விஷயங்களினால் அவனுக்கு எவ்விதமான துன்பமும் கவலையும் உண்டான போதும் அவன் பன்னுவைப் பார்த்த மாத்ரத்தில் அவைகள் அப்பால் போய்விடும். இப்பொழுது ஆலோசித்து முடிவுசெய்த விஷயத்தை அவளிடம் எப்படித் தெரிவிப்பதென்று அரசன் மிகவும் மனங்கலங்கினான். ஆகவே அவன் தன் குடும்பத்தாருடன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அவனைப் பார்த்து அவர்கள் கண்ணீர்விட்டுக் கலங்கினார்கள். பன்னு இனிய குரலுடன் தன்தந்தையை விசாரிக்கத் தொடங்கினாள். மான்ஸிங் ஒருவாறு தைர்யங்கொண்டு தாங்கள் இறக்கவேண்டுவது அவச்யமென்பதைத் தெரிவித்தான்.

பன்னு மற்றவர்களைப்போல் வருத்தமும் ஆச்சர்யமும் அடையாமல் தந்தை சொன்ன விஷயத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டே தன் அறையிலுள்ள ஜன்னலில் போய் உட்கார்ந்தாள். அந்த ஜன்னலின் வழியாகப் பார்த்தால், எதிரே அரிகண்டா என்னும் மலை நன்றாகத் தெரியும். அவள் ஏதோ சிந்தித்துக்கொண்டே அந்த மலையைப் பார்த்தாள். திடீரென்று அவள் மனதில் ஒரு தைர்யம் பிறந்தது. அரிகண்டா மலையின் சிகரத்தில் உமத்ஸிங் என்னும் யௌவன ரஜபுத்ர வீரனொருவன் வஸித்து வந்தான். அவன் அழகிலும் பராக்ரமத்திலும் மிகவும் சிறந்தவன். இதற்கு இரண்டு வர்ஷத்திற்கு முன் மான்ஸிங்கைச் சில கள்ளக் கூட்டக்காரர்கள் எதிர்த்தபோது, உமத்ஸிங் தைர்யத்தோடு சென்று போர்புரிந்து அவர்களைத் தோற்கடித்து வந்தான். அவன் ஜயமடைந்தவுடன் நாகூரின் வழியாக வந்துகொண்டிருந்தான். அப்பொழுது பன்னு அவனைப்பார்த்து அவன்மேல் அளவில்லாத காதல்கொண்டாள். தான் அம்மாதிரியான வீரனையே மணம்புரிந்து கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தாள். உமத்ஸிங் ரஜபுத்ர வீரனாக இருந்ததோடு அவன் தன் தகப்பனுக்கு உதவி செய்தவனாகவும் இருந்தபடியால் அவனை விவாஹம் செய்துகொள்வதில் தடை ஏற்படாதென்று கருதினாள். ஆனால் சீக்ரத்திலேயே மான்ஸிங்குக்கும் உமத்ஸிங்குக்கும் விரோதம் உண்டாயிற்று. இருவரு

டைய வர்களுக்கும் இடையிலுள்ள ப்ரதேசத்தைப்பற்றி அவர்களுக்குள் மனஸ்தாபம் நேரிட்டது. அந்த ப்ரதேசம் தனக்குத்தான் உரியதென்று ஒவ்வொருவனும் சொல்லிக்கொண்டார்கள். அவ்விருவருக்கும் விரோதம் உண்டாகியும் பன்னு உமத்ஸிங்கினிடம் கொண்ட காதலை ஒழிக்கவில்லை. அவள் பல தடவைகளில் ஜன்னலில் உட்கார்ந்துகொண்டு தன் மனஸுக்குரியவீரன் வஸித்துவந்த அரிகண்டாமலையை உற்று நோக்கினபடி இருப்பாள். அப்படியே இப்பொழுதும் அவள் அதைப் பார்த்திருந்தாள். தன் தகப்பனுக்கு உதவி புரியும்படி உமத்ஸிங்கை ஏன் வேண்டிக்கொள்ளக் கூடாதென்று அவள் நினைத்தாள். ஒரு ரஜபுத்ர ஸ்த்ரீ தனக்கு ஆபத்து நேரிடுங் காலத்தில் தான் அணிந்துகொண்டிருக்கும் வளையலை யாராவது ஒரு போர்வீரனுக்கு அனுப்பி அவன் அதை ஏற்றுக்கொண்டால், ஆபத்தினின்றும் அவளைக் காப்பாற்ற அவன் கடமைப்பட்டவனாவான் என்று ஒரு வழக்கம் இருந்தது. வர்ஷத்திற்கு ஒருமுறை வளையல் பண்டிகை என்று அவர்கள் கொண்டாடுவார்கள். சில ஸமயங்களில் ரஜபுத்ர ஸ்த்ரீகள் மஹம்மதிய வீரர்களையும் தங்களைக் காப்பாற்றும்படி வளையல் அனுப்பி வேண்டுவார்கள். உதவி புரிய ஸம்மதிக்கும் வீரன் வளையலைப் பெற்றுக்கொண்டு தன் ஸம்மதத்தைத் தெரிவிக்கும் பொருட்டு ஒரு சித்ரப் பட்டாடையை அனுப்புவான். இம்மாதிரியாக இருவருக்கும் ஏற்படும் உடன்பாடு வளையல் உடன்பாடு என்று சொல்லப்படும். காப்பாற்றும் வீரனும் காப்பாற்றப்படும் ஸ்த்ரீயும் ஸஹோதரனும் ஸஹோதரியுமென்று பாவித்துக்கொள்வார்கள். தன் தகப்பனுக்கும் உமத்ஸிங்குக்கும் நேரிட்டிருந்த விரோதம் மிகவும் அற்பமானதாக இருந்தபடியாலும், யாவரும் வியக்கும் அழகுவாய்ந்த தான் வளையலை உமத்ஸிங் ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு உதவிபுரிய வருவானென்று பன்னு எண்ணியிருந்த படியாலும், வளையல் உடன்பாடு செய்துகொள்வதே உத்தமமென்று அவள் தீர்மானித்தாள்.

பன்னு உடனே அவ்விடம்விட்டுத் தன் தகப்பனிடம்போய் அவரைத் தனியாகத் தன் அறைக்குள் அழைத்துவந்தாள். அவள் அவரைப்பார்த்து, "தந்தையே! அரிகண்டாவில் இருக்கும் உமத்ஸிங் தங்களுக்கு அதிகக் கெடுதி செய்ததுண்டோ? தங்களை அவர் கேவலமாக நடத்தியதுண்டோ?" என்றுகேட்டாள். மான்ஸிங் "குழந்தாய், அவன் அவ்வாறு ஒன்றும் செய்ததில்லை. என் பாட்டனார் நாள்முதல் போட்டியிலிருக்கும் ப்ரதேசம் தனக்கே சேரவேண்டுமென்று கேட்கிறான். அந்த ப்ரதேசம் வளப்பமற்ற மணற்பாங்கான நிலம். ஆராய்ந்து பார்த்தால் அது உமத்ஸிங்குக்கே சேரவேண்டியதென்று தோன்றுகிறது. ஆயினும் என் முன்னோர் தங்களுக்குச் சேரவேண்டுமென்று சண்டையிட்டுக்கொண்டிருந்தபடியால் நானும் அதைக் கைப்பற்ற முயல்வது அவச்யமாக இருக்கிறது. உன் ஸகோதரர்கள் தக்ஷிணத்திலிருந்து திரும்பி வந்தவுடன் உமத்ஸிங்கோடு சண்டைசெய்து அதைப் பெறவேண்டுமென்று எண்ணி இருக்கிறேன். மற்றப்படி உமத்ஸிங்கின் குணத்திலாவது நடவடிக்கையிலாவது குற்றம் கண்டுபிடிக்க ஒன்றும் இல்லை. அவன் கள்ளக் கூட்டக்காரர்களோடு போர்செய்து தோற்கடித்து எனக்கு உதவிபுரிந்திருக்கிறான். அவ்விஷயத்தில் அவனிடம் எனக்கு அதிக விச்வாஸம்தான். நீ இப்பொழுது அவனைப்பற்றி ஏன் கேட்கிறாய்?" என்று கேட்டான். பன்னு தான் வளையல் உடன்பாடு செய்துகொள்ளத் தீர்மானித்திருந்ததை அவனிடம் தெரிவித்தாள். அதைக் கேட்டவுடன்



மான்ஸிங் கோபங்கொண்டு "என்ன அறிவீனமாய் யோசனை செய்தாய்! எவ்வளவு ஆபத்து நேர்ந்தபோதிலும் நம்முடைய சத்ருவையா வணங்கி உபகாரம் செய்ய வேண்டிக்கொள்வது? ரஜபுத்ர வீரத்திற்கு இது ஏற்றதாகுமா? தைர்யமாய்ச் சண்டைசெய்து மாண்டுபோவதல்லாமல் உமத்ஸிங்கின் உதவியைக் கனவிலும் நாடமாட்டேன்" என்று சொன்னான்.

ஆனால் எவ்வளவு கோபம் உண்டாகியபோதிலும் அதைத் தணிக்கும் சக்தி பன்னுவிடம் இருந்தபடியால், இப்பொழுதும் அவள் தன் தந்தையின் கோபத்தை மெதுவாக ஆற்றினாள். உமத்ஸிங் எவ்விதத்திலும் அவருக்கு தீங்குசெய்தவனில்லையாதலால் அவனுடைய உதவியை நாடுவது இழிவாகாதென்றும், அவன் விரோதம் பாராட்டாமல் ஸமயத்தில் உதவிசெய்யக் கூடியவனென்றும், மஹம்மதியர்களிடம் அவமான மடைவதைவிட இப்படிப்பட்ட வீரனுடைய உதவியால் அவர்களை வெல்லுவது கௌரவமானதென்றும் அவள் எடுத்துச் சொல்லவே, மான்ஸிங் வளையல் உடன்பாட்டிற்கு ஒத்துக்கொண்டான். மேலும், நாகூரை மஹம்மதியர் ஜயித்தால் பிறகு அரிகண்டாவையும் பிடிக்க முயலுவார்களாகையால், இப்பொழுது மான்ஸிங்குக்கு உதவிசெய்ய வந்து மஹம்மதியரைத் தோற்கடித்தால்தான் தன் ராஜ்யத்தைக் காப்பாற்றலாமென்று உமத்ஸிங் கருதுவானென்றும் அவர்கள் எண்ணினார்கள். ஆகவே பன்னுவின் கல்லிழைத்த வளையலை பாணன் என்னும் சிறுவனிடம் கொடுத்து அரிகண்டாவுக்கு அனுப்புவதென்று தகப்பனும் மகளும் தீர்மானம் செய்துகொண்டார்கள்.

காட்வார் கோட்டையை மஹம்மதியர்கள் முற்றுகை போட்டுக்கொண்டிருந்தார்களாகையால், பாணனை வெளியில் சூழ்ந்துகொண்டிருந்த மஹம்மதியர்களுக்குத் தெரியாமல் அனுப்பவேண்டியிருந்தது. ஆகவே இரவில் அவனை ஒரு கயிற்றில் கட்டித் தூக்கி வெளிப்பக்கத்தில் இறக்கினார்கள். பாணன் வயதில் சிறியவனாக இருந்தபோதிலும் மிகுந்த தைர்யசாலி. அவன் கயிற்றை அவிழ்த்துக்கொண்டு மஹம்மதியர்களின் கூடாரங்களுக்கு அருகாமையில் போகாமல் பாறைகளின் மறைவிலேயே போக ஆரம்பித்தான். மஹம்மதியர்கள் தங்கள் கூடாரங்களுக்கெதிரில் வெளிச்சம் வைத்துக்கொண்டிருந்தபடியால் அவன் அவர்கள் கண்களில் படாமல் வெகு ஜாக்ரதையாகப் போகவேண்டியிருந்தது. இரவு இருட்டாக இருந்தபோதிலும் பாணன் அந்த வழியில் போய்ப் பழகியவனாதலால் நக்ஷத்ரங்களின் வெளிச்சத்திலேயே வழியைக் கண்டுபிடித்துப் போய்க்கொண்டிருந்தான். அவன் கூடாரங்களையெல்லாம் தாண்டிய பிறகு இனி சத்ருபயம் இல்லையென்று எண்ணிக் கொஞ்சம் அஜாக்ரதையாகப் போக ஆரம்பித்தான். அப்படிப் போகும்போது, ஒரு புதரின் மறைவிலிருந்த மஹம்மதிய வீரனொருவன் அவன்மேல் பாய்ந்து அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். பாணன் மிக்க பலமுள்ளவனென்றாலும், அந்தப் போர்வீரன் அவனைவிடப் பெரியவனானபடியால், தப்பித்துக்கொண்டுபோக முடியவில்லை. அந்தப் போர்வீரன் பாணனை கூர்ஜர அரசனுடைய கூடாரத்தை நோக்கி அழைத்துப் போனான்.

பாணன் பார்வைக்குச் சிறியவனாக இருந்தபடியாலும், தப்பித்துக்கொள்ள ப்ரயத்னப்படாமலிருந்தபடியாலும், போர்வீரனுக்கு அவன்மேல் ஸந்தேகம் உண்டாகவில்லை. ஆகவே அவன் பாணனுடைய வலது கையை மாத்ரம் பிடித்துக்கொண்டு அழைத்துக்கொண்டு போனான். சிறிது தூரம் போனதும், பாணன் மெதுவாகத் தன் இடது கையால்

சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த பிச்சுவாவை எடுத்துக் கொண்டான். உடனே அவன் அதை ஸரியாகப் பிடித்துக்கொண்டு போர்வீரனை அதனால் குத்திவிட்டு ஓட ஆரம்பித்தான். போர்வீரனுக்கு மிகுந்த காயம் உண்டாயிற்றென்றாலும் பாணனைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தான்.

பாணன் போர்வீரனிடமிருந்து தப்பித்துக் கொண்டபோது அவன் தலைக்குட்டை கீழேவிழுந்து விட்டது. அந்தத் தலைக்குட்டையில் தான் அவன் பன்னா கொடுத்தனுப்பிய வளையலை மறைத்து வைத்திருந்தான். ஆகவே அவன் திரும்பவும் அந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிற்று. அவனைப் பின்தொடர்ந்து வந்த போர்வீரன் சற்றே பின் தங்கிவிட்டபடியால் அதுவே நல்ல ஸமயமென்று பாணன் ஓரிடத்தில் மறைந்து கொண்டான். பிறகு அவன் தலைக்குட்டை விழுந்திருந்த இடத்திற்குப்போய் அதை எடுத்துக் கொண்டான். வளையலும் அதிலேயே இருந்தது.

பாணன் தலைக்குட்டையை எடுத்துக் கொண்டு திரும்பி வருகையில், குத்துண்ட போர்வீரன் போட்ட கூச்சலினால் காடெல்லாம் கலவரமாக இருந்தது. குத்தியவனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அநேக போர்வீரர்கள் வெளிச்சத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தலைவனான ஒருவன் குதிரைமேல் ஏறிக்கொண்டு 'இங்கே பாருங்கள், அங்கே பாருங்கள்' என்று போர்வீரர்களுக்குக் கட்டளை இட்டுக்கொண்டு அலைந்து திரிந்தான். குதிரையின்மேல் ஏறிக்கொண்டு காட்டில் போவது ஸங்கடமாக இருந்தபடியால், அவன் குதிரையை விட்டிறங்கி, அதை ஒரு பையன் வசம் விட்டுவிட்டு நடந்துபோக ஆரம்பித்தான். இதையெல்லாம் சற்றுத் தூரத்திலிருந்து பார்த்திருந்த பாணன் மெதுவாக அந்தப் பையனிடம் வந்தான். குதிரை அந்தப் பையனுக்கு அடங்காமல் இழுத்துக் கொண்டிருந்தபடியால் அவன் அதைப் பிடித்திருக்கும்படி பாணனை வேண்டிக்கொண்டான். பாணன் ஸந்தோஷத்துடன் குதிரையைப் பிடித்துக்கொள்ளவும், அந்தப் பையன் அருகாமையிலிருந்த பாறையின்மேல் உட்கார்ந்துகொண்டான். பாணன் குதிரையைத் தட்டிக்கொடுத்து மெதுவாக அதன்மேல் ஏறிக்கொண்டு அரிகண்டாவை நோக்கி ஸவாரிவிடத் தொடங்கினான். அப்பொழுது சந்திரன் உதயமாய் விட்டபடியால் பாணன் போவதற்கு மிகவும் ஸௌகர்யமாக இருந்தது. அதைப் பார்த்திருந்த பையன் குய்யோ முறையோ வென்று கூச்சலிட்டான். உடனே அநேகம் போர்வீரர்கள் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்தார்கள். ஆனால் பாணன் ஏறிப்போன குதிரை அதிவேகமாகச் சென்றபடியால், அவர்களால் அவனைப் பிடிக்க முடியவில்லை. பாணன் மிகவும் வேகமாகச் சென்று ஸூர்யோதயமாவதற்குள் அரிகண்டாவை அடைந்தான்.

பாணன் அரிகண்டாக் கோட்டைக்குள் போனபோது உமத்ஸிங்கும் அவன் ஸ்நேஹனான ஸலிம் ஸிங்கும் வேட்டைக்குப் போகத் தயாராக இருந்தார்கள். பாணன் உமத்ஸிங்கினிடம் பன்னாவின் வளையலைக் கொடுத்து அவன் வேண்டுகோளை வெளியிட்டான். மிகவும் அழகுடையவளான பன்னா வளையலைத் தனக்கு அனுப்பியதே உமத்ஸிங்குக்குப் பெருமகிழ்ச்சியை உண்டுபண்ணியது. உமத்ஸிங் காட்வாருக்குப் போகவேண்டிய ஸங்கதியைத் தன் நேசனுக்குத் தெரிவித்துத் தான் வேட்டைக்கு வரமுடியாதென்று சொன்னான். ஸலிம் ஸிங்கும் தன் போர்வீரர்களோடு காட்வாருக்கு வருவதாகத் தெரிவித்தான்.



ஆகவே இரண்டு ஸ்நேகிதர்களும் காட்வாருக்குப் போகத் தீர்மானித்தார்கள்.

இதற்குள்ளாக பெரோஸ்ஷா காட்வார் கோட்டையைத் தாக்க ஆரம்பித்தான். பாணன் அரிகண்டாவுக்கு வந்த அன்று காலையிலேயே மஹம்மதியர்கள் காட்வார் கோட்டைக்குள் சுவர்களின்மேல் ஏறிச்செல்ல முயன்றார்கள். நம்பிக்கை த்ரோகமுள்ள ரஜபுத்ரனொருவன் அவர்களுக்கு வழி காண்பித்து உள்ளே தந்த்ரமாய்க்கொண்டு போவதாக ஒத்துக்கொண்டான். அவன் பாறைகளின்மேல் ஏறிப்போய் சுவரின் உச்சியை யடைந்து மஹம்மதியர்கள் ஏறி வருவதற்காக அங்கிருந்து ஒரு நூலேணியைக் கீழே விட்டான். அந்த நூலேணியில் ஒருவன் காலை வைத்து ஏறும் ஸமயத்தில், கோட்டைக்குள் இருந்த ரஜபுத்ர வீரர்கள் நம்பிக்கை த்ரோகியான ரஜபுத்ரன் தலையை வெட்டி வெளியே எறிந்தார்கள். அவன் கட்டிய நூலேணியையும் அறுத்து விட்டார்கள். இதைக்கண்ட மஹம்மதியர்கள் பயந்து தங்கள் பீரங்கிகள் வந்துசேரும் வரையில் கோட்டைக்குள் போகக்கூடாதென்று வெளியே நின்றுவிட்டார்கள்.

மறுநாள் வெளியிலிருந்த மஹம்மதியர்கள் கோட்டைச் சுவர்களை இடிப்பதற்காகப் பள்ளங்களை வெட்டிக்கொண்டும் மருந்து முதலியவைகளை ஸித்தம் செய்துகொண்டும் இருந்தார்கள். அன்றிரவு அரிகண்டாவுக்குப் போயிருந்த பாணன் உமத்ஸிங் கொடுத்தனுப்பிய சித்ரப் பட்டாண்டையை எடுத்துக்கொண்டு வந்து ஒருவருக்கும் தெரியாமல் சுவரின்மேல் ஏறி கோட்டைக்குள் போய் அதைப் பன்னாவிடம் கொடுத்து நடந்த ஸங்கதியைத் தெரிவித்தான். உமத்ஸிங்கோடு ஸலிம் ஸிங்கும் உதவிக்கு வருவதையறிந்து யாவரும் ஸந்தோஷமடைந்தார்கள்.

உமத்ஸிங்கும் ஸலிம் ஸிங்கும் 5000 போர் வீரர்களோடு காட்வாரை நோக்கி வந்தார்கள். மஹம்மதியர்களின் ஸேனை மிகப்பெரியதாக இருந்தபடியால் நாங்களாகச் சத்ருக்களை எதிர்த்துப் போர்செய்யக் கூடாதென்று கருதி, ஸமயம் வரும்போது அவர்களை எதிர்க்கலாமென்ற எண்ணத்துடன் அவர்கள் இருந்த இடத்திற்குக் கொஞ்ச தூரத்தில் காத்திருந்தார்கள். இப்படியிருக்கையில் மஹம்மதியரின் பீரங்கிகள் வந்து கொண்டிருக்கும் ஸங்கதியை ரஜபுத்ர வீரனொருவன் அவர்களிடம் வந்து தெரிவித்தான். உமத்ஸிங் உடனே 2000 வீரர்களோடு அந்த திக்கை நோக்கிச் சென்றான். பீரங்கிகளோடு வந்த போர்த்துகேசிய வீரர்கள் மிகவும் கொஞ்சமாகையால், ரஜபுத்ரர்கள் அவர்களை வெகு சீக்ரத்தில் தோற்கடித்து பீரங்கிகளைக் கைப்பற்றி அவர்களையும் தங்கள் வசத்தில் வைத்துக் கொண்டார்கள். முன்பின் அநுபோகமில்லாமல் பீரங்கிகளை உபயோகித்தால் தங்களுக்குக் கெடுதியாக முடியுமென்று எண்ணி உமத்ஸிங் அவைகளை ஒரு குளத்தில் எறிந்துவிடும்படி கட்டளையிட்டான். பிறகு அவன் தன் போர்வீரர்களோடும் கைது செய்யப்பட்ட போர்த்துகேசிய வீரர்களோடும் முன்னிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

எதிர்பார்த்திருந்த பீரங்கிகளை ரஜபுத்ரர்கள் கைப்பற்றி விடவே, இனி தாங்கள் எப்படி ஜயிப்பதென்று பெரோஸ் ஷாவும் அவனைச் சேர்ந்தவர்களும் பயப்பட ஆரம்பித்தார்கள். மேலும், சத்ருக்கள் தங்களுக்கு வெளிப்புறத்திலும் தங்கியிருந்தபடியால் கூர்ஜரத்திலிருந்து போர்வீரர்களாவது ஸாமான்களாவது வருவதைத் தடைசெய்து விடுவார்களென்று அவர்கள் கலங்கினார்கள். பீரங்கிகளை ரஜபுத்ரர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்பதை அறிந்த வேறு ரஜபுத்ரர்கள் வெகு ஸந்தோஷப்பட்டார்கள். வரலாமா வரக்கூடாதா வென்று இது வரையில் யோசித்துக்கொண்டிருந்த ரஜபுத்ரத் தலைவர்கள் இப்பொழுது காட்வாருக்குத் தங்கள் ஸைன்யங்களுடன் வந்து கூடினார்கள். நகரிலிருந்த கிழவர்களும் சிறுவர்களுங்கூட காட்வாருக்கு வந்து சேர்ந்தார்கள்.

உணவுப் பொருள்கள் கூர்ஜரத்திலிருந்து வருவது அஸாத்யமாக இருந்தபடியால் பெரோஸ்ஷா காட்வார் கோட்டைக்குள் சென்று அங்குள்ள ஸாமான்களை எடுத்துக்

கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். ஆகவே அவன் பள்ளங்களில் மருந்தை நிரப்பி வெடிக்கச்செய்து சுவர்களை இடிக்க முயன்றான். வெடிசப்தம் கேட்டவுடன் வெளிப்புறத்திலிருந்த உமத்ஸிங் முதலியோர் மஹம்மதியர்கள் இருக்குமிடத்திற்கு வந்து எதிர்த்தார்கள். வெளிப்புறத்திலும் கோட்டைக்கு உள்புறத்திலும் ரஜபுத்ரர்கள் எதிர்த்தால் தோல்வியடைய நேரிடுமென்று பயந்து, பெரோஸ்ஷா சிலவீரர்களைக் கோட்டை பண்டை விட்டு உமத்ஸிங் முதலியோரை எதிர்ப்பதற்காக அநேக போர்வீரர்களுடன் வந்தான். இருதரத்தாருக்கும் வெளிப்புறத்தில் சண்டை நடக்கவே மஹம்மதியர்கள் கோட்டைக்குள் செல்ல முடியாமல் போயிற்று. நடந்த சண்டையில் ஒருவரும் ஜயமடையவில்லை.

வெளிப்புறத்தில் இருக்கும் ரஜபுத்ரர்களைத் தோற்கடித்து விட்டால் எளிதில் கோட்டைக்குள் ப்ரவேசிக்கலாமென்று பெரோஸ்ஷா எண்ணினன். ஆகவே அவன் மறுநாள் காலையில் அநேகம் போர்வீரர்களோடு உமத்ஸிங்கை எதிர்த்து வந்தான். எதிருக்கெதிராக நின்று சண்டைசெய்தால் தோல்வியுண்டாகுமென்றறிந்த உமத்ஸிங் மஹம்மதிய ஸேனை எதிரே வரவரத் தன் ஸேனையைப் பின்னுக்குக் கொண்டுபோய்க் கொண்டே இருந்தான். காட்வாருக்கு வெகுதூரத்தில் சென்றவுடன் ரஜபுத்ரர்கள் திடீரென்று எதிர்த்துச் சண்டை செய்தார்கள். இருவர் ஸேனைகளிலும் அநேகம் போர்வீரர்கள் மடிந்து போனார்கள்.

இப்படி யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் உமத்ஸிங் ஆயிரம் போர்வீரர்களுடன் காட்வார் கோட்டைக்குச் சென்று அங்கிருந்த மஹம்மதியர்களை எதிர்த்துக் கோட்டைக்குள் போய்விட்டான். அவனோடு மஹம்மதியரிடமிருந்து பிடித்துப்போன குதிரையின் மேல் ஏறிக்கொண்டு பானனும் அங்கே போனான். மான்ஸிங் முதலியோர் அந்த இரண்டு பேரையும் ஸந்தோஷத்தோடு வரவேற்றார்கள். வெளியிலிருந்த ரஜபுத்ரர்களை பெரோஸ்ஷா தோற்கடித்தும் ப்ரயோஜனமில்லாமல் போயிற்று. கோட்டைக்குள் ஸைன்ய பலம் அதிகரித்து விட்டபடியாலும், கூர்ஜ்ஜரத்திலிருந்து வரும் ஸாமான்களைத் தடுக்க வெளியில் ரஜபுத்ரர்கள் இருந்தபடியாலும் தனக்கு ஜயமுண்டாகாதென்று பெரோஸ்ஷா அறிந்து கொண்டான். ஆகவே அவன் தன் ஸைன்யங்கள் போகும்போது யாதொரு தீங்கும் செய்யாமலிருப்பதாக வாக்களித்தால் முற்றுகையை விட்டுவிட்டுப் போய்விடுவதாக உமத்ஸிங்கினிடம் தெரிவித்தான். இருவரும் அம்மாதிரியே உடன்படிக்கை செய்து கொண்டார்கள். சீக்ரத்திலேயே மஹம்மதியர்கள் கூர்ஜ்ஜரத்துக்குப் போய்விட்டார்கள்.

மஹம்மதியர்கள் திரும்பிப்போவதைப் பார்த்த ரஜபுத்ரர்கள் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினார்கள். உமத்ஸிங்கே தன்னைக் காப்பாற்றியவனென்று புகழ்ந்து, மான்ஸிங் அவனை நோக்கி "ஆண் சிங்கமே! உன்னாலன்றோ நானும் என் மக்களும் இப்பொழுது உயிர் பிழைத்திருக்கிறோம்! நீ இந்த ஸமயத்தில் வந்து உதவிபுரிந்து கௌரப்படுத்தியதற்காக நான் என்ன பதிலுபகாரம் செய்யப் போகிறேன்? ஆயினும் என்னிடமிருந்து நீ எதையாவது பெற்றுக்கொண்டால் தான் என் மனம் த்ருப்தியடையும். இந்த காட்வார் கோட்டையையாவது என் மகுடத்திலுள்ள விலையுயர்ந்த ரத்னங்களையாவது வேறு எதையாவது கேட்டாலும் கொடுக்க ஸித்தமாக இருக்கிறேன்" என்றான். உமத்லிங் வெகு ஸந்தோஷத்தோடு அவனைப்பார்த்து "அரசே! உங்கள் வாக்குத்தத்தின் படியே உங்கள் ராஜ்யத்திலும் அரண்மனையிலும் விலையற்றதாக இருக்கும் மாணிக்கத்தைக் கேட்கிறேன்" என்றான். தன் மகுடத்திலிருக்கும் விலையற்ற மாணிக்கத்தைக் கேட்டானென்று எண்ணி மான்ஸிங் ஸந்தோஷத்தோடு ஆசீர்வதித்து அதைக்கொடுக்கப் போனான். ஆனால் மாணிக்கம் என்று அர்த்தமாகும் பன்னாவையே தான் கேட்டதாக உமத்ஸிங் அவனிடம் தெரிவித்தான். மான்ஸிங் மனமகிழ்ந்து தன்மகளை அவனுக்குக்கொடுக்க ஸம்மதித்தான். நல்ல சுபதினத்தில் இருவருக்கும் நாகூரில் கல்யாணம் நடந்தேறியது. அநேக ரஜபுத்ரர்கள் விவாஹத்திற்கு வந்து அவர்களை ஆசீர்வதித்தார்கள். வளையல் உடன்பாட்டினால் ஸஹோதரன் ஸஹோதரியாக இருந்தவர்கள் உடன்பாடு முடிந்தபிறகு நாயகனும் நாயகியுமாகி ஸந்தோஷத்துடன் வெகுகாலம் வாழ்ந்து வந்தார்கள்,

## REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE CULTIVATION OF CASUARINA.

### சவுக்குப் பயிர்செய்தல்.

சவுக்கானது முதல்முதல் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஜலமிருந்த இடங்களில் இது வளரக்கூடியதாயிருப்பதனால், ஏறக்குறைய ஸமுத்ரக் கரையோரங்களில் எங்கும் ஏராளமாகப் பயிரிடப்பட்டிருப்பதைக் காணலாம். இது பயிரிடுவதைப்பற்றி 'ஜூனேப்பாரி'யில் ஒரு வியாஸம் வெளிவந்திருக்கிறது. ஆற்றோரங்களிலும் மணற்பாங்கான நிலங்களிலுங்கூட இதைப்பயிர் செய்யலாம். கொஞ்சம் களர்\ஸம்மந்தமான நிலங்களிலும் பயிர் செய்யலாம்; இதனால், நிலம் சீர்திருந்துகிறது. செடிகளிலிருந்து உதிரும் சருகுகள் அவற்றின் கீழேயே மட்குவதனால், நிலம் நாளுக்குநாள் செழிப்புள்ளதாகிறது. இந்தப் பயிரானது ஆகாயத்தை அளாவி வளருந் தன்மையுடையதாகையால், இதை மணற்பாங்கான இடங்களிலேயே பயிர் செய்யவேண்டும். கெட்டியானதாயும், செம்மண்ணுள்ளதாயும், ஜல்லி நிறைந்ததாயுமுள்ள பூமியாயிருந்தால், அவ்வித நிலங்களில் இப்பயிரானது சீராக மேல்நோக்கி வளராமல், பலகிளைகளாகப் பரவி வளரும்.

### விதை.

விதைகளை நல்ல முதிர்ந்த மரங்களிலிருக்கும் தேறின காய்களிலிருந்து எடுக்கவேண்டும். இவற்றை வெகு ஜாக்ரதையாக பத்ரம்செய்து வைக்கவேண்டும்; ஏனென்றால், எறும்புகள் இவற்றைக் கொண்டுபோவதுடன், லேசாயிருப்பதனால், காற்றில் அடித்துக் கொண்டுபோக வீணாய்விடும். ஆதலால், விதைகளை ஸௌகரியமாக ஒரு பாத்ரத்தில் போட்டு மேலே வலை பின்றுகட்டி எறும்பு உள்ளே புகாதபடி பத்ரம் செய்து வெயிலில் காயவைக்கவேண்டும்.

### நாற்றங்கால்.

மேலே கண்டவாறு தயார் செய்யப்பட்ட விதைகளை, மணல் பாங்காயுள்ள நிலத்தைச் சிறுசிறு பாத்திகளாகக் கட்டி அவற்றில் தெளிக்கவேண்டும். இப்பாத்திகள் 10 அடி நீளமும் 5 அடி அகலமுமுள்ளனவாயிருக்கவேண்டும். பாத்திகளை மேடு பள்ளமில்லாமலும் களை முதலியன இல்லாமலும் சீர்திருத்தம் செய்யவேண்டும். பாத்திகளில் விதைகளைத் தெளித்தவுடனே, அவற்றின்மேல் கன்றுப் மட்கின எரு, சாணம் முதலியவற்றைத் தூவவேண்டும். பாத்திகளிலுள்ள விதைகளை எறும்புகள் கொண்டுபோகக் கூடுமாதலால், முளை கிளம்பும் வரை பாத்திகளை ஈரமுள்ளவையாகவே வைத்திருக்கவேண்டும். சிலர் பாத்திகள் கட்டும்போதே மணலுடன் எருவையும் கலந்து கட்டிவிடுவதுண்டு. விதைத்த ஒருவாரத்திற்கெல்லாம் முளை கிளம்பும். முளைகள் மழையினாலும் வெய்யிலினாலும் பாதகப்படாதபடி தென்னம் ஓலைகளினால் பந்தல் ஒன்று போடவேண்டும். ஸாதாரணமாக ஒரு ராத்தல் விதையிலிருந்து ஸுமார் 300 கன்றுகளை உற்பத்தி செய்யலாம். கன்றுகள் ஒரு அடி உயரம் வளர்ந்தவுடனே அவற்றைப் பிடுங்கி, கன்றுகளை எருவிட்ட வேறு பாத்திகளில் ஒவ்வொன்றுக்கும் இடையில் கொஞ்சம் இடம் விட்டு நடவேண்டும். இதற்குத்தான் பதியம் போடுதல் என்று பெயர். இவ்வாறு பதியம் போடும்போது கன்றுகளின் வேர்களைச் சுருட்டிக் குழியில்வைத்து மண்ணை மூடவேண்டும். ஏனெனில், அப்படியே நடுவோமானால், வேர்கள் இன்னும் கீழ்நோக்கி ஆழ ஊன்றி மறுபடியும் பெயர்க்கும்போது அவை அறுபட்டுப்போம். சிலர் கன்றுகளைப் பதியம் போடாமலே, ஒன்றரை அடிவரை வளரும்படிவிட்டுப் பிறகு அப்படியே கொண்டுபோய் நட்டுவிடுவதுண்டு. இம்முறையானது நல்ல பலனைக் கொடுக்கத் தக்கதல்ல. சில இடங்களில் கன்றுகளை இரண்டாந்தரமும் பதியம் போடுவதுண்டு. கன்றுகளின் விலை அவற்றின் திடத்தைப் பொறுத்திருக்கிறது.

### கன்றுகளைப் பரிசோதிக்கும் விதம்.

சில இடங்களில் ஜனங்கள் இக்கன்றுகளை வாங்குவதில் ஏமார்ந்துபோகிறார்கள். வாங்கும் கன்றுகளின் வேர்களைக் கவனித்தால் உண்மை விளங்கும். பதியம் போடப்படாத கன்றுகளின் வேர்கள் யாதொரு வளைவுமில்லாமல் நீண்டிருக்கும். ஒருதரம், இருதரம் பதியம் போடப்பட்ட கன்றுகளின் வேர்களோ கொஞ்சம் வளைவாயும் முடிச்சு உள்ளவையாயுமிருக்கும். இவைகளை கவனித்துக் கன்றுகளை வாங்கவேண்டும்.

## நிலத்தைப் பண்படுத்தலும், நடுதலும்.

கன்றுகளை வைக்க உத்தேசித்திருக்கும் நிலத்தை நன்றாகப் பலதரம் உழவேண்டும். பிறகு, ஒரு அடி சதுரமும் ஒரு அடி ஆழமுமுள்ளனவாய் 5 அடிக்கொன்று வீதம் குழிகள் வெட்டவேண்டும். சில இடங்களில் மூன்று அடிக்கொரு குழியும் வேறு சில இடங்களில் ஆறடிக்கொரு குழியும் வெட்டுவதுண்டு. குழிகளை வெட்டியவுடன் கொஞ்சம் காற்றாட விடவேண்டும். பிறகு சாம்பல், சாணம், வண்டல் முதலான எருக்களை உபயோகித்து, அவற்றில் ஒரு தடவையாவது பதியம் போட்ட கன்றுகளை நடவேண்டும். நடும்போது குழியில் ஈரம் இருக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டும். கன்றுகளை எப்போதும் மழை காலத்தில் நடுவதுதான் உத்தமம். இவற்றிற்கு நிழலைக்கொடுக்க ஆமணக்குச் செடி போன்றவற்றைப் பயிராக்கலாம். அல்லது பனங்கொத்தையாவது கன்றுகளுக்கு அருகில் நட்டு நிழலைக்கொடுக்கும்படி செய்யவேண்டும். ஸுமார் 5 அடிக்கு ஒன்றாக ஒரு ஏகராவுக்கு 2000 கன்றுகள் வரை நடலாம்.

## நீர் பாய்ச்சல்.

கன்றுகள் வைக்கப்பட்டிருக்கும் இடம் ஸமுத்ரக் கரையோரமாயிருந்தால், அங்கு தண்ணீர் இறைத்துப் பாய்ச்சுவது முடியாது. ஆதலால், அங்கேயே ஒரு சிறு குட்டையைத் தோண்டி, அதிலிருந்து தண்ணீர் மொண்டு வார்க்கவேண்டும். கன்றுகள் வேர் ஊன்றும் வரை தினத்திற்கு ஒரு முறை தண்ணீர் விடவேண்டும். ஒருவர்ஷம் கழிந்தபிறகு வாரத்திற்கு ஒரு தடவையும், இரண்டு வர்ஷங்கள் கழிந்தால் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையும் தண்ணீர் கொட்டினால் போதும். மூன்றாவது வர்ஷம் முதற்கொண்டு தண்ணீர் தேவையில்லை. கொஞ்சமும் மழையே யில்லாவிட்டால், கொஞ்சம் நீர்பாய்ச்ச வேண்டியது அவச்யம்.

## களை எடுத்தல்.

கன்றுகள் நட்ட மூன்றாம் மாஸம் முதல்கொண்டு 9-ம் மாஸம் வரை செடிகளைச் சுற்றிலும் களைகளில்லாமல் வெகு சுத்தமாக வைத்திருக்கவேண்டும். செடிகளைச்சுற்றிலும் தண்ணீர் நிற்கும்படியாய்ப்பாத்திகளைக் கட்டவேண்டும். ப்ரதி வர்ஷமும் செடிகளைக் கபாத்து செய்து அவற்றை வளரவிடவேண்டும்.

## மாஸூல்.

ஸமுத்ரக் கரையோரமாய் உள்ள சவுக்குத் தோட்டங்களில் 5, 6 வர்ஷங்களுக்குள்ளும், உள்நாட்டில் 8 வர்ஷங்களுக்குள்ளும் மரங்கள் வெட்டப்படுகின்றன. ஒரு ஏகரில் ஸுமார் 1,000 மரங்கள்வரை கிடைக்கக்கூடும். மரம் 1-க்கு 8 அணா முதல் ரூ. 1 வரை விலைப்போகுமாதலால் 1,000 மரங்களுக்கு ரூ. 500 முதல் ரூ. 1000 வரை கிடைக்கும்.

## உபயோகங்கள்.

சவுக்கானது முக்யமாக அடுப்பெரிக்க உபயோகப்படுகிறது. இதன் சருகுகள் அடுப்பெரிக்க உபயோகப்படுவதுடன், செங்கல் சூளைகளுக்கும் உபயோகப்படுகின்றன. இதை சூளைகளுக்கு உபயோகிப்பதனால், செங்கல்கள் சிவந்த நிறத்தையடைகின்றன. தூண்களாகவும், பந்தல்கள், கொட்டகைகள் முதலியனவற்றிற்குக் கால்களாகவும் இதை உபயோகிப்பதுண்டு. இம்மரத்தின் பட்டையிலிருந்து ஒருவித சாயம் இறக்கப்படுகிறது.

## NINE RULES OF GOOD HEALTH.

### தேக ஸௌக்யத்தைக் குறித்த ஒன்பது விதிகள்.

நீங்கள் தேக ஸௌக்யமுள்ளவர்களாகவும், பலமுடையவர்களாகவும் இருக்க விரும்பினால் தேக ஸௌக்யத்தைக்குறித்த அடியிற்கண்ட விதிகளை அனுஸரிக்க வேண்டும். இந்த விதிகளின்படி நடப்பது மிகவும் ஸுலபமாயிருக்கிறது.

(1) தேகமுழுவதையும் தினம் ஒருமுறை ஜலத்தினால் சுத்திசெய்யவேண்டும். ஸ்நானஞ்செய்வதனால் தசை நரம்புகள் பலமடைவதுடன் தோலும் சுத்தியாகிறது. ரத்தத்திலுள்ள அனேக அசுத்தமான வஸ்துக்கள் தோலின் மூலமாய்த் தேகத்தை விட்டு வெளிப்படுகின்றன.

(2) தேகத்தின்மேல் உடுத்திக்கொள்ளும் வஸ்த்ரங்களையெல்லாம் வாரந்தோறும் ஒருமுறை தோய்க்கவேண்டும். இரத்தத்திலுள்ள அனேக அசுத்தங்கள் சர்மத்தின் மூலமாய் தேகத்திலிருந்து வெளிப்பட்டு அந்த வஸ்த்ரங்களில் தங்கி அவைகளை அசுத்தியாக்குவதுமல்லாமல், அவற்றின் வாயிலாய் வ்யாதியுண்டாவதற்கும் ஏதுவுண்டாகிறது.

(3) முற்றிலுஞ் சுத்தமான இடத்திலே முற்றிலுஞ் சுத்தமான பாத்ரங்களில் சமையல் செய்யப்பட்டு, முற்றிலுஞ் சுத்தமாயிருக்கிற ஆகாரத்தையே சாப்பிடவேண்டும். வாந்திபேதி, ரத்தபேதி முதலிய வ்யாதிகளுக்குக் காரணமாயிருக்கும் அனேக அசுத்தங்கள் முதல்முதல் ஆகாரத்துக்குள் ப்ரவேசிக்கின்றன. பிறகு அவை ஆகாரத்தோடு விழுங்கப்பட்டு ரத்தத்தில் போய்ச்சேருகின்றன.



(4) சுத்தமான பாத்ரத்தில் சுத்தமான கிணற்றிலிருந்தோ, சுத்தமான ஊற்றிலிருந்தோ, சுத்தமான குழாயிலிருந்தோ எடுக்கப்பட்டு மாசில்லாமல் முற்றிலுஞ் சுத்தமாயிருக்கிற தண்ணீரை மாத்ரம் குடிக்கவேண்டும். வாந்திபேதியைப்போன்ற வ்யாதியை உண்டாக்கும் அனேக அசுத்தங்கள் முதல்முதல் தண்ணீருக்குள் ப்ரவேசித்து உள்ளே விழுங்கப்பட்ட பிறகு ரத்தத்தில் போய்ச் சேருகின்றன. இவ்விதமாக வ்யாதியானது ரத்தத்தில் உற்பத்தியாகிறது. ஏறக்குறைய தண்ணீர் விழுங்கப்பட்டவுடனே அது இரைப்பையிலிருந்துபோய் ரத்தத்துடன் கலக்கிறது. ஆகவே குடிக்கப்பட்ட தண்ணீரானது அசுத்தமானதாயிருப்பதால் ரத்தமும் அசுத்தமாய் விடுகிறது. மேலும் ரத்தத்தைச் சுத்தியாய் வைத்திராவிட்டால் தேகம் ஸௌக்யமான ஸ்திதியிலிருக்க முடியாது.

(5) நாற்றமும் புகையும் தூசியுங் கலந்திராமல் புதிதாயிருக்கும் காற்றையே உட்கொள்ளவேண்டும். க்ஷயரோகம் போன்ற வ்யாதியை யுண்டாக்கும் அனேக அசுத்தங்கள் முதல்முதல் காற்றில் ப்ரவேசித்து ச்வாஸத்தை உள்ளுக்கு இழுக்கும்போது அந்தக் காற்றுடன் ச்வாஸப்பைக்குட்சென்று ரத்தத்துடன் கலக்கின்றன. ஆகவே இரவிலும் பகலிலும் உங்களுடைய வீட்டின் ஜன்னல் அல்லது கதவைத் திறந்து வைத்திருக்கவேண்டும்.

(6) தேகமுழுவதிலுமுள்ள தசை நரம்புகளை நாள்தோறும் குறைந்தது ஒருமணிநேரம் உபயோகித்துவரவேண்டும். தேகத்திலுள்ள தசை நரம்புகளை ப்ரதிதினமும் பலமாயுபயோகித்து வந்தால், அவை உறுதியாகின்றன. ரத்தாசயம் பலமாயடிக்கிறது. மேலும் சர்மத்திலிருந்து வியர்வை வழிகிறது. இதுவுமல்லாமல் தசை நரம்புகள் மூலமாய் ரத்தம் பாய்ந்து அவைகளினின்றும் ஸகல அசுத்தங்களையும் வெளிப்படுத்துகிறது. இந்த அசுத்தங்கள் பிறகு தேகத்திலிருந்து வியர்வையில் வெளிப்படுகின்றன.

(7) கூடியவரையில் க்ரமமான மணிநேரங்களில் மிதமாகச் சாப்பிட்டுத் தண்ணீர் குடிக்கவேண்டும். ஏனென்றால் ஒருவன் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டாலும், அளவுக்கு மிஞ்சித் தண்ணீர் குடித்தாலும், அவன் தேகஸௌக்யமுள்ளவனாயிருக்க முடியாது.

(8) பகலில் தூங்குவதைக் காட்டிலும் இரவில் தூங்குவது நல்லது. ஒவ்வொருவரும் தேகஸௌக்யத்துடன் பலமுள்ளவரா யிருக்கும்பொருட்டு அவர் இருபத்துநான்கு மணிநேரங்களிற் ஸாதாரணமாய் 8 மணி நேரம் தூங்கவேண்டும்.

(9) பெரும்பாலும் நுண்ணிய க்ருமிகளே வ்யாதியுண்டாக்குகின்றன என்று மனவில் வைத்துகொள்ளவேண்டும். அவ்விஷ க்ருமிகள் வாந்திவழியாயும், துப்புகிற எச்சில் வழியாயும், மூத்ரத்தின்வழியாயும், மலத்தின் மூலமாகவும் உடம்பிலிருந்து வெளிப்படும். இந்த அசுத்தங்களை க்ருமி கொல்லுகிற த்ராவகம் விட்ட பாத்ரத்தில் போட்டு, ஆழமாய்ப் புதைக்கவேண்டும். அந்த விஷக்கழிவுகளைக் கரைக்குமேலாவது தரைக்குமேலாவது சாக்கடைகளிலாவது கொட்டலாகாது. கொட்டினால் அசுத்த துர்நாற்றம் உண்டாவதுந் தவிர கொடிய வ்யாதிகள் ஊரெங்கும் தொற்ற ஹேதுவுமாகும்.—உதயதாரகை.

## USING GOD'S NAMES FOR MEN.

### மனிதர்களுக்குக் கடவுளுடைய நாமங்களை இடுதல்.

மனிதர்களுக்குள், விசேஷமாய் ஹிந்துக்களுக்குள், நாமகரணம் செய்யும்போது அநேகமாய் கடவுளுடைய பெயர்களையே இடுகிறார்கள். ‘சலாசிந்தாமணியில்’ ஒரு நிருபர் இப்படிச் செய்வதன் காரணத்தைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

மானிடராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் கடவுளின் ஞாபகத்தில் ஈடுபட்டு அவரை எந்நாளும் மறவாமல் நம்மாலியன்ற அளவு அவரது நாமங்களை பஜனம் பண்ணும் பொருட்டும், அவருக்கும் நமக்கும் உறுதியான பந்தம் உண்டாகும் பொருட்டும், அவருடைய அனந்த கல்யாண குணங்களைக் குறிக்கும் திருநாமங்களை யேற்படுத்தி, அந்நாமங்களை ஒவ்வொரு மனிதனும் அணியவேண்டுமென்றும், அவைகளால் ஒருவரை யொருவர் அழைக்கும்போதெல்லாம் கடவுளின் ஞாபகம் உண்டாகி அவருடைய நினைவென்னும் நித்யானந்தத்தில் மூழ்கி, நனைவுற்று நறுமணம் பெற்று அவரது த்யானமாகிய வேணுகானத்தி லீடுபட்டு, அவர் பாதமாகிய பத்ம தளங்களைத் தொட்டு, இந்த பூமியில் பரம ஸாட்குண்யம் பெற்று விளங்கவேண்டுமென்றும், நம் தேசத்துப் பூர்வீக மகரிஷிகள் மகா அர்த்த புஷ்டியுள்ளதாயும் திவ்ய

குண பரிபூர்ண தேஜோரூபமாயுமுள்ள திவ்ய நாமங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆகையால் நாம் நம்முடைய தோழர்கள், ஸகோதர ஸகோதரிகள், இன்னும் மற்றவர்களைப் பெயரிட்டழைக்கும் போதெல்லாம், சோமு, சீமாச்சு, கோபு, கிட்டு, காமு, மீனு என்ற அரைப்பெயர்களாலும், கொச்சைச் சொற்களாலும் நாமங்களைப் பின்னப்படுத்தி அழைக்காமல் ஸோமசுந்தரம், ஸ்ரீநிவாஸன், கோபாலன், க்ருஷ்ணமூர்த்தி, காமாக்ஷி, மீனாக்ஷி என்ற திவ்ய நாமங்களால் அழைக்கவேண்டியது அத்யாவச்யம். நாமங்களைச் சுருக்கி அழைப்பதால் அந்த நாமங்களின் ஸ்வபாவ சக்தி குறைந்து விபரீத அர்த்தங்கள் உண்டாகின்றன. தவிர சில நாமங்களுக்கு நேர் விரோதமான அர்த்தங்கள் உண்டாகின்றன. உதாரணமாக நானிருக்கும் ஊரில் "மாசிலாமணி முதலியார்" என்றொருவ ரிருக்கிறார். அவரை ஸாதாரணமாய் ஜனங்கள் "மாசு முதலியார்" என்ற சுருக்கப்பெயராலேயே அழைக்கிறார்கள். அவரது தாய் தந்தையர்கள் அவருக்கு "மாசிலாமணி" என்ற திவ்ய நாமத்தையிட்டிருக்க, இப்பொழும் ஜனங்கள் அவரை மாசுடைய மணியாய்த் திருப்பிவிட்டார்கள். இவ்வாறு நாமங்களின் எழுத்துக்களைக் குறைப்பதால் விபரீத அர்த்தங்கள் உண்டாவதோடு, பிறரது மனஸ்தாபங்களும் நம்மால் வந்து தலைப்படுகின்றன. ஆகையால் பாரத மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் பகவத் கல்யாண குணங்களைக் குறிக்கும் திருநாமங்களைப் பின்னப்படுத்தாமலும் உள்ளன்போடும் ஒருதரமேனும் உரைப்போமாகில், நாம் பகவத் கருணைகடாக்ஷத்திற்குப் பாத்ர மாவோமென்பது திண்ணம்.

## WOMEN'S DUTIES.

## ஸ்த்ரீ தர்மம்.

ஸமீபத்தில் வெளியான 'ஆர்யதர்மத்தில்' ஸ்த்ரீதர்மத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் வெளியாயிருக்கிறது.

ஸ்திரீகள் உசிதமான காலத்தில் விவாஹம் செய்துகொண்டு பர்த்தாவை இடைவிடாது பூஜித்துப் பணிவிடை செய்து வருவதுதான் அவர்களின் முக்யமான கடமை. பர்த்தாவைக் காட்டிலும் ஸ்த்ரீகளுக்கு வேறு தெய்வம் கிடையாது என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பதால், ஸகல ஸ்த்ரீகளும் பதிவ்ரதா தர்மத்தை அவச்யம் அனுஷ்டிக்கவேண்டும்.

வஸ்த்ரம், ஆபரணம், அலங்கார ஸாமக்கிரி இவைகள் பர்த்தாவினால் கொடுக்கப்பட்டால் மாத்ரம் ஸ்த்ரீகள் க்ரஹித்துக்கொள்ளலாம்.

அவர்களைக் கட்டாயப்படுத்தி இது போதாது, அதிகமாய்த்தான் வேண்டுமென்று நிர்ப்பந்திக்கலாகாது. அந்தக் கரணத்தினாலும் சரீரத்தினாலும் கார்யங்களினாலும் கணவனுடைய இஷ்டத்தை அனுஸரித்தே ஸ்த்ரீகள் நடந்துகொள்ளக் கடவர்கள். சில ஸமயங்களில் கணவனிடம் தோழிமாரிடம்போல் நடந்துகொள்ள வேண்டியதும் உண்டு. ஸன்மார்க்க விஷயத்திலோ பர்த்தாவினுடைய சரீரச் சாயைபோலவே அவரிஷ்டத்தை அனுஸரிக்கவேண்டும். இருவரும் மனமொத்துச் செய்யும் ஸத்காரியம்தான் நிறைவேறிப் பலனைத் தரும். இது ஸமுதாயமாயும் சுருக்கமாயும் உள்ள தர்மம். இனி விசேஷ தர்மங்கள் சொல்லப்படுகின்றன.

அவையாவன:—பர்த்தா எழுந்திருப்பதற்கு முன்னமே ஸ்த்ரீகள் சயனத்தை விட்டெழுந்து அந்தக் காலத்திற்குரிய சரீர சுத்தியைச் செய்துகொண்டு சயனோபகரணங்களை அப்புறப் படுத்திவிட்டு பின்பு க்ருஹத்தில் கோமயத்தினால் சுத்தி செய்யவேண்டிய பாகங்களை சுத்தி செய்து, வாசற்படி, திண்ணை, இடைகழி முதலிய ஸ்தானங்களை கோலம் முதலியவைகளால் அலங்காரம் செய்யவேண்டியது. பிறகு பாகாதிகளுக்கு உபயோகப்படுகிற பாத்ரங்களைச் சுத்தி செய்து வைத்துவிட்டு அடுப்புகளை சுத்தம் செய்ய வேண்டியது. பிறகு ஸ்நானம் செய்து சுத்தமான வஸ்த்ரம் தரித்துக்கொண்டு, ஔபாஸனம் அல்லது அக்னி ஹோத்ரம் முதலிய ஹவன கார்யங்களுக்குரிய ஸாமக்கிரிகளில் சுத்தி செய்யவேண்டிய ஸாமக்கிரிகளைச் சுத்திசெய்து வைத்து, பூஜோபகரணங்களையும் சுத்திசெய்து வைத்துவிட்டு, அடுப்பு மூட்டிப் பாகம் செய்தானவுடன் பர்த்தாவுக்குத் தெரியப்படுத்த வேண்டியது. பூஜை, வைச்வதேவம் முதலியவை முடிந்தவுடன் யார் யாருக்கு போஜனம் செய்விக்க வேண்டுமோ அவர்களுக்குப் போஜனம் செய்வித்துத் தான் அதிகமாய் எவர்கண்ணிலும் தென்படாமலிருந்து போஜனம் செய்துவிட்டு க்ரகங்களை சுத்தம் செய்த பின், வீட்டிலுள்ள பெரியோர்களுக்கும் பர்த்தாவுக்கும் வேண்டிய உபசரணைகளைச் செய்யவேண்டும். ஆனால் ஸ்த்ரீகள் தாம் செய்யும் ஒவ்வொரு கார்யத்தையும் அந்தந்த ஸமயங்களுக்கேற்றபடி யுக்தியுடன் செய்யவேண்டும்.

இவ்விதம் தனக்கு உத்தமமான தெய்வமென்று சொல்லக்கூடிய பர்த்தாவுக்கு பணிவிடை செய்து வரும் ஸ்த்ரீயானவள் இவ்வுலகில் நல்ல கீர்த்தியையும் லோகாந்தரத்தில் தன் பர்த்தாவுடன் கூடியிருக்கும் பெரும் பாக்யத்தையும் பெறுகிறாள்.

மேலும் பிறரிடத்தில் தோஷம் சொல்லுதல், கலகம் செய்தல், பெரியோர்களுக்கு முன்பாக இரைந்து பேசுதல், அவர்களுக்கு எதிரில் சயனித்தல் ஆகிய இவ்வித காரியங்களை தூர விலக்க வேண்டும்.



# News and Notes.

# வர்த்தமானக் குறிப்புகள்.

### இந்தியாவில் கால் நடைகளின் ஸங்க்யை.

ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மொத்தக் கால்நடைகளின் ஸங்க்யை 14,73,36,000 ஆகும். இவைகளில் எருதுகள் 4,86,64,710. பசுக்கள் 3,74,81,273, எருமைகள் 1,90,25,079, கன்றுக்குட்டிகள் 4,21,84,790. இன்னின்ன மாகாணங்களில் இத்தனை கால்நடைகள் இருக்கின்றன; அது 100-க்கு இத்தனை பாகமாகும் என்பன அடியில் வரும் அட்டவணையில் காட்டப்பட்டிருக்கின்றன.

| மாகாணங்கள் | | ஸங்க்யை (லக்ஷம்) | மொத்தத்தில் 100-க்கு இவ்வளவு. |
|---|---|---|---|
| ஐக்ய மாகாணங்கள் | ... | 317·41 | 22 |
| வங்காளம் | ... | 253·24 | 17 |
| சென்னை | ... | 217·61 | 15 |
| பேஹார், ஒரிஸா | ... | 201·19 | 14 |
| பஞ்சாப் | ... | 154·89 | 11 |
| மத்யமாகாணங்களும், பேராரும் | ... | 118·57 | 8 |
| பம்பாயும் ஸிந்தும் | ... | 96·77 | 7 |
| பர்மா | ... | 58·82 | |
| அஸ்ஸாம் | ... | 35·76 | |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | ... | 12·71 | |
| ஆஜ்மீர், மீர்வாரா | ... | 3·51 | 6 |
| டெல்லி | ... | 1·48 | |
| குடகு | ... | 1·34 | |
| மணிபூர் | ... | ·06 | |

மொத்தம் ப்ரிட்டிஷ் இந்தியாவில் உள்ள கால்நடைகள் மொத்தம் ஸாகுபடியாகும் நிலங்களில் 100 - ஏக்கருக்கு 65 கால்நடை வீதமாகிறது. பம்பாயில் 100 ஏக்கருக்கு 32 கால்நடை வீதமாகிறது. வங்காளத்தில் 100 ஏக்கருக்கு 100 கால் நடை வீதமாகிறது. இதர மாகாணங்களின் விகிதம் இந்த இரண்டு விகிதங்களுக்கு மத்தியில் ஏறத்தாழ இருக்கிறது. வங்காளமொழிந்த ப்ரிட்டிஷ் இந்தியா முழுவதுக்கும் 2,30,15-836 செம்மறியாடுகள் இருக்கின்றன. சென்னை ராஜதானியில் மட்டும் 1,07,65,543-ம் பஞ்சாபில் 46,76,899-ம் இருக்கின்றன. இந்தியாமுழுவதுக்கும் வெள்ளாடுகளின் தொகை 3,33,38,487. குதிரைகள் 16,53,379. கோவேறு கழுதைகளின் தொகை15,12,205.

### யுத்தத்துக்கு லாயக்கில்லாத இந்திய வீரர்களுக்கான தொழில் பாடசாலை.

யுத்தத்தில் சண்டைசெய்ததில் சண்டை செய்ய லாயக்கில்லாமல் போனவர்களும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஸைன்யத்துக்கு ஏற்றவர்களல்லவென்று பென்ஷன் கொடுக்கப்பட்டவர்களுமான எல்லாவகை இந்திய வீரர்களுக்கும், தொழில் கல்வி கற்பிப்பதற்காக பம்பாயில் 'க்வின்மேரீஸ் டெக்னிகல் பாடசாலை' யென்று ஒருதொழில் பாடசாலை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதில் மேற்சொன்ன வீரர்களை ஆறுமாஸ காலத்துக்கோ அதற்கு மேலோ ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பின்வரும் தொழில்களில் ஏதாவது ஒன்று, அவரவர் இஷ்டப்படி,கற்றுக்கொடுப்பார்கள். கற்றுக்கொடுக்கும் தொழில்களாவன :—தையல்வேலை, கோழி, வாத்து இவைகள் வளர்த்தல், விவஸாயம், மோட்டார் வண்டியோட்டுதல், ஸ்டாக்கிங்ஸ் முதலியன செய்தல், செயற்கைப் பூ செய்தல், ஆயில் எஞ்ஜின் ஓட்டுதல் ஸாமான்ய எஞ்ஜினியரிங், யந்த்ரங்களைப் பூட்டுதலும் சடைச்சல் பிடித்தலும், தச்சுவேலை, மின்ஸார மோட்டார் விஷயங்கள் முதலியவை. கற்றுத்தேர்ந்தவர்களுக்கு வேலை ஸம்பாதித்துக் கொடுக்கவும் பாடசாலைக் கமிட்டியார் முயற்சி எடுத்துக்கொள்வார்கள். அதில் படிக்கப்போகும் மாணவர்களுக்கு ஆகாரம் உடை முதலியவைகளும் இலவசமாகக் கொடுக்கப்படும். இந்தப் பாடசாலையில் தொழில் கற்றுக்கொண்டவர்கள் தங்களுக்கு வரும் பென்ஷனோடு இதர வரும்படியும் பெற்று ஸௌக்யமாகக் காலந்தள்ள மார்க்கமுண்டு.

### கண் நோய்களுக்கு சிகித்ஸை.

தற்போது நேத்ர வ்யாதிகளுக்கு சிகித்ஸை செய்யும் ஆஸ்பத்ரி சென்னையிலுள்ள கண் ஆஸ்பத்ரி ஒன்றுதான். சென்னை ராஜதானியிலுள்ள கண் வ்யாதிஸ்தர்களில் எல்லாருக்குமே சென்னைக்குப் போய் வைத்யம் செய்துகொள்ள ஸாத்யப்படுவதில்லை.

இதை உத்தேசித்து சென்னை கவர்ன்மெண்டார் தென் ஜில்லாக்களிலுள்ள வர்களுக்காகத் தஞ்சாவூரிலும், வடஜில்லாக்களிலுள்ளவர்களுக்காக விசாகப் பட்டணத்திலும், மேற்கு ஜில்லாக்களிலுள்ளவர்களுக்காக கோயம்புத்தூரிலும் கண் வைத்யம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்போகிறார்கள். தஞ்சாவூரிலும் விசாகப்பட்டணத்திலும் வைத்ய ஸ்கூல்களிருக்கின்றன. கள்ளிக்கோட்டையிலுள்ள வைத்ய ஸ்கூலை கோயம்புத்தூருக்கு மாற்றப்போகிறார்கள். இந்த மூன்று இடங்களிலுள்ள ஆஸ்பத்ரிகளிலும் கண் வைத்யம் செய்ய அதில் பயிற்சி பெற்ற அஸிஸ்டண்ட் ஸர்ஜன்களை நியமிப்பார்கள். இவர்கள் கண் வ்யாதிஸ்தர்களுக்கு வைத்யஞ்செய்வதோடு, ஆஸ்பத்ரியை ஒட்டியுள்ள வைத்ய ஸ்கூல் மாணவர்களுக்கும் கண் வைத்யத்தைப்பற்றி போதிப்பார்.

"இன்ஷியூரன்ஸ்"

இது 'வர்த்தகமித்திரன்' பத்ராதிபர் மிஸ்டர் கே. நடேசய்யர் இயற்றியது. இன்ஷியூரன்ஸ் ஏற்பாடு சாஸ்த்ரீயமான கணக்கு ஆதாரங்களின்மேல் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்கள் அது ஒரு மோசடி வ்யாபாரம் என்று கொண்டிருக்கும் தப்பெண்ணத்தை நீக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இது எழுதப்பட்டிருக்கிறது. இதில் பற்பலவகை இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடுகள் விவரிக்கப்பட்டிருப்பதுடன், எந்த ஏற்பாடுகள் நமக்கு ஏற்றவையென்பதும், எந்த மாதிரி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் இன்ஷ்யூர் செய்வது நல்லதென்பதும் தெளிவாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. தற்காலம் ஸ்வல்ப வரும்படியுள்ளவர்கள் தங்களுடைய வயோதிகத்திலும், தங்களுக்குப் பின்னும் குடும்பத்தில் பணக் கஷ்டங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள இன்ஷ்யூர் செய்வது ஒரு சிறந்த ஸாதனமாயிருப்பதால், யாவரும் இந்தப் புஸ்தகத்தை வாங்கி வாசித்துப் பயனடையலாம். இதன் விலை அணு 6-தான். வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு (3, 4, கொண்டிசெட்டி தெரு, சென்னை) எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

டாட்டா கைத்தொழில் பாங்கி.

டாட்டா ஸன்ஸ் கம்பெனியார் பம்பாயில் ஒரு பெரிய கைத்தொழில் பாங்கி ஸ்தாபிக்கப்போகிறார்கள். இதன் மூலதனம் 6 கோடி ரூபாயாகும். இதில் $4\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கே பங்குகள் கொடுக்கப்படும். பங்கு ஒன்றின் விலை ரூ. 75. ஒவ்வொரு பங்குக்கும் $37\frac{1}{2}$ ரூபாய் வீதம் $2\frac{1}{4}$ கோடி ரூபாய்தான் வஸூலிப்பார்கள். இந்த பாங்கியார் நீண்ட காலத்தவணையின் மேல் கைத்தொழில் கம்பெனிகளுக்குக் கடன்கொடுப்பார்கள். கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களை ஆராய்ச்சி செய்வதும் அந்த ஆராய்ச்சிகளின்மேல் தொழில்கள் ஸ்தாபிப்பதாயிருந்தால் அதற்காக பணம் கடன் கொடுப்பதும், ஏற்கனவேயுள்ள தொழில் கம்பெனிகளுக்கும் பணம் கடன் கொடுப்பதும் இந்த பாங்கியின் முக்யநோக்கங்களாகும். கைத்தொழில் ஸ்தாபிப்பதற்கான ப்ரேரணைகளைப் பற்றிப் பரிசீலனைசெய்ய தக்க நிபுணர்களை இந்த பாங்கியார் வேலைக்கு வைத்துக்கொள்வார்கள்.

'ஆயில் எஞ்ஜின்கள்'

இந்தப் புஸ்தகம் 'வர்த்தக மித்ரன்' பத்ராதிபர் மிஸ்டர் கே. நடேசய்யரால் எழுதப்பட்டது. இதில் ஆயில் எஞ்ஜின்களின் பாகங்கள், அவைகளைப் பூட்டும் விதம், அவைகளை ஓட்டுதல், அவைகளுக்கு ஏற்படக் கூடிய பழுதுகளை சரிப்படுத்தல் முதலியவைகளைப் பற்றி விவரமான பலவிஷயங்கள் அநேக படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. சிலவகை எஞ்ஜின்களைப்பற்றியும் ப்ரத்யேகமான விவரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆயில் எஞ்ஜின் வாங்கி உபயோகிப்போரும், உபயோகிக்க விரும்புவோரும், அவைகளை ஓட்டுவோரும் இந்த நூலைவாங்கி வாசித்துப் பயனடையலாம். இதன் விலை. ரூ 1-8-0 வேண்டுவோர் சென்னை ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு (3, 4, கொண்டிசெட்டித் தெரு,) எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஹோஸ்டல்களுக்காக கவர்ன்மெண்ட் உதவி.

ஸர்க்கார் உதவிபெறும் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு சாச்வதமான ஹோஸ்டல்கள் ஏற்படுத்துவதற்குமுன் தற்கால ஏற்பாடாக வாடகை வீடுகளில் ஹோஸ்டல்கள் ஏற்படுத்த விரும்பும் பள்ளிக்கூட மானேஜர்களுக்கு, அப்படி வாடகைக்கு வைத்துக் கொள்ளும் வீடுகளுக்கு ஏற்படும் நிகரான வாடகையில் பாதிக்கு மேற்படாமல் பண உதவிசெய்ய கவர்ன்மெண்டார் இசைந்திருக்கிறார்கள். ஹோஸ்டல்களில் உள்ள மாணவர்களை மேற்பார்வை செய்ய மானேஜர்கள் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். நிகரான வாடகை என்பது வீட்டுக்காரனுக்குக் கொடுக்கும் வாடகையில், மாணவர்கள் கொடுக்கும் வாடகை போக பாக்கியுள்ளதாகும்.



ட்ரினிடாடில் இந்தியர்கள்.

தென்னமெரிக்காவுக்கு வடக்கிலுள்ள ப்ரிட்டிஷாருக்கு ஸொந்தமான ட்ரினிடாட் தீவில் உள்ள லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலுக்கு 1912-ம் வர்ஷத்தில் மிஸ்டர் ஜார்ஜ் பிட்ஸ்பாட்ரிக் என்பவரை ப்ரிட்டிஷ் இந்தியர்களின் ப்ரதிநிதியாக கவர்ன்மெண்டார் நியமித்திருந்தார்கள். அவரது உத்யோககாலம் ஸமீபத்தில் முடிவடையவே, ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மறுபடியும் அவரை சட்டஸபையில் மெம்பராக நியமித்திருக்கிறார்கள். மிஸ்டர் பிட்ஸ்பாட்ரிக் என்பவர் ஒரு இந்திய ஒப்பந்தக்கூலியாளின் புத்ரர். அவருக்கு அந்தத் தீவில் பூஸொத்துக்கள் இருக்கின்றன.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 17 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2 | பாங்கி லேவாதேவி கம்பெனிகள் ... | 2,50,000 |
| 3 | அச்சடித்து ப்ரசுரம் செய்யுங் கம்பெனிகள் ... | 1,40,000 |
| 7 | இதர வ்யாபாரக் கம்பெனிகள் ... | 20,40,000 |
| 2 | தேயிலைத்தோட்டக் கம்பெனிகள் ... | 4,25,000 |
| 1 | சுரங்கக்கம்பெனி ... | 15,00,000 |
| 2 | இதர கம்பெனிகள் ... | 25,20,000 |
| 17 | மொத்தம் ... | 68,75,000 |

எறும்புகள் வராதிருக்க.

எறும்புகள் வராதிருக்க ஜனங்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். பெரிய பாத்ரத்தில் ஜலம் வைத்து அந்த ஜல பாத்ரத்தினுள் பதார்த்தத்தை வைக்கிறார்கள். சிலர் உரியின்மீது வைக்கவேண்டியிருந்தால், மண் எண்ணெயில் ஒரு சிறு துணிக்கந்தலைக்கட்டி வைக்கிறார்கள். ஆனால் அந்தக்கந்தல் சீக்ரத்தில் உலர்ந்துவிடுகிறது. கந்தகத்தை குசும்பா எண்ணெய் அல்லது வெண்கடுகின் எண்ணெய், அல்லது வேறெந்த எண்ணெயிலாவது அரைத்து அதில் ஓர் சிறு கந்தல் துணியை தோய்த்து உரியின்மீது கட்டவேண்டும். எறும்புகளின் உபத்ரவம் ஏற்படாது. ஆனால் கட்டியான உடனே, கைகளை அதிக ஜாக்ரதையாய்க் கழுவவேண்டும்.

தென்னை ஸம்பந்தமான கைத்தொழில்.

டாட்டா ஸன்ஸ் கம்பெனியார் தென்னிந்தியாவில் தென்னை ஸம்பந்தமான கைத்தொழில்களை வ்ருத்தி செய்ய ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்போகிறார்கள். இதன் மூலதனம் 50 லக்ஷம் ரூபாயாகும். இந்த மூலதனம் முழுவதையும் பம்பாயிலுள்ள சில கைத்தொழில் தலைவர்கள் கொடுக்க ஸம்மதித்திருக்கிறார்கள். இந்தக் கைத்தொழில் கம்பெனி கொச்சியில் ஸ்தாபிக்கப்படும்.

"ஆலங்குடி ஸ்தலபுராணம்."

இது ஸ்ரீகாசியாரண்ய மென்னும் ஆலங்குடியின் ஸ்தலவிசேஷத்தைப்பற்றிக்கூறுவது. வெ. வெங்கடராம கனபாட்டிகளால் பவிஷ்யோத்தர புராணத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. 1—4—0. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4. கொண்டிசெட்டித் தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மூட்டுப்பூச்சிகளை ஓட்ட.

கட்டில்கள் முதலியவைகளில் மூட்டுப்பூச்சிகள் இருந்தால் கற்பூரத்தை ஜலத்திற் கரைத்து அந்த ஜலத்தை அந்த இடங்களில் தெளிக்கவேண்டும். மூட்டுப்பூச்சிகள் ஓடிவிடும்.

ஐரோப்பிய யுத்தம்.

அக்டோபர்மீ 30உ

ப்ரிட்டிஷாரும் ப்ரெஞ்சுக்காரர்களும் யிப்ரஸுக்கு கிழக்கே முன்சென்று வருகிறார்கள். ப்ரெஞ்சுக்காரர்கள் ட்ரெய்பாங்க், லுஜெம் முதலிய இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் எய்ன் நதிக்குப் பக்கத்தில் ப்லெய்ன் என்னும் ஊரையும் பிடித்தார்கள். அமெரிக்கர்கள் போர்முனையில் வந்து யுத்தம் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் கொரிஸியா வண்டை இட்டாலியர்களைத் தோற்கடித் துரத்தி ஸமவெளிகளில் புகுந்திருக்கின்றன.

நவம்பர்மீ 2-ந்தேதி.

எதிரிகள் இட்டலியில் முன் சென்றுவருகிறார்கள். அவர்கள் யுடைன் என்னும் ஊரைப்பிடித்தார்கள். இட்டாலியர்கள் டாக்லிமெண்டோ நதிப்பக்கம் பின் வாங்கியிருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷார் ஆசியா துருக்கியில் பீர்ஷிபா என்னும் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள், ப்ரிட்டிஷாரும் பெல்ஜியர்களும் கிழக்கு ஆப்ரிக்காவில் மாஹெஞ்ஜ் ஜில்லாவிலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்திவிட்டதோடு, லிவேல் என்னுமிடத்தையும் பிடித்திருக்கிறார்கள்.

6-ந்தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் கோர்ஸ், லெர்ன்லெர்னி, ஷ்பவேஸ், செப்ரூ என்றும் ஊர்களைப்பிடித்திருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் டாக்லிமெண்டோ நதியை, பின்லாஞே என்னும் ஊருக்கு வடக்கே கடந்திருக்கின்றன. ப்ரெஞ்ச் துருப்புகளும் ப்ரிட்டிஷ் துருப்புகளும் இட்டாலியர்களுக்கு உதவி செய்ய இட்டலிக்கு வந்திருக்கின்றன.

ப்ரிட்டிஷ் கப்பற்படைகள் வடகடலில் ஒரு ஜெர்மன் உதவி க்ரூஸரையும் 10 பாராக்கப்பல்களையும் மூழ்கடித்தன.

9-ந்தேதி.

இட்டலியில் ஜெனரல் காடோர்ஞவுக்கு பதிலாக ஜெனரல் டையஸ் ஸேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ப்ரிட்டிஷார் யிப்ரஸுக்குக் கிழக்கில் பாஸ்சென்டேல் என்னும் ஊரையும், மாஸல் மார்க்கெட், கௌட்பர்க் என்னும் ஊர்களையும் பிடித்திருக்கிறார்கள். இட்டாலியர்கள் டாக்லிமெண்டோ நதியிலிருந்து பின்வாங்கிப்போய் லிவென்ஸா நதியண்டை வந்தும் ஆஸ்ட்ரோ ஜெர்மன்களால் பின் தள்ளப்பட்டு இன்னும் மேற்கே பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். ப்ரிட்டிஷார் பாலெஸ்டினில் ஜெருஸலத்துக்கு 40 மைல் தூரத்திலுள்ள க்ஸ்வீல்பீ என்னும் ஊரையும், காஸா என்னும் பட்டணத்தையும், பாக்தாதுக்கு வடக்கே 100 மைல் தூரத்திலுள்ள டெக்ரிட் என்னும் ஊரையும் பிடித்திருக்கிறார்கள். மா. லெனின் என்பவரால் தூண்டப்பட்ட சில ரஷ்யர்கள் பிட்ரோக்ராடில் மறுபடி ராஜாங்கப்புரட்சி செய்துவருகிறார்கள்.

12-தேதி

இட்டலியிலுள்ள வெனீஷியா ப்ரதேசத்துக்குப் போயிருக்கும் ப்ரெஞ்ச், ப்ரிட்டிஷ் துருப்புகளுக்கு ஜெனரல் பாயோல் ஸேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

13-தேதி.

இட்டாலியர்கள் இன்னும் பின்வாங்கிப் போய் ப்யாவ் நதியில் தங்கியிருக்கிறார்கள். எதிரிகள் மலைப்பக்கமாய் ப்ரவேசித்து பெல்லுனு என்னும் இடத்தைப் பிடித்து இன்னும் முன்சென்று கொண்டிருக்கிறார்கள். ஆஸியாகோ பட்டணத்துக்கு கிழக்கில் ஆஸியாகோ பீடபூமியில் யுத்தம் நடக்கிறது. துருக்கியர்கள் பாலஸ்டீனில் பின்வாங்கிப் போகிறார்கள். ப்ரிட்டிஷார் ஆஸ்கலோன் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

16-ந்தேதி.

ப்ரிட்டிஷார் பாஸ்சென்டேல் என்னும் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். இட்டாலியப் போர்முகத்தில் எதிரிகள் வெனீஸுக்கு 20 மைல் கிழக்கிலே ப்யாவ் நதியைக்கடந்து கொண்டிருக்கிறார்கள். ப்யாவ்நதியின் வடபாகத்தில் மேற்குக்கரையிலுள்ள பெல்டர், ப்ரிமோலன் என்னும் ஸ்தலங்களை எதிரிகள் பிடித்திருக்கிறார்கள். ப்ரிட்டிஷார் பலஸ்டீனில் முன்சென்று வருகிறார்கள்.

20-ந்தேதி.

ப்ரிட்டிஷார் பலஸ்டீனில் ஜாப்பா என்னும் ஸ்தலத்தைப் பிடித்திருக்கிறார்கள். துருக்கியர்கள் பின்வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யாவில் ராஜாங்கக் கக்ஷிகளுள் கலகம் உண்டாயிருக்கிறது. அமிதவாதிகள் பலமடைந்து வருகிறார்கள்.

23-ந்தேதி.

ப்ரிட்டார் மேற்குப் போர்முகத்தில் காம்ப்ரெயுக்கு தென்மேற்கில் ஹிண்டன்பர்க் லைன் என்னும் ஜெர்மன் வரிசைகளைக் கடந்து 5 மைல் முன் சென்றார்கள். ப்ரிட்டிஷார் பல க்ராமங்களைப் பிடித்திருக்கிறார்கள். இட்டாலியில் பலமான யுத்தம் நடக்கிறது.

நாநா ஸங்கதி.

சென்ற 9 மாஸ காலமாய் விசாரணை நடத்தாமலிருந்த இந்திய கைத்தொழில் கமிட்டியார் நவம்பர்௴ 12-ந் தேதி பம்பாயில் கூடி விசாரணை செய்யத் தொடங்கினார்கள் இந்தியா மந்த்ரியாகிய மிஸ்டர் இ. எஸ். மாண்டேகு நவம்பர் மாஸம் 9-ந் தேதி பம்பாயில் வந்திறங்கினார். 10-தேதி யன்று டெல்லிக்குப் போய்ச்சேர்ந்தார். டிஸம்பர் மாஸம் 14-ந் தேதி சென்னைக்கு வருவார்.

* * *

சென்னை பாரிஸ்டர் மிஸ்டர் வி. எப். நேபியர் அக்டோபர் மாஸம் 16-தேதி முதல் டிஸம்பர் மாஸம் முடிய சென்னை ஹைகோர்ட்டில் அடிஷனல் ஜட்ஜாக வேலைபார்க்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *

இந்த வர்ஷத்திய இந்தியன் நாஷனல் காங்கிரஸுக்கு மிஸஸ் அனி பெஸண்ட் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

* * *

மைஸூர் திவானாகிய ஸர். எம் விச்வேச்வரய்யா இன்னும் இரண்டுவர்ஷம் திவான் வேலைபார்க்கும்படி மகாராஜா உத்தரவு போட்டிருக்கிறார்.

* * *

இட்டலியில் முன்னிருந்த ப்ரதம மந்த்ரிக்கு பதிலாக மா. ஓர் லண்ட் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *

ஜெர்மன் ப்ரதான மந்த்ரியாகிய டாக்டர் மிக்கெலிஸ் தமது வேலையை ராஜினாமா செய்துவிட்டார்.

* * *

ஈஜிப்ட் தேசத்தின் ஸுல்டான் இறந்துபோய் விட்டார்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

## THE PEOPLE'S FRIEND.

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE."

ஜி. ஏ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 9. Vol. 9. } பிங்கள௵ மார்கழி௴, DEC. 1917.—JAN. 1918. { ஸஞ்சிகை 12 No. 12.


## The People's Friend.

An illustrated Tamil Monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | | | Foreign. Rs. A. P. | | |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| ⅛ do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication and the copyright and right of translation of all such articles belong to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | | | | அயல்நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப் பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்கு | | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, ,, | 1 | 4 | 0 |
| ⅛ ,, | ,, ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

வ்யவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒரு பாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வ்யாஸங்களைத் திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்ப் அனுப்பவேண்டியது அவசியம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# SUB-DIVISION OF LANDS IN BARODA.

## பரோடாவில் நிலங்கள் சிறு துண்டுகளாக இருப்பது.

நமது தேசத்தில் ஹிந்துக்களுள்ளும் இதர ஜாதியாருள்ளும் ஒருவர் ஸொத்தை அவருடைய புத்ரர்கள் அடையும்போது நிலங்களை பாகம் செய்துகொள்வதில் அந்த நிலங்களை சிறு துண்டு நிலங்களாகப் பிரித்துக்கொள்ளுகிறார்கள். இப்படி தலைமுறை தலைமுறையாக நிலங்களைப் பிரித்துக்கொண்டே போவதால், நிலங்கள் ரொம்ப சிறியவையாகி விடுகின்றன. மேலும் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தமக்கு வளப்பமான நிலங்களிலெல்லாம் பாகம் வேண்டுமென்பதால், அவருக்குக் கிடைக்கும் பூஸொத்து ஒரே இடத்தில் இராமல் இங்கொன்று, அங்கொன்றாய்ச் சிதறிக் கிடக்கிறது. இப்படி நிலங்கள் சிறியனவாயும், வெவ்வேறிடங்களிலும் இருப்பதால் பலவகையிலும் கெடுதல்கள் ஏற்படுகின்றன. நமது ராஜதானியில் நிலங்களின் நிலைமையைப்பற்றிச் சென்ற புரட்டாசி மாஸத்து 'ஜனாபிமானி'யில் வ்யவஸாய அபிவ்ருத்திக்கு இடையூறுகள் என்னும் வ்யாஸத்தில் எழுதியுள்ளோம். இந்த நிலைமை சென்னை ராஜதானியில் மாத்ரமல்ல, இதர ப்ரதேசங்களிலும் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிகிறது. பரோடாவில் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து ப்ரேரணைகள் செய்ய ஒரு கமிட்டி ஸமீபத்தில் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியார் வெளியிட்டுள்ள ரிபோர்ட்டில் கண்ட விஷயங்களை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

அந்த ஸமஸ்தானத்தில் நிலங்கள் ரொம்ப சிறுதுண்டுகளாகப் பிரிக்கப்பட்டுப் போயிருக்கின்றன என்று கமிட்டியார் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப் பிரிப்பதைத் தடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யாவிட்டாலும், இன்னின்னவகை நிலங்கள் இவ்வளவு விஸ்தீரணத்துக்குக் குறையக்கூடாவென்று ஏற்படுத்தியுள்ள வரையறையை உயர்த்தாவிட்டாலும் காலக்ரமத்தில் எல்லா நிலங்களும் ரொம்ப சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுப் போகும். கவர்ன்மெண்டால் ஏற்படுத்தப்பட்ட வரையறைக்குக் குறைந்த விஸ்தீரணமுள்ள நிலங்களை ரெவின்யூ கோர்ட்டார் அங்கீகரிப்பதில்லையென்றாலும், ஜனங்கள் நிலங்களை சிறு துண்டுகளாக பாகம்செய்து அவைகளை விற்றாலும் ஒற்றி வைத்தாலும் அவர்களைத் தடுப்பவர்களில்லை. நீதி ஸ்தலங்களில் இந்தப் பிரிவினைகள் செல்லும்.

இப்படி நிலங்கள் சிறியவையாயும் பல இடங்களில் சிதறியும் இருப்பதால் எந்த விதத்தில் கெடுதல்கள் ஏற்படுகின்றனவென்பதை கமிட்டியார் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்கள்.

(1) மனிதர்களும் மாடுகளும் வீணாக அதிகம் வேலைசெய்வது.

(2) வேலி போடுவதற்கும் வரப்புகள் கட்டுவதற்கும் நிலத்தில் ஒருபாகம் வீணாகப் போவது.

(3) எருக்கள் சேதமாவது.

(4) பயிர்களை காவல் காப்பது முடியாமல் போவது.

(5) கிணறுகள் வெட்டுவது கஷ்டமாவது.

(6) வேலையைக் குறைக்கும் யந்த்ரங்களை உபயோகிக்க முடியாமை.

(7) ரஸ்தாக்களும் கால்வாய்களும் ஏற்படுத்துவது கஷ்டமாவது.

(8) ஸாகுபடியில் மாறுபாடுகள் செய்வது அஸௌகர்யமாவது.

(9) சாகுபடிச் செலவு அதிகமாவது.



(10) விவஸாய நிலைமை பொதுவாய் தாழ்ந்திருப்பது.

இந்தக் கெடுதல்களை வ்யவஸாயிகள் நன்றாய் அறிந்திருப்பதாக கமிட்டியார் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் சிறு துண்டுகளை ஒன்றுசேர்த்து பெரியதாக்குவதால் ஏற்படும் ஸௌகர்யங்களும் அவர்களுக்கு நன்றாய் தெரிந்திருக்கின்றனவாம். ஆனால் கல்வியறிவுள்ள சில விவேகிகளைத் தவிர மற்றவர்கள் தங்களுக்குள்ள பாக பாத்யதைகளையாவது, தற்போதுள்ள நிலங்களையாவது விட்டுவிடத் துணிந்திருக்கவில்லை. துண்டு நிலங்களை ஒன்றுசேர்ப்பதால் க்ராமத்தோரமாக உள்ள உயர்ந்த நிலங்கள் தங்களுக்கில்லாமல் போய், தூரத்தில் தாழ்ந்த நிலங்கள் எங்கு தங்களுக்குக்கிடைத்துவிடுமோ என்று சில க்ராமவாஸிகள் பயப்படுகிறார்கள். வேறுசிலரோ என்றால், நன்றாய்ஸாகுபடிசெய்ய குறைந்தது இவ்வளவு விஸ்தீரணமென்று ஏற்படுத்தும்போது அதிக விஸ்தீரணத்தை ஏற்படுத்திவிட்டால், எங்கு தங்கள் நிலமே போய்விடுமோ என்று பயப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் வசமுள்ள சிறு நிலத் துண்டுகளுக்குப் பணம் கிடைக்குமென்றாலும், அந்தப் பணம் சீக்ரம் கண்டபடி செலவழிந்து போகுமாதலால், அவர்கள் ஆஸ்தியும் அந்தஸ்தும் இல்லாமல் போய்விடுவார்கள். இப்போதுள்ள விஸ்தீரணத்தைக் குறைக்காமலிருக்க ஏற்பாடுசெய்வது அவர்களுக்கு ஸம்மதமே. ஆனால் துண்டு நிலங்களை ஒன்றுசேர்த்துப் பெரிய நிலங்களாக்குவதற்கு அவர்களுக்கு ஸம்மதமில்லை. ஜனங்களே ஒன்றுசேர்ந்து தங்களுக்குள் இவ்விஷயத்தை கவனித்து ஏதாவது சீர்திருத்தம் செய்யலாமென்றாலோ அநேக க்ராமங்களில் ஜனங்களுக்குள் சண்டைச்சச்சரவும் பொறாமையும் அதிகமாக இருக்கின்றன.

தேசத்தில் 100-க்கு 80-பேர்கள் விவஸாயத்தையே நம்பியிருப்பதால் விவஸாயத்துக்கு இடையூறான இந்த நிலைமைகளைச் சீர்திருத்த வேண்டியது அவச்யமாகிறது. ஆகையால் கமிட்டியார் இதுவிஷயமாக பின்வரும் ப்ரேரணைகளைச் செய்திருக்கிறார்கள்.

### சிறுதுண்டுகளாக பாகம் செய்வதைத் தடுத்தல்.

(1) தற்போது அந்த நாட்டில் நஞ்செய் நிலங்களையும், தோட்ட நிலங்களையும் ½ பீகாவுக்குக் குறைவாகப் பிரிக்கக்கூடாதென்றும் இதர நிலங்களை 1½ பீகாவுக்குக் குறைவாகப் பிரிக்கக்கூடாதென்றும் சட்டமிருக்கிறது.* இந்த வரையறை ரொம்ப குறைவானது. இனிமேல் ஏதாவது பாகங்கள், விற்பனைமுதலியவை செய்கையில் நிலங்களைப் பிரிக்க நேர்ந்தால், தோட்ட நிலங்கள் 3 பீகாவுக்குக் குறையக்கூடாதென்றும், நஞ்செய் நிலங்கள் 1½ பீகாவுக்குக் குறையக்கூடாதென்றும், இதர புன்செய் நிலங்கள் 8 பீகாவுக்குக் குறையக்கூடாதென்றும் சட்ட மேற்படுத்தவேண்டும்.

(2) வார்ஸு பாத்யம் ஸம்பந்தமான சட்டத்தை மாற்றவேண்டியதில்லை. மேற்சொன்ன அளவுக்குக் குறைவாக வரும்படி நிலங்களை பாகம் செய்யவேண்டி நேர்ந்தால், நிலத்தை பாகம் செய்யாமல், அந்த நிலத்தை வார்ஸுகளுக்குள் ஏலத்துக்குவிட்டு, அதனால் கிடைக்கும் பணத்தை வார்ஸுகளுக்கு பங்கிட்டுத் தரவேண்டும். வார்ஸுதார்களுக்குள் எவரும் நிலத்தை ஏலத்தில் எடுக்க இஷ்டப்படாவிட்டால் இதரர்களுக்கு ஏலத்தில் விடலாம். இதற்கு அனுஸரணையாக ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் மாறுதல்கள் செய்யவேண்டும்.

(3) 1-ம் ப்ரேரணையில் சொல்லிய வரையறைக்குக் குறைவான விஸ்தீரணமுள்ள

* பீகாவென்பது பம்பாய் ப்ரதேசங்களில் ஏறக்குறைய முக்காலேயரைக்கால் ஏக்கராகும்.

நிலங்கள் விற்பனைக்கு வந்தால், அவைகளை அந்த நிலங்களை ஒட்டியுள்ள நிலஸ்வான்களுக்கே விற்கவேண்டுமென்றும், அவர்கள் வாங்க இஷ்டப்படாவிட்டால்தான் இதரர்களுக்கு விற்கலாமென்றும் சட்டமேற்படுத்தலாம்.

(4) லாபம் வரக்கூடியபடி ஸாகுபடி செய்வதற்கு நிலவிஸ்தீரணம் எப்படி இருக்கவேண்டுமென்பதை ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள நிலத்தின் தன்மை, சாகுபடி முறைகள் முதலியவைகளை கவனித்து நிர்ணயிக்கவேண்டும். புதிதாக தரிசு நிலங்களை சாகுபடிக்காக ஏலத்தில் விடும்போது, அவைகளை மேற்சொன்ன கொள்கையை அனுஸரித்து தக்க அளவுள்ள துண்டுகளாகப் பிரித்து, அவைகளை அந்த விஸ்தீரணத்துக் குறைந்த துண்டு நிலங்களாகப் பிரிக்கக்கூடாதென்ற நிபந்தனையின்மேல் விற்கவேண்டும்.

### சிறு துண்டு நிலங்களை ஒன்றுசேர்த்தல்.

(1) வெவ்வேறு நிலஸ்வான்களுக்கு ஸொந்தமாயும் தொடர்ச்சியாயுமுள்ள துண்டு நிலங்களை அவர்களே பரிவர்த்தனை செய்துகொள்ளும்படி தூண்டவேண்டும். இதற்கு ஸாதகமாக பரிவர்த்தனைக்கு ஏற்படும் ஸ்டாம்ப் செலவையும், ரெஜிஸ்ட்ரேஷன் செலவையும் கவர்ன்மெண்டார் தள்ளிக்கொடுக்கவேண்டும். க்ராமப்பஞ்சாயத்து மெம்பர்கள், ப்ரபலமான ஜமீன்தாரர்கள், குடிகள், செல்வாக்குள்ள இதரர்கள் ஆகிய இவர்களைக்கொண்டு பரிவர்த்தனை செய்யும்படி வ்யவஸாயிகளைத் தூண்டவேண்டும்.

(2) வ்யவஸாயி ராஜீநாமா எழுதிக்கொடுத்த நிலங்களையும், ஜப்திசெய்த நிலங்களையும் மறுபடியும் சாகுபடிக்கு விடும்போது, அந்த நிலங்களோடு சேர்ந்தாற்போலிருக்கிற நிலங்களின் ஸொந்தக்காரர்களுக்குத்தான் ஏலத்தில் விற்கவேண்டும். அப்படிப்பட்ட ஸொந்தக்காரர் ஒருவரே இருந்தால், அந்த நிலத்தின் விலை, அல்லது தீர்வையைவிட நாலைந்து மடங்குப் பணம் ஆகிய இந்த இரண்டினுள் எது அதிகமோ அதற்கு அதிகப்படாத ஒருதொகையை அவர் கொடுத்தால் அவருக்கு நிலத்தைக்கொடுத்துவிடலாம். அந்தநிலத்தை ஒட்டியுள்ள வயல்களின் ஸொந்தக்காரர்கள் அதை வாங்க இஷ்டப்படாவிட்டால்தான், அதைப் பிறருக்கு விற்கலாம்.

# A PEOPLE THAT DO NOT LIE.

## பொய் சொல்லாத ஒரு ஜாதியார்.

பர்மா, ஸையாம் ஆகிய இந்த தேசங்களின் தொடர்ச்சியாக உள்ள மலேயா தீபகல்பத்தில் சில அபூர்வமான மனித வகுப்பார்கள் இருக்கிறார்கள். மலாக்காவுக்குப் பக்கத்தில் காணப்படும் பூர்விக ஜனங்களில் ஜகுன் என்பவர்கள் ஒரு ஜாதியாவர். அவர்கள் மனிதர்களுள் ரொம்ப தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களென்பது அநேகருடைய அபிப்ராயம். அவர்களில் அநேகர் நம் போல தரையில் வீடுகட்டுவதில்லை. மரங்களின்மேல் குடிசைகள் கட்டி வாழுகிறார்கள். இவைகள் பூமி மட்டத்துக்கு மேல் குறைந்தது 20 அடிக்குமேல் கட்டப்படும். 35 அல்லது நாற்பது அடி உயரத்திலும் குடிசைகள் கட்டப்படுவதுண்டு. பூமியிலிருந்து அங்குபோக ஏணிகளை உபயோகிக்கிறார்கள். அவர்களுள் கிழவர்களாகட்டும், கிழவிகளாகட்டும், சிறுகுழந்தைகளாகட்டும், யாவரும் ஏணியில் பிறருடைய ஸகாயமில்லாமலே ஏறிப்போவார்கள். அவர்கள் நாய் வளர்ப்பதுண்டு. அவைகள்கூட ஸுலபமாக ஏணியில் ஏறி மரத்தின்மேலுள்ள குடிசைக்குப் போகும்.

காடுகளில் நடந்துபோகும்போது அந்தக் குடிசைகள் இருப்பது நம் கண்ணுக்குத் தென்படா. அவைகள் மறைவாயிருக்கும்படி கட்டப்படுகின்றன. ஆனால் காற்றடிக்கும் காலங்களில் ஜக்கூனியர்கள் வீடுகளிருக்குமிடங்களுக்கு அருகில் அழுகைபோன்ற ஒருவகைச் சத்தம் கேட்கும். இதைக்கொண்டு எவ்விடங்களில் ஜக்கூனியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இந்தச் சத்தம் கேட்பதற்கு காரணம் இன்னதென்பதைத் தெரிவிக்கிறோம். மூங்கில்களைக் கணுக்களுக்கு இடையில் மெல்லிய ப்ளாச்சிகளாய்ப் பிளந்து, ஹார்ப் என்று சொல்லப்படும் வாத்யத்தில் கம்பிகள் இருப்பதுபோல் செய்வார்கள். இதை ரொம்ப உயரமான மரங்களின் உயரமான கிளைகளில் தொங்கவிடுவார்கள். காற்றடிக்கும்போது இந்த மூங்கில் கம்பிகளின்மேல் படுவதால், மேற்சொன்ன அழுகைச் சத்தம் உண்டாகிறது.

மலேயா ப்ரதேசத்திலுள்ள மலை ஜனங்கள் அவர்களுக்கு ஒராங் லியார் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்த வார்த்தைக்குக் காட்டு ஜனங்கள் என்பது அர்த்தம். ஜக்கூனியர்கள் மலை ஜனங்களிடமும் இதர நாகரிகம் பெற்ற ஜனங்களிடமும் கலந்து பழக அஞ்சி, மலை முதலியவர்கள் காடுகளில் செல்லச்செல்லப் பின்வாங்கிப்போய் மலைப்பாங்கான இடங்களிலும் அடர்ந்த காடுகளிலும் வஸித்துவருகிறார்கள். ஜக்கூனியர்களுக்கு வேறு பெயர்களும் உண்டு. அவையாவன ஒராங் பகிட், ஒராங் டலாம், ஒராங் உலு முதலியவை. அவை இடம் பற்றிவந்தவை. 'ஒராங் பகிட்' என்பது குன்று மனிதர்கள் என்று பொருள்படும். ஒராங் டலாம் என்றால் உள்நாட்டு மனிதர்கள் என்று அர்த்தம். ஒராங் உலு என்பது ஒருநதியோரமாக வஸிப்பவர்கள் என்று பொருள்படும். ஒராங் உட்டான் என்று ஒரு பொதுப்பெயரும் அவர்களுக்கு உண்டு. அதன் அர்த்தம் காட்டுமனிதர்கள் என்பதே.

ஜக்கூனியர்கள் அறிவு அபிவ்ருத்தி விஷயமாகவாவது, வாழ்க்கையை அபிவ்ருத்தி செய்வது விஷயமாகவாவது, எவ்வித சீர் திருத்தமும் செய்துகொள்வதற்கு மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். இதற்கு அவர்களுக்கு ஸந்தர்ப்பம் வாய்க்கவில்லையென்றாவது, அவர்களுக்கு மூளையில்லையென்றாவது சொல்வதற்கும் இல்லை. இவை இரண்டும் இருந்தும் அவர்கள் அபிவ்ருத்தியைக் கோருவதில்லை. அவர்கள் ரொம்ப குட்டையானவர்கள். அவர்களுள் ஆண்கள் 5 அடிக்குமேல் உயருவதில்லை. அவர்கள் மகம்மதிய மதத்தைத்தழுவுவதும், மலைய ஜனங்களுடைய ஆசாரவழக்கங்களைக் கைக்கொள்வதும் அபூர்வம்.

அவர்கள் படாடோபம் செய்வதில்லை. அற்பமான உதவிசெய்தபோதிலும் அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நன்றிபாராட்டும் குணமுள்ளவர்கள். இருந்தாலும் பயந்த ஸ்வபாவமுள்ளவர்களாதலால், ஐரோப்பியர்களுடன் பழகுவதில்லை. அவர்களுக்கு வேண்டியவை ஸ்வல்பமாதலால், ஸாதாரணமாக எதைப் பற்றியும் கவலை கொள்ளுவதில்லை. பசித்தாலொழிய ஆகாரத்தைப்பற்றிக் கவலை கொள்ளுவதுமில்லை. பசி யெடுக்கும்போதுதான் உழைக்க ஆரம்பிப்பார்கள்.

அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவு இல்லாமல் ஸமாதானமாக வாழ்ந்துவருகிறார்கள். அவர்களுக்குள் சண்டை ஏற்படுவது அரிது. ஸாதாரணமாக அவர்களில் இரண்டு பேருக்குள் மனஸ்தாபம் நேர்ந்தால்

அவர்கள் அடிபிடி சண்டைக்குப் போவதில்லை. யார், தன்னை எதிரி அக்ரமமாக நடத்தினர் என்று எண்ணுகிறானோ, அவன் தன் குடும்ப ஸஹிதமாக காட்டின் வேறு பாகத்துக்குப் போய்விடுவான். எதிரி ஸமாதானத்துக்கு வந்து ராஜியாய்ப்போய் அவனைக்கூப்பிட்டால்தான் திரும்பிவருவான். அவர்களுடைய நடத்தை குழந்தைகளுடைய விளையாட்டுகளைப் போல் இருக்கும். ஸாதாரணமாய் ஒருவர்க்கொருவர் சண்டை சச்சரவு இல்லாமலிருப்பார்கள். பிறர் யாராவது தீங்குசெய்தால் ரொம்ப வருத்தப்பட்டுப் பிரிந்துவிடுவார்கள்.

அவர்களுக்குப் பொய் சொல்லத் தெரியாது. எப்போதும் உண்மையையே பேசுவது வழக்கம்.

இந்த ஜாதியார் நாளுக்குநாள் ஜனத்தொகையில் குறைந்து வருகிறார்கள். இந்த விஷயம் அவர்களுக்குத் தெரிந்துமிருக்கிறது. ஜனத்தொகை குறைந்துவருவதற்குக் காரணங்கள்பின்வருமாறு.

(1) மலே ஜனங்களும் சீனர்களும் காடுகளில் ஆக்ரமித்துக்கொண்டே போவதால், ஜக்கூனியர்கள் அவர்களோடு கலந்துபழக பயப்பட்டு, இன்னும் காட்டுக்குள் போய் தனித்து வஸிக்கிறார்கள்.

(2) மலே ஜனங்கள் அடிக்கடி ஜக்கூன் ஸ்த்ரீகளைக் கல்யாணம் செய்துகொள்வதாலும் அவர்களுடைய ஜனத்தொகை அதிகரிக்க மார்க்கமில்லாமல் போகிறது. இதனால் இரண்டு ஜாதிகளுக்கும் பிறக்நம் கலப்பு ஜாதி ஏற்பட்டு, அது இப்போது ரொம்ப வ்ருத்தியடைந்து வருகிறது.

இந்தமாதிரி விவாகங்கள் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்திருக்கின்றன. இதற்குக் காரணம் முன்பு மலே ஜாதிகளில் மகம்மதிய மதத்தைத் தழுவ இஷ்டமில்லாதவர்கள் தப்பி ஓடிக் காட்டுக்குள் புகவே, அங்கே இருந்த ஜக்கூனியர்களோடு கலந்து, அந்த ஜாதி ஸ்த்ரீகளைக் கல்யாணம் செய்து கொண்டனே.

ஜக்கூனியர்கள் கடவுள் உண்டென்று நம்பி வருகிறார்கள். ஆத்மா அழிவடைவதில்லையென்றும் அவர்களில் பலருக்கு எண்ணம் உண்டாம். வேறு சிலர் புண்யவான்களுக்கு ஸ்வர்க்கமும், பாபிகளுக்கு நரகமும் உண்டென்று நம்பி வருகிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு தேவதூதர்கள் காப்பாக இருக்கிறார்களாம். ஒருவர் நல்லவரென்றும், அவர் தாம் காத்துவரும் மனிதனை நல்லது செய்யும்படி தூண்டி வருகிறாரென்றும், மற்றவர் கெட்டவரென்றும், மனிதனைக் கெடுதல் செய்யத் தூண்டி வருகிறாரென்றும் சொல்லுகிறார்கள். ஜக்கூனியர்கள் கெட்ட தேவதூதனையே ஸ்துக்பம் செய்து சாந்தப்படுத்த முயலுகிறார்கள். நல்ல தூதனை கவனிப்பது அரிது.

அவர்கள் இறப்பதற்கு முன்தான் கடவுளை ப்ரார்த்திப்பது வழக்கம். தங்களுடைய ஜீவன்களைப் பிற்காலத்தில் காப்பாற்றும்படி கடவுளை வேண்டிக் கொள்வார்கள்.

அங்கே இறந்தவர்களை சில ஸமயம் உட்கார்ந்த நிலைமையிலும், சில ஸமயம் நின்ற நிலைமையிலும் பூமியில் புதைப்பார்கள். புதைக்கும்போது பிணத்தோடு கொஞ்சம் ஆகாரமும், சில ஆயுதங்களும் வைப்பது வழக்கம்.

441. நோயற்ற வாழ்வே வாழ்வு ... 1 6 0
டி. எஸ். சால்வாடி அய்யர் இயற்றியது. சாஸ்த்ர விஷயங்கள், ஸுதாதாரம், ப்ரஸவம், குழந்தை வளர்ப்பு, ப்ரதம சிகித்ஸை, தொற்று வ்யாதிகள் முதலியவைகளைப்பற்றி தெளிவான விவரங்கள் அடங்கியது.

ஜீ. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.



## THE POSTAL SYSTEM IN THE DAYS OF THE COMPANY.

## கம்பெனியார் காலத்து தபால் ஏற்பாடு.

இந்தியாவில் தபால் ஏற்பாடு எப்போது எந்த மாதிரியில் ஆரம்பமாயிற்றென்பது சரியாகத் தெரியவில்லை. மொகலாய சக்ரவர்த்திகள் காலத்தில் தபால் ஏற்பாடு நன்றாக நடந்து வந்ததென்று தெரிகிறது. இந்தத் தபால் ஏற்பாடு மொகலாய சக்ரவர்த்திகளின் ஸௌகர்யத்துக்காக ஏற்பட்டதே யொழிய பொது ஜனங்களுக்காக ஏற்படவில்லை.

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியாவுக்கு வந்து பற்பல இடங்களில் தொழில்சாலைகள் ஏற்படுத்திக் கொண்டபோது, அவைகளுக்குள் கடிதப் போக்குவரவு நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது. வங்காள தேசம் கம்பெனியின் வசம் வந்ததும், கடிதங்கள் அதிகமாக ஆயின. இதனால் கம்பெனியார் க்ரமமாக ஒரு தபால் போக்குவரத்து ஏற்படுத்தலானார்கள். 1766-ம் வர்ஷத்தில் வங்காளத்தில் கவர்னராக இருந்த க்ளைவ் என்பவர் ஒவ்வொருநாளும் எழுதும் கடிதங்களை அன்றன்றையதினமே அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பிவிடவேண்டுமென்று உத்தரவு போட்டார். கல்கத்தா கவர்ன்மெண்ட் மாளிகையில் இருந்த போஸ்ட் மாஸ்டரும் அவரது ஸிப்பந்திகளும் தினந்தோறும் இரவில் எல்லாக் கடிதங்களையும் ஸ்தலம் வாரியாகப் பிரித்து, ஒவ்வொரு ஸ்தலத்துக்கும் போகும் கடிதங்களை ஒரு தனிப் பையில் போட்டுக்கட்டி, கம்பெனியின் முத்திரையால் ஸீல் வைத்து, அந்தந்த ஸ்தலங்களுக்கு அனுப்புவார்கள். ஒவ்வொரு ஸ்தலத்திலுமுள்ள கம்பெனியின் தொழில்சாலைக்குத் தலைவராயுள்ளவர்தான் அந்தத் தொழில்சாலைக்கு வரும் கடிதப் பையைப் பிரிக்கலாம். கம்பெனியின் உத்யோகஸ்தர்கள் தங்கள் ஸொந்தக் கடிதங்களையும் கம்பெனியின் தபால் பையில் போட்டு அனுப்புவதுண்டு. இதற்கு அவர்கள் பணம் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் இந்த ஏற்பாடு வெகு காலம் நடக்கவில்லை.

ஸிப்பந்திகள் அனுப்பும் கடிதங்கள் அதிக நிறையுள்ளவைகளாக இருந்ததோடு, அநாவச்யமான கடிதங்களும் அதிகமாயிருந்தன. இந்த ஏற்பாட்டில் ஏதாவது அக்ரமங்கள் நடந்தாலும் அது தெரியவருவதற்கு தக்க ஸாதனங்கள் ஒன்றுமில்லை. தபால்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்துக்குப் போக அதிக கால தாமஸம் ஏற்பட்டது. கல்கத்தாவில் கம்பெனியினுடைய நிர்வாக ஸபையின் ப்ரெஸிடெண்ட் எப்போதாவது அவஸரமாகக் கடிதங்கள் அனுப்ப வேண்டியிருந்தால், தனியாக சிலரை தபால் கொண்டுபோக நியமித்து வந்தார். இவர்கள் ஸாதாரண முறையில் தபால்கள் போக எவ்வளவு நேரம் பிடித்ததோ அதில் பாதி காலத்திலேயே தபால்களைக் கொண்டுபோய்ச் சேர்த்து வந்தார்கள். ஆகவே ஸாதாரண தபால் ஏற்பாடு சரியாக இல்லையென்று, 1774-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸத்தில் இந்த ஏற்பாட்டை திருத்தினார்கள்.

புது ஏற்பாட்டில் ஒரு போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் என்னும் உத்யோகஸ்தர் நியமிக்கப்பட்டார். ஸர்க்கார் கடிதங்கள் அதாவது கம்பெனியின் கடிதங்கள் ஒழிந்த மற்ற ஸொந்தக் கடிதங்களுக்கெல்லாம் தபால் சார்ஜ் வஸூலித்தார்கள். தபால் சார்ஜானது போகும் இடத்தின் தூரத்துக்குத் தகுந்தபடி வித்யாஸப்பட்டது. ஒரு கடிதத்துக்குக் குறைந்த சார்ஜ் 2 அணாவாகும். இந்தச் சார்

ஜுகளையும் அடிக்கடி மாற்றிக்கொண்டு வந்தார்கள். முதலில் ஏற்படுத்தின சார்ஜ் விவரம் வருமாறு.

| கல்கத்தாவிலிருந்து | | அணா. |
| --- | --- | --- |
| சந்த்ரநாகூர் | ... | 2 |
| பர்ட்வான் | ... | 3 |
| பர்ஹாம்பூர் | ... | 4 |
| கயா | ... | 5 |
| பாட்னா | ... | 7 |
| மிர்ஸாபூர் | ... | 8 |
| அல்லகபாத் | ... | 9 |
| ஸுல்டான்பூர் | ... | 10 |
| லக்னௌ | ... | 11 |

இந்த மாதிரி சார்ஜ் அதிகரித்துக்கொண்டு போயிற்று. பம்பாய்க்கு சார்ஜ் 1 ரூ. 5 அணாவாகும்.

கடிதங்களை தோல்பைகளில் போட்டு ஆட்களிடம் கொடுப்பார்கள். அவர்கள் பைகளை முதுகில் போட்டுக்கொண்டு போவார்கள். இவர்களே ரன்னர்கள் என்பவர்கள். இவர்கள் எட்டுமைல் போனதும் வேறு ஒரு ரன்னரிடம் கொடுக்க, இப்படி வழி முழுவதும் தபால்கள் எட்டு மைலுக்கு ஒருதடவை கைமாறி குறித்த இடம் போய்ச்சேரும். இரவில் வழி தெரிவதற்காக இவர்களுக்கு உதவியாய் தீவட்டிக்காரர்கள்போவதுண்டு. காட்டுப்பாதையாக இருந்தால், பறையடிப்பவர்கள் கூடப்போய் பறையடித்துக் காட்டு ம்ருகங்களை பயமுறுத்திவிரட்டி விடுவார்கள். 20 ரூபாய் நிறைக்கு மேற்பட்ட பார்ஸல்களை பெட்டியில் போட்டு மூங்கில்களின் நுனியில் கட்டித் தொங்கவிட்டு, அந்த மூங்கில்களை அவர்கள் தோளில் போட்டுத் தூக்கிக்கொண்டு போவார்கள். இந்தப் பார்ஸல் போஸ்டுக்கு பங்கி டாக் என்று பெயர். இந்தப்பார்ஸல் போஸ்ட் தாமஸமாகவே போகும். ரன்னர் கொண்டுபோகும் தபால்கள் சீக்ரமாகப் போகும். உதாரணமாக ரன்னர் தபால்கள் கல்கத்தாவிலிருந்து மீரட்டுக்கு கோடைகாலத்தில் 12 நாட்களில் போகும். மழைகாலமாக இருந்தால் 13 முதல் 15 நாள்கள் வரை பிடிக்கும்.

உள் நாட்டில் உள்ள தபாலாபீஸுகளில் கலெக்டர்களே போஸ்ட்மாஸ்டர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு சில ஸிப்பந்திகளும் உண்டு. ஸாதாரணமாக ஒரு முன்ஷி, ஒரு ஸார்ட்டர், 30, அல்லது 40 ரன்னர்கள் இருப்பார்கள். இந்த ரன்னர்களுக்கு அந்தக் காலத்தில் (1804-ம் வர்ஷத்தில்) மாஸம் 1-க்கு 3-ரூபாய் சப்பளம் கொடுக்கப்பட்டது.

அந்தக் காலங்களில் திருடர்கள் தபால் ரன்னர்களை வழிமறித்து தபால்களைத் திருடுவதுண்டு. ஏனென்றால், பணம், நகைகள், கடியாரங்கள் முதலிய விலை உயர்ந்த பொருள்கள் தபால் மூலமாக அனுப்பப்பட்டன. 1808-ம் வர்ஷத்தில் கான்பூருக்கும் படீகருக்கும் போய்வரும் தபால்கள் சராசரியில் வாரத்துக்கு ஒரு தடவை வீதம் திருட்டுப்போயின. இதன்மேல் கவர்ன்மெண்டார் 1809-ம் வர்ஷத்தில் பணம், நகை முதலிய விலை உயர்ந்த பொருள்களை தபாலில் அனுப்பக் கூடாதென்று உத்தரவு போட்டார்கள். ஆனால் பாங்கி நோட்டுகளைப் பாதியாகக் கிழித்து, ஒரு தடவைக்கு ஒரு பாதியை மாத்ரம் தபாலில் அனுப்பலாமென்றிருந்தது.

தபாலாபீஸ் ஸிப்பந்திகள் போஸ்ட் மூலமாக வரும் பத்ரிகைகளை திருட்டுத்தனமாக அவைகளின் உறைகளிலிருந்து எடுத்து வாசித்துவிட்டுப் பிற்பாடு யாருக்குச் சேரவேண்டுமோ அவருக்கு பட்வாடா செய்துவந்தார்கள். இதனால் பத்ரிகை வரவழைப்பவர்களுக்கு தாமஸமாகவேபத்ரிகைகள் கிடைத்து வந்தன. இதனால் சந்தாதாரர்கள் போஸ்டாபீஸ் அதிகாரிகளிடம் பலமாக முறையிட்டார்கள். இதன்பேல் அதிகாரிகள் எந்த ஸிப்



பந்தியாவது பத்ரிகைகளை உறைகளிலிருந்து எடுத்தால் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவதாக உத்தரவு போட்டார்கள்.

1812-ம் வர்ஷத்தில் தான் தபால் அதிகாரிகள் பத்ரிகைகளுக்கு தபால் சார்ஜில் ஸஹாயம் செய்ய ஆரம்பித்தார்கள். வாரம் 3-தடவைக்கு அதிகமாக ப்ரசுரமாகும் பத்ரிகைகள் 2-ரூபா யெடைக்கு மேற்படாமலிருந்தால் கடிதங்களுக்கான சார்ஜில் பாதி கொடுத்தால் போதுமென்று ஏற்படுத்தினார்கள். வாரம் இரண்டு அல்லது மூன்று தடவை வெளியாகும் பத்ரிகைகள் $2\frac{1}{2}$ ரூபாய் எடைக்கு மேற்படாமலிருந்தால், ஸாதாரண சார்ஜில் மூன்றி லிரண்டு பாகம் கொடுத்தால் போதும்.

1820-ம் வர்ஷத்தில் வங்காளத்தில் தபால் ஏற்பாட்டின் நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. கமிட்டியாருடைய யோசனையின்மேல் தபால் இலாகாவானது போர்ட் அப் ரெவின்யூவின்கீழ் வைக்கப்பட்டது.

அக்காலங்களில் இருந்த தபால் ஏற்பாடு கவர்ன்மெண்டின் ஸௌகர்யத்துக்காக ஏற்பட்டிருந்ததே ஒழிய பொது ஜனங்களின் ஸௌகர்யத்துக்காக ஏற்படவில்லை. மேலும் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களுள்ள இடங்களுக்குத்தான் தபால் போக்குவரத்து நடந்து வந்தது. இந்த ஸர்க்கார் தபாலோடு ஜனங்களால் நடத்தப்பட்டு வந்த வேறு தபால் ஏற்பாடுகளும் நடந்து வந்தன. இந்தத் தபால்கள் மூலமாகத்தான் பொது ஜனங்கள் கடிதப் போக்குவரத்து செய்து வந்தார்கள். ஸர்க்கார் தபால்களைவிட இவைகளின் மூலமாகக் கடிதங்கள் வெகு சீக்ரமாகப்போய் வந்தன.

1822-ம் வர்ஷத்தில் கவர்ன்மெண்டார் ரன்னர்களுக்கு பதிலாக, குதிரை ஸவாரிபோகும் ஆட்களை நியமித்தார்கள். குதிரைகளின்மேல் ஏறிப்போனால் கடிதங்கள் சீக்ரம் போகுமென்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் கடிதங்கள் போய் வரவேண்டியிருந்த காலம் ரொம்ப குறைந்துவிடவில்லை. கல்கத்தாவிலிருந்து மீரட்டுக்குப்போக ரன்னர்களுக்கு முன்பு 12 நாள்கள் பிடித்தால், குதிரைமேலேறிப் போக $10\frac{1}{2}$ நாள் பிடித்தன. குதிரைகள் முதலியவற்றிற்காகும் செலவுக்குத் தக்கபடி தபால்கள் அதிகவேகமாகப் போகாததால், ஆறுமாஸங்கழித்து குதிரைத் தபாலை நிறுத்திவிட்டார்கள்.

கடிதங்களை தோல்பைகளில் கொண்டு போனதால், அவை மழையால் சேதமடையாமலிருந்தன. ஆனால் பார்ஸல்களுக்குத் தோல் பைகளை உபயோகிக்கவில்லையாகையால், அநேக ஸமயங்களில் பார்ஸல்கள் ஈரமாய்ப்போய், கெடுதலடைந்தன. இதற்காக, பார்ஸல்களை தாரிலாவது, டாம்மர் என்ற ஒரு வகை ரோசனத்தை இளக வைத்து அதிலாவது நனைத்து வந்தார்கள். இதனால் பார்ஸல்கள் மழையினால் சேதமடையாம லிருந்தன.

1836-ம் வர்ஷத்தில், ஏற்றுபதி இறக்குமதி வரி, தபால் ஏற்பாடு ஆகிய இவைகளைப் பற்றி சவனிக்க கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமித்தார்கள். இந்தக் கமிட்டியாரின் ப்ரேரணைகளின் பேல் 1837-ம் வர்ஷத்துப் போஸ்டாபீஸ் சட்டம் செய்யப்பட்டது. அந்தச் சட்டம் அந்த வர்ஷம் அக்டோபர் மாஸம் 1-ந்தேதி அமுலுக்கு வந்தது. இந்த ஆக்டில் கவர்ன்மெண்டாரைத் தவிர வேறு எவரும் லைஸென்ஸில்லாமல் தபால்கள் கொண்டுபோகக்கூடாதென்று விதித்தார்கள். இந்த ஆக்டில் தான் முதல்முதலாக முன்னடி தபால் சார்ஜ் செலுத்தாமல், கடிதம் பெற்றுக்கொள்ளுபவரிடமிருந்து தபால்சார்ஜ்பெற்றுக் கொள்ளாலாமென்ற ஏற்பாடு உண்டாயிற்று,

கடிதங்கள் போகவேண்டிய தூரங்களுக்குத் தக்கபடி சார்ஜ் ஏற்படுத்தப்பட்டது. 20-மைலுக்கு உள்ளானால் 1 அணா சார்ஜ். இப்படியாகப் படிப்படியாய் உயர்ந்து 1200 முதல் 1400 மைல் வரையில் 1 ரூபாய் என்று ஏற்பட்டது. இந்தச் சார்ஜின்படி $3\frac{1}{2}$ தோலாவுக்கு மேற்படாமல், சட்டப் பத்ரங்கள், கடிதங்கள், ரசீதுகள் முதலியவைகளை அனுப்பலாம். பத்ரிகைகளுக்கும், சிறுபுஸ்தகங்களுக்கும் குறைந்த சார்ஜுகள் ஏற்படுத்தப்பட்டன. அக்காலத்தில் பத்ரிகை வாசிப்பவர்கள் தபால் சார்ஜுக்காக எவ்வளவு பணம் கொடுக்கவேண்டியிருந்தன வென்பதை பத்ரிகா நேயர்கள் அறிய விரும்புவார்களாதலால் அதை இங்கு கொடுக்கிறோம்.

| | | இந்தியாவில் அச்சிட்டவை. | | | வெளிநாடுகளிலிருந்து வந்தவை. | |
|---|---|---|---|---|---|---|
| | | $3\frac{1}{2}$ தோலா வரையில். | $3\frac{1}{2}$ முதல் 6 தோலா வரையில். | 6 தோலாவுக்குமேல். | 6 தோலா வரை. | 6 முதல் 12 தோலா வரை. |
| | | அணா | அணா | அணா | அணா | அணா |
| 20 மைலுக்கு மேற்படாமலிருந்தால் | ... | 1 | 2 | 3 | 1 | 2 |
| 20 முதல் 400 மைல் வரை | ... | 2 | 4 | 6 | 2 | 4 |
| 400 மைலுக்குமேல் | ... | 3 | 6 | 9 | 3 | 6 |

இதனால் பத்ரிகை வாசிப்பவர்களுக்கு ரொம்ப அனுகூலமேற்பட்டது. முன்பு ஒரு கல்கத்தா பத்ரிகையை சென்னைக்கு அனுப்ப $8\frac{1}{4}$ அணாவும், பம்பாய்க்கு அனுப்ப 11 அணாவுமாயிற்று. இப்பொழுதோ 3 அணாவிருந்தால் போதும். இந்தப் புதுச் சட்டத்தால் பொதுஜனங்களுக்கு ரொம்ப பாதகமேற்பட்டது. முன்பு காலணாவுக்கு பொதுஜனத் தபால் மூலமாக கல்கத்தாவிலிருந்து ஹைதராபாத், ஜோட்பூர், காசி, அம்ருத்ஸர் முதலிய இடங்கள் வரையில் எவ்வளவு நிறையுள்ள கடிதங்களையும் அனுப்பலாம். இங்க்லீஷ் தபால் வழியாக அனுப்பினால், கடிதங்கள் ஒரு குறித்த நிறைக்குமேல் இருக்கக்கூடாது. அதுவும் தூரத்துக்குத் தகுந்தபடி சார்ஜ் செய்யப்படும். பொது ஜனத் தபாலில் அனுப்பலாமென்றாலோ, அந்தத் தபால்களை கவர்ன்மெண்டார் நிறுத்திவிட்டார்கள். இதன்மேல் ஜனங்கள் கவர்ன்மெண்டாருக்கு தங்கள் கஷ்டங்களைத் தெரிவித்துப் பல கடிதங்கள் எழுதினார்கள்.

1838-ம் வர்ஷத்தில் ஜனங்களுடைய புகார்களைப்பற்றிப் பரிசீலனை செய்யும்படி ஒரு உத்யோகஸ்தரை நியமித்தார்கள். இந்தக் கமிட்டியாரின் யோசனையின்படி கடிதங்களுக்கான சார்ஜைப் பாதியாக்கி, கடிதத்தின் நிறை $\frac{1}{4}$ தோலாவுக்குமேல் போகக்கூடாதென்று ஏற்படுத்தினார்கள்.

1841-ம் வர்ஷத்தில் தபால்களைக்கொண்டு போக வண்டிகளை (எக்கா) உபயோகிக்கலானார்கள். அதுவரையில் தபால்களெல்லாம் ஆள்கள் வசமே அனுப்பப்பட்டன. ஒவ்வொரு ஆளும் முதலில் 6-மைல் தூரம் தபால்களைத் தூக்கிக்கொண்டு ஓடி 6 வது மைலில் காத்துக் கொண்டிருக்கும் வேறு ஆளிடம் அவைகளைக் கொடுத்துவிட்டு, அவன் கொண்டுவந்துள்ள தபால்களை வாங்கிக்கொண்டு திரும்பவேண்டும். சில காலத்துக்குப் பிறகு 6 மைலை 3 மைலாக்கினார்கள். இந்த ஏற்பாட்டில் ஒரு குறையிருந்தது. தபால் கொண்டுபோகும் ஆள்கள் ஒருவரை ஒருவர் ஸந்தித்தால், சிறிதுநேரம் உட்கார்ந்து சுருட்டுக் குடித்து வம்பு பேசிவிட்டுப் பிறகு தபால்களை மாற்றிக் கொண்டு போவது வழக்கம். சில ஸமயங்களில் பேச்சு மறதியில் தபால்களைமாற்றிக் கொள்ளாமல் அவனவன் கொண்டுபோன தபால்களையே திரும்பிக் கொண்டுவந்து விடுவதுமுண்டு.



சட்டம் தடுத்துங்கூட ஜனத் தபால்கள் நடை பெற்றுக்கொண்டுதான் வந்தன. ஆனால் அவைகள் அதிகாரிகளுக்குத் தெரியாமல் நடைபெற்றன. 1848-ம் வர்ஷத்தில் ப்ரிவி கௌன்ஸில் அப்பீல் ஒன்று விசாரணையாகி அதன் தீர்ப்பு பம்பாயில் தெரியவந்தது. இவ்விஷயம் ஸர்க்கார் தபால் மூலமாக கல்கத்தாவுக்கு வருவதற்கு 36-மணிக்கு முன்னாலேயே கல்கத்தா முழுவதும் அப்பீல் தீர்ப்பின் ஸாராம்சம் பரவிவிட்டது.

1851-ம் வர்ஷம் முதல் தான் கடிதங்களை ரெஜிஸ்டர் செய்யும் வழக்கம் ஏற்பட்டது. இதற்கு தபால் சார்ஜோடுகூட 8-அணா அதிகமாகச் செலுத்தவேண்டியிருந்தது. போஸ்ட் மாஸ்டர் ஒவ்வொரு ரெஜிஸ்டர் கடிதத்தையும் ஒரு பச்சை உறையில் போட்டு மூடி மேலே அனுப்புவது வழக்கம். ஏனென்றால் அதுபோய்ச் சேரும் ஒவ்வொரு போஸ்ட் மாஸ்டரும் அதைப் பிரித்து அதற்குள் என்ன இருக்கிறதென்று பார்க்கவேண்டியது கட்டாயமாயிருந்தது. ஆனால் கடிதங்கள் போய்விட்டால் நஷ்டஈடு ஒன்றும் செய்வது கிடையாது. மற்ற கடிதங்களைவிட ரெஜிஸ்டர் கடிதங்கள் விஷயத்தில் அதிக ஜாக்ரதை எடுத்துக்கொள்வதற்காகத் தான் எட்டணா செலுத்துவது.

1854-ம் வர்ஷத்தில் மறுபடியும் ஒரு போஸ்டல் சட்டம் ஏற்பட்டது. அதன்படி சில திருத்தங்கள் செய்யப்பட்டன. கடிதங்களுக்கு அவைகள் போகும் தூரத்துக்குத் தக்கபடி சார்ஜ் செய்யாமல், நிறைக்குத் தக்கபடி சார்ஜ் செய்யவேண்டுமென்று ஏற்பட்டது. அது முதல் தான் தபால் ஸ்டாம்புகள் அனுஷ்டானத்துக்கு வரலாயின. ஸ்டாம்ப் ஒட்டாத கடிதங்களுக்கு பட்வாடா ஆகும்போது இரண்டு பங்கு சார்ஜ் கொடுக்கவேண்டுமென்று ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட தபால் சார்ஜ் பின்வருமாறு.

கடிதங்கள் $\frac{1}{4}$ தோலாவுக்கு மேற்படாமலிருந்தால் $\frac{1}{2}$ அணா; அரை தோலா வரையில் 1 அணா. இப்படியே மேற்பட்ட நிறைகளுக்கும் தோலாவுக்கு 2 அணாவாக அதிகம். இந்தியப் பத்ரிகைகள் $3\frac{1}{2}$ தோலாவுக்கு மேற்படாமலிருந்தால் 2 அணா; அன்ய தேசப் பத்ரிகைகள் 6 தோலா வரையில் 2 அணா; இந்த சார்ஜுகள் ஒரு மாஸங்கழித்து பாதியாக்கப்பட்டன. 1855-ம் வர்ஷத்தில் கல்கத்தாவுக்கும் ராணிகஞ்ஜுக்கும் ரெயில்வே போடப்பட்டது. அது முதல் ரெயில்வேயுள்ள தூரம் முழுமையும் தபால்கள் ரெயில் வண்டியிலே கொண்டுபோகப்பட்டு பிறகு ஸாதாரண வண்டிகளுக்கு மாற்றப்பட்டன.

464. கோஹரீஜான் ... 0 8 0
ஆரணி - குப்புஸாமி முதலியார் இயற்றிய நாவல்.
665. பங்கஜவல்லிக் கதை ... 0 8 0
திருமயிலை - ராமலிங்க முதலியார் எழுதியநாவல்.
471. அபிநவக் கதைகள் ... 0 6 0
டி. செல்வகேசவராய முதலியார் இயற்றிய சிறு நாவல்கள் அடங்கியது.
ஜீ. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# PIONEER FACTORIES.

## மாதிரிக் கைத்தொழில் சாலைகள்.

இந்தியாவின் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்குப் பலர் பலவிதமாக யோசனைகள் சொல்லி வருகிறார்கள். சிலர் காப்புவரி போடவேண்டும் என்கிறார்கள். சிலர் கைத்தொழில் கம்பெனிக்குப் பண உதவி செய்ய வேண்டும், கடன் கொடுத்து உதவவேண்டும், ரெயில்வே ஸௌகர்யங்கள் முதலியவை செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் கவர்ன்மெண்டார் நாட்டுத் தொழில்சாலைகளில் செய்யப்படும் ஸாமான்களை, அவைகள் அன்யச் சரக்குகளைவிடச் சற்று மட்டமாயிருந்தாலுங்கூட, வாங்கி ஆதரிக்கவேண்டு மென்கிறார்கள். இவை போன்ற வேறு யோசனைகளும் வெளியாயிருக்கின்றன.

கைத்தொழில் பரிசீலனைக் கமிட்டியார் நமது ராஜதானியில் விசாரணை செய்தபோது, மைஸூர் டானரி என்னும் மைஸூர் தோல் பதனிடும் கம்பெனியில் ஸூபரிண்டெண்டண்டாக இருக்கும் மிஸ்டர் என். எஸ். திருவேங்கடாச்சாரியார் தமது ஸாக்ஷ்யத்தில் கவர்ன்மெண்டார் கைத்தொழி லபிவ்ருத்திக்குச்செய்யும் மற்றெல்லா உதவிகளையும்விட மாதிரித் தொழில்சாலைகள் ஸ்தாபிப்பதுதான் உத்தமமென்று தெரிவித்தார். அவர் முன்பு சென்னையில் சித்ர வேலைக் கலாசாலையை (ஸ்கூல் அப் ஆர்ட்ஸ்) ஒட்டி ஸ்தாபிக்கப்பட்டிருந்த கவர்ன்மெண்ட் க்ரோம் தோல்சாலையை நிர்வகித்து வந்தவர். அந்தத் தொழில்சாலை செம்பியத்துக்கு மாற்றப்பட்டபின் அங்கேயும் சிலகாலம் இருந்தார். தொழிலபிவ்ருத்திக்குக் கவர்ன்மெண்டார் செய்யக்கூடிய எந்த உதவியும், இந்த மாதிரித் தொழில்சாலை ஸ்தாபிப்பதற்கு இரண்டாவதாகக் கூடச் சொல்ல முடியாதென்பது அவர் அபிப்ராயம்.

இது விஷயமாய் அவர் கொண்டிருக்கும் அபிப்ராயங்களைக் கீழே ஸங்க்ரகமாய் எழுதுகிறோம்.

இந்தியச் சிறுவர்களை வ்யாபார மானேஜர்களாகவும், தொழில்சாலைத் தலைவர்களாகவும் பயிற்றுவதே மாதிரித் தொழில்சாலைகளின் நோக்கமாக இருக்கவேண்டும். இந்தப் பயிற்சிக்கு, மாதிரித் தொழில்சாலையைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை. முன்பு கைத்தொழில் டிரெக்டராயிருந்த மிஸ்டர் சாட்டர்டனுடைய முயற்சியால் சென்னை கவர்ன்மெண்டார் அலுமினியத் தொழில்சாலை, தோல் பதனிடும் சாலை ஆகிய இரண்டு தொழில்சாலைகளையும் ஸ்தாபித்தார்கள். இப்போது அவை இரண்டும் இந்தியாவில் ஸ்திரமாக நிலைத்துவிட்டன.

மிஸ்டர் திருவேங்கட்டாசார்யாரும் பிறரும் கவர்ன்மெண்டார் ஸ்தாபித்த மாதிரித் தொழில் சாலைகளில் அடைந்த பயிற்சி அவர்களுக்கு உதவினதுபோல, இந்தியாவிலாகட்டும் அன்ய தேசங்களிலாகட்டும் தொழில் பாடசாலைகளில் பயிற்சி பெறுவது அரைவாசி கூடப் பயன்பட்டிருக்க மாட்டாதென்று அநுபவத்தில் தெரியவருவதாக அவர் சொல்லுகிறார். அந்தத் தொழில்சாலையிலிருந்த போதும் பிறகும் பார்த்தமட்டில் ஐரோப்பாவுக்குப்போய் தொழில் கற்றவர்கள், இங்கே ஐரோப்பிய நிபுணர்களுடன் வேலை பயின்ற இந்தியர்களுக்கு இணையாக மாட்டார்களென்று தெரிகிறதாம்.

கைத்தொழில்களுக்கு மற்றவித உதவிகள் செய்வதைவிட மாதிரிக் கைத்தொழில்கள் ஸ்தாபிப்பதுதான் நீடித்த நன்மையை உண்டாக்குமாம். ஆனால் இதற்கு ஒரு நிபந்தனை அவர் சொல்லுகிறார். அதாவது அந்தத் தொழில்சாலைக்கு ஒரு இந்திய வாலிப எஞ்ஜினியரையாவது, சாஸ்த்ரம் கற்றவரையாவது பூராவும் நிர்வாகம் செய்ய நியமிக்கவேண்டும். தொழில்சாலையில் வ்யாபார ஸம்பந்தமான விஷயங்களும், பொருள் செய்வது ஸம்பந்தமான விஷயங்களும் ஆகிய எல்லாவற்றையும் அவர் வசமேவிடவேண்டும். கைத்தொழில் டிரெக்டர் பண விஷயமான பொது மேற்பார்வையை மாத்ரம் வைத்துக்கொள்ளவேண்டும். ஐரோப்பிய நிபுணர்களை எந்தக் காரணங்கொண்டும் நியமிக்கக்கூடாது. அவர்களிடம் ஆலோசனை கேட்கவேண்டியிருந்தால், கேட்க வேண்டிய விஷயங்களுக்குத் தகுந்தபடி அதிகமாகவோ குறைவாகவோ பணங்கொடுத்து அப்போதைக்கப்போது யோசனை கேட்டுக்கொள்ளலாம். ஆனால் தன்மட்டில் சொல்லுமிடத்து, நிபுணர்களினுடைய யோசனைகள் முற்றிலும் பயனற்றவையென்று தெரிவதாக மிஸ்டர் திருவேங்கடாச்சாரியர் அபிப்ராயப்படுகிறார். ஏனென்றால் அவருக்கு எந்தவிடத்தில் ஸந்தேகமோ அங்குதான் நிபுணருக்கும் ஸந்தேகம் உண்டாகிறதாம். இந்தியாவின் நிலைமைகள் வித்யாஸ மாயிருப்பதால், எல்லா ஸந்தேகங்களும், கஷ்டங்களும் இங்கேயே ஆலோசித்து தீரவேண்டியதா யிருக்கிறது.

எந்தக் கைத்தொழில்கள் ஸ்தாபிப்பதற்கு இந்தியாவில் இயற்கை வஸதிகள் இருக்கின்றனவோ, அவைகளில் எவற்றை இன்னும் முதலாளிகள் ஏற்படுத்தவில்லையோ அவைகளை எல்லாம் கவர்ன்மெண்டார் மாதிரித் தொழில்களாக நடத்தவேண்டும். மாதிரித் தொழில்கள் நடத்த வரையறை யொன்றும் கூடாது. எவ்வளவு பணம் செலவழிக்க முடியுமோ அவ்வளவு வரையில் ஸ்தாபித்து வரலாம். அதற்காகப் பணம் இல்லையென்று தொழில் சாலைகளைக் குறைத்துவிடக் கூடாது. அவைகள் ஸ்தாபிப்பதற்காக வென்று பணம் எடுத்து வைக்கவேண்டும். கவர்ன்மெண்டார் கைத்தொழில்களுக்கு வேறு உதவி ஒன்றும் செய்யாவிட்டாலும், மேலே சொன்ன நிபந்தனைகளுக்கு உள்பட்டு மாதிரித் தொழில் சாலைகள் ஸ்தாபித்தால் மற்ற உதவிகள் இல்லாவிட்டாலும் அதிக பாதகமில்லை. பத்து, இருபது வர்ஷங்களுக்குள் நன்றாய் ஸ்தாபிக்கப்பட்டு வ்ருத்தியடைந்து வரும் கைத்தொழில்சாலைகள் தேசம் முழுவதும் பரவிவிடும்.

மாதிரித் தொழில்சாலைகள் நல்ல லாபம் கிடைக்கும்படி வ்ருத்தியாகும் வரையில் கவர்ன்மெண்டாரே அவைகளை நடத்தி வர வேண்டும். பிறகு அவைகளை ஜனங்கள் சேர்ந்து ஏற்பட்ட ப்ரைவேட் கம்பெனிகளிடம் விட்டுவிடவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் கவர்ன்மெண்டார் மாதிரித் தொழில்சாலைகளை சாச்வதமாக ஸொந்தத்தில் வைத்து நடத்தக்கூடாது.

---


658. மாதவி அல்லது மாதவனின் மாயக் கோலை ... 0 6 0
பண்டிதர் டி. எஸ். ராஜமய்யர் எழுதிய நாவல்.

465. ஸ்ரீநிவாஸன் ... 0 6 0
ஆரணி-குப்புஸாமி முதலியார் இயற்றிய ஒருதுப்பறியும் நாவல்.

783. ரத்தினப்பிரபை ... 0 14 0
இது ஓர் அற்புத நாவல். (கதாஸரித்ஸாகரத்தி லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது).

789. நௌகாசரித்ர கானம் 3-ம் பாகம் ... 0 12 0

790. ஷை 4-ம் ,, ... 0 12 0
இவைகளில் த்யாகராஜ ஸ்வாமிகள் செய்த கீர்த்தனைகள் ஸ்வரங்கள், அர்த்தம், விசேஷக் குறிப்புகளுடன் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. வி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார், பி.எ., இயற்றியது.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# THE CARE OF CHILDREN IN NON-SCHOOL HOURS.

## பள்ளிக்கூடமில்லாத நேரத்தில் குழந்தைகளைப் பராமரித்தல்.

சிறுவர்கள் பள்ளிக்கூடமில்லாத நேரங்களில் வீட்டிலும் தெருக்களிலும் விளையாடிக் காலங் கழிக்கிறார்கள். வீட்டில் குழந்தைகளின் உபத்ரவம் பொறுக்காமல் பெற்றோர்களில் பலர் அவர்களை வெளியில் விளையாட விட்டுவிடுவதுண்டு. தெருக்களில் நல்ல ஸகவாஸம் கிடைக்காவிட்டால், கெட்டவர்களுடன் சேர்ந்து கெட்டுப்போய் பிற்கால வாழ்வையும் அவர்கள் கெடுத்துக்கொள்ளக் கூடும். பால்யத்தில் கெட்ட வழக்கங்கள் ஏற்பட்டுவிட்டால், பின்னால் அவைகளைத் திருத்துவதென்பது ச்ரமமான கார்யமாகும். நமது நாட்டில் இன்னும் கட்டாயப் படிப்பு ஏற்படவில்லையாகையால், பெரும்பான்மையான சிறுவர் சிறுமியர்கள் வீண்பொழுது போக்குகிறார்கள். அவர்களில் சிலரே தங்கள் பெற்றோர்களுடன் வேலைசெய்து ஸம்பாதிக்கிறார்கள். வேலையில்லாத நேரங்களில் அவர்களும் விளையாடிக் காலம்போக்க வேண்டியதுதான். அப்பொழுது அவர்களுக்கும் கெட்ட ஸகவாஸம் ஏற்பட்டு, கெட்டவழியில் புத்தி ப்ரவர்த்திக்கக்கூடும்.

இந்தக் கஷ்டம் அமெரிக்காவிலும் இருக்கிறதாம். அங்கேயும் சிறுவர் சிறுமிகள் பள்ளிக்கூடமில்லாத நேரங்களில், விளையாடிப் பொழுது போக்குகிறார்கள். இவர்கள் ஏழை வீட்டுக் குழந்தைகளாக இருந்தால், அவர்கள் குடியிருக்கும் வீடு சிறியதாயிருக்குமாதலால், அங்கே இராமல் வெளியில் தெருக்களில் பொழுது போக்குகிறார்கள். அப்போது அவர்கள் கெட்ட சேர்க்கைக்கு உள்ளாகக் கூடுமாதலால், இந்தத் தீமையைத் தடுக்க, பொதுஜன ஊழியத்தில் ஈடுபட்ட பரோபகாரிகள் அநேக பட்டணங்களில் அவர்களுக்காகவென்று ஒரு புது ஸ்தாபனம் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். இவைகளுக்கு 'ஸெட்டில்மெண்ட் வீடுகள்' என்று பெயர். அங்கே சிறுவர்களுக்கு வேடிக்கையாய்ப் பொழுது போக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்துவைத்திருக்கிறார்கள். விளையாட்டுப் போக்காக அநேக உபயோகமுள்ள விஷயங்களும் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். இதனால் சிறுவர்கள் கண்டபடி தெருக்களில் திரிந்து விளையாடாமல், இந்த வீடுகளில் பெரியவர்களின் மேற்பார்வையில் விளையாடிக் காலங்கழிக்கலாம். இந்த ஏற்பாடு சரிவர நடந்துவருவதை யறிந்து, அமெரிக்காவில் சில இடங்களில் வித்யா அதிகாரிகளும் பள்ளிக்கூடங்களிலேயே விளையாட்டுகளுக்கு வேண்டிய ஸாதனங்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே மாணவர்களேயன்றி மாணவர்களின் சுற்றத்தாரும் போய் விளையாடிக் காலங்கழிக்கலாம். ஆனால் இந்த பள்ளிக்கூட ஏற்பாடு த்ருப்திகரமாக நடக்கவில்லை. என்னவென்றாலும் பள்ளிக்கூடம் பள்ளிக்கூடந்தான். சிறுவர்கள் பள்ளிக்கூடம் விட்டதும், என்ன விளையாட்டு ஸௌகர்யங்களிருந்தபோதிலும், அங்கிருக்க இஷ்டப்படுவதில்லை.

ஸெட்டில்மெண்ட் வீடுகளோ பள்ளிக்கூட ஞாபகத்தை உண்டுபண்ணுவதில்லை. மேலும் இந்த வீடுகளுக்குப் பள்ளிக்கூடம் போகமுடியாத சிறு குழந்தைகளுங்கூடப்போய் விளையாடலாம். விளையாட்டிருப்பதால் சிறுவர்கள் எல்லாரும் ஆவலுடன் அங்கே போகிறார்கள். இங்கே விளையாட்டுதான் முக்யமான அம்சம் என்றாலும், ஏதாவது உபயோகமான விஷயங்களையோ தொழில்களையோ சிறுவர் சிறுமியர்களுக்கு விளையாட்டுப் போக்கில் கற்றுக் கொடுப்பதில் 'வீட்டு' அதிகாரிகள் ஜாக்ரதையாயிருக்கிறார்கள். அப்படிச்சொல்லிக்கொடுப்பதை பள்ளிக்கூட தோரணையில் நடத்துவதில்லை. அங்கே செய்யவேண்டியவைகளைக் குழந்தைகளே செய்துகொள்ளும்படி விடுகிறார்கள். உதாரணமாக சமையல் விஷயம் கற்றுக்கொடுக்க வேண்டுமானால், சிறுமிகளை தாங்களே சமையல் செய்யும்படிவிட்டு, பெரியவர்கள் மேற்பார்வை செய்வார்கள். ஏதாவது ஆகாரப்பொருள்கள் தயார்செய்தால், தயார் செய்த சிறுமிகளே சாப்பிடும்படி விடுவார்கள். இதனால் எல்லாப் பெண்களும் சமையல் கற்றுக்கொள்ள முன்வருவார்கள்.

தையல் விஷயங்களைக் கற்றுக்கொடுக்கும்போது, சிறுமிகளைத் தங்கள் உடைகளையே தைத்துக்கொள்ளச் சொல்வார்கள். துணிகள் 'வீட்டு' அதிகாரிகள் கொடுத்தவையாயிருந்தாலும், எந்தப்பெண் உடையாகத் தைக்கிறதோ அவளுக்கு அந்த உடை ஸொந்தமானது. தானே தைத்த உடையென்று ஒவ்வொரு பெண்ணும் ஸந்தோஷங்கொண்டு, மேன்மேலும் தையல் விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஆவல் கொள்ளும்.

தச்சவேலை, சடை பின்னுதல், நாற்காலிகளுக்கு அடிபின்னுதல் முதலியவைகளும் அங்கே கற்றுக்கொடுக்கப்படும். சிறுவர்கள் அவைகளைச் செய்தபின் விற்று, வரும்பணத்தைத் தாங்களே பங்குபோட்டு எடுத்துக்கொள்வார்கள். உபயோகமுள்ள பொருள்களைச் செய்த சிறுவர்கள் தங்களுக்கு ஸொந்தமாக எடுத்து வீட்டுக்குக்கொண்டுபோய் உபயோகித்துக் கொள்வதுமுண்டு. இந்த வேலைகளெல்லாம் விளையாட்டுப் போக்காய் நடப்பதால், சிறுவர்கள் ச்ரமம் அடைவதில்லை. இந்த வேலைகள் பிற்காலத்தில் அவர்களுக்கு உபயோகப்படக் கூடியவைகளே.

அங்கே களிமண்வேலை எல்லாக் குழந்தைகளுக்கும், ப்ரியமாயிருக்கிறதாம். இவைகளும் விளையாட்டாக இருந்தாலும், சற்றுத்திறமை வந்தவுடன் செய்த களிமண் ஸாமான்களை விற்கக் கூடுமாகையால், எல்லாரும் அதில் தேர்ச்சியடைய முயலுகிறார்கள். அவர்களில் பலர் அநேக நல்ல மண்பாண்டங்கள் செய்து விற்றுப் பணம் அடைவதுண்டு. மொத்தத்தில் இந்த ஸ்தாபனங்களால் நன்மையே ஏற்பட்டு வருகிறது. இன்னொரு விசேஷமுண்டென்று சொல்லப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் பற்பல பாடங்கள் கற்பிக்கப்படுவதில், மாணவர்கள் அவைகளை வெறுவாய் நெட்டுருப்பண்ணி வருகிறார்களே தவிர, அவர்களுடைய மனோசக்திகள் வளர்ச்சியடைவது துர்லபமாயிருக்கிறது. இங்கோ என்றால், சிறுவர்கள் தாங்கள் செய்யும் ஒவ்வொரு வேலையைப்பற்றியும் நன்றாய் ஆலோசித்து, அதன்மூலமாக தங்கள் மனோ சக்திகளை வ்ருத்தி செய்துகொள்ளுகிறார்கள்.

---

278. தேனும் தேனீயும் நற்பவளமும் ... 0 10 0
அரும்பொருள் திரட்டிலிருந்து எடுத்த வ்யாஸங்கள். இண்டர்மீடியேட் பரீக்ஷைக்குப் பாடமாயுள்ளவை.

784. ச்யவனோபாக்யானம் ... 0 8 0
இதில் ப்ருகுமகர்ஷியின் கதை, சர்யாதி சரித்ரம், ஸுகன்யை சரித்ரம், குரு சரித்ரம் முதலிய கதைகளிருக்கின்றன.

852. ரத்ன ப்ரகாசம் ... 0 8 0
இதில் முத்து, பவளம், வைரம், புஷ்பராகம், கெம்பு, மாணிக்கம், நீலம், பச்சைக்கல் முதலிய பல ரத்னங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷிக்கும் முறைகள், அவைகளை அணிவதால் உண்டாகும் பலன்கள் முதலியவை விரிவாய் எழுதப் பட்டிருக்கின்றன. யாவருக்கும் உபயோகமான புஸ்தகம்.

210. துலாகாவேரி புராணம் ... 0 8 0
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# COUGH AMONG CATTLE.

## கால்நடைகளுக்கு வரும் இருமல்.

கால்நடைகளுக்கு வரும் இருமல் பற்பல காரணங்களால் உண்டாகிறது. ம்ருகங்களின் நுரையீரல் கெட்டு டுபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகம் உண்டாவதால் இருமல் உண்டாகலாம். தொண்டை, மார்பு ஆகிய இவைகள் ஸம்பந்தப்பட்ட எல்லா வ்யாதிகளிலும் இது வருவதுண்டு. ஜீர்ண ஸம்பந்தமான ரோகங்களிலும் இது வரக்கூடும்.

சில கேஸுகளில் தொண்டைமாத்ரம் கெட்டிருக்கும். தொண்டையின் உள்புறம் வீங்கிப்போவதாலும், எரிச்சலெடுப்பதாலும், தொண்டையில் ஏதாவது சிக்கிக்கொள்வதாலும், தொண்டைக்குக் கெடுதல் ஏற்படலாம்; அப்போது இருமல் ஏற்படும். இதேமாதிரி நுரையீரலும் கெடுதலடையலாம். எந்த பாகம் கெடுதலடைகிறதோ அதை யனுஸரித்து ப்ராங்கைடீஸ் என்றும், ந்யூமோனியா என்றும் ப்ளூரோ-ந்யூமோனியா வென்றும் சொல்லப்படும். ப்ள்யூரோ ந்யூமோனியா ஒருவகைத் தொற்று வ்யாதியாகும். ஆனால் இந்தியாவில் அதிகமாகக் காணப்படவில்லை. தொண்டை, மார்பு ஆகிய இவைகள் பாதகமடைவதால் உண்டாகும் இருமலுக்கு முக்ய காரணங்கள் குளிர், ஈரம், அதிகவேலை, காற்றோட்டமும் ஸுகாதாரமுமில்லாத கொட்டில்கள், எரிச்சலுண்டாக்கக்கூடிய வஸ்துக்கள் தேகத்தில் சேருவது ஆகிய இவைகளே. கன்றுகுட்டிகளுக்கும், செம்மறியாட்டுக்கும், அவைகளின் நுரையீரல் குழாய்களில் சிறியதும் நூல்போன்றதுமான புழுக்கள் போய்ச் சேர்ந்து எரிச்சலுண்டாக்குவதால் ப்ராங்கைடீஸ் என்னும் மார்ச்சளி உண்டாகிறது.

### வ்யாதியின் குறிகள்.

மந்தையில் பல ம்ருகங்களுக்கு இருமல் கண்டிருந்தால், தொற்று வ்யாதி லக்ஷணமுள்ள ட்யூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகமோ, ப்ளூரோ ந்யூமோனியா என்னும் நுரையீரல் வ்யாதியோ தோன்றியிருப்பதாகச் சொல்லலாம். கன்றுக்குட்டிகளும் வெள்ளாடுகளுமே அதிகமாக இருமிக்கொண்டிருந்தால், க்ருமி ஸம்பந்தமான மார்ச்சளியுண்டாயிருப்பதாகச் சொல்லலாம். பின்சொன்ன வ்யாதியில் ம்ருகங்கள் அடிக்கடி பலமாக இருமும். இருமும்போது ரொம்ப அவஸ்தைப்படும். அவைகள் சீக்ரம் மெலிந்துபோய் விடும். இந்த வ்யாதியில் மரணமும் அடிக்கடி ஏற்படும்.

அநேக ம்ருகங்களுக்கு இருமல் காணாமல் இரண்டொரு ம்ருகத்துக்கு மாத்ரம் வந்திருந்தால், அவற்றின் தொண்டையில் கைவிட்டுப் பார்த்து, அங்கே வீக்கமிருக்கிறதா என்று பார்த்து அறிந்துகொள்ளலாம். ப்ராங்கைடீஸ் என்னும் மார்ச்சளியோ, ந்யூமோனியாவோ கண்டிருக்கும் ம்ருகங்கள் வெகு துரிதமாக மூச்சுவிடும். நுரையீரலின் வீக்கத்துக்குத் தக்கபடி காய்ச்சலும் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். முதலில் வலியுடன்கூடிய வரட்டிருமலாக இருக்கும். பிற்பாடு இருமுவது ச்ரமமாயிராது. வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் கோழைபோன்ற பொருள் வெளிவரலாம். வைத்யர்கள் நுரையீரலில் உண்டாகும் சப்தங்களை காதுவைத்துக் கேட்பதாலும், மார்பைத் தட்டிப் பார்ப்பதாலும் நுரையீரல் வ்யாதி எவ்வளவு முற்றியிருக்கிறதென்றும், அதன் நிலைமை எப்படியிருக்கிறதென்றும் கண்டுபிடித்துவிடுகிறார்கள்.

### சிகித்ஸை.

வ்யாதிகண்ட மாடுகளுக்கு தொண்டையில் பின்வரும் மருந்தைத் தடவித் தேய்க்கவும்.



(1) டர்ப்பென்டைன் எண்ணெய், கடுகு எண்ணெய் இவைகளை ஸமபாகமாகச் சேர்த்துத் தடவி நன்றாய்த் தேய்க்கவும்.

(2) கடுகை ஜலம்விட்டு அரைத்து கெட்டியான பசை போலாக்கியும் தடவலாம்.

பிறகு ஒருவாளியில் கொதிக்கும் ஜலத்தை ஊற்றி, அதற்கு நேராய் மேலே மாட்டின் வாயைப் பிடித்துக் கொண்டிருக்கவேண்டும். இதனால் மாடு ஆவியை ச்வாஸிக்கும். இப்படிச் செய்வது நன்மை பயக்கும். ஜலத்தில் டர்ப்பெண்டைன் எண்ணெயில் சில துளிகள் விடுவதும் நல்லது. மார்பில் வ்யாதியிருந்தால், மார்பின் இரண்டுபக்கங்களிலும் மேற்சொன்ன மருந்துகளில் ஏதாவது ஒன்றைத் தேய்த்து, சில மணி நேரத்துக்கு ஒருதடவையாக ஆவியை ச்வாஸிக்கச்செய்யவேண்டும். மருந்து ஸுலபமாய் உள்ளுக்குக் கொடுக்கக் கூடுமானால் பின்வரும் மருந்துகளில் ஒன்றை உள்ளுக்குக்கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| (1) நாட்டு சாராயம் | 4 ஔன்ஸ் |
| பொடிசெய்த சுக்கு | ½ ஔன்ஸ் |
| பொடி செய்த மிளகு | 2 ட்ராம் |

இவைகளைக்கூட்டி பட்டணம் படியால் காலேயரைக்கால் படி கஞ்சியில் கலந்து கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| (2) நவாச்சாரம் | ½ ஔன்ஸ் |
| பொடி செய்த சுக்கு | ½ " |
| பொடிசெய்த எட்டிக்கொட்டை விதை | 1 ட்ராம் |

இவைகளை ஆறின கஞ்சியில் கலந்துகொடுக்கவும். வ்யாதி குணமடைந்துவந்தால் பின்வரும் பலவ்ருத்தி மருந்தைக் கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| பொடிசெய்த அன்னபேதி | ½ ஔன்ஸ் |
| பொடிசெய்த எட்டி விதை | 1 ட்ராம் |
| பொடிசெய்த நிலவேம்பு | 1 ஔன்ஸ் |

இவைகளைக் கலந்து தீனியோடு கலந்தும், கால்படி கஞ்சியில் கலந்தும் தினம் கொடுக்கலாம். மார்பில் நோயுள்ள ம்ருகங்களுக்கு உள்ளுக்கு மருந்து கொடுப்பதில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸாதகத்து பதிலாக பாதகமாக முடியும். ம்ருகங்களை கதகதப்பும் காற்றோட்டமும் சுத்தமும் உள்ள கொட்டில்களில் கட்டிவைக்கவேண்டியது அவச்யமாகும். கொட்டிலுக்குள் காற்று பலமாக வீசக்கூடாது. குளிர் காலங்களில் ம்ருகங்களின் தேகத்தை கதகதப்பாய் வைக்கவேண்டுமானால் துணிகளைப்போட்டு மூடலாம். ஸுலபமாய் ஜீர்ணமாகக்கூடியதும் ம்ருதுவானதும் சிறிய அளவில் அதிக உணவு ஸத்து உள்ளதுமான உணவுகளைத் தின்னக் கொடுக்கவேண்டும். அளவில் அதிகமானதும், ஜீர்ணம் செய்ய முடியாததுமான தீனியைப் போடலாகாது. அடிக்கடி ஜலம் குடிக்கக் கொடுக்கவேண்டும். ம்ருகம் கஞ்சியோ பாலோ குடிக்குமானால் அதைவேண்டியவளவு குடிக்கக் கொடுக்க வேண்டும்.

க்ருமிகள் சேருவதால் உண்டாகும் மார்ச்சளியில், கன்றுகளுக்கும் இதர ம்ருகங்களுக்கும் தாராளமாகத் தீனி போடுவதோடு, முன்சொன்ன பலவ்ருத்தி மருந்தை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். இந்த மார்ச்சளி வ்யாதியில் பின்வரும் முறை ரொம்ப ச்லாக்யமென்று சொல்லப்படுகிறது. நோய் கண்ட ம்ருகங்களை ஒரு அறையில் விட்டு, கதவு ஜன்னல் முதலியவைகளை மூடிவிட்டு, அவ்விடத்தில் கந்தகத்தை எரியவிடவேண்டும். ம்ருகங்கள் கந்தகப் புகையை ச்வாஸித்து, க்ருமிகளை இருமல் மூலமாக வெளிப்படுத்தும். புகை போடுபவரும் அறைக்குள்ளேயே இருக்கவேண்டும். அவருக்கு புகை தாங்கும்வரையில் ம்ருகத்துக்கும் புகை போடவேண்டும். ஒருநாள் விட்டு ஒருமுறையாக 10 நாள் இப்படிப் புகை போடுவது நல்லது. கால்நடை—

வைத்தியர்கள் மருந்துகளை ரத்தத்தில் இஞ்ஜெக்ட் செய்து க்ருமிகளைக் கொல்வதும் உண்டு.

தடுத்தல்.

க்ருமிகளால் உண்டாகும் மார்ச்சளி வ்யாதியானது வ்யாதியுள்ள புல் தரைகளின் மூலமாகப் பரவுகிறது. அங்கு ம்ருகங்கள் மேயும்போது புழுக்களின் முட்டைகளைப் புல்லோடு தின்றுவிடுவதால் வ்யாதி தேகத்தில் சேருகிறது. அப்படிப்பட்ட புல்தரைகளில் கால்நடைகளை மேய விடக்கூடாது. அல்லது அவைகளை உழுது ஜலத்தை வடித்துவிடவேண்டும். நோய் கண்ட ம்ருகங்கள் இருமும்போது வெளிவரும் கோழையாலும் புழுக்கள் பரவி வ்யாதியைப் பரவச்செய்யும். இந்த வ்யாதி கண்ட ம்ருகங்கள் இறந்துபோனால், அவைகளின் நுரையீரலைச் சுட்டெரித்துவிடவேண்டும். ஒருமந்தையில் பல ம்ருகங்கள் இருமிக்கொண்டிருந்து அவைகளுக்கு மார்பு ஸம்பந்தமான வ்யாதியிருப்பதாக அறிகுறிகளும் காணப்பட்டால், அந்த ம்ருகங்களைத் தனியாகக்கட்டி வைக்கவேண்டும். அந்த வ்யாதியைத் தொற்று வ்யாதியாக எண்ணவேண்டும். ப்ளூரோ-ந்யூமோனியா என்னும் வகை இருமல் வந்து பிழைத்துவிட்டதென்று தோன்றும் ம்ருகங்கள் வெகுகாலம் வரையில் வ்யாதியைப் பரவச்செய்யக் கூடும். அவைகள் இருந்த கொட்டிலை ஜாக்ரதையாக க்ருமிஹரமான மருந்து போட்டு சுத்தம் செய்யவேண்டியது அவச்யம். அவைகளில் மறுபடியும் மாடுகளைக் கட்டிவைப்பது உசிதமல்ல. அந்தக் கொட்டில்களை வேறு உபயோகங்களுக்கு வைத்துக்கொள்வது உத்தமம்.

# BORROWING.

By 'SESHAN.'

## கடன் படல்.

யாராவது வரவிற்குமேல் செலவு செய்வானேயானால் அவன் கூடிய சீக்ரத்தில் கடன்படுவான். சாஸ்த்ரப்படிக்கு, தான் ந்யாயமாக ஸம்பாதித்த பொருளை நான்காகப் பகுத்து, அவற்றுள் இரண்டு பாகத்தை தன்னுடைய வீட்டுச் செலவிற்கும், ஒரு பாகத்தை தான் க்ஷீணதிசையை அடையுங் காலத்தில் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்கும், மற்றொரு பாகத்தைத் தருமத்திற்கும் செலவு செய்யவேண்டும். அவ்வாறில்லாமல், தன் வரும்படி முழுவதையுமாவது, அல்லது அதைக்காட்டிலும் அதிகமாயாவது, ஒருவன் செலவு செய்வானானல், அவன் நாளடைவில் கடன்படுகிறான்.

நமக்கு சில ஸமயங்களில் அன்யர்கள் பேருதவி செய்வதுண்டு. அந்த உதவியை நாம் என்றும் மறக்கலாகாது. எப்பொழுது ஸமயம் வாய்க்குமென்று காத்திருந்து, அப்படி நமக்கு உதவி செய்தவனுக்கு நம்மால் கூடிய உதவியைச் செய்யவேண்டும். அப்படி நாம் செய்யாவிட்டால், நாம் நன்றியறிவில்லாதவர்களாக ஏற்படுவோம். இதுவும் ஒருவிதத்தில் கடன்படுதலேயாகும்.

மானிட ஜன்மத்தையடைந்த ஒவ்வொருவருக்கும், எந்த மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலுஞ்சரி ஒவ்வொரு கர்மம் ஏற்படாமலிராது. அந்தக் கர்மத்தை அவன் செய்தே தீரவேண்டும். ஆகையால், நாம் இவ்வுலகத்தில் செய்யவேண்டிய கர்மங்களை செய்யத் தவறினோமானல், அப்பொழுதும் நாம் கடன்



படுகிறோம். ஆக மூன்றுவிதக் கடன்கள் உள்ளன.

எதற்காக ஒருவன் வருவாய்க்கு மிஞ்சிச் செலவு செய்யவேண்டும்? செல்வர்கள் எந்தக் கார்யத்தையும் ஆடம்பரமாக நடத்துவது எந்தத் தேசத்திலும் வழக்கமே. ஏழைகள், "செல்வர்கள் மாத்ரம் ஏன் அவ்வாறு வாழவேண்டும். நாமும் அவர்களைப்போல் இருந்தால் என்ன?" என்று நினைத்து, செல்வரைப் போல் நடிக்க ஆரம்பிக்கிறார்கள். சில நாட்களில், கடன்காரராக ஆகிவிடுகிறார்கள்.

மற்றவர் நமக்கு ஏதேனும் பொருள் கொடுக்கவேண்டியதைக் கருதி, நாம் செலவு செய்கிறோம். அவ்வரும்படி தட்டுப்பட்டால், நாம் கடன் வாங்கிச் செய்த செலவை திருப்பிக் கொடுக்கக்கூடாமல் போகிறது. அதினின்றும் கடனாளி என்று பேரெடுக்கிறோம். மேலும், மற்றவனுக்குக் கடன் கொடுத்த ஒருவன், தனக்கு செய்து தீரவேண்டிய கார்யங்களைச் செய்வதற்காகப் பணம் வேண்டி, வேறொருவனிடமிருந்து கடன் வாங்குகிறான். தனக்கு வந்து சேரவேண்டிய கடன்தொகை, எந்தக் காரணத்தினாலாவது வராமற்போகுமேயானல், தானுமொரு கடனாளியாக நேரிடுகிறது.

நிற்க, கடன்படுதலினால் வரும் கேடுகள் யாவை என்று கவனிப்போம். கடன் கொடுத்தவன், கடன் பட்டவனை ஒரு நிமிஷமேனும் தன்னைவிட்டு அகல விடாமல் நிர்ப்பந்திக்கிறான். எப்பொழுதும் தன் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கிறான். அவ்வாறு கொடுக்காவிட்டால், தண்டனையடைய நேரிடுகிறது. துக்கம், அவமானம் எல்லாம் வருத்த, பொறுக்கக்கூடாமல் உயிர் துறப்பவர்களும் உண்டு. அவ்வாறில்லாவிட்டால, கடன் பட்டவன் தான் பட்ட கடனையொழிக்க எண்ணி வேறு மனிதர்களிடம் போய்க் கடன் கேட்கிறான். வட்டி கொடுக்கவேண்டியிருந்தாலும், அதை கவனியாது, பெருந்தொகை பெற்று தான் முதலில் பட்ட கடனை தீர்த்துவிடுகிறான். சிலநாட்களில் தான் பின்வாங்கிய கடன் அதிகமானதைக் கண்டு வருந்துகிறான். மேலும், முன்போலவே செய்துவருவானேயானல், கடன் ஒருநாளும் தீர்ந்துபோகாது. மேலும்மேலும் அதிகமாகும். கடைசியாக எப்படியாவது பெருந்துன்பத்திற்கு ஆளாகிறானேயல்லாமல், தப்புவது கூடாத காரியமாகிறது.

கடன் கொடுக்க முடியாதவன், தனக்கு கடன் கொடுத்தவனை எப்படியாவது வஞ்சிக்க எண்ணுவதும் வழக்கமே. அவனைக் காணும் பொழுதெல்லாம் பயமும் திகிலும் கொண்டு துன்பப்படுகிறான். அவன் மனஸ் ஸஞ்சலத்தைப் பின்வரும் செய்யுளால் நன்கு அறியலாம்.

விடன்கொண்ட மீனைப்போலும்
  வெந்தழல் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள்வாயிற்
  பற்றியதேரை போலும்
திடங்கொண்ட ராமபாணம்
  செருக்களத் துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம்போலும்
  கலங்கினன் இலங்கைவேந்தன்.

கலக்கம் மேலிட்ட நெஞ்சம், கொடிய தண்டனையைக் காட்டிலும் கொடியதல்லவா! ஆகையால் கடன்பட்டவரின் துன்பம் மிகவும் கொடியதே.

இது நிற்க, கடன் பல கொடிய செயல்களுக்குக் காரணமாவதுமுண்டு. கடனைத்தீர்க்க வழியில்லாவிட்டால், பல துன்மார்க்கத்தொழில்களால் பொருள் ஸம்பாதிக்க முயலுவதும் உண்டு. கோர்ட்டிற்குப்போய் பொய்ச்சாக்ஷி சொல்லுவதும், பொய் பேசுவதும், களவாடுவதும், கொலை செய்வதும் கடன்பட்டவனுக்குக் குற்றமாகத் தோன்ற. சிற்சில ஸமயங்களில் புத்தி தடுமாற்றமடைவதும் உண்டு.

கடன் படுதலினால் அநேக கஷ்டங்களுக்கு உள்பட நேரிடுகிறது. இவ்வுலகில் கஷ்டங்களே யல்லாமல் மறுவுலகிலும் பல கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடுகிறது. மறுஜன்மத்திலாவது அந்தக் கடனைத் தீர்த்தே ஆகவேண்டி யிருக்கிறது. ஆகையால் கடன்படாதிருப்பதற்குரிய வழிகளைத் தேடுவதே நல்லது. அதற்கு நாம் நம்முடைய வரவையும் செலவையும் சீர்தூக்கிப் பார்த்து செலவை ஒடுக்கி வரவை பெருக்க வழிதேடவேண்டும். அப்படி நாம் நடப்போமானால், நாம் எந்நாளும் கடன்படாமல், மனஸ் ஸஞ்சலம் சிறிதுமில்லாமல் வெகு கௌரவமாய் இவ்வுலகில் வாழ்வோம்.

நமக்கு பிறர்செய்த நன்றி அவர் நமக்கு பொருள்கொடுத்தது போலவேயாகும். ஆகையால், நாம் பொருளாகிய அந்த நன்றியை திருப்பித்தர முயலவேண்டும். அப்படி செய்யாமல் நாம் அந்த நன்றியை முற்றும் மறந்தபோதிலும், கர்மம் அதை மறவாது. மறுஜன்மத்திலும், அந்தக் கடனை நாம் தீர்த்தேயாகவேண்டும். ஆகையால், கடன் எதுவாயினும் அதை தீர்த்து விடுவதே நலம்.

அவனவன் இவ்வுலகத்தில் தனக்கென்று ஏற்படும் கர்மத்தையும் செய்தே முடிக்கவேண்டும். இல்லாவிட்டால் மறு ஜன்மத்திலும், அக்கடனாகிய கர்மம் அவனைத் தொடரும்.

ஆக, கடன்படுதல் ஓர் கொடிய பாவமாகவே கொள்ளப்படுகிறது. அப்பாவத்தை நாம் அண்ட வொட்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சேஷன்.

# MILK AND THE DAIRY.

BY S. R. ATMANADHA AIYAR.

## பாலும் பாற்சாலையும்.

எல்லா ஆகாரங்களையும்விட பாலும் பாலிலிருந்து எடுக்கப்படும் பாலாடை, பாலடைக்கட்டி, வெண்ணெய் முதலியவைகள் தான் உலகத்தில் எங்கும் முக்ய உணவுச் சரக்குகளாக விஸ்தாரமாய் உபயோகிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் பாலைக்காட்டிலும் சிறந்த உணவு இல்லையென்று சொல்லலாம். ஆயினும் பால் அநேக வித கொடிய நோய்களுக்குக் காரணமாகிறதென்றும், முக்யமாய் டைபாய்டு, ஸ்கார்லெட் முதலிய விஷ ஜ்வரங்கள், ட்யூபர்க்யுலாஸிஸ் என்று வழங்குகிற ஒருவித க்ஷய ரோகம், காலரா ஆகிய இவைகளை பரவச் செய்வதில் பால் காரணமாயிருக்கிறதென்றும் பெரிய டாக்டர்கள் ஆராய்ச்சியால் கண்டுபிடித்திருக்கிறார்கள். குழந்தைகள் பிறந்த இரண்டு மூன்று வயதிற்குள்ளேயே மாண்டு போவதற்குக் காரணம் அவைகளுக்கு அசுத்தமான பாலைகொடுப்பதே என்றும் நிச்சயமாய்க் கூறுகிறார்கள். மாடுகள் குடிக்கும் அசுத்தமான ஜலம், மாட்டுக் கொட்டிலில் மாட்டின் மலஜலம், கொசு, ஈ, உண்ணி இவைகளால் மாடுகளுக்குண்டாகும் உபத்ரவம், பாற்காரனுடைய அழுக்குக் கைகள், உடை இவைகளாலும், நன்றாகக் கழுவாத பாத்ரங்களில் பாலைக் கறப்பதாலும், கறந்தபாலுடன் ஒன்றுக்கு இரண்டாக கண்ட ஜலத்தை கலப்பதாலும், அந்தப் பாலை மேல் மூடியில்லாமல் வீதிகளிலும், கடைத் தெருவிலும் விற்பதால் அதில் படியும் தும்பு தூசிகளாலும், பால் கெட்டுப்



போய், அதை உபயோகிக்கிற ஜனங்களுக்கு முன்னே சொன்ன நோய்கள் உண்டாகின்றன.

இவைகளை நீக்கி நல்ல பால் ஸம்பாதித்துக் கொள்வதெப்படி என்பது ஒரு பெரிய விஷயம். சக்தியிருக்கிறவர்கள் தங்கள் தங்கள் பசுவை வைத்துக்கொண்டு அழுக்கும் அசுசியும் அணுகாவண்ணம் பார்த்துக் கொள்வது நலமேயாயினும், அப்படிச் செய்வது எல்லாருக்கும் முடியாதல்லவா? ஆகவே ஜனங்கள் எப்படியானாலும் நல்ல பால்தான் வாங்குகிறது என்று வைத்துக்கொண்டு அதையே கேட்டுத் தருவித்துக்கொள்ளவேண்டும். விற்பனை செய்வோர்களும் பால் சுத்தமாயிருந்தால் மட்டில் விற்கலாமென்று தெரிந்துகொள்ள வேண்டும். விற்பனைக்கு நல்லபால் வரும்படி ஸௌகர்யங்கள் செய்தல், சுத்தமான பாலை உண்டாக்குகிறவர்களுக்கு மாத்ரம் விற்பனைக்கு உத்திரவுச்சீட்டு கொடுத்தல், கெட்டபாலை விற்கிறவர்களை சிக்ஷைசெய்தல் ஆகிய இவைகள் ஸர்க்காரைச் சேர்ந்த கடமைகளாகும். பால் அதிகமாகச் செலவாகும் பெரிய பட்டணங்களில் பாற்சாலைகள் ஏற்படுத்தி யந்த்ரங்களின் உதவியால் பாலை சுத்தஞ்செய்து விற்பது மிகவும் நல்லது. நம்முடைய தேசத்தில் வெண்ணெய், பாலேடு முதலியவைகள் எல்லாம் கையால் தயாராகின்றன. இது ப்ரயாஸையான கார்யமாயிருப்பதோடு அதிக கால தாமஸமுமாகிறது. யந்த்ரங்களால் சீக்ரத்திலும் மிக பரிசுத்தமாயும் இவைகள் தயார் செய்யப்படுகின்றன. இவ்வாறு யந்த்ரங்களில் தயாராகும் ஸாமான்கள் உயர்ந்தவைகளாக இருப்பதால், சற்று விலை யதிகமானாலும் கொடுத்து நல்ல பண்டங்களை உபயோகிப்பதால் நோயணுகாமல் ஸுகமாயிருக்கலாம். தற்காலத்தில் சென்னை ராஜதானியில் சென்னை, பறங்கிமலை, நீலகிரி, விசாகபட்டணம் முதலிய சில இடங்களில் ஐரோப்பிய தேசங்களில் ஏற்படுத்தியிருப்பதுபோல பாற்சாலைகள் வைத்து நல்ல பண்டங்கள் விற்பனை செய்கிறார்கள். பெங்களூரில் ஊருக்கு வெளியில் இராணுவ டிபார்டுமெண்டால் தகுந்த மேற்பார்வைக்குட்பட்டு ஏற்படுத்தப்பட்ட பாற்சாலையையும், அதில் தயாராகும் பால், வெண்ணெய் முதலியவைகளின் நேர்த்தியும், அப்பழுக்கு இல்லாத அதன் பரிசுத்தமும், வழக்கமாய் வாங்குகிறவர்களுக்கு பால் புட்டிகளும் வெண்ணெய் பொட்டலங்களும் ஸீல் போட்டு வேளைக்கு சரியாக வீடுகளுக்கு வந்து ஸப்ளை செய்யும் விமர்சையும், பார்க்கிறவர்களுக்கு மிக ஆச்சர்யத்தையும் ஸந்தோஷத்தையும் கொடுக்கும்.

### ஐரோப்பிய தேசங்களில் பாற்சாலைகள்.

ஐரோப்பாவில் ஒவ்வொரு பாற்சாலையிலும் நூற்றுக்கணக்கான பசுமாடுகள் உண்டு. ஸாதாரணமாக 50 அல்லது 60 பசுக்களுக்கு ஒரு கொட்டில் கட்டியிருக்கும். இங்கே எந்த ஸமயத்தில் வேண்டுமென்றாலும் பால் கொடுப்பதற்கு தயாராயுள்ள பசுக்களிருக்கும். தவிர சுத்தமான பாலை அதிகமாகக்கொடுக்கும் பசுக்களையே இங்கே வைத்திருப்பது வழக்கம். பால்சாலைக்கு பசுக்கள் வந்ததும் ம்ருக நோய் வைத்யத்தில் தேர்ந்த ஸர்க்கார் டாக்டர்கள் அவைகளுக்கு ட்யூபர்க்யுலாஸிஸ் முதலிய வ்யாதிகளிருக்கின்றனவா என்று பரீக்ஷித்துப் பார்ப்பார்கள். நோய் பிடித்த மாடுகளை உடனே கொன்றுவிட்டு, அப்படிச் செய்வதில் மாடுகளின் ஸொந்தக்காரர்களுக்கு நேரிடும் நஷ்டத்தில் பாதி கட்டிக்கொடுப்பார்கள். நோயால் வருந்தும் மாட்டின் பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் அதே வ்யாதி தொற்றிக் கொள்ளாவண்ணம் அவ்வாறு செய்கிறார்கள்.

மாடுகளுக்கு நல்ல தீனி போட்டாலல்லவா

அவை நிறைய நல்லபால் கொடுக்கும்? அசுத்தமானதும் அழுகிப்போனதும் மண் முதலியன கலந்ததுமான உணவு ஆகாது. ஆதலால் பசுக்களுக்கு வேண்டிய உணவை பால் சாலையை ஒட்டியுள்ள வயல்களிலேயே வெகு ஜாக்ரதையாகச் சேகரித்து வைப்பார்கள். நம் தேசத்தில் பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, தவிடு, உளுந்து முதலிய தான்யங்களின் பொட்டு முதலியவைகளை, மாடு ஜாஸ்தியாய் பால்கொடுப்பதற்காக, போடுவதுமாதிரி மேல் நாடுகளிலும் உணவுகளின் விலை, அவைகள் போடுவதால் பசு கொடுக்கும் பால், அதிலிருந்து எடுபடும் வெண்ணெய், பாலேடு, மாட்டின் மலஜலத்திலிருக்கும் உரத்தின் தராதரம் இவைகளை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து தகுந்த உணவைப் போடுகிறார்கள். தான்யத்தை கிட்டக்கிட்ட விதைத்து பயிர் நன்றாய் வளர்ந்து முற்றுந் தருணத்தில் யந்த்ரங்களால் அதை அறுவடைசெய்து கட்டு கட்டிவிடுவார்கள். பிறகு அதை கொட்டடிக்குக் கொண்டுவந்து ஒரு யந்த்ரத்தில் கொடுத்தால் அது வைக்கோலுடன் தான்யத்தை சிறுதுண்டங்களாகச் செய்துவிடும். அதை யந்த்ரத்தின் உதவியால் பெரிய தட்டுகளில் ஏற்றி அமுக்கி வைப்பார்கள். இவைகளை வேண்டும்போது மாடுகளுக்குத் தீனியாக உபயோகிப்பார்கள், அதோடு சிறிது உப்பும் கலந்து போடுவதுண்டு. அன்றியும் மாடுகளுக்கென்று புல்தரைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். புல்லிருக்கும்போது மாடுகளை இதில் மேயவிடுவார்கள்.

பால் நல்லதா யிருக்கவேண்டுமானால், மாடுகள் குடிப்பதற்கு சுத்தமான ஜலம் வேண்டியவளவு தேவையானது. அசுத்தமான குட்டைகளிலாவது, தரைக்கு ரொம்ப ஸமீபத்தில் ஊறும் ஜலமுடைய கிணறுகளிலிருந்தாவது மாடுகளைத் தண்ணீர்குடிக்க விடுவதில்லை. பசுக்களுக்கென்று ப்ரத்யேகமாய் 100, அல்லது 200 அடி ஆழமுள்ள கிணறுகள் வெட்டி அவைகளிலிருந்து யந்த்ரங்களால் தண்ணீரை மேலுக்கிறைத்து, உலோகத்தால் செய்த பெரிய குளங்களில் நிரப்பிவிடுவார்கள். அவைகளிலிருந்துதான் பசுக்கள் நீர்குடிக்கும். மாரி காலத்தில் ஜலம் ரொம்ப சீதளமாயிருந்தால், அதனுடன் வெந்நீரைக் கூட்டி, ஜலத்தின் குளிர்ச்சியை நீக்கி பிறகு மாடுகளை குடிக்க விடுவார்கள்.

மாட்டுக் கொட்டகை ஸன்ன காரையால் தளவரிசை போடப்பட்டிருக்கும். அப்படியில்லாவிட்டால் மாடுகளின் மலஜலம் பூமியில் ஊறி சொதசொதவென்று ஈரமாயிருக்குமல்லவா? இந்த கொட்டிலுக்கு வர்ஷத்திற்கு இரண்டு மூன்று தரம் சுண்ணாம்பு அடிப்பார்கள். நல்லகாற்று வருவதற்காக ஆங்காங்கு ஜன்னல்கள் வைக்கப்பட்டிருக்கும். மேலே பரண்மாதிரி போட்டு அதில் அறுத்துக் காய்ந்த புல்லை நிரப்பியிருப்பார்களாகையால் எப்பேர்ப்பட்ட குளிர்காலத்திலும் குளிரால் மாடுகளுக்குத் துன்பமில்லை. ஒவ்வொரு பசுவுக்கு ஒரு தொழுவமும் முன்புறத்தில் தீனிபோடுவதற்பாக ஒரு தொட்டியு மிருக்கும். தொழுவத்தின் தரைமேல் மாடுபடுப்பதற்கு வைக்கோல் பரப்பியிருக்கும். உயரத்திலேற்படுத்தி யிருக்கும் குளங்களிலிருந்து ஒரு துருத்தி வழியே ஜலத்தை தினத்திற்கொருமுறை கொட்டகையில் நன்றாகப் பாய்ச்சி அதைக் கழுவி சுத்தம் செய்வார்கள். மாட்டின் சாணம், குப்பை, கூளம் ஆகிய இவைகளைப் பின்னால் பெரிய குழிகள்வெட்டி அவைகளில் போட்டு மூடி விடுவார்கள்.

நோய்க்ருமி இல்லாமல் செய்யுமிடம்.

இது ஒரு பெரிய கிடங்குமாதிரி இருக்கும். இதன் ஒரு பெரிய கதவை சாத்திவிட்டால் உள்ளே காற்று கொஞ்சங்கூட நுழைய இடமிராது. பால்புட்டிகள், அண்டாக்கள், தகரக் குழாய்கள், ஆடையெடுக்கும்யந்த்ரத்தை அக்கக்காகக் கழற்றி அதன் பாகங்கள் முதலிய பால் செல்லுகிற எல்லா பாத்ரங்களையும் வெந்நீரில் சுத்தம் செய்து பிறகு இந்த அறைக்குள் போட்டுவிடுவார்கள். உடனே கிடங்கின் கதவைச் சாத்தி ஒரு குழாய்வழியே என்ஜினிலிருந்து நீராவியை விடுவார்கள். நீராவியின் உஷ்ணத்தால் பாத்ரங்கள் சூடாவதால், அவைகளிலிருக்கும் நோய் க்ருமிகள் நிர்மூலமாகின்றன. பிறகு அந்தப் பாத்ரங்கள் மறுநாள் உபயோகத்திற்கு தகுந்தவையாகின்றன.

பாலை யந்த்ரங்களிலிட்டு சுத்தம்செய்து வெண்ணெய், பாலேடு ஆகிய இவைகள் எடுப்பார்களாதலால், விடிய நான்கு நாழிகைக்கொருதரமும் திரும்பி அஸ்தமிக்க நாலு நாழிகைப் பொழுதிற்கு ஒருதரமுமாக தினம் இரண்டு முறை பால் கறப்பார்கள். பால் கறக்கப்போவதற்கு முந்தி பால் செம்புகள், பாத்ரங்கள், தொட்டிகள் ஆகிய எல்லாவற்றையும் கழுவி நோய்க்கிடமான க்ருமிகள் இல்லாமல் செய்வார்கள். பால் பாத்ரங்கள் உள்ளே துருப்பிடித்தாவது அடியில் பெயர்ந்தாவது இருக்கலாகாது. பால் செம்புகளுக்கு மேலே துணியை இரட்டை மடிப்பாகப்போட்டு நடுவில் கொஞ்சம் பருத்திவைத்து மூடிவிடுகிறார்கள். பால் கறக்கிறவன் கறக்கும்போது போட்டுக்கொள்வதற்கென்று ஏற்பட்டுள்ள சுத்தமான வெள்ளையுடைதரித்து, கைகளைக் கழுவிக்கொண்டு பசுவின் மடியையும் அழுக்கில்லாமல் சுத்தம் செய்வான். பிறகு மாடுகளின் பால் சுரக்கும் குழல் சுத்தமாவதற்காக இரண்டு மூன்று தடவை பாலைப் பீச்சிவிட்டு செம்பில் பாலைக் கறப்பான். செம்பின் மேல் போட்டிருக்கும் துணியால் பால் நன்றாக வடிகட்டப்பட்டு அடியில் இறங்கும். பால் கறக்கிறவன் தன் கையில் பால்படாதபடி ஒரு சிறிய முக்காலியின்மீதுட்கார்ந்து பாலை ஜல்தியில் கறப்பான். நோய் பிடித்தவர்களையாவது, நோயால் வருந்துகிறார்களென்று ஸந்தேகப் பட்டவர்களையாவது பசுவண்டையாவது, பாலண்டையாவது செல்ல விடுகிறதில்லை. பசுக்களை எப்பொழுதும், முக்யமாய் கறப்பதற்கு முந்தியும், ஸாதாரணமாய் நடப்பதைவிட வேகமாக ஓட்டவும், விரட்டவும் மாட்டார்கள். பால் கறக்கும்போது பயமுறுத்தல், அடித்தல், அனாவச்யமாகக் கூச்சல்போடுதல் இவை ஒன்றுமாகாது. கறக்கும்போது பால் சிவப்பு நிறமாகவாவது அல்லது ஸ்வபாவத்திற்கு விரோதமாகவாவது இருந்தால், அந்தப்பாலை முற்றிலும் தள்ளிவிடுவார்கள். பாலை ஸுலபமாய் கறப்பதிற்கென்று சில க்ருவிகள் அப்போதைக்கப்போது தயார் செய்தபோதிலும், அவைகள் த்ருப்திகரமாயில்லாமல் இன்னும் கையால்தான் பால் கறக்கவேண்டியிருக்கிறது. ஒரு பசுவின் பாலைக் கறந்த உடனே அந்தப் பாலை நிறுத்து தினம் எவ்வளவு பால் கொடுக்கிறதென்று ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்வார்கள். இப்படிச் செய்வது எதற்காகவென்றால் பால் சரிவரகொடாமலிருக்கும் பசுக்களுக்கு தீனிபோட்டு ஸம்ரக்ஷணை செய்வதால் நஷ்டம் நேரிடுமென்று தெரிந்தால், அதை கொழுக்கப்பண்ணி கசாப்புக்காரனிடம் இறைச்சிக்காக விற்றுவிடுவதற்குத்தான். மேலும் பாலைச் சோதித்து அது ஜலமாயிருக்கிறதா, தடிப்பாயிருக்கிறதா, வெண்ணெய் பாலாடை எவ்வளவு கொடுக்கிறது என்று அறிந்துகொள்ளுகிறார்கள். பாலின் குணத்தை அதன் நிறத்தாலேயே தெரிந்து கொள்ளலாம், எவ்வளவுக்கெவ்வளவு நிறமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பால் நல்லதென்று சொல்லலாம். சிறிய உருண்டை வடிவமுள்ள கொழுப்புத் துளிகள் தான் பாலுக்கு அதன் நிறத்தைக் கொடுக்கின்றன.

இந்தக் கொழுப்பு உருண்டைகள் பெரியவைகளாயிருந்தால் அந்தப்பாலை சீக்ரத்தில் கடைந்துவிடலாம். அதிலிருந்து எடுபடும் வெண்ணெயும் உயர்ந்ததாயிருக்கும். இந்தப்பாலை ஒருபெரிய பாத்ரத்தில் கொட்டுவார்கள். இந்தப் பாத்ரம் பால் விடும்போது தவிர மற்ற வேளைகளில் மூடியேயிருக்கும். பல பசுக்களின்பாலால் இது நிறைந்த உடனே அதை பாற்சாலைக்கு கொண்டுபோய் அங்கிருக்கும் ஒரு பெரிய தகர அண்டாவில் கொட்டுவார்கள். அதிலிருந்து பால் ஒரு குழாய்வழியே சென்று வெகு விசையாய்ச் சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு யந்த்ரத்தில் போய்ச்சேருகிறது. இங்கே பாலிலிருந்து பாலேடு வேறாகவும் ஏடெடுத்த பால் வேறாகவும் பிரிக்கப்படுகிறது. ஏடெடுத்த பாலைப் புட்டிகளில் நிரப்பி அதிலிருக்கும் நுரையையும் காற்றுக் குமிழிகளையும் வெளிச்செல்லவிட்டு பிறகு மேலே அடைப்பான் போட்டு ஸீல்போடுவார்கள். இந்தப் புட்டிகளைப் பிறகு பனிக்கட்டி வைத்திருக்கும் பெட்டிகளில் அடுக்கி ரயில் வண்டிகளிலும் மோடார் வண்டிகளிலும் ஏற்றி இதர ஊர்களுக்கு அனுப்பி விடுவார்கள். இந்தப் பால் மிக உத்தமமானது.

பாலேட்டில் கொழுப்பு ஜாஸ்தியாயிருப்பதாலும், அது எளிதில் ஜீர்ணமாகிறதாலும் அது நல்ல உணவு பொருளாகிறது. ஏடெடுத்தபால் ஒருவித பாலடைக்கட்டி செய்வதற்காவது அல்லது அதை குளிரச்செய்து சுருக்கித் தகர டப்பாக்களில் அடைத்து வெளியூர்களுக்கு அனுப்புவதற்காவது உபயோகமாகிறது. சிலவகை பிஸ்கோத்து, ரொட்டி, குழம்பு, பணியாரம் இவைகள் செய்வதற்கு உபயோகமாகிற அப்பட்டம் பாலுக்குபதிலாக இந்த ஏடெடுத்தபாலை உபயோகிக்கலாம். மேலும் இந்தப் பால் பன்றிகள், பசுவின் கன்றுகள் ஆகிய இவைகளுக்கும் ஆகாரமாகிறது.

ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட பால்.

இதற்கு நோய்க்கிடமான க்ருமிகள் நாசஞ் செய்யப்பட்ட பாலென்று அர்த்தம். இது பாலைக்காய்ச்சி ஸுமார் 160 அல்லது 170 பாரன்ஹீட் டிக்ரீ உஷ்ணத்திற்கு 10 அல்லது 15 நிமிஷம் வரையில் உள்ளாக்குவதால் தயாராகிறது. இப்படிச்செய்வதால் பாலிலிருக்கும் ஆல்ப்யுமின் என்ற ஒருபொருள் உறைந்து போகுமாதலால், இந்தப்பால் எளிதில் ஜீர்ணமாவதில்லை

கண்டென்ஸ்டு பால்.

தூரதேசங்களுக்கு அனுப்பவேண்டுமானால் பாலை நோய் க்ருமிகளில்லாததாகச் செய்து, குளிர்ச்சியால் மூன்றிலொருபாகமாக ஒடுங்கச்செய்து தகர டப்பாக்களிலடைத்து அனுப்புகிறார்கள். நம்முடைய தேசத்தில் விஸ்தாரமாய் செலவாகிற ஸ்விஸ்பால் ஸ்விட்ஜர்லண்ட் தேசத்திலிருந்து வருகிறது. இங்லண்ட் தேசத்தில் ஐல்ஸ்பரி என்ற ஊரிலும் இந்த மாதிரிப்பால் தயார் செய்கிறார்கள். இந்த பாலில் சர்க்கரை சேர்ந்தது, சர்க்கரை சேராதது என்று இரண்டுவிதமுண்டு. சர்க்கரை சேர்க்காதபால் ச்ரேஷ்டமானாலும் அது ஸுலபமாய் அகப்படுகிறதில்லை. மேலும் சர்க்கரை சேர்க்காத காரணம்பற்றி சீக்ரம் கெட்டுப்போய்விடும். ஆகையால் அதைச் சிறு டப்பிகளாக வாங்கிக் குளிர்ந்த இடத்திலேயே வைத்திருக்கவேண்டும்.

சாக்கரை கலந்தபால் சீக்ரத்தில் கெடாததோடு ஸ்வயப் பசும்பாலைவிட சீக்ரத்தில் ஜீர்ணமாகுமென்றாலும், குழந்தைகளுக்கு இதையே நீடித்தகாலம் உபயோகிப்பது கணநோய் முதலிய வ்யாதிகளுக்கு காரணமாகிறதால் அவ்வளவு நல்லதல்ல என்று வைத்யர்கள் கூறுகிறார்கள். இது மூன்றிலொருபாகமாக சுருங்கச் செய்திருப்பதால், இந்தப்பாலுடன் இரண்டுபடங்கு ஜலம்சேர்த்தே உபயோகிக்கவேண்டும்.



வெண்ணெய்.

கடைவதற்குபோதுமான பாலேடுகிடைத்த உடனே, அதை ஒரு யந்த்ரத்தில் சேகரித்துக் கொஞ்சம் சூடேற்றுவார்கள். இப்படிச்செய்வதால் அது சீக்ரமே புளித்துப்போகும். இல்லாவிட்டால் புளிப்பதன் பொருட்டு கொஞ்சம் த்ராவகத்தைச் சேர்த்து பிறகு அதை வெண்ணெய்த் தாழிக்குள் போடுவார்கள். இது யந்த்ரத்தால் சுழற்றப்படுவதால், ஸுமார் அரைமணி நேரத்திற்குள்ளாக வெண்ணெய் மிதந்து மேலே வந்துவிடும். உடனே வெண்ணெய்த் தாழியை திறந்து கொஞ்சம் ஜலம் விட்டுக்கழுவி வெண்ணெயை ஒரு மொத்தை யாக்குவார்கள். பிறகு கீழே இருக்கும் ஒரு அடைப்பானை இழுத்ததும் மோர் கீழே வடிந்துபோகும். வெண்ணெய் மாத்ரம் மேலே தேங்கியிருக்கும். அதை வேறொரு யந்த்ரத்தில் கொடுத்தால் வெண்ணெயிலிருக்கும் மோர் முற்றிலும் நீங்கிவிடுகிறது. பிறகு வெண்ணெயை ஒவ்வொரு பவுண்டு நிறைகளாக அச்சுக்களில் கொடுத்து அழுத்தி முத்ரைபோட்டுப் பொட்டலங்களாகக் கட்டுவார்கள். வாடிக்கையாக வாங்குகிறவர்களுக்கு இந்த வெண்ணெய்ப் பொட்டலங்களை குளிர்ந்த அறையில் வைப்பார்கள். அங்கே வைக்கப்பட்டுள்ள பனிக்கட்டியின் குளிர்ச்சியால் வெண்ணெய் ருசியாயும் புளிக்காமலுமிருக்கும். வெண்ணெயில் நூற்றில், 85 முதல் 88 பாகம் வரைக்கும் கொழுப்பு இருப்பதால், இதைச் சாப்பிடுவதால் உத்ஸாகமும் ஊக்கமும் உண்டாகும். ஆனால் ப்ரோடீன் என்ற மற்றொரு முக்யமான உணவுப்பொருள் இதில் நூற்றிலொரு பாகம் மாத்ரமேயிருப்பதால், இது ஒன்றைச்சாப்பிட்டே நீடித்தகாலம் ஜீவித்திருக்க முடியாது.

வெண்ணெயில் சூதுகள்.

வெண்ணெயில் சில சூதுகளுண்டு. ஊசிப்போன வெண்ணெயைக்கழுவி, கொஞ்சம் உப்பு சேர்த்து நல்லவெண்ணெயுடன் கலந்து விடுவதுண்டு. கெட்டுப்போகுந் தருணத்திலிருக்கும் வெண்ணெய்க்கு சில மருந்துச் சரக்கு சேர்த்து மோசஞ்செய்வார்கள். வேறு சிலர் வெண்ணெய் நல்ல வர்ணமாயிருப்பதற்காக ஒருவித மரத்தின் விதையைச் சுற்றியுமிருக்கும் பொடியில் கொஞ்சம் சேர்த்துவிடுவது வழக்கம்.

வெண்ணெய்க்கு பதிலாக ஒலியோ மார்கரின் என்றும், பட்டரின் என்றும் சொல்லப்பட்ட வெண்ணெய்போன்ற வஸ்துக்கள் ஹாலண்ட் முதலிய தேசங்களில் தயாராகி அன்ய தேசங்களுக்கு அனுப்பப்படுகிறது. இவைகள் தேங்காயெண்ணெய் அல்லது சில செடிகளிலிருந்து இறக்கப்படும் எண்ணெய் அல்லது சில ப்ராணிகளின் கொழுப்பு ஆகிய இவைகளைக்கொண்டு செய்யப்படுகின்றன, இவைகளை நல்ல பதார்த்தங்களிலிருந்து ஜாக்ரதையாய் செய்து வெண்ணெய் என்று சொல்லாமல் அதன் யதார்த்தமான பெயருடன் விற்பனை செய்தால், இவைகளும் நல்ல உணவுகளென்றே சொல்லலாம். மேலும் இவைகள் வெண்ணெயைவிட நயமானவை.

மோர்.

இது எளிதில் ஜீர்ணமாகும். உடம்பிலிருந்து மூத்ரத்தைப் போக்குவதில் மிக உபயோகமானது. இதிலிருக்கும் லாக்டிக் ஆஸிட் என்ற ஒருவகை த்ராவகம் இதற்கு புளிப்பைத் தருகிறது. இந்தப் புளிப்பு குடலில் புழுத்து நெளியும் பூச்சிகளைக் கொன்று அவைகளால் உண்டாகும் தலைவலி, பித்தம், மலச்சிக்கல் முதலிய நோய்களை நீக்கும்.

பாலடைக்கட்டி.

காய்ச்சின பால் நிறைந்த ஒரு தொட்டியில் இளங்கன்றுக்குட்டியின் வயிற்றிலிருந்து எடுக்கப்பட்ட ஒருவகைத்தோலை சிறிதளவு போடு

வார்கள். இது போட்டதும் பால், தயிர் மாதிரி உறைந்து போய்விடும். இதிலிருந்து தெளிவு ஜலத்தை வடித்துப்பிறகு, அதனுடன் கொஞ்சம் உப்பைக் கலப்பார்கள். பிறகு அதை ஒரு அச்சில் கொடுத்தால் பாலடைக் கட்டியிலிருக்கும் ஜலமெல்லாம் நீங்கி அழகிய உருவமுள்ள துண்டங்களாகிறது. அவைகளை யெடுத்து, உலர்த்ததும் காற்றோட்டமுள்ளதான ஒரு அறையில் கொஞ்சகாலம் வைத்திருந்து பிறகு விற்பனைக்கு அனுப்பிவிடுவார்கள். சிலர் ஏடெடுத்த பாலுடன் கொஞ்சம் பாலேடு சேர்த்தும் ஒருவித பாலடைக்கட்டி செய்கிறார்கள். ஆனால் இது பலதேசங்களில் பலவிதங்களாகச் செய்யப்படுகிறது.

எஸ். ஆர். ஆத்மநாதய்யர்.

## TURMERIC.

## மஞ்சள்.

முதல்முதல் இந்தியாவில்தான் மஞ்சள் உண்டாயிற்று என்று சில தாவர சாஸ்திரிகள் சொல்கிறார்கள். ஆனால் முதல்தரமான மஞ்சள் சீனதேசத்திலிருந்தோ, கொச்சின் சைனாவிலிருந்தோ இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதென்று சொல்லப்படுகிறது. இப்பொழுது நமது தேசத்தில் எல்லாவிடங்களிலும் மஞ்சள் பயிரிடப்பட்டு வருகிறது. மஞ்சளில் இரண்டுவிதம் உண்டு.

(1) ஒருவித மஞ்சள் கெட்டியாயும் அதிக சாயமுள்ளதாயுமிருக்கும். அவ்வித மஞ்சள் சாயம் தோய்ப்பதற்காக உதவுகிறது. அதற்கு சாயமஞ்சள் என்று பெயர்.

(2) இரண்டாவதுவித மஞ்சள் ம்ருதுவாயும் வெளுத்த மஞ்சள் நிறமாயும் இருக்கும். இதற்குக் கறிமஞ்சள், அல்லது விரளிமஞ்சள் என்று பெயர். இவ்விதமஞ்சள் ஊறுகாய் போடுவதற்காகவும், சமையலிலும் உபயோகப்படும். வ்யாபாரத்தில் சீனாவிலிருந்து வரும் மஞ்சள்தான் ச்லாக்யமானதென்று சொல்லுகிறார்கள். அதிலும் பார்மோஸா தீவிலிருந்து வரும் மஞ்சள் இன்னும் அதிச்லாக்யமாகும். அதற்கு அடுத்தாற்போல் நன்றாயிருக்கும் மஞ்சள் பெங்காளம், பர்மாவிலுள்ள பெகு, சென்னை ஆகிய இந்த ப்ரதேசங்களிலுள்ள மஞ்சளாகும். கொச்சி நாட்டு மஞ்சள் உருண்டையாக இருக்கும். ஸாதாரணமாக கடைகளில் விற்பதற்காக துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு இருக்கும். அது சாயத்துக்கேயல்லாமல், ஆகாரவகைகளிலும் உபயோகப்படுகிறது.

முதல்தரமான சாயமஞ்சள் வேண்டுமானால், பின்வருமாறு செய்யவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

மஞ்சள் கிழங்கை ஸாதாரணமாய் சீக்ரமாய்வெட்டி யெடுப்பதுபோல் வெட்டியெடுக்காமல், நெடுநாள் வரையில் பூமியில் வைத்திருந்து பிறகு மஞ்சளை நன்றாக உலர்த்தி, கொஞ்சகாலம் வரையில் உபயோகப்படுத்தாமல் வைத்திருந்தால் மஞ்சள் அதிக சாயமுள்ளதாகும். நம் நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் மஞ்சள் எல்லாம் சாயம் தோய்ப்பதற்கே உபயோகப்படுகிறது. சென்னை ராஜதானியிலுள்ள எல்லாத் துறைமுகப் பட்டணங்களிலிருந்தும் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மஞ்சளின் நிறை 1916-ம் வருஷம் ஜூன்மீ 30-ந்தேதியோடு முடிகிற 6-மாஸத்துக்கு 1,745, 924 ராத்தலாகும். அதன்விலை 3¼ லக்ஷம் ரூபாய்.



சென்னைராஜதானியில் மஞ்சள் பயிரிடுதல்.

நமது ராஜதானியில் ஈரோடு, திருச்சினாப்பள்ளி, கரூர், சேலம், நெல்லூர், கொச்சி, கடப்பை முதலிய இடங்களில் மஞ்சள் விசேஷமாகப் பயிரிடப்படுகிறது. வர்ஷாவர்ஷம் ஏறக்குறைய 8,000 டன் மஞ்சள் பயிரிடப்படுகிறதென்று மதிப்பிடப்படுகிறது. ஆனால் நமது ராஜதானியில் பலவிடங்களில் பலவிதமான நிறைகள் வழங்கிவருவதால் உண்மையாக இவ்வளவுதான் பயிரிடப்படுகிறது என்று சொல்வது ஸாத்யமல்ல.

கோயம்புத்தூர் ஜில்லாவில், சேனைக்கிழங்கு, மக்காச்சோளம், ஆமணக்கு ஆகிய இவைகளுடன் மஞ்சள் பயிரிடப்படுகிறது. ஜூன், ஜூலைமாஸங்களில் பயிரிட்டு மார்ச், ஏப்ரல் மாஸங்களில் வெட்டி எடுப்பார்கள். ஸாதாரணமாக ஒரேநிலத்தில் வர்ஷாவர்ஷம் மஞ்சள் பயிரிடுவதில்லை. மூன்று வர்ஷத்திற்கு ஒரு தடவைதான் ஒரு நிலத்தில் மஞ்சள் பயிர் செய்வார்கள். மஞ்சளைவெட்டி எடுத்ததும் கேழ்வரகு, நெல் முதலியவை பயிர்செய்வார்கள்.

ஒரு ஏக்ரா மஞ்சள் பயிரிடுவதற்கு ஏறக்குறைய 120 ரூபாய் செலவாகும்.

ஒரு ஏக்ராவில் 3000 ராத்தல் முதல் 5000 ராத்தல்வரை காய்ந்த மஞ்சள் கிடைக்கும். இதன்விலை 120 ரூபாய்முதல் 200 ரூபாய் வரையாகும்.

.மஞ்சள் பயிரிடும்போது சேனைக்கிழங்கும் பயிரிடப்படுவதால், அதிலிருந்தும் 200 ரூபாய் வரையில் கிடைக்கும். ஸாதாரணமாக கரும்பு பயிரான நிலத்தில் மஞ்சளைப் பயிரிடுவார்கள்; ஏனெனில் அப்பொழுதுதான் நிலத்தில்வளமை குறையாமலிருக்குமென்று சொல்லுகிறார்கள்.

வெட்டியெடுத்த மஞ்சளை விற்பனைக்குத் தயாராக்க ஒவ்வொரு ப்ரதேசத்திலும் ஒரு முறை அனுஸரிக்கப்படுகிறது. வங்காள நாட்டில் மஞ்சளை சுத்திசெய்து மேலே உள்ள சிறுவேர்களை எடுத்துவிட்டு, மண் பாத்ரங்களில்போட்டு, பாத்திரங்களின் வாயை நன்றாய் மேல்மூடியினால் மூடிவிட்டு அடுப்பில் வைத்து வேக வைப்பார்கள். மஞ்சளில் உள்ள ஜலத்தினாலேயே அது நன்றாய் வெந்துபோகும். பிறகு அவைகளை எடுத்து ஒருவாரம் வரையில் வெயிலில் உலர்த்துவார்கள். தினந்தோறும் இரவில் பனிபடாதபடி குவித்து மூடிவைத்து மறுநாள் பிரித்து விடுவார்கள். நமது ராஜதானியில் மஞ்சளைத் தண்ணீரில் நன்றாக வேகவைத்து வெயிலில் உலர்த்துகிறார்கள். சாயம் தோய்ப்பதற்காக வேண்டுமென்றால், மஞ்சளை இரண்டாம் தடவை நன்றாக வேகவைத்து, ஈரமாக இருக்கும்பொழுதே பொடி செய்து அதிலிருந்து மஞ்சள் சாய த்ரவம் இறக்கிக்கொள்வார்கள்.

நமதுநாட்டில் மஞ்சள், கல்யாணம் முதலிய சுபமான கார்யங்களிலும், ஸ்த்ரீகள் தினம் ஸ்நானம் செய்யும்போது உடம்பில் பூசிக்கொள்ளவும், சமையலிலும் உபயோகப்படுகிறது.

பட்டு, பருத்தி, கம்பளம் முதலியவைகளைச் சாயந்தோய்க்க மஞ்சள் உபயோகப்படுகிறது. கல்கத்தாவிலுள்ள சாயக்காரர்கள் மஞ்சளை கார்பனெட் அப் ஸோடாவுடன் அதாவது ஸோடா பஸ்மத்துடன் கலந்து முதல்தரமான மஞ்சள்சாயம் செய்கிறார்கள். மஞ்சள் காகிதம் செய்வதற்கும் மஞ்சள் உபயோகப்படுகின்றது. பெங்காளத்தில் பருத்தித் துணிகளை சாயம் தோய்ப்பதற்கும், பொம்மைகளுக்கும், நெட்டிவேலைகளுக்கும் வர்ணம் கொடுப்பதற்கும் மஞ்சளை உபயோகிக்கிறார்கள். அதை நீலச்சாயத்தோடுகலந்துபச்சைவர்ணம் செய்கிறார்கள். சீட்டித்துணியில் மஞ்சள்நிறம் அச்சடிக்கவும் நாட்டுக்கடுதாசிக்கு மஞ்சள் நிறங்கொடுக்கவும் அது உபயோகப்படுகிறது.

# HYGIENIC INFANT FEEDING.

## குழந்தைகளுக்கு ஸுகாதார விதிப்படி உணவு கொடுத்தல்.

சிறு குழந்தைகளுக்கு உணவு கொடுக்கும் விஷயத்தில் தாய்மார்கள் அதிக ஜாக்ரதை எடுத்துக்கொள்ளவேண்டும். குழந்தைகளின் அவயவங்கள் பூர்ண வளர்ச்சி அடைவதற்கு உணவே மூல காரணமாக இருக்கிறபடியால், எது நல்ல உணவென்பதைக் கண்டு தெளிந்து அதைக் குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும். உணவு விஷயத்தில் ஜாக்ரதை எடுத்துக்கொள்ளாவிட்டால் பல வ்யாதிகள் உண்டாகி, அவைகளினால் குழந்தைகள் துன்பமடைய நேரிடும். தாயின் பாலே குழந்தைகளுக்கு உபயோகிக்கும் உணவுகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது. மற்ற விதமாகக் கிடைக்கும் பால் டின்ஸுகளில் சேர்ந்துள்ள பொருள்கள் தாய்ப்பாலில் இருப்பதுபோல் இராமல் வேறுபட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட பால்களில் வ்யாதிகளை உண்டாக்கக்கூடிய க்ருமிகள் சேரக் கூடுமாகையால் குழந்தைகளுக்கு அவைகளினால் வ்யாதி உண்டாகலாம். தாய்ப்பாலில் அப்படிப்பட்ட க்ருமிகள் இருப்பதில்லை. அதோடு இன்னொரு விசேஷ குணமும் தாய்ப்பாலுக்கு உண்டு. குழந்தையின் தேகத்திற்குள் வந்து அடையும் க்ருமிகளை நாசப்படுத்தும் சக்தி அதனிடத்தில் இருக்கிறது. மிகவும் ஜாக்ரதையோடு வைத்திருக்கும் பசுவின் பாலிலும் க்ருமிகள் வந்து சேருகின்றன. ஆனால் அவைகள் கொஞ்சமாக இருந்தால், குழந்தைகள் அதைக் குடித்து ஜீர்ணமாகும்போது, ஒருவித ரஸத்தோடு ஸம்பந்தப்பட்டு அந்த க்ருமிகள் அழிந்துபோகின்றன.

### பசும்பால்.

குழந்தைகளுக்குப் பசுவின் பாலை அப்படியே கொடுப்பது யுக்தமல்ல. ஏனெனில் அந்தப் பாலைக் குழந்தைகளுக்கென்று கடவுள் உண்டுபண்ணவில்லை; பசுவின் கன்றுகளுக்கென்றே பசுவினிடம் பாலை உண்டாக்கி இருக்கிறார். அவயவ அமைப்பிலும் உருவத்திலும் கன்றுக்குட்டிக்கும் குழந்தைக்கும் எவ்வளவோ வித்யாஸம் இருக்கிறது. ஆகவே பசுவின்பாலில் கன்றின்வளர்ச்சிக்கு ஏற்றபடி எல்லாப்பொருள்களும் கலந்திருக்கின்றன. பசுவின்பாலுக்கும் தாய்ப்பாலுக்கும் வெகு வித்யாஸம் உண்டு. பசுவின் பாலில் கன்றின் வளர்ச்சிக்குத் தகுந்தபடி கொழுப்பும் தித்திப்பும் குறைவாக இருக்கிறது. அதைக் குழந்தைகளுக்கு உபயோகப்படுத்தும்போது அதில் தண்ணீரை ஊற்றிச் சர்க்கரையைச் சேர்க்கிறார்கள். எவ்வளவுதான் பக்வப்படுத்தி உபயோகித்தபோதிலும் பசுவின்பால் தாய்ப்பாலுக்கு ஸமானமாகமாட்டாது. குழந்தைகள் ஜீர்ணித்துக்கொள்ளக்கூடாத சில வஸ்துக்கள் பசுவின்பாலில் இருக்கின்றன. தாய்ப்பாலில் உள்ள கொழுப்பு சிறுசிறு துளிகளாக இருக்கிறபடியால் அது வெகு சீக்ரத்தில் ஜீர்ணமாகிவிடும். எலும்பு நரம்பு முதலியவைகளின் வளர்ச்சிக்கும் ரத்த வ்ருத்திக்கும் வேண்டிய சிலவகை உப்புகள் தாய்ப்பாலில் ஸரியான அளவாகக் கலந்திருக்கின்றன. குழந்தையின் மூளையும் தசைநரம்புகளும் அதிக வளர்ச்சி உள்ளவைகளாக இருக்கிறபடியால், கன்றுக்கென்று ஏற்பட்டுள்ள பசுவின்பால் குழந்தைக்கு ஏற்றதாகாது. பசுவின் பாலினாலும் வேறுவிதமான பால்களினாலும் வளரும் குழந்தைகள் வ்யாதிகளினால் அதிகமாக இறந்துபோவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். தாய்ப்பாலை உண்டுவளரும் குழந்தைகள் அப்படி இறப்பதில்லை. குழந்தையின் ஆகாரத்துக்குப் போதுமானபடி அநேக தாய்மார்களுக்குப் பால் இருப்பதில்லை. ஆகவே பசுவின்பாலை கூடியமட்டும் தக்கவிதமாய்ப் பக்வப்படுத்தி உபயோகிக்கவேண்டிவருகிறது.

### புட்டிப் பால்.

பசுவின்பால் கிடைக்காதபொழுது அநேகர் வெளிதேசங்களிலிருந்து புட்டிகளில் அடக்கம் செய்துவரும் பாலை வாங்கிக் குழந்தைகளுக்கு உணவாக உபயோகிக்கிறார்கள். அது விசேஷமாய் தித்திப்பு சேர்த்த பாலிலிருந்து செய்யப்பட்டு வருகிறபடியால் அதில் ஜலம்சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் போதுமான ஆகாரமாவதில்லை. புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளின் உடம்பு புஷ்டியுள்ளதாகக் காணப்பட்டாலும், அவர்கள் வெளுத்திருப்பார்கள்; உடம்பு பெரியதாக இருந்தாலும் பலம் கொஞ்சந்தான் இருக்கும்; வ்யாதிகளைத் தடுத்துக்கொள்ளும் சக்தி அவர்களிடம் மிகவும்கொஞ்சம்; அப்படிப்பட்ட குழந்தைகளுக்குப் பல் வெகுநாள் சென்ற பிறகுதான் முளைக்கும்; ஒரு வயது ஆவதற்குள் கணநோய் உண்டாகும். தித்திப்பு சேர்த்துள்ள புட்டிப்பால் டின்ஸுகள்பெரும்பாலும் ஏடெடுத்த பாலிலிருந்து செய்யப்படுகிறபடியால் அதில் கொழுப்பு மிகவும் கொஞ்சமாக இருக்கும். தித்திப்பு சேர்க்காததும், ஏடு எடுக்காததுமான புட்டிப்பாலில் ஒரு பாகத்துக்கு இரண்டுபாகம் ஜலம் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் கெடுதி உண்டாகாது. அப்படிப்பட்ட பால் பசுவின் பாலைப்போலவே இருக்கும். தித்திப்பு சேர்த்துள்ள புட்டிப்பாலில் இவ்வளவு ஜலம் கலந்தால் அது மிகவும் தித்திப்பாகவே இருக்கும். தித்திப்பு அதிகமாக இருந்தால் குழந்தைகளுக்கு வ்யாதி உண்டாகும். ஆகவே குழந்தைகளுக்குத் தித்திப்பு சேர்க்காத ஏடுள்ள புட்டிப் பாலையே உபயோகிப்பது உத்தமம். புட்டியைத்திறந்த கொஞ்சநாள்களுக்கெல்லாம், அந்தப்பாலும் கெட ஆரம்பிக்கிறது. ஆகவே சிறுசிறு புட்டிகளாக வாங்கி உபயோகிப்பதுதான் நலம்.

### குழந்தைகளுக்கான செயற்கை உணவுகள்.

இவ்வித உணவுகள் கடைகளில் அநேக விதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றும் குழந்தைகளுக்கு மேலான உணவென்றும், தாய்ப்பாலுக்கு ஸமானமானதென்றும் வ்யாபாரிகள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் எல்லா வ்யாபாரிகளைப்போலவே இந்த உணவுகளைத் தயார்செய்கிறவர்களும் தங்கள் பொருளை விற்கும் நிமித்தம் இம்மாதிரி விளம்பரம் செய்கிறார்களேயொழிய, வாஸ்தவத்தில் அவைகளினால் நன்மை உண்டாவதில்லை. அவைகளில் குழந்தைகள் ஜீர்ணித்துக் கொள்ளக்கூடிய அளவைவிட அதிகமாக ஸ்டார்ச் என்னும் மாஸத்து இருக்கிறது; வேண்டிய அளவு கொழுப்பும் ப்ரொடீட் என்னும் தசைவளர்க்கும் வஸ்துக்களும் கலந்திருப்பதில்லை. இந்த உணவுகள் அநேகமாய்க் உலர வைத்த பாலிலிருந்து செய்யப்படுகின்றன. அவைகளில் சர்க்கரையும் ஊறவைத்து முளைக்கவிட்டு உலர்த்திய தான்யத்தை அரைத்த மாவும் கலந்திருக்கும். காயவைத்த தாய்ப்பாலில் உள்ள வஸ்துக்களின் அளவுப்படி பெரும்பாலும் எந்த உணவில் ஆகார அம்சங்கள் கலந்திருக்கின்றனவோ அதுதான் மேலானது. மெல்லின்ஸ் முதலிய உணவுகளைப் பாலோடு கலந்து குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட உணவுகளில் எந்தப்பொருள்கள் குறைவாகச் சேர்ந்திருக்கின்றனவென்று தெரிந்துகொண்டு அந்தப்பொருள்கள் அடங்கியுள்ள பாலேடு, சர்க்கரை முதலிய வஸ்துக்களைச்சேர்த்து குழந்தைகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கவேண்டும்.

# THE FOOD VALUE OF GROUNDNUT.

## வேர்க்கடலை உணவுப்பொருளாவது.

வேர்க்கடலையானது நமது நாட்டில் அதன் எண்ணெய்க்காகவே பயிரிடப்படுகிறது. எண்ணெய் எடுத்தபின் நிற்கும் பிண்ணாக்கு கால்நடைகளுக்குத் தீனியாகவும், வயல்களுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது. பிண்ணாக்கைக்கொண்டு மனிதர்களுக்கு ஏற்ற உணவு செய்யக்கூடுமென்பது பலருக்கும் தெரியாது. இதைச் சேர்த்து ஜெர்மானியர்கள் ஒரு உணவுப்பொருள் தயார்செய்து, யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் இந்தியாவில் ராத்தல் 6-ரூபாயாக விற்றுவந்தார்கள். தக்க யந்த்ர ஸாதனங்கள் இருந்தால் அதே பொருளை நாம் இங்கே ராத்தல் 4 அணா விதம் தயார் செய்யலாம்.

ஸமீபத்தில் பம்பாய் கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள ஒரு துண்டுப் பத்ரிகையில் வேர்க்கடலையின் ஆகார குணங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

வேர்க்கடலையின் மேலுள்ள ஓடுகளை யெடுத்த பிறகு பருப்பின்மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் மெல்லிய கடுதாசிபோன்ற சிவந்த தோலியை யந்த்ர ஸகாயத்தால் போக்கிப் பிறகு அதை மாவாக்கி, அந்த மாவை யந்த்ரங்களில் போட்டு அதிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். முதல் முதலில் எடுக்கும் எண்ணெய் முதல்தரமானது. இதற்கு மாவை சூடாக்காமல் இயற்கையிலுள்ள குளிர்ச்சியான நிலைமையிலேயே அதிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் அநேகமாய் நிறமற்றதாயும் நல்லவாஸனையும் ருசியுமுள்ளதாயுமிருக்கும். இதை ஆலிவ் எண்ணெய்க்கு பதிலாக ஆகாராதிகளில் உபயோகிக்கலாம். அது வெகு நாள் கெடாமலிருக்குமென்றாலும், திறந்துவைத்தால் எண்ணெய் கெட்டியாகப்போய் காரல் எடுக்க ஆரம்பிக்கும். இப்படி முதல் தடவை எண்ணெய் எடுத்தபின் நிற்கும் பிண்ணாக்கை மறுபடியும் கொஞ்சம் ஜலந்தெளித்து அரைத்து 30 அல்லது 32 டிக்ரிவரையில் சூடாக்கி, மறுபடியும் யந்த்ரத்தில் கொடுத்து அழுத்த அதிலிருந்து இரண்டாம் தர எண்ணெய் கிடைக்கும். இது சில ஆகார வகைகளிலும், யந்த்ரங்களுக்கு எண்ணெய் போடுவதற்கும், விளக்கெரிப்பதற்கும் உபயோகமாகும்.

இரண்டாந்தர எண்ணெய் எடுத்தபின் நிற்கும் பிண்ணாக்கை முன்போல் பக்வப்படுத்தி 50 முதல் 55 டிக்ரிவரையில் சூடாக்கி அதிலிருந்தும் எண்ணெய் எடுப்பார்கள். இது தாழ்ந்த எண்ணெயாகும். இது ஸோப் செய்ய உதவும். சிலஸமயம் 4-ந்தடவையும் எண்ணெய் எடுப்பதுண்டு.

எல்லா எண்ணெயும் எடுத்த பிற்பாடு நிற்கும் பிண்ணாக்கு கால்நடைத் தீவனமாக விற்கப்படுகிறது. இந்தப் பிண்ணாக்கில் மற்ற பிண்ணாக்கிலுள்ள ப்ரொடீன் என்னும் சதை வளர்க்கும் ஸத்தைவிட அதிகமான ப்ரொடீன் அடங்கியிருக்கிறது. மேலும் இது ஸுலபத்தில் ஜீர்ணமாகக்கூடியது. பிண்ணாக்கிலும், பருப்பிலும் என்னென்ன ஸத்துக்கள் 100-க்கு எவ்வளவு விதம் அமைந்திருக்கின்றன என்பதைக் கீழே எழுதுகிறோம்.

பருப்பு.

| | |
|---|---|
| ஜலம் | 7·5 |
| ப்ரொடீன் | 27·5 |
| எண்ணெய் | 44·5 |
| மாப்பொருள் | 15·7 |
| நார் | 2·2 |
| சாம்பல் | 2·5 |
| | 100·0 |



எண்ணெய் எடுத்த பிறகு பிண்ணாக்கை வெயிலில் உலர்த்தித் தூளாக்கினால் அதில் உள்ள பொருள்களாவன.—

| | |
|---|---|
| ஜலம் | 9.8 |
| ப்ரொடீன் | 44·5 |
| மாப்பொருள் | 23 8 |
| எண்ணெய் | 9·2 |
| நார் | 5·2 |
| சாம்பல் | 7·5 |

இந்தக் கணக்குகளால் பிண்ணாக்கானது கால்நடைகளுக்கேயன்றி மனிதர்களுக்கும் ஏற்ற உணவு அம்சங்கள் கொண்டதாயிருக்கிறதென்று தெரியவருகிறது. தற்காலம் இந்தப் பிண்ணாக்கை கால்நடைகளுக்கு உணவாகவும், எருவாகவுமே உபயோகித்து வருகிறார்கள். இதில் எல்லா ஆகாரப் பொருள்களிலும் இருக்கவேண்டிய முக்ய அம்சமான ப்ரொடீன் என்னும் சதைவளர்க்கும் ஸத்து அதிகமாக இருப்பதேயல்லாமல், தான்யப் பொருள்களோடு சேர்ந்து பூர்ண ஆகாரமாகச் செய்வதற் கேற்றவிதமாகவும் அமைந்திருக்கிறது. கோதுமை முதலிய தான்யங்களிலுள்ள ப்ரொடீன்களுக்கு இந்தத் தன்மை கிடையாது.

நாம் உட்கொள்ளும் உணவில் இருக்கும் ப்ரொடீன்களில் சில வகை த்ராவகங்கள் சேர்ந்திருக்கின்றன. எல்லாவகைகளும் சரியான அளவில் சேர்ந்திருந்தால்தான் சரியான தேகவளர்ச்சி ஏற்படும்.

ஆனால் சில தான்யங்களில் இந்த த்ராவகங்களெல்லாம் இருப்பதில்லை. சில தான்யங்களில் இவைகள் சரியான அளவில் இருப்பதுமில்லை. சோளம் அல்லது சில காய்த் தான்யங்களை மாத்ரமே தின்றுவந்தால் தேகம் சரியான நிலைமையில் இருப்பதும், தேகவளர்ச்சி ஏற்படுவதும் முடியாது. கோதுமையிலும் யவை என்னும் வாற்கோதுமையிலும் உள்ள ப்ரொடீன்கள் தேகத்தை சரியான நிலைமையில் வைக்குமென்றாலும், தேகவளர்ச்சிக்குப் போதுமானவையல்ல. ஆகையால் ஏதாவது ஒருவகை தான்யங்களையோ, வேறு உணவுப் பொருள்களையோ மாத்ரம் சாப்பிட்டு வராமல், மேற்சொன்ன எல்லா உணவு அம்சங்களும் சரியான அளவில் கலந்திருக்கும்படி உணவுப் பொருள்களைக் கலந்து சாப்பிடவேண்டியது அவச்யமாகும்.

வேர்க்கடலைப் பிண்ணாக்கில் ப்ரொடீன் ஸத்து அதிகமாயிருப்பதோடு தேகவளர்ச்சிக்கு வேண்டிய த்ராவகங்களில் சில அதிகமாயிருக்கின்றன. முக்யமாய் பார்லி யென்னும் வாற்கோதுமையிலும், கோதுமையிலும் குறைவாயுள்ள த்ராவகங்கள் இதில் அதிகமாயிருக்கின்றன. வேர்க்கடலைப் பிண்ணாக்கின் தூளோடு, கோதுமை முதலிய மாக்களைக் கலந்தால், கோதுமை மாவிலுள்ள குறை நீங்கிவிடும்.

வேர்க்கடலையிலுள்ள ப்ரொடீன்களில் ஒரு வகை த்ராவகம் குறைவாயிருப்பதால், அதை மாத்ரம் சாப்பிடுவதற்கில்லை. உலர வைத்துத் தூளாக்கின பாலை ஒரு குறிப்பிட்ட அளவில் கலந்தால் தேகவளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் ஏற்ற நல்ல உணவுப் பொருளாகும். இந்தக் கலப்புப் பொருளில் தேக வளர்ச்சிக்கு ஏற்ற எல்லா உணவு அம்சங்களும் சரியான அளவில் சேர்ந்திருக்கும். ஆனால் இவை சீக்ரம் ஜலத்தில்சேர்ந்து கரையமாட்டாவாகையால், அதோடு கொஞ்சம் ஸோடாமாவு கலக்கவேண்டும்.

இந்த மூன்றும் இந்தியாவில் மலிவாக வேண்டியமட்டும் கிடைக்கும். புதிய கலப்பு மாவில் இன்னொரு விசேஷமிருக்கிறது. அதில் தைல அம்சமும், தாதுப்பொருள்களும் அதிகமாக இருக்கின்றன. தாதுப் பொருள்களுள் அதிகமாக இருப்பது பாஸ்பேட்டுகளாகும்.

இந்தக் கலப்புமாவில் மாஸத்துக்கள் குறைவாதலால், கோதுமைமாவை 1-க்கு மூன்ருகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் ரொட்டி சுட நன்ருயிருக்கும். இப்படி ரொட்டி சுடுவதற்கேற்ப தயார் செய்த கலப்பு மாவில் பின்வரும் விகிதப்படி உணவு அம்சங்கள் கலந்திருக்கின்றன.

| | நூற்றுக்கு இத்தனை பாகம். |
|---|---|
| ஜலம் | 6·8 |
| ப்ரொடீன் | 15·9 |
| தைலம் | 10·3 |
| மாஸத்து | 66·0 |
| சாம்பல் | 1·0 |

ஆகவே இந்த மாவானது எல்லா உணவு அம்சங்களும் கிட்டத்தட்ட சரியான அளவில் அமைந்ததாக இருக்கிறது. முன் சொன்ன ஜெர்மன் செயற்கை ஆகாரப் பொருளின் அமைப்புக்குக் கிட்டத்தட்ட சரியாக இருக்கிறது.

கோதுமை மாவைக் கலக்காமல், நோயாளிகளுக்கும் நீர் ரோகக்காரர்களுக்கும் ஏற்ற உணவாக உபயோகிக்கலாம்.

கோதுமை மா கலந்து செய்த ரொட்டியானது வாய்க்கு ருசியாயிருப்பதோடு அதிக காலம் கெடாமலுமிருக்கிறது.

இதனுல் வேர்க்கடலைக் கைத்தொழிலானது எவ்வளவு தூரம் வ்ருத்தி யடையக் கூடுமென்பது நன்ருய்த் தெரிகிறது. எண்ணெய் ஆட்டுவதை வ்ருத்திசெய்வதேயன்றி, பிண்ணாக்கையும் ஆகாரப் பொருளாகச் செய்யலாம். மேலும் கடலைத் தோலியை மெத்தை முதலியவைகளுக்கு அடைக்க உபயோகிக்கலாம். அதிலிருந்து காகிதம் செய்யவும் முயற்சி செய்யலாம். அதில் 100-க்கு 55-பாகம் காகிதத்துக்கு உபயோகமாகும் நார்ப்பொருள் இருக்கிறது, இல்லாவிட்டால் அடுப்பெரிக்கவாவது உபயோகிக்கலாம். அடுப்பெரித்த சாம்பல் எருவாக உதவும். பருப்பின்மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் சிவந்த மெல்லிய தோலை எருவாக உபயோகிக்கலாம். வேர்க்கடலையைவெட்டி எடுத்த பிறகு, தாள்களையும் இலைகளையும் மாடுகளுக்குத் தீவனமாக உபயோகிக்கலாம். பிண்ணாக்கு ஏற்கனவே எருவாகவும் கால்நடைத் தீவனமாகவும் உபயோகப்பட்டுவருகிறது. ஆகவே வேர்க்கடலை ஸாகுபடியிலும் அதுஸம்பந்தமான கைத்தொழிலும் வீண் என்பதேயில்லை.

---

770. நூதன விவசாயநூல் ... 0 8 0
நெல் சாகுபடியில் ஒற்றை நாற்று நடும் முறையை விவரிக்கிறது. இதில் விவஸாய ஸம்பந்தமான ஜோதிஷமும் சிறிது சேர்க்கப்பட்டிருக்கிறது.

469. த்லிங்கத்துப்பரணி ... 0 8 0
ஜயங்கொண்டார் இயற்றியதன் வசன அமைப்பு. டி. செல்வக்கேசவராய முதலியார் எழுதியது.

793. விதுரநீதி ... 0 8 0
மஹாபாரதத்திலிருந்து எழுதப்பட்டது. இதில் ஆணிமாண்டவியர்கதை, விதுரர் உற்பத்தி, ஸஞ்ஜயயானம், விதுரநீதி முதலியவை இருக்கின்றன.

589. இந்து பாகசாஸ்த்ரம் ... 0 8 0
பி. வி. ஜகதீசய்யர் இயற்றியது. ஸ்த்ரீ தர்மமும் அடங்கியது. கலிகோ பைண்ட்.

811. பிரிட்டிஷ் துரைத்தன நற்பயன்... 0 6 0
கே. எஸ். சேஷகிரி அய்யர் எழுதியது. இதில் ஆங்கிலேய அரசாட்சியின் தன்மையும், அதனுல் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் நன்மைகளும் விவரிக்கப்படிருக்கின்றன.

:67. சைவபோதம், இரண்டாம் புஸ்தகம் ... 0 6 0
இது சைவசித்தாந்தத்தின் சுருக்கமாகும். எஸ். சிவபாதசுந்தரம் எழுதியது.

ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ்.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### TIME TABLE.

### கால அட்டவணை.

கால அட்டவணை என்பது பள்ளிக்கூடத்தில் நடத்தவேண்டிய பாடங்களின் ஒழுங்கைக் குறிக்கும் பத்ரிகையாகும். அது கற்பிக்கவேண்டிய பாடங்கள், அவைகளுக்குச் செல்லும் நேரம், நடத்தும் மணி, போதிக்கும் உபாத்யாயர், வீட்டு அப்யாஸம் முதலிய பாகங்களைக் காட்டும்.

### கால அட்டவணையின் உபயோகம்.

1. இதனுல் பாடங்களை உபாத்யாயர்களும் பிள்ளைகளும் க்ரமப்படி தயார் செய்ய ஸாதகமாகிறது.

2. பிள்ளைகளிடத்திலும் உபாத்யாயரிடத்திலும் ஒழுங்கு, காலந்தவருமை, முறைமை முதலிய நல்ல வழக்கங்களை உண்டுபண்ணி, அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் தங்கள் கார்யங்களை ஒழுங்காய்ச் செய்யப் பழக்குகிறது.

3. பள்ளிக்கூடத்திலுண்டாகும் சப்தத்தையும் குழப்பத்தையும் நீக்கி, பிள்ளைகளைப் பாடத்தில் எப்போதும் அமர்த்தித் தண்டனையின் அவச்யத்தைக் குறைக்கும்.

4. உபாத்யாயர் தனக்கு மிகப்ரியமான பாடங்களை அதிகமாய் நடத்தி, இதர பாடங்களை முற்றிலும் மறந்தாவது, அதிகமாய் கவனிக்காமலாவது இருப்பதற்குக் காரணம் இராது.

5. உபாத்யாயர் தம் வகுப்பில் நடத்தவேண்டிய பாடங்கள் இன்னவை எனத் தீர்மானிக்க ஹேதுவாகிறது.

### கால அட்டவணையை ஏற்படுத்தும்போது கவனிக்கவேண்டிய முக்ய குறிப்புகள்.

1. பிள்ளைகளுக்காவது உபாத்யாயருக்காவது அலுப்புண்டாகும்படி வெகு நேரம் எந்தப் பாடத்தையும் நடத்தக்கூடாது; அல்லது பாட முழுவதையும் பிள்ளைகள் அறியாமலிருக்கும்படி அதி சீக்ரத்தில் முடிக்கவும் கூடாது.

2. முக்யமான பாடங்களுக்கும் கஷ்டமான பாடங்களுக்கும் தக்கபடி காலம் ஏற்படவேண்டும்.

எந்தப் பாடமாலுைம் அதை ஒரு மணி நேரத்திற்குமேல் நடத்துவது கூடாது. ஆனுல் பெரிய வகுப்புகளில் அவச்யமானுல் கணிதத்தையும் பாஷையையும் சற்று நேரம் நீடித்துக்கொள்ளலாம். ஸாதாரணமாய் ப்ரைமரிப் பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் முக்கால் மணி, அல்லது அரைமணி நேரம் போதும்.

ஐந்து வயஸு முதல் ஏழு வயஸுவரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு பாடம் 25 நிமிஷத்திற்கு மேற்படக் கூடாது. ஏனென்ருல் ஒரு விஷயத்தையே அதிக காலம் கவனிக்கக்கூடிய சக்தி அவர்களிடத்தில் இராது.

3. வகுப்பின் முதற்பாடமானது பிள்ளைகளின் மனோதிடத்தைக் கோரும் முக்யமான பாடமாயிருக்க வேண்டும். (பாஷை, இலக்கணம், கணிதம்).

பிள்ளைகள் பாடசாலைக்கு வந்த முதல் மணி நேரத்தில் சுறு சுறுப்பாயும், உத்ஸாகமாயும், பாடத்தில் கவனமுள்ளவர்களாயு மிருப்பார்கள். ஆதலால், காலையிலும் மாலையிலும் முதல் மணியில் நடக்கும் பாடம் மற்ற நேரங்களில் நடத்தும் பாடங்களைவிடக் கடினமானதாயிருக்கவேண்டும்.

4. ஒரே விதமான மனோ சக்திகளுக்கு வேலையிடுகிற பாடங்களைச் சேர்ந்தாற்போல் நடத்தக்கூடாது.

5. வாசகம், செய்யுள், இலக்கணம், கணிதம் போன்ற கடின பாடத்திற்குப்பிறகு கிண்டர்கார்டன், படமெழுதல், சித்ரமெழுதல், காப்பி, பார்த்தெழுதல் முதலிய சுலுவான பாடத்தையாவது, சொற்ப சுலுவுள்ள பூகோளம், சரித்ரம், ஸுகவழி, இயற்கைப்பாடம், ஸிவிக்ஸ் முதலிய பாடங்களையாவது நடத்தவேண்டும்.

இயற்கைப்பாடம் கடின பாடமாயிருந்தாலும் பொருள்களைக் கொண்டு நேரில் காண்பித்துப் போதிக்கும் விஷயத்தில் அதை சுலுவுள்ள பாடமாகக் கருதலாம்.

6. சில வகுப்புகளில் சப்தமுள்ள பாடங்கள் நடத்தும்போது இடையிலுள்ள வகுப்புகளுக்கு சப்தமில்லாத பார்த்தெழுதல், சித்திர மெழுதல், காப்பி, படமெழுதல் போன்ற பாடங்களையாவது அல்லது உபாத்யாயர் ஸஹாயமுண்டாகும் கணிதம், சொல்வதெழுதல், வியாஸம் முதலியவைகளையாவது நடத்தவேண்டும்.

7. கூடியவரையில் வகுப்பின் பிள்ளைகள் பாடங்களுக்கு இடமாறுதல் நலம்.

8. வாரத்தின் கடைசியில் பாடங்களைத் திருப்பவும், தலைமை உபாத்யாயர் குறைந்தபக்ஷம் ப்ரதி வகுப்பிற்கும் வாரத்திற்கு ஒருதடவையாகிலும் பரீக்ஷைகள், மாதிரிப் பாடங்கள் முதலியன நடத்தவும், ப்ரதி தினமும் ரிஜிஸ்டரில் பதிவு செய்தல், வகுப்புகளைச் சுற்றிப் பார்த்தல் முதலான சில்லரை வேலைகளைச் செய்யவும் காலம் ஏற்படவேண்டும்.

9. கவாத்து அப்யாஸம் ஸாயங்காலத்தில் நடக்க வேண்டும்.

10. வீட்டப்யாஸங்கள் இன்னவை என்பதை அட்டவணையில் குறிக்கவேண்டும்.

11. அட்டவணையில் வகுப்பின் உபாத்யாயரையும், இடை ஒய்வு காலங்களையும், நடத்தும் பாடங்களின் சுருக்கத்தையும் காட்டவேண்டும்.—'நல்லாசிரிய'னில் எம். தங்கரத்னம் பிள்ளை.

## KAMBAN & VALMIKI.

### கம்பனும் வால்மீகியும்.

வி. வி. ஸுப்ரமண்ய அய்யர் பதிப்பித்திருக்கும் கம்பராமாயணத்துக்கு முகவுரை எழுதியிருக்கும் ஜட்ஜ் சேஷகிரி அய்யர், அந்த முகவுரையில், கம்பனுக்கும் வால்மீகிக்கும் உள்ள வித்யாஸத்தைப்பற்றிப் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

ஒரு பேராசிரியனை ஆழ்ந்து படிப்பதிலேயே காலமனைத்தையும் செலவிடுபவர்கள் தங்கள் ஆசிரியனுக்கு யாரும் இணையில்லை என நினைப்பது ஸகஜம். அங்ஙனமே ஸ்ரீ அய்யரும் (ஸுப்ரமண்ய அய்யர்) கம்பனை பரதகண்டத்துக் கவிகளனைவரினும் முதலவன் என நினைக்கிறார். இந்தக்கவிச்சிங்கத்தினிடத்து ஸ்ரீ அய்யர் வைத்திருக்கிற பக்தி எனக்கும் உண்டு. ஆனால் வால்மீகிக்கும் காளிதாசனுக்கும் கம்பன் உயர்ந்தவன் என்று அவர் ஸாக்ஷியாடுவதை எனக்கு ஒப்புக்கொள்ள முடியவில்லை என்று நான் கூறுவதற்கு அவர் இடந்தரவேண்டும். அவர்கள் ஜீவியங்கள் நிகழ்ந்த கால தேச பேதங்களால் கம்பன் சில வர்ணனைகளையும், வால்மீகி சில வர்ணனைகளையும் ப்ரதானமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது வாஸ்தவம். உதாரணமாக, ப்ரகிருதியின் தோற்றங்களை வர்ணிப்பதில் வால்மீகிக்கு ஒருவரும் இணையில்லை. நதிகள், மலைகள், காடுகள், கடல், ஸூர்யோதய அஸ்தமனங்கள், பூர்ணசந்த்ரனுடைய மனோகரம், இவைகளையெல்லாம் வால்மீகி வர்ணித்திருக்கிற அழகிய வர்ணனைகளைக் கம்பனிடம் காணவே முடியாது. ஆனால் கம்பனுடைய நகர வாழ்க்கையும் மனிதப்பழக்கமும், அவன் மாதர் மைந்தரை வர்ணிக்கும் வர்ணனைகளில் அங்கங்கே நயம் காட்டி, அவனுடைய நாயக நாயகிகளை உயிருள்ளவர்கள் போலக் காட்டுவதற்கு மிகவும் உதவிபுரிந்திருக்கின்றன. இருந்தாலும், இவைகளில் கூட வால்மீகி கம்பனுடைய வேலையை ரொம்பக் காட்டியே யிருக்கிறாரென்று தோன்றும். மொத்தத்தில் ஒரு சித்ரத்திற்கு உருக்கொடுத்து வரம்புக்கோடுகளும் போட்டபிறகு, அங்கங்கே சிற்சில அலங்காரங்களைப் புகுத்திச் சித்ரத்தை முன்னிலும் ஜீவ வத்தாகச் செய்துவிடுவது கடினமல்ல என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆனால் நான் இவ்விதம் சொல்லுவதிலிருந்து, கம்பனுடைய வாக்கு வால்மீகியின் வாக்கின் ப்ரதிச்சாயைதான் என்றாவது, கம்பன் முதனூலாசிரியனுடைய வேலைப்பாட்டில் வ்ருத்தியைக் காட்டி அதை மீறவில்லை என்றாவது நான் சொல்லுவதாக நினைக்கக்கூடாது. அனேக இடங்களில் வால்மீகி ராமாயணத்தில் காணப்படாத சிறப்பும், கதையைக் கையாளும் தீரமும் கம்பன் காட்டியே யிருக்கிறான். நான் இங்கே எடுத்துக்காட்ட முயலுவது என்னவென்றால், இன்னொரு காலத்திலும் தேசத்திலும் வஸித்த ஸம்ஸ்க்ருதக் கவிச்சக்ரவர்த்தியைவிட, தமிழ்க்கவிஞரனைவரினும் முதலவனான கம்பன் பெரியவன் என்று தீர்மானிப்பது ந்யாயமல்ல என்பதுதான்.

கம்ப ராமாயணத்தின் ஜீவநாதம் காம்பீர்யம் என்று ஸ்ரீ அய்யர் சொல்லுவதை நான் முற்றிலும் ஒப்புகிறேன். அவர் அப்படிச் சொல்லுவதற்கு ந்யாயங்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார். கம்பன் ஸ்ரீ ராமபிரானைப் பரமாசிரியனாகவும், பரமாத்மாவாகவும், தான் வழிபடு கடவுளாகவும் பாவிக்கிறான். வால்மீகிக்கோ, அவர் நூலில் தற்காலமுள்ளதனைத்தையும் அவருடையதென்றே கொண்டாலுங்கூட, ராமன் வஸித்த புருஷனும், மனிதன் அடையக்கூடிய பரம குணங்களின் பாராவாரமுந் தானாகிறான். எந்தச் செயல்களால் ராமனுக்குத் தெய்வீகத் தன்மை வந்ததோ அந்தச்செயல்களைச் செய்து மனிதன் உயர் நலத்தை அடையவேண்டும் என்பது வால்மீகியின் கருத்தாயிருக்கலாம். அல்லது அவர் கருத்து வேறாயுமிருக்கலாம். இந்தச் சிறு முன்னுரையில் இந்தக் கடினமான வ்யவகாரத்தை விசாரித்து முடிக்க எனக்கு உத்தேசமில்லை. ஆனால் தமிழ்க்காப்யத்தி



விருப்பதைவிட ஸம்ஸ்கிருத காவ்யத்தில் ஸ்ரீராமனுடைய தன்மையில் மானுஷீகம் அதிகம் கலந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அவதாரம் என்ற பாவத்தோடு அதன் கர்மங்களைச் சொல்லும் தொடர் நிலைச்செய்யுளில் காம்பீர்யமும் பெருமையும் நாயகனுடைய குணத்தில் நிரம்பியிருக்கவேண்டிய தவச்யம். கம்பன் ராமபிரானைத் தன் மனோதர்மத்தால் ஆக்கிய ஒரு உன்னதமான பீடத்தில் வைத்து அப்பீடத்தைச்சுற்றி அதற்கொத்த உபாதானங்களையும் சேர்த்து வைத்திருக்கிறான். இந்த விஷயத்தில் அவனுக்கும் வால்மீகிக்கும் வெகுதூரம். ராமன், லக்ஷ்மணன், சீதை இவர்களுடைய குணங்களில் வால்மீகி புகுத்தியிருக்கிற, மானிடர்க்கு இயற்கையாக உள்ள, குறைவுகளைக் கம்பன் மாற்றி, குணங்களை நயப்படுத்திவிட்டிருக்கிறான்.

தற்பொழுது நம் நாட்டில் பரவியிருக்கும் ராமனுடைய மூர்த்திபாவம் கம்பன், துளஸீதாஸர், கபீர்தாஸர் ஆகிய இவர்களுடைய பாவமேயொழிய வால்மீகியின் பாவமல்லவென்று துணிந்து சொல்லிவிடலாம். தென்னாட்டிலுள்ள கோடானுகோடி ஜனங்களின் ஹ்ருதயத்தில் கம்பன் ச்ருஷ்டித்திருக்கிற ராமனுடைய உருவந்தான் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

## FORT ST. GEORGE.

### ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை.

இந்தக் கோட்டை சென்னப்பட்டணத்தில் கடற்கரை யோரமாக இருக்கிறது. இதன் வடபுறத்தில் ஹைகோர்ட்டும், தெற்கே ஸெனெட் ஹௌஸும் இருக்கின்றன. இதுமிகவும் பலமான கட்டிடம். சேனைகளைப் பழக்குவதற்காக கோட்டையைச் சுற்றி பெரிய மைதானமிருக்கிறது. இதன் சத்ரிரத்தைப் பற்றி 'பெண்கல்வி'யில் ஒருநிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

இங்க்லீஷ்க்காரர் முதன் முதலில் நமது தேசத்திற்கு வர்த்தகம் செய்ய வந்தார்கள். அவர்களுடன் ப்ரெஞ்சுக்காரர்கள், போர்த்துகேசியர், டச்சுக்காரர்கள் முதலிய ஐரோப்பா தேசத்தார்கள் வந்தார்கள். இவர்கள் வ்யாபாரம் செய்து வரும்போது ஒருவர்க்கொருவர் பொறாமை கொள்ளலானார்கள். பிறகு, வ்யாபாரப்போட்டி பலமாக ஏற்பட்டு, அது சண்டையில் கொண்டுவந்துவிட்டது. அதனால் இங்க்லீஷ்க்காரர் மஸூலிப்பட்டணம் போனார்கள், அங்கேயும் சச்சரவு நேரிட்டது. ஆகவே, இங்க்லீஷ்க்காரருள் ஒருவராகிய தாமஸ் டே என்பவர் இப்போதுள்ள சென்னைக்குவந்து வ்யாபாரத்துக்கு இடம் பார்த்தார். அப்போது சென்னப்பட்டணம் விஜயநகர ராஜ வம்சத்தைச்சேர்ந்த ரங்கராயருக்கு ஸொந்தமாயிருந்தது. அவர் சந்த்ரகிரியில் அரசாண்டுவந்தார். அவருடைய குமாஸ்தா பூந்தமல்லியிலிருந்தார். டே என்பவர் குமாஸ்தாவாகிய வெங்கடாத்திரியினிடம் சென்று 1639௵ சென்னைக் குப்பத்தை 4200 ரூபாய்க்கு விலைபேசி விக்ரயப் பத்ரம் எழுதி முடித்துவிட்டார். அந்தப் பத்ரத்தை இன்னும் ஒரு பொன் தகட்டில் வைத்திருக்கிறார்கள். நம் சென்னை நகரத்துக்கு முன்பு சென்னைக் குப்பமென்று பெயர். அங்கேயுள்ள செம்படவர்கள் அதை இங்க்லீஷ்க்காரர் வாங்கின பிறகு அவ்விடம் விட்டுப்போய்விட்டார்கள். இங்க்லீஷ்க்காரர் தங்களது வ்யாபாரம் வ்ருத்தியாக ஆக, அங்கே ஒரு கோட்டை கட்டினார்கள். அங்கிருந்த துலுக்கர்களும் மற்றவர்களும் முத்தியாலுப்பேட்டை, பெத்துநாயக்கன்பேட்டை முதலிய விடங்களுக்குப் போகும்படி நேரிட்டது. (முத்தியாலுப்பேட்டைக்கு முன்பு ப்ளாக் டவுன் என்று பெயர். நமதரசர் ஐந்தாம் ஜார்ஜ், வேல்ஸ் இளவரசராயிருக்கையில், 1906௵ சென்னைக்கு விஜயம் செய்தார். அந்தஸமயம் தமது ஞாபகார்த்தமாக அதற்கு ஜார்ஜ் டவுன் என்று பெயரிட்டு அழைத்தார்.) 1636௵ முதல் கொண்டே சென்னை இங்க்லீஷ்காரர் வசமிருந்தும், அது அவர்கள் கையில் ஸ்திரமாக இருக்கவில்லை. 1702௵ அவுரங்கஸீப் சக்ரவர்த்தியின் ஸேனாதிபதியாகிய தாவுத்கான் சென்னையை முற்றுகைப் போட்டு, சிலகாலம் தன்வசமாக்கிவைத்துக் கொண்டிருந்தார். பிறகு, இங்க்லீஷ்க்காரர் அவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள். 1741௵ மகாராஷ்ட்ரர்கள் சென்னையை முற்றுகை போட்டார்கள். 1746௵ ப்ரெஞ்சுக்காரர் அதை முற்றுகைப் போட்டுக் கைப்பற்றிக் கொண்டார்கள். சில வர்ஷங்களுக்குப் பிறகு இங்க்லீஷ்க்காரருக்கும் ப்ரெஞ்சுக்காரருக்கும் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையால் 1749௵ மறுபடியும் இங்க்லீஷ்க்காரர் வசமாயிற்று. பின்பு, 1769௵த்திலும் 1783௵த்திலும் ஹைதர் அலி அதன்மேல் படையெடுத்து வந்தான். அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அக்காலம் முதற்கொண்டு யாதொரு சத்ரு பயமுமில்லாமல் இங்க்லீஷ்க்காரரிடமே யிருந்துவருகிறது.

ஸெண்ட் ஜார்ஜ் கோட்டையில் ஒரு பெரிய ஸ்தம்பம் நாட்டப்பட்டு அதில் ஜார்ஜ் அரசரின் யூனியன் ஜாக் கொடி பறக்கிறது. இப்போது கோட்டையில் கவர்னர் சட்ட ஸபையும், அகௌண்டண்ட் ஜெனரல் ஆபீஸுமிருந்து வருகின்றன.

## GIDDINESS.

### தலைச்சுற்றல்.

"சிரோப்ரமணம்" என்றும், "தலைச்சுற்றல்" என்றும் கூறப்படும் இந்த விகாரம் அனைவருக்கும் ஸாதாரணமாகத் தெரிந்ததே. இது சிரஸில் இயற்கைக்கு விரோதமாக ரத்த வோட்டம் நேரிடுவதால், அடிக்கடி ஸம்பவிக்கிறது என்றும், ஆனால் தத்வத்தை ரொம்ப கவனித்துப் பரீக்ஷித்தால், ஸாதாரணமாய் ரத்தவோட்டம் மூளையில் முரண்படுவதால், அல்லது அளவில் மிகக்குறைவதால் ஸம்பவிப்பதாகத் தெரிய வருகிறதென்றும் பாமிலி டாக்டர் என்னும் பத்ரிகை கூறுகிறது; என்றால் மூளையில் ரத்தவோட்டக் குறைவினால் பாண்டுரோகம் போன்ற கோளாறு உண்டாவதால் தலைச்சுற்றல் அடிக்கடியும் ஏற்படக்கூடும் என்று அறியப்படுகிறது. தேஹம் இங்குமங்கும் தள்ளாடி விழாத ஒரு ஒழுங்கான சீர்தூக்கிய நிலைமையில் காக்கும் சக்தி குறைவுபடுவதாலேயே வெகு ஸாதாரணமாய் தலைச்சுற்றல் உண்டாவது வழக்கம்; அப்பொழுது அம்மனிதன் நிற்க முடியாமல் (அல்லது தேஹத்தைத் தாங்கிக்கொள்ளும் திறமையிழந்து) பூமியில் விழுவான்.

இந்த நிலைமை பாண்டுரோகத்தைக் காரணமாகக் கொண்டு ஸம்பவித்ததானால், தலையைச் சாய்த்து, தலையைவிட உடல் சிறிது உயர்ந்து இருக்கும்படி செய்யவேண்டும்; மூளைக்கு இரத்தம் சுறுசுறுப்பாய் ஓடும்படி ஸௌகர்யம் செய்வது அவச்யம்; அப்படிச் செய்தால், மூளை தனது இயற்கையான வேலையைச் செய்ய முயன்று, தலைச்சுற்றலும் நிவ்ருத்தியாகும்.

ஹ்ருதயம் பலங்குன்றித் துடித்து வருவதும் தலைச்சுற்றலுக்கு ஒரு காரணமாகும்; அப்பொழுது ஹ்ருதயம் மூளைக்கு ரத்தத்தை ஒழுங்கினமாக மூளையின் இரத்தக் குழாய்களின் மூலமாய் இறைக்கும்; ஆகவே தலைச்சுற்றல் இதனால் உண்டாவது வழக்கம்.

வயிற்றுப் பொருமலால் இரைப்பை மேற்புறமாகத் தள்ளப்பட்டு, ஹ்ருதயத்தின் செயலுக்கு ஒருவாறு இடையூறு நேரிடுவதும் உண்டு; அப்பொழுதும் தலைச்சுற்றல் ஸம்பவிக்கக்கூடும்.

திடீரென்று ஒரு மனிதன் தலையைக் குனிந்து கீழ் நோக்கிப் பார்த்தாலும் (அவன் பலக்குறைவாயிருந்தால்) அவனுக்கு, தற்காலம் மூளையில் ரத்தவோட்டம் குறைந்து இந்த விகாரம் உண்டாவது வழக்கம்.

எந்தக் காரணத்தினால் தலைச்சுற்றல் உண்டானாலும், உடனே தலையைச் சாய்த்து கீழே படுத்துக் கொள்வது அவச்யம். உடனே வெந்நீரைக் குடிப்பதும் குளிர்ந்த ஜலத்தால் தலையை நனைப்பதும் நன்மையுண்டாக்கும்.

வெயிலில் அதிகமாகத் திரிவதால் நேரிடக்கூடிய தலைச்சுற்றல் பலபேருக்கு உண்டு. அவர்கள் உடனே நிழலில் வந்து, தரையில் படுத்துக்கொள்ள வேண்டும்.
—வைத்திய கலாநிதி.

## THE CULTIVATION OF CHILLIES.

### மிளகாய் சாகுபடி.

ஸமீபத்தில் வெளியான 'கைத்தொழில் விளக்க'த்தில் மிளகாய் சாகுபடியை பற்றி ஒரு குறிப்பு காணப்படுகிறது.

இதற்கு, நிலத்தை நான்கு அங்குலம் முதல் 6 அங்குலம் ஆழம் வரையில் நன்றாய்க் கொத்தி உழுது பண்படுத்தவேண்டும். நிலம் வளமை குறைந்ததாக இருந்தால், நன்றாய் மட்கிய தொழுவத் தெருபோட வேண்டும். கூடுமானால் முதலிலேயே சாம்பலைக் கொட்டி நிலத்தை உழுதுவிடுவது நல்லது. நன்றாய் மட்காத புது எருப்போட்டால் இலை அதிகமாய் உண்டாகுமே ஒழிய காய் கொஞ்சமாய்த்தான் காய்க்கும். ஆகையால் பழைய எருவை உபயோகிப்பது தான் நல்லது. பசுந்தாள் எருவும் மிளகாய்ப் பயிருக்கு ரொம்ப ஏற்றது. மிளகாயைச் சிலர் இதரப் பயிர்களோடு கலந்து விதைக்கிறார்கள். அது அவ்வளவு நல்லதல்ல. தனியாகப் பயிர்செய்வதே உத்தமம். மிளகாய் விதையை பாத்திகளில் விதைத்து ஒன்றரை அல்லது இரண்டு மாஸங்களுக்குப் பிறகு பிடுங்கி 2½ அடி தூரத்துக் கொன்றாக நடுவது நல்லது. நாற்று விடும் பாத்திகளை நன்றாய்ப் பண்படுத்தித் தயார் செய்யவேண்டியது அவசியம். இதற்கு பாத்திகளை இரண்டொரு மாஸங்களுக்கு முந்தியே கொத்திவிட்டு காற்றாட விடவேண்டும். விதைகளை நெருக்கமாய் விதைத்து, மண்ணோடு கலக்கும்படி செய்து, நாலைந்து நாள்வரையில் காலையிலும் மாலையிலும் ஜலம் தெளித்து வருவதோடு, வெயில் அடிக்காதபடி மூடிவைக்க வேண்டும். ஒன்று அல்லது ஒன்றரை ராத்தல் விதை விதைத்தால் 1 லக்ஷம் கன்றுகள் கிளம்பும். இவைகளிலிருந்து ஒரு ஏக்கருக்குப் போதுமானதாக திடமான கன்றுகள் தெரிந்தெடுக்கலாம்.

கன்றுகளை வயலில் நட்டபின் வயலில் களையில்லாதபடி பார்த்து வரவேண்டியது அவச்யமாகும்.

ஆறும் மாஸம் முதல் 12-ம் மாஸம் முடிய பயிரில் நல்ல மாஸூல்கிடைக்கும். ஒரு ஏக்கர் நிலத்தில் 2000 ராத்தல் முதல் 3000 ராத்தல் வரையில் காய்ந்த மிளகாய் கிடைக்கும். நன்றாய்ப்பழுத்த மிளகாயை சிலநாள் வெய்யிலில் காயப்போட்டுக் காய்ந்த பிறகு சாக்குகளில் போட்டுத்தைத்து ஈரமில்லாத இடத்தில் அடுக்கி வைக்கவேண்டும். மிளகாய் காயாவிட்டாலும், அல்லது அடுக்கிவைக்குமிடம் நல்லதா யிராவிட்டாலும் மிளகாய் கெட்டுபோகும்.



# News and Notes.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**இந்தியாவில் கோவாபரேஷனின் அபிவ்ருத்தி.**

இந்தியாவில் கோவாபரேஷனின் அபிவ்ருத்தியைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் சிலகணக்கு விவரங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கு விவரங்களில் டெல்லி, வடமேற்கு எல்லை மாகாணங்கள், பலுசிஸ்தானம் ஆகிய இவைகளின் விவரங்கள் சேர்க்கப்படவில்லை. பரோடா, மைஸூர் ஆகிய இந்த ஸமஸ்தானங்களின் விவரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கணக்குகளின்படி சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் இந்தியாவில் 19,675 கோவாபரேடிவ் ஸங்கங்கள் இருந்தன. அதற்கு முந்தின வர்ஷத்தில் 17,327 ஸங்கங்கள் தானிருந்தன. மெம்பர்களின் தொகை 8,24,469-லிருந்து சென்றவர்ஷம் 9,18,436-ஆக உயர்ந்தது. நடை முதல்பணம் 8,96,61,722 ரூபாயிலிருந்து 10,32,67,149-ஆக உயர்ந்தது. விவஸாயிகளுக்கான சிறு ஸங்கங்கள் ரொம்ப அதிகமா யிருக்கின்றன. முன்பு சராசரியில் ஒரு ஸங்கத்தில் 47·5 மெம்பர்கள் இருந்திருக்க, சென்ற வர்ஷத்திலோ 46·6 பேர்கள் தானிருந்தார்கள். ஒரு ஸங்கத்தின் சராசரி மூலதனம் 5,174 ரூபாயிலிருந்து 5,250 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மற்றெல்லா மாகாணங்களையும்விட பஞ்சாப்தான் கோவாபரேஷன் விஷயத்தில் முதன்மையாயிருக்கிறது. அங்கே ஸங்கங்களின் தொகையும், மெம்பர்களின் தொகையும், நடைமுதல் பணமும் மற்ற மாகாணங்களில்விட அதிகம்.

பெரிய மாகாணங்களைப்பற்றிய கணக்கு விவரம் வருமாறு:—

| மாகாணம் | ஸங்கங்கள் | மெம்பர்கள் | நடைமுதல்பணம் |
|---|---|---|---|
| | | | ரூ. |
| பஞ்சாப் | 3,393 | 1,48,043 | 2,05,63,428 |
| ஐக்யமாகாணங்கள் | 3,188 | 1,21,843 | 1,20,34,851 |
| சென்னை | 1,800 | 1,37,498 | 1,68,88,833 |
| வங்காளம் | 2,244 | 1,21,833 | 1,24,48,573 |
| பம்பாய் | 992 | 1,06,817 | 97,66,759 |
| பர்மா | 2,251 | 46,311 | 1,03,39,604 |
| மத்யமாகாணங்கள் | 2,685 | 65,723 | 87,09,187 |
| பேஹார், ஒரிஸ்ஸா | 1,207 | 61,426 | 43,27,502 |

இந்தியாவில் 321 கால்நடை இன்ஷ்யூரன்ஸ் ஸங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் 305 பர்மாவைச் சேர்ந்தவை. குடகில் 10-ம், ஐக்ய மாகாணங்களில் 5-ம், வங்காளத்தில் 1-ம் இருக்கின்றன.

விவஸாயிகளுக்கான கோவாபரேடிவ் ஸங்கங்களின் தொகை 15,954-லிருந்து 17,729-க்கு உயர்ந்தது. அதாவது 1775-ஸங்கங்கள் அதிகமாயிற்று. இதர ஸங்கங்களின் தொகை 914-லிருந்து 1019-க்கு உயர்ந்தது. அதாவது 105 ஸங்கங்கள் அதிகம். ஆகவே இதரர்களுக்கான ஸங்கங்கள் இன்னும் அதிகரிக்க இடமிருக்கிறதென்று சொல்லலாம்.

**எருக்கள் எவ்வளவு காலம் உபயோகப்படும்?**

கோயில்பட்டி விவஸாயப்பண்ணையில் பாசனமில்லாத கரிசல் நிலங்களில் பற்பல வகை எருக்கள் போடுவதில், அந்த எருக்களால் பயிர்களுக்கு எவ்வளவு காலம் நன்மை ஏற்படுகின்றன என்பதை ஆராய்ச்சி செய்ய 1903-ம் வர்ஷம் முதல் பரீக்ஷைகள் நடத்திவந்தார்கள். இந்த ஆராய்ச்சிகளுக்கு நால்வகை தொழுவத் தெருக்களும், வேப்பம் பிண்ணாக்கும், பொட்டிலுப்பும் ஸூபர் பாஸ்பேட்டும் கலந்த மிச்ர எருவும் தனித்தனி வயல்களுக்குப் போடப்பட்டன. தொழுவத் தெருவில் நான்குவிதங்கள் எவையென்றால், (1) மாடுகள்போடும் சாணி, மூத்ரம் ஆகிய இவைகளை தினந்தோறும் கொட்டிலின் அடித்தரையிலேயே பரப்பிவிடுவது. (2) சாணம், மூத்ரம் ஆகிய இரண்டையும் தினமும் சேகரித்து ஒரு குழியில் போட்டு மூடுவது. (3) சாணத்தை மாத்ரம் எடுத்து திறந்த வெளியில் குவியலாகப்போடுவது. (4) சாணத்தை மாத்ரம் சேகரித்து ஒருகுழியில் போட்டுவந்து, குறிப்பிட்டகாலத்துக்கு ஒரு முறை குனர்த்து வண்டலை குழியில் கொட்டி சாணத்தை மூடுவது. இந்த ஆராய்ச்சிகளால் பின்வரும் விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன.

(1) மேலே சொன்ன நால்வகைத் தொழுவத் தெருக்களும், எந்தப் பயிருக்கு முதலில் இடப்படு

கின்றனவோ அதை அறுவடை செய்த பிறகு 5-வர்ஷம் வரையில் செய்யப்படும் பயிர்களுக்கு பயிருணவு கொடுத்து உதவுகின்றன..

(2) நான்குவகைத் தொழுவத் தெருக்களில் முதல் வகை எருதான் மற்ற எருக்களைவிட சற்று அதிக பலன் கொடுக்கிறது.

(3) வேப்பம் பிண்ணாக்கும், ஸூப்பர் பாஸ்பேட் பொட்டாஷ் இரண்டும் கலந்த எருவும், எந்தப்பயிருக்கு இடப்படுகின்றனவோ அதற்குப் பிறகு செய்யப்படும் இரண்டு பயிர்களுக்குத்தான் உதவுகின்றன. அதற்குப் பிறகு இந்த எருக்களில் ஏதாவது மீதி பூமியில் இருக்கக்கூடுமென்றாலும், அடுத்து வரும் பயிர்களுக்கு யாதொரு நன்மையும் உண்டாவதில்லை.

(4) வேப்பம் பிண்ணாக்கும் மேற்சொன்ன கலப்பு எருவும் ஆழமான வேருள்ள பருத்திபோன்ற பயிருக்குத்தான் ரொம்ப ஸாதகமாக இருக்கின்றனவே யொழிய, வேர்கள் அதிக ஆழம் போகாத சோளம் கம்பு முதலிய பயிர்களுக்கு அதிக பலன் கொடுப்பதில்லை. ஏனென்றால் இந்த எருக்கள் ஜலத்தில் கரைந்து சீக்ரம் பூமியில் அதிக ஆழம் போவதால், நீண்ட வேர்கள் உள்ள பயிர்களுக்குத்தான் அவை அதிகம் உபயோகப்படும். அளவில் அதிகமாக இருக்கும் தொழுவத் தெருபோன்ற இந்த்ரிய எருக்கள் இப்படிக் கரைந்து பூமியில் ஆழத்துக்குப் போவதில்லை.

(5) அளவில் அதிகமாக இருக்கும் இந்த்ரிய எருக்களால் பின்னால் ஏற்படும் முக்ய உபயோகம் என்னவென்றால், நிலத்தின் வளப்பத்தை அதிகரிக்கச் செய்வதோடு, பருத்தி மாலைலை சீக்ரம் அறுவடைக்குக் கொண்டுவருவதே.

**வெந்நீரின் உபயோகம்.**

வெந்நீரை வைத்யத்தில் உபயோகப்படுத்ாதவர் ஒருவருமில்லை. வயிற்றுநோய், மார்புநோய், மூச்சடைப்பு, கீல்வாய்வு, தொண்டை நோய்; இவைகளுக்கு ஸாதாரணமாய் வெந்நீரை உபயோகப்படுத்தி அதனால் ஸுகம் ஏற்படுவதுண்டு. குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம் கட்டியிருந்தால் ஒரு கம்பளித் துண்டை கொதிக்கக் காய்ச்சிய வெந்நீரில் தோய்த்து பிழிந்து மார்பிலும் தொண்டையிலும் ஒற்றடம் கொடுத்தால், கபம் கரைந்து போகும். பல்நோய் கண்டாலும், சைத்யத்தால் கன்னத்தில் நரம்புநொந்தாலும் வெந்நீர் ஒற்றடம் கொடுக்க லகுவாகும். தலைநோய் கண்டால் கால்களை வெந்நீரில் வைத்துக் கொண்டு பிடரியிலும் வெந்நீர் ஒற்றடம் கொடுத்தால் நீங்கிப்போகும். கட்டிகளை வெந்நீரால் அலம்புவதே ஹிதமான உபசாரமாகும். தலையில் அடிக்கடி மயக்கம் உண்டானால் வெதுவெதுப்பாயுள்ள வெந்நீரில் கால் மணிநேரம் முழங்கால் வரையிலும் வைத்திருந்து எடுத்தால், தலைமயக்கம் குணமடையும். கபம், இருமல், வயிற்றுவலி, மார்புநோய் முதலியவைகளுக்கு வெந்நீரைவிட ச்ரேஷ்டமானது கோதுமைத் தவிடு ஒற்றடமே. இந்த வ்யாதிகளுக்கு கோதுமைத் தவிட்டை சட்டியில் போட்டு தண்ணீர் தெளித்து நன்றாய் ஆவி கிளம்ப வறுத்து கம்பளித்துணியில் போட்டு ஒற்றடம் கொடுக்கவேண்டியது. இது ஆறுவதற்குமுன் வேறொன்று வறுத்துவைத்து மாறி மாறி ஒற்றடம் அரைமணிநேரம் கொடுத்தால் உடனே நல்ல ஸுகமும் ஆறுதலும் கிடைக்கும். ஒற்றடம் கொடுத்து முடிந்தவுடன் கொடுத்த இடத்திலுள்ள வெயர்வையை நன்றாய்த் துடைத்துவிட்டு கர்ப்பூரத் தைலம், டர்ப்பண்டயின் முதலிய தைலங்களை லேசாய்த் தடவி விடவேண்டியது. இந்த வ்யாதிகளுக்கெல்லாம் உள்ளுக்கு மருந்துகொடுத்து வந்தாலும், மேலுக்குச்செய்யும் இந்த சிகித்ஸையினால் வ்யாதிஸ்தருக்கு நல்ல ஆறுதலும் ஸுகமும் உண்டாகும்.

**சென்னை ராஜதானியில் ஸுகாதாரம்.**

சென்னை ராஜதானியில் சென்ற 1916-ம் வர்ஷத்திலும், 1915-ம் வர்ஷத்திலும் பற்பல வ்யாதிகளால் எத்தனைபேர்கள் மரணமடைந்தார்கள் என்பதை அடியில் வரும் அட்டவணையால் அறிந்துகொள்ளலாம்.

| | 1915௵. | 1916௵. |
|---|---|---|
| காலரா | 30,093 | 16,735 |
| அம்மை | 24,038 | 21,903 |
| ப்ளேக் | 3,889 | 11,498 |
| ஜ்வரங்கள் | 2,90,228 | 2,92,491 |
| அஜீர்ணபேதியும், ரத்தபேதியும் | 61,057 | 58,444 |
| ச்வாஸாஸய ஸம்பந்தமான வ்யாதிகள் | 41,113 | 43,814 |

சென்றவர்ஷம் பிறந்த குழந்தைகளில் 1000-க்கு 182·8 வீதமாக சிசுமரணம் நேரிட்டது. இந்த விகிதமானது முந்திய வர்ஷங்களின் விகிதத்தை விடக் குறைவு. இது இதர மாகாணங்களின் விகிதங்களைவிடக் குறைவே. பின்வரும் ஜில்லாக்களிலும் முனிஸிபாலிடிகளிலும் சிசுமரணவிகிதம் ஸராஸரிவிகிதத்தைவிட ரொம்ப அதிகமாயிருந்தன.

| | |
|---|---|
| நீலகிரி ஜில்லா | 223·4 |
| குண்டூர் ,, | 218·2 |
| செங்கல்பட்டு ,, | 213·4 |
| கிருஷ்ணா ,, | 213·1 |
| பெல்லாரி (பட்டணம்) | 368.7 |
| குண்டூர் ,, | 364.0 |
| கோயம்புத்தூர் ,, | 310.8 |

**மதுபானத்தைக் குறைத்தல்.**

நமது ராஜதானியில் மதுபானம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. அதைக் குறைக்கச் செய்து வந்த எந்த முயற்சியும் பலிக்கவில்லை. கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள் ஆகிய இவைகளின் தொகைகளைக் குறைத்தும், குடியர்களின் தொகையும் அவர்கள் குடிக்கும் கள் சாராயத்தின் அளவும் குறையவில்லை. சென்ற வர்ஷத்தில் வேறு இரண்டு உபாயங்களை அநுஷ்டித்துப் பார்த்தார்கள். ஸுமார் 30 இடங்களில் காப்பி, தேயிலை விற்கும் கடைகளை ஏற்படுத்தி கள் குடிப்பவர்களைத் திருப்ப முயன்றார்கள், ஆனால் இவைகளால் மதுபானம் குறைந்ததாகத் தெரியவில்லை. 30 காப்பி கடைகளில் 3-கடைகளைத் தவிர மற்றவைகளிலெல்லாம் நஷ்டமே ஏற்பட்டது. குடியர்கள் இவைகளை வெகுவாய் லக்ஷ்யம் செய்வதில்லையென்று தோன்றுகிறது.

இன்னொரு உபாயம் என்னவென்றால் சாராயக் கடையில் மதுபானங்களோடுகூட ஸோடா வாட்டரோ லெமனேடோ விற்கும்படி சாராயக் கடைக்காரர்களைத் தூண்டினார்கள். பூரேஷ்யர்களும், குடிக்கக் கற்றுக்கொள்ளும் சிறுவர்களுந்தான் சாராயத்தில் ஸோடா முதலியன கலந்து குடிக்கிறார்களே தவிர, குடியில் அநுபோகமுள்ளவர்கள் தனிச் சாராயத்தையே குடிக்கிறார்களாம்.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**

ப்ரிட்டிஷ் இந்தியாவிலும் மைஸூரிலும் சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 24 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | ரூபாய். |
|---|---|
| 3 பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 6,30,000 |
| 1 தோஷாபரெடிவ் ஸங்கம் | 2,50,000 |
| 3 அச்சடித்து ப்ரசுரம் செய்யுங்கம்பெனிகள் | 2,10,000 |
| 11 இதர வ்யாபாரக் கம்பெனிகள் | 47,70,000 |
| 1 ப்ருத்தி, ஜூட் ப்ரெஸுகள் | 2,00,000 |
| 1 இதர ப்ரெஸ்களும் மில்லுகளும் | 15,00,000 |
| 2 தேயிலைத் தோட்டக் கம்பெனிகள் | 5,20,000 |
| 1 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 1,00,000 |
| 1 இதர சுரங்கக் கம்பெனி | 50,000 |
| 24 | 82,20,000 |

**கால்நடை மரணம்.**

சென்ற வர்ஷத்தில் சென்னை ராஜதானியில் கணக்குக்கு வந்த வரையில் 68,588 கால்நடைகள் தொற்று வ்யாதிகளால் இறந்துபோனதாகத் தெரிகிறது. அதற்கு முந்தின வர்ஷமாகிய 1915-16-ம் வர்ஷத்தில் 57,472 மரணங்கள் ஏற்பட்டன. ஆகவே 11,000 கால் நடைகளுக்குமேல் தொற்று வ்யாதியால் மரணமடைந்திருப்பதாகத் தெரிகிறது. சில முக்யமான வ்யாதிகளால் எத்தனை மாடுகள் இறந்தனவென்பதைக் கீழே கொடுக்கிறோம்.

| | |
|---|---|
| வெக்கை | 26,215 |
| கோமாரி | 2,637 |
| தொண்டை யடைப்பான் | 8,635 |
| சப்பை நோய் | 6,927 |
| அடைப்பான் | 7,900 |
| இதர தொற்று நோய்கள் | 16,274 |
| மொத்தம் | 68,588 |

**"முரளீதரன்"**

மலைமகள் என்னும் புனைவு பெயர் பூண்ட ஒரு மாதால் எழுதப்பட்ட முரளீதரன் என்னும் இனிய நாவலின் ப்ரதி யொன்றுவரப் பெற்றோம். நமது நாட்டுப் பெண்மணிகளுக்கு இருக்கவேண்டிய நற்குணங்களை இது கதாரூபமாய் நன்கு எடுத்துக் காட்டுகிறது. இதில் சிற்றன்னையின் கொடுமையும், பழைய காலத்து மாமியார்கள் தங்கள் நாட்டுப்பெண்களை அல்பவிஷயத்துக்கும் கோபித்துத்திட்டுவதும், கற்பில் சிறந்த காரிகைகள் தங்கள் கணவருடைய நன்மையே கருதி அதற்காக எவ்வளவு துன்பம் வந்தாலும் பொறுமையுடன் ஸஹித்திருப்பதும், தாய்

62029

வீடு எவ்வளவு [illegible]முள்ளதாயினும், அங்கிராமல் [illegible] அங்கே கஷ்டங்களும் வசை [illegible] கிடைத்தாலும் பாதகமில்லை யென்று அங்கேயே இருப்பதும், இவை போன்ற பல உத்தம நீதிகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்தப் புஸ்தகம் சிறுமிகளுக்கு ரொம்ப முக்யமானதென்றாலும், யாவரும் வாசித்து ஆனந்தமடையலாம். இதன் விலை அணா 10. வேண்டுவோர் சென்னை ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு (3, 4, கொண்டி செட்டித்தெரு) எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### ம்ருக வைத்யசாலைகள்.

சென்ற வர்ஷத்தில் சென்னை ராஜதானியில் மங்களூரில் ஒரு ம்ருக வைத்யசாலையும் மதனப்பள்ளியில் ஒரு ம்ருக வைத்ய மருந்தசாலையும் ஏற்படுத்தப்பட்டன. உதகமண்டலம், கும்பகோணம், தேவகோட்டை, பொள்ளாச்சி பாலக்காடு, சடப்பை ஆகிய இவ்விடங்களில் ம்ருக வைத்யசாலைகள் ஏற்படுத்த ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். ம்ருக வைத்ய காலேஜில் வர்ஷந்தோறும் மாணவர்கள் படித்துத் தேறி வெளியேறுவதற்கு ஏற்ப, வைத்யசாலைகளை சீக்ரம் ஏற்படுத்தவேண்டியது அவச்யமாதலால், அதவிஷயமாக கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துவருகிறார்கள்.

### ஸ்வதேசி பேனாக்கள்.

கொச்சியில் எரணகுளம் காலேஜைச்சேர்ந்த ஒரு கொல்லர் ரீலிப் நிப்புகள் செய்ய ஒரு யந்த்ரம் தயார் செய்திருக்கிறார். அதைக்கொண்டு 5 நிமிஷத்தில் 50 நிப்புகள் செய்யக்கூடுமாம். கொச்சி திவானாகிய மிஸ்டர் போர் அவருக்கு ஸர்க்கார் உதவியாக கொஞ்சம் பணம் கொடுத்து உதவியிருக்கிறார்.

### திருவாங்கூருக்கு ஒரு யூனிவர்ஸிட்டி.

திருவாங்கூரில் ஒரு ஸர்வகலாசாலை ஸ்தாபிக்க வேண்டியது அவச்யமா என்பதைப்பற்றியும், அவச்யமானால் எப்படிப்பட்ட ஸர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டும், எங்கு ஏற்படுத்தவேண்டும் என்பன முதலிய இதர விஷயங்களைப்பற்றியும் பரிசீலனைசெய்ய திருவாங்கூர் கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

### 'இஹபரஸாதகம்'

இதில் முப்பது மகாத்மாக்கள் எழுதியுள்ள நூல்களிலிருந்தும் உபநிஷத்துகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட 100 நீதிகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு நீதியும் ஒரு ஆழ்ந்த கருத்தை வெளியிடுகிறது. இது யாவரும் வாசித்துப் பயன்படக்கூடிய ஆத்மவிசார ஸம்பந்தமான நீதிக்கொத்தென்று சொல்லலாம். இதன் விலை அணா 2. வேண்டுவோர் கே. எஸ். சேஷகிரி அய்யர், 5. ஆண்டார் நய்னியப்ப நாய்க்கன் வீதி, மைலாப்பூர், சென்னை. என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### பாம்புக்கடிக்கு கிரோஸீனாயில்.

ஸர்ப்பந்தீண்டிய பாகத்தை கிரோஸின் எண்ணெயில் இரண்டு மணி ஸாவகாசம் அமிழ்த்திவைக்கவும். இப்படிச் செய்வதால் ஸர்ப்பந்தீண்டியதால் விபத்து ஸம்பவிப்பது அரிதாகும் என்று டாக்டர் டேவிஸ் கூறுவதாக 'வைத்திய கலாநிதி' எழுதுகிறது.

### ஐரோப்பிய யுத்தம்.

நவம்பர்மீ 27-தேதி.

ப்ரிட்டிஷார் போர்லோன் க்ராமத்தையும் போர்லோன் காட்டையும் பிடித்தார்கள். அவர்கள் ஜருஸலத்துக்கு 3-மைல் தூரத்தில் உள்ள ஒரு க்ராமத்தைப் பிடித்தார்கள்.

30-தேதி

இட்டாலியப் போர்முகத்தில் யுத்தம் பலமாக நடந்து கொண்டிருக்கிறது.

டிஸம்பர்மீ 4-ந்தேதி.

ப்ரிட்டிஷார் மேற்குப் போர்முகத்தில் மெஸ்னியரிலிருந்து பின்வாங்கிப் போயிருக்கிறார்கள்.

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் இருந்த ஜெர்மன் படையானது, ஆகாரம், ஆயுதம் இவைகளில்லாமல் போய், போர்த்துகலுக்கு ஸொந்தமான கிழக்கு ஆப்ரிக்காவுக்குப் போய்விட்டது. கிழக்கு ஆப்ரிக்கா முழுவதும் நேச ராஜ்யங்கள் வசம் சேர்ந்துவிட்டது.

7-தேதி.

அமெரிக்க ஐக்ய நாடுகள் ஆஸ்ட்ரியாவின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

8-தேதி.

ப்ரிட்டிஷார் மேற்குப் போர்முகத்தில் சற்றுப் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். இட்டாலியர்கள் மெலெட்டாவிலிருந்து பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் படைகள் இட்டாலியர்களோடு சேர்ந்து யுத்தம் செய்துவருகின்றன.

ஜெர்மானியர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் நடந்து வரும் யுத்தம் அவர்களிருவரும் செய்துகொண்ட ஏற்பாட்டின் மேல் டிஸம்பர்மீ 7-தேதி முதல் ஜனவரிமீ 18-ந்தேதி வரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

11-தேதி.

இட்டாலியர்கள் ரிஸாமல் குன்றிலிருந்து பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். ப்ரிட்டிஷார் ஜருஸலத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

14-தேதி.

இட்டாலியச் சப்பல் படைகள் ட்ரீஸ்ட் துறைமுகத்தில் புகுந்து அங்கிருந்த ஒரு எதிரியுத்தக் கப்பலை [illegible]. ருமேனியர்கள் யுத்தத்தை நிறுத்தி [illegible] ஒரு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியர்கள் வ்ளாடிவாஸ்டக் என்னும் துறைமுகப் பட்டணத்தைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்.

M211, N095B
N09.0